copies of such accounts and balance sheet and of the auditor's report, and where such copies are so sent, it shall not be necessary to file with the registrar, in the case of a public company, copies of the accounts and balance sheet and of the auditor's report, and, in the case of a private company, copies of the balance sheet and of the auditor's report as required by sub-section (1) of section 220 of the Companies Act, 1956; and the copies so sent shall be chargeable with the same fee and shall be dealt with in all respects as if they were filed in accordance with that section.'. 1 of 1956.

20. *Amendment of section* 35.—To section 35 of the principal Act, the following *Explanation* shall be added, namely :—

' *Explanation.*—For the purposes of this section, the expression "banking company" shall include—

(i) in the case of a banking company incorporated outside India, all its branches in India; and

(ii) in the case of a banking company incorporated in India—

(*a*) all its subsidiaries formed for the purpose of carrying on the business of banking exclusively outside India; and

(*b*) all its branches whether situated in India or outside India '.

21. *Amendment of section 35B.*—In section 35B of the principal Act,

(i) in clause (*a*) of sub-section (1), for the words "managing or whole-time director or of a director not liable to retire by rotation ", the words " managing director or any other director, whole-time or otherwise " shall be substituted;

(ii) to sub-section (1), the following *Explanation* shall be added, namely :—

" *Explanation.*—For the purposes of this sub-section, any provision conferring any benefit or providing any amenity or perquisite, in whatever form, whether during or after the termination of the term of office of the manager or the chief executive officer by whatever name called or the managing director, or any other director, whole-time or otherwise, shall be deemed to be a provision relating to his remuneration.";

(iii) in sub-section (2), for the words, brackets and figures "a banking company after the commencement of the Companies (Amendment) Act, 1956 ", the following substituted, namely :— 95 of 1956.

"to any matter in respect of which the approval ...ank has to be obtained...



15-1-19

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

THIRD SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

***1st and** 3rd to 8th March* **1958.**

**Volume IX (Nos. 1 to 7).**

TABLE OF CONTENTS.

*Saturday, 1st March* 1958.


| | PAGES |
|---|---|
| .. | i |
| Personnel of the Government of Madras .. | ii |
| Principal Officers of the Madras Legislative Assembly .. | |
| List of Members of the Madras Legislative Assembly with their constituencies .. | iii-viii |
| I Obituary reference to the death of Maulana Abul Kalam Azad. | 1 |
| II Questions and Answers .. | 1-9 |
| III Presentation of the Budget for the year 1958-59 .. | 9-34, 35-75 |
| IV Papers laid on the table of the House .. | 34 |

*Monday, 3rd March* 1958.

| | |
|---|---|
| I Questions and Answers .. | 77-91, 152-154 |
| II Announcement by the Hon. Speaker .. | 91 |
| III General discussion on the Budget for the year 1958-59 .. | 91-150 |
| IV Papers laid on the table of the House .. | 150-151 |

*Tuesday, 4th March* 1958.

| | |
|---|---|
| I Questions and Answers .. | 155-172, 231-232 |
| II Calling attention to a matter of urgent public importance under rule 40 of the Madras Assembly Rules *re* outbreak of small-pox in Kanyakumari district .. | 173-174 |
| III General discussion on the Budget for 1958-59—*cont.* .. | 174-230 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

## PRINCIPAL OFFICERS.

**Speaker.** [a]

THE HON. DR. U. KRISHNA RAU.

**Deputy Speaker.** [a]

SRI B. BHAKTHAVATSALU NAIDU.

**Panel of Chairmen.** [b]

1 SRI T. T. DANIEL.
2 SRI M. D. RAMASAMI.
3 DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU.
4 SRI K. SATTANATHA KARAYALAR.

**Secretary to the State Legislature.**

SRI T. HANUMANTHAPPA, B.A. (Hons.), B.L.

**Deputy Secretary to the Assembly.**

SRI A. J. SABESA AYYAR, M.A.

**Assistant Secretaries.**

1 SRI G. M. ALAGARSWAMY, B.A., B.L.
2 SRI K. AMIRTHALINGAM, B.A.
3 SRI A. MANICKAVELU, B.A.

[a] Elected on 30th April 1957.
[b] Nominated on 10th February 1958.



## LIST OF MEMBERS OF THE MADRAS LEGISLATIVE ASSEMBLY WITH THEIR CONSTITUENCIES.

| Serial number and name of member. | | Name and class of constituency. |
|---|---|---|
| 1 | Adityan, S. B. .. .. .. | Sattankulam. |
| 2 | Alagirisamy, M. .. .. .. | Kodaikanal. |
| 3 | Anandan, M. .. .. .. | Kallakurichi—Reserved. |
| 4 | Anandanayaki, Srimathi T. N. | Basin Bridge, Madras City. |
| 5 | Anbazhagan, K .. .. .. | Egmore, Madras City. |
| 6 | Annadurai, C. N. .. .. | Kancheepuram. |
| 7 | Annamalai Muthuraja, G. .. | Andanallur. |
| 8 | Annamalai, S. M. .. .. | Polur. |
| 9 | Annamalai Odayar, S. A. M. .. | Tirukkoyilur—General. |
| 10 | Appavoo Pillai, K. .. .. | Hosur. |
| 11 | Appavu, P. .. .. .. | Chingleput—Reserved. |
| 12 | Ardhanareeswara Gounder, K. S. | Mettur. |
| 13 | Arumughasamy, M. A. B. .. | Authoor. |
| 14 | Arunachalam, V. S. .. .. | Tiruvallur—Reserved. |
| 15 | Arunachala Thevar, V. .. | Alangudy—General. |
| 16 | Asaithambi, A. V. P. .. .. | Thousand Lights, Madras City. |
| 17 | Athimoolam, D. S. .. .. | Kadayam. |
| 18 | Bhaktavatsalam, The Hon. Sri M. (*Minister*). | Sriperumbudur. |
| 19 | Bhaktavatsalu Naidu, B. .. | Sholinghur. |
| 20 | Chandrasekaran, W. P. A. R. . | Nilakkottai—General. |
| 21 | Chandrasekara Nayagar, A. E. | Ranipet. |
| 22 | Chidambara Bharathi, R. .. | Manamadurai. |
| 23 | Chidambaranatha Nadar, A. .. | Nagercoil. |
| 24 | Chinnadurai, P. S. .. .. | Palladam. |
| 25 | Chinniah, V. .. .. .. | Alangudi—Reserved. |
| 26 | Chinniah Kavunder, N. P. M. .. | Manapparai. |
| 27 | Chinnakaruppa Thevar, S. .. | Tirupparankundram. |
| 28 | Chinnasami, A. .. .. .. | Srivilliputhur—Reserved. |
| 29 | Chockalingam, N. V. .. .. | Tirukoshtiyur. |
| 30 | Daniel, T. T. .. .. .. | Padmanabhapuram. |
| 31 | Dasarathan, D. .. .. .. | Wandiwash—Reserved. |
| 32 | Doraisami Reddiar, B. .. .. | Arni. |
| 33 | Duraiswami Reddiar, A. S. .. | Saidapet. |
| 34 | Ekambara Mudali, N. .. .. | Tiruvallur—General. |
| 35 | Ellappan, P. S. .. .. .. | Maduranthakam—Reserved. |
| 36 | Elumalai, T. P. .. .. .. | Ponneri—Reserved. |
| 37 | Gomathisankara Dikshitar, G. .. | Ambasamudram. |

## PERSONNEL OF THE GOVERNMENT OF MADRAS.

### GOVERNOR OF MADRAS.

**SRI BISHNU RAM MEDHI.**

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1 THE HON. SRI K. KAMARAJ, *Chief Minister in charge of Public, Planning and Community Development (including Local Development Works, Women's Welfare, Community Projects and Rural Welfare).*

2 THE HON. SRI M. BHAKTAVATSALAM, *Minister in charge of Home including Courts and Prisons and Prohibition, Food and Agriculture (including Khadi and Village Industries and Hindu Religious Endowments), Railways, Posts and Telegraphs and Civil Aviation.*

3 THE HON. SRI C. SUBRAMANIAM, *Minister in charge of Finance, Education, Information and Law (including Legislature and Engineering Colleges). (Leader of the House.)*

4 THE HON. SRI M. A. MANICKAVELU, *Minister in charge of Revenue and Public Health.*

5 THE HON. SRI R. VENKATARAMAN, *Minister in charge of Industries, Labour and Co-operation (including Housing, Commercial Taxes and Nationalised Transport).*

6 THE HON. SRI P. KAKKAN, *Minister in charge of Public Works (excluding Electricity) and Harijan Welfare.*

7 THE HON. SRI V. RAMIAH, *Minister in charge of Electricity, Transport (including Registration, Accommodation Control, Stationery and Printing and Government Press).*

8 THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON, *Minister in charge of Local Administration and Fisheries.*

| Serial number and name of member. | Name and class of constituency. |
|---|---|
| 38 Gopala Kounder, K. | Satyamangalam. |
| 39 Govindasamy, A. | Valavanur. |
| 40 Govindaswami Naidu, V. | Ponneri—General. |
| 41 Gurumurthy, G. G. | Bhavani—General |
| 42 Haja Sheriff, K. S. G. | Triplicane, Madras City. |
| 43 Hemalatha Devi, Srimathi | Pennagaram. |
| 44 Irusappan, T. | Attur—Reserved. |
| 45 Jagannathan, M. | Tindivanam—Reserved. |
| 46 Jamal Mohideen, M. J. | Dindigul. |
| 47 Jangal Reddiar, M. | Gingee. |
| 48 Jayaraj, P. | Mayuram—Reserved. |
| 49 Kakkan, The Hon. Sri P. (*Minister*). | Melur—Reserved. |
| 50 Kaliannan, T. M. | Tiruchengode—General. |
| 51 Kalyanasundaram, M. | Tiruchirappalli II. |
| 52 Kamalambuja Ammal, Srimathi. | Gummudipundi. |
| 53 Kamaraj Nadar, The Hon. Sri K. (*Chief Minister*). | Sattur. |
| 54 Kandasami, R. | Tiruchengode—Reserved. |
| 55 Kandasami Kandar, M. | Dharmapuri. |
| 56 Kandasami Padayachi, M. | Ulundurpet. |
| 57 Kandaswami Mudaliar, M. R. | Veerapandi. |
| 58 Karia Gounder, T. | Chengam. |
| 59 *Vacant* | Tiruvadanai. |
| 60 Karunanithi, M. | Kulittalai. |
| 61 Karuthappa Gounder, K. | Ottanchattram. |
| 62 Karuthiruman, P. G. | Gobichettipalayam. |
| 63 Khadher Sheriff, S. | Arcot. |
| 64 Kolandai Gounder | Namakkal—General. |
| 65 Kolanthai Ammal, Srimathi | Sulur. |
| 66 Kothandaraman, V. K. | Gudiyatham—General. |
| 67 Krishnamurthy, V K. | Ambur—General. |
| 68 Krishnasami Gopalar, R. | Gandharvakottai. |
| 69 Krishnasami Naidu, R. | Srivilliputtur—General |
| 70 Krishnasami Reddiar, R. | Perambalur—General. |
| 71 Krishna Rau, Dr. U. (*Speaker*). | Harbour, Madras City. |
| 72 Kulandaisami Gounder, M. | Yercaud—Reserved. |
| 73 Kuppusami, P. | Tirukkoilur—Reserved. |
| 74 Lakshmana Gounder, S. | Yercaud—General. |
| 75 Lakshmikantham, Srimathi P. K. R. | Madurai East. |
| 76 Lakshmipathi Raj, P. S. K. | Palani. |



| Serial number and name of member. | Name and class of constituency. |
|---|---|
| 77 Lazar, S. | Lalgudi. |
| 78 Linga Gowder, B. K. | Ootacamund. |
| 79 Lourdammal Simon, The Hon. Srimathi (*Minister*). | Colachel. |
| 80 Mahalingam, N. | Pollachi—General. |
| 81 Manavalan, T. | Gudiyattam—Reserved. |
| 82 Mani, K. B. S. | Sirkali—Reserved. |
| 83 Manickam, P. G. | Bhavani—Reserved. |
| 84 Manickasundaram, V. S. | Erode. |
| 85 Manickavelu, The Hon. Sri M. A. (*Minister*). | Thurinjapuram. |
| 86 Marappa Gounder, K. | Avanashi. |
| 87 Mariappan, A. | Salem I. |
| 88 Mariappan, M. K. | Harur—Reserved. |
| 89 Marimuthu, A. R. | Adirampatnam. |
| 90 Marudachalam, N. | Coimbatore II—Reserved. |
| 91 Matha Gowder, J. | Coonoor. |
| 92 Mathuram, Dr. E. P. | Tiruchirappalli I. |
| 93 Mayandi Nadar, M. | Washermanpet, Madras City. |
| 94 Mookiah Thevar, P. K. | Usilampatti. |
| 95 Muni Reddi, M. | Uddanapalli. |
| 96 Munusami, S. R. | Ambur—Reserved. |
| 97 Munusami Gounder, P. M. | Harur—General. |
| 98 Muthiah Chettiar, M. A. | Karaikudi. |
| 99 Muthiah, K. K. | Panjapatti. |
| 100 Muthiah Pillai, C. | Sirkali—General. |
| 101 Muthaiya, V. A. | Musiri—General. |
| 102 Muthukumaraswamy, M. C. | Nannilam—Reserved. |
| 103 Muthuswamy Nayagar | Chingleput—General. |
| 104 Nagaraja Monigar, S. | Krishnagiri. |
| 105 Nallasivam, K. R. | Chennimalai. |
| 106 Nallaswami, T. M. | Karur. |
| 107 Narayanaswami Naidu, G. | Mayuram—General. |
| 108 Nataraja Odayar, C. | Kallakurichi—General. |
| 109 Nesamony, A. | Killiyoor. |
| 110 Pakkirisami Pillai, S. | Perambur, Madras City—General. |
| 111 Palanisami Gounder, K. N. | Tiruppur. |
| 112 Palaniswami, K. P. | Coimbatore II—General. |
| 113 Palanisami, N. K. | Perundurai. |

| Serial number and name of member. | Name and class of constituency. |
|---|---|
| 114 Palanisawamy Gounder, K. G. | Kangayam. |
| 115 Pandiyaraj, K. .. .. | Uthamapalayam. |
| 116 Parisutha Nadar, A. Y. S. | Tanjore. |
| 117 Peria Karuppam Ambalam, P. M. | Melur—General. |
| 118 Periannan, K. .. .. .. | Perambalur—Reserved. |
| 119 Periasami, M. P. .. .. | Namakkal—Reserved. |
| 120 Periavalaguruva Reddi, A.V.P. | Tirumangalam. |
| 121 Perumal, A. .. .. | Mudukulathur—Reserved. |
| 122 Ponnammal, Srimathi A. S. .. | Nilakkottai—Reserved. |
| 123 Ponnian, K. .. .. .. | Pollachi—Reserved. |
| 124 Ponnusami, P. P. M. T. .. | Tuticorin. |
| 125 Ragupathi Devi, Srimathi, D. | Mettupalayam. |
| 126 Raja Gounder, A. .. .. | Rasipuram. |
| 127 Rajathi Kunjithapatham, Srimathi. | Tirunelveli—General. |
| 128 Ramachandran, K. .. .. | Paramakudi. |
| 129 Ramachandran, P. .. .. | Cheyyar. |
| 130 Ramachandra Reddi, M. .. | Wandiwash—General. |
| 131 Ramalingam, N. S. .. .. | Nagapattinam. |
| 132 Ramalinga Padayachi, S. .. | Ariyalur. |
| 133 Ramamirtha Thondaman, T. R. | Aduthurai—General. |
| 134 Ramasami, M. D. .. .. | Aruppukkottai. |
| 135 Ramasami Naidu, S. .. .. | Sivakasi. |
| 136 Ramasami Thevar, S. .. | Aranthangi. |
| 137 Ramasamy Padayachi, S. S. .. | Nellikuppam—General. |
| 138 Ramasubbu, K. .. .. | Kadambur—General. |
| 139 Ramaswami, C. R. .. .. | Mylapore, Madras City. |
| 140 Ramaswami, K. L. .. .. | Nambiyur. |
| 141 Ramaswamy Mudaliyar, V. K. | Uthiramerur. |
| 142 Ramaswamy Pillai, T. S. .. | Kanyakumari. |
| 143 Ramiah, The Hon. Sri V. (*Minister*). | Tirumayam. |
| 144 Rasheed, A. A. .. .. | Vaniyambadi. |
| 145 Rathnavel Gounder, A. .. | Salem II. |
| 146 Sadasivam, S. .. .. .. | Aravakurichi. |
| 147 Sadayappa Mudaliar, S. C. .. | Arkonam. |
| 148 Samanna Gounder, R. C. .. | Tiruppathur. |
| 149 Samikannu Padayachi, S. .. | Bhuvanagiri. |
| 150 Sami Sahajananda .. .. | Chindambaram—Reserved. |
| 151 Sampath, T. .. .. .. | Kumbakonam. |



| Serial number and name of member. | Name and class of constituency. |
|---|---|
| 152 Sangili, S. .. .. .. | Kadambur—Reserved. |
| 153 Sankar, M. G. .. .. | Nanguneri. |
| 154 Sankaran, V. .. .. .. | Madurai—Central. |
| 155 Sannasi, T. V. .. .. .. | Musiri—Reserved. |
| 156 Santhanam, P. S. .. .. | Tiruvannamalai—Reserved. |
| 157 Sarangapani, V. P. .. .. | Villupuram. |
| 158 Sarathi, M. P. .. .. .. | Vellore. |
| 159 Sasivarna Thevar, T. L. .. | Mudukulathur—General. |
| 160 Sathiyavanimuthu, Dr. Srimathi. | Perambur, Madras City—Reserved. |
| 161 Sattanatha Karayalar, K. .. | Tenkasi. |
| 162 Savithri Shanmugam, Srimathi. | Coimbatore I. |
| *163 Seenivasa Padayachi, P. R. .. | Cuddalore. |
| 164 Selvaraj, M. .. .. .. | Vridhachalam. |
| 165 Selvarajan, M. S .. .. | Tiruchendur. |
| 166 Senapathi Gounder, A. .. | Dharapuram. |
| 167 Shanmugam, P. U. .. .. | Tiruvannamalai—General. |
| 168 Shanmugha Rajeswara Sethupathi, R. | Ramanathapuram. |
| 169 Sivgnanam Pillai, T. .. | Sendamangalam. |
| 170 Somasundaram, M. .. .. | Tirunelveli—Reserved. |
| 171 Soundaram Ramachandran, Dr. Srimathi T. S. | Vedasandur. |
| 172 Srinivasa Iyer, R. .. .. | Pattukkottai. |
| 173 Subbaraj, A. S. .. .. | Bodinayakanur. |
| 174 Subbayya Gounder, S. T. .. | Udumalpet. |
| 175 Subbiah, T. K. .. .. | T. Palur. |
| 176 Subbiah Mudaliar, A. R. .. | Saukarankoil—General. |
| 177 Subramaniam, The Hon. Sri C. (*Minister*). | Koilpalayam. |
| 178 Subramaniam, M. P. .. .. | Attur—General. |
| 179 Subramaniam, R. .. .. | Papanasam—Reserved. |
| 180 Subramania Gounder, K. S. .. | Sankari. |
| 181 Subramania Rajakumar, D. .. | Sivaganga. |
| 182 Sundararajan, N. S. .. .. | Taramangalam. |
| 183 Subbiah, V. .. .. .. | Koilpatti. |
| 184 Suares, Srimathi A. .. .. | Nominated. |
| 185 Swaminatha Merkondar, R. .. | Tiruvayar. |
| 186 Swaminatha Odayar, T. S. .. | Mannargudi. |
| 187 Thangavelu, S. .. .. | Nellikuppam—Reserved. |
| 188 Thiagaraja Pillai, M. D. .. | Nannilam—General. |

| Serial number and name of member. | Name and class of constituency. |
|---|---|
| 189 Thiagarajan, N. R. .. .. | Theni—General. |
| 190 Thirumalaimuthu Veerasakkaya Thiruvenkadasami Nayakar, T. | Vadamadurai. |
| 191 Thomas, A. V. .. .. | Radhapuram. |
| 192 Urkavalan, P. .. .. .. | Sankarankoil—Reserved. |
| 193 Vagheesam Pillai, G. .. | Chidambaram—General. |
| 194 Vasudevan, K. .. .. | Srirangam. |
| 195 Vedamanickam, P. .. .. | Nallur. |
| 196 Vedarathnam Pillai, A. .. | Tiruturaipundi—General. |
| 197 Vedayyan, V. .. .. .. | Tiruturaipundi—Reserved. |
| 198 Veerabahu, A. P. C. .. .. | Sreevaikuntam. |
| 199 Veerappa Kounder, P. .. | Tindivanam—General. |
| 200 Velappan, N. M. .. .. | Theni Reserved. |
| 201 Veluchami, T. .. .. .. | Alangulam. |
| 202 Venkitachala Nattar, G. .. | Papanasam—General. |
| 203 Venkatasubba Reddi, O. .. | Madurantakam—General. |
| 204 Vinayakam, K. .. .. | Thiagarayanagar, Madras City. |
| 205 Viswanathan, K. R. .. .. | Jayankondan. |
| 206 William, M. .. .. | Vilvancode. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, the 1st March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

MR. SPEAKER: நான் உங்களை எல்லோரையும் இந்த சட்டசபை கூட்டத்திற்கு வரவேற்கிறேன்.

## I.—OBITUARY REFERENCE TO THE DEATH OF MAULANA ABUL KALAM AZAD.

MR. SPEAKER: மத்திய அரசாங்கத்தின் கல்வியமைச்சராயிருந்த மௌலானா அபுல்கலாம் ஆஸாத் அவர்கள் பெப்ருவரி 22-ம் தேதியன்று மரணம் அடைந்த செய்தியை நான் வருத்தத்தோடு இந்த சபைக்கு தெரிவிக்கிறேன். அவர் தேசத் தொண்டர். தேச விடுதலைப் போராட்டத்தில் மகாத்மா காந்தியோடு தோளோடு தோள் நின்று வேலை செய்தவர். உருதுவில் நல்ல பொறிஞர். கல்வியமைச்சராய் நம் நாட்டிற்கு நல்ல பணி செய்தவர். நாம் அவரது மரணத்தால் அடைந்துள்ள பெரும் நஷ்டத்தை, நமது ஆழ்ந்த அனுதாபத்தை இச்சபையின் சார்பாக அன்னாரின் குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அன்னாருக்கு மரியாதை செலுத்தும் விதத்தில் எல்லோரும் இரண்டு நிமிஷம் மௌனமாய் நிற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சபை இப்பொழுது கலைந்து மறுபடியும் 11-30-க்கு கூடும்.

The House adjourned and re-assembled at 11-30 a.m., Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## II.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Local Development Scheme at Arumbakkam*

* 153 *Q.*—SRI P. U. SHANMUGAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any school has been constructed under the Local Development Scheme at Arumbakkam, Tiruvannamalai taluk;

(*b*) if so, when it was constructed; and

(*c*) why it has not been recognised?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*), (*b*) & (*c*) The building was built under the National Extension Service scheme and not the Local Development Scheme. I do not have the exact date, etc., Sir.

SRI P. U. SHANMUGAM: இந்த பாடசாலைக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதா? அளிக்கப்படவில்லையென்றால் எப்போது அளிக்கப்படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதைப்பற்றி டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்-னுக்கு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு பதில் வந்த பின்னால் உத்தரவு போடப்படும்.

MR. SPEAKER : கனம் மந்திரி மாணிக்கவேலு அவர்களால் பதில் அளிக்கப்படவேண்டிய கேள்விகளை இன்று மந்திரி அவர்கள் வராததினால் பின்னால் எடுத்துக்கொள்ளலாம். The Hon. Sri Venkataraman will be coming. We will pass over Q. No. 155 now and take it up a little later.

### *New bus routes*

* 156 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state the number of applications received and the number sanctioned for the opening of new bus routes in the Coimbatore district during 1956–57 and 1957–58?

THE HON. SRI V. RAMIAH : The figures are as follows :—

1956–57.

| | |
|---|---|
| Number of applications received ... ... ... | 24 |
| Number of routes sanctioned ... ... ... | 4 |

1957–58 up to 15th January 1958.

| | |
|---|---|
| Number of applications received ... ... ... | 22 |
| Number of routes sanctioned ... ... ... | 7 |

SRI P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, சென்னை மாகாணத்தில் புது பஸ் மார்க்கங்கள் ஆரம்பிப்பதற்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையில் கோயம்புத்தூர் ஜில்லாவுக்கு எத்தனை எண்ணிக்கை ஒதுக்கப்பட்டிருக்கிறது ? அதில் எத்தனை ரூட்டுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMIAH : ஒவ்வொரு ஜில்லாவிற்கும் எத்தனை ரூட்டுகள் தேவை என்று பார்த்து அதற்கு தகுந்தாற் போல் முடிவு செய்து ரூட்டுகள் கொடுக்கப்பட்டுவருகிறது.

SRI K. VINAYAKAM : Sir, out of the lucky recipients of these Bus Routes, are they new entrants or are they lorry owners to begin with or are they fleet owners?

THE HON. SRI V. RAMIAH : How does this question relate to the main question, Sir? (Interruption). It is totally a wrong question.

MR. SPEAKER : The Hon. Minister may refuse to answer the question.

SRI P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, புது பஸ் மார்க்கங்கள் கொடுக்கப்படும் பொழுது முக்கியமாக கிராமப்பகுதிகளுக்கு கொடுக்கப்பட்டு வருகின்றனவா ? அப்படியானால் எத்தனை இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMIAH : புது ரூட்டுகள் எந்தெந்த கிராமங்களுக்கெல்லாம் தொடர்பு இருக்கிறதோ அந்த இடங்களுக்கு அதிக வசதி செய்து கொடுக்கவேண்டும் என்றுள்ள நோக்கத்தை மனதில் வைத்துத் தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI T. T. DANIEL : May I know, Sir, whether the Government have formulated any principles which they have to follow in opening new bus routes?

THE HON. SRI V. RAMIAH : The general principle is wherever there is demand, the demand is considered.





### *Dalmia Cement, Limited.*

* 155 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of employees working in the Dalmia Cement, Limited, Dalmiapuram;

(*b*) the number of employees among them, provided with residential quarters; and

(*c*) whether the management has sought the aid of the Government for housing employees under the Subsidized Industrial Housing Scheme provided for in the Second Five-Year Plan?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 2,684.

(*b*) 1,019.

(*c*) Yes.

SRI S. LAZAR : ஸார், எல்லா தொழிலாளர்களுக்கும் வீடு கொடுக்கும்படியாக சர்க்கார் உத்தர விட்டிருக்கிறதா ? அதிலும் குறிப்பாக சிமிண்ட் உற்பத்தி சாலையில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வீடு கொடுக்கப்படும் என்று ஏதாவது அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சாதாரணமாக மற்ற தொழிலாளர்களுக்கு கொடுத்திருக்கின்ற வீடுகளை விட அதிக சதவிகிதம் டால்மியாபுரம் சிமிண்ட் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் 40 சதவிகிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைவிட வேறு எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்கவில்லை.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister whether the power to allot these houses vests with the Government or the Management and on what basis they are allotted?

THE HON. SRI R. VENKATARAMAN : The power to allot these houses is vested in a Committee to be constituted and there will be in it representatives of both the employers and the employees.

SRI S. LAZAR : இந்த கமிட்டி இருப்பதாக சொல்லக்கூடிய நேரத்தில் சிமிண்ட் தொழிற்சாலையில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்கு சர்க்காரிலிருந்து உதவி பெறுவதற்கு இந்த கமிட்டி வேலை செய்து வருகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஸார், ஸப்ஸிடைஸ்ட் இண்டஸ்ட்ரியல் ஹவுசிங் ஸ்கீம் சர்க்காரால் போடப்பட்டு வீடுகளை கொடுப்பதற்கு வேலை செய்து வருகிறது.

SRI A. V. P. ASAITHAMBI : ஸார், 2,684 பேர்கள் சிமிண்ட் தொழிற்சாலையில் வேலைசெய்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. அதில் வட இந்தியர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதை தெரிவிக்க முடியுமா என்று கேட்கவிரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கென்று தனிக்கேள்வி போட்டால் பதில் தெரிவிக்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : வட இந்தியர்கள் தென் இந்தியர்கள் என்று இரு பிரிவாகப் பேசப்பட்டு வருகிறதே, இம்மாதிரி தனித்தனி பிரிவினை உண்டா ? இந்த பிரிவினைக்கு தனியாக ஏதாவது லட்சணங்களும் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இவ்விதம் பிரிவினையை குறிப்பிடுகிற கனம் அங்கத்தினருக்கு "உலகத் தொழிலாளர்களே ஒன்று படுக" என்ற கோரிக்கை தெரிந்திருக்காது என்று நம்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : சர்க்கார் உதவி பெற்று கட்டப்பட்டிருக்கும் வீடுகளுக்கு எந்த விதத்தில் வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது ? குறிப்பாக சில காலங்களுக்குப் பின்னால் அந்த வீடு தொழிலாளர்களுக்கு சொந்தமாக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஸப்ஸிடைஸ்ட் இண்டஸ்ட்ரியல் ஹவுஸிங் ஸ்கீமில் கொடுக்கப்படுகிற வீடுகள் சொந்தமாகாது. தொழிலாளர்கள் வீடுகளை கூட்டுறவு முறையில் கட்டிக்கொள்ளவேண்டும்.

SRI A. GOVINDASAMY : இந்த மான்யம் மத்திய சர்க்காரால் அளிக்கப்பட்டு வருகிறதா அல்லது ராஜ்ய சர்க்காரால் அளிக்கப்பட்டு வருகிறதா ?

THE HON SRI R. VENKATARAMAN : இதில் ஒரு பகுதி மத்திய சர்க்காரும் ஒரு பகுதி ராஜ்ய சர்க்காரும் இன்னொரு பகுதி முதலாளிகளும் போடுகிறார்கள்.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த தொழிலாளர்கள் ராஜ்ய சர்க்காரிடமிருந்து உதவியை கோரியதாக சொல்லியிருக்கிறார்கள். இதற்காக ராஜ்ய சர்க்கார் எந்தெந்த இடத்தில் எவ்வளவு பணம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஸார், ஸப்ஸிடைஸ்ட் இண்டஸ்ட்ரியல் ஹவுஸிங் ஸ்கீமின் கீழ் முதலாளிகள் கட்டலாம், சர்க்கார் கட்டலாம், தொழிலாளர் கூட்டுறவு முறையில் கட்டலாம். கனம் அங்கத்தினர் அவர்கள் தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் கட்டுவதைப்பற்றி கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் கட்டும்பொழுது சர்க்கார் ஸப்ஸிடியாக, 25 சதமானம் கொடுக்கிறது, 50 சதமானம் கடனாக கொடுக்கிறது, பாக்கி 25 சதமானம் தொழிலாளர்களாக போட வேண்டும். இந்த வீட்டுக்கு வாடகை 12½ ரூபாய்.

SRI S. LAZAR : Is there any proposal to provide houses to all the labourers working not only in this particular factory, but all the factories in this State?

THE HON. SRI R. VENKATARAMAN : There is no proposal, but that is our ideal.

SRI M. P. SUBRAMANIAM : ஸார், தொழிலாளர்களுடைய குடியிருப்பு வசதிக்காக மத்திய அரசாங்கத்திலிருந்து பெறப்படும் உதவியை பூராவும் மாகாண அரசாங்கம் பயன்படுத்தவில்லை என்று சொல்லப்படுகிற குற்றச்சாட்டு உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைக் குறித்து மானியக் கோரிக்கை வரும்பொழுது இந்த விபரங்களை கொடுக்கிறேன்.





*'Kalainesan.'*

* 157 *Q.*—SRI S. VEDARATHNAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have considered the question of taking action against the Journal 'Kalainesan' for publishing news not to the good taste of general public?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

SRI A. VEDARATHNAM : தலைவர் அவர்களே, கண்ணியமான மனிதர்களுடைய குடும்பங்களைப்பற்றி தவறான விஷயத்தை பிரசுரித்து அவர்களுக்கு இழிவைத்தேடும் பத்திரிகைகள், அதன் மூலம் பயமுறுத்தி பணம் வாங்குவதற்கும் உபயோகப்படுத்துகிற இம்மாதிரி பத்திரிகைகள் வராமல் இருப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா ? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு முன்பு இருந்த பிரஸ் அப்ஜக்ஷனபிள் மாட்டர் பில் இருந்தது. இப்போது அந்த பில் நடப்பில் இல்லை. அதில் நடவடிக்கை எடுப்பதற்கு இடம் இருந்தது. இந்த சட்டத்தை கொண்டு வரவேண்டுமா என்பதைப்பற்றி ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

SRI K. R. NALLASIVAM : இது போன்ற பத்திரிகைகளைப்பற்றி பொது ஜனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வருகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : விண்ணபங்கள் நிறைய வருகின்றன. அத்துடன் இப்பத்திரிகைகள் போலீஸ்காரர்களுடைய கவனத்திற்கு வரும்பொழுது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

SRI K. VINAYAKAM : Sir, is it a fact that this yellow journal indulges in cheap sex literature and obscene matters relating to film stars of our country?

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member seems to be rightly informed. (Laughter.)

*Industrial Estate, Guindy.*

* 160 *Q.*—P. G. MANICKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Harijans employed in the various factory units in the Industrial estates set up by the Government?

THE HON. SRI R. VENKATARAMAN : Eight Harijans in the private factory units and fifteen Harijans in the Government Units are employed up till now in the Industrial Estate at Guindy.

SRI P. G. MANICKAM : இத் தொழிற் பண்ணைகளில் ஹரிஜனங்களை ஒரு குறிப்பிட்ட அளவுக்காவது வேலைக்கு அமர்த்திக்கொள்ளவேண்டும் என்று கவர்ன்மெண்டார் ஏதாவது ஒரு உத்தரவு பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்கு அவசியமில்லை. இப்போது அவர்களுடைய எண்ணிக்கை கணிசமாக இருக்கிறது. சர்க்கார் நடத்துகிற எட்டு தொழிற்சாலைகளில் மொத்தம் 110 தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். அதில் 15 பேர்கள் ஹரிஜனங்களாக இருக்கிறார்கள்.

*Private bus services.*

11-40 a.m. * 161 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the number of private bus services in the State; and

(*b*) the number of buses that are used by these bus services?

THE HON. SRI V. RAMIAH : (*a*) 505.

(*b*) They are operating 3,075 buses.

SRI A. V. P. ASAITHAMBI : இந்த பஸ் சர்வீஸை சென்னையிலே தேசியமாக்கியிருப்பதுபோல நாடு பூராவிலும் உள்ள பஸ் சர்வீஸ்களை தேசியமாக்குவதற்கு சர்க்காரிடம் திட்டம் உண்டா ?

THE HON. SRI V. RAMIAH : I want notice.

*Working hours in Government Offices.*

* 162 *Q.*—SRI M. P. SARATHI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any communication has been received recently from the Central Government regarding working hours in and holidays granted to State Government Offices; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) The question does not arise.

SRI S. M. ANNAMALAI : கோடை காலத்தில் சிப்பந்திகள் காலையில் 11 மணிக்குச் சென்று மாலையில் திரும்பிவருவதற்கு கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் காலை 8 மணிக்கே அவர்கள் தங்கள் வேலையை துவங்குவதற்கு சர்க்கார் அனுமதிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்கார் சிப்பந்திகளின் சௌகரியத்தையும் அனுசரித்து இதைச் செய்யவேண்டியிருக்கிறது. அவர்கள் சாப்பிட்டுவிட்டு வருவதற்கு 11 மணிதான் சௌகரியமாக இருக்கிறது என்று கருதுகிறார்கள்.

*Bonus to cement workers.*

* 164 *Q.*—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the issue of giving bonus to workers employed in the cement industry for the period from 1953–56 has been settled?

THE HON. SRI R. VENKATARAMAN : There are three Cement Factories in this State, namely :—

1. Dalmia Cements (Bharat), Limited, Dalmiapuram,
2. India Cements, Limited, Thalaiyuthu, and
3. Associated Cement Companies, Limited, at Madukkarai.

The issue regarding bonus for 1953–56 has been settled in respect of the first two companies.



As regards the Associated Cement Companies, Limited, Madukkarai, the issue regarding bonus for these years has been referred to the Industrial Tribunal at Madras, for adjudication and the awards of the Industrial Tribunal are awaited.

*Rayon Factory.*

* 166 *Q.*—SRI P. G. MANICKAM AND SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any arrangements have been made to start a Rayon factory?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government of India have issued a licence under the Industries (Development and Regulation) Act, 1951, to an individual for starting a Rayan Yarn Factory in the Mettupalayam—Bhavanisagar area in Coimbatore district. The promoters expect the collaboration of two Italian firms in regard to finance and technical aid in setting up this industrial undertaking. This Government as such, have not held any consultations with any foreign Government.

*Co-operative credit societies.*

* 167 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of co-operative credit societies in the State; and

(*b*) the number of Harijan Co-operative Credit Societies among them?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 8,600 as on 30th June 1957.

(*b*) Eight hundred and fifty-six for Harijans exclusively and 442 for both Harijans and Backward classes.

SRI P. G. MANICKAM : ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ளுவதற்காக கொடுக்கப்படும் மான்யத்தொகை மிகவும் சொல்பமாக இருப்பதனால்; அவர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் பெறுவதற்கு உரிய வசதிகளை கவர்ன்மெண்டார் செய்யுமா ? கூட்டுறவு சங்கங்கள் மூலம் வீடுகள் கட்டுவதற்கு போதுமான கடன் தொகை கொடுப்பதற்கு சர்க்கார் உத்தரவிடுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : வீடுகள் கட்டுவதற்கு ரூரல் ஹவுஸிங் கோவாபரேடிவ் சொஸைடிகள் ஆரம்பித்திருக்கிறோம். அவர்களுக்கு போதுமான தொகை அளிப்பதாகத்தான் சர்க்கார் நினைக்கிறது. இதுபற்றி இதுவரையில் புகார் எதும் வரவில்லை.

SRI G. G. GURUMURTHI : இது போன்ற கிரெடிட் சொஸைடிகளை நமது மகாணத்திலே எல்லா கிராமங்களிலும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அக்ரிகல்சரல் கிரெடிட் சொஸைடிகள் வருஷம் ஒன்றுக்கு 200 வீதம், வருகின்ற மூன்று வருஷ காலத்தில் 600 சொஸைடிகள் ஆரம்பிப்பதாக திட்டம் இருக்கிறது.

[1st March 1958

SRI V. SANKARAN : பல இடங்களில் கூட்டுறவு நாணய சங்கங்களில் நிர்வாகஸ்தர்கள் மிகவும் நாணயக்குறைவாக நடந்துகொள்ளுவதாக பல கேஸ்கள் வருகின்றன. அதைத் தடுப்பதற்கு சர்க்கார் போதிய நடவடிக்கை' எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அப்படி புகார் வருகிற இடத்தில் சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

SRI K. R. VISWANATHAN : கூட்டுறவு நாணய சங்கங்கள் மூலமாக சமீப காலமாக குறுகிய காலகடன்தான் கொடுக்கப்படுகிறது. மத்திய காலக் கடன், நீண்ட காலக் கடன் வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டிருப்பது உண்மையா ? அதனால் விவசாயிகளுக்கு சங்கடமாக இருக்கிறது. ஆகையினால் மத்திய காலக் கடன், நீண்ட காலக் கடன் கொடுப்பதற்கும் சர்க்கார் வழி செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அக்ரிகல்சுரல் கிரெடிட் சொஸைடிகள் என்று சொல்லப்படும் கிராம கூட்டுறவு சங்கங்களின் மூலம் சதாரணமாக குறுகிய காலக் கடன்தான் கொடுக்கப்படுகிறது. அவர்கள் விவசாயத்திற்கு வேண்டிய ஒரு வருஷத்திற்குள்ளான கடனை கொடுக்கிறார்கள். நீண்ட காலக் கடன் வழங்குவதற்கு 'லாண்டு மார்ட்கேஜ் பாங்குகள்' வைத்திருக்கிறோம். அவைகளின் மூலம் நீண்ட காலக் கடன் வாங்கிக்கொள்ளலாம். மத்திய காலக் கடன் கொடுப்பதற்கு இப்பொழுது புதிதாக 'அக்ரிகல்சுரல் பாங்கு' என்று சொல்லப்படும் விவசாய பாங்குகள் ஆரம்பித்திருக்கிறோம். அவைகள் மத்திய காலக் கடன்களைக் கொடுக்கும்.

SRI M. P. PERIASAMI : ஹரிஜனங்கள் வீடு கட்டவேண்டுமானால் அதற்கு டிபாசிட் தொகை வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த வீட்டையே ஜாமினாக வைத்துக்கொண்டு பணம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப் பற்றி என்னுடைய நண்பர் ஹரிஜன இலாகா மந்திரியிடம் கேட்பது சௌகரியமா இருக்கும் என்று நினைக்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : ஹரிஜனங்களுக்கு என்று சேரிகள் தனியாக இருந்து வருகிறது. அவைகளை ஒன்று செய்யவேண்டுமென்று நாம் பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களுக்கென்று தனியாக பாங்குகள் நடத்துவது சரியா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஹரிஜனங்களுக்கு மட்டும் தனியாக பாங்குகள் வைப்பது என்பது அல்ல. பிற்போக்கு சமூகத்தினர், ஹரிஜனங்கள் எல்லோருக்கும் சேர்த்துத்தான் பாங்குகள் வைத்திருக்கிறோம்.

SRI K. R. NALLASIVAM : கூட்டுறவு சங்கங்களில் மூன்றில் ஒரு பகுதி ஓரளவுக்கு செயலற்று இருக்கிறது. அதுமட்டுமல்ல. ஒரு கிராமத்திலே 1,000 குடும்பங்கள் இருந்தால், 100, 200 குடும்பங்களுக்கு மேல் இந்த சங்கங்களில் அங்கத்தினர்களாக இருப்பது கிடையாது. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள எல்லா குடும்பத்தினரையும் அங்கத்தினர்களாக சேர்ப்பதற்கு விசேஷ நடவடிக்கை எடுப்பதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதிகமாக அங்கத்தினர்களைச் சேர்க்கவேண்டும், கூட்டுறவு இயக்கம் 'பிராட் பேஸ்டாக' எல்லோரையும் அங்கத்தினர்களாகக் கொண்டதாக இருக்கவேண்டுமென்பதுதான் சர்க்காரின் நோக்கம். அதற்காக ஒவ்வொரு வருஷமும் அங்கத்தினர் சேர்க்கும் வாரம் கொண்டாடப்படுகிறது. சமீபத்தில் அம்மாதிரி கொண்டாடப்பட்ட வாரத்தில் ஒரு லட்சம் அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். யாராவது, எந்த இடத்திலாவது அங்கத்தினர்கள் சேர்க்கப்படவில்லை என்று சொன்னால் அதை கவனிப்பதற்கு விதிகளைக்கூட திருத்துவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.



1st March 1958]

SRI A. GOVINDASAMY : நீண்ட காலக் கடன் கொடுப்பதற்கு நில அடமான பாங்குகள் இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி நீண்ட காலக் கடன் வாங்குவதற்கு நீண்ட காலம் பிடிக்கிறது. ஆகையால் இந்த நீண்ட காலக் கடனை விவசாய பாங்குகள் மூலம் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நீண்ட காலக் கடன் கொடுப்பதற்கு அதிகமாக பணம் வேண்டியிருக்கிறது. அதற்காக சர்க்கார் நீண்ட கால டிபென்சர்கள் வெளியிட்டு அதன் மூலம் அந்தக் கடன்களை கொடுக்கிறார்கள். நீண்ட காலக் கடன் கொடுப்பதற்காக விவசாய பாங்குகளை வைப்பது அவர்களுடைய நோக்கத்திற்கு மாறாகும். மத்திய காலக் கடன் கொடுப்பதற்காக விவசாய பாங்குகளை ஏற்படுத்தியிருக்கிறோம்.

SRI P. G. MANICKAM : பேட்டூர் கால்வாய் பிரதேசத்தில் ஏற்பட்ட நீர்க்கசிவினால் வலது கரையிலுள்ள 400 ஹரிஜன வீடுகள் சேதம் அடைந்திருக்கிறது. அவர்கள் அந்த வீடுகளை திருப்பிக்கட்டிக்கொள்ளுவதற்கு சர்க்கார் ஒரு வீட்டிற்கு ரூ. 100 தான் மான்யத் தொகையாகக் கொடுக்கப்போவதாகத் தெரிகிறது. ஆகையால் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ளப் போதுமான தொகை கொடுக்க கவர்ன்மெண்டார் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : This question does not arise out of the main question. But if the Hon. Minister is prepared to answer, I have no objection.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## III—PRESENTATION OF THE BUDGET FOR THE YEAR 1958–59.

MR. SPEAKER : Copies of the Budget Speech may now be distributed. இப்பொழுது கனம் நிதி மந்திரி அவர்கள் 1958–59-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை இந்த சபை முன்பு சமர்ப்பிப்பார்கள்.

SRI K. VINAYAKAM : On a point of information, Sir. For want of anything to do, may I ask . . . .

MR. SPEAKER : We have got enough to do. But if the Hon. Member wants to ask questions, he need not say, "For want of anything else to do." He can straightway ask the question.

SRI K. VINAYAKAM : May I know the time at which we are meeting to-morrow?

MR. SPEAKER : The Business Advisory Committee will meet after the Hon. the Finance Minister's speech, and decide at what time we should meet on Monday.

SRI A. V. THOMAS : In any case we are not meeting to-morrow (Sunday)!

MR. SPEAKER : Notices will be sent to the houses of Members intimating them the time at which the Assembly will meet on Monday. They will learn it also from the news papers. எல்லா அங்கத்தினர்களுக்கும் பட்ஜெட் அறிக்கையின் நகல் கிடைத்திருக்குமென்று நினைக்கிறேன். கனம் நிதி மந்திரி அவர்களை அறிக்கையை சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

The Hon. the Finance Minister will now present the Budget. 11-50 a.m.

[1st March 1958

முன்னுரை. THE HON. SRI C. SUBRAMANIAM : சபைத் தலைவர் அவர்களே 1958-59-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையையும் நடப்பு ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளையும் இச்சபையின் கண் சமர்ப்பிக்க முன்வந்துள்ளேன். இவ்விரண்டு மதிப்பீடுகளையும் பொருத்தவரையில், நிதி நிலைமை சீர்ப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும். நடப்பு ஆண்டில் மிக அதிகமாகத் துண்டு விழும் என்று நாம் எதிர்பார்த்ததற்கு மாறாகத் துண்டு விழாமல் போனதுமட்டுமல்லாமல் வரவிருக்கும் ஆண்டில் துண்டு விழும் தொகையும் குறைந்துள்ளது. இந் நிலைக்கு முக்கிய காரணம் நிதிக் கமிஷனின் சிபாரிசுகள்தான். பருவ நிலைமை திருப்திகரமாய் இருந்ததும் நமக்கு சாதகமாயிற்று.

பருவ நிலை. 2. தென்மேற்குப் பருவ மழை உரிய காலத்தில் ஆரம்பமாயிற்று. ஆயினும் இது சாதாரணமாக பெய்யும் அளவிற்கு 20 சத விகிதம் குறைவாக, சராசரி 9·7 அங்குலம்தான் பெய்தது. செங்கற்பட்டு, தஞ்சை ஆகிய கடலோர மாவட்டங்களில் போதுமான மழை பெய்தது. இந்தப் பருவத்தில் மத்திய மாவட்டங்களான திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஆகியவற்றில் போதுமான மழை பெய்யவில்லை. சாதாரணமாகப் பெய்யும் அளவிற்கு 30 முதல் 50 சத விகிதம் குறைவாகவே இங்கு மழை பெய்தது. இதனால் வேர்க்கடலை, புன்செய் பயிர்கள் முதலியன சரியாக விளையவில்லை. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய தெற்கு மாவட்டங்களிலும் மழை குறைவாக இருந்தது. ஆனாலும் விளைச்சலைப் பாதிக்கும் அளவுக்கு மோசமில்லை. மொத்தத்தில் வடகிழக்குப் பருவ மழையைப் பொருத்தவரை திருப்திகரமாகவே இருந்தது. சராசரி 16·6 அங்குலம் பெய்தது; இது சாதாரணமாகப் பெய்வதற்கு 6 சத விகிதம்தான் குறைவு. செங்கற்பட்டு மாவட்டத்தில், குறிப்பாகத் தென் பகுதியில் இக்குறைபாடு மிகவும் அதிகமாக இருந்தது. ஆனால் இந்த மாவட்டத்தில் உள்ள குளங்களில் தென்மேற்குப் பருவ மழை காரணமாக ஏற்கனவே தண்ணீர் கொஞ்சம் இருந்தது. இந்தப் பருவ மழையின்போது தென் ஆற்காடு, திருச்சி மாவட்டங்களிலும் நிலைமை திருப்திகரமாக இல்லை. சாதாரணமாகப் பெய்வதை விட 30 சத விகிதம் குறைவாகவே இங்கு பெய்தது. நீலகிரி மாவட்டத்தில் மட்டும் பெரு மழை பெய்தது. சாதாரணமாகப் பெய்வதை விட ஏறக்குறைய 40 சத விகிதம் அதிகமாக இருந்தது. சேலம், வட ஆற்காடு ஆகிய மத்திய மாவட்டங்களிலும் தெற்கு மாவட்டங்களிலும் நிலைமை மோசமாக இல்லை. இங்கு சாதாரணமாகப் பெய்வதை விட 5 அல்லது 10 சத விகிதம்தான் மழை குறைவு.



1st March 1958] [Sri C. Subramaniam]

3. பூர்வாங்க விளைச்சல் மதிப்பீடுகளின்படி நெற்பயிர் முன்னைவிட சற்று அதிகமான அளவில் பயிரிடப்பட்டதென்றும் நல்ல விளைச்சல் கிடைக்கும் என்றும் தெரிகிறது. ஒரு சில இடங்களில் பூச்சித் தொல்லையால் பாதிக்கப்பட்டபோதிலும், காவிரி கழிமுகப் பகுதியிலும் வாய்க்கால் பாசனப் பகுதிகளிலும் மொத்தத்தில் நல்ல விளைச்சலெனத் தெரிகிறது. வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் மாவட்டங்களில் தண்ணீர் வசதிக் குறைவு காரணமாக நெல் சிறிது குறைவாகப் பயிரிடப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் குளத்துப் பாசன நிலங்கள் சில நீரின்மையால் பாதிக்கப்பட்டன. இராமநாதபுரம், செங்கற்பட்டு ஜில்லாக்களில் விளைச்சல் எப்போதும் போல் இருந்தது. சேலம், கோயம்புத்தூர் முதலிய மத்திய மாவட்டங்களில் குறித்த காலத்தில் மழை பெய்யாததன் காரணமாக புன்செய் தானியங்கள் மிகவும் குறைந்த அளவில் பயிர் செய்யப்பட்டன; விளைச்சலும் சாதாரணமாக இருப்பதைவிட குறைந்து இருந்தது. கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களில் பருத்தி, வேர்க்கடலை விளைச்சல் நிலைமை திருப்திகரமாக இருக்கவில்லை. நீலகிரியில் உருளைக்கிழங்குப் பயிரும் மழையாலும் உறை பனியாலும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் ராஜ்யத்தின் நிலைமையை மொத்தமாக மதிப்பிடும் போது உற்பத்தி 1956-57-ம் ஆண்டில் இருந்த அளவு இல்லாத போதிலும், பொதுவாக திருப்திகரமென்றே கருதலாம். அதிர்ஷ்டவசமாகப் புயல், வெள்ளம், பஞ்சம் போன்ற கொடுந்தீங்கு எதுவும் இந்த ஆண்டில் ஏற்படவில்லை. விளைச்சல் நிலைமை.

4. 1957-ம் ஆண்டில் உணவுப் பொருள்களின் விலைவாசிகள் ஏறுமுகமாகவே இருந்தது. அதிகக் கவலைக்கு இடம் தந்தது. உணவுதானிய விலைகளின் மொத்தக் குறியீட்டு எண் 1956-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் 377-ஆக இருந்தது. அடுத்த 6 மாதங்களில் மிகவும் உயர்ந்து 1957 ஜனவரியில் 494-ஆக இருந்தது. நல்ல அறுவடை ஏற்பட்டதன் பலனாக 1957 மார்ச்சு மாதத்தில் இது 470-ஆக சற்றுக் குறைந்தது. ஆனால் அதற்குப் பிறகு மீண்டும் நெருக்கடி ஏற்பட்டது; நிலைமை முன்பிருந்ததுபோல் அவ்வளவு கடுமையாக இல்லாது போயினும் இந்த நெருக்கடியின் பயனாகக் குறியீட்டு எண் மேலும் உயர்ந்து 1957 டிசம்பரில் 512 அளவில் நின்றது. உணவுப் பொருள்களில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறையின் காரணமாக இந்தத் திடீர் உயர்வு ஏற்படவில்லை என்பது நிலைமையை ஆராயும்போது இப்பொழுது நமக்குத் விவசாய பொருள்களின் விலைவாசிகள்.

[Sri C. Subramaniam] [1st March 1958

தெளிவாகிறது. ஆனால் அந்த நேரத்தில் நிலைமை அபாயகரமானதாகவே தோன்றியது. இந்த நெருக்கடியைத் தடுக்கப் போதிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதாயிற்று. மாதம் சுமார் 4,000 டன் உணவு தானியங்களை விற்க 800 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டன. இதனால் விலைவாசியின் உயர்வு கட்டுப்படுத்தப்பட்டது. நெருக்கடியும் சற்று சமாளிக்கப்பட்டது. மீண்டும் ஒரு நல்ல அறுவடையின் பயனாக விலைவாசிகள் இப்பொழுது ஸ்திரமாகி வருகின்றன. இருந்தபோதிலும் நாம் இன்னும் நிலைமையை விழிப்புடன் கவனிக்கவேண்டிய அவசியம் இருந்து வருகிறது.

உணவு நிலைமை.

5. உணவு உற்பத்தியைப் பெருக்க நாம் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளை மேலும் பெருக்கித் தீவிரமாக்க வேண்டும் என்பதுதான் தற்போதைய உணவு நிலைமை நமக்கு உணர்த்தும் படிப்பினை. பல பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். அடி ஊற்று நீரைப் பயன்படுத்தக் கிணறுகளையும் வடிமுனைக் கிணறுகளையும் தோண்டியுள்ளோம். பாசனத்திற்காகத் தண்ணீர் இறவை இயந்திரங்கள் அமைத்துள்ளோம். இரசாயன உரங்கள், பிண்ணாக்கு, தழை உரம் போன்ற உரங்களை அதிக அளவில் உபயோகித்து வருகின்றோம். நல்ல உயர் ரக வித்துக்களையும் பூச்சி மருந்துகளையும் கையாளும் முறை பெரிதும் பரவி வருகிறது. இவை மூலமாக, சென்ற சில வருஷங்களாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டான 1955-56-ல் தற்போதைய சென்னை ராஜ்யத்தில் மொத்த உணவு உற்பத்தி 44 லட்சம் டன்னாக உயர்ந்து இருந்தது. 1950-51-ம் ஆண்டு நிலவரத்தை அடிப்படையாகக் கொண்டுதான், நாம் பயிர் நிலைமைப் புள்ளி விவரக் கணக்குகளைத் தயாரித்து வருகிறோம். அந்த ஆண்டில் விளைச்சல் 28 லட்சம் டன்தான். அப்பொழுது பருவநிலை மோசமாக இருந்தது என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டாலும் 16 லட்சம் டன் அதிகமாக 1955-56-ம் ஆண்டில் நாம் உற்பத்தி செய்ய முடிந்தது என்பது நமக்கு உற்சாகம் அளிக்கக்கூடியது. 1956-57-ம் ஆண்டில் முந்திய ஆண்டில் இருந்தது போலவேதான் பருவநிலை அமைந்திருந்தது. இருந்தபோதிலும் உணவு உற்பத்தி இன்னும் 2 லட்சம் டன் அதிகமாகி 46 லட்சம் டன் ஆக இருந்தது. உணவு உற்பத்தி பெருகி வருகிறதென்பதை இது நிச்சயப்படுத்துகிறது. நம் ராஜ்யத்தில் 3 கோடி மக்கள் வாழ்கின்றார்கள். ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒரு பவுண்டு வீதம் கணக்கிட்டால் நமக்கு 48 லட்சம் டன் உணவு தேவைப்படுகிறது. 1956-57-ம் ஆண்டில் நாம் உற்பத்தி செய்தது 46 லட்சம் டன். இதிலிருந்து பற்றாக்குறை அதிகமில்லை என்பது புலனாகும். சென்ற ஆண்டில் நம் ராஜ்யத்திலிருந்து சுமார் 2½ லட்சம் டன் அரிசி கேரள ராஜ்யத்திற்குச் சென்றது.



1st March 1958] [Sri C. Subramaniam]

இதற்குப் பதிலாக ஆந்திராவிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் நமக்குக் கிடைத்தது சுமார் ஒரு லட்சம் டன்தான். இருந்தபோதிலும் சென்ற ஆண்டு உணவுதானிய நிலைமையில் நெருக்கடி ஏற்படாதது, உணவு பற்றாக்குறை அதிகம் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. இந்த ராஜ்யத்தில் ஒரு ஏக்கரின் சராசரி நெல் விளைச்சல் உயர்ந்துகொண்டே வந்துள்ளது. 1954-55-ம் ஆண்டில் 1,149 பவுண்டு கலவனற்ற அரிசி கிடைத்தது. 1955-56-ம் ஆண்டில் 1,214 பவுண்டாகவும், 1956-57-ம் ஆண்டில் 1,255 பவுண்டாகவும் உயர்ந்தது. இந்தியாவில் மற்ற எல்லா ராஜ்யங்களிலும் ஏற்படும் சராசரி விளைச்சலைவிட நம் ராஜ்யத்தில்தான் அதிகமான விளைச்சல். அகில இந்தியாவிலும் ஒரு ஏக்கருக்குச் சராசரி 750 பவுண்டுதான் விளைகின்றது. இச்சாதனைகள் எல்லாம் நமக்குத் திருப்தி அளிக்கின்றன. இருந்தபோதிலும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் பருவநிலை மோசமாகின்ற காலங்களிலும் நிலைமையைச் சமாளிப்பதற்காகவும் போதுமான அளவு நாம் இன்னும் உற்பத்தி செய்யவில்லை என்பதை உணர வேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 12·79 லட்சம் டன் அதிகப்படியாக உணவு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலக்கை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். இதில் 1956-57-ம் ஆண்டில் 2 லட்சம் டன் உற்பத்தியைப் பெருக்கிவிட்டோம். நடப்பு ஆண்டில் அதற்குமேல் 3 லட்சம் டன் அளவு உற்பத்தி பெருகுமென்று எதிர்பார்க்கிறோம். இன்னும் மேலும் உற்பத்தியைப் பெருக்குவது அவ்வளவு எளிதல்ல. ஏனென்றால் இரசாயன உரங்களில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேலும் விவசாயத்தில் போகப்போக முயற்சி அளவிற்கு ஏற்ற பலன் கிட்டாத நிலை ஏற்படலாம். இருந்தபோதிலும் உணவு நிலைமையில் மொத்தத்தில் உள்ள பற்றாக்குறையை முன்னிட்டு நாம் இன்னும் விசேஷ முயற்சி எடுத்துக்கொள்வது அவசியம். சீன நாட்டிலுள்ள நிலைமை அநேகமாய் நம் நாட்டு நிலைமையைப்போன்றதுதான். அங்கு ஒரு ஏக்கருக்கு சராசரி 1,550 பவுண்டு அரிசி கிடைக்கின்றது. ஜப்பானில் ஒரு ஏக்கருக்கு 2,550 பவுண்டு அரிசி விளைகின்றது. ஆகவே மற்ற நாடுகளில் கையாளப்படும் உற்பத்திப் பெருக்க முறைகளை நாமும் கையாண்டால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிர்ணயித்துள்ளதில் மிச்சமுள்ள 8 லட்சம் டன் உணவு உற்பத்தி உயர்வை அடைவது அசாத்தியமல்ல.

விவசாய வளர்ச்சி.

6. நமது விவசாய அபிவிருத்தித் திட்டத்தில் முக்கியமான அம்சம் உயர் ரக வித்துக்களைப் பெருக்குவதும் வழங்குவதுமாகும். நம் ராஜ்யத்தில் 360-க்கு மேற்பட்ட விதைப் பண்ணைகள் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். 25 ஏக்கரா நிலத்தில் அமைக்கப்படும் இந்த வித்துப் பண்ணைகள் தேசிய

வளர்ச்சித் திட்ட வட்டாரத்துக்கு ஒன்று வீதம் அமைக்கப்படும். இப்பண்ணைகளில் 2,650 டன் விதை நெல்லும் 500 டன் புன்செய் தானிய வித்துக்களும் உற்பத்தி செய்ய முடியும். இவை கிராம விதைப் பண்ணைகளில் மேலும் பெருக்கப்படுவதன் மூலம் நம் ராஜ்யத்திற்குத் தேவையான வித்துக்களில் 85 சதவிகிதம் கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும். 1956-57-ம் ஆண்டில் இத்தகைய பண்ணைகள் 38 ஆரம்பிக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ள 136 விதைப் பண்ணைகளில் 1957-ம் ஆண்டு டிசம்பர் முடிய 116 பண்ணைகளை ஏற்கனவே ஆரம்பித்து விட்டோம். எஞ்சிய இருபது இந்த ஆண்டின் இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும். 1958-59-ம் ஆண்டில் 72 லட்ச ரூபாய் செலவில் 180 பண்ணைகளை ஆரம்பிக்க வரவு செலவுத் திட்டத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. இத்துடன் இத்திட்டம் ஏறக்குறையப் பூர்த்தியாகிவிடும். இந்த ஆண்டில் ஒரு லட்சத்து நாலாயிரம் டன் அமோனியம் சல்பேட் உரத்தை வழங்கத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் இவ்வுரம் போதிய அளவு கிடைக்காத காரணத்தால் 75,000 டன்தான் வழங்க முடிந்தது. வரவு செலவுத் திட்ட ஆண்டில் 1½ லட்சம் டன் உரம் வழங்கத் திட்டமிட்டிருந்ததை இப்பொழுது குறைக்க வேண்டியிருக்கும். இரசாயன உரங்கள் வாங்குவதற்கு விவசாயிகளுக்குக் கடன்கள் தந்து உதவ 60 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நகரப் பகுதிகளில் கழிவு உர உற்பத்தித் திட்டம் தீவிரமாக்கப்பட்டு வருகிறது. மூன்று லட்சம் டன் கழிவு உரத்தை உற்பத்தி செய்து வழங்குவதற்கு முனிசிபாலிட்டிகளுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் கடனாக 4 லட்சம் ரூபாய் தரவும், மான்யமாக 3 லட்ச ரூபாய் தரவும், வசதி செய்யப்பட்டுள்ளது. தழை உர வித்துக்களை வழங்கும் திட்டம் தொடர்ந்து நடந்துவரும். 1,200 டன் வித்துக்கள் வழங்கத் திட்டமிட்டுள்ளோம். விவசாயிகளுக்குப் பாதி விலையில் பூச்சி மருந்துகளை வழங்குவதற்காக 8 லட்ச ரூபாய் செலவு செய்யவும், விவசாயிகளுக்கு பாதி விலைக்கு பூச்சி மருந்தைத் தெளிக்கும் கருவிகளை வழங்குவதற்காக 4 லட்ச ரூபாய் செலவு செய்யவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

7. அமராவதி, சாத்தனூர், கிருஷ்ணகிரி, மணிமுத்தாறு போன்ற நமது பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அனைத்தும் அநேகமாக நிறைவேறிவிட்டன. இந்த அணைகளிலிருந்து நடப்பு ஆண்டில் பாசனத்திற்கு நீர் விடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் வைகை அணைக்கட்டுத் திட்டம் முடிவடையும். 1960-ம் ஆண்டில் கட்டளை, புள்ளம்பாடி திட்டம் முடிவடையும். வீடூர், நெய்யாறு திட்டங்களிலும் வேலை தொடங்கி உள்ளது. நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக நடப்பு ஆண்டில் 2 கோடி 86 லட்ச ரூபாய் செலவு செய்யவும் 1958-59-ம் ஆண்டில் 1 கோடி 69 லட்ச ரூபாய் செலவு செய்யவும் ஏற்பாடாகி உள்ளது. இப்புதிய திட்டங்களின்



கீழ் ஆயக்கட்டு அபிவிருத்தியும் திருப்திகரமாக உள்ளது. ஏராளமான செலவில் பெரிய அணையைக் கட்டி அதில் தேங்கியுள்ள நீரைப் பயன்படுத்துவதற்கு அதிக தாமதம் ஏற்படுவதால் நமது சக்தி விரயம் ஆகிறதென்று திட்ட நிபுணர்கள் அடிக்கடி குறை கூறி வருகிறார்கள். நம்முடைய திட்டங்களைப் பொறுத்தவரையில் இக்குறைக்கு இடமே எழாது. நம்முடைய பிரச்னை நமக்குள்ள வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறியதல்ல. மேலும் திட்டங்களை வகுப்பதற்குப் போதிய இயற்கை வசதிகள் இல்லை என்பதுதான் நமக்குள்ள குறை. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள் சிலவற்றை நம் ராஜ்யத்திற்குத் திருப்பிப் பயன்படுத்தும் திட்டங்கள் பற்றிக் கேரள அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. இரு ராஜ்யங்களுக்கும் நன்மை பயக்கும் முறையில் ஒரு முடிவு விரைவில் ஏற்படும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இதற்கிடையில் நமது சிறிய பாசனத் திட்டங்களைப் பழுது பார்த்துச் செம்மைப் படுத்த நாம் முயற்சிக்க வேண்டும். குளங்களைத் தூரெடுக்க 10 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைச் சேர்த்து சிறு பாசனத் திட்டங்களுக்காக 70 லட்ச ரூபாய் செலவிடப்படும். ஒன்பது லட்ச ரூபாய் செலவில் அடி ஊற்று நீரைப் பயன்படுத்த வடிமுனைக் கிணறுகள் தோண்டும் திட்டத்தின்கீழ் வேலைகள் தொடர்ந்து நடக்கும்.

கால்நடைப் பராமரிப்பு.

8. நமது கால்நடைச் செல்வத்தைப் பேணப் பல திட்டங்கள் நன்கு முன்னேறி வருகின்றன. இந்த ஆண்டில் இன்னும் நான்கு கேந்திர கிராம நிலையங்கள் திறக்கப்படும். கேந்திர கிராமங்களில் வளர்க்கப்படும் உயர் ரகப் பொலி காளைகளைப் பயன்படுத்திக்கொள்ள நான்கு விஸ்தரிப்பு நிலையங்கள் திறக்கப்படும். இராமநாதபுரத்தில் ஒரு கால்நடைப் பண்ணையையும், செங்கற்பட்டு, சின்ன சேலம் ஆகிய இடங்களில் ஆட்டுப் பண்ணைகளையும் ஆரம்பிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாதவரம் கால்நடைப் பண்ணைத் திட்டத்தின் கீழ் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும். இதற்கு 25 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கோழி வளர்ப்பு அபிவிருத்திக்கு 2·16 லட்ச ரூபாய் செலவில் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மீன்வளம்.

9. அடுத்த ஆண்டில் மீன்வள அபிவிருத்திக்காக 15 பாப்லோ முறை இயந்திரப் படகுகளை நிர்மாணித்து அவற்றைக் குறைந்த விலைக்கு மீனவர்க்கு விற்பதற்கும், கடலூரிலும், நாகப்பட்டினத்திலும் மீன்பிடிப்பதற்குத் துறைமுகங்கள் கட்டுவதற்கும், சாத்தனூர், மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களில் மீன் வளர்ப்பதற்கும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கடலோரக் கிராமங்களில் மீன்பிடிப்பவர் படகுகளுக்கு இரவில் வழிகாட்டுவதற்குக் கலங்கரை விளக்குகள் அமைப்பதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்காக மொத்தம் 21 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**காடுகள்.** 10. ரூபாய் 29 லட்சம் செலவில் புதிய காடுகளைத் திட்டமிட்டபடி வளர்க்கும் வேலை தொடர்ந்து நடக்கும். அதன்படி கடலோர மாவட்டங்களில் முந்திரி, சவுக்கு முதலியன பயிர் செய்வதற்கும் நீலகிரியில், ப்ளூகம், வாட்டில், தேக்குச்சி மரம் உற்பத்திக்கும், ஆறு, வாய்க்கால் ஓரங்களில் தேக்கு, இதர விலை உயர்ந்த மரங்கள் உற்பத்தி செய்வதற்கும் மண் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துக் காடுகளைத் திருத்துவதற்கும் காடுகளிடையே போக்குவரத்து வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மலைப் பகுதிகளிலும் சமவெளிப் பகுதிகளிலும் உள்ள சாகுபடி நிலத்தில் மண் வளப் பாதுகாப்புக்கு 17 லட்ச ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

**கூட்டுறவு.** 11. கிராமவாசிகளுக்கு நிதி வசதிகள் வழங்குவதைப் பொருத்தவரையில் விவசாயிகளுக்குத் தக்காவிக் கடனுகவும், மற்ற கடன்களாகவும் அரசாங்கம் தந்துதவ 3 கோடி 5 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் 300 பெரிய கூட்டுறவுக் கடன் சங்கங்கள் திறக்கக் கூட்டுறவு இலாகா உத்தேசித்துள்ளது. இதில் 240 சங்கங்கள் நடப்பு ஆண்டின் முடிவிற்குள் வேலை துவங்கும். எஞ்சிய 60 சங்கங்கள் அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப் படும். 200 சிறிய கூட்டுறவுக் கடன் சங்கங்களும் அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப்படும். ஈரோடு, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இரு பிர்காக்களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் விவசாயிகளுக்குத் தேவையான கடன் வசதிகள் அனைத்தையும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப் பரீட்சார்த்தத் திட்டம் ஒன்று நடந்து வருவது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிந்ததே. இதுவரை கிடைத்த அனுபவத்தின் பயனாய் இத் திட்டத்தை வரும் ஆண்டில் மேலும் 6 தேசிய வளர்ச்சி வட்டாரங்களில் விரிவாக்க உத்தேசித்துள்ளோம். இன்னும் 5 நில அடமான பாங்குகளைத் திறக்கவும் திட்டம் இருக்கின்றது. இத்துடன் சேர்ந்து நில அடமான பாங்குகளின் எண்ணிக்கை 81 ஆகும். வரவு செலவுத் திட்ட ஆண்டின் இறுதிக்குள் கூட்டுறவு இயக்கம் 77 சதவிகிதம் கிராமங்களையும், கிராம மக்களில் 40 சதவிகிதத்தினரையும் தழுவி விவசாயிகளுக்கு 13½ கோடி ரூபாய் நிதி வழங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. 20 லட்ச ரூபாயைப் பூர்வாங்க பங்கு மூலதனமாகக் கொண்டு ஒரு தானிய சேமிப்புக் கிடங்கு கார்ப்பரேஷன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் சேலம், திருநெல்வேலி, உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் 4 கிடங்குகள் திறக்கக் கார்ப்பரேஷன் திட்டமிட்டுள்ளது. அடுத்த ஆண்டில் மேலும் 6 கிடங்குகள் திறக்கப்படும்.



**தேசிய நலப் பரப்புத் திட்டம்.** 12. பாசனம், மண்வளப் பாதுகாப்பு, நல்ல வித்துக்கள் பெருக்கம், உரம் வழங்குதல், விற்பனை ஸ்தாபனங்கள் அமைப்பு போன்ற பற்பல விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்காக நாம் கணிசமான தொகை ஒதுக்கியுள்ளோம். ஆனால், தன்னுடைய நன்மைக்காக எவ்வளவு வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை விவசாயி உணரும்படி செய்யா விட்டால் இவ்வளவு செலவு செய்வதன் முழுப் பலனும் ஏற்படாது. ராஜ்ய வித்துப்பண்ணைகளில் உயர்ந்த ரக வித்துக்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டபோதிலும் விவசாயி தன்னிடம் இருக்கும் மட்ட ரக விதைகளையே உபயோகித்துக்கொண்டுவரலாம். இரசாயன உரங்களையும், பூச்சி மருந்துகளையும் எங்கிருந்து பெறுவது என்பது அவனுக்குத் தெரியாமலே இருந்துவிடலாம். விவசாயக் கடன்கள் பெற உரிய அதிகாரியைச் சரியான காலத்திற்குள் அணுகிக் கடன் பெறுவதிலும் அவனுக்குக் கஷ்டங்கள் சில இருக்கலாம். நவீன விவசாய ஆராய்ச்சியின் பலன்களை ஒவ்வொரு விவசாயியும் உணரும்படி செய்வதற்கான அளவில் விவசாய இலாகா அமைந்திருக்கவில்லை. இந்தக் குறைபாடுகளைப் போக்கி விவசாயிக்கும் அரசாங்கத்தின் விவசாயத் துறைகளுக்கும் நெருங்கிய தொடர்பும் உறவும் ஏற்படுத்தும் நோக்கத்துடன்தான் தேசிய வளர்ச்சித் திட்டங்களும், சமுதாய அபிவிருத்தித் திட்டங்களும் தொடங்கப்பட்டுள்ளன. தேசிய வளர்ச்சித் திட்ட அமைப்பு ஏற்கெனவே நம் ராஜ்யத்தின் மூன்றில் ஒரு பகுதியில் அமல் நடந்து வருகிறது. அடுத்த ஆண்டில் மேலும் 51 தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரங்களும், 16 சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களும் ஏற்படுத்தத் திட்ட மிட்டுள்ளோம். கிராமப் போக்குவரத்து சாலைகள், மருத்துவ சாலைகள், பள்ளிக்கூடங்கள் போன்ற பொது வசதிகளைத் தங்களுக்குத் தாங்களே உருவாக்கிக்கொள்வதில் கிராம மக்கள் காட்டியுள்ள உற்சாகம் மிகவும் வரவேற்கத் தக்கதே. ஆனால், அபிவிருத்தி அடைந்த விவசாய முறைகளைக் கையாளும் அவசியத்தைக் குடியானவன் உணரச் செய்வதும் அதற்குத் தேவையான வசதிகளைப் பெறுவதில் அவனுக்கு உதவுவதுமே இந்த சமுதாய அபிவிருத்தி அமைப்பின் முக்கிய குறிக்கோளாய் இருக்கவேண்டும். சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஊழியர்கள் எண்ணிக்கை அதிகரித்து அதற்கு அதிகச் செலவும் செய்வதற்கு ஏற்ப கிராமத்தில் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். முடிவில் இந்த அபிவிருத்தித் திட்டங்களின் வெற்றி, விவசாயத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கொண்டே மதிப்பிடப்படும். இதற்குத் தேவையான முறையில் அதிகாரிகள் மனப்பான்மையிலும் உரிய மாறுதல் செய்ய அரசாங்கம் தன்னால் இயன்றதைச் செய்து வருகிறது. இந்த முக்கியமான குறிக்கோளை நிறைவேற்றுவதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தி அவர்

களுக்கு உற்சாகத்தை ஊட்டுவதில் இச்சபையில் உள்ள கனம் அங்கத்தினர்களும், இத்துறையில் பங்கு கொண்டுள்ள எல்லா பொது ஊழியர்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன்.

மின்சாரம். 13. நமது மின்சாரத் திட்டம் சிறந்த முறையில் முன்னேறி வருகிறது. சென்னை மின்சார நிலைய விஸ்தரிப்புத் திட்டம் விரைவில் முடிவடையும். 30,000 கிலோவாட் சக்திகொண்ட ஒரு புது மின்னுக்கும் பொறி அடுத்த ஏப்ரல் மாதத்திலிருந்து வேலைசெய்யத் தொடங்கும். அடுத்த செப்டம்பர் மாதத்திற்குள் பெரியாறு நீர்மின்சாரத் திட்டத்தின் முதல் மின்னுக்கும் பொறி மூலம் 35,000 கிலோவாட் சக்தி நமக்குக் கிடைக்கும். குந்தா திட்டம் அடைந்துள்ள வெகு வேகமான முன்னேற்றத்தைக் கண்டு இத்திட்டத்தில் நமக்கு உதவி செய்து வரும் கானடா நாட்டு நிபுணர்கள் நம் நாட்டுப் பொறியியல் நிபுணர்களைப் பெரிதும் பாராட்டியுள்ளனர். கிராமங்களுக்கு மின்சாரம் பரப்பும் திட்டம் மிகுந்த வேகத்துடன் முன்னேறி வருகிறது. இந்த நிதி ஆண்டில் 1,000 கிராமங்களுக்கு மின்சாரம் பரப்ப உத்தேசித்திருந்தோம். அதில் 910 கிராமங்களுக்கு டிசம்பர் மாத முடிவிற்குள்ளாகவே மின்சார வசதி அளித்துவிட்டோம். இந்த ஆண்டு முடிவிற்குள் நம் இலக்குக்கு மேலாகவே சாதித்து விடுவோம். இப்பொழுது 6,200 கிராமங்களும், குக்கிராமங்களும் மின்சார வசதி பெற்றுள்ளன. சுமார் 60,000 தண்ணீர் இறவை இயந்திரங்கள் மின்சாரத்தால் இயங்குகின்றன. ஒவ்வொரு இறவை இயந்திரமும் மூன்று அல்லது ஐந்து ஏக்கராக்களுக்குப் பாசனம் அளிக்கும் என்ற கணக்குப்படி சுமார் 2 லட்சம் ஏக்கராக்களுக்குப் பாசன வசதியைப் பெருக்கக் கிராம மின்சாரத் திட்டம் உதவியுள்ளது. நடப்பு ஆண்டில் மின்சாரத்திற்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 11½ கோடி ரூபாய் 13 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்கு சுமார் 12 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெருந் தொழில்கள். 14. நம் ராஜ்யத்தின் தொழில் அபிவிருத்திக்கான ஒன்று பட்ட திட்டம் வகுப்பதற்காகத் தொழில் பிரமுகர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு ஒன்றை அரசாங்கம் அமைத்துள்ளது. பல்வேறு மூலப் பொருள்களையும் மற்ற வசதிகளையும் ஆராய்ந்து உடனடியாக மேற்கொள்ளக்கூடிய உருவான திட்டங்களைத் தயாரிப்பதில் இந்த ஆலோசனைக் குழு இப்பொழுது ஈடுபட்டுள்ளது. நெய்வேலியில் நிலத்தைத் தோண்டி நிலக்கரியை வெட்டும் வேலைகள் ஆரம்பமாகி விட்டன. இரண்டு லட்சம் கிலோவாட் மின்சார சக்தியை உற்பத்தி செய்வதற்கும், ஆண்டுக்கு 70,000 டன் நைட்ரஜன் சத்துடைய இரசாயன உரங்கள் உற்பத்தி செய்வதற்கும், 3½ லட்சம் டன் நிலக்கரியை உயர்ந்த எரிபொருளாக்குவதற்கும்



இணைப்பான திட்டங்கள் 60 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டு வேகமாக முன்னேறி வருகின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையான முக்கிய திட்டங்களில் ஒன்றாக நெய்வேலித் திட்டமும் ஏற்கப்பட்டுள்ளது. 1960-ம் ஆண்டுக்குள் இது முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கலாம். திருநெல்வேலியில் சோடா உப்பு உற்பத்தித் தொழிற்சாலையும், அம்பத்தூரில் ரப்பர் டயர் தொழிற்சாலையும் அமைக்கும் வேலை திட்டமிட்டபடி முன்னேறி வருகிறது. டி.ஜீ. சைக்கிள் கம்பனியை விரிவாக்கி ஆண்டுக்கு மூன்று லட்சம் சைக்கிள்கள் உற்பத்திக்கு வசதி செய்யும் திட்டம் உருவாகியுள்ளது. இராமநாதபுரத்தில் ஒரு புது சிமிட்டித் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் முன்னேறி வருகிறது. மின்சார மோட்டார்கள், மின் பொருத்தி சாதனங்கள் (Switchgears), மின் அழுத்த மாற்றிகள் (Transformers), குழாய்கள் முதலியவற்றை உற்பத்தி செய்வதற்குப் பல தொழிற்சாலைகள் நிறுவ அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்டு வரும் 3 சர்க்கரை ஆலைகள் 1959-ம் ஆண்டின் மத்தியிலிருந்து உற்பத்தியை ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளியில் பெட்டவாய்த்தலையில் தனியார் துறையில் அமைக்கப்பட்டுள்ள சர்க்கரை ஆலையில் இன்னும் சில மாதங்களில் உற்பத்தி தொடங்கும். சேலம் இரும்புக் கனிகளின் பரிசீலனை ஜாம்ஷெட்பூரில் நடந்து வருகிறது. தனியார் துறையில் அனுமதிக்கப்பட்டுள்ள தேனிரும்புத் தொழிற்சாலை அமைப்பு முன்னேறி வருகிறது. சேலத்திலுள்ள அலுமினியக் கனிப் பொருள்களின் பரிசீலனைக்காக அமர்த்தப்பட்ட பிரஞ்சு நாட்டு நிபுணர் அக்கனிப் பொருள்களின் தரத்தைப்பற்றித் தம் கருத்தைத் தெரிவித்துள்ளார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள அலுமினியத் தொழிற்சாலை விரைவில் உருவாகும் என்று நாம் நம்பலாம். ரேயான் பட்டு நூல் உற்பத்திக்கான தொழிற்சாலை அமைக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை வகுத்துள்ளவர்கள் இத்தாலி நாட்டிலிருந்து கணிசமான நிதி உதவி பெற்றுள்ளார்கள். இத்திட்டங்களுக்குத் தேவையான அன்னிய செலாவணியைப் பெறுவதில் உள்ள கஷ்டங்களைச் சமாளிக்க அயல் நாட்டு முதலாளிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. இம்முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் கஷ்டத்தைத் தீர்ப்பதில் அரசாங்கமும் இயன்ற வரை உதவி வருகிறது.

சிறு ரகத் தொழில்கள். 15. ராஜ்ய ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள சிறு கைத்தொழில்களை வளர்ப்பதில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எழுபது லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கிண்டி தொழிற்பண்ணை நமது பிரதமரால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. அதில் அமைக்கப்

படும் 90 தொழிற்சாலை அமைப்புகளில் 52 அமைப்புகள் வெவ்வேறு தொழில் நடத்துவோருக்கு ஏற்கனவே ஒதுக்கப் பட்டுவிட்டன. சிறிய அளவில் அமைக்கப்படவிருக்கும் விருதுநகர், ஈரோடு, திருநெல்வேலி, மதுரை, மார்த்தாண்டம் தொழிற்பண்ணைகள் உருவாகி வருகின்றன. வரும் ஆண்டில் அவை திறக்கப்படும். நடப்பு ஆண்டில் சிறு கைத் தொழில்களுக்கு அரசாங்க உதவியாக சுமார் 25 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்கும் அதே அளவுத் தொகை ஒதுக்கப்படும். சிறு கருவிகள், அறுவை மருத்துவக் கருவிகள், மின்சார சாதனங்கள், விஞ்ஞான ஆராய்ச்சிக் கருவிகள், விளையாட்டுக் கருவிகள், மாதிரி வார்ப்பாலை ஆகியவற்றின் உற்பத்திக்காகத் தொழில் உதவி நிலையங்கள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. தொழில் நுட்ப செய்தி நிலையம் ஒன்று ஒரு நூல் நிலையத்துடன் விரைவில் சென்னையில் அமைக்கப்படும். ராஜ்ய சீரமைப்புக்குப் பின் மைசூர் ராஜ்யத்திற்கு மாற்றப்பட்ட கொள்ளேகால் பட்டுத் தொழிற்சாலைக்குப் பதிலாக 25 அமைப் புகள் கொண்ட பட்டு நூல் கண்டுத் தொழிற்சாலை ஒன்று ஓசூரில் ஏற்படுத்தப்படுகிறது. காதி, கிராமத் தொழில்கள் கமிஷனின் நிதி உதவி பெற்றுவரும் பல்வேறு கிராமத் தொழில்களும் கைப்பணித் தொழில்களும் தொடர்ந்து நடந்து வரும். இக்கைப்பணிப் பொருள்களை விளம்பரப் படுத்தவும், விற்கவும் முக்கிய இடங்களில் 4 விற்பனை நிலையங்கள் திறக்கவும் திட்டமுள்ளது.

கைத்தறி. 16. கைத்தறித் தொழிலின் தேவைகளை அரசாங்கம் மிகுந்த அக்கறையுடன் கவனித்து வருகிறது. கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராய்ச் சேருவதற்கு நெசவாளர்களுக்குக் கடன் உதவி அளிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், அபிவிருத்தியடைந்த தொழில் சாதனங்களை வாங்குவதற்கும், விற்பனை வசதிகள் செய்து தருவதற்கும், துணி வாங்கு வோர்க்கு விலையில் சலுகை தருவதற்கும், நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரவும் செஸ் நிதியிலிருந்து உதவி வழங்கப் படுகிறது. துணித் தொழிலில் இப்பொழுது ராஜ்யத்திலுள்ள மந்தத்தின் காரணமாகக் கைத்தறித் துணி விற்பனையும் குறைந்துள்ளது ; ஏராளமான துணி தேங்கிக் கிடக்கிறது; தேங்கிக் கிடக்கும் துணியை விரைவில் விற்பனை செய்வதற்கு மத்திய அரசாங்கம் தந்து வரும் மான்யத்தைக் குறைக் காமல் தொடர்ந்து தரவேண்டுமென்று இந்திய அரசாங்கத் திடம் வற்புறுத்தப்பட்டுள்ளது. நெசவாளருக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்கும்படி செய்யத் திருநெல்வேலியில் அமைக்கப்படும் கூட்டுறவு நூற்பு ஆலை விரைவில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பன்னிரண்டாயிரம் கதிர்கள் கொண்ட இன்னொரு ஆலை





ஒன்றை ஸ்ரீவில்லிபுத்தூரில் தொடங்க உத்தேசமுள்ளது. கைத்தறித் தொழிலின் முன்னேற்றத்திற்காக இந்தத் திட்டத்தில் 92 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

17. மத்திய அரசாங்கத்தின் திட்டத்தின்கீழ் நடை பெற்றுவரும் பல்வேறு வீடு கட்டும் திட்டங்களும் திருப்தி கரமாக முன்னேறி வருகின்றன. மத்திய அரசாங்க நிதி உதவியுடன் ஆலைத் தொழிலாளருக்கு வீடு கட்டும் திட்டத்தின்கீழ் இப்பொழுதுள்ள வேலைகளை முடிப்பதற்கும், சிவகாசியிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வெள்ளனூர் என்ற ஊரிலும் புது வேலைகள் தொடங்குவதற்காகவும் 21 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. குறைந்த ஊதியம் பெறு வோர்க்கு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் சுமார் 800 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், 500 வீடுகள் கட்ட ஒரு புதுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற் காகக் கூட்டுறவு சங்கங்களுக்கு 15 லட்ச ரூபாயும், நகர அபி விருத்தி டிரஸ்டுக்கு 17 லட்ச ரூபாயும், ஊராட்சி மன்றங் களுக்கு 6 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. சேரிகளைத் திருத்த 60 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சென்னை நகரில் 20 சேரிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றைச் சீர்படுத்தி 4,000 குடும்பங்கள் வாழ வகை செய் யப்படும். நகர வீடுகள் கட்டும் ராஜ்யத் திட்டங்களின் கீழ் கூட்டுறவு சங்கங்களுக்கு 17 லட்ச ரூபாயும், நகர அபி விருத்தி டிரஸ்டுக்கு 17 லட்ச ரூபாயும் கடன் தர வசதி செய்யப்பட்டுள்ளது. போலீஸ் ஊழியர்களுக்கு வீடுகள் கட் டுவது துரிதப்படுத்தப்படும். வரும் ஆண்டில் அதற்காக 75 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அண்மையில் இராம நாதபுரம் மாவட்டத்தில் நடந்த கலவரங்களின்போது பாழ் பட்ட சுமார் 3,000 வீடுகளைப் புதுப்பிக்க 17 லட்ச ரூபாய் செலவில் ஒரு திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்திட் டத்திற்கான செலவில் பாதியை இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும். வீடுகள் கட்ட நடந்து வரும் பல்வேறு முயற்சி களையும் ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் ராஜ்ய வீட்டு வசதிக் குழு ஒன்றை (State Housing Board) அரசாங்கம் அண்மையில் அமைத்துள்ளது. வீட்டு வசதிகள்.

18. நம் ராஜ்யத்திலுள்ள சாலை அமைப்பு நம் நாட்டி லேயே சிறந்தது. அச்சாலை அமைப்புக்கு மேலும் பல அபிவிருத்திகள் தொடர்ந்து செய்யப்படுகின்றன. இவற்றைப் பராமரித்து வர ஆண்டுக்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அதில் 60 லட்ச ரூபாய் ஆண்டுதோறும் 500 மைல் நீளத்திற்கு முக்கியமான இடங்களில் பாதைகளில் கருந்தளம் (black-topping) இட செலவிடப்படுகிறது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் புது வேலைகளுக்காக ராஜ்ய நிதியிலிருந்து 96 லட்ச ரூபாயும், மத்திய ரோடுகள் நிதியிலிருந்து 68 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. சாலைகள்.

ஈரோட்டில் காவிரியைக் கடக்கவும், திருப்புவனத்தில் வைகையைக் கடக்கவும்; ஆற்காடு–திண்டிவனம் சாலையில் சேயாற்றைக் கடக்கவும், ஆற்காடு–வந்தவாசி சாலையில் கமந்தலநாக நதியைக் கடக்கவும் பெரிய பாலங்கள் கட்ட நிதி ஒதுக்கியுள்ளது. புதுப் பாதைகள் வேலைகளுக்காக ஜில்லா போர்டுகளுக்கும் பஞ்சாயத்துப் போர்டுகளுக்கும் மான்யம் வழங்க 33 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தூசியற்ற தளம் அமைக்க முனிசிபாலிட்டிகளுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் மான்யமாக 12 லட்ச ரூபாயும் கடனாக 8 லட்ச ரூபாயும் தர வசதி செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மலையில் இயற்கைக் காட்சி இடங்களுக்குச் செல்லும் பாதைகளைச் செம்மைப்படுத்த நீலகிரி ஜில்லா போர்டுக்கு விசேஷ மான்யமாக 2 லட்ச ரூபாய் அளிக்கப்படும்.

மருத்துவம். சுகாதாரம். 19. மருத்துவ வசதிகளைப் பொருத்தவரை 13 லட்ச ரூபாய் செலவில் செங்கற்பட்டு, கடலூர், பாளையங்கோட்டை, வேலூர், உதகமண்டலம், தஞ்சாவூர் ஆகிய ஊர்களில் உள்ள மாவட்ட தலைமை ஆஸ்பத்திரிகளுக்கு அபிவிருத்திகள் செய்யப்படும். சேயாறு, விருத்தாசலம், ஸ்ரீபெரும்புதூர், பவானி, திருப்பத்தூர், அரந்தாங்கி, ஸ்ரீவைகுண்டம், ஜெயங்கொண்டான், ஓசூர் ஆகிய இடங்களில் ஊராட்சி மன்றங்களால் இப்பொழுது நடத்தப்படும் மருந்து சாலைகள் அரசாங்க நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்படும். பல்வேறு தாலுக்காத் தலைமை நிலைய ஆஸ்பத்திரிகளை விரிவாக்குவதற்கு 11 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் 80 பிரதம ஆரோக்கிய நிலையங்கள் திறக்கத் திட்டமிட்டுள்ளோம். அவற்றில் 52 நிலையங்களை ஏற்கனவே திறந்து விட்டோம். இன்னும் 9 புது நிலையங்கள் வரும் ஆண்டில் திறக்கப்படும். கிராமங்களிலுள்ள இந்த நிலையங்களுக்குச் செல்வதற்குத் தூண்டுகோலாக டாக்டர்களுக்கு ஒரு விசேஷப் படி தர முடிவு செய்துள்ளோம். அவர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து தரவும் ஏற்பாடு செய்து வருகிறோம். சென்னை நகரத்திலும், மதுரையிலும் மருத்துவக் கல்விப் பயிற்சி நடக்கும் ஆஸ்பத்திரிகளுக்கு 57 லட்ச ரூபாயில் அபிவிருத்திகள் செய்யப்படும். பொது சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் நகரக் குடிநீர் வசதிக்காக இப்பொழுது நடந்துவரும் திட்டங்களை முடிப்பதற்காக 86 லட்ச ரூபாயும் கிராமக் குடிநீர் வசதிக்காக 60 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. 105 தாய் சேய் நல நிலையங்களைத் திறக்கவும் 900 தாய்களுக்கு பயிற்சி அளிக்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி. 20. கல்வித்துறையில் 1956-57-ம் ஆண்டில் 10 கோடியே 60 லட்ச ரூபாய் செலவு செய்தோம். நடப்பு ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடு 11 கோடியே 47 லட்சமாகும். ராஜ்ய சீரமைப்பின் காரணமாக ராஜ்யத்தின் நிலப் பரப்பும் மக்கள் எண்ணிக்கையும் குறைந்தபோதும் நாம்





கல்விக்காக இந்த ஆண்டில் செலவு செய்யும் தொகை ஏறக்குறைய 1 கோடி உயர்ந்துள்ளது. வரும் ஆண்டில் நாம் 12 கோடியே 4 லட்ச ரூபாய் செலவு செய்யத் தொகை ஒதுக்கியுள்ளோம். வழக்கம்போல் இந்த மொத்தச் செலவில் பாதிக்குமேல் ஆரம்பக் கல்விக்கே செலவாகும். ஆரம்பக் கல்விக்காக 1956-57-ல் 4 கோடியே 91 லட்ச ரூபாய் செலவாயிற்று. 1957-58-ல் செலவு 6 கோடியே 54 லட்சம் ரூபாய். வரும் ஆண்டில் 6 கோடியே 59 லட்சம் ரூபாய் செலவாகும். கல்விப் பிரச்னைகளை ஆராய்ந்த சென்னை சட்ட சபைக் குழு சிபார்சு செய்ததற்கு இணங்க ஆரம்பப்பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாக வழங்க 20 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆரம்பப்பள்ளியில் புதிதாகச் சேர்க்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு 1 லட்சம் வீதம் பெருகி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,700 புது வகுப்புகள் தொடங்க வசதி செய்யும் வகையில் பள்ளிக்கூடங்கள் விரிவாக்கப்பட்டு அத்துடன் புதிய பள்ளிகளும் திறக்கப்படுகின்றன. புதுத் திட்டங்களுக்கான இச்செலவில் மத்திய அரசாங்கமும் பங்கு கொள்கின்றது. இச்செலவைப் பகிர்ந்துகொள்ளும் முறையில் மத்திய அரசாங்கத்திடமிருந்து 1956-57-ம் ஆண்டில் நமக்கு 32 லட்ச ரூபாய் கிடைத்தது. இந்த ஆண்டில் 1 கோடியே 19 லட்ச ரூபாய் கிடைக்குமென்றும் வரும் ஆண்டில் இது 1 கோடியே 35 லட்சமாக உயருமென்றும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

21. தொழிற் கல்வி வளர்ச்சியில் விசேஷ கவனம் தொழிற் கல்வி.
தொடர்ந்து செலுத்தி வருகின்றோம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் நம் ராஜ்யத்தின் பொறியியற் கல்லூரியில் 647 மாணவர்கள் சேர்க்கவும் பல்தொழிற் பயிற்சிக் கழகங்களில் 1,142 மாணவர்களைச் சேர்க்கவும் வசதி இருந்தது. இப்பொழுது அவற்றை விரிவாக்கிப் பொறியியற் கல்லூரிகளில் 1,132 மாணவரைச் சேர்க்கவும் பல்தொழில் பயிற்சிக் கழகங்களில் 1,752 மாணவரைச் சேர்க்கவும் வசதிகள் செய்துள்ளோம். தொழிற் கல்வி நிர்வாக இலாகா ஒன்றை நாம் அமைத்துள்ளோம். ராஜ்ய தொழிற் கல்வி பயிற்சிக் குழு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இந்த அமைப்புகள் வேலை செய்யத் தொடங்கிவிட்டன. தொழிற் கல்வி நிலையங்களின் நிர்வாகத்தைப்பற்றியும் ஆசிரியர்கள் அமர்த்துவது பற்றியும் உள்ள பல்வேறு பிரச்னைகளைச் சமாளிக்க இந்த அமைப்புகள் உதவும் என்று எதிர்பார்க்கலாம். தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாததான தொழில் நுட்ப நிபுணர்களைப் போதிய அளவில் தொடர்ந்து தயார் செய்வதிலும் இந்த அமைப்புகள் உதவும். தென்னிந்தியாவிற்கான உயர் தொழிற் கல்வி நிலையத்தைச் சென்னையில் அமைப்பது குறித்து நாம் மத்திய அரசாங்கத்துடன் நடத்திவந்த பேச்சு

[Sri C. Subramaniam] [1st March 1958

வார்த்தைகள் நமக்குச் சாதகமாக முடிவடைந்துள்ளன என்ற செய்தியை இச்சபை வரவேற்கும். இந்த கல்வி நிலையத்திற்குத் தேவையான நிலம் பற்றியும் முடிவு செய்துவிட்டோம். நிலையத்தை நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

பின்தங்கிய வகுப்பினர் நலன்.

22. ஹரிஜனங்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோருடைய நலனிலும் அரசாங்கம் தொடர்ந்து விசேஷ அக்கறை காட்டி வருகின்றது. இம்மக்களின் நலன்களை வளர்க்கும் திட்டங்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் 2 கோடியே 33 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் செலவுக்கு ஒதுக்கப்பட்ட தொகையை விட இத்தொகை 40 லட்சம் ரூபாய் அதிகம். இத்திட்டங்களின் கீழ் 15,000 மாணவர்களுக்கு உதவிச் சம்பளங்கள் வழங்க 28 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 12,000 மாணவர்கள் விடுதிகளில் தங்க வசதி செய்ய மானியமாக 22 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஹரிஜனப் பள்ளியில் மதிய உணவுக்காக 27 லட்ச ரூபாயும், 5,000 வீடுகள் கட்டுவதற்கு மானியமாக 27 லட்சம் ரூபாயும், 5,800 ஜோடி மாடுகள் வாங்குவதற்கு மானியமாக 18 லட்ச ரூபாயும், ஹரிஜனங்களுக்கென 175 கிணறுகள் தோண்ட 5 லட்ச ரூபாயும், சிறு குடிசைத் தொழில்களை வளர்க்க 9 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன.

1957-58-ம் ஆண்டு : திருந்திய மதிப்பீடுகள்.

23. நடப்பு ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை நாம் தயாரித்தபடி, அதிகப்படியான வரி விதிப்பிலிருந்து கிடைக்கும் 1½ கோடி ரூபாயைச் சேர்த்து 57 கோடியே 95 லட்ச ரூபாய் வருவாய் கிடைக்குமென்றும், 61 கோடியே 32 லட்ச ரூபாய் செலவாகும் என்றும், ஆகவே 3 கோடியே 33 லட்சம் ரூபாய் துண்டு விழும் என்றும் கணக்கிடப்பட்டிருந்தது. இப்பொழுது திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி வருவாய் 60 கோடியே 41 லட்சம் ரூபாயாகவும், செலவு 60 கோடியே 36 லட்ச ரூபாயாகவும், ஆகவே 5 லட்சம் உபரியாய் நிற்கும் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வருவாய் இனத்தில் கணிசமான முன்னேற்றம் காணப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம், நடப்பு ஆண்டில் இருந்து அமல் வந்துள்ள நிதிக் கமிஷன் முடிவேயாகும்.

நிதிக் கமிஷன்.

24. நிதிக் கமிஷன் முன்பு நாம் நமது வாதத்தை எடுத்துரைத்தபோது அபிவிருத்தித் திட்டங்களின் மீது ராஜ்யங்களுக்கு ஏற்படும் அதிகப்படியான செலவுகளை ஈடு செய்யவும், மத்திய அரசாங்க ஊழியர்களின் சம்பளத்திற்கும் ராஜ்ய அரசாங்க ஊழியர்களின் சம்பளத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் குறைப்பதற்கும் வருமான வரியிலும் உள்நாட்டு வரியிலும் ராஜ்யங்களுக்கு அதிகப் பங்கு தரவேண்டுமென்று வற்புறுத்தி இருந்தோம். நிதி பற்றாக்குறையை ஈடுகட்டப் புதிய நாணயப் பெருக்க நடவடிக்கைகள் (deficit financing) மூலம், மத்திய அரசாங்கம் அதிக வருவாய்



1st March 1958] [Sri C. Subramaniam]

திரட்டுகிறது. ஆகவே மத்திய அரசாங்கம் நமக்குத் தரும் கடன்கள் மீது வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டும் என்றும் நாம் வற்புறுத்தியிருந்தோம். கமிஷன் தன்னுடைய முடிவுகளில் நம்முடைய கோரிக்கைகள் சிலவற்றைத்தான் ஏற்றுள்ளது. வருமான வரியிலிருந்து ராஜ்யங்களுக்குக் கிடைக்கும் பங்கு 55 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ஆண்டுக்கு 94 லட்சம் ரூபாய் நமக்கு அதிகமாகக் கிடைக்கக்கூடும். மத்திய உள்நாட்டு வரியைப் பொறுத்தவரை, ராஜ்யங்களுக்கும் மத்திய அரசாங்கத்துக்குமிடையே பகிர்ந்து கொள்ளவேண்டிய வரிப் பட்டியலில் மேலும் சில பொருள்களின் மீது விதிக்கப்படும் வரிகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் ராஜ்யங்களின் பங்கு 40 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் நமக்கு ஒரு ஆண்டில் இதன் மூலம் 44 லட்சம் ரூபாய் அதிகம் கிடைக்கக் கூடும். நடப்பு ஆண்டில் மத்திய அரசாங்கத்தால் ரயில்வே பிரயாணிகளின் கட்டணம் மீது விதிக்கப்பட்டுள்ள புது வரியிலிருந்து கிடைக்கும் வருவாய், ரயில் பாதை அளவை அடிப்படையாகக் கொண்டு ராஜ்யங்களுக்கிடையே பகிர்ந்து தரப்படும். இதன் மூலம் நடப்பு ஆண்டின் ஒரு பகுதிக்காக நமக்கு 34 லட்ச ரூபாயும், ஒரு முழு ஆண்டில் 64 லட்ச ரூபாயும் கிடைக்கக்கூடும். இந்த சிபாரிசுகள் அனைத்தும் இந்திய அரசாங்கத்தால் ஏற்கப்பட்டுள்ளன. இதனால் நடப்பு ஆண்டில் நம்முடைய வருவாய் இனத்தில் 1 கோடியே 74 லட்ச ரூபாய் உயர்வும், வரும் ஆண்டில் 2 கோடியே 2 லட்சம் ரூபாய் உயர்வும் ஏற்படும். மத்திய அரசாங்கத்திலிருந்து ராஜ்யங்கள் பெற்றுள்ள பல்வேறு கடன்களை எல்லாம் சேர்த்து அவற்றிற்குச் சிறிது குறைந்த வட்டி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கமிஷன் சிபார்சு செய்துள்ளது. இதன் மூலம் நமக்கு ஒரு ஆண்டுக்கு 60 லட்ச ரூபாய் வரை நிவாரணம் கிடைத்திருக்கும். ஆனால் இந்த சிபார்சை மத்திய அரசாங்கம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதலால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் இதை நாம் கணக்கில் எடுத்துக் கொள்வதற்கில்லை. ராஜ்ய அரசாங்க ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்துவதற்காக உதவி வேண்டும் என்ற நமது கோரிக்கையைக் கமிஷன் நிராகரித்து விட்டது. அதற்கு மாறாக 1956-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நாம் இந்த ஊழியர்களின் கிராக்கிப் படியை 5 முதல் 7 ரூபாய் வரை உயர்த்தியதை முன்னிட்டு நமக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கவேண்டிய உதவியை நிறுத்திவிடலாம் என்று கமிஷன் சிபார்சு செய்துள்ளது. இதனால் கமிஷனின் சிபார்சுகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் உதவியில் ஒரு பகுதி குறைந்துவிடும். தற்போதுள்ள தவிர்க்கமுடியாத செலவினங்கள் மீது ராஜ்யங்களின் வருவாய் பற்றாக்குறைகளை

ஈடுசெய்வதற்கான அளவுமட்டுமே மத்திய அரசாங்கம் உதவி செய்யவேண்டும் என்பது கமிஷனுடைய கொள்கை. கமிஷன் தன்னுடைய சிபார்சில் இன்னும் சற்று தாராளமான போக்கைப் பின்பற்றி இருக்கலாம் என்று நாம் எண்ண இடமுண்டு. ஆயினும் மத்திய அரசாங்கத்தின் வருவாய்க்கும் ஒரு எல்லை உண்டு என்பதையும், பற்பல முரண்பட்ட கோரிக்கைகளையும் ஈடு செய்யும் கடினமான பொறுப்பு கமிஷனுக்கு இருந்தது என்பதையும் நாம் உணரவேண்டும். ஆகவே அவர்கள் சிபார்சு செய்துள்ளபடி நமக்குக் கிடைத்துள்ள உதவிக்கு நாம் கமிஷனுக்கு நன்றி செலுத்துவோமாக.

வருவாய் வசதிகள்.

25. ராஜ்யங்களும் மத்திய அரசாங்கமும் சேர்ந்து துணி, சர்க்கரை, புகையிலைப் பொருள்கள் மீதிருந்த விற்பனை வரியை ரத்து செய்துள்ளதைக் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். இந்தப் பொருள்களின் மீது விற்பனை வரிக்குப் பதிலாக அதிகப்படியான உள்நாட்டு வரிகள் ஆரம்பக் கட்டத்திலேயே விதிக்கப்படுகின்றன. இதன்மூலம் கிடைக்கும் வருவாய் ராஜ்யங்களிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது. 1956-57-ம் ஆண்டில் இப்பொருள்களிலிருந்து நமக்குக் கிடைத்த வருவாயான 2 கோடியே 85 லட்ச ரூபாய்க்குக் குறையாமல் நமக்குக் கிடைத்து வருமென்று மத்திய அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இவ்வாறு உறுதியளிக்கப்பட்ட குறைந்தபட்சத் தொகைக்குமேல், புது உள்நாட்டு வரியினால் கிடைக்கும் அதிகப்படியான தொகை பல்வேறு ராஜ்யங்களுக்கும் இடையே, நிதிக்கமிஷன் சிபார்சு செய்துள்ள முறையின் அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்படும். அதன் மூலம் நாளடைவில் நமக்கு சற்று அதிகப்படியான வருவாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம். இந்த வரி விதிப்பு மாறுதல் ஏற்படுவதற்கு இந்த ராஜ்யத்தின் முயற்சியே பெருமளவிற்குக் காரணமாகும். இதன்மூலம் ராஜ்யங்களின் வருவாயைப் பாதிக்காமல் இந்தப் பொருள்களில் வர்த்தகம் செய்வோருக்குக் கணிசமான அளவு நிவாரணம் அளிக்க வழி பிறந்தது. உசிதமான இன்னும் சில பொருள்களுக்கு இத்திட்டத்தை விரிவாக்குவது பற்றி பரிசீலனை நடந்து வருகிறது. ராஜ்யத்தின் பல்வேறு வரிகளிலிருந்தும் வருவாய் சற்று பெருகியுள்ளது. குறிப்பாக மோட்டார் வாகனங்கள் மீதுள்ள வரியிலிருந்தும் மத்திய விற்பனை வரியிலிருந்தும் அதிகத் தொகை வசூலாகியுள்ளது. இவற்றின் பயனாய் நமக்கு 1 கோடியே 25 லட்சம் ரூபாய் அதிக வருவாய் கிடைத்துள்ளது. செலவினங்களிலும் 96 லட்ச ரூபாய் செலவு குறைந்துள்ளது. வரவு செலவுத் திட்டத்தின்படி எடுத்துக்கொள்ளவிருந்த சில புதுத் திட்டங்கள் அங்கீகரிக்கப்படுவதில் ஏற்பட்ட காலதாமதமே செலவுகள் குறைவுக்கு முக்கிய காரணமாகும்.





மூலதன வசதிகள்.

26. இந்த ஆண்டிற்கான மூலதன செலவுகள் 15 கோடியே 49 லட்ச ரூபாயாக இருந்து, இப்பொழுது 16 கோடியே 67 லட்சமாகத் திருத்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மின்சாரத் திட்டங்களுக்கான தொகை 1—7—1957 முதல் மூலதன வரவு செலவுத் திட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு மின்சார போர்டுக்குக் கொடுக்கும் கடனாக இப்பொழுது காட்டப்பட்டுள்ளது. மின்சாரத்தின் மீது மூலதனச் செலவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 11 கோடியே 62 லட்சத்திலிருந்து, 13 கோடியே 2 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் இப்பொழுது நம்மிடமுள்ள நிதி வசதிகள் சுமார் 8 கோடி ரூபாய் அளவுதான். எஞ்சிய 5 கோடி ரூபாயை மின்சாரத் தேய்மான ஈடு நிதியிலிருக்கும் கடன் பத்திரங்களை மின்சார போர்டு விற்பனை செய்துதான் திரட்டவேண்டும். இந்த ஆண்டில் சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் வசூலாகும் தொகையில் நம்முடைய பங்காக 5½ கோடி ரூபாய் கிடைக்கக் கூடும். இதைக்கொண்டு, ரொக்க வசதிகள் நிலைமையில் துண்டு விழும் தொகையை ஈடு செய்யலாம் என்று எதிர்பார்க்கலாம்.

1958-59 : வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

27. 1958-59-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி நமக்கு 62 கோடியே 40 லட்ச ரூபாய் வருவாய் கிடைக்குமென்றும், 63 கோடியே 25 லட்ச ரூபாய் செலவு ஏற்படுமென்றும், ஆகவே 1 கோடியே 35 லட்சம் துண்டு விழுமென்றும் எதிர்பார்க்கிறோம். அரசாங்க ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தியதில் மத்திய அரசாங்கத்தின் உதவி இன்னும் சற்று தாராளமாகக் கிடைக்குமென்று இந்த மதிப்பீடுகளைத் தயாரித்து முடித்த பின்பு நமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதன்மூலம், ஆண்டுக்கு 30 லட்ச ரூபாய் அதிக மான்யம் கிடைக்கும். ஆகவே துண்டு விழும் தொகை 1 கோடியே 35 லட்சமாக இருந்தது, 1 கோடியே 5 லட்சமாகக் குறையும். இரும் நிலங்கள் மீது வரி மூலமாகவும் அபிவிருத்திக் கட்டணம் மூலமாகவும் நில வருமான இனத்தில் சற்று அதிகப் பணம் கிடைக்கலாம். மோட்டார் முதலிய போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மோட்டார் வாகன வரியிலிருந்தும் அதிக வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். செலவினங்களைப் பொறுத்தவரை ஜமீன்கள் ஒழிப்பு நிதிக்கு ஆண்டுதோறும் செலுத்திவந்த தொகை 10 லட்ச ரூபாயிலிருந்து, இவ்வாண்டில் 50 லட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஜமீன்தார்களுக்கு இதுவரை தரவேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகைகளுக்காக நிதி வசதியைச் சேமிக்கும் பொருட்டு இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிதிக் கமிஷன் சிபார்சு செய்தபடி இனாம் ஒழிப்பு நிவாரண நிதிக்கு ஒதுக்கப்படும் தொகை 5 லட்சத்திலிருந்து இவ்வாண்டில் 50 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

சலுகைகள். 28. கெஜட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்களின் குழந்தைகள் இப்பொழுது மூன்றும் படிவம்வரை முழுச் சம்பளச் சலுகையும் உயர்நிலைப்பள்ளி வகுப்புகளில் அரைச் சம்பளச் சலுகையும் பெற்று வருவதைக் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். அவர்களுக்கு உயர்நிலைப்பள்ளி வகுப்புகளிலும் முழுச் சம்பள சலுகை தருவதற்கு இந்த வரவு செலவில் திட்டமிட்டுள்ளோம். விவசாய இலாகா டெமான்ஸ்டிரேட்டர்கள் சம்பளம் இதுவரை 100—5—140—10—220 ரூபாயாக இருந்தது. இனி 135—5—220—10—270 ரூபாயாக உயர்த்தப்படும். நெடுஞ்சாலை இலாகாவில் போக்குவரத்து, இயந்திரப் பழுது பார்க்கும் சாலையில் வேலை செய்யும் ஊழியர்கள், ராஜ்ய அரசாங்க நிரந்தர ஊழியர் பகுதியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். விற்பனை வரி அமைப்பைத் திருத்துவது பற்றி டாக்டர் லோகநாதன் செய்துள்ள சிபார்சுகளை இப்பொழுது அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்துவதற்காக ஒரு விரிவான மசோதா விரைவில் கொண்டுவரப்படும். அவர் சிபார்சு செய்ததுபோல் 10 ஆயிரம் ரூபாய் முதல் 25 ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்டு வியாபாரம் செய்பவர்களை விரிவான கணக்கு எழுதும் பொறுப்பிலிருந்து விடுவிக்கும் பொருட்டு, உத்தேச மதிப்பின்படி மொத்தமாக வரி செலுத்த அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இப்பொழுது பலமுனை விற்பனை வரி விதிக்கப்படும் பற்பல பொருள்கள் மீது இனி ஒருமுனை வரி விதிக்கப்படும். இந்த மாறுதல்களால் நிதி நிலைமை எவ்வாறு பாதிக்கப்படும் என்பதை இப்பொழுது அறுதியிட்டுக் கூறமுடியாது. ஆனால் இவற்றின் விளைவாய் வருவாய் அதிகமாகக் குறையாது என்ற அடிப்படையில் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

புதிய வரிகள். 29. நிதிக்கமிஷன் தீர்ப்புக்குப் பின்பு, அடுத்த சில ஆண்டுகளுக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் மேலும் உதவி எதிர்பார்ப்பதற்கு இடமில்லை. ஆகவே வருவாய் இனத்தில் துண்டு விழும் 1 கோடியே 5 லட்ச ரூபாயை நாம் சரிக்கட்டாமல் விடமுடியாது. ராஜ்யத்தின் ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவைப்பற்றித் திட்டக்குழுவுடன் நாம் விவாதித்தபோது வருவாய் இன வரவு செலவைச் சரிகட்டுவதற்குப் போதிய நிதி வசதிகள் திரட்டமுடியும் என்று குறிப்பாக உறுதி கூறியுள்ளோம். இந்த ஆண்டில் இன்னும் பல புதிய திட்டங்களை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடும். இதனால் துண்டு விழும் தொகை இன்னும் அதிகமாகலாம். ஆகவே கீழ்க்கண்ட புது வரி விதிப்புத் திட்டங்களை நான் கொண்டுவரவேண்டியுள்ளது :—

(அ) பெட்ரோலைத் தவிர மற்ற மோட்டார் எண்ணெய், அதாவது டீசல் எண்ணெய் மேலுள்ள விற்பனை வரி காலனுக்கு 10 நயா பைசாவிலிருந்து 35 நயா பைசாவாக உயர்த்தப்படும். இதன் மூலம் ஒரு முழு ஆண்டில் 70 லட்ச ரூபாய் கிடைக்கும்.



(ஆ) பொழுதுபோக்கு வரியின் முதல் கட்டத்தில் இப்பொழுது வசூலிக்கப்படும் 20 சதவிகிதத்திற்குப் பதிலாக 25 சதவிகிதமாகவும், இரண்டாவது கட்டத்தில் 25 சதவிகிதத்திற்குப் பதிலாக 33⅓ சதவிகிதமாகவும், மூன்றாவது கட்டத்தில் 33⅓-க்குப் பதிலாக 40 சதவிகிதமாகவும் உயர்த்தப்படும். டூரிங் சினிமாக்களிடமிருந்தும் காட்சி வரி வசூலிக்கப்படும். சினிமாக்கள், குதிரைப்பந்தயம் இரண்டையும் தவிர மற்ற எல்லாப் பொழுதுபோக்குகள் மீதுள்ள வரி ரத்து செய்யப்படும். இதனால் நமக்கு அதிகப்படியாக 30 லட்ச ரூபாய் வருவாய் கிடைக்கலாம். இதில் 90 சதவிகிதம் ஊராட்சி மன்றங்களைச் சேரும். சென்னை கார்ப்பரேஷனுக்கு அதன் பங்காக 6 லட்ச ரூபாய் கிடைக்கக்கூடும்.

(இ) இப்பொழுது தோட்டச் சொத்துக்கள்மீதுதான் வருமான வரி விதிக்கப்படுகிறது. இனி 3,000 ரூபாய் வரை விதிவிலக்கு அளித்து, மற்ற எல்லா நிலச் சொத்துக்கள்மீதும், இதே முறைப்படி விவசாய வருமான வரி விதிக்கப்படும். வரி செலுத்துவோர் மொத்த வருமானத்தை நிர்ணயிப்பதற்கு விவசாயத்துறை அல்லாத மற்ற துறைகளிலிருந்து கிடைக்கும் வருவாயும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். விவசாயப் பகுதி வருமானத்துக்கு மட்டும் மேல் கட்டங்களுக்கு உரிய உயர்ந்த விகித அடிப்படையில் வரி விதிக்கப்படும். விரிவான கணக்கு வைக்கக்கூடிய பொறுப்பிலிருந்து விடுவிக்கும் பொருட்டு உத்தேச மதிப்பின்பேரில் மொத்தமாக வரி செலுத்தும் சலுகை சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு அளிக்கப்படும். 1954-ம் ஆண்டு சென்னை 19-வது சட்டத்தின் கீழ் பெரிய நிலச் சொத்துக்கள் மீது இப்பொழுது விதிக்கப்படும் உபரி வரி ரத்து செய்யப்படும். இந்த வருமான வரி மூலம் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று மதிப்பிடுவது கஷ்டம். ஆனால், இந்த வரவு செலவுத்திட்ட கணக்குக்காக இதைச் சுமார் 70 லட்சமாக மதிப்பிடலாம். நில உடைமைக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டு அமலுக்கு வந்தவுடன் இந்த வரி பயனற்றதாகிவிடும். ஆனால், ஒரு உச்ச வரம்பை நிர்ணயிக்க நாம் முடிவு செய்துள்ள இந்த நேரத்தில் அந்த வரம்புக்கு மேற்பட்டு அதிக நிலம் வைத்திருப்போருக்குக் கிடைக்கும் நன்மையில் ஒரு பகுதியை இந்த இடைக்காலத்தில் மக்களின் பொது நலனுக்காக அரசாங்கம் எடுத்துக்கொள்வது சமூக நீதிக்கு ஒத்ததே என்று கருதுகிறேன்.

இந்தப் புதிய வரி விதிப்புகள் மூலம் ஒரு முழு ஆண்டில் நமக்கு 1 கோடியே 70 லட்ச ரூபாய் கிடைக்கக்கூடும். இதில் 27 லட்ச ரூபாய் ஊராட்சி மன்றங்களைச் சாரும். இந்த யோசனைகள் பேரிலும், குறிப்பாக விவசாய வருமான வரியைப் பொருத்தவரையிலும் சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கக் காலதாமதம் ஏற்படுமாதலால்

[Sri C. Subramaniam] [1st March 1958

அடுத்த ஆண்டில் அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடிய நிகர வருவாய் 1 கோடியே 20 லட்சமாகத்தான் இருக்கும். ஆகவே, வரவு செலவுத்திட்டத்தில் 1 கோடியே 5 லட்சம் ரூபாய் துண்டு விழும் நிலை மாறி, 15 லட்ச ரூபாய் உபரியாக நிற்கும்.

மூலதனச் செலவு.

30. இந்த ஆண்டுக்கான மூலதனச் செலவு 9 கோடியே 73 லட்ச ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 2 கோடியே 39 லட்ச ரூபாய் கட்டிடங்களுக்காகவும், 1 கோடியே 69 லட்ச ரூபாய் நீர்ப்பாசனத்திற்காகவும், 70 லட்ச ரூபாய் சிறிய பாசனத் திட்டங்களுக்காகவும், 1 கோடியே 43 லட்ச ரூபாய் இயந்திரத் தொழில் வளர்ச்சிக்காகவும், 96 லட்ச ரூபாய் சாலைகளுக்காகவும், 35 லட்ச ரூபாய் பஸ்கள் வாங்குவதற்காகவும், எஞ்சியது பல்வேறு சிறு இனங்களுக்காகவும் செலவிடப்படும். மின்சாரத் திட்டங்களுக்கான மூலதனச்செலவு 11 கோடியே 94 லட்ச ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இச்செலவுக்கு மின்சார போர்டு இப்பொழுது பொறுப்பேற்றுக்கொள்வதனால், ராஜ்ய வரவு செலவுத் திட்டத்தில் இந்தக் கணக்கு விவரங்கள் சேர்க்கப்படவில்லை. மின்சார போர்டுக்கு 4 கோடியே 10 லட்ச ரூபாய் கடன் தர வசதி செய்யப்பட்டுள்ளது. அதற்கு மேலும் தேவையான தொகையை போர்டு தனது சொந்த தேய்மான ஈடு நிதியில் தன்வசமுள்ள சுமார் 3 கோடி ரூபாய் மதிப்புள்ள கடன் பத்திரங்களை விற்பதன் மூலமாகவும் தன் வருவாயிலிருந்தும் திரட்டவேண்டும். கடனாக வழங்கப்படும் மற்ற தொகைகளில் முக்கியமானவை, சென்னை கார்ப்பரேஷனுக்கு 42 லட்ச ரூபாய், சென்னை நகர அபிவிருத்தி டிரஸ்டுக்கு 58 லட்ச ரூபாய், குடிநீர் வசதிக்காக முனிசிபாலிட்டிகளுக்கு 89 லட்ச ரூபாய், தொழில்களுக்கு அரசாங்க உதவியாக 25 லட்ச ரூபாய், கூட்டுறவு முறையில் வீடுகட்டும் சங்கங்களுக்கு 35 லட்ச ரூபாய், கிராம தானக் கிராமங்களில் விவசாயிகளுக்கு 20 லட்ச ரூபாய் ஆகியவை. மின்சார போர்டுக்குத் தரப் படும் கடனைத் தவிர, மற்ற இனங்களில் கடனாகவும் முன் பணமாகவும் செலவு செய்யப்படவிருக்கும் தொகை 3 கோடியே 53 லட்ச ரூபாய். இவ்வாறாக ரொக்க வசதிகளில் சுமார் 6½ கோடி ரூபாய் துண்டு விழும். சிறு சேமிப்புத் திட்ட வசூலில் நமக்குக் கிடைக்கும் பங்கைக் கொண்டும், பொருளாதார நிலைமை சாதகமாக இருந்தால் பொதுமக்களிடமிருந்து கடன் எழுப்பியும் இதை ஈடு செய்ய முடியும் என்று எதிர் பார்க்கிறோம்.

ஐந்தாண்டுத் திட்டச் செலவுகள்.

31. நடப்பு ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை நாம் தயாரித்தபோது ஐந்தாண்டுத் திட்டத்தின் பல்வேறு வேலைகளுக்காக 31 கோடியே 78 லட்ச ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டிருந்தோம். விவசாய அபிவிருத்தி, மண்வள பாதுகாப்பு, மருத்துவத்துறை, வீடுகள் கட்டுவது, கிராமக் கைத்



1st March 1958] [Sri C. Subramaniam]

தொழில்கள், கைப்பணித் தொழில்கள் போன்ற துறைகளில் செலவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகைகளில் ஓரளவு செலவாகாமல் மிஞ்சி விடக்கூடும். திட்டங்களை ஏற்றுக்கொள்வதில் தாமதம், நில ஆர்ஜித நடவடிக்கைகளில் தாமதம், சிமிட்டி, எஃகுபோல் கட்டிடங்களுக்குத் தேவையான பொருள்களில் ஏற்பட்டுள்ள பற்றுக்குறை ஆகியவையே இந்த இனங்களில் செலவு குறைவுக்குக் காரணங்கள். ஆனால், நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்களுக்காக மிக அதிகப்படியாக செலவு ஏற்பட்டுள்ளதால் அச்செலவு மற்ற இனங்களில் செலவாகாமல் எஞ்சிய தொகையையும் மிஞ்சிவிடும். திருத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி திட்ட வேலைகளுக்காக 32 கோடியே 31 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முதலில் ஒதுக்கிய தொகையை விட இது 52 லட்ச ரூபாய் அதிகம். இப்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள தொகைகள் முழுவதையும் செலவு செய்யும் அளவு, இலாகாக்கள் வேகமாகவும் தீவிரமாகவும் வேலை செய்யும் என்று நாம் நம்பலாம்.

32. வரும் ஆண்டிற்கான திட்டவேலைகள் பற்றி சென்ற டிசம்பரில் திட்டக்குழுவுடன் விவாதிக்கப்பட்டு, அதன் பயனாக 30 கோடியே 47 லட்ச ரூபாய் செலவு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது மத்திய அரசாங்கம் அளித்து வரும் உதவி முறைகளுக்கு இணங்க மத்திய அரசாங்கத்தினிடமிருந்து நமக்கு 18 கோடி ரூபாய் வரை கடன்களாகவும் மான்யங்களாகவும் கிடைக்கும் என்று உறுதி கிடைத்துள்ளது. ஆகவே மிஞ்சிய 12 கோடியே 47 லட்ச ரூபாயை நாமேதான் திரட்டவேண்டும். 1958–59-ம் ஆண்டில் எல்லா ராஜ்யங்களின் உதவிக்காக மத்திய அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ள தொகை 200 கோடி ரூபாய்தான். ஆகவே இதற்குமேல் மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிகமாக உதவி எதிர்பார்ப்பதற்கில்லை. திட்ட வேலைகளுக்காக இன்னும் அதிகம் செலவு செய்ய நாம் விரும்பக்கூடும். ஆனால் அதற்கு அதிகப்படியாகத் தேவையாகும் நிதி வசதிகளை நாம் நம் ராஜ்யத்திற்குள்ளாகவே திரட்டிக் கொள்ளவேண்டும். அந்த முறையில் திட்டத்தை விரிவாக்குவதைத் திட்டக்குழுவும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளும். ஆனால் இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ள ராஜ்ய வரம்புக்கு உட்பட்டு அநேகமாக எல்லாத் திட்டங்களிலும் துரிதமாக வேலை நடைபெறத் தேவையான பணத்தை நாம் ஒதுக்கியுள்ளோம். திட்ட வேலைகள் செலவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் விவரங்கள் அடங்கிய பட்டியல் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பெரிய நீர்ப்பாசனங்களுக்காகச் செலவிடப் பட்ட தொகையைவிட இப்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள தொகை 1 கோடியே 17 லட்ச ரூபாய் குறைவாகும். ஆனால் அதற்குக் காரணம் நமது பெரிய திட்டங்கள் எல்லாம் அநேகமாக முடிவடையும் கட்டத்தில் இருப்பதால் மேலும் அதிகப்

படியான செலவுக்கு இடமில்லை என்பதேயாகும். மின்சார இலாகா மட்டுமே, இன்னும் அதிகத் தொகைகள் ஒதுக்கப் பட்டாலும் செலவு செய்யும் நிலையில் உள்ளது. இது தவிர அநேகமாக மற்ற இலாகாக்களுக்குத் தேவையான தொகைகள் அனைத்துக்குமே நாம் வகை செய்துள்ளோம். இன்னும் சில மாதங்களுக்குப் பின் மின்சார இலாக்காவின் தேவைகளை மீண்டும் பரிசீலனை செய்து நடப்பு ஆண்டில் செய்ததுபோலவே இயன்ற அளவு மேலும் சில தொகைகள் ஒதுக்க முயற்சி செய்யலாம்.

முடிவுரை. 33. அன்னியச் செலாவணிப் பற்றாக்குறை பற்றியும் திட்டத்தை இன்னும் பூரணமாக நிறைவேற்றுவதில் உள்ள தடைகள் பற்றியும் நாட்டில் அடிக்கடி கவலை தெரிவிக்கப் படுகிறது. எஃகுத் தொழிற்சாலைகள், கன இயந்திர உற்பத்திச் சாலைகள், அலுமினியம் தொழிற்சாலைகள், கன மின்சார தொழிற்சாலைகள், உர உற்பத்திசாலைகள் ஆகியவை போன்ற பெரும் இயந்திரத் தொழில் திட்டங்களுக்கு அன்னியச் செலாவணி பற்றாக்குறை முக்கிய தடையாக இருக்கலாம். ஆனால், ராஜ்ய ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள பெருவாரியான திட்டங்கள், விவசாய அபிவிருத்தி, குடிநீர் வசதி, பாசனத் திட்டங்களைப் பழுதுபார்த்தல், கல்வி அபி விருத்தி, சாலைகள், ஆஸ்பத்திரிகள் அமைத்தல் போன்றவை. அவற்றிற்கு அன்னியச் செலாவணிக் குறைவு முக்கியமான தடையாய் இல்லை. நமது ராஜ்ய திட்டத்தில் மின்சார அபி விருத்திக்கு மட்டுமே அன்னியச் செலாவணி மிக முக்கிய மானது. ஆனால், அதிர்ஷ்டவசமாக இத்திட்டங்களுக்குத் தேவையான இயந்திரங்களை நாம் ஏற்கெனவே பெற்று விட்டோம். ஆகவே நமக்குள்ள முக்கிய சிக்கல், மற்ற ராஜ்யங்களுக்கு இருப்பது போலவே, உள் நாட்டு நிதி வசதிக் குறைவே. மத்திய அரசாங்கத்திலிருந்து அதிகப்படியான உதவி வேண்டுமென்று நாம் வற்புறுத்தலாம். ஆனால், மத்திய அரசாங்கத்தின் நிதி வசதிகளும் ஓரளவுக்கு உட்பட்டவையே. நாட்டு மக்களின் சேமிப்பிலிருந்துதான் அதையும் வர வேண்டும். வாழ்க்கைத் தரத்தை வெகு வேகமாக உயர்த்த வேண்டும் என்பதில் நம் அனைவருக்கும் அக்கறை உண்டு. ஆனால் மேலும் முன்னேற வேண்டுமானால் மக்கள் இன்னும் அதிகம் சேமித்து, அதைத் திட்டத்திற்காகப் பயன்படுத்த முன்வர வேண்டியது மிகவும் அவசியமாகிறது. உலகில் முற் போக்கு அடைந்துள்ள எல்லா நாடுகளின் வரலாறுகளும் இதே படிப்பினையைத்தான் உணர்த்துகின்றன. சுபீட்சத்திற்குக் குறுக்கு வழி எதுவும் கிடையாது. இந்த நாடுகள் அனைத்தும் ஆரம்பத்தில் பாடுபட்டுப் பல தியாகங்கள் செய்த பின்பு தான் செழிப்பான, வளர்ச்சியான, பொருளாதார அமைப் புக்கு அஸ்திவாரம் அமைக்க முடிந்தது. இந்த நோக்குடன் தான் புது வரி விதிப்பின் அவசியத்தையும், மாவட்டங்களில்



சிறு சேமிப்புக்காக இப்பொழுது எடுத்துவரும் முயற்சிகளின் முக்கியத்துவத்தையும் நாம் மக்களுக்கு விளக்க வேண்டும். இந்தப் புது வரி விதிப்பினால் நமக்குச் சற்று மனக்கசப்பு ஏற்படலாம். சில நடவடிக்கைகளில் அதிகாரிகள் நிர்ப்பந்தம் செய்கிறார்கள் எனப் புகார் செய்வதற்கு இடம் ஏற்படலாம். ஆனால் நம்முடைய வாழ்நாளிலேயே ஒரு சோஷியலிச சமுதாய அமைப்பை நாம் அடைய வேண்டும் என்று நாம் கொண்டுள்ள உறுதியின் பயனாக ஏற்படும் விளைவுகளையும் பொறுப்புகளையும் நாம் தட்டிக் கழிக்க முடியாது. மேலும், அந்நியச் செலாவணியில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக் கடிக்கு முக்கிய காரணம் உணவுப் பற்றாக்குறை. இதன் காரணமாகத்தான் அயல் நாடுகளிலிருந்து நாம் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. இந்தச் சிக்கலைத் தீர்க்கும் பொறுப்பு பெரும்பாலும் நம் கையிலேயே உள்ளது. ஏனென்றால் தொழு உர உபயோகம், நகரக் கழிவு உர உபயோகம், தழை உரத்தைப் பயன்படுத்தல், உயர்ந்த ரக வித்துக்களைப் பயன்படுத்தல் போன்ற நட வடிக்கைகளை நாம் மேற்கொள்வதற்கு அன்னியச் செலாவணி எதுவும் தேவையில்லை. இத்தகைய எளிய விவசாய முறைகளில் நாம் இன்னும் சற்று அக்கறை காட்டினால் உணவுப் பற்றாக்குறையைப் பெரும் அளவுக்குத் தீர்க்க முடியும். அதனால் மிஞ்சும் அன்னியச் செலாவணி வசதிகள், திட்டத்தின் மற்ற முக்கிய வேலைகளுக்குக் கிடைக்கும்படி செய்யமுடியும். இதில் இச்சபையில் உள்ள கனம் அங்கத் தினர்களும், மற்ற நண்பர்களும் ஒத்துழைத்து உதவுவதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது. அனைவரும் தங்கள் சொந்தப் பண்ணைகளிலேயே உற்பத்தியைப் பெருக்கி, அதன் மூலம் திட்டத்தின் இம்முக்கிய குறிக்கோளை மற்றவர்களுக்கு உணர்த்த முன்வரவேண்டும். அரசாங்கத்தின் பல்வேறு விவசாயத் திட்டங்களையும் மக்களுக்கு விளக்க வேண்டும். இதன் மூலம் விவசாயிகளுக்கும் தேசிய வளர்ச்சித் திட்டத்தில் பல்வேறு துறைகளில் கிராமங்களில் வேலை பார்க்கும் ஸ்தாபனங்களுக்கும் இடையே நெருங்கிய உறவு ஏற்படுத்தி, இப்பிரச்னைக்குத் தீர்வுகாண உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

34. இவ்வுரையை முடிக்குமுன் சமீபகாலம் வரை மத்திய அரசாங்கத்தில் நிதி மந்திரியாயிருந்த திரு. டி. டி. கிருஷ்ண மாச்சாரியார் அவர்கள் நமக்கு நல்ல ஆலோசனைகள் கூறி உறுதுணையாக இருந்ததற்கு நன்றி செலுத்த விரும்புகிறேன். அவர் ஏற்றிருந்த உயர்ந்த பொறுப்பிலிருந்து திடீரென அவர் விலகியதால் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பெரிய நஷ்டம் பற்றிப் பார்லிமெண்டிலும் பத்திரிகைகளிலும் பொது மேடைகளிலும் ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் சென்னையிலுள்ள நமக்கோ இந்த நஷ்டம், ஈடு செய்யமுடியாதது. நன்றியுரை.

[Sri C. Subramaniam] [1st March 1958

மத்திய அரசாங்க மந்திரி என்ற முறையில் நாட்டுக்குப் பொதுவான பொறுப்புகளுக்கு முரண்படாத வகையில், அவர் நம் ராஜ்யத்துடன் கொண்ட தொடர்புகள் அனைத்திலும் அவர் நம்மில் ஒருவர் என்பதையே நிரூபித்து வந்துள்ளார். பொதுவாக நாட்டுக்கும், குறிப்பாக இந்த ராஜ்யத்தின் மக்களுக்கும் அவர் செய்துள்ள சிறந்த சேவைக்கு நம்முடைய ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதில் கனம் அங்கத்தினர்களிடையே ஒன்றுபட்ட கருத்து இருக்கும் என்று நம்புகிறேன்.

என் வேலையிலும், குறிப்பாக இந்த வரவு செலவுத் திட்டத்தை வகுப்பதிலும் ஆலோசனை கூறி உதவி செய்த நிதி இலாகா காரியதரிசி திரு. டி. ஏ. வர்கீஸ் அவர்களுக்கும் அவருடைய திறமைவாய்ந்த சகாக்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வுரையுடன் 1958-59-ம் ஆண்டுக்கான இந்த வரவு செலவுத் திட்டத்தை இச்சபை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

MR. SPEAKER : இந்த வரவு செலவுத் திட்டத்தின் மீது திங்கள் முதல் 6 நாட்கள் பொது விவாதம் நடைபெறும். இந்த சபையை திங்கள் காலை 11 மணி வரையில் நான் ஒத்திவைக்கிறேன். ஆனால் "பிஸினெஸ் அட்வைசரி கமிட்டி"யானது சபை உட்காரும் நேரத்தை மாற்றினால் அதை அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

*A. Statutory rules, orders and notifications.*

56. *Notification issued with G.O. No. 4538, Revenue, dated 7th December 1957, amending rule 8-A of the Madras General Sales Tax Rules,* 1939. [Laid on the Table of the House under Section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.)]

57. *Notification issued with G.O. Ms. No. 3346, Home, dated 23rd December 1957, inserting rule 459 to the Madras Motor Vehicles, Rules,* 1940. [Laid on the Table of the House under Section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]



ANNEXURE.

*[English translation of the speech of Sri C. Subramaniam, Finance Minister, presenting the Budget for* 1958–59 *to the Madras Legislature on the* 1st *March* 1958.]

Sir,

I have the honour to present to this House the Budget Estimates for 1958–59 and the Revised Estimates for the current year. The one relieving feature in both these Estimates is the improvement in the revenue position which has wiped out the anticipated heavy deficit for the current year and reduced the gap for the ensuing year. The Award of the Finance Commission is the major factor which has helped us in this respect. We have also had the benefit of fair seasonal conditions. Introductory.

2. The south-west monsoon set in in time but registered an average fall of only 9·7 inches which was 20 per cent below normal. In the coastal districts of Chingleput and Tanjore the rainfall was adequate. The central districts of Tiruchirappalli, Salem and Coimbatore did not fare well during this monsoon with short-falls ranging from 30 to 50 per cent and this has resulted in the failure of groundnut and millet crops. In the southern districts of Madurai, Ramanathapuram and Tirunelveli also there was a small deficiency, but this was not appreciable enough to affect crops. The north-east monsoon was generally more satisfactory with an average fall of 16·6 inches, which again was 6 per cent below normal. In Chingleput there was heavy deficiency, particularly in the southern taluks, but the tanks in this district had already received some supply during the south-west monsoon. South Arcot and Tiruchirappalli also fared badly during this monsoon with a short-fall of about 30 per cent. Coimbatore had exceptionally heavy rains, about 40 per cent above normal. The central districts of Salem and North Arcot and the southern districts fared reasonably well, with deficiencies ranging from 5 to 10 per cent. Seasons.

Crop prospects.

3. Preliminary crop forecasts indicate a slightly larger acreage and better yield under paddy. In the Cauvery delta and other channel-fed areas with an assured supply of water, the yield is reported to be good in spite of insect pests in certain pockets. In North Arcot, South Arcot and Salem districts, the area under paddy was restricted due to water scarcity. Tank-fed lands in Tirunelveli district were affected by drought. The yield was normal in Ramanathapuram and Chingleput districts. The area under millets was considerably less in the central districts of Salem and Coimbatore for want of timely rains, and the yield was below normal. Cotton and groundnut have not fared well in Coimbatore and Salem districts. The potato crop of the Nilgiris was also affected by frost and rains. But taking the State as a whole, agricultural prospects, though not as good as in 1956–57, may be considered generally satisfactory and we may be thankful that the year was free from grave calamities like cyclone, floods and famine.

Agricultural prices.

4. The upward trend in food prices was a continuous source of anxiety in 1957. This was so because the wholesale index of foodgrain prices which stood at 377 in July 1956, had shot up during the next six months to 494 in January 1957. Following a good harvest the index declined to 470 in March 1957, but thereafter the pressure set in again, though less acute this time, and the index stood at 512 in December 1957. In retrospect, we are now satisfied that the steep rise was not due to any large shortage in supplies, but at that time the situation appeared alarming and precautions had to be taken to ward off a possible break-down. About 800 fair-price shops with an off-take of 4,000 tons per mensem, were kept open and this helped to arrest the rise and ease the position. Prices are stabilising again following another satisfactory harvest, but vigilance cannot be slackened.



Food position

5. The one obvious lesson from the present food situation is that we should redouble our efforts to step up production. We have achieved a fair measure of success on the various grow-more-food schemes launched in recent years such as the construction of major irrigation works, improvements to the minor irrigation systems, digging of ordinary and filter-point wells to utilize the sub-soil water, installation of electric pumpsets for lift irrigation, increased application of chemical fertilizers, oil-cakes and green manures, and the popularisation of improved seeds and pesticides. The total food production of the present Madras State in 1955–56, the final year of the First Five-Year Plan, was 44 lakhs of tons as against 28 lakhs of tons in 1950-51, the base year for our present crop statistics. Even after making due allowance for the adverse seasonal factor in 1950–51, the increase of 16 lakhs of tons in production by 1955–56, does reflect a heartening upward trend. The outturn of 46 lakhs of tons in 1956–57, when seasonal conditions were almost similar to those of the previous year, was higher by 2 lakhs of tons and confirms the favourable progression. The food requirements of this State for a population of 30 millions, at the average rate of 1 lb. per head per day, amount to 48 lakhs of tons and, therefore, with a production of 46 lakhs of tons in 1956–57, our deficit can only be marginal. This is confirmed by the fact that we were generally able to maintain supplies last year, even though the export of rice to Kerala during the year of about 2½ lakhs of tons, was only partially off-set by the import of about one lakh of tons from Andhra and overseas. The average yield per acre of paddy cultivation in this State has been increasing steadily from 1,149 lb. of clean rice in 1954–55 to 1,214 lb. in 1955-56 and 1,255 lb. in 1956-57. In fact, ours is the best average yield for any State in India and is much higher than the all-India average of about 750 lb. per acre. These achievements may indeed be reassuring, but the fact remains that we still do not

produce enough to stabilise prices and to provide an adequate cover for a lean year. We have set a target of 12·79 lakhs of tons of additional food production for the present Plan period, of which we have done about 2 lakhs tons in 1956–57 and hope to do about 3 lakhs tons during the current year. Further progress may not be easy especially in view of the present shortage in chemical fertilizers and also the fact that at some stage the law of diminishing returns will set in, but in the present context of overall food shortage, we must put in a further special effort. China, with an economy very similar to ours, is reported to have achieved an average yield of 1,550 lb. of clean rice per acre, and Japan 2,250 lb. Therefore, the balance of 8 lakhs tons of additional production in our present Plan target should not be beyond our reach if we can adopt the improved agricultural techniques practised in other countries.

Agricultural development.

6. A major item in our agricultural programme is the scheme for the multiplication and distribution of improved seeds. The primary seed is to be raised in 360 State seed farms of 25 acres each, to be located one in each of the National Extension Blocks. About 2,650 tons of paddy seeds and 500 tons of millet seeds can be raised in these farms and this on further multiplication in village seed farms, will meet about 85 per cent of the total seed requirements of the State. Thirty-eight such farms were opened in 1956–57 and of the 136 farms programmed for the current year, 116 were opened by December 1957, and the balance will be started by the end of March 1958. The Budget provides for the opening of 180 farms in 1958–59 at an estimated cost of Rs. 72 lakhs and with this, the programme will be nearly completed. We had planned for the distribution of 140,000 tons of ammonium sulphate during the year, but owing to the difficult supply position, only about 75,000 tons could be distributed during the year. The target of 150,000 tons for the Budget year may, therefore, have to be reduced. A provision



of Rs. 60 lakhs has been made for loans to agriculturists for the purchase of chemical manures. The programme of urban compost is being accelerated with a provision of about Rs. 4 lakhs as loans, and Rs. 3 lakhs as subsidies to Municipalities and Panchayats for the manufacture and distribution of about 3 lakhs tons of compost. The scheme for the distribution of green manure seeds will be continued with a target of 1,200 tons of seeds. Provision has also been made of Rs. 8 lakhs for the supply of pesticides, and Rs. 4 lakhs for the supply of sprayers and dusters to agriculturists, both at half-cost.

Irrigati[on]

7. Most of our Major Irrigation schemes like the Amaravathi, Sathanur, Krishnagiri and Manimuthar, have been completed, and water has been let down for cultivation during the current year. The Vaigai Project will be completed during this year, and the Kattalai and Pullambadi in 1960. Work has also commenced on the Vidur and the Neyyar Projects. An outlay of Rs. 2,86 lakhs is programmed for the current year, and Rs. 1,69 lakhs in 1958-59. The development of the ayacut under these new Projects has been adequate, and the criticism often raised in planning circles about the wasteful time-lag between the construction of these expensive reservoirs and the utilization of the stored waters does not hold good in respect of our Projects. Our problem is not quite the non-utilization of existing resources but the non-availability of fresh resources to implement a further programme. Negotiations with the Kerala Government on the diversion of some of the west-flowing rivers are progressing, and let us hope that a mutually beneficial settlement will soon be reached. In the meanwhile, we must do our best to maintain our Minor Irrigation systems in good order for which a provision of Rs. 70 lakhs has been made including Rs. 10 lakhs for the de-silting of tanks. The filter-point scheme for the utilization of sub-soil water, will also be continued at a cost of Rs. 9 lakhs.

**Animal husbandry.**

8. The different schemes for the improvement of our cattle wealth are making progress. Four more key village centres and four supplementary extension centres for utilizing the pedigree bulls reared in key villages will be opened during the year. Provision has been made for the opening of the cattle farm at Ramanathapuram and sheep farms at Chingleput and Chinna Salem. The work on the Madhavaram Cattle Colonization Scheme will be accelerated, and a sum of Rs. 25 lakhs has been allotted for that purpose. New schemes of poultry development costing Rs. 2·16 lakhs have also been incorporated in the Budget.

**Fisheries.**

9. The Fishery Development Schemes for next year include the construction of 15 Pablo type mechanized fishing boats for sale to fishermen at reduced prices, the construction of fishing harbours at Cuddalore and Nagapattinam, the development of fisheries in Sathanur and Manimuthar reservoirs, and the installation of guide lights to help fishing boats at night in the coastal villages of the Kanyakumari district. The total cost of the fisheries programme in the Budget amounts to Rs. 21 lakhs.

**Forests.**

10. The phased programme of forest regeneration consisting of schemes for the planting of cashew and casuarina in the coastal districts, wattle, bluegum and match-wood on the Nilgiris, teak and other valuable timbers on river and canal fringes, reclamation of eroded Panchayat forests and improvements to forest communications, will be continued at a cost of about Rs. 29 lakhs. Soil conservation measures on agricultural lands on the hills as well as the plains will be taken up at a cost of Rs. 17 lakhs.

**Co-operation.**

11. In the field of rural credit, provision of Rs. 3,05 lakhs has been made for takkavi and other Government loans to cultivators. The Co-operative Department has programmed to open 300 large-sized credit societies during the Plan period of which 240 will be functioning by the end of the current



year and the balance of 60 societies will be opened in the next year. Two hundred small-sized credit societies will also be opened next year. Hon'ble Members are aware of the experimental scheme by which the full credit requirements of all agriculturists are being met through Co-operative Societies in the two selected firkas of Erode and Srivilliputhur. On the experience so far gained, it is now proposed to extend the scheme to six Extension Service Blocks during the coming year. Provision has also been made to open five more Land Mortgage Banks, raising the total number to 81. The Co-operative Movement is expected to cover 77 per cent of the villages and 40 per cent of the population of the State by the end of the Budget year, providing agricultural credit to the extent of Rs. 13½ crores. A Warehousing Corporation has been established with an initial share capital of Rs. 20 lakhs. The Corporation has programmed to construct four warehouses during the current year at Salem, Tirunelveli, Ootacamund and Tiruchirappalli, and six more will be constructed in the coming year.

**National extension services.**

12. We have indeed made substantial appropriations for various measures of agricultural development, such as irrigation, soil conservation, seed multiplication, manure distribution, and marketing organizations, but all this outlay may not give a full return unless we can make the tiller of the soil aware of the facilities organized for his benefit. Better seeds may be produced in abundance in the State seed-farms, but the peasant may continue to use the inferior strain in his possession. He may not know from where to secure chemical fertilizers and insecticides, and it is not easy for him to approach in time the local authority competent to sanction him an agricultural loan. The existing departmental organization in the village is far too thin to bring home to every ryot the fruits of modern agricultural research. It is to correct this deficiency and to

establish a healthy liaison between the cultivator and the expert departments of the Government that the National Extension Services and Community Development Projects have been started. We have already covered a third of the State with the National Extension Service Organization, and it is proposed to take up 51 Extension Service and 16 Community Development Blocks during the next year. The enthusiasm evinced by the people in providing themselves with common amenities, such as village roads, wells, dispensaries and schools, is indeed welcome, but the main objective of this organization should be to educate the cultivator in better methods of farming and to assist him to secure the necessary facilities. The increased outlay on the administrative staff should be sustained by greater production in the village, and therefore, the Extension Service Organization will be judged ultimately by the results in the agricultural sector. The Government are doing their best to effect the necessary change in official outlook and I hope Hon'ble Members in this House and all public men in the field will co-operate in educating and enthusing the people towards this major objective.

Electricity.

13. Our Electricity programme is making commendable progress. The Madras Plant Extension Scheme will be completed soon, and a new generator of 30,000 KW. will be commissioned by next April. The first unit of 35,000 kilowatts of the Periyar Hydro-Electric Project will also be installed before next September. The brisk progress made by our Engineers on the Kundah Project has won them the commendation of the Canadian Experts who are assisting us on this Project. The rural electrification programme is being implemented with vigour, and as against the target of 1,000 villages for this financial year, we have covered 910 villages by the end of December, and will materially exceed the target by the end of the year. Electricity is now available in about 6,200 villages and hamlets,



supplying power to about 60,000 pumpsets. Considering that each pumpset can irrigate 3 to 5 acres, the rural electrification programme has enabled the extension of irrigation over 2 lakhs of acres. The Budget provision for electricity for the current year has now been stepped up from Rs. 11½ crores to Rs. 13 crores, and the provision for the next year has been fixed at about Rs. 12 crores.

Major industries.

14. In order to prepare an integrated plan for the industrial development of the State, the Government have constituted an Advisory Committee of eminent industrialists, which is studying the different raw materials and other resources available and drafting practicable project reports. Mining operations have commenced at Neyveli and the integrated project estimated to cost Rs. 60 crores, for the generation of 2 lakhs kilowatts of power, for the manufacture of chemical fertilizers with a nitrogen content of 70,000 tons per annum, and for the briquetting of 3½ lakhs tons of carbonised lignite, is making progress. The Project has been included in the core of the Plan and may be expected to be completed by 1960. The caustic soda plant in Tirunelveli and the rubber tyre factory at Ambattur are making good progress according to schedule. The scheme for the expansion of the T.I. Cycles to a capacity of 3 lakhs units per annum has been finalised. The proposal to set up a new cement factory in Ramanathapuram is making progress. Licences have also been granted for the establishment of a number of units for the manufacture of electric motors, transformers, switch-gear and pumps. The three sugar mills licensed in the Co-operative sector are expected to go into production by the middle of 1959, and the private sugar factory at Pettaivaittalai in Tiruchirappalli will commence production in a few months. Investigations on the Salem iron ore are proceeding at Jamshedpur, and the construction of the pig-iron plant licensed in the private sector is making

progress. The French Consultant engaged to examine the bauxite deposits of Salem has submitted his report regarding the quality of the mineral, and let us hope that the aluminium plant proposed in the Second Plan will soon take shape. The establishment of a plant for the manufacture of rayon and staple fibre is being pursued, and the sponsors have secured substantial financial assistance from Italy. Negotiations are in progress with foreign investors to get over the exchange difficulties on these schemes, and the Government are doing their best to assist the sponsors in resolving their problems.

Small industries.

15. Appreciable progress has been made on the small industries included in the State Plan. The Guindy Industrial Estate estimated to cost about Rs. 70 lakhs, has been inaugurated by the Prime Minister and 52 out of the 90 factory units have been let out. The smaller Estates planned for Virudhunagar, Erode, Tirunelveli, Madurai and Marthandam are coming up, and will be opened in the coming year. About Rs. 25 lakhs have been distributed as State Aid to small-scale industries during the current year, and a similar provision has been made for the next year. Servicing centres for the manufacture of hand-tools, surgical instruments, electrical goods, laboratory and scientific equipment, sports goods, model foundry, etc., are being organized in different places, and a Technical Information Centre with a library is being opened in Madras. A silk reeling unit with 25 basins is being set up at Hosur to take the place of the one at Kollegal transferred to the Mysore State on the reorganization of States. The various village industries and handicrafts financed by the Khadi and Village Industries Commission will be continued and it is proposed to open four sale depots in important centres for the display and sale of handicrafts.

Handloom.

16. The needs of the handloom industry continue to receive the close attention of the Government. Apart from financial aid to weavers for enrolling



them in co-operative societies, grants are being made from the Cess Fund for the purchase of improved appliances, for the provision of marketing facilities, for rebate to consumers, and for housing colonies for weavers. The present slump in the textiles industry has reduced the off-take of handlooms and there is substantial accumulation of stocks. Representations are being made to the Government of India to continue the subsidy undiminished so that the stocks may be cleared rapidly. The Co-operative Spinning Mill at Tirunelveli intended to ensure the cheap supply of yarn to weavers is expected to go into production soon, and another unit with 12,000 spindles is proposed to be started at Srivilliputhur. The Budget provides for an outlay of Rs. 92 lakhs on schemes for the development of the handloom industry.

Housing

17. The various housing programmes initiated by the Central Government are all making progress. Under the subsidized industrial housing scheme there is a provision of Rs. 21 lakhs for the completion of the works on hand and for new schemes at Vellanar in Tiruchirapalli district and at Sivakasi. Under the Low-Income Group Housing about 800 houses are under construction, and a new programme of 500 houses is being sanctioned for which allotments of Rs. 15 lakhs to Co-operative Societies, Rs. 17 lakhs to the City Improvement Trust, and Rs. 6 lakhs to Local Bodies, are being made. A sum of Rs. 60 lakhs has been earmarked for slum clearance in the City of Madras, where about 20 slums will be taken up for improvement to rehabilitate about 4,000 families. Under the State Urban Housing Scheme, provision has been made for a loan of Rs. 17 lakhs to Co-operative Societies, and Rs. 17 lakhs to the City Improvement Trust. The housing programme for policemen is being accelerated at a cost of about Rs. 75 lakhs in the coming year. A scheme for the reconstruction of about 3,000 houses destroyed in the recent disturbances in Ramanathapuram district

has been sanctioned at a cost of Rs. 17 lakhs, which will be shared equally with the Government of India. In order to co-ordinate the implementation of the different housing schemes, a State Housing Board has been recently constituted by the Government.

**Roads.**

18. Improvements continue to be made to our road system which is now one of the very best in the country. Out of the ordinary maintenance allotment of Rs. 2,00 lakhs per year, about Rs. 60 lakhs are being spent on black-topping important stretches at the rate of about 500 miles per year. The total outlay on new works in the Budget amounts to Rs. 96 lakhs from State Funds, and Rs. 68 lakhs from the Central Road Funds. Provision has been included for major bridges across the Cauvery at Erode, across the Vaigai at Tirupuvanam, across the Cheyyar on the Arcot-Tindivanam road, and across the Kamandalanaganadhi on the Arcot-Wandiwash road. A sum of Rs. 33 lakhs has been earmarked for grants to District Boards and Panchayats for new road works, and Rs. 12 lakhs as grants and Rs. 8 lakhs as loans to Municipalities and Panchayats for dustless surfacing. A special grant of Rs. 2 lakhs will be made to the Nilgiris District Board for improvements to roads leading to beauty spots on the Hills.

**Health.**

19. On the side of medical facilities, improvements will be carried out to the district headquarters hospitals at Chingleput, Cuddalore, Palamcottah, Vellore, Ootacamund and Tanjore, at a cost of Rs. 13 lakhs. The Local Fund dispensaries at Cheyyar, Vriddhachalam, Sriperumbudur, Bhavani, Tiruppattur, Arantangi, Srivaikuntam, Jayankondan and Hosur, will be provincialized. A sum of Rs. 11 lakhs has been earmarked for additions to the different taluk headquarters hospitals. Out of the 80 Primary Health Centres planned for the Plan period, 52 have already been opened and nine new ones will be opened in the coming year. In order to attract medical men to these rural centres a



compensatory allowance is being sanctioned and a residential housing programme, is also being launched. Improvements to the teaching hospitals in Madras City and Madurai will be taken up at a cost of Rs. 57 lakhs. On the side of public health, there is a provision of Rs. 86 lakhs for completing the urban water-supply schemes now in progress, and Rs. 60 lakhs for rural water-supply. Provision has also been made for opening 105 Maternity and Child Welfare Centres and training 900 thayies.

**Education.**

20. On Education we spent Rs. 10,60 lakhs during 1956-57, and the revised estimate for the current year has been fixed at Rs. 11,47 lakhs. The annual expenditure has increased by nearly Rs. 1 crore, even though the State had been reorganized and its territory and population reduced. For the coming year, we are providing Rs. 12,04 lakhs. As usual, rather more than one-half of the total expenditure continues to be devoted to primary education, Rs. 4,91 lakhs in 1956-57, Rs. 6,54 lakhs in 1957-58 and Rs. 6,59 lakhs in the coming year. A significant development in this field is the provision of Rs. 20 lakhs for the free supply of midday meals for children of elementary schools as recommended by the Legislative Committee on Education. Enrolment of pupils continues to increase at the rate of one lakh and the new schools are being opened and existing schools expanded to provide about 1,700 new classes per annum. The House will be glad to note that the burden of this increasing expenditure on new schemes, is being shared by the Government of India. Under the present system of sharing, we earned Rs. 32 lakhs in 1956-57, and hope to earn Rs. 1,19 lakhs in the current year, and Rs. 1,35 lakhs in the coming year.

**Technical education.**

21. Special attention continues to be devoted to the development of Technical Education. Admission capacity of Engineering Colleges of the State has been raised from 647 at the end of the First Plan period to 1,132, and of polytechnics from 1,142 to

1,752. The Directorate of Technical Education has been set up and the State Board of Technical Education and Training has been constituted. They have started functioning and it is hoped they will tackle the various problems relating to the staffing and management of these institutions and help to secure a steady flow of highly qualified technical personnel, so necessary for industrial progress. In this context, the House will be glad to know that our negotiations with the Government of India regarding the location in Madras of the Higher Technological Institute of South India have been successful. The site required for this institution has been agreed upon and further steps for its establishment are expected to be taken shortly.

**Welfare of backward communities.**

22. The welfare of Harijans and Backward Classes continues to receive the special attention of the Government. The Budget provides for an outlay of Rs. 2,33 lakhs on welfare schemes for the benefit of these communities, which is about Rs. 40 lakhs more than the budget estimates for the current year. The major provisions are: Rs. 28 lakhs for 15,000 scholarships, Rs. 22 lakhs for 12,000 boarding grants, Rs. 27 lakhs for midday meals in Harijan schools, Rs. 27 lakhs as subsidies for the construction of about 5,000 dwellings, Rs. 18 lakhs as subsidies for the purchase of 5,800 pairs of bulls, Rs. 5 lakhs for digging 175 wells in Harijan habitations, and Rs. 9 lakhs for developing cottage industries.

**Revised Estimate, 1957-58.**

23. In preparing the Budget for the current year, we had estimated a revenue of Rs. 57,99 lakhs after taking credit for receipts from additional taxation of Rs. 1,50 lakhs, and an expenditure of Rs. 61,32 lakhs, leaving a deficit of Rs. 3,33 lakhs. The revised estimates as now fixed, show a revenue of Rs. 60,41 lakhs and an expenditure of Rs. 60,36 lakhs leaving a small surplus of Rs. 5 lakhs. There has been an appreciable improvement in the revenue position and the largest single cause is the Award of the Finance Commission which has come into force with effect from the current year.



**Finance Commission**

24. In presenting our case to the Finance Commission we had claimed a larger share of income-tax and excise duty to meet the growing needs of States on development services and also to reduce the large disparity in the emoluments of State Government servants and of Central Government servants. We had also pleaded for a reduction in the rate of interest charged on Central loans, taking into consideration the large resources raised by the Centre through deficit financing. The Commission's recommendations do not meet our case in full. The share of States from income-tax, has been raised from 55 per cent to 60 per cent and we may gain about Rs. 94 lakhs per year under this head. On Central Excise, the duties on a few more commodities have been added to the divisible pool but the share of States has been reduced from 40 per cent to 25 per cent, with the net result that we may gain about Rs. 44 lakhs in a year. The new tax on railway passenger fares imposed by the Centre in the current year's Budget will be divided amongst States in the ratio of route mileage and we may get about Rs. 34 lakhs in the current year, and Rs. 64 lakhs in a full year. All these recommendations have been accepted by the Government of India, and this has improved our revenue position by Rs. 1,74 lakhs in the current year and Rs. 2,02 lakhs in the coming year. The Commission had further recommended the consolidation of the various loans taken by States from the Centre at a lower rate of interest. This would have given us relief to the extent of about Rs. 60 lakhs per annum, but the Government of India have not yet accepted this recommendation and, therefore, we cannot take any credit under this head in the Budget. The Commission has not accepted our request for assistance for enhancing the emoluments of Government servants. On the other hand, they have recommended that the Central assistance due to us on the enhancement by Rs. 5 to 7 in dearness allowance which we sanctioned in November 1956, may be discontinued. This would take away

a portion of the benefit accruing to us from the Commission's other recommendations. The approach of the Commission has been that assistance from Central revenues should be restricted to the bare minimum required for covering the revenue deficits of States on existing unavoidable commitments. We may no doubt feel that a more liberal approach would have been justified, but we must appreciate that the resources of the Centre are also limited, and that the Commission was faced with the difficult task of reconciling various conflicting interests. Let us record our thanks to the Commission for the relief they had actually recommended.

Revenue resources.

25. Hon'ble Members are aware that in co-operation with other States and the Centre, we have given up the levy of sales tax on cloth, sugar and tobacco products. Additional excise duties in lieu of sales tax, are being levied at source on these commodities and the proceeds will be distributed to States. The revenue of Rs. 2,85 lakhs derived by us on these commodities in 1956–57 has been guaranteed to us by the Centre. Any little surplus from the proceeds of the new excise duties over and above the guaranteed revenue, will be divided among the different States on the basis recommended by the Finance Commission and this may yield us some extra revenue in due course. By this measure, the initiative for which was largely that of this Government, we have been able to extend considerable relief to dealers in these trades, without affecting State revenues. The possibility of extending this scheme to cover other suitable commodities, is being examined. The yield under the different State taxes has shown an upward trend, more particularly under the tax on motor vehicles and the Central sales tax, and improved our revenue position by about Rs. 1,25 lakhs. There has also been a reduction in expenditure by about Rs. 96 lakhs, mainly due to the delay in sanctioning some of the new schemes provided for in the Budget Estimates.



Capital resources.

26. The capital expenditure for the year is now fixed at Rs. 16,67 lakhs as against Rs. 15,49 lakhs provided for in the Budget Estimates. The provision for Electricity schemes has been taken away from the Capital Budget with effect from 1st July 1957 and is now shown as loan to the Electricity Board. The Capital Outlay on electricity for the year has been raised from Rs. 11,62 lakhs to Rs. 13,02 lakhs towards which the resources available are only about Rs. 8 crores, and the balance of Rs. 5 crores is proposed to be met by the sale of securities held in the Electricity Depreciation Reserve Fund. The Ways and Means gap for the year is expected to be covered by an anticipated receipt of about Rs. 5½ crores as our share of Small Savings collections.

Budget Estimates, 1958-59.

27. The Budget Estimates for 1958–59 anticipate a revenue of Rs. 62,40 lakhs and an expenditure of Rs. 63,75 lakhs, leaving a gap of Rs. 1,35 lakhs. But after the estimates were finalised, intimation has been received from the Government of India of some liberalisation in the terms of Central assistance on the enhancement of the emoluments of low-paid Government employees, by which we will secure an additional grant of about Rs. 30 lakhs in a year. This would reduce the revenue gap from Rs. 1,35 lakhs to Rs. 1,05 lakhs. Larger receipts are anticipated under Land Revenue by the assessment of inam lands and by the betterment levy and under Tax on Motor Vehicles from the increasing number of transport vehicles on road. On the expenditure side, the annual contribution to the Zamindari Abolition Fund has been increased from Rs. 10 lakhs to Rs. 50 lakhs to build up a reserve towards the final compensation to Zamindars. The contribution to the Famine Relief Fund is also being increased from Rs. 5 lakhs to Rs. 50 lakhs as recommended by the Finance Commission.

Financial adjustments.

28. Hon'ble Members are aware that the children of non-gazetted officers are eligible for full-fee concessions up to III Form and half-fee concession

in the High School classes. The Budget provides for the grant of full-fee concession to them in High School classes also. The scale of pay of agricultural demonstrators will be revised upwards from Rs. 100—5—140—10—220 to Rs. 135—5—200—10—270. The service of workers in the Transport and Machinery repair yards of the Highways Department will be provincialized. The recommendations of Dr. Loganathan on the revision of the sales tax structure, are now under the consideration of the Government, and a comprehensive Bill to amend the Sales Tax Act will soon be introduced. As recommended by him, dealers with a turnover between Rs. 10,000 and Rs. 25,000 will be permitted to compound the tax, so that they may be relieved of the burden of maintaining detailed accounts and a large number of commodities will go over from the multi-point to single-point system. The financial implications of these changes cannot be forecast accurately now, but the Budget proceeds on the basis that there will be no appreciable fall in revenue.

**Taxation measures.** 29. After the Award of the Finance Commission, there is no further prospect of Central assistance for the next few years, and, therefore we cannot leave the revenue deficit of Rs. 1,05 lakhs uncovered. In our discussions with the Planning Commission on the size of the State Plan, we have given a specific undertaking to raise enough resources to balance the Revenue Budget. We are quite likely to sanction many new schemes during the course of the year, and this will widen the gap still further. I am, therefore, making the following proposals of additional taxation:—

(*a*) The enhancement of the levy of sales tax on motor spirit other than petrol, i.e., on diesel oil, from 10 nP. per gallon to 35 nP. per gallon. This may yield about Rs. 70 lakhs in a full year.

(*b*) The enhancement of the rate of entertainment tax from 20 per cent on the first slab to 25 per cent, from 25 per cent on the second slab to 33-1/3



per cent, and from 33-1|3 per cent on the third slab to 40 per cent. Touring cinemas will also be made liable to the show tax. The tax on all entertainments other than cinemas and horse-racing, will be abolished. These proposals will bring in a net additional revenue of about Rs. 30 lakhs, 90 per cent of which will go to the benefit of local bodies. The share of the Madras Corporation may amount to about Rs. 6 lakhs.

(*c*) The levy of agricultural income-tax on all land-holdings with an exemption limit of Rs. 3,000 and at rates and slabs now in force on plantation holdings. The non-agricultural income of the assessee will also be taken into consideration in reckoning his total income and the agricultural portion will be assessed at the higher rates applicable to the top slabs. Facilities for compounding will be offered to the smaller assessees in order to relieve them of the burden of keeping detailed accounts. The surcharge now levied on larger agricultural holdings under the Madras Act XIX of 1954 will be cancelled. It is difficult to estimate the yield on this proposal, but, for the purpose of the Budget, we may reckon it roughly at Rs. 70 lakhs. This measure may indeed become inoperative when ceilings on land-holdings are enforced, but now that we have taken the decision to fix a provisional ceiling, it is but social justice that a portion of the advantage derived by people holding land in excess of that ceiling, should be appropriated by the State towards common benefit.

The new proposals may bring in about Rs. 1,70 lakhs in a full year, of which about Rs. 27 lakhs will go to the benefit of local bodies. Since the necessary legislative measures, especially on agricultural income-tax, may take time, the net receipt by the Government during the next year will only be about Rs. 1,20 lakhs. The deficit of Rs. 1,05 lakhs in the Budget will thus be converted into a small surplus of Rs. 15 lakhs.

Capital expenditure.

30. The Capital Expenditure for the year is fixed at Rs. 9,73 lakhs made up of Rs. 2,39 lakhs on buildings, Rs. 1,69 lakhs on irrigation, Rs. 70 lakhs on minor irrigation, Rs. 1.43 lakhs on industrial Development, Rs. 96 lakhs on Roads, Rs. 35 lakhs on the purchase of buses, and the balance on miscellaneous items. The Capital Expenditure on Electricity Schemes has been fixed at Rs. 11,94 lakhs, but the outlay is now met by the Electricity Board and hence the details have gone out of the State Budget. There is a loan provision of Rs. 4,10 lakhs to the Electricity Board which will meet the balance from resources at its disposal and by the sale of about Rs. 3 crores worth of securities from the Depreciation Reserve Fund. Some of the significant items of loans are: to the Madras Corporation Rs. 42 lakhs, the City Improvement Trust Rs. 59 lakhs, mufassal Municipalities for Water-supply Schemes Rs. 89 lakhs, State-aid to Industries Rs. 25 lakhs, Co-operative Building Societies Rs. 35 lakhs, and to agriculturists in Gramdan villages Rs. 20 lakhs. The net disbursements under Loans and Advances other than to the Electricity Board is expected to be Rs. 3,53 lakhs. The Ways and Means deficit of about Rs. 6½ crores is expected to be closed with our share of the small savings collection, and by raising a public loan if market conditions permit.

...an outlay.

31. In framing the Budget for the current year we had estimated the outlay on the Plan at Rs. 31,79 lakhs. Appreciable shortfalls in implementation are expected on certain schemes under agricultural development, soil conservation, medical, housing, village industries and handicrafts, for reasons such as the delay in sanctioning the schemes, delay in land acquisition and scarcity of building materials like cement and steel. But these shortfalls will be more than made up by a much larger outlay on Irrigation and Power. The revised estimates provide for a



Plan outlay of Rs. 32,31 lakhs, an excess of Rs. 52 lakhs over the original provision, and let us hope that departmental performances will be adequate to absorb in full the allotments now made.

32. The details of the Plan for the coming year have been discussed with the Planning Commission last December, and the outlay has been fixed at Rs. 30·47 crores. We have been assured of Central assistance in loans and grants according to the established pattern of assistance, up to a ceiling of Rs. 18 crores, and so the balance of Rs. 12·47 crores should come out of our own resources. The total sum allotted by the Government of India towards assistance to all States in 1958–59 is only about Rs. 200 crores and therefore, it may not be possible to get a larger assistance from the Centre. We may like to vote for a larger outlay, but the additional resources will have to be raised by us internally and the Planning Commission will certainly accept the position. But, within the present ceiling, we have made fair enough provision to maintain the tempo of execution on most of the schemes. A detailed statement showing the break-up of the Plan outlay, is given as Appendix IV. The provision on Major Irrigation is less than that for the current year by Rs. 1,17 lakhs, but this is due to the fact that our Major Schemes are nearing completion, and do not call for larger allotments. Excepting the Electricity Department which may be able to spend a little more if funds are made available, the requirements of other departments have been met practically in full. The needs of the Electricity Department may be reviewed again as the year advances and further adjustments can be made to the extent practicable as we did in the current year.

Conclusion

33. There has been a good deal of discussion in the country on the present shortage of foreign exchange and the difficulties in the way of implementing a fuller Plan. It is indeed true that foreign exchange is the bottleneck on the large schemes of

industrial development like steel plants, heavy fabrication units, aluminium plants, heavy electrical plant and fertilizer factories. But, in respect of most schemes in the State Plan, such as for the development of agriculture, provision of drinking water, renovation of irrigation works, expansion of education, and the construction of roads and hospitals, foreign exchange is not the crucial bottleneck. Power development is the only big item in the State sector involving foreign exchange, but fortunately we have already secured the essential machinery needed for those projects. Our real problem, in common with that of other States, is the inadequacy of internal finance. We may plead for more Central assistance, but the resources at the disposal of the Government of India are also limited and must come out of the savings of the people. We are all keen on stepping up living standards at a fast pace, but further progress calls for a greater effort by the people to save and invest. The history of all the advanced nations of the world tells us the same story, that there is no short-cut to prosperity. All those nations did pass through an initial stage of toil and sweat before they were able to lay the foundations of a growing economy. It is in this light that we should now explain to the people the significance of the new taxation proposals and the present drive in the districts on Small Savings. These new imposts may be irritating and we are tempted to complain of official coercion, but we cannot escape the consequences of our determination to work towards a socialistic pattern of society in our lifetime. Again, the largest single cause for the present crisis in foreign exchange is the food deficit and the necessity to import foodgrains from overseas. The solution of this problem is very much in our hands, because the conservation of farm-yard manure, the processing of urban manure, the growing of green manure and the use of improved seeds, do not involve any foreign exchange. A little more intelligent devotion to these elementary agricultural practices will cover the food



deficit to a large extent and release valuable foreign exchange for the vital needs of the Plan. Obviously there is an important part which Hon'ble Members in the House and public men outside can play and I take this opportunity to appeal to one and all of them to play that part effectively by explaining to the people the various agricultural schemes initiated by the Government to step up production, by demonstrating in their own private holdings this simple message of the Plan and by providing a healthy liaison between the cultivator and the field organizations in charge of the various Extension Services.

**Acknowledgments.**

34. Before I conclude, I wish to express my appreciation of the valuable advice and staunch support extended to us by Sri T. T. Krishnamachari, the ex-Union Finance Minister. Touching references have been made in the Parliament, the Press and the platform about the great loss sustained by the country by his sudden exit from high office, but for us in Madras, the loss is even more grievous. He has been one of us and consistent with his wider responsibilities to the Nation as Union Minister, he has in all his official dealings with the affairs of this State, demonstrated that he continued to be one with us. I am sure all Hon'ble Members will join with me in one mind to express our deep gratitude for the meritorious services rendered by him to the Nation in general and to the people of this State in particular. I must also acknowledge my sincere thanks to the Financial Secretary, Sri T. A. Varghese, and to his able assistants, for all their advice and assistance in my work and particularly in framing the Budget.

With these remarks, Sir, I commend to this House, the Budget proposals for 1958-59.

A 213—1-3-58—6

# APPENDIX I.

[The figures up to the end of September 1953 include those relating to the Andhra areas. The figures from 1956–7 take into account the Reorganization of States from the 1st November 1956.]

## REVENUE AND EXPENDITURE ON REVENUE ACCOUNT OF THE MADRAS STATE.

| Major heads. | 1938–9. | 1950–1. | 1951–2. | 1952–3. | 1953–4. | 1954–5. | 1955–6. | 1956–7. | 1957–8. Budget Estimate. | 1957–8. Revised Estimate. | Budget Estimate, 1958–9. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. |
| **A. REVENUE.** | | | | | | | | | | | |
| Union Excise Duties .. | .. | .. | .. | 2,88·75 | 2,25·44 | 1,66·49 | 1,82·56 | 1,75·14 | 1,70·68 | 2,15·00 | 2,15·00 |
| Taxes on income other than Corporation tax— | | | | | | | | | | | |
| Share of Income-tax. | 22·60 | 8,29·15 | 9,15·43 | 9,42·44 | 7,50·82 | 5,67·38 | 5,59·54 | 5,23·85 | 5,10·95 | 6,04·00 | 6,04·00 |
| Agricultural Income-tax. | .. | .. | .. | .. | .. | .. | 1,41·94 | 1,12·51 | 90·00 | 1,00·00 | 1,07·00 |
| Estate Duty .. .. | .. | .. | .. | .. | .. | 5·28 | 17·57 | 22·35 | 21·02 | 22·00 | 22·00 |
| Taxes on Railway fares. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 35·59 | 63·63 |
| Land Revenue— | | | | | | | | | | | |
| Gross receipts including portion due to irrigation. | 7,00·78 | 9,50·71 | 9,20·58 | 8,70·85 | 6,68·67 | 5,95·41 | 5,97·34 | 6,19·86 | 5,85·27 | 6,28·15 | 6,62·55 |
| Excise .. .. .. | 3,72·23 | 55·28 | 40·74 | 47·26 | 30·86 | 27·22 | 28·62 | 30·29 | 27·14 | 30·41 | 27·85 |
| Stamps .. .. | 1,78·37 | 4,88·49 | 4,54·27 | 4,51·88 | 3,69·23 | 2,62·47 | 3,59·56 | 3,62·76 | 3,41·00 | 3,52·81 | 3,52·81 |
| Forest .. .. .. | 45·68 | 1,88·56 | 2,08·92 | 1,58·17 | 1,22·14 | 1,31·89 | 1,77·08 | 1,75·17 | 1,16·14 | 1,30·16 | 92·35 |
| Registration .. .. | 32·70 | 1,07·97 | 1,09·59 | 1,01·08 | 90·60 | 60·46 | 69·66 | 78·85 | 61·26 | 69·76 | 68·76 |
| Taxes on Vehicles .. | 81·72 | 3,46·74 | 3,90·14 | 4,25·95 | 4,17·04 | 3,50·89 | 4,00·87 | 4,37·73 | 3,82·22 | 4,45·00 | 4,50·00 |
| Other taxes and duties— | | | | | | | | | | | |
| General sales tax .. | .. | 15,26·87 | 15,59·10 | 13,23·18 | 11,99·26 | 8,68·98 | 9,82·07 | 11,16·77 | 10,80·16 | 10,28·07 | 8,80·00 |
| Other items .. | 3·19 | 3,08·61 | 3,62·50 | 3,78·67 | 1,22·08 | 2,49·35 | 2,66·40 | 2,75·61 | 2,59·52 | 4,82·20 | 6,26·15 |
| Total .. | 3·19 | 18,35·48 | 19,21·60 | 17,01·85 | 13,21·34 | 11,18·33 | 12,48·47 | 13,92·38 | 13,39·68 | 15,00·27 | 15,06·15 |
| Irrigation— | | | | | | | | | | | |
| Direct receipts * .. | 6·31 | 14·29 | 10·11 | 15·52 | 10·64 | 6·59 | 7·22 | 9·14 | 7·88 | 8·84 | 38·06 |
| Deduct—Working expenses. | — 28·39 | — 1,14·94 | — 1,20·39 | — 1,65·85 | — 1,38·01 | — 44·32 | — 45·46 | — 57·72 | — 52·36 | — 57·28 | 60·23 |
| Net receipts .. | — 22·08 | — 1,00·65 | — 1,10·28 | — 1,50·08 | — 1,27·37 | — 37·73 | — 38·24 | — 48·58 | — 44·48 | — 48·44 | — 22·17 |
| Irrigation— | | | | | | | | | | | |
| Direct receipts * .. | 1·99 | 4·64 | 3·30 | 3·31 | 2·78 | 2·23 | 2·42 | 2·08 | 2·15 | 1·93 | 1·93 |
| Interest .. .. | 19·72 | 77·07 | 52·22 | 19·24 | 49·43 | 45·75 | 52·76 | 59·68 | 61·81 | 3,73·22 | 4,98·55 |
| Administration of Justice. | 15·39 | 84·55 | 84·43 | 78·25 | 55·42 | 43·60 | 57·60 | 62·05 | 54·89 | 64·30 | 56·84 |
| Jails and Convict Settlements. | 5·98 | 20·98 | 26·67 | 31·97 | 25·00 | 27·32 | 22·02 | 26·20 | 25·47 | 24·91 | 25·69 |
| Police .. .. | 5·66 | 26·86 | 29·32 | 28·74 | 20·64 | 22·18 | 21·41 | 21·81 | 22·08 | 24·19 | 24·19 |
| Ports and Pilotage .. | 44·67 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Education .. .. | 8·35 | 31·90 | 54·28 | 38·71 | 46·09 | 57·81 | 73·40 | 93·71 | 1,56·13 | 1,53·22 | 1,72·95 |
| Medical .. .. | 10·25 | 27·07 | 26·34 | 24·67 | 26·71 | 22·13 | 27·35 | 31·14 | 46·09 | 39·09 | 64·74 |
| Public Health .. | 2·59 | 7·55 | 9·01 | 7·79 | 5·64 | 6·05 | 22·13 | 7·17 | 18·0 | 16·07 | 22·06 |
| Agriculture .. .. | 3·12 | 1,18·24 | 1,16·60 | 1,35·28 | 1,27·90 | 88·14 | 80·37 | 1,04·21 | 1,51·14 | 1,34·98 | 1,78·88 |
| Veterinary .. .. | 1·02 | 5·93 | 7·56 | 8·83 | 7·65 | 8·69 | 7·98 | 13·08 | 18·19 | 23·77 | 22·88 |
| Co-operation .. .. | 4·18 | 26·45 | 18·63 | 22·74 | 20·85 | 48·35 | 64·53 | 1,27·82 | 1,29·18 | 1,30·81 | 94·57 |
| Industries .. .. | 18·85 | 1,20·39 | 1,19·78 | 1,07·95 | 1,05·48 | 77·13 | 1,17·52 | 1,23·41 | 3,33·16 | 2,04·20 | 3,10·89 |
| Miscellaneous departments. | 7·62 | 42·61 | 41·33 | 48·76 | 40·42 | 35·12 | 42·50 | 99·48 | 75·67 | 1,05·46 | 1,22·34 |
| Civil Works .. .. | 25·12 | 1,06·47 | 1,07·24 | 1,43·38 | 1,26·31 | 1,11·38 | 1,14·67 | 1,23·73 | 80·39 | 69·55 | 86·32 |
| Receipts from Electricity Schemes (Gross). | 42·51 | 3,77·61 | 4,71·20 | 5,16·76 | 5,31·42 | 5,97·21 | 7,03·08 | 8,13·43 | 9,50·29 | 2,53·66 | .. |
| Deduct—Working expenses. | — 24·81 | — 2,33·13 | — 3,47·88 | — 4,12·09 | — 3,63·58 | — 3,71·79 | — 4,52·08 | — 5,26·02 | — 6,11·37 | — 1,75·72 | .. |
| Net receipts .. | 17·70 | 1,44·48 | 1,23·32 | 1,04·67 | 1,67·84 | 2,25·42 | 2,51·00 | 2,87·41 | 3,38·92 | 77·94 | .. |
| Receipts in aid of superannuation. | 2·83 | 5·96 | 5·90 | 6·35 | 5·09 | 13·07 | 11·82 | 16·06 | 6·70 | 14·72 | 13·96 |
| Stationery and Printing. | 3·96 | 16·90 | 19·54 | 14·79 | 14·17 | 12·16 | 12·79 | 9·76 | 8·61 | 9·66 | 10·34 |
| Miscellaneous— | | | | | | | | | | | |
| Gross Receipts from Bus Service (a). | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Other items .. | 14·58 | 1,65·52 | 1,04·42 | 92·14 | 1,96·82 | 1,23·02 | 87·10 | 74·90 | 2,38·47 | 2,26·40 | 2,00·74 |
| Total .. | 14·58 | 1,65·52 | 1,04·42 | 92·14 | 1,96·82 | 1,23·02 | 87·10 | 74·90 | 2,38·47 | 2,26·40 | 2,00·74 |
| Receipts from Road and Water Transport Schemes—Gross Receipts (b). | .. | 1,16·68 | 1,18·87 | 1,24·95 | 1,44·64 | 1,42·54 | 1,63·35 | 1,81·21 | 1,88·65 | 1,99·44 | 2,00·00 |
| Working expenses (b). | .. | — 1,00·84 | — 1,10·20 | — 1,20·37 | — 1,24·68 | — 1,16·69 | — 1,28·13 | — 1,49·91 | — 1,81·98 | — 1,78·88 | — 1,88·95 |
| Net receipts .. | .. | 15·84 | 8·67 | 4·58 | 19·96 | 25·85 | 35·22 | 31·30 | 6·67 | 20·56 | 11·05 |

* Excludes land revenue.

(a) The receipts are shown under "Receipts from Road and Water Transport Schemes" from 1949–50.

(b) Prior to 1949–50, the receipts were included under the revenue head "Miscellaneous" and the Working Expenses were shown under the expenditure head "Miscellaneous".

REVENUE AND EXPENDITURE ON REVENUE ACCOUNT OF THE MADRAS STATE—*contd.*

| Major heads. | 1938–9. | 1950–1. | 1951–2. | 1952–3. | 1953–4. | 1954–5. | 1955–6. | 1956–7. | 1957–8. Budget Estimate. | 1957–8. Revised Estimate. | Budget Estimate, 1958–9. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. |
| **A. REVENUE—*contd.*** | | | | | | | | | | | |
| Grants-in-aid from the Central Government. | .. | .. | 4·00 | 8·61 | 5·70 | 1·90 | 72·19 | 1,28·09 | 10·98 | 8·31 | 7·05 |
| Miscellaneous adjustments between Union and State Governments. | ·27 | ·20 | ·25 | ·38 | ·36 | ·21 | ·40 | ·34 | ·34 | ·34 | ·34 |
| Extraordinary Receipts. | .. | 2·69 | 1,18·62 | 74·05 | 1,39·34 | 43·01 | 47·15 | 15·54 | 25·40 | 26·40 | 25·00 |
| Transfer from Revenue Reserve Fund. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Receipts from Community Development Projects, National Extension Service and Local Development Works (*a*). | .. | .. | .. | .. | .. | 40·19 | 2,50·73 | 2,76·03 | 1,81·56 | 2,07·02 | 1,83·54 |
| Civil Defence .. | .. | ·41 | 4·59 | — 1·02 | 1·36 | ·98 | .. | .. | .. | .. | .. |
| Additional assistance from Government of India, intimated after finalisation of Budget proposals towards the enhancement of low-paid employees' emoluments. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 30·00 |
| Proceeds of additional taxation. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1,50·00 | .. | 1,30·60 |
| Grand total .. | 16,12·45 | 58,16·34 | 59,36·50 | 58,42·39 | 50,50·78 | 48,88·58 | 52,00·48 | 56,29·21 | 57,96·82 | 60,41·07 | 63,90·28 |
| **B. EXPENDITURE ON REVENUE ACCOUNT.** | | | | | | | | | | | |
| Taxes on Income other than Corporation tax. | .. | .. | .. | .. | .. | .. | 1·93 | 2·79 | 2·61 | 2·60 | 2·69 |
| Land Revenue .. | 25·36 | 46·19 | 84·52 | 84·33 | 87·96 | 79·42 | 80·09 | 88·58 | 94·35 | 1,00·14 | 1,28·80 |
| Excise duties .. | 32·18 | 79·79 | 84·86 | 80·47 | 68·28 | 38·98 | 6·12 | 6·76 | 6·67 | 6·81 | 6·65 |
| Stamps .. .. | 4·72 | 25·25 | 24·10 | 26·15 | 22·52 | 13·84 | 15·28 | 18·03 | 16·37 | 18·91 | 18·41 |
| Forest .. .. | 40·17 | 74·81 | 80·35 | 90·34 | 75·70 | 68·75 | 64·25 | 57·76 | 57·81 | 59·68 | 56·39 |
| Registration .. .. | 20·12 | 52·19 | 53·57 | 54·01 | 47·78 | 38·26 | 38·76 | 37·45 | 39·96 | 38·42 | 37·48 |
| Charges on account of Motor Vehicles Acts— | | | | | | | | | | | |
| Payment to local bodies. | 72·77 | 90·34 | 90·80 | 92·80 | 90·49 | 68·15 | 66·06 | 63·74 | 60·47 | 62·54 | 62·44 |
| Other departmental expenditure. | 2·29 | 8·50 | 9·89 | 11·18 | | 9·11 | 11·04 | 11·61 | 10·57 | 10·89 | 11·20 |
| Other taxes and duties— | | | | | | | | | | | |
| Payable to local bodies. | .. | 1,01·94 | 1,19·48 | 1,08·22 | 1,22·64 | 82·30 | 77·51 | 91·10 | 92·00 | 97·00 | 95·80 |
| Other departmental expenditure. | ·04 | 45·45 | 48·68 | 52·91 | | 45·41 | 46·27 | 47·93 | 45·13 | 46·34 | 46·08 |
| Irrigation—Interest on works for which capital accounts are kept. | 37·50 | 1,42·21 | 1,75·81 | 2,17·07 | 1,91·00 | 1,42·23 | 1,68·24 | 1,77·66 | 1,76·36 | 1,88·80 | 1,95·58 |
| Irrigation—Other revenue expenditure financed from ordinary revenues. | 30·60 | 1,48·25 | 1,45·82 | 1,68·29 | 1,19·20 | 95·07 | 1,18·38 | 2,72·00 | 96·85 | 1,31·09 | 84·68 |
| Construction of irrigation, etc., works. | 1·25 | 8·29 | ·61 | ·24 | 2·01 | .. | .. | .. | .. | .. | .. |
| Interest on debt and other obligations. | 58·54 | 1,23·66 | 1,45·66 | 2,04·39 | 2,21·71 | 1,77·29 | 2,61·30 | 3,70·85 | 4,50·76 | 4,23·35 | 4,95·69 |
| Deduct—Interest transferred to Commercial Departments. | — 1,07·54 | — 2,65·54 | — 3,33·49 | — 4,19·45 | — 3,96·51 | — 3,33·06 | — 4,08·57 | — 4,95·33 | — 5,71·10 | — 2,93·85 | — 2,20·82 |
| Net amount met out of ordinary revenues. | — 49·00 | — 1,41·88 | — 1,87·83 | — 2,15·06 | — 1,74·80 | — 1,55·77 | — 1,48·77 | — 1,24·48 | — 1,20·34 | 1,29·50 | 2,74·27 |
| Appropriation for reduction or avoidance of debt. | 5·12 | 75·65 | 1,02·30 | 1,06·01 | 1,29·98 | 49·55 | 49·56 | 63·84 | 67·69 | 71·51 | 71·52 |
| General Administration. | 2,76·70 | 6,54·90 | 7,41·34 | 7,24·47 | 6,25·98 | 6,12·53 | 4,47·29 | 4,53·07 | 4,50·07 | 4,65·98 | 4,34·60 |
| Administration of Justice. | 90·63 | 1,65·56 | 1,70·09 | 1,84·47 | 1,61·74 | 1,24·94 | 1,27·23 | 1,25·72 | 1,25·56 | 1,25·19 | 1,26·52 |
| Jails and Convict Settlements. | 22·22 | 1,20·37 | 1,33·55 | 1,42·66 | 1,34·12 | 93·49 | 84·82 | 91·14 | 84·15 | 92·21 | 92·28 |
| Police .. .. | 1,60·06 | 6,96·89 | 7,37·62 | 7,16·88 | 5,97·96 | 4,80·53 | 5,19·89 | 5,17·65 | 5,00·01 | 5,32·66 | 5,29·64 |
| Ports and Pilotage .. | .. | .. | .. | .. | ·01 | .. | .. | .. | .. | .. | .. |
| Scientific Departments. | ·66 | 1·64 | 2·45 | 2·31 | 2·14 | 2·54 | 2·59 | 2·75 | 2·36 | 2·46 | 2·61 |

(*a*) The receipts were shown under "Miscellaneous" and "Extraordinary Receipts" up to the end of 1953–4.

# Revenue and Expenditure on Revenue Account of the Madras State—*cont.*

| Major heads. | 1938-9. | 1950-1. | 1951-2. | 1952-3. | 1953-4. | 1954-5. | 1955-6. | 1956-7. | 1957-8. Budget Estimate. | 1957-8. Revised Estimate. | Budget Estimate, 1958-9. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. |
| **B. EXPENDITURE ON REVENUE ACCOUNT—*cont.*** | | | | | | | | | | | |
| Education .. .. | 2,61·98 | 10,42·66 | 11,01·10 | 11,96·02 | 10,53·07 | 9,19·18 | 10,93·30 | 10,26·98 | 11,42·43 | 11,48·88 | 12,04·22 |
| Medical .. .. | 98·14 | 3,14·87 | 3,53·12 | 3,80·84 | 3,48·91 | 3,08·85 | 3,24·08 | 3,57·55 | 4,02·81 | 3,78·75 | 4,14·85 |
| Public Health .. | 26·57 | 1,04·06 | 1,65·11 | 2,06·71 | 1,41·38 | 1,04·04 | 1,18·97 | 53·98 | 72·18 | 64·17 | 75·52 |
| Agriculture .. .. | 20·62 | 2,75·85 | 3,10·49 | 2,60·07 | 2,19·04 | 1,57·44 | 1,57·88 | 1,90·51 | 2,06·28 | 2,28·28 | 2,53·79 |
| Veterinary .. .. | 12·85 | 56·69 | 62·98 | 60·68 | 45·55 | 40·15 | 41·02 | 51·92 | 70·19 | 74·27 | 80·20 |
| Co-operation .. | 13·82 | 76·48 | 76·39 | 77·31 | 66·88 | 78·75 | 1,08·19 | 1,52·96 | 1,70·24 | 1,72·90 | 1,45·50 |
| Industries .. .. | 27·54 | 1,57·46 | 2,01·67 | 1,67·08 | 1,76·42 | 1,58·91 | 1,77·09 | 1,99·69 | 5,07·49 | 3,18·45 | 4,86·40 |
| Capital outlay on Industrial Development. | .. | ·25 | ·39 | ·30 | ·66 | ·31 | .. | .. | .. | .. | .. |
| Aviation .. | .. | ·75 | ·43 | ·35 | ·43 | ·31 | ·26 | ·35 | ·41 | ... | ... |
| Miscellaneous departments * | .. | 1,49·34 | 1,67·29 | 1,72·77 | 2,06·51 | 1,66·98 | 1,89·89 | 2,48·05 | 2,83·60 | 3,29·65 | 3,37·42 |
| Civil Works .. .. | 21·11 | 8,27·88 | 7,62·56 | 9,84·46 | 6,40·39 | 4,10·77 | 5,92·64 | 4,54·24 | 4,31·01 | 4,18·42 | 4,71·57 |
| Interest on capital outlay on Electricity Schemes. | 18·92 | 1,14·36 | 1,48·81 | 1,89·00 | 1,96·94 | 1,81·96 | 2,25·99 | 2,80·28 | 3,73·08 | 88·13 | — |
| Other revenue expenditure connected with Electricity Schemes. | .. | 8·47 | 3·22 | 5·37 | 2·84 | ·21 | — ·74 | — 1·40 | — 3·41 | ·17 | .. |
| Famine .. .. | 16·04 | 8·00 | 13·86 | 51·56 | 98·72 | 11·48 | 96·10 | 29·88 | 34·09 | 34·75 | 52·50 |
| Territorial and Political Pension. | .. | .. | .. | .. | .. | .. | .. | ·01 | ·06 | ·02 | ·02 |
| Privy purses and allowances of Indian Rulers. | .. | 1·94 | 2·04 | 12·48 | 6·33 | 1·87 | ·97 | ·71 | 94 | ·73 | ·73 |
| Superannuation allowances and Pensions. | 97·12 | 1,85·24 | 1,96·75 | 2,09·25 | 1,78·66 | 1,37·23 | 1,40·97 | 1,83·61 | 1,12·81 | 1,18·88 | 1,20·68 |
| Commutation of pensions. | .. | 9·59 | 17·18 | 17·47 | 10·91 | 10·59 | 5·08 | 7·27 | 5·15 | 7·24 | 7·45 |
| Stationery and Printing. | 27·07 | 87·10 | 1,06·10 | 1,02·14 | 1,13·74 | 1,01·12 | 85·77 | 1,18·23 | 80·99 | 87·26 | 82·11 |
| Miscellaneous— | | | | | | | | | | | |
| Expenditure on Bus Service. | .. | † | † | † | † | † | † | † | † | † | † |
| Other items | 4·29 | 29·76 | 26·56 | 26·27 | 96·12 | 18·69 | 78·55 | 70·38 | 1,51·92 | 1,36·15 | 1,27·32 |
| Extraordinary charges— | | | | | | | | | | | |
| Expenditure on State Trading Schemes transferred to the Revenue Account. | .. | (a) | (a) | (a) | (a) | (a) | (a) | (a) | (a) | (a) | (a) |
| Other items .. | .. | 1,06·29 | 99·90 | 70·13 | 36·02 | 17·47 | 6·44 | 2·71 | 1·37 | 2·32 | 1·73 |
| Total .. | .. | 1,06·29 | 99·90 | 70·13 | 36·02 | 17·47 | 6·44 | 2·71 | 1·37 | 2·32 | 1·73 |
| Community Development Projects, National Extension Service and Local Development Works. | .. | .. | .. | 34·88 | .. | 40·11 | 3,33·53 | 2,99·68 | 2,76·36 | 2,62·05 | 2,34·48 |
| Transfer to Revenue Reserve Fund. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Civil Defence .. | .. | ·45 | ·05 | ·08 | 20·89 | ·08 | .. | .. | .. | .. | .. |
| Grand total .. | 16,09·72 | 59,45·21 | 64,34·96 | 68,40·71 | 59,63·83 | 47,24·52 | 54,55·81 | 56,86·66 | 61,32·19 | 60,36·24 | 63,75·54 |
| Final Revenue Surplus (+) or Deficit (−). | + 3·72 | − 1,28·87 | − 4,96·46 | − 9,98·39 | − 3,88·10 | − 3,91·64 | − 2,46·33 | − 63·45 | − 3,33·56 | + 4·83 | + 14·74 |

(a) Shown under Capital Account. The figures are—

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| .. | 4,49·11 | 1,38·18 | 2,54·38 | 11,66·50 | − 3,68·74 | − 5,25·05 | 76·00 | 1,31·11 | 2,31·11 | 67·78 |

* Includes expenditure on Harijan Uplift including concessions to Backward Classes as shown below :—

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1,19·70 | 1,00·46 | 1,29·47 | 1,38·95 | .. | 98·14 | 1,17·77 | 1,58·15 | 194·11 | 2,41·06 | 2,33·37 |

† Working Expenses of the Madras City Bus Service are taken in deduction of the receipts from 1949–50.

[1st March 1958

(i) STATEMENT SHOWING GRANTS FROM THE GOVERNMENT OF INDIA FOR PLAN AND NON-PLAN SCHEMES—*cont.*

| — | Actuals, 1956–7. | Revised Estimate, 1957–8. | Budget Estimate, 1958–9. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. |
| B. Grants for State Non-Plan Schemes— | | | |
| Cyclone Relief Measures .. .. .. .. .. | 1,25·58 | .. | .. |
| Development of State Roads of Economic and Inter-State importance. | 23·99 | 12·54 | 20·18 |
| Grants for— | | | |
| Increasing the emoluments of low-paid employees. | .. | 1,25·00 | 1,25·00 |
| Grant-in-aid under Article 275 (1) of the Constitution. | 2·51 | 8·31 | 7·05 |
| Subventions for Development Schemes .. .. | 14·18 | (*a*) | (*a*) |
| Education .. .. .. .. .. .. | 34·46 | 4·05 | 6·91 |
| Handlooms .. .. .. .. .. .. | 18·20 | 2·09 | ·69 |
| Local Development Works .. .. .. .. | .. | 50·00 | 30·00 |
| Industries including Khadi .. .. .. .. | 9·08 | 45·88 | 40·64 |
| Other items .. .. .. .. .. .. | 10·08 | 1·34 | .. |
| Total—B. .. | 2,38·08 | 2,49·21 | 2,30·47 |
| C. Grants towards centrally sponsored schemes in respect of which the Central share of expenditure is not included in the State Plan— | | | |
| Education .. .. .. .. .. .. | .. | 2·94 | ·27 |
| Medical .. .. .. .. .. .. .. | 7·00 | 10·16 | 13·18 |
| Public Health .. .. .. .. .. .. | 6·15 * | 15·84 * | 13·11* |
| Housing—Slum Clearance .. .. .. .. | .. | .. | 17·50 |
| Welfare of Backward Classes .. .. .. .. | 27·28 | 20·15 | 27·00 |
| Social Welfare .. .. .. .. .. .. | ·09 | ·67 | 3·09 |
| Labour Welfare—Craftsmen Training .. .. | .. | 8·47 | 9·47 |
| Tourism .. .. .. .. .. .. .. | .. | .. | 1·25 |
| Total—C. .. | 40·52 | 54·23 | 84·81 |
| Grand Total—A, B and C. .. | 5,23·86 | 8,04·88 | [illegible] |

(*a*) Shown under Plan.

* Includes also the value of quipments.



1st March 1958]

(ii) LOAN ASSISTANCE FROM THE GOVERNMENT OF INDIA.

| — | Actuals, 1956–7. | Revised Estimate, 1957–8. | Budget Estimate, 1958–9. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. |
| A. Plan Schemes— | | | |
| Agricultural Production .. .. .. .. | 42 | 20 | 35 |
| Minor Irrigation .. .. .. .. .. | 39 | 30 | 45 |
| Animal Husbandry .. .. .. .. } Dairying and Milk-supply .. .. .. .. } | .. | .. | 26 |
| Forests and Soil conservation .. .. .. .. | 16 | 20 | 27 |
| Fisheries .. .. .. .. .. .. .. | .. | .. | 9 |
| Co-operation .. .. .. .. .. .. | .. | .. | 12 |
| Community Projects and National Extension Service. | 75 | 55 | 58 |
| Irrigation .. .. .. .. .. .. } Power .. .. .. .. .. .. } | 5,63 | 6,90 | 9,00 |
| Medium Industries .. .. .. .. .. | .. | .. | 5 |
| Handloom Industry .. .. .. .. .. | 1,06 | 34 | 27 |
| Industrial Estates .. .. .. .. .. } Small Scale Industries .. .. .. .. } | 50 | 75 | { 20 48 |
| Health .. .. .. .. .. .. .. | .. | .. | 16 |
| Housing .. .. .. .. .. .. .. | 64 | 36 | 48 |
| Miscellaneous .. .. .. .. .. .. | .. | .. | 5 |
| Total—A. .. | 9,55 | 9,60 | 12,81† |

† *Note.*—The total assistance for the Plan for 1958–59 *is* Rs 18,00 lakhs made up of Rs. 5,19 lakhs grants and Rs. 12,81 lakhs loans.

| — | Actuals, 1956–7. | Revised Estimate, 1957–8. | Budget Estimate, 1958–9. |
|---|---|---|---|
| B. Non-Plan Schemes— | | | |
| Fertilizers (short-term loan) .. .. .. .. | 1,55 | 1,22 | 1,50 |
| Cyclone relief measures .. .. .. .. | 1,40 | 1,00 | .. |
| Police housing schemes .. .. .. .. | 7 | 40 | 44 |
| Share capital of Sugar Mills and Spinning Mills .. | 10 | 20 | .. |
| Loans towards— | | | |
| Increasing the emoluments of low-paid employees. | .. | 25 | 25 |
| Water-supply and Drainage Schemes .. .. | 30 | 1,25 | 70 |
| Construction of Buildings for Educational Institutions. | 7 | 3 | — |
| Cotton Extension Schemes .. .. .. .. | 3 | 4 | .. |
| Slum clearance .. .. .. .. .. | .. | 9 | 40 |
| Share of Small Savings * .. .. .. .. | 92 | 5,50 | .. |
| Development of Minor Ports .. .. .. | 4 | .. | .. |
| Total—B. .. | 4,48 | 9,98 | 3,29 |
| Grand Total—A and B. .. | 14,03 (*a*) | 19,58(*a*) | 16,10 |

(*a*) Excludes Ways and Means advance.

* A credit of Rs. 6,50 lakhs has been taken for in 1958–59 for the share of this State from small savings together with the proceeds of an open market loan.

## DETAILS OF CAPITAL EXPENDITURE—cont.

| Description of the scheme. | Approximate estimated cost. | 1946-7 to 1951-2. | 1952-3. | 1953-4. (First six months.) | 1953-4. (Second six months.) | 1954-5. | 1955-6. | 1956-7. | Total 1946-7 to 1956-7. | Revised Budget Estimate, 1957-8. | Revised Estimate, 1957-8. | Budget Estimate, 1958-9. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. |
| **C. INDUSTRIAL DEVELOPMENT SCHEMES.** | | | | | | | | | | | | |
| Cinchona Plantations. | .. | 97·47 | 3·04 | .. | 2·89 | 5·14 | 3·57 | 3·33 | 1,20·44 | 3·82 | 3·08 | 4·25 |
| Kerala Soap Institute. | .. | ·04 | ·36 | ·23 | ·83 | ·08 | ·13 | ·01 | 1·56 | ..* | .. | .. |
| Madras Industrial Engineering Workshop. | .. | ·02 | .. | .. | .. | .. | .. | .. | ·02 | 1·06 | 1·06 | ·05 |
| Fish Liver Oil Industry. | .. | 1·30 | ·06 | .. | .. | ·06 | ·31 | ·04 | ·76 | .. | .. | .. |
| Madras Vegetable Ghee Factory. | .. | 11·66 | 5·22 | ·37 | ·38 | ·16 | ·01 | ·03 | 17·83 | ..* | .. | .. |
| Government Silk Filatures. | .. | 8·51 | ·73 | ·06 | ·46 | ·02 | ·14 | ·01 | 4·62 | ..* | .. | .. |
| Polytechnics .. | .. | 34·30 | 15·99 | 3·95 | 5·80 | 2·06 | 2·45 | 3·95 | 68·53 | 24·55 | 11·77 | 4·82 |
| Artesian Wells .. | .. | 14·35 | 2·50 | ·24 | ·11 | —·08 | ·01 | ·09 | 17·43 | .. | ·61 | .. |
| Shares in Fertilisers and Chemicals, Ltd., Travancore. | .. | 21·00 | .. | .. | .. | .. | .. | .. | 21·00 | .. | .. | .. |
| Shares in Madras Industrial Investment Corporation, Madras. | .. | 1,02·00 | .. | .. | .. | .. | 19·42 | .. | 1,21·42 | .. | .. | .. |
| Shares in Dharangadhara Chemical Works. | .. | .. | .. | .. | .. | .. | 5·00 | .. | 5·00 | .. | .. | .. |
| Shares in State Warehousing Corporation. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 10·00 | .. |
| Shares in Co-operative Sugar Factories. | .. | .. | .. | .. | .. | .. | .. | 25·00 | 25·00 | 15·00 | 15·00 | 5·00 |
| Other Shares .. | .. | 1·50 | .. | .. | .. | .. | ·10 | 30·36 | 31·96 | 2·00 | 12·00 | 14·50 |
| Industrial Housing .. | .. | .. | .. | .. | .. | .. | 7·82 | 19·34 / —9·97 | 17·19 | 17·95 / —8·74† | 12·00 / —2·81† | 17·00 / —12·96† |
| Industrial Estates .. | .. | .. | .. | .. | .. | .. | 4·19 | 8·92 | 13·11 | 32·43 | 40·41 | 20·16 |
| Small-scale and Village Industries. | .. | .. | .. | .. | .. | .. | .. | 14·58 | 14·58 | 98·57 | 82·33 | 59·53 |
| Stationery and Printing. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2·38 | 2·38 | 4·29 | 4·29 | ·67 |
| Other Items .. .. | .. | 26·01 | 1·91 | 1·06 | .. | 2·76 | 2·91 | 6·15 | 40·80 | 9·06 | 4·86 | 10·36 |
| Total .. | .. | 3,12·30 | 34·86 | 6·02 | 10·05 | 10·16 | 46·14 | 1,04·23 | 5,23·72 | 1,96·00 | 1,94·55 | 1,28·28 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **D. CAPITAL OUTLAY ON ROAD TRANSPORT SCHEMES.** | | | | | | | | | | | | |
| Madras City Bus Service. | .. | 57·55 | 10·87 | 9·42 | ·48 | 30·12 | 36·54 | 68·09 | 2,13·07 | 20·17 | 25·86 | 30·67 |
| **E. CAPITAL OUTLAY ON CIVIL WORKS.** | | | | | | | | | | | | |
| Buildings .. .. | .. | 3,12·90 | 1,04·75 | 37·16 | 28·99 | 40·95 | 52·15 | 1,02·20 | 6,80·15 | 2,35·37 | 1,69·17 | 2,39·33 |
| Road Works (including tools and plant). | .. | .. | .. | .. | .. | .. | .. | 43·25 | 43·25 | 62·58 | 69·93 | 64·19 |
| Grants to local bodies for Water-supply. | .. | .. | .. | .. | .. | .. | .. | 14·75 | 14·75 | 16·54 | 14·59 | 6·09 |
| Grants to local bodies for Road Works. | .. | .. | .. | .. | .. | .. | .. | 26·13 | 26·13 | 33·22 | 32·97 | 32·44 |
| Pro rata charges for Establishments. | .. | .. | .. | .. | .. | .. | .. | 6·86 | 6·86 | 20·02 | 21·40 | 19·82 |
| Total .. | .. | 3,12·90 | 1,04·75 | 37·16 | 28·99 | 40·95 | 52·15 | 1,93·19 | 7,71·18 | 3,67·23 | 3,08·06 | 3,61·87 |
| **F. COMPENSATION TO ZAMINDARS.** | | | | | | | | | | | | |
| Advance compensation and interim payments. | .. | 4,53·12 | 85·18 | 37·55 | 10·30 | 29·97 | 10·30 | 13·43 | 6,39·85 | 47·30 | 37·90 | 30·00 |
| **G. CAPITAL OUTLAY ON OTHER WORKS.** | | | | | | | | | | | | |
| Buildings, machinery, etc., for the Agriculture, Animal Husbandry, etc., departments | .. | .. | .. | .. | .. | .. | .. | 1·53 | 1·53 | 6·93 | 6·66 | 7·21 |
| Other Grants-in-aid .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 4·46 | 4·46 | 13·82 | 28·97 | 12·04 |
| Total .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 5·99 | 5·99 | 20·75 | 35·63 | 19·25 |
| **H. CAPITAL OUTLAY ON FORESTS.** | | | | | | | | | | | | |
| Forest works .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 7·54 | 7·54 | 14·66 | 18·76 | 16·60 |
| **I. CAPITAL OUTLAY ON IMPROVEMENTS TO PUBLIC HEALTH.** | | | | | | | | | | | | |
| Sanitary works (Stocks). | .. | .. | .. | .. | .. | .. | .. | —18·17 | —18·17 | 13·89 | ·65 | 6·26 |
| Rural Water-supply Schemes. | .. | .. | .. | .. | .. | .. | .. | 32·98 | 32·98 | 36·50 | 44·00 | 34·34 |
| National Water-supply and Sanitation. | .. | .. | .. | .. | .. | .. | .. | 9·49 | 9·49 | 22·21 | 22·36 | 18·61 |
| Grants to Madras Corporation for Water-supply. | .. | .. | .. | .. | .. | .. | .. | 7·29 | 7·29 | 11·94 | 12·28 | 45·56 |
| Total .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 31·59 | 31·59 | 84·54 | 79·29 | 104·77 |
| **J. CAPITAL OUTLAY ON AGRICULTURAL IMPROVEMENTS AND RESEARCH.** | | | | | | | | | | | | |
| Acquisition of lands for State Seed Farms. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 13·60 | 9·66 | 2·79 |

* Pertains to institutions transferred to Kerala or Mysore as a consequence of Reorganization of States.

† Recovery from Government of India.

# APPENDIX II-A.

[The figures up to the end of September 1953 include those relating to the Andhra areas. The figures from 1956-7 take into account the Reorganization of States from the 1st November 1956.]

## CAPITAL EXPENDITURE OUTSIDE THE REVENUE ACCOUNT OF THE MADRAS STATE—DETAILS GIVEN BY MAJOR HEADS.

| Major heads. | 1946-7 to 1951-2. | 1952-3. | 1953-4. First six months. | 1953-4. Second six months. | 1954-5. | 1955-6. | 1956-7. | Total 1946-7 to 1956-7. | Revised Budget Estimate, 1957-8. | Revised Estimate, 1957-8. | Budget Estimate, 1958-9. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. |
| Payment of Compensation to land-holders, etc., on the abolition of the Zamindari system. | 4,53·12 | 85·18 | 87·55 | 10·90 | 29·93 | 10·30 | 13·48 | 6,39·86 | 47·30 | 37·90 | 39·00 |
| Capital Outlay on Forests .. .. | .. | .. | .. | .. | .. | .. | 7·54 | 7·54 | 14·66 | 18·76 | 16·80 |
| Construction of Irrigation, Navigation, Embankment and Drainage Works. | 25,47·18 | 10,16·90 | 3,27·35 | 1,84·45 | 4,47·90 | 5,70·47 | 4,60·11 | 55,47·06 | 2,48·82 | 2,86·47 | 1,69·18 |
| Construction of Irrigation, Navigation, Embankment and Drainage Works Non-Commercial. | .. | .. | .. | .. | .. | .. | 56·58 | 56·58 | 44·54 | 66·61 | 77·88 |
| Capital Outlay on Improvements to Public Health. | .. | .. | .. | .. | .. | .. | 31·59 | 31·59 | 84·54 | 79·29 | 64·77 |
| Capital Outlay on Schemes of Agricultural Experiment and Research. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 13·60 | 9·65 | 2·79 |
| Capital Outlay on Industrial Development. | 2,52·65 | 16·27 | 5·27 | 4·14 | 5·40 | 28·88 | 58·77 | 3,71·38 | 21·88 | 41·08 | 28·80 |
| Capital Account of Civil Works outside the Revenue Account. | 3,12·76 | 1,04·75 | 37·16 | 28·99 | 40·95 | 52·15 | 1,93·19 | 7,70·95 | 3,67·23 | 3,08·06 | 3,61·87 |
| Capital Outlay on Electricity Schemes. | 30,50·81 | 7,80·26 | 5,74·66 | 1,85·64 | 5,84·14 | 11,07·18 | 13,47·06 | 76,47·25 | 3,61·96 | 3,73·47 | .. |
| Capital Account of other Works outside the Revenue Account. | 82·09 | 13·58 | 10·55 | 7·06 | 4·75 | 17·26 | 51·44 | 1,91·75 | 1,93·13 | 1,89·10 | 1,18·78 |
| Capital Outlay on Road Transport Schemes outside the Revenue Account. | 44·11 | 10·37 | 9·93 | ·48 | 30·12 | 36·54 | 68·00 | 1,99·63 | 20·17 | 25·86 | 30·57 |
| Payments of Commuted Value of Pensions. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| Capital Outlay on Schemes of State Trading. | —3,41·62 | 10,56·06 | —13,24·56 | 4,59·06 | —3,66·74 | —5,25·05 | 76·00 | —17,69·85 | 1,81·11 | 2,81·17 | 67·78 |
| Total .. | 59,10·60 | 30,96·77 | —6,89·10 | 8,79·14 | 7,73·80 | 12,97·73 | 23,63·75 | 1,36,03·69 | 15,49·06 | 16,57·42 | 8,72·17 |



# APPENDIX III.

## STATEMENT SHOWING THE DEBT POSITION.

### (i) OPEN MARKET LOANS.

| When issued. | Description of loan. | Total amount issued. | Amount outstanding on 30th September 1953. | Amount outstanding on 31st October 1956. | Amount outstanding on 31st March 1957. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. |
| *A. Loans raised before the 1st October 1953.* | | | | | |
| September 1937 and September 1940. | 3% Loan, 1952, I and II issues. | 2,33·54 | ·80 | ·28 | ·26 |
| September 1938 .. | .. 3% Loan, 1953 .. | 1,51·29 | 15·20 | ·48 | ·48 |
| June 1939 .. | .. 3% Loan, 1959 .. | 1,50·00 | 1,23·96 | 1,23·96 | 1,23·96 |
| September 1942 .. | .. 3% Loan, 1955 .. | 1,25·00 | 1,23·25 | ·15 | ·08 |
| September 1943 .. | .. 3% Loan, 1956 .. | 1,25·10 | 1,25·10 | 3·12 | 1·59 |
| August 1944 .. | .. 3% Loan, 1958 .. | 1,10·00 | 1,07·95 | 1,07·92 | 1,07·92 |
| September 1945 .. | .. 3% Loan, 1960 .. | 3,00·00 | 2,78·44 | 2,78·44 | 2,78·44 |
| September 1946 .. | .. 2¾% Loan, 1961 .. | 4,09·30 | 3,81·77 | 3,81·77 | 3,81·77 |
| July 1950 .. | .. 3% Development Bonds, 1960. | 4,39·75 | 4,38·25 | 4,38·25 | 4,38·25 |
| September 1951 .. | .. 3½% Loan, 1962 .. | 3,01·49 | 3,01·49 | 3,01·49 | 3,01·49 |
| August 1952 .. | .. 4% Loan, 1964 .. | 5,24·81 | 5,24·81 | 5,24·81 | 5,24·81 |
| July 1953 .. | .. 4% Loan, 1963 .. | 10,33·71 | 10,33·71 | 10,33·71 | 10,33·71 |
| | Total—A .. | 39,03·99 | 34,54·73 | 31,94·38 | 31,92·76 |
| | Share of Madras in A. | | 22,41·78 | 16,91·92 | |

*B. Loans raised from 1st October 1953 to 31st October 1956.*

| When issued. | Description of loan. | Total amount issued. | Amount outstanding on 31st October 1956. | Amount outstanding on 31st March 1957. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. |
| August 1955 .. | .. 4 per cent loan, 1967. | 10,47·17 | 10,47·17 | 10,47·17 |
| September 1956 | .. 4 per cent loan, 1968. | 13,83·56 | 13,83·56 | 13,83·56 |
| | Total—B .. | 24,30·73 | 24,30·73 | 24,30·73 |
| | Share of Madras in B .. .. .. | | [illegible] | |
| | Total share of Madras in A and B .. | | 36,70·53 | |
| | *Deduct*—Repayments made from 1st November 1956 to 31st March 1957. | | ·83 | |
| | Balance on 31st March 1957 .. .. | | | 36,69·70 |

STATEMENT SHOWING THE DEBT POSITION—*cont.*

(ii) LOANS FROM THE CENTRAL GOVERNMENT.

| | RS LAKHS. |
|---|---|
| A. Outstanding balance on 30th September 1953 .. .. .. .. | 59,49·46 |
| Share of Madras in the population ratio (62½ per cent) .. .. | 37,19·39 |
| Repayments made from 1st October 1953 to 31st October 1956 .. | 1,97·14 |
| Balance on 31st October 1956 .. | 35,22·75 |
| B. Loans received from 1st October 1953 to 31st October 1956 .. .. | 40,20·01 |
| Repayments made during the period .. .. .. .. .. | 9,53·81 |
| Balance on 31st October 1956 .. | 30,66·20 |
| C. Total outstanding debt on 31st October 1956 (A + B) .. .. | 65,88·95 |
| D. Share of reorganized Madras in the outstanding debt on 31st October 1956 (81·40 per cent). | 53,63·41 |
| E. Loans received from 1st November 1956 to 31st March 1957 .. .. | 10,47·62 |
| Total—(D + E) .. | 64,11·03 |
| *Less*—Repayments made during the period from 1st November 1956 to 31st March 1957. | 2,32·30 |
| F. Total outstanding debt to Central Government on 31st March 1957 .. | 61,78·73 |

SUMMARY OF THE DEBT POSITION AS ON 31ST MARCH 1957.

| | |
|---|---|
| A. Loans raised by the Madras Government— | |
| Open Market Loans [vide Statement (i)] .. .. .. .. | 36,69·70 |
| Loans from the Central Government [vide Statement (ii)] .. .. | 61,78·73 |
| Special irredeemable loans .. .. .. .. .. .. | 1·29 |
| Loans from autonomous bodies .. .. .. .. .. .. | 26·13 |
| Total—A. .. | 98,75·85 |
| B. Share (9·55 per cent) of loans raised by the Travancore-Cochin State— | |
| Open Market Loans .. .. .. .. .. .. .. .. | 65·96 |
| Loans from the Central Government .. .. .. .. .. | 1,23·44 |
| Total—B. .. | 1,89·40 |
| Grand total of outstanding debt of Madras State (A + B) .. | 1,00,65·25 |



APPENDIX IV.

STATEMENT SHOWING THE DETAILS OF EXPENDITURE IN RESPECT OF THE MADRAS STATE SECOND FIVE-YEAR PLAN.

(For further details, please *see* the Supplement on the Second Five-Year Plan.)

| Main Heads of Development. (1) | Total provision. (2) | Actual expenditure in 1956-7. (3) | Revised Estimate of expenditure in 1957-8. (4) | Budget Estimate, 1958-9. (5) |
|---|---|---|---|---|
| | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. |
| I. Agriculture and Community Development— | | | | |
| Agricultural Production .. .. | 2,59 | 13 | 79 | 1,26 |
| Minor Irrigation Projects .. .. | 3,38 | 69 | 74 | 79 |
| Land Development and Soil Conservation. | 1,17 | 15 | 29 | 17 |
| Animal Husbandry .. .. .. | 2,17 | 10 | 39 | 41 |
| Dairying and Milk-supply .. | 1,42 | 11 | 30 | 41 |
| Forests .. .. .. .. | 1,35 | 13 | 26 | 29 |
| Fisheries .. .. .. .. | 95 | 11 | 12 | 21 |
| Co-operation .. .. .. | 2,08 | 8 | 32 | 37 |
| Community Projects .. .. | 13,92 | 2,21 | 2,18 | 2,31 |
| Miscellaneous .. .. .. | 12 | .. | .. | .. |
| Total—I. .. | 29,15 | 3,76 | 5,39 | 6,22 |
| II. Irrigation and Power— | | | | |
| Irrigation .. .. .. .. | 12,34 | 4,11 | 2,87 | 1,51 |
| Power Projects .. .. .. | 53,25 | 13,47 | 13,02 (a) | 11,94 * |
| Total—II. .. | 65,59 | 17,58 | 15,89 | 13,45 |
| III. Industry— | | | | |
| Medium Industries .. .. .. | 76 | 25 | 15 | 5 |
| Village Industries .. .. .. | 2,24 | 1 | 11 | 12 |
| Khadi Development (b) .. .. | 1,12 (b) | .. | .. | .. |
| Handloom .. .. .. .. | 4,14 | 1,53 | 1,53 | 92 |
| Handicrafts .. .. .. .. | 58 | .. | 6 | 9 |
| Industrial Estates .. .. .. | 95 | 9 | 41 | 21 |
| Small-Scale Industries .. .. | 3,33 | 18 | 69 | 91 |
| Sericulture .. .. .. .. | 2 | .. | 1 | 2 |
| Coir .. .. .. .. | 2 | .. | .. | .. |
| General Schemes .. .. .. | 20 | 2 | 7 | 7 |
| Total—III. .. | 13,36 | 2,12 | 3,03 | 2,39 |

* Out of Rs. 11,94 lakhs, a sum of Rs. 4,10 lakhs is shown as a loan by the State Government and the balance of Rs. 7,84 lakhs is to be met from the resources of the State Electricity Board.

(a) Out of Rs. 13,02 lakhs, a sum of Rs. 3,73 lakhs being expenditure incurred till the date of taking over of the schemes by the State Electricity Board and a loan of Rs. 2,00 lakhs are exhibited in the State Budget. The balance of Rs. 7,29 lakhs is met from the resources of the State Electricity Board.

(b) Since treated as outside the plan.

STATEMENT SHOWING THE DETAILS OF EXPENDITURE IN RESPECT OF THE MADRAS STATE SECOND FIVE-YEAR PLAN—*cont.*

| Main Heads of Development. (1) | Total provision. (2) | Actual expenditure in 1956–7. (3) | Revised Estimate of expenditure in 1957–8. (4) | Budget Estimate, 1958–9. (5) |
|---|---|---|---|---|
| | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. |
| IV. Transport and Communication— | | | | |
| Roads .. .. .. .. .. | 6,79 | 67 | 1,03 | 92 |
| V. Education— | | | | |
| Education .. .. .. .. | 10,33 | 73 | [illegible] | 2,50 |
| Technical Education .. .. .. | 1,21 | 8 | 58 | 35 |
| Total—V. .. | 11,54 | 81 | 2,07 | 2,85 |
| VI. Health— | | | | |
| Medical .. .. .. .. | 8,14 | 24 | [illegible] | 1,35 |
| Public Health .. .. .. | 1,26 | 14 | 17 | 21 |
| Water-supply—Urban and Rural .. | 4,95 | 1,70 | 1,44 | 77 |
| Total—VI. .. | 14,25 | 2,08 | 2,54 | 2,33 |
| VII. Housing .. .. .. .. | 2,37 | 38 | 50 | 77 |
| VIII. Welfare of Backward Classes .. | 5,06 | 44 | [illegible] | 1,01 |
| IX. Labour and Labour Welfare .. | 59 | 3 | 7 | 12 |
| X. Social and Women's Welfare .. | 75 | 2 | 1 | 4 |
| XI. Miscellaneous .. .. .. | 2,19 | 34 | 30 | 37 |
| *Add*—Provision which has yet to be adjusted. | 3 | .. | .. | .. |
| Grand Total .. | 1,53,27 | 28,14 | 32,31 | [illegible] |



APPENDIX V.

SECOND FIVE-YEAR PLAN.

(i) STATEMENT SHOWING GRANTS FROM THE GOVERNMENT OF INDIA FOR PLAN AND NON-PLAN SCHEMES.

| — (1) | Actuals, 1956–7. (2) | Revised Estimate, 1957–8. (3) | Budget Estimate, 1958–9. (4) |
|---|---|---|---|
| | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. |
| A. Grants for State Plan Schemes— | | | |
| 1 Agricultural Production .. .. .. .. | 2·00 | 30·43 | 49·46 |
| 2 Soil Conservation .. .. .. .. .. | ·82 | 2·42 | 3·03 |
| 3 Minor Irrigation Projects .. .. .. .. | .. | 25·00 | 25·00 |
| 4 Animal Husbandry .. .. .. .. .. | 2·61 | 10·07 | 15·15 |
| 5 Dairying and Milk-supply .. .. .. .. | ·05 | 1·42 | 2·27 |
| 6 Forests .. .. .. .. .. .. .. | 1·72 | 4·05 | 4·13 |
| 7 Fisheries .. .. .. .. .. .. | ·09 | 3·81 | [illegible] |
| 8 Co-operation .. .. .. .. .. .. | ·11 | 4·69 | 7·77 |
| 9 National Extension Scheme and Community Development Programme. | 89·48 | 1,23·84 | 98·11 |
| 10 Village and Small Industries— | | | |
| (i) Village Industries .. .. .. .. | .. | 6·82 | 7·73 |
| (ii) Handicrafts .. .. .. .. .. | .. | 3·61 | 7·20 |
| (iii) Small Scale Industries .. .. .. | .. | 2·45 | 5·99 |
| (iv) Sericulture .. .. .. .. .. | .. | .. | ·86 |
| (v) General Schemes .. .. .. .. | .. | 3·25 | 3·63 |
| (vi) Handlooms .. .. .. .. .. | [illegible] | 1,08·06 | 64·57 |
| 11 Education .. .. .. .. .. .. | [illegible] | [illegible] | 1,34·75 |
| 12 Health— | | | |
| (i) Medical .. .. .. .. .. | .. | 4·14 | 18·91 |
| (ii) Public Health .. .. .. .. | .. | ·33 | ·26 |
| (iii) Rural Water-supply .. .. .. .. | .. | .. | 19·45 |
| 13 Housing .. .. .. .. .. .. | .. | 2·81 | 15·39 |
| 14 Welfare of Backward Classes .. .. .. | 21·16 | 43·34 | 49·42 |
| 15 Labour Welfare .. .. .. .. .. | .. | ·23 | ·62 |
| 16 Miscellaneous— | | | |
| (i) Broadcasting .. .. .. .. .. | ·51 | [illegible] | [illegible] |
| (ii) Statistics .. .. .. .. .. | .. | ·96 | 1·80 |
| Total .. | 2,45·26 | 5,01·44 | 5,30·99 |
| *Less*—Grants for Category B Plan Schemes to be taken up with the additional resources of the State. | .. | .. | 12·00 |
| Total Grants for State Plan .. | 2,45·26 | 5,01·44 | 5,18·99 *Or 5,19 lakhs roundly.* |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, the 3rd March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at 1 p.m., Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Pest-affected crops in the Tiruchirappalli district*

* 168 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the standing samba crops in the Tiruchirappalli district were affected by pests recently;

(*b*) if so, the nature of the disease;

(*c*) the total acreage so affected; and

(*d*) the remedial and preventive measures taken by the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(b) Jassids, stem-borer, mealy bugs, blast and helminthosporium.

(*c*) 16,000 acres of paddy crop in the district.

(*d*) To bring the pests under control and to prevent their spread to other neighbouring areas, the entire Tiruchirappalli district was declared by the District Agricultural Officers, Tiruchirappalli North and South, as pest-affected from 11th November 1957 to 31st January 1958 (till the end of samba season) for the purposes of issuing the pesticides and insecticides at concessional rate so as to enable the ryots to take prompt and timely control measures. Ryots were individually and collectively met by the departmental staff and were educated through practical demonstrations about the proper usage of chemicals against different pests, noticed on their standing crops of paddy. Active plant-protection measures with all the staff and equipment were undertaken by the Agricultural Demonstrator, Plant Protection Assistants and Extension Officers and the available sprayers, besides departmental sprayers from the Government of India, Central Plant Protection Pool at Tiruchirappalli, were also diverted and used to combat the pests.

In connection with this campaign demonstrations and meetings were also held in villages in addition to the measures taken by the department. Arrangements have been made by the department for stocking adequate quantities of chemicals in all the depots and for the continuance of supply of pesticidies at concessional rates to the ryots in pest-affected areas

SRI S. LAZAR : இது சம்பந்தமாக கோயம்புத்தூரிலுள்ள கவர்ன்மெண்ட் மைக்காலாஜிஸ்ட், கவர்ன்மெண்ட் எண்டமலாஜிஸ்ட் இவர்கள் வந்து ஏதாவது பரிசீலனை செய்தார்களா ? இந்த வியாதி ஒவ்வொரு வருஷமும் வருகிறது என்ற அடிப்படையில் இதை நிரந்தரமாக தடுப்பதற்கு அரசாங்கத்தினிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த வியாதிகள் வராமல் தடுப்பதற்காக அரசாங்கம் தொடர்ந்து பரிசீலனை நடத்தி வருகிறது. இந்த ஜில்லாவில் எந்தெந்த அதிகாரிகள் வந்து கவனித்தார்கள் என்று தகவல் இப்போது என்னிடம் இல்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Are the Government aware of the fact that the concessions that are given for the purchase of pesticides are not availed of by the ryots for the simple fact that they are available for a period of only a month or 15 days?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That aspect has not been brought to my notice so far. If there is any particular difficulty, I would like the hon. Member to bring it to my notice.

THE HON. SRI C. SUBRAMANIAM : The concessions are available throughout the year.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Not throughout the year. The pesticides are not given throughout the year. They are given only for a month or so.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, once an area is declared to be pest-affected, the concession is available. There is no period prescribed for it. But, if there is any particular difficulty felt by the ryots in any of those areas if the hon. Leader of the Opposition would specifically bring such cases to my notice, I shall look into them.

SRI S. LAZAR : இந்த வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கும் வட்டார மக்களுக்கு ஏதாவது சலுகை கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கும் வியாதி பரவியிருப்பதற்கும் நெருங்கிய சம்பந்தம் இல்லை.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR : சபாநாயகர் அவர்களே, அம்பாசமுத்திரம் பக்கத்திலும் இந்த மாதிரியாக வியாதிகள் வந்து அங்குள்ள விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய நிலைமையையும் அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த பூச்சி தொந்தரவு எல்லா இடத்திலும் இருக்கிறது. அதை போக்கடிப்பதற்கு அரசாங்கம் கூடியவரையில் வேண்டிய உதவி அளித்து வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : பூச்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்று பிரகடனப்படுத்தக்கூடிய அதிகாரம் இப்போது கலெக்டரிடம் இருப்பதாக தெரிகிறது. இதற்கு விவசாய அதிகாரி கலெக்டருக்கு ரிப்போர்ட் அனுப்பின பிறகுதான் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்று அறிவிக்கப்படுகிறது. ஆகவே இந்த அதிகாரத்தை விவசாய டிபார்ட்மெண்டிடம் கொடுக்க அரசாங்கம் ஒரு முடிவு எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுதும் இந்த அதிகாரத்தை விவசாய டிபார்ட்மெண்ட்தான் பிரயோகித்து வருகிறது.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, இந்த பூச்சியினால் ஏற்படக்கூடிய தொந்தரவை தடுப்பதற்கு வேண்டிய பரிசீலனை தொடர்ந்து நடைபெற்று வருவதாக தெரிவித்தார்கள். இந்த பரிசீலனை இன்னும் எவ்வளவு காலத்திற்கு நடைபெறும் ? இதனால் எவ்வளவு காலத்திற்கு நன்மை ஏற்படும் என்று காலவரையறுத்து அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த பரிசீலனையில் ஏற்படக்கூடிய சாதனைகளை விவசாயிகள் அனுபவித்துத்தான் வருகிறார்கள் இதனால் அடியோடு பூச்சியை ஒழித்துவிடலாம் என்று சொல்வதற்கில்லை. இந்த நாட்டைவிட விவசாயத்தில் முன்னணியில் நிற்கின்ற ஜப்பான் நாட்டில் கூட இந்த தொந்தரவு இருந்து கொண்டிருக்கிறது.

*Hobart Training School*

* 169 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to re-open the Urdu Section in the Hobart Training School in the City?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

*Barriers alongside Palar in Vaniyambadi*

* 170 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have taken any steps to construct barriers alongside Palar in Vaniyambadi to prevent damages due to floods?

THE HON. SRI P. KAKKAN : During the floods of October 1956 the right margin of the Palar river at Vaniyambadi was eroded. Emergent repair works for Rs. 9,300 were carried out immediately. Temporary groynes with brushwood edging in bamboos were provided. This has arrested further erosion and also induced silting up of the margin. Rough stone groynes have been proposed to be provided as a permanent measure to prevent floods.

*Road dam across Turinjalar*

* 171 Q.—SRI P. U. SHANMUGAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the bridge constructed near Polakonam, Tiruvannamalai taluk, over Olaiyar river has been washed away;

(b) the reasons therefor;

(c) when it was constructed and how much was spent on its construction; and

(d) whether there is any proposal to reconstruct it?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a), (b) & (c) The road dam referred to, which is over Turinjalar, was constructed in June 1955 at a cost of Rs. [illegible]. Some vents of the road dam were damaged by the unprecedented floods during the monsoon in [illegible].

[3rd March 1958

(*d*) The local panchayat proposes to repair the road dam at an estimated cost of Rs. 1,500.

SRI P. U. SHANMUGAM: இந்த பாலம் எப்போது கட்டப்படும், என்பதை அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அந்த கிராம பஞ்சாயத்து இதை 1,500 ரூபாய் செலவில் கட்டுவதற்கு தீர்மானித்திருக்கிறது.

SRI P. U. SHANMUGAM: அந்த பஞ்சாயத்துக்கு பண நிலை சரியாக இல்லை என்பதை மந்திரி அவர்கள் அறிவார்களா? ஆகவே இதை ஸ்தல அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அந்த பாலத்தை கட்ட முன்வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: என்னிடம் இப்போது இருக்கின்ற தகவலின்படி பஞ்சாயத்து இதை கட்டுவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். டிவிஷனல் இன்ஜினியர் இதை 1,500 ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டு செலவு செய்து இதை முடித்துவிடலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதுதான் இப்போதைய நிலைமை.

*Agricultural Planning and Technique*

* 172 *Q.*—SRI P. G. MANICKAM: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the project that will be taken up by the Government in pursuance of the recommendations made by the Indian Delegation to China on Agricultural Planning and Techniques; and

(*b*) the steps taken to execute them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) A statement* is placed on the table of the House.

SRI P. G. MANICKAM: சபாநாயகர் அவர்களே, ஜப்பானிய விவசாய முறையைப் பற்றியும், மேல் நாடுகளிலுள்ள விவசாய முறையைப் பற்றியும் இங்குள்ள பொது மக்களுக்கு எடுத்துரைப்பதற்கு, அதற்கான பிரசாரத்திற்கு 1958–59-ல் 115 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த பிரசாரம் பொது மக்களுக்கு எவ்வாறு செய்யப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: விவசாயிகளிடம் பல முறைகளிலும் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. துண்டுப் பிரசுரங்கள் மூலமாக எந்தெந்த வகையில் ஜப்பானிய முறையை ஏற்றுக்கொள்ளலாம் என்றும், என்னென்ன புது முறைகளை அனுஷ்டிக்கலாம் என்பதைப் பற்றியும் எடுத்துரைத்து விளக்கப்பட்டு வருகிறது.

SRI N. K. PALANISAMI: அவர்கள் செய்த முக்கியமான சிபாரிசு கூட்டுறவு விவசாயம் என்பது. சீனுவில் நிலச் சீர்திருத்தம் செய்து அதன் மூலம் நிலத்தை விவசாயிகளுக்கு விநியோகித்து, கூட்டுறவுப் பண்ணைகளை அமைத்து அதன் மூலம் வெற்றிகரமாக விவசாயத்தைச் செய்து வருகிறார்கள். இவைகளை இந்த அரசாங்கம் எந்த விதத்தில் அமுல் நடத்தப் போகிறது என்பதை கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சீனுவை அப்படியே காப்பியடிக்கவேண்டும் என்பது சிபாரிசு அல்ல, அந்த உத்தேசமும் இந்த அரசாங்கத்திற்கு கிடையாது. கூட்டுறவு பண்ணைகளை அமைக்க வேண்டுமென்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

SRI K. R. NALLASIVAM: தற்போது நம் நாட்டில் உபயோகப்படுத்தப் பட்டுவருகிற விவசாய கருவிகளுக்குப் பதிலாக ஜப்பான் நாட்டில் உபயோகப்படுத்தப்படுகிற விவசாய கருவிகளை நம் நாட்டில் உபயோகப்படுத்த வேண்டும் என்று ஏதாவது சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா?

* Printed as Appendix I on pages 152–153 infra.



3rd March 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது என்னென்ன சிபாரிசுகளில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதை விவரமாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. இயந்திரங்களைப்பற்றி இப்போது பரிசீலனையில் எடுத்துக்கொள்ளவில்லை.

SRI S. LAZAR: ஸார், இதற்கு முன்னால் சீனு, ரஷ்யா இது போன்ற நாடுகளுக்கு சென்ற தூது கோஷ்டியினர், அங்கு கூட்டுறவு முறையில் நடத்தப்படுகிற சாகுபடியானது நல்ல முறையில் நடக்கவில்லை என்று அறிக்கை விடுத்திருந்தார்களே, அது சம்பந்தமாக சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கூட்டுறவுப் பண்ணைகளினால் பாதகம் ஒன்றும் இருக்க முடியாது. இதைப்பற்றி எவ்வளவோ சிபாரிசுகள் செய்யப்படுகின்றன. கூட்டுறவு முறையை சீரிய முறையில் நடத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம்.

SRI P. G. MANICKAM: சபாநாயகர் அவர்களே, தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழிலும், கூட்டுறவு முறையிலும் விவசாயம் செய்வது போன்று ஹிந்துமத பரிபாலனத்தின் கீழும் இந்த கூட்டுறவு முறையை புகுத்தி விவசாய அபிவிருத்தியை மற்றவர்களுக்கும் காட்டுவதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பல விதங்களிலும் முயற்சி எடுத்துக்கொண்டுதான் வருகிறது. சில கூட்டுறவு பண்ணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கம் முற்பட்டிருக்கிறது. ஆனால் கூட்டுறவு பண்ணைகளை அமைப்பதில் விவசாயிகளுடைய ஒத்துழைப்பு முக்கியமாக வேண்டும். அவர்களுடைய பாராட்டுதல் முக்கியம். அது சுலபமாக கிடைப்பதில்லை.

SRI S. NAGARAJA MONIGAR: சைனு ஜப்பான் போன்ற
வெளி நாடுகளில் ஏதோ ஒரு இயக்கம் தவறிவிட்டால், நம் நாட்டில் 1-10
நாம் முயற்சி செய்து ஏன் வெற்றியடையக் கூடாது என்று கேட்கிறேன்? p.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சைனு, ஜப்பானில் அந்த இயக்கம் தவறிவிட்டதாக எனக்குத் தகவல் இல்லை. கனம் அங்கத்தினருக்கு அவ்வாறு தகவல் இருந்தால், விவரமாகச் சொன்னால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

SRI K. PONNIAN: தூது கோஷ்டியின் சிபார்சு நஞ்சை தானியங்களுக்கு மட்டுமா, அல்லது புஞ்சை தானியங்களுக்கும் சேர்த்தா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பொதுவாக, விவசாய அபிவிருத்தியைப் பற்றி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நாம் புஞ்சைக்கு எவ்வாறு எடுத்துக் கொள்வது, நஞ்சைக்கு எவ்வாறு எடுத்துக் கொள்வது என்பதை பகுத்தறிவையும், அனுபவத்தையும் உபயோகித்து அதற்குத் தகுந்தவாறு அமைத்துக் கொள்ள வேண்டும்.

SRI R. KRISHNASAMI NAIDU: சமீபத்தில் பத்திரிகைகளில் வெளி வந்த செய்திகளை கவனிக்கும்போது, இதுவரையிலும் ரஷியாவிலே கட்டாயப்படுத்தி வந்த கூட்டுறவு விவசாய முறையை, அந்தக் கட்டாயத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் செய்தியைப் பார்த்தேன். இந்த முறைக்கும் நம்முடைய முறைக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ரஷியாவைப் போல் நாமும் அப்போதைக்கப்போது அனுபவத்தைக்கொண்டு, முறையை மாற்றிக் கொள்ளவேண்டும். ஜப்பான், சைனு, ரஷியா எல்லா நாடுகளின் அனுபவத்தைக் கொண்டு நம் நாட்டிற்குத் தேவையான முறையில் நாம் அமைத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. அந்த முறையில்தான் கூட்டுறவுப் பண்ணை முறையில் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

[3rd March 1958

SRI A. GOVINDASAMY : தேசீய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத்திட்டம் இருக்கிற பகுதிகளில் ஜப்பானிய முறையை வலியுறுத்துகிற மாதிரி, அந்தத் திட்டங்கள் இல்லாத பகுதியிலும் அந்த முறையைக் கையாளவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிடுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறுதான் கவனம் செலுத்திவருகிறோம். திட்டம் இல்லாத இடங்களில் ஜப்பானிய முறையைக் கையாள அரசாங்கம் ஆதரவு அளிக்கும்.

*Prohibition of certain dailies in reading rooms*

* 173 Q.—SRI P. U. SHANMUGAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have directed the local bodies not to subscribe to certain dailies and weeklies for being placed in the reading rooms run by them;

(b) if so, the reasons therefor; and

(c) the names of those weeklies and dailies?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No, Sir.

(b) & (c) Do not arise.

SRI A. V. P. ASAITHAMBI : அரசாங்கத்திற்கு சம்பந்தப்பட்ட நகரசபை வாசகசாலைகளிலே திராவிட நாடு போன்ற திராவிட முன்னேற்றக் கழகப் பத்திரிகைகளை அனுமதிக்கக் கூடாதென்று சர்க்கார் அறிவித்திருப்பதாகவும், அதன் பேரில் ஆலந்தூர் பஞ்சாயத்து எக்ஸிகூடிவ் ஆபீஸர் அந்தமாதிரிப் பத்திரிகைகளை வாங்கக் கூடாதென்று எழுத்து மூலம் சொல்லியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்தத் தனிப்பட்ட பத்திரிகையையும் வாங்கக் கூடாதென்று சர்க்கார் எந்தவிதமான உத்திரவும் போட்டதில்லை யாது. சில நிபந்தனைகளுக்குட்பட்டு எந்தப் பத்திரிகையை வேண்டுமானாலும் வாங்கலாம். அந்த நிபந்தனைகள் யாவணவென்றால் :

(i) The books, magazines and journals to be purchased should be of general public interest and of cultural value;

(ii) The books, classified as short stories or novels, shall be those by standard authors and shall not be of doubtful taste;

(iii) Books, magazines and journals abusing communities or religions shall not be purchased;

(iv) Books, magazines and journals which are of doubtful taste or which contain indecent or undesirable pictures shall not be purchased; and

(v) Prescribed and obscene publications shall not be purchased.

SRI K. VINAYAKAM : Sir, are the Government aware that the journals enumerated by the hon. Member, Sri Asaithambi, do belong to a party and they only cater to the party needs and also they do not come under the categories described by the Hon. Minister for Finance?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am not here to give judgment. As a matter of fact, panchayats and other organizations concerned are given full liberty to take decisions but if it is



3rd March 1958]

ultimately found that they come under any of the objectionable items, then they may be surcharged or other action might be taken.

SRI S. LAZAR : ஒரு சில நகரசபைகளிலே அல்லது சில பொது ஸ்தாபனங்களிலே அந்தமாதிரிப் பத்திரிகைகளை ஒதுக்குவதற்குக் காரணம் அந்தப் பத்திரிகை " நியூஸ் பேப்பர் ஆக இருப்பதற்குப் பதிலாக " வியூஸ் பேப்பர் " ஆக இருக்கிறது என்று சொல்லுவது உண்மைதானா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : யாரும் எந்தப் பத்திரிகையையும் வாங்கவேண்டுமென்று வாங்க முடியாது. அவரவர்கள் இஷ்டப்பட்டால் தான் வாங்கலாம்.

SRI A. GOVINDASAMY : பத்திரிகைகள் தவறான செய்திகளைப் பிரசுரிக்கின்றனவா, இல்லையா என்பதை முடிவு செய்கின்ற பொறுப்பை பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு விடுவதால் கட்சிப் பிரதிக கட்சி மனப்பான்மை ஏற்படுகிறது. தவறான பத்திரிகைகளைத் தடை செய்யும் பொறுப்பு அரசாங்கத்திற்கே இருக்கவேண்டும். ஆகவே அவர்களுக்கு அதை விடுவது சரியா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே இரண்டு விஷயம் இருக்கிறது. தவறான பத்திரிகைகளை வாங்கக் கூடாது. வாங்குவதற்கும், வாங்காததற்கும் அந்த சபைக்கும், ஸ்தாபனத்திற்கும் வாய்ப்பு இருக்கிறது.

*Villages affected by the Pullambadi Scheme*

* 174 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the number of

(i) residential houses and

(ii) whole villages affected by the Pullambadi Channel Scheme;

(b) whether alternative sites are being allotted to the house owners concerned; and

(c) whether the Government propose to construct colonies for the Harijan house owners among them?

THE HON. SRI P. KAKKAN : (a) (i) At present the number of residential buildings affected is 24 huts and one tiled building. This is only tentative.

(ii) No whole village is affected.

(b) & (c) The question of allotment of alternative sites, etc. will be considered in due course, if found necessary. It does not arise at present.

SRI S. LAZAR : இந்தத் திட்டம் பூர்த்தியாகுமானால் ஒரு சில கிராமங்கள் பாதிக்கப்படுமென்று தெரியவருகிறது. அப்படிப் பாதிக்கப்படும் போது, புதிதாக காலனி அமைத்துக் கொடுக்கும்பொழுது அவர்களுக்கு முதலிடம் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : இப்படிப் புதிதாகக் கட்டிக் கொடுக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிற சமயத்தில் கூட, ஹரிஜனங்களுக்காக தனியாகக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்பது சர்க்காரின் கொள்கையா ?

THE HON. SRI P. KAKKAN : அப்படி ஒன்றும் சர்க்காரின் கொள்கை அல்ல.

*Causeway across the Tambaraparani*

* 175 *Q.*—SRI M. K. SOMASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have any proposal to construct a causeway across the Tambaraparani river between Karuppandurai and Melanatham in the Tirunelveli district; and

(*b*) if so, when the work will be taken up?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The work will be taken up as soon as the tenders and preliminaries for the work are settled.

SRI M. K. SOMASUNDARAM : தாம்பிரபரணிக்குக் குறுக்கே கட்ட இருக்கும் செய்கரையின் மதிப்புத் தொகை எவ்வளவு, மக்களிடமிருந்து உதவித் தொகை கிடைத்திருக்கிறதா, அப்படியானால் அது எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது மத்திய ரோடு நிதியிலிருந்து கொடுக்கப்படுகின்றது. மொத்தம் ரூ. 1,82,000 மத்திய ரோடு நிதியிலிருந்து கிடைக்கும். திருநெல்வேலி ஜில்லா போர்டார் அதை எடுத்து நடத்துவார்கள்.

*Repatriates from Ceylon*

* 176 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have finished the consideration of the report of the Special Officer appointed for enquiring into the conditions of the repatriates from Ceylon;

(*b*) if so, the decision taken by the Government on the report; and

(*c*) whether the Government will place a copy of the report on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

The matter is still under consideration in consultation with the Heads of Departments and other authorities concerned.

(*b*) Does not arise now.

(*c*) Yes, Sir, as soon as copies of the report are received from the Press.



* 177 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the action taken so far on the recommendation of the Special Officer appointed for enquiring into the conditions of the repatriates in this State; and

(*b*) whether the Government will place a copy of the report on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The attention of the hon. Member is invited to the answer to starred question No. 176 put by Sri N. K. Palaniswami, M.L.A.

* 178 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the recent repatriates from Ceylon have made certain representations to the Government; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Almost all the representations are covered by the various measures for rehabilitation suggested by the Special Officer which are still under examination. In the few other cases, replies have been sent giving advice as to the proper procedure to be followed.

SRI N. K. PALANISAMI : ஸ்பெஷல் ஆபீசர் ஏதோ சிபாரிசுகள் செய்திருப்பதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். அந்த சிபாரிசுகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ரிப்போர்ட் அச்சில் இருக்கிறது. மிகவும் பெரியதாக இருக்கிறது. அச்சிலிருந்து வந்ததும் அதை இங்கே சமர்ப்பிக்கிறேன்.

SRI A. VEDARATHNAM : இலங்கையிலிருந்து திரும்பி வந்தவர்கள் தொழில் நடத்துவதற்காக " பஸ் பெர்மிட் " கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே இருக்கிற சட்ட நிலைமையையும் பரிசீலிக்கவேண்டும்., அவ்வாறு கோரிக்கை இருக்கிறது. இதுவும் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

SRI M. S. SELVARAJAN : பரிசீலனை முடிவதற்கு முன்பு, ஏற்கெனவே அவர்களுக்குக் கொடுத்து வந்த வர்த்தகச் சலுகையை நிறுத்தியிருப்பதை மறுபடியும் புதுப்பிக்க முடியுமா ? இலங்கையிலிருந்து வந்தவர்கள் என்று உறுதியாகத் தெரியும் பட்சத்தில், தொழில் ஆரம்ப கட்டத்தில் குறிப்பிட்ட சில வருஷங்களுக்காவது அவர்களுக்கு சலுகை கொடுக்கப்படுமா ? யாரோ சிலர் தவறு செய்ததற்காக எல்லோரையும் தண்டிப்பது பொருத்தமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு செய்யப்பட்ட தவறு மட்டுமல்ல. இப்பொழுதும் ஒரு சிலருக்கு சலுகை அளித்தால், அந்தச் சலுகையை வேறு யாராவது துஷ்பிரயோகம் செய்வார்களா என்று கவனிக்கவேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செயயவேண்டியிருக்கிறது.

SRI S. NAGARAJA MONIGAR : இலங்கையிலிருந்து தமிழர்களை 1-2
திருப்பி அனுப்பப்படுவது தேசிய தமிழர்கள், தனித் தமிழ் நாடு p.m
என்றெல்லாம் சொல்வது போன்று அல்லது மற்றவர்கள் நம்மை இங்கு வந்து சுரண்டுவது போன்று இங்கிருந்து இலங்கைக்குச் சென்றவர்கள்

அங்கிருந்து சரண்டிக்கொண்டு இங்கு வருவதற்கு சென்றவர்களா என்பதை அறிய விரும்புகிறேன். இப்படியானால் அப்படிச் சென்றவர்கள் எத்தனை பேர்கள் ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இப்படிப்பட்ட பிரச்னையில் கனம் அங்கத்தினர் தீவிரமாக சிந்தனை செய்து கொண்டிருப்பதாகச் தெரிகிறது. இதை பற்றிய அபிப்பிராயம் அவரே வைத்துக்கொள்ளலாம்.

**SRI M. P. SUBRAMANIAM :** இது சம்பந்தமாக அகதிகளைக் காப்பாற்று வதற்கு என்று அரசாங்கம் அதிகாரிகளை நியமித்திருப்பதாக தெரிகிறது. அதைப்போலவே பக்கத்தில் சிலோனிலிருந்து வரக்கூடிய அகதி மக்கள் எத்தனை பேர்கள் நம்முடைய துணையை நாடிக்கொண்டு வருகிறார்கள் ? அப்படி வருகின்றவர்கள் எத்தனை பேர்கள் நம்மிடமிருந்து பலனை எதிர் பார்க்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இதைப்பற்றி இப்பொழுது என்னிடத்தில் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

**SRI S. B. ADITYAN :** இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கு வரக் கூடிய தமிழ் அகதிகளுக்கு இங்கு வசதி செய்து கொடுக்காத காரணமாக அவர்கள் மீண்டும் கள்ளத்தனமாக கள்ளத் தோணிகளில் இலங்கைக்குச் செல்வதால் அவர்களைச் சுட்டுக் கொல்லும்படியான நிலைமை ஏற்பட்டிருக் கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கனம் அங்கத்தினர் கேட்கக் கூடியகேள்வி எதிர் கட்சியிலிருந்து கொண்டு கேட்கக்கூடிய ரீதியில் இருக்கிறது. அப்படி எதிர் கட்சியில் இருந்துகொண்டு இப்படிப்பட்ட பெரிய புகார்களை புகாருக்காகச் சொல்வதாக இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதைப்பற்றி அவ்வளவு சொல்லாமலேயே இருக்கலாம்.

**SRI A. V. P. ASAITHAMBI :** பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்த வர்களுக்கு இந்திய சர்க்கார் தனிச்சலுகைகள் கொடுப்பதைப்போன்று இலங்கையிலிருந்து வரக்கூடிய அகதிகளுக்கும் அப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுக்க இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யுமா ? இலங்கையும் பிற நாடு என்று கருதி அங்கிருந்து வரக்கூடியவர்களுக்கும் அப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுக்க முன் வருவார்களா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இலங்கையிலிருந்து வரக் கூடியவர்களுடைய நிலைமை வேறு பாகிஸ்தானிலிருந்து வரக்கூடிய வர்களுடைய நிலைமை வேறு. அதனால் இந்தப் பிரச்னை சம்பந்தமாக அனாவசியமாக சிக்கல்களை ஏற்படுத்த வேண்டாம் என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன். இலங்கையிருந்து வரக்கூடியவர்களுக்கும் என்ன என்ன சலுகைகள் காட்ட முடியுமோ அவ்வளவையும் காட்டுவதற்கு இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது.

**SRI K. VINAYAKAM :** Sir, what is the total number of persons so repatriated from Ceylon to our country and with regard to rehabilitation, what are the steps that the Government have taken in the field of agriculture, industry, commerce and in matters of employment in Government service?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** I think I have given this information some time back about the total number of people who have come. Regard proposals for rehabilitation, that is exactly what we have been considering just now in these few minutes by questions and answers.



**SRI K. PERIANNAN :** இலங்கை இந்தியா பிரச்னையால் பெரும் பாலும் பாதிக்கப்பட்டவர்கள் பிற்பட்ட இனத்தவர்களும், தாழ்த்தப் பட்ட இனத்தவர்களும்தான்.. அங்கிருந்து இங்கு வந்தவர்களில் பெரும் பாலும் அங்கு திரும்பிப்போக முடியாமல் இருக்கிறார்கள். அதனால் அவர் களுக்கு இந்த அரசாங்கம் ஏதாகிலும் உதவி செய்ய முன் வருவார்களா ? மேலும் ஒரு குழுவை அமைத்து அதன் மூலம் அந்த அரசாங்கத்துடன் கலந்து இப்படிப்பட்டவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இது வேறு விஷயம். இதைப்பற்றி தனியாக கேள்விபோட்டால் இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன என்பதைப்பற்றி பதில் சொல்லலாம்.

**SRI A. V. P. ASAITHAMBI :** இலங்கையில் இருக்கிற தமிழர்கள் இந்தி யாவுடன் இணைய சம்மதித்திருக்கிறார்களா ? அதைப்பற்றிய பேச்சு அடிக்கடி கேட்கப்படுகிறதே, அதைப்பற்றிய தகவல் இந்த அரசாங்கத்திற்கு உண்டா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இந்தக் கேள்வியை அவர் கேட்பது சரியல்ல என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளு கிறேன். அனாவசியமாக விவகாரங்களில் தலையிட்டு சர்ச்சைக்கு எடுத்துக் கொள்வது சரியல்ல.

**MR. SPEAKER :** இலங்கையைப்பற்றி இவ்வளவு கேட்பது சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது.

**SRI N. R. THIAGARAJAN :** நான் சென்ற ஆண்டுதான் இலங்கை யிலிருந்து அகதியாக வந்திருக்கிறேன். பாகிஸ்தானிலிருந்து வந்த அகதி களைக் காப்பாற்றுவது போல் என்னையும் காப்பாற்றி அவர்களுக்குக் கொடுக்கப்படும் வசதியைப்போன்று எனக்கும் கொடுப்பார்களா என் பதை அறிய விரும்புகிறேன்.

**MR. SPEAKER :** இலங்கையிலிருந்து வந்தவர்களைப்பற்றி கேள்வி இருக்கும்போது பாகிஸ்தானைப்பற்றி கேள்வி கேட்பது சரியல்ல.

**SRI A. VEDARATHNAM :** இலங்கையிலிருந்து வந்த அகதிகள் வேலையின்றி மிகக் கஷ்டமான நிலையில் இருப்பதால் அவர்களை இங்கு தொழிற் துறையில் ஈடுபடுத்தி அவர்களுடைய கோரிக்கைகளை காலங் கடத்தாமல் ஆலோசனை செய்து விரைவில் ஓர் முடிவுக்கு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** காலம் ஆகிறது என்று சொல்வதற்கு கொஞ்சம் கூட இடம் இல்லை. எந்த எந்த துறையில் அவர்களை ஈடுபடுத்தமுடியுமோ அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதில் இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. ரிப்போர்ட் வந்தபிறகு இந்த அரசாங்கம் முடிவு செய்யும் என்பதை கனம் அங்கத்தினருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

### *Tirupathi Devasthanam High School, Vellore*

* 179 *Q.*—**SRI P. U. SHANMUGAM :** Will the Hon. the Minister for Finance be pleased to state why the teachers of the Tirupathi Devasthanam High School, Vellore, are not paid the new enhanced dearness allowance?

**THE HON. SRI C. SUBRAMANIAM :** Instructions are being issued by the Director of Public Instruction to the management of the school to pay the enhanced dearness allowance to the teachers in the school.

[3rd March 1958

*Railway lines*

* 180 *Q.*—Sri A. VEDARATHNAM: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) with reference to the answer given to a supplementary put under Question No. 158 on 20th July 1957, the names of the seventeen new railway lines recommended by the Government to the Central Government for construction and the names of the six lines recommended for being given priority; and

(*b*) whether the Central Government have accepted any of the recommendations?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) A statement* is placed on the Table of the House.

Sri M. S. SELVARAJAN: நம்முடைய ராஜ்யத்தில் அறவே ரயில் இணைப்பே இல்லாத ஒரு ஜில்லா இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த நிலையில் திருநெல்வேலியையும் கன்யாகுமரி ஜில்லாவையும் இணைக்க ஒரு ரயில் இணைப்புப்போடுவது பொருத்தமானதாக இருக்கும். அதனால் இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு இதைப் பற்றி சிபாரிசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் சொல்லுவது திருநெல்வேலி ஜில்லாவைப்பற்றி என்று நினைக்கிறேன். அங்கு ரயில் இணைப்பு இருக்கிறது. (ஒரு குரல்: கன்யாகுமாரி ஜில்லா.) இதை உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும்—இப்பொழுது ஆறு லைன்களைப் பற்றி சிபாரிசு செய்திருப்பதில் இதுவும் ஒன்று. இதை மத்திய அரசாங்கத்திற்கு நாங்கள் தெரிவித்திருக்கிறோம்.

Sri A. VEDARATHNAM: இந்த வருஷத்திய வரவு செலவு திட்டத்தில் இந்த ஆறு லைன்களில் ஏதாவது ஒன்றை முதலில் எடுத்துக்கொள்ள மத்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா? அப்படியானால் அவர்கள் எதை முன்னதாக எடுத்துக்கொள்ளுவதாக உத்தேசித்திருக்கிறார்கள்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு தெரிவித்துக்கொண்டபடி இவைகளையெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். அதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்படலாம். இந்த வருஷத்திலேயே சில லைன்களை எடுத்துக்கொள்ளுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

Sri S. PAKKIRISAMI PILLAI: சென்னையிலிருந்து திருவள்ளூர் வரையிலும், தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டு வரையிலும் மின்சார ரயில் வண்டி விடுவதாக உத்தேசத்தில் இருந்தது. அந்த திட்டம் எப்பொழுது அமுலுக்கு வரும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இதைப்பற்றி இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால் தாம்பரம் மின்சார லைனைப்போடுவதற்கு மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த வருஷத்திலேயே அந்த வேலை துவக்கப்படும்.

* Printed as Appendix II on pages 153–154 *infra*.



3rd March 1958]

Sri V. K. RAMASWAMY MUDALIYAR: Can the Hon. Minister tell us when these lines would be taken up and whether they would be taken before the Second Five-Year Plan period?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: I am not quite sure about it, but we can all hope that before the Third Plan, some of these lines would be taken up.

Sri M. D. RAMASAMI: இந்த ஆறு லைன்களுக்கும் 1957-ம் ஆண்டில் சர்வே செய்து முடிக்கப்பட்டது. அதற்கு முன்னாலேயே விருதுநகர்-மானாமதுரை லைன் சம்பந்தமாக சர்வே செய்யவேண்டும் என்று கேட்கப்பட்டது. அதனால் விருதுநகர்-மானாமதுரை லைனையும் சர்வே செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: சர்வே செய்யவேண்டும் என்பதற்காக 17 லைன்களை சிபாரிசு செய்தோம். அதில் ஆறு லைன்களை குறிப்பாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இவைகளையாவது எடுத்துகொள்ள வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறோம். அதைப்பற்றியே மேலும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம்.

Sri S. LAZAR: இப்பொழுது 17 லைன்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து எதற்கு, எந்த அடிப்படையில் ஹை ப்ரையாரிட்டி கொடுக்கப்படுகிறது. சேலம்-திருச்சி இணைப்பை ஒதுக்கிவைப்பதற்குக் காரணம் என்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: திருச்சி-சேலத்திற்கு இணைப்பு அவசியம் இல்லை. அங்கே நல்ல ரோடு வசதி இருக்கிறது. இதனால் லிஸ்டில் முதல் இடம் வேண்டாம் என்று அதை சேர்க்கவில்லை.

Sri A. GOVINDASAMY: நெய்வேலி - விருத்தாசலம் லைனுக்கு ஹை ப்ரையாரிட்டி கொடுக்கப்படாததன் காரணம் அந்த நெய்வேலி திட்டத்தை எடுத்து நடத்துவதற்கு கால தாமதம் ஆக்கவேண்டும் என்று கருதுவதா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இந்த திட்டத்தை எடுத்துக் கொள்வார்கள் என்று ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். நெய்வேலி திட்டத்தை காலதாமதம் ஆக்க வேண்டும் என்பதற்காக இந்த திட்டத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்வது சரியல்ல. அவையும் இதையும் சேர்ப்பது சரியல்ல. இதைப்பற்றி அவ்வப்போது பரிசீலனை செய்து வருகிறார்கள். அபிப்பிராய பேதம் ஒன்றும் இல்லை.

Sri A. S. SUBBARAJ: போடிநாயக்கனூரையும் கடலூரையும் ரயில் 1-30
பாதை மூலம் இணைக்கும் விஷயம் என்ன ஆயிற்று என்பதை கனம் p.m.
அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ளலாமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இது சம்பந்தமாக நில ஆர்ஜிதம் பூர்த்தியாவதற்கு வெகு காலம் பிடிக்கும். எத்தனையோ புதிய புதிய லைன்கள் போடவேண்டியதுதான். ஆனால், அதைப்பற்றியெல்லாம் இப்பொழுது எடுத்துக்கொள்வதிலே பலன் இல்லை.

Sri A. VEDARATHNAM: எந்த அடிப்படையில் இந்த "ப்ரையாரிட்டி லிஸ்டு" தயார் செய்யப்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: ஒரு பிராந்தியத்தில் இருப்புப்பாதை போடவேண்டுமென்று எடுத்துக்கொள்ளும்போது, அங்கே இருப்புப்பாதை அமைப்பதற்கு முன் இருக்கும் நிலைமையையும், அங்கே போடுவது அத்தியாவசியம்தானா என்பதையும், அங்கே அமைப்பது சாத்தியமா என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்வதோடு, ரயில்வே

[3rd March 1956

இலாகாவையும் நாம் கலந்து ஆலோசித்துத்தான் இந்த "ப்ரையாரிட்டி லிஸ்டு" தயாரித்திருக்கிறோம். எது அவசியம் என்பதையும் எதை முதலிலே எடுத்துக்கொள்ளக்கூடும் என்பதையும் பார்த்துத்தான் லிஸ்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

### *School-going children in the Coimbatore district*

* 181 *Q.*—SRI P. G. MANICKAM: Will the Hon. the Minister for Finance be pleased to state the number of children under each age-group 6–11 and 11–14 and the number admitted in schools in the Coimbatore district in 1956–57?

THE HON. SRI C. SUBRAMANIAM: Total number of children in Coimbatore district in 1956–57 :—

(*a*) Under age group 6–11 = 450,955.

(*b*) Under age group 11–4 = 236,214.

Number of children admitted in schools in 1956–57—

(*a*) Under age group 6–11 = 31,975.

(*b*) Under age group 11–14 = 8,101.

SRI P. G. MANICKAM : கோயமுத்தூர் ஜில்லாவானது ஆரம்பக் கல்வி விஷயத்தில் மிக மிக பிற்போக்கு நிலைமையிலே இருக்கிறது என்பது சர்க்கார் வெளியிட்டுள்ள வெள்ளையறிக்கையிலிருந்து தெரிகிறது. இந்த ஜில்லாவில், 500 ஜனத்தொகைக்கு மேற்பட்டுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களும், குக்கிராமங்களும் இன்னும் பள்ளிக்கூடங்கள் இல்லாமல் இருக்கின்றன. இப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் பள்ளிக்கூடங்களைத் திறந்து, அங்குள்ள மாணவர்கள் படித்து முன்னேறி வருவதற்கு வசதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் அவர்கள் மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமையைப்பற்றி பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். 500 ஜனத்தொகையுள்ள நமது ராஜ்யத்தில் உள்ள எல்லா கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் வைத்தாய்விட்டது. கோயமுத்தூர் ஜில்லா மட்டும் விலக்கு அல்ல. ஒரு காலத்தில் கோயமுத்தூர் ஜில்லாவானது ஆரம்பக் கல்வி விஷயத்தில் பிற்போக்காக இருந்தது வாஸ்தவம். ஆனால், இப்பொழுது ரொம்ப முற்போக்கு அடைந்திருக்கிறது.

### *Secondary grade teachers*

* 182 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the secondary grade teachers employed in elementary schools are allowed full-fee concession for their children; and

(*b*) if so, why such teachers are allowed only half-fee concession for their children when employed in high schools?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The children of secondary grade teachers employed in elementary schools get full-fee concession up to Form VI as such teachers enjoy comparatively a lower status in pay, etc.



3rd March 1958]

(*b*) The children of such teachers employed in secondary schools get full-fee concession up to Form III and half-fee concession from Form IV to VI. The difference in treatment has been necessitated by the policy of conferring certain benefits to low paid employees of elementary schools and encouraging teachers to take up work in elementary schools.

SRI N. K. PALANISAMI : ஒரே கிரேடிலிருக்கும் உபாத்தியாயர்களுடைய குழந்தைகளுக்கு ஒரேவிதமான கல்விச் சலுகை கொடுப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சலுகை கொடுப்பதிலே கஷ்டம் என்னவென்றால் பணக் கஷ்டம் தான். அதுவும் தவிர, செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளிகளிலே போய் வேலை செய்யும்போது, அவர்களுக்கு ஒரு தூண்டுதல் காட்டவேண்டுமென்பதற்காக அவர்களுடைய குழந்தைகளுக்கு 6-வது படிவம் வரை முழுச் சம்பளச் சலுகை கொடுக்கப்படுகிறது.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER.

MR. SPEAKER: I have to inform the House that under rule 155 (3) of the Assembly Rules, notices of cut motions should reach the Secretary, Legislature Department before 3 p.m. on Wednesday, the 5th March 1958. No exception will be made to this rule on any account.

## III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1958–59.

MR. SPEAKER : இப்பொழுது ஆறு நாட்களுக்கு பட்ஜெட் மீது பொது விவாதம் நடத்தப்படும். மூன்று நாட்களுக்கு முன்னால் கூடிய பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில், 8-ந் தேதியன்று கனம் ஸ்ரீ அண்ணாதுரை அவர்களும், கனம் ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் அவர்களும், கனம் நிதி மந்திரி அவர்களும் கலந்துகொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. பாக்கி கட்சித் தலைவர்கள் எல்லோரும் 7-ந் தேதியன்று பேசுவார்கள். மந்திரிமார்கள் அவரவர்களுக்கு எப்பொழுது இஷ்டம் இருக்கிறதோ அப்பொழுது கலந்துகொள்ளலாம். இன்றையதினம் கனம் அங்கத்தினர் ஸ்ரீ எம். ஜகன்னாதன் அவர்களை விவாதத்தை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்ரீ ஜகன்னாதன் அவர்கள் 20 நிமிஷங்கள் பேசலாம். அதற்குப் பிறகு கனம் அங்கத்தினர் ஸ்ரீ க. அன்பழகன் அவர்கள் 20 நிமிஷங்கள் பேசலாம். சாதாரணமாக கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய பிரசங்கத்தை 10 முதல் 20 நிமிஷங்களுக்குள் முடித்துவிட்டால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

SRI K. R. NALLASIVAM : பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். நிதி மந்திரி அவர்கள் உரையில் டி.டி.கே. அவர்கள் சம்பந்தமாக பேசியிருக்கிறார்கள். டி.டி. கே. அவர்கள் தகராறுக்குரிய முறையிலே தம்முடைய பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்கள். அதைப்பற்றிய எல்லா விஷயங்களையும் நாம் இந்தச் சபையில் விவாதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து, நிதி அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி பிரஸ்தாபித்திருந்தால் ஆட்சேபனையில்லை. நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கும் இது விஷயம் பற்றி நாம் விரிவாக விவாதிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படுமா என்பதை கனம் சபாநாயகர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[3rd March 1958

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். அப்பொழுது அவருடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கலாம். நிதி மந்திரி அவர்கள் தம்முடைய பட்ஜெட் உரையில் இது பற்றி சொன்னது தவறு என்று சொல்ல முடியாது.

1-35 p.m. SRI M. JAGANNATHAN : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் வரவு செலவுத் திட்டமானது அவ்வளவு வரவேற்கத்தக்க ஒரு திட்டம் அல்ல என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதற்குக் காரணம் என்னவென்றால், நம்முடைய நாட்டிலுள்ள மக்களின் நல் வாழ்க்கையை உயர்த்துகிற முறையிலே இந்தத் திட்டங்களிலே எந்தவிதமான அம்சமும் காணப்படவில்லை என்பது என்னுடைய கருத்து. நம்முடைய நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இந்தத் திட்டத்தில் எந்தவிதமான ஒரு அம்சமும் இல்லை என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிந்திருக்கிறோம்.

நம்முடைய நாட்டில் எத்தனையோ ஜீவாதாரமான பிரச்னைகள் இருக்கின்றன. உதாரணமாக, படித்தவர்கள் மத்தியிலும், பாமரர்கள் மத்தியிலும் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள், மாதத்திற்கு மாதம், வருஷத்திற்கு வருஷம் வளர்ந்து கொண்டே வருகிறது. வேலை கிடைக்காமல் மக்கள் எத்தனையோ கஷ்ட நஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள் என்பதை நாம் அன்றாடம் செய்தித் தாளில் படிக்கிறோம். நன்றாக வாசித்தவர்கள், கல்லூரிப் பட்டம் பெற்றவர்கள் எல்லாம் தகுந்த வேலை கிடைக்காத காரணத்தினால் தூக்கு போட்டுக்கொண்டு தம்முடைய வாழ்க்கையை முடித்துக்கொள்ளும் நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள், என்ற செய்தியையும் நாம் அடிக்கடி பத்திரிகை வாயிலாகப் பார்க்கிறோம்.

அதுமாத்திரமல்ல. "இண்டஸ்ட்ரியல் ஸெக்டார்" என்று சொல்லக்கூடிய தொழிற் துறையிலும், "அக்ரிகல்சரல் ஸெக்டார்" என்று சொல்லக்கூடிய விவசாயத் துறையிலும் எத்தனையோ லட்சக் கணக்கான மக்கள், கோடிக்கணக்கான மக்கள், சரியான வேலை கிடைக்காத காரணத்தால், தங்கள் வாழ்நாளை வீணாகக் கழித்துக்கொண்டிருக்கிறார்கள். கிராமந்தோறும் மக்கள் பஞ்சத்தாலும் பட்டினியாலும் வாடி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற பரிதாபகரமான நிலைமையை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

அதுமட்டுமல்ல. நம்முடைய மாநிலத்திலே உள்ள, என்.ஜி. ஓக்கள் என்று சொல்லப்படுகிற கெஜெட் பதிவில்லாத சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எல்லாம், தங்களுக்கு அதிகப்படியான ஊதியம் கொடுக்கப்படவேண்டும், இன்னும் பலவாறான சலுகைகளும் வசதிகளும் வேண்டும் என்று கிளர்ச்சி செய்துகொண்டும் உரிமைகளைக் கேட்டுக்கொண்டும் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்னையைத் தீர்ப்பதற்கும் இந்த வரவு செலவுத் திட்டத்திலே எந்தவிதமான அம்சமும் காணோம்.

"சோஷலிச பாணியில் நாங்கள் இந்த நாட்டைக் கொண்டுபோவோம்" என்று அவர்கள் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டார்களே தவிர, அந்த சமதர்மக் கொள்கையை நாட்டிலே கொண்டுவருவதற்காக ஏதாவது இந்தச் சர்க்கார் இதுவரை செய்திருக்கிறதா என்று பார்த்தால் அந்த முறையிலே அவர்கள் செய்தது குறிப்பிடத்தக்க அளவு இல்லை. மிகவும் குறைவாக இருக்கிறதென்பதை நாம் அறிவோம். சாதாரணமாக ஐரோப்பாவிலே சின்னஞ்சிறு நாடுகளைப் பார்த்தால், அங்கேயெல்லாம் அவர்கள் இம்மாதிரியான நாட்டின் ஜீவதாரமான பிரச்னைகளையெல்லாம் ஓரளவுக்குத் திருப்திகரமாகத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். அவைகள் சிறிய நாடுகளாக இருந்தபோதிலும், அவைகள் செல்வ நிலையிலே குறைவானவையாக இருந்தபோதிலும், அங்கெல்லாம் அவர்கள் இம்மாதிரியான அடிப்படைப் பிரச்னைகளைத் திருப்திகரமான முறையிலே தீர்த்துவைத்திருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் நம் மாநிலத்திலே இருப்பதுபோல் ஐரோப்பிய நாடுகளிலே இருப்பது இல்லை. அங்கிருக்கும் கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுடைய நிலைமை இங்கிருக்கும் கீழ்த்தர உத்தியோ



3rd March 1958] [Sri M. Jagannathan]

கஸ்தர்களுடைய நிலைமையை விட மிகவும் திருப்திகரமான முறையில் இருக்கிறது. அந்த நாட்டிலே சோஷலிச நல்வாழ்வை மக்களுக்கு அமைத்துக் கொடுப்பதற்குப் பலவிதமான திட்டங்களையும் அந்நாட்டு அரசாங்கங்கள் மேற்கொண்டு நடத்திவருகின்றன. உதாரணமாகப் பார்த்தால், வேலை இல்லாமல் எந்த எந்தக் குடும்பங்களிலே ஆடவர்களோ பெண்களோ இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் **unemployment dole** என்று சொல்லக்கூடிய ஒரு படி கொடுக்கப்படுகிறது. அதிகமாக வயதாகி, சர்க்காருக்கும் நாட்டுக்கும் சேவை செய்து, ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்கு **old-age pension** வசதியெல்லாம் செய்துகொடுத்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் மேல் நாடுகளிலே, சிறிய நாடுகளாக இருந்தாலும், நல்ல அளவுக்கு திருப்திகரமான முறையிலே செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன. 1-40 p.m.
ஆகவே இம்மாதிரியான வகையில் மக்களுடைய நல்வாழ்வுக்காக வரவு செலவுதிட்டம் இந்த ஆண்டில் நமக்குச் சமர்பிக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்த வரவு செலவுத் திட்டம் அவ்வளவு நன்றாக வரவேற்கத் திட்டமாக இல்லை என்றும் எடுத்துக் காட்டினேன். நம்முடைய தமிழ்நாட்டில் நீண்ட நெடுங்காலமாக ஒரு பழமொழி வழங்கிக் கொண்டு வருகிறது. குல்லாவுக்கு ஏற்ற தலையா தலைக்கேற்ற குல்லாவா என்று சொல்வார்கள். அந்த முறையில் பார்ப்போமானால் நிதி மந்திரி அவர்கள் தலைக்கேற்ற குல்லா தைக்காமல், குல்லாவுக்கு ஏற்ற தலை தான் வைத்துக்கொள்ளவேண்டுமென்ற முறையில் இந்த பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிலேயும் எப்படி பட்ஜெட் தயாரிக்கப்படவேண்டுமென்றால் அந்த நாட்டினுடைய செல்வத்தை முதலில் நிர்ணயித்துக்கொண்டு அதன் பிறகு தான் வருமானத்தை வசூலிப்பதற்கு திட்டமிடவேண்டும். ஆனால், அதே சமயத்தில் ஒரு குடும்பத்தின் பட்ஜெட் எவ்வாறு தயாரிக்கப்படவேண்டுமென்றால், முதலாவது அந்தக் குடும்பத்தின் வருவாயை நிர்ணயம் செய்து கொண்டு அந்தக் குடும்பத்தின் செல்வத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். அதுபோல் இந்த நாட்டிலே ஜீவாதாரமான அடிப்படையான பிரச்னைகளைத் திருத்தி வைப்பதற்கும் நான் சுட்டிக்காட்டியதுபோல வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும், என்.ஜி.ஓ.க்களுடைய கோரிக்கைகளைக் கவனிப்பதற்கும், வேலையில்லாமல் திண்டாடுகிறவர்களுக்கு வேலை கிடைக்கின்ற முறையில் அவர்களுக்கு "ஆல்டர்னேடிவ் ஆப் எம்பிளாய்மெண்டு அவின்யூ" என்ற முறையில் செலவினங்களைத் தயாரித்துக் கொண்டு அந்தச் செலவினங்களுக்கு எவ்வளவு கோடி ரூபாய் நம் மாநிலத்திற்குத் தேவை என்பதை முடிவு கட்டிக்கொண்டு பட்ஜட் திட்டத்தைத் தயாரிக்கவேண்டும். அப்படியின்றி குல்லாவைச் சிறிதாகச் செய்து கொண்டு அந்தச் சிறிய குல்லாவைப் பெரிய தலையில் வைத்துவிடுவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். மக்களுடைய நல்வாழ்வுக்காக அவர்கள் செய்ய வேண்டிய நல்ல காரியங்களை எல்லாம் கைவிட்டு ஒரு சிறிய பட்ஜெட்டைத் தயாரித்துவிட்டு இதை 15 லட்சம் உபரி பட்ஜட் என்று சொல்லும் அளவுக்கு காங்கிரஸ் சர்க்கார் போய்க்கொண்டிருக்கிறது. இது மிகவும் வருந்தக்கூடிய நிலைமைதான். உண்மையில் நாம் பார்க்கப்போனால் இந்த ரெவின்யூ பட்ஜட்டை 15 லட்சம் உபரி பட்ஜட்டாகக் காட்டியிருக்கிறோம் என்று தான் பெருமைபடலாம். இந்தப் 15 லட்சம் ரூபாய் எப்படி வந்தது என்று பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். உண்மையில் நமக்கு மத்திய சர்க்கார் கொடுத்திருக்கிற 30 லட்சம் மானியம் கிடைக்கவில்லையென்றால் உண்மையில் இந்தச் சர்க்கார் கொண்டுவந்திருக்கிற புதிய வரிகள் மூலம் அவர்கள் எதிர்பார்க்கின்ற 1.20 லட்சம் ரூபாய் வரவில்லையென்றால் இந்த ரெவின்யூ பட்ஜட் பற்றுக்குறை பட்ஜட்டாக இருக்கும்.

மத்திய சர்க்கார் கொடுக்கும் என்று எதிர்பார்க்கிற 30 லட்சம் ரூபாயை எதிர்பார்த்துக்கொண்டு 15 லட்சம் ரூபாய் உபரி பட்ஜட்டாக தயாரித்திருப்பது ஒருவகையில் வரவேற்கத்தக்க அம்சம்தான் என்றாலும், இது எந்த அளவுக்கும் நன்மை பயக்கக் கூடியதாய் இருக்கப்போவது இல்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். எப்படியும் வேல

அண்டு மீன்ஸ் பட்ஜட் முக்கியமானது. சாதாரணமாக ரெவின்யூ பட்ஜட்டிலே நிர்வாகத்தைச் சமாளிப்பதற்கு இந்த வருமானம் உபயோகப்படுமே தவிர வேஸ் அண்டு மீன்ஸ் பட்ஜட்டிலே முக்கியமான செலவினங்களுக்கு உபயோகப்படாது. வேஸ் அண்டு மீன்ஸ் தேடிக்கொள்வதற்கு நல்ல வருமானம் இருக்கவேண்டும். முக்கியமாக நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு, கூட்டுறவு சங்கங்களுக்கு, தொழில் துறைகளுக்கு இதுபோன்ற முக்கியமான அம்சங்களுக்கு வேஸ் அண்டு மீன்ஸ் தொகை இருக்கவேண்டும். அந்தத் தொகையை ஈட்டிக் கொள்வதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கையை எடுக்காததுதான் மிகவும் வருந்த வேண்டியதாக இருக்கிறது. வேஸ் அண்டு மீன்ஸ் பட்ஜட்டிலே ஏறக்குறைய 23·97 கோடி செலவாகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தச் செலவுக்கு அவர்கள் காட்டுகிற வருமானம் மத்திய சர்க்காரிடத்திலிருந்து அவர்கள் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. மத்திய சர்க்காரிடத்திலிருந்து அவர்கள் ஏறக்குறைய 20 கோடி ரூபாய்க்கு கடன் மூலமாக எதிர்பார்க்கிறார்கள். மூலதனச் செலவிலே விழக்கூடிய துண்டுக்காக, பற்றாக்குறைக்காக சர்க்கார் என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அறிக்கையிலிருந்து நாம் ஒரு உண்மையைத் தெரிந்துகொள்கிறோம். இந்த மூலதனச் செலவிலே ஏற்படும் பற்றாக்குறைக்காக பொதுஜனங்களிடத்திலிருந்து கடனை எழுப்பியும், சிறு சேமிப்புத் திட்டங்களினால் ஈடு செய்ய முடியும் என்பதாகவும் நினைக்கவேண்டியிருக்கிறது. நாம் உண்மையில் பத்து கோடி ரூபாய் சிறு சேமிப்புத் திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கிறோம். இந்தப் பணத்தில் நமக்கு கணிசமான அளவுக்கு மத்திய சர்க்காரிடத்திலிருந்து பங்கு கிடைத்தாலொழிய வேஸ் அண்டு மீன்ஸ் பட்ஜட்டிலே சரிவர ஈடு செய்ய முடியாமல் இருக்கிறோம்.

இப்பொழுதே மத்திய சர்க்கார் மூன்றில் இரண்டு பாகம் கொடுப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்கிறார். நம்முடைய தேவைக்கு அது போதுமான அளவிலே இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலே எவ்வளவு பணம் கிடைக்கிறதோ அவ்வளவு பணத்தையும் நம்முடைய மாநில மக்களுடைய நன்மைக்காகவே கொடுக்கப் படவேண்டும். பட்ஜட்டிலே தேவைப்படுகிற செலவினங்களுக்கு அவர்கள் பணத்தைக் கடன் மூலமாகவோ மத்திய சர்க்காரிடமிருந்து பெற்று, ஐந்தாண்டுத் திட்டத்தில் கண்டுள்ள அபிவிருத்திகளையும், "நீயூ சர்விஸெஸ்" என்று சொல்கின்ற புதிய திட்டங்களையும் அமுலுக்குக் கொண்டு வந்து அவைகளை நிறைவேற்றி மக்களுடைய வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு ஆவன செய்திருந்தால் உண்மையில் நான் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பாராட்டியிருக்க முடியும். வரவேற்றிருக்க முடியும்.

அது மாத்திரமல்ல. இந்த வரவுசெலவுத் திட்டத்திலே குறிப்பாக பின்தங்கிய சமுதாயத்திற்கும், ஹரிஜன மக்களுக்கும் ஏதாவது அவர்களுக்கு அதிகப்படியான, கணிசமான முறையிலே பணம் ஒதுக்கிவைத்திருக்கிறார்களா என்று பார்த்தால் அதுவும் திருப்திகரமாக இல்லை என்பதுதான் எனது அபிப்பிராயம். ஏனென்றால், அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிற தொகையானது பின்தங்கிய சமுதாய மக்களின் தேவைகளுக்கும், ஹரிஜன மக்களின் தேவைகளுக்கும் மிகக் குறைவான ஒரு தொகையாகத்தான் இருக்கிறது. இந்நாட்டில் வாழ்கிற லட்சக்கணக்கான பின்தங்கிய மக்களும் ஹரிஜன மக்களும் வாழ்க்கையில் பல துறையிலும் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் பொருளாதாரத்துறையில் மிகவும் பின்தங்கிக் கிடக்கிறார்கள். அவர்களின் கல்வி நிலைமை அதை விட மோசமாக இருக்கிறது. அதுமாத்திரமல்ல. அவர்கள் இந்த நாட்டில் மக்களாக வாழ்வதற்கு கூட, சாதாரண 'எலிமெண்டரி நெஸஸிட்டீஸ் ஆப் லைப் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள், வாழ்க்கையில் அடிப்படைத் தேவையைக்கூட பூர்த்தி செய்ய முடியாத நிலைமையில் மிகவும் கேவலமான நிலையில் வாழ்கிறார்கள் இந்த பின்தங்கிய மக்களும் ஹரிஜன மக்களும். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இந்த



வரவு செலவுத் திட்டத்தில் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால் அவர்கள் வழக்கம் போல் காட்டுகிற புள்ளி விவரங்கள்தான் இருக்கின்றதே தவிர, வேறு அதிகப்படியான அல்லது கணிசமான முறையில் அவர்களுக்கு என்று கூடுதல் பணம் ஒதுக்கப்படவில்லை. இதுவரையில் சர்க்கார் ஹரிஜன முன்னேற்றத்தை அல்லது பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்களின் முன்னேற்றத்தை எந்த கண்ணோட்டத்தோடு பார்த்து கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால் ஏதோ ஒரு கண்துடைப்புக்காகத்தான் இந்த வேலைகளை செய்கிறார்களே தவிர, உண்மையில் இந்த மக்களை கை தூக்கிவிட, அவர்களின் வறுமையையும் பஞ்சத்தையும் போக்குவதற்கு ஒரு நடவடிக்கையும் எடுக்காமல், அவர்களின் அறியாமையை நீக்கிவிட்டால் அவர்கள் முற்போக்கு சமூகங்களோடு சமமாக வந்துவிடுவார்களோ என்ற கெட்ட நோக்கத்தோடுதான் என்று சொல்வேன். சர்க்கார் அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு முன்வரவில்லை. இந்த அரசாங்கம் ஹரிஜன மக்களையும், பின்தங்கிய மக்களையும் உதாசீனப்படுத்திக்கொண்டுதான் வருகிறார்கள். அவர்களின் கையை தூக்கிவிட வேண்டும் அல்லது அவர்கள் நல்ல முறையில் முன்னேற வேண்டிய வழிவகைகள் வகுத்துக் கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் இருந்தால் உண்மையில் அந்தப் பிரச்னையை அனுதாபத்தோடு அணுகி அவர்கள் வாழ்க்கைத்துறையில் உயர்வு காண்பதற்கு வேண்டிய நல்ல திட்டங்களைத் தீட்டி அவர்களின் நல் வாழ்விற்காக அந்த வரவு செலவுத்திட்டத்தில் வழி செய்திருப்பார்கள். அவைகளை செய்ய இந்த சர்க்கார் தவறிவிட்டதால் நாம் இந்த வரவு செலவுத் திட்டத்தை குதூகலத்தோடும் உற்சாகத்தோடும் வரவேற்க முடியாது. அப்படி வரவேற்கத்தக்க ஒரு திட்டமாக இது இல்லை என்று சொல்லிக்கொண்டு நான் எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**Sri K. ANBAZHAGAN** : மதிப்பிற்குரிய சட்டமன்ற தலைவர் அவர்களே, 1958–59வது ஆண்டு நிதிநிலை விளக்க அறிக்கையை நிதியமைச்சர் அவர்கள் நமக்கு அளித்திருக்கிறார்கள். நிதிநிலையை விளக்குவதற்காக அறிக்கை இருக்கிறது என்பதற்காக நான் நன்றி தெரிவித்த போதிலும் நாட்டின் நிலைமையை முற்றிலும் விளக்கக்கூடிய முறையில் இந்த நிதிநிலை அறிக்கை இல்லை என்பதை நான் முதலில் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கத்தின் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர்கள், இவ்வளவுதான் நிதி கிடைக்கிறது, அதைக் கொண்டு இன்னின்ன செயல்களைத்தான் செய்ய முடியும் என்பதற்காக விளக்கம் இவ்வறிக்கையில் செம்மையாக சுட்டிக்காட்டப் பட்டிருந்தபோதிலும், இன்னின்ன செயல்களை இந்நாட்டில் நிறைவேற்ற முடியவில்லை, நிறைவேற்ற முடியாத நிலைமையில் இருக்கிறோம் என்பதை விளக்காததற்காக எனது வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை ஏறத்தாழ சென்ற ஆண்டைப் போல்தான் வெளி வந்திருக்கிறது, ஆண்டின் எண் மாத்திரம் மாறி யிருக்கிறது. அதோடு அச்சிட்ட தமிழிலும் முன்னேற்றம் காண்கிறேன். சற்று வழவழப்பான தாளில் அச்சிட்டிருக்கிறார்கள். அவளுக்கு இவள் எழுந்திருந்து உண்பாள் என்பது போல் ஒருவள் படுத்து உண்பாள், மற்றவள் எழுந்து உண்பாள். அதுபோல்தான் இருக்கிறது இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையும் போன ஆண்டு அறிக்கையும். எழுந்து உண்பாள் என்பது மாதிரி இருக்கிறது, இவ்வாண்டு நிதிநிலை அறிக்கை. வேறு ஒரு மாறுபாடும் இல்லை. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இந்நாட்டில் முன்னேற்றத்திற்காக பலவிதப் பணிகள் நிறைவேற்றப்படும் என்ற உறுதி தரவில்லை. சென்ற ஆண்டில் நம் நாட்டிலிருந்து கேரளாவிற்கு இரண்டரை லட்சம் டன் உணவுப் பொருள்கள் சென்றது என்றும், அதற்குப் பதிலாக நமக்கு வெளி நாட்டிலிருந்து ஒரு டன் உணவுப் பொருள் வந்தது என்றும், ஆக உணவு நிலைமை எப்படியோ சரிக்கட்டிப் போய்விட்டது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இந்நிலையைக் காணும் போது, வட்டார அமைப்பு முறையை ஏற்றுக்கொள்கிற கருத்துடையவன் நான் என்பதால் சொல்கிறேன், அந்த வட்டார அமைப்பில் உள்ள பிரதேசங்களில், ஒரு பகுதியின் உணவு நிலைமையை சரிக்கட்டாமல் அங்கிருந்து மற்றொரு பகுதிக்கு உணவுப் பொருள் செல்வது

தவறு. அப்படிப்பட்ட ஒரு தவறான காரியத்திற்கு நாம் இடம் அளிக்கக் கூடாது. அப்படி தமிழ்நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு உணவுப் பொருள்கள் செல்லலாம் என்பதால் பெரும்பாலும் அதனால் பாதிக்கப்படுவார்கள் தமிழ்நாட்டில் உள்ள ஏழை மக்கள்தான். பெரிய நிலச்சுவான்தார்களும், பொருள் வளம் உள்ளவர்களும் வெளி வட்டாரங்களுக்கு உணவு அனுப்புவதின் மூலம் தங்கள் பொருள் களஞ்சியத்தை நிறைவு செய்து கொள்ளமுடியும். ஆனால் ஏழை மக்கள், அப்படி அனுப்பப்படுகிற ஒவ்வொரு கவளம் காரணமாக உணவுப் பொருள்களின் விலையும் ஏறி அவர்கள் தவியாய்த் தவித்து மிகவும் அல்லல் உறுகிறார்கள். கடந்த இரண்டாண்டு காலத்தில் ஏழை மக்களின் சராசரி வாழ்க்கை புள்ளிவிவரம் எப்படி எப்படி மாறி இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்ப்போமானால் அவர்களின் நிலை நன்கு விளங்கும். **1957** ஜனவரியில் வாழ்க்கை புள்ளிவிவரம், **494.** மார்ச்சில் **470.** இது என்னுடைய தனித்திறமையால் சொல்வதல்ல, அறிக்கையில் காண்பதைச் சொல்கிறேன். போன டிசம்பரில், இது உயர்ந்து **512** அளவில் நின்றது. இப்பொழுது அது சற்று குறைந்துள்ளது என்று சொல்லும் நேரத்தில் மக்களின் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் இருக்கிறதா? மழை வளம் இருந்தபோதிலும், ஓரளவு திறமையான ஆட்சி நடந்தது என்று ஒப்புக்கொண்டாலும் இந் நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம், அவர்களின் வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக்கொள்ள இத்திட்டம் வழிவகை வகுக்கிறதா என்றால் இல்லை. இப்பொழுது இருக்கிற நியாயவிலைக் கடைகள் கூட மார்ச் 1-ம்தேதி மூடப்படப் போவதாக தெரிவிக்கப்படுகிறது. அப்படி எவ்வளவுக்கெவ்வளவு நியாயவிலைக் கடைகள் மூடப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பாதிக்கப்படுகிற மக்கள் அடித்தட்டில் உள்ள ஏழை மக்கள்தான். விலைவாசி ஏறினாலும், விரும்புகிற பொருள்கள் விரும்புகிற விலைக்கு கிடைக்காது போனாலும் சரி, அதிலும் குறிப்பாக உணவுப்பொருள்கள் கிடைக்காததால் பாதிக்கப்படுகிறவர்கள் ஏழை மக்களே. நியாயவிலைக் கடைகள் திறந்துவைத்துக் கொண்டிருந்தே நியாயவிலைக் கடைகள் தேவைப்படாமல் போகிற ஒரு நிலையைத்தான் ஒரு அரசாங்கம் எதிர்பார்க்க வேண்டுமே தவிர, இந்த ஆண்டு அவைகளை மூடி விடுகிறோம் என்று சொல்வது ஜனநாயக அரசாங்கத்தின் குறிக்கோளிற்கு ஏற்றதல்ல. ஏனெனில், மக்களின் தேவையை நிறைவு செய்ய நாங்கள் தயார், என்றுசொல்லி நியாயவிலைக் கடைகளை வேண்டிய அளவு திறந்து வைக்கவேண்டும். ஓரிடத்தில் உணவுப் பற்றாக்குறையும், இன்னொரு இடத்தில் ஏராளமான கைத்தறித் துணி உற்பத்தி செய்யப்பட்டு அது தேங்கியும் மக்கள், ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள், உழைக்கத் தயாராயிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில், ஏறத்தாழ 5 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணி இன்றையதினம் தேங்கிக்கிடக்கிறது. சுமார் 20 லட்சம் மக்கள் கைத்தறித் தொழிலை நம்பி வாழ்கிறார்கள். இப்படி 5 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி தேங்கிக் கிடப்பதன் மூலம் பாதிக்கப்படுகிறவர்கள், முதலாளிகள் அல்ல, இடையில் இருப்பவர்களும் அல்ல, கடைசியில் அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் ஏழை பாட்டாளி மக்கள்தான். ஆகவே, உணவுக்கு இருப்பதுபோல் உள்ள வட்டார அமைப்பு முறையை இதற்கும் ஏற்படுத்தி பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதையும் தடை செய்து. பம்பாய், அலகபாத், அஹமதாபாத், ஜப்பான், சைனா போன்ற இடங்களில் இருந்து துணி இறக்குமதி செய்யப்படுவதைத் தடை செய்து, நம் நாட்டில் உற்பத்தியாகிற துணிக்கு போதுமான மார்க்கட் கிடைக்காத நிலையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதை தடை செய்து, உணவிற்கு ஏற்பட்டிருக்கிற வட்டார அமைப்பு முறைபோல் ஓரளவு இதற்கும் ஒரு வட்டார அமைப்பு முறை கொண்டு வர வேண்டும். அப்படி ஒரு முறையைக் கொண்டுவர இந்த அரசாங்கம் முனைந்து நிற்க வேண்டும்.

12-00 p.m. இதற்கு முன்னால் சட்டமன்றத்தில் எடுத்துச்சொன்னது போல சில துணிகளை மட்டும் உற்பத்தி செய்வதற்கு கைத்தறிக்கு மாத்திரம் உரிமை கொடுக்கவேண்டும். ஆலைகள் அம்மாதிரி ஒதுக்கிவைக்கப்பட்ட துணிகளை உற்பத்தி செய்யக்கூடாது என்று உத்தரவு போடவேண்டும். எதிர்கட்சிகள் இதை பல தடவைகள் எடுத்துச் சொல்லியிருக்கின்றன. எதிர்கட்சிகள் மாறுபட்ட கருத்தில் இருந்தாலும்கூட இதுபோன்ற கருத்துக்களை இந்த சட்டமன்றத்தில் எதிர்கட்சிகள் எடுத்து சொல்லியிருக்கின்றன. கைத்தறிக்கென்று கரை போட்ட வேட்டியும் கலர் புடவையும், அகலமான துணியும் உற்பத்தி செய்வதற்கு உரிமை கொடுக்கவேண்டும். வரவு செலவு திட்டத்தைப்பற்றி புள்ளிவிவரங்கள் கொடுக்கப்படும்பொழுது எதிர்கட்சிகள் சொன்னதை ஆளும் கட்சி சிந்தித்திருப்பதாக உணர முடியவில்லை. ஜனநாயகத்தில் எதிர்கட்சிகள் சொன்னதற்கு விலை கொடுக்கவேண்டும், அதுவன்றி ரூபாய், அணுவுக்கு மாத்திரம் விலை கொடுப்பது என்பது மக்களுக்கு நல் வாழ்வை தேடித்தருவதாய் இருக்காது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் மாறுபட்ட கருத்துடையவர்கள் இருப்பதனால் அவர்கள் கூறக்கூடிய கருத்துக்களையும் சேர்ந்து பரிசீலித்தால்தான் ஜனநாயகம் பயனுடையதாக இருக்கும். சென்ற ஆண்டில் இந்த விவாதம் இங்கு நடைபெற்ற பொழுது இந்த சட்டசபைக்கூட்டத்தை மௌண்டு ரோடு கட்டிடத்திற்கு மாற்றவேண்டும் என்று எதிர்கட்சிகளாகிய நாங்கள் எடுத்துச் சொன்னோம். ஆட்சியாளர்கள் கேட்கவில்லை. ஆனால் அவைகளுக்கான செலவை மாத்திரம் செலவு கணக்கில் எடுத்துச் சொல்லப்பட்டது. அதே போன்றுதான் கவர்னர் பதவி இந்த நாட்டில் அவசியமில்லை. தமிழ்நாடு அதிக வரிகளை கொடுத்துவருகிறது. இந்த சூழ்நிலையில் பெருவாரியாக செலவு செய்யப்படுகின்ற இந்த கவர்னர் பதவி தேவையில்லை என்று எதிர்கட்சிகளால் எடுத்துச்சொல்லப்பட்டது. அதையும் ஆளும் கட்சியினர் எடுத்துக்கொள்ளவில்லை. அதே போன்றுதான் தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டும் என்றும் எடுத்துச்சொல்லப்பட்டது. அதையும் ஆளும்கட்சியினர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதோடு "இந்த கட்சிகள் என்ன சுண்டைக்காய் கட்சிகள்" என்று அலட்சியப்படுத்தப்பட்டது. ஆளும் கட்சியினருக்கு தமிழ்நாடு என்ற எண்ணம் ஏற்பட்டிருப்பதாக உணர முடியவில்லை. கைத்தறியை பொறுத்தவரையில் இன்று அல்ல, திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் முதல் மந்திரியாக இருந்த காலத்திலேயே காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள் உட்பட பேசியிருக்கிறார்கள், என்றாலும் இப்போது கைத்தறிக்கு பாதுகாப்பு தரப்படவில்லை. இந்த சட்டமன்றத்தில் பல தடவைகள் நீதி மன்ற விசாரணைகள் வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு தடவை நடந்த நீதி மன்ற விசாரணை கேலிக்கூத்தாக நடந்தது. அதன் பின் ஏற்கனவே ஒரு அதிகாரியை நியமித்து விசாரணை நடத்தி விட்டு நீதிமன்ற விசாரணை தேவையில்லை என்று அரசாங்கம் கூறினது. அதற்கும் பின்னர் சமீபத்தில் ஒரு நீதிமன்ற விசாரணை வேண்டும் என்று கேட்டதற்கு அதுபற்றி இதுவரை எந்தவிதமான பதிலும் தரவில்லை. இவைகளைப்பற்றி இந்த வரவுசெலவு திட்டத்தில் குறிப்பிடவும் இல்லை. நாட்டை பிரிக்கவேண்டும் என்று சொன்னதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் இதை எல்லாம் ஏன் எடுத்து சொல்லுகிறேன் என்றால் ஆளும் கட்சியினர் மாறுபட்ட கருத்துக்களை சிந்தித்து பார்க்கவில்லை என்பதை குறிப்பிடுவதற்காகத்தான். வரவு செலவு திட்டத்தில் வரவுக்கு ரோமன் நம்பரையும் செலவுக்கு அரபிக் நம்பரையும் குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர அரசாங்கத்தின் கருத்துக்களை மறுத்துச் சொன்ன கருத்துக்களை ஏற்றுக்கொள்ள ஆளும் கட்சியினர் தயாராகவில்லை. சிந்திரி முந்திரி என்று சொல்லப்பட்டதை கேலியாக எடுத்துச்சொன்னார்கள். சென்ற ஆண்டில் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் பொழுது "முந்திரிக் காடுகள் நாங்களும் வளர்க்க ஆரம்பித்திருக்கிறோம்" என்று கூறி "இது எதிர்கட்சிக்கு திருப்தியைக் கொடுக்கும்" என்று குறிப்பிட்டார்கள். சிந்திரி முந்திரி என்று நாங்கள் குறிப்பிட்டிருந்தது, சிந்திரியில் 35 கோடி ரூபாயில் தொழில்கள் வளருகிறது, அதே நேரத்தில் திருவிதாங்கூர்-கொச்சி பகுதியில் அதிகமாக கிடைக்கின்ற முந்திரி தொழில் குன்றிப்போகிறது. முந்திரி ஓட்டை எடுத்து பிளாஸ்டிக் சாமானங்கள் செய்து வருகிறார்கள். இந்த தொழில் குன்றி வருகிறது என்று எடுத்துச்சொன்னோம். நாங்கள் இவ்விதம் சொன்னதை கேலியாக எடுத்துச் சொல்லிக்கொண்டு நாங்கள் முந்திரி மரம் வளர்க்கிறோம் என்று . . .





THE HON. SRI M. BHAKTAVATSALAM : நீங்கள் சொல்லுவதற்கு முன்பே முந்திரி வளர்க்க ஆரம்பிக்கப்பட்டது.

[3rd March 1958

**Sri K. ANBAZHAGAN :** சென்ற ஆண்டில் பேசும்பொழுது கனம் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் அண்ணு அவர்களைப் பார்த்து, முந்திரி காடுகள் வளர்க்கப்படுகிறது என்று கூறி இது இவர்களுக்கு திருப்தி அளிக்கும் என்று சொன்னுர்கள். சட்டசபையில் கேள்வி நேரத்தின் போது ஜயங்கொண்டான் தொகுதி அங்கத்தினர் இந்த திட்டத்தைப்பற்றி கேட்டார்கள். அதன் பேரிலும் பதில் அளித்தார்கள். மற்ருெரு காங்கிரஸ் உறுப்பினர், முந்திரி ஒட்டை எடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்பி பிளாஸ்டிக் செய்யப்படுகிறது என்று கூறுவது தவறுதாஞ என்பதை காங்கிரஸ் கொரடா அவர்கள் கேட்டார்கள். இதைப்பற்றி விசாரிக்கலாம் என்று பதில் தரப்பட்டது. இதற்கான சரியான புள்ளிவிவரங்கள் கேட்கப்பட்ட பொழுது அதற்கு எல்லாம் சரியான புள்ளிவிவரங்கள் கொடுக்கப்படவில்லை. ஆனல் கனம் நிதி அமைச்சர் அவர்கள் "இவ்விதம் நான் 5,000 ஏக்கர் முந்திரி காடு செலவு செய்து வைத்திருக்கிறேன், அதற்கு சிந்திரி உரம் போட்டு வளர்க்கிறேன்" என்று, அமைச்சா அவர்கள் கூறுவதாக சொல்லுகிருர்கள் என்றும், அவ்விதம் கூறுவது பொய் என்றும் மதுரையில்வைத்து சவாலுக்கு அழைத்திருக்கிருர். சவாலுக்குப் பயப்படுபவன் அல்ல நான். அது தேவையில்லை என்பதுதான் என் கருத்து. என்போன்றவர்கள் பேசுகிருர்கள், இதே சட்டமன்றத்தில் பேசப்படுகிற தமிழ் நாட்டு மக்களின் சராசரி வருமானத்தைப்பற்றியும் கேரள நாட்டு மக்களின் சராசரி வருமானத்தைப்பற்றியும் குறிப்பிடுகிருர்கள். இதைப்பற்றி மாறுபட்ட கருத்துக்கள் நிபுணர்களால் பேசப்படுகிறது. இதைப்பற்றி கூறப்படும் பொழுது இதில் எது உண்மை என்று அறிய வேண்டும். அதற்குத்தான் புள்ளிவிவரங்கள் கோரப்படுகிறது. நான் கேட்ட புள்ளிவிவரத்திற்கு இது வரையில் பதில் கிடைக்கவில்லை. எதிர்கட்சிக்குத்தான் தரவில்லை என்ருலும் ஆளும் கட்சிக்கும் கொடுக்கப்படவில்லை. அது வெட்கமான காரியம் என்றுதான் நான் சொல்லுவேன். கணவன்தான் மனைவியிடம் இன்றைக்கு சமையல் என்ன என்று கேட்கவேண்டுமே தவிர, மனைவி கணவரிடம் கேட்கமாட்டாள். புள்ளிவிவரங்கள் வேண்டுமென்ருல் வேண்டிய விவரங்களை கொடுக்க வேண்டுமே தவிர அதனுல் ஜனநாயகம் குழம்பி விடுமோ என்று நினைப்பது ஜனநாயகத்திற்கு ஏற்றதல்ல என்பதை சொல்லிக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM :** புள்ளிவிவரங்கள் வேண்டுமென்ருல் கேள்விகள் நேரத்தின்போது கேட்கப்பட்டால் கொடுக்கப்படும். புள்ளிவிவரங்களை எவ்விதம் பெற்றுக்கொள்வது என்று தெரியாமல் இருந்தால் அதற்கு அரசாங்கம் பொறுப்பல்ல.

**Sri K. ANBAZHAGAN :** பெரும்பாலும் புள்ளிவிவரங்கள் கொடுப்பதெல்லாம் முற்றிலும் உண்மையானதாக இருக்கமுடியாது. இதை யாரும் மறுக்க முடியாது. நீதியினுடைய கோட்டில் நின்று பேசவேண்டுமென்ருல் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு பேசுவதற்குத்தான் எல்லோரும் விரும்புவார்கள். மாற்றுக் கட்சிகள் புள்ளிவிவரங்கள் கோரினுல் அதற்கான விவரங்களை பெற்றுக் கொள்ளுங்கள் என்று தாராளமாக பதில் கொடுக்கவேண்டும். ஆகவே இந்நாட்டிலுள்ள எத்தனையோ பிரச்னைகளை தீர்ப்பதற்கு இதில் பரிகாரம் காணவில்லை. அகதிகள் விஷயமாக இலங்கையிலிருந்து வருகிற அகதிகளையும் பாகிஸ்தானிலிருந்து வருகிற அகதிகள் இவர்களோடு சேர்ந்து குழப்ப வேண்டாம் என்று அடிக்கடி எத்தனையோ பேர்கள் தெரிவிக்கிருர்கள். அகதிகள் யாராய் இருந்தாலும் சரி அகதிகள் அத்தனைபேரையும் ஒன்ருக கருத வேண்டும். ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, வடநாட்டிலுள்ள தலைவர்கள் மனதில் இருக்கின்ற எண்ணம் இவர்கள் இலங்கையில் பிழைக்கப்போனவர்கள் தானே, அவர்கள் திரும்பி வருகிருர்கள் என்று சாதாரணமாக சொல்லிவிடலாம். எல்லோருக்கும் வயிறு ஒன்று தான். பசி வந்திட பத்தும் பறந்து போகும் என்ற பண்பாடு எல்லோருக்கும் ஒன்றுதான். இவர்கள் இலங்கைக்கு போனது இந்த நாட்டில் பிழைக்க வழியில்லாமல் தான். இவர்கள் எல்லாம் அங்கு கவர்னர்களாக போகவில்லை.



3rd March 1958] [Sri K. Anbazhagan]

மந்திரிகளாக போகவில்லை. கலக்டர்களாகப் போகவில்லை. பாடுபட்டு வேலை செய்ய சென்ருர்கள். நெடுஞ்சாலைகளில் கல் போட போனுர்கள். இன்று அவர்கள் வாழ்க்கையில் கல் விழுந்திருக்கிறது. அவர்கள் எல்லாம் கள்ள தோணி ஏறி போனுர்கள் என்ருல் அவர்களை கள்ளத்தோணி ஏறி போவதற்கு, அந்த நிலைமையை ஏற்படுத்தியதற்குள்ள பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நம் இனத்தவரை வெளியேற்றுகிருர்கள் என்ற உணர்ச்சி நமக்கிருந்தாக வேண்டும். அந்த முறையில் பார்ப்போமானுல் வடநாட்டிலுள்ள அகதிகளுக்கு ஒரு நாளைக்கு 3 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது. ஒரு ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் செலவு செய்கிருர்கள். அங்கே இவ்வளவு திட்டங்கள் இருக்கின்ற நேரத்தில் இங்குள்ள அகதிகளுக்கு நல்ல முறையில் வசதி செய்து தரப்படவில்லை . .

**Sri S. NAGARAJA MONIGAR :** Point of order, Sir. 2-10 p.m.
இந்தியா சுயராஜ்யம் பெறுவதற்காக, இந்த தென் பிராந்தியத்திலுள்ள சென்னை போன்ற பகுதிகள் எல்லாம் உள் நாட்டு சுயராஜ்யம் பெற்று சந்தோஷமாக முன்னேறுவதற்காக, வட பகுதியில் ஒரு சிலரை பலியிட்டு, அதன் விளைவாக ஏற்பட்ட ரத்த வெள்ளத்தில் கொடுமையைத் தாங்க வொண்ணுத ஒரு சிலருக்கு சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கலாம். அதையொட்டி "வடநாடு, தென்னுடு" என்று சொல்லுவது இந்தியா யூனியனுக்கு விரோதமாக இருக்காதா? அம்மாதிரி வார்த்தைகளைச் சொல்லலாமா? இந்திய யூனியன் ஒற்றுமைக்கு அது விரோதமானது அல்லவா என்று கேட்க விரும்புகிறேன்.

**Mr SPEAKER : It is not against the Constitution. Mr. Anbazhagan may continue.**

**Sri K. ANBAZHAGAN :** இந்த அளவுக்கு இலங்கை அகதிகளை கவனிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தும் அளவுக்கு நமக்குக் கடமை இருக்கிறது. அவர்கள் எல்லாம் திரும்பி வந்தபிறகு கிராமங்களுக்குச் சென்று சிறு தொழில்களை ஆரம்பித்து வாழ வழிகாணவேண்டுமென்ற கருத்து உண்மையிலேயே அவர்கள் வாழச் செய்வதற்குப் போதுமானதாக ஆகாது. அந்தந்த கிராமங்களில் சிறு தொழில்கள் செய்ய முடியாத காரணத்தால் தான் அவர்கள் வெளியே செல்ல நேர்ந்தது. அவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்க் பெரிய திட்டங்களை நிறைவேற்ற அரசாங்கம் முன்வரவேண்டும். ஏதோ "வடக்கு, தெற்கு" என்று எதிர்கட்சியிலுள்ள நாங்கள் பேசுவதாக ஆளும் கட்சியினர் வருத்தப்படுகிருர்கள். ஆனல் சிலபல நேரங்களில் இந்த "வடக்கும் தெற்கும்" அவர்களிடமிருந்து மறைமுகமாகவும், உள்ளத்திலிருந்து வெளிப்படுவதையும் நான் பார்த்திருக்கிறேன். அதற்கு நமது நிதி அமைச்சரின் பேச்சுகளிலிருந்து சான்று காட்டுவேன். முன்பு பேசிய பேச்சுக்கள் சான்ருக இருந்தாலும்கூட, இப்பொழுது இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒரு கணக்கைப் பற்றிச் சொல்லும்பொழுது குறிப்பிட்டிருக்கிருர்கள். திரு. டி. டி. கே. அவர்கள் மத்திய அரசாங்கத்தை விட்டு வெளியேறவேண்டிய நிலைமை ஏற்பட்ட காரணத்தால், நம்முடைய மாநிலத்தோடு அவர் கொண்டிருந்த தொடர்பைப் பற்றிச் சொல்லும்போது, இவர் விலகியதால் ஏற்பட்டுள்ள நஷ்டம் ஈடு செய்ய முடியாது என்று சொல்லும்போது அந்த இரங்கல் உணர்ச்சியில் நாமும் கலந்துகொள்ளலாமென்று சொன்னுலும், "அவர் நம்மிலே ஒருவர்" என்ற அருமையான ஒரு கருத்தினைக் குறிப்பிட்டிருக்கிருர் அவர். இன்றுவரையில் நம்முடைய சென்னை மாநிலத்தில் நிதி அமைச்சர் அவர். நாளை எப்படி வேண்டுமானுலும் ஆகலாம். மத்திய சர்க்காரின் நிதி அமைச்சராக இருந்த அவரை, நம்மில் ஒருவர் என்று நம்முடைய நிதி அமைச்சர் சொல்லும்போது, நாம் என்ற கருத்து, அதிலும் "தமிழன்" என்ற கருத்து, தண்ணீரை விட இரத்தம் அழுத்தமானது, இரத்தத்தை விட சதை அழுத்தமானது, அதில் மொழிப் பற்று இருக்கும் என்ற கருத்து, மொழிப்பற்றில் இனவாடை வீசுகிறது என்ற கருத்து புலப்படுகிறது. டி.டி.கே. அவர்கள் செய்த பெரும் தொண்டைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவர் நம்மில் ஒருவர் என்று சொல்லும்போது.

என்னைப் போன்றவர்கள் எல்லோரையும் சேர்ந்து நாம் எல்லோரும் தமிழர்கள், நாம் எல்லோரும் திராவிடர்கள், நாம் எல்லோரும் தென்னுட்டவர், என்று குறிப்பிடுகிறபொழுது, அதிலே தவறு எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : தமிழர் என்றே, தென்னுட்டவர் என்றே குறிப்பிடுவதில் தவறு எதுவும் இல்லை. ஆனால் நாம் பிரிந்து போகவேண்டுமென்று சொல்வதில் தான் தவறு இருக்கிறது. பிரிவினை உணர்ச்சியின் அடிப்படையில் பேசுவது தவறு என்பது என்னுடைய அபிப்பிராயம்.

**SRI K. ANBAZHAGAN** : பிரிவினை உணர்ச்சி தவறு என்று சொல்வதற்கு அமைச்சருக்கு அதிக உரிமை உண்டு. அதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் நமது திட்டங்களுக்காக நிதி கேட்கிற பொழுது பிரிவினை உணர்ச்சிதான் வருகிறது. ஐந்தாண்டுத் திட்டத்தில் பங்கு கேட்கிற பொழுது பிரிவினை உணர்ச்சிதான் வருகிறது. பெரிய திட்டங்களை எல்லாம் நிறுவும் பொழுது பிரிவினை உணர்ச்சி தான் வருகிறது. எந்த ராஜ்யத்து அமைச்சர் என்ற கேள்வி எழும்பொழுது பிரிவினை உணர்ச்சிதான் வருகிறது. அமைச்சர்களுக்குள் "போர்ட்போலியோ"வை நிர்ணயிக்கும்பொழுது பிரிவினை உணர்ச்சிதான் வருகிறது. ஏன் இதனைக் குறிப்பிடுகிறேன் என்றால், "பிரிவது என்பதும் தீதல்ல". நல்லதற்காகப் பிரிவதும் வரவேற்கத்தக்கது. கூடிவாழ முடியாத கணவன் மனைவி சேர்ந்து தான் இருக்கவேண்டு மென்று சொல்லுவது ஒரு ஆணையும் பெண்ணையும் சித்திரவதை செய்வது போலாகும் என்பதை உலகம் அறியும். எங்கோ இருப்பதாகக் கருதப்படுகிறவர்களுடன் தொடர்பு இருந்துதான் தீர வேண்டும், பிரிவினை கூடாது என்று சொல்லுவது நீதியோடு ஒட்டியது அல்ல. நான் சொல்லக்கூடிய ஒரே அழுத்தமான கருத்து என்னவென்றால், இந்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கின்ற காரணத்தாலே மட்டும் இந்த நாடு ஒன்றுபடுவதற்கு இது அடையாளமாகி விடவில்லை. நோயுள்ள நேரத்திலே மருந்து தரவேண்டுமே ஒழிய, சிற்றுண்டி தருவது சரியாகாது.

வரவுச் செலவுத் திட்டத்தில் இரண்டொரு வரி விதிப்புக்கள் இருக்கின்றன. இந்த வரிவிதிப்புக்கள் நிதிக் குறைவை ஓரளவு சரிக்கட்டுவதற்கு போட்டதாக வரவேற்றாலும்கூட, இந்த விவசாய வருமான வரி விதிப்பானது, நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும் திட்டத்தை ஒத்திப் போடுவதற்கு இதைப் பயன்படுத்துவார்களோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. கவர்னர் அவர்கள் உரையில்கூட நிலத்திற்கு உச்சவரம்பு கொண்டுவருவதற்கு முன்னதாக நிலம் அதிகமாக வாங்குவதற்கு தடை விதிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். விவசாய வருமான வரிக் கொள்கை வரவேற்கக் கூடியது தான். ஆனால் நடைமுறையில் எவ்வளவோ சிக்கல்கள் ஏற்படும். வருமானத்தைக் குத்துமதிப்பாக தீர்மானிக்கும் பொறுப்பை அதிகாரிகளிடத்தில் விட்டால், அதிகாரிகளின் ஆசாபாசங்களுக்கு உட்பட்டு, குத்துமதிப்பு தவருகப் போகக்கூடிய நிலைமை பலருக்கு ஏற்படக்கூடும். ஆகவே அவைகளை எல்லாம் தீர்மானித்து மசோதாவில் இருக்கக்கூடிய குறைகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக "தமாஷா வரி" யைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல நினைக்கிறேன். பொழுதுபோக்கு வரி என்று சொன்னார்கள். பொழுதுபோக்கு அரசாங்கங்களே சில இருக்கின்றன. பொழுதுபோக்கு என்ற சொல் கூடாது. என்னால் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. மகிழ்ச்சி, இன்பகால செலவிற்காக வரி என்ற பெயர் பொருத்தமாக இருக்கலாம்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : அதை நீங்களே சொல்லலாம்.

**SRI K. ANBAZHAGAN** : நல்ல பெயரைச் சிந்தித்து நானே சொல்வதாக இருக்கிறேன். ஏனென்றால் அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்போல் இருக்கிறது (சிரிப்பு). சினிமாக்கள், குதிரைப்பந்த



யும் தவிர மற்ற எல்லாப் பொழுதுபோக்குகள் மீதுள்ள வரி ரத்துசெய்யப் படுமென்று சொல்லப்படுகிறது. குதிரைப் பந்தயத்திற்கு பொழுதுபோக்கு வரியை அதிகரித்திருப்பதால், அரசாங்கம் குதிரைப்பந்தயத்தை நிறுத்தப் போவதில்லை என்ற கருத்துத் தொனிக்கிறது. குதிரைப் பந்தய சூதாட்டத்திற்குப் போடுகிற வரி தீமை பயக்குமே தவிர, நன்மை பயக்காது. கள் குடிப்பு, இழிவான ஒழுக்கத்திற்கான வாய்ப்புகள் இருக்கக்கூடாது என்று பார்க்கிற அரசாங்கம் இப்படிப்பட்ட சூதாட்டத்தை வளர்த்து, அதிலிருந்து 15 அல்லது 20 லட்சம் கிடைக்கிறது என்பதற்காக அதைக் கைவிடமுடியாது என்று சொல்லுவது, அவர்களின் உயர்ந்த லட்சியத்திற்கு குறைப்பாட்டை உண்டாக்குவதாகும். ஆகவே, குதிரைப் பந்தயத்தை ஒழித்தாகவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லுவேன்.

அது மட்டுமல்ல. இந்த ஆட்சிமன்றம் பொதுமக்களுடைய நலனைக் கருதுவதாக இருந்தால் அரசாங்க நிர்வாக ஊழல்களை களைந்தாகவேண்டும். இந்த ஊழல்கள் பலவகையில் வளர்கின்ற வரி இலாக்காக்கள் மூலமாகப் பெருகிக்கொண்டே இருக்கின்றன. ஊழல் வளர்ந்தால் எவ்வளவு நல்ல திட்டத்தை நிறைவேற்றினாலும் பயன் ஏற்படாது. ஓட்டைக் குவளையில் எவ்வளவுதான் மொண்டாலும் தண்ணீர் வராது. வருகின்ற தண்ணீர் வாய்க்கும் எட்டாது. அதுபோல நிர்வாக இயந்திரத்திலுள்ள குறைகளை நீக்கினால்தான் பொதுமக்களுக்கு உண்மையான பயன் கிட்டும். ஆகவே, நிர்வாக ஊழல்களை நீக்கி, முன்னேறுவதற்கான வழி வகைகளைச் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, இந்த வ[illegible]வுத் திட்டத்தின் மீதுள்ள என்னுடைய உரையை முடித்துக்[illegible].

**SRIMATHI K. KAMALANBUJA AMMAL** : [illegible] point of information, Sir. பொழுதுபோக்கு அரசாங்கம் என்பது [illegible] என்று அறிய வி[illegible]றேன்.

**MR. SPEAKER** : பதில் சொல்லவே[illegible] என்ற கட்டாயம் இ[illegible] உங்களுக்கு சந்தேகம் இருந்தால் அவர்க[illegible] அதில் சந்தேகம் இ[illegible]லாம்.

* **SRI V. K. KRISHNAMURTHY** : [illegible]யின் தலைவர் அவர்களே திருவும் தெளிவும் வேறெனினும் இவை ஒ[illegible] நிதியால் அ[illegible]கரிக்கப் பெற்றுத் திகழும் அமைச்சர் திரு. சுப்பிர[illegible] வரவு செலவு திட்டம் நம் முன்னர் நிற்கிறது. "உட[illegible]றையும், நடுநிலையும் இயல்பென்றாலும், எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"—என்ற அறமுறைபடிப் ஓர்ப்புக்கிரையாகி மெய்யைக் காண விழையின் நாடு நலமுற, நாடு சீர்பெற, நாடு மேன்மையுற, நடைமுறைக்கேற்ற நல்ல திட்டங்கள் இருத்தலால் இந்த வரவு செலவுத் திட்டத்தை வரவேற்கிறேன். ஒற்றுமை நயத்தின் ஒன்றெனத் தோன்றினும், வேற்றுமை நயத்தின் வேறே உடல் உயிர்—என்ற நிலை நிலவுமாயின் உலகம் அழிவுக்குச் செல்லும். ஆங்கிலத்தில் "**Men may construe things after their fashion clean from the purpose of the things themselves.**" என்று செகப்பிரியர் கூறியவாறு அரசியல் இயங்கத் தொடங்கின் நாடு நலிவுற்று போகுமே தவிர, நலமுறுதென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். என்றாலும் உள்ளத்தைக் கொண்டு நல்லதைச் செய்யவேண்டு மென்ற நோக்கத்தோடு சில திட்டங்கள் சிறந்து விளங்குகின்றன.

பருவமழையின் அளவையும் தான்ய விளைச்சலின் அளவையும் ஒப்பு நோக்கிப் பார்க்குங்கால், மழை குறைந்திருந்தாலும் விளைச்சல் அதிகமாக இருந்திருக்கிற புள்ளிவிவரத்தை காண்கையில், விவசாயம் வளர்ச்சி எய்தி வருவதைக் கண்டு மகிழாமலிருக்க முடியவில்லை. பைந்தமிழ்னைக்கு பன்னீராயிரம் பாமாலை புனைந்த கம்பர், அமைச்சருக்குக் கூறிய, "வினையின் வந்ததாயினும் மாற்றலாற்றும் பெற்றியர்" என்ற இலக்கணத்திற்கேற்ப இவ்வமைச்சரவை இருப்பதைப் போற்றுகிறேன். விவசாயம் வளர்ச்சியுற விதைப் பண்ணைகளை அமைத்து ஏழை விவசாயிகளுக்கு உதவ முன் வந்திருப்பது மிகவும் போற்றத்தக்கது.



61227

[Sri A. R. Subbiah Mudaliar] [3rd March 1958

போது ஒரு லட்சம் எக்கரா கூட சாகுபடி செய்ய முடியாத ஒரு நிலை இருப்பது வருந்தத்தக்கது. "இரவு பூராவும் தண்ணீர் இறைத்துக்கொள்ளுவதில் என்ன சிரமம் இருக்கிறது ?" என்று போர்டார் கேட்கிறார்கள். இப்படிக் கேட்பது, விவசாய நடைமுறைகள் தெரியாத ஒரு தன்மையைத் தான் காட்டுகிறது. அந்த நிலைமைக்கு இன்றையதினம் விவசாயிகள் மின்சார போர்டாரிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலைமையைக் கண்டு வருந்துகிறோம். அப்படியில்லாமல், இந்த நிர்வாகம் சர்க்கார் தரப்பில் இருக்குமானால், நாங்கள் மந்திரியிடம் முறையிட்டுக்கொள்ள முடியும். எங்களுக்கு இந்தக் கஷ்டம் எல்லாம் வராது Duel system இருப்பது விவசாயிகளுக்குக் கஷ்டமாக இருக்கிறது. மின்சார போர்டு ஜனநாயக ரீதியில் நடக்காமல் இருந்துகொண்டிருப்பதை நான் வருத்தத்துடன் தெரியப்படுத்துகிறேன்.

கைத்தறி விஷயமாகச் சொல்லவேண்டுமானால், "ரிபேட்" டினால் பல விதமான நன்மைகள் இருக்கின்றன. கொஞ்சம் ரிபேட் தொகை குறைக்கப்பட்டிருக்கிறது. அதனால் ஏற்படும் கஷ்டத்தைத் தவிர்க்க மந்திரி அவர்கள் உணர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மத்திய சர்க்காரிடம் முறையிட்டு, குறைந்த தொகையை மறுபடியும் பழைய அளவுக்குக் கூடுதலாக்கினால், கைத்தறித் தொழில் விருத்தி அடைவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சாலையைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், ஜில்லா போர்டின் நிதி நிலைமை ரொம்பக் குறைவாக இருப்பதால், கிராம ரஸ்தாக்கள் ரொம்பப் பாழடைந்த நிலைமையில் இருக்கின்றன. எங்கள் திருநெல்வேலி ஜில்லாவில் மார்ச 1957-ல் முடிவடைந்த வேலைகளுக்கு இன்னும் பணம் கொடுக்காத நிலை இருந்து வருகிறது. ஒதுக்கப்பட்ட தொகை செலவிடப்படாமல் கஷ்டமாக இருக்கிறது. ஜில்லா போர்டார் ஒரு வேலைக்கு டெண்டர் விட்டால் அந்த வேலையை எடுத்துக்கொள்ள ஆட்கள் வருவது கஷ்டமாக இருக்கிறது. 1957 மார்ச்சில் முடிந்த வேலைகளுக்கு 1958 மார்ச் வரை பணம் கொடுக்கப்படாவிட்டால் எப்படி கிராம ரஸ்தாக்களைச் செப்பனிடுவது, எப்படி அவைகளைப் பராமரிப்பது ? ரஸ்தாக்களை காலாகாலங்களில் பராமரிக்க முடியாததனால் அவை பாழடைந்திருக்கின்றன. ஆகையால், கிராமாந்திரப் பகுதிகளில் செலவழிக்கக் கூடுதல் தொகை ஒதுக்குவது நலம் என்றுநினைக்கிறேன். ஒதுக்கப்பட்ட நான்கு கோடி 17 லட்ச ரூபாய் போதாது. உதாரணமாக, ஸ்தல அபிவிருத்தித் திட்டம், கம்யூனிடி டெவலப்மெண்ட் திட்டத்தின் கீழ் செய்யப்படும் திட்டங்களுக்கு குறைவாக தொகை ஒதுக்கப்படுவதால் ரஸ்தாக்கள் ரொம்ப மோசமாக இருக்கின்றன. அவைகளுக்காக கூடுதல் தொகை ஒதுக்குவதற்கு வழி செய்தால் நலமாக இருக்குமென்று தெரியப்படுத்துகிறேன்.

சுகாதார, மருத்துவ நிலைமை நம் ராஜ்யத்தில் நல்ல முறையில் இருக்கிறது. வைத்திய அதிகாரிகள் கிராமாந்திரங்களுக்குப் போய் வேலைசெய்வதற்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, டாக்டர்களுக்கு தனிச் சலுகை கொடுக்கவேண்டும் என்பது நீண்ட நாளாக இருந்துவரும் ஒரு வேண்டுகோள். அது இப்பொழுது நிறைவேறியிருக்கிறது. அவர்களுக்கு தனிச் சலுகை, வீட்டு வசதி, அதிகப்படி அலவன்ஸ் முதலியன செய்து கொடுப்பதன் மூலம் டாக்டர்கள் கிராமங்களுக்குப்போக வாய்ப்பு ஏற்பட்டு கிராமாந்திரங்களிலுள்ள மக்களுக்கு சுகாதார வசதி ஏற்படுவதற்கு அனுகூலமாக இருக்கும். வைத்திய அதிகாரிகளுக்கும், ஹெல்த் ஆபீசர்களுக்கும் இத்தகைய வசதிகள் இருப்பது அவசியம் என்று நான் நினைக்கின்றேன்.

புதிய வரிகளைப்பற்றி சில வார்த்தைகள், சொல்லப் பிரியப்படுகிறேன். டீசல் எண்ணெய்க்கு வரியானது பத்து நயா பைசாவிலிருந்து 35 நயா பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது வரவேற்கக்கக்கூடியதுதான். ஆனால், விவசாயம் சம்பந்தப்பட்டமட்டில் இந்த வரியிலிருந்து விதி விலக்கு கொடுப்பது நலம் என்று நான் நினைக்கிறேன். விவசாயிகள் உற்பத்தியை



3rd March 1958] [Sri A. R. Subbiah Mudaliar]

அதிகரிக்க வேண்டும் என்று ஒரு பக்கம் சொல்லிக்கொண்டிருக்கும்போது, அதற்கு உபயோகமாக இருக்கக்கூடிய டீசல் எண்ணெய்க்கு அதிக வரி போடுவது சரியல்ல. விவசாயத்திற்கு மட்டும் இவ்வரியிலிருந்து விலக்கு அளிப்பதினால் நிர்வாகக் கஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று சர்க்கார் நினைக்கலாம். அப்படி ஒன்றும் கஷ்டம் இல்லை. விவசாயம் சம்பந்தப்பட்டமட்டில், ஒரு டீசல் இன்ஜின் ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் ஓடும், அதற்கு இவ்வளவு காலன் எண்ணெய் செலவாகும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. மழை காலத்தைக் கழித்துக்கொண்டு, கோடை காலத்தை மட்டும் கணக்கெடுத்துக்கொண்டு, இத்தனை காலன் செலவாகுமென்று மதிப்பிட்டு, பர்மிட் கொடுத்துவிட்டால் விவசாய அபிவிருத்திற்கு நன்மை செய்ததாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாய வருமான வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதையும் ஓரளவு நான் வரவேற்கிறேன். ஆனால், சென்ற வருஷம்தான் பல வரிகள் விதிக்க சட்டம் செய்யப்பட்டிருக்கும்போது, அதனால் ஏற்பட்டுள்ள நன்மை தீமைகள் என்ன, அதனால் நடைமுறையில் என்ன என்ன கஷ்டங்கள் ஏற்பட்டன, என்பதை விவசாயிகளும் நிலச்சுவாந்தார்களும் இன்னும் தெரிந்துகொள்ள முடியாத நிலைமையில் இருக்கும்போது அடுத்த சுமையை நிலச்சுவாந்தார்களுக்குவைப்பது ரொம்பவும் வருந்தத்தக்கது.

இதற்குப் பதிலாக, வேறுவிதமாக வரி போட்டிருக்கலாம். விற்பனை வரியைபோல், உற்பத்தி செய்யக்கூடியதற்கேற்ப மூட்டைக்கு இவ்வளவு என்று உற்பத்தி வரி (Production tax) போட்டிருந்தால், இவ்வளவு அசௌகரியம் ஏற்படாது. சர்க்கார் கொண்டுவர உத்தேசித்திருக்கும் வரியிலிருந்தும் அனேகர் தப்பித்துக் கொள்ள வழி செய்வார்கள். அதனால் சர்க்கார் எதிர்பார்க்கக்கூடிய நிதி கிடைக்காமல் போகலாம். ஆகவே, இதற்குப் பதிலாக உற்பத்தி வரி விதிக்கலாம். சாதாரணமாக உங்களுக்குத் தெரியும் : தஞ்சை ஜில்லாவிலிருந்து நெல் அனுப்ப வேண்டியிருந்தால், ஏதோ ராமசாமி, சுப்பையா என்று உற்பத்தி செய்கிறவர்களுடைய பெயரைப் போட்டு, அவர்கள் அனுப்பியதாக அனுப்புகிறார்கள். ஏன் இப்படிச் செய்யப்படுகிறதென்றால், உற்பத்தி செய்கின்றவர்கள் அனுப்பினால், அதற்கு வரி இல்லை. அம்மாதிரி யெல்லாம் ஏமாற்றக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, உற்பத்தி பண்ணக்கூடிய தானியங்களுக்கு வரி விதிக்கக்கூடிய நிலைமையில் வரிவிதிப்பு முறை இருந்தால் சர்க்கார் எதிர்பார்க்கக்கூடிய வரி வரும். பட்ஜெட்டில் ஒன்றரை கோடி ரூபாய் துண்டு விழுவதைச் சரிக்கட்ட இந்த வரி விதிக்கப் போவதாகத் தெரிய வருகிறது. ஆனால் பட்ஜெட்டை அலசிப் பார்க்கும்போது குறைந்த வருவாய் செலவு கூடுதலாகத் தரப்பட்டிருக்கிறது. பட்ஜெட் தயாரிப்பதற்கு வரி போட வேண்டியது அவசியமா என்ற ஐயம் ஏற்படுகிறது. உதாரணமாக 50 லட்சம் ரூபாய் ஜமீன் ஒழிப்புக்காகக் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. போன வருஷம் 10 லட்சம் ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டு திடீரென்று 50 லட்சம் அந்த இனத்தில் காட்டப்படவேண்டிய அவசியம்தான் என்னவென்று தெரியவில்லை. வரியைப் போடுவதற்காகத்தான் இந்த மாதிரியாகக் காட்டியிருக்கிறார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. மிகவும் கஷ்டமான இந்தச் சமயத்தில், உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்பதாக எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்து வரும் இந்தச் சமயத்தில், ஏற்கெனவே வரிச் சுமை அதிகமாக இருக்கும் இந்தச் சமயத்தில் எதற்காக வரியை அதிகப்படுத்த வேண்டும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். வருமான வரி 3,000 ரூபாய்க்குமேல் என்று வைத்திருப்பதை 5,000 ரூபாயாக்குவது எவ்வளவு பெரிய நலம் என்று நினைக்கிறேன். இத்துடன் சிக்கன வாழ்விலும் வரவை கூட்டலாம். சிக்கனம் செய்வதற்கு ஸ்பெஷல் ஆபீசர் நியமிக்கப்படுவதாகத் தெரிகிறது. சிக்கனத்தை உத்தியோக முறையில் குறைப்பதற்கு தயாராக மாட்டார்கள். இதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அபிஷியல், நானஅபிஷியல் என்று போட்டு இந்தக் கமிட்டியில் என்ன முடிவுவரும் என்று பயப்படுகிறேன். உதாரணமாக நான் சிக்கனத்தை எந்த முறையில் செய்வதற்கு வசதி இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட

2–40 p.m.

2-20 p.m. விவசாயத்திற்கு உதவியாக, பயிர்களுக்குப் பூச்சிகள் விழுந்தால் அதைப் போக்குவதற்கு மருந்துகள் வாங்கிக்கொடுத்தும், அந்த மருந்தை தெளிப்பதற்கு வேண்டிய கருவிகளையும் பாதி விலைக்கு வாங்கிக்கொடுத்திருப்பதுமானது மிகவும் வரவேற்க வேண்டி இருக்கிறது. இதைக் கண்டு எல்லோரும் பாராட்ட வேண்டியதுதான். அத்துடன் ஏழை விவசாயிகளுக்கு என்று மூன்று கோடி பதினைந்து லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதன் மூலம் அவர்கள் முன்னேற்றமடையவேண்டும் என்று அப்படி ஒதுக்கியிருக்கிறார்கள். இதுவும் ஒரு நல்ல முறைதான். இதற்கு நாம் அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் விவசாயிகளுக்கு என்று கொடுக்கக்கூடிய பணமானது அவர்களுக்கு காலா காலத்தில் குறித்த நேரத்தில் குறிப்பிட்ட அளவில், அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற ஒரு புகார் இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் பெரிய நீர்ப்பாசன அணைக்கட்டு திட்டங்கள் வெற்றியெய்தி பலனளித்து வருகிறதென்றியம்பவேண்டுவதில்லை. ஆறு இருந்தும் நீரில்லா வடாற்காடு மாவட்டத்திற்குச் சரியான நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அறப் பழங்காலத்தில் சோழ-பாண்டிய மன்னர்களால் அமைக்கப்பட்ட ஏரிகள்—குளங்கள்—கால்வாய்கள்—கசங்கள் மண்மேடிட்டிருக்கின்றன. இவைகளை ஆழப்படுத்த உடனடியாக அரசாங்கம் முனைந்து அதிகாரிகளனைவரும் விரைவில் இப்பணியில் ஈடுபட ஆணையிட்டாலொழிய மழை குறைந்த மாவட்டங்கள்—வளங்குறைந்த மாவட்டங்கள் மறுமலர்ச்சி எய்தி வறுமை மாய்ந்து வளமை தளிர்க்[illegible]தென்பதில் ஐயம் இல்லை. ஏழை விவசாயிகளுக்கு நல்ல லனைக்கொடுக்குமளவில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்து நடத்திக்கொடுக்கவேண்டும்.

விவசாயத்திற்கு ஏற்ற காடுகளை வளர்ப்பதற்கு அரசாங்கம் திட்டம் வகுத்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. இது மிகவும் வரவேற்கத் தக்கது. அதை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் அதன் மூலம் விவசாயம் நல்ல முறையில் அபிவிருத்தி அடைவதற்கு வாய்ப்பாக இருக்கும். வட ஆற்காடு மாவட்டத்தில் அதிகப்படியான காடுகளை வளர்க்கிறார்கள். அங்கெல்லாம் முந்திரி செடியையும் வளர்த்து வருகிறார்கள். அதையும் பெரிய அளவில் வளர்த்து வருகிறார்கள். அதனால் ஓரளவு அங்கே நல்ல முறையில் இது வளர்ச்சி பெறும் என்பதில் ஐயம் இல்லை. முந்திரி செடி வளர்ப்பு இல்லை என்று இல்லாமல் அது நல்ல முறையில் உற்பத்தியாவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அத்துடன் ஆரணி தாலுக்கா பூசிமலை குப்பத்தில் பெரிய காடுகள் இருக்கின்றன, அங்கேயும் இதை பயிர் செய்யலாம். அதற்கெல்லாம் காட்டிலாகா அதிகாரிகள் நல்ல முறையில் பணம் செலவு செய்யவேண்டும். இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் காட்டிலாகா அதிகாரிகள் நல்ல முறையில் கவனம் செலுத்தி முந்திரிச் செடிகளை வளர்த்து வந்தால் அந்த மாவட்டத்தின் வளம் நல்ல முறையில் பெருகும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சமுதாய நலத்திட்டம் நல்ல முறையில் இப்பொழுது பயன்பட்டு வருகிறது. சமூகமும் அரசாங்கமும் இரண்டறக் கலந்து நல்ல முறையில் பணத்தைச் செலவு செய்து உழைத்து வந்தால் இன்னும் அதிகப்படியான பலனை அதன் மூலம் நாம் அடையலாம். பல இடங்களில் சாலைகளை அமைத்து, மருத்துவ மன்றங்கள் அமைத்து—மனமகிழ் மன்றங்கள் அமைத்து பள்ளிக்கூடங்களைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். இப்படி இன்னும் அனேக இடங்களில் இந்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தால் நல்ல முறையில் அபிவிருத்தி அடைவதற்கு வசதியாக இருக்கும் என்பதையும் சொல்லிக் கொள்ளுகிறேன். இந்த திட்டத்தின் மூலம் பல இடங்களில் குளங்கள் கூட வெட்டப்படுகின்றன. அந்தந்த மாவட்டங்களில் இத்தகைய திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வந்து அங்குள்ளவர்களுடன் இரண்டறக் கலந்து வேலை செய்தால் சமுதாய நல திட்டம் சிறந்த முறையில்





பயன்படும். ஆகவே அந்தந்த மாவட்டங்களில் இந்த திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார திட்டம் சம்பந்தமாக குறிப்பிடும்போது நமது மாநிலத்தில் மின்சாரம் நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்து வருகிறது என்று சொல்லலாம். மின்சார இயக்கம் சிறந்த முடைறயில் இயங்கிக்கொண்டு வருகிறது. அது மின்னல் வேகத்தில் போகிறது என்று கூட சொல்லலாம். அப்படிப் போவதைக் கண்டு நாம் பெருமைப்பட வேண்டியதுதான். வட ஆற்காடு மாவட்டத்தில் அதிகாரிகளுடன் இரண்டறக் கலந்து அவர்கள் வேலை செய்து வருவதால் இந்த இயக்கம் நல்ல முறையில் பயன் அடைந்து வருகிறது என்றும் சொல்லலாம். மின்னல் வேகத்தில் நிறைவேறும் திட்டம் இது என்பதை இப்பொழுது ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியிலிருந்து நன்கு தெரிய வரும். அனைத்திந்தியாவில் மிகுந்த மின்சார வசதி தென்னகத்திலிருக்கிறது என்பது பெருமைக் குறியதே. இலக்கையும் கடக்கும் நிலையிலிருப்பது மின்சாரம். இதைப்பற்றி குறிப்பாக கூறும்போது ஆயிரம் பம்பு செட்டுகள் ஓராண்டில் தமிழ்-தெலுங்கு மாநிலங்களுக் களித்தார்கள். அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கும்போது ஒரு தாலூக்காவில் மட்டும் 800 பம்பு செட்டுகள் இவ்வாண்டு கொடுத்திருக்கிறார்கள் என்றால் இந்த மின்சார இயக்கம் எவ்வளவு தூரம் மின்னல்வேகத்தில் பயனடைந்திருக்கிறது என்பது நன்கு தெரிய வரும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வு மன்றங்கள் நிறுவி சோதனை செய்து அதன் விடையைக் கொண்டு மருந்தளிக்கும் முறை வந்தாலொழிய மருத்துவ கடமை நிறைவேறாது. மேலை நாடுகளுக்கு அனுப்பி வைக்காமலேயே இந்நாட்டிலேயே மருத்துவர்களுக்கு முழு பயிற்சி பெறும் துறை வளர்ச்சியுற்றிருப்பது பெருமையே. அதன் மூலம் மருத்துவ குறையை விருத்தி செய்யலாம். மயக்கமின்றி அறுதியிட்டு உறுதியாக குறித்த நோய் இது என்பதை அறிய ஆய்வு முறை அவசியம். இல்லையெனில் **"Medicine is based on conjecture and develops by murder"** என்ற பழமொழி நீடிக்கும். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு லெபரட்ரியை அமைத்து அங்கு வரக்கூடிய நோயாளிகளின் நோய் இன்னது என்று கண்டு பிடித்து அவர்களுக்கு ஏற்ற மருந்து கொடுக்க ஏற்பாடு செய்தால் மருத்துவம் நல்ல முறையில் இயங்கும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இல்லா விட்டால் நாம் எவ்வளவு மருத்துவத்திற்கு என்று பணம் செலவு செய்தாலும் அது பலனின்றி போய்விடும். ஆகவே, இப்பழமொழி அழிந்தொழிய ஆய்வு மன்றங்களை அங்கங்கே அமைத்து நோயாளிகளை பரிசோதித்து அதன் பிறகு மருந்துக்களைக் கொடுக்க மருத்துவர்களுக்கு விதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குறிப்பாகக் கூறும்போது அதிலும் மக்களுடைய நோயைப்பற்றிக் குறிப்பிடும்போது மக்களுடைய நோய்க்கு என்ன காரணம் என்று பார்த்தால் மக்களுக்கு போதிய சத்துப் பொருள் இல்லையாதலால் அவர்கள் நோய்க்கு இரையாகிறார்கள். டென்மார்க்கில் மக்கள் ஒரு ஆண்டிற்கு சுமார் 300 முட்டைகள் அருந்துகிறார்கள் என்றும் அதனால் அவர்கள் அங்கு நோயற்று வாழ்ந்து வருகிறார்கள் என்றும் சொல்லப் படுகிறது. அதனால் அங்குள்ளவர்கள் உடல் நலமுற்று வாழ்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. மாதிரிக்கு சில நோய்களைக்கூட அங்கு காண முடியவில்லையாம். அங்குள்ளவர்களுக்கு டி.பி. நோய் என்றால் என்ன என்று கூட தெரியாமல் இருக்கிறார்களாம். ஆதலால் தாலுக்காக்களில் கோழிப்பண்ணைகள் வைத்து அதிக முட்டைகளை உற்பத்தி செய்து மிகக் குறைந்த விலைக்கு மக்களுக்கு விற்றால் மக்கள் நலமுறுவர். மருத்துவ துறைக்குச் செய்யும் செலவும் குறையும் என்று தோன்றுகிறது. ஆகவே ஒவ்வொரு தாலூக்காவிலும் ஒரு கோழிப்பண்ணையை அமைக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்து இவ்வாண்டு ஒரு கோடி ரூபாய் உயர்த்தியிருப்பது உவகையுற வைக்கிறது. வரப்போகும் ஆண்டிற்கு சுமார் இரண்டு கோடி ரூபாய் கல்விக்கு செலவு செய்யப்போவதாக

[Sri V. K. Krishnamurthy] [3rd March 1958

சொல்லப்படுகிறது. அதைக் கண்டு நாங்கள் பாராட்டுகிறோம். அதை வரவேற்கிறோம். அதே சமயத்தில் ஏழை பிள்ளைகள் படிப்பதற்கு நல்ல வசதி செய்திருக்கிறார்கள். ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு இலவச உணவு வழங்குவதற்கு திட்டமிட்டிருப்பது பாராட்டிற் குரியது. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர், பிடித்த கல்விப் பெரும் பிணிவிடுஉம், பசிப்பிணி என்னும் பாலி என்ற புலவர் பொன்னுரைக்கு ஏற்ப அரசினர் செய்துள்ளமையை நாம் பாராட்டுகிறோம்.

(இந்த சமயத்தில் ஸ்ரீ சட்டநாத கரையாளர் தலைமை) மத்தியான உணவு கொடுப்பது மிகவும் போற்றக்கூடியது. அதைப் போலவே எல்லா குழந்தைகளுக்கும் மத்தியான உணவு கொடுக்க அரசினர் முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆரம்பப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கும்போது பத்தாவது படிவம் வரையில் படித்தவர்களை நியமித்தால் அவர்கள் நல்ல முறையில் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு இந்த வரவு செலவு திட்டத்தை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

**Sri A. R. SUBBIAH MUDALIAR** : கனம் தலைவர் அவர்களே, கனம் நிதிமந்திரி அவர்களால் கொண்டு வரப்பட்ட வரவு செலவு திட்டத்தை நான் ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்லப் பிரியப்படுகிறேன். இந்த வரவு செலவு திட்டத்தில் முக்கியமாக விவசாய அபிவிருத்திக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கனம் நிதி மந்திரி அவர்களுடைய வரவு செலவு திட்டப் பிரசங்கத்தின் 6-வது பாராவில் விவசாய அபிவிருத்திக்கு தேவையான பணம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். அதாவது விதைப் பண்ணைகளுக்கு 72 லட்சம் ரூபாயும், கடன் தந்து உதவ 60 லட்சம் ரூபாயும், கழிவு உர உற்பத்திக்கு 7 லட்ச ரூபாயும், பூச்சி மருந்துக்கு 8 லட்ச ரூபாயும், அந்த மருந்துகளை அடிப்பதற்கு கருவிகள் வாங்குவதற்கு 4 லட்சம் ரூபாயும், ஆக 151 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்
2–30 p.m. டிருந்தும், ஒதுக்கப்பட்ட தொகை குறைவாக இருக்கிறதென்பது எங்களுடைய அபிப்பிராயம். நிதி அமைச்சர் அவர் களுடைய பட்ஜெட் உரையில் 30-வது பாராவில், " . . . இதில் 2 கோடியே 39 லட்ச ரூபாய் கட்டிடங்களுக்காக " ஒதுக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையானது மூலதனச் செலவாக இருந்தாலும் வருவாய் உள்ள செலவு இனம் இல்லை. அதைக் குறைத்து இம்மாதிரி விவசாயத் திட்டங்களுக்கு பணத்தை ஒதுக்கலாம். பருவ மழை தவறிக்கொண்டு வருவதால் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுத்து பாசனம் செய்வதற்கு வசதியாக, கிணறு வெட்ட மானியம் கொடுப்பதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கலாம். **Loan-cum-subsidy scheme** ஏற்படுத்தி, அதற்குத் தொகை ஒதுக்கலாம். அத்துடன் அமோனியம் சல்பேட் போன்ற ரசாயன உரங்கள் 75 ஆயிரம் டன் தான் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. அன்னிய நாட்டுச் செலாவணித் தட்டு இருந்தபோதிலும், இந்த வகையிலும் கொஞ்சம் தொகை ஒதுக்கலாம். அத்துடன் நிர்வாகத்தை நடத்துவதில் ஒழுங்கீனங்கள் இருப்பதை நிவர்த்தி செய்தால் நேரடியாக விவசாயிகளுக்கு ஒரு நன்மை ஏற்படும். இதனால், சிப்பந்திகள் செலவு ஓரளவு ஏற்பட்டாலும் பரவாயில்லை. " மிக்ஸட் பார்மிங் " மூலமாகவும் விவசாயத்தை அபிவிருத்தி செய்யலாம். நீர்ப்பாசனம் சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல பிரியப்படுகிறேன். நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக 2 கோடி 86 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. இது நடப்பு ஆண்டிற்கும், 1958–59-ம் ஆண்டில் 1 கோடி 69 லட்ச ரூபாய் செலவு செய்யவும் ஏற்பாடாகி உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குளங்களைத் தூரெடுக்க பத்து லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறு பாசனத் திட்டங்களுக்காக 70 லட்ச ரூபாய் செலவிடப்படும் என்று தெரிகிறது. அதோடு வடி முனைக் கிணறுகள் தோண்டும் திட்டத்திற்காக ஒன்பது லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒதுக்கப்பட்டிருந்தாலும், இது மிகக் குறைந்த தொகை என்று நான் நினைக்கிறேன். பாசனங்களை விருத்தி செய்வதற்கு வழியில்லை என்ற காரணத்தால்



3rd March 1958] [Sri A. R. Subbiah Mudaliar]

இப்படி குறைந்த தொகை ஒதுக்கியிருக்கிறார்களோ என்று வருத்தத்துடன் நினைக்க வேண்டியிருக்கிறது. அநேக திட்டங்கள் " இன்வெஸ்டிகேட் " செய்யப்பட்டும், அவைகளை " அன்ப்ரொடக்டிவ் ஸ்கீம்கள் " என்று ஒதுக்கிவைத்திருக்கிறார்கள். உதாரணமாக, சங்கரன்கோவில் தாலுகாவில் கீரியாறு திட்டம் ஒரு கோடி 36 லட்ச ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட முடியும் என்று எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. 20 ஆயிரம் ரூபாய் வரை எஸ்டிமேட் தயார் செய்வதற்குச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அதை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளாததற்குக் காரணம் " அன்ப்ரொடக்டிவ் ஸ்கீம் " என்ற காரணத்தால் ஒத்தி வைத்திருப்பதாகத் தெரிகிறது. பலவிதத்தில் சர்க்காரிடம் முறையிட்டும் அதை இவ்வாண்டில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. நிதி அமைச்சர் அவர்களின் பட்ஜெட் உரையில், மூன்றாவது பாராவில், " திருநெல்வேலி மாவட்டத்தில் குளத்துப் பாசன நிலங்கள் சில நீரின்மையால் பாதிக்கப்பட்டன " என்று குறிப்பிட்டு, அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். இம்மாதிரி பாதிக்கப்பட்ட இடம் எங்களுடைய சங்கரன்கோவில் தாலுக்காவும், திருநெல்வேலி ஜில்லாவில் மற்ற சில பகுதிகளும் இருக்கின்றன. அப்படியிருக்க கீரியாறு திட்டத்தை ஏன் எடுத்துக் கொள்ளவில்லை என்பதைப்பற்றி வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அத் திட்டம் முக்கியமானதொரு திட்டம். நெடுநாளாகக் கஷ்டப்பட்டு வந்த தொகுதி. அதற்கு வழி செய்யவில்லை என்று வருத்தத்துடன் தெரியப்படுத்துகிறேன்.

நீர்ப்பாசனங்களில் ஒரு முக்கியமான வழி வகுக்கலாம். கண்மாய்களில் ஊற்றுக்கள் வெட்டி, அவைகளிலிருந்து தண்ணீரை எலெக்ட்ரிக் பம்பு செட்டுகள் மூலமாக விநியோகம் செய்யலாம். அப்படிச் செய்தால், ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கரா நிலம் வைத்திருப்பவர்களுக்கு வசதி செய்யலாம். அதன் மூலம் உணவு உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.

கால்நடை வளர்ப்பு சம்பந்தமாக நல்ல திட்டங்கள் வகுலிக்கப்பட்டு அந்தத் துறையில் முன்னேற்றம் காணப்படுகிறது. இந்த வருஷம் கூட நான்கு எக்ஸ்டன்ஷன் ஸென்டர்கள் ஏற்படுத்துவதாகத் திட்டம் இருக்கிறது. அது ரொம்ப வரவேற்கத்தகுந்தது.

அதுபோல் தேசிய விஸ்தரிப்புத் திட்டம் எங்கள் பகுதியில் விரிவாகவும் நன்றாகவும் அமுல் நடத்தப்படுகிறது. ஆனால், அதிலும் சில நிர்வாக ஊழல் இருப்பது எல்லோருக்கும் தெரியும். அதைப்பற்றி கம்யூனிடி டெவலப்மெண்ட் சம்பந்தமான மானியக் கோரிக்கை வரும்போது விரிவாகப் பேசப் பிரியப்படுகிறேன்.

மின்சாரம் சம்பந்தமாக சில வார்த்தைகள். இவ்வருஷம் ஆயிரம் கிராமங்களுக்குத்தான் மின்சாரம் கொடுக்கப்படும் என்று திட்டம் வகுக்கப்பட்டிருந்தாலும், 910 கிராமங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதிருக்கும் நிலைமையில் 60 ஆயிரம் பம்பு செட்டுகள் இருப்பதாகத் தெரியவருகிறது. இதன்மூலம் 2 லட்சம் ஏக்கராக்களுக்குப் பாசன வசதியைப் பெருக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. இரண்டு லட்சம் ஏக்கராக்களுக்கு நீர்பாசன வசதி செய்ய மின்சாரம் கொடுக்கக்கூடிய நிலைமையில் நாம் இருந்தும், அந்த வகையில் பலவிதமான சலுகை கொடுப்பதற்கு மின்சார போர்டு தயங்கிக் கொண்டிருக்கிறது. " க்ரூப் லிஸ்டம் " என்று அவர்கள் ஏதோ வைத்துக்கொண்டு, விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய நிலைமையில் அவர்களுடைய போக்கு இருக்கிறது. ஏழாவது மாதத்திலேயே மின்சார போர்டார் பதவியை ஏற்றுக்கொண்டாலும் அதற்குள்ளாக அது ஜனநாயக முறைப்படி நடக்கவில்லை என்று நான் வருத்தத்துடன் தெரியப்படுத்துகிறேன். மந்திரி அவர்களிடம் நாங்கள் முறையிடும்போது, அவர்களும் பச்சாதாபப் படுகிறார்கள். அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. காரணம் அந்தப் போர்டு தனிச் சுதந்திரத்துடன் இருக்கக்கூடியது. அதில் தலையிடுவதற்கு யாருக்குமே சுதந்திரம் இருக்காதோ என்ற பயம் இருக்கிறது. " க்ரூப் லிஸ்டம் " மூலமாக நாங்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறோம். இரண்டு லட்சம் ஏக்கரா பாசனத்திற்கு மின்சார வசதி செய்ய வேண்டுமென்று சர்க்கார் கணக்கிட்டிருக்கும்

முடியும். சங்கரன்கோயிலை எடுத்துக் கொண்டால் பிளாக் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு தாசில்தார், ஹெட் குவார்டர் டெபுடி தாசில்தார் இருக்கிறார்கள். இவர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. தென்காசியை எடுத்துக் கொண்டால் அங்கே பிளாக் ஏற்படவில்லை. அதனால் அங்காவது வேலை இருக்கும். இங்கே ஒரு இடமும் பாக்கியில்லை. பிளாக் ஆக்கிவிட்டார்கள். ரெவின்யூ வேலையைத் தவிர வேறு வேலை எதுவுமே இல்லை. அப்படியிருக்கும்போது அதிகமான சிப்பந்திகளை வைத்திருப்பதனால் செலவுதான் ஜாஸ்தியாக ஆகிறது. அதே மாதிரி யுத்த காலத்தில் ஒரு கலெக்டருக்கு இரண்டு பி.ஏ. வைக்கப்பட்டிருந்தது. இப்போது யுத்த காலம் இல்லை. எதற்காக அதுமாதிரியான வீண் செலவு. ஒரு ஜீப் இருந்தால் போதும் என்று சொல்லக்கூடிய இடங்களுக்கு நான்கு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறைந்தது இரண்டு ஜீப்புக்கு ஆகும் செலவையாவது குறைக்கலாம். இப்படி பலவகையில் சிக்கனத்திற்கு இடமிருக்கிறது என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நெல் சம்பந்தமாக ஸோனல்லிஸ்டத்தை ஒத்துக் கொள்கிறோம். வரவேற்கிறோம். ஒவ்வொரு இடத்திலும் எவ்வளவு டெபிஸிட் இருக்கிறது என்பதைக் கணக்கிட்டு அதற்கு ஏற்றபடி நெல் அனுப்பிவிட்டால் விலையேற்றம் இராது. அதோடு லாரி லாரியாக ரோடுகளில் நெல் மூட்டைப் போய்க் கொண்டிருப்பதை இரவு 7 மணிக்குமேல் ரோடில் போய் நின்று கொண்டிருந்தால் பார்க்கலாம். அதற்கு ஒரு கணக்கும் இல்லை. கேரளாவுக்கு மிக அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. ரோடு மூலமாகப் போவதுதான் மிகவும் ஜாஸ்தியாக இருக்கிறது. அதற்குக் கணக்கு எடுக்கவில்லை. நான் தென்காசிக்குப் பக்கத்தில் இருப்பதால் இதுபற்றிய விஷயம் தெரியும். அந்தப் பக்கத்திலுள்ள தானியம் வெளியே போய்விடுவதால் அங்கே தானிய விலை உயர்ந்து விடுகிறது. அதைக் கட்டுப்பாடு செய்ய ஏதாவது ஏற்பாடு செய்தால் நலம் என்று நினைக்கிறேன். "சுபீட்சத்திற்குக் குறுக்கு வழி கிடையாது. எல்லோரும் உழைக்கவேண்டும். எல்லோரும் பாடுபடவேண்டும்" என நிதி அமைச்சர் அரவர்கள் எச்சரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். செலவிடக் கூடிய பணத்தில் பாதியாவது விவசாயிகளுடைய நன்மைக்காகப் போகவேண்டும். அப்போது தான் நாட்டில் சுபீட்சம் ஏற்படும். அப்போதுதான் நாடு முன்னேறும் என்பதையும் தெரியப்படுத்திக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

12-47 p.m. **Sri V. K. KOTHANDARAMAN** : கனம் தலைவர் அவர்களே, இதுவரையில் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டில் நமது நிதி அமைச்சர் அவர்கள் சுற்றுச்சார்பில் இருக்கக்கூடிய சூழ்நிலைகளை அனுசரித்து நாம் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு பட்ஜெட்டைத் திருப்திகரமாக தயாரிக்கவில்லையென்று சொன்னாலும்கூட ஒரு சிறிய மாறுதலோடு கொண்டு வந்திருக்கிறார். அது நாம் வரவேற்கக் கூடிய விஷயம் தான். அதே நேரத்தில் அதில் உள்ள குறைபாடுகளையும் நாம் அவசியம் கண்டு எடுத்துச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட இடங்களைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் பருவ மழை தப்பிவிட்டது. ஐந்து முதல் 50 சத விகிதம் வரை குறைந்து விட்டது. 1956-ம் ஆண்டிலே 377 ஆக இருந்த விலைவாசிப் புள்ளிவிவரம் இப்போது 512 ஆக உயர்ந்திருக்கிறது. அப்படி இருந்தாலும் நம்முடைய ராஜ்யத்திற்கு எந்த அளவு உணவுப் பொருள் தேவையோ அந்த அளவுக்கு உற்பத்தி செய்யப்படுகிறதாகச் சொல்கிறார்கள். ஆனால் எந்த அளவுக்கு விலைவாசி உயர்ந்திருக்கிறதோ அந்த அளவுக்கு தொழிலாளர்களுடைய விவசாயிகளுடைய . ஊதியம் உயரவில்லை. வாழ்க்கைப் புள்ளிவிவரம் உயர்ந்திருக்கிறது.

(கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் : உணவுப் பொருள்களை பொறுத்த அளவில்தான் அந்தப் புள்ளி விவரம்.) அப்படியே எல்லாப் பொருள்களுடைய விலைவாசிகள் உயர்ந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறோம். அந்த அளவுக்கு வாழ்க்கை ஊதியம் தொழிலாளர்களுக்கோ,



இதர சிப்பந்திகளுக்கோ உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். உணவுப் பொருள்கள் அதிகப் படுத்தப்பட்டிருக்கிறது, கூடுதல் உற்பத்தி செய்திருக்கிறோம் என்று சொன்னாலும் 2-50 p.m.
உணவுப் பொருள்களின் விலைவாசி குறைந்திருக்கிறதா என்று பார்ப்போமேயானால் விலைவாசி உயர்ந்து கொண்டுதான் போகிறதே ஒழிய குறையக் காணவில்லை. அப்படி விலைவாசிகள் உயர்ந்து கொண்டு போகக்கூடிய நேரத்தில் நியாயவிலைக்கடைகள் எல்லாம் மூடப்படுகிறது. குறைந்த விலை இருக்கிற நேரத்தில் இருந்த நியாய விலைக் கடைகளில் பாதிகூட இப்பொழுது கிடையாது. ஏன் 25 சத விகிதம்கூட கிடையாது. பூராவும் மூடக்கூடிய அளவிற்குத்தான் இன்றைய நிலை இருக்கிறது என்றுகூட சொல்லலாம். விலைவாசி குறைவாயிருக்கும்போதுதான் நியாயவிலைக் கடைகள் திறப்போமே தவிர விலைவாசி அதிகமாக இருக்கிறபோது நியாயவிலைக் கடைகள் திறக்க நாங்கள் தயாராகவில்லை என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது என்றுதான் நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. அடுத்தபடி, விதைப் பண்ணைகள். இன்றைய தினம் ஓரளவிற்கு விதைப் பண்ணைகள் தாலுகா வாரியாக ஏற்படுத்தி வருவதை நான் பாராட்டுகிறேன். அதற்கேற்றவாறு உரம் விவசாயத்திற்கு தேவை என்பதால உரம் உற்பத்தியை அதிகப்படுத்த ஒன்றுமே செய்யக் காணோம். ஆகவே, உர உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். அடுத்தபடி, நீர்பாசனம். இன்றைக்கு நம் ராஜ்யத்தில் எத்தனை ஆறுகள் இருக்கிறதோ, இன்னும் எங்கெங்கெல்லாம் இயற்கை வளம் இருக்கிறதோ அங்கெல்லாம் கட்டி முடித்து விட்டோம். இனி இயற்கை வளம் இல்லை. ஆகவே, மேலும் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக வட ஆற்காடு ஜில்லாவில் 1931-ம் ஆண்டு முதல், வெள்ளையன் 1931-ம் ஆண்டிலே மோர்தானா டாம் கட்ட திட்டம் போடப்பட்டது. 1954-ல் இன்று நமது முதல் அமைச்சராய் இருக்கக்கூடிய காமராஜ் நாடார் அவர்கள் குடியாத்தம் தொகுதியில் தேர்தலுக்கு நின்றபோது, அங்கு சீப் என்ஜினியர் முதற்கொண்டு புடை சூழ அங்கு வந்து அதை பார்த்து விட்டு 75 லட்சம் ரூபாய்க்கு ஒரு எஸ்டிமேட் போடப்பட்டது. அதற்குப் பிறகு 30 லட்சமாகவோ 40 லட்சமாகவோ குறைக்கப்பட்டது என்று கேள்விப்படுகிறேன். இப்பொழுதும் அது நிறைவேற்றப்படவில்லை. இப்பொழுது கட்டப்பட்டிருக்கக் கூடிய எல்லா நீர்பாசனங்களை விட இயற்கை வளம் பொருந்திய ஒரு இடமாகும் அது. ஆகவே, அந்த இடத்தில் இது கட்டப் படவில்லை என்றால் அதற்குக் காரணமென்ன? அங்கு கம்யூனிஸ்டு வெற்றி பெற்று விட்டார் என்பதா காரணம்? அதற்காக கட்டக் கூடாதா? அதற்காக வேண்டித்தான் அது கட்டப்படவில்லை என்று நீங்கள் ஒப்புக்கொண்டாலும் அதை வரவேற்கிறேன். இயற்கை வளம் இல்லாததால் அது கட்டப் படவில்லை என்று சொன்னால் அதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. பாலாற்றில் தண்ணீர் தேக்கம் கட்ட வேண்டுமென்று பல ஆண்டுக்காலமாக கேட்டு வரப்படுகிறது. அதில் எந்தளவு கவனம் செலுத்தப்படுகிறது? ஆகவே, அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். இன்று பப்ளிக் செக்டரில், நெய்வேலி திட்டத்தைப் பற்றி இதில் கூறப்பட்டிருக்கிறது. அது, விரைவில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவு பெறுவதற்குள்ளாக அது முடிவு பெறும் என்று கூறப்பட்டிருக்கிறது. சந்தோஷம். நெய்வேலித் திட்டத்திற்காக வேண்டி பல கிராமங்களில் இருக்கக்கூடியவர்களின் வீடுகளையும், அவர்களின் நிலங்களையும் அந்தத் திட்டத்திற்காக வேண்டி எடுத்துக் கொள்கிறார்கள் சர்க்கார். அப்படி எடுக்கக்கூடிய நேரத்தில் அதற்குள்ள கிரயத்தை கொடுத்துவிட்டு அவைகளை எடுக்க வேண்டும். அதற்குப் பதிலாக அவர்களுக்கு, ஏக்கர் ஒன்றிற்கு 250 ரூபாய் என்று மதிப்பிட்டு அவர்களுக்கு அவைகளை காலி செய்யும்படி நோட்டீஸ் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவர்களும் பதில் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் காலி செய்ய முடியாது. ஏக்கருக்கு 250 ரூபாய் என்று சொல்வது சரியல்ல. அது மட்டுமல்ல. அதே பிரதேசத்தில், சமீபத்தில் இச் சட்டசபையில் இருக்கக்கூடிய அங்கத்தினர் வாகீஸம் பிள்ளை, எம்.எல்.ஏ. அவர்கள் ஏக்கர் ஒன்றுக்கு 5,500

ரூபாய்க்கும், பாரி அண்ட் கம்பெனியார் செண்ட்க்கு 100 ரூபாய் என்று ஏக்கர் ஒன்றுக்கு 10,000 என்றும், என்.எஸ்.கே. நாடார் ஏக்கர் ஒன்றுக்கு 10,000 வீதமும் வாங்கியிருப்பதாக கேள்விப்படுகிறோம்.

**Sri G. VAGHEESAM PILLAI :** ஏக்கருக்கு 5,500 ரூபாய் வாங்கி இருப்பதாகச் சொல்லுவது உண்மையா ?

**Sri V. K. KOTHANDARAMAN :** சப் ரிஜிஸ்தர் ஆபீஸில் சென்று பார்த்தால் தெரியும். இல்லாவிட்டால் 2,000-க்கோ 3,000-க்கோ வாங்கியிருப்பதாகச் சொல்லுங்களேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** கல்லைத் தூக்கிப் போட்டு விட்டு இல்லையென்றால் ? நீங்கள் சொல்லுவது தவறு என்று அவர்கள் சொல்கிறார்கள். இது, கிராஸ் எக்ஸாமினேஷனா ?

**Sri V. K. KOTHANDARAMAN :** நீங்கள் எத்தனையோ கல்களைத் தூக்கிப் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள். அதற்குப் பதில் இல்லை. அப்படி வாங்கியிருப்பதாக நாங்கள் கேள்விப்படுகிறோம். சப் ரெஜிஸ்தரார் ஆபீஸில் போய் வெரிபை செய்தால் தெரியும். ஏக்கர் ஒன்றுக்கு 250 ரூபாய் தருகிறோம். காலி செய்து விடுங்கள் என்று சொல்லி, அவர்கள் காலி செய்யாததால் புல்டோஸர்களைக் கொண்டு கட்டிடங்களை இடித்துவிட முற்பட்டிருக்கிறார்கள். அதே போல் அங்குள்ள தொழிற்சங்கத்திற்கும் நோட்டீஸ் கொடுக்காமல் 5 நிமிஷத்தில் அதைக் காலி செய்துவிட்டு வெளியேற வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஐந்து நிமிஷத்தில் எப்படி வெளியேற முடியும் என்று சொன்னபோது அந்தத் தொழிற்சங்கக் கட்டிடத்தின் கதவை உடைத்து அங்குள்ள ரிக்கார்டுகளை எடுத்து வீதியில் போட்டுவிட்டு அந்தக் கட்டிடத்தை இடித்து நிரவியிருக்கிறது போன 26-ம் தேதி என்பதை நான் இச்சந்தர்ப்பத்தில் கனம் அமைச்சர் அவர்களின் ஞாபகத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடுத்தபடி சிறு தொழில்களுக்காக வேண்டி, பண உதவி செய்யப்படுகிறது என்று இருக்கிறது. சந்தோஷம். அதையும் நான் வரவேற்கிறேன். ஆனால் இந்த ராஜ்யத்தில் இருக்கக் கூடிய ஒரு மைனாரிட்டி இனத்தைச் சேர்ந்த முஸ்லீம் சகோதரர்கள் நடத்தக் கூடிய தோல் ஷாப் டானரிக்காக அவர்கள் கடன் கேட்டிருக்கிறார்கள். ஆனால் இது வரையில் கொடுக்கப்படவில்லை. அக்காரணத்தால், பம்பாய் ராஜ்யத்தில் இருந்து அவர்களுக்கு லெட்டர் எழுதியிருக்கிறார்கள். நீங்கள் அந்தத் தொழிலை இங்கு ஆரம்பித்தால் 50 சத விகிதம் சப்ஸிடி, இலவசமாகக் கொடுக்கிறோம் என்று எழுதியிருக்கிறார்கள். பணத்திற்கு ஆசைப்பட்டு இவர்கள் பம்பாய்க்குப் போனால் இங்குள்ள நிலைமை என்ன ? வேலை இல்லாத் திண்டாட்டம் இங்கு மேலும் தலை விரித்தாடும் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். சிறு தொழில்களுக்கும், மைனாரிடிகளுக்கும் பாதுகாப்பு கொடுப்போம் என்று கவர்னர் உரையிலும் சொல்லப்பட்டது. அடுத்தபடி, கால்நடை செல்வம், அதற்காக வேண்டி பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரவேற்கிறேன். கால்நடைச் செல்வத்தை எதற்காக வளர்க்கிறோம். மைசூரில் இன்று மாடுகளைக் கொலை செய்வதில்லை. ஆகையால் இந்த ராஜ்யத்தில் ஆயிரக் கணக்கில் மாடுகளைக் கொலை செய்து இறைச்சியாக வட ஆற்காடு ஜில்லா ஜோலார்பேட்டை ரெயில்வே ஸ்டேஷனில் தினந்தோறும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதைத் தடுக்காமல் கால்நடைச் செல்வத்தை அபிவிருத்தி செய்கிறோம், அதற்காக நாங்கள் ணம் ஒதுக்குகிறோம் என்று சொன்னால், அவைகளை வளர்த்து சாப்பிடுவதற்காகவா செய்கிறோம். அதை நாம் யோசிக்க வேண்டி இருக்கிறது. ஆகவே அப்படி கொலை செய்து ஏற்றுமதி செய்வதை தடை செய்ய வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக காடு அபிவிருத்தி. காடு அபிவிருத்தி சம்பந்தமாக, முந்திரி, சௌக்கு, தீக்குச்சி, வாட்டில் போன்றவைகளை அபிவிருத்தி செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளது. அதோடுகூட இந்த ராஜ்யத்தில் லட்சக் கணக்கில் பீடி தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.



அந்த பீடி தொழிலுக்கு அவசியமானது, பீடி இலை. அந்த பீடி இலையை இன்றையதினம் ஹைதராபாத்திலிருந்தும், ஆந்திராவிலும் இருந்துதான் வரவழைக்கப்படுகிறது. ஆகவே நாம் பீடி இலை உற்பத்தி செய்வதில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். அடுத்தபடி மின்சாரம். எனக்கு முன் பேசிய என் ஜில்லா அங்கத்தினர்கூட சொன்னார். இதற்கு முன் ஒரு மாகாணத்தில்கூட 800 பம்ப் செட்டுகள் இருந்தது கிடையாது. இப்பொழுது ஒரு தாலுகாவில் 800 வந்துவிட்டது என்றார். காவேரி ஆறு போன்ற மற்ற தண்ணீர் வசதி இருக்கின்ற இடங்களில் பம்ப் ஸெட்கள் போட வேண்டிய அவசியம் இல்லை. தண்ணீர் வசதி இல்லாத மோசமான பிரதேசங்களில்தான், வீட்டை அடகு வைத்து நிலத்தை அடகு வைத்து, பம்ப் ஸெட் போட்டிருக்கிறார்கள். அப்படி ஸெட் போட்டிருந்தும் தண்ணீர் இருக்கிறதா ? ஏற்கனவே 10 ஹார்ஸ் பவர் போட்டிருக்கிறவர்கள், ஐந்து ஹார்ஸ் பவர் போதும் என்கிறார்கள். அதற்கு விதிவிலக்கு இல்லை. ஆக, நான் சொல்லுவது விவசாயம் அபிவிருத்தி அடைய வேண்டுமானால், மின்சார சார்ஜை குறைக்க வேண்டும். எந்த அளவு மின்சாரத்தை உபயோகப்படுத்துகிறார்களோ, அந்த அளவிற்குத்தான் அவர்களிடம் இருந்து சார்ஜ் வசூலிக்க வேண்டும். அவர்கள் பம்ப் ஸெட் வேண்டியதில்லை என்று சொன்னாலும்கூட அவர்களுக்கு விதிவிலக்குக் கொடுப்பதில்லை. இன்று கரும்பாலை ஓட்டுவதற்கு, வெல்லம் உற்பத்தி செய்வது பகல் நேரத்தில்தான். கரும்பாலைகளுக்கு இரவு நேரத்தில்தான் மின்சாரம் கொடுப்பதால் அவ் விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, பகல் நேரத்தில் அதற்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(Mr. Speaker in the Chair)

3.00 p.m.

கைத்தறி நெசவுத்தொழிலாளர்களைப்பற்றி இந்த நேரத்தில் சொல்லாமல் இருக்க முடியாது. அவர்களுடைய நிலைமையைப் பற்றி மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்திருக்கிறோம், என்றெல்லாம் இந்த அரசாங்கம் சொல்லுவது ஏதோ எதிர் கட்சி அங்கத்தினர்களை திருப்தி செய்வதற்கு , மாத்திரம்தான் ஆகுமே தவிர உண்மையிலே கைத்தறி நெசவாளர்களை வாழ வைக்க வேண்டுமென்றுள்ள எண்ணம் இந்த சர்க்காருக்கு இருப்பதாக தெரியவில்லை. அதற்காக மத்திய சர்க்காரிலிருந்து போராடி அவர்களுடைய குறைகளை நீக்கி தொடர்ந்து ரிபேட் கிடைப்பதற்கு வழி செய்யவில்லை. இவ்விதம் கைத்தறி நெசவுத்தொழிலாளர்களுடைய நிலைமை மோசமாகிக் கொண்டே போகிறது. நூல் இன்றைக்கு அதிக விலையாக இருக்கிறது. அவை குறைந்த விலையில் கிடைக்க வழி செய்யவேண்டும். அடுத்ததாக கல்வியை எடுத்துக் கொண்டால், அந்த மான்யம் வரும்பொழுது விவரமாக என் அபிப்பிராயத்தைச்சொல்லுகிறேன். இப்போது குறிப்பாக சொல்லுவது என்னவென்றால் பெண்களுக்கு அதிகமான அளவில் கல்வி பெற வசதி செய்து கொடுக்கவேண்டும். 200 ரூபாய்க்கு குறைவான வருவாய் உள்ள குடும்பத்தில் உள்ள பெண்களுக்கு இலவசமாக கல்வி பயிலுவதற்கு வசதி செய்து கொடுக்க சர்க்கார் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது போன்று பாலிடெக்னிக் 15 லட்சம் ரூபாய் செலவில் வட ஆற்காடு ஜில்லாவில் ஏற்படுத்துவதற்காக முயற்சி நடந்தது. இதைப் பற்றி பிளானிங் கமிட்டி ஏகமனதாக தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பி வைத்திருக்கிறது. இதற்கிடையில் இதை வேறு ஏதோ ஒரு ஜில்லாவுக்கு மாற்றப் போவதாகவும் கேள்விப்படுகிறேன். தயவு செய்து இவ்விதம் மாற்றாமல் பின் தங்கியிருக்கிற வட ஆர்காடு ஜில்லாவிலேயே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக ஹரிஜனங்களுக்கு ஒதுக்கிருக்கக்கூடிய பணம் போதாது என்பதுதான் என் அபிப்பிராயம். மேலும் கூடுதலாக பணம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு ஒதுக்கப்படுகிற பணம் காலாகாலத்தில், குறிப்பிட்ட நேரத்தில் அந்த மக்களுக்கு போய் சேருகிறதா என்பதை பார்த்தால் அவ்விதம் சரியான காலத்தில் போய் சேருவது கிடையாது. குறிப்பாக மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய பணம், புஸ்தகத்திற்காக ஒதுக்கப்படுகிற பணம், வேறு பல வழிகளிலும் ஒதுக்கப்படுகிற பணம் மாணவர்களுக்கு பள்ளிக்

கூடத்தில் சேர்ந்து ஆறு மாதத்திற்கு பின்னால்தான் போய் சேருகிறது இந்த நிலைமையை பார்க்கிற பொழுது இவர்கள் முன்னேறுவதற்காக இந்த பணம் ஒதுக்கப்படவில்லை என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது. இவ்விதம் மாணவர்கள் இதனால் தோல்வியடைகின்ற காரணத்தை வைத்துக்கொண்டு மேற்கொண்டு கொடுக்கக்கூடிய பணத்தை நிறுத்திவிடக்கூடிய நிலைமை வந்து விடும். ஆகவே தயவு செய்து இவர்களுக்கு கொடுக்கப்படுகிற பணத்தை பாடசாலை திறந்து முதல் மாதத்திலேயே கொடுத்துவிடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு உணவு பிரச்னையை எடுத்துக்கொண்டால் விவசாயம் எந்த அளவிற்கு இருக்கிறது என்று பார்த்தால், இன்றைக்கு உணவுப்பிரச்னை தீரவேண்டுமெனில் நிலச் சீர்திருத்தத்தை கொண்டுவருவதின் மூலமாகத்தான் தீர்க்கமுடியுமே தவிர வேறு ஒரு விதத்திலும் தீர்க்க முடியாது என்பது என் அபிப்பிராயம். சர்க்கார் உச்ச வரம்பு கட்டப்போகிறது என்று சொல்லப்படுகிறது. இன்னும் நிலச் சீர்திருத்தச்சட்டம் கொண்டுவருவதற்கு எவ்வளவு காலம் ஆகுமோ என்று பலர் நினைக்கிறார்கள். அவ்விதம் நினைக்கின்ற அளவுக்கு இன்று அரசாங்கத்தின் போக்கு இருக்கிறது. ஆகவே உடனடியாக நிலச் சீர்திருத்தச்சட்டத்தை கொண்டு வரவேண்டும். அதோடு சர்க்காருக்கு சொந்தமான தரிசு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு கொடுப்பதற்கு முன் வரவேண்டும். கடந்த தடவை நடந்த பட்ஜட் கூட்டத்தில் இதைப் பற்றி தீர்மானம் கொண்டுவந்தபொழுது இதை ரெவின்யூ மான்யம் வரும்பொழுது அதன் மீது பேசிக்கொள்ளலாம் என்றும் இதை மூன்று மாதத்திற்குள் கவனித்து விடுகிறோம் என்றும் சொல்லப்பட்டது. இப்போது அடுத்த ஒரு ஆண்டும் கழிந்து விட்டது. இப்பொழுதும் இந்த பட்ஜெட்டில் நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி ஒன்றுமே சொல்லப்படவில்லை என்று சொன்னால் அது மிகவும் வருத்தப்பட வேண்டிய நிலைமையாகும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே தயவு செய்து உடனடியாக நிலச் சீர்திருத்தம் கொண்டுவந்து அதன் மூலம் உணவுப் பிரச்னையை சரிக்கட்டுவதற்கு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்க முடியும். அப்போதுதான் பஞ்சப் படி உயர்வு, சம்பள உயர்வு இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் இடமில்லாத அளவுக்கு ஒரு நல்ல சூழ் நிலையை உண்டுபண்ண முடியும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதே போன்று டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களைப் பற்றி நிதி அமைச்சர் அவர்கள் தனது பட்ஜெட் உரையில் பிரமாதமாக போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள். பார்லிமெண்டில் ஜவஹர்லால் நேரு அவர்களினாலும் காலஞ்சென்ற ஆசாத் அவர்களினாலும் நிலைமை தெளிவாக்கப்பட்டிருந்தும்கூட சாக்ளா ஜட்ஜின் விசாரணையின் முடிவால் ராஜிநாமாவை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைமை ஏற்பட்டும் கூட இப்போது மீண்டும் அவரைப் பற்றி மிக பிரமாதமாக போற்றிப் புகழ்ந்திருப்பதைப் பார்த்தால் மறுபடியும் அவரை இங்கே நிதி மந்திரியாகக் கொண்டுவந்து, இவர் மத்திய சர்க்காரின் நிதி மந்திரியாகப் போய் விடலாம் என்ற எண்ணம் ஏதாவது ஏற்பட்டிருக்கிறதோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் பேரில் தவறு இருந்தும் அதன் காரணமாக வெளியே வந்த பிறகும் அவரைப் பிரமாதப்படுத்தி பேசுவது சரியல்ல, அதோடு இது தனிப்பட்ட விஷயமும்கூட என்பதையும் கூறிக் கொள்கிறேன். ஒரு வேளை அவர் பெரிய மனிதராக இருக்கலாம். தவறுகள் செய்யக் கூடியவர்கள் எல்லாம் பெரிய மனிதர்களாகத்தான் இன்று காணப்படுகிறார்கள். அப்படிப்பட்ட குற்றம் செய்யத ஒருவரை போற்றிப் புகழுவது என்று சொன்னால் அது சரியல்ல. அதோடு இம்மாதிரி போற்றுவது உண்மையில் அவர்களைத் தூற்றுவது போலாகும். இன்றைக்கு டி. டி. கே. யாருக்கு உடைந்தையாக இருந்தாரோ அது போன்ற முந்ராக்கள் இன்னும் எத்தனையோ பேர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள். இந்தியா தேசத்தில் பல இடங்களிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் சரியான பாடம் கற்றுக்கொடுப்பதின் மூலம்தான் மக்களுடைய பிரச்னைகளைத் தீர்க்க முடியும். அதை விட்டுவிட்டு இம்மாதிரி பட்டவர்களை புகழுவது என்று சொன்னால் இந்த நாட்டில் இன்னும்





எத்தனையோ முந்தராக்கள் வேண்டுமானாலும் இருங்கள், நாங்கள் உங்களுக்குப் பக்க பலமாக இருக்கிறோம் என்று சொல்லுவது போலத்தான் ஆகும். ஆகையினால் இம்மாதிரிப் புகழக் கூடிய வாசகத்தை அதிலிருந்து கண்டிப்பாக நீக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே பொதுவாக இந்த பட்ஜெட்டில் சில பிரச்னைகள் வரவேற்கக் கூடிய தன்மையில் இருந்தாலும்கூட இம்மாதிரிப்பட்ட சில குறைபாடுகளும் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டி இம்மாதிரிப்பட்ட குறைகளைத் தீர்த்து வைக்கக் கூடிய தன்மையில் நாம் செல்வோமானால் மக்களுடைய பிரச்னைகளையும் கவனித்து அவைகளையும் தீர்த்து வைக்கக் கூடியவர்களாக ஆவோம் என்பதை தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI A. VEDARATHNAM** : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கனம் கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற 3–09 p.m.
(நிதி அமைச்சர் அவர்களும் அவர்களே ஆவார்கள், கல்விதான் எனக்கு முக்கியமாக இருப்பதால் கல்வி அமைச்சர் என்று குறிப்பிட்டேன்). வரவு செலவு திட்டத்தை நான் மனமார வரவேற்கிறேன். அதைக் குறித்து எதிர்க்கட்சி அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் பேசிய பொழுது இப்போது அறிக்கை அழகான தாளில் வெளியிடப்பட்டிருக்கிறது என்று சில உண்மைகளைக் குறிப்பிட்டார்கள். பட்ஜெட் காகிதம் சென்ற ஆண்டை விட கொஞ்சம் வழவழப்பாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதிலிருந்து அவர்கள் என்ன உண்மையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால் ஆண்டு தோறும் சர்க்கார் தங்களுடைய வரவு செலவு திட்டத்தை கையினால் செய்த காகிதத்தில் அச்சிட்டு வெளியிடுகின்றார்கள். இப்போது அந்தக் கைத்தொழில் நல்ல முறையில் முன்னேறியிருக்கிறது, சென்ற ஆண்டைக் காட்டிலும் அந்தக் காகித உற்பத்தி நல்ல வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை அவர்கள் மறைமுகமாக குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன்.

இன்னொரு அழகிய தமிழ்ப் பழமொழியையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். 3–10 p.m.
"அவளுக்கு இவள் எழுந்திருந்து உண்பாள்" என்று சொன்னார்கள். அதிலும், நம்முடைய நிதி அமைச்சரவர்கள் தயாரித்திருக்கும் வரவு செலவுத் திட்டம் முன்னேற்றப் பாதையில் செல்லுகின்றது என்று அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். படுத்த படுக்கையிலிருந்து ஆகாரம் சாப்பிட முடியாமல் நிலையிலிருந்த அந்த மனைவி இப்பொழுது எழுந்து உட்காரும் நிலையிலிருக்கிறாள் என்று சொன்னால், அது வளர்ச்சியின் அறிகுறியைக் காட்டுகிறதே தவிர, குறை கூறுவதற்கு அதில் இடம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. உணவு பற்றாக் குறை தீருவதற்கு முன்பே நியாய விலைக் கடைகளை எல்லாம் மூடிவிட்டதாகக் குறிப்பிட்டார்கள். நியாய விலைக் கடைகளை இன்னும் மூடியதாகத் தெரியவில்லை. ஆனால், அங்கே அரிசிக்குப் பதிலாக, அதைக் காட்டிலும் சத்துள்ள கோதுமையை இப்பொழுது வினியோகம் செய்கிறார்கள். எனினும், ஏதாவது குறை சொல்ல வேண்டுமென்பதற்காக, எதிர்க்கட்சியிலிருப்பவர்கள் பேசத்தானே வேண்டும். அவர்களுடைய அழகிய தமிழில், இந்தப் "பொழுது போக்கு 'வரி" க்கு ஒரு நல்ல பதம் கண்டுபிடித்துச் சொல்லுவதாக ஸ்ரீ அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். அதை ஆவலுடன் எதிர் பார்ப்போம். இந்த வரவு செலவுத் திட்ட இறுதிக்குள்ளாவது, ஒரு நல்ல பெயர் அழகான தமிழிலே கிடைக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

இந்தப் பக்கத்திலே உள்ள நாங்கள் எங்கள் பகுதிகளிலே நடக்கும் விஷயங்களைத் தெரிந்து, வரவு செலவுத் திட்டத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டியதற்கான யோசனைகளை அரசாங்கத்துக்குச் சொல்ல வேண்டியது எங்களுடைய கடமையாயிருக்கிற காரணத்தினால், அதில் ஏதேனும் ஓரிரு குறைகள் இருந்தபோதிலும் கனம் நிதி மந்திரி அவர்கள் சென்ற ஆண்டு வரவு செலவு திட்டாலத்தில் குறிப்பிட்டதுபோல அது பூனை தன் குட்டியைப் பருகுவது போல் அல்லாமல் எதிர்க்கட்சியைப் போன்று, "பூனை எலியை விழுங்குவது போல்" அல்ல என்பதைக்

[Sri A. Vedarathnam] [3rd March 1958

கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது நமது மாகாணத்தில் எல்லாவற்றையும் விட மிக முக்கியமான பிரச்னை உணவுப் பிரச்னை. அது இந்த ஆண்டு கொஞ்சம் திருப்திகரமாக இருந்த போதிலும், நிரந்தரமான திருப்தி ஏற்பட்டுவிட்டது என்று சொல்லுவதற்கில்லை. இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இதற்கு முன் பல முறை இந்த அவை யில் யோசனைகளைக் குறிப்பிட்டிருந்த போதிலும், வரவு செலவு திட்டத் தில் அதைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாததின் காரணம் எங்களைப்போன்ற வர்களுக்குத் தெரியவில்லை. எங்களைப் பொறுத்த வரையில், "நெற் களஞ்சியம்" என்று சொல்லக் கூடிய காவிரி நதி பாய்கிற தஞ்சை ஜில்லாவில், என்னுடைய தாலுகாவான திருத்துறைப்பூண்டியில் மாத்தி ரம், முதல் தரமான நஞ்சை நிலம், 10,000 ஏக்கருக்கு அதிகமான சாகுபடிக்கு லாயக்கான, சர்க்கார் நிலம் தரிசாகக் கிடக்கிறது. அதை விவசாயம் செய்ய அங்குள்ள விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள். ஆற்று நீரை உபயோகிப்பதன் காரணமாக யாருக்கும் இடைஞ்சல் இருக்கப் போவதில்லை. யாராவது கோபித்துக்கொள்வார்களேயானால், "கடல்" தான் கோபித்துக்கொள்ள வேண்டுமே ஒழிய, மனிதர்கள் யாரும் சண்டைக்கு வர மாட்டார்கள். அந்த நீரைப் பயன்படுத்தி, அந்த நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை விளக்கினால் உதவி யாக இருக்கும். கனம் மராமத்து இலாகா மந்திரி அவர்கள் அந்தப் பகுதிக்கு வருகிறார்கள் என்ற செய்தியைக் கேட்ட மாத்திரத்திலே ஆயிரக் கணக்கான மக்கள் அவர்களுடைய கார் அந்தப் பக்கம் வரவேண்டு மென்பதற்காக, இரவு பகலாக உழைத்து, ரோடு அமைத்து, அந்த நிலத்தை ஆளுக்கு இரண்டு ஏக்கராகப் பிரித்து, வரப்புகள் அமைத்து, பாய்ச்சலுக்கு வேண்டிய வகையில் அதைச் செப்பனிட்டு, மந்திரி அவர்களை அழைத்துக்கொண்டு வந்து காட்டினார்கள். அவர்கள் வரும்பொழுது இரவு 2 மணி, அந்த நேரத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் கூடி, அவர்களை ஆரவாரத்துடன் வரவேற்று, அந்த இடத்தைக் காட்டி, தாங்கள் சாகுபடிசெய்ய அனுமதிக்கும்படி கேட்டார்கள் என்று சொன்னால், அதிலே அவர்களுக்கு இருக்கிற ஆர்வத்தை கொஞ்சம் கூர்ந்து கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அரசாங்கம் இதற்காக ஒரு தம்பிடிகூட செல வழிக்க வேண்டாம். அந்த நிலம் பூராவும் சாகுபடிக்கு வந்தால், அதிலிருந்து கிடைக்கும் நிலவரி, தண்ணீர் வரி, அரசாங்கத்திற்கு வரு மானமாக இருக்குமே ஒழிய, நஷ்டம் ஒன்றும் கிடையாது. தில்லை விளாகப் பகுதியிலுள்ள முசல்வெளிப் பிரதேசத்தைக் குறிப்பிடுகிறேன். அடுத்து இருக்கிற மதகைக்கூட புதிதாக கட்ட வேண்டியதில்லை. அதிலே இருக்கிற கண்மாயைத் திறந்துவிட்டால், கடலிலே வீணாகப் போகிற தண்ணீர் பாய்ந்து, 10,000 ஏக்கர் 1-ம் நம்பர் நிலம் சாகுபடிக்கு வரும். சாகு படி செய்யலாம் என்று சர்க்கார் சொல்லுவார்களேயானால், அந்த நிலம் முழுவதும் விவசாயத்திற்கு வந்துவிடும். இவ்வளவு பரந்த நிலம் தரிசாகக் கிடப்பதற்கு நிர்வாகக் குறைவோ, அல்லது அங்கேயுள்ள அதி காரிகளின் போக்கோ, என்பதை எங்களால் அறிந்துகொள்ள முடிய வில்லை. இந்த நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவந்தால், உணவுப் பற்றாக் குறை ஓரளவு தீர்வதுடன், நிலப் பசியால் வாடுகிற நிலம் இல்லாத விவசாயிகளின் பிரச்னையும் ஓரளவு தீரும். ஆகவே, கனம் நிதி அமைச்சரவர்கள் இதிலே கவனம் செலுத்தி, அந்த நிலங்களை உடனடி யாக சாகுபடிக்குக் கொண்டுவருவதற்கு முயற்சி எடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தியாவிலேயே, முதன் முதலாக நம்முடைய ராஜ்யத்தில்தான் மேடான பகுதிகளில் pumping sets-கள் வைத்து, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதன் மூல மாக அனுஷ்டானத்தில் நல்ல பலனைக் கண்டிருக்கிறார்கள். பழைய டெல்டா பிரதேசத்தை விட, இப்பொழுது பம்பு செட்டுகள் மூலமாக சாகு படிக்குக் கொண்டுவந்திருக்கும் நிலங்களில் இரு மடங்கு அதிகமான விளைச்சலிருக்கிற காரணத்தால், பிற பகுதிகளிலும் அந்த முறையை அனுஷ்டிக்குக் கொண்டுவர வேண்டுமென்று பல விவசாயிகள் மகஜர்கள்



3rd March 1958] [Sri A. Vedarathnam]

அனுப்பியிருக்கிறார்கள். இதில் அரசாங்கத்திற்கு செலவு ஒன்றுமும் கிடையாது. அதற்காக ஏற்படும் செலவு அனைத்தையும் அவர்களே ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறார்கள். ஆகவே, இந்த முறை சாகுபடியை பாக்கி இருக்கிற நிலங்களுக்கும் கொண்டு வந்தால், உணவுப் பஞ்சம் தீர்வதுடன், விவசாயிகளிடையே வேலை யில்லாத் திண்டாட்டமும் ஓரளவு குறையும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

3-20 p.m.

இந்த நிலைமை திருத்துறைப்பூண்டியில் மட்டும் அல்ல. தஞ்சை ஜில்லாவில் இதுபோன்று 40 ஆயிரம் ஏக்கர் நிலம் சாகுபடிக்கு லாயக் கான நிலம், முதல்தரமான நஞ்சைக்கு லாயக்கான நிலம், தரிசாகக் கிடக்கின்றன என்பதை இதற்குமுன் பலதடவை இந்த சபையில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். அப்படிச் சொல்லிக்கொண்டு வந்தும், அதை அப்படியே இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதற்கு உடனடியாக பரிகாரம் கண்டுபிடித்து அவைகளை சாகுபடிக்குக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மற்ற எல்லா பிரச்னைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு இதற்கு முதல் சலுகை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி இதற்கு முதல் சலுகைக் கொடுத்தால் அதைப் பற்றி யாரும் குறை கூறமாட்டார் கள். சபையில் இருக்கக் கூடிய எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் உள்பட எல்லோரும் இதை முழு மனதுடன் வரவேற்பார்கள் என்று நான் கனம் அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கைத்தொழில். இந்த விஷயத்தில் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் தஞ்சை ஜில்லாவில் புதிதாக சைக்கிள் தொழிற்சாலையும், ஒரு தீக்குச்சி தொழிற்சாலையையும் ஆரம்பிக்கப் போவ தாக குறிப்பிட்டதை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். அத்துடன் அவர்களிடத்தில் இரண்டொரு யோசனைகளையும் கூறி அவைகளையும் இத்துடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளு கிறேன். தஞ்சை ஜில்லாவில் பெரிய "ஸ்வாம்ப்" அதாவது சுமார் 150 சதுர மைல் அளவில் அது இருக்கிறது. ஆண்டு தோறும் ஜனங்களுடைய முயற்சி இல்லாமலேயே, அகில இந்தியாவிலுள்ள யாவருக்கும் தம்படி செலவு இல்லாமல் உப்பு சப்ளை செய்யக் கூடிய அளவில் அங்கு உப்பு எடுக்கப்படுகிறது. இந்த இடத்தைத்தான் நமது மதிப்பிற்குரிய கனம் ராஜாஜி அவர்கள் தன்னுடைய உப்பு சத்தியாக்கிரகத்தின்போது தேர்ந்தெடுத்துக்கொண்டார் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இது சரித்திரத்தில் இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. மத்திய அரசாங்கத்தின் தொழில் துறை நிபுணர், மத்திய அரசாங்கத் திற்கு கைத்தொழில் சம்பந்தமாக ஆலோசனை கூறும் டாக்டர் கணே அவர்கள் அந்தப் பிரதேசத்தைப் பார்வையிட்டு அங்கு ஏராளமாக ஜிப்சம் உற்பத்தி செய்வதற்கு வசதி இருக்கிறது என்றும், அதை ஒரு நிபுணரைக் கொண்டு ஆராய்ச்சி செய்து அந்த இடத்தையும் சர்வே செய்ய சொல்லி இருக்கிறார். அப்படி அங்கே சர்வே செய்து ஒரு ரிப்போர்ட்டையும் அரசாங்கத்திற்கு சமர்ப்பித்திருக்கிறார். அதை எடுத்து நடத்துவதற்கு சுமார் மூன்று கோடி ரூபாய் மூலதனம் போட வேண்டும் என்றும், அப்படிப் போட்டு அந்தத் தொழிலை எடுத்து ஆரம்பித்தால் முதல் ஆண்டிலேயே அந்த மூன்று கோடி ரூபாயை எடுத்துவிடலாம் என்றும் அதன் பிறகு எந்த செலவும் இல்லாமலேயே ஆண்டு ஒன்றுக்கு மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள ஜிப்சம் கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். அங் கிருந்து கிடைக்கக் கூடிய ஜிப்சத்திலிருந்து மட்டுமே மூன்று கோடி ரூபாய் கிடைக்கும் என்றும் இன்னும் மற்ற பொருள்களின் மூலமாக அதிகப் படியான லாபம் கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இப்படி அந்த நிபுணர் கூறியிருப்பதை நான் கனம் மந்திரி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த வருமானம் அந்த ஜிப்சம் மூலமாகத்தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல ரசா யனப் பொருள்களும் அங்கிருந்து கிடைக்கும் என்று அந்த நிபுணர் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது மாக்னீஷியம் சல்பேட், ப்ரோமைன், போன்ற எவ்வளவோ உப ரசாயனப் பொருள்களும் அங்கிருந்து கிடைக்கும்

என்றும் குறிப்பிட்டிருக்கிறார். ப்ரோமைன் என்ற ரசாயனப் பொருள் ரொம்பவும் உயர்வானது என்று சொல்லப்படுகிறது. இவைகளை எல்லாம் கணக்குப் பார்த்தால் நமக்கு செலவு இல்லாமலேயே எவ்வளவோ லாபம் வரக் கூடியதாக இருக்கிறது. இன்னும் எவ்வளவோ கோடி ரூபாய் நாம் அதன் மூலம் சம்பாதிக்கலாம் என்று அந்த நிபுணர் சொல்லியிருக்கிறாரே தவிர, வேதரத்னம் சொல்லவில்லை. அங்கு கிடைக்கும் ஜிப்சத்தை வைத்துக்கொண்டு ஆசியா கண்டம் பூராவுமே நாம் சப்ளை செய்யலாம். ஒரு தம்பிடி காசு செலவு இல்லாமல்கூட அவைகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்யமுடியும். அப்படிப்பட்ட உப பொருள்கள் அங்கு கிடைக்கின்றன. இதைக் காட்டிலும் லாபகரமான தொழில் வேறு இருக்க முடியாது. அரசாங்கம் இதை எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மூன்று கோடி ரூபாய் மூலதனத்தில் ஆண்டு தோறும் மூன்று கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய இந்தத் தொழிலை எடுத்து நடத்த வேண்டும் என்று நான் சர்க்காருக்கு நினைவுறுத்த விரும்புகிறேன்.

ஆனால், அரசாங்கம் ஒரு கருத்தைத் தெரிவிக்கலாம், மேல் நாடுகளிலிருந்து, டாலர் பஞ்சம் இருப்பதால், யந்திரங்களை வரவழைக்க கஷ்டமாக இருக்கும் என்று சொல்லலாம். இந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு யந்திரங்கள்கூட தேவையில்லை. அங்கே இருக்கக் கூடிய மண்ணைக் கொண்டே அதற்கு வேண்டிய உற்பத்தி சாதனங்களை அமைத்துக்கொள்ளலாம். அதனால் டாலர் கஷ்டம் இந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு குறுக்கே நிற்காது என்று நினைவூட்ட விரும்புகிறேன். ஆகவே இந்தத் தொழிலை ஆரம்பித்து வைக்கும்படியாக நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இது போன்று இந்நாட்டிற்கு மேல் நாடுகளிலிருந்து ஏராளமாக இறக்குமதி செய்யக்கூடிய காஸ்டிக் சோடாவையும் நாம் அங்கே உற்பத்தி செய்துகொள்வதற்கு வசதி இருக்கிறது. காஸ்டிக் சோடா நமது நாட்டில் பற்றாக் குறையாக இருக்கிறது. ஆகவே அதையும் நாம் இங்கேயே உற்பத்தி செய்துகொள்வதற்கு வசதி இருக்கிறது. அதற்கு என்று ஒரு கோடி அல்லது முக்கால் கோடி ரூபாய் மூலதனம் போட்டால் போதுமானது. அப்படி மூலதனம் போட்டு அந்த உற்பத்தியையும் நாம் ஆரம்பித்தால் நாம் எவ்வளவோ லாபம் அடையலாம். இதையும் அங்கு ஆரம்பிக்கலாம் என்று நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். தென்னாட்டில் எவ்வளவோ வளம் குறைவு என்று சொல்லுகிற அவர்களுக்கு எல்லாம் இது பதில் கூறுவதாகவும் இருக்கும். இதற்கு எல்லாம் மூலதனம் குறைவாகத்தான் ஆகும். தம்படி செலவு இல்லாமல் உற்பத்தியாகக் கூடிய உப்பு இருக்கிறது. ஆகவே இதை ஆலோசனை செய்து பார்க்கும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சற்று முன்பு பிரமாதமாக ஒரு விஷயம் விவாதத்தில் இருந்தது. அதாவது முந்திரி உற்பத்தியைப் பற்றி. தஞ்சை ஜில்லாவில்தான் ஏராளமாக முந்திரி உற்பத்தியாகிறது. தஞ்சை ஜில்லாவில் ஒவ்வொரு இடத்திலும் ரயில்வே ஸ்டேஷன் இருக்கக் கூடிய இடங்களில் முழு பருப்புடன் முனை உடையாமல் தட்டு தட்டாக முந்திரி பருப்பு விற்பனையாவதைப் பார்க்கலாம். அப்படி முந்திரி இந்த ராஜ்யத்தில் அதிகமாக உற்பத்தியாகிறது. இன்னும் ஏராளமாக உற்பத்தி செய்வதற்கு அங்கே வசதி இருக்கிறது. அதற்கு வேண்டிய திட்டமும் இருக்கிறது. அத்துடன் முந்திரி ஓடுகளை உபயோகித்து சாதாரணமாக ஒரு ப்ளாஸ்டிக் பாக்டரியை அமைக்கலாம். அதன் மூலம் பல பொருள்களைச் செய்வதற்கு இடம் இருக்கிறது. இதிலும் கொஞ்சம் சிந்தனை செலுத்த வேண்டும் என்று அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜில்லா போர்டின் அபாலிஷனால் ஜில்லா போர்டுகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த ரயில்வே செஸ் பணம் இப்பொழுது அரசாங்கத்திற்குக் கிடைக்கிறது. அப்படி மத்திய அரசாங்கத்தினிடமிருந்து சுமார் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் இது வரையிலும் நமது அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன். அந்த மூலதனத்திலிருந்து தஞ்சை ஜில்லாவில் ஒரு வைத்தியக்





கல்லூரியையும், பொறி இயல் கல்லூரியையும், ஒரு விவசாயக் கல்லூரியையும் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவைகளை அமைப்பதற்கான ஒரு சிறந்த பிரதேசம் அது. இவைகளை அமைக்கவேண்டும் என்று ஏற்கெனவே அங்குள்ள ஜில்லா போர்டு தீர்மானித்து அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்களுக்கு பணம் கிடைக்கவில்லை. இப்பொழுது அந்தப் பணம் கிடைத்திருக்கிறது. அதுவும் மற்ற ஜில்லாக்களுக்கு அபிவிருத்தி வேலைகளுக்கு என்று கொடுக்கப்படுகிற பணத்துடன் இதையும் சேர்த்தால் அங்கு மூன்று கல்லூரிகளை அமைப்பதற்கு வழி ஏற்படும். இப்படிப்பட்ட மூன்று கல்லூரிகளை அங்கு அமைப்பதற்கு வேண்டிய வசதி இருக்கிறது. அங்கு ராஜா மிராசுதார் ஆஸ்பத்திரி இருக்கிறது. அதைப்போன்ற வசதியுள்ள இடம் வேறு எங்கும் இருக்காது. இஞ்சினியர் கல்லூரியை அமைக்கவேண்டும் என்றால் அதற்கும் அங்குதான் வசதி இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய நீர்பாசன வசதிகளை பல இடங்களிலிருந்து வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள். அவைகள் சோழ ராஜ்ய காலத்தில் அமைக்கப்பட்ட நீர்ப்பாசன வேலைப்பாடுகள். அப்படிப்பட்ட இஞ்சினீயரிங் வேலைகள் நடந்திருப்பதால் அங்கு ஒரு இஞ்சினீயரிங் கல்லூரியை அமைப்பதற்கு வசதியாக இருக்கும். விவசாயத்தைப்பற்றி அங்கு சொல்ல வேண்டியதில்லை. அங்கு அதனால் ஒரு விவசாயக் கல்லூரியை அமைப்பதற்கு வேண்டிய வசதிகளும் இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். அதைவிட சிறந்த இடம் வேறு எங்கிலும் இருக்க முடியாது. ஆகவே அங்கு இப்படிப்பட்ட மூன்று கல்லூரிகளையும் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு கனம் மந்திரி அவர்கள் முன் வர வேண்டும். ஆகவே அங்குள்ள நலன்களை பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது ரொம்பவும் முக்கியமான விஷயம்.

நிலத்திற்கெல்லாம் மேல் வரம்பு கட்டவேண்டும் என்று முதல் முதலாக ஜான் அவர்கள் கவர்னராக இருந்தபோதும் அதன் பிறகு இப்பொழுது வந்திருக்கிற கனம் மேதி அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நிலத்திற்கு மேல் வரம்பு கட்டப்படும் திட்டம் எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

இப்பொழுது இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கின்றபோது, இதில் விவசாய வருமான வரியைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிற காரணத் 7-30 p.m.
தால், நிலத்திற்கு மேல் வரம்பு கட்டுவது கொஞ்சம் தூரப் போய்விட்டதோ என்று நினைப்பதற்கு இடம் தந்திருக்கிறது. அது அண்மையில் வருமானால் இந்த வரிக்கு அவசியம் இல்லை. இந்த வரிக்கு அவசியம் இருக்குமானால், அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிடலாம் என்று நான் சொல்வேன். இந்த வரி வந்து நிலைத்துவிட்டால் அந்த வரியை வசூலிப்பதற்காக உள்ள நிர்வாக அமைப்பை அப்பால் மாற்றியமைப்பது என்பது எளிது அல்ல என்பதை நான் சர்க்காருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

நிலத்திற்கு மேல் வரம்பு கட்டுவது என்றால், நாளைக்கோ மறுதினமோ கொண்டுவரவேண்டும். அப்படி இல்லாத நிலையில், என்று வருமோ என்று பெரிய மிராசுதார்களைபோலவும் ஜமீந்தார்களைப்போலவும் இருப்பவர் எல்லோரும் இரவு பகல் தூக்கம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும் அவர்களை இனியும் நீண்ட நாளுக்குச் சித்திரவதையில் வைத்திருக்கவேண்டாம். உடனேயே அதைக் கொண்டுவந்து முடிவுகட்டிவிடுங்கள். இல்லையானால் அவர்கள் பயந்துகொண்டேயிருக்கக் கூடிய நிலைதான் நீடிக்கும்.

இதர துறையிலே இருக்கும் வருமானங்களோடு விவசாய வருமானத்தையும் சேர்த்து "ஸ்லாப் ஸிஸ்டத்திலே கொண்டுவருவது, ஏற்கெனவே தொண்டைக் குழியில் இருக்கும் உயிர் தாங்கமுடியாமல் இருதயம் நின்று விடுமோ என்றுகூட அஞ்சும்படியான நிலையில் இருக்கிறதென்பதை கனம் நிதி மந்திரி அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். எனவே, இந்த விஷயத்தை ஆராய்ந்து அவர்கள் ஒரு முடிவு செய்வார்கள் என்று நம்புகிறேன். சுப்ரமண்யம் கமிட்டி ரிபோர்டிலுள்ள சிபார்சுகளெல்லாம் அவர்களுக்கு நன்றாக நினைவு இருக்கும். அவைகளை இந்தச் சந்தர்ப்பத்தில்

[Sri A. Vedarathnam] [3rd March 1958

நினைவூட்டினால் மட்டும் போதும் என்று நான் நினைக்கிறேன். தலைவர் மணியை அடித்துவிட்டால், அவகாசம் இல்லாததால், இந்த கமிட்டியின் ரிபோர்ட்டை மட்டும் ஞாபகப்படுத்தினால் அமைச்சர் அவர்களுக்கும் கனம் அங்கத்தினர்களுக்கும் போதும் என்பதனால் அதை நினைப்பூட்டி, அதில் ஒரு நல்ல சமூகமான ஒரு முடிவை அவர்கள் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நம்முடைய ராஜ்யத்திலே கால்வாய்ப் போக்குவரத்துக்கு பக்கிங்காம் கால்வாய் போன்று வேறு எந்த இடத்திலும் இல்லை. நாகப்பட்டிணம்-வேதாரண்யம் கால்வாய்தான் இருக்கிறது. அதில் படகுப் போக்குவரத்து இருந்துகொண்டு வருகிறது. எழெட்டு ஆண்டுகளுக்கு முன்னால், அக்கால்வாய் அபிவிருத்தி செய்வதற்காக ஏழரை லட்ச ரூபாய் 'ஸாங்ஷன்' செய்திருந்தார்கள். அந்த அபிவிருத்தி வேலை தடைப்பட்டிருக்கிறது. இந்த வருஷ வரவு செலவுத் திட்டத்திலாவது சேர்க்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்த்திருந்தேன். 100 ரூபாய் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஏழரை லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. நீர்ப்பாதைகள் மூலமாக சாமான்கள், மனிதர்கள் போக்கு வரத்து ஏற்படுவதற்குக் குறைந்த செலவே ஏற்படும். நீர்ப்பாதைப் போக்குவரத்து சிக்கனமானது என்று நிபுணர்கள் முதல் எல்லோரும் கூறுவதால் நாகப்பட்டிணம்-வேதாரண்யம் கால்வாயை அபிவிருத்தி செய்வதற்காக ஸாங்ஷன் செய்யப்பட்ட தொகையை அதற்காக செலவிட்டு அதை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாகாணத்திலுள்ள சிறு துறைமுகங்களை (minor ports) அபிவிருத்தி செய்வதற்காக பல லட்சக் கணக்கான ரூபாய் குவிந்து கிடக்கிறது. அவைகளின் அபிவிருத்தி வேலைகளையும் எடுத்துக்கொண்டு, போக்குவரத்திலுள்ள கஷ்டங்களைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்து கட்லோர போக்குவரத்தை (coastal traffic) அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிதி அமைச்சர் அவர்களுக்கு இந்தப் போக்குவரத்திலே இருக்கும் கஷ்டங்கள் தெரியும். அந்த விஷயத்திலே அவர்களுடைய கவனத்தைச் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அவகாசம் அளித்த அவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து நான் என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகின்றேன்.

3–34 p.m. *SRI R. SWAMINATHA MERKONDAR: மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, இச்சபையிலே நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த வரவு செலவுத் திட்டத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். இத்திட்டத்தை நோக்கும்போது, நாட்டின் முன்னேற்றம், ஏழைகளின் முன்னேற்றம், பிற்போக்கு சமூகத்தின் முன்னேற்றம் என்ற அடிப்படையிலே திட்டம் அமைந்திருப்பதைப் பார்த்தால் அவர்களுடைய திறமை, அவர்களுடைய பொறுப்பு, அவர்களுடைய கடமை இவைகளை மனதில் கொண்டு நல்ல முறையிலே தீட்டியிருக்கிறார்கள் என்றால், அது மிகையாகாது.

கல்வித்துறையிலே பிற்போக்காக இருந்த நமது நாடு முற்போக்கு அடையவேண்டுமென்ற நோக்கத்தோடு ஆரம்பக் கல்விக்காக ஒரு கோடி 63 லட்ச ரூபாய் இவ்வாண்டு திட்டத்தில் உயர்த்தியிருக்கிறார்கள். அது நமது கல்வித் தரத்தின் உயர்வின் நோக்கத்தை காட்டுகிறது.

என்.ஜி.ஓ.-க்களின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அது நடுத்தர வர்க்கத்திலுள்ள அவர்களுடைய கஷ்டங்களை நிவர்த்திப்பதற்கு ஒரு முக்கியமான சந்தர்ப்பம் என்று அறிவித்து கொள்ளகிறேன்.

இருந்தாலும், தகப்பனிடத்தில் குழந்தைகள் சில சலுகைகளைக் கோருவதுபோல் இத்திட்டத்திலே சில திருத்தங்களை நான் கூறுகிறேன். இப்படிக் கூறும்போது, எதிர்கட்சி நண்பர்கள் சொல்லலாம்—ஆளும் கட்சியில் இருப்பவர்கள் கூட குறை சொல்லுகிறார்களே—என்று. நாங்கள் இப்படிச் சொல்வதைக் குறை கூறமுடியாது. அப்படி நாங்கள் சொல்ல



3rd March 1958] [Sri R. Swaminatha Merkondar]

வேண்டியது எங்களுடைய கடமை. நாங்கள் எங்களுடைய கடமையைச் செய்வதற்காகத்தான் இங்கு இருக்கிறோம். அந்த வகையில் சில குறைகளை எடுத்துச்சொல்வதற்கு எங்களுக்கும் உரிமை இருக்கிறது என்று எங்களுடைய அமைச்சரே அனுமதி கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் உணர்ந்து சில திருத்தங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நமது நாட்டை எதிர்நோக்கி நிற்கும் நில வரம்புத் திட்டத்தை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். ஆனால், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, தஞ்சை தாலூகாவின் தென் பகுதி காடாரம்பமாகவும், வட பகுதி நீராரம்பமாகவும் அமைந்துள்ளது. தென் பகுதியிலே ஒரு ஏக்கரா நிலத்தின் பெருமானம் ரூ. 500 முதல் ரூ. 700 வரை இருக்கிறது. ஆனால், வட பகுதியிலே திருக்காட்டுப்பள்ளி ரேஞ்சில் ஆயிரத்திலிருந்து ஆயிரத்து ஐந்நூறு வரையில் பெறுமானம் இருக்கிறது. திருவையாறு ரேஞ்சில் படுகை நிலங்களிலே நாலாயிரம் ரூபாயிலிருந்து ஐயாயிரம் ரூபாய் வரை தற்போது மதிப்பாக இருக்கிறது. இவ்வாறு ரேஞ்சுக்கு ரேஞ்சு வித்தியாசமாக இருக்கிறது. நிலத்தின் வருமானத்தைப் பார்க்கும்போது, ஏக்கரா ஒன்றுக்கு 15 கலம், 30 கலம், 50 கலம் என்ற அடிப்படையிலே ஏற்றத் தாழ்வு இருக்கிறது. அந்தக் காலத்திலே நிலத்தின் மண்ணை ருசிபார்த்து வளத்தைக் கணக்கெடுத்து தரத்தை ஏர் வரிசைப் படுத்தியிருக்கிறதாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆதலால், நிலத்தின் வளத்தின் பேரிலாவது, வருமானத்தின் பேரிலாவது தீர்வையின் பேரிலாவது ஒரு வரம்பு நிர்ணயிக்கவேண்டும். நஞ்சைக்குப் பத்து ஏக்கர், புஞ்சைக்கு 20 ஏக்கர் என்று நிர்ணயித்துவிட்டால் அது சமதர்ம அடிப்படைக்கோ சமத்துவ வாழ்க்கைக்கோ உகந்ததாக இருக்காது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவில் 60 : 40 என்று வாரத்திட்டம் இருக்கிறது. ஒரு வேலி நிலம் வைத்திருக்கும் விவசாயிதான் ஒரு ஏர் மாடும் வைத்துக்கொண்டு உழவடை செய்ய முடியும்; அதற்கு உட்பட்டிருந்தால், அவர்களால் சொந்த உழவடை செய்ய முடியாது. மாடு வைத்துக்கொள்ளவதற்கோ, ஏர் வைத்துக்கொள்வதற்கோ, உழவடைச் செலவு செய்வதற்கோ கட்டுபடியாகாது. ஆகையால்தான் 6 ஏக்ராக்களுக்கு உட்பட்டவர்கள் சொந்தப் பண்ணை வைத்துக்கொள்ளவதில்லை. அப்படியிருக்கும்போது, 6 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு ஒரு விதிவிலக்கு இருக்க வேண்டியது அவசியம். அதுவும் இல்லாமல், சில விதவைகள், நடுத்தர வர்க்கத்தில் உள்ள சில உத்தியோகஸ்தர்கள் பம்பாய், கல்கத்தா போன்ற ராஜ்யங்களிலே இருந்துகொண்டு அவர்களுடைய குடும்பத்தை அவரவர்களுடைய கிராமங்களிலே வைத்துகொண்டும் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தாங்களே நேரிடையாக விவசாயம் செய்ய முடியாத நிலையிலே தங்கள் நிலத்தைக் குத்தகைக்கு விடுகிறார்கள். அத்தகையவர்கள் வாரசாகுபடி முறையிலே பயிரிடவேண்டுமானால், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 3-40 p.m.

டீசல் எண்ணெய் மீது நம்முடைய சர்க்கார் இப்பொழுது நாலணா வரி உயர்த்தியிருக்கிறார்கள். காலன் ஒன்று ரூ. 1–5–0 ஆக இருந்த டீசல் எண்ணெயின் விலை இப்பொழுது ரூ. 1–9–0 ஆக உயருவதில் தவறு இல்லை. ஆனால், விவசாயத்திற்காக உபயோகிக்கக்கூடிய பம்புகளுக்கு வாங்கும் டீசல் எண்ணெய்க்கு மட்டும் இந்த வரியிலிருந்து விதிவிலக்கு அளித்தால் விவசாய அபிவிருத்தி தடைப்படாது. ஆகவே, இது சம்பந்தப்பட்ட வரையில் விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் உணவு உற்பத்தி முற்போக்கு அடையமுடியும்.

மின்சாரம் விஷயமாக நம் ராஜ்யம் அதிக முற்போக்கில் இருக்கிறது. ஆகவே, மின்சாரம் போதும், டீசல் எண்ணெய் இன்ஜின்களை விவசாயிகள் அதிகமாக உபயோகிக்கமாட்டார்கள் என்று சர்க்கார் அபிப்பிராயபடலாம். ஆனால், சில பிற்போக்கு பகுதிகளில், காடாரம்பப் பகுதிகளில், மின்சாரம் வைத்துக்கொள்ள முடியாத நிலையில் உள்ளவர்கள் டீசல் எண்ணெயைத்தான் உபயோகிக்க முடியும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அடுத்தபடியாக முந்திரித் தோப்பு வளர்ச்சித் திட்டத்திற்கு

இந்திய சர்க்கார் லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு 300 ரூபாய் லாங் டெர்ம் லோன் என்று கொடுக்கிறார்கள். பொதுவாக முந்திரிப் பயிர் ஆறு ஆண்டுகளுக்கு மேல் தான் பலன் அளிக்கும். ஆகவே நீண்ட காலக் கடன் என்று கொடுக்கப்படும் தொகையை குறைந்தது பத்து ஆண்டுக்கு என்று மாற்றி அமைத்தால் முந்திரி பலன் தர ஆரம்பித்துவிடுமாதலால் விவசாயிகள் சுலபமாகக் கடனைத் தந்துவிட முடியும். மேலும் 300 ரூபாய் கடனையும் மான்யூர் லோன், சீட் லோன் என்பதாகத் தவணைகளில் கொடுத்தாலும் நன்மை பயக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக எங்களுடைய தொகுதியிலே—தஞ்சை ஜில்லாவிலேயே மிகவும் பிற்போக்கான தொகுதியாக பிரதேசமாக இருப்பது என்னுடைய பிரதேசம் தான். பொதுவாக எங்கள் ஜில்லாவில் 13 தாலுக்காவில் பனை மரங்கள் இருக்கின்றன. கோயம்பத்தூர், ராமநாதபுரம் முதலிய ஜில்லாக்களில் பனை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு பதனீ இறக்குவதற்கு லைசென்ஸ் கொடுத்து இருக்கிறார்கள். 5-2-58-ல் இருந்து கூட சேலத்திற்கு லைஸென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அதன்படியே எங்கள் ஜில்லாவில் பனை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு லைஸென்ஸ் கொடுத்தால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**SRI A. V. P. PERIAVALAGURUVA REDDI:** கனம் தலைவர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட் விவாதத்திலே நானும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த பட்ஜெட்டிலே ஒவ்வொரு இனத்திற்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையை பார்த்தால், நிர்வாகம் அதன்படியே நடந்தால் மிகமிக நல்லதாக இருக்கும். ஆனால் இது வெறும் ஏட்டுச் சுரைக்காயாகத்தான் இருக்கிறது. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு ஆகுமா என்பது போல பட்ஜெட் புத்தகத்திலே அதற்கு இவ்வளவு பணம், இதற்கு இவ்வளவு பணம் என்று ஒதுக்கிவிட்டால் போதாது. மந்திரக்காரன் மாங்காயைக் காட்டுகிறான். மாங்காயை பார்க்கிறோம். அது பொய் இல்லை. ஆனால் அந்த மாங்காய் ஊறுகாய்க்கு ஆகுமா? அதுபோல பட்ஜெட் புத்தகத்திலே பணம் ஒதுக்கப்படுகிறதே தவிர அந்தப் பணம் நல்லமுறையில் செலவு செய்யப்படுவதில்லை.

முதலாவதாக ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுக்கொடுப்பதாக ஒரு திட்டம் போட்டு 550 ரூபாய் அரசாங்கம் கொடுப்பது என்றும், 250 ரூபாய் அந்த வீட்டுக்குரிய ஹரிஜன் கொடுப்பது என்றும் தீர்மானித்து வீடுகளை கண்ட்ராக்டரிடம் விட்டுக் கட்டச் சொன்னார்கள். எங்கள் பக்கத்தில் அம்மாதிரி 20 வீடுகள் கட்டினார்கள். மொத்தம் கண்டிராக்டரிடம் 15 ஆயிரம் ரூபாய்க்கு விட்டதில் கண்டிராக்டருக்கு அதில் மாத்திரம் 6 ஆயிரம் லாபம் என்பது எனக்குத் தெரியும். மண்ணாலேயே வீட்டைக் கட்டிவிட்டு நான்கு பக்கமும் மேலே சிமிண்டைப் பூசிவிட்டு கூரைபோட்டுப் போய்விட்டான். இன்று அந்த வீடுகளைப் போய் பார்த்தால் தெரியும் சிமிண்டு பாறை பாறையாக விழுந்துவிட்டது. மண் இடிந்து வீடு சரிந்து வெறும் கூரை மாத்திரம்தான் நிற்கிறது. கன்ட்ராக்டர் ரூ. 6 ஆயிரம் கொள்ளை அடித்துக்கொண்டு போய்விட்டான். இந்தமாதிரியான நிலைமையில் பணத்தை விரயம் செய்து எதற்காக ஹரிஜனங்களுக்கு வீடு கட்டித் தருகிறோம் என்று சொல்லவேண்டும் என்பதை அமைச்சர்கள் நன்கு ஆலோசிக்கவேண்டும். இதற்கு என்ன செய்யலாம் என்றால் சர்க்கார் கொடுக்கிற பணத்தை நேரிடையாக ஹரிஜனங்களிடமே நான்கு ஐந்து தவணைகளில் கொடுக்கலாம். முதலில் 100 ரூபாயைக் கொடுத்து மரம் போன்றவைகளை சேகரித்துக்கொள்ளச் சொல்லலாம். அவைகளை அவன் சேகரித்துக்கொண்டவுடன் இன்னொரு 100 ரூபாயைக் கொடுத்து கட்டட வேலையை ஆரம்பிக்கச் சொல்லலாம். அஸ்திவாரம் எழும்பியவுடன் மேல் கூரை, சிமெண்டு இவைகளுக்கு இன்னொரு 100 ரூபாயைக் கொடுக்கலாம். இப்படி அவர்களிடத்திலேயே பணத்தைக் கொடுத்து வீடு கட்டிக் கொள்ளச் சொன்னால் தாங்கள் தாம் அவ்வீட்டில் இருக்கப் போகிறோம் என்பதை உணர்ந்து ஹரிஜனங்களும் நல்ல முறையில் வீடுகளைக் கட்டிக்



கொள்வார்கள். மிகுந்த அக்கரையோடுகூடக் கட்டிக்கொள்வார்கள். அப்படியின்றி இன்றையதினம் பல இடங்களில் ஹரிஜனங்களுக்குக் கட்டிக் கொடுக்கும் வீட்டை கண்டிராக்டரிடம் விடுவதானால் அவர்கள் கட்டியிருக்கிற வீடுகள் எத்தனை நாசமாகிக் கிடக்கின்றன. குடியிருப்பதற்குத் தகுதியே இல்லாமல் போயிருக்கின்றன என்பதை காணலாம். திருமாலுஞ்சோலையில் கூரை தலைகீழாய்த் தொங்கிக்கொண்டிருக்கிறது. எந்த எந்த இடங்களில் எவ்வளவு வீடுகள் நாசமாகி இருக்கின்றன என்பதற்குப் புள்ளி விவரம் குறித்து வைத்திருந்தேன். இன்று சபாநாயகர் திடுதிப்பென்று என்னைப் பேச அழைத்துவிட்டதால் அந்தக் குறிப்புகளைக் கொண்டுவர முடியவில்லை. ஆகவே நான் சொல்கிற யோசனைப்படி செய்தால் ஹரிஜனங்களுக்கு உண்மையில் குடியிருக்க வீடுகள் கட்டித் தந்ததாகவும் ஆகும், சர்க்கார் பணமும் விரயமாகாது.

அடுத்தபடியாக ஏழை மாணவர்களுக்கு இலவசமாக பிற்பகல் உணவு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்த மட்டில் நாட்டில் நடைபெறுகிற விஷயத்தைச் சொல்கிறேன். அங்கங்கே கிராமங்களில் உள்ளவர்களை ஒரு கமிட்டியாக நியமித்திருக்கிறார்கள். அவர்கள் 50 ரூபாய், 40 ரூபாய் வரையில் பாகம் பிரித்துக் கொண்டு விடுகிறார்களே தவிர உண்மையில் மாணவர்களுக்கு பிறபகலில் உணவு கொடுப்பதே இல்லை. உண்மையிலேயே மாணவர்களுக்கு பிற்பகலில் உணவு கொடுக்க வேண்டும் என்பது சர்க்காருடைய நோக்கமாக இருந்தால், பணமும் விரயமாகக் கூடாது என்று எண்ணினால் ஹோட்டல் காரரிடம் பிற்பகலில் இவ்வளவு மாணவர்களுக்கு இவ்வளவு பொட்டலம் கொடுக்கவேண்டும் என்பதாகக் காண்டிராக்ட்டுக்கு விட்டுவிடவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அது தான் சரியான முறை. வேண்டுமானால் கமிட்டியின் மூலம் உணவு கொடுப்பது என்கிற ஏற்பாட்டினால் எத்தனை கிராமங்களில் பிற்பகல் உணவு கொடுக்கப்படுவதில்லை என்பதை நிதி மந்திரி அவர்கள் என்னோடு வந்தால் காண்பிக்கத் தயாராய் இருக்கிறேன். அதில் ஒன்றும் சந்தேகமில்லை.

அதோடு மின்சார விஷயத்தில் அறுபதாயிரம் பம்பு செட்டுகள் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அது உண்மை தான். மின்சாரம் வேண்டுமென்றால் போதும், கம்புகளை நட்டு கம்பிகளை இழுத்துவிடுகிறார்கள். அதனால் உணவு உற்பத்தியும் அதிகமாகிக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இன்றைக்கும் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசியாகத் தான் இருக்கிறதே தவிர 1½ படியாகவில்லை. அதற்காக எந்த விதமான திட்டமும் இன்னும் வருக்கவில்லை. இப்போது சமீபத்தில் 2-ம் தேதி மதுரையில் விவசாய மகாநாடு கூட்டினார்கள். மந்திரிகள், கலெக்டர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். அதிலே யாராவது பரம்பரை விவசாயி இருந்தானா? ஏதோ ஆங்கிலத்தில் எழுதிப் படித்தார்கள். போனார்கள். அவ்வளவு தான். உண்மை விவசாயி, ஜனங்களுடைய பிரதிநிதி விவசாயத்திலுள்ள கஷ்டங்களை எடுத்துச் சொன்னானா? இல்லை. விவசாய அபிவிருத்தி இந்த நிலைமையில் இருக்கிறது. மின்சாரத்தை பம்பு செட்டுகளுக்குக் கொடுக்கலாம் என்றால் உண்மையில் எவ்வளவு தூரம் விஸ்தரிக்கலாம் என்பதற்குக் கணக்குக் கிடையாது. இங்கே உள்ளவர்கள் மணி காட்டும் டப்பியை கையில் போட்டுக்கொண்டிருக்கிறார்கள், விவசாயிகளிடத்தில் அது இருக்குமா? ஷிப்ட் ஸிஸ்டம் என்று சொல்கிறார்கள். வயலுக்குப் போய் மண்வெட்டியை எடுத்து ஒரு கொத்து கொத்தி தண்ணீர் விடுவான். பொக்கென மின்சார சப்ளை நின்று விடும். கேட்டால் ஷிப்ட் ஸிஸ்டம், என்பார்கள். 1938-ம் வருஷத்திலிருந்தே நான் ரோடு மேலேயே பம்பு செட்டுகள் எல்லாம் வைத்து விவசாயம் செய்கிறேன். திருமங்கலம் கள்ளிக்குடி கிராமம். மிளகாய் போட்டிருக்கிறேன். தண்ணீர் இல்லாமல் பூ உதிர்ந்து போகிறது. பிஞ்சுகள் உதிர்ந்து போகின்றன. இதை கண்ணாலேயே மின்சார இலாகா மந்திரி அவர்களுக்குக் காண்பிக்கவேண்டும் என்று நான் நினைத்தேன். அவரும் எங்கள் பக்கத்திற்கு இப்போது வந்திருந்தார்கள். மந்திரியவர்களிடம் நேரில் காண்பிக்கலாம் என்று நினைத்தேன். ரோட் சைடிற்கு

3-50 p.m. வந்தேன் நான். என் டிரைவர் மந்திரியின் கொடி தெரிகிறது என்று சொன்னான். அதற்குள் அந்தக் கார் 60, 70 மைல் பறந்து போய் விட்டது. ஆக, மந்திரியவர்களிடம் அதைக் காண்பிக்க முடியவில்லை. நான் சொல்வது, மினிமம் சார்ஜ் குறைக்கப்பட வேண்டும். அந்த மினிமம் சார்ஜை வருடா வருடம் கொடுக்கும்போது, அதை நான்கு நாள் கழித்து தருகிறேன் என்று சொன்னால், ரெவன்யூ டிப்பார்ட்மெண்டிலிருந்து அந்த பம்ப் செட்களை ஜப்தி செய்ய ரெவன்யூ இன்ஸ்பெக்டர் வந்து விடுகிறார். ஆக, கரண்டும் கொடுப்பதில்லை. ஷிப்ட் முறை வைத்து மூன்று மணி நேரந்தான் கொடுப்பேன் என்கிறார்கள். அவர்கள் கையில் வாச்சா வைத்திருக்கிறார்கள், மணிக் கணக்கில் வருவதற்கு. ஆகவே, இதைப் பற்றி எல்லாம் சற்று நன்கு ஆலோசிக்க வேண்டும். மின்சார விஷயத்தில் ரொம்ப மாறுதல் செய்ய வேண்டும். ஒரு கிராமத்திற்கு நான்கு செட் வருகிறது. அதற்கு லைன் இழுக்க ஒரு மணி நேரம் ஆகிறது. அதற்கு 10,000 ரூபாய் ஆகிறது. அதற்கு மினிமம் சார்ஜ் கொடுக்க எல்லோரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அடுத்தப்படியாக, இப்பொழுது மின்சார போர்ட் நிறுவப் பட்டிருக்கிறது. நம்மிடம் வந்து தொல்லை பண்ணுவார்களே என்று நினைத்து மந்திரியவர்கள் அந்த பொறுப்பை ஒரு போர்டின் தலையின் மீது தள்ளி விட்டார்கள். ஒவ்வொரு பிளாக் மார்க்கெட் வியாபாரிகளை பார்த்தால் 36 டூம் லைட்களும், 46 பீங்கான் விளக்குகளும் அவர்களுடைய பங்களாக்களில் தொங்குகிறது. அதற்கெல்லாம் சப்ளை செய்ய கரண்ட் இருக்கிறது. ஆனால் விவசாயம் செய்வதற்காக கரண்ட் கொடுக்க கரண்ட் இல்லை. இப்படி இருக்கிறது, சமாசாரம்.

**Sri N. R. THIAGARAJAN :** உங்கள் பங்களாவில் பீங்கான் லைட்டுகளும், டூம் லைட்களும் இல்லையா ?

**Sri A. V. P. PERIAVALAGURUVA REDDI :** என் பங்களாவில் ஒரு லைட்தான் இருக்கிறது. நான் ப்ளாக் மார்கட்காரன் அல்ல. ப்ளாக் டெவலப்மெண்டில், மூன்று ரெவின்யூ பிர்க்காவிற்கு சேர்ந்து ஒரு ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீஸர் இருக்கிறார். அதற்கு பின் கிராம சேவக் என்று எழு பேர்கள் இருக்கிறார்கள். அதில், கல்விக்கு என்று ஒரு அதிகாரி. விவசாயத்திற்கு என்று ஒரு அதிகாரி, கூட்டுறவுக்கு என்று ஒரு அதிகாரி. ராட்டு சொல்லிக் கொடுக்க என்று ஒரு அதிகாரி. இன்னும் என்ன என்னவெல்லாம் உண்டோ. நான் இங்கு எழுதி வைத்ததை காணவில்லை. (சிரிப்பு). கள்ளிக்குடியை எடுத்துப் பார்த்தால், எழு கிராம சேவக்குகள் நன்றாக காப்பி சாப்பிட்டுவிட்டு, பீடா கடையில் உட்கார்ந்து கொண்டு "பூ" என்று புகை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் தமாஷாக்காக சொல்லவில்லை. பகவான் பேரில் சத்தியமாய் சொல்கிறேன். கிராமங்களில் உள்ள ரோடுகளை பார்த்தால் பரிதாபமாக இருக்கும். மூன்று நான்கு வருடம் மழை பெய்து, ரோடு என்று சொல்லும்படி இல்லாமல், அதில் சுக்கான் மண் கூட அடைக்கவில்லை. ரோடுகளை ரிப்பேர் செய்ய மாட்டேன் என்கிறார்கள். ரோடுகளை சரியாக பழுது பார்க்க ஆள் இல்லை. ஆனால் ராட்டு நூற்க சொல்லிக் கொடுக்க ஆட்களை நியமிக்கிறார்கள். ராட்டு நூற்பவர்கள் ராட்டு நூற்கட்டும். அவர்கள் இப்பொழுதும் ராட்டு நூற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ராட்டு நூற்க சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. கிராமங்களில் சென்று கிராமச் சேவக்குகள் ஒன்றும் செய்து விட முடியாது. செய்யப் போவதுமில்லை, மூன்றில் ஒரு பங்கு கொடு. நாங்கள் மீதியை போட்டு 5,000-க்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டுகிறோம் என்கிறார்கள். இரண்டொரு கிராமங்களில் பணம் கொடுப்பது ப்ளாக் டெவலப்மெண்டுக்காக கொடுக்கப்படும் பணத்தை மோசம் பண்ணுவதற்குத்தான். நீங்கள் பணத்தை போட்டு அபிவிருத்தி செய்துவிட்டு ரூபாய்க்கு ஒரு அணா, இரண்டு அணா என்று கிஸ்தி போட்டு வசூலித்தால் என்ன? இந்த ப்ளாக் டெவலப்மெண்ட் என்று சொல்லி, இந்த கிராம சேவக் அப்படி இப்படி என்று சொல்லி பணம் செலவு செய்வது பணத்தை விரயமடிப்பது தவிர வேறொன்றுமில்லை. பணம் போகிறதே தவிர காரியங்கள் ஒழுங்கான முறை



யில் நடப்பதில்லை. முன்பு, ஜில்லா போர்டின் கீழ் ரூரல் டிஸ்பன்ஸரி இருந்தது. அதில் ஒரு டாக்டர் கூட வர மாட்டார்கள். அந்த டாக்டர்கள், சட்டையும், பூட்ஸும் போட்டுக்கொண்டு கிராமத்திற்கு வருவார்களா? வர மாட்டார்கள். கிராமங்களில் டாக்டர்கள் இல்லை என்று சொன்னால், எப்போதும் "அதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம், யோசித்துக் கொண்டிருக்கிறோம்" என்று அமைச்சர்கள் எப்போதும் அப்படி பதில் சொல்கிறார்கள். நீங்கள் எப்பொழுது யோசித்து விட்டு முடிவு செய்யப் போகிறீர்கள். காப்பிக் கடைகளில் "இன்று கடன் இல்லை" என்று போர்ட் போட்டிருப்பது போல் அமைச்சர்களும் யோசித்துக் கொண்டிருக்கிறோம் யோசித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர எப்போது யோசனை தீர்ந்து அங்கு டாக்டர்களை போடப்போகிறீர்கள். நீங்கள் கிராமங்களில் டாக்டர்களை போடும்போது, அங்குள்ள மக்கள் செத்துத்தான் போக வேண்டும். வைத்தியக் கல்லூரிகளில் ஐந்து வருடம் படிக்கிறார்களே, ஒரு வருஷம் கிராமத்தில் போய் வேலை பார்த்தால் தான் சர்டிபிகேட் தருவோம், இல்லாவிட்டால் ஸர்டிபிகேட்டும் இல்லை ஒன்றும் இல்லை போ என்று சொல்லி விட வேண்டும். அப்படி கிராமங்களில் டாக்டர்களை போடுவதற்குள்ள வழி பற்றி மந்திரி அவர்கள் யோசித்துப் பார்த்து ஒரு முடிவிக்கு வரவேண்டும். என்னைப் போன்றவர்களின் காரியத்தை சொல்லவில்லை. எனக்கு எதாவது வந்தால் நான் குருஸ்வாமி முதலியாரிடம் சென்று ஒரு ஊசி போட்டுக் கொண்டு போய் விடுவேன். ஆனால் எல்லோருக்கும் அப்படி முடியுமா? ஒரு தலைவலி, கால்வலி என்று வந்தால் ஏதோ ஒரு சாம்பலைக் கொடுத்து விட்டு இது தான் மருந்து என்று சொன்னாலும்கூட அவர்களுக்கு ஒரு மன சாந்தி ஏற்படுகிறது. இதை எல்லாம் மந்திரி அவர்கள் பார்த்து ஏதோ ஒரு ஆயுர்வேத அல்லது யூனானி அல்லது ஒரு அலோபத்தி டாக்டரை கண்டிப்பாக கிராமங்களில் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தவேண்டும். அதற்கு வேண்டுமானால் ஒரு சட்டம் போடட்டும். அடுத்தபடியாக, நான் ஒரு தடவை திருநெல்வேலியில் இருந்து முக்கூடலிற்குப் போனேன். போனபோது பேட்டையில் ஒரு அரசாங்க கோழிப் பண்ணை இருந்தது. என்ன என்று பார்க்கலாம் என்று அதற்குள்ளே போனேன். அங்கு செவத்த கோழி 50 இருந்தது. அது இங்கிலீஷ் கோழி என்றார்கள். அது வருஷத்திற்கு 300 முட்டைவைக்கிறதாம். அங்கு மேஸ்திரி மாதிரி ஒருவர் இருந்தார். எத்தனை கோழி இருக்கிறது என்று கேட்டேன். 50 இருக்கிறது என்றார். அங்கு நான்கு பேர்கள் வேலையில் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதச் சம்பளம் 40 ரூபாயாம். நான்கு பேர்களுக்கு மாதம் 160 ரூபாயாகிறது. அவர்களை மேற்பார்வை செய்ய ஒருவர் இருக்கிறார். அவருக்கு சம்பளம் என்ன என்று கேட்டபோது அவருக்கு சம்பளம் 95 ரூபாயாம். நான் அவரிடம் கேட்டேன், எனக்கு 50 முட்டை வேண்டும், என்ன விலை என்று கேட்டேன். அதற்கு 10 முட்டைதான் வைக்கும் என்று பதில் வந்தது. 50 கோழி இருக்கிறதே என்று கேட்டதற்கு அப்படித்தான் என்று பதில் சொல்லப் பட்டது. நான் சொல்கிறேன். கோழிப்பண்ணை ஏரியாவில், வெளியில் முட்டை ஒன்றுக்கு இரண்டணா என்றிருந்தால் கோழிப்பண்ணை ஏரியாவில் ஒன்றரை அணாவிற்கு ஒரு முட்டை கிடைக்க வேண்டும். எங்கள் பகுதியில் முட்டை ஒன்றிற்கு ஒன்றேகால் அணா வீதம் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கித் தருகிறேன்.

இன்னும் ஒரு சில வார்த்தைகளை கூற விரும்புகிறேன். நமக்கு 4 p.m. பணம் இல்லை என்பது உண்மைதான், அதற்காக விவசாயிகளைப் போட்டு சிறுசேமிப்பு திட்டத்திற்கு என்று ரூபாய்க்கு 3 ரூபாய் வேண்டுமென்று குரவளையை பிடிக்கிறார்கள், விவசாயிதான் என்ன செய்ய முடியும். நிலத்தை சீர்திருத்த கடன், மாடு வாங்க கடன், வீடு கட்டுவதற்கு கடன், இதற்கிடையில் சிறு சேமிப்பு திட்டத்திற்கும் பணம் வேண்டுமென்றால் அவன் என்ன செய்ய முடியும். பணம் அரசாங்கத்திற்கு தேவைதான், அதற்காக இவ்வளவு கஷ்டப்படுத்தக்கூடாது, நானும் எங்கள் பக்கத்தில் தாசில்தாரோடு போய் இதற்கு வேலை செய்தும் வருகிறேன். இந்த நிலைமையில் இருக்கிறது. இந்த பணத்தை

யெல்லாம் யாரிடமிருந்து வாங்க வேண்டுமென்றால் ஆறு மாதத்திற்கு ஒரு தரம் புது பியூக், ப்ளிமௌத் என்று புதிய கார்கள் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள், இதைகூட ஒரு வருடம் வைத்துக் கொண்டிருந்தால் அதுவே பெரிய சேமிப்பாக இருக்கும், அதையெல்லாம் விட்டு விவசாயிகளிடம் வந்து சிறு சேமிப்புக்கு பணம் வேண்டும் என்றால் அவனால் என்ன செய்ய முடியும்? நான் இதையெல்லாம் சொல்லுவதால் மந்திரி அவர்கள் கோபப்பட்டுக்கொள்ளக் கூடாது, சமீபத்தில் மணிமுத்தார் அணையை திறப்பதற்கு நான்கு மந்திரிகள் போயிருக்கிறார்கள், இதற்காக அங்கு 68 ஜீப், மற்றும் ஆயிரக் கணக்கில் போலீஸ்காரர்கள், இவ்விதமாக பாழாக பணம் வீணாக்கப்பட்டிருக்கிறது. அணையை திறப்பதற்கு ஒரு மந்திரி போய் திறந்திருக்கலாம், ஆகவே, இம்மாதிரியான செலவுகளை எல்லாம் நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Sri V. SANKARAN :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் நமது நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் வரவு செலவு திட்டத்தை ஆதரிக்கும் முறையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ராஜ்யத்தில் என்ன என்ன திட்டங்கள் நடந்திருக்கின்றன, என்னென்ன நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன, இதன்மேல் அரசாங்கத்தின் கொள்கைகள் நடைமுறைகள் என்னென்ன என்பதைப்பற்றியெல்லாம் நன்றாக விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது மிக முக்கிய அம்சம் என்னவென்றால் மேலும் புது வரிகள் போடவில்லை, ஒன்றிரண்டு வரிகளை தவிர கூடுதலாக வரிகள் போடவில்லை, மேலும் பல சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது, கஜெட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுக்கு அவர்களின் பிள்ளைகளுக்கு உயர்நிலை பள்ளி வகுப்புகளிலும் இலவசமாக படிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது தவிர விற்பனை வரி சம்பந்தமாக வியாபாரிகளுக்கு பல அனுகூலங்கள் இருக்கும்படியான முறையில் அதை சீர்திருத்தம் செய்யப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது, இவ்விதம் பல நல்ல அம்சங்கள் பொருந்திய ஒரு திட்டம் இது என்பதை சொல்லிக் கொள்கிறேன். முதன் முதலாக எடுத்துக்கொண்டால் பெரிய நீர்பாசன திட்டங்கள் எல்லாம் நம் ராஜ்யத்தில் அநேகமாக முடிந்து விட்டன. சிறிய நீர் பாசன திட்டங்கள் பலவற்றை இன்னும் முடிக்க வேண்டியிருக்கிறது, ஆகவே அதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு இருக்கிறது. கண்மாய்களை எடுத்துக் கொண்டால் அரசாங்கத்தினுடைய டிராக்டர்களை உபயோகித்து உழுது அதிலுள்ள வண்டல்களை அந்த ஆயக்கட்டைச் சேர்ந்த உழுகிற விவசாயிகளே எடுத்துக் கொள்ளலாம் என்று முன்கூட்டி அரசாங்கம் விளம்பரம் சொல்ல வேண்டும். அவர்களே போட்டி போட்டுக் கொண்டு காலதாமதமின்றி எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். மேடுகள் தாழ்ந்து விடும். ஊளவாய் நன்றாக ஆழப்படுத்தப்படும். அடுத்தபடியாக மலைகளிலும் காடுகளிலும் உயர்ந்த ரக மரங்கள் வளர்க்கப் போவதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதில் இதற்கு முன்னால் எல்லாம் மலைகளிலிருந்து குழைகளை எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டு வந்தது. இப்போது மரக்கன்றுகள் நடும் காரணத்தைக் கொண்டு அடியோடு நிறுத்திவிட்டார்கள், இவ்விதம் குழைகளை எடுக்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அதை சற்று தளர்த்தி மலையிலுள்ள குழைகளை எடுத்துக்கொள்வதற்கு முன்போல் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக விவசாயிகளுக்குக் கடன் வசதிக்காக 300 பெரிய கூட்டுறவு சங்கங்களும், 200 சிறிய கூட்டுறவு சங்கங்களும் ஆரம்பிக்கப்படப்போவதாக தெரிகிறது. இதை கிராம மக்களிடத்தில் பிரபல்யப்படுத்தவேண்டும், இன்றைக்கு சாதாரணமாக கிராமம் மக்கள் எல்லோரும் கடன் வாங்கக்கூடிய நிலைமையில் இல்லை, அனேகம் பேருக்கு அப்ளிக்கேஷன் போடுவதற்கே தெரியாது, ஆகவே இந்த முறைகளை கிராம மக்களிடத்தில் பிரபல்யபடுத்த வேண்டும், இது சம்பந்தமாக கடன் வாங்கப்படும் பொழுது security வேண்டும் என்று கேட்கப்படுகிறது. இதற்கு சாதாரணமாக கிராம மக்களிடையில் 100-க்கு 10 பேர்கள் கூட வில்லங்கம் இல்லாத முறையில் போதிய செக்யூரிட்டி கொடுக்கக்



கூடியவர்களாக எதிர்பார்க்க இருக்க முடியாது, இந்த நிலைமையில் இருப்பதினால்தான் கடன் வசதி பெற முடியவில்லை, இதைப்பற்றி லேவாதேவிச் சட்டத்திலும் நாம் பார்த்தோம், இதனால் உண்மையில் அவசியமுள்ளவர்களுக்கு சரியாக கடன் உதவப்படுவதில்லை. ஆகவே எளிதான முறையில் அதை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தப்படியாக சொல்லும்பொழுது "நவீன விவசாய ஆராய்ச்சியின் பலன்களை ஒவ்வொரு விவசாயியும் உணரும்படி செய்வதற்கான அளவில் விவசாய இலாகா அமைந்திருக்கவில்லை" என்று பக்கம் 9-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுவரை சரியாக அமையவில்லையென்றாலும் இனிமேல் அவ்வாறு இருக்காது. விவசாய அதிகாரிகள் ஊக்குவிக்கப்பட்டு இருக்கிறார்கள். இது வரை குறைவாக இருந்த விவசாய அதிகாரிகளுடைய சம்பளம் உயர்த்தப்பட்டு போதிய அளவாக கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டு வந்தது. இப்போது (**Agriculture Demonstrator**) வேளாண்மை விளக்குநர்களுக்கு 100 என்று இருந்ததிலிருந்து தற்போது 135 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த **new scale**-ல் குறை (**Anomaly**) இருக்கிறது. அதாவது 15 வருடம் ஆகிவிட்ட உடன் பழைய சம்பளத்திலுள்ளவன் 210 ரூபாய்க்கு வந்து விடுகிறான். அதே சமயத்தில் புது சம்பளத்திலுள்ளவனும் 15 வருடத்தில் 210 ரூபாய்க்குத் தான் வரமுடியும், 16-வது வருடத்தில் பழைய **scale** உள்ளவன் 220 ரூபாய் அடைகிறான். புதிய **scale**காரன் 215 தான் பெற முடியும். இந்த **Anomaly**-யை இந்த யாகபுதிய **scale**-லிருந்து இதை போக்க வேண்டும். அடுத்தபடி சிறு ரகத் தொழில்களை எடுத்துக் கொண்டால் நமது ராஜ்யத்தில் சிறு தொழில்கள் நல்ல முறையில் ஆக்கம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. உதாரணமாக இண்டி எஸ்டேட்டில் பல நல்ல வேலைகள் நடைபெற்று வருகின்றன, இந்த விஷயத்தில் இதில் கொள்கை அடிப்படையில் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். சிறிய தொழில்களை எடுத்துக்கொண்டால் தனியார்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களுக்கு பயிற்சி அளிக்கலாம். ஊக்குவிப்பதாக சர்க்காரே தாங்களே சிறு தொழில்களை எடுத்துக் கொண்டு வர்த்தக முறையில் **commercial basis** வியாபாரிகள் போல **profit**-க்கு நடத்த முற்பட்டால் அது கொள்கையளவில் மாறுபட்டதாகும். ஆனால் தனியார்களுக்கு நல்ல பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். அதற்காக வேண்டிய உதவிகள் கொடுக்கலாம், இதல்லாமல் வெறும் வர்த்தக ஸ்தாபனங்களை நடத்துவதுபோல அரசாங்கமே நடத்த முற்படக்கூடாது என்றுள்ள என் யோசனையை தெரிவித்துக்கொள்கிறேன். கல்வி சம்பந்தமாக எடுத்துக் கொண்டால் அதில் பல நல்ல அம்சங்களும் இருக்கின்றன. உதவி சம்பளங்கள் எல்லாம் அதிக அளவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் ஒரு குறைபாடு இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டால் முன்பு எல்லாம் உதவி சம்பளத்தை இரண்டு தவணைகளாக கொடுக்கப்பட்டு வந்தது. இந்த வருடம் சரியாக காலா காலத்தில் இன்னமும் கொடுக்கப்படவில்லை. பரீட்சை நடக்கப்போகிற இந்த சமயத்திலும் இதுவரை கிடைக்கவில்லை என்றால் எவ்வாறு பரீட்சைக்கு தயார் செய்யமுடியும். நேற்று நான் வருகிறவரையிலும் மதுரைக் கல்லூரியில் பெரும்பான்மை மாணவர்களுக்கு இதுவரை வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. ஏதோ ஒரு அளவு வந்திருக்கிறது என்றும் சொன்னார்கள். அதிலும் முக்கியமாக எங்கள் பகுதியில் தேவர்கள், கள்ளர்கள் இவர்களுக்கு இதுவரை கட்டோடு வரவில்லை என்று சொன்னால் அது பலவித தப்பபிப்பிராயங்களுக்கும் பேச்சுக்கும் இடமளிக்கிறது. மேலும் சில ஹாஸ்டல்களில் **dividing system** இருப்பதால் வருட கடைசிவரை பணம் கொடுக்கவில்லையென்றால் வெளியே போங்கள் என்று பரிக்ஷை காலத்தில் ஹாஸ்டல் வார்டன்கள் சொல்லி விடுவதாகவும் கேள்விப்படுகிறேன். இந்தவிதமான நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஏற்பாட்டினால் மக்களுக்குள் தப்பபிப்பிராயம் கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் முதல் டெர்முக்குள் முதல் தவணையையும், இரண்டாவது தவணையை பிப்ரவரி மாதத்திற்குள்ளாவது கொடுத்தால்

[Sri G. Gomathisankara Dikshitar] [3rd March 1958

ஆக்கமுறையிலே அரசாங்கத்தினிடம் அறிவித்தோமானால், அக்குறைகளை நீக்க அரசாங்கம் வேண்டிய முயற்சிகளைச் செய்யுமென்று நம்புகிறேன்.

**(Deputy Speaker in the Chair).**

4-20 p.m. இந்த பட்ஜெட் தயார் செய்யப்பட்ட சமயத்திலே விலைவாசியினால் மக்கள் கஷ்டப்பட்டு வந்தார்கள். இப்பொழுது விலைவாசிகள் இறங்கு முகமாக இருப்பதைக் கண்டு நாம் சிறிது சந்தோஷம் அடையலாம். நமக்கு வேண்டிய உணவு உற்பத்திக்கு கடவுள் கிருபையால் பருவ மழை நன்றாக பெய்திருக்கிறது. சில ஜில்லாக்களில் சரியாக இல்லாவிட்டாலும் மற்ற ஜில்லாக்களில் நல்ல முறையில் பருவம் இருக்கிறது. அதன் காரணமாக உணவு உற்பத்தி மிகவும் பெருகும். பற்றாக்குறையை தீர்த்துக் கொள்ளக்கூடிய நிலைமையில் நாம் இப்பொழுது இருக்கிறோம். இப்பொழுது உணவு விலையும் கொஞ்சம் இறங்கிக்கொண்டு வருகிறது. விவசாய அபிவிருத்தியில் நமது அரசாங்கம் மிகவும் கருணையுடன் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறார்கள். விவசாய அபிவிருத்திக்கு என்று அரசாங்கம் ஒதுக்கி இருக்கக்கூடிய கோடிக் கணக்கான பணத்தை விவசாயிகள் மிகவும் நன்மையை அடையக்கூடிய திட்டங்களுக்கு செலவு செய்து வருகிறார்கள். அதனால் விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரம் உயரக் கூடிய முறையில் இருக்கிறது. சோஷலிஸ சமுதாய அமைப்பில் நமது அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருவதைப் பார்த்தால் அதைக் கண்டு நாம் எல்லோரும் மகிழ்ச்சிக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. அப்படி மகிழ்ச்சி அடைவதற்கும். நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

விவசாயிகளுடைய கடன் பளு குறைவதற்கு எவ்வளவோ விவசாயக் கடன் பாங்குகளை நிறுவி இருக்கிறார்கள். கூட்டுறவு முறையில் சுமார் 300 பெரிய கூட்டுறவு பாங்குகள் நிறுவப்பட்டிருக்கின்றன. 60–40 சட்டத்தின் பிரகாரம் விவசாயிகளுக்கு நிலச்சுவான்கள் மூலமாக கடன் பெற முடியாது என்ற நிலைமை ஏற்பட்ட காலத்தில் விவசாயிகளுக்கு கடன் கொடுத்து உதவி செய்வதற்காக கிராமங்களில் பாங்குகளை அமைத்து அவைகளின் மூலமாக கடன் கொடுத்து உதவி செய்து வருகிறார்கள். இதைக் கண்டு விவசாயிகள் மிகவும் திருப்தியான நிலைமையில் தங்களுடைய விவசாயத்தை நடத்தி வருகிறார்கள்.

இத்துடன் அவர்களுக்கு தக்காவி கடன், எருதுகள் வாங்குவதற்கு கடன் இன்னும் நல்ல விதைகள் அவர்கள் பெறுவதற்கு வேண்டிய சௌகரியங்கள் இவைகளையெல்லாம் அவர்களுக்குச் செய்து வருவதால் உணவு உற்பத்தியானது ஒரு நல்ல முறையில் வளர்ந்து கொண்டு வருகிறது என்பதை நாம் கண்டு கொள்ளலாம்.

அது மாத்திரம் அல்ல, தேசீய விஸ்தரிப்பு, சமுதாய அபிவிருத்தி திட்டங்கள் மூலமாக அநேகமாக மூன்றில் ஒரு பங்கு சமுதாய நல திட்டத்தின் கீழ் இப்பொழுது சில கிராமங்கள் வந்திருக்கின்றன. இந்த திட்டங்களின் பயனாக கிராமங்களில் விவசாயிகள் நல்ல விஞ்ஞான முறையில் விவசாயத்தை கண்ணும் கருத்துமாக செய்வதற்கு போதிய கவனம் செலுத்திக் கொண்டு வருகிறார்கள். அப்படி கவனம் செலுத்தி வருவதைப் பார்த்தால் அவர்கள் இப்பொழுது நல்ல முறையில் திருப்தி அடைந்து நல்ல மனப்பான்மையுடன் அவர்கள் இயங்கி வருகிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். இதை நாம் உண்மையாகவே பார்க்கலாம். ஆனால் குறைகள் இருக்கலாம். அதனால் பாதகம் இல்லை.

மின்சாரம் மூலமாக நமது அரசாங்கம் விவசாயிகளுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்திருக்கிறார்கள். அதைக்கண்டு அரசாங்கம் பெருமைப் படலாம். மின்சார அபிவிருத்தியில் மற்ற ராஜ்யங்களை விட நமது ராஜ்யம் மிகுந்த அளவில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. இதை நாம் பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம். பெரிய திட்டங்களை நிறுவி லட்சக்கணக்கான ஏக்கர் நிலத்தை விவசாயம் செய்வதற்கு தயார் செய்து அதில் விவசாயிகள் விவசாயம் செய்யும்படியான நிலைமையை ஏற்படுத்தியிருப்பதால் நமது ராஜ்யத்தில் உணவு உற்பத்தி பெருகும். இது விஷயமாக நமது அரசாங்கம் நன்கு கவனம் எடுத்துக்கொண்டு அதற்காக வரவு செலவு திட்டத்தில் பணம் ஒதுக்கி வைத்திருப்பது மிகவும் போற்றத்தக்க



3rd March 1958] [Sri G. Gomathisankara Dikshitar]

தாகும். மற்றும் பல ஆராய்ச்சி பண்ணைகளையும் அமைத்திருக்கிறார்கள். தற்போது அம்பாசமுத்திரத்தில் நல்ல நெல் ஆராய்ச்சி பண்ணை இருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளவர்கள் நெல் ஆராய்ச்சியில் நல்ல அனுபவம் உள்ளவர்கள். தஞ்சைக்கு அடுத்தபடியாக திருநெல்வேலி ஜில்லாவாசிகளைச் சொல்லலாம். நல்ல ரக நெல்லை திருநெல்வேலி ஜில்லாவில் உற்பத்தி செய்யக்கூடியவர்கள் இருக்கின்றார்கள். தஞ்சை ஜில்லாவிற்கு அடுத்தபடியாக அங்கு ஆராய்ச்சி செய்யப்படுகிறது. இன்னும் அதை அபிவிருத்தி செய்வதற்கு நமது அரசாங்கம் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அங்கே நடைபெறுகிற ஆராய்ச்சிகளை எல்லா விவசாயிகளும் அறிவதற்கு ஆவன செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகள் அப்படி ஆராய்ச்சி பண்ணப்பட்ட என்னென்ன புதுரக விதைகளை தயார் செய்யப்படுகின்றன என்பதை அறிவதற்கு அதிகப்படியாக ஒரு பிரசாரம் தேவை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நமது குடிசைத் தொழில்கள் அநேகமாக எல்லா இடங்களிலும் இப்பொழுதுதான் நிறுவப்பட்டு அதன் மூலமாக தொழில் வளம் பெற்று வருகின்றன. நமக்குத் தேவையானது அதிகமாகும். எல்லா கிராமங்களிலும் குடிசைத் தொழில் அபிவிருத்தி செய்வதற்கு மக்கள் மிக ஆவலுடன் முன் வருகிறார்கள். அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நமது அரசாங்கத்திற்கு போதிய வசதி குறைவாகவே இருக்கிறது. எந்தெந்த கிராமங்களுக்கு குடிசைத் தொழில் இன்றியமையாததாக இருக்கின்றனவோ, எங்கேயெல்லாம் குடிசைத் தொழில்கள் தேவையோ அங்கேயெல்லாம் அதைப்பற்றி கவனிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் அதிகமாக கவனிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சில சில இடங்களில் குறைந்த அளவில் ஊதியமும் பெறுகின்றனர். குறிப்பாக எனது தாலூகாவை எடுத்துக்கொண்டால் கைத்தறி நெசவுக்கு மிகவும் வாய்ப்பு இருக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சரக்கெல்லாம் இப்பொழுது விலையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. அதனால் நமது தொழில் மந்திரி அவர்கள் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய 1½ அணா ரிபேட்டை கொடுக்க வேண்டும் என்று முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார். அதன் மூலமாக, கைத்தறி நெசவாளர்களுடைய சிறிய கஷ்டம் நீங்கும் என்று நான் நம்புகிறேன்.

அது மாத்திரம் அல்ல. மணிமுத்தார் அணை திட்டத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இப்பொழுது நல்ல முறையில் விவசாயம் செய்யக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறது. இதைக் கண்டு அங்குள்ள மக்கள் இந்த அரசாங்கத்தை மனமார வாழ்த்தி தங்களுடைய மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். அதற்கு அவர்களும் கடமைப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தை எவ்வளவோ போற்றுகிறார்கள். ஜலம் இல்லாத இடத்தில் இப்பொழுது ஜலப்பெருக்கு எடுப்பதைக் கண்டு அங்குள்ளவர்கள் ரொம்பவும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஆனால், அந்தப் பாசன முறை அங்கு நன்கு வகுக்கப்பட்டு (ஈக்விடபிள்
டிஸ்ட்ரிப்யூஷன்) சமமான பாசன ஜலப் பங்கீடுதல் நடைபெறுவதற்கு அங் 4-20 p.m.
குள்ள சிவில், எக்ஸிக்யூடிவ் இறிகேஷன் அதிகாரிளும், இன்ஜினீரிங்
அதிகாரிகளும் ஆவன செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில்
நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மணிமுத்தாறு அணை கட்டப்பட்டு விட்டது, 25 லட்சம் ரூபாய் பெறுமான கட்டிடங்களும், ரோடு வசதியும், ஜல வசதியும், மின்சார வசதியும் உள்ள அத்தகைய இடத்திலே நல்ல ஒரு தொழிலை அரசாங்கத்தின் உதவியின் மூலமாக அங்கு ஏற்படுத்தினால், திருநெல்வேலி ஜில்லா வாசிகளுக்கு அது ஒரு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கைத்தறி நெசவுக்குப் பெயர் பெற்ற அந்த இடத்தில் கைத்தறி நெசவுக்கு சாயம் போடக் கூடிய தொழிலையும், அச்சடிக்கக் கூடிய தொழிலையும், அதற்கு வேண்டிய ஒரு நல்ல பள்ளிக்கூடத்தையும் நிறுவினால் அனேக கைத்தறி

நெசவாளர்களுக்கு புத்துணர்ச்சியை அளிப்பதாகும். அந்த வகையில் அரசாங்கம் கைத்தறி அபிவிருத்தியை ஊக்குவிக்கும் என்று நான் நம்புகிறேன். இதைப்போல் இன்னும் பல குடிசைத் தொழில்களைத் துவக்குவதற்கு மணிமுத்தாறு பகுதி மிகுந்த லாயக்கான பகுதி என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக சுகாதார விஷயம். நமது அரசாங்கத்திற்கு எவ்வளவோ பொறுப்பு இருக்கிறது. மக்களுடைய முன்னேற்றப் பாதையிலே நமது காங்கிரஸ் அரசாங்கம் ஆவன செய்து கொண்டுதான் வருகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்காமல் இருக்க முடியாது. ஆனாலும், நமக்குத் தேவை அதிகம். பணம் மிகக் குறைவு. ஆஸ்பத்திரிகள் நல்ல முறையிலே பெருக்கப்படவேண்டும். அவைகளுக்குப் போதிய டாக்டர்கள் தேவை. குறிப்பாக கிராமங்களுக்கு மருத்துவச்சாலைகள் மிக மிகத் தேவை. ஆனால், நல்ல டாக்டர்களோ, மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றவர்களோ, மற்ற வைத்திய சம்பந்தமான ஊழியர்களோ மிகக் குறைவாக இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் தயார் செய்வதற்கு இன்னும் அதிகமான மெடிகல் காலேஜ்கள் நம் ராஜ்யத்திலே ஏற்படுத்தவேண்டுமென்று இந்தக் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தாலூகாவிலே தாம்பிரபரணி பாசனப் பிரதேசம் செழிப்பானது. கன்னடியங்கால் கரையோரத்திலுள்ள மக்கள் சுகாதாரக் குறைவால் தொத்து வியாதியினால் பீடிக்கப்பட்டு சாகின்றவர்கள் மிக அதிகம். இந்த வருஷம் கூட, திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கக்கூடிய சுகாதார அதிகாரிகள் மிக ஜாக்கிரதையாக இருந்து காலரா நோய் பரவ விடாதபடி கிராமங்கள்தோறும் ஊசி குத்தி (inoculation) தடுத்தார்கள். அப்படியிருந்துங்கூட, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி (Protected Water Supply Scheme) இல்லாததாலே, விக்கிரமசிங்கபுரத்தில் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். விக்கிரமசிங்கபுரத்தில் ஒரு நூற்பு ஆலை இருக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் நிரம்பிய ஊர். அம்பாசமுத்திரம் ஒரு பெரிய பஞ்சாயத்து பிரதேசம். கல்லிடக்குறிச்சி, வீரவனல்லூர், சேரன்மகாதேவி மேஜர் பஞ்சாயத்துக்கள். 20 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட நகரங்கள். பத்து வருஷங்களுக்கு முன்னால் ஒரு திட்டம் போட்டிருந்தார்கள். அதன்படி, ஐந்து பஞ்சாயத்து போர்டுகளையும் இணைத்து, 25 லட்சம் ரூபாய் செலவில், தாம்பரபரணி கரையோரம் உள்ள ஐந்து ஊர்களுக்கும் சேர்ந்து ஒரு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டம் கொண்டுவர இருந்தார்கள். ஆனால், இப்பொழுது நிறைவேற இல்லையென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். முக்கியமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கும் அந்த விக்கிரமசிங்கபுரத்தில் கட்டாயமாக ஒரு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டம் செயல்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகள் நமது ராஜ்யத்திலே திட்டப்படி நடைபெறுவதற்கு இந்த வரவு செலவுத் திட்டத்திலே அதிகமாக நல்ல முறையிலே தொகை ஒதுக்கப்பட்டிருப்பதைக் கண்டு நாம் சந்தோஷப்பட வேண்டும். நமது நாட்டின் முன்னேற்ற வேலைக்கு மனித சக்தியையெல்லாம் திரட்டி, ஆக்க வேலையில் ஈடுபடவேண்டும் என்பதற்காக, இரண்டாவது அல்லது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களையெல்லாம் கைக்கொள்ள வேண்டிய முறையை நமது இந்திய அரசாங்கத்தின் பிரதம மந்திரி, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள். நமக்கு அடிக்கடி எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். நமது நாட்டிலே, தன் கையே தனக்கு உதவி என்ற அந்த முறையைக் கடைப்பிடித்து, நமது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றுவதற்கு இந்த சிறு சேமிப்புத் திட்டம் மிகவும் நல்ல முறையிலே எடுத்துக்காட்டாக இருக்கின்றதென்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன். இதன்



மூலமாக இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நமது ராஜ்யத்திலே வெற்றிபெறும். அதற்கு எல்லோரும் ஆவன செய்ய வேண்டுமென்று நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய நிதி மந்திரி அவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தை நாம் பெருமைப்படக்கூடிய, தமிழர்களே பெருமைப்படக்கூடிய முறையிலே பற்றுக்குறையை ஈடுகட்டுவதற்கு பொதுமக்களின் தலையில் வரிச்சுமையை வைத்துவிடாதபடி, நல்ல முறையிலே தயாரித்திருக்கிறார்கள் என்றால், அது நாம் மிகவும் போற்றக்கூடியது தான்.

கடைசியில், இந்திய அரசாங்கத்தில் நிதி மந்திரியாய் இருந்த ஸ்ரீ டி.டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களுடைய சேவையை நாம் மெச்சக் கடமைப்பட்டிருக்கிறோம். பொருளாதாரத்திலே மிகவும் தேர்ச்சி பெற்ற, இந்திய அரசாங்கத்தினுடைய வரவு செலவை நடத்துவதற்கு மிக்க ஆற்றல் கொண்டுள்ள ஒரு நிதி மந்திரி, நமது சென்னை ராஜ்யத்திலிருந்து போய் சேவை செய்தார் என்றால் அதை நாம் போற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த முறையிலே அவருடைய சேவையைப் பாராட்டி நிதி அமைச்சர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார். அதை நாம் அனைவரும் நல்ல முறையிலே, சமரசமான முறையிலே, அரசியல் கண்ணோட்டத்தை விட்டு விட்டு, கவனித்தோமானால், அந்தப் பாராட்டுதலிலே நாமும் பங்கெடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற முடிவுக்கு வருவோம். கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தை நான் ஆதரித்து, இத்துடன் என்னுடைய உரையை இப்பொழுது நிறுத்திக்கொள்ளுகிறேன்.

**SRI M. P. SUBRAMANIAM:** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, வரவு செலவுத் திட்டத்தின் மேல் இன்று தொடங்கியிருக்கும் விவாதம் இந்த மாதம் முழுவதும் நடைபெறும் என்பதை நாம் நன்றாக அறிவோம். இந்த விவாதத்தில் கலந்துகொள்ளுகிற உறுப்பினர்களுடைய கருத்துக்களை, கருத்துக்கள் என்று சொல்லும்போது, குறைபாடுகளையும் பார்க்கும்போது கடந்த ஆண்டு இந்த அவையின் உறுப்பினர்கள் என்ன குறைபாடுகளையும், குறைகளையும் தெரிவித்தார்களோ அவைகளையே தான் பெரும்பாலும் இன்றைய விவாதத்திலே நாம் பார்க்கிறோம். கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகள் சட்ட சபையிலே இருந்த அனுபவத்திலிருந்து நான் கூறவேண்டுமானால் ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் தங்களுடைய தொகுதியிலோ அல்லது குறிப்பிட்ட இலாக்காகளிலோ காணப்படுகிற குறைகளை சட்டசபையிலே திரும்பத் திரும்ப கூறினாலும், அப்படி உறுப்பினர்களால் கூறப்படுகிற குறைபாடுகளும் குறைகளும் தீர்க்கப்படவில்லை என்பதோடு மட்டும் அல்லாமல், அவைகளின் பேரில் அரசாங்கத்தின் கருத்துக்கள் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு வாய்ப்பும் வசதியும் இல்லாமல் இருக்கிறது. அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர்களாய் வீற்றிருப்பவர்கள், உறுப்பினர்கள் கூறக்கூடிய ஒவ்வொன்றுக்கும் பதில்கூற முடியாது என்பதை நான் உணருகிறேன். ஆனால், கூறுகிற குறைபாடுகளை நல்ல முறையிலே கவனித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ இலாகாக்களுக்கோ அனுப்பி, பதில்களை வாங்கி அந்தந்த உறுப்பினர்களுக்கு அனுப்பினால், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு முடியும். அதுதான் சட்டசபையினுடைய கௌரவத்துக்கும் ஒத்ததாகும் என்று நினைக்கிறேன். இந்த வாக்குறுதியை கடந்த ஐந்தாண்டு 4-40 p.m.
காலத்திலே மராமத்து இலாகா மந்திரியாக இருந்த ராமநாதபுரம் ராஜா அவர்கள் அளித்தார்கள். ஆனால் அந்த வாக்குறுதி இன்றும் நிறைவேற்றப்படவில்லை. அந்த வாக்குறுதியை இந்த அமைச்சரவை நிறைவேற்ற வேண்டும் என்பது எனது பொதுவான அபிப்பிராயமாகும்.

இந்த ஆண்டின் வரவு செலவு திட்டப் பிரசங்கத்தை எடுத்துக் கொள்வோமானால் அது சாதாரணமாக ஆண்டு அறிக்கையைப் படிப்பது போலத் தான் அமைந்திருக்கிறது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. கடந்த

[4-10 p.m. தான் "**dividing system**" முறைப்படி நடக்கின்ற பல பள்ளிக்கூடங்களுக்கும் கல்லூரிகளுக்கும் சௌகரியமாக இருக்கும். இதை அரசாங்கம் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்தல ஸ்தாபனங்கள் சம்பந்தமாக பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் மிகவும் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டு, அதற்காக 86 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமான தொகை ஒதுக்க வேண்டுமென்று நினைக்கிறேன். பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இல்லாமல்தான் டைபாய்டு, காலரா, அம்மை போன்ற பல வியாதிகள் வருகின்றன. குடிதண்ணீருக்காகப் பணம் செலவழிக்கப்பட்டால், வியாதிகளுக்காகச் செலவிடப்படும் பணம் மிச்சம் ஆகும்.

அடுத்தபடியாக, வைகை ரிசர்வாயரிலிருந்து எங்களுக்கு தண்ணீர் ஸப்ளை செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது நாங்கள் வைகை ஆற்றை எதிர்பார்க்க முடியவில்லை. சில வருடங்களாக ஊற்றுக்கள் கீழே போய்க் கொண்டிருக்கின்றன. அணைக்கட்டுகள் மேலே கட்டக்கட்ட, ஊற்று நீர் கீழே போய்க் கொண்டிருக்கிற காரணத்தால் வைகை நதியை எதிர்பார்க்க முடியாமல் இருப்பதால் ரிசர்வாயரிலிருந்து கோடை காலத்தில் தண்ணீர் சப்ளை செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிடில் நீர்வசதி குறையவும் ஜனத்தொகை பெருகிக் கொண்டே போகும் நிலையில் சமாளிக்க முடியாத நிலைமை ஏற்படும்.

தனிப்பட்ட வைத்தியர்கள், அதாவது எம்.பி.பி.எஸ். பரிட்சையில் தேறியவர்கள், குறிப்பாக புதிதாக தேறிவந்த தம்பதிகள், 100 அல்லது 150 ரூபாய்க்கு ஒரு வீட்டை எடுத்துக்கொண்டு "நர்ஸிங் ஹோம்" **Maternity Home** நடத்துகிறார்கள். சிறிய சந்துகளிலே இம்மாதிரி "நர்ஸிங் ஹோம்"-களை நடத்துகிறார்கள். அங்கே மிகவும் சுகாதாரக் குறைவான காற்றோட்டம் இல்லாத சூழ் நிலை இருக்கிறது. குறுகிய இடங்களில், சரியாகக் கூடப் படுக்க முடியாத இடத்தில் 30 அல்லது 40 நோயாளிகளைப் போடுகிறார்கள். ஆகவே இந்த மாதிரி நடத்தப்படும் "நர்ஸிங் ஹோம்"-களுக்கும் **Maternity Home**-களுக்கும் ஒரு லைசென்ஸ் முறையை ஏற்படுத்தி அவர்களையும் ரெஜிஸ்தர் செய்யவேண்டுமென்று செய்தால் நன்றாக இருக்கும். தவிர, தகுதியில்லாத நர்சுகள் அதிகமாக இருக்கிறார்கள். தகுதி பெற்றவர்களையே நியமனம் செய்யவேண்டும் என்ற முறை இருக்கவேண்டும்.

எங்கள் முனிசிபாலிட்டியின் ஜனத்தொகை 4 லட்சத்திற்கு மேல் இருக்கிறது. இப்பொழுது 2 லட்சம் ஜனத்தொகை உள்ள இடங்களுக்கு 42 ஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று ஸ்தலஸ்தாபன அறிக்கையில் காணப்படுகிறது. ஆகவே எங்களுடைய முனிசிபாலிட்டிக்கு தனிப்பட்ட முக்கியத்துவம் கொடுக்க வேண்டியிருக்கிறது. 54 அல்லது 60 ஸ்தானங்களாவது வழங்க வேண்டும். பழைய முறையில் வார்டுகள் நிர்ணயித்திருப்பது சரியல்லாமல் இருக்கிறது. 2,000 அல்லது 3,000 பேர் உள்ள சில வட்டாரத்திற்கு ஒரு வார்டு. சில வார்டுகளின் ஜனத்தொகை 10,000 ஆகக் கூட இருக்கிறது. ஆகையால் இந்த ஏற்றத்தாழ்வை நீக்கி 1,000-க்கு மேல் வித்தியாசம் இல்லாமல் இந்த வார்டுகளைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சியில் உள்ள சில தோழர்கள் எவ்வாறு நம்முடைய ராஜ்யத்தில் பல அணைக்கட்டுகள் கட்டப்படவில்லை, தொழிற்சாலைகள் அமைக்கப்படவில்லை என்றெல்லாம் இங்கேயும், வெளி மேடைகளிலும் பேசுகிறார்கள். அவர்களுடைய குற்றச்சாட்டு கொஞ்சம்கூடப் பொருந்தாது. அவையெல்லாம் கற்பனை வாதங்கள் என்பதை நம்முடைய நிதி மந்திரி அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய ஆகாய பந்தல்களுக்கு கால்கள் இல்லை என்பதை நமது நிதி மந்திரி சுருக்கமாக எடுத்துக்காட்டி பதில் கூறி இருக்கின்றார்கள். 6-ம் பக்கம் 7-வது பாராவில் நம்முடைய பிரச்னை நம்முடைய வசதிகளை பயன்படுத்திக் கொள்ளத் தவறியதில்லை. மேலும் திட்டங்களை வகுப்பதற்கு போதிய இயற்கை வசதிகள்



இல்லை என்பதுதான் என்று தெள்ளத் தெளிவாக பதிலளித்து இருக்கிறது. குழந்தை சிரமப்பட்டு ஊதி ஊதிப் பெரிதாக்கும் ஒரு பலூனில் ஒரு சிறிய ஊசி பட்டால் காற்று முழுவதும் வெளியேறி இருந்த இடம் தெரியாது போய் விடுமோ அவ்வாறு மந்திரியினுடைய சிறிய இந்த விளக்கமே இந்த மாதிரிக் கற்பனை வாதங்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போக்கடித்து இருக்கிறது.

அடுத்தப்படியாக, உணவு உற்பத்தியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 1955–56-ல் மொத்த உற்பத்தி 44 லட்சம் டன். 1956–57-ல் அது 46 லட்சம் டன்னாக உயர்ந்தது. நடப்பு ஆண்டில் உணவு உற்பத்தி மேற்கொண்டு 3 லட்சம் டன் வரை அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், ஆனால் மேலும் போகப்போக முயற்சி அளவிற்கு ஏற்ற பலன் இட்டாத உச்ச நிலையை அடைந்து விடலாம் என்று எச்சரித்து இருக்கிறார். அதே சமயம் ஜனத்தொகையை எடுத்துக் கொண்டால் வருடத்திற்கு 1¼ சத விகிதம் தவறாது அதிகரித்து வருவதாக நிபுணர்கள் கணக்கிடுகிறார்கள். ஆகவே உணவு உற்பத்தி பெருக்கத்துடன் ஜன உற்பத்தி குறைந்தால் ஒழிய இந்த மாதிரி பிரச்சனைக்கு வழி கிடையாது, ஜன அதிகரிப்பைச் சமாளிக்க குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பிரசாரம் செய்ய வேண்டும். நகரங்களில் மட்டுமல்லாமல், கிராமப்பகுதிகளிலும் கூட பிரசாரம் செய்யவேண்டும். இது அரசாங்கத்தின் ஒரு முக்கியமான வேலையாக இருக்கவேண்டும் என்று கூட நான் சொல்லுவேன்.

ஏழ்மை உதவிச் சம்பளம் கொடுப்பதில் எந்த வகுப்பைச் சேர்ந்த ஏழை மாணவனாக இருந்தாலும், அந்த மாணவனுக்குச் சலுகை அளிக்க வேண்டும். ஏழை மாணவர்களை எடுத்துக் கொண்டால், தாங்கள் முன்னுக்கு வரவேண்டும் என்ற ஆர்வத்தோடு, தங்கள் திறமையை உபயோகித்து முயற்சி செய்து படிக்கிறார்கள். திறமை அதிகமாக இருந்தால் அத்தனைக்கு அத்தனை ஏழ்மையிலிருந்து வெளியேற வேண்டும் என்ற ஆத்திரம் என்று புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே எல்லா ஏழை மாணவர்களையும், வகுப்பு வித்தியாசம் பாராட்டாமல் ஒரே விதமாகப் பாவிக்கவேண்டும். அவர்களுடைய திறமைக்கேற்றவாறு சம்பளச் சலுகை அளிக்கவேண்டும். எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், திறமையுள்ள மாணவர்களை முன்னுக்கு வர உதவுவது ஒவ்வொரு அரசாங்கத்தின் கடமையாகும். வகுப்புவாரி வித்தியாசம் பாராட்டாமல், 100 ரூபாய் குறைந்த வருமானமுள்ளவர்கள் ஏழைகள் என்று வைத்துக்கொண்டால் பிரதிபக்ஷமின்றி உதவிச்சம்பளம் அளிக்கவேண்டும்.

அடுத்தபடியாக உணவு உற்பத்தியைப் பெருக்க எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சிகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நல்ல உயர் ரக வித்துக்களையும், இரசாயன உரங்கள், பிண்ணாக்கு, தழை உரம் முதலியவைகளை உபயோகித்து வெளி உதவிகள் இல்லாமலேயே உணவு பற்றாக்குறையை பெரிதளவு குறைக்கலாம் என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உள் நாட்டு வசதிக் குறைவை ஈடுகட்டுவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். எல்லா நல்ல அம்சங்களும் அடங்கிய இந்த வரவு செலவுத்திட்டத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்

**SRI G. GOMATHISANKARA DIKSHITAR:** சபாநாயகர் அவர்களே, பொருளாதார நிபுணர்கள் போற்றக்கூடிய வகையிலே நமது நிதி மந்திரி அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை, நாம் எல்லோரும் போற்றக்கூடிய முறையிலே தயாரித்து இருப்பதைப் பாராட்டி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை, எதிர்க் கட்சியிலுள்ள அன்பர்கள், உண்மையாகவே ஆக்க மனப்பான்மையோடு கவனிப்பார்களேயானால், அதிலுள்ள நல்ல அம்சங்களை வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டம் தயாரித்திருப்பதிலே நமக்கு பல குறைகள் இருக்கலாம், தேவைகள் இருக்கலாம்.

[Sri M. P. Subramaniam] [3rd March 1958

ஆண்டில் செய்தது என்ன, அதை எவ்வாறு இவ்வாண்டும் செய்வது என்பதான ரீதியில் நிதி அமைச்சருடைய பேச்சு அமைந்துவிட்டது என்பதைக் கூறவேண்டும். இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தை 15 லட்சம் உபரி வரவு செலவுத் திட்டமாக அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். நான் 15 லட்சம் ரூபாய் உபரி என்பதை மகிழ்ச்சிக்குரிய விஷயமாக எடுத்துக் கொள்ளவில்லை. சாதாரணமாக குடும்பங்களின் வரவு செலவுத் திட்டத்தை வரவு எவ்வளவு என்பதைக் கணக்கில் கொண்டு செலவை நிர்ணயம் செய்வது பொருந்தும். நாட்டின் வரவு செலவுக் கணக்கை அந்த ரீதியில் தயாரிப்பது அறிவுக்குப் பொருத்தமானது இல்லை. செலவுகள் என்ன என்ன செய்யப்படவேண்டும் என்பதை நிர்ணயம் செய்துகொண்டு அதற்கு ஏற்றபடி வருவாயைக் கண்டுபிடிப்பது தான் சரியான முறையாகும். ஆனால் இவ்வாண்டு நிதி அமைச்சர் அவர்கள் உபரி வரவு செலவுத் திட்டமாக அமைக்க வேண்டும் என்பதற்கு அத்தியாவசியமான செலவுகளைக் கூட விட்டிருக்கிறார்கள். அவரது வரவு செலவுத் திட்ட பிரசங்கம் நாட்டின் நிலைமையை சரியான முறையில் பிரதிபலிப்பதாக இல்லை. நாட்டின் தேவைகளை நன்கு உணர்ந்து, மக்களுடைய குறைகளை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சர் அவை அக்கறை கொஞ்சங்கூட எடுத்துக் கொள்ளவில்லை என்று கூறுவேன். உதாரணமாக பேப்பரில் பார்த்து வருகிறோம். மார்ச் 13, 14–ந் தேதிகளில் மின்சார இலாகா ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை பேப்பர்களில் வந்திருக்கிறது. உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 16 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள் இன்று நேற்று இருப்பது அல்ல, 11 ஆண்டு காலமாக அரசாங்கத்திற்கு அவர்கள் அந்தக் கோரிக்கைகளை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மூன்று முறை அவர்கள் வேலை நிறுத்தம் நோட்டீஸ் கொடுத்து அரசாங்கத்தின் நல்லெண்ணத்தின் காரணமாக வாபஸ் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் அடாபிடியானது இல்லை. மிகவும் நியாயமானது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ராமநாதபுரம் ராஜா அவர்கள் அந்த இலாகா அமைச்சராக இருந்தபோதும் இரண்டு முறை அவை நியாயமானது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். 40 ஆயிரம் தொழிலாளர்கள், 30 ஆயிரம் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படாமல் டெம்பரரியாகவே பலகாலமாக வைத்திருக்கப்படுவது மிகவும் அநீதியானது. அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அந்த இலாகா வெகு விரைவில் கலைக்கப்படும் என்கிற எண்ணமா? நாளுக்கு நாள் அது விரிவடைந்துகொண்டே இருக்கிறது. அப்படியிருக்க உடனடியாக அந்த ஊழியர்களை நிரந்தரம் செய்வதற்கு என்ன சங்கடம் இருக்கிறதுஎன்பது தான் தெரியவில்லை. அதுமட்டுமின்றி பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் நான்கணு வீதம் பஞ்சப்படி கூட இல்லாமல் வைத்திருப்பதும் க்ஷேம நல அரசாங்கத்தை நிர்மாணிக்கப் போகிறோம் என்பவர்களுக்கு, சமதர்ம சமுதாயத்தை சமைக்கப் போகிறோம் என்பவர்களுக்கு உகந்தது அல்ல என்று கூற விரும்புகிறேன். இந்த அரசாங்கத்தின் மூன் அவர்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளை வைத்தபோது மின்சார போர்டு அமைய இருக்கிறது. இவ்விஷயங்களை அந்த போர்டு கவனிக்கும் என்று அரசாங்கத்தரப்பிலிருந்து சொல்லப்பட்டது. அவர்களைக் கேட்டால் அரசாங்கம்தான் முடிவு செய்ய வேண்டும் என்கிறார்கள். இவர்களிடம் கேள்வி கேட்டால் போர்டு சுதந்தரமானது, அவர்கள் முடிவு செய்யலாம் என்பதும், அவர்களைக் கேட்டால் அரசாங்கம் தான் முடிவு செய்ய வேண்டும் என்பதும் ஆக இருந்தால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய நிலைமை என்னவென்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இன்றையதினம் தொழிலாளர்களோடு கலந்து பேசி கன்ஸிலியேஷன் செய்து வைக்க முன் வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவைகளைத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் தொழிலாளர்களிடத்தில் கன்ஸிலியேஷன் நடத்துவது இதுதான் முதல் தடவை என்று நான் அறிகிறேன். கன்ஸிலியேஷன் முடியும் மட்டும் வேலை நிறுத்த நோட்



3rd March 1958] [Sri M. P. Subramaniam]

டீசை வாபஸ் வாங்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் எந்த முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்போகிறார்கள் என்பதைப் பற்றி எதுவும் சொல்லவில்லை.

அதோடுமட்டுமல்ல. நமது ராஜ்யத்திலுள்ள என். ஜி. ஓக்களுடைய குறைகளைப் பார்க்கிறோம். தங்களுடைய குறைபாடுகளைத் தெரிவித்துக் கொள்வதற்கு அவர்கள் கொண்டாடாத கண்டன நாட்களே கிடையாது. அவர்கள் அணியாத பாட்ஜுகளே கிடையாது. அவர்கள் அனுசரிக்காத எதிர்ப்பு தினங்களே இல்லை என்று சொல்ல வேண்டும். அவர்களுடைய குறைகளை உண்மையிலேயே கவனித்து நிவர்த்தி செய்வதற்கு இந்த சர்க்கார் எவ்வித பெரு முயற்சியும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. என். ஜி. ஓ. குழந்தைகளுக்கு பத்தாவது வரை இலவசமாகப் படிப்பதற்கு வசதி செய்து கொடுத்திருக்கிறோம் என்று சொல்லலாம். இதனால் ஒருசிலர் பயன் அடையலாமே தவிர பெருவாரியான பேர்களுக்கு நன்மை அளிக்கப்போவதில்லை. மத்திய அரசாங்கம் என்றாலும், மாகாண அரசாங்கம் என்றாலும் ஒன்றுதான். வங்காளமாக இருந்தால் தான் என்ன, ஒரிஸாவாக இருந்தால்தான் என்ன, கேரளமாக இருந்தால்தான் என்ன, சென்னையாக இருந்தால்தான் என்ன என்பதாக இதர விஷயங்களில் சமத்துவத்தைப் பேசுகின்ற சர்க்கார், இவை எல்லாம் பாரதத்தின் அங்கம் என்று சொல்கிற சர்க்கார் சென்னையில் உள்ள மத்திய அரசாங்கத்தின் ஊழியர்களுடைய சம்பளம் என்ன அலவன்சு என்ன, சென்னை அரசாங்கத்தின் ஊழியர்களுடைய சம்பளம் என்ன அலவன்சு என்ன என்பதைப் பரிசீலனை செய்து இரண்டுக்கும் இடையேயுள்ள பெரும் வேறுபாடுகளைக் குறைந்த அளவில் அலவன்சாக ஒன்றாக இருக்கும்படி செய்ய எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காதது மிகவும் வருந்த வேண்டிய விஷயமாகும். குறிப்பாக இன்றைய தினம் மத்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட கமிஷன் 5 ரூபாயிலிருந்து 7 ரூபாய் வரையில் மாகாண அரசாங்க ஊழியர்களுடைய அலவன்சும் உயர்த்தப் பட வேண்டும் என்பதாக சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இதற்காக 6 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும் சொன்னாலும் கூட இவர்கள் ஊழியர்களுடைய நலனைக் கருதி 5 ரூபாய் கூட அதிகப் படுத்த முன் வராதது மிகவும் வருந்த வேண்டிய விஷயமாகும்.

இன்னொரு விஷயம். ஓராசிரியர்களுடைய நிலைமையைப் பற்றியது. சட்டசபையில் அதைப்பற்றி பல கேள்விகள் கேட்கப்பட்டன. இரண்டாண்டு மூன்றாண்டு அநுபவம் பெற்றவர்களை மற்றவர்களைப்போல இப்போது ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து இரண்டாண்டு பயிற்சி பெற வேண்டும் என்று சொன்னார்கள். இந்த இரண்டாண்டு காலத்தில் அவர்கள் முன்பு வாங்கிக் கொண்டிருந்த சம்பளமாவது கொடுக்கப்பட வேண்டும் எனச் சொல்லப்பட்டது. பயிற்சி பெற்று வந்த பிறகு அவர்களுடைய முந்திய சர்வீஸ்களும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. சில மாதங்களுக்கு முன்பு அவர்களுடைய குறைகள் சம்பந்தமாக நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியும் கூட நிறைவேற்றப்படவில்லை. அதைப்பற்றி திரும்ப இவர்கள் ஆலோசனை செய்தார்களா என்பது தெரியவில்லை.

சாதாரணமாக நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய வழக்கமான முறையில் தம் பிரசங்கத்தை பருவ நிலையில் இருந்து ஆரம்பித்து நன்றி தெரிவிக்கும் வரையில் முடித்துவிட்டார்கள். குறிப்பாக "தென்மேற்குப் பருவ மழை உரிய காலத்தில் ஆரம்பமாயிற்று. ஆயினும் இது சாதாரணமாக பெய்யும் அளவிற்கு 20 சத விகிதம் குறைவாக, சராசரி 9·7 அங்குலம்தான் பெய்தது. இந்தப் பருவத்தில் மத்திய மாவட்டங்களான திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஆகியவற்றில் போதுமான மழை பெய்யவில்லை" என்று சொல்கிறார். அதற்குப் பிறகு "ஆனாலும் விளைச்சலைப் பாதிக்கும் அளவுக்கு மோசமில்லை" என்கிறார்.

இது, எதைக் குறிப்பிடுகிறது? உணவு நிலைமை திருப்திகரமாக 4–50 இருக்கிறது என்பதைக் குறிப்பிடுகிறதா? உணவு தானிய விலைகளின் p.m. மொத்த குறியீட்டு எண் 1956-ம் ஆண்டு ஜூலையில் 377 ஆக இருந்தது.

ஆறு மாதத்தில் அது உயர்ந்து 494 ஆக இருந்தது, பிறகு 1957 மார்ச்சில் 470 ஆக குறைந்தது என்றெல்லாம் புள்ளிவிவரங்கள் தரப்படுகிறது அமைச்சர்களால். 1957-ல் 512-ல் நின்றது என்றும் கூறப்படுகிறது. அதோடு, பற்றாக்குறையின் காரணமாக இந்த உயர்வு" ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது. நான் சொல்ல விரும்புவது, இந்த நிலைமை உண்மையானதல்ல. அதாவது, புள்ளிவிவரங்களைக் காட்டி நமது நிலைமை நல்லது என்றும் பற்றாக்குறை இல்லை என்றும் கூறலாமே தவிர, நாட்டின் நிலைம்மையைக் காட்டி கூறமுடியாது. புள்ளி விவரங்களை காட்டி மக்களை ஏமாற்ற முடியாது. மேலும் இந்த புள்ளி விவரங்கள் தவறு என்பதை என்னால் சுட்டிக் காட்ட முடியும். 1950–51-ல் நமது விளைச்சல் 28 லட்சம் டன்தான் என்றும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் அந்த 28 லட்சம் டன்னை 44 லட்சம் டன்னாக உயர்த்தி விட்டோம் என்றும் அறிக்கையில் சொல்கிறார்கள். அதை, நாட்டு மக்களுக்கு ஏட்டின் மூலம் எடுத்துக் காட்டுகிறார்கள். ஆனால் விலைவாசியின் குறியீட்டு எண் 512 என்றும் சொல்லப்படுகிறது. இந்த புள்ளி விவர கணக்குகளை எடுத்துக்கொண்டால், கிராமங்களில் உள்ள அதிகாரிகள் கொடுக்கக் கூடிய புள்ளி விவரங்கள் எவ்வளவு உண்மை என்பதை கிராமப் புறங்களில் உள்ள மக்கள் நன்கு அறிவார்கள். கிராம அதிகாரி கணக்குப் பிள்ளையைக் கூப்பிட்டு, இங்கு எவ்வளவு நெல் விளைகிறது, எவ்வளவு சோளம் விளைகிறது, எவ்வளவு கம்பு விளைகிறது என்று பார்த்து வரச் சொல்லி அவர் கொடுக்கிற கணக்கை சர்க்காருக்கு அனுப்பி வைக்கிறார். சர்க்காரும் அதைத்தான் புள்ளிவிவரமாக கொடுக்கிறார்கள். அதிலிருந்து இந்த புள்ளி விவரங்களின் உண்மை நிலை என்ன என்பதை நாம் அறியமுடியும். மேலும் அந்த கிராம அதிகாரிகளுக்கோ நல்ல ஊதியம் கொடுப்பதில்லை. அவர்கள் ஏதோ கணக்கு கொடுக்கிறார்கள். அதை சர்க்கார் புள்ளி விவரமாக தருகிறார்கள். அவர்களோ நேரில் சென்று, காடுகளிற்கும், வயல்களுக்கும் சென்று புள்ளி விவரம் எடுப்பது கிடையாது. ஆக, சர்க்காருக்கு அது தெரிந்து இருந்தும் கூட நாட்டு மக்களின் நம்பிக்கையை பெற வேண்டுமென்ற காரணத்திற்காக இப்படிப்பட்ட புள்ளிவிவரங்களைக் காட்டி மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். புள்ளி விவரங்களைப் பற்றி பேசத் தெரியாது என்று எதிர்கட்சிக்காரர்களைப் பார்த்துச் சொல்கிறார்கள். எது எப்படியாயினும், இந்த உணவு உற்பத்தி நிலைமையைப் பொறுத்தவரையில் இந்த புள்ளிவிவரங்கள் நம்பத்தக்கதல்ல என்பது அமைச்சர்களின் கூற்றுகளில் இருந்தே தெரிகிறது. மத்திய அரசாங்க அமைச்சர் ஒரு விதம் சொல்கிறார்கள், நமது நிதியமைச்சர் ஒருவிதம் சொல்கிறார்கள், மற்ற அமைச்சர்கள் இன்னொரு விதம் சொல்கிறார்கள். இதில் எது உண்மை? எதை நம்புவது? ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கிறது. அந்த அளவிற்கு நமது நிலைமை இருக்கிறது. அதுபோது, உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது, அல்லது எடுத்து வருகிறது என்று பார்ப்போமேயானால் அதுவும் மோசமாகத்தான் இருக்கிறது. சென்ற ஆண்டு விவசாய அபிவிருத்திக்காக, நீர்த்தேக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் இருந்து ஒரு கோடி ரூபாய் இவ்வருடம் குறைக்கப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், பெரிய நீர் தேக்கத்திட்டங்களை எடுத்துக்கொள்ள நம் மாகாணத்தில் ஆறுகள் இல்லை என்று சொல்கிறார்கள். கேரள ராஜ்யத்தோடு பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டியிருக்கிறது வேறு பல திட்டங்களை மேற்கொள்ள பரம்பிக்குளம் திட்டம் பற்றி கேரள ராஜ்யத்தோடு பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அது நிறைவேறலாம் என்றும் இருக்கிறது. சிறிது காலதாமதமாயிருக்கலாம். பின்னர், சிறு நீர்பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில், அத்திட்டங்களை எடுத்துக் கொள்ள மத்திய அரசாங்கத்திலிருந்து இந்த அரசாங்கத்திற்கு தாக்கீது வந்திருப்பதாக கேள்விப்படுகிறோம். சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக்கொள்ள வழி வகையில்லையா என்றால், ஒவ்வொரு மாவட்டத்தையும் எடுத்துக் கொண்டால் கலெக்டர் ஆபீஸில் ஆறு மாதத்திற்கு ஒரு முறை நீர்ப்பாசன மகாநாடு கூட்டப்படுகிறது. அந்த மகாநாடுகளில்



ஏறக்குறைய ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் வருவதுண்டு, குளங்களை ஆழப்படுத்த வேண்டும் என்றும், புதிய குளங்கள் வெட்ட வேண்டும், கிணறுகள் ஆழப்படுத்தப்பட வேண்டும், புதிய கிணறுகள் வெட்ட வேண்டும் என்றெல்லாம் கேட்டு ஆயிரக்கணக்கில் விண்ணப்பங்கள் வருகின்றன. மகாநாடுகள் நடைபெறுகிறதேயொழிய அவைகளினால் உருப்படியான ஆலோசனைகள் கூறமுடியவில்லை. அந்த விண்ணப்பங்களுக்கும் பதில் கூற முடியவில்லை. நிலைமை இப்படியிருக்கிறது. அடுத்த வருடமாவது அதற்கு நல்லதொரு பதில் கிடைக்குமா என்றால் அதுவும் கிடையாது. ஒரு குறிப்பிட்ட பிரச்னையைச் சொல்கிறேன். 1952-ல் எழுந்த ஒரு ஏரிக்கட்டு பிரச்னையை 1957 கழிந்த பிறகும் திறந்து வைக்க முடியவில்லை. அது, மந்திரிகளுக்கு வர வேண்டிய காரியம் இல்லை. அதிகாரிகளே தீர்க்க கூடிய பிரச்னைதான். எனினும் அது தீர்த்து வைக்கப்படவில்லை. அதற்கு சொல்லப்படும் காரணம் என்னவென்றால், பி.டபிள்யூ. டி. என்ஜினியருக்கு வேலை நிறைய இருக்கிறது என்று காரணம் சொல்கிறார்கள். குளங்களில் தூர் வாருவது சம்பந்தமாக செங்கல்பட்டில் முதல் வேலையாக தொடங்கியிருக்கிறார்கள். அங்கு தூர் வாரும் அனுபவத்தை வைத்துக்கொண்டு சேலத்தில் தூர் வார முடியாது. ஆகவே, ஒவ்வொரு இடங்களிலும் தூர் வாருவதற்கும், குளங்கள் வெட்டவும், அவைகளை செப்பனிடவும், ஏரிகள் கட்டவும் பணம் ஒதுக்கப்பட வேண்டும். அடுத்தப்படி, உரம் விநியோகம் செய்வதில், கடந்த ஆண்டு ஒன்றரை லட்சம் டன் உரம் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். இந்த ஆண்டு அது குறைக்கப்படலாம் என்று சொல்லப்படுகிறது, அறிக்கையில். மத்திய அரசாங்கம் வெளி நாடுகளில் இருந்து உரம் இறக்குமதி செய்யப் போவதில்லை என்று காண்கிறது. கடந்த ஆண்டில் வாக்குறுதி கொடுத்திருந்த அளவு வரவில்லை என்றால் அது மாத்திரம் வர வழைக்கப்படலாம். இந்த ஆண்டு இறக்குமதி செய்யப் போவதில்லை என்றும், போன ஆண்டு கொடுக்கப்பட்ட உரம் இவ்வாண்டு குறைக்கப்படும் என்பதற்குள்ள அறிகுறியும் இதில் காணப்படுகிறது. விவசாயத்திற்காக வேண்டிய உரம் சப்ளை செய்யாவிட்டால் உற்பத்தியை எப்படி பெருக்க முடியும் என்று நான் கேட்கிறேன். அதோடு ஒவ்வொரு மாவட்டத்திலும் தரிசு நிலங்கள் தாராளமாக கிடக்கிறது. அப்படிப்பட்ட தரிசு நிலங்களை நிலம் இல்லாத ஏழைகளுக்கு கொடுக்கவேண்டுமென்று கூக்குரல் இருந்துகொண்டேயிருக்கிறது. அப்படி அந்த தரிசு நிலங்களை நிலம் இல்லாத ஏழைகளுக்கு வழங்க ஏதாவது திட்டம் இருக்கிறதா, அல்லது அதற்கு வேண்டிய வேலைகள் துவங்கப்பட்டிருக்கிறதா? என்றால் அதற்கு வேண்டிய வேலைகள் துவங்கப்பட்டிருக்கிறது, மகிழ்ச்சி. ஆனால் அந்த நிலங்களை யாருக்கு கொடுக்கப்போகிறார்கள். அவர்கள் நிலம் இல்லாத ஏழைகளா? அப்படி நிலம் விநியோகம் செய்யும் போது அது நல்ல முறையில் செய்யப்படவேண்டும். தக்காவி கடன் கூட பெறுவதற்கு அவர்கள் அருகதையில்லாவிட்டால் அவர்கள் எப்படி விவசாயம் செய்ய முடியும்? அவர்கள் தங்கள் கையில் இருக்கும் நகைகளை விற்றோ அல்லது தங்கள் நிலத்தை அல்லது வீட்டை அடகு வைத்தோ சாகுபடி செய்கிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும் ஒரு முறை அது சாவியாகப் போய் விட்டால் அவர்கள் அவர்களது ஊரை விட்டே ஓட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது? ஏனெனில் கடன் வாங்கியிருக்கும் பணத்தை திரும்பக் கொடுக்க பணம் இல்லாமல் கடன் கொடுத்தவர்களுக்கு பயந்து ஊரை விட்டே ஓட வேண்டிய நிலை ஏற்படுகிறது. அது பற்றி இந்த சட்டசபையிலே பல முறை பேசப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அது குறித்து ஆலோசனை செய்து அதற்கு வேண்டிய ஒரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள முயற்சி செய்யவில்லை. நிலம் இல்லாத விவசாயிகளுக்கு கூட்டுறவு விவசாயம் சிறந்தது என்று சொன்னார்கள். கூட்டுறவு விவசாய முறையை ஒவ்வொரு சமுதாய அபிவிருத்தி திட்டத்திலும் ஏற்படுத்துவோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்கிறேன், இதுவரையில் அப்படி எத்தனை எத்தனை திட்டங்கள் ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டிருக்கிறது? சேலத்தில் கூட்டுறவு விவசாயத்திற்காக என்று ஒரு 5,000 ஏக்கர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற

எப்பொழுது என்றுல், குமாரஸ்வாமி ராஜா அவர்கள் சென்னை முதன் அமைச்சராக இருந்தபோது அதை நேரில் பார்த்து நல்ல நிலவளமும் நீர் வளமும் உள்ளது, கூட்டுறவுப் பண்ணைக்கு லாயக்கானது என்று சொல்லி விட்டுப் போய் எத்தனையோ அமைச்சர்களும் எத்தனையோ அதிகாரிகளும் பார்த்து விட்டுப் போயும் கூட இன்னும் அத்திட்டம் உருவாக்கப்படவில்லை. அந்த மாவட்ட கலெக்டர் ஒரு அபிப்பிராயம் சொல்கிறுர், அங்குள்ள விவசாய அதிகாரி ஒரு அபிப்பிராயம் சொல்கிறுர், அங்குள்ள போலீஸ் அதிகாரி குற்றவாளிகளைக் கொண்டே விவசாயம் செய்யலாம் என்று ஒரு அபிப்பிராயம் சொல்கிறுர். ஆனுல் அந்தத் திட்டமானது அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ந்ததாகவே தெரியவில்லை. இப்படி இருந்தால் எப்படி உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று அறிய விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல. இங்கு பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்த வசதி வாய்ப்பு இல்லை என்று சொல்கிறுர்கள். உதாரணமாக நெய்வேலி நிலக்கரித் திட்டத்தை எடுத்துக் கொண்டால், இன்னும் பத்து ஆண்டுகள் கழிந்த பிற்பாடாவது அது உருப்பெறும் என்பதை அறிய மகிழ்ச்சி அடைகிறேன். ஆனுல், வட நாட்டில் என்ன நடக்கிறது என்று பார்த்தால், கடந்த ஆண்டு பத்திரிகையில் ஒன்றுமே வந்திருக்காது. ஆனுல் இந்த ஆண்டில் 50 லட்சம் ரூபாய் மூலதனத்தோடு 40 லட்சம் டன் உற்பத்தியாகும் ஒரு தொழிற்சாலை ஏற்படுகிறது என்பதை பத்திரிகைகளில் பார்க்கிறோம். ஆனுல் நெய்வேலியில் ஒரு திட்டம் தொடங்க பத்து ஆண்டுகளாக எக்ஸ்ஸாமினேஷன் செய்தார்கள். பின்னர் தான் வேலை துவங்கியிருக்கிறது. அத்துடன், தமிழகத்திற்கு, தென்னிந்தியாவிற்கு நெய்வேலி திட்டம் வந்துவிட்டது என்று பெருமையுடன் பேசிக் கொள்கிறோம். அதையொட்டி சேலத்தில் ஒரு இரும்பு தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் என்று தேர்தல் காலத்தில் வாக்குறுதி கொடுத்தார்கள். அங்கு கிடைக்கும் இரும்பு சாம்பிள்களை வட இந்தியாவில் உள்ள ஜாம்ஷட்பூருக்கு அனுப்பியிருக்கிறுர்களாம். அங்கு கிடைக்கும் இரும்பை நாம் நல்ல முறையில் பயன்படுத்த முடியும் என்பதற்கு சான்றுகள் பல இருக்கின்றன. சோழர் காலத்தில் அந்த இரும்பை எடுத்து சாதாரண கொல்லன் முதற்கொண்டு, அதனுல் இரும்புக் கருவிகள் செய்ததாகவும், வேறு பல இரும்பு சாதனங்கள் செய்ததாகவும் ஆதாரங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இரும்பை இன்று ஜம்ஷட்பூருக்கு அனுப்பி அவர்களின் ஆராய்ச்சி இன்னும் தீரவில்லை. ஆகவே அத்திட்டம் துவங்குவதற்குள்ள அறிகுறி இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. தென்னிந்தியாவில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க அவர்களுக்கு விருப்பம் இல்லை என்று இருக்குமானுல் அந்தப் பொருள் லாயக்கில்லை என்று சொல்லிவிட்டால் அதை வைத்துக் கொண்டு அந்தத் தொழிற்சாலை தென்னிந்தியாவில் ஏற்படாது போய் விடுகிறது. சாதாரணமாக ஒரு நாயை அடிக்க வேண்டுமென்றுல் அது பயித்தியம் பிடித்த நாய் அதை அடி என்று சொல்வார்கள். அதுபோல வட இந்தியாவில் உள்ள நிபுணர்கள் அந்த இரும்பு லாயக்கில்லை என்று சொன்னுல் அந்த தொழிற்சாலை இங்கு ஆரம்பிக்கப்படாமல் போய் விடும்.

ஆனுல் சில தினங்களுக்கு பின்னுல் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அதற்கு வேறு விளக்கம் தந்திருக்கிறுர்கள். பத்திரிகைச் செய்தி உண்மையல்ல என்றும் பிரஞ்சு நிபுணர்கள் இதை இங்கே நிறைவேற்ற முடியும் என்று தெரிவித்தார்கள் என்றும் ஏற்காட்டில் ஒரு தொழிற்சாலை, மேட்டூரில் ஒரு தொழிற்சாலை, அதற்கிடையில் ரயில் பாதை போட்டு இதை நிறைவேற்ற முடியும் என்றும், இதற்கு சாத்தியம் இல்லை
5.00 p.m. என்றுல் நிபுணர்கள் வந்திருக்க மாட்டார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறுர்கள். இவ்விதம் அமைச்சர் அவர்களுடைய பேச்சு மாருக இருக்கிறது. இதைப் பற்றி பத்திரிகையில் வந்தபொழுது . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM :** பத்திரிகையில் வந்த செய்திக்காக இவ்விதம் பயந்தால் அதற்கு என்ன செய்ய முடியும் ? இன்னென்று, ஏதாவது காரியங்களை அங்கங்கே இடங்களில் ஆரம்பிக்க



வேண்டுமென்று இருக்கும்பொழுது அதையும் குற்றம் சொல்லுவது வழக்கமாக இருக்கிறது. அது மாத்திரமல்ல. அது எங்கே நிறைவேறி விடுமோ என்று பயந்து சங்கடப்படுவது மாதிரியும் தோன்றுகிறது.

**Sri C. N. ANNADURAI :** எங்கெங்கே இருக்கின்றவர்கள் அவ்விதம் பயப்பட்டுக்கொண்டிருக்கிறுர்கள் ? இவ்விதம் தொழிற்சாலைகள் வரவேண்டாம் என்று எண்ணக் கூடியவர்கள் யார் என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** பொதுவாக நாம் ஒரு தொழிலை ஆரம்பிக்கப்படும்பொழுது அதைத் தங்கள் இடத்தில் ஏற்படுத்த வேண்டும் என்று விரும்புவது ஆச்சரியப்படக் கூடிய விஷயமல்ல. ஆகவே உடனே தங்களுக்கு சாதகமாக இருக்கக் கூடியது தங்களைவிட்டு உடனே போய் விட்டது என்று சொல்லுவது தவறு. ஆகவே இதைப் பற்றி கனம் அங்கத்தினர் சுப்பிரமணியம் அவர்கள் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri M. P. SUBRAMANIAM :** அமைச்சர் அவர்களுடைய பதில் எனக்கு மிகவும் ஆறுதல் அளிக்கிறது. சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையும், அலுமினியத் தொழிற்சாலையும் மற்றும் பல தொழிற்சாலைகளையும் ஆரம்பித்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு குறை கூறுகிற வாய்ப்பு இல்லாமல் செய்வார்களேயானுல், அதை நான் மிகவும் வரவேற்பேன். ஆனுல் அந்த விதமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். இதைப் பற்றிக் கேள்வி நேரத்தின்போது கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் பதிலளிக்கும்பொழுது கூறினுர்கள். சேலத்திலிருந்து எடுக்கப்பட்ட இரும்பை ஸாம்பிளாக அமெரிக்காவுக்கு ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய முடிவு இதுவரையிலும் வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். இவ்விதமாக ஏற்பட்ட ஆராய்ச்சியின் பயனுக காலதாமதம் ஆகிறது. ஆகவே இதை சீக்கிரத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும், என்றுதான் நாங்கள் சொல்லுகிறோமே தவிர வேண்டாம் என்று சொல்லவே இல்லை. அதே மாதிரிதான் மாங்னஸைட் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்தார்கள். கடைசியில் இதை அரசாங்கத்திடமிருந்து குத்தகை முறையில் பெற்றுக்கொள்தவற்கு கல்கத்தாவிலுள்ள பர்ன் அண்ட் கோ. கம்பெனியிடம் ஏற்பாடு நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. இதை மாகாண அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டுமென்று சேலம் மாவட்டத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள், கம்யூனிஸ்டுக்காரர்கள், இவ்விதம் எல்லோருடைய முயற்சியும் ஒன்று சேர்ந்திருந்தது. பின்னுல் மாகாண அரசாங்கம் இதைப் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு எழுதினுர்கள். அதன் பின்னுலும் கல்கத்தாவிலுள்ள அந்த வெள்ளைக்கார முதலாளிகள் அடங்கிய அந்த பர்ன் அண்ட் கோ. ஸ்தாபனம் மத்திய அரசாங்கத்திடமிருந்து இதை ஏற்று நடத்துவதற்கு வேண்டிய உத்தரவை பெற்றுக்கொண்டார்கள். அந்த சமயத்தில் இந்த அரசாங்கத்தால் என்ன செய்ய முடிந்தது என்று கேட்கிறேன். அதன் பின்னுல் சென்னை மாகாண அரசாங்கம் பர்ன் அண்ட் கோ. ஸ்தாபனத்திற்கு ஒருபடி கீழே இறங்கினுர்கள். அரசாங்கமும் இந்த ஸ்தாபனமும் சேர்ந்து நடத்தலாம் என்று கேட்டார்கள். அந்த கோரிக்கைக்கு அவர்கள் செவிசாய்க்கவில்லை. இதையெல்லாம் அறிந்தும் அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது இவர்களுடைய சோஷலிஸ ராஜ்ய அமைப்பு திட்டம் எங்கே போனது என்று கேட்கிறேன். உண்மையில் அரசாங்கம் அதை ஏற்று நடத்துவதற்கு அங்கு என்ன வாய்ப்பு இல்லை என்று கேட்கிறேன். வேண்டுமென்றுல் அதற்கு வேண்டிய மூலதனத்தில் 100-க்கு 49 பங்கை சேலம் வாசிகளே தருவதற்குத் தயாராக இருக்கிறுர்கள். மேலும் சென்னை வாசிகளும் டிபெஞ்சர் பங்குகள் வாங்குவதற்கு

தயாராக இருக்கிறார்கள். ஆகவே இதை எவ்வளவு சீக்கிரமாக ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இதை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER : The Hon. Member has already taken more time of the House.**

**Sri M. P. SUBRAMANIAM : Sir, I will finish my speach in two minutes.** சென்னை மாகாண அரசாங்கத்திற்கு நிதி கமிஷனின் சிபார்சின்படி 202 லட்சம் ரூபாய் மானியம் கொடுக்க மத்திய சர்க்கார் முன்வந்திருக்கிறது என்று மகிழ்ச்சி கொள்ளுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உண்மையாகவே மத்திய சர்க்காரிலிருந்து 46 கோடி, 97 லட்சம் ரூபாய் மாகாணங்களுக்காக கிராண்டாக ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த ஆண்டு 47 கோடி ரூபாய் கொடுக்கப் போவதாகவும் சொல்லுகிறார்கள். இதில் சென்னை மாகாணத்திற்கு குறைவாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் அஸாமிற்கு 6 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஒரிஸாவிற்கு 4 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது, பீஹாருக்கு 5 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது, மேற்கு வங்காளத்திற்கு 5 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது. இவ்விதம் சென்னை மாகாணம் புறக்கணிக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். அது மாத்திரமல்ல. இந்த மாகாண அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வைத்துத்தான் ஆள வேண்டியிருக்கிறது இன்று சாதாரண வரியைக் கூட மாற்றி விற்பனை வரியாக ஆக்கினால், ஏதோ மாகாண அரசாங்கத்திற்கு பணம் கிடைப்பதற்கு ஒரு வழியாக அமையும். இன்னும் சில வரிகளை நாம் வசூல் செய்து கொடுத்துவிட்டு நாம் மத்திய அரசாங்கத்தினிடம் பிச்சை கேட்பதுபோல் கேட்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இவர்கள் கூறிக்கொள்ளுகிற க்ஷேம நல சமுதாயத்தை சமைப்பதற்கான திட்டத்தைத் இதில் காணவில்லை என்பதைக் கூறிக்கொள்ளுகிறேன். அதோடு மாத்திரமல்ல. மேலும், வட நாட்டுக்கு, தென்னாட்டுக்கு வளங்களை எல்லாம் அடிமைப்படுத்தக் கூடிய முறையில் இந்த திட்டம் அமைந்திருக்கிறது என்பதை சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri T. T. DANIEL :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் வரவு செலவு திட்டத்தைப் பற்றி சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது ராஜ்யம் சுமார் 310 லட்சம் ஏக்கர்கள் கொண்டது. அதில் உத்தேசமாக 140 ஏக்கர்களில் சாகுபடி செய்யப்படுகிறது. அதில் சுமார் 51 லட்சம் ஏக்கர்களில் நெல் தானியத்தை உற்பத்தி செய்கின்றோம், முதலாவது, இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு உணவுப் பற்றுக்குறை நம் நாட்டில் அதிகமாக இருந்து வந்தது. அதை ஒழித்துக்கட்டுவதற்காக நமது அரசாங்கம் அதிகமான நல்ல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றன. முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் இந்தக் குறைகளை நீக்குவதற்கு என்று தனி இடம் கொடுக்கப்பட்டு இருந்தது. இதற்காக சுமார் 28 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதன் விளைவாக 3½ லட்சம் ஏக்கர் நிலங்கள் கூடுதலாக நம் நாட்டில் நெல் பயிரிடுவதற்கு சௌகரியம் கிடைத்திருக்கிறது. அதிலும் ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலும் உற்பத்தியை எடுத்துக் கொண்டால் உற்பத்தியின் அளவு கூடிக்கொண்டே வருகின்ற அளவில் நல்ல திட்டங்களைக் கையாண்டு வந்திருக்கிறோம். சராசரி இந்தியாவில் ஒரு ஏக்கரில் உற்பத்தி செய்யக் கூடிய அளவு 750 பவுண்டு. சீனாவில் 1,250 பவுண்டு கிடைக்கிறது. ஜப்பானில் 2,500 பவுண்டு கிடைக்கிறது. ஆனால் உலகத்திலேயே கூடுதலாக ஒரு ஏக்கர் நிலத்தில் கிடைப்பது ஈஜிப்ட் ராஜ்யத்தில் ஒரு ஏக்கருக்கு 3,000 பவுண்டு நெல் விளையச் செய்கிறார்கள். ஆகவே நமது சென்னை ராஜ்யத்தில் உற்பத்தி செய்வது ஈஜிப்ட் ராஜ்யத்தில் உற்பத்தி செய்வதில் மூன்றில் ஒரு பங்குதான். இந்தியாவிலுள்ள இதர பிரதேசங்களை எடுத்துப் பார்த்தால் 750 பவுண்டு நெல் ஒரு ஏக்கருக்கு கிடைத்து வருகிறது. நமக்கு இப்போது தேவையானது சுமார் 48 லட்சம் டன் அரிசி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.



1955–56-ம் ஆண்டில் நாம் 46 லட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறோம் என்று நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இந்த உணவுப் பொருள்களில் 28 லட்சம் டன் அரிசி, மிச்சம் 16 லட்சம் டன் இதர தானிய வகைகள் சுமார் 10 லட்சம் 5-10 p.m. ஏக்கர் நிலங்களிலே இப்பொழுது ஜப்பானிய முறை கையாளப்பட்டு வருகிறது. அதிலும் 30 லட்சம் ஏக்கர் நிலங்களில் நல்ல உயர்ந்த ரக விதைகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் காரணத்தால் சராசரி ஒரு ஏக்கர் நிலத்தின் விளைச்சல் கூடி இருக்கின்றது. இன்னும் நாம் கணக்குப் பார்த்தோமேயானால், 1951-52-ல் அம்மோனியம் சல்பேட் 49,000 டன் நமது சமஸ்தானத்தில் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. 1955–56-ல், 80,000 டன் விநியோகம் செய்திருக்கிறோம். இந்த உரத்தை உபயோகித்ததினால், ஒரு ஏக்கர் நிலத்தில் உற்பத்தி சுமார் 260 ராத்தல் கூட இருப்பதை நாம் அறிவோம். வரவு செலவுத் திட்டத்தில், 1960-ம் ஆண்டில் கட்டளை, புள்ளம்பாடித் திட்டம் முடிவடையும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நெய்யாறு திட்டம் கன்னியாகுமரி ஜில்லாவில் கட்டப்படுமென்று கூறப்படுகிறது. இதனை நாங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். இந்த அணைக்கட்டுக்கு 1 கோடியே 42 லட்சம் செலவாகும். அதில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ரூ. 27 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நெய்யாறு அணைக் கட்டுத்திட்டத்தில் முக்கியமாக இரண்டொரு விஷயங்களைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கேரள ராஜ்யத்தில் நெய்யாற்றின்கரை தாலூகாவில் உள்பட்டு இருக்கிறது இந்த அணை. வலது கால்வாய் கட்டி முடித்தாய் விட்டது. அது நெய்யாற்றின்கரைத் தாலூகாவின் வழியாகப் போய்க் கொண்டிருக்கிறது. நாம் கட்ட வேண்டியது இடது கால்வாய். இது நெய்யாற்றின்கரைத் தாலூகாவிலிருந்து புறப்பட்டு, நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிற விளவங்கோடு தாலூகாவிற்கு வந்து மறுபடியும் நெய்யாற்றின்கரைத் தாலூகாவில் பல பிரதேசங்களுக்குச் சென்று, விளவங்கோடு தாலூகாவில் உள்ள பிற பகுதிகளுக்குச் செல்வதாக இருக்கிறது. இந்த முறையில் இடது கால்வாய் வெட்டப்படுமானால் இரு ராஜ்யங்களுக்கிடையே தகராறு ஏற்படுவது சகஜம். விளவங்கோட்டில் எந்த இடத்திலிருந்து அந்தக் கால்வாய் வெட்டப்பட்டுத் தொடங்குகிறதோ, அதிலிருந்து தொடர்ச்சியாக நமது பிரதேசத்தில் இந்த இடது கால்வாய் போகும்படியாக திட்டத்தை வகுக்க வேண்டும். வருகிற காலத்தில் நமது ராஜ்யத்துக்கும், கேரள ராஜ்யத்துக்கும் இந்தக் கால்வாய் வழியாகத் தண்ணீர் விடுவதில் அனாவசியமான தகராறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு, எத்தனை ஏக்கர் நிலத்திற்கு அந்த அணைக்கட்டிலிருந்து தண்ணீர் கொடுக்க முடியும் என்பதை நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். அதை நிர்ணயிக்காமலிருந்தால், ஒரு கோடி ரூபாய் செலவு செய்தாலும்கூட நம்முடைய ராஜ்யத்திலுள்ள மக்களுக்கு, போதுமான பிரயோஜனமிராது.

இன்னும் விளவங்கோடு தாலூக்காவில் பட்டணங்கால், சிற்றாறு திட்டத்தை 1 கோடி 15 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அதைப் பற்றி பட்ஜெட்டில் ஒன்றும் கூறாமல் இருப்பது எங்களுக்கு மன வருத்தத்தைக் கொடுக்கிறது. மாம்பழத்தாறு, பொய்கை அணைத் திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று பலமுறை பிரயத்தனம் செய்த போதிலும், அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. இந்த அணைக்கட்டுகளை கட்டி முடித்தால் 2 லட்சம் டன் உணவுப் பற்றுக்குறை தீர்ந்து விடக் கூடிய நிலைமை ஏற்படும்.

பட்ஜெட்டில் கிராம குடிதண்ணீர் திட்டத்திற்காக 86 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நகர குடிதண்ணீர் திட்டத்திற்காக சுமார் 125 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் ஏற்கெனவே பரிசீலனை செய்யப்பட்டிருக்கிற குளச்சல், இரணியல், குழித்தறை தண்ணீர் திட்டம், நாகர் கோவிலில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிற இடங்களுக்குத் தண்ணீர் விநியோகம் செய்வதற்குரிய திட்டம், இவைகளுக்காக, சுமார் 25 லட்சம்

ஒதுக்கப்படுமென்று எதிர்ப்பார்த்திருந்தோம். அந்தப் பணம் பட்ஜெட்டில் ஒதுக்கப்படவில்லை. " **Lump-sum Provision** " என்று போடப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்திலிருந்து இந்த மூன்று திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்கு சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கிறோம்.

நமது ராஜ்யத்தின் விஸ்தீர்ணம் சுமார் 6,566 சதுர மைல் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதில் 13·4 சத விகித இடத்தில் வன சொத்துக்கள் இருக்கின்றன. ஒரு ராஜ்யத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால், மூன்றில் ஒரு பங்கு வனசொத்து இருக்க வேண்டுமென்று நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். வனப்பிரதேசமாகிய மலபார் நம்முடைய ராஜ்யத்தை விட்டு பிரிந்து விட்டது. விலையுயர்ந்த தேக்கு மரங்கள் அடங்கிய செங்கோட்டைப் பகுதியையும் இழந்துவிட்டோம். தேக்கு மரங்கள் நடுவதற்கும் மற்ற மரங்கள் நடுவதற்கும் 18 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக இரண்டு கிருஷி விஷயமாக நமது சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். ரப்பர் கிருஷி விஷயத்தில் நமது அரசாங்கம் சரியான கவனம் செலுத்த வேண்டும். இந்தியாவிலேயே நல்ல ரப்பர் உற்பத்தி செய்யக்கூடிய இடம் கன்னியாகுமரியில் இருக்கிறது. ஒரு ஏக்கராவில், 1,500 பவுண்டு ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி ரப்பரின் தரம் இந்தியாவிலே எல்லாப்பிரதேசங்களைக் காட்டிலும் மிகச் சிறந்ததாக இருக்கிறதென்று நிபுணர்கள் கூறுகிறார்கள். அப்படியிருந்தும்கூட ரப்பர் கிருஷியை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை வகுக்காமல் இருக்கிறோம். அதற்காக ஒரு பணமும் ஒதுக்கப்படவில்லை. கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு ரப்பர் போர்டை நியமனம் செய்யவேண்டும். ரப்பர் பாலிலிருந்து குழந்தைகள் விளையாடுவதற்கான பொம்மைகள் உற்பத்தி செய்ய ஒரு " பாக்டரி "யை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அங்கு நாம் ரப்பர் கிருஷியை ஆதரிப்போமானால் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். சர்க்காருக்கும் வருமான வரி கிடைக்கும்.

அடுத்தப்படியாக, தேயிலைக் கிருஷியை எடுத்துக்கொண்டால், முன்பு நாம் உற்பத்தி செய்கின்ற தேயிலையை இங்கிலாந்திலுள்ள வியாபாரிகள் கொள்முதல் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. இப்பொழுது ஆப்பிரிக்காவில் லட்சக்கணக்கான பவுண்டு தேயிலை உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. ஆகையால் இங்குள்ள தேயிலை தோட்டமுதலாளிகள் தகுந்த மார்க்கெட் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். உற்பத்தி செலவைவிட மிகக் குறைவான விலைக்கு தேயிலையை விற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு கொண்டிருக்கிறது. இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்குமேயானால், தேயிலைத் தோட்டங்கள் பல மூடப்படும். ஆகையால் இது விஷயமாக மத்திய சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்தி ஆவன செய்ய வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் தேயிலைத் தோட்ட முதலாளிகள் தேயிலைக் கிருஷியை தொடர்ந்து நடத்த முடியும்.

பெரிய ரகத் தொழிற்சாலைக்களுக்காக பல லட்சக் கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 12,000 கதிர்கள் கொண்ட ஒரு ஆலையை ஸ்ரீவில்லிபுத்தூரில் நிறுவப்போவதாக அறிகிறோம். கன்னியாகுமரியில் 6,000 கதிர்கள் கொண்ட ஒரு ஆலை இருக்கிறது. நாகம்மா மில்ஸ் என்று பெயர். 12,000 கதிர்கள் வேண்டும் என்று அந்த ஆலை முதலாளி சர்க்காருக்கு மனுக்கள் அனுப்பியும், இதுவரையிலும் ஒரு விதமான முடிவும் செய்யப்படாமல் இருக்கிறது. இன்று அந்த ஆலையில் 300 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். கதிர்களை அதிகப்படுத்தினால், 600 தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய நிலைமை ஏற்படும்.



கார்க்காபோன், சிமெண்ட் பாக்டரிகளை பல இடங்களில் அமைக்க முடியும். அதற்கு வேண்டிய மூல பொருள்கள் இருக்கின்றன. எந்தெந்த ஸ்தலங்களில் அப்படிப்பட்ட மூல பொருள்கள் இருக்கின்றனவோ அந்தந்த இடங்களில் அவைகளை அமைக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த இடங்களில் பாக்டரிகளை அமைத்தால் அது சாலச் சிறந்ததாகும். 5-20 p.m.

இன்னும் மாணவ மாணவிகளுக்கு மத்தியான போஜனம் கொடுப்பதற்கு என்று நமது பட்ஜெட்டில் 20 லட்சக் ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அது குறைவாகத் தோன்றலாம். அது எப்படி இருந்தாலும், அரசாங்கத்தினுடைய மனப்பான்மை இதில் காண்பிக்கிறது. குழந்தைகளுக்கு எந்த விதத்திலாவது படிப்பு சொல்லிக்கொடுக்க வேண்டும் என்ற கருத்துடன் இதைச் செய்திருக்கிறார்கள் என்பது நன்கு தெரிய வரும். ஏழை பணக்காரக் குழந்தைகள் என்று இல்லாமல் எல்லோருக்கும் இது வழங்கப்பட வேண்டும். பணக்காரக் குழந்தைகள் மட்டும் சாப்பிட்டு விட்டு வந்து ஏழைக் குழந்தைகள் சாப்பிடாமல் பள்ளிக்கூடங்களுக்கு வந்து படிப்பது என்பது முடியாததால் இந்த திட்டம் ரொம்பவும் வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. ஏழைக் குழந்தைகள் சாப்பிடாமல் வருவது என்பது கூடாது. அப்படி இருந்தால் அவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு வந்து படிக்க முன் வரமாட்டார்கள். அதைத் தவிர்க்க இந்த திட்டம் நல்லது. ஆகவே இதற்கு நிரந்தரமாக பரிகாரம் தேடுவதற்கு எவ்வளவு லட்சம் ரூபாய் செலவு செய்தாலும் அதைச் செய்யலாம். அதில் அதிகப்படியான கவனம் இந்த சர்க்கார் செலுத்தும் என்று நினைக்கிறேன். இந்த நிலைமையில் பொது மக்களுடையவும், முதலாளிகளுடையவும் மன நிலைமை மாறி அவர்களும் இதற்கு உதவ முன் வருவார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் அவர்கள் எடுத்துக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன்.

இன்னும் ஹரிஜனங்கள், பின் தங்கிய வகுப்பினர் ஆகியோருடைய நலனுக்கு எவ்வளவோ பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலும் அரசாங்கம் விசேஷ சலுகை காட்டியிருக்கிறது. வரப்போகும் ஆண்டிற்கு இந்த ஆண்டின் செலவை விட 40 லட்சம் ரூபாய் அதிகப்படியாக ஒதுக்கியிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயருவதற்கு இப்படி ஒதுக்கி இருக்கிறார்கள். இம்மக்களின் நலன்களை வளர்க்கும் திட்டங்களுக்கு இந்த வரவு செலவு திட்டத்தில் 233 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையில் ஹரிஜனப் பள்ளியில் மத்தியான உணவுக்காக 27 லட்சம் ரூபாயும் மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் வழங்க 28 லட்சம் ரூபாயும் 5 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு மானியமாக 27 லட்சம் ரூபாயும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் 5,800 ஜோடி மாடுகள் வாங்குவதற்கு மானியமாக 18 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவைகளை கவனித்தால் அரசாங்கம் பிற்பட்ட இனத்தவர்களுக்கும் பின் தங்கிய சமூகத்தவர்களுக்கும் அதிகப்படியான சலுகைகளை காட்டி வருவது நன்றாகத் தெரியும்.

இன்னும் நெசவு தொழிலாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு அவர்களுக்கென்று 500 வீடுகள் கட்டிக்கொடுக்க ஒரு புதுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் கூட்டுறவு சங்கங்களுக்கு 15 [illegible] ரூபாயும், நகர அபிவிருத்தி ட்ரஸ்டுக்கு 17 லட்சம் ரூபாயும் [illegible] முனிசிபாலிட்டிகளுக்கு 6 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வி விஷயமாக [illegible] கோடியே அறுபது லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. [illegible] வருஷத்திற்கு கல்வி விஷயமாக 11 கோடி ரூபாய் 47 லட்சம் [illegible] ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொழில் கல்வி விஷயமாக 647 மாணவர்கள் [illegible] கல்லூரியில் சேர்க்கவும் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அவற்றை விரிவாக்கி பொறியியற் கல்லூரிகளில் 1,132 மாணவர்களை சேர்க்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கழிந்த வருஷத்தில் 657 மாணவர்களும் வருகிற வருஷத்தில் 1,132 மாணவர்களும் படிக்க வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

எல்லா இடங்களிலும் தேசிய விஸ்தரிப்பு திட்டங்கள் அமைக்க வேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய கொள்கை. அடுத்த ஆண்டில மேலும் சுமார் 50 தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரங்களும் 16 சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களும் ஏற்படுத்த திட்ட மிட்டுள்ளார்கள். இந்த வகையில் எல்லா வட்டாரங்களிலும் இந்த திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று அரசாங்கம் நினைக்கிறது. அப்படியிருந் தும் கன்யாகுமரி ஜில்லாவில் சில தாலுகாவில் இது வரையிலும் தேசிய வளர்ச்சி திட்டமோ அல்லது சமூக அபிவிருத்தி திட்டமோ இன்னும் அமைக்கப்படவில்லை. குறிப்பாக கல்குளம் தாலுகாவில் தேசிய சமூக விஸ்தரிப்பு திட்டம் அங்கே இல்லை. ஆகவே அங்கு குறையில்லாது இந்த 16 சமூக திட்டங்களை அங்கங்கே அமைக்கும் போது கன்யாகுமரி ஜில்லா விலும் திட்டங்கள் இல்லாத இடங்களில் அமைக்கவேண்டும் என்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கெஜட் பதிவில்லாத உத்யோகஸ்தர்களுக்கு ஏற்கெனவே 12 ரூபாய் அலவன்ஸ் கொடுத்து வருகிறார்கள். இன்றும் அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து அவர்களுடைய குழந்தைகளுக்கு உயர்ந்த படிப்பு படிக்க வேண்டி உயர்நிலைப்பள்ளி வகுப்புகளிலும் முழுச் சம்பளச் சலுகை தரு வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைக் கண்டு பொது மக்கள் அரசாங்கத்தை பாராட்டத்தான் வேண்டும். அது எப்படி இருந்த போதி லும் அவர்களுடைய குறைகள் இன்னும் பல இருக்கின்றன. இப்பொழுது சில கெஜட் பதிவில்லாத உத்யோகஸ்தர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை என்று தெரிய வருகிறது. அதையும் நன்றாக பரி சீலனை செய்ய வேண்டும். குறிப்பாக கன்யாகுமரி ஜில்லாவில் சமீப காலத்தில் கோஷ சர்க்காரிலிருந்து இங்கு வந்தவர்களுக்கு பிரமோஷன் கொடுக்கப்பட்டு அதன்படி சிலருக்கு சம்பளம் கொடுக்கப்பட்டது. இந்த உத்தரவை ரத்து செய்து கொடுக்கப்பட்ட பணத்தையும் திருப்பிக்கொடுத்து விடவேண்டும் என்று சொல்லியிருப்பதாக தெரியவருகிறது. அதையும் புன ராலோசனை செய்து கெஜட் பதிவில்லாதவர்களுடைய கஷ்டங்களை நன்கு பரிசீலனை செய்து அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து அவர் களுக்கு நிரந்தரமாக பரிகாரம் தேடிக்கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது ராஜ்யத்தில் வருமானம் 62·40 கோடி ரூபாய். செலவு 63·75 கோடி ரூபாய், துண்டு 1·35 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு கோடி 35 லட்ச ரூபாய் துண்டு விழுவதை சரிக்கட்டுவதற்கு சிலசில வரிகளைப் போட்டிருக்கிறார்கள். இந்த வரிகளை பொது மக்கள் நன்கு வரவேற்கிறார்கள். ஏனென்றால் அது சாதாரண மக்களை அவ்வளவாக பாதிக்கவில்லை. நாம் சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது பொது மக்களும் கொஞ்சம் தியாகம் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. அந்த நிலையில் தான் இருக்கிறது இப்பொழுது வரி போட்டிருப்பது. ரஷ்யாவை எடுத்துக் கொண்டால் பத்து வருஷங்களுக்குள் இன்னும் எல்லா பொது மக்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அங்கே பொருளாதார நிலைமையில் மாற்றி சமூகத்தை அமைப்பதற்கு அங்கே மக்கள் சில கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதாகத்தான் இருக்கிறது. சைனாவை எடுத்துக்கொண்டாலும் அப்படியேதான். ஆகவே சோஷலிஸ அடிப்படையில் சமுதாயத்தை நாம் அமைக்க வேண்டுமானால் அதற்காக பொது மக்கள் கொஞ்சம் தியாகம் செய்ய வேண்டியதுதான். அந்த அடிப்படையில் தான் இந்த வரவு செலவு திட்டம் அமைந்திருக்கிறது. அதைக் கண்டு நான் கனம் நிதி மந்திரி அவர்களைப் பாராட்டுகிறேன். ஏனென்றால் நாம் இப்பொழுது ஒரு புது சமூகத்தை அமைக்க வேண்டிய தாக இருக்கிறது. இதில் பணக்காரர்கள் ஏழைகள் என்பது இல்லை. எல்லா சமூகமும் ஒன்றாகச் சேர்ந்து இதில் ஒத்துழைக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் மக்கள் ஓரளவு தியாகம் செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுப்பார்கள் என்று எண்



ணுகிறேன். குறிப்பாக ஆசிரியர்களைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். தனிப்பட்ட முறையில் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு ப்ராவி டெண்ட் பண்ட் சலுகையோ அல்லது பென்ஷன் சலுகையோ இல்லாமல் இருக்கிறது. அந்தச் சலுகைகளை அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். குறிப்பாக கன்யாகுமரி ஜில்லாவில் ஆசிரியர்களுக்கு பட்டதாரி அதாவது ட்ரெயினிங் ஆன ஆசிரியர்களுக்கு சம்பளம் ரூ. 55 தான். இப்படிப்பட்ட குறைந்த சம்பளம் கன்யாகுமரி ஜில்லாவில்தான் கொடுக்கப்படுகிறது. மற்ற எந்த ராஜ்யத்திலும் அப்படி கொடுக்கப்படவில்லை. இதை நான் மிக் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதனால் இது விஷயமாக கனம் நிதி மந்திரி அவர்கள் கொஞ்சம் அக்கரை எடுத்துக் கொண்டு வருகிற ஏப்ரல் மாதத்திற்குள் அவர்களுக்கு மற்ற ராஜ்யங்களில் கொடுக்கப்படும் சம்பளத்தைப் போல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய முயற்சியையும் கனம் மந்திரி அவர்கள் எடுத்துக்கொள்ளுவார்கள் என்ற எண்ணத்துடன் நான் இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri S. LAKSHMANA GOUNDER** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கிற வரவு செலவு திட்டத்தை நான் ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர் கொண்டு வந்திருக்கக்கூடிய வரவு செலவு திட்டமானது மிகவும் போற்றக்கூடிய வகையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துகொள்ளுகிறேன். ஏனென்றால் கெடுதல் இல்லாத தொழில் வளர்ச்சிக்கும், விவசாய வளர்ச்சிக்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதால் அதை நான் வரவேற்கிறேன். சாதாரணமாக நாம் குடும்பத்தை நடத்துவதென்றால் அதன் வரவு என்ன செலவு என்ன என்பதை கணக்கெடுத்து அதன்படி செலவு செய்வது போன்று அரசாங்கமும் ராஜ்யத்தின் வரவைக் கண்டு பிடித்து அதன் செலவையும் கண்டுபிடித்து அதற்குத் தகுந்தபடிதான் கனம் நிதி அமைச்சர் அவர்களும் வரவு செலவு திட்டத்தை தயாரித்திருக்கிறார். அதற்கு அவரை நாம் பாராட்ட வேண்டியதுதான். நமது ராஜ்யத்தின் வரவை நன்றாக ஆராய்ச்சி செய்து அதன்படி செலவு செய்ய ஏற்பாடு செய்திருப்பதையும் கண்டு நாம் அவரை பாராட்ட வேண்டியதுதான். அதற்கு உதவியாக இருந்த நிதி இலாகா காரியதரிசியும் இந்த திட்டத்தை தயாரிக்க பெரிய உதவி செய்திருக்கிறார். குறை கூறுவது என்றால் எவ்வளவோ குறை சொல்லலாம். நல்லதற்கும் குறை சொல்லலாம் கெட்டதற்கும் குறை சொல்லலாம். அப்படி எல்லாவற்றிற்கும் குறை சொல்லிக் கொண்டு போவது என்பது சரியல்ல, அது நியாயமும் அல்ல. ஒரு சில மக்களுக்கு மட்டும் நன்மை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் திட்டத்தை அமைக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல.

ஒரு நல்ல காரியம் செய்யும்போது, அதிலுள்ள குறைகளையும் எடுத்துச் சொன்னால்தான் அவைகளை நிவர்த்திக்க வழி காண முடியும். உண்மை 5-30 p.m.
யான குறைகளாக இருந்தால்தான் அவைகளைத் தீர்ப்பதற்கு முடியும். 10 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறதென்றால், 20 ஆயிரம் ரூபாய்க்கு எப்படித் திட்டம் வகுக்கமுடியும்? முடியாது. எவ்வளவு தொகை மக்களிடத்திலிருந்து வசூலிக்கிறோம். வருஷத்திலே எவ்வளவு செலவாகிறது என்பதை கணக்கிலெடுத்துக்கொண்டுதான் வரவு செலவுத் திட்டம் வகுக்க முடியும். அந்த வகையில்தான் எந்த எந்த திட்டத்திற்கு எவ்வளவு பணம் செலவு செய்யவேண்டும் என்பதைச் சிந்தித்துத் தான் திட்டம் வகுத்திருக்கிறார்கள் ; அதுவும் மிகப் பொறுத்தமாக வகுத்திருக் கிறார்கள். அதைப் போற்றத் தான் வேண்டும். அதற்கு ஒத்தாசையாக இருந்த காரியதரிசி அவர்கள் அனுபவத்தில் மிகுந்தவர். நிதி மந்திரி அவர்களுக்கும் 6 வருஷ அனுபவம் இருந்தாலும், நிதி இலாகா காரிய தரிசியாக இருந்தவருடைய அனுபவமும் சேர்ந்து இத்திட்டம் வகுக்கப் பட்டிருப்பதால், இது மிக ஒரு நல்ல முறையிலேதான் வகுக்கப்பட்டிருக் கிறது என்று நாம் சொல்லவேண்டும். அப்படி வகுக்கப்பட்ட திட்டத்தை,

[Sri S. Lakshmana Gounder] [3rd March 1958

நாம் பரிசீலனை செய்யும்போது, நமக்கும் இதை ஆராய்ந்து குறைகளைக் கண்டுபிடிக்கக்கூடிய அறிவு இருந்தால், அதை எடுத்துச் சொல்ல, அதற்குப் பரிகாரமும் நாம் கொடுக்கலாம். குறிப்பாக இந்த இந்த குறை இருக்கிறது என்று எடுத்துச் சொல்லாமல், "குறை இருக்கிறது, குறை இருக்கிறது" என்று பொதுவாகச் சொல்வதில் அர்த்தம் இல்லை. உள்ள குறைகளைத் திட்டமாக எடுத்துச் சொல்வதுதான் சிறந்தது என்று கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, வரவு செலவுத் திட்டத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

உணவு உற்பத்தி நல்ல முறையிலே முன்னேறியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அது போற்றத்தக்க விஷயம். ஆனால், கர்ணம், முன்சீப் கொடுத்த கணக்கை வைத்துக்கொண்டு புள்ளி விவரங்கள் தயாரித்திருப்பதால் அவை சரியாக இருக்குமா என்று சிலர் ஐயப்படுகிறார்கள். அது அவசியம் கவனிக்கவேண்டியதுதான். இருந்தாலும் கூட, கர்ணம், முன்சீப் கொடுக்கும் கணக்கை வைத்துத்தானே நாமும் கணக்கைத் தயாரிக்கவேண்டும். அவர்கள் கொடுக்கும் புள்ளி விவரங்கள் சரியில்லை யென்றால், நம்முடைய வருமானம் சம்பந்தமாக புள்ளி விவரமும் சரியில்லாமல் போய்விடும். இவ்வளவுதான் நம் நாட்டுக்கு வருமானம் கிடைக்கும் என்று கணக்கிட்டுச் சொல்லியிருக்கும்போது, அது ஓரளவு சரியாகத்தான் இருக்கிறதென்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மற்ற அன்பர்களுக்கும் நான் சொல்வது என்னவென்றால், மக்களுக்கு நல்ல முறையிலே பாடுபடவேண்டுமென்று எண்ணத்தைக் கொண்டு நாம் நடப்போமானால், வருவாய் எந்த அளவுக்கு அரசாங்கத்திற்கு வரவேண்டும், அந்த வருவாய் எந்த வகையிலே வசூலிக்கப்பட வேண்டும், அப்படி வசூலிக்கும்போது மக்களுக்குப் பாதகம் ஏற்படுகிறதா சாதகம் ஏற்படுகிறதா என்பதை யெல்லாம் நாம் கவனித்து, அதற்கான யோசனைகளைத் தெரிவித்தால் திட்டத்தை வகுத்து நடத்துகிறவர்களுக்குச்சாதகமாக இருக்கும், மக்களுக்கும் நன்மை செய்ததாக இருக்கும். அந்த அளவிலே பார்த்தால், நமது ராஜ்யத்தில் உணவு உற்பத்தி நல்ல முறையிலே முன்னேறி வந்திருக்கிறது என்று சொல்வதைப் பற்றி சந்தேகம் இல்லை. அது பெருமைப்படக்கூடிய விஷயம்தான். ஆனால், ஓரளவு விவசாயம் முன்னேறியிருக்கிறது என்று பெருமைப்பட்டுக்கொண்டு நாம் சும்மா இருக்கக்கூடாது. மேலும் மேலும் விவசாயம் நல்ல முறையிலே வளரவேண்டுமானால், அதைப்பற்றி அரசாங்கத்திலே உள்ளவர்களும் மற்ற சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் கவனித்துச் செய்யவேண்டிய காரியங்களை செய்யவேண்டும். உலகத்திலே மனிதனுக்கு எப்படி ஜீவன் பிரதானமாக இருக்கிறதோ, அது போல், இந்த உலகம் அல்ல எத்தனை உலகமாக இருந்தாலும் அதிலுள்ள எல்லா மனிதனுக்கும் முக்கியமானது விவசாயம்தான் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயம் நல்ல முறையிலே செழிப்படையவில்லையென்றால், உலகத்திலே ஒரு மனிதனும் வாழ முடியாது. மனிதனுக்கு உயிர் போன்ற விவசாயம் நல்ல முறையில் முன்னேற்றம் அடையவேண்டும். விவசாயத்திற்கு முக்கியமானவை நல்ல விதைகள், எரு, தழை அவைகளைத் தயார் செய்வதற்கு விவசாயிகளுக்கு காலாகாலத்தில் கடன் உதவி செய்யவேண்டும். கடன் தொகையும், நல்ல விதைகளும், மற்ற உதவிகளும் விவசாயிகளுக்குக் காலா காலத்தில் கிடைக்காத குறையினால், விவசாயிகள் சர்க்காருடைய உதவியை அனுபவிக்க முடியாதிருப்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், எரு, தழை, பிண்ணாக்கு உப்பு இம்மாதிரி காரியங்களுக்கு சிறு தொகை சர்க்கார் கடனாகக் கொடுக்கிறார்கள். அந்தத் தொகை விவசாயிகளுக்குக் குறிப்பிட்ட காலத்தில் கிடைப்பதில்லை என்பதை நான் வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயமானது மற்ற தொழில்களைப் போல் அல்ல. வித்தியாசம் இருக்கிறது. எப்படியென்றால், மற்ற தொழில்களை எந்தச் சமயத்திலும் செய்யலாம். ஆனால், விவசாயத்தைப் பொறுத்த வரையில் அதைக் காலா காலத்தில்தான் செய்யவேண்டும், அதாவது தக்க பருவத்தில் தான் பயிர் செய்ய முடியும். இடரென்று மழை பெய்து விட்டதென்றால்,



3rd March 1958] [Sri S. Lakshmana Gounder]

உழவு செய்து பயிர் செய்தாக வேண்டும். அந்த சமயத்தில் அவனுக்கு எரு கொடுத்தால்தான் அவன் நிலத்தில் விதை போட்டு, பருவத்தில் விவசாயம் செய்ய முடியும். எருவுக்காக சர்க்கார் கொடுக்கக்கூடிய கடன்கள் விவசாயிகள் கைக்கு வந்து சேருவதற்கு ஒரு வருஷம் ஆகிறது. மிகவும் சீக்கிரமாகக் கொடுத்தார்கள் என்று வைத்துக்கொண்டாலும் குறைந்தது ஆறு மாதம் ஆகிறது. இது தான் குறை. சர்க்கார் நிறைய பணம் ஒதுக்குகிறார்கள்; ஆனால் வேண்டிய சமயத்தில் பணம் கிடைப்பதில்லை. அதனால் விவசாயம் குறைந்து விடுகிறது. இதைக் கவனித்து நல்ல முறையில் சர்க்கார் கொடுக்கும் பண வசதி விவசாயிகள் கைக்கு, காலா காலத்தில் போய்ச் சேர வசதி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், கீழ் இருக்கும் அதிகாரிகளுக்கும் உத்தரவு இடும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தக்காவிக்கடன் கொடுக்கிறோம். விவசாயம் நல்ல முறையிலே முன்னேறவேண்டுமென்ற எண்ணத்தோடு கொடுத்திருக்கிறோம். ஆனால், அப்படி ஒதுக்கப்பட்ட தொகை நல்ல முறையிலே போய்ச் சேரவில்லை என்று தான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். மாடு வாங்குவதற்கோ, நிலச் சீர்திருத்தம் பண்ணுவதற்கோ, கிணறு வெட்டுவதற்கோ, வேறு ஏதாவது விவசாய காரியம் செய்வதற்கோ கடன் வேண்டுமென்று விண்ணப்பம் போட்டால், விண்ணப்பத்தை பரிசீலனை செய்வதற்கே ரெவினியூ இன்ஸ்பெக்டருக்குக் குறைந்த பட்சம் இரண்டு மாதங்கள் ஆகின்றன. நிலம் எவ்வளவு விலை பெறும் என்று யோசனை செய்வதற்கு 2 மாதம் ஆகிறது. இவ்வளவு கால தாமதம் ஆகியும், கடைசியில் கடன் கிடைக்குமா கிடைக்காதா என்று சொல்ல ஆறு மாதம் ஆகிறது. 100-க்கு 99 விண்ணப்பங்களுக்கு இல்லை என்ற பதில் தான் கிடைக்கிறது. மீதி ஒருவருக்குக் கொடுக்கிறார்கள். அந்த ஒருவருக்குக் கொடுக்கும் பணத்தை கூட குறிப்பிட்ட காலத்தில் கொடுப்பதில்லை. கிணறு வெட்டுவதற்கோ, நிலச் சீர்திருத்தம் செய்வதற்கோ, மாடு வாங்குவதற்கோ கடன் வேண்டுமென்று விண்ணப்பம் போட்டால், 15 நாட்களுக்குள்ளாக விசாரணை செய்து உண்டு இல்லை என்று பதில் சொல்லிவிட வேண்டும். அப்படிச் சொல்லி விட்டால் தான் விவசாயி குறிப்பிட்ட காரியத்தைச் செய்துகொள்ள முடியும் பசியால் துடிக்கிறவனுக்கு அந்தப் பசிவேளைக்குச் சாப்பாடு போட்டால் தானே நல்லது? தர்மம் செய்கிறோம் என்று சொல்லி, பசிவேளை தாண்டி சோறு போடுவதில் என்ன பிரயோசனம்? ஆகையினால், தேவையான காலத்தில் விவசாயிகளுக்குத் தக்காவிக் கடன் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விவசாய அபிவிருத்திக்காக சர்க்கார் பணம் கடன் கொடுக்கிறார்கள். ஆனால், அந்தக் கடனை ஒரு வருஷ வாய்தாவுக்குள் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். திருப்பிக்கொடுக்கும் தவணையை ஐந்து வருஷமாக நீடித்தால் விவசாயிகளுக்குச் சௌகர்யம் ஏற்படும். ஆயிரம், இரண்டாயிரம் என்று கடன் வாங்கும்போது, அதை ஒரு வருஷத்தில திருப்பிக் கொடுப்பது என்பது விவசாயிகளால் இயலாது. ஐந்து வருஷத் தவணைகளில் திருப்பிக்கொடுக்கலாம் என்றால் தான் விவசாயத்தை ஓரளவு தைரியமாகச் செய்ய முடியும். இந்த வருஷம் வாங்கிவிட்டு அடுத்த வருஷம் கொடுக்கவேண்டுமென்றால் கஷ்டப்படுகிறார்கள். சட்டப்பிரகாரம் அவர்கள் கொடுக்க வேண்டியவர்களாக இருப்பதால், சங்கத்தாரும் அதை வற்புறுத்துகிறார்கள். இதைச் சிந்தித்துப் பார்த்து, ஐந்து வருஷத் தவணையில் கடனைத் திருப்பிக் கொடுக்க வழி செய்ய, அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விண்ணப்பம் செய்து 6 மாதம் கழித்தும், ஒரு வருஷம் கழித்தும்கூட கடன்கள் கொடுக்கப்படுவதில்லை. சட்டப்படி எப்படியிருந்தாலும் சரி, இப்படி நடந்துகொள்வது சரியல்ல என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். இனம் கிராமங்களில் விவசாயிகளுக்குத் தக்காவிக் கடன் வேண்டுமென்று கேட்டால், இனம்தாருடைய கையெழுத்தும் இருந்தால் தான் கடன் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஆயிரக்கணக்கான

விண்ணப்பங்கள் கிராமங்களிலிருந்து போடப்பட்டும், அவைகளின் பேரில் இன்னும் கடன் கொடுக்கப்படாமல் போய் விட்டது. இதைப் பற்றி ரெவினியூ மந்திரியிடம் நான் சொன்னேன். அறிக்கை கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். தக்காவி மானுவலிலே, குடிவார பாத்தியதை பெற்றிருந்தாலும், நிலத்தை விலைக்கு வாங்கியிருந்தாலும், மேல் வாரம், கீழ் வாரம் வாங்கியிருந்தாலும், அவர்களுக்குக் கடன் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறது. அதை வைத்துக் கொண்டு தாசில்தார்கள் "ஷூட் பி கிவன் நோடிஸ்" என்று சொல்கிறார்கள். அவசியம் இனாம்தார்களுக்கு நோட்டீஸ் கொடுத்தாகவேண்டும். மறுத்து விட்டால் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். இங்கிலீஷ் தெரியாது, விளங்கும்படியாகச் சொல்லுங்கள் என்று கேட்டதில், "இனாம்தாருக்கு நோடீஸ் கொடுத்து, இனாம்தார் ஒத்துக்கொண்டால்தான் தக்காவிக் கடன் கொடுக்க முடியும், இல்லாவிட்டால் கொடுக்க முடியாது" என்று சொன்னார். "மந்திரி அவர்களிடம் சொல்லியிருக்கிறோம். அவர் வாய் மொழியாகவோ, எழுத்து மூலமாக அறிக்கை விட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறாரா" என்று நான் சொல்லியும், "கண்டிப்பாகக் கடன் கொடுக்க முடியாது" என்று சொன்னார்கள். இனாம்தார்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஒற்றுமை இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர்களுக்குள்ளே வேறுபாடு இருக்கிறது. ஆகவே இனாம்தார்களிடமிருந்தும் விவசாயிகள் உதவி பெற முடியாது. அதனால் இத்தகைய இனாம் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் விஷயத்தில் சர்க்கார் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் விஷயத்தை எடுத்துக்கொண்டால், சேலம் ஜில்லாவில் வீராணம் ஏரிக்கரையை கட்டுவதற்கு எடுத்துக்கொண்டார்கள். ஆனால், இனாம்தார் அதைத் தடுத்து நிறுத்திவிட்டார். கிராமத்திலேயுள்ள ஏரி இனாம்தாருக்குச் சொந்தம் என்று ஏதோ சட்டத்திலே இருக்கிறதாம். இனாம்தாரும் வாய்க்காலைச் சுத்தம் செய்வதற்கோ, மற்ற வசதிகள் செய்வதற்கோ முயற்சி எடுத்துக்கொள்வதில்லை. கலெக்டரைப் பார்த்துச் சொன்னேன். "ஏரிக்கரையை கட்டுவதும், வாய்க்காலைச் செப்பனிடுவதும் கலெக்டரே செய்து விட்டு சிலவு ஆகும் பணத்தை இனாம்தாரிடமிருந்து வசூல் செய்யலாம் என்று சட்டம் இருக்கிறது" என்று சொன்னேன். அந்த மாதிரி இனாம்தாரருக்கு நோட்டீஸ் கொடுத்தும் பதில் அவர் சொல்லவில்லை. இம்மாதிரி நிலை இருந்தால், என்றைக்கு நாம் முன்னேற முடியும்? இனாம் கிராமத்தில் பல தொல்லைகள் இருக்கின்றன. அவைகளை நீக்கித்தான் ஆகவேண்டும். இனாம்தாருக்கு இனி எந்த விதமான பாத்தியமும் இல்லை. நிலத்தில் விவசாயம் செய்கிறவர்களுக்குத்தான் பாத்தியம் இருக்கவேண்டுமேயொழிய, இனாம்தார் குறிக்கிடமுடியாது. வேண்டுமானால் காம்பென்சேஷன் வாங்கிக்கொண்டு போகலாம். இதில் ஏதாவது தடை இருந்தால் சர்க்கார் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். இதை தவிர இன்னும் விவசாயத்திற்குச் செய்யவேண்டிய காரியங்கள்
5-40 p.m. இருக்கின்றன. மின்சார விஷயமாக நான் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்திற்கு அதிகமான அளவில் மின்சாரத்தை உபயோகப்படுத்த வேண்டும் என்கிற கொள்கையில் மின்சாரம் எங்கு பார்த்தாலும் விஸ்தரிக்கப்படுகிறது. முன்பெல்லாம் விவசாயத்துக்கு மின்சாரம் வேண்டும் என்று விண்ணப்பித்துக்கொண்டால் 5 வருஷங்களானாலும் கிடைப்பது இல்லை. இப்போது அப்படி இல்லை. மின்சாரம் வேண்டுமென்று சொன்னால் மூன்று மாதங்களுக்குள்ளேயே சப்ளை செய்து விடுகிறார்கள். ஆனால் சில சங்கடங்கள் இருக்கின்றன. நம் நாட்டில் மின்சார மோட்டார்களை அநேகமாக தனிப்பட்ட கம்பெனிகள்தான் வினியோகித்து வருகின்றன. தேவைக்கு ஏற்றபடி அவர்களாலும் மின்சார மோட்டார்கள், பம்பு செட்டுகள் சப்ளை செய்ய முடிவதில்லை. வெளிநாட்டிலிருந்துதான் ஸ்டார்ட்டர்கள் தருவிக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அவற்றை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதால் செலாவணி தொகை அதிகமாகி விடுகிறது என்கிற எண்ணம் உண்டாகக் கூடாது. எந்த எந்த விவசாயிகளுக்கு மின்சார மோட்டார்கள் தேவைப்படுகிறது என்பதை அரசாங்கமே



கணக்கெடுத்து அரசாங்க இலாகா மூலமாகவே தருவித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். நம் நாட்டிலேயே அதிகமான மோட்டார்கள் தயாரிப்பதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். ஸ்டார்ட்டர் ஸ்விட்சு இப்போது செய்கிறார்கள் என்றாலும், போதுமான அளவில் கிடைக்காததனால் விவசாயம் முன்னேற வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக தேவையான அளவு வெளிநாடுகளில் இருந்தும் அவற்றை இறக்குமதி செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம் நாட்டில் நெசவுத் தொழில் இருக்கிறது. தென்னாடு நெசவுத் தொழிலுக்குப் பெயர் போனது. கைத்தறி ஓரளவு நல்ல முறையில் நடந்து வருகிறது. ரிபேட் கொடுப்பது நின்று விட்டது என்ற காரணத்தினாலோ என்னவோ இப்போது ஊக்கம் சற்று குன்றி வருகிறது. மறுபடியும் ரிபேட் கொடுத்து நெசவுத் தொழில் நல்ல முறையில் வளர்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கைத்தறி தொழிலை நம்பித்தான் அநேக ஆயிரம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை சீரழிந்து விடாமல் இருப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கம்பளி நெசவுத் தொழில் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கம்பளி நெசவுத் தொழில் மிகவும் புராதனமானது. பச்சையாகச் சொன்னால் ஆட்டு மயிரினால் செய்யப்படும் ஒரு தொழில். கம்பளத்திலும் இரண்டு ரகம் இருக்கிறது. ரத்தின கம்பளம், சாதாரண கம்பளம் என்று இரண்டு ரகம். ரத்தின கம்பளம் ஆராயிரம் ரூபாய் வரையில் விற்றிருக்கிறது. ஆராயிரம் ரூபாய் இருக்குமா என்று யோசிக்கலாம். நல்ல முறையில் நெய்யவேண்டும் என்றால் ஒரு நாளைக்கு 12 பேர் உட்கார்ந்து நெய்தால் ஒரு இன்சு தான் நெய்ய முடியும். மைசூர் மகாராஜாவுக்கு ஒரு ரத்தினக் கம்பளம் நெய்யும்போது நான் அத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறேன். சாதாரண கம்பளங்கள் என்றால் 30 ரூபாய் முதல் நூறு ரூபாய் வரையில் விற்கும். இன்றைக்கு அந்தத் தொழில் மிகவும் நாசம் அடைந்திருக்கிறது. முன்பு சாதாரணமாக சேலம் ஜில்லாவில் மூவாயிரம் தறி நடந்திருக்கிறது. பண்ணிரண்டாயிரம் பேர்கள் முதல் முப்பதாயிரம் பேர்கள் வரையில் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அந்தத் தொழில் நசித்துப் போய் விட்டது. இங்கிருந்து முடிகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து விடுவதால் வெளிநாட்டிலிருப்பவர்கள் கம்பளங்களை இங்கிருந்து இறக்குமதி செய்கிறதில்லை. ஆகையால் அயல் நாட்டுக்கு முடி ஏற்றுமதி செய்வதை நிறுத்தி நம் நாட்டிலேயே கம்பளம் நெய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தால் வெளிநாட்டு செலாவணியை அதிகமாகத் தேடித் தரும் ஒரு தொழிலாக அது விளங்கும். முன்பே இது பற்றி வாணியம்பாடியில் ஆராய்ச்சி செய்வதாகச் சொன்னார்கள். முடி ஆராய்ச்சி செய்ய மட்டும் ஏற்பாடு செய்யப் போவதாக டைரெக்டர் சொன்னார். கம்பளத்தை பற்றியும் ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். திருச்சி முதலிய இடங்களிலும் வாணியம்பாடியிலும் தான் முடி கொள்முதல் செய்வது வழக்கம். ஆகவே வாணியம்பாடி சிறந்த இடம் இத்தகைய ஆராய்ச்சியை நடத்துவதற்கு. மீண்டும் நம் நாட்டில் கம்பளத் தொழில் சிறப்பு அடைவதற்கு சர்க்கார் எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டால் அந்நியச் செலாவணி நமக்கு அதிகமாகக் கிடைக்கும் என்று சொல்லிக்கொண்டு எனக்குப் பேசசந்தர்ப்பம் அளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Sri A. R. MARIMUTHU**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சென்னை அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பட்ஜெட்டைப் பார்த்த அளவில் யாரும் மிக்க மகிழ்ச்சி அடைவதற்கு இல்லை என்று நான் நினைக்கிறேன்.

[Sri A. R. Marimuthu] [3rd March 1958

இன்றைக்கு நாம் எல்லா வகையிலும் முன்னேற வேண்டும் என்கிற கொள்கையில் பல பல அபிவிருத்தித் திட்டங்களை வெகு வேகமாகப் போடுவதற்கு நிறைய மூலதனம் தேட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். பொருளாதார ஏற்றத் தாழ்வு அதிகமாயுள்ள நாட்டில் சேமிப்பு சக்தி மிகக் குறைவாக இருக்கும் என்பதே பொருளாதார நிபுணர்களுடைய கருத்து. பொருளாதார ஏற்றத் தாழ்வைக் குறைப்பதற்கு இந்த பட்ஜெட் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. நாட்டு மக்களிடத்தில் சேமிப்பு சக்தி குறைவாக இருக்கும் நிலைமையிலும் பொருளாதார ஏற்றத் தாழ்வு மிக அதிகமாக இருக்கும் நிலைமையிலும் நம்முடைய அபிவிருத்தித் திட்டங்களுக்குப் போதுமான பணம் மக்களிடம் இருந்து கிடைக்காமல் போய் விடலாம். அதனால் அநேக அபிவிருத்தித் திட்டங்கள் கைவிடப்படும் நிலைமைதான் ஏற்படும்.

முதலீட்டுச் செலவைப் பார்த்தால் மிகக் குறைவாகத் தான் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் போதிய பண வசதி இல்லை என்பதாகத் தான் இருக்கும். போதிய பண வசதி எங்கிருந்து கிடைக்கும், எப்படிக் கிடைக்கும் என்கிற கருத்தோடு, எதிர்காலத்தை நோக்கி வேகமாக முன்னேறுவதற்குச் சாத்தியமான வகையில் இந்த வரவு செலவுத் திட்டம் அமையவில்லை என்பதுதான் என் கருத்து.

5–50 p.m. மேலும் இந்த பட்ஜெட்டை தமிழில் கொடுத்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும் என்பது என் கருத்து. தமிழை ஆட்சிமொழியாக்கி விட்டோம் நாம். இந்த பட்ஜெட்டை தமிழில் கொடுப்பதில் கஷ்டம் ஒன்றும் இருப்பதாக நான் கருதவில்லை. ஆகவே அடுத்த வருஷத்திலாவது இந்த பட்ஜெட்டை தமிழில் கொடுக்க முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ் ஆட்சி மொழியாகியும் கூட ஸ்டேட் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகள் ஆங்கிலத்தில் தான் நடந்து வருவதாக தெரிகிறது. ஆகவே, அதையும், சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளையும் ஆங்கிலத்திற்குப் பதில் தமிழில் தான் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடி, நாட்டில் உள்ள விவசாயக் கூலிகளின் நலனைப் பற்றி ஒரு வித அக்கரையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை அல்லது அக்கரை காட்டப்படவில்லை என்பது மற்றொரு குறை. இந்த விவசாய கூலிகள் என்பவர், கூலி வேலை செய்து பிழைக்கக்கூடியவர்களாவார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க இந்த பட்ஜெட்டில் ஒன்றும் காணவில்லை. ஹரிஜன முன்னேற்றத்திற்காக அதிகப் பணம் ஒதுக்கப்படவில்லையா என்று கேட்கலாம். அதற்காக அதிகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கூறலாம். ஆனால் ஹரிஜனங்கள் அல்லாதாரும் நம் நாட்டில் கூலி வேலை செய்து பிழைக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவேதான் சொல்கிறேன், அந்தத் தொழிலாளர்களுக்கு வேண்டி, அவர்களின் முன்னேற்றத்திற்காக, அவர்களின் நலனைப் பாதுகாப்பதற்கு வேண்டி இந்த பட்ஜெட்டில் பணம் ஒதுக்கப்படவில்லை என்பதை நான் வருத்தத்துடன் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் நிர்க்கதியாய் விடப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு விவசாயி இருக்கிறான் என்றால் அவன் கூலி வேலை செய்து பிழைக்கும் வரையில் தான் அவன் சாப்பிட முடியும். இரண்டு நாள் அவன் சீக்காய் கிடந்து விட்டால் அவனும், அவன் மனைவி, குழந்தைகளும் பட்டினி கிடக்க வேண்டியதுதான். அதோடு அவனுக்குள்ள வைத்தியச் செலவிற்குக் கூட கையில் பணம் கிடையாது. இதர தொழிலாளிகள் தொழிற்சங்கங்கள் அமைத்துக்கொண்டு தங்களின் நிலையை உயர்த்திக்கொள்வதற்கு பாடு படும்போது இந்தத் தொழிலாளர்களின் நிலை உயர வழி இல்லை. ஆகவே அவர்களின் நிலையை உயர்த்துவதற்கு அரசாங்கம்தான் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, அவர்களுக்கு மனைக்கட்டுகள் ஒதுக்கிக் கொடுக்க சர்க்கார் முன்வர வேண்டும். அப்படி அவர்களுக்கு மனைக்கட்டுகள் வசதி செய்து கொடுக்கக்கூட இந்த பட்ஜெட்டில் வழிவகை செய்யப்படவில்லை. அவர்களுக்கு மனைக்கட்டுகள் வழங்க வேண்டுமென்று நான் மீண்டும் ஒரு முறை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு விவசாயத் தொழிலுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் கூறி



3rd March 1958] [Sri A. R. Marimuthu]

வருகிறோம். அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையிலும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆகவே, விவசாயத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று நான் அரசாங்கத் தைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடி, சர்க்கார் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க ஒரு மசோதா நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தச் சட்டம் ஏன் இது வரை அமுலாக்கப் படவில்லை என்று தெரியவில்லை. குதிரைப் பந்தயம் மூலம் சர்க்காருக்கு வரும் வருமானம் 13 லட்சம் ரூபாய் தான் என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு 13 லட்சம் ரூபாய் சர்க்காருக்கு கிடைக் கிறது என்பதற்காக பொது மக்கள் கோடிக்கணக்கான ரூபாயை இழக்க வேண்டுமா என்று நான் சர்க்காரைக் கேட்கிறேன். - குடிப்பதின் மூலம் மக்கள் கெட்டுப் போகிறார்கள் என்பதற்காக, கோடிக் கணக்கில் சர்க்காருக்கு வருவாய் வந்ததைக்கூட பொருட்படுத்தாமல் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவர வில்லையா ? அப்படி அதற்காக கோடிக் கணக்கில் வந்த வருவாயை இழக்க முன் வந்த சர்க்கார் ஏன் இந்த 13 லட்சம் ரூபாயை இழக்க தயங்க வேண்டும் என்று நான் கேட்கிறேன் ? அது மாத்திரமல்ல, இந்நாட்டிலே பலர் குறுக்கு வழியில் பணம் தேட முயற்சிக்கிறார்கள். குறிப்பாக மதுரையில் எம்.எம்.பி. கம்பெனி என்று ஒன்றை ஆரம்பித்து ரெஜிஸ்தர் செய்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் இந்நாட்டில் பல இடங்களில் கிளைகள் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்றும், விளம்பரம் செய்கிறார்கள் அவர்கள் கிராமங்களுக்கு வந்து சிட் பண்டு என்று சொல்லி, நாள் ஒன்றுக்கு நான்கு அணா தந்தால் ஒரு வருடத்தில் இவ்வளவு ரூபாய் ஆகும், வருடக் கடைசியில் அதைத் தந்து விடுகிறோம் என்று சொல்லி வசூல் செய்து வருகிறார்கள். ஆகவே, கிராம மக்கள் தங்களிடம் பணக் கஷ்டம் உள்ள போதிலும் வருடத்தில் இவ்வளவு சேமிப்புக் கிடைக்கிறதே என்று ஆசைப்பட்டுக் கொண்டு அந்த சிட் பண்டில் சேருகிறார்கள். இப்படித் தோன்றுகிற சில கம்பனிகள் பணத்தை வாங்கிக் கொண்டு, கடைசியில் பணம் கொடுத்தவர்களுக்கு பணம் கொடுக்காமல் அவர்கள் சென்று பார்க்கும் போது போர்டும் இருக்காது, அந்தக் கட்டி டத்தின் கதவுகள் மூடப்பட்டிருப்பதையும் பார்க்கிறார்கள். அவர்கள் பணம் அவ்வளவும் போனது போனதுதான். ஆகவே, இப்படி ஏழை மக்களை ஏமாற்றுகிறவர்கள் மீது சர்க்கார் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு இப்படிப்பட்ட சிட் பண்டுகளை கிராமப் புறங்களில் சர்க்கார் கிராம அதிகாரிகள் மூலமாகவோ அல்லது வேறு அதிகாரிகள் மூலமாகவோ ஏற்படுத்த சர்க்கார் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த நாட்டில் உள்ள சிறு விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகள் அளிக்கப்படாததால்தான் உணவு உற்பத்தி குறைவாகிறது. குறிப்பாக விவசாயிகளுக்கு போதிய கடன் வசதி கிடைப்பதில்லை. விவசாயிகளுக்காக கொடுக்கப்படும் கடன், வசதி, போன வருடம் அவர்களின் கடன் வசதிக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தை விட இந்த ஆண்டு குறைவாக இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நாட்டில் பல நீர்பாசனத் திட்டங்கள் போட்டு அதிகப்படியான நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருகிறோம். அதற்கேற்றபடி விவசாயிகளுக்கு கடன் வசதியை அதிகப்படுத்த வேண்டியது சர்க்காரின் பொறுப்பாகும். காலத் தோடு சாகுபடி செய்யமுடியாத நிலையிலும், விவசாயம் செய்வதற்கு வேண்டிய உபகரணங்கள் இல்லாத நிலையிலும் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது இக்கடன் வசதியைப் பொறுத்தவரையிலாவது சற்றுக் கூடுதல் கவனம் சர்க்கார் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, விவசாயம் செய்ய உரம் தேவை. கடந்த வருடம் விவசாயத்திற்கு ஒன்றரை லட்சம் டன் உரம் கொடுக்கலாம் என்று கூறினார்கள். ஆனால் 75,000 டன் தான் அம்மோனியம் சல்பேட் சப்ளை செய்யப்பட்டிருக்கிறது. அதைக் குறைக்காது; அந்தளவாவது இந்த வருடமும் சப்ளை செய்ய வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள் கிறேன். இரசாயன உரங்கள் வாங்குவதற்காக விவசாயிகளுக்கு கடன்கள் தந்து உதவ 60 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகையை அதிகமாக்க வேண்டும் என்பதுதான் என் கருத்து. அம்மோனியம்

[4th March 1958

**SRI P. G. MANICKAM**: கிராமப் பகுதிகளிலுள்ள ஹரிஜனங்களும், ஏழைகளும், பின்தங்கிய வகுப்பினரும், கிராமங்களில் குடி கிணறுகள் வெட்டுவதாக யிருந்தால், அதற்காக ஆகும் தொகையில், 25 சத விகிதம் செலுத்தாமல் இருக்கலாம் என்ற உத்தரவை சர்க்கார் பிறப்பித்திருக்கிறது என்று நினைக்கிறேன். அந்த உத்தரவு சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கும், பொது ஜனங்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU**: இந்த 25 சத விகிதம் 1954-ம் வருஷத்திலிருந்துதான் கேட்கப் படுகிறது. ஹரிஜனங்களும், மற்ற ஏழை ஜனங்களும் இம்மாதிரியான பணம் கொடுக்க வேண்டுமென்பது இல்லை. எல்லாம் அரசாங்கத்தினுடைய செலவாகத் தானிருக்கிறது.

**SRI P. G. MANICKAM**: தற்போது கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நான் சொன்ன சங்கதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அறிக்கையை அமுலுக்குக் கொண்டுவர சர்க்கார் உத்தரவு இடுவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU**: இந்த குடி தண்ணீர் விஷயமாக கிணறு வெட்டுகிற விஷயத்திலே, ஹரிஜனங்களும், மற்ற பிற்பட்ட வகுப்பினரும் 25 சத விகிதம் கொடுக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: Sir, out of the Rs. 36 lakhs allotted, only Rs. 6 lakhs have been spent. Can the Government tell as whether in the second half-year, the entire allotment would be spent?

**THE HON. SRI M. A. MANICKAVELU**: இந்தப் புள்ளி விவரத்தைப் பார்த்தால், சாதாரணமாக இம்மாதிரி செலவு மாத்திரமில்லை, மற்ற செலவினங்களிலும், செப்டம்பர் மாதம் வரையிலும் செலவு குறைவாக யிருக்கிறது. இரண்டாவது பகுதியில்தான் ஜாஸ்திப் பணம் செலவழிக்கப் படுகிறது.

**SRIMATHI T. N. ANANDANAYAKI**: கிராமப் பகுதிகளிலே தண்ணீர் சப்ளைக்காக பல லட்ச ரூபாய்கள் ஒதுக்கப்பட்ட போதிலும், குடி தண்ணீருக்காகக் கஷ்டப்படும் ராசிபுரம் போன்ற பகுதிகளில் ஒரு ஏற்பாடும் செய்யவில்லை என்று கூறப்படுகிறது. பஞ்சத்தால் வாடும் அப் பிரதேசங்களில் குடம் 1½ அணு, 2 அணுவாக விற்கப்படுகிற பிரதேசங்களில் தண்ணீர் சப்ளை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU**: தண்ணீர் கஷ்டம் எங்கு அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் அதிகப்படியாகச் சலுகை கொடுக்கிறார்கள். இந்தச் சலுகை கொடுப்பதற்கு ஒரு ஜாப்தா தயாரா யிருக்கிறது. இந்த இடம் அந்த ஜாப்தாவில் இருக்கிறதோ இல்லையோ தெரியாது. சாதாரணமாக இந்த மாதிரி இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

1-20 p.m. **SRI N. R. THIAGARAJAN**: மாகாணங்களுக்கு ஜனத் தொகை அடிப்படையில் நிதி உதவி வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும்போது இங்கு ஜில்லாக்களில் பாரபட்சம் காட்டப் படுகிறது என்று தெரிய வருகிறது. சில ஜில்லாக்களுக்கு அதிகமாகவும் சில ஜில்லாக்களுக்கு குறைவாகவும் ஒதுக்கப்பட்டிருப்பது சரியா என்பதை கேட்க ஆசைப்படுகிறேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU**: இது ஜில்லா நிலைமையை பொறுத்ததே தவிர அதில் பாரபட்சம் காட்டுவது என்பது கிடையாது. நீலகிரியில் கிணறுகள் வெட்ட வேண்டியது அவசியம்



4th March 1958]

அங்கே தண்ணீர் வேறு விதமாகக் கிடைக்கிறது. கிணறுகள் வெட்டித்தான தண்ணீர் கொண்டு வரவேண்டுமானால் கிணறுகளை வெட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படும். சாதாரணமாக சில ஜில்லாக்களில் அப்படிப்பட்ட நிலைமை கிடையாது.

**SRI G. G. GURUMURTHI**: சில திட்டங்களை நிறைவேற்றுவதில் கால தாமதம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் தண்ணீரைப் பரிசோதனை செய்வதற்கு கிண்டிக்கு அனுப்பப்படுகிறது. அங்கே பரிசோதனை செய்து திரும்பி வருவதற்கு கால தாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அதனால் அரசாங்கம் அப்படி பரிசோதனை செய்வதை நிறுத்தி விட்டு உடனடியாக திட்டங்களை அமுல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU**: பரிசோதனை செய்ய வேண்டாம் என்று சொல்வதை ஒத்துக்கொள்ள முடியாது. தண்ணீரை பரிசோதனை செய்துதான் உபயோகப்படுத்த வேண்டும். நல்ல தண்ணீராக இருந்தால்தான் அதை உபயோகப்படுத்தித் திட்டம் வகுக்க வேண்டும். நல்ல தண்ணீராக இருந்தால்தான் நல்லது. கெடுதல் தண்ணீராக இருந்தால் அது பிரயோசனப்படாது. பரிசீலனை செய்வதை மட்டும் துரிதப்படுத்துவதற்கு வேண்டுமானால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அதற்கு வேண்டிய ஏற்பாடும் செய்துகொண்டுதான் வரப்படுகிறது.

**SRI K. VINAYAKAM**: Sir, did the Hon. Minister get a representation in the recent past from the Rasipuram Municipality about their demand for water-supply and the scarcity which is existing in that town and if so, did the Hon. Minister find out the priority at which it stands as far as Rasipuram is concerned?

**THE HON. SRI M. A. MANICKAVELU**: I am getting many representations. Probably Rasipuram also should have represented. I remember about Dharapuram. My hon. colleague just tells me that the original question relates to rural water-supply scheme but Rasipuram comes under the urban water-supply scheme.

**SRI A. A. RASHEED**: Is there any proposal to give a lump sum grant to the panchayats for water-supply schemes?

**THE HON. SRI M. A. MANICKAVELU**: No, Sir. We have been following what we have been doing in this respect. The question is how the lump sum grant can be utilized. But there is difficulty in this matter.

**SRI S. NAGARAJA MONIGAR**: கனம் மந்திரி அவர்கள் கூறிய பதிலிலிருந்து அந்தந்த ஜில்லாக்களில் தேவை எப்படி இருக்கிறது, இதைப் பொறுத்துதான் செலவு செய்யப்படுகிறது என்று சொன்னார். அப்படி இருந்தும் கன்யாகுமரி ஜில்லாவிற்கு ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தும், தேவை அதிகமாக இருந்தும் அங்கு எட்டில் ஒரு பங்கு அல்லது பத்தில் ஒரு பங்குதான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதே மாதிரி ஆறு மாதத்திற்கு வேண்டிய செலவு ஏற்படலாம் என்று கூறியிருக்கிறார்கள். சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் . . .

**MR. SPEAKER**: The hon. Member is making a speech. May I request him to ask his question directly and not to give a summary of what the Hon. Minister has stated?

**SRI S. NAGARAJA MONIGAR**: ஒவ்வொரு ஜில்லாவை பொறுத்த அளவில் ஏதாகிலும் செலவு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். எந்த அளவு செலவு செய்ய வேண்டுமோ அந்த அளவு செலவு செய்வார்களா?

[Sri A. R. Marimuthu] [3rd March 1958

சல்பேட் குறைவாக கிடைக்குமானால், அதற்குப் பதிலாக மீன் உரத்தை உபயோகிக்கலாம். ஆகவே, மீன் உரத்தை அதிலும் உற்பத்தி செய்ய சர்க்கார் முயற்சி செய்ய வேண்டும். மீன் பிடி தொழிலாளர்கள் உள்ள கடலோரப் பகுதிகளில் மீன் உரத்தை அதிகப்படித் தயாரிக்க, சர்க்கார் அதை இன்று ஓரளவு செய்து வருகிறார்கள் இருந்தபோதிலும், அதில் கூடுதல் முதலீடு செய்து அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அது, நம் ரசாயன உரத் தேவையை ஓரளவு குறைக்கும். அதோடு நான் சொல்ல விரும்புவது, அம்மோனியம் சல்பேட்மட்டும் கொடுத்தால் போதாது. அம்மோனியம் சல்பேட் போடக் கூடிய அளவிற்கு பாஸ்பேட் உரமும் கொடுக்கவேண்டும். வெறும் சல்பேட் உரம் மட்டும் போதாது. அதிகப் படியான தான்யம் பெற விரும் பினால் பாஸ்பேட் உரமும் வேண்டும். எவ்வளவு அம்மோனியம் சல்பேட் உரம் கொடுக்கிறோமோ அதே போல் இரண்டு மடங்கு பாஸ்பேட் உரம் கொடுத்தால்தான் இந்த அம்மோனியம் சல்பேட்டின் பலனை நாம் எதிர் பார்க்க முடியும். ஆகவே, இந்த வருடம் ஒன்றரை லட்சம் அம்மோனியம் சல்பேட்டும், மூன்று லட்சம் சூப்பர் பாஸ்பேட்டும் கொடுக்க வேண்டும். அதில் கவனம் செலுத்தவில்லை என்றால் நாம் எதிர்பார்க்கும் பலனை அடையமுடியாது.

**DEPUTY SPEAKER :** இன்னும் இரண்டு நிமிடங்கள் வேண்டுமானால் பேசலாம்.

**Sri A. R. MARIMUTHU :** நிலம் விற்பதின் மூலம் அரசாங்கத்திற்குள்ள வருவாய் இரண்டு லட்சம் என்று இருக்கிறது. நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுப்பதிலும், அதாவது நிலம் அஸைன் செய்து கொடுப்பதிலும் கிரயம் வாங்கும் தொகைதான் இது என்று நினைக்கிறேன். இப்படிச் செய் வதால் யாரிடம் கடன் வாங்கித் தொகை கட்டுகிறார்களோ அவர்களிடம் நிலம் போய்விடுகிறது. நிலம் இல்லாதவர்களிடம் நிலம் இருப்பதில்லை, ஆகவே, இந்த நிலைமை போக வேண்டுமானால் அரசாங்கம் நிலங்களை ஜாரி செய்யும் பொழுது விவசாயிகளுக்கு அனுகூலமாக அதற்குள்ள விலையை நிர்ணயம் செய்யாமல் இனாமாக ஜாரி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

5-56 p.m. **Mr. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 1 p.m. tomorrow.**

The House then adjourned.

### IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory rules, orders and notifications.

58. *Notification issued with G.O. Ms. No. 3980, Industries, Labour and Co-operation, dated 3rd December 1957, amending the proviso to rule 13 (c) of the Madras Factories Rules, 1950.*

59. *Notification issued with G.O. No. 4777, Revenue, dated 28th December 1957, amending sub-rule (4) of rule 6 of the Madras General Sales Tax Rules, 1939. [Laid on the Table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.]*

60. *Notification issued with G.O. No. 4502, dated 4th December 1957, amending rules 7, 8, 10 and 11 of the Madras General Sales Tax (Turnover and Assessment) Rules, 1939. [Laid on the Table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.]*



3rd March 1958]

61. *Notification issued with G.O. Ms. No. 4559, Revenue, dated 10th December 1957 amending rules 4 (A), 5 and 11 and Form B-2, of the Madras General Sales Tax (Turnover and Assessment) Rules, 1939. [Laid on the Table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.]*

62. *Notification issued with G.O. Press No. 4560, Revenue, dated 10th December 1957, amending certain rules of the Madras General Sales Tax (Turnover and Assessment) Rules and the Madras General Sales Tax Rules, 1949. [Laid on the Table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.]*

63. *Annual Financial Statement for 1958-59 and Supplementary Financial Statement for 1957-58 of the Madras State Electricity Board.*

### B. Report and other papers.

29. *A short review of the activities of the certified schools for the half year ended 30th June 1957.*

## APPENDIX I.

[Vide answer to starred question No. 172 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 3rd March 1958, page 80 supra.]

*Statement showing the action taken on the recommendations of the Indian Delegation to China on Agricultural Planning and Techniques.*

The main recommendations of the Indian Delegation to China on 'Agricultural Planning and Technique' on which action has already been taken in this State are as detailed below:—

(i) *The multiplication and distribution of improved seeds.*—With a view to provide pure and improved varieties of seeds to the ryots the Government have already sanctioned the opening of 360 State Seed Farms during the first three years of the Second Five-Year Plan period. Twenty-eight farms were functioning at the beginning of the current year and 136 seed farms are proposed to be opened during this year out of which 89 have already started functioning. The remaining 196 farms will be started during 1958–59.

(ii) *Development of local manurial resources such as farm-yard manure, nightsoil—composting and green manuring as well as utilisation of chemical fertilizers and also undertaking large scale pilot projects for deodourizing and disinfecting nightsoil.*—Two schemes one for the development of local manurial resources and the other for the manufacture of nightsoil compost in bigger panchayats have already been sanctioned. A pilot scheme for the utilisation of rural nightsoil is proposed to be implemented in 1958–59. The Director of Agriculture has been asked to examine the suggestion for deodourizing and disinfecting night soil so as to convert it into an effective and useful manure for crops. It is also proposed to encourage production of more green manure seeds in village seed farms and supply them to ryots. Chemical fertilisers supplied by the Government of India to this State are distributed to the ryots through selected distributors under the State Trading Schemes.

(iii) *Giving wider propaganda for the Japanese method of paddy cultivation.*—The Japanese method of paddy cultivation was introduced in this State in a modified form to suit local conditions from 1953 onwards. This method of cultivation was extended to other crops like millets, etc., also in this State from 1954. This State had the largest area of 4·93 lakhs of acres brought under the Japanese method of paddy cultivation during 1954–55. With the intensive propaganda done by the Agricultural Department staff, an area of 6·93 lakhs was brought under this method during 1956—57. Under the Second Five-Year Plan it is proposed to cover nearly 47·45 lakhs of acres under this method of paddy cultivation during the Plan period. To achieve this target of 47·45 lakhs of acres this Government have recently formulated, at the instance





of the Government of India, a scheme for the intensification of the propaganda of this method at an estimated cost of Rs. 1·15 lakhs and this scheme is to be implemented during 1958–59.

(iv) *Organisation of co-operative farming.*—The Government have asked Collectors of districts to select suitable villages in Community Development/National Extension Service blocks where Co-operative—Joint Farming Societies could be started on a purely voluntary basis.

(v) *Adoption of measures for the destruction of pests and diseases of crops.*—The Agricultural Department of the State has a separate staff for plant protection work under the control of the Government Mycologist and Government Entomologist with head-quarters at Coimbatore in order to accord technical advice to ryots. Necessary pesticides and insecticides are being stocked in all Agricultural Depots in the State for supply to the needy ryots. Supply is effected at 50 per cent of the cost price in areas which are declared as pest affected by the District Agricultural Officers concerned. The Government have also sanctioned a scheme for supply of sprayers and dusters to ryots at 50 per cent cost.

(vi) *Close liaison should exist between Research and extension workers.*—There is already a good deal of co-ordination between the Research and Extension workers in this State. The Committee on Agricultural Education which was constituted by the Government sometime ago has gone into this question and made certain recommendations which are under the consideration of Government.

(vii) *Award of citations to ryots and encouraging popular leadership.*—The Government are holding crop competitions in respect of paddy, groundnuts, sugarcane, cashewnut, etc. The State Farmers' Forum and the District Taluk and Village Agricultural Associations wherever they are functioning are encouraging popular leadership among the agriculturists.

2. The other recommendations contained in the report of the Indian delegation to China are receiving the active consideration of Government.

## APPENDIX II.

[Vide answer to starred question No. 180 asked by Sri A. Vedarathnam, at the meeting of the Legislative Assembly held on 3rd March 1958, page 88 supra.]

(a) *List of 17 new railway lines recommended to the Government of India in 1956*—

1. Theni-Gudalur.
2. Neiveli-Vriddhachalam-Salem (broad gauge line).
3. Salem-Banglore.

4. Chinnasalem-Chingleput.
5. Mangalore-Hassan line (not in Madras State).
6. Tirunelveli-Cape Comorin
7. Salem-Tiruchirappalli line.
8. Manamadurai-Tuticorin.
9. Tanjore-Pattukottai.
10. Kancheepuram-Vellore.
11. Satyamangalam-Chamrajnagar.
12. Tellicherry-Mysore (not in Madras State).
13. Kollengode-Trichur (not in Madras State).
14. Manamadurai-Virudhunagar.
15. Ariyalur-Salem (via) Perambalur, Thuraiyur and Namakkal.
16. Mangalore-Bombay Coastal line (not in Madras State).
17. Karur-Dindigul (via) Guziliamparai.

List of six lines recommended for high priority—

1. Salem-Bangalore.
2. Theni-Gudalur.
3. Manamadurai-Virudhunagar (via) Aruppukkottai.
4. Chinnasalem-Chingleput.
5. Salem-Karur.
6. Tirunelveli-Cape Comorin.

(*b*) No, Sir.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, the 4th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at one of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Chemical Fertilizer plant at Neiveli*

* 144 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start a Chemical Fertilizer plant project at Neyveli?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

SRI A. A. RASHEED : Is it a fact that the Russian Government are starting this factory?

THE HON. SRI R. VENKATARAMAN : I have no such information with me.

SRI M. JAGANNATHAN : May I know the estimated cost of this fertilizer scheme?

THE HON. SRI R. VENKATARAMAN : I have figures with regard to the capacity of production. The cost has not yet been estimated.

SRI A. A. RASHEED : When will this be started?

THE HON. SRI R. VENKATARAMAN : Administrative sanction and sanction for incurring expenditure have been made. We are thinking of obtaining foreign credit for this factory.

SRI K. ANBAZHAGAN : *இந்த உர உற்பத்தித் தொழிற் சாலையைத் தனியார் துறையில் விடுவதை விட்டு அரசாங்கம் எடுத்து நடத்த முன் வந்திருக்கிறதா ?*

THE HON. SRI R. VENKATARAMAN : *இப்போது நிரந்தர மான முடிவு எங்கு இந்தத் தொழிற்சாலையை வைப்பதென்பது. இதை சர்க்கார் துறையில் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.*

SRI M. P. SUBRAMANIAM : *ஸார், நெய்வேலி சம்பந்தப் பட்ட தொழிற்சாலை அத்தனையும் 1960-க்குள் முடிவாகும் என்று அறி விக்கப்பட்டிருக்கிறது. இந்த உர உற்பத்தித் தொழிற்சாலையும் 1960-க்குள் முடிவாகும் என்று உறுதி கொடுக்க முடியுமா ?*

THE HON. SRI R. VENKATARAMAN : *இப்போது நம்மிட மிருக்கும் புரோகிராம் பிரகாரம் 1960-க்குள் இது துவக்கப்பட்டு விடும்.*

SRI R. KRISHNASAMI NAIDU : இந்த உர உற்பத்தித் தொழிற்சாலையின் உற்பத்தி சக்தி நாளுக்கு எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : வருஷத்திற்கு 70,000 டன் நெட்ரஜன் (யூரியா) உற்பத்தியாகும்.

*Floods in Palar*

* 154 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state the extent of damages caused to the houses and properties in Vaniyambadi due to floods in Palar in the year 1956?

THE HON. SRI M. A. MANICKAVELU : One hundred and forty-nine huts were either destroyed or damaged and coconut trees on 50 cents were damaged due to the floods in Palar in the year 1956.

SRI A. A. RASHEED : Was any aid given to the flood-affected people and, if so, how much?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, cash grant to the tune of Rs. 2,615 in the Vaniyambadi town and a cash grant of Rs. 5,130 and a loan of Rs. 7,100 in the outlying villages.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இப்படி பாதிக்கப் பட்டவர்களுக்கு சர்க்கார் உதவி செய்து அவர்களுடைய புனருத்தாரணத் திற்கு உதவும்போது, திரும்ப இதே மாதிரி ஆற்றுக்கு அதிக அருகில் உள்ளவர்களுக்குக் கஷ்டம் நேரிடாமல் சர்க்கார் பார்த்துக் கொள்வார் களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தக் கஷ்டம் இந்த ஆற்றுக்கு நேரிடாது. வெள்ளம் வர வேண்டும் என்றுதான் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம்.

SRI T. KARIA GOUNDER : இந்தக் கேள்விக்குப் பதி லளிக்கும்போது நகரத்தைப்பற்றி மந்திரி அவர்கள் பதில் சொன்னார்க ளென்று நினைக்கிறேன். கிராமப் புரத்தில் நஷ்டம் அடைந்தவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் அதையும் சொன்னேன். முதலில் சொன்னது வாணியம்பாடி ஊரைப் பற்றியது. இரண்டாவது சொன்னது கிராமங்களைப் பற்றியது. ஐயாயிரத்துச் சில்லரை கேஷ் கிராண்ட், கடன் 7,000 இரண்டும் அந்தக் கிராமங்களைப் பொருத்தது.

SRI M. JAGANNATHAN : திரும்ப இந்தப் பாலாற்றிலே வெள்ளம் வந்தால் அந்த வெள்ளத்தைத் தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுக்க உத்தேசித்திருக்கிறது ?

MR. SPEAKER : The Hon. Minister has stated that he welcomes such floods.

*Hospitals in the Tirunelveli district*

* 158 *Q.*—SRI M. K. SOMASUNDARAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of Government, Local Fund and Private hospitals in the Tirunelveli district;



(*b*) the number of Medical Officers serving in these Government Hospitals; and

(*c*) the number among them belonging to Backward Classes and Scheduled Castes?

THE HON. SRI M. A. MANCKAVELU :

| | |
|---|---|
| (*a*) Government Hospitals ... ... ... ... | 15 |
| Local Fund Hospitals ... ... ... ... | 38 |
| Private Hospitals ... ... ... ... ... | 9 |
| (*b*) Thirty-one. | |
| (*c*) Backward Classes ... ... ... ... ... | 8 |
| Scheduled Castes ... ... ... ... ... | Nil. |

SRI M. K. SOMASUNDARAM : ஸார், தாலூகா ஹெட் க்வார்ட்டர்ஸில் உள்ள லோகல் பண்டு ஆஸ்பத்திரிகளை சர்க்கார் எடுத்து நடத்த முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தாலூகா தலை நகரத்திலுள்ள ஆஸ்பத்திரிகளை கவர்ன்மெண்டு எடுத்துக் கொண்டு வரு கிறார்கள். இந்த வருஷம் ஆறு, ஏழு எடுத்துக்கொண்டார்கள். இன்னும் ஐந்து, ஆறை எடுத்துக் கொண்டால் தாலூகா தலைநகரத்திலுள்ள ஆஸ் பத்திரிகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு விடுவார்கள். பிற்பாடு மற்ற இடத்தில் எடுத்துக்கொள்வதைப்பற்றி யோசிக்கலாம்.

SRI M. S. SELVARAJAN : திருநெல்வேலி ஜில்லா போர்டின் பொருளாதார தளர் நிலையை உணர்ந்து, திருச்செந்தூரின் முக்கியத் துவத்தைக் கருதி, திருச்செந்தூர் தாலூகா தலைநரகத்திலுள்ள ஆஸ் பத்திரியை சர்க்கார் இவ்வருடமே எடுத்துக் கொள்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : திருச்செந்தூர் ஆஸ்பத்திரியை இந்த வருஷம் எடுத்துக் கொள்வதாக இருக்கிறது. அது கனம் அங்கத்தினருக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன்.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR : அம்பா சமுத்திரம் ஹெட்க்வார்ட்டர்ஸ் ஹாஸ்பிடல் மிகவும் நெருங்கியிருப்ப தால், அத்துடன் தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டப்படி வைத்திய வசதி செய்து கொடுக்கப்பட்டு வந்திருப்பதால், அதை இன்னும் அதிகமாக அபிவிருத்தி செய்ய கனம் மந்திரி அவர்கள் முன்வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இன்னும் அதி மாக அபிவிருத்தி செய்யும் விஷயம் அவ்வப்போது எந்தெந்த இடங்களில் செய்யலாம் என்பதைப் பார்த்து, அதுவும் செய்யப்பட்டு வருகிறது.

SRI A. R. SUBBIAH MUDALIAR : மொத்தம் 62 ஆஸ்பத்திரிகள் இருப்பதாகச் சொன்னார்கள். அதில் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியில் எத்தனை ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை, டிஸ்ட்ரிக்ட் போர்ட் ஆஸ்பத்திரியில் எத்தனை ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை, பிரைவேட் ஆஸ்பத்திரிகளில் எத்தனை ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை என்ற விவரங்களைச் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்வி ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லாததைப்பற்றியில்லை. எத்தனை ஆஸ் பத்திரிகள் இருக்கின்றன, அதில் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி எவ்வளவு, லோகல் பண்டு ஆஸ்பத்திரி எவ்வளவு என்ற தகவல்தான் சேகரிக்கப் பட்டது.

SRI T. K. SUBBIAH : உடையார்பாளையம் மிகவும் பிற்போக்கான பிரதேசம். ஜமீந்தார் ஒரு ஆஸ்பத்திரி நடத்தி வந்தார். அது வெகு காலமாக மூடப்பட்டிருக்கிறது. அதை அரசாங்கம் எடுத்து நடத்த முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது திருநெல்வேலி ஜில்லாவைப் பற்றியது. திருச்சி ஜில்லா விஷயமாகத் தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

*Hospital at Palayamkottai*

* 159 Q.—SRI M. K. SOMASUNDARAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal to construct quarters for nurses near the hospital to be constructed at Palayamkottai, Tirunelveli district; and

(b) if so, when the work will be taken up?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Orders have been issued for the construction of a new Headquarters Hospital at Palayamkottai at an estimated cost of Rs. 17·5 lakhs. The estimate provides for the construction of Nurses' Quarters also.

(b) The work will be taken up immediately after the detailed plans and estimates are ready.

SRI M. K. SOMASUNDARAM : இந்த விடுதியில் கல்யாணமான பெண்கள் குடும்பத்துடன் வாழ வசதி செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இது புதிதாகக் கட்டும் கட்டடம். அந்தக் கட்டடத்தில் இதைப் பற்றி அப்போது யோசனை பண்ணுவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*Government Women and Children Hospital, Vannarpet*

* 163 Q.—SRI M. K. SOMASUNDARAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to raise the strength for the Midwifery course for nurses in the Government Women and Children Hospital, Vannarpet, Tirunelveli district?

THE HON. SRI M. A. MANICKAVELU : There is no Midwifery course for Nurses in the Government Women and Children Hospital, Vannarpet, Tirunelveli district. However, there is a training centre for Midwifery pupils in Tamil in the Hospital. There is a proposal to raise the present strength of the pupil Maternity Assistants in that Hospital from 14 to 26. This is under consideration.

SRI M. S. SELVARAJAN : ஸார், திருநெல்வேலி ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியில் ஆண்களுக்கு இருக்கும் ஆஸ்பத்திரியில் க்ஷயரோகத்திற்கு சிகிச்சை செய்ய வசதி இருப்பதுபோல், வண்ணாரப்பேட்டையில் பெண்களுக்கு க்ஷயரோக சிகிச்சைக்கு வசதி செய்யவேண்டுமென்ற முறையீடு இருந்தது. அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?





THE HON. SRI. M. A. MANICKAVELU : இப்போது வண்ணாரப் பேட்டை ஆஸ்பத்திரியில் இடம் ரொம்ப நெருக்கடியிருப்பதால்தான் பல லட்ச ரூபாய் செலவு செய்து கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அப்போது இந்த வசதியெல்லாம் செய்ய ஏற்பாடு செய்யலாம்.

SRI M. K. SOMASUNDARAM : பயிற்சி பெற்ற மருத்துவர்கள் இல்லாத காரணத்தால், திருநெல்வேலி ஜில்லாவில் "மெட்டர்னிடி சென்ட்டர்" ஏற்படுத்த முடியாத காரணத்தால், பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்த அரசாங்கம் முன்வருமா ? 1·10 p.m.

THE HON. SRI M. A. MANICKAVELU : 14-லிலிருந்து 26 ஆக அதிகப்படுத்துவதாக உத்தேசம்.

*Nurses*

* 165 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to revise the existing working conditions of the nurses with regard to wages, working hours, and leave facilities?

THE HON. SRI M. A. MANICKAVELU : The answer is in the negative.

SRI N. K. PALANISAMI : நர்ஸ்களையும் சர்க்கார் சிப்பந்திகளாகக் கருதி, சர்க்கார் சிப்பந்திகளுக்கு எப்படி லீவு கொடுக்கப்படுகிறதோ, அதே அளவுக்கு லீவு கொடுக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சாத்தியமான வரையில் அம்மாதிரியான வசதிகளுக்கு வாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI M. P. SUBRAMANIAM : அரசாங்க மருத்துவ நிலையங்களில் வேலை செய்கின்ற நர்ஸ்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பாகுபாடு இருப்பது சர்க்காருக்கு தெரியுமா ? பெண் நர்ஸ்களுக்கு சாப்பாடு முதலிய வசதிகள் செய்வதற்கும், மற்ற வசதிகள் செய்வதற்கும் ஒரு தனி நர்ஸ் முழு நேரமும் ஒதுக்கப்பட்டிருக்கிறாள். ஆனால் ஆண் நர்ஸ்களுக்கு அம்மாதிரி வசதிகள் கொடுக்கப்படுவதில்லை என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. (சிரிப்பு).

SRI K. VINAYAKAM : Sir, since numerous complaints are received that the female nurses are often overworked and that their grievances have got to be looked into, are Government paying any extra wages for their overwork?

MR. SPEAKER : The hon. Member is putting the same question in another way. If the Hon. Minister is willing to answer, I have no objection.

THE HON. SRI M. A. MANICKAVELU : The overwork is necessitated on account of shortage. The Government are trying to fill up the shortage by increasing the number of nurses.

[4th March 1958

*Expenditure in Government departments*

* 183 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Special Officer appointed to devise ways and means for reducing the expenditure has submitted any proposals in respect of each Department; and

(*b*) whether the Government have taken any action on his recommendations so far made?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Yes, Sir.

The Special Officer has made various recommendations in regard to a number of departments of the Government. These recommendations are being examined in consultation with the Heads of Departments concerned.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: May I know whether the Government will be pleased to place his report on the table of the House?

THE HON. SRI C. SUBRAMANIAM : At the proper time, I shall place it on the table of the House.

SRI K. ANBAZHAGAN : அரசாங்க நிர்வாக யந்திரத்திலே சில துறைகளிலே மட்டும் ஒரே பணியை நிறைவேற்றுவதற்காக பல அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று குறை பேசப்படுகிறது. ரெவின்யூ இலாக்காவில் தாலூக்காக்களில் பல தாசில்தார்கள் இருப்பதனால், பல குழப்பங்கள் இருக்கின்றன. அவைகள் கவனிக்கப்பட்டிருக்கின்றனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த அதிகாரி ஒவ்வொரு இலாக்காவாக எடுத்துக் கொண்டு, அதிலே நடந்து வருகிற நடவடிக்கைகளை கவனித்து, அதிகாரிகளின் எண்ணிக்கையையும் கவனித்து, ஏதாவது சிக்கனம் செய்ய முடியுமா என்று பரிசீலித்து வருகிறார். கனம் அங்கத்தினர் சொல்வதையும் கவனித்து இருப்பார்கள்.

SRI N. K. PALANISAMI : ரெவின்யூ போர்டைப்பற்றி அந்த ஸ்பெஷல் ஆபீஸர் விசாரணை செய்ய வேண்டுமென்று சர்க்கார் சார்பில் சொல்லப்பட்டதா ? அதைப்பற்றி விசாரித்தார்களா? அதன் முடிவு என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : : ரெவென்யூ போர்டிலுள்ள நான்கு மெம்பர்களைப்பற்றி விசாரணை செய்யவில்லை. பொதுவாக ரெவென்யூ போர்டைப்பற்றியும், எல்லா இலாகாக்களைப் பற்றியும் விசாரித்து வருகிறார்கள்.

SRI S. NAGARAJA MONIGAR: நமது முன்னேற்றத்தின் காரணமாக, எல்லாத் துறைகளிலும் வேலை அதிகரித்துக் கொண்டு வருகிற சந்தர்ப்பத்திலே, நமக்கு அதிகமான உழைப்பாளிகள் எல்லாத் துறைகளிலும் தேவையா யிருக்கிறபொழுது ஏதோ சிக்கனம் என்ற பெயரால், செலவு செய்ததின் பலனை அடைய வேண்டி யிருக்கிற நேரத்திலே, அளவுக்கு மீறி சிக்கனம் செய்ய வேண்டிய நிலைமை நேரிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த பயம் கனம் அங்கத்தினருக்கு வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : மராமத்து இலாக்கா, ஹைவேஸ் இந்த இரண்டுக்கும் ஒரு எஞ்சினியர் இருந்தால் போதுமா என்ற சிபார்சு கவனிக்கப்பட்டு வருகிறதா ? அல்லது இப்பொழுது இருப்பது போல் இரண்டுக்கும் தனித்தனி எஞ்சினியர்கள் இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதா ?



4th March 1958]

MR. SPEAKER : The hon. Member must wait for the report to be published.

*Estate Workers in the Kanyakumari district*

* 184 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received a memorandum, dated 14th October 1957, from the Tamilnad Estate Workers' Union, Kulasekharam, Kanyakumari district, addressed to the District Labour Officer, Nagercoil;

(*b*) if so, the contents thereof; and

(*c*) the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The Union put forth as many as 25 demands and stated that if the demands were not conceded within two weeks from the date of their submission, it would be constrained to resort to direct action. Subsequently, in its Memorandum, dated 6th November 1957, the Union withdrew some of its demands and put forward only 16 demands.

(*c*) The Labour Officer, Nagercoil, held preliminary discussion on 6th December 1957, and asked the parties to meet him on 9th January 1958 for conciliation. His further report is awaited.

SRI V. K. KOTHANDARAMAN : வருஷக் கணக்கில் வேலை செய்து கொண்டிருக்கிற தொழிலாளர்கள் இது வரையில் நிரந்தரமாக்கப்படவில்லையென்றும், அந்தத் தொழிலாளர்கள் விஷயத்தில் "பாக்டரி சட்டம்" சரியான முறையில் அமல் நடத்தப்படவில்லையென்பதும் சர்க்காருக்குத் தெரியுமா ? உடனடியாக அந்தக் குறையை நிவர்த்திக்க சர்க்கார் முயற்சிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொன்ன இரண்டு புகார்களும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் சமர்ப்பித்த 25 புகார்களில் இரண்டு. அவைகள் எவ்வளவு தூரம் சரி என்பதை "கன்ஸிலியேஷன் ஆபீசர்" பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் சொல்லுகின்ற புகார் சரி என்று அந்த ஆபீசர் சொன்னால், தகுந்த நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

*Rural Water-supply Schemes*

* 185 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. Minister for Revenue be pleased to state—

(*a*) the amount allotted, districtwise, for the comprehensive scheme for Rural Water-supply in the State during 1957-58; and

(*b*) the amount spent during the past six months district-war?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix I on page 231 infra.

[4th March 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : வருஷக் கடைசியில்தான் முழு அளவு தெரியும். இப்பொழுது அந்த அளவு என்ன என்பது தெரியாது. (சிரிப்பு.)

SRI K. ANBAZHAGAN : தென்னாற்காடு மாவட்டத்தில் குறிப்பாக சில பகுதிகளில் குடி தண்ணீர் வசதி இல்லாமல் அதாவது நெல்லிக்குப்பம் போன்ற இடங்களில் குடி தண்ணீர் வசதி இல்லாமல் இருப்பதால் அங்குள்ள குளங்களிலுள்ள தண்ணீரைக் குடிப்பதனால் பல நோய்களுக்கு உள்ளாகிறார்கள். அங்கு வேண்டிய குடி தண்ணீர் கிணறுகள் இல்லாத காரணத்தால் அப்படி குளத்திலுள்ள தண்ணீரைக் குடித்து வருவதால் அந்த நிலைமை அங்கு ஏற்பட்டிருக்கிறது. அதை தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ? அதற்கு ஏதாகிலும் நிதி ஒதுக்கி இருக்கிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : தென்னாற்காடு ஜில்லாவிற்கு மட்டும் 2 லட்சம் 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் நெல்லிக்குப்பமும் சேர்ந்திருக்கிறதோ என்னமோ தெரியாது. அதைப் பற்றி தனி கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

MR. SPEAKER : May I just say one thing. It will be difficult for the Hon. Minister to answer all supplementary questions off-hand. It will be unfair both to the House and to the Hon. Minister if hon. Members put supplementary questions of which notice has not been given and the Hon. Minister cannot carry all the information in his finger-tips. Therefore, the supplementary question should have a direct bearing on the main question.

*Bus route from Chengam village to Madras*

* 186 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether a new bus route from Chengam village to Madras is proposed to be sanctioned?

THE HON. SRI V. RAMIAH : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : செங்கம் தாலூகா தலைநகராக இருக்கக்கூடிய ஒரு பெரிய நகரம். அது ஒரு முக்கியமான நகர். அங்கிருந்து சென்னை வருவதாக இருந்தால் செங்கத்திலிருந்து திருவண்ணாமலை வந்து அங்கிருந்து சென்னை வர வேண்டியதாக இருக்கிறது. திருவண்ணாமலையில் பஸ்ஸோ அல்லது ரயிலோ கிடைக்காவிட்டால் வேலூர் வந்து அதற்குப் பிறகு சென்னைக்கு வரக்கூடிய அந்த அளவில் மிகக் கஷ்டங்கள் இருக்கின்றன. அதனால் செங்கத்திலிருந்து சென்னைக்கு நேரடியாக வருவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI V. RAMIAH : எந்த விதமான கோரிக்கையும் ஆர்.டி.ஓ.-விடத்தில் இல்லை. கனம் அங்கத்தினர் சொல்லி இருப்பதை கவனித்து எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

*Salem Co-operative Marketing Society*

* 187 Q.—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to the answer given to Question No. 308 on 27th July 1957 the present stage of the enquiry into the affairs of the Salem Co-operative Marketing Society Limited, Salem?



4th March 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : The enquiry under section 38 of the Madras Co-operative Societies Act, 1932, into the affairs of the Salem Co-operative Marketing Society has been completed.

SRI M. P. SUBRAMANIAM : அந்த ரிப்போர்ட்டினுடைய முடிவு என்ன ? என்ன சிபார்சு செய்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : 38-வது செக்ஷன் படி அந்த சொஸைட்டியின்மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பிரச்னை. அந்த சொஸைட்டியில் குற்றம் சாட்டப்பட்ட டைரெக்டர்கள் எல்லாம் ரிடயராகி விட்டார்கள். புது போர்ட் ஆப் டைரெக்டர்கள் இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். புது டைரெக்டர்களை சூபர்சீட் செய்வது சரியல்ல என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள்.

SRI M. KALYANASUNDARAM : பழைய டைரெக்டர்கள் ரிடயர் ஆகி புது டைரெக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனக்குத் தெரிந்த வரையில் அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக தெரியவில்லை. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை கனம் மந்திரி விசாரித்து பதில் சொல்லுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : The Committee which was elected in March 1955 and which took charge in April 1955 has practically superseded the old Committee and the new Committee need not be superseded. That is the information I have got. If the hon. Member puts a separate question with regard to the tenure of the Committee, then I will get that information.

SRI S. NAGARAJA MONIGAR : அந்த விசாரணை போலீஸ் மூலமாக நடந்ததா அல்லது சர்க்கார் எந்த அடிப்படையை ஒட்டி விசாரணை எடுத்துக் கொண்டார்கள் ? இப்பொழுது தேர்ந்து எடுக்கப்பட்டு வந்துள்ள டைரெக்டர்களில் முன்பு இருந்த அங்கத்தினர்களே மறுபடியும் வந்திருக்கிறார்களா என்பதைக் கூற முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : I did not get that question properly.

MR. SPEAKER : Please repeat the question.

SRI S. NAGARAJA MONIGAR : கூட்டுறவு மூலமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டதாக தெரிய வருகிறது. சர்க்காருக்கு பிராது வந்து அதன் மீது சர்க்கார் கேஸ் போட்டு, அதன் பிறகு போலீஸ் மூலமாக விசாரணை செய்யப்பட்டதா, அதன் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா ? இப்பொழுது புது டைரெக்டர்கள் வந்திருப்பதாக சொல்லப்படுகிறது. அதில் குற்றம் சாட்டப்பட்ட டைரெக்டர்களும் வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் இரண்டு, மூன்று கேள்விகள் இருக்கின்றன. ஒவ்வொன்றாக பதில் சொல்ல விரும்புகிறேன். பழைய போர்ட் ஆப் டைரெக்டர்கள் மீது தனிப்பட்ட முறையில் பர்மிட் சரிவர வழங்கப்படவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டது. அதைப் பற்றி பரிசீலனை செய்ய பப்ளிக் பிராசிகூட்டருக்கு அனுப்பப்பட்டது. அவர் அதை பரிசீலனை செய்து கேஸ் போட முடியாது என்று சொல்லிவிட்டதால் சர்க்கார் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்குப் பிறகு தனிப்பட்ட நபர் மறுபடியும் ஒரு கம்ப்ளெயின்ட் எழுதிக் கொடுத்து அதை மத்திய சர்க்காருக்கு அனுப்பி இருக்கிறோம். அதை மத்திய சர்க்கார் எடுத்துக்கொண்டு பரிசீலனை செய்து வருகிறார்கள். அந்த விஷயம்

[4th March 1958

இன்னும் முடிவாகவில்லை. இப்பொழுது புதியதாக அமைக்கப்பட்ட போர்ட் ஆப் டைரெக்டர்களில் யார் யார் புதிது யார் பழையவர் என்று சொல்வதற்கு இல்லை. அதற்கு என்று தனிக் கேள்வி போட்டால் நான் பதில் சொல்லுகிறேன்.

Sri M. KALYANASUNDARAM : டைரெக்டர்கள் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது என்பது உண்மையா ? அப்படி தேர்தல் நடக்க வேண்டும் என்று ஏதாகிலும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டதா ? இப்படிப்பட்ட விஷயங்களைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் விசாரிக்க நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா? தேர்தல் நடைபெறவில்லை என்றும் புது டைரெக்டர்கள் வரவில்லை என்றும் தான் தெரியவருகிறது. அதைப் பற்றி விசாரிப்பாரா ?

The Hon. Sri R. VENKATARAMAN : If the hon. Member is not satisfied, he can ask a question of that type. Certainly I will take this information and get further particulars.

*Mental Hospital, Madras*

1-30 p.m. * 188 *Q.*—Sri P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of patients in the Mental Hospital in the Madras City in 1957; and

(*b*) how many are (i) men, (ii) women, (iii) boys, (iv) girls, (v) Anglo-Indians; and (vi) Foreigners?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) 3,594.

(*b*) Men—2,491.

Women—1,057.

Boys—33.

Girls—13.

Of these 76 were Anglo-Indians and one a Foreigner.

Sri P. G. MANICKAM : சென்னை நகரத்திலுள்ள பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் எல்லா ஜில்லாக்களிலிருந்தும் பைத்தியக்காரர்கள் அனுப்பப்படுவதால், பலவிதமான சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆதலால், இன்னும் இரண்டொரு ஆஸ்பத்திரிகளை மற்ற ஜில்லாக்களிலே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : மதுரையில் புதிதாக இம்மாதிரி ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்த உத்தேசம்.

Srimathi T. N. ANANDANAYAKI : பைத்தியத்தைத் தீர்ப்பதற்கு மருத்துவ முறையும், மனோதத்துவ முறையும் (**psychiatry**) ஆக இரண்டு முறைகளும் கலந்து கையாளப்படுகிறதா ? அல்லது வெறும் மருத்துவ முறை மாத்திரம் கையாளப்படுகிறதா ? **Doctors, psychiatrists** இருவரும் சேர்ந்து பைத்தியத்திற்கு கீழ்ப்பாக்கத்திலுள்ள பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைத்தியம் செய்கிறார்களா ?

Mr. SPEAKER : A doctor may be a psychiatrist also!

The Hon. Sri M. A. MANICKAVELU : இரண்டு முறைகளும் இருக்கின்றன. ஆனால் **psychiatric treatment** இன்னும் பெரிய அளவிலே கையாளப்படவில்லை ; கொஞ்சங் கொஞ்சமாக அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.



4th March 1958]

Sri V. SANKARAN : நான் வேடிக்கையாக ஒரு கேள்வி கேட்டால் கனம் அங்கத்தினர் கோபித்துக்கொள்ளமாட்டார் என்று நினைக்கிறேன். எத்தனை ஹரிஜனங்கள் அங்கே சேர்க்கப்பட்டார்கள் ?

Mr. SPEAKER : I rule that question out of order. I would like hon. Members to take things seriously.

Sri R. SRINIVASA IYER : Is there any proposal to start a Mental Hospital in Tanjore district?

The Hon. Sri M. A. MANICKAVELU : We are thinking of starting a medical college there. I do not know whether a Mental Hospital is necessary there! (Laughter).

*Tools factory at Salem*

* 189 *Q.*—Sri M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start a semi-machine tools factory at Salem, making use of the locally available raw materials?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

Sri M. P. SUBRAMANIAM : ஒவ்வொரு மாவட்டமாக ஐந்தாண்டுத் திட்டப் பிரசாரப் புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. அது போல, சேலம் மாவட்டப் பிரசாரப் புத்தகத்தில், அங்கே ஸெமி-மெஷின் டூல் பாக்டரி யொன்று ஆரம்பிக்கப் போவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ? அது வெறும் பிரசாரத்திற்காகத்தானே என்று வெளியிடப்பட்டதா ? அல்லது திட்டம் எடுத்துக்கொள்வதற்காகப் போடப்பட்டதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கோரிக்கை ஒன்று. நிறைவேற்றுவதற்காக நாம் முயற்சி எடுத்துக்கொண்டு சாதிப்பது ஒன்று. எல்லா ஜில்லாக்களிலும் நாம் இந்த விதமாக சிறு கருவிகள் உற்பத்தி செய்ய வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய நோக்கம். அவ்வாறு ஒவ்வொரு இடத்திலும் வைக்க வேண்டுமென்று தீர்மானித்து போட்டிருந்தோம். இப்பொழுது அந்த விதமாக சிறு கருவிகள் செய்கின்ற இயந்திரம் அங்கு வைப்பதாக திட்டத்தில் இல்லை.

Sri M. P. SUBRAMANIAM : ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்தில் என்ன ஆதாரத்தின்கீழ் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டது ? பிறகு என்ன கஷ்டத்தின் காரணமாக அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : நான் ஆரம்பித்தில் சொன்னதுபோல், ஒவ்வொரு ஜில்லாவுக்கும் சிறு கருவிகள் செய்கின்ற ஒரு ஸ்தாபனம் வைக்க வேண்டும் என்பது நம்முடைய நோக்கம். அந்த முறையிலே செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், நிதி நிலைமைக் குறைவினாலும், சிறு கைத்தொழிலுக்காக ஒதுக்கப்பட்ட தொகை சற்றுக் குறைந்துவிட்டதாலும், இவ்விதமான திட்டம் 1958-59-ல் நிறைவேற்ற அங்கே எடுத்துக்கொள்ளப்படவில்லை. அடுத்த வருஷத்தின் நிதி நிலைமையைப் பார்த்து, பிறகு இதைப்பற்றி முடிவு செய்யலாம்.

Sri D. S. AUTHIMOOLAM : நமது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்படி ஸெமி-டூல்ஸ் பாக்டரி என்று ராஜ்யத்திற்கு எத்தனை பாக்டரிகள் ஆரம்பிப்பதாக உத்தேசம் இருக்கிறது என்று தயவு செய்து சொல்ல முடியுமா ?

[4th March 1958

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

THE HON. SRI R. VENKATARAMAN : I have some information here which I think I can give.

MR. SPEAKER : All right. I have no objection.

THE HON. SRI R. VENKATARAMAN : பீளமேட்டிலுள்ள பி.எஸ்.ஜி. அண்டு சாரிடபிள் இனஸ்டிட்யூட்டில் சிறு கருவிகள் செய்வதற்காக லைசன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூரிலுள்ள அப்பாய் மெஷின் டூல்ஸ் (ப்ரைவேட்) லிமிடெட் என்னும் ஸ்தாபனத்திற்கும் ஒரு லைசன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அடிசன் கம்பெனியாருக்கு இம்மாதிரி சிறுகருவிகள் செய்வதற்கான லைசன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது.

*Primary Health Centre*

* 190 Q.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state the number of Primary Health Centres opened during the year 1957–58, district-war?

THE HON. SRI M. A. MANICKAVELU : A statement* is placed on the table of the House which refers to the number of centres sanctioned for being opened.

SRI P. G. MANICKAM : இந்த ஜாப்தாவில் தெரிவிக்கப்பட்டிருக்கும் 45 சுகாதார நிலையங்களிலும் டாக்டர்கள், சுகாதார இன்ஸ்பெக்டர்கள், சுகாதார பார்வையாளர்கள், போன்றவர்கள் வேலை செய்கின்றார்களா ? அல்லது அப்படிப்பட்ட சிப்பந்திகள் இல்லாமல் இன்னும் எத்தனை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன என்று அறியலாமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த ஜாப்தாவிலே கண்டுள்ள சில ஆஸ்பத்திரிகள் இன்னும் திறக்கப்படக்கூட இல்லை. காரணம் அவைகளுக்கு வேண்டிய டாக்டர்கள் கிடைக்காததுதான்.

SRI M. P. SUBRAMANIAM : ஆரம்ப சுகாதார நிலையங்கள் சாதாரணமாக நகரத்திற்குப் அப்பால் கிராமங்களில் அமைக்கப்படுவதால், நல்ல முறையிலே இயங்கவில்லை என்பதினால், அவைகளை பக்கத்திலுள்ள தாலூக்கா தலைமை ஆஸ்பத்திரியோடு இணைத்தால் நல்லது என்ற அபிப்பிராயம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா ? அப்படி இணைக்கப்படுமானால், தலைமை ஆஸ்பத்திரிகளிலுள்ள மருந்துகள் மொபைல் வான்கள் மூலம் அனுப்பப்படுவதற்கு சாத்தியமாகும் என்பதையும் அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூலை முடுக்குகளிலே இருக்கும் கிராமங்களுக்கு வசதி கொடுக்கவேண்டும் என்பது முக்கியமான கருத்து. ஆனால், கிராமங்களிலே வைத்தியர்கள் போய் இருப்பது கஷ்டமாக இருக்கிறது. அதனால் அரசாங்கம் "நான்-ப்ராக்டிஸிங்" அலவன்ஸை 50-லிருந்து 100 ரூபாயாக்கியிருக்கிறோம். இந்தத் திட்டம் எவ்வளவு தூரம் பிரயோஜனப்படுகிறது என்று பார்ப்போம்.

SRI A. VEDARATHNAM : கனம் மந்திரி அவர்கள், 'பல நிலையங்கள் இன்னும் திறக்கப்படவே இல்லை' என்று குறிப்பிட்டார்கள். திறந்த பிறகும் பல நிலையங்கள் டாக்டர் இல்லாமல் இன்னும் காலியாக இருக்கின்றனவா ? அப்படியானால் எத்தனை நிலையங்கள் இருக்கின்றன ? அவற்றில் டாக்டர்களை நியமித்து வேலை செய்வதற்கு என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

* Printed as Appendix II on pages 231–232 infra.



4th March 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படித் திறக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளும் டாக்டர் இல்லாததால் மூடப்பட்டிருக்கின்றன. சில இடங்களிலே கம்பவுண்டர்கள் அவர்களாலான சிகிச்சையும் செய்கிறார்கள்.

SRI S. LAZAR : இந்த ப்ரைமரி ஹெல்த் ஸெண்டருக்குத் தேவையான மருந்துகளைத் தொடர்ந்து சப்ளை செய்யப்படுவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Will you kindly repeat your question?

MR. SPEAKER : The hon. Member may please repeat his question.

SRI S. LAZAR : So far as Primary Health Centres are concerned, what is the arrangement made by the Government to supply the required medicines continuously and under whose administration, they will be given?

THE HON. SRI M. A. MANICKAVELU : The District Medical Officer will be in overall charge of these Primary Health Centres. The main difficulty is about securing medical officers; there is no difficulty about medicines.

SRI P. G. MANICKAM : டாக்டர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறதென்று நினைக்கிறபடியால், எம்.பி.பி.எஸ். பரீட்சையில் தேறியவர்களை ஒன்றிரண்டு வருஷங்கள் இத்தகைய சென்டர்களில் வேலை பார்க்கவேண்டுமென்று உத்தரவைப் பிறப்பிக்க சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதையும் யோசனை செய்தோம். எம். பி. பி. எஸ். பரீட்சையில் தேறியவுடனே அவர்களை இத்தகைய ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் போட்டால், எவ்வளவு தூரம் நன்றாகப் பயன்படும் என்பது சந்தேகத்திற்குரியது. புதிதாகத் தேறி வந்தவர்களை இங்கெல்லாம் ஒன்றிரண்டு வருஷம் போடுவதைவிட அனுபவம் பெற்றவர்களை போடுவது நன்றாக இருக்கும் என்று அந்த முறையைக் கையாண்டு வருகிறோம்.

* 191 Q.—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state the reasons for closing the Primary Health Centre at Jamnaputtur in the North Arcot district?

THE HON. SRI M. A. MANICKAVELU : No Primary Health Centre was ever opened at Jamnaputtur.

SRI S. M. ANNAMALAI : ப்ரைமரி ஹெல்த் சென்டர் ஒன்று ஜவ்வாது மலை மீது இருந்தது. அந்த ஒரு சென்டரும் காவனூருக்கு மாற்றப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா ? அப்படியாயின் அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி என்னிடம் தகவல் ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர் அதைப்பற்றி ஏதாவது குறிப்பாக எழுதியனுப்பினால் அதை நான் கவனிக்கிறேன்.

*Cement factory for North Salem*

* 192 Q.—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start a cement factory in the North Salem making use of the raw materials available there?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

*Family Planning*

* 193 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to bring in legislation raising the marriageable age of boys and girls of all communications as a measure towards Family Planning?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir.

SRI A. A. RASHEED: If the Family Planning is the policy of the Government, will they not try the easier and cheaper way of raising the marriageable age of boys and girls?

MR. SPEAKER: The hon. Member is asking for an opinion which is not admissible in question time.

SRI K. R. NALLASIVAM : கல்யாணம் ஆகக் கூடிய வயதுபற்றி நிர்ணயிக்காவிட்டாலுங்கூட, குறிப்பிட்ட வயதுக்குமேல்தான் குழந்தை பிறக்கலாம் என்ற முறையில் தடை செய்வதற்கு சர்க்காருக்கு ஏதாவது யோசனை இருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கல்யாணம் ஆகிற வயதைக் கொஞ்சம் அதிகப்படுத்தினால் பிள்ளை பெறுகிற சமாசாரம் கொஞ்சம் தள்ளிப் போகுமே தவிர, பிள்ளை பெருமலேயே தடுக்க முடியாது. (சிரிப்பு.)

*Co-operative Farming Centres*

* 194 *Q.*—SRI M. P. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a collective or co-operative farming centre at Ramanaickenpalayam village in Athur taluk, Salem district; and

(*b*) if so, when?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) There are two proposals, one for the formation of a tenant farming co-operative Society for 50 Harijans and the other for the formation of a collective farming society for 50 landless poor persons in the Ramanaickenpalayam village, Attur taluk, Salem district.

(*b*) The proposals have not yet been finalised.

SRI M. P. SUBRAMANIAM: ஆத்தூர் தாலூகாவிலுள்ள ராமாநாய்க்கன்பாளையம் என்னும் கிராமத்தில் நீர் வளமும் நில வளமும் உள்ள இரண்டாயிரம் ஏக்கராக்கள் நிலம் ஒரே இடத்தில் இருக்கிறது. இதைப்பற்றிய திட்டம் வரும் என்று மூன்று ஆண்டுகளாக சொல்லப்பட்டு வருகிறது. அந்தத் திட்டம் எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் ? இரண்டு திட்டங்களையும் ஒரு சேர எடுப்பதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிற தென்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா? உடனடியாக இத்திட்டத்தை எடுத்து நடத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டாயிரம் ஏக்கர் இல்லை. ஆயிரம் ஏக்கர் இருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதில் 500 ஏக்கரில் டெனண்ட் பார்மிங் கோவாபரேடிவ் சொஸைடியொன்று 50 ஹரிஜனங்களைக்கொண்டு அமைக்கும் திட்டம்பற்றி இப்பொழுது பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது. இதில் தலைக்கு அதிகபட்சமாக எத்தனை ஏக்கர் கொடுப்பது என்பது பிரச்னை. தலைக்கு ஐந்து ஏக்கர் புஞ்சை



நிலம், இரண்டரை ஏக்கர் நஞ்சை நிலம் கொடுத்தால் சௌகரியமாக இருக்கும் என்ற அபிப்பிராயம் ரிஜிஸ்திரார் அவர்களால் சொல்லப்பட்டது. அதை ரெவினியூ போர்டாருக்கு அனுப்பி, அவர்களுடைய அபிப்பிராயம் என்ன என்று பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

SRI S. NAGARAJA MONIGAR : ஹரிஜனங்களுக்கு என்று ஒரு காலனி தனியாக ஏற்படுத்துவதாக அமைச்சர் அவர்கள் சொன்னதி லிருந்து தெரிகிறது. அங்கு உள்ளவர்கள் ஹரிஜனங்களாகையால் அந்தப் பெயர் கொடுக்கப்பட்டதா ? ஏன் இப்படி ஹரிஜனங்களுக்குத் தனிக் காலனி ஏற்படுத்தப்படுகிறது அல்லது அந்தப் பெயர் ஏன் கொடுக்கப் பட்டது என்று அறிய விரும்புகிறேன். 1·40 p.m.

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டு சொஸைடிகள் பண்ணுவதாக உத்தேசம். ஒன்று ஹரிஜனங்களுக்கு. மற்றது நிலம் இல்லாத ஏழைகளுக்கு. ஹரிஜனங்களுக்கு ஏன் கொடுக்கப்படுகிறதென்றால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்ற காரணத்தினால்தான்.

*Government Hospital, Nagercoil*

* 195 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any representation, dated 9th September 1957, from the Nagercoil Town Committee of the Communist Party regarding the improvement of the Government Hospital at Negercoil; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir.

(*b*) It was transferred to the Director of Medical Services for consideration and submission of necessary proposals. The proposals are awaited.

SRI V. K. KOTHANDARAMAN : கன்னியாக்குமரி தனியாகப் பிரிந்த பிறகு நாகர்கோயிலில் இருக்கிற மருத்துவ நிலையத்தை ஒரு மாவட்ட மருத்துவ மனையாக ஆக்குவதற்கு இதுவரையில் முயற்சி செய்யப் படவில்லை. ஆகவே இந்த ஆண்டிலாவது அதுபோல் செய்வதற்குச் சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் அதைத்தான் சொன்னேன்.. அதற்குவேண்டிய சிபார்சுகள் இன்னும் வரவில்லை. அதற்கு வேண்டிய அதிகப்படியான வசதிகள் செய்ய வேண்டியது அவசியம்.

*Co-operative Society near Kalrayan Hills*

* 196 *Q.*—SRI M. P. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start a Co-operative Marketing Society at the foot of the Kalrayan Hills in Attur taluk, Salem district, for marketing the products from the hills and for the benefit of the Hill Tribes there?

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir.

[4th March 1958

Sri M. P. SUBRAMANIAM : இரண்டு ஆண்டுக்கு முன்பாகவே இந்த மலைவாசிகளுடைய நன்மையை உத்தேசித்து கூட்டுறவு சங்க விற்பனை நிலையம் ஒன்றை மலை அடிவாரத்தில் ஏற்படுத்தவேண்டுமென்று அரசாங்கத்திற்கு விண்ணப்பம் வந்திருப்பது அமைச்சருக்குத் தெரியுமா ? அப்பேர்ப்பட்ட இனத்தவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு அடிவாரத்தில் விற்பனை நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இரண்டு வருஷமாகப் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்வது நாணய சங்கம் வைப்பதற்காகத்தான். அதை வைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இது வரையிலும் யாரும் சர்க்காரிடத்தில் இதைப்பற்றிச் சொன்னதாகத் தெரியவில்லை.

### *Burialground at Puliyanthopu*

* 197 Q.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state the reasons for providing separate burial places for different castes in the burialground in Puliyanthopu, Madras?

The Hon. Sri M. A. MANICKAVELU : Separate places have not been reserved in the Pulianthopu cremation ground for different castes.

Sri V. K. KOTHANDARAMAN : பத்து ஆண்டு சுதந்திரத்திற்குப் பிற்பாடும் செத்த பிணத்திற்கு சுடுவதற்கு இடம் இல்லாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், உயர்ந்த சாதிக்காரர் தாழ்ந்த சாதிக்காரர் என்கிற பாகுபாடு பிணத்திற்குக் கூட இருக்கிறது என்றால்.

Mr. SPEAKER : நீங்கள் கேள்வியைப் போடாமல் பிரசங்கம் செய்தால் என்ன செய்வது ? உட்காருங்கள். அவர்தான் இல்லை என்று சொல்லி விட்டாரே.

Sri K. VINAYAKAM : Is it not a fact, Sir, that separate burialgrounds are provided for communities like Hindus, Muslims and Christians because different kinds of burial rituals are performed by the communities concerned?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்தக் கேள்வி புளியந்தோப்பு மயானத்தைப் பற்றியது. அங்கே இந்த மாதிரி பாகுபாடு முன்பு இருந்ததாம். இப்போது இல்லை.

Sri S. PAKKIRISAMI PILLAI : இந்த இடம் சுடும்படியான இடம். மிகவும் நெருக்கடியான இடமாதலால் அங்குள்ள பிணம் சுடும் மயானத்தை உடனடியாக வேறு இடத்திற்கு அப்புறப்படுத்துவதற்கு கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் சொல்வது வேறு விஷயம். அதைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

Mr. SPEAKER : **Questions are over.**



4th March 1958]

## II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* OUTBREAK OF SMALLPOX IN KANYAKUMARI DISTRICT.

Mr. SPEAKER : The hon. Member, Sri T. T. Daniel will now call the attention of the Hon. Minister for Health and Revenue to a matter of urgent public importance of which I have received notice.

Sri T. T. DANIEL : Sir, recently there was an outbreak of smallpox in the Kanyakumari district. At first it occurred in the Nagercoil town. In a place called Raman Puthur, more than 40 or 50 persons died. Instances of death are also reported to have occurred in places like Pudukudiyiruppu, Krishnan Koil, Vadacheri and Kurucheoli which are within the Nagerkoil municipal town limits. Afterwards, the disease began to spread into the interior villages and at Thiruvithancode nearly 40 persons are reported to have died. At a place called Kulasegaram, the number of deaths are still higher. In many other places in the various taluks in the district, there are also casualties. In this connection, I would bring to the notice of the Hon. Minister that at the beginning, there was no adequate supply of vaccine in the municipality and because of the scarcity of vaccine, vaccinators could not begin inoculation in time and further preventive measures were also not properly taken. The people who were attacked by this disease were not put in segregation camps. At present the disease is there and it is not completely brought under control and I wish that our Government will at least in future see that adequate supply of vaccine is in the municipality so that whenever any epidemic arises, vaccinators can start their function to vaccinate people immediately and also to see that adequate preventive measures such as segregation of people who receive the attack may be taken.

* The Hon. Sri M. A. MANICKAVELU : Mr. Speaker, Sir, 1-50 p.m.
sporadic infection of smallpox was prevalent in the Nagercoil Municipality upto 4th January 1958. There were 19 attacks and 11 deaths in the municipality during the period from 16th November 1957 to 4th January 1958. An increase in the incidence was recorded during the subsequent two weeks resulting in 45 attacks and 14 deaths. The District Health Officer, Tirunelveli, who is in charge of the Kanyakumari district inspected the municipality and issued necessary instructions to tighten up the control measures. Arrangements for the proper isolation of smallpox cases in the isolation ward of the Government Hospital were also made. The Assistant District Health Officer, Tirunelveli, was also put in charge of the smallpox work in the municipality. In addition to the four vaccinators of the municipality appointment of six more vaccinators by the municipal council and deputation of three vaccinators by the District Health Officer were done. One of the Assistant Directors of Public Health inspected the municipality and formulated a practical plan of organisation and operation for the control and prevention of smallpox. So far,

4,939 primary vaccinations and 35,969 revaccinations have been done in the municipality and the work is still progressing. On account of the intensive measures taken the situation is under control now as no reports of cases have been received from the Nagercoil Municipality during the weeks ended 1st February 1958 and 8th February 1958.

As regards the smallpox situation in the other areas of the district only moderate infection has been noticed particularly in Thiruvithancode and Kulasekaram villages. There were 59 attacks and 16 deaths in the rural areas of the district during the period from 24th November 1957 to 1st February 1958, not 48 deaths as represented by the hon. Member. The District Health Officer visited the villages and contacted the public and persuaded them to get vaccinated. He has deputed three Health Assistants including one Lady Health Assistant for vaccination among the Muslims of the village. During the week ending 1st February 1958 there has been a good progress of vaccination work and the smallpox situation is rapidly improving. Intensive vaccination by house-to-house visits is being conducted. Up to the week ended 1st February 1958, 556 primary vaccinations and 8,961 revaccinations have been done. The District Health Officer is now camping at Nagercoil. He will visit the affected places and supervise control measures in and around Nagercoil. The situation is now well under control.

## III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1958-59.

MR. SPEAKER : We shall now continue the General Discussion on the Budget. I have already with me the names of 25 hon. Members wishing to speak today and many more may be coming. To be on the safe side, therefore, I am fixing a time-limit of 10 minutes for each hon. Member.

SRI J. MATHA GOWDER : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 1958–59-வது ஆண்டு நிதி நிலை அறிக்கையை நான் மனமார வரவேற்கிறேன். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு நல்லதொரு அறிக்கை இந்த சபையின் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. தான்யத்தைப் பொறுத்தவரையில் நம் மாகாணம் இதர மாகாணங்களை விட அதிகமான விளைச்சல் விளைந்திருக்கிறது என்பதை அவருடைய பட்ஜெட் உரையில் காண்பித்திருக்கிறார்கள். அதை நாம் மட்டும் சொல்லவில்லை. எதிர் கட்சியில் அமர்ந்திருக்கக் கூடிய அன்பர்களும் சொன்னார்கள், சென்ற ஆண்டில் படுத்துக் கொண்டிருந்தவள் இந்த ஆண்டு எழுந்து உட்கார்ந்திருக்கிறாள் என்று. அவர்கள் அப்படி ஒரு உண்மையை ஒரு வருடத்தில் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் எனது மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு உட்கார்ந்து இருந்தால் அடுத்த ஆண்டு ஒருக்கால் எழுந்து ஓடும் அளவிற்கு வந்துவிடும் என்ற நிலையை அவர்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் எப்பொழுதும் குறுகிய மனப்பான்மையோடு இருப்பது தவிர அந்த மனப்பான்மையில்தான், அந்த வழியில்தான் அவர்கள் மக்களை இழுத்துச் செல்லப் பார்க்கிறார்கள்.



ஓடுவது என்று நான் சொல்வது, உற்சாகத்துடனும், வேகத்துடனும் காரியங்கள் செய்யப்படும் என்று நான் சொல்கிறேனே தவிர வேறு ஒரு அர்த்தத்திலும் அதைப் புரிந்து கொள்ளவேண்டாம். அதே நேரத்தில், இந்த அறிக்கை, நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அறிக்கை நல்ல முறையில் அமைந்திருக்கிறதா இல்லையா என்று பரிசீலனை செய்து பார்த்து அதில் எதாவது குறைகள் இருந்தால் அதை எடுத்துச் சொல்ல வேண்டுமே தவிர, எதாவது சாக்கை வைத்துக் கொண்டு ஆளும் கட்சியினரை குறை சொல்ல, அதில் பொத்தல் எதுவும் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், அதை மனதிலே வைத்துக்கொண்டு பேசுவதற்காக இங்கு வந்து உட்கார்ந்து கொண்டு பேசினால் அதனால் ஒருவித நன்மையும் ஏற்படப் போவதில்லை. அதனால் குழப்பந்தான் அதிகமாகும். நாம் பத்திரிகையில் பார்த்திருக்கிறோம், சிலோனையும் சேர்த்து ஒரு சுதந்திர தமிழ் நாடு அமைக்க வேண்டுமென்று ஸ்ரீ ஆதித்தன் அவர்கள் ஒரு கட்சி ஏற்படுத்தியிருப்பதை. அதைப்பற்றி நேற்றைய விவாதத்தில் இலங்கை வாழ் தமிழர்களைப்பற்றி இங்குள்ள தமிழர்கள் ஏதோ பகை காட்டுவது போல் பேசியிருக்கிறார்கள். ஆதித்தன் அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்தக் கட்சியால் சிலோனில் உள்ள தமிழர்களுக்கு பாதகம் விளையுமே தவிர அதனால் அவர்களுக்கு நன்மை ஏற்படப் போவதில்லை. அதனால் அங்குள்ள தமிழர்களுக்கு தீங்குதான் விளையும் என்பதை அவர் மறந்து விட்டார் என்று தோன்றுகிறது. இலங்கையில் ஒரு அன்னிய சர்க்கார் இருக்கும்போது, அச் சர்க்கார் என்ன நினைக்கும் ? தமிழர்களை இங்கு அதிகமாக குடியேற்றினால் பூரா இலங்கையும் அவர்கள் கேட்பார்களோ அல்லது இலங்கையை அவர்கள் பிடித்து விடுவார்களோ என்ற தப்பு அபிப்பிராயம் ஏற்பட்டு அவர்கள் அங்குள்ள தமிழர்களை இம்சிப்பார்களே தவிர அதனால் அங்குள்ள தமிழர்களுக்கு நல்லது கிடைக்காது அவர்களது கட்சியால். ஒரு சிலோன் பத்திரிகையில் அதைப்பற்றி போடப்பட்டிருக்கிறது. அதனால் நமது இந்திய சர்க்கார் மீதும் அவர்கள் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு நம் பிரதமர் நேருஜி அவர்கள் மறுப்பு கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட அவ்வளவு தூரம் பத்திரிகையில் எழுதும்படி வந்து விட்டதற்குக் காரணம் ஆதித்தன் அவர்களைப் போன்றவர்களாகும். நல்ல காலமாக அவர் அந்த பத்திரிகையில் இருந்து விலகி விட்டதாக பத்திரிகையில் பார்த்தேன். மிகவும் சந்தோஷம். அதே போல் இந்த சுதந்திர தமிழ் நாடு கட்சியில் இருந்தும் ஆதித்தன் அவர்கள் நாளையோ அதற்கு அடுத்த நாளோ விலகிக் கொள்வார் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதே போல்தான் வடநாடும் தென்னாடும். இந்த வடநாட்டான், தென்னாட்டான் என்று பேசுவதும் அப்படித்தான். இன்று சிலோனில் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தொல்லை வடநாட்டில் இன்று இருக்கும் தமிழர்களுக்கு ஏன் ஏற்படக் கூடாது ? அதை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். அது மாதிரி செய்ய அந்தந்த மாகாண சர்க்கார்களுக்கு இடம் கொடுக்காமல் மத்திய சர்க்கார் தன் கண்ட்ரோலில் வைத்திருப்பதால் பிற மாகாணங்களில் வசிக்கும் தமிழர்கள் தொல்லைப் படாமல் இருக்கிறார்களே தவிர நம் போன்று அவர்களுக்கும் குறுகிய மனப்பான்மை இருக்குமானால் மாகாணத்திற்கு மாகாணம் பிரிவினை வேண்டுமென்று கேட்கும் நிலை இருந்தால், இன்று நாம் பம்பாய் நகரத்தை எடுத்துக் கொண்டால் மாதுங்காவில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் அங்கு இருக்கிறார்கள். ஆகவே, அங்குள்ள தமிழர்களுக்கு இங்கு இவர்கள் போடும் கூக்குரலும், கூச்சலும் தீங்கு விளைவிக்குமே தவிர அங்கு இருக்கும் தமிழர்களுக்கு அதனால் என்ன விதமான சாதகமும் ஏற்படாது என்பதை நாம் பட்டவர்த்தனமாக தெரிந்துகொள்ள வேண்டும். நாம் தனி தமிழ் நாடு வேண்டும் என்றெல்லாம் பேசிக் கொண்டுபோனால் அகில இந்தியாவில் உள்ள தமிழர்களின் நிலை என்னவாகும் என்று பார்க்கவேண்டும். என் தாய்மொழி கன்னடமாக இருந்தாலும் கூட தமிழர்களின் வீரப் பண்பாடு சேர சோழ பாண்டியன் வரலாற்றை படித்திருப்பதால் நாங்கள் எல்லோரும் தமிழ் நாட்டில் இருக்க வேண்டுமென்று விரும்பி இங்கு இருக்கிறோம். ஆனால் தமிழர்கள் இந்த மாதிரி பிரிவினை மனப்பான்மையை தொடர்ந்து வைத்துக்கொண்டிருந்தால், எல்லோரும் இங்கிருந்து பிரிந்து போகப் பார்ப்பார்களே தவிர, அப்படிப்பட்ட பிரிவினைக் கைங்கரியத்தால் நீங்கள் பெருமை அடைந்துவிட

முடியாது. அதனுல்தான் ஆதித்தன் அவர்கள் சொன்னதை நேருஜி அவர்கள் நான்சென்ஸ் என்று சொன்னூர்கள். நான்சென்ஸ் என்ற வார்த்தையை கன்வலியேஷன் போதெல்லாம், தொழிற்சங்கத் தலைவர்களும், முதலாளிகளும் சர்வ சாதாரணமாக . பரிமாறிக்கொள்கிறோம். நான்சென்ஸ் என்று சொல்வது நான்சென்ஸ்லான காரியங்களைக் குறிக்குமே தவிர அந்த ஆளை குறிக்காது. தமிழர்களுக்கு பாதகமான செயல்களை செய்யும்போது அல்லது செய்ய வேண்டுமென்று சொல்லும்போது அந்த பாதகமான காரியங்களைத்தான் நான்சென்ஸ் என்று சொல்கிறார்களே தவிர தமிழனைச் சொல்லவில்லை. அதேபோல் மொழிப் பிரச்னை. இந்தி மொழி வட மொழி, அதை தென்னுட்டில் உள்ள தமிழர்கள் ஆதரிக்கிறார்களே, காங்கிரஸ்காரர்கள் ஆதரிக்கிறார்களே என்று சொன்னல் அகில இந்தியாவிற்கு ஒரு பொது மொழி வேண்டுமென்றுதான் அதை ஆதரிக்கிறோமே தவிர வட மொழி ஒன்றை வளர்க்க வேண்டுமென்ற குறிக்கோளோடு அல்ல. அதே நேரத்தில் வட மொழி வைப்பதை எதிர்க்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அவர்களது தேர்தல் சின்னமாக வைத்துக் கொண்டிருந்தது, உதய சூரியனையாகும். உதய சூரியன் என்ற சொல் வட மொழிச் சொல்லாகும். அதற்கு தமிழில், ஆதவன், ஞாயிறு என்று சொல்லலாம். அப்படி அவர்கள் வைத்துக்கொண்டு, வட மொழியை ஆதரிக்கிறீர்களே என்று எங்களைப் பார்த்து சொல்கிறார்கள்.

2 p.m. இவ்வளவு தமிழ் அறிவும் எப்படி வந்தது என்றால் தமிழர்களோடு பழகிய தோஷத்தால் வந்ததுதான், என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். நான் தமிழைப்பற்றி தப்பாக பேசினலும் கூட அது தவறு கிடையாது. இன்றைக்கு வடமொழி வேண்டாம் என்று சொல்லுகிறவர்கள் உதய சூரியன் என்று வடமொழி பெயரை வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு பத்திரிகையில் பார்த்தேன், அவர்கள் ஏதோ அவர்களது தேர்தல் சின்னத்தை அடுத்த தேர்தலில் மாற்றப் போவதாக இருக்கிறது. இவர்கள் எல்லாம் நாம் சொன்ன பிறகுதான் இதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள், அவர்கள் எல்லாம் இவ்வளவு நாட்களும் தெரியாமலே வட மொழியை வளர்த்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் பார்த்து நான் பரிதாபப் படுகிறேன். ஆனல் இவர்கள் இன்று தமிழ்நாட்டை பிடித்துக் கட்டுவதற்காக இங்கு வந்திருக்கிறோம், என்றைக்கும் நாங்கள் எதிர் கட்சியில் இருப்பதற்கு வரவில்லை, ஆளும் கட்சியாக வருவதற்குதான் இங்கு வந்திருக்கிறோம் என்றும் சொல்லுகிறார்கள். ஆனல் இங்குதான் தமிழ் நாட்டை பிடிப்பதற்காக வந்திருக்கிறார்கள், டில்லியில் பார்லிமெண்டில் எதற்காக திராவிட முன்னேற்ற கழகத்தின் அங்கத்தினர் இருக்கிறார் என்று தெரியவில்லை. அவர்கள் பார்லிமெண்டில் உட்கார்ந்து இருப்பது ஹிமாலய மலையை பிடிப்பதற்குத்தான் போய் இருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. ஹிமயமலை முதல் குமரி வரை கட்டிப் பிடிப்போம் என்று சொல்லுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. குமரி நமக்கு கிடைத்திருக்கிறது. ஆனல் இமயத்தை நாம் ஒருக்காலும் பெற்றுக்கொள்ள முடியாது. இதோ இவர்கள் இமயத்தை பிடிப்பதற்கு அவர்களுடைய அங்கத்தினரை பார்லிமெண்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். இதே மாதிரி பிளவு மனப்பான்மையில் போய்க் கொண்டிருந்தால் ஒரு காலத்திலும் தெலுங்கர்களும், கன்னடர்களும், மலையாளிகளும் ஒற்றுமையாக வாழ முடியாது என்பதை நாம் கண்கூடாக பார்த்துக் கொண்டு வருகிறோம். அதல்லாமல் இவ்விதம் சொல்லிக் கொண்டிருப்பது வெறும் பிரசாரத்திற்குத்தான் உதவுமே தவிர பலன் ஒன்றுமில்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன். இவர்கள் அடுத்த தேர்தலில் ஏதோ தங்களுடைய சின்னத்தை மாற்றப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். சில வேளை இவர்கள் தங்களுடைய சின்னமாக "காக்காய்" சின்னத்தை வைத்துக்கொண்டால் நல்லதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் இவர்கள் எப்பொழுதும் கறுப்பு சின்னத்தில் அதிக நம்பிக்கை உடையவர்களாதலால் அதை வைத்துக்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன். . . .

**Mr. SPEAKER** : The hon. Member has exceeded his time-limit.





**Sri J. MATHA GOWDER** : இந்த பட்ஜெட் உரையில் பஸ் வாங்குவதற்காக 35 லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறார்கள். இந்த 35 லட்சம் ரூபாய்கள் சமீபத்தில் தீக்கிரையாக்கப்பட்ட ஐந்து பஸ்களையும் சேர்த்து வாங்குவதற்காகவா என்று தெரியவில்லை. இவ்விதம் பஸ்களை தீக்கிரையாக்கிக் கொண்டிருந்தால் இம்மாதிரிதான் டெபிஸிட் வந்து சேரும். சர்க்காருடைய முதலை இவ்விதம் நாசமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதை சர்க்கார் அனுமதிக்கக் கூடாது. சமீபத்தில் ஐந்து பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டுஅதனுல் ஆறு லட்சம் ரூபாய் நஷ்டமடைந்திருக்கிறோம். இந்த மாதிரியான காரியங்களில் மக்களை தூண்டிவிடக் கூடாது என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri R. SRINIVASA IYER** : Mr. Speaker, Sir, I welcome this Budget which has been very carefully prepared and it is a balanced Budget not in consonance with the deficit Budgets of the Centre or some other States. Perhaps this is done due to instructions that all States will do well to prepare balanced Budgets. On the whole, if the Press represents public opinion, it has been received as satisfactory except for some remarks which have been made with reference to the taxes that are proposed to be levied. Sir, all sections of the House have generally received this Budget as satisfactory except the Opposition Members who have criticized it for the sake of criticism by repeating their slogans about ceilings, unemployment and so on. One important matter in this Budget stands singularly supreme and that is the substantial improvement in our Revenue position which has enabled us to wipe out the heavy deficit for the current year and reduce the gap for the next year, 1958–59.

Sir, the deficit of Rs. 105 lakhs has been worked out. I am guardedly using the words 'worked out' because in some items though the Hon. Minister for Finance has taken up the actuals for 1956–57 or the revised estimates for 1957–58 into account, in some other items he has worked out less figures. I particularly refer to the figures under 'Excise, Forest and General Sales Tax'. Under 'General Sales Tax' alone, about Rs. 188 lakhs less is taken into account. That is why there is a deficit. Dr. Loganathan has submitted in his report that they would get something more under this item. At any rate, there is no justification for taking a lesser amount and especially to reduce the total receipts by such a large sum as Rs. 188 lakhs.

Another important factor is that under the receipts from 'Community Development' Rs. 73·49 lakhs less is taken into account. Under 'Forests' sale of sandalwood has not been taken into account fully and a lesser figure is shown. Anyway, I am not a financial expert and it is not possible to estimate the revenue correctly but I do not find any explanation for showing a lesser amount under 'General Sales Tax' in the Budget Memorandum.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : We have abolished the Sales Tax on tobacco, sugar and cloth and so that would not be found there.

[4th March 1958

SRI R. SRINIVASA IYER : I take that also into account. But yet I say that the Centre has agreed to give us compensation for the loss on that account and that is also found in the Budget Memorandum. As there is very little time I will rush up a bit.

To make up the deficit of Rs. 105 lakhs there is a proposal to levy Agricultural income-tax. When the surcharge was levied in 1954 it was stated that it was an immediate step as a substitute for agricultural income-tax. That could be continued instead of this agricultural income-tax. Sir, the ground for not levying agricultural income-tax is the impossibility of maintaining accounts. Also the manner in which the tax is proposed to be levied is not proper. The rate perhaps is very high. It is impossible to maintain accounts and that is found on page 208 of Volume III of Taxation Enquiry Committee's Report and also in the Memorandum submitted by the Madras Government to the Finance Commission.

Then coming to the right of the landowner to commute his income with the officers, I submit that it will give room for evasion and corruption. I feel that additional taxation is not necessary and especially agricultural income-tax is necessary. It is not proper to overload the already overloaded land. The landholders have been singled out for several piecemeal legislations and harassment. In this connection, I would also use the word '*Chitravathai*' used by the hon. Member, Sri Vedaratnam Pillai for the meaning of harassment. The landholders will be very much satisfied if a ceiling is fixed on their holdings and immediately the surplus lands are taken away by giving some proper compensation. Of course, in this respect, I would suggest that there is no constructive proposal from the Opposition, whether the ceiling on land holdings should be based on the total income or on the net income or on land revenue alone. Some judicious, some just ceiling must be fixed immediately so that the landholders may be relieved of their worry about ceiling. They would very much like that this is brought about as quickly as possible.

Another feature of this tax is that non-agricultural income is also taken into account for levying agricultural income-tax. Of course, exemption is given up to Rs. 3,000. In the Travancore State the exemption was up to Rs. 3,000 in 1946 when the prices were low and in the Hyderabad State it was Rs. 10,000 in 1952 when the prices were high. Therefore, I feel that the clubbing of the non-agricultural income along with agricultural income would cause hardship even to small landowners. For instance, take the Non-Gazetted Officer. He will be earning Rs. 150 per month and it would give him an annual income of Rs. 1,800. If he also possesses five acres of land, he will get an annual income of Rs. 1,500 or Rs. 2,000. As the exemption is only up to Rs. 3,000 he is also liable to pay agricultural income-tax at the top rate. Therefore, I feel that this sort of combining the non-agricultural income with the agricultural income will create difficulties even for the small landowners who will have to maintain accounts about non-agricultural income also.



4th March 1958] [Sri R. Srinivasa Iyer]

And then there is room for evasion and curruption. Unless a taxation proposal is easy of calculation, it will give room for evasions. We know that in Income-tax collection, crores of rupees are evaded. There is the surcharge of 1954 and also again the surcharge of 1955. The surcharge of As. 4 in the rupee is not going to be given up. There is no reasons at all for levying a fresh tax now. Even if it is necessary to impose a tax, even if the overburdened land should be taxed again, the surcharge could be increased to 2½ annas or 3 annas, per rupee on all ryotwari assessment giving up the As. 4 surcharge of 1954. Levy of Agricultural Income-tax will also affect food production adversely. I therefore suggest that for balancing of the budget which is not necessary and even if it was necessary, measures may be taken up in that way rather than taxing the agricultural income. 2-10 p.m.

Then, this surcharge on land and this agricultural income-tax is likely to affect food production also. Whether this will affect food production or not is a question on which there may be differences of opinion and there is difference of opinion as to whether bringing of ceiling will increase or will not increase food production and expert people have not been able to solve it. But adding more burden to land which is already overburdened, I respectfully submit will retard production.

Then, the levy of additional As. 4 per gallon of Diesel oil is also likely to affect the agriculturists, in respect of pump-sets which they are using. A method must be evolved for exempting oil being purchased for agricultural pump-sets. Of course, there is also talk that the lorry owners who have been competing with the railway in relieving burden on railways would be affected. But so far as the agriculturists are concerned, the additional levy should be made not applicable to them and they should be exempted.

Provision has been made in the Budget for various other things and among them I welcome the proposals relating to minor irrigation, roads, education, etc. At the same time I would suggest that the poor village officer on whom we depend for our accounts, which form the basis for our revenues, is not properly paid and that should be considered. In computing the land revenue either according to inams, or taken-over estates or ryotwari estates, he has to maintain all the accounts. We have to depend upon him for computation of our land revenue. For all statistics, we have to depend upon him. With so much heavy work, his low pay should be compared and his condition should be improved. Even this morning reference was made about the incorrect statistics upon which we based our calculations of production of food crops, etc.

Minor irrigation is a very important matter. The sum of Rs. 70 lakhs set apart for minor irrigation is not enough. Several tanks in the upland regions of Aranthangi taluk and Pattukottai taluk have to be renovated. Many estates have been taken over and they are all Government property and in those estates tanks have to be immediately repaired if food production has got to be

increased. I thank the Government for having sanctioned the Ambuliar anicut which is going to function very soon. It will help about 4,000 acres of new land to be brought under irrigation. Aranthangi taluk is an area of deficiency which consists of only chains of tanks which have to be repaired—and this applies to all tanks which have been taken over from Zamins and inams. Water has to be regulated, and, for want of this arrangement large extent of land are suffering now.

A word about electricity. I would suggest that in the Budget Receipts and Expenditure on Electricity has been omitted on the ground that it is now administered by a Board. I respectfully submit that the Board being a limb of the Government, the Government are responsible for whatever work is carried on by the Board. We must be, therefore, given an opportunity to discuss the demand and expenditure, under this head. The House is entitled to know what the receipts are and what are the projects, what we can expect from electricity schemes, etc. Of course, I congratulate the Hon. Minister for Electricity on having brought 900 villages out of a targent of 1,000 villages under electricity schemes, even by December 1957. I know the Hon. Minister for Electricity is taking effective steps to provide electricity to villages. In this connection I wish to say a word about the minimum charges. A fixed rate of Rs. 50 or 60 horse power works hardship in villages and therefore this minimum charge should go. If we estimate the cost of electricity production to a particular village, it is more. I submit that this cost of production of electricity and the whole system of distribution of electricity for the whole State should be taken together just as we do in Railways. We should not single out one particular scheme as costing Rs. 220 lakhs and therefore, the minimum charge must be so much per cent of it. If we are interested in the increased production of food crops, then this system must be removed so as to help the agriculturists who are not able to use the minimum quantity of electricity. Another thing is that electricity is a commodity which is not wasted. If you do not use it in a particular place, it is consumed in another place. We have to re-arrange rates for consumption of electricity so that this cut will not be imposed in future.

I am happy that excellent work has been done in the field of agriculture, that is, by supplying improved seeds, distribution of manure, pesticides, etc., and I can visualise the increased production because of all this. I see increased production in my district. But the prices are going very high and I put it as due to the 'exodus' or illicit export through roads and railways to Kerala and outside. (Deputy Speaker sounded the gong.) I will finish in two minutes, Sir. Because other States like Kerala are taking away large quantities of our foodstuffs by roads, etc. Prices increase in our State.

In the field of Animal Husbandry, we have made great strides. We are proud that the best animals are reared here and so far as Sindhi and Murra are concerned, we can even compete with





places which are their native places. I am glad that Tanjore District which is the best agricultural district in the State is having a Livestock Farm and it is making great strides. I appeal to the Hon. Minister for Agriculture to acquire the 3,000 acres of Poramboke lands in Eachanthottam and the neighbourhood which can be made into the largest farm in the whole of India and it will be a great asset to the country and to our State economy.

One more word about roads. I want to submit that we are conferring benefit after benefit upon the same places and on Cities and Municipalities. If we want to improve the economic condition of the rural areas, if we want to eradicate this unemployment problem in the villages, then proper roads should be provided and it should be made easy for the products of the village to find an easy market outside. There are villages even without roads and even if there are roads, they are without gravel. Unless we improve the traffic conditions, the foodgrains produced in the villages cannot reach the big markets, the best markets and the economic conditions of our villages will not improve. There is the slogan 'begin improvement in the villages', but it is not carried out at all. I therefore appeal to the Government to begin from the villages and see that every village is provided with roads and that the roads are gravelled and all the rivers and channels that are unbridged are bridged. It is a great hardship for the village animals to drag their loads in bad roads and it is an abominable sight. Therefore, I appeal to the Government to see that all villages are connected by roads and that all roads are gravelled so that the village products could reach the nearest market easily. Thank you, Sir.

SRI K. RAMACHANDRAN : கனம் சபாநாயகர் அவர்களே, 2-2 p.m.
நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த பட்ஜெட்டின் மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். முதலில், இந்த பட்ஜெட்டைப் பொறுத்த வரையில் இது சம்பிரதாயமாக சமர்ப்பிக்கப்பட்ட ஒரு பட்ஜெட் என்றுதான் நான் கருதுகிறேன். இதிலே புதிதான விஷயம் எதுவும் சொல்லப்படவில்லை. ஆகையால் இதை நாம் பாராட்டக் கூடிய நிலையில் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். பட்ஜெட் உரையின் ஆரம்பித்திலேயே சில முரண்பாடுகள் தெரிகின்றன. மழை திருப்திகரமாக இருந்தது, விளைச்சல் திருப்திகரமாக இருந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் உணவுப் பொருள்களின் விலைவாசிகள் ஏறுமுகமாகவே இருந்தது என்று சொல்லப்படுகிறது. 1956-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் 377 ஆக இருந்த குறியீட்டு எண், 1957 டிசம்பரில் 512 ஆக ஏறியிருக்கிறது. இதிலிருந்து விலைவாசி குறையவில்லை என்ற விவரம் தெரிகிறது. மக்களுடைய பொருளாதாரம் திருப்திகரமாகயிருக்கிறது என்றால் விலைவாசிகள் இறங்க வேண்டும். உணவுப் பொருள்களின் விலைவாசிகள் இறங்காமல் அதிகரித்திருக்கிறதென்றால், மற்ற பொருள்களின் விலைவாசியும் அதிகமாகத்தான் இருக்கும். இந்த அதிக விலைவாசியினால் விவசாயிகளுக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்று பார்ப்போமேயானால் உண்மை தெரியவரும். கிராமாந்திரங்களிலுள்ள கிராம வாசிகளுக்கு இந்த விலைவாசியினால் ஒரு நன்மையும் ஏற்படவில்லை. பெரிய முதலாளிகளும் வியாபாரிகளும்தான் நன்மை அடைந்திருக்கிறார்கள். கிராம விவசாயிகள் கடன் வாங்கி வரி கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறைந்த விலைக்கு தான்யங்களை விற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே பெரிய வியாபாரிகள், முதலாளிகள் நலனைக்

கருத்தில் கொள்ளாமல், விவசாயிகளின் உண்மையான நலன்களைக் கருத்தில் கொண்டு விலைவாசியை நிர்ணயிக்க வேண்டும். மார்க்கெட்டிங் சொஸைட்டிகள் மூலமாக இந்தப் பொருள்களைக் கொள்முதல் செய்தால், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும். விலைவாசிகள் அதிகமாகாத முறையிலும் சர்க்கார் "**price structure**" திட்டத்தை வகுக்கலாம். ஆகவே இதைப் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விளைச்சலைப் பொறுத்த வரையில் **1955–56**-ல் உணவு உற்பத்தி **44** லட்சம் டன்னாக உயர்ந்தது. **1956–57**-ல் இரண்டு லட்சம் டன் அதிகமாகி **46** லட்சம் டன் ஆக உயர்ந்திருக்கிறது. உயர்தர ரக விதைகள், நல்ல உரங்கள், இவைகளுக்காக அதிகமாகப் பணம் செலவழித்தும் கூட, கிட்டத்தட்ட ஐந்து சத விகிதம்தான் உயர்ந்திருக்கிறது. இதற்கு ஒரு உதாரணமாக, நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரையில், "சீன நாட்டிலுள்ள நிலைமை அநேகமாய் நம் நாட்டு நிலைமையைப் போன்றதுதான்" என்று சொல்லியிருக்கிறார்கள். உற்பத்தியைப் பெருக்குவதற்கு கையாளப்பட்ட முறைகள் நம் நாட்டைவிட சீன நாட்டில் நல்ல விதமாக இருக்கின்றன என்பது அந்த நாட்டில் வகுக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தைப் பார்த்தால் தெரியும். அங்கேயும் அபிவிருத்தி செய்யப்பட்ட விதைகள், உர வகைகள் எல்லாம் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் இவைகளுக்கு இரண்டாவது இடம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக, கூட்டுறவு விவசாய முறையை அங்கே கையாண்டுகொண்டு வருகிறார்கள். இதனால் முதல் வருஷத்திலேயே **10**-லிருந்து **20** சத விகிதம் வரை விளைச்சல் அதிகமாகியிருக்கிறது என்பது அங்கே உள்ள புள்ளி விவரங்களிலிருந்து தெரியும். இந்த பட்ஜெட் உரையில் அந்த முறையை இங்கு கையாளுவதாக சூசகம் எதுவும் இல்லை. கூட்டுறவு விவசாய முறையைக் கொண்டுவந்தால்தான் இங்கும் அதிகமான விளைச்சலை எதிர்பார்க்க முடியும். நாற்பத்தெட்டு லட்சம் டன் நமக்கு உணவுப் பொருள்கள் தேவைப்படுகிறது என்றால், நல்ல முறையில் "**Co-operative farming**" திட்டத்தை கையாண்டால், விளைச்சல் பெருகி, வெளிநாடுகளுக்கும் நாம் அனுப்பி நல்ல லாபம் பெற முடியும். ஆகவே அந்த முறையை நம் மாகாணத்திலும் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கும் பணம் போதாது என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யர் எடுத்துக் காட்டியது போல் ராமநாதபுரம் ஜில்லா போன்ற ஜமீன் பிரதேசங்களில் இருக்கும் கண்மாய்கள் சரியாக பழுது பார்க்கப்படவில்லை. முக்கியமாக அவைகளுக்குச் செல்லக்கூடிய கால்வாய்கள் தூர்ந்து போய்க் கிடக்கின்றன. கண்மாய்கள் ஓரளவு பழுது பார்க்கப்பட்டு இருந்தாலும், கால்வாய்கள் சரியான முறையில் இல்லாததனால், தண்ணீர் சரியாகப் பாயக்கூடிய நிலைமையில் இல்லை. அதனால் சரியான விளைச்சலை எதிர்பார்க்க முடியவில்லை. ஆகையால், வைகை நதி பாய்கின்ற ராமநாதபுரம் ஜில்லாப் பகுதிகளுக்கு, ஆற்றங்கரையிலுள்ள கிராமங்களுக்காவது இந்தத் தண்ணீரால் பயன் கிட்டுவதற்கு ஒரு திட்டம் வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசீய நலப் பரப்புத் திட்டத்தை கிராம அடிப்படையில் கொண்டு வர நமது சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அபிவிருத்தியே அடையாத பகுதிகளை எடுத்துக் கொண்டு திட்ட வேலையை நடத்துவதுதான் நியாயம். அந்த மாதிரி முறை இப்பொழுது இல்லை யென்றாலும், இனிமேலாவது ராமநாதபுரம் ஜில்லாப்போன்ற பிற்பட்ட பகுதிகளை எடுத்துக்கொள்ளலாம். ஐந்து, ஆறு தாலூக்காக்களில் பல அபிவிருத்தித் திட்ட பிளாக்குகள் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கின்றன. திருவாடானையில் சமீபத்தில் தேர்தல் வரவிருக்கிறது. அங்கே மந்திரிகளும் போவார்கள். அப்பொழுதுதான் அங்கேயுள்ள பிற்போக்கான நிலைமை விளங்கும். அங்கே சரியான ரோடு வசதிகள் கிடையாது. மிகவும் பிற்போக்கான பிரதேசம் என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். கிராமப் புறங்களிலிருந்து **40, 50** மைல்களுக்கு ரோடு வசதியே கிடையாது. இது நமக்குப் பெருமை





அளிக்கக் கூடியதல்ல. சாதாரணமாக ராமநாதபுரம் ஜில்லாவைப் பற்றிச் சொன்னால், "உங்களுக்கென்ன, முதல் மந்திரி யிருக்கிறார்களே" என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். அவர்களுக்கெல்லாம், "எங்களுக்கு முதன் மந்திரி வேண்டாம், அபிவிருத்திதான் வேண்டும்" என்று நான் தமாஷாகச் சொல்லுவதுண்டு. (சிரிப்பு.) ஆகவே, இந்த மாதிரி பிற்போக்கான பகுதிகளுக்கு தேசீய நலப் பரப்புத் திட்டத்தைக்கொண்டுவர வேண்டும். தவிரவும், செலவாகிற பணத்தில் அதிகமாக "**waste**" ஏற்படுகிறது. சில பிளாக் அபிவிருத்தித் திட்ட இடங்களில் ஒரு வருஷமாக எந்த விதமான வேலையும் நடைபெறவில்லை. எந்த விதமான சங்கடங்கள் இருந்தாலும், அவைகளை நிவர்த்தி செய்து வேலையைத் தொடங்க வேண்டும்.

அடுத்தபடியாக, பெரும் தொழில்களை எடுத்துக் கொண்டால் நமது மாகாணத்தில் அதிக முன்னேற்றம் இல்லை என்பது தெரியும். நமது மாகாணத்திலுள்ள கனி வளங்களை ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு தனிக் குழு ஒன்றை ஏற்படுத்தி, எங்கே கனி வளங்கள் இருக்கின்றனவோ அங்கே பெரிய தொழில்களை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். உதாரணமாக, முதுகுளத்தூர் மிகவும் பிற்போக்கான பிரதேசம். ராமநாதபுரம் ஜில்லாவில் பரமக்குடிப் பகுதியில் ஜிப்ஸம், லைம் ஸ்டோன் அபரிமிதமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏற்றுமதி செய்யக்கூடிய சரக்காகவும் அதை உபயோகிக்கலாம். இவைகளைப் பயன்படுத்துவதற்கு ஒரு திட்டம் வகுத்தால்தான் அங்குள்ள மக்களின் பொருளாதாரம் அபிவிருத்தி யடையும். அத்துடன் ராமநாதபுரத்தில் ஒரு ஸெமண்ட் தொழிற்சாலை நிறுவ வேண்டும் என்ற கருத்து போன பட்ஜெட்டிலும் இருந்தது. இப்பொழுதும் இருக்கிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒரு தொழிற்சாலைக்கு லைசென்ஸ் கொடுத்தாய்விட்டது.

SRI K. RAMACHANDRAN : லைசென்ஸ் கொடுத்தாலும் அதில் இன்னும் எத்தனை சங்கடங்கள் இருக்கின்றனவோ தெரியாது. ராமநாதபுரம் ஜில்லா மிகவும் பிற்போக்கான பிரதேசம் ஆகையால் விசேஷ கவனம் செலுத்தும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். சிறு தொழில்கள், இண்டஸ்டிரியல் எஸ்டேட், இவைகள் எல்லாம் எங்கள் ஜில்லாவுக்குத் தெரியாத விஷயம்.

விருதுநகர், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் முதலியவைகள் ராமநாதபுரம் 2-30 p.m.
ஜில்லாவைச் சேர்ந்தவை என்பதற்காக அவைகளைப்பற்றி நான் குறிப்பிடுகிறேன். இதை கனம் அங்கத்தினர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும், என்பதை தலைவர் அவர்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன். அந்த இடங்களில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளை அமைத்தால் அவைகள் நல்ல முறையில் நடக்கும். அதற்கு வேண்டிய சாதனங்கள் அங்கு இருக்கின்றன. ஆனால் அங்கு இருக்கக்கூடிய மக்களுக்கு என்ன நடக்கிறது என்று ஒன்றுமே தெரியவில்லை. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி சொன்னால் அது என்ன என்று கேட்கக்கூடிய அளவில் அங்குள்ளவர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது முதல் ஐந்தாண்டு திட்டத்தை முடித்துவிட்டு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இரண்டு வருஷங்கள் முடிந்த பிறகு நாம் இருக்கிறோம். இது என்ன என்று கேட்கும்போது இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் நடந்துகொண்டு இருக்கிறது, அது நடந்துதான் மெதுவாக வரும் என்று நான் சொல்வது உண்டு. (சிரிப்பு.) அது மெள்ளத்தான் வரும் என்றும் சொல்லிக் கொண்டு வருகிறேன். ஆகவே இந்த ஜில்லாவிற்கு எவ்வளவு கவனம் செலுத்த வேண்டுமோ அவ்வளவு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை இராமநாதபுரம் ஜில்லாவில் அமைத்தால் அது நல்ல முறையில் அங்கே நடக்கும். ஏனென்றால் அங்கே முக்கியமாக லேபர் சீப்பாக கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது. அங்கே பலர் வேலையில்லாமல் இருப்பதால் லேபர் சீப்பாக கிடைக்கக்கூடிய வசதி இருக்கிறது. கூலிகள் சாதாரண முறையில் கிடைக்க

[Sri K. Ramachandran] [4th March 1958

கூடியதாக இருப்பதால் அங்கே இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை ஆரம்பித்தால் நலமாக இருக்கும், அதற்கு வேண்டிய வாய்ப்புகளும் அங்கே இருக்கின்றன. அந்த வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னைகளைப்பற்றி நாம் ஒவ்வொரு வருஷமும் சொல்லிக்கொண்டுதான் வருகிறோம். அவர்களுக்கு பணமும் ஒதுக்கிக்கொண்டுதான் வருகிறோம். ஆனால் எந்த விதத்திலும் அவர்களுடைய நிலைமை முன்னேற்றமடைந்ததாக தெரியவில்லை. அவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டுதானிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய திட்ட வட்டமான எந்த திட்டமும் இந்த பட்ஜெட்டில் இல்லை. முன்பு ராஜாஜி அவர்கள் சொல்லிய மாதிரி இரண்டு நூல் துணியை கைத்தறிக்கு என்று ஒதுக்கினால்தான் அவர்களுடைய கஷ்டம் ஓரளவில் நீங்கும். அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் பல லட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்களுக்கு பெரிய உதவி அளித்ததாக இருக்கும். இல்லாவிட்டால் தேக்கம் இருந்துகொண்டேதான் இருக்கும். மத்திய சர்க்கார் இவர்களுக்கு என்று ஐந்து லட்சம் ரூபாய் மானியமாகவோ, அல்லது கடனாகவோ கொடுக்கப் போவதாக பத்திரிகைகளில் பார்த்தேன். சென்னை மாகாணத்தில்தான் அதிகப்படியான கைத்தறி நெசவாளர்கள் இருக்கின்றார்கள். அதனால் அந்தத் தொகையில் பெரும் அளவு நம் மாகாணத்திற்கு என்று வாங்கி நல்ல திட்டங்களை அவர்களுக்கு அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ரோடுகள் என்பதைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. கிராமங்களில் ரோடுகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. கிராமங்களில் இன்னும் 40 அல்லது 50 மைல்களுக்குக் கூட ரோடுகள் இல்லாமலேயே இருக்கிறது. அதனால் கிராமங்களில் ரோடுகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு தனியான திட்டத்தை அமைத்து அதற்கு அதிகப்படியான பணத்தை ஒதுக்கி வைத்து திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக பட்ஜெட்டினுடைய ஓவர்ஆல் அமைப்பைப் பார்த்தால் புது வரிகள் என்ற வகையில் வரிகள் போட்டிருக்கிறார்கள். துண்டு விழக்கூடிய ஒரு கோடி 35 லட்சம் ரூபாயை சரிக்கட்டுவதற்காக இப்படி வரி போடப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் பட்ஜெட் நிலைமையைப் பார்த்தால் அப்படி வரி போட வேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை. பட்ஜெட் இனங்களில் சொல்லப்படுகிற சில வருவாய்களிலிருந்து இப்படி துண்டு விழுவதை சரிக்கட்டுவதற்கு இடம் இருக்கிறது. வருவாயில் எதிர் பார்ப்பதற்கு அதிகப்படியாக சில இனங்களில் வருவாய் வருகின்றன. அவைகளை வைத்துக்கொண்டு துண்டு விழுவதை சரிக்கட்டிக் கொள்ளலாம். அதனால் வரி போட வேண்டிய அவசியமே இல்லை. இப்பொழுது துண்டு விழக்கூடிய அளவில் அது ஒரு பெரிய துண்டு என்று சொல்லவும் முடியாது. சில இனங்களிலிருந்து அதை சரிக்கட்டிக் கொள்வதற்கு இடம் இருப்பதால் புது வரிகள் போட வேண்டிய அவசியமே இல்லை.

பல அபிவிருத்தி திட்டங்களைப்பற்றி பேசும்போது என்.ஜி.ஓ.-க்களைப் பற்றி பேசிக்கொண்டு வருகிறோம். அவர்களுக்கு நல்ல சலுகைகள் கொடுத்தால் நாம் போடும் திட்டங்கள் நல்ல முறையில் வேலை செய்வதற்கு உதவியாக இருக்கும். நாலு கோடி, ஐந்து கோடி என்று திட்டம் போடுவதில் பிரயோசனம் இல்லை. நாம் என்.ஜி.ஓ.-க்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்த பட்ஜெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டே பார்த்தாலும் அவர்களுக்கு அதிகப்படியாக கொடுக்க முடியும். அப்படிக் கொடுத்தாலும் இப்பொழுது பட்ஜெட்டில் துண்டு விழக்கூடிய தொகை கூட வராது. ஆகவே இதையும் அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



4th March 1958] [Sri K. Ramachandran]

அடுத்தபடியாக சிறு சேமிப்பு திட்டத்தைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். இந்த திட்டம் ஒரு நல்ல திட்டம்தான். சிறு சேமிப்பு ரொம்பவும் அவசியம்தான். அதைப்பற்றி ஆட்சேபனை கிடையாது. ஆனால் இன்றைக்கு அதை வசூலிக்கும் முறைதான் ஆட்சேபிக்கக்கூடியதாக இருக்கிறது. சாதாரணமாக ராமனாதபுரத்தின் நிலைமை எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அங்கு எப்படி சிறு சேமிப்பு மூலமாக பணம் வசூலிக்கப்படுகிறது என்று போய்ப் பார்த்தால் நன்றாகத் தெரியவரும். சாதாரணமாக ஏ.சி.டி.ஓ. பணம் வேண்டும் என்று கேட்கிறார். பணம் கொடுக்காவிட்டால் கணக்குப் புஸ்தகத்தை எடு என்று சொல்லுகிறார். இப்படி சிறிய வியாபாரிகளுக்கு பணம் வசூலிப்பதில் பல தொல்லைகளை உண்டாக்குகிறார்கள். கணக்கை எடுத்து அதன் பேரில் கண்டபடி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள். அத்துடன் தாலூகா ஆபீசர்களும் சேர்ந்து கொள்ளுகிறார்கள். ஏன் அப்படி வசூலிக்க வேண்டும் என்று கேட்டால் எங்களுக்கு டார்ஜெட் இருக்கிறது, அதன்படி வசூலிக்க வேண்டியதாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லி ஐந்து ரூபாயாவது கொடு என்று கேட்கிறார்கள். அந்த நிலைமையில் அங்கேயெல்லாம் சிறு சேமிப்பு மூலமாக பணம் வசூல் செய்யப்படுகிறது. இப்படி வசூல் செய்வது தவறான முறை. மற்றும் அனாதைப் பிள்ளைகளுக்கு சர்ட்டிபிகேட் வேண்டும் என்று தாலூகா அதிகாரிகளைக் கேட்டால் அவர்கள் ஐந்து ரூபாய் கொடுத்தால் சர்ட்டிபிகேட் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். ஏழை அனாதை பிள்ளைகளுக்கு என்று கேட்கும்போது இப்படி வசூல் செய்யலாமா என்பதைக் கேட்கிறேன். அவர்களே கன்செஷன் வேண்டும் என்று கேட்கும்போது அவர்களிடமிருந்து வசூல் செய்யலாமா ? இதற்கு முன்பு யுத்தம் நடந்தபோது **War Fund** என்று இப்படித்தான் வசூல் செய்தார்கள். அதிகாரிகள் பயமுறுத்தி வசூல் செய்வது என்பது சரியல்ல. இப்படி நிர்ப்பந்தம் செய்து வசூல் செய்வது என்பது அவ்வளவு நல்ல காரியம் அல்ல என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக குளம் தூர்வை எடுக்கும் சம்பந்தமாக சில சொல்ல விரும்புகிறேன். இதைப்பற்றி ரிவினியூ மந்திரி அவர்களிடத்திலும் பல முறை சொல்லி இருக்கிறேன். இதைப்பற்றி விசாரணை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனால் 20 அல்லது 30 ஆயிரம் ஏக்கர் நிலம் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்தப் பிரச்னைகளை யெல்லாம் கவனித்து ஆவனவற்றைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri A. Y. S. PARISUTHA NADAR :** கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பித்த வரவு செலவு திட்டத்தை நான் மனப்பூர்வமாக ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வருஷ பட்ஜெட்டில் பள்ளிக்கூடங்களில் வாசித்து வரும் மாணவர்களுக்கு மத்தியான உணவு கொடுப்பதற்கு என்று 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது, ஐந்து லட்சம் ரூபாய். இந்த வருஷத்தில் விவசாயிகளுடைய மாணவர்களுக்கு அது கிடைக்கப்போவதில்லை. அப்படி இல்லாமல் அவர்களுக்கும் நிரந்தரமாகக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு தடவை கொடுத்த சலுகையை நிறுத்தாமல் நீடித்துக் கொடுக்கும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாக எல்லா பள்ளி மாணவர்களுக்கும் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக முனிசிபாலிட்டி பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களுக்கும் அது கிடைக்கும்படியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக விவசாய வருமானத்திற்கு போடப்போகும் வரி. இதைப் பற்றி விரிவாக கனம் ஸ்ரீநிவாச அய்யர் சொல்லி விட்டார். நாம் உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் காலத்தில் நில வருமானத்திற்கு வரி விதிப்பது என்பது சரியல்ல. அதனால் விவசாயிகளுக்கு உணவு உற்பத்தி செய்வதில் உற்சாகம் குறைந்து விடும். ஏற்கனவே அவர்களுடைய வருமானம் குறைந்து கொண்டே வருகிறது. அவர்கள் உற்சாகம் கொண்டு அதிகப்படியாக உற்பத்தி செய்ய முயற்சி

எடுத்துக்கொண்டு வரும்போது அவர்களுக்கு வரி போட்டால் அவர்களுடைய உற்சாகம் குறைந்து போகும். சாதாரணமாக ஒரு மா வெள்ளாமை செய்தால் அதிலிருந்து 10 கலம் வரும் என்றால் அதிகமாக 15 கலம் உற்பத்தி செய்ய வேண்டும் என்று முயற்சி எடுத்துக்கொள்ளும்போது விவசாயி அதிகப்படியாக செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதிகப்படியான லாபம் அடைய வேண்டும் என்று செலவு செய்யும்போது அவனுக்கு அதிகப்படியான வரி போட்டால் அவன் அதிகப்படியான உற்பத்தி செய்ய முன்வர மாட்டான். உண்மையிலேயே அவனுக்கு உற்பத்தி செய்வதற்கு இஷ்டம் இருக்காது என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே விவசாயிகளுக்கு வருமான வரி போடுவதாக இருந்தால் அதை தீவிரமாக ஆலோசனை செய்து அதன் பிறகு வரி போட முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தற்சமயம் இதை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமா என்பதையும் யோசித்துகொண்டுவரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாணவர்கள் நல்ல முறையிலேயும், ஒழுங்கான முறையிலேயும், பிற்காலத்தில் நல்ல பிரஜைகளாகவும் வளரவேண்டுமானால், அவர்கள் சாரணர் இயக்கத்தில் ஈடுபடவேண்டுமென்பதற்காக இந்த ஆண்டிலே 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய ஸ்தாபனத்
2-40 p.m. திற்கு இத்தொகை மிகவும் குறைந்தது என்று நான் நினைக்கிறேன். அனேக பள்ளிகளில் நான்கில் ஒரு பங்கு மாணவர்கள் கூட இந்த இயக்கத்தில் சேருவது இல்லை. மேலும் ஏராளமான மாணவர்கள் இவ்வியக்கத்தில் சேர்ந்து, பிற்காலத்தில் நல்ல ஒழுக்கமுள்ளவர்களாக வாழ்வதற்கேற்றபடி இன்னும் அதிகப்படியாக பணம் ஒதுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தஞ்சை ஜில்லா போர்டைப் பொறுத்த வரையில், அதன் கீழுள்ள பள்ளிகளில் சாரணர் சூபரின்டெண்டென்ட் ஒருவர் தனியாகப் போடப்பட்டு வேலை பார்த்து வருகிறார். அதே போல, தஞ்சை முனிசிபாலிடியிலுள்ள பள்ளிகளுக்கும் ஒரு சாரணர் சூபரின்டெண்டென்ட் போடவேண்டுமென்று தீர்மானித்து சர்க்கார் அனுமதி கோரியிருந்தும் இதுவரை எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. எந்த முனிசிபாலிடியாக இருந்தாலும் சரி, எந்த ஜில்லா போர்டாக இருந்தாலும் சரி, சாரணர் இயக்கத்தை விரிவுபடுத்தும்பொருட்டு புதிதாக சூபரின்டெண்டென்ட் போடுவதற்கோ, இன்னும் மற்ற விஷயங்களுக்கோ அனுமதி கோரினால், அந்தக் காரியத்தைப் பார்த்து உடனடியாகச் செய்துகொடுக்கும்படியாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பெரிய கிராமங்களாக இருந்தாலும் சரி, சிறிய கிராமங்களாக இருந்தாலும் சரி, நகரங்களாக இருந்தாலும் சரி, குடி தண்ணீர் வசதி இருக்கவேண்டியது அவசியம். நல்ல குடி தண்ணீர் இல்லாவிட்டால் அனேக நோய்கள் பரவுவதற்கு ஏதுவாகும். அதற்காக மத்திய அரசாங்கத்திலிருந்து பண உதவி கோரியாவது பெறலாம். அப்படி மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் கோருகிற பண உதவி கிடைக்கவில்லையென்றாலும், ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் கோருகிற குடி தண்ணீர்த் திட்டங்களை அவர்கள் சேர்த்துக்கொள்ளவில்லை யென்றாலும், நமது சென்னை அரசாங்கமே அதனுடைய நிதியிலிருந்து தொகை ஒதுக்கி, இந்த வகையில் என்னென்ன நன்மைகள் செய்யவேண்டுமோ அதைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

முக்கியமாக தஞ்சை ஜில்லாவிலே 63 ஆண்டுகளுக்கு முன்பாக குடி தண்ணீர்த்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதைப்பற்றி சென்ற தடவை சொல்லியிருக்கிறேன். இதுபற்றி பல மனுக்கள் எழுதியிருக்கிறேன். இரண்டொரு ஆண்டுகளுக்குள்ளே 10, 15 குழாய்கள் வெடித்துப்போய் தண்ணீர் சப்ளை செய்ய முடியாமல் பாதித்திருக்கிறது. பழைய திட்டங்களைப் புதுப்பிப்பதற்கான காரியங்களை உடனடியாகச் செய்து, அதற்கு வேண்டிய பணத்தைச் சென்னை அரசாங்கமே ஒதுக்கி, வேண்டிய காரியங்களைச் செய்யும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.





அடுத்தபடியாக, தமாஷா வரியைப்பற்றி எடுத்துக்கொண்டால், சினிமா பார்ப்பது சரியல்ல என்று சொல்கிறார்கள். அதற்கு ஏற்கெனவே 25 சதவிகிதம் வரி போட்டிருக்கிறார்கள். டாக்குமெண்டரி பில்ம்முக்காக வரி என்றும், ஷோ டாக்ஸ் என்றும், தமாஷா வரி என்றும் விதிப்பதினால், சினிமாக்காரர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் ; சினிமா பார்க்கிற ஏழை மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக நாலணா, ஐந்தணா டிக்கட் வாங்கிக்கொண்டுபோய் சினிமா பார்க்கக்கூடிய ஏழை மக்கள்தான் ரொம்பப் பேர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதையும் யோசனை செய்து, வரி விதிக்கும்போது பார்த்து விதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதுவிலக்கு திட்டத்தினால் பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு ஏதோ அதிகச் சலுகை செய்ததாக ஒன்றும் தெரியவில்லை. அவர்களுக்கு என்று கிராமங்களிலே நிலங்கள் கொடுப்பதாக திட்டம் இருந்தாலுங்கூட, அந்தக் கிராமங்களிலே இருக்கிறவர்கள் நிலத்தைச் சேரவொட்டாமல் தடுத்து அவர்களுக்கு எந்த விதமான நலனும் கிடைக்கவில்லை. விலைவாசிகள் உயர்ந்திருக்கும் இந்தக் காலத்திலே, அவர்கள் குடும்பம் நடத்தி ஜீவனம் செய்வதற்கு கஷ்டப்படுகிறார்கள். அத்தகையவர்கள் பதனீர் விற்கலாம் என்று திருநெல்வேலி, இராமனாதபுரம் ஜில்லாக்களிலே உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது சேலம் ஜில்லாவில்கூட உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். ஆனால், தஞ்சை ஜில்லாவிலே ஜனங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதிலும் கூட்டுறவு சங்கம் மூலமாகவெல்லம் காய்ச்சி விற்பதென்றால், மற்ற ஜில்லாக்களில் இருக்கும் ஒரு விகிதாச்சாரம் தஞ்சை ஜில்லாவில் கிடைப்பதில்லை. பதனீர் விற்றால்தான் ஜீவனம் இருக்கும் என்று தெரிய வருகிறது. அதனால், தஞ்சை ஜில்லாவிலே உள்ள மரமேறிப் பிழைப்பவர்களுக்கு அந்த லைசென்ஸ் கொடுத்து அவர்களுக்கு உதவி செய்யும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏற்கெனவே எக்ஸைஸ் இலாகாவின் கண்டிரோல் இருந்தபோது ஒரு சில மரங்களுக்கு மட்டும் ‘ மார்க் ’ போட்டுவிட்டு, சிலவற்றை இஷ்டப்படி விட்டுவிட்டு, பதனீரை துஷ்பிரயோகம் செய்கிறார்கள். அதற்காக ஒரு சின்ன வரி (ட்ரீ டாக்ஸ்) போட்டாவது கண்ட்ரோல் பண்ணும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். தென்னை மரத்திலிருந்து பதனீர் இறக்கி, அதிலிருந்து வெல்லம் காய்ச்சும்போது அது வெண்மையாக சாக்லேட் நிறத்திலே இருக்கும். அதை மேலும் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களில் தென்னை மரங்களிலிருந்து கிடைக்கும் பதனீரிலிருந்து செய்யும் வெல்லத்தில் வாசனைத் திரவியங்களைப் போட்டுக் கொடுக்கிறார்கள். அந்த வெல்லம் சாக்லேட் மாதிரி இருக்கிறது. அதை நல்ல முறையிலே சாக்லேட் போன்று செய்ய முடியுமா என்று ஆராய்ச்சி செய்து, கவனித்து, அதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்து ஆதரிக்கும்படியாகக் கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்.

**Srimathi KAMALAMBUJA AMMAL** : கனம் சபாநாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்த நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதலிலே, கால நிலையைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால், மற்ற ஆண்டுகளைவிட இந்த ஆண்டு ஏறக்குறைய இருந்தாலுங்கூட, பணத்தைச் சரிக்கட்டும் வகையிலே விளைச்சல் போதிய அளவு விளைந்திருக்கிறது என்று புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார். அந்தப் புள்ளி விவரத்திலிருந்து, ஏறக்குறைய 2 லட்சம் டன் உற்பத்தி தான் நாம் உணவுப் பெருக்கத்திலே குறைவுபட்டிருக்கிறோம் என்பதை நாம் தெளிவாக அறிகிறோம். புள்ளி விவரங்களின் மீது சில நண்பர்கள் நம்பிக்கையில்லை என்று தெரிவிக்கிறார்கள். இங்கே கொடுத்திருக்கும் புள்ளி விவரங்கள் கூட சரியானவை அல்ல என்று சொல்லுகிறார்கள். அவர்களும் தங்களுடைய புள்ளி விவரங்களை இதே நிலையிலேதான் எடுக்கக்கூடும் ஆதலால், அதற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கும் என்று அவர்கள் சொல்வது, வேண்டுமென்றே சொல்ல வேண்டுமென்ற காரணத்திற்காகச் சொல்லுகிறார்களோ என்னவோ ! அதுவும் புதிராகத்தான் இருக்கிறது.

உணவு நிலைமையைப்பற்றிக் குறிப்பிடும்போது, ஒரு நல்ல அறுவடையின் பயனாக விலைவாசிகள் இப்பொழுது ஸ்திரமாகி வருகின்றன என்றும், இருந்தபோதிலும் நாம் இன்னும் விழிப்புடன் இருந்து நிலைமையைக் கவனிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். நியாய விலைக் கடைகள் மூடப்படவேண்டும் என்று சொல்வதால், விலைவாசிகள் என்ன ஆனாலும் மூடப்பட்டுவிடும் என்று அர்த்தம் இல்லை. தேவையானால் நியாய விலைக் கடைகள் இருக்கும் என்ற அடிப்படைக் கொள்கையிலேதான். இந்த வாசகம்கூட அமைந்திருக்கிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

விவசாய உற்பத்தியிலே மிகவும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாக இருக்கும்போது, காலா காலத்திலே விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய உரம், சற்று குறைவாக இருப்பதினாலே, கிடைக்க முடியாமல் போகிறது என்று நினைக்கிறேன். ஆகவே, விவசாய உற்பத்திக்குத் தேவையான உரங்களை தயாரிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுக்கும் என்று நினைக்கிறேன்,

பூச்சி மருந்துகளுக்காக லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்ய உத்தேசித்திருந்தாலும், அவைகள் விவசாயிகளுக்குக் காலா காலத்தில் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகளை விவசாய அதிகாரிகள் கையாளவேண்டுமென்று கண்டிப்பான உத்திரவு போட வேண்டுமென்று மாத்திரம் நான் வற்புறுத்துகிறேன்.

அரசாங்கத்தாரால் கொடுக்கும் சலுகைகளையும், பண உதவிகளையும் பற்றி மக்கள் தெரிந்துகொள்வதற்கான ஏற்பாடுகளை செய்திருப்பதாக அமைச்சர் அவர்களுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார். அது மிகவும் அவசியம். விவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய வசதிகள் இன்ன இன்ன என்பதை அவர்கள் உணரவேண்டுமானால், ஜில்லாதோறும் பப்ளிஸிடி ஆபீசர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது விவசாயிகளுக்கு என்னென்ன வசதிகள் கொடுக்கப்படுகின்றன என்பதை அவர்கள் தெளிவாக விளக்கிச் சொல்வார்களானால் அவர்கள் தங்களுக்குத் தேவையான வசதிகளைப் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் இங்கு தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

சமுதாய அபிவிருத்தியின் முக்கிய குறிக்கோள் விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகள் என்ன என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும் என்பதினாலே சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களிலே இருக்கும் அதிகாரிகளும் சிப்பந்திகளும், அந்தந்தக் கிராமங்களிலே இருந்துவிடுவதினாலே அவர்களுக்கு 2–50 p.m. வேண்டிய வகையிலே பயன்பட முடியாமல் போகிறது. அபிவிருத்தி வட்டாரங்களில் இருக்கக்கூடிய அதிகாரிகள் அந்த வட்டாரத்தில் உள்ள விவசாய மக்களுடைய தேவை என்ன, அவற்றை எந்த வகையில் பூர்த்தி செய்யலாம் என்பதை அக்கறையோடு கவனிக்கவேண்டும். அப்படி கவனிக்க வேண்டும் என்பதற்குக் கண்டிப்பான உத்தரவும் இருக்க வேண்டும். குறிப்பாக ஒவ்வொரு நாளும் ஒரு கிராமத்திற்காவது சென்று ஆங்காங்குள்ள விவசாயிகளுடைய தேவை என்ன, பூச்சி மருந்து தேவையா, விதை தேவையா, உரம் தேவையா என்று கேட்டு அறிந்து அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்த வட்டாரத்திலுள்ள மக்களுக்கு எல்லாம் நன்மை கிடைக்கும்.

கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கிறது, தேங்கிக் கிடக்கிறது என்று பலர் வெறுமனே சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, அப்படிச் சொல்கிறவர்கள்கூட கைத்தறித் துணியைக் கட்டுவது இல்லை. ஒரு வேளை கதர் கட்டினால் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு முரணாக இருக்கலாம் என்று நினைக்கக்கூடும். கைத்தறித் துணியைக் கட்டுவதில் எந்தவிதமான முரண்பாடும் இருக்காது. கைத்தறித் துணி தேக்கமும் இருக்காது. மில் துணிகளுக்கு அவசியமும் இல்லை. அதனால் வெளிநாட்டிலிருந்து ஏராளமாக இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கிறது, விற்பனை வசதி இல்லை என்பதாக பல பல புகார்களைச் சொல்வதை விடுத்து இனிமேலாவது எல்லோரும் கைத்தறித் துணியையே





உபயோகப்படுத்த வேண்டும் என்கிற முடிவுக்கு வரவேண்டும். பெண்களும், குழந்தைகளும் கைத்தறித் துணியையே உடுத்திக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது அநேகமாக கைத்தறித் துணியைப்பற்றி பேசுபவர்களுடைய வீடுகளில் போய்ப் பார்த்தால் பட்டுத் துணியும் மில்துணியும் தான் இருக்கும்.

அடுத்தபடியாக ராமநாதபுரம் கலவரத்தில் சேதம் அடைந்த மூவாயிரம் வீடுகளுக்கு ஏறக்குறைய 17 லட்சம் ரூபாய் செலவிட்டு புனர் நிர்மாணம் செய்ய அரசாங்கம் உத்தேசித்திருப்பதாக அமைச்சர் உரையில் காணப்படுகிறது. மக்கள் பொறுப்பற்ற முறையில் நடந்து சேதத்தை விளைவித்துக்கொண்டால் அதற்கு அரசாங்கம் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறேன். மக்கள் தங்கள் பொறுப்பை உணரவேண்டும். அப்போதுதான் அரசாங்கமும் நல்லமுறையில் நடக்கும். அரசாங்கத்தில் இருக்கக்கூடிய அமைச்சர்கள் எட்டுபேர் மாத்திரம் அரசாங்கத்தை நடத்திவிட முடியாது. மக்கள் தங்கள் பொறுப்பை உணராத வரையில் இவர்களால் நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்துவது கஷ்டம். பொறுப்பற்ற முறையில் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் உண்டாக்கிக்கொண்டு அந்த தண்டம் முழுவதையும் சர்க்காரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது சரியாகாது.

அடுத்தபடியாக இப்போது சினிமா போன்றவைகளுக்கு வரி உயர்கிறது எனச் சொல்லப்படுகிறது. இதனால் ஏதோ ஒரு மாதத்திற்கு ஒரு முறை சினிமாவுக்குக் போகக்கூடியவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். பொழுது போக்கு வரி போடுவது போலவே சினிமாவுக்குக் கதை எழுதக்கூடியவர்களுக்கு இத்தனை ரூபாய் வந்தால் இத்தனை பணம் அரசாங்கத்திற்கு வரியாகக் கொடுத்து விடவேண்டும் என்று நிர்ணயித்திருந்தால் அரசாங்கத்திற்கு நல்ல வருமானம் வந்திருக்கும் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விவசாய உற்பத்தியைப் பெருக்கக்கூடிய நிலைமையில் இன்றையதினம் டீசல் ஆயிலுக்குப் போடும் வரி விவசாயிகளை பாதிக்காமல் இருப்பதற்கு விதிவிலக்கு அளிப்பது நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம். விவசாயிகள் எவ்வளவுதான் கஷ்டப்பட்டு வேலை செய்தாலும்கூட உழைக்கின்றவனுக்கு ஒன்றும் மிச்சம் ஆகாது என்று சொல்கிற அடிப்படையில் அவர்களுக்கு மிச்சப்படுவது ஒன்றுமே கிடையாது. ஆகவே இன்று ஐந்து ஏக்கரா, 6 ஏக்கரா வரையில் வைத்துக் கொண்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இந்த வரி மிகவும் சுமையாகத் தெரியும். ஆகவே விவசாயிகளுக்கு மாத்திரமாவது இதிலிருந்து விதிவிலக்கு அளிப்பது மிகவும் முக்கியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மூவாயிரம் ரூபாய்க்கு அதிகம் இருந்தால்தான் வரி விதிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. மூவாயிரம் ரூபாய்க்கு வருமானம் வரக்கூடிய விவசாயி இரண்டாயிரத்திற்கு மேல் செலவு செய்தால்தான் மூவாயிரம் வருமானம் வரக்கூடும். விவசாய வரி விதிப்பது சற்று யோசித்துச் செய்ய வேண்டிய காரியம். மொத்தத்திலுள்ள தொகைக்கு வருமான வரி நிர்ணயித்தால் கூட ஓரளவு நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வரி இடைக்காலத்திற்கு மாத்திரம் தான் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும்கூட இடைக் காலத்திலேயே இது விவசாயிகளுக்கு அதிக பாதகம் விளைவிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில் எல்லா இடங்களுக்கும் மின்சாரம் நன்கு விஸ்தரிக்கப்படுகிறது. குறிப்பாக கிராமப் பகுதியில் ஐந்தாறு வருடங்களுக்கு முன்பு ஒரே இருளாக மண்டிக் கிடந்த இடங்களில் எல்லாம் இன்று நகரங்களைப் போல மின்சார விளக்குகள் ஒரே பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கின்றன. அது மாத்திரமில்லாமல் தண்ணீர் இறைப்பு இயந்திரங்களில் கிராமப் பகுதிகளில் அதிகம் இருக்கின்றன. ஆகவே மின்சார அபிவிருத்தியைக் குறித்து யாரும் குறை கூறுவதற்கில்லை. அதற்கு இன்னும் அதிகப் பணம் ஒதுக்கினாலும் கூட எல்லா மக்களுக்கும் அதனால் நன்மை உண்டாகிறது என்ற காரணத்தினால் அதை வரவேற்க வேண்டும்.

[Srimathi Kamalambuja Ammal] [4th March 1958

சிறிய நீர்ப்பாசன திட்டங்களில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. பெரிய நீர்ப்பாசன திட்டங்களைவிட சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் அதிக கவனம் செலுத்தினால்தான் ராஜ்யம் பூராவும் பரவலாக நன்மை கிடைக்கும். விவசாய உற்பத்தியும் அதிகமாகும். அதிலும் குறிப்பாக சென்னை மாவட்டத்தில் பொன்னேரி தாலூகா ஜலதாரை வசதி எதுவும் இன்றி மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது. சிறிய நீர்ப்பாசன வசதி எதுவும் கிடையாது. மிகவும் பிற்போக்காக இருக்கக் கூடிய அந்தத் தாலூகாவில் சிறிய நீர்ப்பாசன திட்டங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும். கும்முடிப்பூண்டி, போன்ற இடங்கள்

விண்நின்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து
உள்நின்று உடற்றும் பசி

என்பது போல மழை இல்லாத காரணத்தினால் மக்கள் வாழமுடியாத நிலைமையில் இருக்கிறார்கள். நெல் பயிர் அங்கே அதிகமாகக் கிடையாது. தோட்டப்பயிரும் ஓரளவுதான். அங்கே சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் கவனம் செலுத்தினால் மழை காலங்களில் கிடைக்கும் சொற்பத் தண்ணீரையாவது சேமித்து வைத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். அங்கே குழாய்க்கிணறுகளில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே ஏறக்குறைய 200, 300 அடிகளில் தண்ணீர் கிடைக்கிறது. குழாய்க்கிணறுகள் அதிகம் ஏற்படுத்தினால் நன்மை மிகவும் உண்டு, மக்கள் நன்மை அடைவார்கள் என்று சொல்லிக் கொண்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் வரவு செலவுக் கணக்கை ஆதரிக்கிறேன்.

3 p.m. * SRI A. V. P. ASAITHAMBI : சட்டமன்ற தலைவர் அவர்களே, இவ்வாண்டு நிதி நிலை அறிக்கையை நமது நிதியமைச்சர் அவர்கள் படிக்கக் கேட்டோம். நாங்களும் அதைப் பன்முறை படித்துப் பார்த்தோம். அப்படிப் பார்த்ததிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரிவினைக் கொள்கையானது எவ்வளவு தூய்மையானது, எவ்வளவு நியாயமானது என்பதை வற்புறுத்துவதைப் போன்று, அதற்கு ஒரு ஆதாரமாகத்தான் இந்த நிதி நிலை அறிக்கை இருக்கிறது என்று நான் இங்கு கூற விரும்புகிறேன். கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சமர்ப்பித்தபோது அதன் மீது பேசிய என் மதிப்பிற்குரிய நண்பர் கருணாநிதி அவர்கள் அந்த நிதி நிலை அறிக்கையில் ஒரு நிச்சயமற்ற அவலநிலையை குறிக்கக்கூடிய அளவிற்கு பல வார்த்தைகளின் முடிவிலும் " லாம் " " லாம் " என்கிற எழுத்துக்களோடு முடிகிற வாசகங்களை எடுத்துக் காட்டினார்கள். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை எடுத்துக்கொண்டால் அந்த " லாம் " போய் இல்லை. சுத்தமாக இல்லை என்கிற அளவிற்கு பல இடத்திலும் வாசகங்கள் இருப்பதை நாம் பார்க்கிறோம். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும்போது எங்கள் கோரிக்கை தீவிரப்படுத்த வேண்டிய ஒன்று என்பதை வற்புறுத்தும் நிலையில்தான் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது. துண்டு விழுகிற தொகையை சரிக்கட்டுவதற்கு வேண்டி அமைச்சர் அவர்கள் வரி விதிக்கிறேன் என்று சொல்கிறார்களே, அந்தயிடத்தில் தான் எங்களுக்கும் ஆளும் கட்சியினருக்கும் இடையே வேற்றுமை இருக்கிறது. இந்த நிலப்பரப்பில் இருந்து எக்ஸைஸ் வரியாகவும், வருமான வரியாகவும், ரெயில்வே வரியாகவும் தபால் தந்தி இலாகா வரியாகவும் பல கோடிக் கணக்கான ரூபாய் வருடா வருடம் மத்திய அரசாங்கத்திற்குச் செல்கிறது. அந்தப் பணத்தில் இருந்துதான் மத்திய சர்க்கார் நமக்குத் தருகிறார்களே தவிர அவர்களாக நமக்கு இலவசமாக ஒரு நயா பைசா கூட கொடுப்பது கிடையாது. நாம் கொடுக்கிற காசைக் கொடுப்பதற்கு நாம் கேட்டும் அவர்கள் மறுக்கக்கூடிய அளவிற்கு இந்த பட்ஜெட்டிலே நிதிக் கமிஷன் சொன்னதையும் நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் ஒன்று நிச்சயமாகச் சொல்வேன். நிதியமைச்சர் அவர்கள் பல புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறார்களே தவிர இந்த சென்னை ராஜ்யத்தில் இருந்து வருஷம் ஒன்றுக்கு



4th March 1958] [Sri A. V. P. Asaithambi]

வரிகள் மூலமாக மத்திய சர்க்காருக்கு எவ்வளவு கோடி ரூபாய் போகிறது என்பதை தனியாக சொல்லி அதற்கு புள்ளி விவரம் போட்டு அவர்கள் காண்பிப்பார்கள் என்று சொன்னால் காங்கிரஸில் இருப்பவர்கள் கூட எங்கள் பிரிவினைக் கொள்கையை ஒப்புக் கொள்வார்கள் என்பது நிச்சயம். இதுபற்றி அரசாங்கத்திற்கு எழுதிக்கூட சொல்ல மறுக்கிறார்கள். அந்த அளவிற்கு நம் பணம் வடக்கே செல்கிறது. ஆனால் நாம் அப்படி அவர்களுக்கு பணம் கொடுக்கும்போது அதைத் தர அவர்கள் மறுக்கிறார்கள். ஆகவே, துண்டு விழும் தொகைக்கு வரிகள் போடப்படுகிறது. இந்த நிலைமை நீடிக்கும் என்று சொன்னால் நம் நாடு முன்னேற வழி எங்கேயிருக்கிறது என்று நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுதுள்ள நிலைமைப்படி எத்தனை வருடங்கள் ஆனாலும் நம் நாடு முன்னேற முடியாது, அதற்கு வழியும் கிடையாது. அடுத்தபடி, தொழில் அபிவிருத்தி போர்ட் என்று ஒன்றை ஏற்படுத்தி, மாவட்ட வாரியாக என்னென்ன பொருள்கள் கிடைக்கும், என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்கலாம் என்றெல்லாம் ஆராய்ந்து சர்க்காருக்கு சிபார்சுகள் செய்கிறார்கள். ஆனால் இந்த தொழில் அபிவிருத்தி போர்ட், சர்க்காரின் நிதி நிலைமை இவைகளை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டுதான் அதன் சிபார்சை கொடுக்கிறார்களே தவிர வேறொன்றுமில்லை. உதாரணமாக, ஒரு மாவட்டத்தில் 10 தொழில் நிலையங்கள் ஏற்படுத்தலாம் என்கிற வாய்ப்பு இருக்கும்போது அந்த 10 தொழிற் நிலையங்களையும் ஆரம்பியுங்கள் என்று அவர்கள் சொல்வதில்லை. ஏன் ? அதற்கு அவர்கள் சொல்லும் காரணம், நிதி நிலைமை சரியில்லை என்பதுதான். ஏன் நிதி நிலைமை சரியாகவில்லை என்றால் அதற்கு நாங்கள் சொல்லும் காரணந்தான் குறுக்கே நிற்கிறது. ராமநாதபுரம் மாவட்டம் பஞ்சப் பிரதேசம் என்று அனைவராலும் கருதப்படுகிற ஒரு மாவட்டமாகும். ஆனால் ராமநாதபுரம் மாவட்டம் இன்றிருக்கிற ஆட்சியின் காரணமாகத்தான் பஞ்சப் பிரதேசமாக இருக்கிறதே தவிர உண்மையில் அந்த மாவட்டம் ஒரு பஞ்சப் பிரதேசமல்ல. அங்கு, கோடிக்கணக்கான டன் ஜிப்ஸம் கிடைக்கிறது. அதை தொழில் அபிவிருத்தி போர்ட் பரிசீலனை செய்து அங்கு ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போகிறார்கள். நன்றி. மகிழ்ச்சி. அதேபோல், அங்கு கடல்பாசி நிறையக் கிடைக்கிறது, கடலில். அந்தக் கடல் பாசியைக் கொண்டு " அகர் அகர் " என்ற உணவுப் பொருளை தயாரிப்பார்களேயானால், அதனால் வருடம் ஒன்றுக்கு எழுபது லட்சம் மக்களுக்கு உணவு கொடுக்கமுடியும். அந்த கடல் பாசியை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். அது, ஆலிட் செய்ய உதவுமாதலால் அவை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். அப்படி செய்வதின் மூலம் நமக்கு ஸ்டர்லிங் கிடைக்கும். அதேபோல் ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து கிடைக்கிற சங்குகளை வங்காளத்திற்கு சுமார் 40,000 ரூபாய்க்கு ஏற்றுமதி செய்கிறோம். வங்காளத்தில் அதற்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தி அதைக் கொண்டு பல சாமான்கள் செய்து விற்கிறார்கள். சுமார் இரண்டேகால் கோடி ரூபாய்க்கு அவர்கள் சாமான்கள் செய்து விற்கிறார்கள். நான் சொல்வது என்னவென்றால், அப்படி அவைகளை ஏற்றுமதி செய்யாமல், அதற்கு என்று ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தி நம் ஆட்களை வைத்துக்கொண்டு சங்கால் என்னென்ன சாமான்கள் செய்ய முடியுமோ அவைகளை செய்து அந்த இரண்டேகால் கோடி ரூபாயை நாம் பெறலாமே. அதுபற்றி தொழில் அபிவிருத்தி போர்ட் சிபார்சு செய்யவில்லை. ஏன் ? நிதி நிலைமை சரியாக இல்லாததால் என்று சொல்கிறார்கள். நாம் இருவரும் சேர்ந்து இருக்கும் வரையில் நம் நிதி நிலைமை சரியாகப் போவதில்லை. " ஸர்க்கோ சாண்ட் " (Ziroonsand) அங்கு கிடைக்கிறது. சிர்கோனியம், கிரோனியம் அணுகுண்டு உற்பத்தி செய்ய, அணுவை உருக்க உபயோகப்படுத்துகிறார்கள். இது எத்தனை டிக்கிரி உஷ்ணத்தினாலும் இளகாது. ஒரு பவுண்டு மண்ணின் விலை ஏழரை லட்சம் டாலர். பின், கடல் ஆமைகள் ராமேஸ்வரம், கீழக்கரை, தொண்டி போன்ற இடங்களில் அதிகம் கிடைக்கிறது. வெளிநாடுகளில் கடல் ஆமை இறைச்சியின் விலை, ஒரு பவுண்டிற்கு 75 ரூபாயாகும். அதன் ஓடுகள், ஆமை ஓடுகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அதனால் கண்ணாடிப்ரேம், பேன்சி கூட்ஸ் (fancy goods) எல்லாம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் அப்படி அவைகளை உற்பத்தி செய்ய ஒரு தொழிற்சாலை

அமைக்க நம் நிதி நிலை சரியாக இல்லை. காரணம் நம் பணம் எல்லாம் வடக்கே போகிறது. அடுத்தபடியாக, நமது நிதியமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள், நமது அன்னியச் செலாவணிப் பற்றாக்குறைக்கு காரணம் உணவுப் பற்றாக்குறை என்கிறார்கள். அதுவும் தவறு. நேற்று எனது நண்பர் மதிப்பிற்குரிய எம். பி. சுப்ரமண்யம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், உணவு பிரச்னையைப்பற்றி. அதாவது அமைச்சர் அவர்களின் புள்ளி விவரங்கள் தவறு என்று சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்கள் மறுக்கவில்லை. உண்மைக்கு மாறானதாக இருந்தால் அதை அவர் மறுத்திருப்பார். அன்னிய செலாவணிப் பற்றாக்குறைக்கு காரணம், உணவுப் பற்றாக்குறை என்று அமைச்சர் சொல்லி இருப்பதும் தவறு. அன்னியச் செலாவணிப் பற்றாக்குறைக்கு காரணம் உணவுப் பற்றாக்குறையல்ல. **1952**-ல் இருந்த மத்திய சர்க்கார் வர்த்தக இலாகாவே தான் அதற்கு காரணம். வேறு யாரும் இல்லை. வர்த்தக இலாகாவின் மந்திரியாக இருந்த, நாம் மதிப்பு கொடுக்கிற, நாம் நன்றி தெரிவிக்கிற, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்தான் அதற்கு காரணமே தவிர வேறு யாரும் இல்லை. **1952**-ல் வர்த்தகத் துறையில் வெளி நாடுகளில் இருந்து இறக்குமதியை தாறுமாறாக திறந்து விட்டார்கள். யார் எதை வேண்டுமானாலும் இறக்கலாம் என்று ஆகிவிட்டது. அவசியம் இல்லாத சாமான்களைக்கூட இறக்குமதி செய்யலாம் என்று இறக்குமதியை திறந்துவிட்டார்கள். ஆனால் அப்பொழுது, **1952**-ல் இருந்த சூழ்நிலை என்ன ? சர்க்காரிடம் முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம், என்று திட்டங்கள் எல்லாம் முன் இருக்கும்போது வர்த்தக இலாகா அமைச்சர், ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு சாமான்கள் இறக்குமதி செய்யவேண்டுமென்பதை மறந்துவிட்டு தேவையில்லாத பொருள்களைக்கூட இறக்குமதி செய்துவிட்டதால் தான் அன்னிய செலாவணிப் பற்றாக்குறை ஏற்பட்டதே தவிர உணவுப் பற்றாக்குறையால் அல்ல. அதை நான் நிரூபிக்க முடியும். அமைச்சர் அவர்களால் முடியாது. (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் : என்னால் முடியாது.) உண்மையை எப்படி மறுக்க முடியும். வடக்கு தெற்கு என்று நாங்கள் பேசுவதை தவறாக நினைக்கக்கூடாது. இந்த ஏற்றுமதி இறக்குமதி பாலிஸி மத்திய சர்க்காரால் ஆறு மாதத்திற்கு ஒரு தடவை வெளியிடப்படுகிறது. என்னென்ன பொருள்கள் ஏற்றுமதி செய்யவேண்டும், எதெது இறக்குமதி செய்யவேண்டும் என்று "ரெட்புக்" என்று சொல்லப்படும் இறக்குமதி பாலிஸி புக்கில் வெளியிடப்படுகிறது. இதை மத்திய சர்க்கார் இந்த ராஜ்ய சர்க்காரோடு கலந்துதான் செய்கிறார்களா ? நான் திட்டமாகச் சொல்வேன், கிடையாது என்று. ஒரு நாட்டினுடைய இறக்குமதி ஏற்றுமதி கொள்கைகளைப் பற்றி குறிப்பிடும்பொழுது அந்தந்த ராஜ்ய சர்க்கார்களைக் கலந்து கொண்டு வெளியிட வேண்டும். அப்படி வெளியிட்டால் தான் பொருத்தமாக இருக்கும். அன்னிய செலாவணி குறைவாக இருக்கிறது என்பது மத்திய சர்க்காரைப்பற்றியதாக இருக்கலாம். இருந்தாலும்கூட நம்முடைய முன்
3-10 p.m. னேற்றத்தை இது எவ்வளவு தூரம் பாதிக்கிறது, நம்முடைய நிலைமை பாதிக்கப்படாத வகையில் நிதி நிலைமை இருக்கவேண்டும் என்று இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும். இன்றைக்கு நடைமுறை என்னவென்றால் அவர்கள் சொல்லுவதை தான் இவர்கள் கேட்க வேண்டுமே தவிர இவர்களுக்கு அங்கு ஒன்றும் சொல்ல முடியாது. இந்த நிலைமையில் தான் நாடு இருக்கிறது. ஆகவே தான் இந்த நாட்டுப்பணம் எல்லாம் வடக்கே போகக்கூடாது என்று நாங்கள் சொல்லுகிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை. உணவுப் பொருட்கள் சம்பந்தமாக நிதி அமைச்சர் அவர்கள் சொன்னது தவறு என்று எங்கள் கட்சி அங்கத்தினர் சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அரிசி விலை குறைந்து விட்டது, இனிமேல் நியாயவிலைக் கடைகள் அவசியமில்லை என்றும் அதை மூடிவிடப்போவதாகவும் கனம் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் இந்த மன்றத்தில் சொன்னார்கள். ஆனால் நிலைமை என்ன ? இன்றைக்கும் உணவுப் பொருள்களின் நிலை சீர்கேடான நிலையில் தான் இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் நிரூபிக்க முடியும். நம்முடைய ரயில்வே நிலையத்தில் அரசாங்கத்தால் பல ஹோட்டல்கள் நடத்தப்படுகின்றன. அவைகளில் திருச்சியிலும் ஈரோட்டிலும் நடத்தப்படுகிற ஹோட்டல்களில் டிசம்பர் **26**-ந் தேதியிலிருந்து அளவு சாப்பாடு **10**





அணாவுக்கு போட்டு வருகிறார்கள், என்று சொன்னால் இதற்கு என்ன பொருள் ? உணவு நிலைமை சரியாகிவிட்டது என்று சொல்லிவிட முடியுமா ? இந்த நிலைமையில் நியாயவிலைக் கடைகளை மூடுவது நியாயமா என்று கேட்கிறேன். இதை நியாயம் தான் என்று நாங்கள் ஒப்புக் கொள்ள முடியாது. இந்த அளவில் சர்க்கார் எந்த வகையிலும் எதையும் நடுநிலைமையாக நின்று யோசிக்காதபடி, நாங்கள் ஏதோ வேண்டுமென்று வடக்கு தெற்கு என்று பேசுவதாக நினைத்துக்கொண்டு அதற்கெல்லாம் ஏதோ பலவிதமான காரணங்களை சொல்லி பதிலளிக்கிறார்கள். உண்மையிலேயே இவர்களோடு ஒத்துழைக்க வேண்டுமென்றுதான் நாங்கள் நினைக்கிறோம். ஒத்துழைக்க நாங்கள் தயாராய் இருக்கிறோம். ஆனால் அதற்கான முறையில் இவர்கள் நடந்து கொள்வது இல்லை. சமீபத்தில் சிறு சேமிப்புத் திட்டத்தை எழுப்பினார்கள். இதை கொண்டு வருவதற்கு முன்பு எங்கள் கட்சித் தலைவர்களை கலந்து இதைப்பற்றி பேசினார்களா என்று பார்த்தால் அதையும் காணோம். நாங்கள் ஏதோ இவர்களுக்கு வெளியில் இடைஞ்சலாக இருக்கிறோம் என்று மாத்திரம் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. (மணியடிக்கப்பட்டது.) எனவே தான் இந்த நாட்டினுடைய முன்னேற்றம் எந்த மாதிரியாக நாம் நடந்து கொண்டால் ஆகும் என்பதையும் இந்த நாட்டில் சுபீட்சம் எந்த விதத்தில் சரியாக பரவும் என்பதையும் நாங்கள் பல முறை ஒருவர்க்கொருவர் ஒன்று சேர்ந்திருந்து ஆலோசித்து முடிவு செய்திருக்கிறோம். முதலில் இந்த நாட்டிலிருந்து ஒரு பைசாக்கூட வெளியே போகக்கூடாது. அதற்கு ஒரு தடுப்பு வேண்டும். அதாவது இந்த ராஜ்ய எல்லையில் ஒரு அணை கட்ட வேண்டும். அந்த தடுப்புதான் எங்களுடைய கோரிக்கையே தவிர வேறு மோசமான கோரிக்கை ஒன்றும் கிடையாது. ஆனால் ஏதோ வட நாட்டை பிரிக்கச் சொல்வது அபாயத்தை விளைவிக்கும் என்று சொல்லுகிறார்கள். ஏதோ வட நாட்டிலுள்ள தமிழர்கள் எல்லாம் இங்கே வரவேண்டியிருக்குமே என்று கவலைப்படுகிறார்கள். அவ்விதம் கவலைப்படவேண்டிய தேவையேயில்லை. இங்கிருக்கக் கூடிய வட நாட்டவர்களை அங்கே அனுப்பிவிட்டால் தமிழர்கள் வந்தால் அவர்களை இங்கே வைத்துக்கொள்ளலாம். இதனால் கவலைப்படவேண்டிய தேவையில்லை. இந்த நாட்டில் நமக்கு எல்லாச் செல்வங்களும் இருக்கின்றன. எல்லோருக்கும் நல்லமுறையில் வீடு, எல்லோருக்கும் உணவு, எல்லோருக்கும் உடை, இவ்விதமாக எல்லா வசதிகளையும் நிச்சயமாக செய்து கொடுக்க முடியும். அது எப்பொழுது என்று கேட்டால் இங்கிருந்து ஒரு பைசா கூட வடநாட்டிற்கு போகாதபடி தடுக்கப்படவேண்டும். அன்றைக்குத்தான் இவைகளைச் செய்ய முடியும். அந்த மாதிரியான நிலை கூடிய சீக்கிரம் வரவேண்டும். நிதி அமைச்சர் அவர்களுடைய பட்ஜெட் அறிவிப்பை பார்த்தால் திராவிட நாடு தனியாக பிரிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை தீவிரப்படுத்துங்கள் என்று சொல்வதாகத் தான் அமைந்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**SRI S. LAZAR** : A clarification, Sir. . . .

**MR. SPEAKER** : No, no. The hon. Member can speak when he has the oppertunity.

**SRI S. LAZAR** : Just an elucidation from the hon. Member who just now spoke, Sir.

**MR. SPEAKER** : How can you raise a point of information now ?

**SRI S. LAZAR** : It is always open to a Member to ask for a clarification, Sir. கனம் அங்கத்தினர் அவர்கள் பேசுகின்ற பொழுது ஒரு சில புள்ளி விவரங்களை ஆயிரக்கணக்கிலும் கோடிக்கணக்கிலும் கொடுத்தார்கள். இவைகளுக்கெல்லாம் ஆதாரம் இருக்கின்றதா ?

[Sri S. Lazar] [4th March 1958

இவைகளை எதிலிருந்து கொடுத்தார்கள் என்பதை தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அல்லது அவருடையச் சொந்த ஆராய்ச்சியின் பலனாகத் தான் இவைகளை தெரிவித்தார்களா ?

**Sri T. K. SUBBIAH :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு நிதி அறிக்கையை சமர்ப்பித்த நிதி அமைச்சர் அவர்களுக்கு எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். சபாநாயகர் அவர்களே, நாட்டு மக்களுக்குவேண்டி சர்க்காரால் திட்டம் போடப்பட்டு வரும்பொழுது மக்கள் அதனால் பாதிக்கப்படாத நிலைமையில் . . .

**Mr. SPEAKER :** சபையில் சப்தம் அதிகமாக இருக்கிறது. கனம் அங்கத்தினர் பேசுவது எனக்கு சரியாக கேட்கவில்லை. ஆகையால் மற்ற அங்கத்தினர்கள் கூடியவரையில் பேசாமல் இருந்தால் நல்லது. அப்படி பேசவேண்டுமென்றால் மெதுவாக பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri T. K. SUBBIAH :** இந்த நிலைமையில் எந்த சமூகத்தினரும் கஷ்டநஷ்டமடையாத வகையில் திட்டமிடப்பட்டு வகுத்த நிதி அறிக்கை இன்று நம் முன் வந்திருக்கிறது. நான் அதை பாராட்டுகிறேன். குறிப்பாக விவசாயத்துறையில் இந்த சர்க்கார் எவ்வளவு தூரம் ஆழ்ந்த அக்கரை காட்டியிருக்கிறது என்பதை பார்க்கும்பொழுது விவசாயத்திற்கு வேண்டி இந்த சர்க்கார் மிகவும் அக்கரை காட்டி வருவது தெள்ளத் தெரிய வருகிறது. குறிப்பாக புள்ளம்பாடி வாய்க்கால் கட்டி அதன் மூலமாக 1960-ம் ஆண்டிற்குள் 27 ஆயிரம் ஏக்கர்கள் சாகுபடி செய்ய முடியும் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறார்கள். நான் சொல்வது 1960-க்கு முன்பாகவே அதாவது ஒரு ஆண்டுக்கு முன்பாகவே அதில் அதிகமான முன்னேற்றத்தை காணமுடியும் என்பதையும் 1959-வது ஆண்டிலேயே இதிலிருந்து நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். (இச்சமயத்தில் டாக்டர் ஸ்ரீமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமை வகித்தார்கள்.) இதில் அதிகமான ஏரிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சில ஏரிகளில் வேலை பூர்த்தி அடைந்திருக்கிறது. இந்த ஆண்டு சரியாக பருவ மழை இருக்குமானால் 1959-வது ஆண்டிலேயே நிலத்தை சாகுபடி செய்ய முடியும் என்று நம்புகிறேன். இந்த நிலையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அடுத்தபடியாக விதைப் பண்ணைகளை அதிகமாக ஏற்படுத்த வேண்டும் என்றும் அவைகளை கோவில் நிலங்களை எடுத்து அங்கு அமைத்துக் கொள்ளவேண்டுமென்றும் பல தடவை சொல்லியிருக்கிறோம். ஆனால் இது 60—40 போன்ற சிக்கல்களினால் சில கோவில் நிலங்களை எடுத்துக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு உடனடியாக ஏதாவது அவசர சட்டங்கள் கொண்டு வந்து சீக்கிரமாக அதை நடைமுறைக்கு கொண்டு வந்தால் சீக்கிரமாகவே நாம் குறிப்பிட்ட விதைப் பண்ணைகளை ஏற்படுத்த முடியும். இதை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக நமது காடுகள் அபிவிருத்தி அடைய வேண்டியது மிக அவசியம். நண்பர்கள் பலர் முந்திரி காடுகளைப்பற்றி பேசினார்கள். முந்திரி வளர்ப்பதற்கு இப்போது கால நிலை சரியாக இருக்கிறது. குறிப்பாக உடையார்பாளையம் பகுதியில் காடுகள் நிறைந்த பிரதேசமாக இருந்தது இப்போது புல் வெளியாக கிடக்கிறது. அந்த பகுதியில் முந்திரியை வளர்த்தால் நல்ல முன்னேற்றம் அடைய முடியும். இதற்கு வேண்டி அரசாங்கம் ஒரு காரியத்தையும் செய்ய வேண்டும். அதாவது இந்த நிலங்களை நிலம் இல்லாத விவசாயிகளுக்கு 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு இந்த முந்திரியை வளர்க்கும்போது இடைக்காலத்தில் வரகு போன்றவைகளை பயிர் செய்து கொள்ளலாம் என்று ஒரு அறிவிப்பு கொடுப்பார்களானால் சர்க்காருக்கு விதை கொடுக்கவேண்டிய செலவைத் தவிர வேறு ஒன்றும் இருக்காது. இதனால் ஆயிரக்கணக்கில் முந்திரி காடுகளை சாகுபடி செய்ய முடியும் என்பதை சொல்ல ஆசைப்படுகிறேன்.

3-20 p.m. அடுத்தபடியாக, கைத்தறி முன்னேற்றத்திற்காக மிகவும் பாடுபடவேண்டியது அவசியம். சில நண்பர்கள் சொன்னார்கள், இந்தக் கைத்தறித் துணிகளை சர்க்கார் கொள்முதல் செய்து வெளிநாட்டுக்கு அனுப்பவேண்டும் என்று. நான் சொல்லுகிறேன், சர்க்கார் கொள்முதல் செய்யக்கூடாது



4th March 1958] [Sri T. K. Subbiah]

ஏனென்றால் சர்க்கார் கொள்முதல் செய்வதென்றால் தொழில் அனுபவம் இல்லாத அதிகாரிகள் பன்னாடை போன்ற துணிகளை அதிக விலை கொடுத்து வாங்கி வெளி நாடுகளுக்கு அனுப்ப நேரிடும். அதனால் கைத்தறியின் தரம் குன்றிவிடும். ஆகையால் கைத்தறி சொஸைடிகளுக்கு ஏற்றுமதி லைசென்ஸ் வழங்க ஏற்பாடு செய்தால் வெளி நாடுகளுக்கு அனுப்ப ஏதுவாகும்.

அடுத்தபடியாக, சுகாதாரத்தைப் பொறுத்தமட்டில் ஒரு சில வார்த்தைகள். குறிப்பாக இன்றைக்கு பிரைமரி ஹெல்த் ஸெண்டர்கள் கிராமங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஏற்படுத்தப்பட்ட கிராமங்களில் டாக்டர்கள் செல்வதற்கு வாகன வசதிக்காக ஜீப் கார் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதாக இருந்தது. எனக்குத் தெரிந்த மட்டில் ஜீப் வரமுடியாத கிராமத்தில் எந்த விதமான அபிவிருத்தியும் செய்ய முடிவதில்லை. அதுமட்டுமல்ல. பிரைமரி ஹெல்த் ஸெண்டர் கட்ட 40,000 ரூபாய் செலவு செய்யவேண்டியிருக்கிறது. அதில் 30,000 ரூபாய் கிராம மக்கள் நன்கொடையாகக் கொடுக்க இயலாது இருக்கிறார்கள். பிரைமரி ஹெல்த் ஸெண்டர்களுக்கு அதிகத் தொகை ஒதுக்கி, 40,000 ரூபாயையும் சர்க்காரே போட்டுக்கட்டிக் கொடுத்தால் நல்லது, அதில் நான்கில் மூன்று பாகத்தை சர்க்கார் போட்டு, மீதி நான்கில் ஒரு பாகத்தை கிராம மக்கள் கொடுக்க வேண்டுமென்று செய்தாலும் நல்லது.

அடுத்தபடியாக, தேசீய விஸ்தரிப்புப் பகுதியிலே, உயர்நிலைப் பள்ளி விஷயத்தில் ஒரே. பள்ளிக்குக் கட்டிடம் கட்ட பணம் கொடுக்கச் சட்டம் இருக்கிறது. பத்தாயிரம் ரூபாயில் பள்ளிக்கூடத்தைக் கட்டிவிட்டு, அடுத்த கிராமத்தில் பள்ளிக்கூடம் கட்டப் பணம் கொடுக்க வசதியில்லை. முன்னால், லோகல் டெவலப்மெண்ட் ஸ்கீம்படி பணம் கொடுக்கும் நிலைமை இருந்தபோது பல பகுதிகளில் பல உயர்நிலைப் பள்ளிகள் கட்ட ஏதுவாக இருந்தது. தேசீய விஸ்தரிப்புத் திட்டப் பகுதியில் ஒரு கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்திவிட்டால் பக்கத்திலுள்ள கிராமங்களுக்குப் பள்ளிக்கூடமில்லாமல் அந்த கிராமங்கள் முன்னேற முடியாமல் இருக்கிறது. அந்தப் பகுதிகளில் ஒரு பள்ளிக்கு 10,000 ரூபாய் தேசீய விஸ்தரிப்பு நிதியிலிருந்து கொடுத்து விட்டு, மற்றத் துறையிலிருந்து பாக்கிப்பணம் வழங்க ஏற்பாடு செய்தால் அந்தப் பகுதிகள் முன்னேற வழி ஏற்படும்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு ஒதுக்கும் பணம், காலனி அமைக்கும் முறையில், மார்ச் மாதத்திற்குள் காலனி கட்ட வேண்டிய நிலைமை இருக்கும்போது, ஜனவரி மாதத்தில் வேலை துவங்க நேரிடுகிறது. இரண்டு, மூன்று மாதத்தில் நிலத்தை ஆர்ஜிதம் செய்வதிலிருந்து, சர்வே செய்து, கட்டிடம் கட்டவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மூன்று மாதத்தில் கட்ட வேண்டியிருப்பதால் அஸ்திவாரம்கூட பலப்படாது கட்டவேண்டியிருக்கிறது. ஆகையால் ஹரிஜன இலாகாவினர் ஆண்டு முதலிலேயே செலவு செய்வதைப்பற்றித் திட்டமிட்டு, காலனி கட்ட ஏற்பாடு செய்தால் சௌகரியமாக இருக்கும்.

அடுத்தாற்போல், ஹரிஜனங்களுக்கு மாடுகள் வாங்க 250 ரூபாய் பணமும், 35 ரூபாய் ஏர், கலப்பை வாங்கவும் கொடுக்கப்படுகிறது. மொத்தமாக 285 ரூபாயை அவர்களுக்கே கொடுத்துவிட்டால் சௌகரியமாக இருக்கும். முப்பத்தைந்து ரூபாயை காண்டிராக்ட் மூலமாகக் கலப்பை வாங்கி அவர்களுக்குக் கொடுத்தால் அது உழாக் கலப்பையாகப் போய்விடக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகையால் அதைத் தொகையாகக் கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, இந்தச் சாலைகள் அமைப்பில் பல பகுதிகளில் புதிதாகப் பாலங்கள் கட்ட ஏற்பாடாகி வருகிறது. குறிப்பாக, திருமானூர், விளாங்குடி மத்தியிலுள்ள கொள்ளிடத்தில் பல பாலம் அமைக்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தும், பல்லாண்டு காலமாக முறையிடப்பட்டிருந்தும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சறுக்குப் பாலம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் நிதி ஒதுக்கப்படாத நிலை இருக்கிறது. அடுத்த ஆண்டில் அதை எடுத்து

அந்தப் பாலத்தை அதிக காலதாமதிக்காமல் உடனடியாகச் செய்து முடிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*SRI N. V. CHOCKALINGAM : தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையை ஆமோதித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் எல்லா விஷயங்களும் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றி அதிகமாக நான் சொல்ல விரும்பவில்லை.

தேவக்கோட்டை டிவிஷன், திருப்பத்தூர் தாலூகாவில் விவசாயம் அதிகம் இருக்கிறது. இன்றைக்கு அங்கு பல வாய்க்கால்கள், கண்மாய்கள் மராமத்து செய்வதில் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அவைகளை நல்ல முறையில் சீர்படுத்தினால், அங்குள்ள விவசாயிகள் மிகவும் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திருப்பத்தூர் தாலூகாவில் விவசாயம் முன்னேறவேண்டுமானால், பல இடங்களில் டாம் கட்டி அந்த முறையில் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு மக்களுக்கு உதவி அளிக்கவேண்டும். அங்கு சில காட்டாறுகள் இருக்கின்றன. நான்கு, மூன்று இடங்களில் சிறு அணைக்கட்டுகள் கட்டினால் விவசாயம் முன்னேற வழியேற்படும். அதனால் உணவு உற்பத்தியும் பெருகும். அந்த ஆறுகள் கிழக்கு நோக்கி ஓடுகின்றன. இப்போது அங்கு மக்கள் கஷ்டப்படவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சென்ற பட்ஜெட்டில் இதைப்பற்றி இந்தச் சபையில் சொன்னேன். இது வரையில் எந்த நன்மையும் செய்யவில்லை. இந்த வருஷம் விவசாயம் ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகஸ்ட் மாதத்தில் ஒரு மழை பெய்தது. பிறகு 1½ மாதத்திற்கு மழை இல்லை. நடவு நட்டிருந்ததால் 45, 40 நாட்கள் காய்ச்சல் இருந்து கண்டுமுதல் சரி ஆகவில்லை. அங்குள்ள மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். பின்னால் டிஸம்பர் மாதத்தில் ஒரு மழை பெய்தது. மழை காரணமாக இப்போது சில பகுதிகளில் நாற்று நட ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். காட்டாறுகள் இருப்பதால் திடீரென மழை பெய்யும் காலத்தில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. அந்த கண்மாய்களுக்குக் குறுக்கே அணைகள் போட்டால் விவசாயம் செய்வது சாத்தியமாகும். இதனால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் 3 போகம் சாகுபடி செய்ய முடியும். ஆகையால் சிறு அணைகள் கட்ட ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதனால் விவசாயிகளுக்கு மிக அனுகூலமாக இருக்கும், அவர்கள் சந்தோஷப்படுவார்கள், உணவு உற்பத்தியும் பெருகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தேவக்கோட்டை டிவிஷன், திருப்பத்தூர், சிவகங்கை, திருவடானை என்ற மூன்று தாலூகாக்களைக் கொண்டது. திருவாடானை தாலூகாவில் சேர்ந்தது தேவக்கோட்டை. தேவக்கோட்டையில் முன்சீப் கோர்ட், சப்-கோர்ட் இரண்டும் இருக்கிறது. சிவகங்கையில் முன்சீப் கோர்ட், சப்-கோர்ட் இரண்டும் இருக்கிறது. திருப்பத்தூரில் மற்ற தாலூக்காக்களை விட அதிக ஜனத்தொகை இருக்கிறது. அங்கு இவ்வளவு காலமாக முன்சீப் கோர்ட் இல்லையென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல முறைகள் சர்க்காரிடம் தெரியப்படுத்தியும், பிரிட்டிஷ் காலத்திலேயே பல முயற்சிகள் செய்தும்கூட அங்கு முன்சீப் கோர்ட்டுகள் வராத காரணம் தெரியவில்லை. இப்போது 50 மைல்களுக்கு அப்பாலுள்ள பல கிராமங்களிலிருந்து, தேவக்கோட்டை, சிவகங்கை முதலிய இடங்களுக்குச் சென்று கேஸ் நடத்தவேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ்காரர் காலத்தில் வேண்டுமென்றே ஏற்படுத்தாமலிருந்திருக்கலாம். ஆனால் அந்த சந்தர்ப்பத்திலும் கால தாமதப்படுத்துவது அவ்வளவு சரியல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக விருசிலையாறு என்று திருப்பத்தூருக்கருகில் இருக்கிறது. அதன் குறுக்கே பாலம் கட்டுவதாகத் திட்டமிடப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இந்த பட்ஜெட்டில் அதைக் காணவில்லை. அதற்கான





காரணம் தெரியவில்லை. அந்த ஆற்றில் வருஷத்தில் 4 மாதம் சுமார் விட்டு விட்டு 100 நாள் வரை போக்குவரத்து தடைபட்டுவிடும். அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டாமல் இருப்பது கஷ்டமாக இருக்கிறது.

THE HON. SRI P. KAKKAN : எந்தப் பாலம் ?

SRI N. V. CHOCKALINGAM : கஜேந்திர மோட்சம் பாலம். சிங்கம் 3-3
புணரி பிளாக்கில் லோன் கொடுக்கப்படுகிறது. கிணறுகள் வெட்டுவதற்காக p.m.
இந்த லோன்கள் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்களிடத்தில் பம்பு செட் வாங்குவதற்கு கையில் பணம் இல்லை. அந்த மாதிரி 100 கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. பம்பு செட்டுகளுக்காக 6 அல்லது 10 வருஷ தவணைகளில் கடன் கொடுத்தால்தான், அந்தக் கிணறுகளிலிருந்து ஏதாவது பலனை அடையமுடியும் என்று சொன்னோம். அதிகாரிகளிடத்திலும் கண்டு நேரில் சொன்னோம். இன்னும் அவர்களுக்குக் கடன்கள் கொடுக்கப்படவில்லை.

பிரான்மலைப் பகுதியில் விளைவேயில்லை. தண்ணீர் கிணறு வசதி கிடையாது. மழை பெய்யவில்லை. புயல், வெள்ளத்தின் காரணமாக ஆறுகள் கீழ் நோக்கி அறுத்துக்கொண்டு போய்விட்டன. குறுக்கு அணை கட்டினால்தான் தண்ணீர் பாயும். அங்கு வெள்ளாமையே இல்லை. நாம் செய்ய வேண்டிய வேலைகளில் எல்லாம் காலதாமதம் ஆகிறது. ஆகவே, பம்பு செட்டுகளை அடமானமாக வைத்துக்கொண்டு 6 வருஷ தவணைகளில் கடன் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் '' பிரைமரி ஹெல்த் சென்டர்கள் '' நடத்துகிறார்கள். ஒரு ஊரில் ஒரு டாக்டரை வைத்துக்கொண்டு, அவரின் கீழ் நாலைந்து சிப்பந்திகளையும் வைத்துக்கொண்டு, 20,000 ரூபாய் செலவில் ஒரு மோட்டார் வண்டி (van) வாங்கி, எல்லா கிராமங்களுக்கும் வாரத்திற்கு ஒரு முறை போகிறார்கள், உதாரணமாக, ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால், ஒரு சனிக்கிழமை அவ்வூருக்கு வந்தால், மறுபடியும் ஒரு வாரம் கழித்து அடுத்த சனிக்கிழமைதான் அங்கு திரும்பி வருகிறார்கள். இப்படி கிராமாந்திரப் பகுதிகளையெல்லாம் சுற்றி வருகிறார்கள். எதற்காக இந்த '' பிரைமரி சென்டர்கள் '' இருக்கின்றன என்று தெரியவில்லை. ஜனங்களுக்கு இது சுத்தமாகப் பிடிக்கவில்லை. இதற்காக ஆகும் செலவில், நான்கு அல்லது ஐந்து கிராமங்களுக்கு ஒரு ஆஸ்பத்திரி நிரந்தரமாக வைத்து நடத்தலாம். வாரத்திற்கு ஒரு முறை வந்தால், நோய்வாய்ப்பட்டிருக்கும் நோயாளிகளுக்கு 6 நாட்களுக்கு வேறு மருந்து ஒன்றும் இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். காய்ச்சல் இதற்குள் அதிகமானால், யாரைக் கேட்டு மாற்று மருந்து வாங்கிக்கொடுப்பது ? ஆகையால் அங்கே இருக்கக்கூடிய ஜனங்களுக்கு இந்த சென்டர்கள் பிடிக்கவில்லை. தேசீய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தமாதிரி சென்டர்களுக்கு அவசியமில்லை. அந்த டாக்டரைக்கூட நான் சந்தித்தேன். அவர்கூட வருத்தப்படுகிறார். '' எங்கே போனாலும் குறை சொல்லுகிறார்கள், என்னை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு வழி செய்யுங்கள் '' என்று அவர் சொல்லுகிறார். ஆகவே, இந்த விஷயத்தை சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லை, இந்த மாதிரி சென்டர்கள் இருக்கத்தான் வேண்டுமென்று நினைத்தால், இருந்துவிட்டுப் போகட்டும்.

திருப்பத்தூர் தாலூகா பிற்போக்கான பிரதேசம். அதாவது, கிழக்குப் பகுதி பூராவும் ஓரளவு சுபிட்சமாக இருக்கிறது. அங்கே நகரத்தார் குடிகள் இருக்கின்றனர். ஆனால், மேற்குப் பகுதியில் விவசாயத்தைத் தவிர வேறு தொழில் கிடையாது. நெல், கேப்பை ஆகிய இரண்டு தான்யங்களைத்தான் அங்கே பயிரிடுகிறார்கள். ஒரு வெள்ளாமைக்குக் கூட தண்ணீர் வசதி இல்லாத பகுதி. கிணறுகள் தோண்டுவதற்கும் வசதியில்லாத பகுதி. கரும்போ, வெற்றிலையோ, எந்த விதமான விவசாயமும் கிடையாது. இப்படி இருந்தால் அங்குள்ள மக்கள் எந்த விதமான நிலையில் இருப்பார்கள் என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். ஒரு நில அடமான பாங்கு ஏற்படுத்தி உரம், மாடுகள் வாங்குவதற்கு அவர்களுக்குக் கடன் கொடுக்க வசதி

[Sri N. V. Chockalingam] [4th March 1958

செய்ய வேண்டும். பட்ஜெட் உரையில் மேலும் ஐந்து நில அடமான பாங்குகளை ஏற்படுத்தப் போவதாகத் தெரிகிறது. திருப்பத்தூர் தாலூகாவுக்கு ஒரு நில அடமான பாங்கு மிகவும் அவசியம். கனம் மந்திரி அவர்கள் குறிப்பில்கூட எழுதிக் கொண்டால் நலமாக இருக்கும். அங்கே ஒரு பாங்கை அமைக்க வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

பின் தங்கிய வகுப்பினருக்கு இப்பொழுது பலவிதமான சலுகைகள் அளிக்கிறார்கள். பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த பல ஜனங்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஜாதியையும் எடுத்து, அதிலுள்ள ஜனங்களின் எண்ணிக்கை விகிதாசாரத்தை அனுசரித்து பங்கீடு பண்ணிக் கொடுத்தால் நன்றாக இருக்கும். இப்பொழுது இருக்கிற நிலையில் நான்கு அல்லது பத்து பேருக்கு சலுகை அளித்தால் ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, ஜனத்தொகை அடிப்படையில் சலுகை அளித்தால் நன்றாக இருக்கும்.

சிங்கம்புணரி பிளாக்கில் தேசீய விஸ்தரிப்புத் திட்டம் வந்து மூன்று வருஷம் ஆய்விட்டது. இரண்டு வருஷத்திலேயே திட்டம் வெற்றிகரமாக முடிந்துவிட்டது. சென்ற ஒரு வருஷமாக அதிகாரிகள் சும்மா இருக்கிறார்கள். சென்ற வருஷத்திலேயே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். அந்தப் பகுதியை சமுதாய நலத்திட்டத்தின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று சொன்னேன். இந்த வருஷத்திலாவது இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

Sri K. R. NALLASIVAM : மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட்டைக் கொண்டுவருவதற்கு முன்னாலேயே, சென்ற சட்டசபைக் கூட்டத்தில், கவர்னர் அவர்கள் பிரசங்கத்திலே, நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவதுபற்றி ஒரு முடிவு செய்யப்படும் என்பன போன்ற வார்த்தைகள் சொல்லப்பட்டன. அவ்வாறு நடக்கும் என்று பலர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் பெரும் ஏமாற்றமாகவே இப்பொழுது இந்த பட்ஜெட் உரை விளங்குகிறது. நிலச் சீர்திருத்தத்தை ஒத்திப்போட வேண்டும் என்ற வகையிலே, விவசாய வருமான வரி விதிப்பு கொண்டுவரப்பட்டிருக்கிறது. நிலப் பிரச்னையைப் பொறுத்த வரையில், ஒரே சமயத்தில் எல்லா விதமான முறைகளையும் ஒருமுகப்படுத்தி "Comprehensive reform" கொண்டுவந்தால்தான், விவசாயிகளுக்கும் சரி, நிலப் பிரபுக்களுக்கும் சரி, தொல்லை இல்லாமல் நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு உகந்ததாக இருக்கும். ஏதோ இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், குத்தகையாளர் பாதுகாப்புச் சட்டம் வந்தது. மறுபடியும் ஒரு ஆண்டுக்குப் பின்னர் நியாயவாரச் சட்டம் வந்தது. இப்பொழுது விவசாய வருமான வரி விதிக்கப்படுகிறது. நிலத்திற்கு உயர்ந்தபட்ச வரம்பு எப்பொழுது வரும் என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. நாட்டிலே இருக்கின்ற எல்லாக் கட்சிகளும் நிலச் சீர்திருத்தத்தை ஒத்துக்கொள்கிற நிலையிலே, இன்று நம் சர்க்காருக்கு அதைக் கொண்டுவர எது தடையாக இருக்கிறது ? காங்கிரஸ் ஸ்தாபனமும் நிலச் சீர்திருத்தத்தை ஒப்புக்கொள்கிறது. நிலச் சீர்திருத்தம் கொண்டுவருவதற்கு நாங்கள் யோசனை செய்துகொண்டிருக்கிறோம் என்று ஒவ்வொரு கூட்டத்திலேயும் சொல்வதைத் தவிர, உயர்ந்த பட்ச நில வரம்பு விதிப்பதற்கு எவ்வளவு காலமாகுமென்று திட்ட வட்டமாகச் சொல்லவில்லை. நிலச் சீர்திருத்தம் கொண்டுவராத நிலையில், நம் நாட்டில் விவசாயத் துறையில் குழப்பம்தான் நிலவும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். பின் எதுதான் தடையாக இருக்கிறது ? திட்டம் தீட்டுவதற்கு இவ்வளவு நாட்கள் தேவையில்லை. பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே, குமரப்பா கமிட்டி எப்படி இந்த சீர்திருத்தத்தை செய்ய வேண்டுமென்று தெளிவாக ஒரு ரிப்போர்ட்டை இன்றைய காங்கிரஸுக்குக் கொடுத்திருக்கிறது. நம் மாகாணத்தில் நியமிக்கப்பட்ட சுப்ரமணியம் கமிட்டியும் இதைப்பற்றி அபிப்பிராயம் சொல்லியிருக்கிறது. நம்மால் இதை வேகமாகச் செய்ய முடியவில்லை என்றால், பக்கத்திலே உள்ள ராஜ்யங்கள் என்னென்ன சீர்திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கின்றன என்று பார்க்கலாம். காஷ்மீரிலே நிலச் சீர்திருத்தம் அமலில்



4th March 1958] [Sri K. R. Nallasivam]

இருக்கிறது. கோவா ராஜ்யத்திலே இது சம்பந்தமான மசோதா வெளி வந்திருக்கிறது. இன்னும் சில ராஜ்யங்களிலே நிலச் சீர்திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். காங்கிரஸ் பதவியிலிருக்கக் கூடிய ராஜ்யங்களில் கொண்டுவந்திருக்கும் நிலச் சீர்திருத்தத்தையே முன்னோடியாக வைத்துக் கொள்ளலாம். நமது மாகாணத்திற்கு ஏற்றபடி அதை சீர்திருத்திக் கொள்வது பெரும் காரியம் அல்ல.

3-40 p.m.

ஆகவே விவசாயிகளுடைய முன்னேற்றத்திற்கு தக்க நியாயம் அளிக்க முன் வரவேண்டாமா ? அவர்களுக்கு அப்படிச் செய்ய முடியாதா ? ஆனால் நில சீர்திருத்தத்தை எதிர்த்து பேசக்கூடியவர்கள் இங்கே இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு பேசுவதற்கு துணிவு இல்லாமல் இருக்கலாம். அவர்கள் உண்மையை புரிந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையில் நிலசீர்திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு சர்க்கார் ஏன் தாமதிக்க வேண்டும் ? ஆனால் விவசாய வருமான வரி கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதனால் மேலும் மேலும் நிலச் சீர்திருத்தம் கொண்டுவருவதற்கு எவ்வளவு தொந்தரவுகள் ஏற்படுகின்றன என்பது நன்றாக தெரிய வரும்.

அடுத்தபடியாக சிறு சேமிப்பு திட்டத்தைப்பற்றி பேச வேண்டியதாக இருக்கிறது. அதைப்பற்றி பேசும்போது கனம் அமைச்சர் அவர்கள் அதில் எந்த விதமான நிர்ப்பந்தமும் செய்யவில்லை, நிர்ப்பந்தம் கிடையாது என்று குறிப்பிடுகிறார். அப்படி நிர்ப்பந்தம் இருக்கிறது என்று என்னால் குறிப்பாக சொல்ல முடியும். சில சர்க்கார் மேல் அதிகாரிகள் தங்களுக்கு கீழ் இருக்கும் அதிகாரிகளை நிர்ப்பந்திக்கும் அளவில் வசூல் செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு தாக்கீது போயிருக்கிறது என்பது எங்களுக்கு தெரிய வருகிறது. சிறு சேமிப்பு முறையில் சரியானபடி வசூல் செய்யாவிட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிராம அதிகாரிகளுக்கு மேல் அதிகாரிகள் அறிக்கைகள் விட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே இருக்கக்கூடிய மந்திரிகளுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்னொரு விஷயத்தையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தேர்தலில் ஏராளமாக வோட்டுப் பெற்று வெற்றி பெற்றுவிட்டோம், ஜனங்கள் தங்கள் பக்கத்தில்தான் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்வதில் அர்த்தமில்லை. உண்மையான ஆதாரவிருந்தால் கடன் சுலபமாக வசூலாகும். நாங்கள் இரண்டு அல்லது மூன்று அல்லது பத்து அல்லது பதினைந்து பேர்கள்தான் இருக்கிறோம். அதனால் ஜனங்களுக்கு எங்களிடத்தில் நம்பிக்கை இல்லை என்ற அர்த்தம் இல்லை. சிறு சேமிப்பு விஷயமாக ஜனங்களிடத்தில் அணுகும்போது அதன் உண்மையை அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். ஆனால் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள். காங்கிரஸ் முன்னால் இருக்கக்கூடிய திட்டத்தைப்பற்றி அவர்கள் ஜனங்களிடத்தில் போய் சொல்லி இருக்கிறீர்களா ? எதற்காக பணம் வேண்டும் என்றும் எந்த திட்டங்களை அமைத்திருக்கிறோம் என்றும் நீங்கள் மக்களிடத்தில் சென்று பேசியிருக்கிறீர்களா ? அதற்கு வேண்டிய என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள் ? எந்த ஊரில் கூட்டம் போட்டு இதைப்பற்றி சொல்லியிருக்கிறீர்கள் ? ரூபாய் 100 கொடுக்க வேண்டும் இல்லாவிட்டால் புறம்போக்கு நிலம் இருக்கிறது, வாய்தா இருக்கிறது இது போன்ற பயமுறுத்தல்கள் இருக்கின்றன. இதைப்பற்றி பேசுவதற்கு நான் வரவில்லை. காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சட்டசபை அங்கத்தினர்கள் ஊர் ஊராகச் சென்று ஜனங்களிடத்தில் இந்த வரவு செலவு திட்டத்தைப்பற்றியும் அதில் போடப்பட்டுள்ள திட்டங்களைப்பற்றியும் எடுத்துச் சொல்லி அதற்கு பணம் வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்களா என்று கேட்கிறேன். அப்படிச் சொல்லி ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படும்படி செய்து அதன் பிறகு வசூல் செய்திருக்க வேண்டும். அதன் பிறகுதான் ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படும். என்னையே வைத்துக் கொண்டு சில அதிகாரிகள் சொல்லுகிறார்கள் : "பணம் இல்லை என்று சொல்லிவிட்டால் அவரிடம் ரைஸ் மில் இல்லையா, மின்சாரத்தை வெட்டி விடுவேன் என்று ஏன் சொல்லவில்லை, இரண்டு அல்லது மூன்று அரவை அரைத்தார் என்று சொல்லி ஏன் கேஸ் போடக்கூடாது" என்று சொல்லுகிறார். இந்த விதத்தில் கட்டாயப் படுத்தி பணத்தை வாங்குகிறார்கள். கேஸ் போடலாமே என்றுகூட சொல்லி பணத்தை வசூல்

[Sri K. R. Nallasivam] [4th March 1958

செய்கிறார்கள். இப்படி உத்தரவு போட்டிருப்பது எழுத்து மூலமாக இல்லை, வாய்மொழி மூலமாகத்தான் இருக்கிறது. பத்துக் கோடி ரூபாய் வசூல் செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். சாதாரணமான முறையில் ஜனங்களிடத்தில் உற்சாகத்தை மூட்டி வசூல் செய்தால் இந்தப் பணத்தை அவர்கள் கொடுத்து விடுவார்கள். அவர்களுக்கு நியாயமான காரியங்களைச் செய்யப் போகிறோம் என்று சொன்னால் அவர்கள் முன் வந்து கொடுப்பார்கள். ஆனால் அப்படி இப்பொழுது நடக்காமல் கட்டாயப் படுத்தி வசூலிக்கிறார்கள். அது சரியல்ல.

மற்றும் புது புது வரிகளைப் போடப் போவதாக சொல்லுகிறார்கள். டீசல் ஆயிலுக்கு வரி போடப்போகிறார்கள். அதனால் யார் பாதிக்கப் படுகிறார்கள் என்பதை பார்க்க வேண்டும். பஸ்ஸுக்குப் போட்டால் அதை பொது மக்களிடத்திலிருந்துதான் வசூலிக்கிறார்கள். அதைப் போலவே டீசல் ஆயிலுக்குப் போட்டால் அதனால் விவசாயிகள்தான் பாதிக்கப் படுகிறார்கள். அவர்கள்தான் விவசாயத்திற்கு இஞ்சின்களை உபயோகித்து வருகிறார்கள். அதனால் இந்த புது வரியினால் அவர்கள்தான் பாதிக்கப் படுவார்கள். அதைப் போலவே லாரிகாரர்கள்தான் டீசல் ஆயிலை உபயோகிக்கிறார்கள். லாரிகள்தான் சாமான்களை அங்கும் இங்கும் கொண்டு போய்க் கொடுக்கின்றன. அவைகளுக்கு வரி போட்டால் ஏழைகள்தான் பாதிக்கப்படுவார்கள். அதனால் இந்த புது வரியினால் விவசாயி உற்பத்தி பாதிக்கும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு இது முட்டுக்கட்டையாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். எந்த அடிப்படையில் பார்த்தாலும் விவசாயிகள்தான் பாதிக்கப்படுகிறார்கள். மின்சாரத்திற்கு 25 சத விகித 'கட்' ஏற்படுத்தியிருக்கிறார்கள், ஆனால் சினிமாக்களுக்கு மூன்று அல்லது நான்கு தடவைகள் படம் விடலாம் என்றும் சொல்லுகிறார்கள்.

**The Hon. Sri V. RAMIAH:** விவசாயத்திற்கு மின்சார "கட்" கிடையாது.

**Sri K. R. NALLASIVAM:** பம்பு செட்டுகள் இருக்கின்றன. அவைகளுக்கு டீசல் ஆயில்தான் உபயோகப்படுத்துகிறார்கள். அதுதான் விவசாயத்திற்கு உபயோகப்படுகிறது. அதனாலும் விவசாயம் பாதிக்கப் படும் இந்த புது வரியினால். அவர்களுடைய வருமானமும் பாதிக்கப் படலாம்.

கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். மத்திய அரசாங்க நிதி அமைச்சர் அவர்களைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஆனால் இப்பொழுது நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் இங்கு இல்லை. கனம் டி.டி.கே. அவர்களைப்பற்றி நமது நிதி அமைச்சர் அவர்கள் தங்களுடைய பட்ஜெட் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அவரைப்பற்றி ஏன் குறிப்பிட்டிருக்கிறார் என்பது எனக்கு புரியவில்லை. தெற்கேயிருந்து மத்திய அரசாங்கத்திற்குப் போன இரண்டு பேர்களும் நல்ல பெயர் எடுத்துக்கொண்டு வரவில்லை. கெட்ட பெயரைத்தான் சம்பாதித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அதைக் கேட்டால் தமிழ் நாட்டிற்கே பெரிய வெட்கக் கேடாக இருக்கிறது. பட்ஜெட் பிரசங்கத்தில் அவரைப்பற்றி சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது? அவரைப்பற்றி சொல்லப்படுவதானது அவருக்கு வக்காலத்து வாங்கி பேசுவதாகத்தான் இருக்கிறது. உண்மையில் அதைப்பற்றி வருத்தப்பட வேண்டிய விஷயம். இப்படிப்பட்டவர்களைப்பற்றி இங்கே பேசுவதாக இருந்தால் அது எங்கே கொண்டுபோய் விடும் என்பதை யோசிக்க வேண்டும். எந்த அடிப்படையில் அவரைப்பற்றி இங்கு குறிப்பிட வேண்டும் என்பது தெரியவில்லை. இங்கிருந்து அங்கு போகிறவர்கள் நல்ல முறையில் பெயர் எடுத்து வரவேண்டும். இன்றைக்கு வந்திருக்கிற டி.டி.கே. போன்றவர்களைப்பற்றி நாம் பாராட்டிப்பேசுவது நியாயம் ஆகாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நேரம் இல்லாததால் இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.



4th March 1958]

* **Sri T. SAMPATH:** Madam, I support the Budget which has been presented by the Hon. Minister for Finance and in doing so, I desire to express my view regarding some matters which have been referred to in the Budget. Last year the Budget showed a deficit of Rs. 4 crores and odd and some of the hon. Members belonging to the Opposition commented about the deficit nature of the Budget. What is the position to-day? Our financial position has improved. Not only we have been able to bridge the gap but we have wiped out the big deficit also. Even this small deficit of Rs. one crore and odd in this Budget is likely to be made good and covered up and it is going to be a surplus Budget to the tune of Rs. 15 lakhs. For this, we have to congratulate our Hon. Minister for Finance for his sagacity and ability in presenting such a nice Budget. 3-46 p.m.

Madam, although there was a heavy deficit to the tune of Rs. 4 crores last year, there were no fresh taxation measures. But on the other hand, this year we have got indication for fresh taxation measures. This has depressed some of us to some extent. As I said, the deficit is not too large. It is only Rs. one crore and odd and the Hon. Minister for Finance has also indicated that it is likely to turn out to be a surplus one. Under the circumstances, one aspect has to be considered. Is it necessary to cover up this small deficit anticipated this year by way of additional taxation? Further, it has been indicated in the Budget speech—I refer to page 18—where the Hon. Minister for Finance anticipates larger receipts of revenue under Land Revenue, Betterment Tax, Motor Vehicles Tax, etc. Further in paragraph 24 of the Budget speech, he has referred to the interest question also. The Finance Commission has made a favourable recommendation in respect of this matter and if that is to be accepted by the Central Government, we will be getting another Rs. 60 lakhs. While such being the position, the Government have to carefully consider whether there is any need for fresh taxation measures.

I want to say a few words about the Agricultural Income-tax. The landholders have already been affected very badly. They have been hardly hit.

The Hon. Finance Minister has referred to this measure and said that this may no doubt become inoperative when ceiling on landholding is enforced. So this envisages cut and ceiling is going to be fixed. That being so, whether there is need for this taxation measure now is a question which has got to be carefully considered. The landholders are now paying very heavy kists and also very heavy surcharge. It will amount to a double taxation. In addition to these a new tax is imposed which landholders cannot bear. They have got to pay kist and at the same time agricultural income-tax. This tax was formerly thought of by the Government. In the Subramaniam Committee report this was very carefully considered and there it has been mentioned that the system of revising land revenue assessments by means of agricultural income is not a practical proposition. In that report certain administrative difficulties have also been referred to. In 3-50 p.m.

[Sri T. Sampath] [4th March 1958

the circumstances, the question of imposing taxes on agricultural income must be carefully considered. This will, according to me, affect the small landholders. At present a surcharge is levied on land assessments. It has been specified that if agricultural income-tax is introduced, Act 19 of 1954 will be cancelled. Granting that it will have to be cancelled, now under what must follow? Some of the small pattadars are not paying surcharges. But in paragraph 29, it has been stated that other sources of income will be taken into consideration in reckoning the total income. This according to me will certainly affect the small mirasdars. That is, those pattadars who are not paying surcharge now will be able to pay taxes if their other sources of income would be reckoned for the purpose of this taxation. 'Is that justified?' I ask. With regard to the exemption limit, it is proposed that Rs. 3,000 would be the limit. If we take into account the exemption limit in regard to other sections of income, like income-tax, sales tax, etc., it will be seen that the exemption limit as fixed is a higher level. Therefore, it is just and proper that at the time the Bill is contemplated, this exemption limit should be raised at least to Rs. 5,000.

I will now pass to the seasonal conditions which has been referred to by the Hon. Finance Minister. He has stated that the seasonal conditions were very fair throughout the State. On the other hand I may say that in my district, Tanjore district, we had very excessive rainfall and because of that heavy rainfall there was what we call in Tamil, "நீர் சாவி" which affected the crops. A bumper yield was expected, but at the time of actual harvest, the yield turned out to be far below the estimate.

Next, reference has been made to the stability of prices. Preceding me, a number of hon. Members who spoke referred to the upward trend of prices. Of course everybody complains about upward trend and I am of the view that this question has to be carefully considered. Government should investigate the causes for this. The cost of cultivation has gone up, for instance, plough bulls, agricultural implements, fertilisers have all become more costly. If the prices of these are reduced, I am sure, the prices of foodstuffs will naturally come down. On a former occasion, I had occasion to refer to fixation of foodgrain prices. I am referring it again both in the interest of the consumer and producer. I suggest that if ceiling on floor prices for foodgrains is fixed, it will be to the benefit of the consumer and protect the producer; prices should not go below a certain level. If it goes below it is the duty of the Government to protect the interests of the producer.

Then, with reference to food production, I wish to emphasise what the hon. Member Sri Vedaratnam Pillai also referred to, namely, the possibility of reclamation of 12,000 acres of land somewhere near Vadavoor village in Tanjore district. I suggest that Government should investigate this and if these lands are brought for cultivation the food problem could be solved to a certain extent.



4th March 1958] [Sri T. Sampath]

Again, in Tanjore there are about 14 lakhs acres of wet lands and out of them most lands are single-crop lands. If proposals are made to convert these single-crop lands into double-crop lands, it will certainly help to a large measure in increasing food production. Government should also render help by way of loans to these land owners to convert them into double crop lands. All this will really solve the food problem.

Next, I want to emphasise that there must be co-ordination between the landholder and the tiller. In fact I appeal to the landholders that they must adjust themselves to the changed environments and changed conditions. At the same time, I appeal to the tillers also that they should be considerate in their demands. Now that security of tenure has been assured and fair rent also fixed, they should all concentrate on increasing the production. They should adopt new methods of agriculture and take up to intensive methods of cultivation. I appeal to them to cultivate more intensively.

I am glad that Government are proposing to devote more attention to small irrigation schemes. I emphasised about this scheme on a former occasion. In this connection I wish to say that in respect of minor irrigation in Community Development and National Extension Service areas, Government must contribute by way of grant 50 per cent for silt clearance of channels. This was done when Community Development and National Extension Service schemes were introduced in Tanjore district, in respect of silt clearance of channels and deepening of tanks. I suggest that this may be re-introduced in our district.

Next with reference to industries, Sir, I am glad that the Neyveli Project is going to come into effect. May I make a request to the Government that there should be more intensive survey of the mineral resources of our State so that Government may have a full picture of the State's potentialities. We must be grateful to the Government for the progress we have made in Education. In this connection I have got to refer to one matter. At the time when White Paper on Education was discussed, we accepted certain recommendations contained therein and those recommendations and proposals are to be implemented. In this connection I have to make one suggestion and that is in regard to the strength proposed in a class in elementary school. A doubt is felt whether an elementary school teacher could handle 40 boys in a class. Now the strength is 20. There is a proposal increasing to 40 boys. I am afraid that 40 would be a big number for a teacher to handle. I have to state that this may also affect the elementary school teachers. In this way if the strength of boys in each class is increased, correspondingly, it will affect the teachers. Consequent to that there will be retrenchment, and it will lead to unemployment. If that happens, one lakh and odd teachers would be thrown into a miserable plight. I am therefore requesting the Government to consider this aspect of the question very carefully.

[Sri T. Sampath] [4th March 1958

In other respects, the Budget is very fairly prepared. I congratulate the Hon. Finance Minister and other officers of the Government on their work. With these words, I conclude my speech; thank you, Sir.

4 p.m. * SRI M. WILLIAM : Mr. Speaker, Sir, the Budget that is placed before this House is a well-balanced one and the masterly way in which the deficit is got over and the surplus is found, redounds to the credit of the Hon. Minister for Finance. Of course, several objections have been raised with regard to new taxation proposals. All of us know that the tax on sugar, cloth and tobacco has been abolished and I do not think there can be any objection with regard to the imposition of new taxes especially the tax on diesel oil, agricultural income-tax with an exemption limit of Rs. 3,000 and the tax on entertainment. Of course, with regard to the tax on entertainment, it is not the theatre-going people who are going to pay it. The Government must take steps to regulate the realization of this tax from the theatre-owners and film producers. It may so happen that it would work as a hardship to the theatre-owners but I am sure steps may be taken to regulate the rate of tax that is to be paid by the theatre-owners in such a way that it can be controlled and it may not fall a heavy burden on the theatre-going people.

Sir, I want to say one word about the entertainment tax on horse racing. The Government have already taken steps to ban crossword puzzles and lotteries. They should also take steps to abolish horse racing because horse racing is worse than gambling. The entertainment tax obtained from horse racing should not go to the Government treasury. We know the huge fraud that is being practised on the innocent public.

Coming to the broad features in the Budget, of course, all of us know that not only the Congress Government but all the parties are wedded to the policy of establishing a Socialistic pattern of society. If we want to establish such a society, we have to take measures that will lead to that objective. Looking at that angle, we have to consider the new taxation proposals. No progress can be made without raising the necessary financial resources. One of the most important features in the Budget is the prominent part that is given to Agriculture. For agricultural development, several schemes have been implemented. Of course, most of the major irrigation works have already been implemented and some of them are under half-way.

With regard to minor irrigation works, the Government have also allotted Rs. 70 lakhs. That is not a big sum. So far as minor irrigation work is concerned, my opinion is that a larger amount, at least one crore of rupees should be allotted because in places where there are no facilities for channels, people there have to depend on the tanks and unless the tanks are kept in a good condition, there is likelihood of the failure of crops. Every year de-silting of tanks has to be done and a huge amount has to be set apart for improving the minor irrigation works.



4th March 1958] [Sri M. William]

We also find in the Budget proposals for starting 300 large-sized credit societies and 200 small-sized credit societies and five Land Mortgage Banks. These are all made for the benefit of agriculturists. So, in several places we find that sufficient steps have been taken for improving agriculture and also for promoting the prosperity of the people. So, it may not be very hard for the peasant population to pay something by way of tax to the Government.

Then with regard to education, progressive measures have been adopted. Thousands of schools are to be started. In the White Paper on Education it is stated that the teachers to be appointed for higher secondary schools should have the minimum qualification of First Class M.A. or M.Sc. or Honours. For that, of course, universities also must be requested to increase the number of seats for the M.A., M.Sc. and Honours courses. Otherwise, there may not be the required number of candidates to fill up the posts when the occasion arises. In this connection, I have to say a word about the Kanyakumari district. As you know, that is a compulsory area as far as education is concerned, and the literacy there is higher than in any district. But there is discontent in the service personnel especially among teachers working in primary, middle and high schools. They feel that injustice is being done to them because of the disparity in the scales of pay existing in the other parts of the Madras State. I am sure, the Hon. Minister for Finance who is also in charge of Education will take early steps to redress the grievances of teachers in respect of their long-felt needs.

With regard to irrigation works in the Kanyakumari district, I have to say a few words. The Neyyar Project will give relief to only one-third of the Vilvancode taluk. Vilvancode taluk is the worst affected area. There are about 900 tanks and all these tanks are only rainfed ones. There is no channel though there is a river passing through the middle of the taluk. An important scheme called 'Chittar Pattanamkal Scheme' has already been investigated and the erstwhile Travancore-Cochin State had recommended that that scheme should be included in the Draft Second Five-Year Plan. But for some reasons unknown to us—probably because of the anticipated merger—that scheme was finally dropped. That is a completed scheme and if this scheme is implemented, 40,000 acres will be brought under cultivation and about two-thirds of the people in that taluk will be benefited. People will get water not only for drinking purposes but also for cultivation purposes. In the taluk ordinarily two crops are raised every year. Just at the time of flowering, for want of two or three waterings, the crops wither away and produce no yield. Every year people invest money on agriculture but there is no return for that and thus the people became impoverished year by year. That is a matter which the Hon. Minister for Finance, I am sure, will take into serious consideration.

[Sri M. William] [4th March 1958

With regard to nationalization of transport, I have to say one or two words. Madras buses are running only on the main line in the Kerala area up to Trivandrum. But the Kerala buses are running not only on the main line but also on the branch lines in the Kanyakumari district which enables the Kerala Government to earn more income. If Marthandam where six routes branch off to different places, is made a base for shuttle service, I am sure, that will bring in a large revenue to the Government. The Kerala buses which are plying in those routes should not be allowed to ply, as that will affect the revenue of this State. That is a matter which, I think, the Hon. Minister for Transport will take into account and try to nationalize all the routes. Some of the buses are in a miserable condition. About 20 buses which were handed over to our Government are in a bad condition and they are nil price buses. But still they are allowed to run with the result that there are occasional break-downs and the travelling public are put to hardship. That affects the efficiency of the administration. I hope the Hon. Minister for Transport will take this aspect of the matter into consideration.

Then, with regard to the integration of service, I want to say one word. The merger was effected in November 1956 and nearly two years have elapsed and yet the intregration of service is not completed. There are about half a dozen officers including magistrates, sub-magistrates and munsifs whose scales of pay are not fixed. That means there is discontent among them. That affects the working of the offices. So I appeal to the Government to see that the integration of service is completed and injustice redressed at an early date. With these words, I finish my speech.

4-10 p.m. SRI S. RAMASAMI THEVAR : கனம் தலைவர் அவர்களே, சென்ற இரண்டு தினங்களாக 1958-59-ம் ஆண்டு வரவு செலவு அறிக்கையைப்பற்றி விவாதிக்கும்போது இலங்கையைப்பற்றி சில பேச்சுகள் நடந்தது. இலங்கையைப்பற்றி நாம் அலட்சியமாக இருந்துவிடக் கூடாது. அங்குள்ள நிலைமை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டு வருகிறது. அதோடு கூட, அங்குள்ள தமிழ் மக்கள் இங்கு வருவதற்கு வழி இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். உள்ளபடி அங்கிருந்து இங்கு வர விரும்புகிறார்கள். ஆனால் நமது இந்திய ஹை கமிஷன் உத்தரவு கொடுப்பதில்லை. அது கிடைக்க பல சான்றுகள் வாங்கி அனுப்ப வேண்டியிருக்கிறது. அதில் சங்கடங்கள் பல நேரிடுகின்றன. அதோடு, பல இந்தியர்கள், கிட்டத்தட்ட 50,000-க்கு மேல் அங்கு தவிக்கிறார்கள். அவர்கள் அங்கு திருடர்களைப் போல் வாழ்கிறார்கள். அவர்கள் சர்க்காருக்கு பயந்து வாழ வேண்டியிருக்கிறது: அவர்களின் எஜமானர்களிடமிருந்து சரியான கூலி வாங்க முடியாமல் இருக்கிறது. கூலி கேட்டால், நீ திருட்டுத்தனமாக வந்தவன்தானே, கள்ளத்தோணி, உன்னைப் போலீஸில் காட்டிக் கொடுத்து விடுகிறேன் என்று பயமுறுத்துகிறார்கள். அப்படி, 50,000-க்கு மேற்பட்ட இந்தியர்கள் அங்கு திண்டாடுகிறார்கள். இவர்களின் நிலை என்ன ? அவர்களை இலங்கை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. நம் சர்க்காரும் அவர்களை இங்கு அழைத்துக்கொள்ள ஒரு வழியும் செய்து கொடுப்பதில்லை. இந்த நிலையில் அவர்கள் அங்கு அகதிகளாக வாழ வழியின்றி கேவலமாக நடத்தப்படுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கலாமா ? அதற்கான வழி ஒன்றும் இந்த பட்ஜெட்டில் காணவில்லை என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, பட்ஜெட்டில் பல திட்டங்கள் இருக்கிறது. நல்ல திட்டங்கள்



4th March 1958] [Sri S. Ramasami Thevar]

சிலவும் இருக்கின்றன. ஆனால் எந்தத் திட்டமும் சரியானபடி நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்று நாம் பார்ப்பது இல்லை. அதோடு நாட்டில் இன்று லஞ்சம் உச்ச நிலையை அடைந்து விட்டது. எடுத்ததற்கெல்லாம் லஞ்சம். சாதாரணமாக ஒரு அதிகாரியைப் பார்ப்பதற்கு அந்த சேவகனுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. லஞ்சத்தை அடக்குவதற்கு ஒரு வழியும் காணோம். நாட்டில் தாட்சண்யமும், சலுகையும் பெருகிக் கொண்டு வருகிறது. அதை அடக்க முடியாத நிலையில் இருக்கிறோம். ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஒரு வியாபாரி நிறுத்துக் கொடுப்பதற்குப் பதிலாக அளந்து கொடுத்தார், உரத்தை. அதை குறிப்பிட்ட அதிகாரி கண்டு பிடித்தார். உடனே அந்த வியாபாரியானவர் அந்த அதிகாரியின் மேல்அதிகாரியைக் கண்டு, சிறு சேமிப்பிற்காக ஆயிரம் ரூபாய் தந்திருக்கிறேனே, என்னை பிடித்து விட்டார்களே என்று சொல்கிறார். உடனே இந்த அதிகாரி கீழ் அதிகாரியைக் கூப்பிட்டு மன்னித்து விடு, அவர் சிறு சேமிப்பிற்காக ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார் என்று சொல்லி அந்த வியாபாரி தப்பித்து விடுகிறார். இது போன்று, சலுகையும், லஞ்சமும் பெரிய இடத்தில் இருந்து சிறிய இடம் வரை நடக்கிறது. ஆகவே, லஞ்சத்தைப் போக்க வழி கண்டு பிடித்தேயாக வேண்டும். இல்லாவிடில் நம் நாடு கீழ் நோக்கியே போய்க்கொண்டிருக்கும். அடுத்தபடியாக, நம் நாட்டில் இன்று உணவுப் பற்றாக்குறை இருக்கிறது. அதைக் குறித்து சர்க்காரின் புள்ளி விவரங்கள் சரியானபடி இல்லை என்பதை எடுத்துக் காட்டியபோது கூட சில அங்கத்தினர்கள் மற்றவர்களை, எடுத்துச் சொன்னவர்களை குறை கூறுகிறார்கள். நான் வசிக்கக்கூடிய வட்டம் 10,000 ஏக்கர் கொண்டதாகும். அதற்கு ஒரு கணக்கன்தான் இருக்கிறான். ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட், செட்டில்மெண்ட் ஆபீஸ் இன்னும் பல அலுவலகங்களில் அவன் கணக்கு எழுத வேண்டியிருக்கிறது: அது போக இந்த 10,000 ஏக்கர் உள்ள இடத்திற்கும் சேர்த்து கணக்கு எழுத வேண்டுமென்று சொன்னால் அது எப்படி முடியும் ? அதுவும் இல்லாமல் கணக்குப் பிள்ளைகள் கிராமத்தில் இருப்பதில்லை. நகரத்தில்தான் இருக்கிறார். நகரத்தில் இருந்துதான் கணக்கு எழுதுகிறார்கள். ஆகவே, சரியான புள்ளிவிவரங்களை அவர்களால் எடுக்க முடியாது. அதோடு ஆண்டவன் பேரில் அநேக இடங்கள் சும்மா கிடக்கிறது. அவைகளை ஏழை மக்களுக்கு கொடுத்து விவசாயம் செய்யச் சொன்னால் உணவு உற்பத்தி பெருக முடியும். நான் சொல்கிறேன், அரந்தாங்கிப் பகுதியில் ஆவுடையார் கோவிலுக்கு சொந்தமான பல கிராமங்கள் இருக்கின்றன. இந்தக் கிராமங்கள் ஒரு காலத்தில் ஜமீந்தார்களால், நிலப் பிரபுக்களால் தானமாக கொடுக்கப்பட்டன. அந்தக் கிராமங்கள் எல்லாம் கவனிப்பார் அற்றுக் கிடக்கின்றன. அவைகளை சர்க்கார் வசப்படுத்த நினைக்கவில்லை. வசப்படுத்தாமல் இருக்கப் போகிறோம் என்று ஒரு அறிக்கை கூட விடுக்கவில்லை. அதனால் கோவிலாரும் அந்தக் கிராமங்களை மராமத்து செய்வதில்லை. சர்க்காரும் அலட்சியப்படுத்துகிறார்கள். குளங்கள் வலை பின்னப்பட்டிருக்கின்றன. அவை மராமத்து செய்யப்படாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். நான் சொல்கிறேன். அரந்தாங்கிப் பகுதியில் உள்ள குளங்களை எல்லாம் மராமத்து செய்தால் அங்கு உணவுப் பற்றாக்குறை நீங்கி விடும் என்பதில் சந்தேகமே கிடையாது. சிறு நீர்ப்பாசனங்களைப்பற்றி சொல்லும்போது, அரந்தாங்கித் தாலுகாவில் ஜீவ நதி ஓடாவிட்டாலும் காட்டாறுகள் பல ஓடுகின்றன. இவற்றின் குறுக்கே அணை கட்டிக் கொடுத்தால் அரந்தாங்கிப் பிரதேசத்தில் பஞ்சமே ஏற்படாது என்று பல தடவைகள் சொல்லி யிருக்கிறேன். நற்பவழக்குடி பகுதியில் ஒரு அணை கட்டிவிட்டால் அது கிட்டத்தட்ட 5,000, 6,000 ஏக்கருக்கு பாயும். அதிகச் செலவு இல்லாமல் ஏக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய் செலவில் திட்டத்தை நிறைவேற்றலாம். அந்த பூமிகளில் புஞ்சை விவசாயம் செய்ய முடியாது. மராமத்து இலாகா மந்திரி யவர்கள் எங்கள் பகுதிக்கு வந்த போது அவர்களே சில கிராமங்களுக்குப் போக மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஆனால். அவசியமாக போக வேண்டியிருந்தது. ஜீப்பில் கூட போக முடியவில்லை. ரோடு வசதி அங்கு கிடையாது. ரோடு வசதியிருந்தால் தான் விவசாயிகள் உணவு தானியங்களை ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டுபோக முடியும். அதோடு, விவசாயிகளுக்கு கடன் கொடுப்பது அவர்களுக்கு தக்க சமயத்தில் கிடைக்க வேண்டும். ஏற்ற

[Sri S. Ramasami Thevar] [4th March 1958

காலத்தில் அது கிடைக்க வேண்டும். அதுவும் கால தாமதம் இல்லாமல் கிடைக்க வேண்டும். ஒரு விவசாயி மனு போட்டால் குறைந்தது 20, 30 தடவை கணக்கரை காண வேண்டியிருக்கிறது. அவருக்கு ஏதாவது கொடுத்தால்தான், அல்லது கொடுக்க சம்மதித்தால்தான் அவர் கையெழுத்து போடுவார். அப்படி விவசாயி 20, 30 தடவை நடப்பதால் அவன் வேலையும் கெட்டு விடுகிறது. அதனால் அவன் விவசாய வேலை தடைபடுகிறது. அடுத்தபடி அவன் கிராம அதிகாரியைக் காண வேண்டியிருக்கிறது. பின் வேறு அதிகாரிகளை காண வேண்டியிருக்கிறது. இப்படி ஒவ்வொரு அதிகாரியையும் கண்டு கொண்டு இருப்பதால் அந்த விவசாயியின் வேலை கெடுகிறது. பணம் போவதோடுகூட அவன் வேலையும் வீணாகக் கெட்டுப் போகிறது. விளைச்சலும் கெடுகிறது. தண்ணீர் பாய்ச்ச வேண்டிய நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச வில்லை என்றால் பயிர் கெட்டுப்போய்விடுகிறது. பயிர் காய்ந்து விடுகிறது. ஒரு கத்திரிச் செடிக்கு தண்ணீர் விட வேண்டிய சமயத்தில் தண்ணீர் விடவில்லை என்றால் அது வாடி வதங்கிப்போய் விடுகிறது. எப்படி மனிதனுக்கு தாகம் ஏற்படுமோ அதேபோல்தான் தாவரங்களுக்கும், தாகம் ஏற்படுகிறது. ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், ஒரு விவசாயி மனு கொடுத்தால் நேரடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு மனு செய்ய வேண்டுமென்று இருக்கவேண்டும்.

4.20 p.m. தாசில்தாருக்கு மனுப் போட்டால் கர்ணத்திற்கு அவரே நேரில் அனுப்பி விவரம் தெரிந்து கொள்ள வேண்டும். அவ்விதமும் இல்லாமல் யாருக்கெல்லாமோ அனுப்பி விடுவதால் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதை போக்குவதற்கு சர்க்கார் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் எமது தாலூகாவை எடுத்துக்கொண்டால் அங்குள்ள பல காரியங்கள் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். அங்கு பல கிராமங்கள் நூதனமாக இருக்கின்றன. பல இனாம் ஜமீன் கிராமங்களை சர்க்கார் எடுத்திருக்கிறார்கள். இன்னும் சில ரயத்வாரி கிராமங்கள் வரி செலுத்தி வருகிறது. இதில் ஆச்சரியம் என்னவென்றால் பாதரக்குடி என்னும் கிராமம் சர்க்கார் ரயத்துவாரியாயிருந்தும் இப்பொழுதும் வரியும் செலுத்திக் கொண்டு, மான்யமும் கொடுத்து வருகிறது. இவ்விதம் சர்க்கார் கிராமமாயிருந்தும் இன்னும் அந்த கிராமம் அடிமையாகவே இருந்து வருகிறது. இதை சர்க்கார் உடனடியாக போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் சிறு நீர் திட்டங்களுக்கு 70 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது, இன்னும் கூடுதலாக ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் சிறு குளங்கள், சிறு தேக்கங்கள் இவைகளை யெல்லாம் பண்படுத்த முடியும் என்பதை சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* SRIMATHI HEMALATHA DEVI : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தினுடைய சலுகைகளை எதிர் பார்த்தும் மற்றும் ஒரு சில வரிகளை விதித்தும் சமர்ப்பித்திருக்கின்ற இந்த வரவு செலவு திட்டத்தைக் குறித்து விவாதிக்கையில் ஒரு அங்கத்தினர் இந்த திட்டமானது குல்லாய்க்கு ஏற்றவாறு தலையை சரியாக்குவது போல் இருக்கிறது என்று சொன்னார்கள். எதிர் கட்சியிலிருந்து பேசுகிறவர்கள் யாராய் இருந்தாலும் சரி அவர்கள் குறை கூறாமல் இருக்கின்றார்களா அல்லது அரசாங்கம் செய்திருப்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால் அதுதான் இல்லை. நேற்றிலிருந்து இதுவரைக்கும் பேசினவர்கள், பேசப் போவோர்கள் நாட்டினுடைய முன்னேற்றத்தை விரும்புபவர்களாய் இருந்தாலும் சரி அல்லது நாட்டினுடைய சுபீட்சத்தை விரும்புகிறவர்களாய் இருந்தாலும் சரி எல்லோரும் ரோடுகள் வேண்டும், மின்சார வசதி வேண்டும், பள்ளிக் கூடங்கள் வேண்டும், ஆசுபத்திரிகள் வேண்டும் இவ்விதமாக எல்லாம் வேண்டும், வேண்டும் என்று அடுக்கிக்கொண்டேதான் போகிறார்கள். இவ்வாறு எல்லாம் ஏற்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய உதவியை எதிர்பாராமல், அல்லது ஏதாவது வரிகளை போடாமல் எவ்வாறு அரசாங்கம் இவைகளை எல்லாம் நிர்வகிக்க முடியும் என்பது இவர்கள் உணராதது ஏனோ என்று தெரியவில்லை. நமது நிதி அமைச்சர் அவர்கள் நமது மாகாணத்தின் தலை பூராவும் பெரிது அதற்கேற்றவாறு தொப்பியை பெரிதாக தைக்க வேண்டுமென்ற எண்ணத்தின் பேரில்தான்



4th March 1958] [Srimathi Hemalatha Devi]

மத்திய அரசாங்கத்தின் சலுகையையும் பெற்று ஏழைகளை பாதிக்காத வகையில் ஒரு சில வரிகளை மட்டும் விதித்து இந்த திட்டத்தை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். சிலர் ஏழைகள் மீது வரி போட்டு விட்டார்கள் என்று குறை கூறுகின்றார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற நிலைமையை எடுத்துப் பார்த்தால் சினிமாவுக்குப் போகக்கூடியவர்கள் ஏழைகளாக இருந்தாலும் அவர்கள் தாழ்ந்த கட்டணத்திற்குதான் போவார்கள். இவர்கள் போய்க்கொண்டிருக்கின்ற ஆறு அணா கட்டணத்திற்கு இனிமேல் ஆறேகால் அணாதான் கொடுக்க வேண்டியிருக்கும். அதிலும் கிராமப் புறங்களிலுள்ள கடைசி கட்டணத்திற்கு இரண்டரை அணா அல்லது மூன்று அணா இருக்கும். இவற்றில் ஒன்றரை தம்பிடிதான் கூடுதலாக கொடுக்க வேண்டியிருக்கும். ஆனால் பணம் உள்ளவர்கள் 15 அணா அல்லது ரூ. 1–4–0 அல்லது ரூ. 2–8–0 என்று கொடுத்து சினிமாவுக்கு போகிறார்கள். இதில்தான் கூடுதலாக இவர்கள் கொடுக்க வேண்டியிருக்கும். எனக்கு சொத்து இருக்கிறது, நான் ஏன் தாழ்ந்த வகுப்புக்கு போக வேண்டுமென்று நினைத்து மேல் வகுப்புக்கு போகிறார்கள். தாழ்ந்த தட்டில் போனால் கேவலம் என்று நினைக்கிறார்கள். அவர்கள்தான் இரண்டரை ரூபாய் கொடுத்து போகிறார்கள். இவ்விதம் போகிறவர்கள் நாட்டிற்கான நல்ல காரியங்களைச் செய்ய கூடுதலாக மூன்று அணா கொடுத்தால்தான் என்ன ? எனவே இவ்வரியினால் ஏழை மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள். அதே மாதிரிதான் குதிரைப் பந்தயத்திற்கு ஏழைகளும் போகிறார்கள், பணக்காரர்களும் போகிறார்கள். இவ்விதம் போவது யாராய் இருந்தாலும் அது தவறு என்பதை நாம் எல்லோரும் அறிகிறோம். பணக்காரர்கள்தான் அதிகமாக போகிறார்கள். அவர்களுக்குத்தான் அதிகமாக மேலும் மேலும் பணம் சேர்க்க வேண்டுமென்ற ஆசை ஏற்படுகிறது. ஆகவே ஏழைகள் பாதிக்கக் கூடாது என்ற முறையில்தான் அரசாங்கம் இதற்கு வரிகளை விதித்திருக்கிறார்கள். அடுத்தபடியாக டீஸல் எண்ணெய் வரியை பொறுத்த வரையில், பம்பு செட்டுகளுக்கு விவசாயிகள் டீஸல் எண்ணெயை வைத்து உபயோகித்து வருவதால் விவசாயி பாதிக்காதவாறு அவர்களுக்கு ஒரு விதி விலக்கு அளித்து இதைக் கொண்டு வந்தால் மிக நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதே மாதிரி விவசாய வருமானம் மூவாயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தால் வரிகள் போடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் விவசாயத்தில் மூவாயிரம் ரூபாய்க்கு மேல் வருவாய் உள்ளவர்கள் நல்ல வசதியுள்ளவர்களாய்த்தான் இருப்பார்கள். இதனால் ஏழைகள் பாதிக்கப்படமாட்டார்கள். ஆகவே இந்த வரி விதிப்பானது ஏழைகளை பாதிக்காது என்றுதான் நான் கருதுகிறேன். அடுத்ததாக பட்ஜெட் உரையில் "அமராவதி, சாத்தனூர், கிருஷ்ணகிரி, மணிமுத்தாறு" போன்ற நமது பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் அனைத்தும் அநேகமாக நிறைவேறிவிட்டன. இந்த அணைகளிலிருந்து நடப்பு ஆண்டில் பாசனத்திற்கு நீர் விடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் பாசனத்திற்கு வைகை அணைக்கட்டுத் திட்டம் முடிவடையும். 1960-ம் ஆண்டில் கட்டளை, புல்லம்பாடி திட்டம் முடிவடையும். வீடூர், நெய்யாறு திட்டங்களிலும் வேலை தொடங்கியுள்ளது. நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக நடப்பு ஆண்டில் இரண்டு கோடி எண்பத்தி ஆறு லட்ச ரூபாய் செலவு செய்யவும் 1958–59-ம் ஆண்டில் ஒரு கோடி அறுபத்தி ஒன்பது லட்ச ரூபாய் செலவு செய்யவும் ஏற்பாடாகி உள்ளது" என்று குறிப்பிட்டிருப்பதை பார்த்து மிக மகிழ்ச்சியடைகிறேன். இந்த சமயத்தில் ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். அதாவது சேலம் ஜில்லாவில் பஞ்சப்படி அணைக்கட்டு திட்டம் ஒன்றிருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே இதை பூர்த்தி செய்திருக்க வேண்டியது. இது சரியானபடி கவனிக்கப்படவில்லை. இதைக் குறித்து முதல் மந்திரி அவர்களிடமும் மராமத்து இலாகா மந்திரி அவர்களிடத்திலும் எடுத்து சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி கவர்னர் பெருமான் அவர்களது உரையின்மீது பேசும்பொழுதும் குறிப்பிட்டேன். முதல் மந்திரி அவர்களின் முயற்சியால் அவர்களும் மராமத்து இலாகா மந்திரி அவர்களும் அந்த இடத்தில் வந்து பார்வையிட்டார்கள். இந்த அணை கட்டுவதற்காக மூன்று இடங்களை போய் பார்த்தார்கள். இந்த அணையை எந்த இடத்தில் கட்டினால் அந்த பிரதேசம் பூராவுக்கும் பாசன வசதி கொடுக்க முடியும் என்று பார்த்தார்கள். இதை தகுந்த இடத்தில்

[Srimathi Hemalatha Devi] [4th March 1958

சீக்கிரமாக கட்டி முடித்தால் தர்மபுரி தாலூகா முழுவதும் வளம் கொழிக்கும்படியான அளவில் செய்ய முடியும். ஆகவே இதை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்து உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று மராமத்து இலாகா அமைச்சர் அவர்களிடத்திலும் இந்த அரசாங்கத்தினிடத்திலும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இது தவிர " அடுத்த ஆண்டில் மேலும் 51 தேசீய வளர்ச்சித் திட்ட வட்டாரங்களும் 16 சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களும் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம் " என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் என்னுடைய தொகுதியில் ஒரு பகுதியும் சுற்றிலுமுள்ள பகுதிகளும் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப் பட்டுள்ளது. இவைகளுக்கு மத்தியில் இந்த பாலக்கோடு பிர்க்கா என்கிற பகுதி இன்னும் சேர்க்கப்படாமல் இருக்கிறது. அதையும் சேர்த்துக் கொண்டால் தொடர்ச்சியாக அந்த பகுதியையும் சீர்திருத்த ஏதுவாகும் என்று இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

4-30 p.m. " இந்த நிதி ஆண்டில் 1,000 கிராமங்களுக்கு மின்சாரம் பரப்ப உத்தேசித்திருந்தோம். அதில் 910 கிராமங்களுக்கு டிசம்பர் மாத முடிவிற்குள்ளாகவே மின்சார வசதி அளித்துவிட்டோம். இந்த ஆண்டு முடிவிற்குள் நம் இலக்குக்கு மேலாகவே சாதித்து விடுவோம். இப்பொழுது 6,200 கிராமங்களும், குக் கிராமங்களும் மின்சார வசதி பெற்றுள்ளன. சுமார் 60,000 தண்ணீர் இறவை இயந்திரங்கள் மின்சாரத்தினால் இயங்குகின்றன " என்று இதில் குறிப்பிட்டிருப்பதுபற்றி மகிழ்ச்சியடைகிறேன். அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியில் பாலக்கோடு, பாப்பாரப்பட்டி இந்த இரண்டு பிர்க்காவில் மின்சார வசதி ஏற்படுத்தியிருப்பதைக் குறித்து மின்சார இலாகா அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்ணாகரம் ஒரு மலைப் பிராந்தியம். அங்கு மின்சாரம் பலம் எத்தனை பைசா என்றோ, அல்லது அது மின்மினிப் பூச்சிப்போல் இருக்குமா என்றோ கேட்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள் அங்குள்ள மக்கள். ஆகையால் மலைக் காட்டுப் பிராந்தியமாக இருக்கும் பெண்ணாகரம் பிர்க்காவிற்கும் உடனடியாக மின்சாரம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று மின்சார இலாகா அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி என்ற தலைப்பில், " தேங்கிக் கிடக்கும் துணியை விரைவில் விற்பனை செய்வதற்கு மத்திய அரசாங்கம் தந்து வரும் மானியத்தைக் குறைக்காமல் தொடர்ந்து தர வேண்டுமென்று இந்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தப்பட்டுள்ளது " என்று வரவு செலவுத் திட்டத்திலே குறிப்பிடப் பட்டுள்ளது. இன்றைய பத்திரிகையிலே நான் பார்த்தது 1958-ம் வருஷம் பிப்ரவரி மீ 28உ யன்று பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டில் 5·07 கோடி ரூபாய் கைத்தறி அபிவிருத்திக்கு நிதி உதவி அளிப்பதென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதை அறிய மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்தபடியாக " கிராமங்களில் உள்ள மருத்துவ நிலையங்களுக்குச் செல்வதற்குத் தூண்டுகோலாக டாக்டர்களுக்கு ஒரு விசேஷப் படி தர முடிவு செய்துள்ளோம். அவர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து தரவும் ஏற்பாடு செய்து வருகிறோம். நூற்றைந்து தாய் சேய் நல நிலையங்களைத் திறக்கவும் 900 தாய்களுக்கு பயிற்சி அளிக்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது " என்று மருத்துவம், சுகாதாரம் என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு சாதாரணமாக ஒரு கிராமத்திற்குப் போக வேண்டுமென்று ஒரு டாக்டருக்கு உத்திரவு போட்டால், அந்த ஊர் பிடிக்காததன் காரணமாக லீவு போட்டுவிட்டு வேறு இடத்திற்கு மாற்றல் கேட்கிறார்கள். அவர்களுக்குக் கிராமங்களில் இருக்கப் பிடிப்பதில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த மாதிரியான வசதியும் படி உயர்வும் வரவேற்கத் தக்கது. அதோடு மட்டுமல்லாது, பெரிய மலைக் காடான பிரதேசமாக இருக்கும் இடங்களிலும், ஆஸ்பத்திரி அதிக தூரம் உள்ள இடங்களிலும் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி அதில் லேடி டாக்டர்களையும் நியமித்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.



4th March 1958] [Srimathi Hemalatha Devi]

கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்துப் பேசும் இந்த வாய்ப்பை அளித்த அவைத் தலைவருக்கு என் நன்றியை தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri G. VAGHEESAM PILLAI :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் வரவு செலவு திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக விவசாயத் துறையில் அதிகத் தலைப்புகளில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். இந்தியாவில் ஒரு ஏக்கருக்கு சராசரி 750 பவுண்டுதான் விளைகின்றது. நம் ராஜ்யத்தில் ஒரு ஏக்கருக்கு 1,255 பவுண்டு விளைச்சலுக்குக் கொண்டு வந்திருப்பது பாராட்டத் தகுந்த விஷயம். அதோடு 180 விதைப் பண்ணைகளுக்கு 72 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலே, நம் விவசாயிகள் நைட்ராஜனிக் மென்யூர்ஸ், அதாவது அம்மோனியம் ஸல்பேட் போன்ற உரங்களை உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அது நல்லதுதான். சூபர்பாஸ்பேட்டை ஒரு சிலர் உபயோகித்து வருகிறார்கள். இதைப் பாதி விலைக்கு விற்பதில் இந்திய சர்க்கார் சப்ஸிடி கொடுத்து வந்தார்கள். அது இப்போது நின்று விட்டது. பல மாகாணத்தில் சப்ஸிடி கொடுத்து வருகிறார்கள். நம் ராஜ்யத்தில் கூட சூபர் பாஸ்பேட்டை பாதி விலைக்கு அரசாங்கத்தார் வழங்கினால் விவசாயிகள் நைட்ராஜனிக் மென்யூர்ஸ், சூபர் பாஸ்பேட் இவைகளை உபயோகிக்கலாம். இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

பூச்சி மருந்துகளுக்கு எட்டு லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். எந்தப் பிராந்தியத்தில் பெஸ்ட் அடிக்கிறது என்று ஜில்லா ஆபீஸர் notify செய்த பிறகு பாதி விலையில் கொடுக்கலாம் என்று விதி இருக்கிறது. இந்தப் பூச்சி மருந்தை வேறு ஒன்றுக்கும் உபயோகிக்க முடியாது. எந்த நேரத்திலும் இந்தப் பூச்சி மருந்துகளைப் பாதி விலையில் விவசாயிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

ஆந்திரா பிரிந்த பிறகு கோடூர் பார்ம் போய்விட்டது. ஹார்டிகல்சரில் கவனம் செலுத்தி திட்ட காலத்தில் 28·5 லட்ச ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டிருக்கிறது. 1957-58-ல் 141 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1958-59-ல் 271 ஆயிரம் ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டிருக்கிறது. இது போதாது. திட்ட காலத்தில் அதிகம் செலவழித்து 24 லட்ச ரூபாயில் வேறு இடத்தில் ஒரு பழப் பண்ணை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

விவசாயத் துறையில் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறோம். நல்ல விவசாய முறைகளைப் பற்றி விளம்பரம் தேவை என்று சமுதாய நலத் திட்ட பிரதேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த இந்திய சர்க்காரின் அதிகாரி ஒருவருக்கு நான் ஆலோசனை சொல்லியிருக்கிறேன். அவர் நம் ராஜ்யத்திற்கும் வந்திருந்தார். சிதம்பரத்திற்கு வந்திருந்தார். நான் சொன்னேன் விவசாயிகளுக்குப் புரியும்படியான முறையில் நல்ல புதிய முறைகளைப்பற்றி சினிமா படம் எடுத்து அவர்களுக்குக் காண்பித்தால் நன்றாக இருக்கும் என்று. அவரும் அதை ஒத்துக் கொண்டார். செய்தித் தாள்களில் நிபுணர்களும், விவசாயத் துறையில் அனுபவம் உள்ளவர்களையும் கொண்டு கட்டுரைகளை எழுதி வினியோகிக்க ஏற்பாடு செய்தால் நம் விவசாயம் சீக்கிரமாக வளர்ச்சி யடையும். அதில் கவனம் செலுத்த வேண்டும்.

நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட வரையில் நம் ராஜ்யத்தில் அணைகள் கட்டுவதற்கு ஆறுகள் இல்லை. ஸோனல் கவுன்ஸில் மூலமாக கேரள அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவது வரவேற்கத்தக்கது. நம் தென்னாற்காடு ஜில்லாவட்டத்தில் கோமுகி, மணிமுத்தாறு, கள்ளக்குறிச்சி முதலியவற்றில் அணைக்கட்டுகள் கட்டலாம் என்று 10 வருஷமாகத் திட்டமிட்டு வருகிறார்கள். ஆனால் பர்ஸெண்டேஜுக்கு கட்டவில்லை என்று எடுத்துக் கொள்ளவில்லை. அதையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[Sri G. Vagheesam Pillai] [4th March 1958

சிறு நீர்ப்பாசனத்திற்காக 80 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பெரிய திட்டங்கள் அதிகமில்லாததால் இதற்கு இன்னும் அதிகம் ஒதுக்க வேண்டும். இது போதாது. புதிய திட்டங்களை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அக்கரை இருப்பதால் பழைய வாய்க்கால்கள் தூர்ந்து போயிருக்கிறது. குளங்கள் தூர்ந்து போயிருக்கின்றன. அதைப் பற்றி கவனம் செலுத்தினால் உணவு உற்பத்தி பெருக்கம் ஏற்படும். இப்போது ஒதுக்கியிருக்கும் 80 லட்ச ரூபாயைச் செலவழிக்க இப்போதிலிருந்தே டிரைவ் இருக்க வேண்டும். அதிகப் பணம் ஒதுக்க நேரிட்டால் அதையும் ஒதுக்க வேண்டும். கடிலம், மணிமுத்தாநதி, பெண்ணையாறு போன்ற நதிகளில் பல அணைக்கட்டுகள் தூர்ந்து போயிருக்கின்றன. அவைகளுக்கு ஸ்குரூ பேரிங் ஷட்டர்ஸ் இருக்கிற வாய்க்கால்களும் சின்ன குளங்களும் இருக்கின்றன. இந்த ராஜ்யத்தில் தென்னாற்காடு மாவட்டத்திலே அதிகமான ஏரிகளும் குளங்களும் இருக்கின்றன. இந்தக் குளங்களை தூர் எடுத்தால் நல்ல பலன் ஏற்படும். ஆயிரம் ஏக்கருக்கு அதிகமுள்ள ஆயக்கட் உள்ள வாய்க்கால்களை சர்க்கார் செலவிலேயே வெட்ட வேண்டுமென்று சர்க்கார் உத்திரவு இருக்கின்றது. வருஷா வருஷம் உத்திரவு பிறப்பிக்க வேண்டியிருக்கிறது. இரண்டு, மூன்று வருஷங்களுக்கு நிரந்தரமான உத்திரவாயிருந்தால் நலமாக இருக்கும். பல வாய்க்கால்களை வெட்டுவதில் கால தாமதம் ஆகின்றது. அதையும் கவனிக்க வேண்டும். இந்த மாதிரி சென்ற வருஷம் 230 ஆயிரம் ஏக்கர் இரு போக சாகுபடியில் இருந்தது. இந்த வாய்க்கால்கள் வெட்டியதால் 40 ஆயிரம் ஏக்கர் இரு போக சாகுபடிக்கு வந்திருக்கிறது. மற்ற வாய்க்கால்களை யெல்லாம் வெட்டினால்
4-40 p.m. இன்னும் அதிகப்படியான நிலம் இருபோக சாகுபடிக்கும் கொண்டுவர முடியும். இந்த மாதிரி விஷயங்களில் அதிக கவனம் செலுத்தினால் இருபோக நிலங்கள் அதிகமாக ஏற்பட்டு, உணவு உற்பத்தி பெருகும். நீர்ப்பாசன மகா நாடு வருஷத்தில் இருமுறை கூடுகிறது. இது சம்பந்தமான G.O. விவரமாக இருக்கிறது. எந்த "subject" ஆனாலும் pre-digest பண்ண வேண்டுமென்று இருக்கிறது. ஜில்லா ஆபீசர்கள் இதற்கு அதிக முக்யத்துவம் கொடுக்க வேண்டும். **Review** பண்ணும்போது, ரெவின்யூ போர்டாரோ அல்லது அரசாங்கமோ பண்ணினால் நல்லது. சிறிய பாசனத் திட்டங்களை அங்கே அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னால், விமோசனம் ஏற்பட்டு விடும். இரண்டு முறைக்குப் பதில் நான்கு முறை கூடினால் நல்லது.

கோழிப் பண்ணைகளுக்காக பட்ஜெட்டில் 2 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தியா சர்க்கார் $1\frac{1}{2}$ லட்சம் கொடுக்கிறார்கள். நமது மாகாணத்தில் மூன்று இடத்தில் பெரிய பண்ணைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சிதம்பரம் தாலூகாவில் ஒரு பண்ணை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கிராமங்களில் சின்னச் சின்னக் கோழிகளை வைத்துக் கொண்டு, அபிவிருத்தி ஏற்படாமல் இருக்கிறது. கிராமப் பகுதிகளில் இலவசமாகக் கோழி முட்டைகளை கொடுத்தால் நல்லது.

**Tube Wells Scheme**-க்காக ரூ. 48 லட்சம் திட்ட காலத்தில் செலவழிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. தென் ஆற்காடு ஜில்லாவில் "**111—Tube Wells Scheme**" என்று முன்பு ஒரு திட்டத்தை நிறைவேற்றி, அது திருப்திகரமாக முடிந்திருக்கிறது. சமீபத்தில், இன்னும் 100 குழாய்க் கிணறுகள் **(artesian wellss)** நிறுவ வேண்டுமென்று மந்திரி அவர்களிடத்தில் சொன்னேன். ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். சிதம்பரம் தாலூகாவில் இரண்டு பிர்க்காக்களில், கீழே 50 அடியிலிருந்து 150 அடிக்குள் நல்ல ஜலமிருக்கிறது. விவசாயிகளுக்கு ரூ. 2,000 அல்லது ரூ. 3,000 கடனைக் கொடுத்தால் கிணறுகள் வெட்டுவதற்கு சௌகரியமாயிருக்கும்.

ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நல்ல வேலை நடந்து கொண்டு வருகிறது. இரண்டு, மூன்று வருஷத்துக்குள் எல்லா கிராமங்களிலும் சமுதாய நலத் திட்டத்தின்கீழ் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. தேசீய அபிவிருத்தி திட்டத்தின்கீழ் அவைகளைக் கொண்டுவர இன்னும் 2, 3 வருஷங்களாகும். ஸ்தல அபிவிருத்தித் திட்டம் நன்றாக வேலை செய்து வந்தது. ஆனால் வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட



4th March 1958] [Sri G. Vagheesam Pillai]

வில்லை. இந்திய சர்க்காரும் பணம் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். நமது சர்க்கார் கண்டிப்பாக இதற்குப் பணம் தனியாக ஒதுக்க வேண்டும். செய்த வேலைகள் எல்லாம் குறைவாக, பூர்த்தியாகாமல் இருக்கிறது. அவைகள் பூர்த்தியாக வேண்டும். தேசீய விஸ்தரிப்புத் திட்டமோ அல்லது சமுதாய நலத் திட்டமோ இல்லாத கிராமங்களுக்கு ஸ்தல அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் 300 பெரிய கூட்டுறவுக் கடன் சங்கங்களைத் திறக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளனர். இவைகளை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்று நினைக்கிறேன். நீண்ட காலக் கடன்களை **Land mortgage** பாங்குகள் கொடுக்கின்றன. குறுகிய காலக் கடன்களை, அதாவது மூன்று அல்லது ஐந்து வருஷத் தவணைகளில் செலுத்துமாறு, **Rural Banks** மூலமாகக் கொடுக்க வசதி செய்ய வேண்டும்.

கிராமங்களில் **Rural Housing Societies** இருக்கின்றன. இம்மாதிரி சங்கங்கள் பெரிய நகரங்களில்தான் நல்ல முறையில் செயலாற்றி வருகின்றன. கிராமப் புறங்களில் புதிய வீடுகள் கட்டிக்கொடுக்க வசதி செய்ய வேண்டும். **Town-Planning** முறைப்படி கிராமங்களில் வீடுகள் கட்டமுடியாதாகையால், விதிகளைத் தளர்த்தி நிறைய வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மின்சார விஸ்தரிப்புத் திட்டம் நம்முடைய ராஜ்யத்தில் நன்கு முன்னேறி வருகிறது. ஆயிரம் கிராமங்களுக்குத் திட்டமிட்டதில், 900 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கியாய் விட்டது.

வாய்க்கால்களுக்கு சமீபத்தில் நான்கு பர்லாங்குக்குள்ளே எங்கேயாவது மோட்டார் செட் வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், P.W.D. **permission** கொடுக்க வேண்டியிருக்கிறது. இதற்குக் கால தாமதமாகிறது. சில இடங்களில் **permission** கொடுக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. சிதம்பரம் தாலூகாவில் வளையமாதேவி, எறும்பூர்நத்தம் போன்ற இடங்களில் வாய்க்கால் ஜலம் வருகிறதில்லை. மின்சாரம் எடுத்துக்கொள்ள தடை இருக்கிறது. P.W.D. டிபார்ட்மெண்டார் அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். அமைச்சர் அவர்களிடத்தில் இதைப்பற்றி சொன்னேன். பெண்ணாடம், திட்டகுடி போன்ற இடங்களில் வாய்க்கால் போகிறது. மின்சாரம் விஸ்தரிக்கப்படாமலிருக்கிறது. மோட்டார் செட் அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். **Chief Engineer** இந்த மாதிரி விஷயங்களை கால தாமதமின்றி கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது வரையில் மின்சாரம் பரங்கிப்பேட்டையில் **Private Company** மூலம் விஸ்தரிக்கப்பட்டு இருப்பதால் மின்சாரம் விஸ்தரிக்கப்படாமலிருக்கிறது. அங்கே 18,000-க்கு மேல் ஜனத் தொகை இருக்கிறது. அதற்கு "Top priority" கொடுத்து எப்படியாவது செய்து விடுகிறேன் என்று சொன்னார்கள். அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில கிராமப் பகுதிகள் எந்த விதமான **road link**-ம் இல்லாமல் இருக்கின்றன. ஐந்நூறுக்கு மேற்பட்ட ஜனத் தொகையுள்ள கிராமங்களில் பள்ளிக்கூடம் இருக்கவேண்டும். 100 அல்லது 200 ஹரிஜனங்கள் வீடு இருந்தால்கூட குடி கிணறுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டதனால்தான், பள்ளிக்கூடங்களும், கிணறுகளும் ஏற்பட்டு வருகின்றன. அதே மாதிரி எந்தக் கிராமத்திற்கும் ஒரு ரோடு "லிங்க்" **(link)** இருக்க வேண்டுமென்று இருக்க வேண்டும். அரசாங்கமே முழுத் தொகையையும் கொடுத்து அந்த மாதிரி திட்டங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

கல்விக்காக அதிகப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். பகல் உணவுக்காக ரூ. 20 லட்சமும், பின்தங்கிய வகுப்பினருக்கு சலுகை அளிக்க சென்ற வருஷத்தைவிட ரூ. 40 லட்சம் அதிகமாக ஒதுக்கி யிருக்கிறார்கள். ஹரிஜனங்களுக்கு 5,000 வீடுகள் கட்டுவதற்கு மானியமாக 27 லட்சம் ரூபாய்

ஒதுக்கியிருக்கிறார்கள். இது போதாது. எங்கள் பிரதேசம் போன்ற டெல்டாப் பிரதேசங்களில், நியாய வாரச் சட்டம் வந்ததினால், ஹரிஜனங்கள் சௌகரியமாக வாழ வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஐயாயிரம் வீடுகள் என்றால், ஒரு ஜில்லாவுக்கு 500 வீடுகள்தான் வரும். தவிர, இப்பொழுது கொடுக்கப்படும் ரூ. 550 போதாது. இதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். பாதித் தொகையை மான்யமாகவும், பாதியைக் கடனாகவும் கொடுத்து அதிகமாக வீடுகளைக் கட்ட வேண்டும்.

அடுத்தபடியாக, அநேக இடங்களில் விவசாயிகள் "டீசல்" எண்ணெயை உபயோகப்படுத்துகிறார்கள். விவசாயத்திற்காக உபயோகப்படும் டீசல் எண்ணெய்மீதுள்ள வரிக்கு விலக்கு அளிக்கவேண்டும். எவ்வளவு எஞ்சின்கள் இருக்கின்றன என்று கணக்கெடுத்து, மழை காலம் போக மற்ற காலங்களில் எவ்வளவு தேவைப்படுமோ, அதற்கு கூப்பன் கொடுத்து ஏற்பாடு செய்துவிடலாம்.

நிலத்திற்கு கூடிய சீக்கிரத்தில் உச்ச வரம்பு கட்டப்போவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இப்பொழுது விவசாய வருமான வரி கொண்டு வரவேண்டியதில்லை. ஏற்கெனவேயே, 500 ரூபாய்க்கு மேல் தீர்வை செலுத்துகிறவர்களுக்கு வரி இருப்பதனால், சின்ன விவசாயிகளுக்கு கஷ்டம் ஏற்படும். கணக்கு வைத்துக்கொள்வதில் பல சிக்கல்கள் ஏற்படும். உணவு உற்பத்தி அதிகரிக்கவேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்திலே இந்த மாதிரி வரி விதிப்பை யோசனை பண்ணி செய்யலாமென்று சொல்ல விரும்புகிறேன்.

சிதம்பரத்தில் அண்ணாமலை ஸர்வகலாசாலை இருக்கிறது. விவசாயத்தைப் பாடமாக எடுத்துக்கொண்டு படிப்பவர்கள் 150 மாணவர்களுக்கு மேல் இருக்கிறார்கள். அங்கே 200 ஏக்கருக்கு மேல் நஞ்சை நிலமிருக்கிறது. கோயம்புத்தூரில் விவசாயக் கல்லூரி ஏற்பட்ட பிறகு அந்தப் பிராந்தியத்திலுள்ளவர்கள் விவசாயத்துறையில் முன்னேறி வருகிறார்கள். ஆகவே சிதம்பரத்தில் ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்தினால் டெல்டாப் பகுதியிலுள்ள 2, 3 ஜில்லாக்களுக்கு சௌகரியமாயிருக்கும். இதற்கான வசதிகள் அண்ணாமலை ஸர்வ கலாசாலையிலிருக்கின்றன. சர்க்கார் தொகை கொடுத்து அதை விஸ்தரிக்கலாம். விவசாயத்தை "**professional course**" ஆக எடுத்துப்படிப்பவர்கள் 150 மாணவர்களுக்கு மேல் இருப்பதால், சிதம்பரம் யூனிவர்ஸிட்டியால் ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**4-50 p.m.** அடுத்தபடியாக பாதாள சாக்கடை திட்டத்தை சிதம்பரம் மாவட்டத்தில் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசாங்கம் திட்டம் வகுத்தார்கள். ஜனங்களுடைய கஷ்டத்தை உணர்ந்து அரசாங்கம் இதற்கு ப்ரையாரிட்டி கொடுக்க வேண்டும்; கொடுத்திருக்கிறார்கள். இந்த வருஷ பட்ஜெட்டில் அதற்கு பணம் ஒதுக்கவில்லை. அதனால் அதற்கு விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் அங்கு பாதாள சாக்கடை வசதி இல்லாமல் இருப்பதால் அங்கு வாதக்கால் நோய் (பிலேரியல்) அதிகமாக இருக்கிறது என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது.

சிதம்பரம் தாலூகாவில் ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுக்கள் கிடைப்பது என்பது கஷ்டமாக இருக்கிறது. ஏனென்றால் அங்கே இருப்பவையெல்லாம் நஞ்சை நிலங்கள். ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுக்களை வழங்குவதற்கு தனியாக ஒரு தாசில்தாரைப்போட்டு அங்குள்ள 300 கிராமங்களில் எந்தந்த கிராமங்களில் மனைக்கட்டுகள் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் கணக்கெடுத்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்பொழுது அப்படிப்பட்ட கணக்கும் எடுத்து வைத்திருக்கிறார்கள். அங்கு நஞ்சை நிலத்தை விலைக்கு வாங்க வேண்டியதாக இருப்பதால் ஹரிஜனங்களால் அதை வாங்க முடியவில்லை. அதுவும் சொந்தமாக வாங்க முடியவில்லை. அதனால் இந்த திட்டத்தை அரசாங்கமே எடுத்துக்கொண்டு ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி





அரசாங்கம் கவனித்து வந்தாலும் இதை இந்த வருஷத்திலேயே எடுத்து முடிக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு என்று மூன்று அல்லது நான்கு லட்சம் ரூபாய் ஒதுக்கியாகிலும் அதை முடித்துக் கொடுக்க வேண்டும்.

சிதம்பரத்தில் ஆஸ்பத்திரி வசதி குறைவாக இருக்கிறது. அங்கு ஒரு யூனிவர்சிட்டி இருப்பதோடு அங்கு அநேகம் யாத்திரிகர்கள் வருகின்றார்கள். அப்படி வரக்கூடிய இடத்தில் ஆஸ்பத்திரி வசதி குறைவாக இருக்கிறது. சிதம்பரத்திற்கு கனம் மந்திரி அவர்கள் வந்தபோது இதைப் பற்றி குறிப்பிட்டேன். அதைப்பற்றி யோசிப்பதாகச் சொன்னார்கள். பொது மக்களும் அதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். இதற்கு வேண்டிய இடத்தையும் கேட்டவுடன் பார்த்து தேர்ந்தெடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். சுமார் பத்து அல்லது பதினைந்து ஏக்கர் நிலத்தை அதற்கு என்று ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே இந்த வருஷத்திலேயே அங்கு ஒரு ஆஸ்பத்திரி வசதியைச் செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

குஷ்டரோகம் தென்னாற்காடு ஜில்லாவில் அதிகமாக இருக்கிறது. உலகத்திலேயே யூனிட்வாரியாக எடுத்துப்பார்த்தால் இந்த தென் ஆற்காடு ஜில்லாவை ஒரு யூனிட்டாக எடுத்துக்கொண்டு பார்த்தால் அங்கு தான் அதிகப்படியாக ஜனங்கள் குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வரும். இதைப்பற்றி நான் பல தடவை பல முறையில் சொல்லியிருக்கிறேன். பல அங்கத்தினர்களும் இதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது செங்கற்பட்டு ஜில்லாவில் ஒரு குஷ்டரோக ஆஸ்பத்திரியை அமைத்து ஆராய்ச்சியும் செய்து வருகிறார்கள். அப்படி அங்கு ஆரம்பித்து சிகிச்சையும் செய்து கொண்டு வருகிறார்கள். அதைப்போலவே தென்னாற்காடு ஜில்லாவிலும் ஒரு ஆஸ்பத்திரியை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கு ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க வேண்டியது அவசியம் இல்லை. அதை செங்கற்பட்டு ஜில்லாவிலேயே வைத்துக்கொள்ளலாம். இங்கு ஒரு ஆஸ்பத்திரியை அமைத்து ஜனங்களுக்கு சிகிச்சையை மட்டும் ஆரம்பித்தால் போதுமானது. இதற்கு கால தாமதம் ஆகக்கூடாது என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு என்று தனியாக ஆஸ்பத்திரியை அமைக்காவிட்டாலும் இப்பொழுது இருக்கக்கூடிய தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியில் குஷ்டரோகத்திற்கு சிகிச்சை செய்ய ஒரு பிரிவை அமைத்துக்கொடுத்து சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய மருந்துகளையும் வாங்கிக்கொடுத்து டாக்டரையும் நியமித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். உலகத்திலேயே கணக்கெடுத்துப் பார்த்தால் அங்குதான் அதிகப்படியான ஜனங்கள் இந்த வியாதியினால் பாதிக்கப்பட்டிருப்பது நன்றாகத் தெரியும். அதனால் இதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிறு நில சொந்தக்காரர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று பல முறை சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். இதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. ANANDAN :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய வரவு செலவு திட்டத்தைப்பற்றி என்னுடைய கருத்துகளை சொல்லுகிறேன். தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் தென்னாற்க்காடு மாவட்டம் கள்ளக்குரிச்சி தாலூகாவில் சங்கரபுரம், பாக்கம், ரிஷிவந்தியம், துருகம் இதைப்போன்ற பல பிர்க்காக்கள் பிற்போக்கான நிலைமையில் இருக்கின்றன. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தை அந்த பிர்க்காக்களுக்கு பரப்பி அங்குள்ள விவசாயிகளையும் பின் தங்கிய வகுப்பினர்களையும், நல்ல முறைக்கு கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சர்க்காரை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால் அந்தத் தாலூகாக்கள் ஏற்கெனவே அரசாங்கத்தினுடைய கவனக்குறைவால் மிக்க பின் தங்கிய பிர்க்காக்களாக

[Sri M. Anandan] [4th March 1958

இருக்கின்றன. ஏற்கெனவே அங்கு சர்க்காருடைய கவனக்குறைவு அதிகமாக இருக்கிறது. அத்துடன் கூட அங்குள்ள காங்கிரஸ் அனுதாபிகள், இன்னும் மற்றவர்கள் அங்குள்ள ப்ளாக்குகளை மாற்றிவிட்டார்கள். திட்டகுடி, உளுந்தூர்பேட்டை பிர்க்காக்களை மாற்றி விட்டார்கள். ஆகவே அந்த பிளாக்கை இந்த நான்கு பிர்க்காக்களையும் அந்த திட்டத்தின் கீழ் கொண்டு வந்து பொது மக்களுக்கு நல்ல வகையில் பணியாற்ற வேண்டும் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வியைப் பொறுத்த மட்டில் எங்கள் தாலூகாவில் கல்வி நல்ல முறையில் இல்லை. ஏனென்றால் அங்கே ஹரிஜனப் பிள்ளைகளில் 100-க்கு 25 பேர்களுக்குக் கூட படிப்பு இல்லை. ஆகவே அவர்களுக்கு அங்கு கட்டாயக் கல்வி முறையை அமைத்து கல்விச்சாலைகளையும் அமைத்துக்கொடுக்க சர்க்கார் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்குள்ள ஹரிஜனப் பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடம் வருவதற்குக் கூட வசதி கிடையாது. அவர்களுக்கு வேண்டிய பொருள் இல்லை, வசதி இல்லை. பஞ்சம், பட்டினியால் அவர்கள் மிகவும் வாடி இருக்கிறார்கள். அதனால் அவர்கள் படிக்கக்கூட வசதி இல்லாமல் பள்ளிக்கூடம் செல்லாமல் இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு கல்வி வசதி செய்துகொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆயிரம் ஜனத்தொகையுள்ள கிராமங்களில் தனியான பள்ளிக்கூடங்களை அமைத்து கட்டாய கல்வி முறையையும் கொண்டு வந்து ஹரிஜனங்களிடையே கல்வியை பெருக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அத்துடன் ஏழை, பணக்கார பிள்ளைகளுக்கும் பின் தங்கிய வகுப்பினர் பிள்ளைகளுக்கும் போதிய உணவு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இது போன்று சின்னச்சேலம், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், திருவண்ணாமலை வழியாக ரோட்டு போட்டுக் கொடுத்து, அதையும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் போட்டுக்கொடுத்து, ரயில் பாதை வசதி செங்கல்பட்டு வழியாக செய்து கொடுத்தால் அங்குள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும். இது ஜனங்களுடைய போக்குவரத்துக்கு நன்மையாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அத்துடன் சங்கராபுரத்திற்குப் பக்கத்திலுள்ள மூங்கில்துறைப்பட்டு பெண்ணை ஆற்றில் ஒரு பாலத்தையும் கட்டிக்கொடுக்கும்படியாக நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதையும் கட்டிக் கொடுத்தால் அங்குள்ள மக்களுக்கு வசதி ஏற்பட்டு போக்குவரத்துக்கும் வசதியாக இருக்கும் என்று சொல்லுகிறேன். இது போன்று கள்ளகுறிச்சி வடநந்தல் வழியாக போகக்கூடிய ஆற்றிற்கு ஒரு பாலம் கட்டிக்கொடுத்தால் அதுவும் அங்குள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அங்குள்ள மலை ஜாதியினர்களும் விவசாய மக்களும், மற்றவர்களும் இந்த வசதி இல்லாமல் இப்பொழுது கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நீர்ப்பாசனத்தைப்பற்றி குறிப்பிடும்போது நீர்பாசன வசதியைப்பற்றி மராமத்து மந்திரி குறிப்பிட்டிருக்கிறார். எங்கள் தாலூகாவில் மேட்டுப்பாங்கான பிரதேசம் அநேகம் இருக்கின்றன. அங்கு மூன்று ஆறுகள் மணியாறு, முத்தாறு, கோமுகாநதி ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்த ஆறுகளில் சிறிய அணைகளைக் கட்டிக்கொடுத்தால் அருகாமையிலுள்ள ஏரிகளுக்கு அதிலுள்ள தண்ணீரை கால்வாய்களின் மூலமாகக் கொண்டுபோய் விவசாயத்திற்கு பயன்படுத்திக் கொள்ளுவதற்கு வசதியாக இருக்கும். அந்தப் பிராந்தியத்தில் இப்படிப்பட்ட சூலாங்குறிச்சி அருகாமையில் சிறு அணைகளைக் கட்டிக் கொடுத்தால் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் பாயும். வடக்குநந்தல் அருகாமையில் ஒரு கால்வாய் ஓடி வருகிறது. அதில் சதா காலமும் நீர் வற்றாமல் ஓடிக்கொண்டு வருகிறது. அங்கு ஒரு அணையைக் கட்டிக்கொடுத்து விவசாயிகளுக்கு உதவி செய்தால் சுமார் 300 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் பாய்வதற்கு வசதி ஏற்படும். இது போன்று இன்னும் சில ஆறுகள் இருக்கின்றன. அவைகளில் அணைகளைக் கட்டிக்கொடுத்து அவைகளுக்கு



4th March 1958] [Sri M. Anandan]

அருகாமையிலுள்ள ஏரிகளில் அந்தத் தண்ணீரை நிரப்பிக் கொடுத்தால் அங்குள்ள விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்கு சௌகர்யமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்கள் பிரதேசம் மேட்டுப் பிரதேசமாக இருக்கிறபடியால் இதைச் செய்து கொடுத்தால் வசதியாக இருக்கும். சில இடங்களில் சேரிக்குச் செல்வதற்கு வழியே கிடையாது. அதுவும் கள்ளக்குறிச்சியில் இப்படி வழி இல்லாமல் தாலூக்காவுக்கு போக வழியில்லாமல் வருந்தி கஷ்டம் அடைகிறார்கள். ஹரிஜனமக்களின் நிலைமை உடனே கவனிக்கவும். மலைபக்கம் அங்குள்ள ஹரிஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கு ஒரு காட்டாறு வருகிறது. அக்கராபாளையம் வடக்கநந்தல் வழி அங்கு ரோடுகள் இல்லாமல் இருப்பதால் தண்ணீர் வரும் காலங்களில் அங்குள்ள ஹரிஜனங்கள் போக்குவரத்து செய்வதற்கு வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இதைப்பற்றி பலவிதமான மகஜர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாளது வரையில் அரசாங்கம் இதை கவனித்ததாகத் தெரியவில்லை. அங்கு ரோடு போடுவதற்கு கஷ்டமாக இருக்கிறது. கள்ளக்குரிச்சியில் மக்கான்தார் மானியம் அங்குள்ள நிலம் மானியமாக இருக்கிறது. அதனால் அந்த நிலத்தை சர்க்கார் வாங்கி ஹரிஜனங்களுக்கு 3 சங்கலி தூரம் ரோடு போட்டுக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கள்ளக்குரிச்சியில் அங்குள்ள ஹரிஜனங்களுக்கு கிணறு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அங்கு 35 அடி ஆழத்தில் ஒரு ஆட்டின் பம்பு குழாய் உடனடியாக போட்டு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அங்குள்ள பஞ்சாயத்துக்கு அப்படி செய்து கொடுக்கவேண்டும் என்று ஒரு உத்தரவு போட்டு அங்கு ஆட்டின் கைபிடி பம்பு செட்டு கிணற்றை வெட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்தால் அங்குள்ள ஹரிஜனங்களுக்கு குடி தண்ணீர் வசதியாக இருக்கும். இது போன்று பல இடங்களில் கிணறுகள் கிடையாது. ஹரிஜனங்களுக்கு வீடுகள் இல்லாமல் கிணறுகள் இல்லாமல் மிகவும் வருத்தம் அடைகிறார்கள். சங்கராபுரம் பிர்க்கா புதுப்பேட்டை கிராமத்தில் விவசாயிகள் (5 p.m.) கலெக்டர் முன்னால் ஒரு கூட்டம் போட்டு பல மகஜர்களைக் கொடுத்தார்கள். அங்கு வீடுகள் வழங்கப்படவேண்டும் என்று பல ஆயிரக்கணக்கான மகஜர்கள் அப்படிக் கொடுத்தார்கள். அவர்கள் ஆயிரக்கணக்கான மகஜர்களைக் கொடுத்தார்கள் வரி வஜா செய்யப்படவேண்டுமென்று. நிலம் இல்லாத ஏழைகள் நிலம் வேண்டுமென்று கேட்டு மகஜர்கள் கொடுத்தார்கள். வீடில்லாத ஏழை ஹரிஜனங்களும், பின்தங்கிய வகுப்பினர்களும் தங்களுக்கு வீடு கிடையாது, நிலம் கிடையாது என்று கலெக்டர் முன்னிலையில் பல விதமான விண்ணப்பங்களைக் கொடுத்தும் நாளது வரைக்கும் இந்த அரசாங்கம் அதைப்பற்றி யாதொரு நடவடிக்கையும் எடுத்தது கிடையாது.

புதுப்பட்டு கிராமத்திலே 30 ஆயிரம் ஏக்கர் பஞ்சம தரிசு நிலம் இருந்தது. நானும் தாசில்தாரும் அந்த நிலங்களைச் சேரிவாழ் மக்களுக்கு 53 பிரிவாகப் பிரித்துக் கொடுத்துவிட்டு வந்தோம். அங்கே உடனடியாக காங்கிரஸ் அனுதாபிகள் சென்று அந்த 53 பாகத்தை 100 பாகமாகப் பிரித்து ஏதோ செய்யத்தவறாக திட்டம் இட்டு வருவதாக வதந்தி இருந்துவருகிறது. அப்படியிருந்தாலும் அந்த 30 ஏக்கர் நிலத்தையும் ஏற்கெனவே பெற்றுக்கொண்ட 53 பேருக்குமே பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதைத் தவிர, இன்னும் இருக்கும் புறம்போக்கு தரிசு நிலங்களை பணக்காரர்கள் ஏழைகள் பேரால் பட்டா வாங்கி தாங்கள் எடுத்துக்கொள்வதாக வதந்தி வந்து கொண்டிருக்கிறது. அதையும் அரசாங்கம் உடனடியாகக் கண்டுபிடித்து, ஏழைகள் போடும் விண்ணப்பங்களை உடனடியாகக் கவனித்து, அவர்களுக்கு நிலம் போய்ச் சேரும்படியாக உடனடியாக ஆவன செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

தற்சமயம் 5,800 ஜோடி காளை மாடுகளை ஹரிஜனங்களுக்குக் கொடுத்தாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே 5,800 ஜோடி காளை மாடுகளும் ஹரிஜனங்களுக்குக் கிடைக்கவே இல்லை. ஏனென்றால், ஹரிஜனங்களை ஏமாற்றி, ஹரிஜனங்கள் பேரால் அந்தக் காளை மாடுகளை

பணக்காரர்கள் தான் வழக்கம்போல் வாங்கிக்கொண்டு, ஹரிஜனங்களை சும்மா அனுப்பிவிடுவது வழக்கம். நாட்டுப்புறங்களிலே இதே பழக்கமாக நடந்துகொண்டிருக்கிறது. ஹரிஜனங்களுக்காக அரசாங்கம் கொடுக்கும் கடன்கள் ஹரிஜனங்களுக்கே போய்ச் சேரும்படியாகவும், காளை மாடுகளும் ஹரிஜனங்களுக்கே போய்ச் சேரும்படியாகவும் ஏற்பாடு செய்து, அதற்குத் தகுந்த உத்தியோகஸ்தர்களைப் போடுவதற்கு திடீர் உத்தரவுகளை அரசாங்கம் போடவேண்டும். ஏனென்றால், நாட்டுப்புறங்களிலே சதா காலமும் பணக்கார மிராசுதார்கள் ஹரிஜனங்களை ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், அங்கே ஜாதி வித்தியாசங்கள் அதிகமாக இருக்கின்றன. பள்ளிகளிலும் வித்தியாசம் தான், தபாலாபீசுகளிலும் வித்தியாசம் தான், சந்தை கூடும் இடங்களிலும் வித்தியாசம்தான். இம்மாதிரி பழக்கங்கள் அதிகமாக நடந்து கொண்டு வருகின்றன. கனம் மின்சார அமைச்சர் அவர்களுக்குக் கூட இது தெரியும். ஏனென்றால், அவர் சங்கராபுரத்திற்கு தண்ணீர் டாங்க் திறக்க வந்திருந்தார். மின்சாரம் சம்பந்தமாக அனேக விதமான மகஜர்களை அவரிடம் வாங்கிக் கொடுத்திருக்கிறேன். நாளது வரைக்கும், அவர் அவைகளின் பேரில் தக்க நடவடிக்கை ஒன்றும் எடுத்ததாகத் தெரியவில்லை. அங்கே நீர்ப்பாசன வசதி குறைவாக இருக்கிறது. ஆகவே, கனம் மந்திரி அவர்கள் உடனடியாக அங்கே மின்சார வசதியை ஏற்படுத்தி, அங்கே வாழும் விவசாயிகளுக்கும் குடியானவர்களுக்கும் அனுகூலமாக இருக்கும்பொருட்டு இன்னும் அதிகமான கிராமங்களில் மின்சாரம் வழங்க சாங்ஷன் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(இத்தருணம் டெபுடி ஸ்பீக்கர் தலைமை வகித்தார்).

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR :** உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த பட்ஜெட்டை ஆதரித்து சில விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய மாகாணத்தின் நிதி நிலைமையை அனுசரித்து, அமைச்சர் அவர்கள் எவ்வளவு வருவாய் வருகிறதோ அதை நல்ல முறையிலே தீர்க்கமாக ஆலோசனை செய்து, எந்த எந்த இனங்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கவேண்டுமோ அதன்படி ஒதுக்கி, எந்த எந்தக் காரியங்களை முன்னால் செய்யவேண்டுமோ, அதற்குத் தகுந்த முறையிலே பட்ஜெட்டைத் தீர்மானித்து நல்லதோர் பட்ஜெட்டை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்.

அதிலே குற்றங்குறைகள் இருக்கலாம். நம்முடைய தேவைகள் அதிகமாக இருக்கிறபடியினாலே, அதில் கண்டுள்ள திட்டங்கள் நமக்குப் போதாமல் இருக்கலாம். அதனாலேயே பட்ஜெட்டானது நல்ல முறையிலே இல்லை என்று குறை சொல்லக்கூடிய அங்கத்தினர்கள் சற்று யோசனை செய்து பார்க்க வேண்டியது அவசியம்.

நம்முடைய மாகாணத்தின் நிதி நிலைமை எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவிலேதான் பட்ஜெட்டைத் தீர்மானிக்க முடியுமே தவிர, பற்றாக் குறையிலே பட்ஜெட்டைத் தயாரித்து, திட்டங்களை முழுதும் நிறைவேற்றாமல், குறைந்த அளவிலே நிறைவேற்றுவதிலே பிரயோஜனம் இல்லை. திட்டங்களுக்குப் பணம் போதாமல் அவைகளை உருப்படாமல் செய்வதைவிட, வரக்கூடிய வருவாய்க்குத் தகுந்த முறையில் திட்டங்கள் தீட்டி, அவைகளை நல்ல முறையிலே நிறைவேற்றினால்தான், நம்முடைய அரசாங்கம் மக்களுக்கு நன்மை செய்ததாகச் சொல்ல முடியும். அந்த முறையிலே இப்பொழுது வந்துள்ள பட்ஜெட் அறிக்கை நல்லதோர் சந்தர்ப்பத்தை உண்டுபண்ணியிருக்கிறது. நன்கு ஆராய்ந்துதான் இந்த பட்ஜெட்டை நிதி மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்.

ஆனால், பல பேர்கள் சொல்லுகிறார்கள், இப்பொழுது போட்டிருக்கும் வரியானது கூடாது என்று. அடுத்தபடியாக, டீசல் எண்ணெய்க்கு வரி போட்டதைக் கண்டிக்கிறார்கள். எந்த வரி போட்டாலும் உடனே கண்டனம் தெரிவிக்கிறார்கள். அடுத்த வரியிலேயே மேலும் கோரிக்கை விடுகிறார்கள்—எங்களுக்கு ரோடு வசதி வேண்டும், மின்சார வசதி வேண்டும், அணைக்கட்டுகள் வேண்டும், ஆஸ்பத்திரிகள் வேண்டும், பள்ளிக்கூடங்கள் வேண்டும் என்று. பட்ஜெட்டிலே வரி விதிப்பைப்பற்றி எதிர்க்கும் அதே





மூச்சிலேயே மேலும் மேலும் வசதிகள் வேண்டுமென்று சொல்லுகிற அன்பர்கள் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். அங்கத்தினர்களாகிய நாம் பொறுப்புடன் பேசவேண்டும். நாட்டுக்கு நல்லது செய்யக்கூடிய நிலைமையை உண்டுபண்ணி, மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நல்லதோர் சூழ்நிலையை உண்டுபண்ணுவதற்கேற்ப அங்கத்தினர்கள் பொறுப்புடன் கவனித்துப் பேசுவார்களானால் வெளியிலே உள்ள பொது மக்கள் நம்மைப் பொறுப்புள்ளவர்களாகக் கருதி நம்மீது நம்பிக்கை வைத்து, நாம் வகுக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதிலே ஒத்துழைப்பார்கள் என்பதை கனம் அங்கத்தினர்களும் யோசித்து நல்லதோர் முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, இந்தச் சிறு சேமிப்பு ரொம்பக் கண்டிப்பான முறையிலே, மக்களை கஷ்டப்படுத்தி, சர்வாதிகார முறையிலே வசூலிக்கப்படுவதாக கவர்னர் உரைமீது விவாதிக்கக்கூடிய நேரத்திலும் சொன்னார்கள், இப்பொழுதும் அதைப்பற்றி பேசுகிறார்கள். அப்படிச் சொல்வது துரதிருஷ்டவசமானது. எங்களுடைய ஜில்லாவில்கூட, நானும் சர்க்கார் அதிகாரிகளுடன் இருந்து பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை வசூலித்துக் கொடுத்திருக்கிறோம். எந்த இடத்திலாவது வசூலிக்கக்கூடிய அதிகாரிகள் நிர்ப்பந்தப்படுத்தியோ, கட்டாயப்படுத்தியோ, கொடுத்தே ஆகவேண்டுமென்று வற்புறுத்துகிற முறையிலோ நடந்துகொண்டார்கள் என்று சொல்லமுடியாது. இதை நான் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

சிறு சேமிப்பு நிதிக்குப் பணம் கொடுக்கக்கூடிய சக்தி பல விவசாயிகளுக்கு இருப்பதில்லை. பருவ காலத்தில் மழை பெய்யாததால், விவசாயம் குன்றிப்போயிருக்கும் நிலைமையை உணர்ந்து, அவர்களுக்கு அதிகம் தொந்தரவு கொடுக்கக்கூடாதென்று கலெக்டர், தாசில்தார், டெபுடி தாசில்தார் போன்றவர்கள் விவசாயிகளை அதிகமாக வற்புறுத்திக் கேட்கவில்லை. விவசாயிகளாக இஷ்டப்பட்டு கொடுத்தால் வாங்கிக்கொள்ளவேண்டும், இல்லாவிட்டால், அவர்களுக்குக் கஷ்டம் கொடுக்கக்கூடாதென்று வற்புறுத்தாமல் இருந்தார்கள். ஆனால், ஒரு சில முதலாளிகளிடமோ, பணக்காரர்களிடமோ, பெரிய வியாபாரிகளிடத்திலோ அதிகாரிகள் சற்று கண்டிப்பாக இருந்து இந்த நிதிக்குத் தொகை வாங்கினால், அதைத் தவறு என்று அங்கத்தினர்கள் சொன்னால், எந்த முறையில்தான் இந்த ராஜ்யத்திலே போட்டிருக்கும் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று நான் கேட்கிறேன். பணக்காரர்களை இவ்வளவு ஆயிரம் ரூபாய் இத்தகைய நிதிக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்காவிட்டால், அவர்களாகவே கொண்டுவந்து கொடுக்கக்கூடிய வழக்கம் எந்த ராஜ்யத்திலும் இல்லை என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். அவர்களிடத்திலிருந்து ஓரளவு கண்டிப்பாகக் கேட்டால்தான் கொடுப்பார்கள். திட்டங்களுக்கு நிதி ஏராளமாக வேண்டியிருக்கிறது, அதற்காக ஓரளவு ஒத்தாசை செய்யவேண்டு 5–10 p.m.
மென்று சொன்னால்தான் அவர்கள் கொடுப்பார்கள். இது சர்வாதிகாரமா ? இது மிரட்டலா ? இது அவர்களை ஏமாற்றுவதற்காகச் செய்யப்படுவதா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். எந்த அறிக்கையை, எந்த வேண்டுகோளை யார் விடுத்தாலும் தாங்களாகவே இந்த நாட்டு மக்கள் முன்வந்து பணத்தைக் கொடுத்துவிடுவார்கள் என்று நினைப்பது தப்பான கருத்தாகும். காங்கிரஸ்காரர்களுக்கு செல்வாக்கு இருக்கிறது என்றால் நாட்டு மக்களிடத்திலே போய்ச் சொல்லட்டும். சொன்னால் அவர்கள் பணத்தை எடுத்துக் கொடுத்தால் வாங்கிக்கொள்ளட்டும் என்று ஸ்ரீ நல்லசிவம் அவர்கள் சொல்லலாம். அது நடவாத காரியமும் கூட. எங்கள் பிர்க்காவில், தாலூக்காக்களில், ஜில்லாவில் மழை இல்லை. விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் பெருந்தொகை எப்படி வசூல் செய்யமுடியும் என்று கேட்கிறேன். இப்போது பத்தாயிரம் ரூபாய் நன்கொடை ஒவ்வொரு கிராமங்களிலும் எதிர்பார்க்கிறோம். பணக்காரர்களிடம் கேட்காமல் எப்படி பணம் கிடைக்கும் என்று கேட்கிறேன். அரசாங்கத்தின் மீது பழி சுமத்தவேண்டும் என்பதற்காக எது வேண்டுமானாலும் சொல்லலாம் என்றால் அது நியாயமாகாது. சர்வாதிகாரத் தன்மையில் பணம் வசூலிப்பதாக அவர்கள் சொல்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

இரண்டாவதாக உணவு உற்பத்திக்காக நமது பட்ஜெட்டிலே லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறார்கள். உணவு உற்பத்தி இந்த மாகாணத்தில் அதிகம் ஆகவில்லையென்று சொல்லமுடியாது. பவானி சாகர் வாய்க்கால், அமராவதி திட்டம் இவைகளினால் புதிதாகப் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் விவசாயம் செய்யப்படுகிறதா இல்லையா என்பதை கனம் அங்கத்தினர்கள் யோசித்துப்பார்க்கவேண்டும். கலெக்டர் முதற்கொண்டு தாசில்தார், கணக்குப்பிள்ளைவரையில் கொடுக்கிற புள்ளி விவரங்கள் சரியில்லையென்று எனது நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் சொன்னார்கள். அவர்களே உண்மை நிலைமையை நன்ருக உணர்ந்து பார்க்கலாம். நாட்டில் இன்று இருக்கக்கூடிய நிலைமை நன்ருக உணர்ந்து பார்த்தால் எந்தவிதமான குற்றமும் சொல்வதற்கு இடமில்லாமல் வரவு செலவுக் கணக்கு அமைந்திருக்கிறது என்பதை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளவேண்டும். ஜப்பான் சாகுபடி முறைப்படி ஒரு ஏக்கருக்கு குறைந்தது 2,550 பவுண்டு நெல் விளைச்சல் விளைகிறது என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். அதில் பாதிகூட நம் ராஜ்யத்தில் விளையவில்லையென்று சொன்ஞல் நாம் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய இன்னும் அதிகமான நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கமும் இவ்விஷயத்தில் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

அதோடு விவ்சாயிகளுக்கு உதவி செய்யவேண்டும் என்பதற்கு அரசாங்கம் ஏராளமான பணத்தை ஒதுக்குகிருர்கள். பலவகையிலும் விவசாயிகளுக்கு கடன் உதவி செய்ய அரசாங்கம் பணம் ஒதுக்குகிறார்களே தவிர, இவ்விஷயம் விவ்சாயிகளுக்குத் தெளிவாக அறிவிக்கப்படுவது இல்லை. கால்நடை அபிவிருத்திக்காக அரசாங்கம் எத்தனையோ காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. ஆனால் இது ஒன்றும் கிராமங்களில் உள்ள மக்களுக்குப் பயன் அளிக்கவில்லை. கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு நோய் நொடிகள் வந்தால் உடனே வைத்தியம் செய்வதற்கும் வசதி கிடையாது. கிராமாந்திரங்களில் கால்நடை மருத்துவசாலைகளை ஏற்படுத்தவேண்டும். கால்நடை ஆஸ்பத்திரிகள் கிராமங்களில் இல்லாத காரணத்திஞல் பத்துப் பன்னிரண்டு மைல்கள் நோய் வந்த மாடுகளை ஓட்டிச் செல்லும்போது அவை இறந்துகூட போகின்றன.

அதோடு இப்போது நமது அரசாங்கத்தாரால் போடக்கூடிய, நன்மை பயக்கும் பல திட்டங்கள் நகரப் பகுதிகளில் அதிகமாக இருக்கிறதேயொழிய, கிராமப் பகுதிகள் கவனிக்கப்படாமலேயே இருக்கின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும்கூட கிராமப் பகுதிகளில் உள்ள ரோடுகள் கவனிக்கப்படவில்லை. ஆஸ்பத்திரிகள் கவனிக்கப்படவில்லை. இன்னும் பலவிதமான கஷ்டநஷ்டங்கள் இருந்துகொண்டே இருக்கின்றன. ஆகவே உடனடியாக கிராமப் பகுதிகளில் எல்லாவகையான வசதிகளையும் செய்துகொடுக்க சர்க்கார் துரிதமான நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கைத்தறித் துணியானது அதிகம் தேங்கிக் கிடக்கிறது என்று, சொல்லப்படுகிறது. அந்தத் துணியை அதிகமாக உபயோகப்படுத்த வேண்டுமென்று டிக்கவிடத்தில் எல்லாக் கட்சிக்காரர்களும் பிரசாரம் செய்வதை ஒரு கொள்கையாக வைத்துக்கொண்டால் சீரும் சிறப்பும் பெற்ற அந்தத் தொழில் நிச்சயமாக ஓங்கும். எல்லாக் கட்சிக்காரர்களும் இத்துறையில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெண்ணந்தூரில் ஆஸ்பத்திரி ஏற்படுத்த வேண்டுமென்று பல விண்ணப்பங்கள் போட்டிருக்கிறோம். அங்குள்ள மக்களுடைய சுகாதார வசதியைக் கருதி உடனடியாக அங்கே ஆஸ்பத்திரியை நிருவ வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் அநேக விஷயங்கள் சொல்லவேண்டும். நாங்கள் பேசவரும்போது நேரமும் பத்து நிமிஷமாகக் குறைக்கப்பட்டுவிடுகிறது. பின்னல் சந்தர்ப்பம் கிடைத்தால் பேசலாம் என்று எண்ணி இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.





* **SRI M. K. SOMASUNDARAM :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட்டை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச முன் வந்துள்ளேன். பருவ மழை நன்ருகப் பெய்தது என்ருலும்கூட காலம் தப்பி, சரியான அளவு இல்லாத காரணத்திஞல் சிற்சில இடங்களில் பயிர் சேதமாகியிருக்கிறது. திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் முதலிய இடங்களில் பயிர் நாசமாகிவிட்டது. பாபநாசம் டாமில் தண்ணீர் இருந்தும் பயிர்களுக்கு காலத்தில் தண்ணீர் விடாத காரணத்திஞல் பயிர்கள் நாசமாகியிருக்கின்றன. தண்ணீர் சரியாக விடாததற்குக் காரணம் இது சம்பந்தப்பட்ட இலாக்காக்கள் இரு மந்திரிகளிடத்தில் இருப்பதனல் தக்க சமயத்தில் தண்ணீர் திறந்துவிடுவதற்கு முடியாமல் போய்விட்டது. இவை இரண்டும் ஒரு அமைச்சரிடம் இருந்தால் உடனடியாக உத்தரவு போடுவதற்கு வசதியாக இருந்திருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக விவசாயத்தை நன்கு அபிவிருத்தி செய்யவேண்டுமென்ருல் பருவ காலத்தில் பயிர் செய்வது முதலில் அவசியமாகும். அதற்கு நல்ல விதைகள், உரங்கள் எல்லாம் காலத்தில் விநியோகிக்கப்படவேண்டும் ரசாயன-உரங்களை விநியோகிக்கும்போது அதிகாரிகள் அதை எவ்வாறு உபயோகிக்கவேண்டும் என்றும் பிரசாரம் செய்யவேண்டும். அப்போதுதான் விவசாய மக்கள் அதன் உபயோகத்தை நன்கு உணர்ந்து வாங்குவார்கள். உரங்களை கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும் விநியோகிக்கவேண்டும். பயிர்களில் பூச்சி விழுவதைத் தடுப்பதற்கு ரசாயன உரங்களை எவ்வாறு உபயோகிப்பது என்பது விவசாயிகளுக்குத் தெரிவது இல்லை. அதிகாரிகள் மூலமாக அதையும் தெரியப்படுத்தவேண்டும்.

நீர்ப்பாசனம் சம்பந்தமாக அநேகம் அணைகள் கட்டப்படுகின்றன. அந்த அணைகளின் மூலமாகப் பல ஏக்கர் நஞ்சை சாகுபடி செய்வதற்கு வசதி இருக்கவேண்டும். குறிப்பாக மணிமுத்தாறு அணைக்கட்டு இப்போது திறந்துவிடப்பட்டிருக்கிறது. ஒரு தாலுக்காவில் இருந்து மற்றொரு தாலுக்காவுக்குத் தண்ணீர் பாய்ச்சக்கூடாது என்ற தடை உத்தரவிஞல் தகராறு ஏற்பட்டிருக்கிறது. இதனல் வயல்களில் பயிர்கள் தீய்ந்துபோய்விட்டன. உடனடியாக எந்த எந்த அதிகாரிகளுக்கு எப்படி உத்தரவு போடவேண்டுமோ அவ்வாறு போட்டு பயிர் நாசமாகாதபடியாக சர்க்கார் கவனித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அநேகம் நதிகள் கேரளா வழியாக அரபிக்கடலில் போய் விழுகிறது. அவற்றின் தண்ணீரைத் தேக்குவதற்கு ஏற்பாடு செய்தால் தக்க சமயத்தில் பயிர் செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் நினைப்பூட்டுகிறேன்.

விவசாயிகளுக்கு கடன் கொடுக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது. 5.20 p.m. விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் கடன் அவர்களின் கையில் நல்ல முறையில் போய் சேருவதில்லை என்ற புகார் இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன் அவர்கள் கையில் நல்ல முறையில் போய் சேருவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று நான் அரசாங்கத்தினிடம் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் பல ரோடுகள் போடப்படுகிறது. கிராமங்கள் ஒன்ருெடொன்று தொடர்பில்லாத நிலையில் இருப்பதால், ரோடு வசதி இல்லாததால், நல்ல முறையில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, குக்கிராமங்களில் நல்ல ரோடுபோடும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு போடும்படி மந்திரியவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, மின்சாரம். மின்சாரம் கிராமங்களில் விஸ்தரிக்கப்படுகிறது. அதை மேலும் நல்ல முறையில் எல்லா கிராமங்களுக்கும் விரிவு படுத்த அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அடுத்தபடி வீடு கட்டும் திட்டம். இந்த வீடு கட்டும் திட்டத்தில் பல சங்கடங்கள் இருக்கின்றன. திருநெல்வேலியில் இனம் கிராமங்கள் அதிகமாகயிருக்கிறது. அங்கு குடியிருக்கும் மக்கள், இனம் கிராமத்தில் இருப்பவர்களாதலால் அவர்கள் நிலத்தை சரியான முறையில் உபயோகப்படுத்திக்கொள்ள சக்தியற்றவர்களாக இருக்கிருர்கள். இனம் கிராமங்களில் ரோடுபோடுவது என்ருல் அதை அக்குயர் செய்ய சர்க்காரால் முடியாமல் இருக்கிறது. இனம் கிராமங்

[Sri M. K. Somasundaram] [4th March 1958

களில் சர்க்கார் அதிகமாக தலையிட முடியாது என்று சொல்கிறார்கள். சர்க்காருக்கே தலையிடமுடியாது என்று சொன்னால் சாதாரண மக்கள் அங்கு நடமாடவே முடியாமல் இருக்கிறார்கள். எது எப்படியிருந்தாலும், மக்களுக்கு தேவையான இடத்தை சர்க்கார் உடனடி அக்வயர் செய்து அந்த ஏழை மக்களுக்கு கொடுக்கவேண்டுமென்று நான் சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் கீழ், 200 ரூபாய் மான்யமாக கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த 200 ரூபாய் இருந்தால் அவனே தன் வீட்டை கட்டிக் கொள்ள முடியும். ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், அந்தத் திட்டத்தின்கீழ் முழு பணத்தையும் சர்க்காரேபோட்டு வீடு கட்டிக் கொடுக்கவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கோவில் நிலங்கள் பயிர் செய்யும் விவசாயத்தில், அவர்களுக்கு சரியான பங்கு கிடைப்பதில்லை. கோவில் நிலங்களை, ஏழை மக்களாக பார்த்து கொடுக்கும்படி எண்டோமெண்ட் மந்திரியவர்கள் ஏற்பாடு செய்தால் நலமாயிருக்கும் என்று சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்து வருகிறார்கள். அதன்பேரில் பலயிடங்களில் பல தகராறுகள் ஏற்பட்டுவருகின்றன. ஒரு வருடத்தில், ஜூன் மாதம் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுகிறது. ஆனால் அவர்களுக்கு மார்ச் மாதம் ஆகியும்கூட ஸ்காலர்ஷிப் கிடைப்பதில்லை. ஒரு தனிப்பட்ட ஸ்தாபனம் நடத்தும் பள்ளிக்கூடம் என்றால் அவர்கள் எத்தனை காலம் பொறுத்திருப்பார்கள். ஆகவே, உடனடியாக இந்தக் குறையை நிவர்த்தி செய்யவேண்டுமென்றும் மந்திரியவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு வருடம் கழித்து வீடு திரும்பும்வரையில் ஸ்காலர்ஷிப் ஸாங்ஷன் செய்து கிடைக்கவில்லை என்றால் அது மிகவும் வருந்தத்தக்க காரியமாகும். ஆகவே, உடனடியாக, ஆறு மாதத்திற்குள்ளாகவாவது அவர்களுக்கு ஸ்காலர்ஷிப்போய் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, மாணவர் விடுதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் பல விடுதிகள் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆக, எல்லா விடுதிகளையும் சேர்த்து ஒன்றாக ஆக்கினால்தான் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வழி செய்யமுடியும். எல்லாவற்றையும் சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும். தனிப்பட்ட ஸ்தாபனத்தின் கையில் இது இருக்கக்கூடாது. அடுத்தபடி கிணறுகள் வெட்டுவதில் சில சங்கடங்கள் இருக்கிறது. ஜாயிண்ட் பட்டா இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். புருஷனுக்கும் மனைவிக்கும் ஓரிடத்தில் இரு பட்டாக்கள் இருந்தால், ஜாயிண்ட் பட்டாவாக இருந்தால் அந்த இடத்தில் அவர்களுக்கு கிணறு தோண்ட வசதியில்லாமல் போய்விடுகிறது. ஆகவே, அவர்களுக்கும் மான்யத் தொகையில் இருந்து கிணறு வெட்டிக்கொள்ள சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமென்றும் நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, மாடு பிடித்துக் கொடுப்பது. அது நல்ல ஒரு திட்டந்தான். ஆனால் அதற்கு ஒரு ஊரில் இருந்து 10 பேர்கள் மனு போட்டால் அதை யாருக்கு என்று கொடுப்பது. திருநெல்வேலியில் மாடு பிடித்துக்கொடுப்பதற்கு எவ்வளவோ பேர்கள் மனுப் போட்டிருக்கிறார்கள். வந்த மனுக்களை எல்லாம் சேர்த்து அவைகளை குலுக்கிப் போட்டு யாருக்கு வருகிறதோ அவருக்கு கொடுக்கவேண்டுமென்று ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது நல்லதுதான். கிராம அதிகாரிகள் விளைவித்த சங்கடங்களினால்தான் இந்தமுறை ஏற்பட்டது. கடைசியாக, புகையிலை அபிவிருத்திக்காக அதிகமாக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. வெர்ஜீனியா புகையிலை, கோதாவரி, கிருஷ்ணா போன்ற ஜில்லாக்களில்தான் சாகுபடியாகிறது. அப் புகையிலை சாகுபடியை நம் மாகாணத்திலும், பல இடங்களில் சாகுபடி செய்ய, அதன் அபிவிருத்திக்கு வேண்டிய காரியங்களை செய்ய அரசாங்கம் முன் வரவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பத்தை கொடுத்த தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*SRI N. MARUDACHALAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள வரவு செலவுத் திட்டத்தின் மீது நான் சில விஷயங்களை குறிப்பிட விரும்புகிறேன்.



4th March 1958] [Sri N. Marudachalam]

அதாவது, இன்று ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை, 2 கோடி, 33 லட்சமாகும். இந்த 2 கோடி 33 லட்சம் ரூபாய் சென்ற நடப்பு வருஷத்தைக்காட்டிலும் நாற்பது லட்சம் அதிகம் என்று குறிப்பிடப்படுகிறது. அதே சமயத்தில் 1957-58 ம் வருடம் ஒதுக்கப்பட்ட தொகை 2 கோடி 42 லட்சமாகும். அதில் இருந்து இந்த வருடம் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 1957-58-ம் வருஷத்தைவிட, அந்த வருடம் ஒதுக்கப்பட்ட தொகையைவிட 9 லட்சம் குறைவாகிறது. திருத்தியமைக்கப்பட்ட பட்ஜெட்டில் இதன்பேரில் 40 லட்சம் அதிகம் என்று கூறப்படுகிறது. இந்த 2 கோடி 33 லட்சம் ரூபாயை இந்த சென்னை மாகாணத்தில் உள்ள ஹரிஜனங்களை கணக்கிட்டுப் பார்த்தால் ஏறக்குறைய இம் மாகாணத்தில் ஹரிஜனங்கள் ஜனத்தொகை கிட்டத்தட்ட 60 லட்சம் இருக்கிறது. இந்த 60 லட்சம் ஹரிஜனங்களுக்கு இந்த 2 கோடி 33 லட்சம் ரூபாயை பகிர்ந்து கொடுத்தால் தலைக்கு 4 ரூபாய்கூட வருவது கஷ்டம். இவ்வளவு குறைவான ஒரு தொகையைக்கொண்டு ஹரிஜன மக்களை எப்படி முன்னேற்றம் அடையச்செய்யமுடியும் என்று நான் கேட்கிறேன். ஹரிஜன முன்னேற்றத்திற்காக பல திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. ஹரிஜனங்களுக்கு மாடு வாங்கிக் கொடுப்பது ஒன்று. ஹரிஜனங்களுக்கு பின் ஸ்காலர்ஷிப் கொடுப்பதுபோன்ற பல திட்டங்கள் இருக்கின்றன. இத்திட்டங்களினால் ஹரிஜனங்கள் எவ்வளவு முன்னேறியிருக்கிறார்கள் என்று பார்த்தால் அவர்கள் எந்தவிதமான முன்னேற்றமும் அடைவதாகக் காணவில்லை. மதுக்கரை பிர்க்காவுக்கும், மதுரைக்கும், கோவைக்கும் 80 ஜோடி மாடுகள் வாங்கிக் கொடுக்க திட்டமிட்டிருக்கிறது. அதில், ஒரு ஜோடி மாடு 250 ரூபாய்க்கு வாங்க வேண்டும். அப்படி 250 ரூபாய்க்கு ஒரு ஜோடி மாடு வாங்கிக் கொடுப்பதோடு 35 ரூபாயும் கையில் விதைக்காக கொடுக்கிறார்கள். அதாவது அதன் தீவனத்திற்காக. இந்த மாட்டை வைத்துக்கொண்டு உழும்போது மாட்டை தள்ளிக்கொண்டுதான் போகவேண்டும்—அதன் பின்னால் கொஞ்சம் நாட்களுக்குப் பிறகு அதை கசாப்புக்கடைக்குத்தான் கொண்டுபோகவேண்டும். அந்த நிலைமையில்தான் இருக்க முடியும்—இன்று உழுவதற்கு தகுதியான மாடாக வாங்கவேண்டு 5-30 p.m. மென்றால் ஒரு மாட்டுக்கு 200 ரூபாய் 250 ரூபாய் கொடுக்கவேண்டும். ஆகையினால்தான் இந்த திட்டத்தில் அதிகப்படியான பணம் போனாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்ல மாடுகளை வாங்கி கொடுக்கவேண்டும். அதல்லாமல் மோசமான மாடுகளை இவர்களுக்கு வாங்கிக் கொடுப்பது என்பது அவர்களை உயர்த்துவதாக இருக்காது. மேலும் ஒரு வருஷத்தில் அவன் அந்த மாட்டை கசாப்பு கடைக்கு கொண்டுபோக வேண்டியதுதான். இது தவிர ஹரிஜனங்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்விதம் கொடுக்கிற பணம் காலாகாலத்தில் மாணவர்களுக்கு கிடைப்பதில்லை. அதாவது இப்போது பிப்ரவரி 28-ம் தேதிவரையிலும் மாணவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. 27-ம் தேதியன்று வாணியம்பாடி முனிசிபல் ஹைஸ்கூல் மாணவர்கள் அங்குள்ள கலெக்டர் அவர்களிடம் தூது கோஷ்டியாகப்போய் சொன்னார்கள். அதற்கு உடனடியாக வேண்டியது செய்வதாக சொன்னார்கள். இம்மாதிரியாக ஸ்காலர்ஷிப் சரியான காலத்தில் கிடைக்காமல் இருப்பதினால் அந்த ஸ்கூலில் இருக்கின்ற ஹெட்மாஸ்டர்கள் மாணவர்களை வெளியே போகும்படியாக கட்டளையிடுகிறார்கள். ஆகவே இந்த ஸ்காலர்ஷிப் பணம் உடனடியாக கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கு கிணறுகள் வெட்டிக் கொடுப்பதாக சொல்லப்படுகிறது. நான் ஆறு மாதங்களுக்கு முன்னால் தெறமநல்லூர் பகுதியில் கிணறுகள் வெட்டி கொடுக்கவேண்டும் என்று நாலைந்து தடவைகள் சொல்லியிருக்கிறேன். அதற்கு ஒருவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தோன்றுகிறது. இம்மாதிரியான காரியங்களில் ஹரிஜனங்களைப்பற்றி சிந்திப்பது இல்லை. இதைப்பற்றி சொல்லிக்கொண்டிருப்பது வழக்கமாக இருந்துகொண்டுவருகிறது. ஹரிஜனங்களைப்பற்றி பிரமாதமாக பேசிக்கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்களுக்கு காரியங்களை செய்து கொடுக்கப்படவில்லை. ஏதோ பொது ஜனங்களிடத்தில் பிரமையை உண்டாக்குவதற்காகத்தான் பட்ஜெட் உரையில் ஹரிஜனங்களைப்பற்றி பிரமாதமாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஒதுக்கியிருக்கின்ற பணத்தையாவது அவர்களுக்கு காலாகாலத்தில் கிடைப்பதற்கு கவனம் செலுத்தி அதை

வினியோகம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படும் விஷயத்தில் எல்லா ஹரிஜன குழந்தைகளுக்கும் இந்த ஸ்காலர்ஷிப் கிடைக்க வழி செய்யவேண்டும். குறிப்பாக சிங்கநல்லூர் பகுதியில் அங்கு 272 ஹரிஜன மாணவர்களில் 30 பேர்களுக்குத்தான் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டு வருகிறது. அங்குள்ள ஸிட்டி முனிசிபல் ஹைஸ்கூலில் 87 பேர்கள் படிக்கிறார்கள். அதில் ஸ்காலர்ஷிப் கொடுத்திருப்பது 35 பேர்களுக்குத்தான். இவ்விதம் ஒவ்வொரு ஸ்கூலையும் எடுத்துக் கொண்டால், 30 பேர்கள் அல்லது 20 பேர்கள் அல்லது 10 பேர்கள் என்றுதான் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஸ்காலர்ஷிப் எல்லா மாணவர்களுக்கும் கிடைப்பதில்லை. இவைகளை நான் நேரடியாகப் போய்பார்த்திருக்கிறேன். ஆகவே இதை கவனித்து நடவடிக்கை எடுக்கவும்.

(Bell)

DEPUTY SPEAKER : உங்களுடைய டைம் கழிந்துவிட்டது.

*SRI N. S. RAMALINGAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே ! நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் வரவு செலவு திட்டத்தில் நல்ல பல அம்சங்கள் இருப்பதினால் அதை வரவேற்கிறேன். நம் ராஜ்யம் பல துறைகளில் குறிப்பாக விவசாயத்துறையிலும், கைத்தொழில் துறையிலும் முன்னேற்றமடைவதற்காக பல திட்டங்கள் போடப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். தேசீய விஸ்தரிப்பு திட்டம், சமுதாய நல அபிவிருத்தி திட்டம் முதலிய திட்டங்கள் பல இடங்களுக்கு மேலும் விஸ்தரிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் விஸ்தரிக்கப்படும்பொழுது, நாகபட்டிணம் தொகுதியை அதில் சேர்த்து அதை திருத்தம் செய்யவேண்டியது மிக அவசியம் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதன் சுற்றுவட்டாரங்களில் இம்மாதிரியான திட்டங்களை விஸ்தரித்து அப்பகுதிகள் சீர்திருத்தமடைந்திருக்கிறது. நேற்றைய தினம் கனம் திருத்துறைப்பூண்டி அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். அதாவது கடலுக்குப் போகும் தண்ணீரைக்கொண்டு ஆயிரக்கணக்கான ஏக்கர்களை சாகுபடி செய்ய வசதி இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மற்றவர்கள் உபயோகித்ததின் பின்னால் கடலில் போகும் தண்ணீரைக் கொண்டு போய் பாய்ச்சுவதற்கு வசதி ஏற்படுத்தினால் அதன் மூலம் சாகுபடி செய்து அதிக உணவு உற்பத்தியை பெருக்கி கொள்ள முடியும். அதன் மூலம் நாட்டில் சுபீட்சம் ஏற்படுவதற்கு வழி இருக்கிறது. அதற்கு இப்போது மராமத்து இலாகாக்காரர்கள் பரிசீலனை நடத்தி வருகிறார்கள். அதற்காக அவர்களுக்கு வந்தனம் தெரிவித்துக்கொள்வதுடன் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் இதற்கு கூடிய சீக்கிரமே வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக சாலை போக்குவரத்துக்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். இவைகள் நல்ல முறையில் போடப்பட்டிருப்பதைப்பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். இதில் முக்கியமாக கடலோரமாக ரோடுகள் போடக்கூடிய திட்டம் முன்பே இருந்து வருகிறது. அதில் வேதாரண்யம்—வேளாங்கண்ணி திட்டம் இதுவரை நிறைவேறவில்லை. அதோடு நாகப்பட்டிணத்திலிருந்து தொண்டி வரையில் ரோடு ஏற்படுத்த வேண்டும் என்கிற திட்டமும் நிறைவேறவில்லை. அதை உடனே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாகப்பட்டிணம் துறைமுகம் முக்கியமான துறைமுகமாக இருக்கிறது. இன்றைக்கு பல சிறிய துறைமுகங்களை சீர்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்காக இந்த அமைச்சரவையை நான் பாராட்டுகிறேன். இப்போது நாகப்பட்டிணம் துறைமுகம் சீர்கேடான நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. இதை சீர்திருத்தவேண்டும். மைனர் போர்ட் என்னும் தலைப்பில் பணம் இருக்கிறது. நாகப்பட்டிணம் துறைமுகத்தை எடுத்துக்கொண்டால் குறிப்பாக சிங்கப்பூர், மலேயா போன்ற இடங்களிலிருந்து வருகின்ற கப்பல்கள் கழிந்த இரண்டு மூன்று மாதங்களாக வந்து இறங்குவது கிடையாது. ஏனென்றால் அங்கிருந்து வருகின்ற கப்பல் மூலம் "ப்ளூ" காய்ச்சல் வந்துவிடும் என்றும் அதை பரிசோதிக்க டாக்டர்கள் இல்லையென்றும் அதற்கான வசதிகள் இல்லை என்றும் சொல்லப்படுகிறது. இதனால் நாகப்பட்டிணத்தில் வந்திறங்கவேண்டிய பிரயாணிகள் சென்னை





யில் வந்து கஷ்டப்படவேண்டியிருக்கிறது. ஆகவே, இங்கிருந்து இரண்டு மூன்று டாக்டர்களை அனுப்பி வைத்தால் அங்கே கப்பல் நிற்க முடியும். அதன் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாத கஷ்டத்திலிருந்து விடுபட்டு அவர்கள் வாழ்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே இங்கிருந்து இரண்டு மூன்று டாக்டர்களை நாகப்பட்டிணம் துறைமுகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக நாகப்பட்டிணம் முனிஸிபாலிட்டியால் சென்ற 40 வருடங்களுக்கு முன்பு போடப்பட்ட பைப்புகள் எல்லாம் இன்று துரு பிடித்து தண்ணீர் சுத்தமாய் கிடைப்பதில்லை. ஆகவே, இதை மாற்றுவதற்கு அந்த முனிஸிபாலிட்டிக்கு இலவசமாக பண உதவி கொடுக்காவிட்டாலும் கடனாக பணம் கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக ராமனதபுரத்தில் ஒரு கால் நடைப் பண்ணை ஆரம்பிக்கப்போவதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் திருத்துறைப்பூண்டி பகுதியில் உம்பளச்சேரி என்ற ஒரு நல்ல ரகம் இருக்கிறது. இவைகளை இரண்டு தொழிலுக்கும் பயன்படுத்தலாம். உழவுக்கும் வண்டியில் போடுவதற்கும் பயன்படுத்தலாம், நல்ல உழைக்கக் கூடியது. சிக்கனமாகவே இதை வைத்து காப்பாற்றலாம். மேலும், அங்கு ஒரு கால்நடை பண்ணை ஆரம்பிப்பதற்கு 60 ஏக்கர் நிலம் கொடுக்க ஒரு அன்பர் முன் வந்திருக்கிறார். அதை அரசாங்கம் பயன்படுத்தி கால்நடை பண்ணை ஏற்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தஞ்சையிலே மருத்துவக் கல்லூரியும் மற்ற கல்லூரிகளும் வருவதைக் 5-40 p.m.
கேட்க சந்தோஷப்படுகிறேன். அதுவும் இந்த வருஷத்திலேயே ஆரம்பிக்கப்படுவதைக்கேட்டு நம் முதலமைச்சருக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் நான் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டிலே சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக விவசாய இலாகா டெமான்ஸ்டிரேட்டர்கள் சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். கெஜட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்களின் குழந்தைகளுக்கு படிப்புச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மத்திய சர்க்கார் ஊழியர்கள் வாங்கும் அளவுக்கு சம்பளம் கொடுக்க அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்திப் பெருக்கத்திற்காக தேசீய அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் அரசாங்கம் செய்து வருவதைப் பாராட்டுகிறேன். இன்னும் அதிகமான உணவு உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் வழி செய்யவேண்டும்.

பூச்சி மருந்துக்காக பல லட்ச ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இந்த பூச்சி மருந்து பெஸ்ட் அபெக்டெட் ஏரியாவிற்குத்தான் கொடுக்கப்படுகிறது. அவ்வாறு செய்வதால் பல கஷ்டங்களிருப்பதால் ஜூலை மாதம் முதல் டிஸம்பர் மாதம் வரை பூச்சி மருந்துகளை எல்லா இடங்களிலும் அரசாங்க சலுகையுடன் விற்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வயல்களில் எலித் தொல்லையை ஒழிக்க ஆந்திரா, பஞ்சாப், காஷ்மீர் முதலிய ராஜ்யங்கள் மத்திய சர்க்காரிடமிருந்து உதவி வாங்க ஏற்பாடு செய்திருக்கின்றன. சென்னை ராஜ்யமும் இந்த மாதிரி உதவி வாங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஸாயில் டெஸ்ட் லெபரேட்டரி ஆந்திராவில் மூன்று வைக்கப்பட்டிருக்கின்றன. நம் நாட்டில் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. இன்னும் ஒன்றுவது வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதுவும் கூடிய சீக்கிரத்தில் தஞ்சையிலேயே வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக புது வரியைப் பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பட்ஜெட்டைப் பார்த்தால் இப்போது புதிய வரிகளைப் போடுவதற்காகவே தயாரிக்கப்பட்டதுபோல் தோன்றுகிறது. சில துறைகளில் வருகிற வருமானம் குறைத்துப் போடப்பட்டிருக்கிறது என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இதைப்பற்றி யோசிக்கவேண்டும். சென்ற

வருஷம் 333 லட்சம் ரூபாய் துண்டு விழுமென்று கணக்கிட்டு அதைச் சும்மா விட்டிருந்தும், இந்த ஆண்டு 105 லட்சம் தான் துண்டு விழுமென்றிருக்கும் போது ஏன் வரி போடவேண்டும்? அப்படியே விட்டுவிட்டால் சென்ற வருஷம் அதிக வருமானம் வந்து துண்டு விழுந்தது உபரியானது மாறியது போல் இந்த வருஷமும் உபரியாகிவிடுமென்று சொல்ல விரும்புகிறேன். இதை அப்படியே அன்கவர்ட் ஆக விட்டு வைக்கலாம். அரசாங்கம் இப்போது நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கும்போது அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ் வேண்டுமா என்று அரசாங்கம் யோசிக்க வேண்டும். இப்போது அரசாங்கத்திற்குப் பணம் வேண்டுமென்றால் வேறு வழிகள் இருக்கின்றன. இப்போது ரீசெட்டில்மென்ட் செய்து 30 வருஷம் ஆகின்றது. 1930-ல் ரீசெட்டில்மென்ட் செய்திருக்கவேண்டும். அப்போது விலை குறைவாக இருந்ததால் ரீசெட்டில்மென்ட் செய்யவில்லை. அதை இப்போது செய்தால் அரசாங்கத்திற்கு வரும் பணம் அதிகமாகும்.

அதிலும் இந்த விவசாய வருமானத்தைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அது ஒரு நிலையற்ற வருமானம். விவசாய வருமானவரி விதிப்பதில் அதிகத் தொல்லை இருப்பதைப்பற்றி ரெவினியூ மந்திரி அவர்கள் லேண்ட் ரெவுனியூ சர்சார்ஜ் பற்றிச் சொல்லும்போது சொல்லியிருக்கிறார்கள். அதனால் இவ்வளவு தொல்லை இருக்கும்போது இதைக் கொண்டுவரவேண்டுமா என்று கேட்கிறேன். சிறிய மிராசுதார்கள் கணக்கு வைக்க அவசியமில்லையென்று சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இது அபாயகரமான சலுகை. மதிப்பிடும் காரியத்தை உத்தியோகஸ்தர்களிடம் கொடுத்தால் ஏழை விவசாயிகள் வற்புறுத்தப்பட்டு மிகவும் கஷ்டப்படுவார்கள். அதைப் பார்க்கும்போது, அவர்களைக் கணக்கு வைத்துக் கொள்ளச் சொல்லலாம் என்பது எனது அபிப்பிராயம். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கொடுக்கும் கஷ்டமானது ஏழை விவசாயிகளை மிகவும் கஷ்டப்படுத்தும் என்று இந்த பட்ஜெட்டில் சொல்லிக் கொள்கிறேன். இவைகளையெல்லாம் யோசித்து அரசாங்கம் முடிவுக்கு வரவேண்டும். நல்ல முறையில் பல நல்ல திட்டங்களையும், அபிவிருத்தித் திட்டங்களையும் கொண்டு வந்திருப்பதைப் பாராட்டி அதை நான் வரவேற்கிறேன்.

* **Sri V. SUBBIAH** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய 1958–59-ம் வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தைப் பாராட்டுதற்குரிய முறையில் ஒன்றுமில்லாவிட்டாலும், இன்றைய பட்ஜெட்டைத் தயாரித்தவர்கள் விவசாயிகளுடைய நிலையை உணர்ந்தோ, அல்லது சட்ட மன்றத்தில் விவசாய அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணத்துடனோ தயாரிக்காத நிலையில், இன்றைய தினம் அவர்கள் விவசாய வருமான வரி என்ற ஒரு வரியை விதித்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கிற அரசாங்கம் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விற்பனை ஆவதற்கு வசதி செய்து கொடுக்க முடியாத நிலையில், விவசாயிகளுக்குப் பாதுகாப்பளிக்க முடியாத நிலையில், விவசாயிகள் நலனை கவனிக்க முடியாத அரசாங்கம் வரி விதிக்க உரிமை இருக்கிறதா என்று சந்தேகப்படக்கூடிய நிலையில் இருக்கும் சமயத்தில் இந்த வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றரை ஏக்கர் நிலம் வைத்திருக்கும் தோட்ட விவசாயி, வேறு எந்தத் தொழிலும் இல்லாத ஒரு விவசாயி 3,000 ரூபாய் வருமானம் அடைய முடியுமென்றால் அவனும் இந்த வரியைக் கட்ட வேண்டிய நிலை வருகிறது. இந்த 1½ ஏக்கர் தவிர வேறு சொத்தோ தொழிலோ இல்லாத ஒருவன் 3,000 ரூபாய் வருமானம் அடைந்தால் அவன் வரி கட்டவேண்டும். அந்தத் தோட்டத்திலே மிளகாய்ச் செடி வைத்து 15 பொதி உற்பத்தி செய்கிறான் என்றால், மார்க்கெட்டில் விலை பொதி 200 ரூபாய் என்றால் அவனுக்கு 3,000 ரூபாய் வந்து விடுகிறது. அவனும் வரி கட்டவேண்டும். அவன் குடும்பம் என்ன, அவன் விவசாயம் செய்து உற்பத்தி செய்ய என்ன செலவாகிறது என்று பார்க்க வேண்டும். அவன் குறைந்த பட்சம் ஏக்கருக்கு 400 ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. தோட்டத்திலே செடிகள் நோய் இல்லாத நிலை இருந்து, நல்ல நிலையிலே மாசூல் கிடைத்தால் 15 பொதி கிடைத்தால், 3,000 ரூபாய் கிடைக்கும். அவன் செலவு செய்வதையும், அவனுக்கு வரும்



வருமானத்தையும் பார்த்தால் இந்த வரி ஒரு பெரும் பாரமாக இருந்து அவனுக்கு மிகவும் கஷ்டத்தை உண்டாக்கும் என்று இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக டீசல் போன்ற எண்ணெய்களுக்கு 35 நயா பைசாவாக வரியை உயர்த்துவது முழுக்க முழுக்க விவசாயிகளை பாதிக்கிறது. விவசாயிகளுக்கு அந்த வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும். பம்ப் செட்டுகளை ஓட்டுவதற்கு டீஸல் உபயோகிக்கிறார்கள். அது மட்டுமல்ல. இன்றைக்கு அரசாங்கம் எத்தனை வரிகளைப் போடுகிறதோ, அவைகள் எல்லாம் விவசாயிகளை மறை முகமாக பாதிக்கிறது. இந்த விற்பனை வரியால் 100-க்கு 80 சத விகிதம் உள்ள கிராமத்திலுள்ள விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். புதிய வரியை சென்ற கூட்டத்தில் தோட்டக்காரர்களுக்குப் போட்டார்கள். அதை அப்போது வரவேற்றோம். இப்போது இந்த வரியைப் போட்டால் மிகவும் கஷ்ட நிலையில் உள்ளவர்கள் பாடுபட்டுப் பலனை அடைய முடியாத நிலை ஏற்படும். அது மிகவும் வருந்தத்தக்க விஷயம். அந்த நிலையில் பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அரசாங்கத்திலே விவசாயிகளுக்கு எல்லா முறையிலும் கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன என்று சொல்கிறார்கள். உரம் கொடுக்கப்படுகிறது. சென்ற வருஷத்தை விட இந்த வருஷம் 1 கோடி ரூபாய் ஜாஸ்தியாகக் கொடுக்கப்படும் என்று சொல்லுகிறோம். ஒரு கோடி ரூபாயில் விவசாயிகளுக்கு எவ்வளவு நேரடியாகப் போகிறது என்று பலர் பேசினார்கள். அதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதுமட்டுமல்ல. பாசன வசதிகளுக் 5-50 p.m. காகவே ஒரு கோடி சொச்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறு பாசன திட்டங்களுக்காக 70 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. உரங்கள் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். இன்னும் எத்தனையோ உதவிகளை அரசாங்கம் விவசாயிகளுக்குச் செய்கிறது. அப்படியிருந்தும் கூட விவசாயிகளுடைய பொருளாதார நிலைமை கொஞ்சங்கூட உயரவில்லை. காரணம் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யாததுதான். அவர்களுடைய பொருள்களுக்கு ஏன் விலை நிர்ணயம் செய்யக்கூடாது? அரசாங்கம் இன்றைய தினம் வேறு பல தொழில் துறையில் விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இன்றைய தினம் பல பெரிய மில்களுக்கு வேண்டிய பஞ்சு வெளி நாடுகளில் இருந்து—அரேபியாவில் இருந்து, கலிபோர்னியாவில் இருந்து, ஈஜிப்டில் இருந்து, பாகிஸ்தானிலிருந்து கூட—இங்கே வந்து கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் மில்களில் உற்பத்தி செய்யக்கூடிய நூல்களுக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதே சமயத்தில் நூல் உற்பத்திக்கு மிகவும் அவசியமான பருத்திக்கு—விவசாயப் பொருளாகிய பருத்திக்கு விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. தாம்பிரபரணி நீர்ப்பாசனத்தை எடுத்துக்கொண்டால் 112 படியுள்ள ஒரு கோட்டை நெல் இன்றைய தினம் 29 ரூபாய், 30 ரூபாய் என்று விலை விழுந்துவிட்டது. விவசாயிகளுடைய உற்பத்திச் செலவு என்ன? பொருளாதார நிலைமை என்ன? இந்த நிலைமையில் விவசாயம் செய்வதில் அவர்களுக்கு என்ன கட்டுபடியாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கால்நடைகளுக்கு இன்ஷூரன்ஸ் இருக்கிறதா? இன்றைக்கு விவசாயி ஒரு ஜோடி மாடு வாங்கவேண்டுமென்றாலும் 800 ரூபாய் முதல் 1,000 வரையில் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஒரு மாடு இறந்துவிட்டால் திரும்ப அவனால் உடனே வாங்கமுடியுமா? அப்படி மாடு இறந்துவிட்டால் அவர்களுக்கு அரசாங்கமாவது உதவி செய்கிறதா என்பதை எல்லாம் மனதில் வைத்துப் பார்க்க வேண்டும். பெரிய பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் எல்லாம் போடுவதாகச் சொல்கிறார்கள். எங்களுடைய பகுதி மிகவும் பிற்போக்கான பிரதேசம். திருநெல்வேலி ஜில்லாவில் சங்கரன்கோயில் தாலுக்கா மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது. அந்தப் பிராந்தியத்தில் பல ஆண்டுகளாக பெரிய பாசன திட்டங்களை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று பிரதிநிதிகள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அரசாங்கமும் எடுப்பதாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் இன்றைய தினம் வரையில் என்ன நடந்திருக்கிறது? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கீரியாறு, பொம்மையாறு போன்ற பல திட்டங்கள் சேர்க்கப்படும் என்று எண்ணிக்கொண்டிருந்தோம்,

[Sri V. Subbiah] [4th March 1958

பரம்பிக்குளம் திட்டம் பற்றி பேசப்பட்டது. கேரள சர்க்காருடன் சீக்கிரத்திலேயே ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியும் என்று சொன்னார்கள். மேலே ஒன்றையும் காணோம். பேச்சளவிலாவது பரம்பிக்குளத் திட்டம் இருக்கிறதே தவிர மற்ற ஆறுகளைப் பற்றி அதுகூட இல்லை. காரியத்தில் விவசாயிகளுக்கு நன்மை செய்ய துரிதமாக நடவடிக்கை எடுக்காத வரையில் கடன் உதவி அளிக்கிறோம், உரம் கொடுக்கிறோம், விதை கொடுக்கிறோம் என்பதனால் விவசாயிகளுடைய நிலைமை உயர்ந்துவிடாது. சுதந்தரம் கிடைத்து பத்து ஆண்டுகள் ஆனபோதிலும் கூட விவசாயிகள் முன்னேறாமல் இருப்பதைக் கொண்டே அதை நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

அடுத்தபடியாக, விவசாயத்திலேயே மிகவும் கடினமான விவசாயம் இன்றைக்கு நாட்டிலே நடை பெறுகிற கொடிக்கால் விவசாயம் என்கிற வெற்றிலை விவசாயம். பருவ நிலை காரணமாக கொடிக்கால் விவசாயத்தில் அடிக்கடி நோய்கள் வந்து கொண்டிருக்கின்றன. சாகுபடியாளர் பாதுகாப்பு சட்டத்தினால் கொடிக்கால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் இரண்டு ஆண்டுகளாக கோவை, திருநெல்வேலி, மதுரை, திருச்சி போன்ற இடங்களில் அவர்களில் சுமார் 10,000 பேர் வேலையில்லாமல் கூடக் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய நிலைமையைக் கவனித்து கொடிக்கால் பயிர்கள் சேதம் அடையாமல் தக்க பாதுகாப்பு செய்வதற்கும், அவர்களுக்கு சட்டப்படி நிலம் கிடைக்கவும் பயிர் செய்வதற்கும் வேண்டிய வசதியைக் கொடுப்பதற்கும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். மேலும் இன்றைய தினம் விவசாயப் பொருள்களை நேரிடையாக வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வழியின்றி கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலமாக அனுப்பவேண்டியிருப்பதால் எத்தனை நஷ்டங்கள் ஏற்படுகின்றன என்று சொல்ல முடியாது. சிலோனுக்கு அனுப்புவதைப் பார்த்தாலே தெரியும். விவசாயிகளோடு தொடர்புள்ள மார்க்கெட்டிங் சொஸைட்டிகள் இருக்கும்போது மத்திய கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலம் ஏற்றுமதி செய்ய அனுமதித்து அவர்கள் மூலம் விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். தூத்துக்குடி துறைமுகத்திலே சமீபத்தில் ஆயிரக்கணக்கான வெங்காய மூட்டைகள் அழுகிப் போய் இருக்கின்றன. விவசாயிகளுக்கு நேரிடை ஏற்றுமதி வசதி இல்லாத காரணத்தினால் இவ்வளவு நஷ்டத்திற்கும் அவர்கள் உள்ளாக வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் அரசாங்கம் கவனிப்பது இல்லை. இப்படி எவ்வளவோ சொல்லிக் கொண்டு போகலாம். இப்படிப்பட்ட பலவிதமான சூழ்நிலைகள் இருப்பதன் காரணமாக, ஊழல்கள் இருப்பதன் காரணமாக விவசாயிகளுக்கு சர்க்கார் பலவிதமான நல்ல காரியங்களைச் செய்வதாகச் சொன்னாலுங் கூட, நல்ல நல்ல திட்டங்களைத் தீட்டினாலுங்கூட, அவை எல்லாம் நடைமுறைக்கு வரும்போது விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும் வகையிலே அமைகிறது என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri S. RAMALINGA PADAYACHI** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது மாநிலத்தில் பருவ நிலை சிற்சில இடங்களில் சுமாராக இருக்கிறது என்று சொன்னார்கள். திருச்சி ஜில்லாவில் இந்த வருஷம் பருவ நிலை நன்றாக இருக்கவில்லை. அதனால் அநேக இடங்களில் பயிர்கள் மோசமாகப் போய் இருக்கின்றன. நஞ்சைப் பயிர்கள், புஞ்சைப் பயிர்கள் எல்லாம் சேதமடைந்திருக்கின்றன. தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அந்த அந்த இடங்களுக்காவது அமைச்சர் அவர்கள் நேரிடையாகச் சென்று பார்த்த பிறகாவது கிஸ்தி ரெமிஷன் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு சென்ற ஆண்டு நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்தியதைப் போலவே இவ்வாண்டும் நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்தி ஏழைகளைக் காப்பாற்றவேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயிகளுடைய நிலைமை முன்னேறி வருகிறதாக நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். அதைப்பற்றி நான் பெருமைப்படுகிறேன். விவசாயம் அதிகமாக வளர்ச்சி அடைந்தால் தான் நம் நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்படும். அதோடு விவசாய காலத்தில்



4th March 1958] [Sri S. Ramalinga Padayachi]

விவசாயிகளுக்குத் தேவையான விதைகள், உரங்கள் முதலியவற்றை விநியோகம் செய்ய தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பயிர்ச் செலவு செய்கிற காலத்தில் விதை இல்லை என்று சொன்னால் நன்மை இல்லை. மேலும் நீர்ப்பாசன வசதியை எடுத்துக் கொண்டால் பெருவாரியாக பெரிய திட்டங்கள் எல்லாம் நம் மாநிலத்தில் முடிந்துவிட்டாலும் இன்னும் அநேக சிறிய பாசன திட்டங்களில் கவனம் செலுத்தலாம். பழைய காலத்தில் வெட்டப்பட்ட ஏரிகள், குளங்கள் எல்லாம் நல்ல கண்காணிப்பு இல்லாமல், மழைக்காலத்தில் தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்வதற்கு வசதி இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. முன்பு மூன்று பயிருக்கு வேண்டிய தண்ணீர் பிடிக்கும் ஏரிகள் ஒரு முறை விவசாயத்திற்குக் கூடத் தண்ணீர் பிடிக்க முடியாமல் இருக்கிறது. அதனால் பயிர்கள் சாவியாகப் போகின்றன. அந்த ஏரிகள், குளங்கள் இவற்றைச் செப்பனிட்டு கரைகளை சரிப்படுத்தி உயர்த்தினால் மிகவும் நன்றாக இருக்கும். இதைச் சர்க்கார் கவனிக்கவேண்டும்.

கால்நடை பராமரிப்புப்பற்றி குறிப் பிடப்பட்டிருக்கிறது. அது ஒரு நல்ல அறிகுறிதான். இன்னும் அதை நல்ல முறையில் பராமரிக்க வேண்டுமானால் அதிகப்படியான பொலி காளைகளை வாங்கிக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். நாலைந்து மைல் தூரத்திற்கு ஒரு பொலி காளையையாவது வாங்கி மானியமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதன் மூலம் அங்குள்ள விவசாயிகள் நல்ல ரக மாடுகளை உற்பத்தி செய்துகொள்வதற்கு வசதியாக இருக்கும். ஒவ்வொரு கிராமத்திற்குக் கொடுக்காவிட்டாலும் மூன்று அல்லது நாலைந்து கிராமங்களுக்குச் சேர்த்துக் கொடுத்தாலும் கொடுக்கலாம். ஆகவே கால்நடைகளை அபிவிருத்தி செய்வதற்கு பொலி காளைகளை வாங்கிக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். 6 p.m.

ஆனால் இப்பொழுது உள்ள நிலை என்னவென்றால் ஒரு மாட்டை பத்து மைல் தூரம் வரையில் கூட ஓட்டிச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. ஆகவே சமீபத்திலேயே ஒரு பொலி காளையை அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கால்நடை ஆஸ்பத்திரி இப்பொழுது அநேகமாக இல்லை. சுமார் பத்து அல்லது பதினைந்து மைல் தூரத்திற்குச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. ஒவ்வொரு தாலூகா ஹெட்குவார்ட்டர் ஆஸ்பத்திரியிலும் ஒரு மிருக ஆஸ்பத்திரி உள்ளது. நாலைந்து மைலுக்கு ஒரு ஆஸ்பத்திரியை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER:** இன்னும் இரண்டு நிமிஷங்களில் முடித்து விடுங்கள்.

**Sri S. RAMALINGA PADAYACHI** : அநேகக் கிராமங்களில் இப்படிப்பட்ட ஆஸ்பத்திரிகள் இல்லாமல் அங்குள்ள கால்நடைகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே நாலைந்து மைலுக்கு ஒன்றாகிலும் அப்படிப்பட்ட ஆஸ்பத்திரியை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கால்நடை பராமரிப்பு சம்பந்தமாக இதைக் குறிப்பிட நான் ஆசைப்படுகிறேன்.

இப்பொழுது கிராமங்களில் கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. கூட்டுறவு சங்கங்களை அங்கங்கே ஏற்படுத்தி அதனால் மக்களுக்கு நல்ல முறையில் கடன் கொடுத்து உதவி வருகிறார்கள். அதைப் போலவே இன்னும் அதிகப்படியான கூட்டுறவு சங்கங்களை அமைத்துக்கொடுத்து நல்ல முறையில் விவசாயிகளுக்கு கடன் கொடுத்து உதவ வேண்டும். இப்பொழுதுள்ள கூட்டுறவு சங்கங்கள் வெற்றி அடைந்து வந்தாலும் இன்னும் கூட்டுறவு சங்கங்களை அதிகப்படுத்தி அதனால் மக்களுக்கு கிராமங்களில் கடன் கிடைக்க வசதி செய்து கொடுக்கும்படியாக

[Sri S. Ramalinga Padayachi] [4th March 1958

நான் கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகள் முதலாளிகளிடம் கடன் வாங்கி கஷ்டப்படாமல் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவே கடன் வாங்கிக் கொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்படி அமைத்துக்கொடுத்தால் விவசாயிகள் நல்ல முறையில் தாங்கள் வாங்கிய கடனை திருப்பிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகையால் கூட்டுறவு சங்கங்களை அங்கங்கே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER** : The House will now adjourn and meet again at 1 p.m. tomorrow.

6-03 p.m. The House then adjourned.



4th March 1958]

## APPENDIX I.

[Vide answer to starred question No. 185 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 4th March 1958, page161 supra.]

*Details of amount allotted for Rural Water-supply Comprehensive Scheme in 1957-58 and the amount spent from 1st April up to 30th September 1957 in each district.*

| District. | Allotment for 1957-58. | Amount spent up to 30th September 1957. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | RS. | RS. |
| 1 Chingleput .. .. .. .. | 2,80,000 | 49,224 |
| 2 North Arcot .. .. .. .. | 4,00,000 | 59,589 |
| 3 South Arcot .. .. .. .. | 2,50,000 | 23,374 |
| 4 Tanjore .. .. .. .. | 2,00,000 | 31,199 |
| 5 Tiruchirappalli .. .. .. | 6,00,000 | 1,05,528 |
| 6 Madurai .. .. .. .. | 2,00,000 | 660 |
| 7 Ramanathapuram .. .. .. | 4,50,000 | 1,31,065 |
| 8 Tirunelveli .. .. .. .. | 3,75,000 | 1,21,827 |
| 9 Salem .. .. .. .. .. | 4,00,000 | 36,340 |
| 10 Coimbatore .. .. .. .. | 4,00,000 | 46,907 |
| 11 The Nilgiris .. .. .. .. | 25,000 | Nil. |
| 12 Kanyakumari .. .. .. .. | 1,00,000 | Nil. |
| Total .. | 36,80,000 | 6,05,713 |

## APPENDIX II.

[Vide answer to starred question No. 190 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 4th March 1958, page 168 supra.]

*Statement showing the number of Primary Health Centre sanctioned during 1957-58 and the dates on which they were opened in the National Extension Service Block and Community Development areas in the State.*

| District. | Name of Primary Health Centres sanctioned during 1957-58. | Date of opening. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 North Arcot district .. .. | 1 Mandakalathur<br>2 Lalapet.<br>3 S. V. Nagaram | .. 12th October 1957. |
| 2 South Arcot district .. .. | 1 Satyamangalam<br>2 Thirunavalur<br>3 Chinnasalem | .. |

| District. (1) | Name of Primary Health Centres sanctioned during 1957–58. (2) | Date of Opening. (3) |
|---|---|---|
| 3 Chingleput district .. .. | 1 Zamin Endathur | .. |
| | 2 Thirukalikundram | |
| | 3 Uthiramerur | |
| 4 Coimbatore district .. .. | 1 Thayampalayam | .. |
| | 2 Talavadi | |
| | 3 Perianaickenpalayam | |
| | 4 Chandrapuram | |
| 5 Kanyakumari district .. .. | 1 Agasteeswaram | .. |
| | 2 Rajakkamanagalam Thurai. | |
| | 3 Arudesam | |
| 6 Madurai district .. .. | 1 Dombacheri | .. |
| | 2 Thiruparankundram. | |
| | 3 Natham | |
| | 4 Elumalai | |
| 7 Nilgiris district .. .. | 1 Pandalur .. .. | 1st June 1957. |
| | 2 Nedugula | |
| 8 Ramanathapuram district .. | 1 Uppathur | .. |
| | 2 Parthibanoor * | |
| | 3 Pandukudi | |
| | 4 Kunnur | |
| 9 Salem district .. .. .. | 1 Bagalur | .. |
| | 2 Thurinjipatti | |
| | 3 Kolatbur * | |
| | 4 Mekalachinnampalli * | |
| 10 Tanjore district .. .. | 1 Thiruvizhimazhalai .. | 2nd December 1957. |
| | 2 Sanganthi Idaiyur | |
| | 3 Vedaranyam .. .. | 14th June 1957. |
| | 4 Alathambadi | |
| | 5 Nallur .. .. .. | 16th September 1957. |
| | 6 Thiruvenkadu | Do. |
| | 7 Kali | |
| 11 Tiruchirappalli district .. | 1 Mahendramangalam | |
| | 2 Pudur Uthamanur | |
| | 3 Inungur | |
| 12 Tirunelveli district .. .. | 1 Pattamadai .. .. | 8th July 1957. |
| | 2 Tirayanvilai .. .. | 9th October 1957. |
| | 3 Vasudevanallur | |
| | 4 Pudukottai village | |
| | 5 Kurivikulam | |

* Medical Officers posted. Not yet joined duty.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Wednesday, the 5th March 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at one of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Electric motors*

* 198 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any electric motors are imported from foreign countries and supplied to agriculturists at controlled rates;

(*b*) if so, the varieties of motors imported and their capacity; and

(*c*) how they are distributed in the districts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement* is placed on the table of the House.

SRI N. K. PALANISAMI : எவ்வளவு மோட்டார்கள் இறக்குமதி செய்யப்பட்டன ? அவை எந்த வகையில் கொடுக்கப்பட்டன என்று சர்க்காரிடம் கணக்கு இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது இங்கே வைக்கப்பட்டிருக்கிற காகிதத்திலே இருக்கிறது.

SRI N. K. PALANISAMI : இந்த மோட்டார்கள் விநியோகிக்கப்படும் போது, விவசாயிகளுக்கு அவை நேரடியாகப் போய்ச் சேராமல், அங்கிருக்கும் ரிசர்ச் டிபார்ட்மென்டார் ' போகஸ் ' ஆக பல வியாபாரிகளுக்கு, விவசாயி என்ற பெயரால், மோட்டாரை விற்றிருப்பதாக அரசாங்கத்திற்குத் தகவல் வந்து, அது சம்பந்தமாக ஏதாவது விசாரணை நடந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி குறிப்பாகக் கேள்வி கேட்டால் அதற்குப் பதில் சொல்வதோடு, அதைப்பற்றி கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

SRI S. LAZAR : எந்த விவசாயிகளிடமிருந்து கையெழுத்து வாங்கி மோட்டார்கள் தருவிக்கப்பட்டனவோ, அதே விவசாயிகளிடம் பின்னும் அவை விநியோகிக்கப்பட்டனவா என்று சர்க்கார் பரிசீலனை செய்ததா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏதாவது இதைப்பற்றி புகார்கள் இருந்தால், என்னிடம் குறிப்பாகத் தெரிவித்தால், அதைக் கவனித்து வேண்டியதைச் செய்யலாம்.

SRI A. VEDARATHNAM : இந்தியாவிலேயே இந்த மோட்டார்கள் இப்பொழுது செய்யப்படுகின்றன அல்லவா ? அப்படியிருக்க, வெளிநாடுகளிலிருந்து இவைகளைத் தருவிப்பதற்கு அவசியம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மோட்டார்கள் போதிய அளவு இந்த நாட்டிலே கிடைப்பதில்லை. பம்பு செட்டுகள் மட்டும் உற்பத்தியாகின்றன. மோட்டார்கள் போதிய அளவு இல்லாத காரணத்தால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

* Printed as Appendix I on page 303 infra.

[5th March 1958

Sri A. R. SUBBIAH MUDALIAR : 1957-ம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் முடிய எவ்வளவு மோட்டார்கள் அன்னிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன ? அவை விவசாயிகளுக்கு சரியாக விநியோகிக்கப் பட்டிருக்கின்றனவா ? அதனால் அதிக ஊழல் ஏற்பட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியவருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஊழலைப்பற்றி ஏதாவது கவனத்திற்கு வந்தால் அவ்வப்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறது. ஆனால், இதைவிட பம்புகள் கிடைப்பதில்லை என்ற குறை தான் விவசாயிகளிடமிருந்து அரசாங்கத்திற்கு வந்துகொண்டிருக்கிறது.

Sri S. LAZAR : இந்த மோட்டார்களைத் தனியார்களே விநியோகிப்பதற்குப் பதிலாக, அரசாங்கமே தருவித்து விநியோகிப்பதற்கு ஏதாவது அரசாங்கத்திடம் திட்டம் உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வாறும் அரசாங்கம் செய்துகொண்டுதான் இருக்கிறது.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : மோட்டார் மாத்திரம் இறக்குமதி செய்வதால், இப்பொழுது ஸ்விட்சும், ஸ்டார்ட்டரும் கிடைக்காமல் விவசாயிகள் மோட்டார் வாங்கியும் தண்ணீர் இறைப்பதற்கு வசதி இல்லாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மோட்டார்களும், ஸ்விட்சுகளும், ஸ்டார்ட்டர்களும் அதிகமாக இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஸ்விட்ச் கியரும் ஸ்டார்ட்டரும் இந்த நாட்டில் அதிகமாகக் கிடைப்பதில்லை ; அவைகளையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வேண்டுமென்றுதான் மத்திய அரசாங்கத்திடம் அவ்வப்போது தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்.

Sri R. KRISHNASAMI NAIDU : விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் வாங்கக் கடன் கொடுக்கும்போது, அவர்கள் விவசாய இலாகாவினரால் குறிப்பிடப்படும் கம்பெனியிடமிருந்தோ வியாபாரியிடமிருந்தோதான் வாங்கவேண்டுமென்ற கட்டாயம் உண்டா ? அல்லது, விவசாயிகள் தாங்களே நினைத்த இடங்களில் வாங்கிக்கொள்வது அவர்களுக்குச் சௌகரியமாக இருக்கும் என்ற காரணத்தினாலே, அவர்கள் இஷ்டத்திற்கு விடப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எந்த எந்த கம்பெனியிடமிருந்து வாங்க வேண்டுமென்ற ஜாபிதா அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஜாபிதாவிலுள்ளவர்களில் யாரிடம் வாங்கினாலும் அரசாங்கம் அதை ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

Sri A. VEDARATHNAM : ஏராளமான தொகையை வெளிநாடுகளுக்கு அனுப்பி மோட்டார் தருவிப்பதற்குப் பதிலாக, இந்த நாட்டிலேயே அதை உற்பத்தி செய்யும் தொழில் ஸ்தாபனங்களுக்கு இன்னும் அதிக உதவி கொடுத்து, நம்முடைய தேவையை இங்கேயே பூர்த்தி செய்து கொள்ள அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா ? இல்லாவிட்டால், முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதுபற்றி வேண்டிய முயற்சி எடுத்துக்கொண்டுதான் வருகிறது. இருந்தாலும், அவைகள் விவசாயிகளுக்கு வேண்டிய அளவு கிடைப்பதில்லை. ஆகையால், ஸ்விட்ச் கியரும், ஸ்டார்ட்டரும் எந்த அளவு கிடைக்கவில்லையோ, அந்த அளவு அன்னிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டும் என்பது இந்த அரசாங்கத்தினுடைய கருத்து.



5th March 1958]

Sri N. K. PALANISAMI : 1956-ம் வருஷத்திலேயே மோட்டார் இறக்குமதியை நிறுத்திவிட்டிருக்கிறார்கள். அந்தத் தடையை நீக்கி மறுபடியும் அதிகப்படியாக மோட்டார் இறக்குமதி செய்வதற்கு சர்க்கார் புனராலோசனை செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்பொழுது முக்கியமாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய அவசியம் ஸ்விட்ச் கியருக்கும், ஸ்டார்ட்டருக்கும் இருக்கிறது. மோட்டார்கள் இப்பொழுது கிடைக்கிறது. மோட்டார்கள் போதவில்லையென்றால், அதைப் பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்தலாம்.

### *Electric motors*

* 199 *Q.*—Sri S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Central Government have been requested by the State Government to sanction import and sale of electric motors, starters, switches, etc., for the water pumpsets required by the agriculturists?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : In February 1957 this Government addressed the Government of India for the allotment of 7,400 electric motors (with starters and switches) for the half-year January to June 1957 as a special case to meet the requirements of agriculturists in this State as a result of representations received regarding dearth of electric motors, etc.

Sri S. M. ANNAMALAI : வியாபாரிகள் பழைய மோட்டார்களுக்குப் புது ' பெயின்ட் ' அடித்து புது மோட்டார் என்று சொல்லி விற்பதாலும், காலையில் இருந்த விலை மாலையில் உயர்ந்து விடுவதாலும், அப்படி வியாபாரிகள் தப்பிதமாக விற்பதால் நம்முடைய நாட்டு விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால், மோட்டார், ஸ்விட்ச், ஸ்டார்ட்டர் போன்ற மின்சார சாமான்களைச் சர்க்காரே வாங்கி கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ, விவசாய டிபார்ட்மெண்ட் மூலமாகவோ விவசாயிகளுக்குக் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இம்மாதிரி குறிப்பாக புகார்கள் ஏதும் அரசாங்கத்திற்கு வரவில்லை. ஆனால் அரசாங்கமே வாங்கி விநியோகிக்கும் விஷயத்திலும் கவனம் செலுத்தப்பட்டுதான் வருகிறது.

### *Educational concessions*

* 200 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state why the President of Tamil Nad Congress Committee has been authorized to issue certificates to children of political sufferers regarding the educational concessions?

The Hon. Sri C. SUBRAMANIAM : As per the orders sanctioning the concession to children of political sufferers, political sufferers are defined " as those who have undergone imprisonment in the cause of Indian Independence as a result of taking part in the movements inaugurated since the beginning of the year 1921 by the Indian National Congress or under its sanction ". The President, Tamil Nad Congress Committee, is considered to be the most competent person to issue the certificates.

[5th March 1958

SRI N. K. PALANISAMI : அரசியல் தியாகிகள் எல்லாக் கட்சிகளி லும் இருப்பதால், அவர்களின் தகுதி பார்த்து காங்கிரஸ் தலைவர் கையெழுத்து போடுவதைவிட ரெவினியூ அதிகாரிகளே போடுமாறு உத்தரவிடப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதையே ரெவினியூ அதி காரியிடம் ஒப்படைத்திருந்தால் கனம் அங்கத்தினர் ஸ்ரீ பழனிசாமி அவர்கள் பாடத்தை திரும்பிப் படித்திருப்பார் என்று நினைக்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : : தேசீய தியாகிகளைப் பற்றிய சான்றிதழ் வழங்குகின்ற உரிமை ஒரு கட்சித் தலைவருக்கு அளிக்கப்படுவதைவிட நாட்டிலே உள்ள, சட்ட மன்றத்திலே உள்ள, அந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுக்காவது அளிக்கப்பட்டு, சட்ட மன்றத்தோடு தொடர்புடைய தாக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சட்ட மன்றத்திலே இருக் கின்ற உறுப்பினர்களுக்கும் இந்த இயக்கத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லாமலிருக்கலாம். ஆகையால்தான், காங்கிரஸ் நடத்திய இயக்கங்களில் சேர்ந்தவர்களைப்பற்றிய விஷயங்களும், அதற்குத் தகுந்த ஆதாரங்களும் காங்கிரஸ் ஸ்தாபனத்திடம் இருக்கவேண்டு மென்ற காரணத்தால், இத்தகைய சர்டிபிகேட் வழங்கக்கூடிய உரிமை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI S. LAZAR : காங்கிரஸ் கட்சியைச் சாராத வேறு கட்சியைச் சேர்ந்த எவராவது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரிடத்திலே சர்டிபிகேட் கேட்டு, கொடுக்க மறுத்ததாக ஏதாவது புகார் சர்க்காருக்கு வந்திருக் கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுவரையிலும் எந்த விதமான புகாரும் வரவில்லை.

SRI A. GOVINDASAMY : தியாகிகள் பட்டியலைத் தயாரித்து தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு அனுப்புகிற பொறுப்பை ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ? அப்படி யானால், சில ஜில்லாக்களில் புதியதாக வந்திருக்கிற காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு இந்த பொறுப்பை ஒப்படைத்திருப்பது எப்படி பொருத்தம் உடையதாக இருக்கும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுதிருக்கக்கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரைப் பொறுத்த வரையில், அவ ருக்கு ஜில்லாவில் இருக்கும் எல்லா விவரங்களும் தெரியும். ஆகையால், அவர் சரியான விதத்தில் சர்டிபிகேட்டுகள் வழங்குவார் என்பதில் சந்தே கத்திற்கே இடம் கிடையாது.

*Homes for Harijans*

* 201 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the number of houses built for Harijans in the Coimbatore district during 1957 ; and

(b) the amount spent thereon?

THE HON. SRI P. KAKKAN : (a) 318.

(b) Rs. 1,74,900 (during 1956–57).

SRI N. K. PALANISAMI : ஒதுக்கியிருக்கும் வீடுகள் தொகை ஒரு ஊருக்குக் கூட போதாமல் இருக்கிறது. ஆகவே, ஜில்லா பூராவும் இருக்கும் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டம் ஏதாவது சர்க்காரிடம் இருக்கிறதா ? அத்திட்டம் எத்தனை வருஷங்களில் முடிவு அடையும் ?

THE HON. SRI P. KAKKAN : ஜில்லா பூராவிலும் உள்ளவர்களுக் கெல்லாம் வீடு கட்டிக் கொடுப்பதென்றால் அது இப்பொழுது முடியாது. அங்கத்தினருக்கு முழு விவரம் வேண்டுமானால் தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.



5th March 1958]

SRI P. G. MANICKAM : கனம் சபாநாயகர் அவர்களே ! ஒதுக்கப் 1-10
பட்டிருக்கிற வீடுகளானது இந்த வருஷம் மார்ச் 31-ந் தேதிக்குள் p.m.
கட்டப்பட்டுவிடுமா, அல்லது பின்னால் கட்டப்படுமா ? எந்த நிலைமையில் கட்டப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : மார்ச் 31-ந் தேதிக்குள் கட்டிவிட வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். அவ்வேலை மிகவும் துரித மாக முடிக்கப்படவேண்டும் என்று எல்லாக் கலெக்டர்களுக்கும் தெரியப் படுத்தியிருக்கிறோம். முடியாவிட்டால் பின் இரண்டொரு மாதத்தில் கட்டு வதற்கும் அனுமதி அளிக்கவேண்டும் என்பதாக மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

SRI A. GOVINDASAMY : கோவை மாவட்டத்தில் கவுந்தப்பாடி கிராமத்தில் கட்டப்பட்ட வீடுகள் இடிந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. அவை சரிப்படுத்தப்பட்டுவிட்டதா ?

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI M. JAGANNATHAN : ஹரிஜனங்களுக்குக் கட்டிக் கொடுக்கப் படும் வீடுகளுக்கு அஸ்திவாரம் இரண்டடி போடுவதற்குத்தான் எஸ்டி மேட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாக அறிகிறேன். இவ்விஷயம் உண்மைதானா ?

THE HON. SRI P. KAKKAN : அஸ்திவாரம் இரண்டடி போடவேண்டும் என்பது உண்மைதான். இரண்டடி போட்டால் போதும் என்கிற இடங் களுக்கு இரண்டடி போதும். மோசமான இடங்களுக்கு இன்னும் கொஞ் சம் அதிக அஸ்திவாரம் போடலாம் என்றும் சொல்லியிருக்கிறோம்.

SRI G. G. GURUMURTHI : ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்காகப் போடப்பட்ட எஸ்டிமேட் மிகவும் குறைவாக இருப்பதால் வீடுகளைச் சரியாகக் கட்ட முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. இது அரசாங்கத்திற்கு தெரியுமா ? எஸ்டிமேட் தொகையை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : எஸ்டிமேட் தொகையை அதிகப் படுத்தும் உத்தேசம் இல்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஒரு வீட்டுக்கு 250 ரூபாய் ஹரிஜனங்கள் கொடுக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. பொது வாக வீடு கட்டுவதற்கு இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் போதாது என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது பரிசீலனை செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : அப்பேர்ப்பட்ட தகவல் ஒன்றும் இல்லை பரிசீலனை செய்வதற்கு.

SRI K. VINAYAKAM : Have the Government any scheme for building houses for really economically poor people, other than Harijans, namely, Backward Classes?

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜனங்களுக்காக கட்டப்படும் வீடுக ளுக்கு அருகில் அவர்களும் வந்து வசிக்க விரும்பினால் வீடு கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்யலாம்.

SRI A. A. RASHEED : சாதாரண வீடுகள் கட்டுவதற்கு எத்தனை அடி கள் அஸ்திவாரம் போடுகிறார்கள் ?

THE HON. SRI P. KAKKAN : தனிக் கேள்வி போடவேண்டும்.

[5th March 1958

SRI O. VENKATASUBBA REDDI : ஹரிஜனங்களுக்கு கட்டும் வீடுகளில் குளிக்கிற ரூம் ஒன்று இருக்கிறது. அதற்கு கிராமப்புறங்களில் அவசியம் இல்லை. இப்போது இருக்கிற வீடு சௌகரியம் இல்லையென்று சொல்கிறார்கள். அந்தப் பிளானை மாற்றி அமைப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்கிற யோசனை பரிசீலனை செய்யப்படும்.

SRI T. IRUSAPPAN : ஏற்கனவே கட்டப்பட்ட காலனிகளுக்கு ஹரிஜனங்களுக்கு உடனடியாகப் பணம் கட்டவேண்டுமென்று உத்தரவு வந்திருக்கிறது. அவர்கள் பணம் கட்டும் நிலைமையில் இல்லை. அவர்கள் பணம் கட்டாமல் இருப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : ஒரு காலனி கட்டுவதற்கு முன்பாகவே யார் 250 ரூபாய் பணமாகவோ, உழைப்பின் மூலமாகவோ கொடுக்கிறார்களோ அவர்களுக்கு வீடு தரப்படும் என்று சொல்லப்பட்டது. அப்போது ஒப்புக்கொண்டு இப்போது பணம் இல்லை என்றால் என்ன செய்வது ? உண்மையில் பணம் இல்லாத ஏழைகளாக இருந்தால் கலெக்டர் சிபார்சு செய்தால் 250 ரூபாய் பணம் கடனாக அவர்களுக்குக் கொடுத்து வசூலிக்கப்படும்.

SRI M. JAGANNATHAN : சேரிகளை ஒழிப்பதற்கு திட்டங்கள் போட்டுக்கொண்டிருக்கும்போது சேரிகளிலேயே ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டித்தருவது சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : சாதி இந்துக்கள் வாழக்கூடிய பகுதிகளில் சர்க்கார் நிலங்களோ, புறம்போக்கு நிலங்களோ இருந்தாலும் கூட அங்கே காலனிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

*House-sites for Harijans*

* 202 Q.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state the number of Harijans provided with house-sites free in the Bhavani taluk, Coimbatore district?

THE HON. SRI P. KAKKAN : The number of Harijans provided with house-sites free of cost in Bhavani taluk of Coimbatore district is eighty from July 1948. In addition to this, an extent of 11·12 acres of land has been acquired for provision of house-sites for 139 Harijan families.

SRI P. G. MANICKAM : பவானி தாலுக்காவில் 46 ஹரிஜனச் சேரியானது சாதி இந்துக்களுடைய பட்டா நிலங்களில் இருக்கிறது. அதனால் அவர்கள் சாதி இந்துக்களுக்கு அடிமை வேலை செய்கிறார்கள். அந்த நிலங்களையாவது உடனடியாக ஜாரி செய்து ஹரிஜனங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்கிற கிராமங்களை எல்லாம் எழுத்து மூலமாக அனுப்பினால் அந்த நிலங்களை எல்லாம் அக்வயர் பண்ண ஏற்பாடு செய்ய முயற்சிக்கும்.

SRI A. GOVINDASAMY : பவானி தாலுக்காவில் வீட்டு இடம் இலவசமாக ஹரிஜனங்களுக்கு கொடுப்பதாகத் தெரிகிறது: அதே போன்று இதர இடங்களிலும் செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : எங்கெல்லாம் ஏழை ஹரிஜனங்கள். இருக்கிறார்களோ அங்கெல்லாம் இனமாக வாங்கிக் கொடுக்க முயற்சி செய்யப்படும்.



5th March 1958]

SRI K. ANBAZHAGAN : தனிப்பட்டோர் நிலங்களில் சேரிகள் இருந்தால் சேரிகளை ஒழித்து ஹரிஜனங்களை அப்புறப்படுத்துவதை விட அந்தச் சேரிகள் அமைந்திருக்கும் தனிப்பட்டோர் நிலங்களை அரசாங்கச் சொத்தாக்கி அச்சேரி மக்கள் அங்கேயே வாழ ஏற்பாடு செய்யப்படுமா ?

MR. SPEAKER : The hon. Member is asking information on a policy matter. He can ask for information about Bhavani, I have no objection.

*Kaduvayar bridge*

* 203 Q.—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the estimated and actual cost of construction of the Kaduvayar bridge at Nagapattinam ;

(b) whether the work was done departmentally or by contract; and

(c) if done, departmentally, whether any tender was called for before the Department took up the work?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) The estimated cost of the bridge is Rs. 2·75 lakhs and the actual cost of construction is Rs. 5·25 lakhs.

(b) The work was done departmentally.

(c) Yes, Sir.

*Suicide*

* 204 Q.—SRI S. B. ADITYAN : Will the Hon. the Minister for Home be pleased to state how many (i) men and (ii) women committed suicide in the State during 1956–57?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The answer is as follows :—

| Year. | Total number or cases of suicide. | Men. | Women. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1956 .. .. | 2,590 | 1,483 | 1,107 |
| 1957 (up to 30th November 1957). | 2,377 | 1,307 | 1,070 |

SRI S. B. ADITYAN : இவ்வாறு இந்நாட்டு மக்கள் தற்கொலை செய்து கொள்வதற்குக் காரணம் இங்கே நிலவுகிற வேலையில்லாத் திண்டாட்டம் அல்லவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தற்கொலை செய்து கொள்வதற்கு வேறு எத்தனையோ காரணங்கள் உண்டு. வேலையில்லாமல் இருக்கிறவர்கள் எல்லோரும் தற்கொலை செய்துகொண்டு விடுவதில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் கணிசமான முறையில் தற்கொலைகள் குறைந்து வருகின்றன. எங்களிடத்திலுள்ள தகவலில் இருந்து தற்கொலை செய்து கொள்வதற்குக் காரணம் தீராத வியாதி, குடும்பச் சண்டை, பைத்தியம், அவமானம், வாழ்க்கையில் ஏமாற்றம், கடன் தொல்லை, வறுமை, காதல் விஷயத்தில் தோல்வி, பரீட்சையில் தோல்வி போன்றவைதான்.

THE HON. SRI P. KAKKAN : (a) Rs. 15·00 lakhs.

(b) Rs. 8·83 lakhs to end of December 1957.

(c) In about 4 years.

(d) No delay is anticipated at present.

SRI S. LAZAR : இந்தப் பகுதியில் ஏராளமான நிலங்களை அக்விஸிஷன் ஆக்டின் கீழ் எடுக்கவேண்டியிருப்பதால் அதற்கு வேண்டிய ஆபீஸர்கள் நியமிக்கப்படவில்லை என்று அந்த ஸ்கீமில் வேலை செய்யும் என்ஜினியர்கள் புகார் செய்திருக்கிறார்களா ? அந்தப் புகாரை நீக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : அக்விசிஷன் வேலைகளை துரிதமாக நடத்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

*Village roads*

* 207 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the total number of villages served by roads;

(b) whether the Government propose to get other villages also served by roads especially villages not covered by any National Extension Service or Community Development Blocks; and

(c) whether the Government propose to give priority to the laying of village roads as against the cementing or tarring of roads laid already?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) 8,519.

(b) 1,761 villages are proposed to be connected by roads in addition to the villages that will be provided with roads under National Extension Service and Community Development Schemes.

(c) Adequate attention is being paid to the formation of new roads along with improvements to existing roads, according to needs.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Are the Government aware of the fact that the roads that have been formed under the National Extension Service and Community Development Schemes have been completely neglected and if so, what is the proposal of the Government to keep them in order?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : I do not think the Government are aware that they have been completely neglected. But whatever possible attention is to be given is being given now.

SRI K. VINAYAKAM : Is it not our target to connect all the villages in our State by the end of the Second Five-Year Plan period and if so, what arrangements are being made in that direction?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Adequate attention is being paid to the formation of new roads along with the improvement of the existing roads.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : சேலம்-ராசிபுரம் தாலூகாக்களில் கிராம ரஸ்தாக்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அங்கு போக்குவரத்திற்குள்ள வசதியேயில்லை. ஆகவே அதற்கு வேண்டிய நடவடிககைகள் எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

MR. SPEAKER : இதற்கு நீங்கள் தனி கேள்வி கேட்கவேண்டும்.





*Dehorning and removing of ears of cattle*

* 208 Q.—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have any proposal to bring the offence of dehorning and removing of ears of the cattle under the purview of the Society for the Prevention of Cruelty to Animals?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI A. VEDARATHNAM : இம்மாதிரி மாடுகளின் கொம்பைத் தீய்த்து காதுகளை அறுப்பதால் ஏதேனும் நலன் உண்டு என்று கால்நடை நிபுணர்கள் யாரேனும் கூறியிருக்கிறார்களா ? அப்படி இல்லை என்றால் அனாவசியமாக இந்தக் கொடும் துன்பத்தைச் செய்வதில் இருந்து தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கொம்பை வெட்டுவதால் மாடுகளுக்கு பலம் அதிகரிக்கிறது என்று மாடு வைத்துக் கொண்டிருப்பவர்கள் நம்புகிறார்கள். இது, நிபுணர்களின் அபிப்பிராயம் அல்ல. அதனால் பலம் அதிகமாகிறது என்றாலும் கொடுமை விளைவிக்கக் கூடியது தான் அது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மிருகங்கள் கொடுமை தடுப்புச் சட்டப்படி, 3-வது பிரிவுப்படி எடுத்துக் கொள்ளலாம். அப்படி சர்க்கார் நடவடிக்கை எடுப்பதோடு கூட அங்கத்தினர்களைப் போன்றவர்களின் ஒத்துழைப்பும் அக்கரையும் வேண்டும். அவர்கள், அப்படிச் செய்யக்கூடாது என்று பிரசாரம் செய்ய வேண்டும். தஞ்சையில் தான் இது அதிகமாக இருக்கிறது.

SRI A. GOVINDASAMY : தஞ்சையில் இது அதிகமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு இனி யாவது அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சட்டத்தின் கீழ் இது குற்றந்தான். குற்றம் என்றால், அது அதிகாரிகளின் கவனத்திற்கு வரும் போது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். அதோடு பொது மக்களின் ஒத்துழைப்பும் வேண்டும்.

SRI R. SRINIVASA IYER : சூட்டுக்கோலால் மாட்டுக் கொம்பைத் தீய்க்காமல் துன்பம் இல்லாத வழியில் கொம்பைத் தீய்க்க வழி இருப்பதாக இதர மாகாணங்களில் இருந்து தெரிய வருகிறது. அதை பிரசாரம் செய்ய சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

SRI S. NAGARAJA MONIGAR : அப்படி இத்தகைய கொடுமைகள் செய்யவிடாமல் நடவடிக்கை எடுத்துக் கொள்வதாய் இருந்தாலும் கூட, இது குறித்து எஸ்.பி.ஸி.ஏ. இலாகா சரியாக கவனிப்பதில்லை என்பதால் கால்நடை அதிகாரிகளுக்கு அந்த அதிகாரங்களை கொடுக்கக்கூடாதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்னிடம் வரும் புகார்கள் எஸ்.பி.ஸி.ஏ.க் காரர்கள் அதிகமாகக் கவனிக்கிறார்கள் என்பதுதான்.

SRI K. B. S. MANI : மாட்டுக் கொம்பைத் தீய்க்கக்காரணம், தூக்கு வெறி மாடுகள் ரொம்பப் பொல்லாததாகவும், முட்டுவதாகவும் இருப்பதால்தான் கொம்பைத் தீய்த்துவிடுகிறார்கள். அதைத்தான் தஞ்சையிலும் கையாளுகிறார்கள். அதை நீடிக்க விடும்படி அனுமதிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அங்கத்தினர் சொல்லும் காரணத்தையும் நான் ஒப்புக்கொள்ளமுடியாது.

SRI M. JAGANNATHAN : மாடுகளுக்கு இழைக்கப்படும் இந்த துன்பங்களை தவிர்க்க பிரசாரம் செய்யவேண்டுமென்று அமைச்சர் குறிப்பிட்டார்கள் பிரசாரம் செய்யவேண்டிய பொறுப்பை தனியாருக்கு விடுவதற்குப் பதிலாக எஸ்.பி.ஸி.ஏ. சங்கம் மூலம் செய்ய, அதற்கு போதிய ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் வகையில் அதற்கு போதிய மான்யம் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எஸ்.பி.ஸி.ஏ.க்கு மான்யம் கொடுக்கப்பட்டு வருகிறது. அது மட்டும் கவனித்தால் போதாது. பொதுமக்களுக்கும் இதில் ஒரு உணர்ச்சியும் அக்கரையும் இருக்கவேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன்.

SRI T. KARIA GOUNDER : இவ்வளவு நேரம் சபை கொம்பு அறுக்கிற வாதத்தில் இருந்தது.வாணியம்பாடி, ஜோலார்பேட்டையில் ஆயிரக் கணக்கான மாடுகளை அறுத்து மைசூருக்கு ஏற்றுமதி செய்வது சர்க்காருக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மைசூரிலிருந்து நம் ராஜ்யத்திற்கு மாடுகள் கொண்டு வரப்படுகிறது என்று கேள்விப்பட்டேன், இரண்டு நாட்களுக்கு முன்பு. இதுமாதிரி தகவல் எனக்கு தெரியாது.

SRI V. K. KOTHANDARAMAN : சட்டத்தின் கீழ் கொம்பு அறுப்பது, சூடு போடுவது, காது அறுப்பது, இவைகள் கொடுமையான காரியங்கள் என்று இருக்கும்போது, விதை அடிப்பதையும் கொடுமை என்று சொல்லி அதையும் சட்டத்தின் கீழ் கொண்டு வருவார்களா ?

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

1-30 p.m. SRI A. V. P. ASAITHAMBI : இந்த கால்நடைகளை துன்பப்படுத்தாமல் இருப்பதற்காக சட்டம் இருப்பதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். அந்தச் சட்டத்தை தீவிரமாக அமுல் நடத்துவதற்காக எல்லா இடங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்ப ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது அதிக தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தான் புகார் இருந்து வருகிறது.

SRI K. VINAYAKAM : ஸார், தஞ்சையில் மாட்டின் காதை கீழே அறுப்பதின் காரணம் அவைகளின் காது நீளம் கூடுதலாக இருப்பதால், அவைகளுக்கு பார்வை தெரிவதற்காகத்தான் இவ்விதம் அறுக்கப்பட்டு வருகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே இவ்விதம் பழக்கத்தில் இருந்துவரும் வழக்கத்தை இன்னும் நீடிக்க வழி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் இதில் கொஞ்சம் ஆராய்ச்சி செய்திருப்பதாக தெரிகிறது. ஆனால் நான் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லும் காரணத்தை ஒப்புக் கொள்ள முடியாது.

SRI A. V. P. PERIAVALAGURUVA REDDI : சென்னையில் பால் பீச்சுகின்ற பொழுது உண்மையாக கன்றுகளுக்கு பால் கொடுக்காமல் வெறும் கன்றின் தோலை வைத்துக்கொண்டு பாலை பீச்சுகிறார்கள். இதை தடுப்பதற்கு மந்திரி அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா ?

MR. SPEAKER : இந்தக் கேள்வி கொம்பைப்பற்றியும் காதைப்பற்றியும் உள்ள கேள்வி. ஆகவே இது சம்பந்தமில்லாத கேள்வி. இதற்கு பதிலளிக்க வேண்டியதில்லை.





*Scientific instruments*

* 209 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether grants are given to High Schools for buying scientific instruments; and

(*b*) the amount allotted for buying them for schools in the Tirunelveli district during 1957?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Presumably the hon. Member refers to the scheme for improvement of existing facilities for teaching science under the Second Five-Year Plan. Eight schools have been selected for the purpose in the current year and one of the schools is from the Tirunelveli district. The maximum expenditure permissible is Rs. 50,000 for each school and the grant payable from the Central Funds is towards 50 per cent of the expenditure.

The balance is met by the State Government and the management of the school concerned in equal shares.

* SRI N. K. PALANISAMI : திருநெல்வேலியில் லாபரட்டரி சாமான்களுக்காக 50 ஆயிரம் கொடுத்திருப்பது அங்கு கட்டிடம் ஆகாமல் இருக்கும் பொழுதே கொடுக்கப்பட்டிருக்கிறது. கட்டிடம் இல்லாமல் எதற்காக கொடுக்கப்படவேண்டுமென்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கட்டிடம் கட்டுவதற்கும் சேர்த்துத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. RAMACHANDRAN : இந்த கிராண்ட் கொடுப்பது தனிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டு வருகிறதா ? அவ்விதமென்றால் கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களுக்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த கிராண்ட் தற்பொழுது தனிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களுக்கு கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*Manachanallur-Elandalaipatti road*

* 210 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state when the Government propose to metal and upgrade the earthen road between Manachanallur and Elandalaipatti (via) Rajapalayam, Salakadu, Ayyampalayam, Thathamangalam, Valaiyur, Edumalai, Thevoor, Kalathur and Elanchalaipatti in Tiruchirappalli district?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The question of including the work in the Central Road Fund Programme is still under consideration.

[5th March 1958

*Central Grants*

* 211 *Q.*—SRI S. B. ADITYAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount received by the Government from the Centre by way of subsidies during 1956–57; and

(*b*) the purpose for which they were received?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The answer* is placed on the table of the House.

SRI S. LAZAR : ஸார், இந்த ரஸ்தா சம்பந்தமாக முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்படாத திட்டங்களை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்து எடுத்துக் கொள்ளாததற்கு என்ன காரணம் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதற்கென்று 2·2 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரஸ்தா சம்பந்தமான திட்டங்கள் எல்லாம் கவனிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எதெது முதலாவது அவசியமாயிருக்கிறதோ அவைகள் எல்லாம் ஆலோசனை செய்யப்பட்டு வருகின்றன.

SRI S. B. ADITYAN : ஸார், தமிழ்நாட்டிலிருந்து டில்லி சர்க்காருக்கு வருடம் 60 கோடி ரூபாய் மத்திய வரி என்ற பெயரால் வசூல் செய்யப்படுகிறது. இதைக் கவனிக்கும்பொழுது நமக்கு மத்திய சர்க்காரிலிருந்து உதவித்தொகை என்ற உருவத்தில் 6 கோடி ரூபாய் தான் வருகிறது. இது மிகவும் குறைவாகத் தோன்றுகிறது. ஆகவே டெல்லியில் நமது நிதி மந்திரி அவர்களுக்கிருக்கின்ற செல்வாக்கை பயன்படுத்தி 6 கோடி என்றிருப்பதை 10 கோடியாக பெறுவதற்கு ஏதாவது முயற்சி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : 60 கோடி ரூபாய் வசூல் செய்யப்படுகிறது என்ற கணக்கு " நாம் தமிழர் " கட்சியின் கணக்கா அல்லது " திராவிட முன்னேற்ற கழகத்தின் " கணக்கா என்று தெரியவில்லை. இந்த கணக்கு சரியல்ல என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : அப்படி 60 கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்திற்குப் போகிறது, ஆனால் நமக்கு 6 கோடி ரூபாய் தான் கிராண்டாக வருகிறது என்றால் மற்றும் பல ஏற்பாடுகளில் மத்திய சர்க்காரால் செலவு செய்யப்படுவதை எதில் கணக்கிடுவது என்று கேட்கிறேன்.

MR. SPEAKER : இது சம்பந்தமில்லாத கேள்வி என்று நினைக்கிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : ஸார், இங்கே இருந்து வடக்கே போகிற ரூபாயின் கணக்கு " நாம் தமிழர் " கட்சியின் கணக்கா அல்லது தி.மு.க.வின் கணக்கா என்று கேட்டார்கள். இந்த கணக்கு சரியில்லை என்றால் இந்த அரசாங்க கட்சிதான் சரியான புள்ளி விவரங்களை சொல்லட்டுமே.

THE HON. SRI C. SUBRAMANIAM : அவ்விதம் கேட்பதாயிருந்தால் கொடுப்பதற்கு முயற்சி செய்யப்படும்.

SRI S. B. ADITYAN : ஸார், பாயின்ட் ஆப் ஆர்டர், மந்திரி அவர்கள் சொன்னார்கள், கேட்டால் பதில் கொடுப்பதற்கு முயற்சி செய்யப்படும் என்று. ஆனால் கேள்வி அனுப்பப்பட்டது, அதை அனுமதிக்கவும் இல்லை, அப்படியென்றால் எந்த விதத்தில் அவர்கள் பதில் அளிக்கப்போகிறார்கள் ?

MR. SPEAKER : கேள்வியை அனுமதிக்க வேண்டிய பொறுப்பு என்னைச்சார்ந்தது. அதை அனுமதிக்கவில்லை என்றால் ஏன் அனுமதிக்கப்படவில்லை என்ற காரணத்தையும் சொல்லப்பட்டிருக்கும்.

* Printed as Appendix II on pages 303–310 infra.



5th March 1958]

SRI S. B. ADITYAN : பதில் வந்தது. இது மத்திய சர்க்காரில் கேட்கவேண்டுமே ஒழிய நமது நிதி அமைச்சர் அவர்களிடத்தில் எப்படி கேட்பது என்று கேட்டிருந்தது.

MR. SPEAKER : அதில் தவறு ஒன்றுமில்லையே.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி கேட்கவேண்டிய இடத்தில் கேட்டால் பதில் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Repairs to tanks*

* 212 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the amount spent to repair the tanks damaged by the overflow of water in 1956–57 in the Bhavani taluk, Coimbatore district; and

(*b*) the amount spent to repair the channel connecting them?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The exact amount spent in carrying out repairs to the tanks damaged by the overflow of water in 1956–57 in Bhavani taluk is Rs. 15,588.

(*b*) The amount spent on repairing the channels connecting them is Rs. 1,314.

SRI P. G. MANICKAM : ஸார், இதில் குறிக்கப்பட்டிருக்கும் வாய்க்கால் மூலம் மழை பெய்யும் காலங்களில் தண்ணீர் கிடைக்கிறது. மேலும் அங்கிருக்கின்ற ஏழு குளங்களுக்கு மேட்டூர் அணைக்கட்டிலிருந்தும் லோயர் பவானி அணைக்கட்டிலிருந்தும் தண்ணீர் விட முடியும். ஆகவே இதற்கு ஒரு திட்டத்தை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருவார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அந்த ஏழு குளங்கள் எதெல்லாம் என்று தெரியவில்லை. ஆகவே இதற்கு தனிக்கேள்வி போடும்படி கேட்கிறேன்.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1958–59—*cont.*

MR. SPEAKER : இன்றைய தினமும் பட்ஜெட்டின்மீது பொது விவாதம் நடைபெறும். இன்றைக்கு பேசுவதற்கு 35 அங்கத்தினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு அங்கத்தினரும் 10 நிமிஷங்கள் தான் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் 8-வது நிமிஷத்தில் மணியடிக்கிறேன். அதன் பின் இரண்டு நிமிஷங்கள் கழித்து 10-வது நிமிஷத்தில் முடித்துக்கொள்ளவேண்டும் என்று எல்லா அங்கத்தினர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

*SRI P. P. M. T. PONNUSWAMY : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற பாரதியாரின் வாக்குப்படி கனம் நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தை நன்றியுடன் ஒப்புக் கொள்கின்ற நேரத்தில், சென்ற ஒரு வருஷத்திய அனுபவத்தைக் கொண்டு சில யோசனைகளை சமர்ப்பிக்க விரும்புகிறேன். இங்கு பல நண்பர்கள் பல விஷயங்களைப்பற்றி பேசினார்கள். நான் சுருக்கமாக சில விஷயங்களை மட்டும் சொல்லுகிறேன். மின்சாரம் சம்பந்தமாக, கிராம மக்களுக்கு மின்சார பம்பு செட்டுகள் வைக்கவேண்டும் என்று நாம் பிரசாரம் செய்தோம். அதை அவர்கள் ஏற்படுத்தும்பொழுது அவர்களுக்கு இதில்

SRI V. SANKARAN : இதிலே பெண்கள் காரணத்தினாலே எத்தனை ஆண்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் ? ஆண்கள் காரணத்தினாலே எத்தனை பெண்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் ?

MR. SPEAKER : இதைப் பற்றித் தனிக் கேள்வி போடுங்கள்.

SRI D. S. AUTHIMOOLAM : இதிலே தமிழர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்வி தமிழ்நாட்டைப் பொறுத்ததுதான்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : தினத்தந்தி பத்திரிகையில் காதல் விஷயமான தோல்விகளை வெளிப்படுத்துவதால் அவமானம் தாங்காமல் கொலை செய்து கொள்கிறார்கள். . . . .

MR. SPEAKER : I rule this out of order.

SRI M. SELVARAJ : சில பத்திரிகைகளில் தற்கொலை பற்றி அனாவசியமாக விளம்பரம் அதிகப்படுவதன் மூலம் தற்கொலை அதிக அளவுக்குப் பெருக காரணம் ஆக இருக்கிறதா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுவும் இருக்கக் கூடும்.

SRI S. NAGARAJA MONIGAR : அரசியல் தற்கொலை புரிந்து கொண்டவர்கள், புரிந்து கொள்ள தீவிர முயற்சி செய்து கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்வி உயிரை மாய்த்துக் கொள்ளும் தற்கொலைதான்.

SRI K. ANBAZHAGAN : அரசாங்க உத்தியோகஸ்தர்கள், கீழ்தர சிப்பந்திகள், கைதிகள் இவர்களில் தற்கொலை செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் என்கிற விவரம் தரப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்னிடம் விவரம் இல்லை.

*Unemployment Relief Scheme.*

* 205 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

1-20 p.m.

(*a*) whether the Government have revised the scale of pay of teachers employed under the Unemployment Relief Scheme ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI : 57-ம் வருடத்தில் 60 ரூபாய் சம்பளம் என்று நிர்ணயித்து வேலை செய்து கொண்டிருந்தவர்களின் சம்பளம் திடீரென்று 40 ரூபாயாக குறைக்கப்பட்டதுண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆரம்பத்தில் நிர்ணயித்தது 40 ரூபாய் சம்பளமும் அதற்குள்ள பஞ்சப்படியுமாகும். இப்போதும் அதேமாதிரியாகத்தான் இருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : வேலையின்மை காரணமாக நியமிக்கப்பட்ட உபாத்தியாயர்கள், இந்த ஓராசிரியர் என்று உணருகிறேன். அதுபோன்ற உபாத்தியாயர்களுக்கு ஒரு வருடத்திற்கு சம்பளம் அனுப்பப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இது சர்க்காருக்குத் தெரியுமா ? அதைக் கொடுக்க உடனே சர்க்கார் முயற்சி எடுக்குமா ?



THE HON. SRI C. SUBRAMANIAM: அப்படி அங்கத்தினர் அவர்களுக்கு தகவல் தெரிந்திருக்கிறது என்றால் இதுவரையில் அதுபற்றி எழுதாமல் இருந்தது பெரிய தவறு. அதுமாதிரி ஒரு தகவலும் சர்க்காருக்கு வரவில்லை.

SRI K. VINAYAKAM : Sir, with regard to the pay of teachers—other things being equal, viz., general qualification and the technical qualification—why should there be disparity in the scales of pay of the teachers employed in the ordinary schools and the teachers employed under the Unemployment Relief Scheme?

THE HON. SRI C. SUBRAMANIAM : These people are untrained teachers. 'Raw S.S.L.Cs' are employed just to relieve unemployment and that is why on an *ad hoc* basis, the pay is fixed at Rs. 40 plus dearness allowance and now they are undergoing training. After the training period, they will be absorbed in the regular cadre.

SRI S. LAZAR : இந்தத் திட்டத்தின் கீழ் அமர்த்தப்பட்ட ஆசிரியர்கள் கண்டிப்பாக பயிற்சியும் பெற வேண்டுமென்று இருக்கிற உத்தரவின் காரணமாக பயிற்சியில் இருக்கிற ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஒன்று இரண்டு ஆண்டு காலமாக சம்பளம் கொடுக்கப்படவில்லை என்ற புகார் சர்க்காருக்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் அவர்களுக்கு சம்பளம் கொடுக்க சர்க்கார் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது, முதல் கேள்வியில் இருந்து ரொம்ப தூரம் போகிறது. ஆகவே தனி கேள்வி போடவேண்டும்.

SRI G. G. GURUMURTHY : இந்தத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் வேலையில் இருந்து நீக்கப்படுகிறார்கள் என்பது உண்மையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனி கேள்வி வேண்டும்.

SRI A. GOVINDASAMY : வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களுக்கு ஓராசிரியர் வேலை கொடுக்கப்பட்டு, அவர்கள் இப்பொழுது டிரெயினிங்குக் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது, அவர்களின் வருவாய் போதாது கஷ்டப்படுகிறார்கள். ஆகவே டிரெயினிங் பீரிடிலும் 40 ரூபாய் வைத்து சம்பளம் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்விக்கும் உப கேள்விக்கும் சம்பந்தமேயில்லை. கொஞ்சமாவது தொடர்பு இருக்கவேண்டாமா ?

MR. SPEAKER : அதற்கு மந்திரி பதில் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை.

*Pullambadi Channel Scheme*

* 206 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the amount allotted for the Pullambadi Channel Scheme for the current year ;

(*b*) the amount that has been spent so far;

(*c*) when the scheme is likely to be completed; and

(*d*) the reasons for the delay in the completion of work?

[Sri P. P. M. T. Ponnuswamy] [5th March 1958

அதிக அனுபவம் இல்லாததினால் 5 ஹார்ஸ் பவர், 10 ஹார்ஸ் பவர் வைத்துக்கொள்வதாக எக்ரிமெண்ட் எழுதிக் கொடுத்தார்கள். இப்போது அதில் 3 ஹார்ஸ்-பவர் தண்ணீர்கூட கிடைக்காமல் இருந்து கொண்டிருக்கிறது. கிணறுகளிலிருந்தும் தண்ணீர் கிடைப்பதில்லை. ஆனால் அவர்கள் எழுதிக்கொடுத்த அக்ரிமெண்டின்படி 5 ஹார்ஸ்-பவர்க்கும் சார்ஜ் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதற்கு ஒரு சலுகை அளிக்கவேண்டும். அதோடு விவசாயிகள் தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். கிராமத்தில் சுமார் 4 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு பம்பு செட்டுகள் வைக்கவேண்டுமென்றால் குறைந்தது மூவாயிரம் ரூபாய்க்கு மேல் வேண்டியிருக்கிறது. இவ்விதம் நிலத்தை வைத்துக்கொண்டு உழ முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை என்னுடைய அனுபவத்திலிருந்து தெரிந்திருக்கிறேன். அப்பேர்ப்பட்ட கிராமங்களுக்கு சலுகை காட்டவேண்டுமென்றும், அதற்கு நமது அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

1-40 p.m. அதோடு முதுகுளத்தூர் தாலூகாவில் ஒரு நதி இருக்கிறது. அது ஒரு ஜீவ நதி இல்லை. காட்டாறு. வருஷத்திற்கு ஏதோ ஒரு தடவை, இரண்டு தடவை அதில் தண்ணீர் வருகிறது. அதற்குப் பக்கத்தில் நூற்றுக்கணக்கான கண்மாய்கள் இருக்கின்றன. சென்ற வருஷம் அரசாங்கத்தின் உதவியால் இந்தக் கண்மாய்கள் செப்பனிடப்பட்டு நல்ல வேளாண்மை வந்தது. அந்த ரகுநாதக் காவேரியில், எதிர்பாராத நிலையில் தண்ணீர் வந்து, பக்கத்திலுள்ள கண்மாய்களின் உதவியால் வேளாண்மை பெறமுடியும். இந்த ரகுநாதக் காவேரி தூர்ந்து போயிருக்கிறது. இதை நல்ல முறையில் செப்பனிட்டால் நூற்றுக்கணக்கான கண்மாய்களுக்கு தண்ணீர் கிடைக்கும். அதனால் அந்தப் பகுதியில் எந்த விதமான கலகங்களும் தொந்தரவுகளும் வராது என்று நினைக்கிறேன். அதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கிராமங்களில் ரோடு மராமத்து செய்கிறார்கள். அதில் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லை. நடுவில் ஒரு நதியோ, கால்வாயோ வந்தால் அந்த ரோடை முடிக்காமல் விட்டு விடுகிறார்கள். அந்த நதியின் மீது பாலம் கட்டாததால் அந்த ரோடில் போக்குவரத்திற்குத் தடை ஏற்படுகிறது. நல்ல பாலங்களை உடனடியாகக் கட்டவேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த பிளாக் டெவலப்மெண்ட் திட்டங்கள் அநேகம் இருக்கின்றன. இந்தத் திட்டங்களில் பல கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷ அனுபவத்தில் பார்க்கும்போது நாம் செய்கிற செலவுகளுக்குத் தகுந்தபடி வசதிகளோ, நன்மைகளோ ஏற்பட்டிருக்கிறதென்று தெரியவில்லை. ஏனென்றால், கிராமங்களில் இப்போது நம்முடைய திட்டப் பிரகாரம் பள்ளிக்கூடமோ, அல்லது ஆஸ்பத்திரியோ, அல்லது கிணறோ கட்டவேண்டுமானால் 50 சத விகிதம் அந்தப் பிரதேசத்திலுள்ள மக்கள் கொடுக்க முன்வருவதில்லை. என் பிர்க்காவைச் சேர்ந்த இடத்தில் ஒரு வருஷமாகியும் ஏறக்குறைய 50,000, 60,000 ரூபாய் சம்பளம், டி.ஏ. ஆகியும் எந்த விதமான நல்ல காரியமும் செய்ய முடியவில்லை. இது அரசாங்கத்தின் குற்றமில்லை. இருந்தாலும் அங்குள்ள ஜனங்களின் மனோபாவம் சரியாக இல்லை. ஜனங்களுடைய ஒத்துழைப்பு இல்லை. ஐந்நூறு ரூபாய் கொடுங்கள், கிணறு வெட்டித் தருகிறோம் என்று சொன்னால் அவர்களுக்கு அது புரிவதில்லை. நாம் மக்கள் முன்னேற வேண்டுமென்று நினைக்கிறோம். அதற்காகச் சுதந்திரம் வாங்கினோம். கிராம மக்கள் முன்னேற வேண்டுமென்று நினைக்கிறோம். கிராமங்கள் சுபிட்சமடையவேண்டுமென்று நினைக்கிறோம். விவசாயம் முன்னேற வேண்டுமென்று எண்ணுகிறோம். பதினாறு, 20 உத்தியோகஸ்தர்கள் போட்டு நாங்கள் அதைச் செய்கிறோம், இதைச்செய்கிறோம், நீங்கள் பங்கு கொடுங்கள் என்று கேட்டால். அதற்கு முன் வர யாரும் இல்லை. ஆகையால் நான் சொல்லுகிறேன், நீங்கள் கொடுக்கும் பணத்தை இலவசமாகக் கொடுங்கள். முக்கியமானதைப்



5th March 1958] [Sri P. P. M. T. Ponnuswamy]

பார்த்து எது எசென்ஷியலோ, எது முக்கியமோ அந்தக் காரியத்தை செய்தால் நாம் பெரிய நல்ல காரியத்தை கிராமங்களுக்கு செய்தவர்களாவோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

ஒன்றரை வருஷத்திற்கு முன்பு ஒரு தண்ணீர் டாங்க் கட்ட நினைத்தார்கள். அதாவது ஓவர் ஹெட் டாங்க். அதை எல்.டி.' ஸ்கீமில் போட்டார்கள். கலெக்டர் வந்து பார்த்து பவுண்டேஷன் ஸ்டோன் போட்டார்கள். அதற்குப் பின்னால் 1½ வருஷத்திற்குப் பிறகு எஸ்டிமேட் அப்ரூவாகி வந்தது. இரண்டு மாதத்திற்கு முன்பு, ஹெல்த் இன்ஸ்பெக்டர் வந்து பார்த்து தண்ணீர் நன்றாக இல்லையென்று சொன்னார். இரண்டாயிரம், 3,000 பேர்கள் 35 வருஷமாகக் குடித்து வந்த தண்ணீரை நல்லதில்லையென்று சொல்லிவிட்டார்கள். இந்த மாதிரியான அபத்தம் ஏற்படாமல் ஜாக்கிரதையாக இருந்தால்தான் நல்ல காரியங்கள் செய்ய முடியும். இல்லாவிட்டால் பணம் விரயமாகும். நம்முடைய எண்ணமும் நிறைவேறாது.

தவிர, தூத்துக்குடியைச் சேர்ந்தவன் நான் என்ற முறையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஒரு நாட்டின் மேன்மை, அதன் பொருளாதார அபிவிருத்தியில்தான் இருக்கிறது. தூத்துக்குடியை ஒரு ஆழ்கடல் துறைமுகமாகச் செய்யவேண்டுமென்று 35 வருஷமாகச் சொல்லிவருகிறோம். சேதுசமுத்திரத்தையும் ஒரு ஆழ்கடல் துறைமுகமாக ஆக்கவேண்டும். நாம் லட்சக் கணக்கான ரூபாயைச் செலவழிக்கிறோம். எந்த நாட்டிலே கப்பல் தொழில் துறைமுகங்கள் நல்ல விதமாக இருக்கின்றதோ, அந்த நாடுதான் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைகிறது. இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளை சரித்திர பூர்வமாக, நடைமுறையில் பார்த்தால் அங்கு பல துறைமுகங்கள் இருக்கின்றன. கோடிக்கணக்கான ரூபாய் வரவு செலவு நடக்கிறது. நம் ராஜ்யத்தில் 62 கோடி ரூபாய் வருமானம் வரவேண்டுமென்று நினைக்கிறேன். ஈஸ்ட் இண்டியா கம்பெனி மாதிரி ஒரு கம்பெனி ஏற்படுத்தி, தூத்துக்குடியை ஆழ் கடலாக்கி கப்பல் கட்டினால், இந்த 62 கோடி ரூபாயைப் பல வரிகள் மூலம் நாம் வசூலிக்க வேண்டியதில்லை. இந்தக் கப்பல் கட்டணத்தில் மட்டும் வசூலிக்க முடியும். ஏன் கட்டவில்லை என்றால் அதற்குப் பணம் இல்லையென்று சொல்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய் நம் தமிழ் நாட்டிலிருந்து மத்திய சர்க்காருக்குப் போகிறது. சென்ற வாரம் சமர்ப்பிக்கப்பட்ட மத்திய அரசாங்க பட்ஜெட் பிரகாரம், இன்கம் டாக்ஸ், எக்ஸைஸ் டியூடி, வீ கஸ்டம்ஸ், ரெயில்வே மூலம் சுமார் 700 கோடி ரூபாய் பல ராஜ்யங்களிலிருந்தும் போகிறது. அதில் ஒரு பகுதியை நமக்குக் கொடுத்தாலும்கூட, அதில் ஒரு பகுதியை மானியமாகக் கொடுத்தாலும்கூட, அல்லது கடனாகக் கொடுத்தாலும்கூட இந்தப் பெரிய திட்டத்தை நிறைவேற்ற முடியும். ஆனால் தெற்கே கடைசியில் இருப்பதால் யாரும் அதைப்பற்றி கவனிப்பதாகத் தெரியவில்லை. சென்ட்ரல் கவர்ன்மெண்டிலிருந்து மாகாண சர்க்கார் அதற்குரிய நிதி வசதியை அடைவதற்கு முயற்சிக்கவேண்டுமென்று சொல்லுகிறேன். நமது மந்திரிகளுக்கு அங்கு செல்வாக்கு இருப்பதால் அந்தக் காரியத்தைச் செய்வார்களென்று நம்புகிறேன். இதனால் நமக்கு பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு இன்றைக்கு தூத்துக்குடி-மானாமதுரை ரயில்வே ஏற்படுத்தினால் தூரத்தில் 70 மைல் குறைகிறது. நம் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி இந்த ரெயில்வே ஸ்கீமை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன்பே, பிரிட்டிஷார் காலத்திலேயே இந்த லைனுக்கு ஸர்வே நடந்திருக்கிறது. இதற்கு அதிகப் பணம் தேவையில்லை. பம்பாயிலே அண்டர்கிரௌண்ட் ரயில் போட 80 கோடி என்று சொல்கிறார்கள். கல்கத்தாவிலே அண்டர்கிரௌண்ட் ரயில் போட 80 கோடி என்று சொல்கிறார்கள். நூறு கோடி 80 கோடி என்று ஒவ்வொன்றுக்கும் சொல்லுகிறார்கள். ஒரு கோடி ரூபாய் கேட்டால் இல்லையென்று சொல்கிறார்கள். ஒரு கதை சொல்லுவார்கள். அதாவது அரிசியைக் கொடுத்து உமியைக் கேட்டமாதிரி

என்று சொல்லுவார்கள். இவ்வளவு நன்மைகளைச் செய்வதற்கு முயற்சி எடுக்க கேட்டுக்கொண்டும் இந்த வரவு செலவுத் திட்டத்தை முழு மனதுடன் ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**SRI V. VEDAYYAN :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த பட்ஜெட்டைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற முன் வந்திருக்கிறேன். இந்த பட்ஜெட்டைப்பற்றி எதிர் கட்சிக்காரர்கள் எதிர்த்துப் பேசியபோதிலும், இதிலுள்ள நல்ல அம்சங்களை நாம் பாராட்டவேண்டும். அன்பர் அன்பழகன் பேசியபோது சென்ற ஆண்டு அறிக்கையைவிட இந்த ஆண்டு அறிக்கை புத்தகத்தின் தாள்கள் சற்று வழுவழுப்பாக இருப்பதாகச் சொன்னார்கள். சென்ற ஆண்டு அவர்களுடைய விவாதம் இருந்ததைவிட இந்த ஆண்டு விவாதம் சற்று வழுவழுப்பாக இருந்தது. இந்த முறையிலே எதிர் கட்சிக்காரர்கள் எதிர்க்கவேண்டுமென்ற ஒரே கருத்துடன் சொல்லுகிறார்களே தவிர, கன்ஸ்ட்ரக்டிவ் கிரிடிஸிஸமாக எதையும் சொல்லவில்லையென்று நான் சொல்வேன்.

நமக்கு இப்போது உள்ள முக்கியமான பிரச்னை எல்லோருக்கும் உணவு எளிதாகக் கிடைக்க வழி செய்வதுதான். அப்படிச் செய்யவேண்டுமென்றால் பெரும்பாலும் நம் நாட்டிலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்ததுதான். நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கும் தொகை சற்று குறைவாக இருக்கிறது. ஆனால், இந்த அறிக்கையின் பிற்பகுதியிலே நமக்குப் போதிய இயற்கை வசதிகள் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஒப்புக்கொண்டாலும் இப்போது இருக்கும் திட்டங்களிலிருந்து கிடைக்கும் நீரில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வீணாகாமல் உபயோகிக்க வேண்டிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்கான வாய்ப்புக்கள் தஞ்சை ஜில்லாவில் ஏராளமாக
1-50 p.m. இருக்கின்றன. தஞ்சை ஜில்லாவில் பாய்ச்சப்படும் நீரைத் தவிர, பாக்கித் தண்ணீர் எல்லாம் கால்வாய்களிலும், ஆறுகளிலும் போய் கடலில் வீணாகப் போகிறது. அந்த நீரை பம்பிங் திட்டம் மூலமாக, அந்த ஆறுகளுக்கு அருகிலுள்ள மேடான பிரதேசங்களுக்கு நீர்ப்பாசன வசதிக்காகக் கொண்டுபோக ஏற்பாடு செய்து கொடுத்தால், இன்னும் பல்லாயிரக் கணக்கான ஏக்கர்கள் நஞ்சை நிலமாக மாறும். அதனால் உணவுப் பிரச்னை ஓரளவு தீரும். எங்கள் தொகுதியிலே, தென்னடார், வாய்மேடு, முத்துப்பேட்டைக்கு அருகிலுள்ள கோவிலூர், இந்தப் பகுதிகளில் பம்பிங் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த அறிக்கையில் அவைகள் இடம் பெறவில்லை. இந்தத் திட்டங்கள் சீக்கிரமாக அமலுக்கு வருமானால், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் நஞ்சையாக மாறும். உணவு உற்பத்தி அதிகரிக்கும். கோவிலூரில் பாமணி ஆற்றில் ஒரு பம்பிங் திட்டம் ஏற்படுத்தினால், சுமார் 1,500 ஏக்கரா நிலம் நஞ்சையாக மாறும். அவை பெரும்பாலும் சிறிய மிராசுதாரர்களுடைய நிலம். முந்நூறு ஏக்கர் நிலம் கோவிலூர் தேவஸ்தானத்தைச் சேர்ந்தது. அந்த 300 ஏக்கர் தேவஸ்தான நிலத்திலிருந்து இப்பொழுது சுமார் 1,200 ரூபாய்க்குக் குறைவாகத்தான் வருமானம் கிடைக்கிறது. இந்தத் திட்டம் வெற்றி பெற்றால், சுமார் 20,000 (இருபதாயிரம்) ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைக்கும். அபிவிருத்தி வரி மூலமாகவும் சர்க்காருக்கு ஏராளமான வருமானம் வரும்.

அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவில் கடலோரப் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டு நல்ல விளைச்சலை எதிர்பார்க்கும் சமயத்தில், சில கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. விளைச்சல் பாழாகிறது. பஞ்சப் பிரதேசமாகிறது. காரணம் பெரும்பாலும் அந்தப் பிரதேசங்களில் வடிகால் ஒன்றும் சரியாக இல்லை. வடிகால்களை சீர்திருத்திக்கொடுத்தால் உணவு உற்பத்தி அதிகரிக்கும். எங்கள் பிராந்தியத்தில் கந்தக்குரிச்சான் வடிகால் திட்டம் பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமலிருக்கிறது. அதிலிருந்து 15 கிராமங்கள் பல கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகிவருகின்றன. இனைதாங்கி வடிகால் திட்டம் நிறைவேற்றப்பட்டால் சில கிராமங்கள் இந்த வெள்ளத்திலிருந்து பாதுகாக்கப்படும்.





அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவில் கடலோரப்பகுதியில் அளம், முசல் வெளி என்ற பெயரால் பல ஏக்கர் நிலப்பரப்புக்கள் உதயமார்த்தாண்டம், தில்லைவிளாகம், குன்னலூர், கடம்பவிளாகம், முத்துப்பேட்டை முதலிய கிராமங்களில் தரிசாகக் கிடக்கின்றன. அந்த நிலப்பரப்புக்களை அங்குள்ள மக்களே மராமத்து செய்வதற்குத் தயாராயிருக்கிறார்கள். அவர்களுக்கு நீர்ப்பாசனத்திற்காக சில வசதிகளைச் செய்து கொடுத்து, சர்வே செய்து, அடமானம் செய்து கொடுத்தால், நமக்கு ஏராளமான உணவுப்பொருள் கிடைக்கும். ஏராளமான வரிப்பணமும் கிடைக்கும். இந்த மூன்று முறைகளில் பம்பிங் திட்டம் மூலமாக வடிகால் வசதி செய்து கொடுப்பதன் மூலமாக தரிசு நிலங்களை சர்வே செய்து அடமானம் செய்வதன் மூலமாக தஞ்சை ஜில்லாவில் ஏராளமான நிலம் நஞ்சை சாகுபடிக்கு வரும். உணவு உற்பத்தி பெருகும்.

மனைக்கட்டு விஷயம் ஒரு பெரிய தலைவலியாக இருக்கிறது. எங்கே பார்த்தாலும் மனைக்கட்டுக்கள் கிடைக்கவில்லை என்றுதான் சொல்லுகிறார்கள். அடங்கல் ரெஜிஸ்தர், ஸெட்டில்மெண்டு ரெஜிஸ்தரைப் பார்த்தால் இந்த மனைக்கட்டுக்கள் எல்லாம் சர்க்காருக்குச் சொந்தமான கிராமாந்தரமாகதானிருக்கும். மற்ற புறம்போக்கு நிலங்களுக்கும் கிராம நத்தம், சேரி நத்தங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. இவைகள் எல்லாம் சர்க்காருக்குச் சொந்தமானதுதான். மற்ற புறம்போக்கு நிலத்தை வேறு ஒருவருக்கு அடமானம் செய்யும்போது, மாற்றும்போது, அதை "**assessed waste**" ஆக மாற்றி அவருடைய பெயரால் பட்டா செய்து கொடுக்கப்படுகிறது. கிராம நத்தம், சேரி நத்தம் இவைகள் எல்லாம் பெரும்பாலும் சர்க்காரின் பெயரில் இருக்கிறது. கிராம நத்தத்தை அடமானம் செய்வதில் 30 சென்டுக்கு மேல் யாருக்கும் அடமானம் செய்யக் கூடாது என்றிருக்கிறது. இதில் இன்னும் ஆச்சரியமானது என்னவென்றால் சேரி நத்தம் என்று இருக்கும். அங்கே ஹரிஜனங்கள்தான் வசிப்பார்கள். ஆனால் அங்கேயுள்ள மனைக்கட்டுக்களெல்லாம் ஒரு உயர் ஜாதிக்காரர் பெயரில் ரெஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கும். இவைகளையெல்லாம் போக்குவதற்கு மனைக்கட்டு பிரச்னையை தீர்ப்பதற்கு இவைகளை "**resume**" பண்ணுவதற்கு சர்க்கார் ஒரு சட்டம் இயற்றினால், இந்த மனைக்கட்டுப் பிரச்னை பெருமளவு தீர்ந்துவிடும்.

எங்கள் தொகுதியிலுள்ள திருத்துறைப்பூண்டி ஒரு மேஜர் பஞ்சாயத்து. பெரும்பாலும் அங்கேயுள்ள மனைக்கட்டுகள் எல்லாம் இரண்டு, மூன்று நபர்களுக்குத்தான் சொந்தமாக இருக்கிறது. அவைகளிலிருந்து ஏழைகளை வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள். கட்டின மனைகள் எல்லாம் இடிக்கப்பட்டு வருகின்றன. கோர்ட்டுகளில் ஏராளமான கேசுகள் போடப்பட்டும், இன்னும் பல வீடுகள் இடிக்கப்பட்டும் வருகின்றன. சர்க்கார் தலையிட்டு, அந்த மனைக்கட்டுக்களுக்கு ஒரு ஆண்டுக்கு இவ்வளவுதான் நியாயமான "ரெண்ட்" என்று குறிப்பிட்டு, அவர்களை வீடுகளிலிருந்து வெளியேற்றாமல் இருக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன் அந்த மனைக்கட்டு சொந்தக்காரர்கள் எல்லாம் ஒரு சென்டுக்கு 120, 150 ரூபாய்க்குக் குறையாமல் விலை கேட்டு வாங்கிக்கொள்ள சொல்லுகிறார்கள். அங்குள்ளவர்கள் பெரும்பாலும் ஏழைகள், அவைகளை வாங்குவதற்கு வழியில்லாமல் தவிக்கிறார்கள். ஆகவே சர்க்கார் உடனடியாகத் தலையிட்டு நியாயமான ஒரு ஆண்டு வாடகை "ரெண்ட்" நிர்ணயித்து, அவர்களை வெளியேற்றாமல் இருப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI M. KARUNANITHI :** மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தின் முன் சமர்ப்பித்துள்ள நிதி அறிக்கையைப்பற்றி என்னுடைய கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். " துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாயு

தூஉம் மழை'' என்கிற வான் சிறப்புடன் ஆரம்பமாகி, நாம் வளமாக வாழவேண்டுமானால் வடக்கு வரம் தந்துதான் தீரவேண்டும் என்ற நிலையை விளக்கி, நம்பி இருந்தவரில் ஒருவரும், நம்மில் ஒருவரெனக் குறிப்பிட்டவருமான ஒருவர் திரும்ப வந்துவிட்டார் என்ற சோக முற்றுப் புள்ளியோடு, நிதி அமைச்சரின் அறிக்கை முடிந்திருக்கிறது. ஏறத்தாழ 26½ பக்கம் கொண்ட அந்த அறிக்கையை திரும்பத் திரும்பப் படித்தால் . . .

**THE HON. SRI C. SUBRAMANIAM** : பரவாயில்லை. பட்ஜெட்டில் பக்கத்தையாவது பார்த்திருக்கிறீர்களே ; அது முன்னேற்றம்தான் !

**SRI M. KARUNANITHI** : பக்கம் மாத்திரமல்ல, அதிலே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரத்தின் அபத்தத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டு அறிக்கைக்கும், இந்த ஆண்டு அறிக்கைக்கும் இருக்கிற வித்தியாசம் என்ன என்று துருவித் துருவிப் பார்த்த நேரத்தில், 5-ம் பக்கத்தில், அவர்கள் தந்திருக்கிற ஆங்கில அறிக்கையில், 140,000 டன் அம்மோனியம் சல்பேட் உரம் வழங்கத் திட்டமிட்டிருந்தோமென்றும், தமிழ் அறிக்கையிலே ஒரு லட்சத்து நாலாயிரம் டன் திட்டமிட்டிருந்தோமென்றும் புள்ளி விவரங்கள் தருகின்றன ; அந்தப் பிழையைப் போன்று சில வேறுபாடுகளைத் தவிர வேறு அந்த அறிக்கைக்கும் இந்த அறிக்கைக்கும் வித்தியாசம் ஒன்றுமில்லை. மத்திய சர்க்காரிடத்தில் நாம் சென்று உதவி கேட்டோம். அந்த உதவிகள், கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன. ஓரளவுக்குத்தான் நிறைவேற்றப்பட்டன. அத்தகைய நிலைகள் சென்ற ஆண்டு அறிக்கையில் காணப்படுவது போலவே இந்த ஆண்டு அறிக்கையிலும் காணப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

2-00 p.m. இந்த ஆண்டு அறிக்கையில் சில வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு அறிக்கையில் வரிகள் விதிக்கப்படவில்லை. அதனால் எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் அதைப்பற்றி பேச முடியாமல் ஏமாந்து போய் விட்டார்கள் என்று கூறிய மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் இந்த ஆண்டில் வரிகள் விதித்திருப்பதை எதிர்த்து பேசவில்லையா என்பதை நான் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். ஒரு பூனை எலியைக் கவ்வுவதற்கும், அதே பூனை தன்னுடைய குட்டியைக் கவ்வுவதற்கும் வித்தியாசம் உண்டு என்று அழகாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய சென்ற வரவு செலவு திட்டப் பிரசங்கத்தில் குறிப்பிட்டதை இந்த நேரத்தில் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். வரியை எதிர்த்துப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் குட்டியைக் கௌவுவது போலல்ல ; எலியைக் கௌவுவது போலவே தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த ஆண்டு அறிக்கையில் விவசாய வருமான வரியைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு எதிர்ப்பு இருக்கிறது, காங்கிரஸில் ! அதைப் போலவே பொழுது போக்குக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதை எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். விவசாய வருமான வரியை இந்த வருஷமே விதிக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. சென்ற மந்திரிசபையின்போது விவசாய வருமான வரி விதிக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர்களால் கோரப்பட்டது. அந்த நேரத்தில் அதற்கு என்ன பதில் சொன்னார்கள் என்றால், காபி, தேயிலை தோட்டங்களுக்கு வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் விவசாய வருமானத்திற்கு வரி விதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னார்கள். அத்துடன் நில உடமைக்கு உச்ச வரம்பு கட்டப்போகிறோம் அதனாலும் அதற்கு வரி விதிக்க வேண்டிய அவசியமில்லை என்று அந்த நேரத்தில் பதில் சொன்னது எனக்கு இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. நம்முடைய மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையில்கூட நில உடமைக்கு உச்ச வரம்பு கட்டப்போகிற காலம் விரைவில் வரப்போகிறது என்று காணப்படுகிறது. ஆனால் இப்பொழுது அந்த உச்ச வரம்பு வரவில்லை. அதற்கு பதிலாக விவசாய வருமான வரி வந்திருக்கிறது. மற்றும் பொழுது போக்கிற்கு வரி விதிக்கப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் எதிர் பார்த்திருப்பார்கள், நாங்கள் அதை எதிர்ப்போம் என்று !



" அவர்கள் கட்சியில் தான் சினிமாக்களில் ஈடுபடக்கூடியவர்கள் இருக்கிறார்கள், அதனால் திராவிட முன்னேற்றக் கட்சி இதை நிச்சயமாக எதிர்த்தே தீரும்'' என்று அவர்கள் எதிர்பார்த்திருப்பார்கள். உள்ளபடியே அங்கத்தினர்கள் நினைத்தபடி இல்லாமல் இந்த வரி, தேவைப்படும் என்று அரசினர் கருதினால் அந்த வரியை நாங்கள் எதிர்க்கவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : சென்ற வருஷம் அவர்கள் தான் இந்த ஆலோசனையை கூறினார்கள். ஆகையால்தான் அதை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

**SRI M. KARUNANITHI** : எங்களுடைய யோசனையை இவற்றிலாவது எடுத்துக்கொண்டதற்கு பாராட்டி எங்களுடைய நன்றியை செலுத்திக் கொள்ளுகிறேன்.

கைத்தறி சம்பந்தமாக ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். கரை போட்ட வேஷ்டியையும், சேலையையும் உற்பத்தி செய்வதை கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும் என்று இதற்கு முன்பு இருந்த அமைச்சர் அவை ஏற்றுக்கொண்டு அதை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியது. ஆனால் அந்தத் தீர்மானம் வட நாட்டில் மத்திய சர்க்காரின் மாளிகையில் அழுக்குப் படிந்த ஒரு மூலையில் தூங்கிக்கொண்டிருக்கிறது. அதைத் தட்டி எழுப்ப இந்த சர்க்காரால் முடியவில்லை. அப்படி எழுப்பி வேண்டிய நடவடிக்கைகளை இந்த சர்க்கார் இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை.

மற்றும் இங்குள்ள பல வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள இந்த சர்க்கார் தவறி விட்டது. செய்யப்படவேண்டிய பல திட்டங்கள் இருக்கின்றன. அவைகளை எடுத்து நடத்தி நாட்டின் வளத்தை உயர்த்த வேண்டும் என்று சொன்னால் அவைகளை எடுத்து நடத்த வசதி இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். தென் பக்கம் இயற்கை வசதியே இல்லை என்றும் சொல்லுகிறார்கள். இதைக் கேட்கும் போது திருக்குறளில் உள்ள ஒரு அரிய குறள் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. " இலமென் றசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்'' என்று அழகாக வள்ளுவர் உழவு அகற அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அதன் பொருள் என்னவென்றால் வாழ்வதற்கு வழி இல்லை என்று அழுது கொண்டிருக்கும் ஒருவனைப் பார்த்து நிலம் என்ற மடந்தை " ஏன் சோம்பி முடங்கிக் கிடக்கிறாய், நான் இருக்கிறேன், என்னைப் பயன்படுத்திக்கொள்ள உன்னால் இயலவில்லையா ?'' என்று ஏளனம் செய்வது போல் கேட்கிறாள் என்று கூறியிருக்கிறார். அதைப்போன்று தமிழ் நாட்டில் ஏராளமான வசதிகள் இருக்கின்றன. நிலக்கரி இருக்கிறது, இரும்பு இருக்கிறது, ஜிப்சம் போன்ற பொருள் அணுவுக்கு ஏற்ற மணல் முதலியன இருக்கின்றன. இவைகளை ஏன் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது ? அவைகள் இருக்கும்போது வசதி இல்லை, திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை என்று ஏன் கூறவேண்டும் ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : நீங்கள் அதிகார மயக்கத்தில் இருப்பது போல் தோன்றுகிறது. அங்கே குறிப்பிட்டிருப்பது நீர்ப்பாசன திட்டங்கள்.

**SRI M. KARUNANITHI** : எனக்கு மயக்கம் ஏற்படுவது இல்லை. ஏனென்றால் நான் மதுவிலக்குத் திட்டத்தை தீவிரமாக ஆதரிப்பவன்.

இந்தப் பொருள்களை இங்கே உபயோகப்படுத்த முடியவில்லையா ? இயற்கை வசதி இல்லை என்று கூறுவது சரியா ? இயற்கை வசதி இல்லை என்று கூறினால் அதை ஒத்துக்கொள்ள முடியாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் தூத்துக்குடி துறைமுகத்தைப்பற்றி பேசினார். அந்த துறைமுகத் திட்டத்தை எடுத்து நடத்தினால் அது கொளும்பு துறைமுகத்துடனும், பம்பாய் துறைமுகத்துடனும்

[Sri M. Karunanithi] [5th March 1958

போட்டி போடக்கூடிய ஆழ்கடல் துறைமுகமாக மாறும். நூறு மைல் அளவிற்கு ஒரு கால்வாய் அமைத்தால் அந்தத் துறைமுகத்தை நல்ல முறையில் அமைப்பதற்கு முடியும். இலங்கையின் மேற்கு கடற்கரைக்கும் இங்குள்ள தெனகோடி கீழ் கடற்கரைக்கும் இடையே உள்ள பாறைகளை அகற்றினால் இன்னும் பல நல்ல துறைமுகங்களை அமைக்கலாம். அதற்கு சுமார் பத்து கோடி ரூபாய் செலவு ஆகும் என்று கூறப்படுகிறது. தென்னகத்திலிருந்து சுமார் 35 கோடி ரூபாய் வடநாடு துறைமுக வரி மூலமாக வசூலித்துக்கொண்டிருக்கிறது. அந்த 35 கோடி ரூபாயில் பத்து கோடி ரூபாயை எடுத்து தென்னகத்திற்கு என்று செலவு செய்யக் கூடாதா என்று கேட்கிறேன். திரு. ஏ. ராமசாமி முதலியார் தலைமையில் ஒரு குழு இந்த சேது சமுத்திரத் திட்டத்தைப் பரிசீலனை செய்து ஒரு ரிப்போர்ட்டையும் சமர்ப்பித்து அது மத்திய சர்க்காருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையும் இன்னும் கவனிக்கப்படாமல் தூங்கிக் கொண்டிருக்கிறது. நம்முடைய நாட்டின் வரியை வட நாட்டார் வாங்கிக் கொண்டு வளம்பெறவும் அவர்களுக்கு நாம் அடிமைப்பட்டுக்கொண்டிருக்கவும் வேண்டியதாக இருக்கிறது. நம் நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்கு நாம் அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதாக இருக்கிறது. சூயெஸ் கால்வாயைத் தாண்டி கீழ்த்திசை பிற தேசங்களுக்கு வரும் கப்பல்கள், நிலக்கரியைப்பெற கொழும்புக்குப் போகிற கப்பல்கள், தூத்துக்குடி துறைமுகம் பெரிதாக்கப்பட்டால் அங்கே வந்து தென்னகத்தின் பொருள் வளத்தை செழிப்பாக்கும். நாம் ஏன் அப்படிப்பட்ட இந்த திட்டத்தை எடுத்து நடத்தக்கூடாது? இதனால் நமக்கு லாபமும் வருமானமும் வரக்கூடியதாக இருக்கிறது. அதன் மூலம் நமது நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடாதா? நல்ல வளமான திட்டங்களை இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எடுத்துக் காட்டி அவைகளை நிறைவேற்றிவைக்க ஏன் போராடக் கூடாது என்று கேட்கிறேன். திராவிட நாட்டு வரிகளை வட நாட்டிற்கு கொட்டிக் கொட்டி குவிக்கப்படுகிறது. இன்றையதினம் அதிலிருந்து கொஞ்சமாவது வாங்கி ஏன் இந்தத் திட்டங்களை எடுத்து நிறைவேற்றக் கூடாது என்று கேட்கிறேன். திராவிட நாடு விடுதலை பெறாத காரணத்தால் நாம் வாழ்வில் உயராமல் இருக்கிறோம். உலகத்திலுள்ள மற்ற நாடுகளைப் பார்த்தால் அங்குள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் எவ்வளவோ உயர்ந்திருக்கிறது. எகிப்து நாட்டை எடுத்துக்கொண்டால் அங்குள்ள மனிதனின் ஒரு ஆண்டின் சராசரி வருமானம் 465 ரூபாய். லெபனான் நாட்டின் மனிதனுடைய ஒரு ஆண்டின் சராசரி வருமானம் 600 ரூபாய். சுவிட்ஜர்லண்டை எடுத்துக்கொண்டால் அங்குள்ள மனிதனின் ஒரு ஆண்டின் சராசரி வருமானம் 4,000 ரூபாய். ஐஸ்லண்டை எடுத்துக்கொண்டால் அங்குள்ள மனிதனின் ஒரு ஆண்டின் சராசரி வருமானம் 2,600 ரூபாய். இப்படி ஒவ்வொரு நாட்டையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் அங்குள்ள மனிதனின் ஒரு ஆண்டின் சராசரி வருமானம் அதிகமாகவே இருக்கிறது. ஆனால் நம்முடைய நாட்டில் மாத்திரம் ஒரு மனிதனுடைய ஒரு ஆண்டின் சராசரி வருமானம் 270 ரூபாய்தான். இங்குள்ளவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவே இல்லை. இதை எல்லாம் அரசினர் உணர்ந்துதான் இருக்கிறார்கள். ஆனால் நாம் வரியை மட்டும் கொள்ளை கொள்ளையாக கொட்டிக் கொடுத்துக் கொண்டுதான் வருகிறோம். "வெள்ளிப்பணம் கேட்டவர்களுக்கு அள்ளி அள்ளி கொடுத்த கையால்—இப்போது கொள்ளிக்காக வாங்குனேனே—கொடும்பாவியானேனே" என்று ஒரு பாடலை அரிச்சந்திர நாடகத்தில் கேட்டிருக்கிறேன். அதைப் போலத்தான் யவனத்திலும் கிரேக்கத்திலும் ரோமாபுரியிலும் வாணிபப்பொருள்களைக் குவித்து தங்க நாணயங்களைத் தமிழ்ச் சிறுர்கள் தெருவிலே வாரியிறைத்து விளையாடினார்கள் என்ற சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்டாராம். இன்று வட நாட்டாரிடம் கொள்ளிக்காசு வாங்கிப் பிழைக்கிறோம். இடுகாட்டில் கொள்ளிக்காசு வாங்குகிறவன் அதிகாரக் குரலில் கேட்பான். இதுவோ அடிமைக்குரல். ஆகவேதான் தெற்கு என்ற தெய்வானையே போதும் வடக்கு என்ற வள்ளி வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லுகிறது. ஆனால் தெற்கு என்ற தெய்வானை மட்டும் போதாது வடக்கு என்ற வள்ளியும் வேண்டும் என்று கனம் நிதி அமைச்சர் சொல்லுகிறார். காரணம் நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள்



5th March 1958] [Sri M. Karunanithi]

சுப்ரமணியமாக இருப்பதுதான் போலும். முடிவாகத் திராவிட நாட்டிற்கு என தனியான வரவு செலவுத் திட்டங்களை அமைத்து திராவிட நாடு தனியாக இயங்கும் பொன்னாள் வரவேண்டும் என்பது எங்களுடைய கருத்து என்பதைத் தெரிவித்துக்கொண்டு திராவிடம் வெல்க, திராவிடம் வாழ்க என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*SRI P. JAYARAJ: கனம் சபாநாயகர் அவர்களே, 1958–59-ம் வருஷத்திய நிதி அறிக்கையை கனம் நிதி மந்திரி அவர்கள் சபையின் முன் சமர்ப்பித்ததை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல முன் வந்திருக்கிறேன். நம்முடைய மாகாணம் உணவு உற்பத்தியில் பெரிய அளவு முன்னேறி இருக்கிறது. 1950-லிருந்து 1951 வரையில் நம் ராஜ்யத்தில் 28 லட்சம் டன் உணவு உற்பத்தியாகி இருக்கிறது. 1955–56-ல் 44 லட்சம் டன் உணவு உற்பத்தியாகி இருக்கிறது. அடுத்த வருஷம் இதைவிட இரண்டு லட்சம் டன் அதிகமாக உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதை எண்ணிப் பார்க்கும்போது நமது ராஜ்யம் துரிதமாக உணவு உற்பத்தியை பெருக்கிக்கொண்டு வருகிறது என்பது தெரியவரும். உணவு நிலை மிகவும் பிற்போக்கான நிலையில் இல்லாமல் முன்னேறி இருக்கிறது என்பது பாராட்டக்கூடியதாக இருக்கிறது. 1954-ல் 2–10 p.m. ஒரு ஏக்கருக்கு நமது ராஜ்யத்திலே 1,149 பவுண்டு உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. 1955–56-ல் 1,214 பவுண்டு உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது உணவு உற்பத்தி எவ்வளவு தூரம் இந்த ராஜ்யத்திலே முன்னேற்றத்திற்கு வந்திருக்கிறது என்பதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

60 லட்ச ரூபாய் விவசாயிகள் உரம் வாங்க மான்யம் வழங்கப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறது. இத்தொகையானது ஏழை எளிய விவசாயிகளுக்குச் சரியான முறையில் விநியோகிக்கப்படுகிறதா என்று நாம் கவனிக்க வேண்டும். சென்ற ஆண்டில் தொழிலாளர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சென்று, உரம் வேண்டுமென்று கேட்ட காலத்தில் நிலத்திற்குப் பட்டா வைத்திருப்பவர்களுக்குத்தான் கொடுக்க முடியும் என்று தட்டிக் கழித்துவிட்டார்கள். அதன் காரணமாக உரம் வாங்க வழியில்லாமல் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வாய்ப்பும் வசதியும் இல்லாமல் போய்விட்டது. ஆகையால், மகசூல் பொருளை ஈடாக வைத்துக் கொண்டு, விவசாயிகளுக்கு உரம் கொடுத்தால், மகசூல் காலங்களில், அதற்காக வாங்கிய பணத்தை விவசாயிகளிடமிருந்து அதிகாரிகள் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

சர்க்கார் ஹரிஜனங்களுக்காக இவ்வாண்டு அதிக மான்யம் ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். ஹரிஜன ஏழை மக்களுடைய மாணவர்களுக்குக் காலாகாலத்தில் ஸ்காலர்ஷிப் கிடைப்பதில்லை. ஜூலை மாத இறுதியில் கொடுக்க வேண்டியதை அக்டோபர், செப்டம்பர் மாதத்தில் காலம் தாழ்த்திக் கொடுப்பதால், மாணவர்கள் பள்ளிகளிலிருந்து வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆகையால், ஜூலை இறுதியிலோ ஆகஸ்டு முதலிலோ ஹரிஜனங்களுக்கு ஸ்காலர்ஷிப் தொகை கிடைக்க சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மூவாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் உள்ள நிலச்சொத்து வைத்திருக்கும் எல்லோருக்கும் வருமான வரி போடுவதாக சொல்லப்படுகிறது. ஒரு சிலர் தங்களுடைய நிலத்தையும் வைத்துக்கொண்டு வேறு பல தொழில்களையும் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு எப்படி இந்த வரி போடலாம் என்று கவனித்துச் செய்தால் இதனுடைய பலன் ரொம்ப நல்லதாக இருக்குமென்று சொல்லிக்கொள்ளுகின்றேன்.

டாக்டர் லோகநாதன் ரிபோர்ட் இன்று சர்க்கார் பரிசீலனையில் இருப்பது என்று வெளியிடப்படும் என்பதை நான் தெரிந்துகொள்வதற்குப் பிரியப்படுகிறேன். பொழுது போக்கு வரியை சர்க்கார் கொண்டுவந்திருப்பது வரவேற்கத்தக்கது. பணக்காரர்கள் சினிமாவுக்கு ஒரு தடவை சென்றார்கள் என்றால், ஏழை மக்கள் பல தடவைகள் பார்க்கிறார்கள். ஏழைகள்

[Sri P. Jayaraj] [5th March 1958

ஏன் அதிகம் சினிமாவுக்குப் போகிறார்கள் ? ' ஏழை படும் பாடு ' என்ற படம் ஏழைக்காகக் காட்டப்படுகிறது என்று மிகப் பிரியமாக அவர்கள் செல்கிறார்கள். அங்கு ஏழையாக நடிப்பவர் ஏழை அல்ல என்பதையும், அந்த நடிகர் 5,000 ரூபாய் பணத்தை வாங்கிக்கொண்டு தான் ' ஏழைக்கு ஏது இன்பம் ' என்று பாடுகிறார் என்பதும் படம் பார்க்கும் ஏழைக்கு எங்கே தெரிகிறது ?

சென்னை நகரம் புனிதமான நகர். அங்கே மனிதர்கள் மிருகங்களாக காட்சியளிக்கிறார்கள் என்று சினிமாவில் சித்தரிக்கப்படுகிறது. அதில் காட்டப்படுவது போல நகர மக்கள் மிருகங்களாகவா உண்மையிலேயே இருக்கிறார்கள். அப்படியா அவர்களைச் சித்தரிக்கவேண்டும் ? மிருகங்களாக காட்சியளித்தாலும், அதைத் திருத்தி, அவர்கள் அன்றாடம் பாடுபட்டு ஈட்டும் சொத்தை மிச்சப்படுத்தி முன்னேறி வரவேண்டுமென்று சினிமாக் காட்சி ஏன் சித்தரிக்கப்படக்கூடாது ? ' ஏழைக்கு ஏது இன்பம் ' என்று பாட்டை எழுதுகின்ற அளவுக்கு இங்கிருக்கும் சிலராவது சினிமாக் காட்சிக்குப் பாட்டு தயாரிக்கின்ற அளவுக்குத்தான் நாடு முன்னேறியிருக்கிறது.

சினிமாவில் ஏழையாக நடிப்பவர் உண்மையிலேயே ஏழை இல்லை. ஏழையைப்போல் நடிப்பவர், ஏழைக்காகவும் நடிப்பதில்லை. ஐயாயிரம் ரூபாய் சில்லரை வாங்குவதற்கு தன் நடிப்பைக் காட்டுகிறார்கள். உண்மையிலேயே இத்தகைய சினிமாக் காட்சியானது மனிதனை முன்னுக்குக் கொண்டு வருவதில்லை.' மற்ற நாடுகளைப்பார்த்தால், அங்கே சினிமாக்கள் மூலம் நல்லதொரு சேவை செய்து நாட்டை முன்னுக்குக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் பணத்தை விரும்புவதில்லை. ஆனால், இங்கிருப்பவர்கள் நாடகத்தின் மூலமாகவும், சினிமாக்கள் மூலமாகவும் மக்களை வசியப்படுத்தி சில்லரை தட்டிக்கொண்டு போகிறார்கள். தங்களுடைய சுய நலத்திற்காக இருக்கிறதே தவிர, மக்களுக்காக இருப்பதில்லை. ' ஏழைக்கு ஏது இன்பம் ' என்று பாடுபவர் கூனிக் குறுகிய முதுகுடன், கையில் ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கிழிந்த சட்டையையும் போட்டுக் கொண்டிருப்பதை படம் பார்க்கும் ஏழை மக்கள் கண்டு பச்சாத்தாபப் படுகிறார்கள். ஆனால், அதே நடிகர் சூட்டும் கோட்டும் தான் வழக்கமாக அணிந்திருப்பவர் என்பது எப்படித் தெரியும் ? ஏழைக்கு ஏது இன்பம் என்ற பாட்டுக்காக பல்லாயிரக்கணக்கான மக்கள் பணத்தைக் கொண்டு வந்து கொட்டுகிறார்கள்.

அதேபோல, ' முதலாளி ' என்னும் படத்தில் முதலாளியின் பாத்திரம் தாங்கி நடிப்பவர் உண்மையிலேயே முதலாளி அல்ல. அவர் திடீரென்று தொழிலாளியாக மாறிவிடுகிறார். தொழிலாளி வீட்டுப் பெண்ணை காதலிக்கிறார். காதலித்துத் திருமணம் செய்துகொள்ளுகிறார். தொழிலாளியாக நடிப்பவர் உண்மையில் தொழிலாளி அல்ல. பத்தாயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு தான் சினிமாவில் தொழிலாளியாக வருகிறார். இப்படியெல்லாம் சினிமாக்களைப் பார்த்துவிட்டு வருபவர் ஏழை மக்கள் தான். அப்படியிருக்க அதை ஏன் மதிப்பிற்குறிய எதிர்கட்சித் தோழர்கள் எதிர்க்கவில்லை என்றால், அதனால் அவர்களுக்கு வருமானம் வருகிறது. ஆதாயம் வருகிறது. அதன் காரணமாக எதிர்க்காமல் விட்டு விட்டிருக்கிறார்கள். எதிர்த்தால், தங்களுக்காகத்தான் சாதகமாக இருக்கும் என்று மற்றவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று கருத்தில் எதிர்க்காமல் விட்டுவிட்டார்கள் என்பது என்னுடைய கருத்து. ஆகையால், சர்க்கார் கொண்டுவந்திருக்கும் திட்டம் மிக உயர்ந்த திட்டம் ; போற்றத் தக்க திட்டம் ; மக்கள் வரவேற்கக்கூடிய திட்டம். ஆகையால், ஏழை மக்களுக்கு நல்லதொரு சேவை செய்கின்றதற்காக 60 லட்சம் ரூபாய் ஒதுக்கி, உணவு உற்பத்தி ஏற்படுவதற்கு ஏழை விவசாயிகளுக்கு, சரியான படி உரம் கிடைக்க வழிசெய்யவேண்டுமென்பது என்னுடைய கருத்து. ஏழை விவசாயிகள் சென்ற ஆண்டில் உரம் வேண்டுமென்று சர்க்கார் அதிகாரிகளிடம் சென்றபோது, சொத்து உள்ளவர்களுக்குத்தான் கொடுக்கப்படும் என்றும், சொத்து இல்லாதவர்களுக்குக் கொடுக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில், பெரும்பாலானவர்கள் குத்தகைக்கு நிலம் சாகுபடி செய்கிறார்கள்.



5th March 1958] [Sri P. Jayaraj]

முதலாளிகளிடம் சென்று உரம் கேட்டால், ஒருசில நல்ல எண்ணம் படைத்தவர்கள் பச்சாத்தாபம் உள்ளவர்கள் உதவுவார்கள் ; மற்றவர்கள் உதவ மாட்டார்கள். 60 : 40 சட்டம் வந்த பிறகு முதலாளிகள் உரம் வாங்கிக்கொடுப்பதில்லை. ஆகவே, உரம் ஏழை எளிய விவசாயிகளுக்கு காலாகாலத்தில் கிடைக்க அமைச்சர் அவர்கள் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்.

* SRI V. S. MANICKASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் ஆதரிக்கிறேன். என்னுடைய தொகுதியைப்பற்றிய சில குறைபாடுகளை ஈடு செய்யும் முறையில் இத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்குமாயின் நான் இன்னும் தீவிரமாக இதை ஆதரித்திருக்க முடியும். அடுத்த வரவு செலவுத் திட்டத்தை நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பிப்பதற்கு முன் என்னுடைய தொகுதியைப் பற்றி நான் சொல்லக்கூடிய குறைபாடுகளை கருத்திற்கொண்டு திட்டம் தயாரிப்பார்கள் என்ற எண்ணத்திலே நான் ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

ஈரோடு நகரசபை குடிதண்ணீர் விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் பல சட்டங்கள் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஈரோடு நகரசபை குடிதண்ணீர் விஸ்தரிப்புத் திட்டத்திற்கு ஒரு நீர்த் தேக்க இடமும், நீர் இறைக்கும் கருவிகளும் புதியதாக பொருத்தப்பட வேண்டியதாக இருப்பதை அரசாங்கத்திற்கு ஏற்கெனவே பலமுறைகள் தெரிவித்திருந்தும் இந்தக் காரியங்களுக்கு ஈரோடு நகரசபைக்கு இன்னும் மான்யம் கொடுக்கப்படவில்லை. மான்யமாக அரசாங்கம் கொடுக்க இயலாவிட்டாலும், கடனுதவியாவது செய்யவேண்டுமென்று நகர சபையார் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கடனுதவியை அடுத்த வரவு செலவுத் திட்டத்திற்கு முன்பாகவே ஏற்பாடு செய்து உதவியளிக்கவேண்டுமென்று அரசாங்கத்தை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஈரோடு, மொடக்குரிச்சி பிர்க்காக்களில் அரசாங்கத்தாரால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் கீழ் பவானித் தண்ணீர் பாய்கிறது. ஆனால், கீழ் பவானித் திட்டத்தில் தண்ணீர் விநியோகம் விஷயமாகவும் வரி விதிப்பு விஷயமாகவும் அந்தப் பகுதியில் வாழும் மக்களிடையே பெரிய குறைபாடுகள் நிலவி இருக்கின்றன. இந்தத் தண்ணீர் விநியோக விஷ- 2-30 p.m.
யமாகவும், வரி விதிப்பு விஷயமாகவும் ஜனங்களுக்கு இருக்கும் கஷ்டங்களை அரசாங்கத்தார் உணர்ந்து ஆவன செய்திருப்பதாக என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. பத்து கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து அணைகட்டி, வாய்க்கால்கள் வெட்டி தண்ணீர் விடும் காலத்தில் எங்கள் பகுதியில் புஞ்சை தானியங்கள்தான் வளர்க்க வேண்டும், புஞ்சைப் பயிர்களைத் தவிர, நஞ்சைப் பயிர்கள் எழுப்பக் கூடாது என்பதாக தடை விதித்திருப்பது அவ்வளவு பொருத்தம் அல்ல, நியாயம் அல்ல என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். கீழ் பவானி அணையில் இருந்து வாய்க்கால்களை புரட்டாசி மாதத்தில் திறந்து விடுகிறார்கள். புரட்டாசி மாதத்தில் நெல்லாவது, பருத்தியாவது தான் பயிர் செய்ய முடியுமே தவிர புஞ்சைப் பயிர் வேறு எதுவும் எழுப்ப முடியாது என்பது விவசாயத்தில் அனுபவம் உள்ளவர்களால் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். மார்கழி, தை மாதம் வரையில் வேண்டுமானால் காத்திருந்து ராகி முதலிய புஞ்சைப் பயிர்களை எழுப்பலாம். அதோடு ஈரோடு, தாராபுரம் பகுதிகளில் பருத்தி அவ்வளவாக விருத்தியாவது இல்லை என்பது விவசாயிகளுடைய அபிப்பிராயமாகும். அங்குள்ள நிலங்கள் அடிப்பாறையுள்ள நிலங்களாகப் பரவலாக இருப்பதால் நிலங்களைச் சீர்திருத்துவதற்கு அதிகச் செலவு ஆகிறது. . புஞ்சை பயிர் வைக்கவேண்டுமானால் ஏக்கருக்கு இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய் செலவாகும். நஞ்சைப் பயிர் என்றால் சிறு சிறு வயல்களாகப் பிரித்து குறைந்த செலவில் பயிர் வைத்துவிட முடியும். ஆகையால் இவ்வளவு அரும் பாடுபட்டு செலவு செய்து அணைக்கட்டுத் திட்டத்தைக் கட்டிவிட்டு நஞ்சைப் பயிர் வைக்கக்கூடாது என்று

[Sri V. S. Manickasundaram] [5th March 1958

சொல்வதனால் நாடு எதிர்பார்க்கின்ற அளவுக்கு அந்தப் பகுதி மக்களால் உணவு உற்பத்தி செய்ய முடியவில்லையே என்று அவர்கள் வருந்துகிறார்கள்.

இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை நான் உணராதவன் இல்லை. ஒரு லட்சம் எக்கர் நஞ்சை பயிர் செய்யக்கூடிய அளவு தண்ணீரை இன்றைக்கு இரண்டு லட்சம் எக்கராவுக்கு புஞ்சைப் பயிர் வைப்பதற்கு விடப்படுகிறது என்பதை நான் உணர்வேன். ஆனால் இது சம்பந்தமாக நான் சொல்லக்கூடிய யோசனை என்னவென்றால், கோபி, பவானி, ஈரோடு, தாராபுரம் ஆகிய நான்கு தாலூக்காக்களிலும் ஒரே காலத்தில் நஞ்சைப் பயிர் செய்ய தண்ணீர் விடமுடியாது. இருந்தாலும் இதை இரண்டு பகுதியாகப் பிரித்து முதல் பகுதிக்கு முதல் போகம் நஞ்சைக்காகவும் அடுத்த போகத்தில் இரண்டாவது பகுதிக்கு நஞ்சைப் பயிருக்கும் தண்ணீருமாக விடலாம். இப்படிச் செய்தால் அந்தப் பகுதியில் ஒரு போகமாவது நஞ்சைப் பயிர் எழுப்புவதற்கு வசதியாக இருக்கும் என்று நான் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தை அமுலாக்கும் விஷயத்தில் அரசாங்கத்திற்கு இன்னும் அதிகப்படியான செலவு ஆகும் பட்சத்தில் அதைப் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. அந்தப் பணத்தைச் செலவு செய்தாவது இரண்டு லட்சம் ஏக்கரில் ஒரு போக நஞ்சையாவது எழுப்புவதற்கு வசதி செய்து தருவது அரசாங்கத்தின் கடமையாகும். மேலும் இந்த பூமிகளை நஞ்சை, தோட்டக்கால், புஞ்சை என்று பிரித்து வரி விதிக்க உத்தேசித்திருக்கும் திட்டம் எனக்குத் தெரிந்ததே. இதை ஆதரிக்க என்னால் முடியவில்லை. நஞ்சைத் தோட்டத்தில் ரூபாய் 20-க்கு மேல் உயர்த்துவதற்கு சட்டம் அனுமதிக்கவில்லை என்ற காரணத்தினால் புஞ்சை பயிர்களுக்கு ரூபாய் 7½-ல் இருந்து 11½ ஆக உயர்த்த இருப்பதை கொஞ்சங்கூட என்னால் ஒத்துக்கொள்ள முடியாத விஷயமாக இருக்கிறது.

பூமியில் பாசன வசதி உள்ளவற்றை நஞ்சை என்றும், பாசன வசதி இல்லாதவற்றை புஞ்சை என்றும் பிரிப்பது நியாயமே தவிர அவற்றில் வைக்கப்படும் சாகுபடியை அனுசரித்து நஞ்சை புஞ்சை என்று பிரிப்பது பொருத்தம் அல்ல என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

கீழ்பவானி பிரதேசத்தில் இன்று அமுலில் இருக்கும் முறைப்படி 10 நாளைக்கு ஒரு தண்ணீர் விடுவது எந்த வெள்ளாமையும் வைப்பதற்குப் போதுமானது அல்ல என்பது ஜனப் பிரதிநிதிகளுடைய தீர்மானம். விவசாயிகளுடைய அநுபவமும், நிபுணர்களுடைய அபிப்பிராயமும் ஆகும். சமீபத்தில் ஈரோடில் நடந்த ஒரு நீர்ப்பாசன மகாநாட்டில் அங்கே வந்திருந்த ஜில்லா விவசாய அதிகாரி அவர்கள் ஈரோடு, தாராபுரம், பவானி, நம்பியூர் ஆகிய பிரதேசங்களில் 10 நாளைக்கு ஒரு தண்ணீர் விடுவதனால் எந்த வெள்ளாமையும் வைக்க முடியாது என்கிற அபிப்பிராயத்தை பகிரங்கமாகத் தெரிவித்தார்கள். அதோடு அங்கே கிணறு வெட்டக்கூடாது, கிணற்றில் மின்சார பம்புகள் வைக்கக்கூடாது என்பதாக அரசாங்கம் விதித்திருக்கிறார்கள். அங்கே மின்சாரமும் விஸ்தரிக்கப்படுவது இல்லை. இதனால் அங்குள்ளவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். யாராவது பயிர் வைத்தால் சட்டத்தை மீறி செய்துவிட்டதாக அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இந்த நிலைமையை வேறுவிதமாகச் சொல்லவேண்டுமானால் அங்கே கர்ணம், லஸ்கர் போன்ற கீழ்தர உத்தியோகஸ்தர்களுடைய நிர்வாகம் நடக்கிறதேயொழிய சரியான சட்டமும், நியாயமும் அங்கே அமுலாக்கப்படவில்லையென்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு அந்தப் பகுதிகளில் ஒரு விவசாயி தண்ணீர் எடுக்கவில்லை, அதனால் வரி விலக்கு தனக்கு அளிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தால் அவனுக்கு உடனே அதிகாரிகள் பவானி ரிசர்வாயர் செஸ் ஆக்ட் பிரகாரம், "**Bhavani Reservoir Irrigation Cess Act; whether any land is actually supplied with water or not; all lands for which permit is issued shall be levied water cess**" என்பதை காண்பித்து நீங்கள் வரி கட்டித்தான் ஆகவேண்டும், என்று சொல்லி விடுகிறார்கள். தண்ணீர் கொடுக்க வேண்டிய பொறுப்போ, அவசியமோ எங்களுக்கு இல்லையென்று சொல்லி விடுகிறார்



5th March 1958] [Sri V. S. Manickasundaram]

கள். இந்த நிலைமை கண்டிப்பாக மாறவேண்டும். தண்ணீர் விநியோகிக்கும் பொறுப்பு அரசாங்கத்தினிடம் இருப்பதாக எந்த அதிகாரியும் ஒப்புக்கொள்வதில்லை. கன்னி வாய்க்கால்களை வெட்டுவது கூட அரசாங்கத்தின் செலவு இல்லை. இவையெல்லாம் அரசாங்கத்தின் பொறுப்பாகவே இருக்கவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இடைக்கால நிவாரணமாக தண்ணீர் போய்ச் சேராத நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். கீழ்பவானி திட்டத்திலிருந்து விலக்கப்பட்டிருக்கும் கிராமங்களிலுள்ள நிலங்களுக்கும் தண்ணீர் விடவேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று தெரிவித்துக் கொள்கிறேன். பவானி பாசனம், காளிங்கன் வாய்க்கால் பாசனம் இவற்றை எல்.பி.பி.-ல் நீக்கவேண்டுமென்று இது சம்பந்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். **Bhavani Reservoir Irrigation Cess Act**ல் "**Lands which are entitled to irrigation from Bhavani river**" என்ற ஷரத்து இருப்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நில அபிவிருத்தி வரி வசூலிக்கப் போவதாகவும், நில அபிவிருத்தி வரியின் மூலம் 30 லட்சம் ரூபாய் அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் நான் பட்ஜெட் மெமராண்டத்தில் பார்த்தேன். இந்த வருஷம் அந்தப் பகுதியில் இருக்கும் நிலங்களுக்கு நில அபிவிருத்தி வரி வசூலிப்பது நியாயம் ஆகாது. நில அபிவிருத்தி வரி வசூலிப்பதற்கு ஏற்ற வகையில் எந்த அபிவிருத்தியும் ஏற்படவில்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். விவசாய வருமான வரியும், டீசல் எண்ணைக்குப் போட நினைத்திருக்கும் வரியும் நியாயமானது என்று என்னால் அவற்றை ஆதரிக்க முடியவில்லை. உச்ச வரம்பு கொண்டு வராமல் இடைக்கால ஏற்பாடாக விவசாய வருமான வரியை விதிப்பது நல்லது அல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். விவசாயிகளுக்கு கணக்கு வைப்பதில் பல கஷ்டங்களும், அதனால் லஞ்ச ஊழல் அதிகரிப்பதும் தான் இதன் பலனாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

மேலும் டீசல் ஆயிலுக்குப் போட்டிருக்கும் வரியினால் தண்ணீர் இறைப்பினால் விவசாயம் செய்யக்கூடியவர்கள் பாதிக்கப்படுவார்கள். அதனால் உற்பத்தி பாதிக்கப்படும் என்பது எனது அபிப்பிராயம். இந்தக் குறைகளை எல்லாம் அடுத்த வருஷ வரவு செலவு திட்டத்திற்குள்ளாவது நீக்கவேண்டும் என்பதாக அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டு நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன்.

* **SRI B. DORAISAMI REDDIAR** : சபாநாயகர் அவர்களே, நம் 2-30 p.m.
நிதியமைச்சர் அவர்கள் நமது சட்ட சபையின் முன் சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட் விஷயமாக சில வார்த்தைகள் பேச நான் முன் வந்துள்ளேன். இந்த வரவு செலவுத் திட்டத்தில், செலவு போக ஐந்து லட்சம் அதிக மீதம் இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த ஐந்து லட்சம் என்பதை ஐந்து கோடி உபரியாக பட்ஜெட்டில் காட்டுவதற்கு சில குறிப்பிட்ட வழிகள் இருக்கின்றன. அதைப்பற்றி எனக்குத் தெரிந்த மட்டில் கூறலாம் என்று நான் நினைக்கிறேன். பிர்க்கா டெவலப்மெண்ட் ஆபீஸ் என்று 15, 20 ஆபீஸர்களை வைத்துக்கொண்டு, அந்தந்த கிராமங்களில் ஸ்கூல் கட்டவும், ரோடு பாதைகள் அமைக்கவும், வாட்டர் ஸ்கீம் என்றும், ரீடிங் ரூம் கட்டவும் என்றும் ஏற்பாடாகியுள்ளது. நான் சொல்கிறேன், கிராமங்களில், இந்தமாதிரி ரீடிங் ரூமோ, வாட்டர்ஸ்கீமோ அவசியமேயில்லை என்பதுதான் என் கருத்து. சுமார் 20, 30 வீடுகள் உள்ள கிராமங்களுக்கு இந்த வாட்டர் ஸ்கீமே அவசியமில்லை. ஏனெனில் வயலிற்கு வேலை செய்யப் போகிறவர்கள், வேலை செய்துவிட்டு திரும்பும்போது குளங்களிலோ அல்லது ஆறுகளிலோ குளித்துவிட்டுத்தான் அவர்கள் வீடு திரும்புகிறார்கள். பெண்கள் குளங்களுக்குப் போகும்போது ஸ்நானம் செய்துவிட்டுத்தான் திரும்புகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட கிராமங்களில் பதினாயிரம் ரூபாய் செலவில் இப்படிப்பட்ட வாட்டர் டாங்க்குகள் கட்ட வேண்டிய அவசியமேயில்லை. ஒவ்வோரு கிராமத்திலும் ப்ரைவேட் ப்ளானிங்கின் கீழ் ஸ்கூல்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்கூல்கள் சாயங்காலம் நாலரை மணி கழிந்த பிறகு மூடப்படுகிறது. அந்த ஸ்கூல்

களிலே இந்த வாசகசாலைகளை ஏற்படுத்தினால் அந்த ஸ்கூல் டீச்சர்களே அந்த வாசகசாலைகளை மேற்பார்வை செய்து கொள்வார்கள். ஆகவே, தனிப்பட ரீடிங் ரூம் வேண்டியதில்லை என்பதுதான் என் கருத்து. ஏதோ ஒரு 100 ரூபாய்க்கு ஒரு பீரோ மாத்திரம் வாங்கி வைத்தால் போதும். அதை விட்டு விட்டு 5,000, 6,000 என்று பணம் செலவு செய்து ரீடிங் ரூம் கட்ட வேண்டியதில்லை. ப்ரைவேட் ப்ளானிங்கின் கீழ் ஒவ்வொரு கிராமங்களிலும் அந்தந்த ஜில்லாக் கலெக்டர் மூலம் ஸ்கூல்கள், ரோடு வசதி போன்றவைகள் செய்யப்பட்டு வருகின்றன. அவைகள் திறமையாகவும் செய்யப்படுகிறது. அதை விட்டு விட்டு பிர்க்கா டெவலெப்மெண்ட் ஆபீஸர்கள் என்று பதினைந்து பேர்களை வைத்துக்கொண்டு இருப்பதினால், அவர்களின் ஜீப்பிற்கும், அந்த ஜீப்பிற்கு பெட்ரோல் செலவிற்குந்தான் பணம் போய், பணம் வீணாகிப் போகிறதே தவிர அந்தக் கிராமங்களுக்கு அதனால் நல்ல பலன் ஒன்றும் ஏற்படுவதில்லை. ஏழெட்டு மாதங்களாக, என் தாலுக்காவில் மூன்று பிர்க்காக்கள் சுமார் 60, 70 கிராமங்கள் சேர்க்கப்பட்டு வேலை நடந்து வருகிறது. டிஸ்ட்ரிக்ட் போர்ட் மூலம் சர்க்கார் 5,000 ரூபாயும், ஜில்லா போர்ட் கால் பங்கும், மக்கள் கால் பங்கும் போட்டு வேலைகள் நன்கு நடந்து வந்தது. அதை விட்டு விட்டு பிர்க்கா டெவலப்மெண்ட் என்று வைத்து விட்டார்களே தவிர, அந்த அதிகாரிகள் சாப்பிடுவதில்தான் டெவலப்மெண்ட் இருக்கிறதே தவிர அக்கிராமங்களில் ஒருவிதமான டெவலப்மெண்ட்டும் காணப்படுவதில்லை. எங்கள் பி.டி.ஓ.யிடம் நான் கேட்டேன், "ஆளே டெவலப்மெண்ட்டாய் இருக்கிறீர்களே" என்று, அதோடு கேட்டேன், வேலைகளில் டெவலப்மெண்ட் ஒன்றையும் காணவில்லையே என்று. அதற்கு அவர் சொன்னார், கிராமங்களுக்குச் சென்றால் வந்துவிட்டீர்களா எங்களிடம் பணம் வாங்க, தண்டச் சம்பளம் வாங்கிக்கொண்டு எங்களிடம் வேலை வாங்க வந்துவிட்டீர்களா என்று சொல்கிறார்கள். கிராமங்களில் உள்ள மக்களே சொல்கிறார்கள், எங்களுக்கு ரீடிங் ரூம் வேண்டாம், வாட்டர் ஸ்கீம் வேண்டாமென்று சொல்கிறார்கள். அவர்களுக்கு ஸ்கூலும், ரோடு வசதியும் மட்டும் செய்து கொடுத்தால் போதும் என்று தான் அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். மாதம் ஒரு 5,000 ரூபாய் அந்த உத்தியோகஸ்தர்களின் சம்பளத்திற்கும் பெட்ரோல் செலவிற்காகவும் போகிறது. அங்குள்ள வேலைகளுக்கு என்ஜினியர்களோ, அல்லது பெரிய பெரிய அதிகாரிகளோ தேவையில்லை. அறுபது கிராமங்கள் சேர்ந்தது ஒரு பிர்க்காவாகும். இந்த அதிகாரிகளுக்கு கொடுக்கும் சம்பளம், பெட்ரோல் செலவு முதலியவைகளுக்கு ஆகும் செலவுகளை ஜில்லா கலெக்டரிடம் கொடுத்து விட்டு அந்த கிராமங்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுங்கள் என்று சொன்னால் அக்கிராமங்களில் வேலைகள் நன்கு நடைபெறும். அங்குள்ள மக்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க முடியும். இதனால் நம் சர்க்காருக்கு ஏற்படும் நஷ்டமும் ஏற்படாமல் போகும். அடுத்தபடியாக நிலவுடமை பற்றி பேசப்படுகிறது. நாம் இந்த அஸெம்பளிக்கு வருவதற்கு முன்பே, உச்ச வரம்பு, ஸீலிங் என்ற பிரச்னைகள் எல்லாம் இருந்து வருகிறது. ஏதோ 60, 40, 20 என்றெல்லாம் சொல்கிறார்கள். நில உடமைக்கு உச்ச வரம்பு விதிக்க வேண்டுமென்று எல்லோரும் சொல்கிறார்கள். நான் சொல்கிறேன், பயிர் செய்யாதவர்கள், அல்லது பயிர் செய்யத் தெரியாதவர்கள்தான் இப்படியெல்லாம் பேசுகிறார்கள் என்பதுதான் என் கருத்து. ஏன் அப்படிச் சொல்கிறேன் என்று கேட்டால், சாகுபடி செய்யத் தெரியாதவர்களிடம் நிலத்தைக் கொடுத்தால் அவர்களால் என்ன செய்ய முடியும். எல்லோரும் சொல்கிறார்கள், நிலத்தை பகிர்ந்து கொடுக்க வேண்டும், நிலத்தை பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் நில வரம்பு, உச்ச வரம்பு, என்றும் கையேர்வாரம் என்றும் மாட்டேர் வாரம் என்றும் எல்லாம் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்களும் ஏதோ கையேர் மாட்டேர் என்றெல்லாம் சொன்னார்கள். நான் என் நிலத்தில் இரண்டு காணி சர்க்காருக்குக் கொடுத்து விடுகிறேன், அதற்குப் பதில் இரண்டு பஸ் பெர்மிட் கொடுக்கட்டும். இரண்டையும் வைத்துப் பார்த்து வருடக் கடைசியில் எது லாபம் என்று பார்க்கலாம். பஸ் பர்மிட் வைத்திருப்பவர்கள் முன்னேறிக்கொண்டு போகிறார்கள், நிலத்தைப் பயிரிடுகிறவர்கள் கீழ் நோக்கிக் கொண்டுதான் போவார்கள். இந்த பஸ் பர்மிட் கொடுக்கும் விஷயத்தில் சில நிபந்தனை





கள் இருக்கின்றன. மார்க் லிஸ்டம் என்று அதைச் சொல்வார்கள். நிலம் பயிர் இடத் தெரிந்தவன்தான் பயிரிட முடியும். ஆனால் அதற்கு மார்க் லிஸ்டம் வேண்டாமா ? பஸ் பர்மிட் கொடுப்பதில் அவர் அந்த இடத்தைச் சார்ந்தவராய் இருப்பதோடு அங்கு வொர்க் ஷாப்பும் இருக்க வேண்டும். இச்சமயத்தில் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் சமமாயிருக்க வேண்டுமென்றெல்லாம் பேசும்போது, ஒருவருக்கு ஒரு பர்மிட், ஒருவருக்கு 4, ஒருவருக்கு 5, ஒருவருக்கு 6 பர்மிட் என்று எல்லாம் கொடுப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று கேட்கிறேன். ஒருவருக்கு பெர்மிட் கிடைத்தால் எந்த மந்திரியைப் பார்த்தாய், கலெக்டர் உங்களுக்குத் தெரிந்தவரா என்றெல்லாம் கேட்கிறார்கள். ஆக, நான் சொல்வது என்னவென்றால் ஒரு மைலிற்கு 500 ரூபாய் என்று வைத்து ஒரு சில மைல்களுக்கு பெர்மிட் வழங்க வேண்டும். பஸ் ரூட் இப்பொழுது ஏதோ 25 சத விகிதம் அதிகப்படுத்தப் போவதாக அறிகிறோம். ஐம்பது சத விகிதம் ஆக வேண்டுமானால் உயர்த்திக் கொள்ளுங்கள். நான் சொல்வது என்னவென்றால், மைல் ஒன்றுக்கு 500 ரூ. வீதம் 100 மைலிற்கு பெர்மிட் கொடுத்தால் 50,000 ரூபாய் கிடைக்கும். இருநூறு மைலிற்கு கொடுத்தால் 1,00,000 ரூபாய் கிடைக்கும். அப்படி வேண்டுமென்றால், ஆக்ஷன் செய்து கொடுக்கட்டும். இவ்வளவு டெபாஸிட் வைக்க வேண்டும் என்றும் சொல்லட்டும். அதனால் நமது சர்க்காருக்கு கிடைக்கும் வருவாயும் அதிகரிக்கும். இம்மாதிரி பஸ் ரூட்கள் வைத்திருப்பவர்கள் போன்றவர்களுக்கு கிடைக்கும் வருமானத்தையும், நிலத்தை வைத்துக் கொண்டிருப்பவனுக்கு கிடைக்கும் வருவாயையும் வைத்துப் பார்த்தால் நிலத்தை வைத்துக் கொண்டிருப்பவனுக்கு கிடைக்கும் வருவாய் மிகமிகக் குறைவு என்பதை நாம் பார்க்க முடியும். அப்படிச் செய்தால் யாரும் மந்திரிகளையோ அல்லது கலெக்டரையோ இப்படி பஸ் பர்மிட் கொடுத்ததற்காக குறை கூற மாட்டார்கள், அதோடு நமது சர்க்காருக்கும் வருவாய் கூடுதல் கிடைக்கும் என்று சொல்ல நான் ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஹரிஜனங்களுக்காக எவ்வளவோ மான்யங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜனங்களை விட மோசமானவர்களாக இருக்கிறார்கள் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள். சேணியர், செங்குந்த முதலியார், தேவாங்கர், என்றெல்லாம் உள்ளவர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களின் இன்றைய நிலை ஹரிஜனங்களின் நிலையைவிட மோசமாக இருக்கிறது. ஹரிஜனங்களுக்கு எத்தனையோ வழிகளில் பிழைக்க முடியும், அதற்குள்ள வழிகள் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால் இந்த நெசவுத் தொழிலாளர்களுக்கு நெசவைத் தவிர வேறு ஒரு தொழிலும் தெரியாது. ஆகவே நான் சொல்வது என்னவென்றால் இந்த தொழிலாளர்கள் தங்கள் தொழிலை நடத்த ஒரு வீடு கூட இல்லாமல் வாடகை வீட்டில் இருந்து கொண்டு கஷ்டப்படுகிறார்கள். வீட்டு வாடகை கூட கொடுக்க லாயக்கற்றவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிற படிப்பு வசதி, வீட்டு வசதி, உணவு விடுதி வசதி போன்ற வசதிகள் போன்று இந்த நெசவுத் தொழிலாளர்களுக்கும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இவர்களுக்கும் சில நிதிகள் ஒதுக்கி ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் போன்று இவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

* **SRI S. SAMIKANNU PADAYACHI** : கனம் சபாநாயகர் அவர்களே, 2–40
மதிப்பிற் குரிய நிதி அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் 1958–59-ம் வருஷ p.m.
த்திய வரவு செலவு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். நான் அதை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். திட்டத்தைப்பற்றி எதிர்கட்சியிலுள்ள மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் மிக மோசமாக இருக்கிறது என்று பேசினார்கள். அப்படி ஒரு எதிர்கட்சி இல்லாவிட்டால் நாம் திருந்த மாட்டோம். ஆதலால் அவர்களை நாம் போற்ற வேண்டியதுதான். அதோடு வரவு செலவுத் திட்டத்தில் ஒரு கோடி ரூபாய் துண்டு விழுவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஒரு கோடி ரூபாயை எத்தனையோ இனங்களில் சரிகட்டியிருக்கலாம். அவர்களுக்கு தெரியாது என்று நான்

சொல்ல வரவில்லை. இப்போது இதை சரிக்கட்டுவதற்கு வேண்டி சில வரிகளை போட முன்வந்திருக்கிறார்கள். அதாவது விவசாயிகளுக்கு 3,000 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு வரி விதிக்கும்படியாக தீர்மானித்திருக்கிறார்கள். பொது மக்களுக்கு சர்க்கார் எத்தனையோ நன்மைகள் செய்தாலும் கூட அவைகளை எல்லாம் பொது ஜனங்கள் புகழ மாட்டார்கள். கால் அணு வரியில் கூட்டிவிட்டால் அரசாங்கத்தை திட்டுவார்கள். மூவாயிரம் ரூபாய் வருமானம் என்றால் இந்த காலத்தில் 200 மூட்டை விற்பனை செய்தால் தான் 3,000 ரூபாய் வருமானம் வரும். இந்த 3,000 ரூபாய்க்கு சாதாரணமாக வரியை கட்டிவிடுவார்கள். ஆனால் அந்த குடியானவனுக்கு கணக்கு எழுதிக்கொண்டிருந்தால் விவசாயத்தை பார்க்க முடியாது. இவ்விதம் வரி விதிப்பதாயிருந்தால் எந்த நேரமும் கணக்கு எழுதுவதும் திருத்துவதும்தான் நடந்துகொண்டு இருக்கும் என்பதை அரசாங்கத்திற்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முன்னால் இன்கம் டாக்ஸ் ரெவினியூ டிபார்ட்மெண்டில் அதாவது கலெக்டர், தாசில்தார் இவர்களிடத்தில் இருந்து வந்தது. அப்பொழுதும் இதற்கு கணக்கு எழுதுவதற்கும் பெட்டிஷன் எழுதுவதற்கும் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பதற்கும்தான் நேரம் சரியாக இருந்து கொண்டிருந்தது. ஆகவே இப்போது அது மாறி வந்திருக்கிறது. இப்போது அதிகமான டன் உணவு தான்யம் கிடைத்திருப்பதாக அறிகிறோம். ஆனால் இந்தமாதிரி வரிகள் வந்தால் மேலும் உணவு உற்பத்தி கூடாது, குறையத்தான் செய்யும் என்பதை சொல்லிக்கொள்கிறேன். மேலும் 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு வரி என்றிருந்தால் குறைந்தது 100 ஏக்கர் இருந்தால்தான் 25 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். நூறு ஏக்கர் பயிர் செய்து 60—40 எல்லாம் கொடுத்து அதற்கு பின்னால் 9 அணு வீதம் கணக்கு வைத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு 9 ஆயிரம் ரூபாயை சர்க்காருக்கு கொடுத்துவிட்டு பாக்கி 11 ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு நிலத்தை என்ன செய்ய முடியும்? அதை வைத்துக்கொண்டு எப்படி அந்த நிலங்களை எல்லாம் சாகுபடி செய்ய முடியும் என்பதை நாம் பார்க்க வேண்டும். ஆகவே சர்க்கார் இந்த வரியை தள்ளிவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வரியை வேண்டுமானால் 1955-56-ல் போட்டிருந்தது மாதிரி ஸெஸ் வரியை அதாவது நிலத்தீர்வையில் 4 அணு உயர்த்தினால் துண்டு விழும் பணத்தை சரிக்கட்டிவிடலாம் என்று நினைக்கிறேன். ஆகவே இதை சர்க்கார் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு செலவுகளை எத்தனையோ வகைகளில் குறைக்கலாம். இதனால் சில ஆட்கள் வெளியே போக வேண்டியிருக்கும். அதனால் அரசாங்கம் இந்த செலவுகளை எல்லாம் விட்டுக்கொண்டு இருக்கிறது என்று நினைக்கிறேன். அவ்விதம் ஆட்களை வெளியே அனுப்பிவிட்டால் அதற்கென்று ஒரு கூட்டம் போட்டுவிடுவார்கள். பல இலாக்காக்களிலும் பொது மக்களின் பணம் அனாவசியமாக செலவு செய்யப்பட்டு வருகிறது. இதையும் குறைக்கலாம் என்று அரசாங்கத்திற்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதையெல்லாம் அரசாங்கத்திற்கு கவனிக்கத் தோன்றுது. கல்வியை எடுத்துக் கொண்டால் வருவாயில் ஐந்தில் ஒரு பங்கு கல்விக்காக செலவு செய்யப்பட்டு வருகிறது. அது நல்லது தான். கல்வி முன்னேறினால்தான் நமது நாடு முன்னேற முடியும். ஆகவே இதைப்பற்றி திருப்தியடைகிறேன். அதில் எல்லா இனத்தவர்களுக்கும் ஆறாவது பாரம் வரையிலும் இலவசமாக படிப்பதற்கு சலுகை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைத் தாண்டினால் தொழில் கல்வி மாணவர்களுக்கு சலுகை கொடுக்க வேண்டியதுதான். ஆனால் காலேஜ் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகையை நிறுத்தினால் ஏகப்பட்ட பணம் மிஞ்சும் என்பதை அரசாங்கத்திற்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். அடுத்ததாக நிலசீர்திருத்தத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது முன்னால் 200 காணி, 100 காணி என்று நிலத்தை வைத்திருந்தவர்கள் இப்போது 10 ஏக்கர், 15 ஏக்கர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சுமார் 40 வருடங்களுக்கிடையில் இந்த மாற்றத்தை நாம் தெரிந்திருக்க முடியும். ஏற்கனவே இருந்த நிலங்கள் எல்லாம் துண்டு துண்டாக ஆக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் நிலச்சீர்திருத்தத்தை கையில் வைத்துக்கொண்டு இருப்பது மேற்கொண்டு இருக்கக்கூடிய ஒரு ஏக்கர்



ஐந்து ஏக்கர் நிலங்களை மேலும் துண்டாடுவதற்குதான் ஆகும். இதனால் உணவுப் பிரச்னை கூடுதலாகிக் கொண்டேதான் வருமே தவிர குறையாது என்பதை அரசாங்கத்திற்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆகவே நிலச்சீர்திருத்தம் இப்போது தேவையில்லை என்பதை, அதிலும் நம் மாகாணத்திற்கு இப்போது அவசியமில்லை என்பதை சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு 2,000 ஏக்கர்கள், 3,000 ஏக்கர்கள் எங்கு வைத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் ஒன்றிரண்டு ஜில்லாக்களில்தான் அதை பார்க்க முடியும். அதிலும் இம்மாதிரி நிலங்கள், சர்க்கார் இனாம் நிலங்களையும் புறம்போக்கு நிலங்களையும் வைத்துக்கொண்டிருப்பவர்கள்தான் இருப்பார்கள். இதல்லாமல் அதிகமாக நிலம் வைத்திருக்கிறார்கள் என்றால் அவைகள் எல்லாம் கிரயம் கொடுத்து வாங்கின நிலங்களாகத்தான் இருக்கும். அப்படிப்பட்டவர்கள்தான் இன்றைக்கு அதிக நிலம் வைத்துக்கொண்டிருப்பார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை கைநழுவ விடும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக பாசன வசதியை எடுத்துக்கொண்டால் சற்றேறக்குறைய நாம் எவ்வளவோ முன்னேறியிருக்கிறோம் என்பதை தெளிவாக சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு எவ்வளவோ கால்வாய் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நம்முடைய சர்க்கார் இதில் நல்ல வெற்றி கண்டிருக்கிறார்கள். கிழக்கு போகிற தண்ணீரை மேற்கே கொண்டுபோய் சாகுபடிக்கு வழி செய்திருக்கிறார்கள். அதைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். நமது ராஜ்யத்திலுள்ள நாலைந்து பெரிய திட்டங்களும் முடிந்து விட்டது என்று நினைக்கிறேன். ஒன்றிரண்டில் ஜலமும் விடுவதாக இருக்கிறது. இன்னும் ஒன்றிரண்டு திட்டங்கள் பாக்கியிருக்கிறது. அதில் குறிப்பாக வெள்ளாறு என்பது சேலத்திலிருந்து தென்னாற்காடு வழி போய் கடலில் போய் சங்கமம் ஆகிறது. இதற்கு முன் மழை சரியாக இல்லாத காரணத்தினால் அதில் 4 அங்குலம் ஜலம் கூட இல்லாமல் இருக்கிறது. காவேரி ஜலத்தை இதில் விடுவதாயிருந்தால் சேலம் ஜில்லாவில் ஒரு பகுதி திருச்சி ஜில்லாவில் இரண்டு தாலூகாக்கள், தென்னாற்காடு ஜில்லாவில் 3 தாலூகாக்கள் இந்த இடங்களுக்கெல்லாம் சாகுபடிக்கு பயனாக இருக்கும். அதோடு உணவுப் பொருள்களும் அதிகமாக கிடைக்க முடியும். ஏதோ சர்க்கார் இந்தத் திட்டத்தை ஏற்கனவே பரிசீலித்து இருக்கிறது. இந்த திட்டத்திற்கு அதிகமான தொகை ஆகும் என்று இதை கைவிட்டுவிட்டார்கள் என்று நினைக்கிறேன். பெரிய திட்டத்தில் இந்த ஒரு திட்டம் தான் பாக்கி இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே இதை சர்க்கார் நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கு பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 3-50 p.m.
மது விலக்கை கூடுமானவரையில் சர்க்கார் எவ்வளவோ சிரமம் எடுத்துக்கொண்டு அதை வெற்றிகரமாக்க வேண்டுமென்று நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக எவ்வளவோ பணம் செலவழிந்தும் அது நின்றபாடில்லை. அதாவது இந்தச் சாராயம் காய்ச்சுவது நின்றபாடில்லை. சாராயம் காய்ச்சுவதும் கடையில் விற்பதும் தொடர்ந்து நடந்துகொண்டுதான் வருகின்றது. நாம் போலீஸை நம்புகிறோம். போலீஸ் போய் ஏதாவது கேஸ் பிடித்தால் அந்த கேஸ் கோர்ட்டுக்கு வருவதில்லை. பொது மக்களில் யாராவது இரண்டு பேருக்குத் தெரிந்தால்தான் அது கோர்ட்டுக்கு வரும். நேரே போய்ப் பிடித்தாலும் அது கோர்ட்டுக்கு வருவதில்லை. ஒவ்வொரு ஊரிலும் அநேக கடைகள் இருக்கின்றன. மது விலக்கை வெற்றிகரமாகச் செய்வதற்கு எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. கிராமப் பெரியதனக்காரர்களாக மணியக்காரர்கள், கணக்குப்பிள்ளைகள் இவர்களிடம் சலுகைகள் கொடுத்து கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். போலீஸ் ஸ்டேஷன் 30 மைல் தூரத்தில் இருக்கிறது. அதோடு பிடித்தாலும் அவர்களை விட்டு விடுகிறார்கள். போலீஸ் வேலையில் வருவதில்லை. அதனால் கிராம மணியக்காரர்கள், கணக்கப்பிள்ளை இவர்களுக்குச் சலுகை காட்டி அவர்களிடம் இந்த மது விலக்கை ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஐந்தாண்டுத் திட்டம். இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிகப் பணம் செலவழிக்கப்படுகிறது. சென்ற ஆண்டு எங்கள் தாலூகாவில் தேசிய விஸ்தரிப்புத் திட்டம் வந்துவிட்டது. முப்பதாயிரம்

ரூபாயில் ஒரு வருஷத்தில் 5,000 ரூபாய் போக்குவரத்துச் செலவைத் தவிர பாக்கி 25,000 ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். அதற்கு ஒரு தாசில்தாரைத் தவிர பி.டி.ஓ. ஒருவர் இருக்கிறார். தாசில்தார், பி.டி.ஓ. என்று இரண்டு பேர் தேவையில்லை. அதை தாசில்தாரே பார்க்கலாம். அதோடு மற்ற ஆட்களையும் குறைக்கலாம். ஒரு ஊருக்கு வந்து அவர்கள் பார்க்க வந்தவர் இல்லையென்றால் எல்லோரும் திரும்பி விடுகின்றனர். அவர்களுக்கு இப்பொழுது கொடுக்கும் ஜீப் காரை நிறுத்தி விட்டு மற்ற வாகன வசதி கொடுத்தால் வேலை நடக்கும். அவர்கள் திடீரென்று ஒரு ஊருக்குப் போவார்கள். அவர்கள் இல்லையென்றால் வந்த ஜீப் காரிலேயே திரும்பிவிடுவார்கள். இந்த ஜீப் இல்லையானால், அங்கேயே தங்கி (சபாநாயகர் மணி அடித்து அடுத்த அங்கத்தினரைக் கூப்பிட்டார்).

**Mr. SPEAKER :** The hon. Member may resume his seat.

**Sri K. RAMASUBBU :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த 1958–59-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை முழுமனதுடன் ஆதரித்து சில வார்த்தைகளைப் பேச இந்த சந்தர்ப்பத்திலே நான் விரும்புகிறேன். (ஸ்ரீ டி. டி. டேனியல் சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்தார்.) தனக்குப் போக தானம் என்ற வாக்குக் கிணங்க, இங்கு நமது மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் தொகுதியிலே இருக்கிற பிரச்னைகளை பூராவாகப் பேசுகிற நேரத்தில் நானும் எனது தொகுதி பற்றி, கடந்த ஒரு ஆண்டுக்கு இந்த மூலையிலிருந்து சப்தம் வராத நிலையிலே, சப்தத்தை அதிகமாகப் போடலாம் என்று ஆசைப்படுகிறேன். எங்கள் பிராந்தியம் 5 தொகுதியைக் கொண்டது. அதிலே இப்போது பிளாக் டெவலப்மெண்ட் என்றும், நேஷனல் எக்ஸ்டென்ஷன் என்றும் பலவிதமான வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். அவைகள் என்ன என்பது இந்தப் பிராந்தியத்திலுள்ள மக்களுக்குத் தெரியாது என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது எங்கள் ஜில்லா பிளானிங் கமிட்டியிலிருந்து எந்தெந்த பிருக்காவிற்கு எப்படியெப்படி பிரெயாரிடி கொடுத்து பிளாக் டெவலப்மென்டில் எடுக்க வேண்டுமென்று அனுப்பியிருக்கிறார்கள் அரசாங்கத்திற்கு. இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், எங்கள் மாவட்டத்திலிருந்து கலெக்டர் அவர்களால் அனுப்பப்பட்ட அந்த லிஸ்டை, பிளானிங் கமிட்டியிலுள்ள அத்தனை எம்.எல்.ஏ.க்களும் மற்றும் அத்தனை பேர்களும் சேர்ந்து நாங்கள் அனுப்பியிருக்கும் அந்த லிஸ்டை அங்கீகரித்து அதன்படி திட்டங்களைப் போடுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

இப்போது இந்த பட்ஜெட்டைப்பற்றி முதலில் பேசவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இந்த வருஷத்து பட்ஜெட்டில் 135 லட்ச ரூபாய் பற்றாக்குறையாக இருக்குமென்று முதலில் முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நம் அதிர்ஷ்டவசமாக நமது மத்திய அரசாங்கத்திடமிருந்து 30 லட்ச ரூபாய் நாம் எதிர்பாராதபடி வந்து 135 லட்சம் என்பது 105 லட்சமாக மாறியிருக்கிறது. அதிலிருந்து நமது பட்ஜெட்டுக்கு நல்லகாலம் பிறந்திருக்கிறது என்று அறிகுறியாக எடுத்துக் காட்டுகிறேன். இன்னும் மற்றொரு சந்தர்ப்பத்திலே நம் நிதி அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே இன்னும் 60 லட்ச ரூபாய் நமக்குக் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கிறார்கள். அதாவது மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் வாங்கிய கடன்களுக்கு வட்டியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டு, நிதிக் கமிஷன் சிபாரிசு செய்து மத்திய சர்க்கார் ஒப்புக் கொள்ளாத நிலையில் இருக்கிறது. அதை நாம் கைவிட்டு விடக்கூடிய சந்தர்ப்பமேயில்லை. இந்த 60 லட்சத்தை எதிர்பார்த்தால் இந்த பற்றாக்குறை 105 லட்சத்திலிருந்து 45 லட்சமாக மாறலாம். ஆகவே நாம் 45 லட்சம் பற்றாக்குறை என்று எடுத்துக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தில் இதற்காக நாம் புதிய வரிகளைப் போடவேண்டியது அவசியமா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஒரு பட்ஜெட் மைனஸில் இருக்கலாம். அதை டெபிஸிட் பைனான்சிங் என்று சொல்வார்கள். நமது பைனான்ஸ் டிபார்ட்மெண்ட் நமக்கு ஒரு புத்தகத்தை அளித்திருக்கிறார்கள். அதைப் பார்க்க மிக்க மகிழ்ச்சி. அதில் நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். அதில் அவர்கள் டெபிஸிட்





பைனான்ஸிங் என்றால் என்ன என்பதைப் பற்றி ஒரு சிறு விளக்கத்தை கொடுத்திருந்தால் இன்னும் நாங்கள் டெபிஸிட் பைனான்ஸிங்கைப்பற்றி நல்ல விரிவான முறையில் பேசியிருக்க முடியும். ஆகவே அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். அடுத்த ஆண்டு இதைப்பற்றி ஒரு சிறு குறிப்பு சேர்த்துக் கொடுத்தால் நன்றாக இருக்குமென்பது எனது கருத்து. ஆகவே, டெபிஸிட் பைனான்ஸிங்காக நமது பட்ஜெட் இருந்தால் என்ன என்று கேட்க ஆசைப்படுகிறேன். டெபிஸிட் பைனான்ஸிங் என்றால் " இட் மே லீட் டு இன்பிளேஷன் " என்று சொல்லலாம். ஆனால் " மாடரேட் டெபிஸிட் பட்ஜெட்டாக " இருந்தால் இன்பிளேஷன் ஒன்றுக்கும் பயப்படவேண்டிய அவசியமில்லை என்று சில நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த பற்றாக்குறை பற்றாக் குறையாக இருந்தால் என்ன கெட்டுப் போய்விடுமென்று எனக்குத் தெரியவில்லை. நமது நிதி அமைச்சர் " ராஜ்யத்தின் ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவைப் பற்றித் திட்டக்குழுவுடன் நாம் விவாதித்தபோது வருவாய் இன வரவு செலவைச் சரிக்கட்டுவதற்குப் போதிய நிதி வசதிகள் திரட்ட முடியும் என்று குறிப்பாக உறுதி கூறியுள்ளோம் " என்று 21-வது பக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காரணத்திற்காக இந்தப் புது வரிகளைப் போட ஆசைப்படுகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். புது வரிகள் போடுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. 3-00 p.m. ஆனால் இந்த பட்ஜெட்டில் புது வரிகள் வேண்டுமா என்பதுதான் என் கேள்வி. போன ஆண்டிலே 3 கோடியே 33 லட்சம் ரூபாய் துண்டு விழும் என்று கணக்கிடப்பட்டிருந்தது. ஆனால் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி 5 லட்சம் ரூபாய் உபரியாகக் கிடைத்திருக்கிறது. அதற்குக் காரணம் நாம் எதிர்பார்த்த அளவுக்குச் செலவுகள் நடக்கவில்லை என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எந்த பட்ஜெட்டைப் போட்டாலும் மதிப்பிட்ட செலவு கண்டிப்பாக செலவழிக்கப்பட முடியாது என்பது நாம் கண்டறிந்த உண்மை. ஆகவே நமக்கு ஏற்பட்டிருக்கும் 1 கோடியே 5 லட்சம் ரூபாய் " deficit " ஆனது திருத்தப்பட்ட மதிப்பீட்டின் போது கண்டிப்பாக உபரியாக முடியும் என்பதில் சந்தேகமே கிடையாது. ஆகவே இந்தப் புதுவரிகளை இப்பொழுது போட்டிருக்கவேண்டாமென்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அவைகள் நல்லதா, கெட்டதா என்று யோசிப்பதற்கு இந்த வருஷத்திலே சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்க வேண்டாம். அவைகள் இல்லாமலேயே நமது பட்ஜெட் சரியாகிவிடும் என்று அபிப்பிராயப்படுகிறேன். டீசல் எண்ணெய்மீது போடப்பட்ட வரி மூலம் 70 லட்ச ரூபாயும், பொழுதுபோக்கு வரி மூலம் 30 லட்சம் ரூபாயும் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நமக்குத் துண்டு விழும் தொகை 105 லட்சம் ரூபாய். ஐந்து லட்சம் தான் வித்தியாசப்படுகிறது. இந்த 5 லட்சம் பற்றாக்குறையை உபரி ஆக்குவதற்காக விவசாய வருமான வரியைப் போட்டிருக்கிறார்கள். இதை ஏன் போடவேண்டும் ? புது வரி போடுவதில் ஆட்சேபணையில்லை. ஆனால் போடவேண்டிய சந்தர்ப்பத்திலே போடவேண்டும். ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்தி ஆறும் ஆண்டு முதல் 1954-ம் ஆண்டு வரை பல தடவைகள் சர்ச்சை செய்து இந்த வரியைக் கைவிட்டு இருக்கிறோம். அந்த வரியை, சந்தர்ப்பம் நேராதபொழுது ஏன் கொண்டுவர வேண்டுமென்றுதான் கேட்கிறேன். இந்த 5 லட்சம் ரூபாய் பற்றாக்குறையை வேறு வகையில் சரிக்கட்டக் கூடாதா ? டீசல் எண்ணெய் மீதுள்ள வரியிலிருந்து 70 லட்சம் கிடைக்குமென்று சொல்லப்படுகிறது. அந்த 70 லட்சத்தை 73 லட்சமாக ஆக்கலாமே. என்ன கெட்டுப்போய்விடும் ? அதே மாதிரி பொழுதுபோக்கு வரியிலிருந்து கிடைக்கும் 30 லட்சத்தை 32 லட்சமாக ஆக்கிக் கொள்ளுங்கள். ஒருவரும் குற்றம் சொல்லப் போவதில்லை. ஆக மொத்தம் 73+32 லட்சம், அதாவது 105 லட்சம் கிடைத்துவிடுமே. ஆகவே இந்தப் புது வரிகளைப் போடவேண்டிய அவசியமே இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

அப்படி நாம் வரிகளைப் போடவேண்டுமென்று நினைத்தால், டீசல் எண்ணெய் மீதுள்ள வரியிலிருந்து விவசாயிகளுக்குக் கண்டிப்பாக விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு ஆயில் எஞ்சின் வைத்துக் கொண்டிருக்கிற விவசாயியின் கணக்கைப் பார்த்தால் ஒரு ஆயில் எஞ்சின் ஒரு காலன் எண்ணெய்க்கு மூன்று மணி நேரம்

ஒரு நாளைக்கு ஒரு ஆயில் எஞ்சினை ஒரு விவசாயி 12 மணி நேரம் ஓட்டுகிறான். ஆகவே, ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் அவனுடைய வருமானத்தில் குறைகிறது. ஒரு மாதத்தில் ரூபாய் 30 அவனுடைய வருமானத்தில் குறைகிறது. இந்த வரி சிறிய விவசாயிகளைத் தான் பாதிக்குமேயல்லாது பெரிய விவசாயிகளைப் பாதிக்காது. அதே மாதிரித் தான் விவசாய வருமான வரியும். இதுவும் சிறிய நிலச்சுவான்தார்களைத்தான் பாதிக்கும். நான் ஒரு பெரிய நிலச்சுவான்தார் என்கிற முறையில் பேசுவதாக நினைக்கலாம். பெரிய நிலச்சுவான்தார்களுக்காக ஒரு நாளும் நான் கவலைப்படப் போவதில்லை. "இந்த வரியையும் போடுங்கள், இதற்கு மேலும் போடுங்கள்" என்று தான் சொல்லுகிறேன். ஆனால் இரண்டு அல்லது மூன்று ஏக்கர் நிலம் வைத்திருக்கும் சிறிய விவசாயிகளை எடுத்துக் கொண்டால், இந்த வரி கண்டிப்பாக அவர்களை மிகவும் பிற்போக்கான நிலைமைக்குக் கொண்டுபோகக் கூடிய சூழ்நிலையை உண்டாக்கும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே எடுத்துக் கூற விரும்புகிறேன். இப்பொழுது நம் நாட்டிற்கு முக்கியமாக வேண்டியது உணவு உற்பத்தி. அது நம் நாட்டிலே பற்றாக்குறையாக இருந்தது. இப்பொழுது அரசாங்கம் நிறைவேற்றிவரும் பல திட்டங்களில் அந்த உணவுப் பற்றாக்குறை ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே வருகிறது. வருகிற 1958-59-ல் உணவுப் பற்றாக்குறை நீங்கிவிடுமென்று நமது அமைச்சர் கூறியிருக்கிறார்கள். அதைக் கேட்க மிகவும் சந்தோஷம். ஒரு நாட்டின் உணவுப் பற்றாக்குறை தீர்ந்துவிட்டது என்றால், அது மிகவும் மகிழ்ச்சிகரமான செய்தி. அப்படிப்பட்ட உணவுப் பொருளை உண்டாக்குவதற்கு வேண்டிய தண்ணீரைப் பெருக்குவதற்கு அரசாங்கம் பல திட்டங்களை வகுத்து, பெரிய அணைக்கட்டுகளையும், சிறு நீர்தேக்கங்களையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதற்காக அரசாங்கத்திற்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

எங்களது மாவட்டத்தில் சமீபத்தில் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தை, நான்கு அமைச்சர்கள் வந்து, சிறப்பாக திறந்து வைத்தார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த நீர்த் தேக்கம் திறந்து வைக்கப் பட்டது மக்களுக்கு குதூகலத்தை உண்டுபண்ணியது. அதே நேரத்தில் அநேகப் பிரச்னைகளையும் கிளப்பிவிட்டிருக்கிறது. அந்த நீர்த்தேக்கத்திலிருந்து எந்தெந்தக் குளங்களுக்கு தண்ணீர் பாய்வது என்பதை அரசாங்கம் நிர்ணயிக்காமல், அணைக்கட்டில் தண்ணீர் பெருகிவிட்டது என்ற காரணத்திற்காக அதைத் திறந்துவிட்டார்கள். அதன்பயனாக இப்பொழுது எந்தக் குளத்திற்கு தண்ணீர் முதலிலே பாய்வது, எதற்கு அடுத்தபடியாகப் பாய்வது என்கிற பிரச்னை எழுந்துவிட்டது. கலெக்டர் ஒரு உத்திரவைப் போட்டால் எக்ஸிகூடிவ் எஞ்சினியர் மற்றொரு உத்திரவைப் போடுகிறார். இந்த இரண்டு அதிகாரிகளுக்குள் யார் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வது என்பதை நிர்ணயிக்காத நிலையிலே பல குழப்பங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே அரசாங்கம் கூடிய சீக்கிரத்தில் யாருக்கு இந்தப் பொறுப்பைக் கொடுப்பது என்பதை நிர்ணயிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மணிமுத்தாறு ஜலம் ஓடும் கால்வாய்க்கு இரண்டு பர்லாங் தூரத்திலே மின்சார மோட்டார் வைக்கக் கூடாதென்ற நிபந்தனை இருக்கிறது. இனி மேல் புதிதாக வேண்டுமானால் வைக்கவேண்டாம். இப்பொழுது இரண்டு பர்லாங்குக்கு மத்தியிலே அநேக கிணறுகள் இருக்கின்றன. அந்தக் கிணறுகளிலே ஆயில் என்சின்களை வைத்து ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எலெக்டிரிக் மோட்டார் வைக்க ஆசைப்படுகிறார்கள். ஆனால் அரசாங்கம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஏன் அரசாங்கம் இடம் கொடுக்கவில்லையென்றால், வாய்க்காலிலே ஓடுகின்ற நீரை இந்த பம்பு செட்டின் மூலம் உறிஞ்சிவிடுகிறார்கள் என்ற பயத்தின் காரணமாக அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். இப்பொழுது ஆயில் எஞ்சின் வைத்திருக்கக்கூடிய அந்தக் கிணறுகளிலே இதே நிலைமைதான் இருக்கிறது. ஆயில் எஞ்சின் வைத்து வாய்க்காலிலே ஓடுகின்ற நீரை கிணறுகள் மூலம் இறைக்கிறார்கள். இதற்கு ஆயில் எஞ்சின் வைத்திருந்தால் என்ன, எலெக்டிரிக் மோட்டார் வைத்திருந்தால் என்ன ? கால்வாயிலே போகிற நீரை வெளியே எடுக்கிறார்கள். இதற்கு ஒரு வரம்பு ஏற்படுத்த



வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முன்பு கிணறுகளை அடுத்து ஆயில் எஞ்சின்களை வைத்து ஓட்டிக்கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும். அரசாங்கம் எதற்காக மோட்டார் வைத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லுகிறார்களோ அந்தக் குற்றம் நீங்கிவிடவில்லை. ஆகவே ஆயில் எஞ்சின் வைத்திருக்கிறவர்கள் இனி மேல் எலெக்டிரிக் மோட்டார் வைத்துக் கொள்ளலாமென்று செய்து விடலாம். இப்பொழுது டீசல் எண்ணெய்க்கு வரி போடப்போகிறோம். குறைந்த விலையில் மின்சாரம் கிடைக்கும்போது எதற்காக அவர்கள் ஆயில் எஞ்சினை வைத்து ஓட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

*SRI S. M. ANNAMALAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1958- 3-1 p.m
59-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டக் கணக்கு இந்த சட்ட மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது கிராமங்களில் சில இடங்களில் நாடகங்கள் நடைபெறும், அது ஞாபகத்திற்கு வருகிறது. அந்த நாடகங்களில் முதன் முதலில் ஒரு அரசன் வருவான். அதற்குப் பின்னால் மந்திரி வருவான். அந்த அரசன் மந்திரியைப் பார்த்துக் கேட்பான், மந்திரியே, "மாதம் மும்மாரி நம் நாட்டில் பெய்கிறதா" "மக்கள் சுகமாக வாழ்கிறார்களா" என்றும் கேட்பான். உடனே மந்திரி "மாதம் மும்மாரி பெய்கிறது, மக்கள் சுகமாக வாழ்கின்றார்கள்" என்று பதில் சொல்லுவான். அடுத்தபடியாக விவசாயிகள் வருவார்கள். அவர்கள் வந்தவுடன் "போச்சு, போச்சு, பயிரெல்லாம் போச்சு, பயிரெல்லாம் தீய்ந்து போச்சு" என்று சொல்லுவார்கள். அரசன் ஏன் என்று கேட்பார். "இந்த ஆண்டு மழை பெய்யவில்லை, பயிர்கள் தீய்ந்து போய்விட்டன, வரி கொடுக்க முடியவில்லை" என்று சொல்லுவார்கள். ஆகவே போச்சு போச்சு பயிரெல்லாம் போச்சு என்று சொல்லுவார்கள். அந்த நிலைமையில்தான் இருக்கிறது இந்த வரவு செலவு திட்டம். பருவ மழை குறைந்து போய் விட்டது, பயிரெல்லாம் பூச்சி விழுந்து போய் விட்டது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஒரு மாவட்டத்தில், அதாவது கோவை மாவட்டத்தில் 40 சத விகிதம் அதிகமாக மழை பெய்திருக்கிறது, இன்னொரு மாவட்டத்தில் குறைந்துபோய் விட்டது, ஆனால் மூன்று லட்சம் டன் உணவு அதிகமாக எதிர்பார்க்கிறோம் என்று சொல்லப்படுகிறது.

சாகுபடி கணக்கை எப்படி தயாரிக்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அதாவது ஜனவரி மாதத்தில் சாகுபடி கணக்கு எடுக்கப்படுகிறது. அப்பொழுது இரண்டாவது பயிர் நடவு ஆகிறது. அந்த சமயத்தில் சாகுபடி கணக்கு எடுக்கும்போது இரண்டாவது சாகுபடியும் நல்ல முறையில் இருக்கும் என்று நினைத்துக்கொண்டு நன்றாக விளைந்து விட்டதாக கணக்கு கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டுதான் மூன்று லட்சம் டன் உணவு எதிர்பார்க்கிறோம், அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில்தான் திட்டத்தை அழகாக தயாரித்திருக்கிறார்கள். உணவு உற்பத்தி அதிகமாக பெருகிவிட்டது, ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் சென்ற ஆண்டைவிட இரண்டு லட்சம் டன் அதிகமாகி இருக்கிறது என்று சொல்லப்படுகிறது : ஆனால் வாழ்க்கைத்தரம் உயர்ந்து இருக்கிறதா என்று பார்த்தால் 1956-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் 377 ஆக இருந்தது, அது மிகவும் உயர்ந்து 1957 ஜனவரியில் 495 ஆக இருந்தது, அதன் பின் 1957 டிசம்பரில் 512 ஆக உயர்ந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இப்படி எந்த விதமாக கணக்குப் போடுகிறார்களோ என்னமோ தெரியவில்லை. ஒரு பக்கத்தில் உணவு உற்பத்தி அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு இன்னொரு பக்கத்தில் வாழ்க்கைத்தர புள்ளி விவரம் உயர்ந்து கொண்டு வருகிறது என்றும் சொல்லுகிறார்கள். . . .

SRI A. VEDARATHNAM : On a point of information, வருஷத்திற்கு ஒரு தடவை கணக்கு வருகிறது. . .

SRI T. T. DANIEL (Temporary Chairman) : The hon. Member Sri S. M. Annamalai is not yielding.

SRI S. M. ANNAMALAI : ஆகவே இந்த அளவில் இருக்கிறது சர்க்காருடைய புள்ளிவிவரங்கள். ஆகவே உணவு உற்பத்தியின் பயன் என்ன ? ஆனால் இன்னொரு இடத்தில் சொல்லுகிறார்கள், விலைவாசிகள் ஸ்திரமாக இருக்கிறது என்று. இன்னும் விலை இறங்குமுகமாக இருக்கிறது என்று கூடச் சொல்லுகிறார்கள். இதையும் கொஞ்சம் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் சொல்லுகிறார்கள் ; " இருந்த போதிலும் நாம் இன்னும் நிலைமையை விழிப்புடன் கவனிக்க வேண்டிய அவசியம் இருந்து வருகிறது " என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நான் கேட்கிறேன், அவர்கள் இது வரையிலும் தூங்கிக் கொண்டிருந்தார்களா என்று, இப்பொழுது விழித்துக்கொள்வதற்கு. சாகுபடி நல்ல நிலைமையில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். சென்ற வருஷத்தில் ஒரு மூட்டை நெல்லின் விலை என்ன இந்த ஆண்டின் நெல் விலை என்ன என்பதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இவர்களுடைய புள்ளி விவரங்கள்படி மூன்று லட்சம் டன் அளவு உணவு உற்பத்தி பெருகுமென்று எதிர் பார்க்கிறோம் என்று சொல்லுகிறார்கள். சென்ற வருஷம் இதே காலத்தில் கிச்சிலி சம்பா நெல் மூட்டை ஒன்று 22 அல்லது 21½ ரூபாயாக இருந்தது. ஆனால் இந்த வருஷம் 28 ரூபாயாக உயர்ந்து விட்டது. இருந்த போதிலும் உணவு அதிகமாக பெருக்கியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள்.

SRI R. SWAMINATHA MERKONDAR : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். " தூங்கிக்கொண்டு இருந்தார்களா " என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார், இது பார்லிமென்டரியா என்று கேட்கிறேன்.

SRI T. T. DANIEL (Temporary Chairman) : It is parliamentary.

SRI S. M. ANNAMALAI : அடுத்தபடியாக நீர்ப்பாசனம். நடப்பு ஆண்டைவிட வரும் ஆண்டிற்கு 117 லட்சம் ரூபாய் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் பெரிய திட்டங்கள் எல்லாம் அனேகமாக நிறைவேற்றப்பட்டுவிட்டன, இனிமேல் நம் நாட்டில் பெரிய திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு இல்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பெரிய திட்டங்கள் என்றால் உணவு உற்பத்தியை அதிகமாக பெருக்க வேண்டும் என்பதற்காகத்தான். நான் ஒன்று கேட்கிறேன், இப்பொழுது மினிமம் காரண்டியை அக்ரிமெண்ட் பிரகாரம் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். ஒரு குதிரை வேகத்திற்கு கொடுக்க வேண்டிய 50 ரூபாய் கூட கொடுக்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். இந்த நிலையில் பெரிய திட்டங்களுக்கு என்று ஒதுக்குவதில் குறைவாக ஒதுக்கப்பட்டுள்ள இந்த 117 லட்சம் ரூபாயை ஏன் இந்த விவசாயிகளுக்கு உபயோகப்படும் முறையில் சப்சிடியாகக் கொடுத்து இன்னும் அதிகப்படியான பம்பு செட்டுகளை அவர்களுக்கு வழி செய்யக்கூடாது என்று கேட்கிறேன். அப்படி வாங்கிக்கொடுத்து நம் மாகாணம் பூராவும் உள்ள நிலங்களை ஏன் விவசாயத்திற்குக் கொண்டு வந்து உற்பத்தியைப் பெருக்க பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று கேட்கிறேன். ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தேழாம் ஆண்டில் வட ஆற்காடு ஜில்லாவில் ஐந்து கிராமங்களுக்கு ஒரு கோடி 72 லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் சாங்க்ஷனாகி அது கைவிடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மந்திரியிடத்தில் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அங்கிருந்து பத்து பர்செண்ட் remuneration வராத காரணத்தால் அந்தத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. பதினெட்டு ஆயிரம் ரூபாய் சப்சிடி தேவை. இந்த 117 லட்சம் ரூபாயிலிருந்து ஏன் அதை எடுத்துக் கொண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்று கேட்கிறேன்.

அடுத்தபடியாக திட்டங்களே இல்லை என்று சொல்லுகிறார்கள். இரண்டு அணைக்கட்டுகள் கட்ட வேண்டும் என்று மந்திரியிடத்தில் சொல்லியிருக்கிறேன். அவைகள் இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆனால் பி. டபிள்யூ.டி. இன்ஸ்பெக்டர் அவர்கள் என்ன சொல்லுகிறார் என்றால், உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டு என்ன எழுதுகிறார் என்றால், கீழே இருக்கிற ஆயத்துக்கள் ஆட்சேபணை செய்வார்களே என்று. இப்படியே பேப்பரில் பதில் வந்திருக்கிறது. அதன் பிறகு இதைப்பற்றி முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களிடமிருந்தும் கவனிப்பதாக



கடிதம் வந்திருக்கிறது. ஆகவே சிறு சிறு நீர்ப்பாசன திட்டங்களை நடத்துவதற்கு இந்த 117 லட்சம் ரூபாயிலிருந்து எடுத்து நடத்துவது சரி இல்லையா ?

அடுத்தபடியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம் அந்தந்த மாவட்டங்களில் சரிவர செலவு செய்யப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். உண்மையில் வட ஆற்காடு ஜில்லாவில் ஹரிஜன வெல்பேர் ஆபீசர் தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் பகல் உணவுக்காக வேண்டி பல லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்களே, அது சரிவர செலவு செய்யப்படவில்லையே, ஒதுக்கி வைத்திருப்பதில் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவிடப்படாமல் அப்படியே இருக்கிறதே என்று கேட்டதற்கு அவர் என்ன சொல்லுகிறார் என்றால் லேபர் பள்ளிக்கூடத்தில் படிக்கிற பிள்ளைகளுக்குத்தான் அது செலவு செய்யப்படவேண்டும், மற்ற பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற தாழ்த்தப்பட்ட பிள்ளைகளுக்கு அதை செலவு செய்ய முடியாது என்று சொல்லுகிறார். மற்ற பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற தாழ்த்தப்பட்ட பிள்ளைகளுக்கும் ஏன் அதை செலவு செய்யக் கூடாது என்று கேட்கிறேன்.

இந்த வருஷம் கல்விக்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தில் ஒதுக்கிய பணத்தில் 57 சத விகிதம் ஆரம்பக் கல்விக்கு செலவிடப்பட்டிருக்கிறது. இந்த வருஷம் ஒதுக்கியிருக்கிற பணத்தில் 54.5 சத விகிதம் செலவிடப்போகிறார்கள். இப்படி இருந்தால் ஆரம்பக்கல்வியில் எல்லோரும் படித்து விட்டார்களா என்பதைக் கேட்கிறேன். அவ்வளவு மக்களும் படித்து விட்டார்களா ? 500 பிள்ளைகள் இருக்கக்கூடிய கிராமங்களில் எல்லாம் ஒரு பள்ளிக்கூடம் அமைத்து விட்டதாக அமைச்சர் சொன்னார்கள். அதே சமயத்தில் நம்முடைய தோழர் ப. உ. ஷண்முகம் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போது ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க உத்தரவு அனுப்பியிருக்கிறோம், அதைப்பற்றி கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் அங்கே பள்ளிக்கூடம் திறக்கப்படவில்லை. என்னுடைய தொகுதியில் கூட, வந்தல் என்ற கிராமத்தில் கட்டிடம் கட்டியிருந்தும் அப்பள்ளி திறக்கப்படவில்லை என்று செலவிடப்படும் பணத்தை குறைத்து வருகிறார்கள். ஆரம்பக் கல்வியில் 5 பர்செண்ட் குறைவாக இந்த ஆண்டு செலவிடப் போகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஏன் ?

அதற்கு அடுத்தபடியாக ஆரம்ப ஆசிரியர்களுடைய நிலைமையைப்பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. என் தொகுதியிலுள்ள பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு பகல் உணவு கொடுக்கப்பட்டு வருகிறது. ஒரு தடவை அதை சுற்றிப் பார்த்துக்கொண்டு வரும்போது ஒருவர் ஒரு குறையை சொன்னார். அப்பொழுது அன்றைய சாப்பாடு என்ன என்று கேட்டோம். அன்றைய சாப்பாட்டிற்கு சுரைக்காய் சமையல் செய்யப்படும் என்று சொன்னார்கள். அந்த சுரைக்காய் எங்கே என்று கேட்டதற்கு அதை ஆசிரியர் எடுத்துக் கொண்டுபோய் சமையல் செய்து விட்டார் என்று சொன்னார்கள். அதைப்பற்றி ஆசிரியரைக் கேட்டதற்கு அவர் என்ன சொன்னார் என்றால் என் வீட்டுக்கு சமையல் செய்வதற்கு வேண்டிய பதார்த்தம் இல்லை. அதனால் அதை எடுத்துக்கொண்டு போய்விட்டேன் என்று சொன்னார். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் ஆசிரியரைப்பற்றி குறை கூறுவதற்கு இல்லை. அங்குள்ள ஆசிரியர்களின் நிலைமை அப்படி இருக்கிறது என்று சொல்வதற்குத்தான் இதை எடுத்துக் கூறுகிறேன். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் போதாமல் அவர்கள் சுரைக்காயை எடுத்துக்கொண்டு போகக்கூடிய அளவில் அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படுகிறது என்பதைக் காட்டுவதற்குத்தான் இதை எடுத்துச் சொன்னேன். அதனால் அவர்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும். பணம் இல்லை, பணம் இல்லை, என்று சொல்வதில் பிரயோ 3-20 p.m. சனம் இல்லை. உண்மையில் பார்க்கப்போனால் ஆசிரியர்கள் இந்நாட்டில் வாழக்கூடியவர்களாக, வாழ தகுந்தவர்களாக, வாழ்க்கையை நடத்த லாயக்குடையவர்களாக அந்த அளவில் நாம் அவர்களை நடத்தவில்லை. பிச்சை எடுத்த பொருளைக் கூட தங்கள் சுயநலத்திற்கு, தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காக வேண்டி மறைத்து எடுத்துச் சென்று உணவு அருந்தக்கூடிய அவல நிலை இருக்கிறதென்றால், இந்த வரவு செலவுத்

திட்டத்தை நாங்கள் எப்படி ஆதரிக்க முடியும்? காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் பேசும்போது, சிலர் வேண்டுமென்றே குறை கூறுவதாகச் சொல்கிறார்கள்; புள்ளி விவரம் கொடுக்காமல் குறை சொல்கிறார்கள் என்று. நாங்கள் சொல்கிற குறைகளை 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க் கணி' என்று சொல்வதைப் போல், நீங்கள் நடு நிலையில் நின்று ஆராய்ச்சி செய்தால், இது உண்மையா இல்லையா என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள் என்று கூறிக்கொண்டு, இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் ஆதரிக்கவில்லை என்றும் கூறிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM:** சபைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை மனமார வரவேற்று நான் சில வார்த்தைகள் குறிப்பிட ஆசைப்படுகிறேன். நமது தேசம் ஒரு பரந்த தேசம். அதிக ஜனத்தொகை உள்ள தேசம். இந்தத் தேசம் 200 ஆண்டுகளாக அடிமைப்பட்டு கவனிக்கப்பட்டு வராமல் இருந்துவந்த தேசம். சுதந்திரம் கிடைத்து இந்தப் பத்து ஆண்டுகளாக நாம் கவனிக்க ஆரம்பித்திருக்கிறோம். இந்தக் குறுகிய நேரத்திலே எத்தனையோ துறைகளிலே நாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். அதை இல்லை என்று மறுக்க ஒருவராலும் இயலாது என்று நான் நினைக்கிறேன்.

இந்தக் குறுகிய காலத்திலே நமது நாட்டில் எத்தனையோ பிரச்னைகளைத் தீர்த்து முன்னேற்றம் காணுவதற்குப் பல திட்டங்களைத் தீட்டி அத்திட்டங்களை உருவாக்குவதற்குச் செயலாற்றி வருகிறோம். இந்தக் காலையிலே அவைகளை உணராமல், 'பல குறைகள் இருக்கின்றன, பல குறைகள் இருக்கின்றன' என்று பல்லவி பாடுவதைப் பார்த்தால் மிகவும் விந்தையாக இருக்கிறது. ஏனென்றால், நமது நாட்டில் விவசாயம் ஓங்கி வளரவேண்டும், உற்பத்தி அதிகரிக்க வேண்டும், தொழிற்சாலைகள் ஓங்க வேண்டும் என்றால் நாமெல்லோரும் சேர்ந்து பாடுபட்டால்தான் அவைகள் வளர முடியும், உற்பத்தி பெருகினால்தான் முடியும், அதிலிருந்துதான் நமது நாட்டிலிருக்கும் ஏழ்மையையும் வறுமையையும் போக்கமுடியும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்கமுடியும், கல்வியின்மையையும் போக்கமுடியும். அதையெல்லாம் கவனிக்காமல் இந்த வரவு செலவு திட்ட அறிக்கையானது ஏழ வழப்பாக இருக்கிறது, முந்தைய ஆண்டைப் போலத்தான் இருக்கிறது, புதிய சமாசாரம் ஒன்றும் இல்லை என்று குறை சொல்லப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் தெரிவிக்கப்படும் குறைகளை நிவர்த்திக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை வகுக்கின்றோம். புதிய திட்டங்கள் காணப்படவில்லையென்றால் அதற்குக் காரணம் என்ன? நமக்குத் தேவை அதிகம். ஜனத்தொகை அதிகம். இந்தத் தேசத்திலே நமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்குப் பல ஆண்டுகள் வேண்டியிருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டிலும் அதற்கான திட்டங்களை நாம் வகுக்கிறோம். அப்படியேதான் இந்த ஆண்டிலும் நிதி நிலை அறிக்கையை நமது நிதி அமைச்சர் அவர்கள் சபை முன் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதனுடைய பெருமையெல்லாம் தெரியாமல் 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்று சொல்வார்கள். அதைப்போலவே, 'வட நாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது' என்று சொல்லிச் சொல்லி நமது திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களுடைய மனம் அறண்டு போய் இருக்கிறது. அதனால் தான் நமது நாட்டிலே, அதுவும் தமிழ் நாட்டிலே எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருந்தாலும், அந்த அறண்ட கண்களுக்கு அந்த முன்னேற்றத்தைக் காணுவதற்கு முடியவில்லை. எனவே, நந்தனார் சரித்திரத்திலே 'பித்தம் தெளிய மருந்தொன்று இருக்கிறது' என்று ஒரு பாட்டு வரும். அதைப் போலவே, அவர்கள் சித்தம் தெளிய நம் நிதி அமைச்சர் அவர்கள் ஒரு மருந்தைத் தேடுவாரானால், அவர்களுடைய சித்தம் தெளிந்து, 'வட நாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது' என்ற பல்லவியைப் பாடாமல் இருப்பதோடு, அவர்கள் கண்ணுக்கு நமது நாட்டினுடைய நலனும் முன்னேற்றமும் தென்படும். இன்றைக்கு அவர்கள் எப்படி வட நாடு வாழ்வதைப் போலும், தென்னாடு தாழ்வதைப் போலும் நினைத்துக்கொண்டிருக்கிறார்களோ, அந்தக் காட்சி மாறி, வடநாட்டை





விட தென்னாடு இன்னும் சில துறைகளில் அதிகமாகவே வாழ்கிறது என்று காட்சியை அவர்கள் காணுவார்கள் என்று நிதி அமைச்சர் அவர்களிடம் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நமது நாட்டின் முன்னேற்றத்தை நாம் சினிமாவில் காண்கின்ற காட்சியைப்போல் அடைந்துவிட வேண்டுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள்போல் எனக்குத் தோன்றுகிறது. உண்மையிலேயே இரண்டு மணி நேரத்திலே ஒரு பெரிய பணக்காரன் ஏழையாகவும், ஒரு ஏழை பணக்காரனாகவும் மாறிவிடுகிறான். மேலும், தெய்வ லோகத்திலே சௌக்கியமாக இருப்பவன் பூலோகத்தில் வந்து கஷ்டப்படுகிறான், பூலோகத்தில் இருப்பவன் தெய்வலோகத்திற்குப் போய் சுகப்படுகிறான். இப்படிப்பட்ட காட்சிகளெல்லாம் சினிமாக் காட்சியில் திடீர் திடீர் என்று காண்கிறோம். அதைப்போலவே நமது முன்னேற்றத்தையும் ஒரு மணி நேரத்திலோ ஒரு வருஷத்திலோ காணவேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும். அவ்வாறெல்லாம் சினிமாக் காட்சிகளைப் போல் நமது நாட்டினுடைய காட்சிகளையும் காணவேண்டுமென்று நினைப்பார்களானால் அது சரியாகாது என்பதை நான் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். செயல் மூலமாகத்தான் முன்னேற்றத்தைக் காணமுடியும் திட்டங்கள் மூலமாகத்தான் காணமுடியும்; உழைப்பு மூலமாகத்தான் காணமுடியும் என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த அறிக்கையில் சில புதிய வரிகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வரிகளைக் கூறும்போது, விவசாய வருமானத்தின் பேரிலும் வரி விதிக்கப் போவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். என்றாலும், இதில் ஒரு திருத்தமும் செய்யலாம் என்பது எனது ஒரு நோக்கம். விவசாய வருமானம் 3,000 ரூபாய் மாத்திரம் இருந்தால் அதன்பேரில் வரி விதிப்பது நியாயமாக இருக்கும். விவசாய வருமானத்தோடு இதர வருமானத்தையும் கூட்டிக்கொள்ள வேண்டுமென்று அடுத்து குறிப்பிட்டிருக்கிறது. எனவே, விவசாய வருமானத்தை மூவாயிரம் என்று கொண்டு, இதர வருமானம் எதையும் சேர்க்காமல் இருந்தால் அது ஒரு நியாயமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

மேலும், மதுவிலக்கை நாம் எப்படிக் கொண்டு வந்தோமோ அதைப் போலவே, குதிரைப் பந்தயத்தையும் ஒழிக்கவேண்டுமென்று கனம் அங்கத்தினர் திரு. அன்பழகன் அவர்கள் கூறினார்கள். குதிரைப் பந்தயத்தை மாத்திரம் அல்ல, சினிமாவையும் ஒழிக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும். காரணம் கலை ஒழிக்கப்படவேண்டும் என்பது அல்ல. அது எப்படியும் அழிந்துபோகாது. குதிரைப் பந்தயம் பல மக்களை மிகவும் கீழான நிலைமைக்குக் கொண்டு போகிறது என்பதைக் கூறினார்களே அதைப் போலவே சினிமாவிலும் போதைதரக்கூடிய பல காட்சிகள் வருகின்றன. அந்த போதை தரக்கூடிய காட்சிகளானது நீக்கப்படவேண்டும். கலை வளர்ச்சிக்காக சினிமா நடந்தால் அதனை நாம் வரவேற்க முடியும். போதை தரக் கூடிய காட்சிகள் மனிதனை மனிதனாக வாழவிடாமல் மனிதனை மாக்களாக வாழும்படிச் செய்கிறது. ஆகையால், சென்சார் போர்டார் அவர்கள் அப்படிப்பட்ட காட்சிகள் அமையாதவாறு கவனித்துக்கொள்ள வேண்டும் என்பதை இந்தச் சட்டப் பேரவையிலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நமது எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் எல்லாம், அரசாங்கத்தினுடைய புள்ளி விவரங்களைக் காட்டி, பல குறைகள் இருக்கின்றன, புள்ளிவிவரங்கள் சரியாக இல்லை என்று வாய் கூசாமல் பேசுகிறார்கள். அப்படி அவர்கள் பேசுகிறவர்கள், தாங்கள் சொல்கிற புள்ளிவிவரங்கள் எல்லாம் சரியானவை என்று எந்த நம்பிக்கையின் பேரில் சொல்கிறார்கள் என்பது எனக்குப் புரியவே இல்லை. அவர்கள் கோடி கோடியாக புள்ளி விவரங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இந்தச் சர்க்காருடைய புள்ளி விவரங்களைத் தவிர மற்றவர்களுடைய புள்ளிவிவரங்கள் எப்படி சரியாக இருக்க முடியும் என்பதை என்னால் நம்ப முடியவில்லை.

உதாரணமாக, ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன், கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கிறது என்றும், அதனுடைய புள்ளி விவரங்களை

சென்ற கூட்டத்திலே அமைச்சர் அவர்கள் கூறும்போது கூட்டுறவு சங்கத்தில் நெசவிக்கப்படுவது ஒரு கோடி கஜம் என்றும், ஆனால், 40 சத விகிதம் தான் கூட்டுறவு சங்கம் மூலம் உற்பத்தி ஆகிறது என்றும், அதற்கு வெளியிலே உற்பத்தி செய்திருப்பவர்களுடைய தொகை ஒன்றரை கோடி கஜம் இருக்கலாம் என்றும், ஆகமொத்தம் இரண்டரை கோடியாக இருக்கலாம் என்றும் நமது தொழில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், இதையே நேற்று கனம் அன்பழகன் அவர்கள் பேசும்போது ஐந்து கோடி என்று கூறினார்கள். இப்படியாக, புள்ளிவிவரங்களை நாம் கோடி கோடியாக உயர்த்திக்கொண்டே போய், தவறான புள்ளி விவரங்களை நாம் சட்டப் பேரவையிலே கூறுகிறோம் என்றால் வெளியிலே சென்று பாமர மக்களிடம் இன்னும் எத்தனை கோடியைச் சேர்த்துக்கொண்டு போவார்களோ என்பதுதான் எனக்கு ஐயமாக இருக்கிறது. மேலும்,
3-30 p.m. கைத்தறிப் பிரச்னை வரும்போது கரை போட்ட வேஷ்டி, கரை போட்ட சேலை இவற்றை கைத்தறிக்கே ஒதுக்கிவிடவேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். நாங்கள் சொல்கிறோம் என அவர்கள் சொல்கிறார்கள். ஸ்ரீ ராஜாஜி முதல் மந்திரியாக இருந்தபோது, இந்த திராவிட முன்னேற்றக் கழகம் சட்டப் பேரவைக்கே வராத காலத்திலேயே, இந்த முடிவை காங்கிரஸ் அரசாங்கம் செய்திருக்கிறது. ஆகவே அந்தப் பெருமை அவர்களுக்குக் கிடைக்காது என்று நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன். வேண்டுமென்றால் இவர்கள் தங்கள் கட்சியின் பிரசாரத்திற்காக தாங்கள் தான் இதை முதலில் சொன்னோம் என்று சொல்லிக் கொள்ளலாம்.

இன்னொன்றை நான் இங்கே கூறிக்கொள்ள நினைக்கிறேன். நமது நாட்டிலே விவசாயத்திற்கு அடுத்தபடியாக நிறைய தொழிலாளர்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவர்களுடைய நிலைமை பற்றியும் வரவு செலவுத் திட்டத்தில் காணப்படுகிறது ஆனாலும் இன்னமும் அவர்களை கவனிக்கவேண்டுமென்பது என் கோரிக்கை. மில் தொழிலாளிகளுக்கு பலவிதமான வசதிகளை சர்க்கார் செய்து தர முடிகிறது, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் அநேக வசதிகளை சர்க்காரால் செய்துதர முடிவதில்லை. அந்தத் தொழில் சிக்கலான தொழில். அவர்களுக்கு சம்பளம் நிர்ணயிக்கப்பட முடியாது. மிகவும் பிற்பட்ட நிலையில் பல நெசவாளர் குடும்பங்கள் இன்றைய தினம் இருப்பதனால் அவர்களுடைய குழந்தைகளுக்கும் கல்விச் சலுகை அளிக்கவேண்டும் என்று நான் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஒரு நாளைக்கு பன்னிரண்டு மணி நேரம் அவர்கள் வேலை செய்தாலும் சாப்பாட்டுக்கு, வயிற்றை நிரப்பக்கூட வழியில்லை. மேலும் அந்தக் குடும்பத்தில் ஒருவன் வேலை செய்தால் போதாது. அவன் மனைவி, இரண்டு குழந்தைகள், அவன் தாயார் ஆகிய எல்லோரும் வேலை செய்தால்தான் 60 ரூபாய் வருமானமாவது ஒரு மாதத்திற்கு மொத்தத்தில் வரும். அந்த 60 ரூபாயைக் கொண்டு வீட்டு வாடகை கட்ட வேண்டும், தறி வாடகை கட்டவேண்டும். அதனால் தான் அவர்களுடைய குழந்தைகளுக்கு பத்தாவது வகுப்பு வரையில் கல்விச் சலுகையாவது அளிக்கவேண்டும் என்பதாக நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்யாவிட்டால் அவர்களுடைய குழந்தைகளின் கதி நிர்க்கதியாகிவிடும். அந்தப் பரம்பரையினரை மிகவும் பிற்பட்ட இனத்தவர்களோடு கூட சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் என் பேச்சை, அகண்ட பாரதம் வாழ்க, அகண்ட பாரதம் ஓங்குக என்று வாழ்த்திக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : கனம் அம்மையார் அவர்கள் பேசும்போது சினிமாவை ஒழிக்க வேண்டுமென்று சொன்னார்கள். முதற்படியாக சர்க்கார் தயாரிக்கும் செய்திச் சினிமாவை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : சினிமாவை ஒழிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. சினிமாவில் வரும் போதை தரும் காட்சிகள் அறவே ஒழிக்கப்பட வேண்டுமென்றுதான் சொன்னேன்.





SRI M. RAMACHANDRA REDDI : அன்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, இன்று நம் சபையில் 58-59-ம் ஆண்டுக்கு நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டத்தை மனப்பூர்வமாக ஆதரித்து அதே சமயத்தில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கு எடுத்துச் சொல்லவும் முற்படுகிறேன். இந்த சமயத்தில் ஒன்று சொல்லிக் கொள்ளவும் ஆசைப்படுகிறேன்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர்கள், ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் எல்லாம் கூட இந்த வரி மசோதாவை எதிர்க்கின்றார்கள் என்று சொல்வதன் மூலம் சந்தர்ப்பத்தை தங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறார்கள். நாங்கள் அவர்களைப்போல எதற்கு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் எதிர்க்கின்ற கொள்கை உடையவர்கள் அல்ல. எங்கள் மனதில் படுகின்ற உண்மைகளை எடுத்துச் சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறோம். அமைச்சர் அவர்களும் தாராளமாக எங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல அனுமதி அளித்திருக்கிறார்கள். நாங்கள் சொல்கிற நியாயமான விஷயங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளவும் தயங்கியது இல்லை. மேலும் அவர்களும் நாங்கள் சொல்கிற கருத்துக்களில் தவறு இருந்தால தங்கள் பதிலில் எடுத்துச் சொல்லும்போது நாங்களும் திருத்திக்கொள்கிறோம். எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்களைப்போல வெள்ளையை எல்லாம் கறுப்பு என்று சொல்லும் மனப்பான்மை உடையவர்கள் நாங்கள் அல்ல என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்தை ஒரு கோடியே 30 லட்சம் பற்றாக் குறையாக நிதி அமைச்சர் அவர்கள் தயாரித்திருக்கிறார்கள். நமது ராஜ்யத்தைப் போன்ற பெரிய ராஜ்ய நிர்வாகத்தில் இந்தப் பணம் துண்டு விழுவது சர்வசாதாரணம். சென்ற ஆண்டு பட்ஜெட்டில் கூட 3 கோடி சொச்சம் துண்டு விழுந்தது. (இச் சமயத்தில் கனம் சபாநாயகர் வந்து அமர்ந்தார்.) அது இறுதியில் 5 லட்சம் உபரியாக முடிந்திருக்கிறது. ஜில்லா நிர்வாகத்தில் நாங்கள் அதிகப்படியான மூலதனச் செலவுகளைக் காட்டி பற்றாக்குறை பட்ஜெட்டைத் தயாரித்து சர்க்காரிடம் இருந்து கடன் வாங்குவோம். அப்படி நமது பட்ஜெட்டை பற்றாக்குறையாகக் காட்டி மத்திய அரசாங்கத்திடமிருந்து பணம் வாங்கவும நிதி அமைச்சர் யோசனை செய்து இப்படித் தயாரித்திருக்கலாம். நிதி அமைச்சர் அவர்கள் நல்ல திறமை உடையவர்கள். நன்றாக பொறுப்புடன் நிர்வாகம் செய்யக்கூடியவர். மலை அசைந்தாலும் கூட அவரது குணமும் மனமும் அசையாது. அப்படியிருந்தாலும் கூட கொஞ்சம். தயவோடு விவசாயிகளிடத்தில் தயை காட்டியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். விவசாயிகள் என்று நான் குறிப்பிடுகிறபோது பெரிய விவசாயிகளை வேலிக் கணக்கில் வைத்திருக்கிறவர்களை மனதில் கொண்டு பேசவில்லை. சிறு விவசாயிகளை, நடுத்தர குடும்பங்களை நினைத்துக் கொண்டு பேசுகின்றேன். எனக்குத் தெரியும், எத்தனையோ விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நில வருமானம் போதாமல் நகரங்களுக்கு உத்தியோகத்திற்கு வருவதும், வியாபாரம் செய்வதும் நமக்குத் தெரியாயாதது அல்ல. அவர்களுக்கு நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம் மாத்திரம் குடும்பத்தை நடத்தப் போதாது. விவசாய வருமான வரி விதிப்பதாகச் சொல்லும்போது மொத்த வருமானம் என்று சொல்கிறார்கள். மொத்த வருமானம் என்று சொல்வதைவிட நிகர வருமானம் என்றால் குடும்பச் செலவு போக மிச்சமிருந்தால் வரியை வாங்கிக் கொள்ளலாம்.

அப்படி மொத்த வருமானம் என்று பார்க்கும்போது இதர தொழில்களில் இருந்து அவர்களுக்குக் கிடைக்கும் வருமானத்தையும்கூட கணக்கில் எடுத்துக்கொள்ள நேரிடும். இதனால் அநேகம் பேர்கள் பாதிக்கப்படுவார்கள். அதற்காக இப்போது வரி வசூல் செய்ய ஆபீசர்கள் வேறு நியமிக்கப்பட வேண்டும். அதனால் பல தொல்லைகள்தான் அதிகரிக்கும். இப்போதே வருமான வரி அதிகாரிகளால் ஏற்படுகிற தொல்லை கணக்கு வழக்கு இல்லை. அட்வான்சாக வாங்குவதும், நினைத்தால் கணக்கைக் கொண்டு வரும்படி அவர்கள் இருக்குமிடத்திலிருந்தே உத்தரவு பேடுவதும் நமக்குத் தெரியாதது அல்ல. பெரிய பெரிய விவசாயிகளிடமிருந்து வரி வசூல் செய்தாலும் பரவாய் இல்லை. இப்போது சர்க்கார் போட

உத்தேசித்திருக்கும் வரித் திட்டத்திளுல் அநேக சாதாரண விவசாய
குடும்பங்கள் பாதிக்கும்படி நேரிடலாம். ஆகவே இந்த வரியைக் கைவிட்டு
விட்டு இதைச் சரிக்கட்ட ஏதேனும் வேறு உபாயங்களைக் கையாளலாம்.

—40 ஆகவே, அதைக் கையாண்டு இந்த வரியை இல்லாமல் செய்வதுதான்
ரொம்பப் பொருத்தமானது என்பதுதான் என்னுடைய தாழ்மையான
அபிப்பிராயம். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், ஒரு எழுத்துப்
பிழை இருக்கிறதென்று நான் நினைக்கிறேன். "1958–59-ம் ஆண்டின்
வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி நமக்கு 62 கோடியே 40 லட்ச
ரூபாய் வருவாய் கிடைக்குமென்றும் 63 கோடியே 25 லட்ச ரூபாய் செலவு
ஏற்படுமென்றும், ஆகவே 1 கோடியே 35 லட்சம் துண்டு விழுமென்றும்
எதிர் பார்க்கிறோம்" என்று உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (கனம்
ஸ்ரீ ஸி. சுப்பிரமண்யம் : அது, அச்சுப் பிழை) அச்சுப் பிழை என்றுதான்
நான் முன்பே நினைத்தேன். நமக்கு இப்பொழுதே உபரி வருகிறது
என்பதால், இந்த வரியை இல்லாமல் செய்து விடலாம். அடுத்தபடியாக,
கிராமங்களில் வாழ்கிறவர்களில் ஒரு பகுதி யாரையும் நம்பாமல், அதாவது
யாருடைய ஆதரவும் இன்றி தங்கள் சுய வருமானத்தைக் கொண்டே
வாழ்கிறார்கள். மாதம் 200 ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு உத்தி
யோகஸ்தரால் எப்படி வாழ்க்கை நடத்த முடிகிறதோ அதே போன்றுதான்
3,000, 4,000 ரூபாய் நிகர வருமானம் வருகிறவர்களாலும் வாழ்க்கை
நடத்த முடிகிறது. அவர்களுக்கு சர்க்காரில் இருந்து எந்த விதமான
உதவியும் கிடைப்பதில்லை. சாதாரண ஒரு பிரஜை எப்படி, எவ்வளவு
எவ்வளவு வரி செலுத்துகிறானே அதே வரியைத்தான் இவர்களும்
செலுத்துகிறார்கள். அதோடுகூட ஒரு வருடத்தில் பஞ்சம் ஏற்பட்டுவிட்டால்,
அந்த பஞ்சத்தில் அடிபட்ட கஷ்டம் தீர வேண்டுமென்றால் அவர்கள்
நான்கு வருஷங்கள் சுபிட்சமாய் வாழ வேண்டும். 49-ல் இருந்து 56 வரை
யில் தொடர்ந்து பஞ்சம் இருந்து வந்தது. அதனால் விவசாயிகள் பட்ட
கஷ்டத்தை சொல்லி முடியாது. அப்பொழுது அவர்கள் பட்ட கடன்
இன்னும் தீர்ந்தபாடில்லை. விவசாயக் கடன் எவ்வளவு இருக்கிறது என்
பது சர்க்கார் புள்ளிவிவரங்களில் இருந்து தெரியும். அவர்களுக்கு
10 சத விகிதம்தான் சொஸைட்டி மூலம் கொடுக்கிறார்கள். விவசாயி
களுக்கு இந்தக் கடன் எப்படி வந்தது என்றால், அவன் பயிர் விளைந்
தாலும் விளையாவிட்டாலும் வரி செலுத்தித்தான் ஆக வேண்டியிருக்கிறது.
மணிகண்டசாவி என்ற அளம் இருக்கிறது. அதில் இரண்டரை அவுட்
டேர்ன் இருந்தாலே போதும் தீர்வை வசூலிக்கப்படும். அதற்கு ரெமிஷன்
கிடையாது. ஆகவே நில வருமானம் நமக்கு கூடுதல் வந்தாலும் இன்னும்
கூடுதலாக வர வழியிருக்கிறது. நான் குறிப்பாகச் சொல்கிறேன். இந்த
செட்டில்மென்ட் ஆபீஸை எடுத்துவிட்ட பிறகு நிலங்களின் சேர்ப்பு எந்த
மாதிரியாக இருக்கிறது என்பது தெரியவில்லை. ஆகவே ரீ செட்டில்
மென்ட் ஆபீஸை நிறுவி லாண்ட் கிளாஸிபிக்கேஷன் செய்ய வேண்டும்.
இப்பொழுது புஞ்சை நஞ்சையாக மாறுகிறது. மின்சார வசதி கொண்டு
விவசாயம் செய்யப்படுகிறது. நஞ்சை சாகுபடி உயர்வு அடைய முடிகிறது.
அப்படிப்பட்டவர்கள் இடமிருந்தும் புஞ்சைத் தீர்வை வசூலிக்கப்படுகிறது.
(பெல்) அதை எடுக்க முயலவில்லை, இலாகா. ஆகவே இவைகளில்
எல்லாம் இந்த இலாகா நல்ல முறையில் ஒழுங்கு படுத்த வேண்டிய
நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி
பல துறைகளிலும் நமக்கு சீர்திருத்தம் வேண்டியிருக்கிறது. அடுத்த
படியாக, எங்கள் ஜில்லாவில், வட ஆற்காடு ஜில்லாவில் உள்ள சாலை
அபிவிருத்திப்பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அங்கு ரோடு
பராமரிப்பு நல்ல முறையில் நடக்கவில்லை. (பெல்) மத்திய சர்க்காரி
லிருந்தும், மாகாண சர்க்காரிலிருந்தும் ரோடுகளுக்காக செலவு செய்யப்
படுகிற பணம் சரிவர பங்கிடப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்களின்
கவனத்திற்கு கொண்டு வருவதோடு அதற்கு வேண்டிய நடவடிக்கைகள்
எடுக்கவேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எங்கள்
ஜில்லா, 11 தாலூகாக்களைக் கொண்ட ஒரு ஜில்லாவாகும். அங்கு அபி
விருத்தி கம்மியாக இருக்கிறது. சென்ட்ரல் ஹைவேஸ்-ல் இருந்து மைல்
ஒன்றுக்கு 4,000 ரூபாய் அலாட் செய்கிறார்கள். அதில் 2,000 ரூபாய்தான்
கிடைப்பது. அதே மாதிரி ப்ரொவின்ஷியல் ஹைவேஸ்-ல் இருந்து மைல்





ஒன்றுக்கு 2,000 அலாட் செய்தால் கிடைப்பது ஆயிரந்தான். ஆக, அங்கு
ரோடு அபிவிருத்தி நல்ல முறையில் நடக்கவில்லை. (இச்சமயத்தில் கனம்
சபாநாயகர் அடுத்த மெம்பரை பேசுவதற்கு கூப்பிட்டார்.)

**Sri M. D. RAMASAMI** : கனம் அவைத் தலைவர் அவர்களே,
நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட் மீது நான் ஒரு சில
வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னால் சமீபத்தில்
பேசிய லக்ஷ்மீகாந்தம் அம்மையார் அவர்கள் கைத்தறித் தொழிலைப்
பற்றி மிகவும் விளக்கமாகவும் உருக்கமாகவும் பேசினார்கள். அவர்கள்
சொன்னார்கள், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் நிலைமை மிகவும்
மோசமாக இருக்கிறது, என்று. ஒரு குடும்பத்தில் நான்கைந்து பேர்கள்
சேர்ந்து தொழில் செய்தால்தான் மாதம் ஏறக்குறைய 60 ரூபாய் கிடைக்கும்
என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன தொகை உண்மையிலே
மிகவும் உயர்ந்ததாகும். நாலைந்து பேர்கள் சேர்ந்து வேலை செய்தால்
அவர்களுக்கு 20 ரூபாய் தான் கிடைக்கிறது, என்பதை நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். நெசவுத் தொழிலாளர்கள் படும் அவதி கொஞ்ச
நஞ்சமல்ல. அவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். இந்த சபையில் எல்லோரும்
ஒரு மனதாக சொல்லும் ஒரு கருத்து உண்டானால், அது, நெசவாளர்
களின் நிலையை உயர்த்த வேண்டும் என்பதுதான். இந்தக் காரியத்தில்
யாருக்கும் அபிப்பிராய வேற்றுமை கிடையாது. இந்த சட்டசபையில் நம்
மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் இருந்த காலத்தில் இந்த சட்டசபை
ஏகோபித்துச் செய்த தீர்மானம் கைத்தறியைப்பற்றிய தீர்மானமாகும்.
அது மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டது. ஆனால் மத்திய அரசாங்
கத்தில் அப்பொழுது இருந்த, இப்பொழுது ஓய்வு பெற்று வந்திருக்கும்
டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் காலத்தில்தான் அது ஏற்றுக்கொள்ளாமல்
விட்டு விடப்பட்டது. அதற்குப் பிறகு இந்த அரசாங்கம் அது சம்பந்தமாக
எந்த வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. இந்த நாட்டில்
விவசாயத்திற்கு அடுத்தபடியாக உள்ள இந்த கைத்தறித் தொழில்
வாழ வேண்டாமென்று இந்த சர்க்கார் நினைக்கிறதா ? அல்லது அந்தத்
தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் அழிந்து போனாலும் போகட்டும் என்ற
எண்ணம் உடையவர்களாக இருக்கிறார்களா என்று நான் கேட்கிறேன்.
கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் தினம் தினம் தேய்ந்து தேய்ந்து
போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நலனைப் பாதுகாக்க இந்த
அரசாங்கம் ஒருவிதமான ஏற்பாடும் செய்யவில்லை என்று நான் இந்த
அரசாங்கத்தைக் குறை கூற விரும்புகிறேன். அவர்கள் படும் கஷ்டத்தைப்
பற்றி இங்கு எவ்வளவோ தடவைகள் எடுத்துக் கூறியும்கூட அதைப்
பற்றி கவனிக்க சர்க்கார் முன் வருவதாகத் தெரியவில்லை. அப்படி
அவர்களின் நிலையை பாதுகாக்க இவ்வரசாங்கம் முன் வராவிட்டால்,
அம்மக்களை புறக்கணித்த ஒரு குற்றம் இவர்களைத்தான் சாரும். இன்று
எங்கள் நகரை எடுத்துக்கொண்டால், கைத்தறி நெசவுத் தொழிலில்
ஈடுபட்டுள்ள முஸ்லிம் குடும்பங்கள் 500 இருக்கிறது. அவர்கள் அத்தனை
பேர்களும் நெசவுத் தொழிலை விட்டு விட்டார்கள். அவர்களில் 10 பேர்கள்
தான் அங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கூட்டுறவு ஸ்தாபனத்தில் இருக்
கிறார்கள். மற்றவர்கள் அவர்களின் கைத்தறி இயந்திரங்களைக் கூட விற்று
விட்டார்கள். இந்த நிலைமையில் சர்க்காருடைய பொறுப்பை நான் எடுத்துக் 3-50 p.m.
காட்ட விரும்புகிறேன். இதற்கு நியாயம் வழங்க கடமைப்பட்டவர்கள் இதற்கு
முன்னால் ராஜாஜி அவர்கள் செய்த முயற்சியை தொடர்ந்து மத்திய
சர்க்காரை நாம் வற்புறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.
இது இப்போது சாத்தியமாகும் என்று நம்புகிறேன். ஏனென்றால் இதை
ஒப்புக்கொள்ளாதவர் இப்போது வெளியே வந்து விட்டார். அதாவது
இதை ஒப்புக்கொள்ளாத நீதி அமைச்சராக இருந்த திரு டி. டி. கிருஷ்ண
மாச்சாரி அவர்கள் வெளியே வந்துவிட்டார்கள். ஆகவே இந்த சமயத்தில்
இதை வற்புறுத்தினால் மத்திய சர்க்கார் செவி சாய்க்கும் என்று நம்பு
கிறேன். அதற்காக இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவதாக நமது அரசாங்கம் நம்
நாட்டில் சோஷியலிஸ சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்ற எண்ணத்
துடன் வேலை செய்து வருவதாக நாம் கேட்கிறோம். ஆனால் இப்போதுள்ள
இந்த வரி விதிப்பானது அதற்கேற்றதாக அமைந்திருப்பதாகத் தெரியவில்லை.

இன்று நில வருமானத்தின் மீது வரி போடுவதாக உத்தேசித்திருக்கிறார்கள். விவசாயத்திலிருந்து மூவாயிரம் ரூபாய் வருமானம் பெறக்கூடியவர்களிடமிருந்து வரி வசூல் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் ஏழை விவசாயிகளுக்கு என்ன சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். இதில் மூன்று ஏக்கர்கள் நான்கு ஏக்கர்கள் வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு எந்த விதமான சலுகையும் இல்லை. ஒன்றில் இந்த வரியை ஏழை விவசாயிகள் மீது வற்புறுத்தக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். அல்லது, ஒன்றிரண்டு ஏக்கர் வைத்திருக்கக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு இந்த வரி கிடையாது என்று ஒரு சலுகையாவது அளிக்க வேண்டும். ஏதோ சோஷியலிஸ சமுதாயம் ஏற்படுத்துவதற்காக வேலை செய்வதாக சொல்லப்படுகின்றது. வரிகள் போட வேண்டியதுதான், பணக்காரர்களிடத்தில் அந்த வரி போடுவதாயிருந்தால் அதை ஒப்புக்கொள்ளலாம். மேலும் இப்போது 3,000 ரூபாய் வருமானமுள்ள விவசாயிகளிடமிருந்து வரி வாங்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதல்லாமல் தொழிலதிபர்களிடமும் வரி போடப்படுகிறது. அவர்கள் பணம் போட்டு தொழில்கள் ஏற்படுத்தி உற்பத்தி பண்ணுகிறார்கள். அதிலிருந்து கிடைக்கின்ற லாபத்தின் மீது வரி போடப்படுகிறது. இதனால் அவர்களது மூலதனம் கெட்டுப்போவது இல்லை. ஆனால் விவசாயிகள் அப்படியல்ல, விவசாயிகள் மூலதனம் போட்டும் சரியான பலன் கிடைப்பதில்லை. நல்ல மழையில்லாமல் இருந்தால் விவசாயிகள் நஷ்டமடைகிறார்கள். ஆகவே இவ்விதம் 3,000 ரூபாய் என்று உச்ச வரம்பு வைத்திருப்பது அவசியம்தானா என்பதை சர்க்கார் யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இந்த வரி விவசாயிகளுக்கு மட்டுமல்ல, வீடு வைத்திருக்கக்கூடியவர்களுக்கும் போட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. சிலர் பல வீடுகளை வைத்து அவைகளை வாடகைக்கு கொடுத்து அதன் மூலமாக நன்கு சம்பாதித்து வருகிறார்கள். அவர்கள் மீதும் இந்த வரி போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக பப்ளிக் ஹெல்த் என்ற தலைப்பின் கீழ் நகரங்களிலுள்ள வாட்டர் சப்ளைக்காக 60 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அருப்புக்கோட்டை நகரத்தை பொறுத்தவரையில் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நகரத்தின் சுற்றுப்புறத்தில் எந்த விதமான தண்ணீர் வசதியும் இல்லாமல் இருக்கிறது. டவுனைச் சுற்றி கீழ்பகுதியில் கிடைக்கிற கொஞ்சம் குடி தண்ணீரை தவிர வேறு எந்த விதமான வசதியும் அங்கு கிடையாது. தண்ணீர் வசதிக்கான குளங்களோ ஆறோ இல்லாத முறையில் அந்த நகரம் இருக்கிறது. இந்த நகரத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு பக்கத்தில் 30 மைலிலிருந்து வைகை நதியிலிருந்து கொண்டு வரவேண்டும். அல்லது அங்கு பல ஆழ் கிணறுகள் ஏற்படுத்தி அதன் மூலம் தான் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும். இந்த முயற்சிகளை தவிர தண்ணீர் வசதிக்கு அங்கு வேறு எதுவும் கிடையாது. ஆகவே இதற்காக கோரிக்கைகள் நகர சபை மூலம் அனுப்பப்பட்டிருக்கிறது. கடந்த தேர்தல் காலத்தில் அங்கு தேர்தல் பிரசாரம் செய்ய வந்த மந்திரிகள் அந்த நகரத்திற்கு குடி தண்ணீர் வசதிக்கு ஏற்பாடு செய்யப்போவதாக சொன்னார்கள். ஆனால் இது வரை ஒன்றும் செய்யவில்லை. ஐம்பது ஆயிரம் ஜனங்கள் இருக்கக்கூடிய ஒரு நகரம் அது. ஆகவே அதற்கேற்றவாறு அங்கு குடிதண்ணீர் வசதியை செய்து தரவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* SRI C. R. RAMASWAMI : கனம் சபாநாயகர் அவர்களே, கடந்த ஆறு ஆண்டுகளாக நிதி அமைச்சர் அவர்கள் இந்த இலாகாவை வெகு திறமையாக நடத்தி வருகிறார்கள் என்பதில் சந்தேகமே கிடையாது. அத்தகைய நிதி அமைச்சர் அவர்கள் தனது பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். நல்ல உரையையும் இயற்றி இருக்கிறார்கள். அதை படித்தாலே ஓரளவுக்கு நமது மாகாணத்தின் பொருளாதார நிலைமையைப்பற்றி புரிந்துகொள்ள முடியும். அடுத்தபடியாக பார்ப்போமேயானால் அவர் சொல்லியிருக்கின்ற இரண்டொரு புள்ளிவிவரங்களை மட்டும் விரிவாக எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். நமது உணவு பற்றாக்குறையைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. நமக்கு தேவையானது 48 லட்சம் டன்ரன். ஆனால் இப்போது நமது நாட்டில் 46 லட்சம் டன் பெருகிவிட்டது.



ஆனால் உணவு தானிய விலைகளை பொறுத்த வரையில் வாழ்க்கை புள்ளி விவரம் 56-ல் 377 பாயிண்டாக இருந்தது 1957-ல் 512 பாயிண்டாக இருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் உணவுப் பொருட்கள் விஷயத்தில் பற்றாக்குறை இல்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதை விளக்கிச் சொல்லவேண்டும் என்று அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நாட்டில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் அதிகமாக செலவு செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக பண வீக்கம் அதிகமாகி கொண்டு வருகிறது. இதனால் விலைவாசிகளும் அதிகமாகிக் கொண்டு போகிறது. சில பெரியவர்கள் சொல்லுவதுமாதிரி திட்டத்தை சீக்கிரமாக நடத்துவதில் மாத்திரம் பயன் இல்லை. நாட்டில் பண வீக்கம் அதிகமாகிக்கொண்டேபோனால் விலைவாசிகள் ஏறிக்கொண்டேதான் போகும், இதனால் மக்களுக்கு அதிக துன்பங்கள்தான் விளையும் என்று குறிப்பிடுகிறார்கள். இன்று சில துறைகளில்தான் உற்பத்தி பெருகியிருக்கிறது. எல்லாத் துறைகளிலும் பெருகவில்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஆகவே இந்த விலைவாசி உயர்வை தடுப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் சாந்தி ஏற்படும். இன்று மக்கள் அதிக விலைவாசியினால் துன்பப்படுகிறார்கள். எல்லா சாமான்களுடைய விலையும் உயர்ந்து கொண்டே போகிறது. இதை தடுக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. இது தவிர சில புது வரிகள் போடப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டில் ஏற்பட்டிருக்கிற பற்றாக்குறையை சரிக்கட்டுவதற்கு வேண்டி இந்த வரிகள் போடப்பட்டிருக்கிறது. வரிகள் இல்லாமல் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை நடத்த முடியாது. மேலும் நாம் அதிகமாக இருக்கின்ற செலவுகளை தவிர்க்க வேண்டும். அதே மாதிரியாக இப்போது இருக்கக்கூடிய வரிகளில் சில சரியாக 4-01 p.m. அமுலுக்கு வரவில்லை என்பது என்னுடைய நம்பிக்கை. அப்படிப்பட்ட நேரத்தில் புதிய வரிகளைப் போடவேண்டுமா என்று எனக்குத் தோன்றுகிறது. முக்கியமாக நிலச்சொந்தக்காரர்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். வரி போட்டால் நிலத்திலிருந்து வரக்கூடிய வருமானத்திற்குமட்டும் போடலாம். மற்ற வருமானங்களையும் சேர்த்து சராசரி வீதத்தில் போட்டால் நிலச் சொந்தக்காரர்களுக்குக் கஷ்டம் ஏற்படும். அவர்களை இது ரொம்பவும் பாதிக்கும் என்பது என்னுடைய நம்பிக்கை. மற்ற வருமானத்தையெல்லாம் மொத்தமாகச் சேர்ப்பது தவறு. அக்ரிகல்ச்ரல் இன்கம்டாக்ஸ் போட்டு, 3,000-க்கோ அல்லது 5,000-க்கோ விலக்களித்துவிட்டு மீதமுள்ள வருமானத்திற்கு வரி போட்டால் சரியாக இருக்குமென்று நான் நம்புகின்றேன். இதை நமது அமைச்சர் அவர்கள் சற்று யோசனை செய்து பார்ப்பார்கள் என்று நம்புகிறேன். தமாஷா வரி போட்டிருக்கிறார்கள். அதிகமான மக்கள் சினிமா பார்க்கிறார்கள். அதனால் அதிகப்படியான வருமானம் வருகிறது என்று சொல்கிறார்கள். சினிமா பார்ப்பது தவிர்க்கக் கூடியது. அதற்கு அதிக வரி போடுவது சரி. இதேமாதிரி நகர சபையில்கூடக் கூறியிருக்கிறார்கள். அவர்களும், இந்த வரி அதிகம் போட்டால் அவர்களுக்கு அதிக பணம் வரும் என்று எண்ணுகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

டீஸல் ஆயிலுக்கு வரி போட்டிருக்கிறார்கள். இப்போது பெட்ரோல் காலன் 3 ரூபாய் என்று விற்கிறார்கள். தற்போது லாரிகள் நல்ல முறையில் பயன்பட்டு வருகிறது. ரயில்வேயில் வாகன் கஷ்டம் இருப்பதால் அந்தக் கஷ்டத்தை ஓரளவு தவிர்த்து, லாரிகளில் சாமான்களை அனுப்பி வருகிறார்கள். லாரியில் அனுப்புவது சுலபமாகவும், சகாயமாகவும் இருக்கிறது. லாரி சொந்தக்காரர்கள் இப்படியேபோனால், டீஸல் ஆயிலும் பெட்ரோல் விலைக்கே சொந்தவிடுமென்று பயந்து என்னிடம் வந்து முறையிட்டார்கள். அவர்கள் என்னிடம் வந்து நீங்கள் சொல்லக்கூடாதா, நீங்கள் சட்டசபையில் இருக்கிறீர்களே, பெட்ரோல் விலைக்கு டீஸல் ஆயில் சொந்தவிட்டால் டிரான்ஸ்போர்ட் கஷ்டம் ஏற்படும் என்று சொன்னார்கள். இந்த டீஸல் ஆயிலுக்கு இப்போது இருக்கும் வரியை விட அதிகம் போடாமல் இருந்தால் நல்லது. டிரான்ஸ்போர்ட் நல்ல முறையில் நடக்க அவர்களுக்கும் ஓரளவுக்குச் சலுகை வழங்க வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் எல்லா விலையும் ஏறும். எல்லா சாமான்களுடைய விலையும் இந்த ட்ரான்ஸ்போர்ட் காரணமாக ஏறும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

இப்போது சென்னை நகரத்தை எடுத்துக் கொள்வோம். அரசாங்கத்தின் உதவி கார்ப்பொரேஷனுக்கு வேண்டியிருக்கிறது. சென்னை நகர சபை அங்கத்தினர்களுக்கு ஒரே குறையாக இருக்கிறது. சென்னை ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால் மொத்தத்தில் 4½ கோடி ரூபாய் மோட்டார் வெகிகிள்ஸ் டாக்ஸ் மூலம் வருகிறது. 1938-ம் வருஷத்து கணக்குப் பிரகாரம் ஒவ்வொரு டிஸ்ட்ரிக்டிலுள்ள வண்டிகளைக் கணக்கிட்டு அந்தக் கணக்குப்படி எல்லா ஜில்லாக்களுக்கும் மொத்தமாக 62 லட்ச ரூபாய், அந்த 4½ கோடியிலிருந்து பங்கு கொடுக்கிறார்கள். இப்போதைய கணக்குப்படி பார்த்தால் சென்னை ராஜ்யத்தில் 30,000 வண்டிகள் இருக்கின்றன. அதில் 10,000 வண்டிகள் சென்னை நகரத்தில் மட்டும் ஓடுகின்றன. அதாவது சென்னை நகரத்தில் மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்கு வண்டிகள் இருக்கின்றன. ஆகவே, மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு நகர சபைக்கு, பராமரிப்பதற்காகக் கொடுக்கப்படவேண்டியது அவசியம். அந்த 1938-ம் வருஷத்திய கணக்கை எடுத்துவிட்டு புதிய முறையைக் கையாளவேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. இதை நிதி அமைச்சர் அவர்கள் நன்கு கவனிக்க வேண்டும். இல்லாவிட்டால், நகர சபையில் ஒரு வேலையும் செய்ய முடியாது.

இப்போது நகர சபையார் ரேபிட் மெகானிகல் பில்டர்ஸ் அமைத்திருக்கிறார்கள். சென்னை நகரத்தில் 25 லட்சம் காலனிலிருந்து இப்போதும் 35 லட்சம் காலன் தண்ணீர் பாய்ச்சுகிறார்கள். அந்தத் தண்ணீரெல்லாம் டிரைனேஜ் மூலம் போகவேண்டும். இப்போது அதற்கிருக்கும் வசதி போதாது. அதனால் தண்ணீர் மேலே வருகிறது. போதுமான வசதியில்லை. அதற்கு பணம் வேண்டும். அதிகப் படியான பணத்தை அரசாங்கம் கொடுத்தால்தான் சென்னை நகரம் சுத்தமாக இருக்கும். இதைச் சரியாக கவனிக்காவிட்டால் பல வியாதிகளும் நோய்களும் இங்கு வரும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இதைச் சீராக கவனித்து நகர சபைக்கு வேண்டிய உதவி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைத் தவிர, சென்னை நகரத்தில் பிரிட்ஜுகள் பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. பிரிட்ஜுகள் கட்ட அரசாங்கம் உதவுகின்றது. அரசாங்கம் உதவாவிட்டால் நகர சபைக்கு வேண்டிய வசதிகள் இல்லை. சென்னையில் இப்போது இருக்கும் பிரிட்ஜுகள் எல்லாம் ஹைதர் காலத்தில் கட்டிய பிரிட்ஜுகள். கூடியசீக்கிரத்தில் புதிய பிரிட்ஜுகள் கட்டினாலொழிய இந்த அதிக போக்குவரத்தை சமாளிக்க முடியாது. அதிலும் முக்கியமாக, மார்மலாங் பிரிட்ஜைப்பற்றி போன பட்ஜெட்டின் போதே எடுத்துச் சொன்னேன். உடனடியாக அங்கு வேலை ஆரம்பித்துப் புதிய பிரிட்ஜு கட்ட வேண்டுமென்று சொன்னேன். இதுவரை ஒன்றும் செய்யவில்லை. அரசாங்கம் உதவி கொடுத்தால்தான் கார்ப்பொரேஷன் செய்யலாம். அது சென்னை நகரத்தில் ஒரு முக்கியமான பிரிட்ஜு. அது இப்போது மோசமான நிலையில் இருக்கிறது. அதை உடனடியாக கவனிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சென்னையில் ரோடுகள் எல்லாம் நன்றாக இல்லை. அந்த ரோடுகளைச் சரிவரப் பராமரிக்க வேண்டியது அவசியம். ஆகையால் மோட்டார் வெகிகிள்ஸ் டாக்ஸில் நகர சபைக்கு அதிகப் பங்கு கொடுக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்திலுள்ள ஆஸ்பத்திரிகளைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள். பதினேழு லட்சம் ஜனத் தொகையைக் கொண்டது சென்னை நகரம். இந்த இவ்வளவு பெரிய நகரத்தில் மூன்றே மூன்று ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. இந்த மூன்று ஆஸ்பத்திரிகளிலும் சேர்த்து பெட் ஸ்ட்ரெங்த் ஏறக்குறைய 2,000 இருக்கும். இது நிச்சயமாகப் போதாது. இவ்வளவு பெரிய ஊரில் 2,000 பெட்டுகள் கொண்ட மூன்று ஆஸ்பத்திரிகளைக் கொண்டு சமாளிப்பதென்பது முடியாத விஷயம், ராயப்பேட்டை ஆஸ்பத்திரி அந்தக் காலத்தில் இருந்தபடியே இப்போதும் இருக்கிறது. அதை விஸ்தரித்து நல்ல முறையில் அதிகப்படியான பெட்டுகள் ஏற்





படுத்தினால் தென் பிராந்திய மக்களுக்கு அது மிகவும் பயன்படும். அதற்கும் நல்ல திட்டம் ஒன்று வகுத்து விஸ்தரிக்க ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்குமென்று சொல்லிக்கொள்கிறேன். சென்னை நகரத்திலே, எல்லா வசதிகளையும்விட முக்கியமானது வைத்திய வசதி. இப்போது ஜெனரல் ஹாஸ்பிடலில் இடம் இல்லை. ஹாஸ்பிடல் அதிக மக்களுக்குச் சேவை செய்து வருகின்றது. இந்த ஹாஸ்பிடல்கள் கார்ப்பொரேஷனின் பொறுப்பிலில்லை, அரசாங்கத்தின் பொறுப்பிலிருக்கிறது என்பதனால்தான் நான் இதை வலியுறுத்திச் சொல்லுகிறேன். இத்துடன் சைதாப்பேட்டை அருகே இன்னொரு ஆஸ்பத்திரி கட்டினால் நல்லதாக இருக்கும்.

அடுத்தபடியாக, குடிசையில் வாழும் மக்களுக்காக, ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் திட்டம் போட்டு அதற்காகப் பணம் ஒதுக்கியிருக்கிறோம். அது இரண்டு மூன்று வருஷங்களாக தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அது நடை முறைக்கு வரவில்லை. ஏதோ சச்சரவு காரணமாக இப்படி தாமதம் ஆவதாகத் தெரிகிறது. என்னுடைய பகுதியில் நொச்சிக்குப்பம், முள்ளிற் குப்பம் முதலிய இடங்கள் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே எடுத்துக் கொள்வதாயிருந்தது. இந்த வருஷமும் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் நடை முறையில் வரவில்லை. மக்கள் அனைவரும் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக ஸ்டேட் ஹௌஸிங் போர்ட் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்ட் தலைமை அதிகாரியே இதற்கும் அதிகாரியாக இருக்கிறார். ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்ட் அதிகாரியால் இரண்டு வேலைகளையும் பார்க்க முடியாது. ஸ்டேட் ஹௌஸிங் போர்டுக்குத் தனி அதிகாரி ஒருவரைப் போட வேண்டும். ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட் சேர்மன் இதற்கும் தலைவர் என்றால் வேலை நடக்காது. ஆகவே இவை இரண்டையும் பிரித்து ஹௌஸிங் போர்டுக்கு வேறு ஒரு தனி அதிகாரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது சென்னை நகரத்தில் கல்லூரிகள் இருக்கின்றன, வருஷா வருஷம் இந்த கல்லூரிகள் அட்மிஷன் தொல்லை பெரிய தொல்லையாக இருக்கிறது. இதற்கு நிரந்தரமான ஒரு நிவாரணம் ஏற்படவில்லை. அட்மிஷன் இல்லை, வைத்தியக் கல்லூரியில் அட்மிஷன் இல்லை, என்ஜினீயரிங் கல்லூரியில் அட்மிஷன் இல்லையென்று எல்லோரும் கூப்பாடு போடுகின்றார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் ஒன்றும் செய்யவில்லை. நிரந்தரமான ஏற்பாடு இல்லை. அப்படி ஒரு ஏற்பாடு செய்தால்தான் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். எல்லோருக்கும் அட்மிஷன் கிடைக்க வேண்டும். சில வகுப்பினருக்கு மட்டும் உண்டு, இன்னும் சிலருக்கு இல்லை யென்று இருக்கக் கூடாது. எல்லா வகுப்பாருக்கும் இடம் கிடைக்க வேண்டும். ஆகவே இன்னும் புதிய கல்லூரிகள் அமைத்து, மதுரை, தஞ்சை, கோயம்புத்தூர் முதலிய இடங்களில் ஏற்படுத்தி எல்லோரும் படிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். ஸெலெக்ஷன் போர்டு வைத்து ஸெலக்ஷன் செய்வதை நீக்கி படிக்க இஷ்டப்படும் எல்லோருக்கும் படிக்க வசதி செய்து கொடுக்க வேண்டியது சர்க்கார் கடமை என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்னும் இரண்டொரு சிறு விஷயங்களைப் பற்றிப் பேச விரும்புகிறேன். மீன் இலாகா பற்றி ஒரு வார்த்தை. சென்னை நகரத்தில் மீன் பிடிப்பவர்கள் அநேகர் இருக்கின்றனர். அவர்களுக்கு பாப்லோ இயந்திரப் படகு ரொம்ப வசதியாக இருக்கும். சென்னை நரகத்தில் பாப்லோ படகு கொடுக்கப்படவில்லை. ஏனென்றால், படகு கட்டுவதற்குத் துறைமுகம் இல்லை யென்று சொல்லுகிறார்கள். ஹார்பர் கட்ட வேண்டுமானால் கட்ட முடியும். அடையாறு, கூவம் இவற்றில் சிறு துறைமுகங்கள் கட்டலாம். கடலூர், நாகப்பட்டிணம் போன்ற இடங்களில் கட்டுவது போன்று இங்கும் கட்டலாம். நூறு பாப்லோ படகுகள் கட்டி அதை மீனவர்களுக்கு வழங்க வேண்டும். ஒரு நாள் பூராவும் கட்டுமரத்தில் கடலில் சென்றாலும்கூட அவர்கள் 4–10
போதிய வருமானம் இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். ஆகவே ஒரு "ஹார்பர்" கட்டிக் கொடுக்க வேண்டுமென்று p.m.
சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[5th March 1958

* Sri S. SADASIVAM : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் கொடுத்ததற்கு உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். நமது நாடு விவசாயத் துறையிலே வளர்ச்சி பெற வேண்டும், விவசாயம் தான் தலைசிறந்த தொழில் என்பதை அறிந்து, நமது அரசாங்கம் பல திட்டங்களைத் தீட்டி, அதன் மூலம் உணவு உற்பத்தி அதிகரித்ததன் காரணமாக, உணவுப் பஞ்சம் தீர்ந்திருக்கிறது என்பதை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். 1950-51-ம் ஆண்டு நிலவரத்தை அடிப்படையாகக் கொண்டு பார்ப்போமேயானால், அந்த ஆண்டில் உணவு உற்பத்தி 28 லட்சம் டன்தான் இருந்தது. 1955-56-ல் 44 லட்சம் டன்னாக அதிகரித்து, 1956-57-ல் 46 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. இந்த ஆண்டிலே தேவையைச் சரிக்கட்டும் நிலைமை அடைந்திருக்கிறது என்று கூறுகிறார்கள். இந்தப் புள்ளி விவரங்கள் சரியானவை என்பதை எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன். 1950-51-ம் ஆண்டிலே பஞ்சம், பட்டினியின் காரணமாக, ரேஷன் கடைகள் திறக்கப்பட்டு, நபருக்கு 6 அவுன்ஸ், 8 அவுன்ஸ் வீதம் தான்யங்களை வழங்கி வந்தார்கள். ஆனால் இப்பொழுது உணவுப் பொருள்களின் விலை கொஞ்சம் உயர்ந்திருந்தாலும், எந்த அளவுக்கு வேண்டுமானாலும் தான்யங்களை அவரவர்கள் தேவைக்குத் தகுந்தபடி வாங்கக் கூடிய சௌகரியத்தைப் பெற்றிருக்கிறார்கள். இன்றைய தினம் உணவு உற்பத்தி அதிகரித்து நமது தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கிறது என்பதை நாம் உணருகிறோம். அதே சமயத்தில் ஜனத் தொகையும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதைப் பார்க்கும் போது, அன்று இருந்த நிலைமையையும் இன்று இருக்கிற நிலைமையையும் பார்க்கும்போது, உணவு உற்பத்தி அதிகரித்திருப்பது நன்றாக தெரிகிறது. அத்துடன் அகில இந்தியாவிலும் ஒரு ஏக்கருக்கு சராசரி 750 பவுண்டுதான் விளைகின்றது என்று கூறப்பட்டிருக்கிறது. நமது தமிழ் நாட்டைப்பொறுத்த மட்டில் 1,255 பவுண்டு அரிசி விளைகின்றது என்று சொல்லியிருப்பது மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம். அதே நேரத்தில், மற்ற நாடுகளை ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், சீனாவில் ஒரு ஏக்கருக்கு சராசரி 1,550 பவுண்டு அரிசி இடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். அநேகமாக இது நம் நாட்டின் உற்பத்தி அளவுக்குக் கிட்டத்தட்ட சமமாகயிருக்கிறது என்றே சொல்லலாம். ஜப்பானில் ஒரு ஏக்கருக்கு 2,550 பவுண்டு அரிசி விளைவதாகச் சொல்லப்படுகிறது. அந்த அளவுக்கு நமது உற்பத்தி பெருகுமேயானால், நமக்குத் தேவையானது போக உபரியை வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடிய நிலைமை ஏற்படும். ஜப்பானிய சாகுபடி முறையை யைப் பின்பற்ற அரசாங்கம் வேண்டிய அளவு ஆதரவு கொடுக்கிறார்கள். உற்பத்தி அதிகரிப்பதற்கு நல்ல விதைகள் தேவை என்பதை உணர்ந்து, நல்ல விதைகளை உற்பத்தி செய்வதற்கு நடப்பு ஆண்டில் 136 விதைப் பண்ணைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டு, 1957-ம் ஆண்டு டிசம்பர் முடிய 116 பண்ணைகளை ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டார்கள். வருகிற ஆண்டில் 180 பண்ணைகளை ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறார்கள். விதைகள் உற்பத்தி செய்வதில் கலப்பு முறையைக் கையாண்டு, ஆராய்ச்சியின் மூலமாக "கோ. 25, கோ. 12" போன்ற வித்துக்கள் நல்ல பலன் தரக்கூடியவை என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். நல்ல விதைகளை உபயோகிப்பதுடன், ஜப்பானிய விவசாய முறையையும் போன்று ரசாயன உரங்களை உபயோகிப்பதற்கும் திட்டமிட்டிருக்கிறார்கள். போதிய அளவுக்கு ரசாயன உரம் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அண்மையிலே, நெய்வேலித் திட்டத்தின் மூலமாக ரசாயன உரம் கிடைக்கும் என்று நம்பியிருக்கும் நேரத்திலே, தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரசாயன உரத்தை உபயோகிப்பதால் மட்டும் உற்பத்தியை பெருக்கிவிட முடியாது. பசும் தழை உரத்தை அதிகமாக உபயோகிக்க வேண்டும். பசுந்தழை உரங்களுக்கு விதைகள் வழங்குவது போன்ற சலுகைகளை அளித்து வருகிறார்கள். அதே சமயத்தில். நமது கிராமப் புறங்களில், சிறு சிறு குக்கிராமங்களில் புறம்போக்கு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கே பசுந்தழை உரங்கள் தாளுக [illegible]கின்றன. ஆனால் அவைகளை நல்ல முறையில் காப்பாற்ற முடியாத [illegible], அவைகளை உபயோகிப்பதற்கு முடியாத நிலையில் இருக்கின்றன.



5th March 1958] [Sri S. Sadasivam]

இந்தப் புறம்போக்கு நிலங்கள் ரெவென்யூ இலாக்காவின் பராமரிப்பில் இருப்பதால், ஒரு தனிப்பட்ட நபருடைய அனுமதியில்லாததன் காரணமாக இந்த பசும் தழைகளை வீணாக்குகிறார்கள். ஆகவே இந்தப் புறம்போக்கு நிலங்களில் உள்ள பசுந்தழைகளை பஞ்சாயத்துகளிடத்தில் ஒப்படைத்து, அவைகளின் மூலமாக ஏலத்திற்கு விட்டால் நல்ல உரம் நிலங்களுக்குக் கிடைப்பதுடன், பஞ்சாயத்துக்களின் வருமானம் ஓரளவு பெருகும்.

அடுத்தபடியாக, இன்று பயிர்களை வளரவொட்டாமல் தடுக்கும் பூச்சிகளைக் கொல்லுவதற்கு எவ்வளவு தூரம் அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கின்றதோ, அந்த அளவுக்கு பூச்சிகளும் விருத்தியடைந்து வருகின்றன. நல்ல முறையில் மருந்துகளை தயார் செய்து விவசாய இலாக்கா மூலமாக ஆங்காங்கு விநியோகிக்கிறார்கள். இன்றுள்ள நிலைமையிலே பூச்சி மருந்துகள் பூச்சிகள் வந்த பின்புதான், ஜில்லா விவசாய அதிகாரியின் அனுமதியைப் பெற்று கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படியில்லாமல், அதை முன்பே, அந்தந்த இடங்களுக்கு தனியாக ஒதுக்கி, விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். இன்று இருக்கிற திட்டத்தில் நெல் நிலப்பயிர் ஒன்றுக்கு மட்டும்தான் பூச்சி மருந்தை பாதி விலையிலே கொடுக்கிறார்கள். கிராமப் புறங்களில் அதிகமாகப் பயிரிடப்படும் இதர உணவுப் பொருள்களுக்கும் அந்த மருந்தைப் பாதி விலையில் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பூச்சி மருந்தை கொடுக்கும்போது அவைகளை வீணாக்காமல் நவீன முறைப்படி உபயோகிப்பதற்கு கருவிகள் கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்கு இவைகளையும் பாதி விலையில் வழங்க பணம் ஒதுக்கி யிருப்பதை வரவேற்கிறேன்.

நமது நாட்டிலே உணவு உற்பத்தி பெருகுவதற்கு நீர்ப்பாசனம் மிக மிகத் தேவை. பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைத் தீட்டி, அவைகளை நிறைவேற்றியதன் காரணமாக முதல் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி அடைந்திருக்கிறது. இன்று நாம் அடைந்திருக்கும் உற்பத்திப் பெருக்குக்கு இவைகள்தான் காரணம். இன்றைய நிலையிலே, அமராவதி போன்ற பல திட்டங்களை நிறைவேற்றி பாசன வசதி பெருகச் செய்திருக்கிறார்கள்.

அமராவதி திட்டத்தின் மூலம் பயன் அடையக்கூடிய பிரதேசம் கோயம் 4–20 p.m.
பத்தூர் ஜில்லாவின் கடைசியில் இருக்கும் திருச்சி ஜில்லாவிலுள்ள கரூர் தாலுகாவில் பல கால்வாய்களில் ஓடி பாய்கிறது. இவைகளுக்குப் போதிய பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். பவானி திட்டத்தின் மூலமாக கோயம்புத்தூர் ஜில்லா பூராவும் பயன் அடைகிறது. கடைசியில் கரூர் தாலுகாவிற்கு வருகிறது. இதைத் தவிர இப்பொழுது பெரிய திட்டமாகிய பரம்பிக்குளம் திட்டம் வரப்போகிறது. அது வந்தால் பூராவும் கோயம் பத்தூர் ஜில்லாவில் பாய இருக்கிறது. அதனால் அமராவதி திட்ட மூலமும் பவானி திட்ட மூலமும் கீழ்கோடிக்கு அதிகமான பாசனத்திற்கு வழி செய்து கொடுக்க வேண்டும். இந்த நிலைமையில் இவைகளை சிறு நீர்ப்பாசன திட்டங்களின் மூலம் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. மின்சாரம் அதிகமாக இல்லாத காரணத்தால் அங்குள்ள நிலைமை மோசமாக இருக்கிறது. டீசல் எண்ணையை உபயோகப்படுத்தி நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொள்ளலாம் என்று நினைத்தால் இப்பொழுது டீசல் எண்ணைக்கு வரி போடப்போவதாகச் சொல்லுகிறார்கள். அங்கு ஒரு போகம் சம்பா நெல் மகசூலுக்கு ஒரு ஏக்கருக்கு சுமார் 120 காலன் வரையில் அந்த எண்ணையை விவசாயத்திற்கு உபயோகித்துக் கொண்டு வருகிறார்கள். நல்ல மகசூல் வரக்கூடிய நேரத்தில் இந்த வரியின் மூலமாக கிட்டத்தட்ட முப்பது ரூபாய் வரி மூலமாகக் கொடுக்க வேண்டியதாக ஏற்படுகிறது. உணவுப் பொருள்களின் விலைவாசிகள் அதிகமாக இருப்பதாகவும் அதைக் குறைக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். அப்படி கூக்குரல் இடும் நேரத்தில் இப்படி டீசல் எண்ணைக்கு வரி போடப்போகிறோம் என்று சொன்னால் விவசாயிகள் அதனால் பாதிக்கப்படுவார்கள். ஆனால் கனம் அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் "பெட்ரோலைத் தவிர மற்ற

மோட்டார் எண்ணெய், அதாவது டீசல் எண்ணெய் மேலுள்ள விற்பனை வரி காலனுக்கு . . ." என்று சொல்லியிருக்கிறார். அதனால் விவசாயிகள் உபயோகப்படுத்தக்கூடிய டீசல் எண்ணெய்க்கு வரி விலக்கு அளிக்கக் கூடும் என்று தோன்றுகிறது. ஆகவே விவசாயிகள் உபயோகப் படுத்தும் டீசல் எண்ணெய்க்கு விதி விலக்கு அளிப்பார்கள் என்ற முழு நம்பிக்கையுடன் இது போன்ற நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கும் கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த திட்டத்தை மனதார வாழ்த்துகிறேன்.

SRI D. S. AUTHIMOOLAM : : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இந்த வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி சொல்லும்போது ஆரம்பத்தில் இது ஒரு கேரியான் பட்ஜெட் (carry on budg t) என்றுதான் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். அல்லது ஒரு ஒரு ரொட்டின் ரிப்போர்ட் (routine report) என்றுதான் சொல்லவேண்டும். இதைப்பற்றி நான் ஏதோ பிரமாத ாக பாராட்டினேன் என்றால் ஏதோ மந்திரியை காக்கா பிடிக்க வருகிறேன் என்று கூட அவர்கள் நினைக்கலாம். அதற்குத் தக்கபடி இதில் தகுந்த அம்சங்கள் விசேஷமாக இல்லை. இதனால்தான் நான் அப்படிச் சொல்லு கிறேன். ஏனென்றால் ஏழை மக்களுக்கு ஒரு சாதகமான முறையில் இந்த வருஷ பட்ஜெட் அமையவில்லை. முக்கியமாக எடுத்துக்கொண்டால் நம் மாகாணத்தில் மக்கள் விவசாயத்தை நம்பித்தான் வாழ்கிறார்கள். விவசாயத்திற்கு உயிரானது அம்மோனியம் சல்பேட் உரம் (ammonium sulphate). இந்த வருஷம் அது எப்படி சப்ளை செய்யப்பட்டது என்றால் விவசாயிகளுக்கு அது தேவைக்குத் தகுந்தபடி கிடைக்கவில்லை. நாம் பெரிய முன்னேற்றகரமான முறையில் பல தொழிற்சாலைகளை ஆரம்பித் தோம். அப்படி இருந்தும் ஏன் இந்த அவல நிலை என்பது தெரியவில்லை. பல விவசாயிகள் தங்களுக்கு அம்மோனியம் சல்பேட் கிடைக்கவில்லை என்று பல முறை என்னிடத்தில் வந்து முறையிட்டிருக்கிறார்கள். நான் சட்டசபை மெம்பர் என்ற முறையிலும் இன்னும் சொந்த முறையிலும் என்னிடம் வந்து முறையிட்டார்கள். விவசாயத்தில் பாடுபடும் அவர்களுக்கு காலா காலத்தில் அந்த உரம் கிடைக்கவில்லை. இன்னும் அதே நிலைமை யில்தான் இருக்குமோ என்று பயப்பட வேண்டியிருக்கிறது.

அடுத்தபடியாக சிறு நீர்பாசன திட்டங்கள். இந்த வரவு செலவுத் திட்டத்தில் அதற்கு வேண்டிய மூலதனம் ஒதுக்கப்படவில்லை என்பதைச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. நமது ராஜ்ய சர்க்காருக்கு போதிய மூலதனம் தற்சமயம் ஒதுக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். இந்திய சர்க்காருடைய கொள்கை அப்படி இருக்கிறது. நமக்கு சுய ராஜ்யம் வந்தும் நாம் சுய ஆட்சி நடத்திக் கொண்டிருந்தும்கூட பழைய வெள்ளைக்கார சர்க்கார் நடந்து வந்த பாணியில்தான் நாமும் இப்பொழுது அரசாங்கத்தை நடத்திக்கொண்டு வருகிறோம். பழைய வெள்ளைக்கார ராஜ்யத்தில் எப்படி இருந்ததோ அப்படித்தான் இப்பொழுதும் செலவு வகையறுக்கள் இருக்கின்றன. வெள்ளைக்கார ராஜ்யத்தில் ஆடம்பரச்செலவு கள் எவ்வளவு இருந்ததோ அவ்வளவும் இப்பொழுது இருக்கிறது. அப்பொழுது ஸ்லீப்பிங் (sleeping) வைசராய் இருந்தார். இப்பொழுது அந்த இடத்தில் ஸ்லீப்பிங் (sleeping) ப்ரசிடெண்ட் இருக்கிறார், இங்கே ஸ்லீப்பிங் கவர்னர் இருக்கிறார். பழைய ஆடம்பரங்கள் அப்படியே இருக்கின்றன. அது இன்னும் மாறவில்லை. இப்பொழுது மந்திரிகள் எவ்வளவோ சம்பளம் வாங்குகிறார்கள். சில இடங்களில் மந்திரிகள் அதிக மாக இருக்கிறார்கள். என்ன காரணத்தினாலோ இங்குள்ள மந்திரிகளின் எண்ணிக்கை அதிகமாக இல்லை, எட்டுப் பேர்கள்தானிருக்கிறார்கள். மைசூர் போன்ற இடங்களில் 14 அல்லது 15 மந்திரிகள் இருக்கின்றார்கள். டில்லியில் சுமார் 40 மந்திரிகள் இருக்கின்றார்கள், டிபுடி மினிஸ்டர்கள் உள்பட. மகாத்மா காந்தியின் பெயரைச் சொல்லிக்கொண்டு இப்படி ஆட்சி செய்கிறார்கள். நாமே நம்மை ஆட்சி செய்து கொள்ளக்கூடிய அந்த உரிமைதான் வந்திருக்கிறது. மற்றப்படி பழைய வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த ப்ளானில்தான் மற்ற எல்லாக் காரியங்களும் போய்க் கொண்டிருக்கின்றன. அந்த பாணியில்தான் செலவும் செய்துகொண் டிருக்கிறார்கள்.





THE HON. SRI C. SUBRAMANIAM : நம்முடைய மாகா ணத்தின் வரவு செலவைப்பற்றி மட்டும் பேசலாமேயொழிய மற்ற மாகா ணங்களைப்பற்றி குற்றம் கூறி சொல்வது சரியல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI D. S. AUTHIMOOLAM : கூட்டுப் பொறுப்பு இருப்பதால் அதைப்பற்றி சொல்லுகிறேன். எல்லோரும் சேர்ந்து ஆட்சி செய்து வருவ தால் அப்படிச் சொன்னேன். ஆனால் அவர் சொல்வதில் ஓரளவு உண்மை இருப்பதாகத் தோன்றுவதால் அது ஒத்துக்கொள்ளக்கூடிய விஷயமாகத் தான் இருக்கிறது. அந்த முறையில் அதை ஒத்துக்கொண்டு மேலே சொல்லுகிறேன். (சிரிப்பு.) நமக்கு வேண்டிய காபிடல் எக்ஸ்பெண்டிச்சர் இந்த பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி தொகைகளை ஒதுக்கிக் கொண்டு பல அணைக்கட்டு வேலைகளை எடுத்துக்கொள்வதாக இருக்கிறது. எவ்வளவோ அணைக்கட்டுகளை எடுத்துக் கொண்டு அவைகளை சீக்கிரமாக முடிக்க வேண்டும். அவைகளை சீக்கிரமாக முடித்தால் நாம் மத்திய அரசாங்கத்தினிடமிருந்து அதிகப்படியான பணம் வாங்க முடியும். ஆனால் திட்டப்படி வேலைகளை முடிக்காமல் இருப்பதால் அப்படி மத்திய அரசாங்கத் தினிடமிருந்து நாம் பணத்தை வாங்க முடிவது இல்லை. சாதாரணமாக மணிமுத்தார் அணைக்கட்டு திட்டத்தை எடுத்துக்கொண்டால் அதற்கு நாலைந்து வருஷத்தில் முடிப்பது என்று திட்டம் போட்டு இரண்டு மூன்று வருஷங்களில் முடித்துவிட்டால் இன்னும் அதிகப்படியான பணத்தை வாங்கலாம். அப்படி இல்லாமல் குறிப்பிட்ட காலத்தில் முடிக்காமல் இருப்பதால் அப்படி பணம் வாங்க முடிவதில்லை. நாம் சீக்கிரத்திலேயே திட்டங்களை முடித்துவிட்டு பணத்துக்கு அணுக வேண்டும். இப்படி நீர்ப் பாசன வேலைகள் பல இருக்கின்றன. அவைகளை எடுத்து நடத்துவதற்கு சர்க்காருக்கு ஆர்வம் இருந்தாலும் அந்த திட்டங்களுக்கு செலவு செய்ய வேண்டிய பணத்தை மத்திய சர்க்காரிடமிருந்து வாதாடி வாங்க வேண்டிய தாக இருக்கிறது. அதனால் போதிய நம்பிக்கையுடன் அந்தக் காரியங்களை நம்மால் செய்ய முடியவில்லை என்பதை சொல்லிக் கொள்ளுகிறேன்.

எல்லாவற்றையும் வடக்கு, தெற்கு என்ற மனப்பான்மையில் நான் சொல்ல முன் வரவில்லை. எல்லோரும் ஒன்றே என்ற மனப்பான்மையில் நான் சொல்லுகிறேன். பண்டித நேரு ஒருவரே எல்லா நாடுகளுக்கும் பிரதமராக இருந்து நடத்த வேண்டும் என்ற அடிப்படையான மனப் பான்மையை கொண்டவன் நான். வேறு கண்ணோட்டத்துடன் பார்க்கக் கூடாது. நம்முடைய பணத்தை நாமே வரவு செலவு செய்து கொள்ள வேண்டும். நம்முடைய காரியங்களை நாமே செய்துகொள்ளக்கூடிய ஒரு மாகாண சுய ஆட்சி உரிமை வேண்டும். அந்த உரிமையுடன் வாழ்வதற்கு வேண்டிய முறையில் எல்லா கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து வேலை செய்ய வேண்டும். ஆனால் நாம் கிராண்ட் மத்திய சர்க்காரிடம் கேட்க வேண்டியதாக இருக்கிறது. ஒரு இடத்தில் படித்தேன். ஆனால் அதை கவனமாக படிக்கவில்லை. (சிரிப்பு.) அவர்களிடமிருந்து நாம் கடன் வாங்கிய பணத்திற்கு நாம் வட்டி கொடுக்க வேண்டியதாக இருக்கிறது என்பதைப் பார்த்தேன். நம்மிடத்தில் அவர்கள் கடன் வாங்கி வட்டி கொடுக்க வேண்டியதாக இருக்க நாம் அவர்களுக்கு வட்டி கொடுக்க வேண்டுமா ? அந்த முறை மாற வேண்டும். வடக்கே பக்ராநங்கல் போன்ற திட்டங்கள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. அவைகளுக்கு சுமார் 200 கோடி ரூபாய் செலவு செய்திருப்பார்கள். அதற்கெல்லாம் நம் மிடத்திலிருந்துதான் பணம் வாங்கி இருக்கிறார்கள். அதனால்தான் நாம் அவர்களிடமிருந்து வட்டி வாங்க வேண்டியிருக்க நாம் அவர்களுக்கு வட்டி கொடுக்க வேண்டியதாக இருக்கிறது என்று சொல்லுகிறேன். நாம் அவர் களுக்கு வட்டி கொடுக்கக்கூடிய அவல நிலையில் நாம் இருக்கக்கூடாது. இம்மாதிரியான முறைகள் எல்லாம் மாற வேண்டும். அரசியல் அறிவாளி களுக்கெல்லாம் நாட்டில் விழிப்பு ஏற்பட ஆரம்பித்து விட்டது. ஆகவே எந்த முறையில் காரியங்களை நடத்த வேண்டும் என்று திட்டங்கள் போட்டு அந்த முறையில் நடத்த வேண்டும். இதை நாளா வட்டத்தில் ஆளும்

4 30 p.m. கட்சிக்காரர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டும். அப்படியானால் தான் தமிழ் நாட்டில் பெரிய பெரிய திட்டங்களையும், பெரிய பெரிய தொழில் வளங்களையும் நாம் உண்டுபண்ண முடியும்.

இனி என்னுடைய தொகுதி சம்பந்தமான பிரச்னைகளுக்கு வந்து விடுகிறேன். கம்யூனிட்டி பிராஜக்ட் சம்பந்தமாக நான் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். அது கிரிமினல் வேஸ்ட் என்று சொல்லலாம். அது வெற்றிகரமாக நடைபெறவில்லை என்று மேத்தா ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருப்பதாக பத்திரிகையில் பார்த்ததாக எனக்கு ஞாபகம். கம்யூனிட்டி பிராஜக்ட் என்பது ஏதோ prestige-க்காக இருக்கிறது என்று சொல்லலாம். அது ஒரு ஜம்பத்திற்காக இருக்கிறது என்று நான் சொல்லப் பிரியப்படுகிறேன்.

இந்த இலாகாக்களை எல்லாம் வைத்துக்கொண்டு இருக்கிறோம். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு பிளாக்காக திறந்து கொண்டு இருபது இருபத்தைந்து பிளாக்குகள் என்று சொன்னால் அவைகளுக்கு ஏராளமான ஜீப்புகளும், ஆபீஸ் சிப்பந்திகளும் வேண்டும் என்று பல தொந்தரவுகள் ஏற்பட்டு நமக்கு ஏராளமான செலவுகள்தான் ஆகின்றன. ஆகவே அத்தகைய வீண் செலவுகள் எல்லாம் இல்லாத நிலைமையில் ஒவ்வொரு தாலுகாவும் ஒவ்வொரு பிளாக்காக இன்னும் சில வருஷங்களில் automatic ஆக மாறிவிடும். ஆகவே தாசில்தாருக்கு ஐம்பது ரூபாய் அதிகப்படி அலவன்ஸ் கொடுத்து, ஒரு ஜீப் கொடுத்து Tahsildar-cum-Block Development Officer என்று பட்டம் கொடுத்து, சிக்கனமான முறையிலே நிர்வாசம் பண்ணலாம். ஏனென்றால் கிராமத்திலே போய் கிராமவாசிகளிடையே அதிகாரிகள் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் காண்ட்ரிபூயுஷன் (contribution) வாங்க வேண்டுமென்றும் இத்திட்டத்தின் குறிக்கோள். ஆகவே இந்த முறையில் செய்யலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். அப்படி இல்லாது கம்யூனிட்டி பிராஜக்ட், நேஷனல் எக்ஸ்டென்ஷன், லோகல் டெவலப்மெண்ட் என்று பல பெயர் கொடுத்து பெரிய நடவடிக்கைகள் செய்வதென்றால் இந்த நாட்டில் காரியங்கள் உருப்படியாக நடக்காது.

திருநெல்வேலி ஜில்லாவிலே கருணையாறு என்று ஒரு நதி ஓடிக்கொண்டு இருக்கிறது. அந்த நதியின் குறுக்கே சிவசைலம் என்ற இடத்தில் ஒரு சிறிய அணைக்கட்டுத் திட்டம் உருவாகிக் கொண்டு இருக்கிறது. அதை சர்க்கார் கவனத்தில் வைத்து சீக்கிரம் நிறைவேற்றினால் அந்த பகுதியில் 7,000 ஏக்கர் நஞ்சை நிலம் பயனடையும். அந்த நிலங்கள் இரண்டு போகம் விளைச்சல் கொடுக்கக்கூடியவை. ஐந்தாறு வருஷமாக விளைச்சல் இல்லாமலிருக்கிறது. ஆகவே ஒரு அணை கட்டிவிட்டால் இரண்டு போக நஞ்சை சாகுபடி செய்ய முடியும். அத்துடன் கூடுதலாக 4,000 ஏக்கர் புஞ்சை நஞ்சை நிலமாக மாறும். பக்கத்தில் மணிமுத்தாறு திட்டம் இருக்கிறது. இப்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அடுத்த வருஷ பட்ஜெட்டிலே அந்த வேலைகளையெல்லாம் எடுத்துக் கொள்வதற்கோ அல்லது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எடுத்துக்கொள்வதற்கோ தகுந்த முறையில் ஆங்காங்கே சப்-டிவிஷன்கள் போட்டு, வேலை செய்ய வேண்டு மென்பதாக நான் கேட்டுக்கொண்டு எனக்கு இந்த அவகாசம் கொடுத்த தலைவர் அவர்களுக்கு வணக்கத்தை தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். (இத்தருணத்தில் டிபுடி ஸ்பீக்கர் தலைமை வகித்தார்.)

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த நிதி நிலை அறிக்கையை மனப்பூர்வமாக ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்ற வருஷ பட்ஜெட்டைவிட நல்ல முற்போக்கான முறையிலும், எண்பது சத விகிதமுள்ள ஏழை மக்கள் மனமார வாழ்த்தக்கூடிய முறையிலும் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது.





இப்பொழுதிருக்கும் அகவிலை காரணமாக, விலைவாசிகள் உயர்ந்திருக்கும் சந்தர்ப்பத்தில் சென்ற காலத்தில் இருந்த குறைவான விலையை அனுசரித்து ஏற்படுத்திய சர்க்கார் கிஸ்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று சென்ற பட்ஜெட் கூட்டத்தில் நான் வற்புறுத்தியிருக்கிறேன். அதையனுசரித்து இப்பொழுது வந்திருக்கும் விவசாய வருமான வரியை நான் மனப்பூர்வமாக ஆதரிப்பதோடு இந்த வரியை இந்தத் தரப்பிலுள்ள பல அங்கத்தினர்கள்கூட எதிர்ப்பதைக் கண்டு நான் பரிதாபப்படுகிறேன். ஏனென்றால், விவசாய வருமான வரி மூவாயிரம் ரூபாய் வருமானத்திற்கு அப்பாற்பட்டவர்களுக்குத்தான் விதிக்கப்படுகிறது. எங்கள் திருவாடுதுறை பண்டார சன்னதிகூட ஒரு விவசாயி என்பதாக கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையில் சில நிலச்சுவாந்தார்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று பலர் குறை கூறுகிறார்கள். மூவாயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்கள் எத்தனை சத விகிதத்தினர் இருக்கிறார்கள்? ஆனால், நூற்றுக்கு எத்தனை பேர் அந்த வரிக்கு உட்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதை சிந்தனை செய்து பார்த்தால், 60 சத விகிதத்திற்கு அதிகமானவர்கள் இந்த மூவாயிரம் ரூபாய் வருமானத்திற்கு உட்பட்டவர்கள். குறிப்பாக, நியாய வாரச் சட்டம், பாதுகாப்புச் சட்டம் போன்று எடுத்துக்கொண்டால், இந்த வருமான வரியால் பாதிக்கப்படுபவர்கள் அதிகமாக இருக்க முடியாது. அதே நியாய வாரச் சட்டத்தினால் கோர்ட்டில் வீண் விரயம் செய்யப்படும் செலவுகளால் பாதிக்கப்படும் சாகுபடியாளர்களுக்காக சட்டத்தைத் திருத்தி, அவர்களுக்கு நல்ல பயன் ஏற்படும்படிச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பல மெம்பர்கள் சொன்னார்கள், நகரத்தில் வசிக்கும் வியாபாரிகளும் உத்தியோகஸ்தர்களும் கிராமத்தில் நிலத்தை வைத்துக்கொண்டிருந்து இந்த வரியினால் பாதிக்கப்படுவார்கள் என்று. சோஷலிச சமுதாயம், உழுபவருக்கு நிலம் சொந்தம், யாரும் அவரவர்களுடைய தேவைக்கு அதிகமாக வைத்திருக்க ஆசைப்படக் கூடாது. தேவைக்கு அதிகமாக சேமித்து வைத்திருப்பது தவறு என்று கருதும் இந்த வேளையில் வியாபாரிகளும் உத்தியோகஸ்தர்களும் ஏற்கெனவே வருமானம் அடைந்து கொண்டிருக்கும்போது மேலும் நிலத்திலிருந்து வருமானம் சேர வேண்டுமென்று விரும்புவது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இந்த நிலையில் விவசாய வருமான வரியானது நியாயமாகப் போடப்பட்ட ஒரு வரியாகும். மூவாயிரம் ரூபாய்க்கு அதிகமாக என்று இருப்பதை இரண்டாயிரத்திற்கு அதிகமாக என்று போட்டிருந்தால் நாங்கள் இன்னும் பாராட்டியிருப்போம்.

இது தவிர, விவசாய வருமான வரி இடைக்காலத்திற்கு மட்டும்தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அதோடு நிறுத்திவிடாமல் கூடுமான வரையில் நிலச் சீர்திருத்தத்தையும் எவ்வளவு சீக்கிரம் கொண்டு வர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். குறிப்பாக, விவசாய வருமான வரியில் நிலத்திற்கு வரம்பு கட்டுவது என்ற முறையில் வியாக்கியானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மூவாயிரம் வருமானம் உள்ள அந்த அளவு நிலத்தை அதிகபட்ச நிலமாக வரம்பு கட்டினால் அது ஆபத்தாக முடிந்தாலும் முடியும். ஆகவே, மூவாயிரம் என்பதைப் பாதியாக குறைத்து அந்த அடிப்படையில் நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

உணவு உற்பத்தியைப்பற்றி சர்தார் வேதரத்னம் பிள்ளை அவர்கள் தெளிவாகப் பேசினார்கள். திருத்துறைப்பூண்டி, அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், பாபநாசம், நாகப்பட்டிணம் தாலூகாக்களில் பத்தாயிரக் கணக்கான ஏக்கர் புறம்போக்கு தரிசு நிலங்கள் இருக்கின்றன. திருவாடுதுறை தருமபுரம் பண்டார சன்னதிகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு, எந்த விதமான பிரயோஜனமும் இல்லாமல் ஒரு சாகுபடியும் செய்யப்படாமல் வெறும் தரிசாக இருக்கும் நிலங்கள் ஆயிரக் கணக்கான ஏக்கர்கள். திருச்சி ஜில்லாவில் உடையார்பாளையம் போன்ற தாலூகாக்களில் சீர்வு காடுகள் இருக்கின்றன. அவைகளில் மரம் கூட இல்லாமல்

பத்தாயிரக் கணக்கான தரிசு நிலங்கள் இருக்கின்றன. அதே போல தென்னாற்காடு ஜில்லாவிலும் புறம்போக்கு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. திருச்சியிலிருந்து சிதம்பரம் வரையில் கொள்ளிடம், மற்ற ஆற்றுப் படுகைகளில் பத்தாயிரக் கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. இப்படி லட்சக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் சாகுபடிக்கு உடனடியாக எடுத்துக்கொள்ளத் தக்கவையாக இருக்கின்றன. இவைகளை சாகுபடிக்கு எடுத்துக் கொண்டால் ஏராளமான வேலை இல்லாமல் தவிக்கும் விவசாயிகள் பிழைப்பதற்கு வழி செய்ய முடியும். மற்ற ஜில்லாக்களில் இருப்பதைக் கொஞ்ச காலம் கழித்து எடுத்துக்கொண்டாலுங்கூட தென்னாற்காடு, திருச்சி, தஞ்சை போன்ற மூன்று ஜில்லாக்களிலுள்ள புறம்போக்கு நிலங்களை உடனடியாக சர்வே செய்து சாகுபடிக்கு எவ்வளவு தேறும் என்று புள்ளி விவரம் எடுத்து அவைகளில் கூட்டுறவு சாகுபடிப் பண்ணைகளை ஆரம்பித்தால் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கவும் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் உதவும். இம்மாதிரித் திட்டங்களை உடனடியாக எடுத்து நிறைவேற்றி இந்த அனுபவத்தைக் கொண்டு மற்ற ஜில்லாக்களிலும் நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடிய நிலையை உண்டுபண்ண வேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

4-40 p.m. அடுத்தபடியாக உணவு உற்பத்தியைப்பற்றிய புள்ளி விவரங்களை கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். உணவு உற்பத்திப் பெருக்கு இயற்கை சரியாக இருந்தது என்பதோடு, உழவருக்கு உரிமை அளித்ததன் காரணமாக உற்பத்தி பெருகியிருக்கிறதென்பதை நிதி அமைச்சர் அவர்கள் உரையில் சொல்லாமலிருப்பதைப்பற்றி நான் வருந்துகிறேன். உழவன் யாரோ அவனுக்கு நிலம் சொந்தம் வேண்டும், விளைவில் அவனுக்குச் சரியான பங்கு உண்டு என்பதாக நியாய வாரச் சட்டம் கொண்டு வந்த பிற்பாடு தஞ்சை ஜில்லாவில் உணவு உற்பத்தியில் விவசாயிகள் மிகவும் அக்கறையோடு கவனம் செலுத்தியிருக்கிறார்கள். உதாரணமாக தஞ்சை ஜில்லாவின் உற்பத்தி என்ன என்பதை பத்து ஆண்டுகளுக்கு முன் சர்க்கார் அடங்கலில் பார்த்து, இப்போதுள்ள அடங்கலில் உற்பத்தி என்னவென்று பார்த்தால் அது தெரியும். விவசாயிகளுக்கு நிலத்தில் உரிமை உண்டு என்று செய்தால்தான் உணவு உற்பத்தியில் அவர்கள் அக்கறை காட்டுவார்கள் என்பதை இதன் மூலமாக நன்றாகப் பார்க்கலாம். அதே சமயத்தில் அவர்களுடைய நன்மைக்காகப் போடப்பட்ட சட்டத்தில் சில சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றையும் துரிதமாக திருத்தியமைத்து உழவர்களுக்கு நிரந்தரமானதொரு பாதுகாப்பை சர்க்கார் அளித்தால்தான், அவர்களுக்கு வேண்டிய வசதிகளை யெல்லாம் செய்து கொடுத்தால்தான் நாட்டில் உற்பத்தி பெருகும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

* **SRI M. KANDASAMI PADAYACHI :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் 1958–59-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். அதாவது இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் சில முக்கியமான கருத்துக்கள் இருக்கின்றன. கடந்த நான்கைந்து வருஷங்களாகவே பருவ மழை தவறியதன் காரணமாக விவசாயிகள் மிகவும் கஷ்டம் அடைந்திருக்கிறார்கள். பயிர்கள் தீய்ந்து போய்விட்டன. அதிலும் தென்னாற்காடு ஜில்லாவில் கடலூர் பகுதியில் மட்டும் பருவ மழை சரியான காலத்தில் இருந்ததே தவிர, மற்றப்படி எங்கள் பகுதியில் மழை இல்லை. பயிர்கள் சாவியாகி விட்டன. வறண்ட பூமியாக இருக்கின்றன. புஞ்சைப் பயிர்கள்கூட விதைக்க முடியவில்லை. அதைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதை வரவேற்கிறேன்.

அதிலும்கூட பருவ மழைதவறியதன் காரணமாக விவசாயிகளுக்கு கிடைக்கின்றது ஒன்றும் இல்லை. அவன் உழுது, பயிரிட்டு, விதைத்து, உரம், தழை எல்லாம் போட்டு, மழை இல்லாத காரணத்தினால் வெள்ளாமை நாசமாகிபோய்விட்டால் அவனுக்கு செலவுக்குக்கூட கட்டாது, ஒரு ஏக்கருக்கு குறைந்தது நூறு ரூபாய்க்கு மேல் விவசாயி செலவிட வேண்டியும் இருக்கிறது. இவ்வாண்டு 20 ஏக்கரில் மணிலா போட்டிருந்தேன்.





ஒரு ஏக்கருக்கு பத்து கலம், பதினைந்து கலம் கூட வரவில்லை. வாய்தா கட்டுவதா ? குடும்பம் நடத்துவதா ? விதைக்கு, உரத்திற்குக் கூட கட்டவில்லை. இத்தருணத்தில் நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுவதைச் சரிக்கட்ட விவசாய வருமான வரி போடுவதற்கு உத்தேசித்திருக்கிறார்கள். இது சரியான யோசனை ஆகாது. விவசாய வருமானம் என்ன என்பதை நிர்ணயிப்பதே மிகவும் கஷ்டமாகப் போய்விடும். எட்டு ஏக்கர் நிலம் உடையவனுக்கு கணக்குப் பிள்ளை மூவாயிரத்துக்கு மேல் வருமானம் உண்டு என்று சொல்லி விடலாம். ஆனால் உண்மையில் பயிரிட்டு மழை இருந்தால்தான் வருமானம். இல்லாவிட்டால் கைப்பொறுப்பாகி நஷ்டமடைந்து தவிக்கும்படியாக நேரிடும். இன்றைய தினம் உள்ள நிலைமையில் என்னைக் கேட்டால் விவசாயிகளுக்கு வருமானம் மிகவும் குறைவாக இருக்கிறது. அவனுக்கு கடைசியில் மிஞ்சுவது எதுவும் இல்லை. முன்பெல்லாம் கர்ணத்திற்கு தானியங்களை மூட்டைக் கணக்கில் கொடுப்பது வழக்கமாக இருந்தது. விவசாய வருமான வரியைப் போட்டு விட்டால் இனி அவர்களுக்குப் பணமாகவே கொடுக்க வேண்டி வந்து விடும். இல்லாவிட்டால் நினைத்தவர்களுக்கு அவர்கள் இத்தனை ரூபாய்க்கு மேல் வருமானம் உண்டு என்று கணக்குக் காட்டிவிட முடியும். இப்போது ரூபாய்க்கு ஐந்தணா செஸ் கட்டிக்கொண்டு வருகிறோம். இதை வேண்டுமானால் எட்டணாவாகவோ, ஒன்பதணாவாகவோ போடலாமே தவிர விவசாய வருமான வரி போடும் யோசனையைக் கைவிட வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுவதை வேறு வகையில் சரிக்கட்டிக்கொள்ளத்தான் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக இப்போது புதிய விவசாய வருமான வரியைப் போட சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் தாலூக்காவில் பருவ மழை தவறி பயிர்கள் நாசமாகிவிட்டதன் காரணமாக உள்ள வரியையே வஜா செய்யவேண்டும் என்பதாக நாங்கள் கலெக்டரிடமும், முதல் அமைச்சரிடமும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதை உடனடியாக கவனித்து உதவி செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் நியாயவிலைக் கடைகள் இருந்தன. அவைகளை மூடிவிடும்படியாக உத்தரவு போட்டிருப்பதாகத் தெரிகிறது. அது சரியல்ல. தொடர்ந்து அவைகளை நடத்தி ஏழை மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாய அபிவிருத்தி இலாகா மூலமாக காலா காலத்தில் விவசாயிகளுக்கு வேண்டிய உரம், விதை முதலியவைகளைக் கொடுக்க வேண்டும். காலம் கடந்து இவற்றைக் கொடுப்பதனால் பயன் இல்லை. பயிர் செலவு ஆரம்பிக்கப்படுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே, கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவோ சர்க்கார் விவசாய இலாகா மூலமாகவோ விதை, உரம், முதலியவைகளை விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டுமென்பதாக உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக 10 லட்சம் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. இது போதாது. சிறிய குளங்கள், வாய்க்கால்கள், ஏரிகள் இவற்றை எல்லாம் மராமத்து செய்வதற்கு இன்னும் அதிகமான தொகையை ஒதுக்கி விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் சிறிய சிறிய நீர்ப்பாசன வசதிகளை எல்லாம் செய்துகொடுக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் கிராமங்களில் ரோடு 4-50 p.m.
போடுகிறார்கள். அந்த ரோடுகளை கிராமங்களில் உள்ளவர்களே போட்டுக் கொள்ளவேண்டும். பிறகு அதை பார் செய்யவோ அல்லது அவைகளை மெட்டல் செய்யவோ விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் பணம் கொடுக்கப்படும் என்று திட்டம் இருக்கிறது. முதலில் ரோடு போட வேண்டுமென்றால், கிராமங்களில் இருக்கும் மக்களுக்கு அதைப்பற்றி ஒன்றும்

தெரியாது. மேலும் பணம் வேண்டாமா ? ஆகவே, நான் சொல்வது என்னவெனில் இந்த மாதிரி ரோடு போடுவது எல்லாம் விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் நடக்க வேண்டும். அம்மக்களைக் கொண்டு ரோடு போட வேண்டுமென்று சொல்லக் கூடாது. அடுத்தபடியாக, கூட்டுறவு மூலம் ஏழை மக்களுக்கு பண உதவி அளிக்கப்படுகிறது. ஒரு குடியானவனுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு அதை மூன்று வருடங்களில் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அவனால் எப்படி அது முடியும் ? ஆகவே, அதை ஒரு நீண்ட காலத் திட்டமாக ஐந்து வருடத்தில் கொடுக்கும்படி ஏற்பாடு செய்து கூட்டுறவு ஸ்தாபனம் மூலம் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாகத், சுகாதார வசதி, ஜில்லா போர்ட் அல்லது முனிஸிப்பாலிட்டிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு வருடம் ஒன்றுக்கு 3,000 ரூபாய் கொடுத்தால் மருந்துக்கு என்று போவது ஆயிரம் ரூபாய்தான். ஒரு ஜில்லா போர்ட் ஆஸ்பத்திரியை எடுத்துக் கொண்டால் தலைமை ஆஸ்பத்திரி, **headquarters** ஆஸ்பத்திரி இருப்பது, 20,30 மைலுக்கு என்று ஒன்று இருக்கிறது. ஆகவே, நான் சொல்வது அப்படிப்பட்ட ஆஸ்பத்திரிகள் 10 மைலுக்கு ஒன்றாவது இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இல்லாவிடில் ஒரு ஆம்புலன்ஸைக் கொண்டுவர வேண்டுமென்றால் அது வர 10 மணி நேரம் ஆகிறது. அதற்குள், அது வருவதற்குள் நோயாளியே இறந்து விடுவான். ஆகவே 10 மைலிற்கு ஒரு ஆஸ்பத்திரி சர்க்கார் ஏற்படுத்தும்படி நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். (பெல்) இதுவரை பேச எனக்கு சந்தர்ப்பம் கொடுத்ததற்கு தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

4-50 p.m. *SRI C. NATARAJA ODAYAR : அவை தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் நிதி நிலை அறிக்கை மீது நான் எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்பொழுது இந்த மன்றத்தில் மிகவும் முக்கியமாக ஒவ்வொரு அங்கத்தினர்களாலும் விவாதிக்கப்படுவது கைத்தறியைப் பற்றியதாகும். கைத்தறித் தொழிலைப்பற்றி பலர் பலவிதமாக கூறுகிறார்கள். கைத்தறியைப் பற்றிச் சொன்னால் கதை சொல்லும் அங்கத்தினர்கள் என்று சொல்கிறார்கள். அப்படி கதை சொல்லாமல் சில கணக்குகளையும் சொல்ல நான் விரும்புகிறேன். இந்த கைத்தறித் தொழிலின் நிலை எப்படியிருக்கிறது என்றால், சட்டம் போட்டும் அதைக் கையாளாத நிலைமையில் தான் இருக்கிறது. அமைச்சர்கள் கதரையும், கைத்தறியையும் இரண்டு கையில் பிடித்துக் கொண்டு கதர் வேண்டுமா, கைத்தறி வேண்டுமா என்று சொல்லும் நிலையில் இருக்கிறது. அதை நினைக்கும்போது, இரண்டு பெண்டாட்டி கட்டினவன் திண்டாடும் நிலையைப் போன்றுதான் இருக்கிறது. எதை வளர்ப்பது ? ஆஸ்பத்திரிகளிலும், மற்ற அரசாங்க அலுவலகங்களிலும் கதரை விற்று விடுகிறார்கள். விற்கச் செய்கிறார்கள். ஆனால் கைத்தறியைப் பொறுத்த வரையில் ஆடம்பரமாக விழாக் கொண்டாடுகிறோம். அது மட்டுமல்ல. கைத்தறியை ஆதரியுங்கள் என்றும் சொல்கிறார்கள். அப்படிச் சொல்வதோடு நின்று விட்டால், எப்படி குறை கூறாமல் இருக்க முடியும் ? இச் சட்டசபை அங்கத்தினராகிய மாரியப்பன் அவர்கள் அம்மாபேட்டை கைத்தறி சொஸைட்டியின் தலைவராக இருக்கிறார். அங்கு சுமார் 9 லட்சம் ரூபாய் மதிப்புள்ள கைத்தறி தேங்கிக் கிடக்கிறது. அதுபோன்று செவ்வாய்பேட்டையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கைத்தறி சொஸைட்டியில் எட்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள கைத்தறி துணி தேங்கியிருக்கிறது. கைத்தறித் தொழிலை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு அரசாங்கம் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. கழிந்த அக்டோபரில் 32 லட்சம் ரூபாய்க்கு கைத்தறி விற்பனையாயிருக்கிறது. ஆனால் டிஸம்பரில் 8 லட்சத்திற்குத்தான் விற்பனையாகி இருக்கிறது. எட்டு லட்சம் எங்கேயிருக்கிறது, 32 லட்சம் எங்கேயிருக்கிறது. இதை வைத்துக் கொண்டு பார்த்தால் எப்படி அரசாங்கம் கைத்தறித் தொழிலை ஆதரித்ததாகச் சொல்ல முடியும் ? அடுத்தபடியாக, நிலச் சீர்திருத்தம் இருக்கிறது. விவசாயிகளுக்கு என்னென்ன சௌகரியங்கள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு ஒரு விதமான





உதவியும் அளிக்கப்படவில்லை என்பதை நினைத்து நாம் வெட்கப்பட வேண்டியிருக்கிறது. இந்த அரசாங்கத்தின் விவசாயத் திட்டம் என்பது மிராசுதார்களின் திட்டமாகத்தான் இருக்கிறது. அதை, நிலச் சுவாந்தார்களுக்காக கொண்டுவரப்பட்ட திட்டம் என்றுதான் சொல்ல வேண்டும். நிலத்தின் அளவு நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று இதற்கு முன்னரும் பல தடவைகள் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் வாங்கக் கூடாது என்று இப்பொழுது சொல்கிறார்கள். ஆயிரம் ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் இப்பொழுது அவைகளை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்று சட்டம் கொண்டு வருவதால் விவசாயிகளுக்கு என்ன லாபம் என்று கேட்கிறேன். பூனையைப் பார்த்து புலி என்று எப்படி ஒப்புக்கொள்ள முடியும் ? அதே போல் இந்த ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் ஒருவன் வைத்துக் கொண்டிருக்க முடியாது என்று சொல்வது விவசாயிகளின் நலனுக்காக கொண்டு வரப்பட்ட திட்டம் என்று சொல்ல முடியாது, அது மிராசுதார்களின் திட்டமாகும். விளைச்சல் அதிகமாகி விட்டது என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் கோதுமையை சாப்பிடுங்கள் என்று கோதுமைக் கடைகள் வைத்து, கோதுமை உடம்பிற்கு நல்லது என்றும் சொல்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம் ? அடுத்தபடி, விவசாயிகளுக்கு நன்மை செய்கிறோம் என்று கூறி டீஸல் எண்ணைக்கு வரி போட்டிருக்கிறார்கள். அந்த வரியை நான் ஆதரிக்கிறேன். வரி போட வேண்டியது அவசியமே. ஆனால் அந்த வரியில் இருந்து, அந்த டீஸல் எண்ணையை உபயோகிக்கும் விவசாயிகளுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடி, நீர்ப்பாசனத்திற்காக லட்சக் கணக்கில் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் எனது தொகுதியில் இது வரை ஓரிடத்தில் கூட ஒரு ஏரியைக் கூட ஆழப்படுத்தியது கிடையாது. அங்கு ஒரு வாய்க்கால் கூட செப்பனிடப்பட்டது கிடையாது. தேசிய நிலப் பரப்புத் திட்டத்தின்கீழ் பல திட்டங்கள் கொண்டுவந்து செயல்படுத்தப் படுவதாக ஏட்டில்தான் இருக்கிறது. சின்னசேலத்தில் ஒரு ஆட்டுப்பண்ணை வைத்திருக்கிறார்கள். அதைப் பார்த்துக்கொள்ள என்று இருப்பவருக்கு ஒரு ஜீப். ஆக, அந்தப் பண்ணையில் எவ்வளவு ஆடுகள் இருக்கிறது என்று கேட்டால், அங்கு இருப்பது நான்கு ஆடுகள்தான். அதற்காக செலவழிக்கப்படும் பணம் மிகவும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இவைகளை எல்லாம் கவனித்து காரியங்கள் செய்ய வேண்டும். அடுத்தபடியாக, ஆசிரியர்களை எடுத்துக் கொண்டால் அவர்களின் நிலைமை பரிதாபத்திற்குரியதாகும். வேறு பொருள் இன்றி சுரக்காயைச் சாப்பிடும் நிலையில் நம் ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று அங்கத்தினர் ஒருவர் சொன்னார்கள். அவர்களின் ஊதியத்தை உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆசிரியர்கள் இல்லாவிட்டால் நாம் இன்று அங்கத்தினர்களாகவோ அல்லது அமைச்சர்களாகவோ வர முடியாது. ஆகவே, அவர்களது ஊதியத்தை அதிகப்படுத்த வேண்டும். அடுத்தபடியாக, என்.ஜி.ஓ.க்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காக பல திட்டங்கள் தீட்டப்பட்டு உதவிகள் அளிக்கப்படுகின்றன என்று சொல்வது ஏட்டளவில்தான் இருக்கிறது. உதாரணமாக அவர்களுக்கு கொடுக்கப்படும் வைத்திய வசதியை எடுத்துக் கொண்டால், அவர்கள் முதலில் பணம் போட்டு மருந்து வாங்கி பிற்பாடு அந்த ரசீதை கொடுத்து பணம் பெறலாம் என்று இருக்கிறது. தாம்பரம் க்ஷயரோக விடுதியில் ஒரு என்.ஜி.ஓ. இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர் 500 ரூபாய்க்கு மருந்து வாங்கி அதற்கு ரசீது வைத்திருக்கிறார். ஆனால் அந்தப் பணம் இன்னும் கிடைக்கவில்லை, அவருக்கு. இப்படியிருக்குமானால் அந்த என்.ஜி.ஓ.-க்கள் இந்தத் திட்டத்தினால் எப்படி பயன் அடையமுடியும் ? அதேபோல்தான் போலீஸ். போலீஸின் தொல்லை அதிகமாகிக் கொண்டு வருகிறது. போலீஸ் அதிகாரி ஒருவர் ஒரு நபரை தலைகீழாக தொங்க வைத்து அடித்தார்கள் என்று பத்திரிகையில் படித்தேன். அதே போல் செய்தித் தாளில் பார்த்தேன், ஒரு பெண்ணை ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் அவளை போலீஸ் அதிகாரிகள் கற்பழித்ததாகவும் அதன் பலனாக அவள் இறந்ததாகவும் பத்திரிகையில் பார்த்தேன். இது மைசூரில் நடந்தது. அதே போல்

இங்கு நடந்தால் தனிப்பட்டவர் பெரியார் போன்றவர்களுக்காக சட்டம் கொண்டு வரும்போது, இவ்விதம் மக்களை துன்புறுத்தி கொலை செய்தால், அப்படிப்பட்டவனுக்கு வேண்டுமானால் தூக்கு தண்டனைகூட விதிக்கலாம் என்று ஒரு சட்டம் கொண்டு வந்தாலும் கூட நன்றாக இருக்கும் என்று கூறிக் கொண்டு இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

5 p.m. *SRI T. KARIA GOUNDER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள வரவு செலவு திட்டத்தை நான் மனதார வாழ்த்துகிறேன். இந்த திட்டத்தைப்பற்றி இங்கு பலரால் சாதகமாகவும் பாதகமாகவும் பேசப்பட்டது. விவசாயிகளுக்கு வரிகளை போடுவது அவசியம் என்றும் பேசப்பட்டது. இரண்டாவதாக என்.ஜி.ஓ.-க்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அதிக சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று பலர் பேசினார்கள். நான் எல்லாம் படிக்கும்போது ஆசிரியர்களுக்கு சம்பளம் ஆறு ரூபாய். இன்றைய தினம் அறுபது ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. என்.ஜி.ஓ.-க்களை எடுத்துக் கொண்டால் நிதி அமைச்சர் அவர்கள் பெப்ருவரி ஆரம்பத்தில் சொன்னபொழுது என்.ஜி.ஓ.-க்களுடைய கோரிக்கைகளைப்பற்றி கவனிக்கப் போவதாக சொன்னார்கள். கேள்வி நேரத்தின் போதும் இதைச் சொன்னார்கள். இப்போது அவர்களுடைய பிள்ளைகளுக்கு பத்தாவது வரை இலவசமாக படிப்பதற்கு சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இது அவர்களுடைய வெற்றி என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். சென்ற ஆண்டிலும் புதிய வரிகள் போட்டால் எதிர் கட்சிகள் வாதாடுவார்களே என்று எண்ணி கூடுதலாக வரிகள் போடாமல் இருந்தார்கள். இப்பொழுது துண்டு விழுவதற்கு, தொகையை சரிகட்டுவதற்கு முடியவில்லையே என்று சொல்லுகிறார்கள். அதற்காக ஏதாவது வரிகள் போட்டால் இவர்கள் பாட்டாளியின் ரத்தத்தை பிழிந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுவார்கள். மக்களுக்கு எப்போதும் தேவை அதிகமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. இந்த மாகாணத்திலுள்ள எல்லா ஜில்லாக்களையும் எடுத்து மாகாண ரீதியில் பார்த்தால் 1957–58-ம் வருடத்தில் 33 லட்சம் ஹைவேஸ் இனத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தத் தொகை 11 ஜில்லாக்களுக்கு மத்திய அரசாங்க நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 11 ஜில்லாக்களில் என்னுடைய ஜில்லாவின் பெயர் வரவில்லை. இதைப்பற்றி இங்கு விசாரித்தால் ஜில்லாவிலிருந்து எஸ்டிமேட்டுகள் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். அங்குள்ள அதிகாரிகளிடத்தில் போய் கேட்டால் நாங்கள் காலா காலத்தில் எஸ்டிமேட் தயாரித்து அனுப்பினோம் என்று சொல்லுகிறார்கள். இதை அரசாங்கம் ஏன் கவனிக்கவில்லை என்று தெரியவில்லை. எங்கள் ஜில்லாவைப்பற்றி, தலைவர் அனுமதி தந்தால மணிக் கணக்கில் பேச முடியும். இது தவிர கூட்டுறவு முறையில் அமோனியம் சல்பேட் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. தனிப்பட்டவர்கள் சரியான விதத்தில் கொடுக்க மாட்டார்கள் என்ற காரணத்திற்காக இவ்விதம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதை பங்கீடு செய்வது கேவலமான முறையில் நடக்கிறது. நான் 15 நாட்களுக்கு முன்னமேயே அமோனியம் சல்பேட் வேண்டும் என்று சொல்லி அனுப்பினேன். இன்றைக்கு வாருங்கள், நாளைக்கு வாருங்கள் என்று சொன்னார்கள். இவ்விதம் சொல்லி அனுப்பிவிட்டு 12 ரூபாய் வீதம் லாபம் கிடைத்தது என்று சொல்லி ஒரே ராத்திரியில் எல்லாம் விற்கப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். இச் சமயத்தில் இங்கு போலீஸ் அமைச்சர் அவர்கள் இல்லையே என்று வருத்தப்படுகிறேன். நிச்சயமாக இதற்கு போலீஸ் பாதுகாப்பு இருக்க வேண்டும். இது தவிர மின்சாரத்தை எடுத்துக்கொண்டால் இந்த 12 ஜில்லாக்களில் எங்கள் ஜில்லாவுக்கு அதிகமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் 200 லட்சம் செலவு செய்ய வேண்டுமென்று திட்டமிட்டிருந்தும் கூடுதலாகவே 300 லட்சம் வரை செலவு செய்திருக்கிறார்கள். இவ்விதம் அந்த இலாகா நிர்வாகத்தினர் தங்கள் வேலைத் திறனை காண்பித்தார்கள் என்பதை பெருமையாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்களுக்கு நன்றியும் செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஆந்திர மாகாணம், கேரளம் இந்த ராஜ்யங்கள் எல்லாம் இருந்தபோது ஒரு கோடி ரூபாய் தான் ஒதுக்கியிருந்தார்கள். ஆனால் நமது அரசாங்கம் இரண்டு கோடி





வரை, ஒதுக்கியிருக்கிறது. எல்லா இடங்களிலும் புதிய வீடுகள் கட்டி கொடுக்கப்படுகிறது. எங்கள் தொகுதியைப் பொறுத்த வரையில் 30 கிராமங்களில் எவ்வளவோ முன்னேற்றமான வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சர்க்கார் ஒன்றும் செய்யவில்லை, இந்த அரசாங்கம் பொது மக்களுக்காக வேலை செய்ய வில்லை என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இப்படி இந்த அரசாங்கத்தை குறைகூறிக்கொண்டிருந்தால் இந்த நாட்டை யாரிடத்தில்தான் ஒப்படைப்பது என்று கேட்கிறேன். இன்னும் சொல்லப் போனால், கூட்டுறவு இயக்கத்தை எடுத்துக்கொள்ளுங்கள். எங்களுடைய ஜில்லாவில், திருப்பத்தூர் டவுனில் ஒரு கூட்டுறவு பாங்கு இருக்கிறது. அதில் ஒரு கட்சியார்தான் ஆளுகிறார்கள். பொறுப்புள்ள ஆட்களாக இவர்கள் இருந்தும் வருகிறார்கள். கூட்டுறவு இயக்கத்தில் அதிகமான ஆட்களை சேர்த்து அதை பலப்படுத்த வேண்டும் என்று சமீபத்தில்கூட கூட்டுறவு வாரம் கொண்டாடப்பட்டது. இந்த பாங்குகளில் எல்லாம் ஆட்கள் பணம் போடுகின்றார்கள். ஆனால் அங்கு சில பொறுப்புள்ள ஆட்கள் பணம் போடுகின்றோம், எங்களை மெம்பர்களாக சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்கும்பொழுது அதை ஆளுகின்ற கட்சியார் மெம்பர்களாக சேர்ப்பதற்கு மறுத்துவிட்டார்கள். காரணம் என்னவென்று கேட்டால் சரியாகச் சொல்வதில்லை. இவ்விதம் அங்கே ஒரு கட்சியார் ஆண்டு கொண்டிருக்கிறார்கள். (ஸ்ரீ பி. யு. ஷண்முகம்: இங்கே நீங்கள்தான் ஆண்டு கொண்டிருக்கிறீர்களே!) ஆம், நாங்கள் இங்கே ஆளுவதற்கு பிறந்தவர்கள்தான். நாங்கள் எப்பொழுதும் ஆளத்தான் போகிறோம். நீங்கள் பார்த்து பொறாமைப் படாதிருக்க வேண்டுகிறேன். இவ்விதமாக அந்த பாங்கில் திராவிட முன்னேற்ற கழகத்தவர்களிடமிருந்து 25 மனுக்களையும் வாங்கி, அதோடு இம்மாதிரி பொறுப்புள்ளவர்கள் கொடுத்த மனுக்களையும் சேர்த்து தள்ளிவிட்டார்கள். சர்க்காரிடத்தில் இதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று சொன்னோம். விசாரித்து வருகிறார்கள். இன்னும் தீவிரமாக இதை விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் ஜில்லாவைப் பொறுத்த வரையில் இந்த விவசாய வரியைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். இப்போது துண்டு ஏற்பட்டிருக்கும் பல லட்ச ரூபாய்களை பலவிதங்களிலும் சரிகட்டி விடலாம். நிலத்தை பங்கிட்டு கொடுக்க வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். அது நல்லதுதான். ஆனால் இந்த மாதிரி வரிகள் போடுவதினால் விவசாயிகள் இது சம்பந்தமான அதிகாரிகளிடத்தில் போய்கஷ்டப்படுவார்கள். ஆகவே இந்த துண்டு விழும் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாயில் சில லட்ச ரூபாய்களுக்காக வேண்டி விவசாயிகளிடத்தில் இந்த சுமையை போட வேண்டியதில்லை என்று நிதி அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்கெல்லாம் காரணம் ரீ செட்டில்மெண்ட் செய்யாததுதான். விலைவாசி குறைவாக இருந்த காலத்தில் இதை செய்திருக்க வேண்டியது நிறுத்தப்பட்டது. முன்னால் நெல் மூட்டை மூன்று ரூபாயாக இருந்தது, இன்றைய தினம் 20 ரூபாயாக விற்கப்படுகிறது. கூடிய சீக்கிரத்தில் ரீ செட்டில்மெண்ட் செய்வதற்கு வழி செய்ய வேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் அகில இந்திய சர்க்காருடைய பாலிஸியில் ஸீலிங் ஏற்படுத்த வேண்டும். எல்லோருக்கும் நிலத்தை பகிர்ந்து கொடுத்துவிட்டால் பெருவாரியான நிலங்களை ஒரே ஆள் வைத்துக் கொண்டிருக்க முடியாது. அப்பொழுது இம்மாதிரியான வரிகள் விதிக்கும் படியான நிலைமையும் ஏற்பட்டிருக்காது. தஞ்சாவூர் ஜில்லாவில் அதிகமாக நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் தொண்டைமான் அவர்கள் கூறினார்கள். இவ்விதம் இருந்தாலும் நிலத்தை பங்கீடு செய்யும்பொழுது அதிகமாக நிலம் வைத்திருக்கிறவர்களை பார்க்க முடியாது. ஆகவே நிலங்களை பங்கிட்டு கொடுக்கக்கூடிய முறை வரவேண்டியதுதான். (ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி: தங்களுக்கிருக்கின்ற 200 ஏக்கர் நிலங்களையும் பங்கிட்டு கொடுக்க வேண்டியதுதான்.) நண்பர் அவர்கள் எனக்கு 200 ஏக்கர் இருப்பதாக சொல்லுகிறார்கள். அதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய நிலங்களை பங்கிட்டு கொடுப்பதற்கு என் வீட்டில் ஆட்களை வைத்திருக்கிறேன். (சிரிப்பு.) சாலைகளை எடுத்துக் கொண்டால், பல கிராமங்களிலும் சாலைகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். வருடத்திற்கு 500 மைல்கள் வீதம் போடப்படுகிறது என்று

அறிகிறேன். கூடுதலாக் வரிகள் போட்டாவது நல்ல வசதிகளை செய்து கொடுக்கவேண்டும். நிதி மந்திரி அவர்களிடத்தில் பேசிக் கொண்டிருக்கும் சமயத்தில் சொன்னேன், நாம் பயப்பட வேண்டிய தேவையில்லை, அதிக வரிகளை போட்டு மக்களுக்கு வேண்டியது எல்லாம் செய்து நான்கு வருடம் ஆளலாம். இவ்விதம் செய்துவிட்டு வேண்டுமானால் வெளியே போகலாம் என்று சொன்னேன். மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்ய வேண்டும். கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி ஏதோ சொல்லிவிட்டார்கள். பாலாற்றில் நூற்றுக் கணக்கான வருஷமாகத் தண்ணீர் இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதற்கு தலைவர் அனுமதி கொடுக்க
5–10 p.m. வேண்டும். தஞ்சை, திருச்சியில் பெரு மழை இருக்கும்போது ஸெயின்ட் ஜோஸப் காலேஜெல்லாம் தண்ணீர் வந்துவிடுகிறது. அநேக குடிசைகள் பாழாகிவிடுகின்றன. ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் வெள்ளைக்காரர்கள் காலத்தில் சர்வே செய்யப்பட்டிருக்கிறது ஒரு கால்வாய் வெட்டுவதற்கு. ஸெயின்ட் ஜோஸப் காலேஜ் பக்கம் அதிகமாக தண்ணீர் போகும்போது, தஞ்சையில் அதிகப்படியான தண்ணீர் போகும்போது, அந்தக் கால்வாயை வெட்டித் திறந்து பாலாற்றில் அந்தத் தண்ணீரை விட்டால் எங்கள் பகுதியில் கிணற்றில் தண்ணீர் வந்தாவது அதிலிருந்து இறைத்துக் கொள்வோம். இன்றைய தினம் கிணற்றில் தண்ணீர் வருமா, கோடையில் தண்ணீர் வருமா, வராதா என்ற சந்தேகம் இருக்கிறது. மின்சார அமைச்சரிடம் சொன்னேன். கொடுத்திருக்கிற 14 மணி நேரம் போதும். ஐம்பது ரூபாய் மினிமம் சார்ஜ் கொடுக்கத் தயாராயிருக்கிறோம். மின்சார சக்தி வந்து பல நூற்றுக்கணக்கான கிராமங்களுக்குப் பரவியிருக்கிறது. தண்ணீர் கஷ்டம்தான் என்று நான் அவர்களிடம் சொன்னேன். அந்தமாதிரி உவனைக்கல் வழியாக கால்வாய் வெட்டி பாலாற்றில் கலக்க ஏற்பாடு செய்தால் அந்த இலாகா அமைச்சருக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போமென்று சொல்லிக் கொள்கிறேன்.

வாணியம்பாடியில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. பல வருஷங்களுக்கு முன் பல லட்ச ரூபாய் செலவழித்து கட்டிவிட்டார்கள். அதை சர்க்கார் எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருப்பத்தூர் தலைநகர ஆஸ்பத்திரி செவ்வையாக இல்லை. பெண்கள், ஆண்கள் ஆஸ்பத்திரி இரண்டையும் ஒன்று சேர்த்துவிட்டார்கள். அந்த ஆஸ்பத்திரியை அவர்கள் விரைவாக நல்ல முறையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உப தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

Sri N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது நிதி மந்திரி அவர்கள் தமிழிலே நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதற்கு அவருக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம். அதே சமயத்திலே தமிழ் ஆட்சி மொழி என்று கூறிவிட்டு வரவு செலவு கணக்குகளை ஏன் ஆங்கிலத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதுவும் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இருக்கிறது. அது மட்டுமல்ல, சரியான முறையில் இல்லாமல் டெக்னிகலாக இருப்பதால் ரொம்ப சுலபமாகப் புரிந்து கொள்ளமுடியாது இருக்கிறது. நல்ல முறையில் தயாரித்துக் கொடுத்தால் நலமாக இருக்கும். இப்போது இருக்கும் பட்ஜெட்டை கிராஸ் பட்ஜெட் என்று சொல்வார்கள். அதாவது வருமானம் வருவதற்கு முன்பே பட்ஜெட் போடுவது. இந்த வருஷம் இவ்வளவு வரும் என்று பட்ஜெட்டில் போடுவது. இது நல்லதுதான். இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 35 கோடிக்கு திட்டம் போட்டு, 30 கோடியே சொச்சம் என்று மாற்றி 4 கோடி குறைத்து விட்டார்கள். இந்த ஐந்து வருஷ காலத்திலே இந்த முறையிலே இருக்கிறது. ஆகவே நமக்கு அதிகப் பணம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இல்லை. அது மட்டுமல்ல. நிதி அமைச்சரே ஒப்புக் கொள்கிறார்கள். பல வருஷங்களுக்குப் பிறகு இப்போதாவது தெரிந்ததைப் பற்றிப் பாராட்ட வேண்டும். நமக்கு அதிக அதிகாரம் இல்லை. இன்னும் நில வரி போடலாம். விற்பனை வரி போடலாம். அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது. பாக்கியெல்லாம் மத்திய சர்க்கார் கையில் இருக்கிறது.



வருமானத்தில் அதிகப் பங்கு கேட்டால் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதை இப்போதாவது அரசாங்கம் உணர்ந்ததை பற்றி நான் வரவேற்கிறேன். நம் திட்டங்களை நிறைவேற்ற அதிகப்படியான வரி போடும் உரிமை நம் மாகாண சர்க்காருக்கு இருக்கவேண்டும். அதற்காக நாம் பாடுபட வேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று ஆரம்பித்து நெய்வேலித் திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டுவிட்டு மெழுகிப் பூசியிருக்கிறார்கள். காரணம் என்ன? இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் போடும் நேரத்தில் நெய்வேலியில் கிடைக்கும் கரியை வைத்துக் கொண்டு ஆரம்பிக்கலாம் என்று சொல்லி, இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம், அலுமினியத் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம், பாக்ஸைட் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம், மற்ற கன யந்திரத் தொழில்கள் ஆரம்பிக்கலாம் என்று சொல்லி வந்தார்கள். இன்று அதைப்பற்றி சட்ட சபையில் எதைக் கேட்டாலும் அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அல்லது அங்கு கிடைக்கும் கனிப்பொருளின் தரம் குறைவு என்று பிரெஞ்ச் எக்ஸ்பெர்ட் சொன்னதாகச் சொல்கிறார்கள். உருக்குத் தொழிற்சாலையைப்பற்றி, அது ஜாம்ஷெட்பூரில் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இல்லையென்று பேப்பரில் போட்டிருக்கிறது. அன்றையதினம் நிதி அமைச்சர் அவர்கள் பேசும்போது தனிப்பட்டவர்கள் நடத்தினால் என்ன, நல்லதுதானே என்று சொன்னார். கன யந்திரத் தொழில்கள் பொதுத் துறையில்தான் இருக்கவேண்டும். தனிப்பட்டவர்கள் லாபம் அடைவதை விட அது பொதுத் துறையில் இருந்தால் நல்லது. இன்றைய தினம் சோடா ஆஷ் பாக்டரி தூத்துக்குடி பக்கத்தில் அமைக்கப்போகிறார்கள். அதை அமைக்கும் முன்பே, உப்பளத்தில் வேலை செய்து வந்தவர்களில் 4,000 பேர்களுக்கு வேலை கிடையாது. பிற்பாடு 200,000 பேர்களுக்கு வேலை கொடுக்கப் போகிறார்கள். இப்போது 4,000 பேருக்கு வேலை போய் விட்டது. சேலம் மாக்னஸைட்டைப் பொறுத்த வரையில், அங்கு செங்கல் செய்வதற்கு தனிப்பட்ட கம்பெனி ஒன்றுக்கு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு 600 பேர்களுக்கு வேலை இல்லை. தனியார் துறையில் தொழில் வளர்ச்சிக்குப் பதிலாக வேலை போய்க் கொண்டிருக்கிறது. திமிரி என்ற ஊருக்குப் பக்கத்தில் 40, 50 மைல்களுக்கப்பால் பலவித மணல்கள் இருக்கின்றன. அந்த மணல்கள் ஜாடி முதலியவைகள் செய்ய மிகவும் பயன்படக்கூடியது. சர்க்காருக்கு இதைப்பற்றித் தகவல் வந்ததோ இல்லையோ தெரியாது. சர்க்கார் உடனடியாக எக்ஸ்பர்டை அங்கு அனுப்பி என்ன தொழில்கள் ஏற்படுத்த வேண்டுமென்று முடிவு செய்யலாம். தொழில் மந்திரி அவர்கள் பேசும்போது சொன்னார்கள், நெய்வேலியில் 2,000 உப தொழில்கள் ஏற்படுத்த முடியும் என்று. யாராவது முதலீடு போட்டால் உதவி செய்கிறோம் என்று சொன்னார்கள். இரண்டு, மூன்று வருஷத்தில் எந்த முதலாளியும் வரவில்லை. புதுத் தொழில்கள் ஆரம்பித்து லாபம் அடைவதைவிட, 100 ரூபாய்க்கு ஷேர் வாங்கினால் அவர்களுக்கு 30 ரூபாய் லாபம் வருகிறது. நீங்கள் பாதி ஷேர் போடுங்கள், சர்க்கார் பாதி போடும் என்று சொன்னார்கள். யாரும் முன் வரவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 25 லட்சம் இதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக உணவுப் பிரச்னை. அது 470 புள்ளியிலிருந்து இன்றைக்கு 512 புள்ளியாக ஏறியிருக்கிறது என்று சர்க்காரே சொல்லியிருக்கிறார்கள்.

இங்கு இருக்கும் 800 ரிலீப் ஷாப்களை (relief shops) ஏன் மூட 5–2 p.m.
வேண்டும் என்று நான் கேட்கிறேன். இந்த விஷயத்திலும் சர்க்காரின் திருப்தி மனோபாவம்தான் காரணம்.

இன்றைய தினம் உண்மையிலேயே பல இடங்களில் உற்பத்தி குறைந்து இருக்கிறது. போதுமான மழை கிடையாது. கடலை மற்றும் சில பொருள்கள் எல்லாம் உற்பத்தி குறைந்து இருக்கிறது. அரிசி மட்டும் இரண்டு லக்ஷம் டன்கள் அதிகமாக இருப்பதாக எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். சில நாட்களுக்கு முன் குடந்தையில் அரிசி விலையில் திடீர் சரிவு என்று

[Sri N. K. Palanisami] [5th March 1958

போட்டிருந்தது. உண்மையிலேயே விலை ஒன்றும் அதிகமாக குறைய வில்லை. மூட்டைக்கு நான்கு அணுதான் குறைந்து இருக்கிறது. சாதாரண மான அரிசியின் விலை பதிமூன்று அணு. சுமாரான அரிசியின் விலை ஒரு ரூபாய். நல்ல அரிசியின் விலை ஒரு ரூபாயாக இருக்கிறது. ஆனால் பேப்பரில் மட்டும் அரிசி விலையில் திடீர் சரிவு என்று போடப்பட்டு இருக்கிறது. சர்க்காரும் அரிசி விலையில் சரிவு ஏற்பட்டிருப்பதாகத்தான் சொல்கிறார்கள். ஆனால் உண்மையில் விலை ஏறிக்கொண்டுதான் இருக்கிறது. ஆகவேதான் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு பல விதமான கடன் வசதிகள் கொடுப்பதற்கும், அதன் மூலம் உணவு உற்பத்தி பெருகுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு விவசாயிக்கும் 10 எக்கர் நஞ்சை 25 எக்கர் புஞ்சை இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்தப் பொருள்களுக்கு நியாயமான குறைந்த விலை கிடைக்க ஏற்பாடு செய்தால்தான் விவசாயிகளுக்கு உணவு உற்பத்தியைப் பெருகுவதற்கு தெம்பு ஏற்படும். இந்த விஷயத்தில் உடனடியாக நிலச் சீர்திருத்தம் வேண்டும். "அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ்" போட்டு இருக்கிறோம். தாற்காலிகமானதுதான் என்றும், சீலிங் கொண்டுவரப் போகிறோம் என்றும் சொல்கிறார்கள். அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் போட்டது நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவராமல் தடை செய்வதற்குத்தான். 1954-ம் வருஷம் கனம் காமராஜ் அவர்கள் முதல் மந்திரியாக பதவி ஏற்றபோது ஒரு காங்கிரஸ் சப்-கமிட்டி ஏற்படுத்தி இம்மாகாணத்தில் அதிகபட்ச நில வரம்பு எவ்வளவு இருக்க வேண்டும் என்று பரிசீலிக்கப்பட்டது. மூன்று வருஷங்கள் ஆகியும் இந்த விஷயத்தை இன்னும் தள்ளிப் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். 1954-ம் வருஷத்திய "Review of the Administration of Registration Department"-படி நிலங்கள் அடிக்கடி கைமாறிக் கொண்டு இருக்கின்றன. ஆகையால் நில வரம்பைப் பற்றிய சட்டத்தை உடனே கொண்டுவர வேண்டும். சிறு விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் நிலச் சீர்திருத்தம் செய்யவேண்டும். மூவாயிரம் ரூபாய் என்று இருக்கும் டாக்ஸேஷன் லிமிட்டை இன்னும் கொஞ்சம் அதிகமாக்கலாம். இன்று ஒரு தொழில் அதிபர் ஒரு ரூபாய்க்கு ஒன்பது அணு முதல் பதினொரு அணு வரை சர்க்காருக்கு வரி கட்டுகிறார். அப்படி இருக்கும்போது சிறு நிலச்சுவான்தார்கள் ஏன் இரண்டணு முதல் நான்கு அணு வரை வரி கட்டக் கூடாது என்று நான் கேட்கிறேன்.

விவசாயிகளுக்கு கடன் உதவிக்காக திட்டங்கள் இருப்பது வாவேற்கக் கூடிய அம்சம். ஆனால் இவைகளின் மூலம் விவசாயிகளுக்கு உள்ள கஷ்டம் தீரவில்லை. தற்போது இருக்கக்கூடிய கடன்களை தீர்ப்பதற்கான "Scaling down of debts" சட்டம் ஒன்று கொண்டுவர வேண்டும். விவசாயிகளுக்கு நியாயமான முறையில் இவைகளைச் செய்ய வேண்டும். "Minor Irrigation" க்காக 70 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்த விஷயத்தில் சர்க்காருக்கு சரியான திட்டங்கள் கிடையாது. மத்திய சர்க்காருக்கு பணம் திருப்பிக் கொடுக்க வேண்டிய பரிதாபகரமான நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. நம் மாகாணத்தில் நிறைய குளங்கள் இருக்கின்றன. அவைகள் சரியாக பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அவைகளை சரியான முறையில் ரிப்பேர் செய்து பராமரிப்பதற்கு அதிக தொகை ஒதுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம் மாகாணத்தில் இருக்கக்கூடிய என்.ஜி.ஓ.-வினருக்கு மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு கிடைக்கக்கூடிய அலவன்ஸ் கொடுக்க வேண்டும். கனம் மந்திரி அவர்கள் சில சலுகைகளை கொடுப்பதாகச் சொல்லிய போதிலும் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கலியாணம் செய்துகொள்ள நிலைமையில்கூட இல்லை. பதினொரு வருஷங்களுக்கு முன்பு அப்பொழுது இருந்த விலை வாசிகளுக்கு ஏற்றபடி Dearness Allowance கொடுக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது விலைவாசிகள் எல்லாம் ஏறியும்கூட அலவன்ஸ் அதிகமாக்கப்படவில்லை. ஆகவே இம்மாதம் 19-ந் தேதி என்.ஜி.ஓ.-வினர் கிளர்ச்சி செய்யப் போகிறார்கள். நம் நாட்டு என்.ஜி.ஓ.-வினர் நிதி மந்திரியையும் முதல் மந்திரியையும் பார்த்த பொழுது அவர்கள் கை எழுத்துகூட போடமாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். இன்று, நிர்வாகத்தை சரியாக நடத்த நமக்குத் தெரியவில்லை.



5th March 1958] [Sri N. K. Palanisami]

நிர்வாகத்தை சரியான முறையில் நடத்துவது எப்படி என்பதை நாம் உடனடியாக ஆராய வேண்டும். என்.ஜி.ஓ.-வினருக்கு அலவன்சில் 25 சத விகிதம் கூட்டிக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் இதில் ஒரு போராட்டம் ஏற்படும் என்று நான் சர்க்காருக்கு எச்சரிக்கை செய்கிறேன். Electricity Workers விஷயத்தில் Labour Commissioner-ன் Report வந்திருக்கிறது. இதில் 30,000 பேர் இருக்கிறார்கள். இன்டரிமாக பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் தங்களுடைய பொறுப்பை ஒப்புக்கொண்டு ஸ்டிரைக் முதலியவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும்.

கோடம்பாக்கத்தில், ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டருக்கும், தனிப்பட்டவருக்கும் உள்ள தகராறு காரணமாக, அவர் பேரில் திருட்டுக் குற்றம் சாட்டி, அவரை விசாரிக்காமலே அடித்துப் போட்டு கொன்று இருக்கிறார்கள். தலைமை நகரத்தில் முதல் மந்திரியும் போலீஸ் மந்திரியும் இருக்கக் கூடிய இடத்திலேயே நிலைமை இப்படி என்றால் மற்ற இடங்களிலுள்ள நிலைமை எப்படி இருக்கும் என்று ஊகித்துக் கொள்ளலாம். அவர்கள் என்ன செய்தாலும் சர்க்கார் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிறார்கள். இந்த விஷயத்தில் சர்க்கார் விசாரணை செய்து நியாயம் வழங்க வேண்டும்.

**DEPUTY SPEAKER:** The hon. Member may resume his seat.

* **Sri K. S. SUBRAMANIA GOUNDER:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற 5–30
வரவு செலவு திட்டத்தை வரவேற்று சில வார்த்தைகளை பேச விரும்பு p.m.
கிறேன். இந்த ஆண்டு சமர்ப்பித்த வரவு செலவு திட்டத்தைப்போல் இது வரையிலும் சமர்ப்பித்தது இல்லை. இந்த வரவு செலவு திட்டம் அவ்வளவு சிறந்தது என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் இதில் பல புதிய அம்சங்கள் இருக்கின்றன. அதே சமயத்தில் நம்முடைய ராஜ்யத்தின் வருவாயை எவ்வளவு தூரம் செலவு செய்வதற்கு ஒதுக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் ஒதுக்கி அதையும் பூரணமாக செலவு செய்யப்பட்டு வருகிறது என்பதை குறிப்பிட்டிருப்பது மிகவும் போற்றத் தக்கது என்று சொல்ல வேண்டும். பணத்தை ஒதுக்கி விட்டு செலவு ஆகவில்லை என்று சொன்னால் உண்மையிலேயே அது வருந்தத்தக்க விஷயம். அப்படி இல்லாமல் எவ்வளவு பணம் ப்ளானிங்கில் ஒதுக்கி இருக்கிறதோ அது பூராவும் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அது உண்மையிலேயே போற்றத் தக்க விஷயம் என்றுதான் சொல்ல வேண்டும்.

குறிப்பாகப் பார்க்கும்போது வரவு செலவு திட்டத்தில் ஒரு கோடி ஐந்து லட்சம் ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது. அதற்காக சில வரிகளைப் போட வேண்டும் என்று ஒரு அளவு போட்டிருக்கிறார்கள். சாதாரணமாக நம் நாட்டின் சுபிட்சத்திற்காக சில வேலைகளைச் செய்வதற்காக சில வரிகளைப் போட்டுத்தான் தீர வேண்டும். அதை நாம் தவிர்க்க முடியாது. ஆனால் எந்த அளவு போடவேண்டும் என்பதைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். ஆனால் நாட்டின் சுபிட்சத்திற்கு வரிகள் போட வேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக விவசாயிகளை பாதிக்காத நிலைமையில் ஏதாவது வரிகள் போட முடியுமா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். ஏனென்றால் டீசல் ஆயிலுக்குப் போட்டிருக்கக் கூடிய வரி விவசாயிகளை ஓரளவு பாதிக்கக்கூடிய அளவில் இருக்கிறது. அதற்கு விதி விலக்கு அளிக்க முடியும் என்று கனம் மந்திரி கருதினால் அதை ஆராய்ந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாய வருமான வரியைப் பொருத்த வரையில் அதிகப்படியான நிலம் வைத்திருக்கக் கூடியவர்கள் ஓரளவு வரி கொடுத்துத்தான் ஆக வேண்டும். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் விவசாயிகள் கணக்கு வைத்துக்கொள்வது என்பது கஷ்டமாக இருக்கிறது. கணக்கு எழுதாமல் இருக்கக்கூடிய அளவில் ஏதாகிலும் வரி முறையை திருத்தி அமைக்க முடியுமா என்பதை கனம் மந்திரி அவர்கள் ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் ஏற்கெனவே சர்சார்ஜ் ஆன் லாண்ட் ஹோல்டிங்ஸ் (Surcharge on Land Holdings) என்று அதிக

வரி செலுத்துகின்ற நில வரி இருக்கிறது. அதையே இன்னும் அதிகப்படுத்தி அதிக வருமானம் வரக்கூடிய அளவில் வரியை உயர்த்த வேண்டும் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சேலம் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் மற்ற ஜில்லாக்களைக் காட்டிலும் நிலப்பரப்பிலும், ஜனத் தொகையிலும் அது பெரிய ஜில்லாவாக இருக்கிறது. ஆனால் அங்குள்ள தேசிய அபிவிருத்தி திட்டத்தை எடுத்துக்கொண்டால் சேலம் ஜில்லாவில்தான் எல்லாவற்றையும்விட குறைவான ப்ளாக்குகள் இருக்கின்றன. சேலம் ஜில்லாவில் இந்த ஆண்டு மிகவும் குறைவான மழை பெய்திருக்கிறது என்பதை கனம் மந்திரி அவர்களே தன்னுடைய பட்ஜெட் உரையில் காட்டியிருக்கிறார்கள். அதனால் அங்கு விளைச்சல் மிகவும் குறைவாக இருக்கிறது. இந்த நிலைமையில் அங்கே சில பகுதி களில் பஞ்சமே இருக்கிறது. இப்படி பல இடங்கள் இருக்கின்றன சேலம் ஜில்லாவில். அதனால் சேலம் ஜில்லாவில் அதிகமான என்.இ.எஸ். ப்ளாக்குகளை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் இப்பொழுது அங்கே குறைவாக இருக்கின்றன. குறைவாக இருக்கின்ற காரணத்தால் அந்த ஜில்லாவில் அதிகப்படியான என்.இ.எஸ். ப்ளாக்குகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சேலம் ஜில்லா எடப்பாடி பிர்க்காவை பல தடவை கலெக்டர் சிபாரிசு செய்திருக்கிறார். அதை இன்னும் எடுத்துக்கொள்ளாமல் இருப்பது வருந்துதற்குரிய காரியமாக இருக்கிறது. எடப்பாடி பிர்க்கா மேட்டூர் கால்வாய் பிரதேசம். அதன் காரணத்தால் உடனடியாக இந்த பிர்க்காவை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. எங்கே யெல்லாம் நீர்ப்பாசன வசதி இருக்கிறதோ அந்த இடங்களுக்குத்தான் இதற்கு முதலிடம் கொடுப்பதாக தெரிய வருகிறது. ஆகையினால் எடப்பாடி பிர்க்காவையும் அத்துடன் எடுத்துக்கொண்டு அங்கே என்.இ.எஸ். ப்ளாக்கை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ஆண்டிலேயே சேலம் ஜில்லாவில் புதியதாக அதிகப்படியான ப்ளாக்குகளை எடுத்துக்கொண்டால் மற்ற ஜில்லாக்களுக்கு இருக்கக்கூடிய அளவுக்கு சமமாகக் கொண்டு வர முடியும என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எடப்பாடியைப் பொருத்தவரையில் அது ஒரு பெரிய பஞ்சாயத்தாக இருக்கிறது. அது கூடிய சீக்கிரத்தில் நகர சபையாகக்கூடிய இடமாகவும் இருக்கிறது. அதனால் அங்கே குடிதண்ணீர் திட்டம் வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். குடிப்பதற்கு பயனற்றதாக இருக்கிறது அங்கு கிடைக்கக்கூடிய தண்ணீர். நல்ல குடி தண்ணீர் வேண்டும் என்று கருதினால் மூன்று மைல் தூரத் திற்குச் சென்று கிணறுகளிலிருந்து கொண்டு வர வேண்டியதாக இருக் கிறது. எடப்பாடியில் ஏழு மைலிலிருந்து காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு ஒரு திட்டம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. அதன் எஸ்டிமேட் சுமார் 8½ லட்சம். அதற்காக அரசாங்கத்தைக் கேட்டிரு க்கிறார்கள். பூராச் செலவையும் பஞ்சாயத்தே ஏற்க முடியாது, அப்படி ஏற்று நிறைவேற்றுவதற்கு சாத்யம் இல்லை என்ற காரணத்தால் அந்தப் பஞ்சாயத்துக்கு 20 வருஷ தவணையில் திருப்பிக்கொடுக்கக்கூடிய முறையில் கடனைக் கொடுத்து உதவ வேண்டும். திட்டத்தை உடனடியாக அமல் நடத்த வேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக சங்கரிக்கு உள்ள முன்சீப் கோர்ட் ஜில்லாவின் தலை நகரமாகிய சேலத்தில் இருக்கிறது. அந்த முன்சீப் கோர்ட்டின் பெயர் " சங்கரி முன்சீப் கோர்ட் அட் சேலம் " என்று பெயர் வைத்திருக்கிறார் கள். இப்பொழுது சுப்ரீம் கோர்ட்டை மற்ற பிராந்தியங்களிலும் மொபைல் கோர்ட்டாக அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கும் காலத்தில் சங்கரி முன்சீப் கோர்ட்டை சேலத்தில் வைத்திருப்பதானது சரியல்ல. முன்சீப் கோர்ட்டுக்கு சங்கரியிலிருந்து போவதாக இருந்தால் சுமார் 25 மைல் தூரம் போக வேண்டியதாக இருக்கிறது. இது நியாயம் இல்லாத காரியம். இதைப்பற்றி சில வருஷங்களுக்கு முன்னதாக அரசாங் கத்திற்கு தெரிவிக்கப்பட்டு 1937-ம் வருஷம் அரசாங்கம் இதைப்பற்றி சிந்தித்துப் பார்த்துவிட்டு கொண்டு வருவதற்கு ஒரு முடிவு செய்யக்கூடிய காலத்தில் அங்குள்ள வக்கீல்கள் இதை ஆட்சேபித்ததால் அதைக் கொண்டு





வருவதை கை விட்டு விட்டார்கள். அதன் பிறகு சேலத்திலேயே அதை வைத்து விட்டார்கள். பல முறை இதைப்பற்றி எடுத்துச் சொல்லியும் வக்கீல்களுடைய சௌகர்யத்திற்காக அங்கேயே வைத்திருப்பது என்பது நியாயம் இல்லை. அதனால் சேலத்திலுள்ள சங்கரி முன்சீப் கோர்ட்டை சங்கரிக்கே உடனடியாக மாற்றி அமைக்க வேண்டும் என்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சேலம் ஜில்லாவில் குறிப்பாக நாமக்கல் தாலூகாவில் கரும்பு விளைச்சல் அதிகமாக இருக்கிறது. பட்ஜெட் உரையில் அடுத்த மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை அமைக்க திட்டமிட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் ஒன்றை சேலம் ஜில்லா, நாமக்கல் தாலூகாவில் கூட்டுறவு முறையில் ஒன்றை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி வைக்கலாமா என்று பரிசீலனை செய்து அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள். அதைப் பதிவு செய்ய வேண்டும் என்று ரிஜிஸ்தராரைக் கேட்டு அவரும் ஒப்புக்கொண்டு அந்தப் பேப்ரும் இப்பொழுது அரசாங்கத்தினிடம் இருக்கிறது. நாமக்கல் தாலூகாவில் மற்ற இடங்களில் இருக்கும் விளைச்சலைக் காட்டிலும் அதிகமாக கரும்பு விளைச்சல் இருப்பதால் அங்கேயே அதை அமைத்துக்கொடுக்க வேண்டும். நாமக்கல் தாலூகாவில் விளையக்கூடிய கரும்பில் அதிகப்படியான சுக்ரோஸ் சத்து இருக்கிறது. அதுவும் மற்ற எல்லா இடங்களில் இருப்பதைவிட அதிகமாக இருக்கிறது. அதனால் நாமக்கல் தாலூகாவிலேயே சர்க்கரை ஆலை ஒன்றை கூட்டுறவு முறையில் அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இது இப்பொழுதுள்ள திட்டத்தில் சேர்க்கப்படாமல் இருப் பது சேலம் ஜில்லாவாசிகளுக்கு பெரும் குறையாக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதனால் அதை வெகு சீக்கிரத்தில் திறப் பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சேலத்தில் இந்த ஆண்டு பருவ மழை குறைவாக பெய்திருக்கிறது என்பதை கனம் மந்திரி அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார். அப்படி இருந்தும் அங்கே நியாய விலைக் கடைகளை திறக்கவில்லை. ஆனால் மற்ற எல்லா ஜில்லாக்களிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. சேலம் ஜில்லாவின் நிலை மிகவும் மோசமாக இருந்தும்கூட அங்கே திறக்காமல் இருப்பது வருந்தத்தக்க விஷயமாக இருக்கிறது. அங்குள்ள கலெக்டர் அவர்கள் திறக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. சேலத்தில் இருக்கும் நிலைமையை எடுத்துக்கொண்டால் அதிகப்படியாக கடைகளை திறந்திருக்க அனுமதி வேண்டும் என்றுதான் சொன்னார். சேலம் ஜில்லாவில் அதிகப் படியாக கடைகளை திறக்காமலிருப்பது சரியல்ல என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சேலம் ஜில்லாவிலே, சேலம்-ஈரோடு எலெக்ட்ரிஸிடி கம்பெனி இன்னும் 5-40
மின்சார விநியோகத்தைச் செய்து வருகின்றார்கள். சேலம், ஈரோடு போன்ற p.m.
பகுதிகளிலே அதிகமான மின்சாரம் தேவைப்படுகிறது என்று சொல்ல வேண்டும். கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கக்கூடிய விவசாயிகள் அப் பகுதிகளில்தான் அதிகமாக இருக்கிறார்கள். அந்த இடத்திலே கம்பெனியே நிர்வாகத்தை நடத்தி வருவதால் புதிதாக ' கனெக்ஷன் ' கொடுப்பது என்பது சாத்தியம் இல்லாமல் இருக்கிறது. அவர்களைக் கேட்டால், " ஏதோ அரசாங்கத்திடமிருந்து பத்து லட்சம் ரூபாய் கடன் கேட்டிருக்கிறோம், அது வந்தால் பூரணமாகச் செய்து விடுகிறோம் " என்று சொல்கிறார்கள். அப்படி வந்தாலும் எத்தனை கிராமங்களுக்குக் கொடுக்க முடியும் என்று பார்த்தால், மூன்று நான்கு கிராமங்களுக்குக் கொடுக்க முடியுமே தவிர எல்லா இடங்களுக்கும் கொடுத்துவிட முடியாது. 1958-59-ம் வருஷத்திலே அதை எடுத்துக்கொள்வதாக அவர்களுக்கு ஏற்கனவே நோட்டீஸ் கொடுத் திருக்கிறார்கள். அதைக் காலதாமதம் செய்யாமல் கண்டிப்பாக 1958-59-ம் ஆண்டிலேயே, அரசாங்கமே எடுத்து, அந்தப் பகுதிக்கு " பாப் ப்ளையாரிடி " கொடுத்து அங்கு மின்சார விஸ்தரிப்பு செய்வதற்கு வேண் டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறிய நீர்ப்பாசன வசதிகளை எடுத்துக் கொண்டால், குறிப்பாக சேலம் ஜில்லாவிலே பல ஜமீந்தாரி ஏரியாக்கள் இருக்கின்றன. அங்கேயிருக்கும் குளங்களெல்லாம் மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும். அயல் கிராமங்களிலே இருக்கும் ஏரிகள் எவ்வளவு நன்றாகப் பராமரிக்கப்படுகின்றனவோ அந்த அளவு ஜமீந்தாரி ஏரியாக்களில் இருக்கும் ஏரிகள் பராமரிக்கப்படுவதில்லை. ஆகவே, இதையும் அரசாங்கம் கவனித்து, எல்லா ஜமீன்தாரி இடங்களிலும் உள்ள ஏரிகளையும் நல்ல முறையிலே பராமரிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"அனிமல் ஹஸ்பண்ட்ரி" விஸ்தரிப்பைப் பொறுத்த வரையில் **Key Village Scheme** சேலம் ஜில்லாவில், ஹோசூர் தாலூகாவிலே நல்ல முறையிலே வேலை செய்து வருகிறது. விவசாயிகளும் நல்ல முறையிலே அதைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். திருச்செங்கோடு, நாமக்கல் போன்ற இடங்களிலும், காங்கயம் ரக மாடுகள் இருப்பதால் **Key Village Scheme**-ஐ திருச்செங்கோடு, நாமக்கல் தாலூகா போன்ற இடங்களிலும் விஸ்தரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சேலம் ஜில்லாவில் இரும்புத் தொழிற்சாலை சீக்கிரமாக வர வேண்டுமென்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். அத்திட்டத்தை எந்த விதமான காலதாமதமும் செய்யாமல் உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் எல்லா விதமான முயற்சிகளும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அங்கே அலுமினியம் தொழிற்சாலையையும் இந்த ஆண்டிலேயே முடிந்தால் எடுத்துக்கொள்வது நல்லது என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், எந்த இடத்திலே வைப்பது என்ற விவகாரங்கள் எல்லாம் இப்பொழுது ஓரளவுக்கு முடிந்துவிட்ட காரணத்தால், அதிலே எந்தவிதமான காலதாமதமும் செய்யாமல், அதை அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக் கொள்ளுகின்றேன்.

**SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM:** சட்ட மன்ற உப தலைவர் அவர்களே, நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பித்திருக்கும் நிதி நிலை அறிக்கையின் மீது பல எதிர்த்தரப்பிலுள்ள அங்கத்தினர்கள் பல மூலைகளிலும், பல கோணங்களிலும், பலவாறு ஏற்றியும் ஏற்றாமலும், தூற்றியும் தூற்றாமலும் பேசக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

நிதி நிலை அறிக்கையில் ஓட்டை உடைசல்களைக் காண முடியாவிட்டாலும், பக்கங்களிலே வித்தியாசத்தை போன ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் கண்டார்கள்; காகிதத்தின் பளபளப்பை அதிகமாகவும் குறைச்சலாகவும் கண்டார்கள்; அச்சுப் பிழை ஆபாசத்தையும் காணுவதாக எடுத்துச் சொன்னார்கள். அதோடு மட்டுமல்லாமல், நிதி நிலை அறிக்கையை எடுத்து பேசுந்தோறும் எதிர்த் தரப்பிலிருக்கும் அங்கத்தினர்களில் அதிகம் பேர் மழையையும் மந்திரியையும் தொடர்புப் படுத்திப் பேசியதையும் கேட்டுக் கொண்டிருந்தோம்.

இந்திய நாட்டை எடுத்துக்கொண்டோமானால், விவசாயத்தை இன்றியமையாத தொழிலாகக் கொண்ட நாடு. விவசாயத்திற்கு மழை இன்றியமையாதது, அச்சாணி போன்றது என்பதை நம் நாட்டிலே அன்று தொட்டு இன்று வரை அறிந்து, அதன்படி பயிரிடுவோர் தங்களுடைய சிரத்தையும் கண்ணும் கருத்தும் எப்போதும் வானத்தை நோக்குகின்ற எண்ணத்தைப் படைத்திருக்கிற பண்பாடு நம் நாட்டிலே என்றென்றும் இருந்து வந்திருக்கிறது என்பது பல வாழ்க்கைப் பழக்கங்களிலேயிருந்து தெரிய வருகிறது; பெரிய பொருளாதார நிபுணர்களும் கூறியிருக்கிறார்கள். நம் நாட்டில் விவசாயத்தைப்பற்றிச் சொல்லும்போது "**In India, agriculture is a gamble in rains**" என்று சொல்லியிருக்கிறார்கள். நம் நாட்டிலே விவசாயிகளுக்கு மழையானது இன்றியமையாத சாதனம் ஆகும். வீட்டுக்கு விருந்தாளி வந்தால்கூட, முதலிலே வந்தவுடன், "என்ன, உங்கள் சீமையிலே மழை உண்டா? தண்ணீர் உண்டா?" என்று கேட்கும் பழக்கம் இன்னும் இருக்கின்றது. வீட்டில்



மட்டுமல்ல, நாட்டை ஆளும் மன்னரின் முடியாட்சியிலும், இன்று மக்கள் ஆட்சியிலும் அந்த நாள் தொட்டு இந்த நாள் வரையிலும் நாம் பார்க்கின்றோம்.

விவசாயத்திற்கு மழை இன்றியமையாத சாதனமாக இருப்பதோடு, அந்த நாளிலே நாட்டை ஆண்ட மன்னர்கள் நாடகத்திலே இன்று கூறுகிறபடி "என்ன மந்திரி! மாதம் மும்மாரி பெய்கிறதா?" என்று கேட்கும் வழக்கத்தை இன்று வரையிலும் சொல்லி நாம் கேட்கும் இந்த நாளிலே, ஏதோ மழையை மந்திரி பயன்படுத்திக் கொண்டார், பருவ நிலையை மந்திரி பயன்படுத்திக் கொள்ளும் வகையிலே, அதை எடுத்துக்கொண்டு நிதி நிலை அறிக்கையின் முதலிலே பஜனை பாட ஆரம்பித்திருக்கிறார் என்று எதிர்த்தரப்பிலேயிருந்து பேசுவது வியக்கத் தக்கது. ஆனால், நான் எண்ணுகிறேன், இந்த நிதி நிலை அறிக்கையிலே எதிர்க் கட்சித் தோழர்களுக்கென்றே இத்தகைய சில வாய்ப்புகள் கொடுத்திருக்கிறார் என்று. நிதி நிலை அறிக்கையிலே அவர்கள் பேசுவதற்கு வேறு ஒன்றும் இல்லாவிட்டாலும் பருவ நிலையையாவது எடுத்துப் பேசுவதற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற நினைப்பினாலேயோ என்னவோ நிதி மந்திரி அவர்கள் அவ்வாறு அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

நிதி நிலை அறிக்கையைப்பற்றிப் பேசும்போது ஹரிச்சந்திர மயான காண்டத்திலேயிருந்து வள்ளிதிருமணம் வரையிலும் சொல்லி முடித்தார்கள் சிலர். இம்மாதிரியாக பல விதத்திலே பேசும்போது, ஏதோ வருமானத்தைப்பற்றியும் பேசினார்கள். இந்நாட்டிலே சராசரி வருமானம் என்ன என்பதை எடுத்துச் சொல்லும்போது ஐஸ்லண்டைப் பற்றியும், கிரீன்லண்டைப் பற்றியும் சொன்னார்கள். ஏதோ 'ட்ரீம்லண்டு' லிருந்து சொன்னார்களோ என்று நினைக்கத் தக்க வகையில் அவர்கள் பேசினார்கள். அண்டார்ட்டிக் ஸர்க்கிளிலே உள்ள தென் துருவத்திலே இருப்பவர்களின் வருமானத்தைப்பற்றியும் பேசியிருப்பார்களானால், ஐஸ்லண்டையும் விட அதிகமாக இருந்திருக்கும். ஏனென்றால் அங்கிருப்பவர்களே மொத்தம் நான்கு பேர்கள்தான்.

இம்மாதிரியாக நிதி நிலை அறிக்கையிலே பேசும்போது அவர்களுக்கு ஒரு விதத்திலேயும் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாத வகையிலே இந்த அறிக்கையை நமக்குச் சமர்ப்பித்திருக்கிற நிதி மந்திரி அவர்களுடைய மதியை நாம் மெச்சத்தான் வேண்டும்.

நியாய விலைக் கடைகளைப் பற்றி அவர்கள் பேசும்போது, "அவைகள் அடைக்கப்பட்டு விட்டனவே, ஏன் திறந்து வைக்கப்படவில்லை?" என்று சொல்வது மிகவும் வியக்கத்தக்க வகையிலே இருந்தது. அளவு சாப்பாடு போடுகிறார்கள் என்று சில அங்கத்தினர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள். மூட்டை நான்கு ரூபாய் விற்ற தருணத்திலும் அளவு சாப்பாடு போடக்கூடிய மன அளவு உடையவர்கள் அளவு சாப்பாடுதான் போட்டார்கள். இருபது ரூபாய் விற்ற நிலையிலும் அவர்கள் அளவு சாப்பாடு போடக்கூடிய மன அளவு கொண்டவர்கள் அவ்வாறுதான் போடுவார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே, இந்த நாட்டை முன்னேற்றத்திற்கு கொண்டு வருகிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. பெரிய பாசனங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, சிறிய பாசனங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, முன்னேற்றம் காணப்படுகிறது. உணவு உற்பத்தியை எடுத்துக் கொண்டாலும் சரி, 1955–56-ல் உணவு உற்பத்தி 44 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. நமது ராஜ்யத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு ஒரு பவுண்டு தேவை என்று கணக்கிட்டால், 48 லட்சம் டன் நமக்கு அரிசி வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது, இன்னும் குறைபாடு உள்ளது ஒரு சிறிய அளவே என்று நோக்கும்போது நாம் மகிழ்ச்சியுறாமல் இருக்க முடியாது. அகில இந்தியா பூராவும் எடுத்துக் கொண்டு பார்த்தால் ஏக்கருக்குச் சராசரியாக 250 பவுண்டு என்று இருக்கும்போது, இந்தியாவிலே உள்ள எந்த ராஜ்யத்தையும்விட நம் ராஜ்யத்தை முதல் நிலையிலே நிற்கச் செய்து, ஏக்கருக்கு 1,250 பவுண்டு விளைச்சலைக் காட்டித் தந்த பெருமை நம் விவசாய மந்திரி அவர்களைச் சாரும்.

இயற்கை வளம் இன்று இல்லையே என்ற மனக் குறைதல் இருக்கிறது என்று நிதி அமைச்சர் மிக அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். திட்டங்கள் இல்லையே என்று அலுத்துக் கொள்ளுகிறார். இயற்கை வளம் இல்லாததால், நாம் திட்டம் வகுக்க முடியாத நிலைமையில் இருக்கிறோமே என்று நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பது எதிர்க் கட்சியில் இருப்பவர்களுக்குச் சவால் விடுவது போறு அமைந்திருப்பது நாமெல்லோரும் வரவேற்கத்தக்க அம்சமாக இருக்கிறது.

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள் கூட தென்னாட்டுக்குப் பயனடையத்தக்க வகையிலே அவைகளை அமைப்பதற்கு பேச்சு வார்த்தைகள் நிகழ்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர்களுடைய சாதுரியத்தாலும், சாமர்த்தியத்தாலும், சாகசத்தாலும் இது விஷயத்தில் நமக்கு மகிழ்ச்சிகரமான ஒரு வெற்றியைத் தேடித் தருவார்கள் என்று

5-50 p.m. நாமெல்லோரும் நம்பியிருக்கலாம். அதோடுகூட சிறிய பாசனத் திட்டங்களை எடுத்துக் கொண்டால் 70 லட்சம் அனுமதித்திருப்பது போற்றத்தக்கது. முக்கியமாக குளங்கள் எல்லாம் இப்போது தாம்பாளமாகிவிட்டன. கிணறுகள் வற்றி வறண்டு கிடக்கின்றன. வாய்க்கால்கள் எல்லாம் வறண்டு போனதோடு மட்டுமல்லாமல் வரப்பு இருந்த இடம் தெரியாமல் தரையோடு தரை மட்டமாக இருக்கின்றன. இந்த சமயத்தில் சிறிய நீர்ப்பாசன வசதிகளை பெருக்குவதற்காக 70 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க அம்சமாகும். பலவாண்டு காலமாக இதைப்பற்றி பேசி வருகிறோம். பேசிப் பேசி பலர் அலுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இப்போது ஓரளவு திருப்தி ஏற்படும் என்று நம்புகிறேன். திருநெல்வேலியை எடுத்துக் கொண்டால் என்னுடைய தொகுதியில் மானூர்குளம் இருக்கின்றது. சமுத்திரத்தை ஒத்தது அது என்று ஸ்ரீ கக்கன் அவர்கள் நேரில் பார்வையிட்டபோதே சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குளத்திற்கு மூன்று வாய்க்கால்கள் வெட்ட எஸ்டிமேட் தயாராகி யிருக்கிறது. ஒரு லட்சத்திற்கு மேலாக எஸ்டிமேட் இருக்கிறது என்று என்ஜினியர்கள் சொன்னார்கள். சிறிய நீர்ப் பாசன திட்டத்தில் இந்தக் குள மராமத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்.ஜி.ஓ.-க்களுக்கு இப்போதே 15 ரூபாய் வரையில் கொடுத்திருக்கிறோம். உயர்நிலைப் பள்ளி வரை அவர்களுடைய குழந்தைக்கு இலவசப் படிப்பு என்றால் அந்தச் சம்பளம் ஒரு குழந்தைக்கு ஏழு ரூபாய் ஆகிவிடும். ஆகவே 22, 25 ரூபாய் வரையில் ஆகிவிடுகிறது என்பது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

மத்தியான உணவு பள்ளி மாணவர்களுக்குக் கொடுப்பதற்காக இருபது லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிற்பகலில் உணவு கொடுப்பதன் காரணமாகத்தான் இன்றைக்கு அதிகமான அளவு குழந்தைகள் பள்ளிக்கு வந்திருக்கிறார்கள். இது குழந்தைகள் படிப்பதற்கு மிகவும் ஊக்கம் கொடுக்கும் ஒரு அம்சமாகும்.

அடுத்தபடியாக ஆலைகளை எடுத்துச் சொல்லும்போது நம் நாட்டுத் தொழிலாளர்கள் எல்லா வகையிலும் வளம் பெற வேண்டுமென்ற அவா ஆளும் கட்சியினருக்கானாலும் சரி, எதிர்க் கட்சியினருக்கானாலும் சரி ஒரு முகமாக இருக்கிறது. இருந்தபோதிலும் சில சில இடங்களில் சிற்சில தகராறுகள் நடைபெறுகின்றன. குறிப்பாக ஒவ்வொரு ஜில்லாவிற்கும் உப்புத் தொழிற்சாலையோ, சிமிண்டி தொழிற்சாலையோ, சர்க்கரைத் தொழிற்சாலையோ ஏற்படுத்திக் கொண்டு வரும்போது சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலையை ஏன் ஏற்படுத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்பதாக சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். முதலில் அங்குள்ள கனிப்பொருள்களை எடுத்து ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்பதாகச் சொன்னார்கள். இன்றைக்கு அங்குள்ள கனிவளங்கள் ஜாம்ஷட்பூரில் ஆராய்ச்சிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பரிசோதனை முடிந்த பிறகு பரிசோதனையின் விளைவாக திட்டவட்டமாக என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை முடிவு செய்து ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதே தவிர அவர்கள் காட்டுகின்ற பொறுமை நிதான புத்திக்கு எடுத்துக்காட்டு





தவிர, அவசரம் அவசரமாக ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து அது வெற்றிகரமாக அமையாது போகவேண்டும் என்ற எண்ணம் இல்லையாது. தொட்ட காரியத்தை வெற்றிகரமாக முடிக்கவேண்டும் என்பதற்கு அமைச்சர் அவை கையாளுகின்ற அமைதியான முன்னேற்றப் போக்கு மிகவும் பாராட்டுதற்குரியதாகும். நிச்சயமாக அமைச்சர் அவை அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் கொடுப்பார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. வெற்றியுடன் நடத்தித் தர வேண்டுமென்ற உறுதி அவர்களுக்கு இருக்கிறது. அவசரப்பட்டு தொழிற்சாலையை ஆரம்பித்து அம்முயற்சி தோல்வி அடைந்து அரசியல் அசடு என்ற பட்டத்தைப் பெற்றுவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் நிதான மனப்பான்மையுடன், கனிப்பொருளைப் பரிசோத[illegible] திட்டவட்டமான முறையில் செயலாற்ற உறுதி கொ[illegible]ற்குரிய அம்சமாகும்.

SRI S. M. ANNAMALA[illegible] பாய்[illegible] ஆப்[illegible] கார். எல்லோராலும் போற்றுதற்குரிய அமைச்சர்களை அரசியல் [illegible] என்று அம்மையார் சொல்வது நியாயமா[illegible]?

SRIMATHI RAJATHI K[illegible]CHITHAPATHAM: [illegible] அவர்களை நான் அரசியல் அசடு என்[illegible] சொல்லவில்லை. அச[illegible] பட்டம் ஏற்றுக்கொள்ள அவர்கள் தயா[illegible] இல்லை என்றுதான் [illegible] சொன்னேன். மந்திரிமார்களை அசடு எ[illegible] சொல்வதற்கு நாங்[illegible] எல்லாம் வெறும் அசடுகள் அல்ல. வெறும் [illegible]க்கு இரண்டு துண்டு அவல் கிடைத்தால் மெல்வதற்[illegible] வே[illegible]மா? அவசரப்பட்டு எதையாவது செய்து வெறும் வா[illegible]பவர்களிடம் அகப்பட்டுக்கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் அமைச்சர் அவை நிதான, அமைதியான போக்கைக் கையாள்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

சாப்பாட்டை நிறையத் தயாரித்துவிட்டால் போதாது. உட்கார வைத்து அறுசுவை உண்டிகளை இலையில் படைத்துவிட்டால் போதாது. இலையில் படைக்கப்பட்ட உணவை வாரி வாரி விழுங்கிவிட்டால் போதாது. நாக்குக்குச் சுவையோடு உடலுக்கு வலிவு அளித்தால்தான் சமைத்த சோற்றுக்குப் பயன் உண்டு. அப்படி எந்தத் திட்டத்தையும் ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவை யோசிக்கும்போது அதனால் மக்களுக்கு அதிகப் பயன் உண்டாக வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். காலுக்கேற்ற செருப்பு வேண்டும், செருப்புக்கேற்ப காலைசெதுக்க முடியாது, தலைக்கேற்ற குல்லா தைக்க வேண்டுமே தவிர, குல்லாவுக்கேற்ப தலையை குறைத்துக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்து இன்றைய தினம் செலவுத் திட்டங்களுக்கேற்ப வருவாய் நிலையை உயர்த்திக்கொள்ள எல்லாவகையான ஏற்பாடுகளையும் செய்கிறார்கள். வருவாயை அதிகப்படுத்திக் கொள்வதற்கு இன்றைய தினம் போடப்படுகிற வரி இனங்கள் பணக்காரர்களைப் பாதிக்கக்கூடிய வரிகளே தவிர ஏழைகளை எவ்விதத்திலும் பாதிக்காது. விவசாய வருமான வரி மூன்று ஆயிரம் ரூபாய்க்கு மேல் என்று சொல்லும்போது இது சிறு நிலச்சுவாந்தார்களை பாதிக்கும் என்று எண்ணி இருப்பது மிகவும் வருத்தப்படவேண்டிய விஷயமாகும். அதோடு டீசல் எண்ணெக்குப் போடப்படுகிற வரி விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும் என்பதாகவும், விவசாயிகள் இனி தங்கள் சாமான்களை லாரிகளில் ஏற்றி வருவதும், பஸ்களில் நகரங்களுக்கு வருவதும் செலவு அதிகமாகிப் போகும் என்பதாகவும் ஏழை மக்களுக்கு பாதகம் உண்டாகுமே என்கிற முறையில் சிலர் பேசினார்கள். இன்றைக்கு உண்மையிலேயே கிராமத்திலுள்ள விவசாயிகள் தங்கள் சரக்குகளை மொட்டை வண்டிகளில்தான் சந்தைக்குக் கொண்டு வருகிறார்கள். ஆகவே இது எந்த வகையிலும் விவசாயிகளைப் பாதிக்காது என்று சொல்ல விரும்புகிறேன். தமாஷா வரியும் வரவேற்கத்தக்கது. மதுவிலக்குச் சட்டத்தினால் நாம் எத்தனை ரூபாய் வருமானத்தை இழந்திருக்கிறோமோ அந்தப் பணம்தான் நமக்கு இன்றைக்கு சினிமா மூலமாக வந்து கொண்டிருக்கிறது. அதுவும் மிகவும் வரவேற்கத்தக்க அம்சமாகும். "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு" என்ற வள்ளுவனார் வாக்குக்கிணங்க வரி போட்டுவிட்டால் போதாது. போட்ட வரியை செலவிட திட்டங்கள் தீட்டிவிட்டால் போதாது. திட்டங்களினால் மக்கள் எல்லோரும் நேரிடையாகப் பயன்பெறத்தக்க ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்து இன்பம் உண்டாகும்படியாகச் செய்யவேண்டும். நம் நாட்டு மக்களுடைய முக்கியமான தொழிலாக இருப்பது விவசாயம். விவசாயத்திற்குப் பெரிதும் உதவியாக இருப்பது மழை. அதன் முக்கியத் தன்மையை உணர்ந்துதான் நமது நிதி அமைச்சர் பருவநிலையைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார். இதிலே வள்ளுவர் வாக்கு நினைவுக்கு வருகிறது. "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு, என் ஆற்றும் கொல்லோ உலகு" என்றபடி பிரதியுபகாரம் எதையும் எதிர்பார்க்காமல் பொழிகின்ற மழை மாத்திரம் இல்லாவிட்டால் உலகம் என்ன கதியாகும். இதையுணர்ந்தே நிதி அமைச்சர் அவர்கள் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்கும் வாசகங்கள் வரவேற்கத் தக்கதாகும்.

அதேபோல அவர்கள் மத்திய அரசாங்கத்தின் நிதி மந்திரியாக இருந்த டி.டி.கே. அவர்களுக்கு நன்றி தெரிவித்திருப்பது பாராட்டுதற்குரியதாகும் என்றாலும் சிலர் எதிர்த்தார்கள். "நன்றல்லாதனவற்றை அன்றே மறப்பது நன்று" என்பதுபோல, "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பதற்கொப்ப செய்த உதவிக்கு நன்றி செய்வது தமிழனுடைய பண்பு. நமக்கு வேண்டிய பணத்தைப் பெறுவதற்கு அவர்கள் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு வெளிநாட்டிற்கும் சென்று வெற்றி பெற்று வந்திருக்கிறார். ஆகவே அவர் செய்திருக்கும்படியான உதவிக்கு நிதி அமைச்சர் அவர்கள் தம் உரையில் நன்றி தெரிவித்திருப்பதைப் பாராட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

6-00 p.m. **DEPUTY SPEAKER** : The House is adjourned and will meet again to-morrow at 1 p.m.

**The House then adjourned.**

## III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory rules, orders and notifications.

64. *Report of the Madras Public Service Commission for the year ending the 31st March* 1957 [*Laid on the Table of the House under Article* 323 (2) *of the Constitution of India*].

65. *Notification issued with G.O. No.* 166, *Revenue, dated* 18*th January* 1958, *amending rule* 3 (ii) (*c*) *of the Madras Cultivating Tenants Protection Rules*, 1955 [*Laid on the Table of the House under section* 7 (2) *of the Madras Cultivating Tenants Protection Act*, 1955].

66. *Notification issued with G.O. No.* 3, *Revenue, dated* 2*nd January* 1958, *exempting Mill cloth from Sales Tax consequent on the levy of additional excise duty* [*Laid on the Table of the House under section* 19 (6) *of the Madras General Sales Tax Act*, 1939].





## APPENDIX I.

[*Vide* answer to starred question No. 198 asked by Sri N. K. Palanisami at the meeting of the Legislative Assembly held on 5th March 1958, page 233 *supra*.]

(*a*) Electric motors are imported by private firms and sold to agriculturists. The Chief Controller of Imports has issued a rule that the ultimate selling price of a motor to an actual user should not exceed a margin of 15 per cent profit over the landed cost including customs duty.

(*b*)—

| *Name of make.* (1) | *Capacity.* (2) |
|---|---|
| Brooks.<br>Siemens.<br>Crompton.<br>Scotts.<br>B.T.H.<br>L.S.E.<br>G.E.C. | (i) Ranging from 3 to 30 H.P. in July–December 1956 import policy, without starter and switch.<br>(ii) Ranging from 3 to 15 H.P. with one starter and two switches for each motor for the period January to June 1957. |

(*c*) During the half-year July to December 1956, the dealers who sponsored the applications for the actual users and were granted licences by the Chief Controller of Imports, arranged distribution of sets to those agriculturists. But in the second half-year January to June 1957, the established importers to whom the licences were issued by the Chief Controller of Imports have furnished to the Agriculture Department addresses of the indenting agriculturists along with particulars of the survey number of the land and electricity sanction order. After checking up of the *bona fides* of the agriculturists by the district officers, the importers will be asked by the Director of Agriculture to distribute the sets to the agriculturists.

## APPENDIX II.

[*Vide* answer to starred question No. 211 asked by Sri S. B. Adityan at the meeting of the Legislative Assembly held on 5th March 1958, page 246 *supra*.]

*Statement showing the amounts of grants received from the Government of India during* 1956–57 *and the purposes for which they were received.*

[5th March 1958

The amounts of grants received from the Government of India during 1956–57 and the purposes for which they were received are as follows :—

| Head of Development. (1) | Amount. (2) RS. LAKHS. |
|---|---|
| *Plan Schemes—* | |
| Agriculture .. .. .. .. .. | 8·38 |
| Animal Husbandry .. .. .. .. | 7·29 |
| Forests .. .. .. .. .. | 1·81 |
| Soil Conservation .. .. .. .. | 0·64 |
| Fisheries .. .. .. .. .. .. | 1·88 |
| Co-operation .. .. .. .. .. | 0·96 |
| National Extension Service and Community Development Project .. .. .. .. | 165·61 |
| Industries .. .. .. .. .. | 14.97 |
| Housing .. .. .. .. .. | 9·97 |
| Handlooms .. .. .. .. .. | 0·42 |
| Social Welfare .. .. .. .. .. | 0·09 |
| Welfare of Backward Classes .. .. .. | 48·43 |
| Health .. .. .. .. .. .. | 1·04 |
| Medical .. .. .. .. .. .. | 2·12 |
| Education .. .. .. .. .. | 63·67 |
| Tourism and Publicity .. .. .. .. | 0·30 |
| Handloom Cess Fund .. .. .. .. | 113·15 |
| Total .. | 440·73 |
| *Non-Plan Schemes—* | |
| Roads .. .. .. .. .. .. | 23·99 |
| Grants under Article 275 (1) of the Constitution. | 4·51 |
| Grants-in-aid mainly for Cyclone relief .. | 123·58 |
| Intensive cultivation schemes .. .. | 9·37 |
| Other Miscellaneous items .. .. .. | 0·31 |
| Total .. | 161·76 |

Total Grants for Plan and Non-Plan Schemes Rs. 602·49 lakhs.

The details of individual items for which the grants were received, are as follows :



5th March 1958]

*Statement showing grants received from Government of India during 1956–57.*

| Purpose. (1) | Amount received. (2) RS. |
|---|---|
| Welfare of Scheduled Castes .. .. .. .. | { 16,04,490<br>20,80,113 |
| Welfare of ex-Criminal Tribes .. .. .. | 8,17,689 |
| Welfare of Backward Classes .. .. .. | 3,40,886 |
| Community Development Blocks .. .. .. | 45,30,000 |
| Material and equipment .. .. .. .. | 2,40,898 |
| Intensive training .. .. .. .. .. | 6,018 |
| National Extension Service .. .. .. .. | 38,69,000 |
| Village Road Development Co-operative Scheme.. | 10,305 |
| Land Development Works Programme .. .. | 76,42,684 |
| Extensive Training Centre .. .. .. .. | 17,510 |
| Training of group level workers .. .. .. | 4,167 |
| Basic Agricultural Training Schemes .. .. | 2,40,691 |
| Agriculture and Fisheries— | |
| Urban Compost .. .. .. .. .. | 2,589 |
| Distribution of improved strains of paddy and millets. | 76,878 |
| Control of pests and diseases .. .. .. | 75,000 |
| Intensive seed collection and distribution for | 24,000 |
| stocking inland waters. | (–) 7,710 |
| Salt Subsidy Scheme .. .. .. .. | 67,325 |
| Provision for quick transport facilities for transporting of fish. | 3,683 |
| Supply of Nylon nets to fisherman .. .. | 2,978 |
| Development and exploitation of Major reservoir fisheries. | 4,658 |
| Hand-operated dusters and sprayers .. .. | 54,063 |
| Construction of mechanised boats.. .. .. | 15,944 |
| Fishermen co-operative societies—Formation .. | 1,147 |
| Construction of 13 Pablo type fishing boats .. | 18,557 |
| Fisheries Rural Demonstration .. .. .. | 11,825 |
| Fruit Development Scheme.. .. .. .. | (–) 226 |
| Soil Conservation— | |
| Special Schemes .. .. .. .. .. | 20,805 |
| Tiruchirappalli district .. .. .. .. | 73 |
| Madurai district .. .. .. .. .. | 500 |
| Avanashi .. .. .. .. .. .. | 13,585 |
| North Arcot district .. .. .. .. | 5,937 |
| Kadambuliyur .. .. .. .. .. | 23,500 |
| Strengthening Agricultural College, Coimbatore. | 2,00,000 |
| Kothamangalam Fuel Series schemes, Lower Bhavani Project. | 17,930 |
| Oil Seeds Development Scheme .. .. .. | 14,122 |

| Purpose. (1) | Amount received. (2) |
|---|---|
| | RS. |
| Soil Conservation—*cont.* | |
| Rehabilitation of devastated coconut gardens in Tanjore. | 62,700 |
| Training of Fishermen of Engines and Fishing boats. | 4,386 |
| Chemical Fertilizer Scheme.. .. .. .. | 3,35,329 |
| Animal Husbandry— | |
| Key Village Schemes .. .. .. .. | 3,86,206 |
| Study of Cattle Sterility .. .. .. .. | 19,200 |
| Development of Goshala .. .. .. .. | 5,650 |
| Pilot Scheme for eradication of rinderpest .. | 35,515 |
| Poultry Development Scheme .. .. .. | 1,51,675 |
| Construction of buildings at Madras Veterinary College. | 1,25,000 |
| Construction of Hostel at District Livestock Farm, Ortanad. | 15,000 |
| Expenditure on displaced persons from Pakistan. | 2,518 |
| Expenditure on Competent Officers Organization. | 3,282 |
| Forest— | |
| Preservation of wild life—Mudumalai Wild life | 7,774 |
| Rehabilitation of degraded forests .. .. | 70,040 |
| Creation of fodder banks .. .. .. .. | 6,450 |
| Reclamation of eroded areas .. .. .. | 24,872 |
| Rapid reconnaissance survey of eroded lands .. | 2,362 |
| Lac cultivation .. .. .. .. .. | 2,768 |
| Afforestation of sand dunes in Mandapam Central Fish Research Schemes. | 1,607 |
| Matchwood Plantation .. .. .. | 57,963 |
| Soil conservation in low hill areas .. .. | 7,000 |
| After-care homes for persons discharged from correctional institutions. | 9,084 |
| Grant-in-aid under Article 275 (1) of the Constitution. | { 4,50,870<br>1,23,58,000 |
| Orientation Training Centre, Poonamallee .. | 33,973 |
| Research-*cum*-Action Centre Project, Poonamallee. | 56,391 |
| Fishermen Training Centre, Tuticorin .. .. | 41,686 |
| State Roads of economic and inter-State importance. | 23,99,459 |
| Training Centre at Rajapalayam for development of dyeing and printing industry. | 3,682 |
| Training Centre at Palayamkottai for Lace and Embroidery industry. | 4,438 |



| Purpose. (1) | Amount received. (2) |
|---|---|
| | RS. |
| Basket-makers' Co-operative Society, Salem .. | 370 |
| Swamimalai Training Centre for development of art metal industry. | 1,050 |
| Training-*cum*-Service Centres for palmyra leaf products at Chittrakottai. | 830 |
| Dye Research Laboratory and Handloom Weaving Centre at Kalakshetra. | 48,750 |
| Coimbatore Seva Nilayam .. .. .. | 3,300 |
| Development of Palm leaf products at Mathur and Pallipatti. | 90 |
| Veeravanallur Mat-weavers' Co-operative Society. | 5,000 |
| Handicrafts Emporium at Madras .. .. | 22,903 |
| Training Centre for Sculpture at Mahabalipuram. | 20 |
| Pottery Industry at Manamadura .. .. | 146 |
| Training Centre for Wooden Toys at Erode .. | 52 |
| Rattan Industry at Wallajahbad .. .. | 1,002 |
| Training Centre for Embroidery and Sewing at Gobichettipalayam. | 21 |
| Manufacture of furniture from palmyra stem stripes, Ramanathapuram. | 352 |
| Manufacture of cots from palmyra stem stripes, Nazareth. | 350 |
| Scheme for the certification of druggets meant for export. | 86 |
| Service Centre for Palmyrah leaf Products at Manapad. | 940 |
| Mat Production and Sale Co-operative Society, Guriammalpuram. | 3,300 |
| Utilization of Timber Requirements Training Centre, Coimbatore. | 3,167 |
| Servicing Centre for Hurricane Lanterns, Palni.. | 4,440 |
| Footwear units in Pallavaram, Salem and Madurai. | 12,540 |
| Cold Storage rooms at Ambur .. .. .. | 5,027 |
| Carpentry and blacksmithy units with mobile vans, South Arcot and Tanjore districts. | 5,16,092 |
| Industrial Colony at Erode .. .. .. | 3,000 |
| Handmade Match Factory, Perambur .. .. | 45,000 |
| Manufacture of sports goods, Guindy .. .. | 32,794 |
| Cottage Industries Research institute, Madras .. | 11,400 |
| Ambar Charka Scheme .. .. .. .. | 81,600 |
| Central Industrial Museum .. .. .. | 5,000 |
| Footwear Service Centre, Perambur .. .. | 17,154 |

| Purpose. (1) | Amount received. (2) |
| --- | --- |
| | RS. |
| Oil Producers' Co-operative Cottage Industry, Raghunathapuram. | 966 |
| Grant for implementation of schemes .. .. | 6,722 |
| Village pottery industry .. .. .. .. | 4,500 |
| Attachakki Scheme .. .. .. .. | 1,025 |
| Gur and Khandasari industry .. .. .. | 50,150 |
| Soap-making with non-edible .. .. | 45,625 |
| Model footwear and leather goods in Lower Bhavani Project area. | 4,216 |
| Lower Bhavani Project area—Additional staff .. | 10,082 |
| Industrial Estate, Virudhunagar, Guindy .. | 30,000 |
| Lock Industry, Dindigul .. .. .. .. | 18,464 |
| Manufacture of paper toys and paper-made articles. | 20,330 |
| Rattan Industry, North Arcot .. .. .. | 625 |
| Weaving of carpets and druggets at Gopalasamudram. | 9,635 |
| Wardha Gram Demonstration units in Community Development and National Extension Service Blocks. | 1,09,245 |
| Cottage footwear industry .. .. .. | 2,500 |
| Ceramic Training Centre, Vriddachalam .. | 40,170 |
| Handmade Paper Industry in Lower Bhavani Project area. | 15,000 |
| Village oil industry .. .. .. .. .. | 29,835 |
| Multipurpose work centres for Sewing ready-made garments and palmyra fibre brush-making. | 10,981 |
| Development of Coir Industry .. .. .. | 8,000 |
| Hand-pounding of rice .. .. .. .. | 41,560 |
| Pottery industry .. .. .. .. .. | 12,755 |
| General Purpose Engineering Workshops at Rajapalayam. | 15,285 |
| Sericulture, Royakotah and Vappanapalli firka. | 1,430 |
| Supply of mulberry grafts in Hosur village .. | 9,784 |
| Foreign Race Seed Station, Coonoor .. .. | 2,149 |
| Supply of pumpsets to seed rearers .. .. | 902 |
| Distribution of mulberry manure-mixture in seed areas. | 434 |
| Installation of an incubation chamber at Hosur. | 700 |
| Sericulture—Introduction as home crafts in schools. | 2,475 |
| Experimental rearing house at Berikai .. .. | 380 |
| Presumation of mulberry leaves in the Hopsilk Farm. | 2,000 |





| Purpose. (1) | Amount received. (2) |
| --- | --- |
| | RS. |
| Installation of incubator chambers in Kollegal taluk. | 1,870 |
| Chauki rearing centre at Kamajiri in Kollegal taluk. | 8,272 |
| Installation of cold storage plant .. .. | 682 |
| Storing and hiring of montages .. .. | 3,000 |
| Regional School of Printing Technology .. | 1,00,000 |
| Development of Central Polytechnic, Madras .. | 15,000 |
| Development of Tamilnad Polytechnic, Madurai. | 17,000 |
| Scheme for wholesale buying and selling .. | 4,250 |
| Scheme for the development of pottery industry at Manamadurai. | 13,106 |
| Scheme for training of subordinate co-operative personnel at Madurai. | 10,998 |
| Scheme for training of subordinate co-operative personnel. | 72,515 |
| Co-operative Pilot Scheme of Integrated Rural Credit and Marketing Central Assistance. | 5,000 |
| Subsidy for the establishment of a salvage farm at Thuvakudi. | 4,750 |
| Scheme for organization of Co-operative Education of the non-official personnel of the movement. | 2,460 |
| Grant from Government of India for Quinquennial Livestock Census. | 4,790 |
| Grant from Government of India for the Development of Statistics. | 84 |
| Improvement of Agricultural Statistics .. .. | 50 |
| Housing Industrial Workers .. .. .. | 9,97,136 |
| Sample survey of pre-harvest estimates .. .. | 259 |
| Organizational expenses (to be met from the Cess Fund). | 37,329 |
| Information Centre at Madurai .. .. .. | 16,002 |
| Conduct of livestock census, 1956–57 on improved basis. | 10,504 |
| Well Subsidy Scheme, 1955–56 .. .. .. | 4,388 |
| Intensive Cultivation Scheme—Expenditure not covered by Food Bureau. | 9,36,808 |
| Sample survey of agricultural holdings .. | 1,325 |
| Family-Planning scheme .. .. .. .. | 14,363<br>14,040 |
| Research study of fertility and sterility Problems. | 8,277 |
| Department of Social and Preventive Medicine—Madras Medical College. | 1,200 |

| Purpose. (1) | Amount received. (2) |
|---|---|
| | RS. |
| Post-graduate Institute in Madras .. .. | 72,592 |
| Upgrading of certain departments in Medical Institutions in India. | 50,788 |
| Research in the Unani Section of the College of Integrated Medicine, Madras. | 5,000 |
| Election of a member under section 3 (1) (c) of Indian Medical Council Act, 1933. | 588 |
| Leprosy Control Scheme .. .. .. .. | 48,600 |
| Teaching Hospitals of Child Guidance Clinics and Psychiatric Departments—Establishment. | 5,000 |
| Programme to relieve the educated unemployed. | 29,97 537 |
| Promotion of Hindi .. .. .. .. | 1,381 |
| Campus Work Project .. .. .. .. | 1,44,260 |
| Schemes included in the Second Five-Year Plan. | 26,13,703 |
| Organization of Literary Circle .. .. | 11,000 |
| Post-graduate Course and Degree Course in Mining. | 4,97,500 |
| Youth camp and labour service .. .. .. | 1 01,145 |
| Organizational expenses .. .. .. | 4,88,629 |
| Expansion, organization and propaganda .. | 5,27,604 |
| Research and improvement .. .. .. | 5,61,261 |
| Rebate .. .. .. .. .. .. | 95,40,493 |
| Other grants—General .. .. .. .. | 77,699 |
| Silk weaving industry .. .. .. .. | 1,11,762 |
| Art silk .. .. .. .. .. .. | 7,400 |
| Tours .. .. .. .. .. .. | 13,579 |
| Total .. | 6,02,49,495 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, the 6th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at 1 p.m., Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Prime Minister's visit to Madras*

* 213 *Q.*—SRI A. GOVINDASAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any Railway Station was newly constructed at Meenambakkam for the sake of the Prime Minister when he visited Madras on 7th December 1957; and

(*b*) if so, whether the expenditure incurred thereon is to be borne by the State Government or the Central Government?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No Railway Station was newly constructed at Meenambakkam for the sake of the Prime Minister when he visited Madras on 7th December 1957. An improvised platform was put up by the Railway authorities at the Guindy Railway Station on the eastern side of the main platform.

(*b*) The expenditure incurred thereon was borne by the Railway Administration.

SRI A. GOVINDASAMY: தற்காலிக ப்ளாட்பாரம் எத்தனை போடப்பட்டது. அவைகள் என் மறுபடியும் எடுக்கப்பட்டது.

THE HON. SRI C. SUBRAMANIAM: An improvised platform was put up by the Railway authorities at the Guindy Railway Station on the eastern side of the main platform. So it was only an improvised platform.

SRI S. NAGARAJA MONIGAR: மேன்மைதங்கிய நேருஜீ அவர்கள் இங்கு விஜயம் செய்தபோது கொடுக்கப்பட்ட ஒரு கப் தேனீர் எந்தச் செலவில் எழுதப்பட்டது என்று சொல்ல முடியுமா?

MR. SPEAKER: தனி கேள்வி கேட்கவேண்டும்.

SRI A. V. P. ASAITHAMBI: நேருஜீ அவர்கள் இங்கு வந்து போன செலவு நம்மைச் சேர்ந்ததா அல்லது மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்ததா?

THE HON. SRI C. SUBRAMANIAM: நாம் செலவு செய்தது நம்மைச் சேர்ந்தது, அவர்கள் செலவு செய்தது அவர்களைச் சேர்ந்தது.

SRI M. JAGANNATHAN : நேருஜி வந்ததற்காக இம்ப்ரொவைஸ்ட் ப்ளாட்பாரம் போடப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக எவ்வளவு பணம் செலவானது என்று சொல்லுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அடுத்த தடவை அங்கத்தினர் பார்லிமெண்டுக்குச் சென்று அங்கு கேள்வி போட்டால் அங்கு பதில் சொல்வார்கள்.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the newspaper of the party to which the author of this question belongs, has falsely published the news that a large sum of money was involved in putting up the new platform and that has led to this kind of question?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sure they will correct themselves after the information I have given now. That is my hope anyhow.

SRI A. GOVINDASAMY : கனம் வினாயகம் அவர்கள் கேட்ட கேள்விக்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா ? அவரால் நிரூபிக்க முடியுமா ?

MR. SPEAKER : I do not want to make this House a forum for discussion between two Members. But I would allow one supplementary question as the allegation made by the hon. Member has been denied.

SRI K. VINAYAKAM : If I could trust my memory, I read so in the newspaper. Some hon. Members rose.

MR. SPEAKER : I will not allow any discussion on this matter.

*Drinking water-supply*

*214 Q.—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that the water taken from most of the drinking water wells dug under the Drinking Water-supply Scheme is not fit for drinking;

(b) if so, whether any action has been taken to make it drinkable;

(c) whether it is a fact that the usefulness of the water for drinking purposes is examined first before a well is dug; and

(d) if so, who makes this examination?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) Does not arise.

(c) & (d) Standing instructions have been issued by the Government for getting samples of water tested at the King Institute, Guindy, in the initial stage of the works.





SRI A. VEDARATHNAM : அரசாங்கத்தால் வெட்டப்பட்ட பல கிணறுகள் குடிப்பதற்கு உபயோகம் இல்லாமல் உப்புத் தண்ணீராகப் போய் இப்பொழுது காலியாக இருக்கிற விஷயம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே வாட்டர் டிவைனர்களை நியமித்து நல்ல தண்ணீர் கண்டு பிடித்து கிணறுகள் வெட்டிக்கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் பல கிணறுகள் என்று சொன்னார்கள். அதைச் சில கிணறுகள் என்று முதலில் திருத்திக் கொள்ள விரும்புகிறேன். நல்ல தண்ணீரா என்று பரிசோதிக்க உடனே அதை பார்த்து மூன்று நாட்களுக்குள் அதை தந்தி மூலம் தெரிவிக்கிறோம். முழு விவரம் கிடைக்க பத்து நாட்களாகும். கிணறுகளில் நல்ல தண்ணீர் கிடைப்பதற்கு வேண்டிய வேலைகள் நடைபெறுகின்றன.

SRI A. GOVINDASAMY : சட்டசபைக் கட்டிடத்தில் நடக்கிற ஹோட்டலில் வழங்குகிற தண்ணீர் இந்தப் பரிசோதனைக்கு உள்ளானதல்லவா ? அதை பரிசோதிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி தனியாக பிரச்னை கிளப்பினால் கவனிக்கலாம்.

SRI A. VEDARATHNAM : ரெயில்வே டிப்பார்ட்மெண்ட்களில் நியமித்திருப்பது போல் வாட்டர் டிவைனர் யாரையாவது நம் அரசாங்கம் நியமித்து வைத்திருக்கிறார்களா ? மந்திரியவர்கள் சொன்னதுபோல் சில கிணறுகளில் உள்ள தண்ணீர் உபயோகிக்க முடியாமல் உபயோகிக்க லாயக்கற்றதாக இருக்கிறது. ஆகவே முன் எச்சரிக்கையாக இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வாட்டர் டிவைனர் என்பது தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்று கண்டு பிடிப்பதற்குத் தானே தவிர நல்ல தண்ணீரா இல்லையா என்று அதனால் சொல்ல முடியாது.

SRI M. K. SOMASUNDARAM : ஒவ்வொரு கிராமத்திலும் வெட்டப்படும் கிணறுகளின் தண்ணீர் பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆமாம் என்று சொன்னேன்.

SRI P. G. MANICKAM : வெட்டப்பட்ட ஒரு சில கிணறுகளில் கிடைக்கும் தண்ணீர் உபயோகிக்க முடியாமல் இருக்கிறது. அந்த இடங்களில் வேறு கிணறுகள் வெட்ட அரசாங்கத்தார் ஒரு உத்தரவு பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எங்கெல்லாம் ஜனங்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியுமோ அங்கெல்லாம் வசதி செய்து கொடுக்கப்படுகிறது. எல்லாக் கிணறுகளும் உபயோகமில்லாமல் இருந்தால் அங்கு உடனடியாக தண்ணீருக்கு வேண்டிய வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

SRI R. KRISHNASAMI NAIDU : வாட்டர் டிவைனர்கள் என்று சென்னையில் இந்தப் புறங்களில் உள்ளவர்களை சர்க்கார் நியமிக்கிறார்கள். அவர்களுக்கு போக வர முதல் வகுப்பு, அல்லது இரண்டாவது வகுப்பு என்று பிரயாணச் செலவு கொடுத்து 50 ரூபாய் பீசும் கொடுக்க வேண்டியிருக்கிறது. கிராமங்களில், இதில் அனுபவம் உள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். அப்படி இதில் தீர்க்க தரிசனமாக சொல்பவர்களுக்கு குறைந்தளவு ஒரு பஸ்ஸாவது கொடுத்து அவர்கள் மூலம் பரீட்சை செய்ய பரீட்சார்த்தமாகவாவது ஒரு ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : " கிங்க்ஸ் இன்ஸ்டிட்யூட் " டில் தண்ணீரை பரிசோதனை செய்கிறார்கள். அதுதான் நமக்கு அவசியம். வாட்டர் டிவைனரைப்பற்றிய பிரச்னையே இல்லை.

* 215 *Q.*—SRI S. LAZAR AND SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Tiruchirappalli Municipality has submitted any proposal regarding drinking water-supply; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under examination in consultation with the Municipal Council, Tiruchirappalli.

SRI S. LAZAR : எந்தெந்த கிணறுகளில் தண்ணீர் சப்ளை செய்ய இருந்தது. அவைகளில் எவ்வளவு இப்பொழுது வேலை செய்யவில்லை. இரவு நேரங்களில் 12 மணி முதல் 1 மணி வரை சில பகுதிகளில் ஜனங்கள் விழித்திருந்து தண்ணீர் பிடிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு இடைக்கால நிவாரணம் ஏதாவது சர்க்கார் செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முனிசிப்பாலிட்டி அதை எப்படி சமாளிக்கப் போகிறார்கள் என்று கேட்டிருக்கிறோம். பதில் வந்தவுடன் சொல்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : முனிசிப்பாலிட்டி என்ன திட்டம் அனுப்பி இருக்கிறார்கள். எப்பொழுது அனுப்பினார்கள். எவ்வளவு காலமாக அது சர்க்கார் காரியாலயத்தில் இன்னும் முடிவு எடுக்கப்படாமல் இருக்கிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஒரு திட்டம் 41 லட்சத்தி 81 ஆயிரம் ரூபாய். இது வந்து ஸ்பில்ஓவர் ஸ்கீம் ஜாபிதாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன் முதல் ஸ்டேஜில் 28 லட்சத்தி 91 ஆயிரம் ரூபாய் செலவாகும். அதையாவது எடுத்துச் செய்யலாம் என்று இப்பொழுது சீப் என்ஜினியர் அதற்காக அட்மினிஸ்ட்ரேட்டிவ் சாங்க்ஷன் கேட்டிருக்கிறார். அதையொட்டி நாங்கள் முனிஸிப்பாலிட்டியைக் கேட்டிருக்கிறோம். எப்படி அவர்கள் இந்தப் பொறுப்பை எடுத்துச் செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறோம். இன்னும் பதில் வரவில்லை.

* 216 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of Sri K. R. Viswanathan) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Superintending Engineer, Tiruchirappalli Circle has withheld the payment of baling out charges to contractors in the case of rural water-supply wells; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) In the case of certain rural water-supply works in the Tiruchirappalli district, the payment of baling charges was deferred by the Collector of Tiruchirappalli, as there was some doubt about the admissibility of the charges.





* 217 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of Sri K. R. Viswanathan) : Will the Hon. the Minister for Revenue be pleased to state— 1-10 p.m.

(*a*) the amount allotted by the Central Government to the Madras State towards expenditure on the National Water-supply and Sanitation Scheme for 1956–57;

(*b*) the amount that remained unspent during that year;

(*c*) whether the Government have recommended to the Central Government that areas, where guinea worm disease is prevalent, should also be brought under the above scheme; and

(*d*) if so, the nature of the reply received from the Government of India?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Government of India allotted a sum of rupees fourteen lakhs to this State in 1956–57, for the National Water-supply and Sanitation (Rural) Programme.

(*b*) The amount was not drawn as the grant previously sanctioned by the Government of India was not fully utilised.

(*c*) No, Sir.

(*d*) Does not arise.

SRI K. VINAYAKAM : Will the Government take steps to reiterate their request once again to include the areas which are affected by guinea worm diseases so that they may be assured of good, potable drinking water?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. We are trying our best to see that good drinking water is made available especially in areas where that is very necessary.

SRI A. GOVINDASAMY : சுகாதார குறைவான தண்ணீரை குடிப்பதனால்தான் இந்த வியாதி அதாவது நரம்பு சிலந்தி போன்ற வியாதி வருகிறது. அவை தீர்க்கவே முடியாத நிலைமையில் இருப்பதால் அந்த நோயினால் பாதிக்கப்பட்ட பகுதியில் இதை தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் என்ன திட்டத்தை கொண்டுவரப் போகிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த நரம்பு சிலந்தி நோயை போக்குவதற்கு மாத்திரமல்ல, இதை அடியோடு ஒழித்துக் கட்டுவதற்கு வேண்டி திட்டமிட்டு அதன்படி வேலைகள் கொஞ்சம் கொஞ்சமாக அமுல் செய்யப்பட்டு வருகிறது. இந்த மாதிரி இடங்களில் நல்ல தண்ணீர் கிடைப்பதற்கும் வேண்டிய திட்டம் போடப்பட்டிருக்கிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : மந்திரி அவர்கள் கேள்விக்கு பதில் அளிக்கும் போது இந்த வருடம் மத்திய அரசாங்கத்திலிருந்து அனுமதித்த 14 லட்சம் ரூபாய் முழுவதும் செலவு செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த பணம் ஏன் செலவு செய்யப்படவில்லை, செலவு செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதம் ஏன் என்பதை மந்திரி அவர்கள் விளக்குவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதை விளக்குவதற்கு இஷ்டம்தான். ஆனால் இது சந்தர்ப்பமல்ல.

[6th March 1958

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : இறங்கும் கிணறுகள் அதிகமாக உள்ள இடங்களில்தான் நரம்பு சிலந்தி நோய் ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது. ஆகவே இந்த இறங்கும் கிணறுகளை சுகாதார முறையில் கட்டினால்தான் இந்த நரம்பு சிலந்தி நோயை போக்கடிக்க முடியும் என்றுள்ள கருத்தும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நரம்பு சிலந்தி நோய் பிடித்த கிராம ஜனங்கள் வேலை செய்ய இயலாமல் பீடிக்கப்பட்டவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்தவும், இந்த நோயை அடியோடு ஒழிப்பதற்கும் இந்த எண்டமிக் ஏரியாவில் ஒரு திட்டத்தை சர்க்கார் எடுத்துக் கொள்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த நோயை ஒழிப்பதற்கு திட்டம் இருக்கிறது. அதற்காக இரண்டொரு மாதங்களுக்கு முன்னால் கமிட்டியும் கூடி தீவிரமாக என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைப்பற்றி ஆலோசித்து அதன்படி வேலைகளும் செய்யப்பட்டிருக்கிறது.

SRI A. V. P. ASAITHAMBI : ஸார், நூற்றுக்கணக்கான கிராமங்களில் குடிதண்ணீர் வசதி கிடைக்க வில்லை என்று சொல்லப்பட்டு வருகிறது. ஆகவே இந்த மாதிரி குடிதண்ணீர் வசதி யில்லாத கிராமங்களை எல்லாம் ஒரு சர்வே எடுத்து பொதுவாக குடி தண்ணீர் கிடைப்பதற்கு கிணறுகள் வெட்டிக் கொடுப்பதற்கு சர்க்கார் உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

THE HON SRI M. A. MANICKAVELU : கூடுமான வரையில் கிராமங்களுக்கு குடிதண்ணீர் சப்ளை செய்யப்பட்டுதான் வருகிறது. ஆனால் இந்த ராஜ்யம் பெரிய விஸ்தீர்ணமுள்ளதாக இருப்பதனால் உடனடியாக செய்து கொடுத்துவிட முடியாது, கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நிறைவேற்றிக் கொடுக்க முடியும்.

SRI. M. S. SELVARAJAN : தேசீய தண்ணீர் சப்ளை திட்டத்திலிருந்து மத்திய சர்க்கார் கொடுத்த உதவியை சரியாக உபயோகப்படுத்தப் படவில்லை என்று தெரிகிறது. இதற்கென்று ஏற்கனவே பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பல வருடங்களுக்கு முன்பே தயாரிக்கப்பட்ட அத் திட்டங்கள் தேவையான சில இடங்களுக்கு எட்டவில்லை. ஆகவே அதில் வேலை செய்வதற்கு ஏன் காலதாமதம் ஏற்படுகிறது ? இவைகளை உடனே தேவையான இடங்களுக்கு அமுல் செய்யப்படுவதற்கு அரசாங்கம் வேண்டிய பரிசீலனை நடத்துமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த வேலை செய்வதில் காலதாமதம் ஏற்படுவதன் காரணம் ஒன்று போதிய அளவில் டெக்னிக்கல் பர்ஸனல் கிடைக்கவில்லை என்பது ஒன்று. மற்றொன்று இதற்கென சில சாமான்கள் கிடைப்பதும் கஷ்டமாய் இருக்கிறது. இந்த மாதிரியான பல காரணங்கள் இருக்கின்றன. சீக்கிரமாக நடத்த வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் ஆசை.

SRI N. K. PALANISAMI : ஸார், இரண்டு மாதங்களுக்கு முன்னால் இதைப்பற்றி ஆலோசிக்க ஒரு கமிட்டி கூடி சில முடிவுகளை எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த முடிவுகளின் விவரம் என்ன என்பதை சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அவைகள் எல்லாம் ஞாபகம் இல்லை. அதிகமாக இதைப்பற்றி பிரபகண்டா செய்ய வேண்டும், கெட்டித்துணி போட்டு வடிகட்டின பிறகு அந்த குடிதண்ணீரை உபயோகப்படுத்த வேண்டும். அந்த கிணறுகளில் இறங்காதபடி பார்ப்பது, இன்னும் மருந்து வகை மூலமாக சிகிச்சை செய்வதற்கும் வேண்டிய முடிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன.



6th March 1958]

SRI K. ANBAZHAGAN : தேசீய தண்ணீர் வழங்கும் திட்டத்திலிருந்து உதவிகள் ஒதுக்கப்பட்டிருந்தும் அவற்றை செலவு செய்து நிறைவேற்றாமல் இருப்பதற்கு காரணம் இவைகளைப்பற்றி திட்டம் போடாமல் இருந்து வருகிறதா ? அல்லது திட்டமிட்டதை அரசாங்க யந்திரங்கள் சரியாக நிறைவேற்றாமல் இருக்கிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீமைச் சேர்ந்தது. ரூரல் வாட்டர் ஸப்ளை ஸ்கீம் வேறு, தேசீய வாட்டர் ஸப்ளை ஸ்கீம் வேறு.

* 218 Q.—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of drinking-water wells dug by the Government from 1947 to 1957 in the Kadambuliyur Firka, South Arcot district;

(b) the amount spent thereon; and

(c) the number of wells not in use?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Thirty-nine.

(b) Rupees 85,142.

(c) Nine.

SRI A. GOVINDASAMY : இந்த காடாம்புலியூர் பகுதியில் உள்ள கிணறுகளில் சூரிய வெளிச்சம் சரியாக படுவதில்லை. அதன் காரணமாகத்தான் அங்குள்ள கிணறுகளில் தண்ணீர் குடிதண்ணீருக்கு உபயோகப்படுவதில்லையாதலால் குழாய் கிணறுகள் மூலம் குடித்தண்ணீர் வசதி செய்து கொடுக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் அடுத்த கேள்விக்கும் சேர்த்து பதிலை சொல்லலாம். அதன் பின் உப கேள்விகள் கேட்கலாம்.

* 219 Q.—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state —

(a) whether there is any proposal to provide protected water-supply to Kadambuliyur Firka, South Arcot district from the river Gadilam;

(b) if so, when it will be given effect to; and

(c) the expenditure to be incurred thereby?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir.

(b) A report from the Inspector of Municipal Councils and Local Boards regarding the ability and the willingness of the Local bodies concerned to meet the cost of the maintenance of the scheme is awaited.

(c) The approximate cost of the scheme is Rs. 22·8 lakhs to instal and Rs. 34,500 to maintain per annum.

SRI A. GOVINDASAMY : என்னுடைய கேள்விக்குப் பதிலளிக்கப் படவில்லை.

MR. SPEAKER : உங்கள் கேள்வியை திருப்பிக்கேளுங்கள்.

SRI A. GOVINDASAMY : அந்தப் பகுதியில் குழாய் கிணறுகள் மூலமாக தண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசாங்கம் ஏதாவது திட்டமிடுமா என்று கேட்கிறேன்.

காரணம் என்ன ? அந்த ரூட்டுகளை எடுத்து நடத்துவதற்குப் போதுமான பஸ்கள் இருக்கின்றனவா ? அல்லது புதிய பஸ்கள் வாங்கப்பட்டு விட்டனவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ஐந்து ரூட்டுகளிலும் இப்போது சர்க்கார் பஸ்களும், தனியார் பஸ்களும் ஓடுகின்றன. இவ்வாறு ஓடுவதால் சில கஷ்டங்கள் சர்க்கார் பஸ்களுக்கு ஏற்பட்டன. அவைகள் என்னவென்றால், தனியார் பஸ் விடுகின்றவர்கள் சர்க்கார் பஸ் வருகின்ற வரையில் ஸ்டாண்டில் நிற்கிறார்கள். சர்க்கார் பஸ்ஸைக் கண்டவுடன் அடுத்த ஸ்டாண்டுக்குப் போய் விடுகின்றார்கள். சர்க்கார் பஸ்கள் இந்த விதமான தவறுகள் செய்ய முடியாது. குறித்த காலத்தில் போக வேண்டியிருப்பதால் அங்கு ஸ்டாண்டில் உள்ள பாஸஞ்சர்களை யெல்லாம் தனியார் பஸ்களை விடுகின்றவர்கள் ஏற்றிச் சென்று விடுவதால், சர்க்கார் பஸ்களுக்கு அதிகப் பாஸஞ்சர்கள் கிடைப்பதில்லை. ஆகையால்தான் இந்த பஸ் ரூட்டுகளை எடுத்துக்கொள்ள முடிவு செய்தோம். இவ்வாறு எடுக்கப்படும் இந்த ஐந்து ரூட்டுகளிலும் தனியார் துறையில் இருந்த பஸ்களின் எண்ணிக்கை 15. சர்க்காருக்கு இப்போது 15 பஸ்கள் போட வசதி இருக்கின்றது. மேற்கொண்டு அங்கத்தினர்கள் இந்த பட்ஜெட்டைப் பாஸ் செய்தால் அதில் 72 பஸ்கள் அடுத்த வருஷம் கட்ட யோசனை செய்திருக்கிறோம். பஸ்கள் குறைவாக இருக்கும் என்ற கவலை வேண்டியதில்லை.

SRI A. V. P. ASAITHAMBI : சென்னை நகரத்தைத் தவிர இதரப் பகுதிகளிலுள்ள பஸ்கள் பூராவையும் உடனடியாக தேசிய மயமாக்குவது சாத்திய மில்லையென்பது உண்மையென்றாலும், சென்னை நகரத்தைப் போல் திருச்சி, மதுரை, திருநெல்வேலி முதலிய நகர பஸ் சர்வீஸை மாத்திரம் உடனடியாக தேசிய மயமாக்குவதைப் பற்றி யோசிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு பஸ் ரூட்டை தேசிய மயமாக்கினால் அதற்கு முக்கியமான சாதனம் வொர்க்ஷாப். ஒவ்வொரு ஊரிலும் வொர்க்ஷாப் வைத்துக் கொண்டு பஸ் சர்வீஸ் நடத்தினால் கட்டுபடியாகாது. ஆகவேதான் இந்த தேசிய மயமாக்கும் திட்டத்தை விஸ்தரிக்கும்போது வொர்க்ஷாப் இருக்கும் இடத்திற்குப் பக்கத்திலிருந்து விஸ்தரிக்கப்பட வேண்டுமென்பது சர்க்காருடைய அபிப்பிராயம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கன்னியாகுமரி பஸ் சர்வீஸை நம்மிடம் கொடுக்கும்போது அந்த திருவாங்கூர்-கொச்சி சர்க்கார் ஓட்டை பஸ்களாகக் கொடுத்தார்களென்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? அது உண்மையானால் அந்தத் திருவாங்கூர்-கொச்சி சர்க்காரிடம் நஷ்ட ஈடு வாங்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The question is not well worded.

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member may put a separate question.

MR. SPEAKER : கேள்வி கேட்கும்போது இன்னொரு பிரதேசத்தைக் குறை கூறுவது தவறு.

SRI M. P. SUBRAMANIAM : அரசாங்கம் பஸ்களை தேசிய மயமாக்க வேண்டுமென்று ஒப்புக்கொண்டிருப்பதனால், இப்போது இருக்கும் பஸ்களை எடுத்துக் கொள்வது தாமதமானாலும் கொடுக்கும் புதிய பஸ்களை அரசாங்கம் எடுத்து நடத்த முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நான் இதற்கு முன்பு ஒரு கேள்விக்கு பதில் சொன்னேன். ஒரு வொர்க்ஷாப்பை வைத்துக் கொண்டு அதைச் சுற்றி பஸ் ரூட்டுகளை எடுத்துக்கொள்ள முடியும். தனித் தனியாக, திட்டுத் திட்டாக எடுப்பது சாத்தியமல்ல. ஆகவேதான் விஸ்தரிக்கும்போது சென்னை நகரத்தைச் சுற்றிலும், கன்னியாகுமரியைச் சுற்றிலும் வொர்க்ஷாப் அடிப்படையில் விஸ்தரிக்கப்படுகிறது.



SRI D. S. AUTHIMOOLAM : ஸார், பஸ்கள் எல்லாவற்றையும் தேசிய மயமாக்க ஏராளமான மூலதனம் தேவை என்று சொல்லப்படுவதால், அந்த மூலதனத்தைத் திரட்ட நம்முடைய ஜனங்களிடம் சொன்னால் லோன் மூலமாக இலகுவாக வசூல் பண்ணிவிட முடியும். அந்த முறையில் இந்திய சர்க்காரிடம் உத்திரவு வாங்கி அடுத்த வருஷத்திற்குள் எடுத்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அடுத்த வருஷத்திற்குள் இயலாது. படிப்படியாகச் செய்து கொண்டு போனால்தான் நன்றாக திறமையாக நடத்த முடியும்.

SRI P. S. CHINNADURAI : ராஜ்ய முழுவதிலும் உள்ள பஸ் போக்குவரத்தை அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டுமானால் எவ்வளவு தொகை தேவைப்படும் என்று ஏதாவது புள்ளி விவரம் சர்க்கார் தயாரித்திருக்கிறார்களா ? இல்லையானால் அதற்கு ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதைப்பற்றி ஒரு தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தயாரிக்கப்படும்.

SRI V. SANKARAN : மதுரையிலே சென்னை நகரத்தை விட நல்ல முறையிலே திருப்திகரமாக டவுன் பஸ் நடக்கிறது. அப்படியிருக்கும் நிலையிலே பொது மக்களுக்கு அதிருப்தியை உண்டாக்கும் வகையில் சர்க்கார் அதைத் தேசிய மயமாக்க மாட்டார்களல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : ஒவ்வொருவருக்கு தேச பக்தி யுண்டு. சிலருக்கு நாட்டு பக்தியுண்டு. நண்பருக்கும் நகர பக்தி இருக்கிறது. (சிரிப்பு.)

SRI K. ANBAZHAGAN : பஸ் போக்குவரத்தை நாட்டு உடைமையாக்குவதில் பக்கத்தில் தொழிற்சாலை இருக்கக் கூடியவைகளை மட்டும்தான் தேசிய மயமாக்க முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிகப் பெரிய பஸ் கம்பெனிகளில் பழுது பார்க்கும் தொழில் நிலையத்துடன் இருக்கக்கூடியவைகளை அந்தத் தொழில் நிலையத்துடன் சேர்த்து நாட்டு உடைமையாக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஸார், இதையெல்லாம் ஹைபாத்தெடிகல் க்வெஸ்டியன் என்று சொல்வார்கள்.

MR. SPEAKER : The Hon. Minister need not answer it.

### *Military College, Dehra Dun*

* 221 *Q.*—SRI M. P. SARATHI : Will the Hon. the Chief Minister be pleased to state the number of persons selected from this State for training at Dehra Dun Military College in 1956–57 and 1957–58?

THE HON. SRI C. SUBRAMANIAM : The particulars are given below :—

1956—Only one person was selected.

1957—Only one person was selected.

1958—Two persons were selected for the first term.

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்காக ஒரு திட்டம் தயாரித்து அதையும் சேர்த்து ஒரு காம்ப்ரஹன்ஸீவ் திட்டமாக கொண்டுவர வேண்டும் என்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. சில இடங்களில் கிணறுகள் வெட்டும்போது நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. சில இடங்களில்தான் நல்ல தண்ணீர் கிடைக்கிறது. கூடிய வரையில் நல்ல தண்ணீர் கிடைப்பதற்கு; வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுத்து வருகிறது.

Government have sanctioned the proposal of the Collector of South Arcot for the provision of a bore-well with a overhead tank and alum treatment plant for the supply of protected water to the villages of Kadambuliyur, Purangudi and Melambattu.

SRI K. ANBAZHAGAN: காடாம்புலியூர் பகுதியில் தேசிய தண்ணீர் வழங்கும் திட்டத்தின்கீழ் நல்ல சுத்தம் செய்யப்பட்ட தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு திட்டம் இருப்பதாக சொல்லப்பட்டது. அந்த திட்டத்திற்கு தேசிய தண்ணீர் வழங்கும் திட்டத்தின்கீழ் மத்திய அரசாங்கத்திலிருந்து தேவையான பணத்தைப் பெற முயற்சிப்பீர்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியைப்பற்றி ஆராய வேண்டும். அதை ஆராய்ந்து பார்க்கிறேன்.

SRI A. GOVINDASAMY : எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த கனம் ராமசாமி படையாச்சி அவர்கள் மந்திரியாக இருந்த சமயத்தில் அந்தப் பகுதியில் இந்த திட்டத்திற்காக 30 லட்சம் ரூபாய் செலவு செய்து தண்ணீர் வழங்கப்படும் என்று பிரசாரம் செய்யப்பட்டது. இப்பொழுது இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னும் அது ஏன் நடைபெறாமல் இருக்கிறது. அது எப்போது நடைமுறைக்கு வரும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தப் பிரச்னையில் அந்த மந்திரியை இழுக்க வேண்டிய அவசியமில்லை. அரசாங்கம் இதைப் பற்றி கவனிக்கும்.

*Nationalization of Bus services*

* 220 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the
1-20 p.m. Minister for Industries be pleased to state—

(a) whether there is a proposal to extend the nationalization of bus services; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b)—

| | Route. | Minimum number of buses to be run. |
|---|---|---|
| 1 | Madras (Mint) to Tiruvothiyur (Route No. 56) ... ... ... ... ... | 13 |
| 2 | Madras (Mint) to Ennore (Route No. 56-A). | 3 |
| 3 | Madras (Mint) to Red Hills (Route No. 57). | 4 |
| 4 | Madras (Broadway) to Lattice Bridge (Route No. 19) ... ... ... ... | 4 |
| 5 | Madras (Parry's and Broadway) to Villivakkam (Route No. 20) ... ... | 10 |

SRI N. K. PALANISAMI : ஸார், சென்னை நகரத்தின் சுற்றுப்புறங்களில் பஸ்களை தேசிய மயமாக்குவதை விஸ்தரிப்பதைவிட, பாக்கி



மாகாணங்களைப் போல, தனிப்பட்டவர்கள் பஸ் பர்மிட் காலம் முடிந்த பிறகு புதுப்பிக்க வரக்கூடிய காலத்தில் சர்க்கார் படிப்படியாக எல்லா இடங்களிலும் பஸ்களை ஏன் தேசிய மயமாக்கக் கூடாது ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் நல்ல யோசனை சொல்லுகிறார்கள். சர்க்காரிடம் போதுமான பணம் இருந்தால் ஒரே நாளில் அதைச் செய்துவிட முடியும்.

SRI A. A. RASHEED : Is it not a fact that the buses plying in the City are not enough for the peak-hour traffic and if so, will the fleet of the buses be increased in the City?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, it is true that the number of buses plying in the City is not enough to carry the peak-hour load but anybody who is familiar with the City Transport problem will acknowledge that the peak-hour traffic has not been handled successfully even by the biggest City in the world, New York. There is bound to be a great strain on the traffic during peak-hour.

SRI N. K. PALANISAMI : ஸார், சர்க்காரிடம் இப்போது போக்குவரத்தை தேசிய மயமாக்கும் திட்டம் இருக்கிறதா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : தேசிய மயமாக்கும் திட்டம் சர்க்காரிடம் இருக்கிறது. ஆனால் எப்போது, எப்படி, எந்த முறையில் அது அமுல் நடத்தப்பட வேண்டுமென்பது யோசித்துச் செய்யப்படும்.

SRI S. NAGARAJA MONIGAR : அப்படி தேசிய மயமாக்கும் திட்டம் ஏற்கெனவேயே போடப்பட்டு விட்டதா ? அப்படியானால், எத்தனை வருஷத்தில், வருஷம் ஒன்றுக்கு எத்தனை ரூட்டுகள் வீதம் நேஷனலைஸ் செய்யத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது பணம் இல்லையென்று சொன்னார்கள். அப்படியானால் வருஷம் ஒன்றுக்கு ஒன்றிரண்டு ரூட்டுகளில் மொப்யூஸில் பஸ்களை எடுத்து நடத்த சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினருடைய அபிப்பிராயம் மொப்யூஸில் பஸ்களை எடுத்து நடத்த வேண்டுமென்பது என்று நினைக்கிறேன். அவ்வப்போது நிதி நிலைமையை உத்தேசித்து, அவசியத்தை யோசித்து இந்த தேசிய மயமாக்கும் திட்டம் விஸ்தரிக்கப்படும்.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know whether there was a proposal to nationalize the bus routes in the Kanyakumari district and extend it to Tirunelveli and also whether there was a notification to that effect in the *Fort St. George Gazette* and if so, the present stage at which the matter stands?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, there was a proposal under consideration by the Government to extend the nationalization of the transport from Kanyakumari to Tirunelveli. A notification was issued in this behalf and then the Government have found that it is not possible to take over all the buses at one time. Therefore, they have given it up. They will progressively nationalize the routes as and when funds permit.

SRI M. KALYANASUNDARAM : ஸார், மந்திரி அவர்கள் குறிப்பிட்ட இந்த ஐந்து இடங்களில் மட்டும் பஸ் போக்குவரத்தை சர்க்கார் எடுத்து நடத்த வேண்டுமென்று துரிதமாக நடவடிக்கை எடுப்பதன்

அணுகுவதற்கு இடையூறாக இருக்கிறது. தங்கி இருக்கின்ற இடத்தில் கட்சிக் கூட்டத்தை நடத்தாமல், கட்சிக்கு என்று தனியாக இருக்கும் இடத்தில் கூட்டத்தை நடத்துவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மந்திரியாக இருக்கிற காரணத்தினாலே, 24 மணி நேரமும் எல்லோரையும் பார்க்க வேண்டுமென்று சொல்வது முடியக்கூடிய காரியம் அல்ல. யார் வந்தாலும் சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிற சில சமயங்களில் கட்சி விஷயத்தையும், சொந்த விஷயங்களைப் பார்ப்பதற்கும் மந்திரிகளுக்கு சுதந்திரம் உண்டு என்றே நம்புகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : மந்திரிகள் எல்லாக் கட்சியினருக்கும் பொதுவானவர்கள். அப்படியிருக்கையில், அவர்கள் வெளியே செல்லுகின்ற பொழுது, எல்லாக் கட்சிக்காரர்களும் அவர்களை உபயோகித்துக் கொள்ளலாம். எந்தக் கட்சிக்காரர்களாவது அவர்களை உபயோகித்துக்கொள்ள வேண்டுமென்று கூப்பிட்டு, மந்திரிகள் வர முடியாது என்று தெரிவித்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எங்களை அப்படி ஒருவரும் கூப்பிடமாட்டார்களென்று நினைக்கிறேன். (சிரிப்பு.)

SRI P. S. CHINNADURAI : அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது குறைந்தபட்சம் நிகழ்ச்சி நிரலையாவது காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்புவதோடு, இதர கட்சி யூனிட்டுகளுக்கும் அனுப்ப ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லா அங்கத்தினர்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : மக்கள் வரிப்பணத்தை அமைச்சர்கள் காங்கிரஸ் கூட்டங்களிலே கலந்துகொள்ள பாழாக்கி விடுகிறார்களோ என்று அங்கத்தினர் பயப்படுகிறார். வரிப் பணத்தில் காங்கிரஸ் அனுதாபிகளும், காங்கிரஸ்காரர்களும் கொடுக்கும் பணம் அதிகமாக இருக்கிறது என்பதை உணருவார்கள் என்று கருதுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு குதர்க்கவாதமே அவசியமில்லை. எல்லோரும் சரி என்று சொல்லக்கூடிய முறையில்தான் நாங்கள் காரியங்களைச் செய்து வருகிறோம். மக்கள் செலுத்தும் வரிப்பணத்தை காங்கிரஸ் கட்சிக்காக எந்தக் காலத்திலும் உபயோகிக்க மாட்டோம் என்று உறுதியாகச் சொல்லுகிறேன்.

### *Handloom cloth*

* 224 Q.—SRI P. G. MANICKAM AND SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Central Government have decided to reduce the rebate given from the Handloom Cess Fund on the sale of handloom cloth from 1½ annas to 1 anna ; and

(b) if so, whether the Government have made any representations to the Centre in this connexion?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) With effect from 1st December 1957, the rate of rebate on the wholesale and the retail sales of handloom cloth by co-operatives had been reduced from 9 nP. to 6 nP. in the rupee, by the Government of





India. Realizing that such reduction will result in accumulation of stocks of unsold cloth and, also adversely affect marketing of handloom produced by Weavers' Co-operative Societies, representations were made to the Government of India that the old rate of 9 nP in the rupee may be continued at least till 31st March 1958. The Government of India have suggested that the new system should be given a fair trial before any revision is undertaken.

SRI A. VEDARATHNAM : On a point of order Sir, கனம் அமைச்சர் அவர்கள் டிசம்பர் மாதம் 1-ம் தேதியிலிருந்து இந்த செஸ் விகிதம் அமலுக்கு வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். இந்தக் கேள்வி அதற்கு முன்னதாகவே அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். இவ்வளவு காலம் தாமதம் ஆகி, இந்த முறை அமலுக்கு வந்து மூன்று மாதம் கழித்து பதில் தருவது முறையா என்று கேட்கிறேன்.

MR. SPEAKER : It is not a point of order.

SRI A. GOVINDASAMY : ஏற்கெனவே இருந்த ரிபேட்டுத் தொகையை மீண்டும், தீபாவளி, பொங்கல் பண்டிகை, கைத்தறி வாரம் போன்ற விசேஷமான காலங்களிலே கொடுக்கும்படி மத்திய சர்க்கார் ஆலோசனை கூறியிருக்கிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மத்திய சர்க்காருக்கு இது விஷயமாகப் பல யோசனைகளைச் சொல்லியிருக்கிறோம். அவைகளுள், கனம் அங்கத்தினர் சொன்னதும் ஒன்று.

SRI K. SATTANATHA KARAYALAR : தற்சமயம் கைத்தறித் தேக்கம் எவ்வளவு இருக்கிறது, கூட்டுறவுச் சங்கங்களிலே எவ்வளவு இருக்கிறது, தனிப்பட்ட நபர்களிடம் எவ்வளவு இருக்கிறது, தைப் பொங்கலுக்குப் பிறகு எவ்வளவு, முன்பு எவ்வளவு என்று சொல்ல முடியுமா ?

MR. SPEAKER : If the Hon. Minister can answer the question, I have no objection.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I shall give an answer which the hon. Member may perhaps take as an answer for all his questions. In the debate on the Governor's Address, I gave all details of the sales and accumulations in the co-operative sector and the expected accumulation in the private sector. Roughly, the accumulation is of the order of Rs. 1 crore in the co-operative sector and Rs. 1½ crores in the private sector.

MR. SPEAKER : I do not know how the hon. Member expects the Hon. Minister to give all the information in answer to a supplementary question. He will have to put a separate question.

SRI N. K. PALANISAMI : ஜனவரி மாதம் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு 1½ அணா ரிபேட் மட்டும் கொடுக்க வேண்டும் என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஜனவரி மாதக் கடைசியில் மத்திய சர்க்கார் பதில் சொல்லும்போது சென்னை சர்க்காரிடமிருந்து ஒரு கோரிக்கையும் வரவில்லை என்று சொன்னார்கள். இதில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ? 1-40 p.m.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் மத்திய சர்க்கார் கொடுத்த பதிலை சரியாக படிக்கவில்லை அல்லது புரிந்து கொள்ள வில்லை என்று நான் நினைக்கிறேன். துணி தேக்கத்தை நிவாரத்திப்பதற்கு ஏதாவது யோசனைகளை அனுப்பினால் அதை பரிசீலிக்கிறோம்

என்று சொன்னார்கள். துணி தேக்கத்தை நிவர்த்திப்பதற்கு சில யோசனைகளை சென்னை சர்க்கார் எழுதி அனுப்பியிருக்கிறது. முதல் கடிதத்தில் 1½ அணா ரிபேட்டை குறைக்கக் கூடாது என்று எழுதியிருக்கிறோம். இரண்டாவது கடிதத்தில் துணி தேக்கத்தை நிவர்த்திப்பதற்கான யோசனைகளை எழுதியிருக்கிறோம்.

Sri K. RAMACHANDRAN : 1958-ம் வருஷம் மார்ச்சு 31-வரையாவது ஒன்பது நயா பைசா இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். இந்த யோசனை எந்த அடிப்படையில் சிபார்சு செய்யப்பட்டது. அதற்குப் பின் ஏன் இருக்கக்கூடாது என்று கருதுகிறார்கள் ?

The Hon. Sri R. VENKATARAMAN : துணி தேக்கம் தற்காலிகமானதா அல்லது நிரந்தரமானதா என்பதை கண்டுபிடிப்பதற்கு சாதாரணமாக பொங்கல் திருநாளின்போது எவ்வளவு துணி விற்பனையாகிறது என்பதைப் பார்ப்பது வழக்கம். துணி தேக்கம் குறைந்து இருக்கிறதா அல்லது அதிகமாக இருக்கிறதா என்பதைப் பார்த்து யோசனை செய்ய வேண்டும். இந்த அடிப்படையில் கடிதம் எழுதப்பட்டு இருக்கிறது.

Srimathi P. K. R. LAKSHMIKANTHAM : தலைவர் அவர்களே இப்போது நமது கனம் அமைச்சர் அவர்கள் இந்த ரிபேட் சம்பந்தப்பட்ட வரை பல யோசனைகளை மத்திய சர்க்காருக்கு கூறி இருப்பதாக தெரிவித்தார்கள். அவர்கள் எல்லா யோசனைகளையும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMN : I have no answer for that.

Sri V. K. KOTHANDARAMAN : ரிபேட் குறைவின் காரணமாக கைத்தறி துணி தேக்கம் இருக்கக்கூடிய சந்தர்ப்பத்திலும்கூட, பிரியமாக வாங்கக்கூடிய சில ரக துணிகளை சில பிரதேசத்தில் உற்பத்தியாகியும் கூட அவைகளை ராஜ்ய சர்க்கார் வாங்க மறுப்பது உண்மைதானா ?

The Hon. Sri R. VENKATARAMAN : A separate question may be put in respect of that.

Sri A. V. P. ASAITHAMBI : கைத்தறி துணித் தேக்கத்தைப் போக்குவதற்கு மத்திய சர்க்கார், நாம் ஏதாவது திட்டம் போட்டு அனுப்பினால் பரிசீலிப்பதாகச் சொல்லுகிறார்கள். இந்த செஸ்ஸை ஒரு அணாவிலிருந்து 1½ அணாவாக மட்டும் போட்டு விட்டால் கைத்தறி துணித்தேக்கம் போய்விடாது. பிற ராஜ்யங்களிலிருந்து நம் நாட்டுக்குள் இறக்குமதியாகும் துணிகளுக்கு தடை விதிக்க மத்திய சர்க்காருக்கு நம் அரசாங்கம் சிபாரிசு செய்யுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : நம் நாட்டு கைத்தறி துணிகளை பிற ராஜ்யங்களுக்கு நாம் ஏற்றுமதி செய்யக்கூடாது என்று அவர்கள் சொல்லிவிட்டால் நம்மால் இந்தப் பிரச்னையைத் தீர்க்கவே முடியாது.

Sri S. LAZAR : ரிபேட் தொகையை 1½ அணாவிலிருந்து 1 அணாவாக குறைத்ததற்கு மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய காரணம் என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : மத்திய சர்க்கார் கூறும் காரணங்களில் ஒன்று—கைத்தறி துணி தானாக தன் சுய பலத்தில் நிற்க வேண்டும். ரிபேட்டை நீடித்துக் கொண்டே இருந்தால் தொழில் வளர்ச்சி அடையாது. அவர்கள் உற்பத்தி சாதனங்களுக்கு அதிக உதவி கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ரிபேட்டினால் உற்பத்தி செய்கிறவர்களுக்கு எந்த விதமான நன்மையும் கிடையாது. துணி வாங்குபவர்களுக்குத்தான் நன்மை ஏற்படுகிறது. இவைகளைத் தவிர இன்னும் பல காரணங்களைச் சொல்லுகிறார்கள்.





Sri K. R. NALLASIVAM : ரிபேட் கொடுப்பதன் மூலம் கைத்தறி துணிக்கு நிரந்தரமான பரிகாரம் காண முடியாது என்று சொன்னார்கள். அப்படியானால் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கைத்தறி துணியின் மீதுள்ள ஏற்றுமதி வரியை குறைப்பதற்கு மத்திய சர்க்காருக்கு மாகாண சர்க்கார் சிபார்சு செய்யுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஒரு எக்ஸ்போர்ட் கார்ப்பரேஷனை வைத்து அதன் மூலமாக அதிகமாக, உபரியாக இருக்கின்ற துணியை சர்க்கார் வாங்க ஏற்பாடு செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பது நமது சிபாரிசு.

### *Employees State Insurance Scheme*

* 225 *Q.*—Sri P. G. MANICKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state —

(*a*) the places where the Employees State Insurance Scheme is in force;

(*b*) the number of employees benefited under the scheme in each of these places; and

(*c*) the several benefits which the employees get under this scheme?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) *to* (*c*) Answer[a] is placed on the table of the House.

Sri S. PAKKIRISAMI PILLAI : தொழிலாளர்களுக்கு உண்டான ராஜீய சுகாதார பாதுகாப்பு திட்டம் இதர பகுதி தொழிலாளருக்கு உதவி செய்த போதிலும் சென்னையில் அநேக தொழிலாளருக்கு உதவி செய்யவில்லை. முக்கியமாக பி அண்டு ஸி தொழிலாளருக்கு உதவி செய்யவில்லை என்று மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அதன் விளைவாக அவர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதைத் தவிர்ப்பதற்கு அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : சென்னை நகரத்தில் எம்பிளாயிஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் சம்பந்தமாக எல்லா பிரச்னைகளையும் பரிசீலிப்பதற்காக கடந்த மாதம் 28-ந் தேதி ஒரு கூட்டம் சென்னையில் கூட்டப்பட்டது. அதற்கு தொழிலாளர் பிரதிநிதிகள், முதலாளிகள், சர்க்கார் டாக்டர்கள், இன்ஷியூரன்ஸ் அதிகாரிகள் எல்லோரும் வந்திருந்தார்கள். எல்லாவற்றையும் பரிசீலித்தபோது பி அண்டு ஸி தொழிலாளருக்கு இப்பொழுதைவிட அதிகமான சலுகை இருந்தது, அது குறைந்து போய்விட்டது என்று புகார் இருப்பதாகத் தெரிந்தது. இன்ஷூரன்ஸ் திட்டத்தில் குறைபாடு இருப்பதாக நான் நினைக்கவில்லை.

### *Geological Survey*

* 226 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to allow private agencies to conduct geological surveys?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

Sri A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that in all the Western countries it is the private agency which conducts geological survey and if so, why cannot we also allow them to do it here.

[a] Printed as Appendix on pages 387–388 infra.

[6th March 1958

THE HON. SRI R. VENKATARAMAN : Even now private industrialist can employ geologists and ask them to make a preliminary survey. It is only when they want to dig the earth and take some wares, that the permission of the Government is required and permission is freely given whenever they want to explore any unmapped area.

SRI A. VEDARATHNAM : இந்த பூகற்ப ஆராய்ச்சி யார் நடத்து கிறது ? எந்தத் துறையில் நடத்தப்படுகிறது ? அதில் குறிப்பிடத்தக்க ரிசல்டுகள் இருந்தால் அறிவிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மத்திய சர்க்கார் இந்த ஆராய்ச்சியை நடத்துகிறார்கள். தென் பிராந்தியம், அதாவது, சென்னை, மைசூர், பாண்டிச்சேரி, கேரளம் ஒரு பிராந்தியம். எந்த எந்த இடத்தில் ஆராய்ச்சி நடத்த வேண்டும் என்று ஒரு லிஸ்ட் தயார் செய்கின்றனர். அதன்படி ஆராய்ச்சி நடத்தப்படுகின்றது.

*Nagapattinam Co-operative Stores*

* 227 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state —

(*a*) whether the Government have received a pamphlet regarding misappropriation of funds in the Nagapattinam Co-operative Stores; and

(*b*) if so, the action taken in the matter?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under examination of the Government.

SRI V. K. KOTHANDARAMAN : ஏற்கனவே இந்த விஷயத் தைப்பற்றி விசாரணை செய்ததாகவும் இப்பொழுது இன்னொரு விசாரணை செய்யப்போவதாகவும் தெரிய வருகிறது. ஏற்கனவே விசாரணை செய்தது யார் ? இப்பொழுது விசாரணை செய்யப்போகிறவர் யார் என்பதை அறி விக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் விசாரணை ஒன்று மில்லை. சர்க்கார் என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப்பற்றி ஆலோசனை நடந்து கொண்டு இருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : நாகை கூட்டுறவு சங்கத்தில் நடை பெற்ற ஊழலைப்பற்றி பொதுமக்கள் அறிந்தும், தாளில் அச்சிட்டு வழங்கச் செய்தும்கூட இது வரை போதுமான அளவு தக்க நடவடிக்கை எடுக்க வில்லை என்ற நிலை இருக்குமானால் அப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு இது தவறான வழியில் செல்ல ஊக்கமளிக்காதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்று சொல்வது சரியில்லை. போலீஸ் இன்வஸ்டிகேஷன் ஒன்று நடந்திருக்கிறது. சொஸைடி ரிஜிஸ்ட்ரார் டிபார்ட்மெண்டு இன் வெஸ்டிகேஷன் நடத்தி இருக்கிறார். இதற்கிடையில் பணம் வசூலிப்பதற் கான முயற்சி செய்யப்பட்டும், பணம் வசூலிக்கப்படாமல் இருந்து கொண்டு இருக்கிறது. இவ்வளவு எல்லாம் நடவடிக்கை எடுத்திருக்கின்றபோது ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வது சரியாகாது.

SRI S. LAZAR : When such complaints are received by the Government do they find out whether they are bona fide complaints?

THE HON. SRI R. VENKATARAMAN : That is exactly the purpose for which this matter is referred to the Police.



6th March 1958]

SRI V. K. KOTHANDARAMAN : நடவடிக்கை எடுக்கப்பட்டது உண்மைதான். ஆனால் ஊழலை நாங்கள் நிரூபிக்கிறோம் என்று சாட்சி கொடுப்பதற்கு பலர் முன் வந்தும், அப்படி நிரூபிக்கவில்லை என்றால் பிராஸிகியூஷன் செய்யுங்கள் என்று சொல்லியும்கூட, விசாரணை நடக்கும் போது சாட்சியம் சொல்ல அனுமதிக்க மறுத்ததற்கு காரணம் என்ன என்பதை அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தூர் அதிர்ஷ்டவசமாக கூட்டுறவு சங்கங்களில் பிணக்குகள் ஏற்பட்டுவிட்டன. ஒரு சாரார் சாட்சியம் அளிக்க முன் வருகிறார்கள். மற்றொரு சாரார் முன் வருவது இல்லை. இது ஏறக்குறைய வழக்கமாகிக் கொண்டு இருக்கிறது. இந்த நடு நிலைமை யிலிருந்து சர்க்கார் விசாரிக்கின்றனர். இது போலீசுக்கு விடப்பட்டிருக் கிறது. அது முடிந்தவுடன் நடவடிக்கை எடுப்பதுபற்றி முடிவு செய்யப் படும்.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : கூட்டுறவு சங்கங்களில் இம்மாதிரி ஊழல்கள் நடப்பது வரவர ரொம்ப அதிகமாகிக் கொண்டு வருகிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்த நாம் கூட்டுறவு இயக்கத்தைத்தான் நம்பியிருக்கும்போது இப்படிப்பட்ட ஊழல்கள் விரிவாக மலிந்து நடப்பதைத் தடுக்க நிரந்தர மான பரிகாரம் தேட வேண்டாமா என்பதை கேட்க ஆசைப்படுகிறேன். 1–50 p.m.

THE HON. SRI R. VENKATARAMAN : அம்மையார் அவர் கள் சொல்வது சரியல்ல. இந்த ஒரு வருஷ காலமாக இந்த சட்டசபையில் இரண்டு சொஸைட்டிகளைப்பற்றிதான் இந்த விதமான புகார்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. ஆகவே ஊழல்கள் நிறைந்திருக்கின்றன என்றும், ஊழல் கள் மலிந்திருக்கின்றன என்று சொல்வதானதும் அதை மிகைப்படுத்திச் சொல்வதாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE MADRAS ASSEMBLY RULES *RE* HARD SHIP CAUSED BY THE SHIPS FROM MALAYA NOT CALLING AT NAGAPATTINAM PORT.

MR. SPEAKER : I have received notice of a motion under Rule 40 of the Madras Assembly Rules from the hon. Member Sri N. S. Ramalingam calling attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance. The hon. Member may now speak.

SRI N. S. RAMALINGAM : மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, சென்ற சில மாதங்களாக சிங்கப்பூர், பெடரேட்டட் மலேயா ஸ்டேட்ஸ் போன்ற இடங்களிலிருந்து வரக்கூடிய கப்பல்கள் எல்லாம் வழக்கம்போல் நாகப்பட்டணம் துறைமுகத்திற்கு வராமல் நேரடியாக சென்னைக்குக் கொண்டுவரப்படுகின்றன. அதற்குக் காரணம் என்ன சொல்லுகிறார்கள் என்றால் சிங்கப்பூர் போன்ற பிரதேசங்களில் ப்ளூ ஜுரம் அதிகமாக இருப்பதால் அங்கிருந்து வரக்கூடிய பிரயாணிகளை நாகப் பட்டணத்தில் கொண்டு வந்து இறக்காமல் நேராக சென்னைக்குக் கொண்டு வந்து சென்னையில் அவர்களை பரிசோதனை செய்து அதன் பிறகு வெளியே அனுப்பி வருகிறார்கள். அதனால் அந்தப் பிரயாணிகளுக்கு காலதாமதம் ஏற்படுவதோடு பல கஷ்ட நஷ்டங்களுக்கும் அவர்கள் உள்ளாகிறார்கள். அப்படி வரக்கூடிய பிரயாணிகள் ஏழைகளாக இருப்பதால் அவர்களுக்கு பல விதத்தில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அவர்களுக்கு அதிகப்படியான

[6th March 1958

1-30 p.m. SRI S. M. ANNAMALAI : இந்த ராணுவக் கல்லூரிக்கு எந்த அடிப்படையில், எந்த விகிதாசாரத்தில் ஆள் எடுக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கே தேர்ந்தெடுப்பதற்கு என்று ஒரு குழு இருக்கிறது. அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

SRI M. P. SUBRAMANIAM : இந்திய ராணுவ சேவையிலே, குறிப்பாக, தமிழர்கள் திறமையுடன் சேவை செய்து வருவதாக அண்மையிலே பாராட்டப்பட்டது. காஷ்மீர் போர் முனையிலும் தமிழர்களின் திறமை பாராட்டப் பெற்றிருக்கிறது. அப்படியிருக்கும்போது, ஆண்டு ஒன்றுக்கு ஒருவர்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்றால், அது தமிழர்களில் திறமை பெற்றவர்கள் இல்லை யென்று, அல்லது மாகாணத்திற்கு இவ்வளவுதான் என்று ஒதுக்கியிருக்கிறார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ஒரு பள்ளிக்கூடம். இதிலே படித்தவர்கள் மிலிட்டரியில் சேரவேண்டுமென்பது கிடையாது. நேராகவும் சேரலாம். கல்லூரியிலே இடம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே நம்முடைய ராஜ்யத்திற்கு ஒரு இடம்தான் கிடைத்திருக்கிறது, 1958-ல் இரண்டு கிடைத்திருக்கிறது.

SRI C. NATARAJA ODAYAR : இந்தக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கும்போது, எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று கேட்பதன் அர்த்தம், அவர்களது யோக்கியதாம்சங்களை வைத்துக்கொண்டா, அல்லது ஜாதியின் அடிப்படையிலா?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஜாதிப் பிரச்னையை ஒட்டியதாகத் தெரியவில்லை. இது நம்முடைய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இல்லை. இதற்கு மேல் விஷயங்கள் வேண்டுமென்றால், அவர்களுக்கு எழுதித்தான் பதில் சொல்லவேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஒரு ஆண்டுக்கு இவ்வளவு ஸ்தானங்கள் என்று இந்தக் கல்லூரியில் ஒதுக்குகிறார்களா? அப்படியானால் நம்முடைய ராஜ்யத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது, இப்பொழுது ஒதுக்கப்பட்டிருப்பது ராஜ்யத்தின் தேவைக்குப் போதுமானது என்று மந்திரி அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ராஜ்யத்தின் தேவைக்காக அல்ல, ராணுவத்தின் தேவைக்காக. முன்பு சொன்னது போல் இதற்கு விண்ணப்பம் போடுகிறவர்கள் மிகவும் குறைச்சல். பணக்காரர்கள்தான் போட முடியும். எந்த அடிப்படையில் ஸ்தானம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு என்னிடம் தகவல் இல்லை.

*Industrial Estate*

* 222 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details regarding the Industrial Estate to be started at Tiruchirappalli; and

(*b*) when will it start functioning?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Industrial Estate at Tiruchirappalli is estimated to involve an expenditure of about 6 lakhs and will provide built-up factory spaces for 12 Small Scale Industrial Units, with all modern amenities like water and power-supply, etc. The factory units will be let out on rent to start with.



6th March 1958]

(*b*) The construction of buildings will be taken up immediately after the lands are acquired.

SRI S. LAZAR : May I know whether the lands have been acquired so far?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, steps have been taken for the acquisition of land.

SRI A. A. RASHEED : Is there any proposal to start such Industrial Estates in other District Headquarters also?

THE HON. SRI R. VENKATARAMAN : We have a scheme for starting five such industrial colonies. We have already given the names of Marthandam, Tirunelveli, Madurai, Tiruchirappalli and so on.

SRI M. P. SUBRAMANIAM : இந்தத் தொழிற் பண்ணை ஆரம்பிக்கிற விஷயத்திலே எல்லா இடங்களுக்கும் சேவை செய்கிற முறையிலே, மையமாகப் பார்த்து ராஜ்யம் முழுவதும் பல அமைக்க ஏற்பாடு செய்வார்களா? அப்படி ஒரு "Comprehensive scheme" ஐக் கொண்டு வருவார்களா?

THE HON SRI R. VENKATARAMAN : இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இப்பொழுது தொழிற்பண்ணைகள், காலனிகள், எல்லாம் சேர்த்து ஒன்பது வைக்கப் போகிறோம். அவற்றை ஜில்லா வாரியாக அமைத்துக் கொண்டிருக்கிறோம்.

*Official tours of Ministers*

* 223 *Q.*—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Chief Minister be pleased to state whether Ministers participate in Congress Party meetings while touring on official business?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes. Some of the Ministers participate occasionally in Congress Party meetings while on tour without detriment to their official work.

SRI S. M. ANNAMALAI : எல்லாக் கட்சி மக்களுடைய வரிப் பணத்தைக் கொண்டு மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். ஒரு கட்சியின் வளர்ச்சிக்காக மக்களின் வரிப் பணத்தைப் பயன்படுத்தலாமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : மந்திரிகள் தனியாக காங்கிரஸ் வேலைக்கு என்று போனால் படி வாங்கிக் கொள்வது கிடையாது. வேறு காரியங்களுக்காகப் போகும்போது, இந்த மாதிரிக் கட்சிக் கூட்டத்திற்குப் போவது தவறு இல்லை என்பதைப்பற்றி பரிசீலனை செய்து, எந்தெந்த சமயங்களில் படி வாங்கலாம், எப்பொழுது வாங்கக் கூடாது என்பதற்கு விதிகள் கூட இருக்கின்றன.

SRI A. GOVINDASAMY : அமைச்சர்கள் அரசாங்க வேலையாகப் போகும்பொழுது, அவர்கள் தங்குகின்ற இடங்களிலே கட்சிக் கூட்டங்களை நடத்துகிறார்கள். இப்படிச் செய்வதால், எதிர்க்கட்சிக்காரர்கள் மந்திரிகளை

செலவாவதுடன் காலதாமதமும் அவர்களுக்கு ஏற்படுகிறது. அதன் காரணமாக ரயிலிலும் நெருக்கடி ஏற்படுகிறது. அதனால் மற்ற பிரயாணிகளுக்கு ரயிலில் போக்கு வரத்து செய்வதற்கு கஷ்டமாக இருக்கிறது.

இத்துடன் நாகப்பட்டணம் துறைமுகத்தில் பல ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் இந்தப் பிரயாணிகளை நம்பிக்கொண்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகிறார்கள். இப்படி அங்கு வரக்கூடிய பிரயாணிகளை சென்னைக்கு அனுப்பி வைப்பதால் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய ஊதியம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வரக்கூடிய வரும்படியும் வராமல் போய்விடுகிறது. இதனால் சுமார் ஐந்நூறு அல்லது ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமை சென்ற மூன்று மாதங்களாக நடைபெற்று வருகின்றன. அதனால் அந்த தொழிலாளர்கள் திருட்டுத் தொழில்களில் ஈடுபட்டும் இன்னும் மற்ற குற்றங்களைச் செய்வதற்கும் முற்படுகிறார்கள். அதனால் அங்கு இப்படிப்பட்ட குற்றங்கள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. ஆகவே இப்படிப்பட்ட மெடிகல் பரிசோதனைகளை யெல்லாம் நாகப்பட்டணத்திலேயே வைத்துக்கொண்டால் வரக்கூடிய பிரயாணிகளுக்கும் சௌகர்யமாக இருக்கும். அங்குள்ள தொழிலாளர்களுக்கும் பிழைப்புக் கிடைக்கும் என்று தோன்றுகிறது. அதற்கு வேண்டிய டாக்டர்கள் நாகப்பட்டணத்திலேயே இருக்கின்றார்கள். இங்கிருந்து போக வேண்டிய அவசியமே இல்லை. அங்குள்ள டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீசரையே பரிசோதனை செய்ய சொல்லலாம். இல்லாவிட்டால் இங்கிருந்து இரண்டு அல்லது மூன்று டாக்டர்களை அங்கு அனுப்பி வைத்து அவர்களைக் கொண்டு அந்தப் பிரயாணிகளை பரிசோதனைச் செய்யச் சொல்லலாம். அதனால் ஏற்படக்கூடிய செலவு அதிகமாகிவிடாது. அப்படி செலவானாலும் மக்களுடைய சௌகர்யத்தை உத்தேசித்தால் அது பாதகம் இல்லை என்று தோன்றுகிறது. அதனால் அங்குள்ள தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கும். இப்பொழுது இங்குள்ள போர்ட் ஆபீசரையும் அங்கு அனுப்பப் போவதாகத் தெரிய வருகிறது. அதைப் போலவே இங்கிருந்து இரண்டு மூன்று டாக்டர்களை அங்கு அனுப்பிவைத்து பிரயாணிகளை பரிசோதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வரப் போகும் 11-ம் தேதி ஒரு கப்பல் அங்கு வரப்போவதாகத் தெரிய வருகிறது. அந்தக் கப்பலை அங்கேயே நிறுத்தி வைத்து பிரயாணிகளை இறங்கும்படியாகச் செய்ய வேண்டும். இந்த வேலையை இந்தக் கப்பலிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதன் மூலம் அங்குள்ள தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்றும் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, about the middle of November, the Deputy Director-General of Health Services informed the Director of Public Health, Madras, that a communication had been received from the W.H.O. Epidemiological Intelligence Station, Singapore, that influenza had broken out again in Japan. In view of the indications of this second wave of influenza in Japan and as the first epidemic had started from Japan and come into Madras via Singapore and Malaya, the Director advised this Government that strict measures should be instituted to prevent any importation of fresh infection from the East.

The Government carefully considered the measures necessary to prevent any importation of fresh infection from incoming ships. The quarantining of ships off the harbour with the attendant hardships to passengers was found not practicable. After taking into





consideration all the factors, it was decided to screen all the passengers arriving by ships. In view of the total lack of facilities at Nagapattinam for the medical check up of all the passengers arriving by ships and for the proper isolation and treatment of infected cases, the only practicable course was to divert the ships to Madras where such facilities could be specially provided until the threat of the import to influenza infection from the East has receded. Accordingly, the passenger ships were temporarily being diverted to Madras from 4th December 1957 onwards. Reports received up to the end of January 1958 indicated that numerous cases of influenza were still being reported in the Far East and as such, there was still the need to continue the restrictions in view of the threat of import of infection into this State. However, on 25—2—1958 intimation was received from the Government of India to the effect that the influenza epidemic had now more or less abated in the Far East and on their advice the restrictions imposed on passengers and ships arriving from the East have been withdrawn by this Government with immediate effect.

## III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1959–59 –ல்.

MR. SPEAKER : இனிமேல் பட்ஜெட்டைப்பற்றிய பொது விவாதம் நடைபெறும். கனம் அங்கத்தினர்கள் பத்து நிமிஷங்கள்தான் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். முதன் முதலாக ஸ்ரீ டி. எஸ். ராமசாமி பேசுவார்.

SRI T. S. RAMASWAMY PILLAI : கனம் தலைவர் அவர்களே, முதன் முதலில் நிதி நிலைமை அறிக்கையை சமர்ப்பித்த கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு விதத்தில் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். ஏனென்றால் சென்ற ஆண்டு நிதி நிலைமையைப் பற்றி அறிக்கையை சமர்ப்பித்தபோது கம்மி பட்ஜெட்டாக இருந்து அது விமர்சனத்திற்கு வந்தபோது கம்மி பட்ஜெட்டாக இருக்கிறது என்று சொன்னோம். இந்த ஆண்டு அப்படி இல்லாமல் கம்மி பட்ஜெட்டாக வராமல் இருந்ததற்கு நான் நிச்சயம் அவரைப் பாராட்டுகிறேன். அதைப் போலவே சென்ற ஆண்டு எதிர்க் கட்சியிலிருந்து வந்த கருத்துக்களைக் கொண்டு சமூக நீதி அடிப்படையைக் கொண்டு புதிய வரிகளைக்கொண்டு வந்திருக்கிறார்கள். சமூக நீதியை அனுசரித்து ஒரு வரியைக்கொண்டு வருவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால் சமூக நீதி அவ்வளவும் அதில் இருக்கிறதா என்று பார்த்தால் அதன் நோக்கம் பரந்த நோக்கமாக இருக்கிறது. அதுவும் சோஷலிஸ ரீதியில் கொண்டு வந்திருப்பதாகத் தெரியவில்லை. சமூக நீதி அடிப்படையில் கொண்டு வரவேண்டுமென்றால் இந்த வருமான வரியை பெருத்த அளவில், கொண்டு வர வேண்டும். இதன் மூலம் 3,000 ரூபாய் அதிகமாக வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன்படி பார்த்தால் பணக்காரர்களுக்கு மட்டும் வரி போட்டிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தாலும் அதே சமயத்தில் விவசாய மக்களுடைய வரி பளுவைக் குறைக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இதைச் செய்யும்போதும் இதை சமூக நீதியில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது செய்திருப்பதைப் பார்த்தால் ஒரு பிரச்னையை மட்டும் திருத்தியிருப்பதாகத் தெரியவருகிறது. ஒரு முழு கொள்கையை கடைப்பிடித்ததாகத் தெரியவில்லை. சாதாரணமாக கன்யாகுமரி ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்குள்ள நிலைமை அப்படியேதான் இருக்கிறது. அண்டைய கேரள ராஜ்யத்தை எடுத்துக்கொண்டாலும் அங்கேயும் அப்படியேதான்

2 p.m இருக்கிறது. மலபாரில் பார்த்தால் ஏறக்குறைய 250 லட்சம் ஏக்கர் நிலம் தனிப்பட்ட உடைமையில்தான் இருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு 10, 20 அல்லது 25 ரூபாய் வரையில் கொடுக்கிறார்கள். அதே நேரத்தில் நில வரியே இல்லாதவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். இந்தக் கோளாறான நிலைமையை மாற்றி, ஏழை எளிய விவசாயிகளுக்கு வரியை ரத்து செய்து பாமரர்களுக்கு வரியைக் குறைக்கிறார்கள். அதே நேரத்தில் இங்கே, ஏழை எளியவர்களுக்கு வரியைச் சுமத்துகிறார்கள். 'கொள் என்றால் வாயைத் திறப்பதும், கடிவாளம் என்றால் வாயை மூடுவதும் குதிரையின் சுபாவம்! அதுபோல் இந்த அரசாங்கத்தின் போக்கு இருக்கிறது. எப்படியென்றால், 'வசதி உள்ளவர்கள் மீது அதிகமாக வரி போடுங்கள்' என்றால், அப்படிச் செய்யத் தயங்குகிறார்கள்; 'பாமரர்கள் மீது வரியைக் குறையுங்கள்' என்றால், 'கூடாது' என்று சொல்லுகிறார்கள், நிச்சயமாக இது சமூக நீதியாகாது என்று நான் பணிவுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சாதாரண ஜனங்களெல்லாம் சமூக நீதி என்று சொல்லும்போது அவர்கள் அதிசயப்படுகிறார்கள். அன்று ஸர் ஸி. பி. ராமசாமி அய்யருடைய ஏதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து அங்கே ஜனங்கள் கிளர்ச்சி செய்தார்களே, அந்த ஆட்சியிலே கூட, அவர்கள் முதன் முதலிலே எல்லா நில வரியையும் ரத்து செய்தார்கள். ஏக்கர் ஒன்றுக்கு 14 அணா மட்டிலும்தான் வரி விதிக்கப்பட்டது. பணக்காரர்கள், ஏழைகள் எல்லோருக்கும் இவ்வரி விதிக்கப்பட்டது. அதன் பின்னால், மூவாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் உடையவர்களுக்கு வருமான வரி விதித்தார்கள். ஆனால், மொத்தமாக நோக்கினால், நில வரியைவிட இதன் மூலம் அதிகமான வரி கிடைத்தது. நம்மிடமிருந்து அங்கே சேர்ந்திருக்கும் மலபார் ஜில்லாவிலும் கூட மக்கள் அதே நிலையைத்தான் காண்கிறார்கள். நம்முடைய நில வரியையும் இந்த சாஸ்திரீகமான அடிப்படையிலே நாம் கொண்டு வந்தால் நிச்சயமாக இதற்குமுன்னால் சில எஸ்டேட்டுகளிலே விவசாய வருமான வரி போட்டபோது அன்றைய தினம் அவர்களுடைய மதிப்பீடு 70 லட்சமாக இருந்தது என்று கருதுகிறேன். ஆனால், முதல் வருஷத்திலே ஒரு கோடி 40 லட்ச ரூபாய் கிடைத்தது என்பதை அரசாங்கத்தார் அறிவார்கள். இப்போதும்கூட அந்த முறையிலே அவர்கள் போடுவதாயிருந்தால் இவர்கள் எதிர்பார்க்கிற 70 லட்சம் அல்ல, அதற்கு அதிகமாகவும் தொகை கிடைக்கும் என்று என்னுடைய சிற்றறிவுக்கு எட்டிய அளவிலே கூறுகிறேன்.

அதேபோல், அன்றைய தினம் நாங்கள் குறிப்பிட்டபோது, நிதி அமைச்சர் அவர்கள், 'இதில் தலைவருக்கும், உப தலைவருக்கும் கூட வேற்றுமைகள் இருக்கின்றன' என்று கூறினார்கள். இந்த சமயத்தில் நான் அவருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய கட்சியிலே கூட மிகவும் தீவிரமாக இந்தப் புதிய திட்டத்தை எதிர்க்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அதை தீவிரமாக ஆதரிக்கக்கூடியவர்களும் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது எல்லோருடைய மனதையும் வாட்டிக்கொண்டிருக்கும் விஷயம். இதில் சமூக நீதி இருக்கிறதென்பதை எடுத்துக்கூறி, சமூக நீதியை ஒரு பகுதியிலே மட்டும் பார்க்காமல், ஏழை எளிய லட்சோப லட்சம் பாமர விவசாய மக்களுக்கு அனுகூலம் செய்யும் முறையில் நிச்சயமாக நிலவரியை ரத்து செய்து, அடிப்படை வரியைப் போடாமல் இதைப் போடுவதென்றால் நியாயம் ஆகாது. நிச்சயமாக அதைப் போடுங்கள் என்று நான் உறுதியுடன் கூற ஆசைப்படுகிறேன்.

அதுபோலவே, இந்த வருஷத்திய பட்ஜெட்டைப் பார்க்கும்போது அதில் ஒன்று நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன், ஆட்சிக் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, ஏதோ நாம் நன்றாகப் படிப்பதில்லை என்று கூறுவார்கள். ஆனால், ஒன்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(இத்தருணத்தில் கனம் டெபுடி ஸ்பீக்கர் தலைமை வகித்தார்.)

இந்த நிதி நிலை அறிக்கையானது முக்கியமான ஒரு பத்திரம். நிதி அமைச்சர் அவர்கள் அதைத் தமிழில்தான் படித்திருக்கிறார். துரதிருஷ்டவசமாக, நான் அன்றைய தினம் சபைக்கு வரவில்லையென்றாலும், தமிழில்





உள்ள உரையை அப்படியேதான் அவர் படித்ததாக நான் மற்ற அங்கத்தினர்களிடமிருந்து அறிகிறேன். சில இடங்களில் பிழைகள் வருவது சகஜம். ஆனால், பொறுப்புள்ள அரசாங்கத்தாராலே தயாரிக்கப்படுகிற ஒரு பட்ஜெட் உரையிலே முக்கியமான புள்ளி விவரங்களிலே பிழைகள் இருந்தால் நிச்சயமாக முன்னேற முடியாது. இவ்வுரையில் நான் பிழைகளைக் காண்கின்றேன்.

உதாரணமாக, பட்ஜெட் உரையில் 27-வது பாராவில், "1958-59-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி நமக்கு 62 கோடியே 40 லட்சம் ரூபாய் வருவாய் கிடைக்குமென்றும், 63 கோடியே 25 லட்ச ரூபாய் செலவு ஏற்படுமென்றும், ஆகவே 1 கோடியே 35 லட்சம் துண்டு விழும் என்றும் எதிர்பார்க்கிறோம்" என்று காணப்படுகிறது. இந்தக் கணக்கைப் பார்த்தால், நாலும் மூனும் எட்டேகால் என்று சொல்வது போல் இருக்கிறது. ஏதோ தப்பிதமாக எழுதி வைத்திருந்தாலும், அதைக் "கிளிப்பிள்ளை ஒப்பிப்பதுபோல் ஒப்பிப்பது எதற்காக? 63 கோடி 75 லட்சம் என்று எழுதி வைப்பதற்குப் பதிலாக 63 கோடி 25 லட்சம் என்று எழுதி வைத்திருப்பது நிச்சயமாக தவறுதான்.

அதுபோல், இன்னும் ஒரு தப்பிதம் காணப்படுகிறது. கணக்கில் ஏன் தப்பிதம் வரவேண்டுமென்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இதே உரையில், 6-வது பாராவில், "இந்த ஆண்டில் ஒரு லட்சத்து நாலாயிரம் டன் அமோனியம் சல்பேட் உரத்தை வழங்கத் திட்டமிட்டிருந்தோம்; ஆனால், இவ்வுரம் போதிய அளவு கிடைக்காத காரணத்தால் 75,000 டன் தான் வழங்க முடிந்தது" என்று ஒரு லட்சத்து நாற்பதாயிரம் என்று ஆங்கிலத்தில் போடப்பட்டிருப்பதற்குப் பதிலாக தமிழில் ஒரு லட்சத்தி நாலாயிரம் என்று போடப்பட்டிருக்கிறது. இதில் எது சரி என்றுசொல்லும் படியாக நான் மிகவும் பணிவுடன் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழில்தான் பட்ஜெட் உரையைப் படித்திருக்கிறார்கள். முதன் முதலில் தமிழில் பேசும்போது, 'முதல் கோணல் முற்றும் கோணல்' என்று சொல்வதுபோல், ஏன் இப்படித் தவறாக இருக்கவேண்டுமென்று நான் கேட்கிறேன். பெரிய ஆசான் மாதிரி எல்லோருக்கும் படிப்பினை எடுத்துச் சொல்கிற சர்க்கார்க் கட்சித் தலைவரே இப்படித் தவறு செய்தால் என்ன செய்வது? ஆசான் சறுக்கி விழுவது அடவுக்கு விழுவது மாதிரி நிதி அமைச்சர் அவர்கள் விழுந்தார்களோ என்று எனக்குத் தோன்றுகிறது.

சென்ற வருஷத்திய பட்ஜெட்டில் மூன்று கோடி ரூபாய்க்குமேல் கம்மியாக இருந்ததை இப்பொழுது ஏறக்குறைய சரிசமன் செய்துவிட்டோம் என்று கூறினார்கள். சரிசமன் செய்வது எந்த முறையிலே என்று பார்க்க வேண்டும். தேசீய வளர்ச்சித் திட்டங்களெல்லாம் குறைந்திருக்கின்றன. அதே சமயத்திலே வருவாய் இனங்கள் குறையவே இல்லை. முக்கியமான இனங்கள் எல்லாவற்றிலும் கூடுதலாக வந்திருக்கிறது. ரெவினியூ, யூனியன் எக்ஸைஸ் ட்யூட்டிகள், வருமான வரியிலிருந்து பங்குத் தொகை, விவசாய வரிருமான வரி, இதுபோன்ற எல்லா வரிகளைப் பார்த்தாலும் சரி, புதியதாக வரிகள் வந்திருக்கின்றன. செலவினங்களைப் பார்க்கும் போது, எதில் எல்லாம் குறைவு, எதில் எல்லாம் கூடுதல் செய்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போதுதான், நம்முடைய அரசாட்சி எவ்வாறு நடந்துகொண்டிருக்கிறது என்பதை எடுத்து காட்ட முடியும்.

முதலிலே எதிலே குறைத்திருக்கிறார்கள். பல்கலைக் கழகத்திற்காக சென்ற வருஷம் ஒதுக்கிய 73 லட்ச ரூபாயில் 33 லட்சம் குறைவாக செலவிடப்பட்டிருக்கிறது. மருத்துவ வசதி, சுகாதார வசதியைப் பொறுத்த அளவிலே 76 லட்சம் ரூபாய் ஒதுக்கியது செலவிடப்படவில்லை. அந்த அளவுக்கு ஜனங்களுக்கு மருத்துவ, சுகாதார வசதிகள் பிரயோஜனப்பட

வில்லை. பொது சுகாதாரம் என்ற தலைப்பில் 8 லட்சம் ரூபாய் செலவிடப் படவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, "இண்டிஸ்ட்ரீஸ் அண்டு ஸப்ளைஸ்" என்ற தலைப்பில் 200 லட்சம் ரூபாய் ஒதுக்கியது செலவிடப்பட வில்லை. அதுபோல், பப்ளிக் ஒர்க்ஸ், ஹைவேஸ் என்ற தலைப்புகளில் ஒதுக்கிய 11 லட்சம் ரூபாய் செலவிடப்படவில்லை. இவ்வாறு அனேக தலைப்புகளில் செலவிடப்படாமல், தேசீய வளர்ச்சித் திட்டங்களுக்கும் செலவிடப்படாத தொகை வேறு விதத்திலே செலவிடப்பட்டிருக்கிறது. ஒதுக்கிய தொகை குறைவாக செலவிடப்பட்டிருக்கும்போது, வேறு இனங் களிலே அதிகமாக செலவாகியிருக்கிறது. "ஜெயில் அண்டு கான்விக்ட் செட்டில்மெண்ட்" என்ற தலைப்பில் 84 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால், 92 லட்சம் ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். "போலீஸ்" தலைப்புக்கு 5 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால், 32 லட்சம் ரூபாய் அதிகமாகச் செலவழித்திருக்கிறார்கள்.

SRI A. GOVINDASAMY : துப்பாக்கிகள் வாங்கியிருக்கலாம்.

2-10 p.m. SRI T. S. RAMASWAMY PILLAI : இதற்கு யார் காரணமாக இருந்தாலும் சரி, இது எதைக் காட்டுகிறது. நாம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இருந்து கொண்டிருக்கிறோம். தேச நிர்மாணத் திலே அக்கறையுடன் எல்லோரும் உற்பத்தியை அபிவிருத்தி செய்ய வேண்டும். எல்லோரும் ஜனநாயக உணர்ச்சியைப் பெருக்க வேண்டும் என்று குறிக்கோளுடன் ஜனநாயக அடிப்படையிலே, நம்முடைய நாட்டைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு நாம் எல்லோரும் நின்று கொண்டிருக் கிறோம். இதிலே கட்சி வேறுபாடுகள் இன்றி ஜனநாயக உணர்வுடனே செயல்பட வேண்டும். ஒருவருக்கொருவர் பகைமையுணர்ச்சியை பாராட்டிக் கொண்டு கரு அறுத்துவிடுவது என்று செயல்பட்டால் நம் நாடு முன்னேற முடியாது. ஆனால் துரதிருஷ்டவசமாக நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட மனப்பான்மைதான் நீடிக்கிறது என்பதை ஒவ்வொரு வரும் தம்முடைய மனத்தைத் தொட்டுப்பார்த்துக் கொண்டால் உணர் வார்கள். எந்த எந்தத் திட்டங்களுக்காக நாம் செலவு செய்ய வேண்டுமோ அவைகளுக்காக நாம் செலவு செய்வதில்லை. பணத்தைச் சரிக்கட்டவேண்டு மென்ற மனப்பான்மையினால் பல காரியங்களைச் செய்கிறார்கள். இரண்டு, மூன்று நான்கு வருஷங்களாக நடந்து வந்த பல காரியங்களைச் சட்டென்று நிறுத்தி விடுங்கள் என்று உத்திரவு போட்டுவிட்டார்கள். பல கைத் தொழில்களை ஆரம்பித்தார்கள். அதையும் நிறுத்திவிட்டார்கள். காரணம் சரிசமன் செய்வதற்காகத்தான். அதே நேரத்தில் செலவினங்கள் வேறு வகையில் அதிகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நேருஜி வந்தார். ஆந்தி ராவில் இருந்துகூட போலீஸ்காரர்கள் வரவழைக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. காந்தி கிராமத்திற்குப் போகிறார்கள் என்றால் அங்கே ஒரே யடியாகப் போலீஸ் பந்தோபஸ்து. ராமநாதபுரம், மதுரை முதலிய இடங் களில் இன்றைக்கு எத்தனை போலீஸ் செலவு ஆகிக்கொண்டிருக்கிறது. அந்த மாதிரியாக அதிகச் செலவு ஆகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம் எல்லோருடைய பொறுப்பாகும். நான் இந்த ராஜ்யத்திற்குப் புதியவன். ராமநாதபுரம் கலவரத்தைப்பற்றிய விவாதம் வந்த காலத்தில் அமைச்சர் அவர்கள் ராமநாதபுரத்தைச் சேர்ந்தவர்கள் கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள், பாதகங்களைச் செய்வதற்கு அஞ்சாதவர்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நான் நம்பினேன். ஆனால் போலீஸ் நிர்வாக அறிக் கையைப் பார்த்தால் இவ்வாண்டு அறிக்கை மாத்திரம் அல்ல 1956, 1957, 1958 ஆகிய அறிக்கைகளை வரிசையாக எடுத்துப் பார்த்தால் தெரியும். கொள்ளை, கொலை போன்ற குற்றங்களை மிக அதிகமாகப் புரிந்து கொண் டிருக்கும் ஜில்லாவாக இருப்பது கோயம்பத்தூர் ஜில்லாதான். எல்லா ஜில்லாக்களையும்விட அங்கேதான் இப்படிப்பட்ட செயல்கள் அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றன. அடுத்தபடியாக சேலம். இப்படியிருக்க ராமநாதபுரத்தைப்பற்றி பொறுப்புள்ள அமைச்சர் அவர்கள் சொல்லிய விஷயம் மிகவும் வருந்தத்தக்கவையாகும். வெள்ளையர்கள் காலத்தில் ராமநாதபுரத்தில் தேசபக்தர்களின் சுதந்தர எழுச்சியின் வேகத்தைக்





கண்டு எல்லோரையும் குற்ற பரம்பரையில் சேர்த்து இருந்தார்கள். அவர் களுடைய அடிச்சுவட்டை நீங்களும் பின்பற்றுகிறீர்கள் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏகாதிபத்திய வெறியர்கள் செய்த காரியங்களை தேசீய பரம்பரையில் வந்தவர்கள் செய்யக் கூடாது. கன்னியாக்குமரியி லிருந்து நமக்கு ஓட்டை பஸ்கள்தான் வந்தன என்று நினைக்கலாம். இருந்தாலும் அந்தப் பகுதி மக்கள் இந்த ராஜ்யத்தோடு சேர்ந்த பிற்பாடு இங்குள்ளவர்களுக்கு உள்ள நலன்கள் எல்லாம் அவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டியதுதான் நியாயமாகும். அங்குள்ள ஜனத்தொகை எவ்வளவு, என்று பார்த்தால் தெரியும். பெரும்பாலானவர்கள் படித்த வர்கள், அதன் காரணமாக தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ளத் தெரியும். தங்கள் கடமைகளையும் செய்வதற்கு அவர்கள் தயங்குவதில்லை. அதனால் போலீஸ் செலவு மிகவும் குறைவாகத்தான் அங்கே இருக்கும் என்பதைப் பார்த்தால் தெரியும். துரதிருஷ்ட வசமாக நம்முடைய ராஜ்யத்தில்தான் கல்வியைப் பெருக்க தக்க திட்டங்களை வகுக்க வில்லை. எத்தனையோ ஸ்டாண்டிங் கமிட்டிகளைப் போடுகிறோமே தவிர திட்ட வட்டமாக எந்த நடவடிக்கையையும் எடுத்துக் கொள்ளவில்லை. இங்கே ஒரு குழந்தைக்கு ஆகும் செலவு 24 ரூபாய் என்றால் அங்கே எட்டு ரூபாயில் ஒரு குழந்தைக்கு கல்வி அளிக்கப்படுகிறது என்பதையும் கவனித்து அதற்குத் தக்க வகையில் இங்கும் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

SRI P. G. KARUTHIRUMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட்டை பொதுப்படையாக வரவேற்கும் ஒரு நிலையைவிட இன்று ஒரு படி அதிக மாகவே நான் வரவேற்கிறேன். பட்ஜெட்டைப் பாராட்டுவதற்கு, அதில் பல பல அருமையான திட்டங்கள் அமைந்திருக்கின்றன. அதோடு கனம் அங்கத்தினர்கள் பேசும்போது சில ஆட்சேபகரமான உண்மைக்கு மாறான கருத்துக்களை எப்போதும் பேசுகின்ற முறையில் பேசியிருப்பதை வருத்தத் தோடு சொல்ல ஆசைப்படுகிறேன்.

சர்க்கார் போட்டிருக்கும் திட்டங்களினால் ஒருவித பயனும் இல்லை என்று பல உண்மை நிலையை உணர்ந்து பார்க்காமலேயே பேசியிருக்கிறார்கள். போட்டிருக்கும் திட்டம் எதனாலும் பயனில்லை என்று சொல்லக்கூடியவர்களே இந்தத் திட்டம் வேண்டும், அந்தத் திட்டம் வேண்டும் என்று கேட்டுக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன என்று தெரியவில்லை.

நான் கீழ்பவானி திட்டப் பகுதியில் இருந்துதான் வருகிறேன். கீழ் பவானி திட்டத்தை மிகவும் வெற்றிகரமாக சர்க்கார் முடித்திருப்பதற்குப் பாராட்டாமல் அங்கே ஏதோ பெரிய தவறுகள் நடந்துவிட்டது போலவும், பலவிதமான கஷ்டங்கள் அந்தத் திட்டத்தினால் உண்டாகியிருப்பது போலவும் சில அங்கத்தினர்கள் பேசியிருப்பது எனக்கு மிகவும் வியப்பாகவே இருக்கிறது.

கீழ் பவானி திட்டப் பிரதேசத்திலுள்ள குடியானவர்கள் அந்தத் திட்டத்தை சர்க்கார் நிறைவேற்றிக் கொடுத்தால் அதற்கான செலவை அபிவிருத்தி வரியாகக் கொடுப்பதாக ஏற்கெனவே ஒப்புக்கொண்டுள்ளார்கள். அத்திட்டம் பல வருஷங்களாகப் பரிசீலிக்கப்பட்டு, மக்களால் ஏற்கப்பட்டு, மக்களுடைய மனதிற்கு ஏற்ற வகையிலேயே அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அதோடு ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தியாவிலேயே எத்தனை அணைக்கட்டுத் திட்டம் ஏற்பட்டிருந்தாலும்கூட கீழ் பவானி திட்டத்தைப் போல விவசாய பெருமக்களுக்கு அதிக நன்மையை அளித்திருக்கும் திட்டம் வேறு எதுவுமே இருக்க முடியாது என்றால் அது மிகையாகாது.

இரண்டு பேருக்குச் சமைத்த சாப்பாட்டை பத்து பேர் சாப்பிட வேண்டு மென்றால் எல்லோருக்கும் போதுமான சாப்பாடு கிடைக்கவில்லை என்று

இன்று இருக்கக்கூடிய ஏழ்மை நிலையைப் போக்க முடியும், என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுவும் தவிர, எதிர்கட்சியில் இருக்கக்கூடிய கனம் கருணாநிதி அவர்கள் நேற்றைய தினம் பட்ஜெட்டைப் படித்துப் பார்த்துவிட்டு அதில் உள்ள அச்சுப்பிழையை கண்டுபிடித்து சொன்னார்களே, அதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அப்படி அச்சுப் பிழைகளையாவது கண்டு பிடிக்க ஆழ்ந்து அமர்ந்து இந்த பட்ஜெட்டைப் படித்துச் சொன்னார்களே அதுவரையில் சந்தோஷந்தான். வேறு எதையும் சொல்லாவிட்டாலும்கூட எழுத்துப் பிழைகளையாவது கண்டு பிடித்தார்களே, அதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். ராமஸ்வாமி பிள்ளை அவர்களும் அதைத்தான் குறிப்பிட்டார்கள். அவர்கள், சர்க்கார் இன்னும் எந்த வரி விதிக்கலாம் என்று சொன்னால் நன்றாகயிருக்கும். அதை விட்டு விட்டு இது மாதிரி பிழைகளை சொல்லிக் கொண்டிருந்தால் அது அவ்வளவு நல்லதல்ல. அவர்களின் சக்தி அவ்வளவுதான் என்றுதான் நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, சேலம் ஜில்லாவில் பருவ நிலை மிகவும் மோசமாக இருக்கிறது என்று நிதியமைச்சர் அவர்கள் அவர்களது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, சென்ற ஆண்டில் அங்கு இருக்கக்கூடிய சிறிய பட்டாதார்களுக்கு சர்க்கார் மாடு வாங்க கடன் கொடுத்திருந்தார்கள். அதை இந்த ஆண்டில் வசூல் செய்ய ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். அதை இந்த ஆண்டில் வசூல் செய்வதை நிறுத்திவிட்டு அடுத்த ஆண்டில் வசூல் செய்ய ஏற்பாடுகள் செய்வார்கள் என்று நான் நினைக்கிறேன். அடுத்தபடியாக, நிதியமைச்சர் அவர்களின் உரையில் நம் மாகாணத்தில் 1,255 பவுண்ட் அரிசி கிடைப்பதாகச் சொல்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் அதுவும் குறிப்பாக இந்த மேட்டூர் வாய்க்கால் புதிதாக ஆரம்பித்திருக்கிறார்கள். அங்கு சிறிய விவசாயியாக இருந்தாலும் ஆறு பவுண்டுக்கு குறைவாக இல்லாது விளைச்சல் எடுத்திருக்கிறார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், எதிர்கட்சியில் இருப்பவர்கள் பட்டணத்தில் உட்கார்ந்து கொண்டு எதை எதையோ சொல்கிறார்களே தவிர கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள நீர்ப்பாசனத் திட்டங்களைப் பார்த்தால், அதனால் அங்கு மக்கள் அடையும் நன்மையைப் பார்த்தால்தான் அவர்களுக்குத் தெரியும், இச்சர்க்கார் செய்யும் காரியங்களைப்பற்றி. அடுத்தபடி நான் சொல்ல விரும்புவது, மேட்டூர் கால்வாயில் புஞ்சைக்குத்தான் தண்ணீர் விட வேண்டுமென்று சென்ற வருடமும் இந்த வருடமும் சொல்கிறார்கள். ஆனால் குறிப்பாக மராமத்து மந்திரியவர்கள் மேட்டூர் அணையில் தண்ணீர் இருப்பதைப் பார்த்து விட்டு இப்பொழுது அங்கு நஞ்சைக்கும் தண்ணீர் விட இருக்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய மக்கள் விளைச்சலைப் பார்த்துவிட்டு தஞ்சாவூரிலுள்ள மக்கள் நல்ல விளைச்சலை அந்த இடத்தில் ஏற்படுத்தியிருக்கிறார்கள், அங்குள்ள மக்கள் நல்ல உழைப்பாளிகள், ஆகவே அந்த புஞ்சை

2-30 p.m. நிலங்களை எல்லாம் நஞ்சை நிலங்களாக மாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வதாக சொல்லிக்கொண்டு வந்தார்கள். அந்த விதத்தில் அந்த இடங்களை நஞ்சை நிலமாக மாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு பிறகு கட்டளை வாய்க்கால் புள்ளம்பாடி வாய்க்கால் பகுதிகளை நஞ்சை பகுதிகளாக மாற்றப்பட்டிருக்கிறது. அவ்விதமிருக்கும்போது மேட்டூர் வாய்க்காலை மாத்திரம் ஏன் புஞ்சையாக போடுகிறார்கள என்று தெரியவில்லை. மேலும் மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்தை இன்னும் தேசீய வளர்ச்சி திட்டத்தில் சேர்க்காத காரணத்தால் அந்த பிரதேசத்திற்கு ரசாயன உரம் கிடைக்க மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அமோனியம் சல்பேட், பாஸ்பேட் போன்ற உரங்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. இந்த இடத்தை சமுதாய நல அபிவிருத்தி திட்டத்தில் சேர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக கிராமப் பகுதியில் வைத்திய வசதி குறைவாக இருப்பதால் அங்கு செல்லக்கூடிய வைத்திய அதிகாரிகளுக்கு அதிக சம்பளமும் வீட்டு வசதியும் கொடுத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். ஏனென்றால் படித்தவர்கள் இன்று கிராமப்புறங்களில் வந்து வேலை செய்வதற்குத் தயாராக இருக்கவேண்டும். ஆனாலும் அவர்களுக்கு சலுகை கொடுக்கப்பட்டிருப்பதை நான்





வரவேற்கிறேன். அடுத்தபடியாக என்.ஜி.ஒ.-க்களுக்கு இப்போதிருக்கிற நிதி நிலைமைக்கு ஏற்றவாறு சர்க்கார் சற்று நிவாரணம் அளித்து இருக்கிறது. மேலும் நிதி நிலைமை சரியாக வரும்பொழுது அவர்களுடைய வருவாயை உயர்த்தி அவர்களுக்கு சலுகை காட்டவேண்டும் என்று சர்க்காரிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக பெரும் தொழில்களை எடுத்துக்கொண்டால் சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறோம், இரும்பு தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறோம், பேபர் தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறோம், கூட்டுறவு முறையில் நூல் ஆலையை ஆரம்பிக்கப் போகிறோம் என்றும் நாமக்கல்லில் கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலையை ஆரம்பிக்கப் போகிறோம் என்றெல்லாம் சொல்லப்படுவது இன்று ஏட்டளவில்தான் இருக்கிறதே தவிர நடைமுறையில் ஒன்றும் நடைபெறவில்லை என்பதை பார்த்து வருந்துகிறேன். ஆகவே இந்த ஆண்டிலாவது கன ரக தொழிற்சாலைகளையும் கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலையையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவிலேயே அதிகமாக கரும்பு உற்பத்தியில் நாமக்கல் பகுதியில் நல்ல பலன் கிடைக்கிறது. எந்த இடத்திலும் காணாதபடி அதிகமான பலனை நாமக்கல் சருகத்தில் காண முடிகிறது. ஆகவே அந்த சருகத்தில் கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலையை ஏற்படுத்துவதற்கு ஏன் காலதாமதம் ஏற்படுகிறது என்று பார்க்கும்பொழுது உண்மையாக சர்க்கார் சேலம் ஜில்லாவை புறக்கணித்து வருகிறார்கள் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த விதத்தில் எப்படி வட ஆற்காடு ஜில்லாவில் கரும்பு குறைவாக இருந்தும் அங்கு ஆலை ஏற்படுத்துகிறார்கள். ஆனால் கரும்பு அதிகமாக கிடைக்கும் நாமக்கல்லில் அந்த ஆலையை ஏற்படுத்தவில்லை, ஆகவே அரசாங்கம் இதில் கவனம் செலுத்தி நாமக்கல்லில் ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக சேலத்தில் பாலிடெக்னிக் காலேஜ் வேண்டுமென்று அங்குள்ள எல்லா அங்கத்தினர்களும் இந்த சட்டசபையில் பல தடவை எடுத்துச் சொல்லியும்கூட அதை சர்க்கார் எந்த விதத்திலும் கவனிக்காமல் இருப்பதைப்பற்றி நான் வருந்துகிறேன். ஆகவே இந்த வருஷத்தில் அங்கு ஒரு தொழில் கல்லூரியை ஆரம்பிக்குமாறு சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக கால்நடையை பொறுத்தவரையில் சேலத்தில் மேட்டூரிலும் மேய்ச்சேரியிலும் சிறந்த செம்மறி ஆடுகள் இருக்கின்றன. ஆகவே அங்கு ஒரு செம்மறி ஆட்டுப்பண்ணை வைக்கவேண்டும் என்று கேட்டிருந்தோம். இப்போது அந்த பண்ணையை சின்னசேலத்தில் வைப்பதாக அமைச்சர் அவர்கள் தங்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை பரிசீலித்து அந்தப் பண்ணையை மேட்டூரிலோ அல்லது மேய்ச்சேரியிலோ ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்த கனம் உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றியும் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**SRI P. U. SHANMUGAM**: சட்ட மன்ற உதவி தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது மூன்று நாட்களாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த விவாதத்தை ஒட்டி திராவிட முன்னேற்ற கழகத்தை சேர்ந்த நான் எனது கருத்தையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நிதி நிலை அறிக்கை சமர்ப்பித்து அமைச்சர் அவர்கள், தனது உரையில் குறிப்பிடும்பொழுது இந்த ஆண்டு நிதி நிலை சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு சீர்பெற்றிருக்கிறது என்று கூறி அதற்காக தனது மகிழ்ச்சியையும் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் கூறியிருக்கிறார்கள், இவ்வளவு சீர்பெற்றதற்கு முக்கிய காரணம் நிதி கமிஷனின் சிபார்சுதான் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புகிறேன் சில புள்ளி விவரங்களை. நான் புள்ளி விவரங்களை சொல்லும்பொழுது இந்த புள்ளி விவரங்களை சண்முகம் எங்கிருந்து எடுத்தார் என்று சில அங்கத்தினர்கள் கேட்கக்கூடும். நான் எங்கிருந்தும் எடுக்கவில்லை, சர்க்கார் கொடுத்திருக்கின்ற வரவு செலவு திட்ட புத்தகத்திலிருந்துதான் எடுத்திருக்கின்றேன். சென்ற ஆண்டு சர்க்கார் கணக்கில் நான்கு லட்சம் 83 ஆயிரம் ரூபாய் குறையும் என்றும் இந்தத் தொகை துண்டு

[Sri P. G. Karuthiruman] [6th March 1958

தான் புகார் ஏற்படும். அப்படி இரண்டு லட்சம் ஏக்கருக்கு இரண்டாயிரம் க்யூசெக்ஸ் தண்ணீர் விடலாம் என்கிற அடிப்படையில் தயாரிக்கப்பட்ட திட்டத்தை பல லட்சம் ஏக்கருக்கு தண்ணீர் விடவேண்டுமென்றால் முடியாது. உண்மையிலேயே இன்றைய தினம் கீழ்பவானி திட்டம் வந்த பிற்பாடுதான் அந்தப் பகுதியில் செல்வம் கொழிக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. வேண்டுமென்றால் புள்ளி விவரங்களை எடுத்துப் பார்க்கலாம். இந்தத் திட்டம் வந்த பிற்பாடு கோபிசெட்டிபாளையத்தில் மட்டும் ஒரு கோடி பருத்தி விற்பனையாகியிருக்கிறது என்பதை தெரிந்துக் கொள்ளலாம். சர்க்காருக்கு எதிராகப் பிரசாரம் செய்கிறவர்கள் கூட நம்து முதல் அமைச்சர் அவர்கள் அந்த இடத்திற்கு வந்திருந்தபோது இந்த உண்மையை எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். வெளியிடத்தில் விளைந்த பருத்தி அங்கே விற்பனை செய்யப்படவில்லை அதே பிராந்தியத்தில் விளைந்த பருத்திதான் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்றால் இது கீழ்பவானி சாகர் திட்டத்தின் மகத்தான வெற்றியில்லையா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஓணான் முட்டையிடாத காடுகள் எல்லாம் இன்றைக்கு நெல் விளையும் நிலங்களாக மாறியிருக்கின்றன. சொக்கபுரம் என்ற ஊரில் நெல் மிகுதியாக விளைந்திருக்கிறது. இன்றைக்கு அந்தப் பூமிகளில் நெல்தான் விளையும் என்கிற பிரசாரத்தை பலபேர் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள் என்றால் இது அந்தத் திட்டத்தின் வெற்றியைத்தான் குறிக்கிறது. ஜனங்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவில்லை, க்ரீன்லாண்டைப் பாருங்கள், ஸ்விச்சர்லாந்தைப் பாருங்கள், கடியாரம் தயாரிப்பதிலிருந்து பல பல சிறுசிறு தொழில்களில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வருமானம் 270 ரூபாய்க்கு மேல் இருக்கிறது என்று பலர் சொல்கிறார்கள். வருமானத்தை மட்டும் பார்க்கிறார்களே தவிர செலவினங்களை அங்கே பார்ப்பதில்லை. அமெரிக்காவில் வருமானம் இதைவிட இன்னும் அதிகமாகக் கூடத்தான் இருக்கும். இங்கே ஒண்ணே கால், ஒண்ணரை ரூபாய் கொடுத்தால் நம் நாட்டில் நல்ல சாப்பாடு சாப்பிடலாம். ஆனால் அங்கே ஒரு சாப்பாடு 6 டாலர். அதாவது 25 ரூபாய் என்றால் அங்குள்ள வருமானம் அவர்களுடைய செலவுகளுக்குத்தான் சரியாகப் போகுமே தவிர வேறு ஒன்றும் இல்லை. இன்றைக்கு கோபி செட்டிபாளையத்திலுள்ள மார்க்கெட்டில் மாத்திரம் லட்ச ரூபாய்க் கணக்கில் பருத்தி விற்பனையாகிறது என்றால் இந்தப் பணம் எங்கே போகிறது? அங்குள்ள விவசாய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவில்லையா என்று கேட்கிறேன். அது மாத்திரம் அல்ல, இன்றையதினம் பவானித் தண்ணீர் பாயும்படியான இடத்தில் உள்ள விவசாயிகளிடத்தில் மட்டும் இரண்டாயிரம் சைக்கிள்களுக்கு மேல் இருக்கின்றன. அவர்கள் சைக்கிளிலேயே தினமும் ஐந்து மைல், பத்து மைல் சென்று நிலங்களைப் பார்வையிட்டு வருகிறார்கள். இது அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது என்பதைக் காட்டவில்லையா என்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு சர்க்கார் போடத் தீர்மானித்திருக்கும் வரி இனங்கள் விவசாயப் பெருமக்களை மிகவும் பாதிக்கும் என்பதாகப் பேசப்படுகிறது.

2-20 p.m. யுத்தத்திற்கு முன்னால் இருந்த விலைவாசியைப் பாருங்கள். இப்பொழுதிருக்கும் விலைவாசியையும் பாருங்கள். இப்பொழுது இருக்கும் வரி நியாயமா இல்லையா என்று பாருங்கள், அதை நான் உங்களுக்கே விட்டு விடுகிறேன். அப்பொழுது ஒரு மூட்டை நெல் விலை மூன்று ரூபாய். ஒரு மூட்டை கம்பின் விலை ஐந்து ரூபாய். இப்பொழுது ஒரு மூட்டை நெல் 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு மூட்டை கம்பும் 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆகவே தானியங்களின் விலை எவ்வளவு, போடும் வரி எவ்வளவு என்று பார்க்க வேண்டும். வரி ஒன்றுமே போடாமல் சர்க்கார் மக்களின் செலவிற்கும் ஏதாவது கொடுக்கமாட்டார்களா என்றும் கேட்போம், அவ்வளவு பண்பு உள்ளவர்கள் நாம். மக்களால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் சொன்ன இந்த வரியை சர்க்கார் ஏற்றுக்கொண்டதற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன். அதற்காக நன்றியும் செலுத்துகிறேன். முதலிலே இருந்தது என்ன? பின்னர், ராமமூர்த்தி உள்பட கலந்துகொண்ட மகாநாட்டின் தீர்ப்புப்படி ஏற்படுத்தப்



6th March 1958] [Sri P. G. Karuthiruman]

பட்ட வரி விகிதம் என்ன? என்று பாருங்கள். பருத்தி விளைந்தால் ஏக்கர் ஒன்றுக்கு இருபது ரூபாய் என்றும் கருங்கண்ணிக்கு ஏழரை ரூபாய் என்றும் விவசாய செஸ் ஆக்ட்படி தீர்மானிக்கப்பட்டு அது ஏகமனதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் இதற்குப்பின் தோழர்கள் அங்கு போய், இது என்ன அக்கிரமம், இப்படி வரி போட்டு விட்டார்களே என்று கூறுகிறார்கள். விவசாயத் தலைவன் என்ற முறையில், விவசாயப் பிரதிநிதி என்ற முறையில் மூவர் கமிட்டி ஒன்று போட்டு அதன் ரிப்போர்ட்டை சர்க்காருக்கு அனுப்பி அதை சர்க்காரும் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். ஒரு ஏக்கருக்கு இவ்வளவு வரி என்று விதியுங்களேன் என்று பொது மக்கள் சொன்னார்கள். ஒரு மகாநாடு கூட்டி அதன் ஒப்புதல் மூலம் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது, சர்க்காரால். ஆனால் தோழர்கள் பிரசாரம் செய்கிறார்கள், இது என்ன அக்கிரமம் என்று. இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் உத்தரவுக்கு முன் ஒரு ஏக்கரில் பருத்தி விளைந்தால் 20 ரூபாய் என்றும், கருங்கண்ணி விளைந்தால் ஏழரை ரூபாய் என்றும் இருக்கிறது. போன சமயத்தில் பருத்தி பற்றாக் குறையால் பருத்தி பாதியாகவும் பிற தான்யம் பாதியாகவும் கொடுக்கப் பட்டது. இப்பொழுது இருக்கும் திட்டப் பிரகாரம் நஞ்சை வைக்கும் பூமிக்கு ஏக்கர் ஒன்றுக்கு 20 ரூபாய் என்று இருக்கிறது. நஞ்சை தவிர வேறு என்ன பயிர்கள் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். அதற்கு, ஏக்கர் ஒன்றுக்கு பதினேழரை ரூபாய். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக நான் சர்க்காரைப் பாராட்டுகிறேன். அடுத்தபடியாக, விவசாய வருமான வரி. விவசாய வருமான வரியால் நான் பாதிக்கப்படுபவனாக இருந்தாலும் அதை நான் வரவேற்கிறேன். எதிர் கட்சிக்காரர்கள் இங்கு குறிப்பிட்டார்கள், (பெல்) இங்கு வள்ளுவனும் கம்பனும் படும் பாட்டைப் பார்த்தால் அவர்களின் கருத்தே போய் விடுகிறது என்று. "இலமென் றசை இருப்பாரைக் காணின் நிலமென் னும் நல்லாள் நகும்" என்று வள்ளுவர் கூறியதைக் கூறி, வள்ளி தேவயானை என்ற கதையையும் கூறி, வடக்கு தெற்கு என்று இங்கு பேசப்பட்டது. தமிழ் அன்னை இப்பேர்ப்பட்ட அறிவாளிகளை பெற்று விட்டாளே என்றும், அப்படிப்பட்டவர்கள் உற்பத்தி பெருக்கத்திற்கு தடையாக இருக்கிறார்களே என்றும் நினைக்கும்போது சிரிப்புத்தான் வருகிறது என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**SRI K. S. ARDHANAREESWARA GOUNDER**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நம் சபையின் முன் நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, நமது நிதியமைச்சர் அவர்கள் இத்துடன் அநேகமாக எட்டாவது தடவையாக இங்கு பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதுவும், ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்த நம் அமைச்சர் அவர்கள் மக்களின் கஷ்டத்தை நன்கு உணர்ந்து தன்னுடைய தொழிலிற்கே வரி விதித்திருக்கிறார்கள் என்றால் இதுதான் சோஷியலிஸ பாணியைக் காண்பிக்கிறது என்பதை நான் முதன் முதலாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக வரி விதிக்காமல் சர்க்காரை நடத்துவது என்பது, அது எந்த சர்க்காராக இருந்தாலும் மிகவும் கடினந்தான், அது முடியவும் முடியாது. குறிப்பாக ஒருவருக்கு வரி போட்டால் அவர்கள் வருத்தப்படுவார்கள். ஆகவே, தான் எந்தக் குடும்பத்தில் பிறந்தாரோ அந்தத் தொழிலிற்கே அமைச்சர் அவர்கள் வரி விதித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விஷயமாகும். அதற்கு சில மிராசுதார்கள், கணக்குகள் வைத்துக்கொள்வது கடினமாகும் என்று சொல்லலாம். ஆனால் உண்மையில் விவசாயிகளின் கஷ்டம் தெரியவேண்டுமென்றால், எதிர் கட்சியினராயினும், அல்லது ஆளும் கட்சியில் இருப்பவர்களாயினும் சரி விவசாயம் செய்பவர்களின் கஷ்டம் தெரியவேண்டுமென்றால் விவசாய வருமான வரி மூலந்தான் விவசாயிகளின் கஷ்டத்தைத் தெரிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. மூவாயிரம் ரூபாய்க்கு அதிகம் வருமானம் வரக்கூடியவர்கள் தங்களது செல்வத்தைப் பகிர்ந்து கொள்ள முன் வந்தால்தான் நம் நாட்டில்

[Sri R. Chidambara Bharathi] [6th March 1958

பேசுகிறார்களே" என்று கூறப்பட்டது. இந்த விஷயத்தைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் குறை கூறும் முறை வேறு, ஆளும் கட்சியிலிருப்பவர்கள் கூறும் முறை வேறு. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக யிருந்தாலும்கூட, தீர்க்கமான ஆலோசனைக்காகத்தான் இந்தத் திட்டம் சபை முன்பு வைக்கப்பட்டிருப்பதால், ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர் அபிப்பிராயத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டும், தவறிப் போனதையும் விட்டுப்போனதையும், இன்னும் சேர்க்க வேண்டியதையும் எடுத்துக் கூற வேண்டும் என்பதற்காக, ஜனநாயக முறைப்படி ஒரு நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, "வடக்கு வாழ்கின்றது, தெற்கு தேய்கின்றது" என்று எதிர்க் கட்சிக்காரர்கள் எதற்காகக் கூறுகிறார்கள் என்றால், வடக்கைப்பற்றிக் குற்றம் சொல்லியும், தெற்கே வாழ்பவர்கள் நல் வாழ்க்கை நடத்த முடியாமல் இருக்கிறார்கள் என்றும் பிரசாரத்திற்காகப் பேசுகிறார்களே தவிர, மற்றப்படி நல்ல கருத்துக்களைச் சொல்லவோ, மாற்று யோசனைகளைக் கூறவோ முற்படுவார்களேயானால் சர்க்கார் கட்சியிலுள்ளவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். திருத்தம் செய்து கொள்வார்கள். அவ்வாறு பல சமயங்களில் திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைய சட்டசபை விவாதத்தைப் பார்த்தால், அம்மாதிரித் திட்டமே ஒன்றும் கூறப்படவில்லை.

தூத்துக்குடித் துறைமுகத்தில் கரையோரம் கப்பல் வருவதற்கு 100 கோடி ரூபாய் செலவு செய்தால் பல நன்மைகள் ஏற்படுமென்று சொல்லப்படுகிறது. வடக்கே இருக்கும் டெல்லி சர்க்கார் இதை ஏற்றுக் கொள்ளவில்லையென்றும் சொல்லப்படுகிறது. இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுது தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு வருவதற்கு ரோடு போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது ராமநாதபுரம் ஜில்லா வரையிலும் வந்திருக்கிறது. இந்த ரோடைப் போடாமல் துறைமுகத்தை மட்டும் அபிவிருத்தி செய்தால் அதனால் பலன் ஒன்றும் ஏற்படப்போவதில்லை. ஏனென்றால் அந்தத் துறைமுகத்திற்கு வரும் கப்பல்களிலுள்ள சாமான்களை மதுரை போன்ற இடங்களுக்கு அனுப்புவதற்கு இப்பொழுது வசதிக் குறைவாக இருக்கிறது. இந்த நிலையிலே முதலிலே அந்தத் துறைமுகத்தைச் சீர்திருத்தம் செய்தால், அங்கே இறக்குமதி ஆகும் சாமான்களை வெளியிடங்களுக்குக் கொண்டுபோய் விநியோகிப்பது எவ்விதம்? அஸ்திவாரத்தை வைத்துக்கொண்டுதானே கட்டிடம் கட்ட வேண்டும்? அதேபோல்தான் அங்கே இறக்கப்படும் சாமான்களைக் கொண்டு போவதற்கு ரோட்டு போட்டுக்கொண்டு வருகிறார்கள்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதி விஷயமாக சில விஷயங்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அடி ஊற்று நீரைப் பயன்படுத்த சர்க்கார் பரிசீலனை செய்து முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வருஷம் ஒன்பது லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் என்னென்ன முயற்சிகள் செய்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே அடி ஊற்று நீரைக் கொண்டுவந்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விவசாயம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.

விவசாய வருமான வரி விதிப்பதற்கு மசோதா ஒன்றை சர்க்கார் கொண்டுவரவிருக்கிறார்கள். இது விஷயத்தில் இன்னும் அதிகமாக யோசித்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், பல வகைகளில் நாம் விவசாயிகளுக்கு வரி போட்டு வருகிறோம். அதே சமயத்தில் அவர்களுடைய வருமானம் உயருவதற்கும் வழிவகை செய்திருக்கிறோம். ஆனால் அந்த உதவிகளைக் கொண்டு அவர்களுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கான சந்தர்ப்பம் இன்னும் ஏற்படவில்லை. இந்த சமயத்தில் அவர்கள் மீதுள்ள சுமையை அதிகப்படுத்தினால், அதைத் தாங்க சக்தியற்றவர்களாகிவிடுவார்களோ என்று கவலைப்படுகிறேன். மூவாயிரம் என்று இருப்பதை ஐயாயிரமாக உயர்த்த வேண்டும். மசோதா கொண்டு வரும்போது, சொந்த நிலம் வைத்திருப்பவர்கள், 100 ஏக்கர்,



6th March 1958] [Sri R. Chidambara Bharathi]

200 ஏக்கர் குத்தகைதாரர்கள், இவர்கள் விஷயத்தையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**Sri S. RAMASAMI NAIDU** : கனம் சபாநாயகர் அவர்களே, வானத்தை எதிர்பார்த்திருக்கும் நம்முடைய நாட்டிலே, ஒரு வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கும் நமது நிதி அமைச்சர் அவர்கள் பருவ நிலை பற்றி முதலிலே சொல்லியிருப்பதைக் குறித்துச் சந்தோஷப் படுகிறேன். வானம் பார்த்து இருக்கிறது நம் நாடு. வானம் பொய்த்தால் அத்தனையும் பொய்த்துவிடும். வானத்திலிருந்து சரியாக மழை விழவில்லை என்பது நாம் அறிந்ததே. மழையை உண்டாக்குவதற்கு இப்பொழுது புதிதாகப் பல முறைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்றாலும் கூட, பழையவர்கள் சொன்ன முறைகள் பல இன்றைக்குப் பலிக்கவில்லை. ". . . பெய்யெனப் பெய்யும் மழை" என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது யாருமே மழை பெய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. அப்படி அவர்கள் சொன்னாலும் பெய்யுமோ, பெய்யாதோ தெரியவில்லை. அடுத்தபடி, கற்புடைய மங்கையர் விரும்பினால், மாதம் மூன்று முறை மழை பெய்யும் என்று சொன்னார்கள். அந்த மூன்று முறை மழையையும் காணோம். இன்னொரு சாரார் வருஷம் மூன்று முறை பெய்யும் என்று சொன்னார்கள். அதுவும் பெய்யவில்லை. ஆனால், "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்று சொன்னார்கள். அதன்படி, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் "நல்லவர்" ஒருவர் இருப்பதனால், வருஷத்திற்கு ஒரு முறையாவது ஏதோ பெய்துவிடுகிறது. (சிரிப்பு.) ஐப்பசி மாதத்திலிருந்து மழை பெய்யாததால் வானைப் பார்த்துக் கொண்டிருந்தோம். மார்ச் மாதம் முதல் தேதி பெரும் பண மழை பெய்தது. பண மழையின் காரணமாக நாமெல்லோரும் உற்சாகமாக இருக்கிறோம். அதனால் ஆறுகளும் வாய்க்கால்களும் வெள்ளம் எடுத்து ஓடுகின்றன. சென்னை ராஜ்யத்தில் விவசாயத்தை நம்பி வாழும் மக்களின் வருமானத்தை ஓரளவு அதிகமாக்க ஏற்பாடு செய்திருந்தாலும், விவசாயத்திற்குப் போதுமான அளவு கால்வாய்களிலே தண்ணீர் வரவில்லை. பல மடைகள் திறந்துவிடப்படவில்லை. விவசாயத்தை அபிவிருத்தி செய்ய, கால்நடைகளுக்கு ஒரு இன்ஷூரன்ஸ் திட்டத்தை ஏற்படுத்த, விவசாயிகள் பகல் எல்லாம் உழைத்து விட்டு இரவில் காவல் காக்கும் முறைக்கு ஒரு இன்ஷூரன்ஸ் திட்டத்தை ஏற்படுத்த, அவர்கள் வீடுகளில் இருக்கும் வயோதிகர்களுக்கு வாழ்க்கைத் திட்டத்தை வகுக்க, அவர்கள் பிள்ளைகள் படிப்பதற்கு ஒரு மைல் இரண்டு மைல் தூரத்திற்குள் பள்ளிக்கூடங்கள் வைக்க, அவர்களுக்கு வைத்திய வசதிகள் அளிக்க இந்தத் திட்டத்தில் ஒன்றும் காணோம்.

ஏதோ ரொக்க சம்பளம் பெறுகிறவர்களுக்கு சர்க்கார் பலவித சௌகரி- 3-00 p.m.
யங்கள் செய்து வருகிறார்கள் என்றாலும், கிராமத்தில் வசிக்கும் விவசாயிகளுக்கு எந்த விதமான வசதியோ சலுகையோ செய்து தரப்படவில்லை. அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்வி சலுகையோ, வைத்திய வசதியோ, மற்ற தேவையான வசதிகளையோ செய்து கொடுப்பதற்கு இந்த திட்டத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை. கிராமங்களில் வாழும் மக்கள் ரஸ்தா போட்டுக்கொண்டால் ஒழிய வேறு வசதி கிடையாது. ஆயிரத்து எழுநூற்று அறுபது மைல் ரஸ்தா போட வேண்டும் என்று சர்க்கார் திட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். போட்ட ரஸ்தாக்கள் எல்லாம் மண் கரைந்து போய் இருந்த இடம் தெரியாமல் இருக்கிறது. போட்ட ரஸ்தாக்களை சரியான முறையில் பராமரிப்பதற்காக நிஷ்கர்ஷணமாக பணம் ஒதுக்கப்படவில்லை. கிராமங்களில் மழை இல்லாத காலங்களில் நல்ல பாதை இருக்கும். ஆனால் மழை காலங்களில் இவைகள் சீர்கெட்டுப்போய் கிராமவாசிகள் வெகு தூரம் சேற்றில் நடக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த வருஷ நடைமுறையிலாவது திட்டத்தில் இல்லாவிட்டாலும்கூட இவைகளுக்கு பணம் ஒதுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

[Sri P. U. Shanmugam] [6th March 1958

விழும் என்றும் சொன்னார்கள். ஆனால் சென்ற ஆண்டில் நிதி கமிஷன் சிபாரிசின்படி அதிகப்படியாக வருவாய் வந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நிதி கமிஷன் சிபாரிசின்படி ஒரு கோடி 74 லட்சம் ரூபாய் வருவாய் வந்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. பாக்கி மூன்று கோடி 9 லட்சம். அப்படியானால் எப்படி நிதி நிலைமையை சரிக்கட்டினார்கள் என்று எனக்கு புரியவில்லை. சரிக்கட்டிய விதம் மூலதனச் செலவுக்காக ஒதுக்கப்பட்ட தொகையை சரியாக செலவு செய்யப்படாமல்தான் இருந்தும் சரிக்கட்டியிருக்கிறார்களே ஒழிய அவைகளை எல்லாம் செலவு செய்துவிட்டு அதன் பிறகு பணம் மிஞ்சியிருக்கிறது என்று குறிப்பிடவில்லை. இது போன்ற புள்ளி விவரங்களை கூறும்போது கனம் கருணாநிதி வெறும் பக்கங்களை மாத்திரம்தானே பார்த்தார், அதிலுள்ள சில பிழைகளை மாத்திரம்தானே கண்டு பிடித்தார் என்று குறை கூறுகிறார்கள். பொதுவாக இதை பல கோணங்களிலிருந்து பல பேர்கள் பார்க்கும்பொழுது சிலர் போற்று கிறார்கள், சிலர் தூற்றுகிறார்கள், சிலர் ஏற்றுகிறார்கள், சிலர் இறக்கு கிறார்கள். இன்னொரு அங்கத்தினர் குறிப்பிட்டார் இவர்களுக்கு பித்தம் பிடித்திருக்கிறது, பித்தம் தெளிய மருந்து இதில் இருக்கிறது என்று குறிப்பிட்டார். அதோடு இவர்களுக்கு சித்தம் தெளிய மருந்தும் இதில் இருக்கிறது, மேலும் கொண்டு வரப்போகிறோம் என்றும் குறிப்பிட்டார்கள். ஆகவே இதை எந்த கோணத்திலிருந்து பார்த்தாலும் இந்த நிதி நிலை அறிக்கை கோணலாகத்தான் இருக்கிறது என்றும் கூறப்பட்டது. உண்மை யிலே பித்தம் பிடித்தவர்கள் நாங்கள் அல்ல, உங்களுடைய கருத்துக் கேற்றவாறு நாங்கள் அதை ஏற்றுக்கொண்டாலும் கூட எங்களுக்கு பித்தம் தெளிவதற்கு ஒரே மருந்துதான் உண்டு, அதுதான் திராவிட நாட்டை ஏற்படுத்துவது. அதற்கு நிதி அமைச்சர் அவர்கள் துணை புரிந்தால் அவர்களுக்கும், துணைபுரியக்கூடிய அத்தனை பேர்களுக்கும் நன்றி யுடையவர்களாக இருப்போம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உரையில் இருக்கின்ற சில தவறுகளை எடுத்துக்காட்டிய பொழுது இது என்ன பிரமாதமான தவறு? ஏதோ சில புள்ளி விவரங்கள் அச்சுப் பிழையினால் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறலாம். ஆனால் இதில் நான் புள்ளி விவரங்களை காட்டாமல் சர்க்கார் கொடுத்திருக்கின்ற சில வாசகங் களை முரண்பாடாக இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுகிறேன் இவற்றிற்கு சர்க்கார் பதில் அளிக்கும்போது நல்ல முறையில் பதில் அளிக்க வேண்டும் என்று தங்கள் மூலமாக சர்க்கார் தரப்பினரை கேட்டுக் கொள்கிறேன். இந்த உரையில் முதலாவதாக "மழை திருப்தி கரமாக இருக்கிறது என்றும் அதன் காரணமாக உணவின் நிலை திருப்தி கரமாகவும் இருக்கிறது" என்று கூறுகிறார். ஆனால் விலைவாசியைப் பற்றி குறிப்பிடும்பொழுது விலைவாசிகளின் குறியீட்டு எண் உயர்ந்திருக் கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மழை சரியாக பெய்து உணவு தான்யங்கள் மிகுதியாக விளைந்திருக்குமானால் இந்த குறியீட்டெண் உயர்ந்து கொண்டு போவதற்கு காரணம் என்ன என்பதை நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட மறந்து விட்டிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். இன்னொன்று சொல்வேன், உணவு நிலைமை சரியாக இல்லையென்ற காரணத்திற்காக 800 நியாய விலை கடைகளை திறந்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் விலைவாசி குறியீட்டெண் 377-லிருந்து 512-க்கு உயர்ந்திருக்கிறது என்றும் புள்ளி விவரங்களிலிருந்தும் தெரிகிறது. இந்த நிலைமையை சமாளிக்கத்தான் இந்த 800 நியாய விலை கடைகளை திறந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் விலைவாசி, அல்லது உணவுப்பொருள்களின் விலை குறைந்திருக்கிறதா என்று பார்த் தால் இல்லை என்று நிச்சயமாக சொல்லிவிட முடியும். அதனால் இதை பாதுகாத்துக் கொள்ளுவதற்கு விழிப்போடு கவனிக்க வேண்டிய அவசியம் இருந்து வருகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிலைமை இருந்தும் திறக்கப்பட்ட நியாய விலை கடைகளை மூடிவிட்டதற்கு என்ன காரணம் என்பதை விளக்கவில்லை. என்ன காரணத்திற்காக மூடினார்கள் என்பதை விளக்க வேண்டும் என்று சர்க்காரை தங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன். உணவுப்பொருள்பற்றி குறிப்பிடும்பொழுதும் பற்றுக்குறை குறை இல்லை என்று ஒரு இடத்திலும் இன்னொரு இடத்தில் உணவுப் பொருள்களில் பற்றுக்குறை இருக்கிறது என்றும் இந்த நிதி நிலை



6th March 1958] [Sri P. U. Shanmugam]

அறிக்கையிலேயே முரண்பாடான முறையில் வாசகங்களை கொடுத்திருக் கிறார்கள். அவர்கள் வேண்டுமானால் எண்ணிக்கை எல்லாம் அச்சுப்பிழை யாக இருக்கும் என்று கூறி தப்பித்துக்கொள்ள முடியும். ஆனால் நான் வாசகங்களிலுள்ள குற்றம் குறைகளை காட்டுகின்றேன், அதோடு அதில் காணப்படும் முரண்பாடான கருத்துக்கள் இருப்பதையும் காட்டுகின்றேன். ஒரு இடத்தில் பற்றுக்குறை இருக்கிறது என்றும் இன்னொரு இடத்தில் பற்றுக்குறை இல்லை என்றும் காணப்படுகிறது. இந்த விதமாக முரண் பாடாக இருப்பதற்கு காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அவசியம் அவர்களுடைய பதிலில் சொல்ல வேண்டும் என்று, உதவி சட்ட மன்றத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு இடத்தில் குறிப்பிடுகிறார்கள். மேலும் உற்பத்தியைப் 2-40
பெருக்குவது அவ்வளவு எளிதல்ல என்று ஒரு இடத்தில் குறிப்பிடு p.m.
கிறார்கள். இன்னொரு இடத்தில் உற்பத்தியைப் பெருக்குவது அசாத்தியமல்ல என்று குறிப்பிடுகிறார்கள். ஒரு இடத்தில் சாத்தியமான காரியமல்ல, இன்னொரு இடத்தில் அசாத்தியமல்ல. ஒன்றுக்கொன்று முரண் பாடு. இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலேயே இந்த இரண்டு வாசகங்களும் இருக்கின்றன. இந்த முரண்பாடுகளுக்குக் காரணம் என்ன என்று சொல்லும்படியாக மாற்றுக் கட்சியைச் சேர்ந்த ஆளும் கட்சி நண்பர்களைத் தங்கள் மூலமாகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இரசாயன உரங்களை அதிக அளவில் உபயோகித்து வருவதாக ஒரு இடத்தில் சொல்லுகிறார்கள். இன்னொரு இடத்தில் சொல் லுகிறார்கள் இரசாயன உரங்களில் பற்றுக்குறை இருக்கிறது என்று. இந்த முரண்பாட்டுக்குக் காரணம் என்ன? 1957–58-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் டன் இரசாயன உரம் கொடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அதில் 75,000 டன் கொடுத்திருக் கிறார்கள். 75,000 டன் கொடுத்துவிட்டு 65,000 டன் கொடுக்காமல் நிறுத்திவிட்டு, அதிகப்படியான அளவில் இரசாயன உரம் உபயோகித்து வருவதாகச் சொல்லக்கூடிய அந்த வாதம் எப்படிப் பொருந்தும் என்று நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இதே போல் பல முரண்பாடுகள், வாசகங்களில் முரண்பாடுகள், எழுத்துக்களில் முரண்பாடுகள் இந்த நிதி நிலை அறிக் கையிலேயே இருக்கின்றன. கைத்தறித் தொழிலின் முன்னேற்றத்திற்காகச் சென்ற ஆண்டு ஒதுக்கிய தொகை 146 லட்சம். ஆனால் இவ்வாண்டு அதற்கு ஒதுக்கியிருக்கும் பணம் 92 லட்ச ரூபாய். இவ்வளவுதான் இவர்களால் ஒதுக்க முடிந்திருக்கிறது. அது மட்டுமல்ல, காடுகளுக்கும், சாலைகளுக்கும் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டது 367 லட்சம். ஆனால், இவ்வாண்டு ஒதுக்கப் பட்டது 335 லட்சம். சென்ற ஆண்டு தொழில் அபிவிருத்திக்கு ஒதுக்கப் பட்ட பணம் 195 லட்சம். இவ்வாண்டு ஒதுக்கியிருக்கும் பணம் 143 லட்சம். இவ்வளவு குறைவாக மதிப்பிட்ட பிறகும் இந்தப் பற்றுக்குறை என்றால் அதற்குச் சரியான காரணத்தை அமைச்சர் அவர்கள் சொன்னாலொழிய என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பொதுவாக, சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே பேசும்போது அது ஒரு அட்மினிஸ்ட்ரேடிவ் ரிப்போர்ட் அதாவது நிர்வாக அறிக்கைபோல் இருக்கிறது என்று சொன்னதாக ஞாபகம். இவ்வாண்டு நிதி நிலை அறிக்கையைப் படிக்கும்போது உண்மையிலே வார்த்தைகளை ஏராளமாகப் போட்டிருக்கிறார்கள், முரண்பட்ட வாசகங்களைப் போட்டிருக்கிறார்கள், தெளிவாக இல்லாமல் குழப்பியிருக்கும் ஒரு அறிக்கை இவ்வாண்டு நிதி நிலை அறிக்கை என்ற என்னுடைய தாழ்மையான அபிப்பிராயத்தை இங்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்படி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வட நாடு தென் நாடு என்று பேசுகிறார்களே, வடக்கு வாழ்கிறது, தெற்கு

வாழவில்லை என்று சொல்லுகிறார்களே என்று சொல்லும் ஆளும் கட்சித் தோழர்கள் சற்று அமைதியோடு பார்க்க வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையிலே கனம் சுப்பிரமணியம் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள் ஒரு சிறு செய்தியை. மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்கார் வாங்கியிருக்கும் கடன்களுக்கான வட்டியைக் குறைத்து வாங்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டு, நிதிக் கமிஷன் மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்திருந்தும், இந்தச் சிபாரிசை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தச் சிபாரிசை ஏற்றுக் கொண்டிருந்தால் இந்த அரசாங்கத்திற்கு 60 லட்சம் ரூபாய் வந்திருக்குமென்று நிதி அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். நான் சொல்லுகிறேன்—ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், நீங்கள் இதை எண்ணிப் பார்க்க வேண்டும்—கேவலம் வட்டிக் கடைக்காரன் கூட சிறிது வட்டியைத் தள்ளிக் கொடுப்பான், இந்த வட நாட்டு சர்க்கார் இதைக் கூடத் தள்ளிக் கொடுக்க மறுக்கின்றது ஏன் என்று யோசிக்க வேண்டும். நண்பர் கருணாநிதி சொன்னதுபோல், அந்த சர்க்கார் மார்வாடி சர்க்கார் என்ற காரணத்தால், இரக்கமற்றுப் போயிருக்கிறார்கள். அதனால்தான் இந்த வட்டியைக் கூடத் தள்ளிவிட மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கை தீதானது என்று சொல்லாவிட்டாலும், தீமை நீங்காது என்பதை மறுக்க முடியாது. இந்த அறிக்கை தீங்கு விளைவிக்காது என்றாலும், துயரத்தைப் போக்காது. பாதகமானது என்று சொல்லாவிட்டாலும், சாதகமானது என்று யாராலும் சாதிக்க முடியாது. கேடு தரும் என்று சொல்ல முடியாது என்றாலும் எண்ணற்ற கைத்தறியாளரின் கண்ணீருக்கு ஈடு செய்யும் என்று சொல்ல முடியாது. இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையால் மக்கள் நன்மை அடைய முடியாது, நாடு நலம் பெறாது, நமக்கு பெருமை இருக்காது. ஆகவே இந்த நிதி நிலை அறிக்கை, பயன் தராது, பலன் தராது, நலன் தராது, பெருமை அளிக்காது என்று தெரிவித்துக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

*SRI R. CHIDAMBARA BHARATHI* : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மூன்று நான்கு நாட்களாக, 27 பக்கங்கள், 34 பாராக்கள் கொண்ட நமது நிதி அமைச்சருடைய நிதி நிலை அறிக்கையை நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். நாம் மிகவும் சந்தோஷப்படக்கூடிய வகையில் பல வருஷங்களில் இம்மாதிரிக் காலங்களில் அதிகமாக வரவேற்றுப் பேசியிருக்கிறோம். இன்னும் அதிகமான முறையில் வரவேற்று பேசவேண்டிய நிலைமை இந்த ஆண்டு விவாதம் இருக்கிறது. ஏனென்றால் இந்த அறிக்கையில் 11 பக்கங்கள் விவசாயிகளைப் பொறுத்ததாக இருக்கிறது. விவசாயிகளைப்பற்றிய விஷயத்தில் மிகவும் கவனம் செலுத்தப்பட்டு எந்தெந்த வகையிலே விவசாயத்தை அதிகப்படியாகச் செய்வதற்கு, மக்களுக்கு ஊக்கமளிப்பதில் நன்கு ஆராய்ந்து யோசித்துச் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது நம் நாட்டில் நாம் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய முக்கியமான காரியமான விவசாய உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு வேண்டிய காரியங்கள் சொல்லப்பட்டிருப்பதை நான் நன்கு வரவேற்கிறேன். அது மாத்திரமல்ல. கனம் அங்கத்தினர்களில் பல் பேர்கள் கூறுகிறார்கள். அவர்கள் பேசிய காலத்தில் என் கண் முன்பு பல சித்திரங்கள் தோன்றின. அவைகள் நம் நாட்டின் சித்திரங்கள். (இந்த சந்தர்ப்பத்தில் சபாநாயகர் வந்து ஆசனத்தில் அமர்ந்தார்.) இந்த நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் பிச்சைக்காரர்களாக தெருவில் பிச்சை எடுக்கும் காட்சி தோன்றியது. கைத்தறியாளர்களுக்கு நூலை நூற்றுக் கொடுப்பவர்களின் கை விரல்கள் வெட்டப்பட்ட காட்சி தோன்றியது. ஆசிய நாட்டிலுள்ள பல வீதிகளில், வயிற்றின் கொடுமையால், வேலை இல்லாக் கொடுமையால், இந் நாட்டிலிருந்து பல லட்சக்கணக்கான மக்கள் வெளியேறி அங்கு எந்த விதமான ஆதரவும் இல்லாதது மாத்திர



மல்ல, அவமரியாதைப் படுத்தப்படும் சித்திரங்கள் தோன்றின. தோன்றிய காலமெல்லாம், 6,000 மைல்களுக்கு மேற்கேயிருந்து வந்த ஆங்கிலேய நாட்டினரால்தானே இந்த நிலைமை இந்த நாட்டில், தமிழ் நாட்டில் உண்டாகியது. அப்போது இந்த நண்பர்கள் அவர்களுக்குத் தாளம் போட்டு வந்தார்களே, இப்போது அவர்களே இப்படிப் பேசுகிறார்களே என்று அந்தச் சித்திரத்தை நான் கண் முன்னால் பார்க்கும்போது மிகக் கவலைப் பட்டேன். அன்று இப்படி இருந்ததால் இன்று அவர்கள் சொல்வது தவறு என்று சொல்லவில்லை. ஆனால் சொல்வது நியாயமாக இருக்க வேண்டும். அன்று சொன்னது தவறாக இருந்ததால் இன்று சொல்லக் கூடாதா என்று அவர்கள் வாதிக்கலாம். நியாயமானதாகச் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளுவதில் இப்போதுள்ள அரசாங்கத்தைப் போன்றவர்கள், இவர்களே தொடர்ந்து எந்தக் காலத்திலிருந்தாலும் கூட பின் வாங்கமாட்டார்கள் என்று சொல்லுகிறேன். அவர்கள் சொல்வதையெல்லாம் நடைமுறையில் நடத்திக் கொண்டிருப்பவர்கள் இவர்கள், இவர்களுக்கு மக்களால் பட்டயம் கொடுக்கப்பட்டு வருகிறது ஒவ்வொரு தேர்தலிலும். இவர்கள் சொல்வதில் நியாயம் என்ன இருக்கிறது என்று யோசித்துப் பார்ப்போம். பத்து வருஷங்களுக்கு முன்பு நம் நாட்டில் ஒருவருடைய சராசரி வருமானம் இரண்டணா, எட்டு தம்பிடி. ஆனால் இன்றைய தினம் நம்முடைய வருமானம் பத்தணா, பதினொன்று தம்பிடியாக உயர்ந்திருக்கிறது என்பதை நாம் சிந்திக்கும்போது, இந்த மாறுபாடு எங்கிருந்து வந்தது என்று உற்று நோக்க வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டம் என்று ஆரம்பித்துப் பல திட்டங்களைப் போட்டார்கள். கோடிக் கணக்கான ரூபாய்கள் போட்டு வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்ற எல்லாப் பகுதிகளிலும் பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். புதிய புதிய திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். இம்மாதிரியான திட்டங்கள் மூலமாக சில லட்சக் கணக்கான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். விவசாய உற்பத்தியை அதிகம் செய்திருக்கிறார்கள். பல தொழிற்சாலைகளை அமைத்திருக்கிறார்கள். இன்னும் பல பெரிய தொழில்கள் அமைக்க கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவழித்து வருகிறார்கள். கிராமங்கள் தவறாமல், 500-க்கு மேற்பட்ட கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் வைத்துத் 2-50 p.m.
தீரவேண்டுமென்று பள்ளிக்கூடங்கள் வைத்திருக்கிறார்கள். இம்மாதிரியான முயற்சிகள் எங்கிருந்து செய்யப்பட்டன என்பதை சிந்திக்கவேண்டும். இங்கிருந்து கொண்டுபோன பணம்தானே, கொடுத்தது அதிகம், தந்தது குறைவு என்று சொல்லுவார்கள். நாம் கொடுத்தது எவ்வளவு, அவர்கள் திருப்பித் தந்தது எவ்வளவு என்பதற்குப் புள்ளி விவரங்கள் இருக்கின்றன. ஐரோப்பிய யுத்தத்தில் இறந்தவர்களுடைய கணக்கைப் பார்த்தால், ஜனத்தொகையை விட இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். இதற்கு "கொயபெல்ஸ் கணக்கு" என்று சொல்லுவார்கள். மக்களுடைய பிரதிநிதிகளாக விளங்கும் சட்டசபை உறுப்பினர்கள் புள்ளி விவரங்களைத் தி த்திக் கூறினால், மக்களுடைய மனதில் இவ்வளவு தவறான காரியங்களுக்கு அங்கத்தினர்கள் உட்படுகிறார்களே என்று நினைக்கக்கூடிய நிலைமை ஏற்படுமே என்று வருந்துகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நமது சர்க்கார் ஒன்பது நீர்ப்பாசனத்திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டுவருகிறார்கள். அவற்றுள் நான்கு பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அநேகமாக நிறைவேறிவிட்டன. கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஏக்கருக்கு மேல் விவசாயத்திற்கு வரப்போகிறது. இந்த ஆண்டில் வைகை அணைக்கட்டுத் திட்டம் அநேகமாக முடிவடையும். இந்தத் திட்டங்களின் மூலமாக பல லட்சக் கணக்கான ஏக்கர்களுக்குப் பாசன வசதி ஏற்பட்டு சாகுபடிக்கு வர இருக்கின்றன. இப்படி ஒன்பது பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைக் கட்டி அதிகப்படியான நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவரத் திட்டமிட்டிருக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தை தமிழ் மக்கள் அனைவரும் வரவேற்பார்கள் என்பதில் எனக்குப் பூரணமான நம்பிக்கை உண்டு.

அடுத்தபடியாக, "எதிர்க் கட்சிக்காரர்கள் மட்டும்தான் வரவு செலவுத் திட்டத்தைக் குறைகூறுகிறவர்கள் அல்ல, ஆளும் கட்சியிலிருப்பவர்களும்

[Sri S. Ramasami Naidu] [6th March 1958

நம் மாகாணத்தில் 33 கோடி மக்கள் இருக்கிறார்கள். அறுபது கோடி ரூபாய் வருமானம் வருகிறது. மத்திய அரசாங்கத்திற்கும் நம் மூலமாக 60 கோடி ரூபாய் வருகிறது. ஆக மொத்தம் 120 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. சர்க்கார் செலவினங்களுக்காக 60 கோடி ரூபாய் எடுத்துக்கொண்டால் கூட மீதி இருக்கும் 60 கோடி ரூபாயை கிராமங்களில் உள்ள மூன்று கோடி ஏழை விவசாயிகளுக்கு தலா இருபது ரூபாயாக பிரித்துப் பங்கிட்டுக் கொடுக்கலாம். இம்மாதிரி இந்தத் தொகையை கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களானால் கிராமத்தில் உள்ள மக்கள் மிக்க பக்தியுடன் இருப்பார்கள் என்று கூட நான் சொல்லுவேன்.

நம் நாட்டில் மழை பெய்தாலும் இங்கு உள்ள ஆறுகள் நிரம்பி ஓடுவது இல்லை. மற்ற இடங்களில் பெய்கின்ற மழையால்தான் இவைகளுக்கு தண்ணீர் கிடைக்கின்றது. காவிரி, தென் பெண்ணை, வைகை, பொருனை முதலிய ஆறுகளுக்கும் கூட வேறு இடத்தில் மழை பெய்தால் தான் நமக்கு தண்ணீர் கிடைக்கிறது. பெரிய அணைகள் கட்டி நீரைத் தேக்கி, பல லக்ஷக் கணக்கான ஏகர் சாகுபடி செய்ய வசதி செய்து கொடுப்பதைப்பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். மேற்கொண்டு, கிராமங்களில் சிறு பாசன திட்டங்களுக்கு ஏற்பாடு செய்ய இந்த நிதி வருஷத்திலேயே சேர்த்து இருப்பதைப்பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

பங்குனி மாத மழையை கோடை மழை என்று சொல்வது வழக்கம். கோடை மழை எப்பொழுதுமே இடியுடன்தான் இருக்கும். "எங்கே வானம் பொய்க்குது . . . என்பது நல்லதங்காள் கதை". பண மழை பெருக்கு எடுத்து ஓடிக்கொண்டிருக்கும் நேரத்தில் ஒரு பெரிய இடியும் விழுந்திருக்கிறது. அது விவசாயிகளுடைய தலையில் விழுந்து இருக்கிறது. என்ன நேருமோ என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்த காலத்தில் இது விழுந்திருக்கிறது. தனக்கு வேண்டிய வசதிகளை தானே செய்துகொண்டு, கஷ்டப்பட்டு உழுது, உழைத்து, தன்னுடைய குடும்பத்தையும், ஆடுமாடுகளையும் காப்பாற்றிக்கொண்டு வரும், கிராமத்தில் உள்ள விவசாய மக்களுக்கு ஒரு 3,000 ரூபாய் வருமானம் வந்தால் அவர்களுக்கும் வரி போட வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். விவசாயி என்பவன் ஒரு நல்ல காமதேனு, காரும் பசு, நமக்குப் பால் வேண்டும்போது கன்றை அவிழ்த்து பசுவிடம் விட்டுவிடுகிறோம். அந்தக் கன்று பசுவின் மடியை இரண்டு தரம் முட்டினால், தன்னுடைய கன்றுக்கு பால் கொடுக்கவேண்டுமென்று, பாலை காம்பின் மூலமாக சுரந்து கொடுக்கிறது. சிறிது நேரத்திற்கு எல்லாம் கன்றை அப்பால் கட்டிவிட்டு நாம் பாலை கறந்துகொள்கிறோம். நாம் தினம், தினம் இப்படியே பாலை கறந்து கொண்டிருந்தாலும், இந்த முட்டாள் பசுவானது கன்றுக்கு பால் கொடுக்க வேண்டும் என்று நினைத்து பாலை சுரந்து கொண்டிருக்கிறது.

விவசாயிகளுக்கு சிறு சலுகைகளைக் காட்டி அவர்களிடத்திலிருந்து நாம் எவ்வளவு தூரம் வசூலிக்க முடியுமோ அவ்வளவு தூரம் வசூலிப்பதானது பசுவை ஏமாற்றி பாலைக் கறப்பதுபோல்தான். விவசாயி என்ற பசுவை நல்லபடியாக வளர்த்து, பால் உண்டாகச் செய்து, கன்றுக்கு கொடுக்க வேண்டியதைக் கொடுத்து மீதத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டால் இந்த பசுவும் நல்லபடியாகவே கறந்து கொண்டிருக்கும். "கறப்பது கால்படி உதைப்பது பல் உடைய" என்றில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அரசாங்கம் இன்றைக்கு நிச்சயமாக விவசாயிகளுக்கு எந்த விதத்திலும் சலுகை காட்டவில்லை. ஐந்து அல்லது பத்து மைல் நடந்து ஆஸ்பத்திரிக்குப் போனால் அங்கு மருத்துவ வசதி கிடைப்பதில்லை. அவர்களுடைய பிள்ளைகளுக்கு படிக்க வசதி இல்லை. ஐந்து ரூபாய் முதல் 500 ரூபாய் வரை சம்பளம் வாங்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு இன்றைக்கு பலவித சௌகரியங்கள் செய்யப்பட்டு இருக்கின்றன. அவர்களுக்கு வைத்திய வசதி இருக்கிறது. அவர்களுடைய குழந்தைகளுக்கு படிப்பு வசதி இருக்கிறது,



6th March 1958] [Sri S. Ramasami Naidu]

வீட்டு வசதி இருக்கிறது. கிழடு ஆகிப் போய்விட்டாலும் அவர்களுக்கு பென்ஷன் போன்ற வசதிகள் இருக்கின்றன. ஆனால் விவசாயிகளுக்கு என்ன வசதி இருக்கிறது என்று நான் கேட்கிறேன். கொஞ்சம் கஞ்சியும் ஒரு படி தண்ணீரும் குடித்துவிட்டு, காலையிலிருந்து மாலைவரை, அவன் வெயில் என்றும் மழை என்றும் பாராமல் கஷ்டப்படுகின்றான். அவனுக்கு கட்டிச்சோறு போட நாம் முயற்சி செய்ய வேண்டும். அவனுடைய பிள்ளைகளோ, ஐந்து நாட்கள் ஆனாலும் இருக்கும் ஒரே உடையை மாற்றி மாற்றி அணிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

நல்ல காரில் இரண்டு பேரை முன்னால் வைத்துக்கொண்டு போகும் போது அந்த கார் மரத்தில் முட்டிக்கொண்டால், இறந்தவர்களுக்கும் பணம் கிடைக்கிறது. ஓட்டிச் சென்றவனுக்கும் பணம் கிடைக்கிறது. இன்ஷூரன்ஸ் திட்டத்தின் மூலமாக புது கார் வாங்கிக் கொள்ளவும் வசதி இருக்கிறது. ஆனால் விவசாயிக்கோ எந்த விதமான வசதியும், பாதுகாப்பும் இல்லை. பத்து ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்திருக்கும் ஒருவனுக்கு, அவனுடைய தானியங்களை பாதுகாத்துக்கொள்ள தானிய இன்ஷூரன்ஸ் திட்டம் இல்லை. சக்தியற்ற பெற்றோர்கள் வீட்டிலிருக்க, இரண்டு வருஷங்களுக்கு ஒரு குழந்தை தவறாமல் பெற்றெடுக்கும் மனைவியும் ஆறு மாதம் முதல் எட்டு மாதம் வரை ஒரு வேலையும் செய்ய முடியாமல் வீட்டிலிருக்க, விவசாயி ஒருவன் மட்டும் எத்தனை காலத்திற்கு உழைத்துக் கொண்டிருக்க முடியும்.

ஆசிரியர் வேலைக்குப் போகும் ஒரு பெண்ணுக்கு பிரசவ காலத்தில் லீவு கொடுக்கிறார்கள். அவர்களுக்கு வைத்திய வசதி இருக்கிறது. பிள்ளைகளுக்கு படிக்க வசதி இருக்கிறது. ஆனால் உழைத்துக் கொடுக்கும் ஏழை விவசாயிக்கு இந்த வசதிகள் எல்லாம் எங்கே இருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்தால் அவர்கள் உற்சாகமாக பயிர் செய்து உற்பத்தியைப் பெருக்கவும் உபயோகமாக இருக்கும். அதற்கான நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்குத் தக்கபடி அவர்களுடைய வருமானத்தை உயர்த்திக்கொடுக்க வேண்டும். மூவாயிரம் ரூபாய்க்கு மேல் வரி போடுவது என்றால் விவசாயிக்கு அதிகப்படியாக உற்பத்தி செய்ய உற்சாகம் ஏற்படாது. இன்றைய தினம் நிலத்தை பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது வருமானத்திற்கு வரி போடுவது என்றால் நிச்சயமாக தங்களுடைய வருமானம் கிடைக்காது என்று நினைத்துக்கொண்டு மகசூலை அதிகப்படுத்த முற்படமாட்டார்கள். அவர்களை கிராமங்களிலும் கிராம முன்சீப்களிடத்திலும், இன்ஸ்பெக்டர்களிடத்திலும் பிடித்துக் கொடுத்து முட்டவிடக்கூடாது. அவர்களிடத்தில் அவர்கள் அணுகுவதற்கு பயத்தை உண்டாக்கக் கூடாது. இந்த நிலையில் விவசாயிகளை பாதிக்கக்கூடிய அளவில் ஏன் வரி விதிக்க வேண்டும். இப்படிப்பட்ட சட்டம் பின்னால் வரப்போகிறது என்று அவர்கள் ஏற்கெனவே பயந்து கொண்டிருக்கிறார்கள். சட்டம் வந்தால் என்னவாகுமோ என்று விவசாயிகள் மனம் உடைந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு சந்தோஷம் உண்டாகும் வகையில் இந்த விவாதத்திற்கு பதில் சொல்லும்போது சர்க்கார் விவசாயிகளை பயமுறுத்தவில்லை அவர்களிடத்திலிருந்து கஷ்டப்படுத்தி வரியை வாங்கப்போவதில்லை என்று சொல்ல வேண்டும். பூவின் வாசனையை கையில் வைத்துத்தான் நுகர வேண்டுமேயொழிய அதைக் கசக்கி நுகரக்கூடாது. விவசாயிகள் பூ என்கின்ற பொன் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளுகிறேன். ஆகவே விவசாயிகளை அதிகமாக கஷ்டப்படுத்தக்கூடாது. அதை அவனால் பொறுக்க முடியாது. பொறுக்கவும் மாட்டான், அவனைக் கஷ்டப்படுத்துவதில் நியாயம் இல்லை என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER** : அடுத்த அங்கத்தினர் பேசுவதற்கு முன்னதாக அங்கத்தினர்களுக்கு ஒரு விஷயத்தைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

வரும் திங்கட்கிழமை முதற்கொண்டு சட்டசபை காலை 8½ மணி முதல் பிற்பகல் 1½ மணி வரையில் உட்காரவேண்டும் என்று பிஸினெஸ் அட்வைசரி கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி தனியாக தெரிவிக்கப்படும். அடுத்ததாக கனம் பி. வேதமாணிக்கம் அவர்கள் பேசுவார்.

**Sri P. VEDAMANICKAM:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள வரவு செலவு திட்டமானது மிகவும் வரவேற்கத்தக்க நிலைமையில் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் நம்முடைய நாடு விவசாய நாடு. விவசாயத்தை நம்பி வாழும் நாட்டிலுள்ள விவசாயத்தைப் பெருக்குவதற்கு ஏறக்குறைய மூன்று கோடி 77 லட்சம் ரூபாய் விவசாயக் கருவிகளை வாங்குவதற்கும், விவசாயத்திற்கு வேண்டிய உரத்தை வாங்கி சப்ளை செய்வதற்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் விவசாயக் கருவிகளையும் உரத்தையும் கொடுக்கும்போது சர்க்கார் அலுவலகம் அவைகளை காலா காலத்தில் விவசாயிகள் நன்மை அடையும் வகையில் கொடுப்பது இல்லை. நாம் எவ்வளவோ நன்மைகளைச் செய்தாலும் அவைகள் மக்களுக்கு போய் சேரும்போது அவைகளை அவர்கள் நன்மைகளாக கருத முடியவில்லை. நாம் சட்ட சபையில் அவர்களுக்கு என்று எவ்வளவு நன்மை அளிக்கக்கூடிய சட்டங்களைச் செய்தாலும் அவைகளை அமுல் நடத்தும்போது அவைகள் அவர்களுக்கு நன்மையாக இல்லை, குறை கூறும்படியான அளவிற்குத்தான் இருக்கிறது. அதற்குக் காரணம் அதை அமுல் நடத்தும் அரசாங்க யந்திரங்கள் சரியாக வேலை செய்யாதது தான். உண்மையில் காங்கிரஸ் ஆட்சியில் மக்களுக்கு நன்மை செய்யக் கூடிய அநேக திட்டங்கள் இருக்கின்றன. அந்த திட்டங்கள் எல்லாம் மக்களுக்கு செல்லும்போது அவைகள் நல்ல முறையில் செய்ய முடியவில்லை. சாதாரணமாகச் சொல்லுகிறேன். எங்கள் தாலுகாவில் சென்ற ஆறு மாதங்களுக்கு முன்னதாக நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு சர்க்காருடைய தரிசு நிலங்களை பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று டிபுடி தாசில்தாரையும், ரிவினியூ இன்ஸ்பெக்டரையும் கேட்டுக்கொண்டும் இன்னும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. செப்டம்பர் மாதம் கொடுத்தது இப்பொழுது பிப்ரவரி மாதமாகியும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. இந்த ஆறு மாத காலத்திற்குள் சுமார் 6,000 விண்ணப்பங்கள் வந்திருக்கலாம். ஆனால் தாசில்தார்களுக்கு ஒரு டார்ஜெட் வைத்திருப்பதாகத் தெரிய வருகிறது. அதாவது மாதத்திற்கு 250 பேருக்காவது கொடுக்க வேண்டும் என்று. அந்த முறையில் இந்த ஆறு மாதங்களில் சுமார் 1,200 விண்ணப்பங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இன்னும் 200 விண்ணப்பங்களுக்குக்கூட கொடுக்கவில்லை என்றால் இந்த அரசாங்கத்தினுடைய பணம் எவ்வளவு ஆயிரம் ஆகிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அரிஜனங்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று 235 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம். ஆனால் எங்கள் மாவட்டத்தில் வீடில்லா ஏழை ஹரிஜனங்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். அவர்கள் சுமார் எட்டு வருஷங்களாக வீட்டு மனைக்கட்டுகள் வழங்கப்பட வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டும் இது வரையிலும் அவர்களுக்குக் கொடுத்ததாக தெரியவில்லை. நான் எம்.எல்.ஏ.-வாக இருப்பதால் என்னிடம் வந்து அநேக ஹரிஜனங்கள் தங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று குறை கூறுகிறார்கள். இதைப்பற்றி பல முறை நான் மந்திரிகளிடத்திலும் அந்த நிர்வாக அதிகாரிகளிடத்திலும் பேசியிருக்கிறேன். இந்த நிலைமைக்குக் காரணம் அங்குள்ள நிர்வாக யந்திரம் சரியாக வேலை செய்யாததன் காரணம்தான். இப்படி நிர்வாக யந்தரங்கள் சரியாக வேலை செய்யாவிட்டால் அரசாங்கத்திற்கு இழுக்குத்தான் வர நேரிடும்.

அடுத்தப்படியாக எனது மாவட்டத்தில் மிகவும் பிற்போக்காகவுள்ள சில இடங்களை முற்போக்காகக் கொண்டு வருவதற்கு தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டு வந்து ஏறக்குறைய



ஆறுமாத காலமாகிறது. எங்கள் நல்லூர் தொகுதியில் அவைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆறு மாத காலத்தில் என்ன வேலை செய்திருக்கிறார்கள், எவ்வளவு பணம் செலவு செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால் சுமார் 40 ஆயிரம் ரூபாய் செலவாகி இருக்கிறது. ஆனால் வேலை ஒன்றும் நடைபெறவில்லை என்று சொல்ல வேண்டும். இந்த 40 ஆயிரம் ரூபாயும் எதற்கு செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று கேட்டால் அங்குள்ள சிப்பந்திகளுடைய சம்பளத்திற்கும், கார் பெட்ரோலுக்கும்தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. வேறு ஒரு வேலை கூட நடைபெறவில்லை. அங்குள்ள அதிகாரிகளுடைய நிலைமை அப்படி இருக்கிறது. அதனால் அங்குள்ள மக்கள் மிகவும் வருத்தப்படுகிறார்கள். ஆறு மாதமாகியும் ஒரு கிராமத்தில் ஒரு வேலையும் நடைபெறவில்லை யென்றால் அந்த திட்டத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. சட்ட மன்றம் திட்டத்தைக் கொண்டு வருகிறது. ஆனால் அதை நிறைவேற்றும் அதிகாரிகள் சரியான முறையில் அதை நிறைவேற்றுவதாகத் தெரியவில்லை. மக்கள் திட்டங்களை வரவேற்றாலும் நிர்வாக யந்திரங்களின் வேலையை அவர்கள் வரவேற்கவில்லை. அங்குள்ள அதிகாரிகளின் மனப்பான்மை அந்த நிலைமையில் இருக்கிறது. ஆகவே அதை திருத்தி அமைக்க மந்திரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக போலீஸ் இலாகாவை எடுத்துக்கொண்டால் அங்குள்ள போலீஸ் உத்தியோகஸ்தர்கள் லஞ்ச ஊழலில் மிகவும் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏழை மக்களையும் குற்றமில்லாதவர்களையும் அடித்துத் துன்புறுத்தி வருகிறார்கள். மனிதனை மனிதனாக நடத்தக்கூடிய ஜனநாயக நாட்டில் அவர்கள் மக்களை அப்படி நடத்தாமல் மிருகங்களைப்போல் நடத்துகிறார்கள். இப்படி மக்களை நடத்தினால் ஜனநாயக ஆட்சிக்கு ஒரு இழுக்கு ஏற்பட்டதாகக் கருதப்படும். எங்கள் வட்டாரத்தைப் பொறுத்தவரையில் கனம் மந்திரி அவர்களுக்கு ஒன்றை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்கள் தொகுதியிலுள்ள சா. ஏநிதல் சேரியை தீ வைத்து கொளுத்தி விட்டார்கள். அதைப்பற்றி நானும் அந்த ஜில்லா வெல்பேர் ஆபீசரும் வேப்பூர் போலீசுக்கு ரிப்போர்ட் செய்தோம். ஆனால் அங்குள்ள சப்-இன்ஸ்பெக்டர் அந்த இடத்திற்கு உடனே வராமல் ஒன்றிரண்டு நாட்கள் கழித்துத்தான் வந்தார். அப்படி வந்து பார்த்துவிட்டு அங்கு ஒன்றும் நடக்கவில்லை என்று சொல்லிவிட்டு அந்தக் கேசையும் தள்ளிவிட்டார். இப்படி அந்த நிர்வாகத்தில் ஊழல் இருக்கிறது. அந்த நிர்வாகத்திலுள்ள அதிகாரிகள் நல்ல முறையில் வேலை செய்வதாக இல்லை. சட்ட மன்றம் எவ்வளவோ சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதை அமுல் நடத்தும் அதிகாரிகளும் நிர்வாக யந்தரங்களும் சரியான முறையில் அதை அமுல் நடத்துவதில்லை. பெரம்பலூர் தாலுகாவில் சின்னார் திட்டம் என்று ஒன்று இருக்கிறது எங்கள் தாலுகாவில் வெல்லிங்டன் ரிசர்வாயர் என்று ஒன்று இருக்கிறது. அது ஒரு பெரிய திட்டம். நாற்பது வருஷங்களுக்கு முன்னால் அதற்கு ஆறு லட்சம் ரூபாய் செலவாகும் என்று சொல்லப்பட்டது. இது வரையிலும் அதை எடுத்து நடத்தவில்லை. அதில் இப்பொழுது தண்ணீர் நிற்க இடம் இல்லை. கரைகள் பாழடைந்து போய் விட்டன. அதனால் தண்ணீரை அதிகமாக தேக்க முடியவில்லை. நல்ல மதகு இருக்கிறது. அந்த திட்டத்தை இந்த 1958-ம் வருஷத்தில் எடுத்துக் கொள்ளுவார்கள் என்று எதிர் பார்த்தோம். ஆனால் அது இடம் பெறவில்லை. அதை அடுத்த வருஷத்திலாவது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்குள்ள ஏரியை ஆழப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. அப்படி ஆழப்படுத்தி கரையை பலப்படுத்தி அதன் மூலம் தண்ணீரை நிரப்பி வைத்தால் அதன் மூலம் சுமார் ஐயாயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி கொடுக்கலாம். அந்த திட்டத்திற்கு சாங்ஷன் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மருத்துவத்தைப்பற்றி சென்ற ஆண்டில் இந்த சட்டசபையில் பேசியிருக்கிறேன். எங்கள் தாலுகாவிலுள்ள ஆஸ்பத்திரியை 1958-ம்ஆ

எப்ரல்மீ 1உ முதற்கொண்டு சர்க்கார் ஆஸ்பத்திரியாக எடுத்துக்கொள்ளப் போவதாக் சொல்லப்படுகிறது. அதற்கு சர்க்காருக்கு நான் நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்கள் தொகுதியில் ஏறக்குறைய 150 சதுர மைலுக்கு ஆஸ்பத்திரியே இல்லை. நல்லூர் தொகுதியில் 15 மைல் ரேடியஸ்ஸுக்கு கூட இல்லை. ஆகையால் வேப்பூரில் ஒரு ஆஸ்பத்திரியை அமைத்துக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதைப்பற்றி மந்திரியினிடமும் பேசியிருக்கிறேன். அடுத்த ஆண்டிலாவது அங்குள்ள மக்களுக்கு ஆஸ்பத்திரியை அமைத்துக்கொடுத்து அங்குள்ள மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வி இலாகாவைப்பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. கல்விக்காக 87 லட்சம் ரூபாய் அதிகமாக கொடுக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே வரவேற்கத் தக்கது. ஆனால் பட்ஜெட்டைப் பார்க்கும் போது அதில் ஏழை மாணவர்களுக்கும் அனாதை மாணவர்களுக்கும் தாய் தகப்பன் இல்லாதவர்களுக்கும் இலவசமாக படிக்க வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு மாதம் தோறும் எட்டு ரூபாய் மானியமாகக் கொடுத்துக்கொண்டுவருகிறார்கள். இந்த எட்டு ரூபாயை வைத்துக் கொண்டு அவர்கள் மாதம் பூராவிலும் சாப்பிட முடியாமல் இருக்கிறார்கள். மூன்று மாதத்திற்கு முன்னால் ஒரு மாநாடு கூட்டி கல்வி மந்திரி அவர்கள் தலைமையில் இப்பொழுது கொடுக்கப்படும் எட்டு ரூபாய் போதாது இன்னும் அதிகப்படியாக 15 ரூபாயாவது கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். அதற்கு செவி சாய்க்கிறேன் என்று கனம் மந்திரி அவர்களும் வாக்களித்தார். அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த வருஷத்தில் அப்படிப்பட்ட அனாதை விடுதிகளுக்கு அப்படி உயர்த்தியதாகத் தெரியவில்லை. அடுத்த வருஷத்திலாவது அதை உயர்த்தி ஏழை மாணவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

3-20 p.m. **Sri S. NAGARAJA MONIGAR**: கனம் சபாநாயகர் அவர்களே, அவை முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை நானும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். வரவேற்பதற்கு அனேக காரணங்கள் உண்டு. சிலர் இதை எதிர்த்தாலுங்கூட, இத்யாதி காரணங்கள் பல இருப்பதைப்பற்றி சொல்ல வேண்டிய அவசியம் கூட கிடையாது. இருப்பினும் இக்காரணங்களைப்பற்றி பின்னர் பேசிக்கொள்ளலாம். யானும்கூட இந்த வரவு செலவுத் திட்டம் இன்னும் கொஞ்சம் விருவிருப்பாக இருக்கக்கூடாதா என்று எண்ணியது உண்டு. இன்னும் கொஞ்சம் வரிகள் அதிகமாகப் போட்டு, யார் யாருக்குப் போடவேண்டுமோ அவர்களுக்குப் போட்டு—போடக் கூடாதவர்களுககுப் போடச் சொல்லவில்லை, சொன்னாலும் எடுபடாது, சொல்வதும் சரியல்ல, யாரும் அப்படிச் செய்யவும் மாட்டார்கள்—சற்று தீவிரமான திட்டங்களைத் தீட்டி, இந்த நாட்டினுடைய் முன்னேற்றத்தை இன்னும், கொஞ்சம் துரிதப்படுத்தலாகாதா என்று நானும் நினைப்பது உண்டு. ஏனென்றால், சோஷலிச சமுதாயத்தைச் சீக்கிரம் அடைய வேண்டுமென்ற ஒரு உறுதியை நாம் இந்தச் சென்னையிலேதான் எடுத்துக் கொண்டோம். ஆகவே, இந்த லக்ஷியத்தை அடையும் பொறுப்பு வெகு தூரம் இருக்கிறது. இன்று கூட மைலப்பாபூரிலேயும், அடையாரிலேயும் போய்ப் பார்த்தால் அங்கு இருக்கும் மாட மாளிகைகளிலே வாசம் செய்பவர்களையும் காண்கிறோம். பக்கத்திலே சிறிய குடிசைகளிலே வாசம் செய்கிறவர்களையும் காண்கிறோம். இவ்விரண்டுக்கும் உள்ள வித்தியாசம் மிக மிக அதிகம். அந்த வித்தியாசத்தை எவ்வளவு சீக்கிரம் நாம் குறைத்து வைக்க வேண்டுமோ அவ்வளவு குறைக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஏற்கெனவே, 20 ஆண்டுகளுக்கு முன்பே, தீவிரமான, புரட்சிகரமான சட்டங்களை நாம் கொண்டுவந்திருக்கிறோம், கடன் சமரச சட்டத்தை அப்பொழுதே கொண்டு வந்தோம். பத்து ஆண்டுகளுக்கு முன்னால்கூட,





தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, மிட்டா ஒழிப்பு இவைகளுக்கான தீவிர சட்டங்களை நாம் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே, நமது அமைச்சர்கள் ஏதோ பயப்படுகிறார்கள் என்று சொல்லமுடியாது. புரட்சிகரமான சில மாறுதலை இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஏன் கொண்டுவரவில்லை என்றுதான் சற்று எனக்குக்கூட ஒரு சந்தேகம். இருப்பினும், சற்று நிதானமாகச் செல்வது மிகவும் நன்று. வெகு வேகமாகச் சென்று நாம் அடைய முடியாத புகழையும் கீர்த்தியையும் அடைந்திருக்கிற இந்த நேரத்திலே, அந்தப் புகழுக்கு இழுக்கைத் தேடிக்கொள்ளக்கூடாது என்று நான் நம்புகிறேன். இந்த மந்திரி சபை அப்படித்தான் செய்திருக்கிறது. வாஸ்தவமாகவே, எங்கும் காணாத புகழை இந்த நாடு அடைந்திருக்கிறது. அதைப்பற்றி மறுத்துப் பேசினால் அது ஒவ்வாது, செல்லாது, நியாயமும், தருமமும், நீதியும் ஆகாது. சுயராஜ்யம் கிடைக்காது என்று எண்ணிக்கொண்டிருந்த எதிராளிகளோடு சேர்ந்துகொண்டு, அவர்கள் பக்கம் இருந்தால் லாபம் கிடைக்கும் என்று எண்ணிக்கொண்டு இருந்து ஏமாந்துபோன சிலர் இருந்த காலத்திலும், இந்த நாட்டிலே மகாத்மா காந்தியினுடைய தலைமையிலே எதிர்பாராத விதமாக சுயராஜ்யத்தைப் பெற்றோம், அன்று அதற்காக அரும்பெரும் சாதனைகளைச் செய்தோம் என்று காங்கிரஸ்காரர்கள் கட்சி பேசினால், அதைத் தவறு என்று சொல்லமுடியாது. இந்த நாடு பூராவும் சேர்ந்து பெற்றது என்று வேண்டுமானால் சொல்லுங்கள் ; ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால், அடிமைகளாகவே இருக்கின்றோம் என்று எண்ணிக்கொண்டிருந்தவர்களுக்கு இந்தப் புகழ் சேராது. இந்த அடிமைத்தனம் நீக்கப்பட்டதானது மகத்தான சாதனை.

அதற்கப்புறம், பத்து ஆண்டுகளாக, கிடைத்த சுதந்திரம் பேணி வளர்க்கப்பட்டிருக்கிறது. எத்தகைய சந்தர்ப்பத்திலே ? இதுபோன்ற சுயராஜ்யம் பெற்ற நாடுகளை எண்ணிப் பார்க்கவேண்டும். கோவணம் கட்டிக்கொண்டிருந்த இந்த நாட்டில் 28 கோடி மக்களுக்கு வாக்குறுதி ஏக காலத்தில் வாக்குரிமை அளிக்கப்பட்டது என்பது உலகத்திலேயே வியக்கத்தக்கது. சிறந்த முறையில் மூன்று நான்கு தேர்தலை நடத்தி, கிடைத்த சுதந்திரத்தைப் பேணி வளர்த்துக் காத்துக்கொள்வதோடு மாத்திரம் நில்லாமல், அன்னியர்களும் இங்கு வளரும் ஜனநாயகத்தைப் பார்த்து வியக்கத்தக்க முறையிலே ஆட்சியை நடத்திவருகிறோம். வெளிநாட்டாருடைய படாடோபத்திற்கு மத்தியிலும் இந்த சுதந்திரத்தைப் பேணி வளர்த்தோம் என்பது அல்ல. அதற்குவேண்டிய வெளிநாட்டுக் கொள்கை தனியாக கையாளப்பட்டு, நமது உயர்தகு மாணிக்கம் போன்ற ஜவஹர்லால் நேரு அவர்கள், தன் ஆயுளையே நாட்டுக்காக ஒப்பணம் வைத்து, தன் மனைவி, தாயார், தந்தை ஆகிய எல்லோரையும் நாட்டுக்கு அர்ப்பணம் செய்துகொண்டு இருக்கக்கூடிய அந்த மாணிக்கத்தால், அவர் போன்றவரால், நாம் வெளிநாட்டு மோதல்களுக்குச் சிக்காமல், மற்ற வல்லரசுகள் ஏதோ புத்தியில்லாமல் சண்டையிட்டுக் கொள்ளாமல் இருக்கும் பொருட்டு, அவர்களுக்கும் பஞ்சசீலத்தைப் போதித்து, இந்தவிதமாக பிறநாடுகளிலிருந்து மட்டும் நம் நாட்டுச் சுதந்திரத்தைக் காத்துக்கொள்வதோடு மட்டும் அல்லாமல், உள்ளேயிருந்து "உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்று சொல்வதுபோல் கரையான்களும், செல்லுகளும், மூட்டைப்பூச்சுகளும், ஐந்தாம் படை வேலை செய்கிறவர்களும், ஜாதி வேண்டாம் என்று ஒருபுரத்தில் சொல்லி, இன வேற்றுமை, ஜாதி வேற்றுமை, சொல் வேற்றுமை இவையெல்லாம் விஷம்போல் மக்களிடையே கக்கி, புகுத்தி, தங்கள் காரியங்களைச் சாதித்துக்கொள்வதற்காக, நாடு எக்கதியானாலும் சரி, மனிதனுடைய சக்தி எவ்வகையில் சிதறுண்டு போனாலும் சரி, கவலையில்லை என்ற முறையில் சில சமயங்களில் சட்டசபைக்கு இழுக்கு தேடித்தரும் வகையிலும் இந்த இடத்தில் எல்லாம் கூட பேதப்படுத்திப் பேசிச் சொல்லுகிற ஒரு உள்நாட்டு நிலையிலிருந்தும் சுதந்திரத்தைப் பேணி வளர்த்து வருகிறோம். ஆகவே, அது உபரி பட்ஜெட்டாக இருந்தாலும் சரி, அதைப்பற்றி அக்கறை இல்லை. ஏதோ ஒரு பட்ஜெட் என்று போட்டு நாட்டை நடத்திக்கொண்டு போவோம் என்ற முறையில் பெருமித ஆனந்தம் அடைகிறோம். எங்களுக்கு மாத்திரம்

[Sri S. Nagaraja Monigar] [6th March 1958

அல்ல, எல்லா மக்களுக்கும் சேர்த்து, இதை நல்லவகையில் ஏற்று இந்த நாட்டை இன்னும் பலவகையிலே முன்னேற்றுவதற்கு எல்லாத் தோழர்களையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். ஏதோ தெரிந்தோ தெரியாமலோ அல்லது ஏதோ சில குறுகிய காரணங்களுக்காகவோ நாமும் என்றைக்கு இந்த ஆட்சிப் பீடத்தில் உட்காரலாம், அதற்கு என்ன வழி தேடுகிறது என்ற முறையில், தவறான வழியில் செல்வார்களானால், அது தமிழுக்கோ, தமிழ்நாட்டுப் பண்பாட்டுக்கோ, எந்த நாட்டுப் பண்பாட்டுக்கோ, மனித வர்க்கத்திற்கோ கொஞ்சங்கூட உகந்ததாகாது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாம் சுதந்திரம் அடைந்து இங்கு எதிர்பாராத வகையில் பலர் உட்கார்ந்திருக்கிறார்கள்; பலவிதமான கேள்விகளும், பலவிதமான பேச்சுக்களும் ஆடம்பரமாகப் பேசி வருகிறார்கள்.

SRI A. V. P. ASAITHAMBI : எதிர்பாராத வகையில் இங்கு வந்து உட்கார்ந்திருப்பதாக கனம் அங்கத்தினர் பேசுகிறார். நாங்களும் சட்ட பூர்வமான தேர்தல் மூலமாகத்தான் இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறோம்.

MR. SPEAKER : உங்களைத்தான் கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார் என்று உங்களுக்கு எப்படித் தெரியும் ?

SRI A. V. P. ASAITHAMBI : 'எதிர்பாராத வகையில் சில அங்கத்தினர்கள்' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

MR. SPEAKER : இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல.

SRI S. NAGARAJA MONIGAR : என்னுடைய மூதாதையரும் நானும்கூட எதிர் பார்க்கவில்லை. என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். ஆகவே, இம்மாதிரியான ஒரு ஆனந்தம் அடைகிறோம் என்பதை நீங்கள் மறுக்கமுடியாது. இதற்கு ஆதாரமாக 'தாலியைப் பறி கொடுத்த, தலையைப் பறி கொடுத்த,' இலங்கையிலிருந்து வந்த அகதிகள் என்று எல்லாம் பேசுவது இந்த உள்ளத்திற்கு ஒப்பாது, எண்ணிப் பாருங்கள். வெள்ளை உள்ளம் வேண்டும் என்று சொல்வார்கள். நேருஜி வந்து இறங்கினார்; மாணிக்கம் போன்ற அவர், எந்த தேசத்தவரும் அவருடைய வருகைக்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கும் அவர், சென்னை வந்துபோன ஒரு வேளையில், தென்னிந்தியாவில் நடந்தது மிக மிக வருந்தக்கூடிய நிலைமை.

SRI A. GOVINDASAMY : கனம் அங்கத்தினருக்கு வெள்ளை உள்ளம் இருக்கிறதா என்று கேட்கிறேன்.

MR. SPEAKER : நீங்கள் பேசும்போது வேண்டுமானால் பதில் கொடுங்கள்.

SRI S. NAGARAJA MONIGAR : பரந்த மனம் வேண்டுமென்று நான் வேண்டுகிறேன். எனக்கு இல்லாமல் இருக்கலாம். அந்த மாதிரி சொல்கிற உங்களுக்கு இருக்கவேண்டும்.

MR. SPEAKER : "நீங்கள்," "உங்கள்" என்று சபையில் பேசினால், அவ்வார்த்தைகள் சபாநாயகரைப் பார்த்துச் சொன்னதுபோல் ஆகும் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : "நீங்கள்," "உங்கள்" என்று நான் உபயோகித்த பதங்களை "அவர்கள்" என்று கொள்ள வேண்டுமென்று நான் மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



6th March 1958]

MR. SPEAKER : "நீங்கள், உங்கள்" என்று சொன்னால், என்னைப் பார்த்துச் சொன்னதுபோல் இருக்கும்.

SRI S. NAGARAJA MONIGAR : உங்களை நான் குறிப்பிடவில்லை. உங்களுக்குப் பரந்த மனம் இருந்ததால்தான் என்னைப் பேச விட்டீர்கள். அம்மாதிரி ஒரு பரந்த நோக்கம் வேண்டுமென்று சகோதர அங்கத்தினர்களை சபாநாயகராகிய உங்கள் மூலமாக நான் வேண்டிக் கொள்கிறேனேயல்லாமல் தூய உள்ளம், பரந்த வெள்ளை உள்ளம் இருக்கிறபோது அதில் கருப்பு சேர்ந்துவிடக் கூடாது, கருப்பு அடைய விடக்கூடாது. வெள்ளை உள்ளம் படைத்தவர்களாக இருக்கவேண்டுமே தவிர அதில் கருப்பு கலந்துவிடக்கூடாது. சென்ற முறை அவர்கள் பேசும்போது மனிதனுடைய வாழ்க்கை நிலை உயரவில்லையென்று சொன்னார்கள். 3-30 p.m. இப்போதும் சொல்கிறார்கள். எதற்காகச் சொல்கிறேன். மக்களுடைய வாழ்க்கைத்தரம் எவ்வகையில் உயர்ந்து கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் காண மறுக்கிறார்கள். கண்ணிருந்தும் காணமாட்டேன், காது இருந்தும் கேட்கமாட்டேன், வாயிருந்தும் உண்மை நிலையைப் புரிந்து கொள்ளப் பேசமாட்டேன் என்பவர்களுக்கு எப்போதும் நல்லது தெரியாது. நாட்டு மக்களுடைய நலனில் பங்குகொள்ள ஒத்துழைப்பைத் தாருங்கள் என்று அவர்களுடைய கட்சித் தலைவரை நான் கேட்டுக்கொண்டேன். அவர் பேசும்போதுகூட என்னை எல்லோரும் வலிய அழைக்கிறார்கள் என்று சொன்னார். அவர் உள்ளத்தைப் பற்றி விட்டேன் என ஆனந்தம் அடைந்தேன். நாம் எல்லோரும் ஒன்றுதான். மக்களுடைய தொண்டிலே நம் எல்லோருக்கும் இருக்கும் அக்கறையும் ஒன்றாக இருக்க வேண்டும். நாட்டு நன்மையைக் கருத்தில் கொண்டு உழைக்கவேண்டும். துரதிருஷ்ட வசமாக நமது ராஜ்ய முதல் அமைச்சராகவே இருந்து பணியாற்றிய ஸ்ரீ ராஜாஜி அவர்கள் இந்த சிக்கலில் இறங்கியிருக்கிறார்.

MR. SPEAKER : இந்தச் சபையில் இல்லாதவர்களை இப்போது வீணாக விவாதத்தில் இழுக்கவேண்டாம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

SRI S. NAGARAJA MONIGAR : அவர்களைப் பற்றிப் பேசவில்லை. நமது ராஜ்யத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டும் என்கிறார்கள். மதுரைப் பக்கம் சென்றால் சௌராஷ்டிரர்கள். தஞ்சை பூராவும் மஹாராஷ்டிரர்கள். சேலம், கோயம்புத்தூர் பூராவும் கன்னடியர்கள். வட ஆற்காடு பக்கத்தில் செங்கல்பட்டு தெலுங்குமார்கள். இப்படி தெலுங்கு கோமுட்டி செட்டியார்கள், நாயகர்கள், முஸ்லிம்கள் எனப் பலவகையான மக்கள் இந்நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களில் யாரை நம்பி தமிழ் நாட்டிற்கு அஸ்திவாரம் போடப்பார்க்கிறார்கள். பாரத நிர்வாகத்திலிருந்து இதைத் தனியாகப் பிரித்து தமிழ் நாடு என்றும், இதன் நிர்வாகத்தையே பிரித்துவிட வேண்டும் என்றும் சொல்வது பொருந்துமா ? (ஸ்ரீ ஆசைத்தம்பி : அதனால்தான் திராவிட நாடு என்று சொல்கிறோம்.) எப்படி இருந்தாலும் இப்படிப்பட்ட பிரிவினை மனப்பாவத்தை வளர்க்கக்கூடாது. அது நாட்டிற்கு நன்மை ஆகாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக வாழ்க்கைத்தரம் நன்றாக உயர்ந்திருக்கிறது என்றுதான் நான் சொல்வேன். எத்தனை சினிமாக்கள், எத்தனை டீக் கடைகள். சினிமாவுக்கு கதை எழுதுபவர்களே ஒரு கதைக்கு பத்தாயிரம், இருபதாயிரம் வாங்குகிறார்கள் என்றால் பணம் எங்கிருந்து வருகிறது ? மக்களுடைய வாழ்க்கைத்தரம் வெகுவாக உயர்ந்திருக்கிறது என்பதற்கு இது ஓர் சிறந்த அடையாளம் இல்லையா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகவே இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

SRIMATHI A. S. PONNAMMAL : கனம் மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்று நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக் கூடிய வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள்

சொல்ல ஆசைப்படுகிறேன். முதன் முதலாகப் பேசிய அங்கத்தினர் ஒருவர் இந்த வரவு செலவுத் திட்டம் சோஷலிஸ சமுதாய முறையில் அமையவில்லை, அதனால் இது வரவேற்கத்தக்கது அல்ல என்று ஆணித்தரமாகப் பேசினார்கள். அவர் வரவேற்காவிட்டால் பரவாயில்லை. நாட்டு மக்கள் எல்லோராலும் வரவேற்கக்கூடிய சிறந்ததொரு திட்டமாக இது அமைந்திருக்கிறது என்று மகிழ்ச்சியோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நாட்டு மக்களுடைய நன்மைக்காகப் போடப்பட்டிருக்கும் பல திட்டங்களுக்குச் செலவாகும் தொகைக்கு ஈடுகட்ட வருவாயை அதிகப்படுத்தும் உத்தேசத்துடன் 3,000 ரூபாய்க்கு மேல் விவசாய வருமானம் உள்ளவர்களுக்கு வரி விதிக்க அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள். இதை மிகவும் நல்ல முறையில் வரவேற்கவேண்டும். கனம் அங்கத்தினர் பேசும்போது தலைக்கு எற்ற குல்லாவைத் தைக்காது, குல்லாவுக்கு ஏற்றபடி தலையைச் சீவி விட நிதி அமைச்சர் அவர்கள் யோசித்திருக்கிறார்கள் போலிருக்கிறது, வரவு செலவுத் திட்டம் அவ்வகையில் அமைந்திருக்கிறது என்று சொன்னார்கள். காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாகத் தோற்றும் என்பார்கள். 1952-ம் ஆண்டில் தேர்தலில் வெற்றி பெற்று வந்தபோது எவை எவை யெல்லாம் நன்றாகத் தெரிந்ததோ அவை யெல்லாம் இன்று அவர்களுக்கு மஞ்சளாகத் தெரிகிறது என்றால் குற்றம் அவர்களுடையது அல்ல, கண்ணில் அணிந்திருக்கும் மஞ்சள் கண்ணாடியைப் பொறுத்துத்தான் இருக்கிறது. எனவே மஞ்சள் கண்ணாடியை எடுத்து எறிந்துவிட்டு நல்ல கண்ணாடி போட்டுப் பார்த்தாரானால் அவருக்கு நன்றாகத் தெரியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சில அங்கத்தினர்கள் கவர்னரே வேண்டாம் என்பதாகக் குறிப்பிட்டுப் பேசினார்கள். முன்பே இதுபற்றிய விவாதம் இச்சபையில் வந்திருக்கிறது. நிதி அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் அதற்குப் பதில் கொடுத்திருக்கிறார்கள். கவர்னர் அவர்கள் நமது ஜனநாயக நாட்டுக்கு ஏன் வேண்டும் என்பதை விளக்கியிருக்கிறார்கள். குறிப்பாக இன்றையதினம் ஆளும் கட்சியினர் அதிக எண்ணிக்கையில் இருக்கும் போது அவர்கள் கவர்னர் என்று ஒருவர் மாத்திரம் இல்லாவிட்டால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற ரீதியில் நிர்வாகம் போய்விடக் கூடும் என்பதை அங்கத்தினர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். மைனாரிடியாக இருக்கக்கூடிய எதிர்க் கட்சியினருக்கும் நியாயம் வழங்கவேண்டும் என்பதற்காக கவர்னர் அவர்கள் இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். உள்நாட்டில் முதுகுளத்தூர் கலவரம் போன்று ஏதாவது நடந்தால் உடனடியாக அவசரச் சட்டம் பிறப்பிக்கக்கூடிய அதிகாரம் கவர்னர் அவர்களுக்குத்தான் இருக்கிறது. மந்திரிகள் அந்தச் சட்டத்தைக் கொண்டு வர முடியாது. அவற்றை எல்லாம் யோசித்துப் பார்த்தால் கவர்னர் அவர்கள் நிச்சயமாக வேண்டும். ஆகவே இனி வீணாக கவர்னர் அவர்களைப் பற்றிய பேச்சை இந்தச் சபையில் எழுப்ப வேண்டாம் என்பதாக அங்கத்தினர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சில அங்கத்தினர்கள் பிரிவினை மனப்பான்மை கொண்டவர்களாக வடநாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது, ஆகவே தனித் திராவிட நாடு வேண்டும் என்பதாகப் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட பிரிவினை மனப்பான்மை நல்லது அல்ல. எந்தவகையில் நம் நாட்டுப் பணம் சுரண்டப்படுகிறது என்று கேட்கிறேன். வடநாடு தென்னாடு என்று பேசுகின்ற அங்கத்தினர்கள் வடநாட்டில் ஓடுகின்ற ஜீவநதிகளை தென்னாட்டிற்கும் கொண்டு வர இந்த அமைச்சரவை ஆலோசனை செய்யுமா ? என்று கேட்டால் நலமாயிருக்கும். எத்தனையோ கோடி ரூபாய்கள் அங்கிருந்து நமக்கு உதவியாக வந்திருக்கின்றன. எந்த அளவில் நம்முடைய பணம் அங்கே போகிறது என்று தெரிந்துகொள்ளாமல் பேசுவது சரியல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



உணவு உற்பத்தி அதிகமில்லை என்றும், இன்னும் கப்புச் சாதம் தானே போடுகிறார்கள் என்பதைப்பற்றியும் பேசினார்கள். அளவுச் சாப்பாடு போடுவதற்கான காரணத்தை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். கிராமப் பகுதிகளில் இரண்டணா, நாலணாவுக்குச் சாப்பாடு கொடுக்கவேண்டிய நிலையில் இருப்பதால் அவர்களுக்கு இரண்டணா, நாலணா வாங்கிக்கொண்டு சாப்பாடு கொடுப்பவர்கள் ஒரு கப், இரண்டு கப் என்று கொடுக்கிறார்கள். முழுச்சாப்பாட்டுக்குப் பணம் இல்லாதவர்களுக்கு இந்தக் கப்புச் சாப்பாடு எவ்வளவு அனுகூலமாக இருக்கிறது என்பதைச் சொல்லமுடியாது. அதைத் தவிர, வேறு எங்கும் அளவுச் சாப்பாடு போடுவது இல்லை என்பதை கனம் அங்கத்தினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றையதினம் எத்தனை கோடி ரூபாய்களைச் செலவழித்து வெளிநாடுகளிலிருந்து முன்பு வாங்கிக்கொண்டிருந்த உணவு தானியங்களை வரவழைக்காமல் இருக்கிறோம் என்பதை உணர்ந்து பார்த்தார்களானால் உணவு உற்பத்தி அதிகமாகி இருக்கிறதா இல்லையா என்பதை நன்றாகத் தெரிந்துகொள்ளமுடியும்.

இந்நாட்டில் ஆமை இறைச்சி பவுண்டு 25 ரூபாயாக இருக்கிறது என்று பேசினார்கள். இது எவ்வளவு தப்பான பிரசாரம் என்பதை நான் சொல்ல வேண்டாம். பாம்புத் தோல் 2 ரூபாய், 2½ ரூபாயாக விற்கிற காரணத்தினால் இன்றையதினம் நாட்டில் ஒரு பாம்பு கூட கண்ணில் படாதவாறு பிடித்து தோலை உறித்து விற்றுவருகிறார்கள். அப்படியிருக்க ஆமை இறைச்சி பவுண்டு 25 ரூபாய் என்றால் தோண்டித் துருவி ஆமைகளை எல்லாம் பிடிக்கும் முயற்சியில் தீவிரமாகப் பல பேர் இறங்கியிருக்க மாட்டார்களா ? நாம் எல்லோரும் சிறு பிள்ளைகள் அல்ல. மேடையில் பேசியதுபோல் இந்தச் சட்ட மன்றத்திலும் பேசுவதற்கு ? ஆயிரக் கணக்கான மக்களின் பிரதிநிதியாக இங்கு வந்துள்ளோம். எனவே இங்கு பேசும்போதாவது பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், குறிப்பாக ஒருவர் ஹரிஜன மக்களின் நலனைக் குறித்துப் பேசுவது போல ஒரு தப்பான கருத்தைச் சொன்னார்கள். இன்றைக்கு ஹரிஜனங்களுக்காக வாங்கிக் கொடுக்கிற மாடுகள் பல அடிமாட்டுக்குப் போகிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு சர்க்கார் ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக பல ஆயிரக்கணக்கான ஜோடி மாடுகளை வாங்கிக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மாடு வாங்கும்போது தாசில்தார் தொகுதி, M.L.A., M.P, வெல்பர் ஆபீஸர் ஆகியோர் கலந்து குறைந்தது நான்கு அல்லது ஐந்து ஆண்டிற்கு உழைக்கக்கூடிய மாடாக வாங்கிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதையும் குறைகூறி கெடுப்பதற்காகவோ என்னவோ—இடுவார் பிச்சையைக் கெடுவார் கெடுத்தார் போல—கனம் அங்கத்தினர் குறை கூறுகின்றார். ஹரிஜனங்களுக்காக நல்லது பேசுகிறோம் என்ற முறையில் உள்ளதையும் கெடுத்துவிடாமல் இருக்கும்படி கனம் அங்கத்தினர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லி நாட்டு மக்களுக்கு நன்மைகள் செய்வதில் சர்க்காருக்கு உண்மை விஷயங்களை உள்ளபடியே சொல்ல வேண்டிய கடமை உடையவர்கள் நாம் என்ற முறையில் தொகுதியைப் பொறுத்த வரையில் ஒரு சில வார்த்தைகள் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

இதுவரையில் விவசாய அபிவிருத்திக்காக இனாமாகவும், கடனாகவும் 3-40
சுமார் ஒன்பது கோடி ரூபாய் நமது அரசாங்கம் கொடுத்திருக்கிறது. p.m.
அதற்காக ஏழை விவசாயிகளின் சார்பில் நான் அரசாங்கத்திற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். உரம் கிடைப்பதில் நமது விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சென்ற ஆண்டு 75,000 டன் உரம்தான் வழங்க முடிந்தது என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த அளவு போதாது.

75,000 டன் உரம் எனது தொகுதியில் மாத்திரம் விவசாயிகளுக்கு பெர்மிட் கொடுக்கிருர்கள். காலா காலத்தில் உரம் கிடைக்காமல் மக்கள், விவசாய மக்கள் மிகவும் கஷ்டப்படுகிருர்கள். அவர்கள், கோவாபரேடிவ் ஸ்டோருக்கு போய் உரம் கேட்கும்போது வரவில்லை என்பதைக் கேட்டு வருந்தித் திரும்புகிருர்கள். பின்பு ஒன்றிரண்டு மாதங்கள் கழித்து உரம் கிடைப்பதை அவர்கள் வாங்கி கடையில் 32 ரூபாய்க்கு விற்று விடுகிருர்கள். திரும்ப உரம் வாங்கும்போது 32 ரூபாய்க்கு விற்ற உரத்தை 52 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இதனுல் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிருர்கள். எனவே, உர உற்பத்தியை அதிகரித்து, அவைகள் காலா காலத்தில் கிடைக்கும்படிச் செய்யவும் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, பூச்சி மருந்து. விவசாயிகளுக்கு, பூச்சி மருந்து பாதி மான்யமாகவும் பாதி பணத்திற்காகவும் கொடுக்கப்படுகிறது. பாதி பணத்திற்காகவும், பாதி மான்யமாகவும் கொடுக்கப்படும் மருந்தை, அந்த பாதி பணம் கொடுத்து மருந்தை அவர்களால் வாங்க முடியாத நிலையில் இருக்கிருர்கள், ஏழை விவசாயிகள். ஆகவே, அந்தப் பாதிப் பணத்தையும் கடனுக விவசாயிகளுக்கு கொடுத்து உதவினுல்தான் அவர்களால் நன்கு விவசாயம் செய்ய முடியும். விவசாயமும் நன்கு அபிவிருத்தி அடையும். அடுத்தபடியாக, நீர்ப்பாசனம். நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து பல நீர் தேக்கங்கள் கட்டுகிருர்கள், நமது சர்க்கார். குளங்களைத் தூரெடுக்க 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அது போதாது என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. வரட்சி மிக்கப் பிரதேசங்களில் உள்ள குளங்களை எல்லாம் பழுது பார்க்க ஒதுக்கப்பட்டிருக்கும் இந்த பத்து லட்சம் ரூபாய் போதாது. எனது தொகுதியை எடுத்துக் கொண்டால் சோழவந்தான், வத்தலகுண்டு பகுதிகளைத் தவிர மற்ற பிரதேசங்கள் எல்லாம் வரட்சியானவைதான். அன்னசமுத்திரம் என்ற ஒரு கண்மாய் இருக்கிறது. அதில் சிறுமலைத் தண்ணீரைத் தேக்கி வைக்க ஏற்பாடு செய்தால் 10 மைல் சுற்றளவில் உள்ள கிராமங்களுக்கு நல்ல செழிப்பைக் கொடுப்பதோடு நல்ல முறையில் விவசாயத்திற்கு அனுகூலமாக இருக்கும். அடுத்தது அழகன்பட்டியிலும் ஒரு கணயாய் இருக்கிறது. அங்கு 1,200-க்கு மேல் ஹரிஜனங்கள் இருக்கிருர்கள். அங்குள்ளவர்கள் ஓரளவு நிலம் உள்ள விவசாயம் செய்யும் மக்களாவார்கள். அங்குள்ள கிணறுகளில் தண்ணீரே கிடைப்பதில்லை. அவ்வளவு வாட்சியான பிரதேசமாகும் அது. இப்படிப்பட்ட இடங்களில் அவர்கள் நிலையை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கனம் மராமத்திலாகா அமைச்சரை நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக குடிதண்ணீர் விஷயம். கிராமங்களில் குடிதண்ணீர் வசதிக்காக 60 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனுல் தாலூகாவின் தலைநகராகவும் அதிகப்படியான மக்கள் வசிக்கக் கூடிய நிலக்கோட்டையை எடுத்துக்கொண்டால் அவர்கள் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே, நிதியமைச்சர் அவர்களும் சுகாதார அமைச்சர் அவர்களும் கருணை கூர்ந்து இந்த ஆண்டு எப்படியாவது நிலக்கோட்டைக்கு தண்ணீர் சப்ளை செய்து அதற்கு வேண்டிய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அங்கு வாழும் 7,000 மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அங்கு இப்பொழுது கிடைக்கும் தண்ணீர் உப்புத் தண்ணீராக இருக்கிறது. அதுவும் தேவையான அளவு கிடைப்பதில்லை. கனம் ராஜாஜி அவர்கள் அமைச்சராக இருக்கும்போது அங்கு என்ஜினியர் வந்து பார்த்து இன்வஸ்டிகேஷன் செய்து ரிப்போர்ட்டும் அனுப்பியிருக்கிருர்கள் என்று தெரிகிறது. அதை நிராகரிக்காமல் எடுத்து எங்கள் தொகுதி மக்களுக்கு வேண்டியதைச் செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

*SRI P. VEERAPPA GOUNDER : தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம் நாடு, விவசாய





நாடு. விவசாயத்தில் வெற்றி பெற்ற நாடு. நம் நாட்டில் நன்கு விவ
சாயம் செய்வதற்கு, விவசாயிகளுக்கு போதிய உரங்கள், அம்மோனியம்
சல்பேட் போன்ற உரங்கள் சரிவர போதிய அளவு கொடுப்பது கிடையாது.
அதற்காக நான் விவசாய ஆபீஸர்களை குற்றம் சொல்லவில்லை. அக்
குற்றம் சர்க்காரையும், அமைச்சர்களையுந்தான் சாருமே தவிர கிராமங்
களில் உள்ள விவசாய அதிகாரிகளையோ அல்லது தாலூகாவில் இருக்கும்
விவசாய டிபார்ட்மெண்ட் அதிகாரிகளையோ சாராது என்று நான் மிகவும்
பணிவுடன் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டில் அம்
மோனியம் சல்பேட் உரம், 1 லட்சத்து 40 ஆயிரம் டன் வழங்க நம்
அமைச்சர்கள் திட்டமிட்டிருந்தார்கள். அந்தத் திட்டத்தை சரியான முறை
யில் நடத்தமுடியாது போய்விட்டது. அவ்வளவு உரங்கள் சேகரிக்க முடி
யாமல் 75,000 டன் உரம் தான் இவர்கள் சேகரித்திருக்கிருர்கள் என்று
இந்த வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஒரு லட்சத்தி
நாற்பதாயிரம் டன் உரம் வழங்கத் திட்டம் இட்டிருந்த சர்க்கார் 75,000
டன் உரமே வழங்குவதாயிருந்தால், எப்படி விவசாயம் முன்னேற்றம்
அடைய முடியும் என்று நான் கேட்கிறேன். எப்படி நம் விவசாயிகள்
நல்லபடி விவசாயம் செய்து உணவுப் பற்ருக்குறையைத் தீர்க்க முடியும்
என்று நான் கேட்கிறேன். இந்த ஆண்டில் ஒரு லட்சத்தி நாற்பதாயிரம்
டன் அம்மோனியம் சல்பேட் உரம் வழங்கத் திட்டமிட்டிருந்தோம், ஆனுல்
அந்த உரம் போதிய அளவு கிடைக்காத காரணத்தினுல் 75,000 டன்
தான் வழங்கமுடியும் என்று கூறுகிறது இந்த அறிக்கை. ஆகவே,
இந்த அம்மோனியம் சல்பேட்டிற்கு " ஆனுல் " போட்டு விட்டார்கள்.
உரங்கள், விவசாயக் கருவிகள், மருந்து தெளிக்கும் கருவிகள் இப்படிப்
பட்டவைகளை விவசாயிகளுக்கு காலாகாலத்தில் வேண்டிய அளவு கொடுக்கா
விட்டால் விவசாய உற்பத்தி எப்படி பெருக முடியும் ? அடுத்தபடி, பூச்சி
மருந்து 50,000, 60,000 டன் என்று ஜில்லா வாரியாக அனுப்புகிருர்கள்.
ஒரு வருடத்தில் 10,000-டன் பூச்சி மருந்து கொடுக்கிருர்கள் என்ருல் அதை
பாதி விலைக்கு கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தின் உத்தரவு
இருக்கிறது. அதன் விலை ஒரு பவுண்டுக்கு எட்டணு என்றிருந்தால்
அதை நான்கணுவிற்கு கொடுக்க வேண்டும். அப்படி வரும் மருந்து
மூன்று நான்கு மாதங்களுக்குள் தீர்ந்து விடுகிறது. பின் பூச்சி மருந்து
வாங்கவேண்டுமென்ருல் பாதி விலைக்குக் கிடைக்காது. முழு விலையும்
கொடுத்துத்தான் வாங்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் கொடுக்
கின்ற பூச்சி மருந்தின் மொத்த விலையில் ரூ. 15,000 வரையில் தான்
சர்க்கார் சலுகை காட்ட முடியும் என்று இப்பொழுது நடக்கிறது.
அதற்குமேல் இந்த பூச்சி மருந்துகளை விவசாயிகள் முழு விலை கொடுத்து
தான் வாங்கவேண்டியிருக்கிறது. இதனுல் ஏழை விவசாயிகளுக்கு சொற்ப
விலையில் மருந்து கிடைப்பதில்லை. பணக்காரர்கள் தான் இம்மாதிரியான
பூச்சி மருந்துகளை முழுவிலையில் வாங்க முடிகிறது. ஆகவே சர்க்கார்
ஒவ்வொரு ஜில்லாவிற்கும் சப்ளை செய்கின்ற பூச்சி மருந்துகள் பூராவையும்
விவசாயிகளுக்கு பாதி விலையிலேயே விற்கவேண்டும் என்று உத்திரவு
போடவேண்டும்.

அந்த மருந்து தெளிக்கும் கருவிகள் வேண்டும் என்று விவசாய 3-50 p.m.
டிபார்ட்மெண்டில் போய் கேட்டால் ஐயா, எங்களிடம் ஒன்றிரண்டு தான்
இருக்கிறது. நாங்கள் இதை உங்களிடம் பணத்தை வாங்கிக்கொண்டு
கொடுத்துவிட்டால் நாங்கள் என்ன செய்வது ? எங்களுக்கு கண்காட்சிக்
காக வைத்திருப்பதற்கு வேறு சாமான்கள் இல்லையே என்றும் நீங்கள்
வேறு எங்கேயாவது போய் வாங்கிக்கொள்ளுங்கள் என்றும் சொல்லுகிருர்
கள். நிறைய இந்த கருவிகளை வரவழைக்கக்கூடாதா என்று கேட்டதற்கு
அவர்கள் சொல்லுகிருர்கள், " 1957–58-ம் ஆண்டில் அரசாங்கத்தி
லிருந்து உங்கள் ஜில்லாவுக்கு எத்தனை கருவிகள் அவசியம் ?" என்று
கேட்டிருந்தார்கள், அவ்விதம் எழுதிக் கேட்டதின் பேரில் கணக்கு போட்டு
பார்த்து 200 கருவிகள் அனுப்ப வேண்டும் என்று எழுதி அனுப்பி
னேம். அந்த 200 மருந்து தெளிக்கும் கருவிகள் கொடுப்பதற்குப்
பதிலாக 21 மருந்து தெளிக்கும் கருவிகள் மாத்திரம் அனுப்பினுர்கள்.

[Sri P. Veerappa Gounder] [6th March 1958

அதை வைத்துக்கொண்டு ஒவ்வொரு தாலூகாவுக்கும் இரண்டு மூன்று கொடுத்தால் அதை வைத்துக்கொண்டு எப்படி உபயோகிப்பது என்று தெரியவில்லை. இதைப்பார்த்தால் எப்படியிருக்கிறதென்றால் '' அவன் தின்பான் நூறு, நீ போட்டி இரண்டு'' என்று சொல்வதைப்போல் இருக்கிறது. இவ்விதம் ஒன்று இரண்டு என்று கிடைப்பதை வைத்துக் கோண்டு அதை விற்பதா அல்லது வாடகைக்கு கொடுப்பதா என்று தெரியாமல் அவர்கள் கண்காட்சிச் சாலேக்கு தான் வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லே. அடுத்தபடியாக டிராக்டர்கள், விதை விதைக்கும் கருவிகள் இன்னும் பலவித சாமான்கள் எல்லாம் சரியாக கிடைப்பதில்லே. சில கருவிகளில் சில விதைகளை பொறுக்க முடியும். இவைகளை எல்லாம் கொடுப்பதற்கு சில திட்டங்கள் இருக்கின்றன. அவைகளை ஒன்றும் ஆரம்பிக்காமல் இருக்கிறார்கள். சில கருவிகளை நாம் விலேக்கு கேட்டால் இதன் விலே 55 ரூபாய் 60 ரூபாய் ஆகும், அதனால் நீங்களே செய்து கொள்ளுங்கள் என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே இம்மாதிரிப்பட்ட கருவிகளை என் அதிகமாக அனுப்பக்கூடாது என்று கேட்கிறேன். இவ்விதம் விவசாயத்திற்கு அவசியமான கருவிகள் ஒன்றும் அதிகம் கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது. விவசாயத்தின் மீது, கண்ணே செலுத்தாமல் கண்ணே மூடிவிடுகிறார்கள். விவசாயம் நாட்டுக்கு முதுகெலும்பு போன்றது என்று சொல்லுகிறார்கள். • விவசாயம்தான் நாட்டின் நிலேமையை உயர்த்தும் என்று சொல்லுகிறார்கள். இவ்விதம் எல்லாவற்றிற்கும் விவசாயம் தான் முக்கியமாக விளங்குகிறது. அடுத்தபடியாக டீஸல் ஆயிலுக்கும் விவசாயத்திற்கும் வரி போடுவதாக இந்த பட்ஜெட்டில் கொண்டு வந்திருக்கிறார்கள். உரலுக்கு ஒரு பக்கம் தான் இடி, மத்தளத்திற்கு இருபக்கமும் இடி என்று சொல்லுவது போல இந்த வரி விதிப்பு இருக்கிறது. ஒரு பக்கம் விவசாய வருமான வரி, மற்றொரு பக்கம் டீஸெல் எண்ணெய்க்கு வரி, இந்த இடிகளையும் விவசாயத்தை நோக்கி இடித்தால் விவசாயி உரலா அல்லது அவலா என்று தெரியவில்லே. இப்படி இரு பக்கமும் இடித்தால், அதாவது ஒரு பக்கம் விவசாய வருமான வரி, இன்னொரு பக்கம் டீஸெல் ஆயிலுக்கு வரி என்று வரிகளை போட்டு இடித்தால் விவசாயியின் நிலேமை என்ன ஆகும் என்று கேட்கிறேன். தயவு செய்து அரசாங்கத்தை வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த விவசாயத்தின்பேரில் வரியை விதிக்காமல் வேறு எந்த இனத்தின் பேரிலாவது வரியை விதித்திருக்கலாம். எனக்கு முன்னால் ஆளும் கட்சியிலிருந்து பேசிய சிலர் சொன்னார்கள், எதிர்கட்சிக்காரர்கள் வரி போடுகிறார்களே, வேறு எதன் மீதாவது வரி போடுங்கள் என்று சொல்லுகிறார்களே தவிர இன்னதின் பேரில் வரி போடுங்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லே என்று. சற்று முன்புகூட ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார் விவசாயத்தின் மீது இருக்கும் வரியை எடுத்து விட்டு வேறு ஏதாவது இனத்தின் மீது வரியை போடுங்கள் என்று. நானும் அதையேதான் குறிப்பிடுகிறேன், விவசாயத்தின் மீது இருக்கும் வரியை எடுத்துவிட்டு வேறு ஏதாவது இனத்தின் மீது வரியை விதித்தால் யாருக்கும் பாதிக்காத முறையில் இருக்கும் என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

**Sri K. PERIANNAN :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தை கொண்டு வந்த நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியை செலுத்துவதோடு நமது காருண்ய காங்கிரஸ் சர்க்காருக்கும் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் எங்கள் வட்டாரமானது மிகவும் பிற்போக்கான வட்டாரம் என்பதை உணர்ந்து அமைச்சர் அவர்கள் கடந்த அக்டோபர் மாதம் ஒன்றும் தேதியன்று எங்கள் வட்டாரத்திலுள்ள பகுதிகளே பிளாக் அபிவிருத்தி இலாகாவோடு அமைத்திருப்பதாகும். அடுத்தபடியாக எங்கள் வட்டாரத்தில் எலக்ட்ரிசிட்டி இல்லாமல் அங்குள்ள மக்கள் மிகவும். கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது கடந்த பிப்ரவரி ஒன்றும் தேதியிலிருந்து கரண்ட் கொடுத்திருக்கிறார்கள் என்பதாகும். மேலும் எங்கள் வட்டாரம் மானாவாரியான புஞ்சை நிலங்களை கொண்



6th March 1958] [Sri K. Periannan]

டிருக்கிற வட்டாரமாக இருப்பதனால் எங்கள் வட்டாரத்திற்கு பிப்ரவரி 21-ம் தேதி முதல் சின்னாறு ஸ்கீம் என்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தி அதன் மூலம் எங்கள் வட்டாரத்தில் இப்போது 700, 800 ஏக்கர் நஞ்சை நிலங்களாக சாகுபடி செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகும். இந்த வசதி செய்துகொடுத்ததற்காக என் நன்றியை இந்த அரசாங்கத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு பெரம்பலூர் வட்டாரத்தில் பிளாக் அபிவிருத்தி இலாகாவை அக்டோபர் மாதத்திலிருந்து ஏற்படுத்தியிருக்கிறார்கள். இரண்டாம் தேதியிலிருந்து அதோடு அந்த இலாகாவில் இன்னும் பல அதிகாரிகள் வந்து சேராமல் இருப்பதினால் அங்கு வேலே ஆரம்பிக்கப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே அங்கு உடனடியாக அதிகாரிகளே நியமிக்கவேண்டும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். மேலும் பெரம்பலூர் வட்டாரம் மிக பிற்போக்கான இடமாக இருக்கிறது. அங்கு இதற்கு முன்னால் தனிப்பட்ட கம்பெனியாரால் ஜிப்ஸம் தொழில் நடத்தப்பட்டு வந்தது. இப்போது அந்த தொழிலே சர்க்கார் ஏற்று நடத்தினால் அங்குள்ள ஏழை குடிகளுக்கு தொழில் கிடைப்பதற்கும் அதன் மூலம் தங்களுடைய ஜீவனத்தை நடத்திக்கொள்வதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பெரம்பலூர் தாலூகா தலேநகராக இருந்தும் சுற்று வட்டாரத்தில் 60, 70 மைல்களுக்கப்பால் சென்று ரயிலில் ஏறி போக 4-00 p.m. வேண்டியிருக்கிறது. ஆகவே, அரியலூரிலிருந்து பெரம்பலூருக்கும், துறையூர், நாமக்கல் வழியாக சேலம் செல்வதற்கும் ரயில் பாதை போட்டு இவ்வட்டார மக்களுக்கு இன்னும் அதிக உற்சாகமூட்டவேண்டுமென்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக திருச்சிராப்பள்ளி ஒரு பெரிய ஜில்லா. தலே நகரமும் கூட. முக்கியமான இடமாக இருந்தும், குறிப்பாக திருச்சிமாநகரின் இடையிலே காவேரி சென்றும் கூட திருச்சிமா நகரத்திலுள்ள மக்களுக்குக் குடிதண்ணீர் வசதியில்லாமல் பெரும் கஷ்டப்படுகிறார்கள். அதேமாதிரி துறையூர் வட்டத்திலும், 15,000 ஜனத்தொகை கொண்ட மேஜர் பஞ்சாயத்து ஏரியாவாக இருந்தும் அதிலும் குடிதண்ணீர் கிடைக்காமல் மக்கள் பெரும் கஷ்டம் அடைகிறார்கள் அதற்கும் குடி தண்ணீர் கிடைக்க போதிய கவனம் செலுத்தி, உடனடியாக அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நமது சர்க்கார் குறிப்பாக தாழ்த்தப்பட்ட ஹரிஜன மக்களுக்கு எவ்வளவோ சலுகைகள் செய்யவேண்டுமென்ற அளவில் நல்ல பல திட்டங்களைத் தீட்டியும், அதனால் மக்கள் நல்ல பயன் பெற முடியாமல், இடையில் இருக்கும் உத்தியோகஸ்தர்களால் பலவிதத் தொல்லேகள் ஏற்பட்டு, காலாகாலங்களில் அந்த உரிமைகள் கிடைக்க முடியாமல்போகிறது. மேலும் ஹரிஜன மாணவர்கள் கல்லூரிகளில் படிக்க சர்க்கார் மானியம் கொடுப்பது, காலாகாலங்களில் கிடைக்க முடியாமல் மாணவர்கள் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள். கடந்த ஆண்டுக்குள்ள மானியம் இன்னும் சில கல்லூரிகளுக்குக் கிடைக்காமல் மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்று ஹரிஜனங்கள் முன்னேறவேண்டுமென்று சர்க்கார் மனைக்கட்டுகள் வழங்குகிறார்கள். அதற்கு மானியம் 500 ரூபாய் கொடுத்தும், 250 ரூபாய் கடனாகக் கொடுத்தும் வருகிறார்கள். சொற்ப மானியம் வழங்குவதால் கட்டிடம் பலமாக இல்லாமல் குறுகிய காலத்திலேயே, கட்டி முடிந்த 6 மாதங்கள், 1 வருஷத்திற்குள்ளாகவே கட்டிடம் வீழ்ச்சியடைகிறது. ஆகவே அந்தக் கட்டிட மானியத்தை 1,000 ரூபாய், 1,500 ரூபாய் என்று மாற்றி, நிரந்தரமாக ஏழைகள் ஜீவிக்கக்கூடிய நல்ல முறையில் அக்கட்டிடம் பழுதுபடாமல் இருக்க, அந்த மானியத்தை அதிகரித்து, அதிக தொகையைக் கொடுத்து ஆதரிக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

[Sri A. A. Rasheed] [6th March 1958

system was abolished last year. The leather industry has been famous for the production of East India tanned leather which was earning Rs. 25 to 30 crores. Unfortunately, after the abolition of the Open General Licence system our export has been reduced from 6,500 bales a month to 2,500 bales a month.

4-40 p.m. Nearly 50 per cent of the tanneries have already been closed down or are in the process of being closed down. The other 50 per cent of the tanneries are working only with 30 or 40 per cent of their capacity. Therefore, I urge upon this Government to represent to the Central Government to revive the Open General Licence as the tanning industry is a vital industry in South India or issue licences freely and expeditiously so that this industry which is giving employment to nearly 10,000 persons in South India can be saved.

Sir, the trade also expects financial help in the form of loans. In the Budget only Rs. 25 lakhs have been set apart for giving loans to minor industries. I think this is only a negligible amount and we should ask the Life Insurance Corporation—about which we have heard a lot—that they should set apart at least Rs. 5 to 6 crores to Madras so that this amount could be utilized for all the industries which ask for loan.

Recently to a supplementary question put in this House, the Hon. Minister for Industries stated that because we were not having oil wells, we need not have an oil refinery in Madras. It is not an economic policy. It is not a wise policy. Bombay has no oil well but still they have got an oil refinery. Why not we also have an oil refinery in Madras? I think, we must impress upon the Central Government that we should also have an oil refinery in Madras.

Coming to the needs of the City, Sir, roads are in a very bad and unbearable condition. This is mainly due to the fact that the Government are not giving the due share of the income derived from the Motor Vehicles Tax to the Corporation of Madras. I think, the Corporation is entitled to nearly 50 per cent of the proceeds. We have only given a pittance of Rs. 6 lakhs and it should be increased to at least Rs. 25 lakhs more. The Capital City of the Madras State should have better roads than what we are having to-day.

As regards the Housing Scheme, I would like to draw the attention of the Government to the fact that in England they are constructing nearly one lakh houses every year. What is the number of houses that we are constructing in our State? I think, it is not even one per cent of the houses constructed there. It comes to 1,000. I doubt even whether 1,000 houses are constructed in a year. Although we seem to spend a lot of money in Madras alone, there are still other districts where houses should be constructed but we are not doing it.



6th March 1958] [Sri A. A. Rasheed]

Sir, the system of hand-cart pulling must be abolished. It is not good to say that we cannot find alternative employment for these hand-cart pullers. It is a pathetic sight to see all these hand-cart pullers pulling in hot sun in mid-day when even mad dogs do not run. I think, they should be found some less arduous jobs. In this connection, I would like to suggest that rickshaws and cycle-rickshaws should also be abolished and let us treat humanbeings as humanbeings and let not humanbeings be treated as beasts of burden. Thank you, Sir.

**Sri M. JANGAL REDDIAR :** அன்புக்குரிய உபசபாநாயகர் அவர்களே, இந்த பட்ஜெட் உரையின் மீது நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த உரையில் ஒரு கோடியே நாலு லட்சம் ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது. இப்பொழுது அரசாங்கத்தாரால் கொண்டு வந்திருக்கும் பட்ஜெட்டைப் பார்த்தால், விவசாயம் அழிந்துவிடும்போல் தோன்றுகிறது. விவசாயிகளுக்கு மூவாயிரம் ரூபாய்க்கு மேற்கொண்டு வருகிற வருமானத்தின் மீது வரி விதிப்பதென்றால், அதற்கென்று தனியாக கணக்கு வைத்துக் காட்டமுடியாது. விற்பனை வரி அதிகாரிகளால் எப்படி சின்னச் சின்ன வியாபாரிகள் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களோ, அதே கஷ்டங்கள்தான் விவசாயிகளுக்கும் இந்தச் சட்டத்தினால் ஏற்படும் என்று நான் கூற விரும்புகிறேன். 'உங்களுக்கு வேண்டுமானால் அப்பீல் செய்துகொள்ளுங்கள்' என்று சின்னச் சின்ன வியாபாரிகளைச் சொல்வதால் அவர்கள் படும் அவஸ்தைதான் இனி விவசாயிகளுக்கும் ஏற்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு விவசாயிக்கு, இரண்டு வருஷம் நன்றாக விளைந்தால் மறுபடியும் இரண்டு, மூன்று வருஷங்கள் பூச்சித் தொந்தரவு முதலியன ஏற்பட்டு அல்லது, இம்மாதிரி காரணங்களால் பயிர் சாவியாகப் போய் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, நிரந்தரமாக ஒரு வருஷத்தில் இவ்வளவு லாபம் வரும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. மழையை எதிர்பார்த்த மானாவாரிப் பிரதேசங்கள்தான் குறிப்பாக எங்கள் ஜில்லாவிலும், பொதுவாக தமிழ்நாட்டிலும் அதிகமாக இருக்கின்றனவே தவிர, காவிரிப் பாசனப் பிரதேசம் போல் அதிகமாக இல்லை.

டீசல் எண்ணெய்க்கு வரி கொண்டு வந்திருக்கிறார்கள். இவ்வரியிலிருந்து விவசாயிகளுக்கு ஏதாவது விதி விலக்கு உண்டா என்று தெரியவில்லை. விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்குப் பர்மிட் முறை ஏற்படுத்தி, அதிக வரி இல்லாமல் டீசல் எண்ணெய் அவர்களுக்கு விநியோகிக்கப்படுமா என்பது அதில் ஒன்றும் காணப்படவில்லை.

சினிமாவுக்கு வரி போடுகிறார்கள். தமாஷா வரி போடுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஏழை எளிய விவசாயிகளும், தொழிலாளர்களும் பார்க்கக்கூடிய அளவில், நாலணா, எட்டணா வகுப்புக்களைப் பொறுத்த வரையிலாவது விதிவிலக்கு கொடுத்து, அவர்களுக்கு வரி போடாமல் இருக்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். பகல் முழுதும் உழைத்து அலுப்பின் காரணமாக, கையில் ஏதோ காசு கிடைத்த சமயத்தில் ஓய்வாக இரண்டு மணி நேரம் சினிமா பார்க்கலாம் என்று போனால், அவனிடமிருந்தும் இந்த அரசாங்கம் பணத்தை உறிஞ்சுவதற்கு நினைக்காமல், அவர்களுக்காவது விதிவிலக்கு கொடுக்கவேண்டும். அப்படி விதிவிலக்கு கொடுப்பதினால் குறையும் பணத்தை, உயர் வகுப்புகளுக்கு, அதாவது ஒரு ரூபாய்க்கு மேல் டிக்கட் உள்ள வகுப்புகளுக்கு வரி விதித்து தொகையை வசூலித்துக்கொள்ளலாம். எப்படியும் கீழ் வகுப்புகளுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

[Sri C. Muthiah Pillai] [6th March 1958

சௌகரியமாக இருக்கும். புதிதாக நிலம் வாங்கக் கூடாது என்ற சட்டத்தைத் திருத்தி, "ceiling on personal cultivation" ஏற்படுத்தினால், முற்போக்கான பாதையில் நாம் செல்வதாக எல்லோருக்கும் ஒரு நம்பிக்கை ஏற்படும். ஆகவே, இதை அவசியம் கொண்டு வரும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே சமயத்தில் விவசாய வருமான வரி போடுகிற காலத்தில், "tax on cultivating tenants" என்ற ஒரு புதிய வரியையும் கொண்டுவர வேண்டுமென்று சொல்லுகிறேன். இப்பொழுது விவசாயிகளுக்கும், சாகுபடியாளர்களுக்கும், அவர்களுக்கு நிலத்தில் உரிமை இருக்கிறது, அவர்களை வெளியேற்ற முடியாது என்ற ஒரு உறுதியான ஏற்பாட்டைச் செய்து கொடுத்திருக்கிறோம். அப்படிச் செய்திருக்கின்ற நேரத்திலே, சிலர் வேறு தொழில்களுக்குப் போவதற்காக, அவர்களது சாகுபடி உரிமையை சென்டு ஒன்றுக்கு 3 அல்லது 5 ரூபாய்க்கு உள்வயனம் வைத்து அரசாங்கத்துக்குத் தெரியாமல் விற்று விட்டுப் போகும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நிலத்தில் பாத்தியம் இருக்கிறது, அதற்காக ஒரு வரியும் செலுத்தவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டால், சர்க்காருடைய பட்டாதாரராக வேண்டியிருக்கும். இதில் ஏற்படும் சட்டப் பிரச்னையைப் பரிசீலித்து, இந்த மாதிரி ஒரு வரியை ஏற்படுத்தி, அதைப் பஞ்சாயத்து போர்டுகளுக்கே விட்டு விடலாம். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டினால், விவசாய வருமான வரியை நம்பி இருக்க முடியாத நேரத்திலே, இந்த மாதிரி ஒரு வரியைக் கொண்டு வருவது நல்லது. விவசாயிகளின் பொருளாதார நிலை அபிவிருத்தி அடைந்திருக்கின்ற நேரத்திலே, அவர்களுக்கு ஏற்றவாறு குறுகிய அளவிற்குப் போட்டால் வரி கொடுக்கத் தயாராய் இருப்பார்கள். நிலத்தில் அக்கரை காட்டி உழைப்பார்கள், உணவு உற்பத்தியும் பெருகும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சிறிய நிலச்சுவான்தார்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேர்தல் காலத்திலும் சரி, அதன் பிறகும் சரி, சிறிய நிலச்சுவாந்தார்களுக்கு விதிவிலக்கு அளிப்பதாக வாக்களித்திருக்கிறோம். இதற்காக ஒரு கமிட்டியைப் போட்டு எந்த வகையில் அவர்களுக்கு விலக்குக் கொடுக்கலாம் என்று அரசாங்கத்தார் ஏற்பாடு செய்வதாகத் தெரியவில்லை. மாதம் 15 ஆகிவிட்டது. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுமா, இல்லையா என்பதைத் தெளிவாகச்சொல்லி விட்டால் நல்லது.

**MR. SPEAKER:** உங்களுடைய நேரம் முடிந்துவிட்டது.

**SRI C. MUTHIAH PILLAI:** ஐந்து நிமிஷங்கள்தான் பேசியிருக்கிறேன்.

**MR. SPEAKER:** கனம் அங்கத்தினர் 4-5க்கு தனது உரையைத் தொடங்கினார். இப்பொழுது பத்து நிமிஷங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆகையால், 5 நிமிஷம் தான் பேசினேன் என்று சொல்லுவது தவறு. நான் குறிப்பு எழுதி வைத்திருக்கிறேன். சபாநாயகர் தவறு செய்துவிட்டார் என்று சொல்வது தவறு. (சிரிப்பு).

**SRI C. MUTHIAH PILLAI:** அடுத்தபடியாக, ஜாதி ஒழிப்புப் பிரச்னை பற்றி ஒரு விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்பொழுது ஹரிஜனப் பள்ளிக்கூடங்கள், ஜாதி ஹிந்துக்களின் பள்ளிக்கூடங்கள் என்று இரண்டுவிதப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஹரிஜன நல இலாக்காவினர் ஹரிஜனங்களுக்கென்று தனியாகப் பள்ளிக்கூடங்களை நடத்துகிறார்கள். இதிலே ஹரிஜன மாணவர்கள் ஐந்து வயது வரையிலும் படித்துவிட்டு, ஹைஸ்கூல்களுக்கு வரும்பொழுது ஜாதிப் பிரிவினை உணர்ச்சி ஏற்படுகிறது. குழந்தைகள் உள்ளத்திலே ஜாதி வித்தியாச உணர்ச்சி ஏற்படக்கூடாது. ஆகவே, ஹரிஜனங்களுக்கு என்று தனியாக நடக்கும்



6th March 1958] [Sri C. Muthiah Pillai]

பள்ளிக்கூடங்களை மூடிவிட்டு, ஜாதி ஹிந்துக்கள் படிக்கும் பள்ளிக்கூடங்களில் அவர்களைச் சேர்க்கவேண்டும். இதைப்பற்றி சட்ட சபையில் ஏதாவது சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் எல்லா மாணவர்களும் படிக்கலாமென்று இருக்கவேண்டும்.

தஞ்சை ஜில்லாவிலே பதனித் தொழிலை நடத்தி வந்தவர்கள் அதை நிறுத்திவிடும்படியான கேவலமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. லைசென்ஸ் இல்லாமல் அவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிச்சைக்கும் போகும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக அவர்கள் அந்தத் தொழிலை நடத்துவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். (கனம் சபாநாயகர் மணியை அடித்து, அடுத்த அங்கத்தினரைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.)

**SRI T. IRUSAPPAN:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் 1958–59-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நிதி நிலைமை சீர்பட்டிருப்பதாக மிகவும் பெருமையுடன் சொல்லியிருக்கிறார்கள். நமது நாடு விவசாயத்தை நம்பி வாழக்கூடிய நாடு. விவசாய மக்கள் அதிகமாக வாழக்கூடிய தென்னகத்திலே அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை மேலும் பாதிக்கக்கூடிய வகையில் வரிகளைக் கொண்டு வந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. வடநாட்டிலேயிருந்து கொடுத்த பணத்தை வாங்கமுடியாத சர்க்கார் விவசாயிகள் தலையிலே கையை வைப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். கிராமப் புறங்களிலே "விறகுத் தலைவனுக்குக் காய்ச்சல் வந்தால் விறகால் அடித்தால் போகும்" என்று சொல்லுவார்கள். அதைப்போல, விவசாயத்திற்கு வேண்டிய வசதிகள் வேண்டுமென்றால், விவசாயிகளேதான் பணம் கொடுக்க வேண்டும் என்கிற முறையில் வரிவிதித்திருக்கிறார்கள். ஏழை ஹரிஜன மக்களுக்கு கிணறுகளை வெட்டுகிறோம், பள்ளிக்கூட வசதிகளைச் செய்துகொடுத்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள்.

என்னுடைய தொகுதியிலே பல தாழ்த்தப்பட்ட மக்கள் காளைமாடுகள் வாங்குவதற்கும் கிணறுகள் வெட்டுவதற்கும் பணம் கேட்கிறார்கள். ஒரு பகுதியிலே 500 வீடுகளுக்குக் குறையாமல் இருக்கின்றன. ஏதோ சிலருக்கு இரண்டு காளைகளைக் கொடுத்துவிட்டால் மட்டும், ஹரிஜனங்கள் முன்னேற வழியிருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். தரிசு நிலங்களைப் பண்படுத்த கிணறுகள் வெட்டுவதற்குப் பணம் கேட்டால், தரிசு நிலத்தை நம்பிப் பணம் கொடுக்க முடியாது, அடமானமாக ஏதாவது வைத்தால் தான் கொடுக்க முடியுமென்று சொல்லுகிறார்கள்.

(உதவி சபாநாயகர் தலைமை வகித்தார்.) 4-20 p.m.

ஏழை விவசாயிகள் ஏதோ 200 அல்லது 300 ரூபாய் கடன் வாங்க வேண்டும் என்று ஒருவரை அணுகினால், அவர் அந்த சிறு தொகையைக் கொடுத்துவிட்டு நிலத்தை தன்னிடம் கொடுத்துவிடும்படி கூறுகிறார். ஆகையால் விவசாயிகளுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. சர்க்கார் இவர்களுக்கு 10 வருஷ லோன் அல்லது 15 வருஷ லோன், தக்காவி கடனை கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியாகிய சேலம் ஜில்லா, ஆத்தூர் தாலுகா வட்டாரத்தில் நில வளமும் நீர் வளமும் பொருந்தியிருந்தும் கூட, சில வரண்ட இடங்கள் இருக்கின்றன. அங்கு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவராவது சுபிட்சம் அடைந்ததாகக் காணோம். ஐந்து ஆண்டு காலமாக இங்கு தரிசு நிலங்களுக்கு தீர்வை செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருந்தும் ஏழை ஹரிஜனங்களுக்கு இன்னும் அந்நிலங்கள் கொடுக்கப்படவில்லை. கணக்குப் பிள்ளையைக் கேட்டால் தாசில்தாருக்கு அனுப்பியிருக்கிறேன் என்று

அடுத்தபடியாக, இந்த சர்க்கார் கடை நிலை ஊழியர்கள் என்று சொல்லக்கூடிய பெரும்பாலான கிராம உத்தியோகஸ்தர்கள், என்.ஜி.ஓ.க்கள் முதலானவர்கள் பெரும்பாலும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தற்போது அரசாங்கம் கொடுக்கும் ஊதியம் போதவில்லை என்று பெரும் குறைபாடுகள், கூப்பாடுகள், இருப்பதால் அவர்களுக்கு இன்னும் அதிக ஊதியம் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இலங்கை இந்தியர் பிரச்னையில், பெரும்பாலும் தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சென்றவர்கள், ஏழைகள், விவசாயிகள், பிற்பட்டவர்கள் என்பது நன்கு நாடறிந்த, உலகறிந்த உண்மை. இன்று இலங்கையிலே அவதியுறும் நம் தமிழகத்தவர்களைப் பற்றித் துயரமடையாதவர்கள் யாரும் இருக்க முடியாது என்பதை பணிவன்போடு தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களுக்கு, குறிப்பாக இலங்கையில் இருப்பவர்கள் நம் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்களானதால் நம் மாகாணத்திலிருந்து ஒரு நல்ல திட்டத்தைத் தீட்டி இந்திய அரசாங்கத்தின் மூலமாக இலங்கை வாசிகளுக்கு நல்ல வழிவகை செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு எனது தாழ்மையான உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**SRI C. MUTHIAH PILLAI**: கனம் சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த வரவு செலவு அறிக்கையைப் பாராட்டி ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். அவர்களைப் பாராட்டும்போது, சென்ற வருஷம் பட்ஜெட் கூட்டத்திலே என்னென்ன நாங்கள் எடுத்துரைத்தோமோ அவைகள் சென்ற ஒரு வருஷ காலத்தில் நடந்திருக்கின்றன, அதுவும் என் தொகுதியில் நடந்திருக்கும் வேலை காரணமாக அவரை நான் விசேஷமாகப் பாராட்டுகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் 300 பேர்கள் ஜனத்தொகை கொண்ட ஊருக்கெல்லாம் பள்ளிக்கூடம், 5 மைல்களுக்கு ஒரு ஆஸ்பத்திரி, மற்றும் எல்லாப் பகுதிகளுக்கும் ரோடு வசதி எல்லாம் அடைந்த பிறகு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாவது ஆண்டிலேயே சிறிய கைத் தொழில்கள், பெரிய தொழில்கள் வசதி ஏற்பட்டுவருகிறது என்றால் நமது நிதி அமைச்சர் அவர்களும் நிதி இலாகாவும் செய்து வருகிற சேவை காரணமாகத்தான் என்பதற்காக என் பாராட்டை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது பேசப்படுகிற பேச்சுக்களைப் பார்த்தால், என் சுயநல் எண்ணமாகச் சொல்கிறேன் என்று வேண்டுமானாலும் சொல்லலாம். நமது நிதி அமைச்சர் இங்கேயே இருந்து பல நல்ல காரியங்களைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் என் மனதில் நிறைந்திருக்கிறது. மேன்மையுறுதலே தேவை என்றாலும், நானும், எங்கள் தொகுதி மக்களும் அப்படி ஆசைப்படுகிறோம்.

முதலாவதாக இந்த நிதி அறிக்கையைப் பார்த்தால் அதிலே மூன்று புதிய வரிகளைப் போட்டிருக்கிறார்கள். வரி எவ்வளவுக்கெவ்வளவு போடுகிறார்களோ அவ்வளவும் வசூலித்து கிராமப்புறங்களில்தான் செலவிடப்படுகிறது. வரிகள் அதிகமாக அதிகமாக கிராமங்களில் செய்யப்படும் வேலைகள் அதிகமாகின்றன. இப்படி நல்ல முறையில், பயன்படும்படியான முறையில் செலவாகிறது என்பதைக் கண்கூடாகப் பார்க்கும்போது அதை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. மிக விசேஷமான இந்தக் கொள்கையை நான் முழு மனதோடு ஆதரிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக விவசாய வரி போட்டிருக்கிறார்கள். இந்த விவசாய வரியை நன்கு ஆலோசித்துப் பார்த்தால் அதை யாவரும் வரவேற்பார்கள். ரீசெட்டில்மெண்ட் 1910-ல் நடந்தது. பிறகு 1930-ம் ஆண்டு, 20 வருஷத்திற்குப் பிறகு நடந்தது. ஐந்து முதல் பதினைந்து வருஷத்திற்கு ஒரு தடவை இந்த ரீசெட்டில்மெண்ட் நடக்கவேண்டும். வேலை காரணமாக செய்யப்படவேயில்லை. 1930-ல் இருந்து 1958 வரை, இது வரையில் ரீசெட்டில்மெண்ட் செய்யவில்லை. 1930, 1932-ல் விவசாயம்





செய்கிறவர்களுக்கு நெல் கலம் 10 அணா முதல் 1¼ ரூபாய் வரை கிடைத்து வந்தது. 1952-ம் ஆண்டில் நெல் விலை 10 அணாவிலிருந்து மூட்டை 19½ ரூபாய்க்கு விற்கிறது. அதற்குத் தகுந்தாற்போல் வரி போட்டிருக்கவேண்டும். இருபது வருஷங்களுக்கு மேல் செட்டில்மெண்ட் எடுக்காமல் சர்சார்ஜ், இன்கம் டாக்ஸ் இவைகள் மூலமாகக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

அடுத்தபடியாக இந்த எண்டெர்டெயின்மெண்ட் டாக்ஸ். இந்த டாக்ஸைப் போடும்போது இந்தத் தொழிலையே தேசிய மயமாக்கினால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். சினிமா தியேட்டர்களை உடனடியாக தேசீய மயமாக்க வேண்டும். மேலும் இப்போது பாண்டியிலே ஒரு தியேட்டர் ஆரம்பித்து அதில் வரும் வருமானத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முன்பு மதுவினால் எவ்வளவு வருமானம் இருந்ததோ, அதே வருமானம் இப்போது சினிமா தியேட்டர் மூலம் கிடைக்கும். இப்போது இருக்கின்ற தியேட்டர்களை எடுத்துக் கொள்ளாவிட்டாலும், புதிதாக அரசாங்கமே கட்ட முற்பட்டால் அதன் வகையில் தியேட்டர்கள் மூலமாக சற்றேறக்குறைய 3 கோடி ரூபாய் வரும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தப் பொழுதுபோக்கு வரி அதிகமாகப் போடுவதை நிறுத்திவிட்டு, சினிமா தியேட்டர்களைத் தேசீய மயமாக்க வேண்டுமென்பது என்னுடைய இரண்டாவது யோசனை.

அடுத்தபடியாக, டீசல் எண்ணெய் மீது வரி போட்டிருக்கிறார்கள். 4-10 p.m.
நான் விசாரித்த வரையில் இதனால் பஸ் முதலாளிகளுக்குத் தான் அதிகமாக நஷ்டம் ஏற்படும் என்று கேள்விப்பட்டேன். சுமார் 40 பஸ்கள் வைத்திருக்கும் முதலாளிகள் இந்தப் புதிய வரியின் காரணமாக ரூ. 80,000 வரை கொடுக்கும்படியான சூழ்நிலை ஏற்படுமென்று கேள்விப்பட்டேன். பஸ் முதலாளிகள் மீது வரி போட்டதற்காக நான் வருந்தவில்லை. சில பஸ் முதலாளிகள் என்னிடம் வந்து முறையிட்டார்கள். அவர்களிடம் " இந்த வரி மத்திய சர்க்காருக்குப் போகவில்லையே, மாகாண சர்க்காருக்குத்தானே கிடைக்கப் போகிறது, இதைக் கொடுப்பதில் உங்களுக்கு என்ன கஷ்டம் " என்று கேட்டபொழுது, ஒன்றும் பதில் சொல்ல முடியாமல் ஒத்துக்கொண்டு போகும்படியான நிலைமை ஏற்பட்டது. வடக்கே போகின்ற வரியை உயர்த்தாது, மாகாண சர்க்காருக்கு இந்த வரிப்பணம் கிடைக்கும்படிச் செய்ததைக் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் உரையில் நிலத்திற்கு உச்ச வரம்பைக் கட்டுவதற்கு முன்னர் அதிகமாக நிலம் வாங்குவதற்குத் தடை செய்யப்போவதாகச் சொன்னார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டங்களை உடனடியாக இயற்றாமல், இம்மாதிரி பிரித்துப் பிரித்து சட்டங்கள் கொண்டு வருவதால் நிலச்சுவான்தார்களுக்கும், விவசாயிகளுக்கும் மனக்கசப்பு ஏற்படுகிறது. " ceiling on personal cultivation " முறையைக் கொண்டு வந்தால் அதிலே அர்த்தம் இருக்கிறது. சொந்தத்திலே பண்ணை வைத்து விவசாயம் நடத்துகிறவர்களுக்கு கட்டுப்பாடும், வரம்பும் அவசியம் வேண்டும். எதிர் காலத்திலே, நிலத்திற்கு உச்ச வரம்பை ஏற்படுத்தும்போது, அதிகப்படியாக இருக்கிற நிலத்தை யார் யாருக்குக் கொடுக்கவேண்டுமென்று நிர்ணயிக்கும்படியான சூழ்நிலை ஏற்படும். தஞ்சை ஜில்லாவில் குன்னியூர் அய்யர், வலிவலம் தேசிகர் போன்றவர்கள் 3,000 4,000 ஏக்கர்கள் சொந்தத்திலே பண்ணை வைத்துச் சாகுபடி செய்கிறார்கள். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும்போது, அதிகப்படி நிலத்தை யாருக்குப் பங்கிடுவது என்ற பிரச்னையும், சட்டம் கொண்டுவரும்போது குழப்பமும் அங்கே தீரும். ஆகையால் இப்பொழுதே நான் சர்க்காரை எச்சரிக்கிறேன். உடனடியாக " ceiling on personal cultivation " கொண்டு வரவேண்டும். முப்பது ஏக்கருக்கு மேல் சொந்தப் பண்ணை சாகுபடி செய்யக்கூடாது என்று சொல்லிவிட்டால், பாக்கியிருக்கும் நிலத்தை யாருக்குக் கொடுப்பது என்று சட்டம் செய்வது பின்னர்

[Sri A. S. Subbaraj] [6th March 1958

அங்கே நிலை அடமான பாங்குகள் இதுவரையிலும் ஏற்படவில்லை. அங்கே அதை துரிதமாக ஏற்படுத்தி நடத்தும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் கூட்டுறவு மூலமாக கட்டடங்கள் கட்டுவதற்கு சில லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது நமது மாகாணத்தில் எங்கு பார்த்தாலும் வீட்டு வசதிகள் செய்து கொடுத்து வருகிறார்கள். அதைப் போலவே அங்கும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் அதற்கு அதிகப்படியான பணம் ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரோடு வசதிகள் சம்பந்தமாக அதிகப்பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் பெரிய ரோடுகளுக்குத்தான் செலவு செய்யப்படுகிறது. கிராமங்களுக்கு வருகிற ரோடுகளுக்குச் செலவு செய்யப்படுவதாகத் தெரியவில்லை. இப்பொழுது கப்பி ரோடுகளாக போட்டாலும் அவைகளை மெட்டல் ரோடுகளாகப் போட்டால் நல்லதாக இருக்கும். கப்பி ரோடுகளாக போடுவதால் அது சீக்கிரத்தில் பழுதடைந்து விடுகிறது. மெட்டல் ரோடாகப் போட்டால் பணம் நல்ல முறையில் செலவு செய்யப்படுவதோடு கப்பி ரோடுகள் போடுவதில் விரயம் ஆகும் பணம் நல்ல முறையில் செலவு செய்யப்படுவதாக ஆகும். லோகல் டெவலப் மெண்ட்மூலமாக ரோடுகள் போடப் பட்டவைகளுக்கு உடனடியாக அவைகளை கல் ரோடுகளாகப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிப் போட்டால் மேற்கொண்டு 1,200 மைல்களுக்குப் போடுவதாய் குறிப்பில் இருக்கிறது. முன்பு போட்ட ரோடுகளுக்கு கல் போடாமல் புது ரோடு போடுவதால் பிரயோசனமில்லை. வீண் மக்கள் பணம் தான் நஷ்டம்.

பல மாவட்டங்களில் பெரிய பெரிய இடங்களில் தொழிற்சாலைகளை அமைக்கிறார்கள். கிராமங்களிலும் ஓரமான இடங்களிலும் எந்த விதமான தொழிற்சாலைகளும் அமைக்கப்படுவதில்லை. சகல தொழிற்சாலைகளும் பரவலாக எல்லா இடங்களிலும் இருக்கும்படியாக அமைக்கவேண்டும். எந்தெந்த இடங்களில் தொழிற்சாலைகள் இல்லையோ அங்கேயெல்லாம் தான் புதிய தொழிற்சாலைகளை புதிதாக ஆரம்பிக்கும்போது ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதுபோலத்தான் ஆஸ்பத்திரிகளை அமைக்கும்போதும் ஆஸ்பத்திரிகள் இல்லாத இடங்களில் அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். மாவட்ட தலை நகரங்களிலும் தாலூகா ஹெட்குவாட்டர்களிலும் தான் அமைக்கவேண்டும் என்று அமைக்கக்கூடாது எந்தெந்த இடங்களில் இல்லையோ அந்தந்த இடங்களில் அமைக்கவேண்டும். அவைகளுக்குத்தான் முதல் இடம் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது விவசாய வருமான வரியைப் போடப் போகிறார்கள். அந்த வரி வரவேற்கத்தக்கதானாலும்கூட அது சிறு விவசாயிகளை அதிகமாக பாதிக்கும். அவர்கள் கணக்குக் கொடுக்கும் முறையில் அவர்கள் அதிகாரிகளிடத்தில் சிக்காமல் இருக்கும் அளவில் அரசாங்கம் அதை கவனித்து யோசனை செய்து அந்த முறையில் அந்த வரியை விதிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்குப் பேசுவதற்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* Sri A. A. RASHEED : Mr. Deputy Speaker, I rise to welcome the budget presented by the Hon. Finance Minister for the year 1958–59. There is the 'Panch Shila' for the whole of India, a policy welcomed and acclaimed by all over the World. Let us have a Panch Shila in the economic field also. The Panch Shila in the economic field should include (1) good food, (2) good clothing, (3) a roof to live in, (4) employment and (5) social welfare. That is



6th March 1958] [Sri A. A. Rasheed]

the Panch Shila which I contemplate. Any budget which gives these things should be considered a good budget. Analysing the budget presented to the Assembly by the Hon. Finance Minister, I think it solves most of the problems I have narrated and hence it should be welcomed by one and all. Moreover, it is a surplus budget.

Sir, during the British regime, the Central Government's budget depended on two things, viz., rains and rails. I refer to total rainfall, and income from the Railways. Though our budget is somewhat dependent on rains, it is not dependent on rails. Once the Projects like Sathanur, Amravathi, Krishnagiri, and Manimuthar bear fruit, I am sure our food problem would be solved since the shortage is only two lakhs of tons. I regret to state that no mention has been made in the budget about Krishna-Tungabhadra-Palar Project. Though the scheme could not be included in the Second Plan, at least a survey should be made during the Second Plan period. We must impress upon the Andhra Government as well as the Central Government that it is in their own interest as well as ours that it should be taken up, because, it would solve their flood problem and it would solve our food problem.

Sir, I regret to state that our outlook on life is becoming narrower. We are trying to convert our State into a sort of puritan one. On the pretext of the enforement of the Prohibition Act, Suppression of Immoral Traffic Act, Gaming and Betting Act, innocent persons are being arrested and sometimes they are tortured too. Since the Kodambakkam incident is *sub judice*, I shall not refer to it. But, I wish to point out that such incidents do take place and innocent people are tortured. In order to allay the fear in the public mind that the police is there to persecute the innocent and not to prosecute the guilty, let us hold an enquiry. Let us also remember that we cannot reform society by legislation. We have to educate our people by propaganda.

It is disappointing that the Union Government have not accepted our request to increase their grant under Income-tax. They have increased from 55 to 60 per cent. I think the resignation of Sri T. T. Krishnamachari is indeed regretable and had he been in the Central Cabinet, I am sure he would have been something more.

Sir, recently, our Minister for Industries issued a statement in which he expressed the fear that the aluminium factory might not be located in Salem as other States are clamouring for it and want that the factory should be established in their own States. If that is a fact, I am afraid we will be giving a sort of fillip to the separatist move of the Opposititions parties. Let us tell the Central Government that the factory should be established in Salem as was originally planned.

Since I belong to the Leather Industry, I would like to say a few words, about that industry. Sir, the Open General Licence

[Sri M. Jangal Reddiar] [6th March 1958

விவசாய வருமான வரியானது சுமார் 80 சதவிகிதம் உள்ள விவசாயிகளைத்தான் பாதிப்பதாக இருக்கிறது. எங்கள் ஜில்லாவில் ஆலைக்கு கரும்பு பயிரிட்டுக் கொடுக்கும் விவசாயிகளைத் தவிர, உணவுப் பொருள் பயிரிடும் விவசாயிகளின் நிலைமையை எடுத்துக்கொண்டு பத்து வருஷக் கணக்கைப் பார்த்தால், கடன்காரனாக இருக்கும் விவசாயியைத்தான் பார்க்க முடியுமே தவிர, சௌகரியமாக இருக்கிறவனைப் பார்க்கமுடியாது. எந்த விவசாயியும் கடனாளியாகிப்போய் கீழ் தசையில் போவதைத்தான் பார்க்கிறோமேயொழிய ஒருவனும் முன்னுக்கு வரவில்லை, சௌகரியமாக இருக்கவில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

பட்ஜெட்டில் குறைந்திருக்கும் தொகை ஒரு கோடி நாலு லட்சம் ரூபாய். நாம் கொஞ்சம் சிக்கன முறையில் இருந்தால் ஒரு வரியும் போடாமலேயே இதைச் சேர்த்துக்கொள்ளலாம். பெரிய நகரங்களில் தேவைக்கு அதிகமாக வீடு வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு ஏன் வரி விதிக்காமல் இருக்கிறார்கள் என்று கேட்கிறேன்.

மகாத்மா காந்தி என்று சில விவகாரத்தில் சொல்லிக்கொண்டிருக்கும் இந்த அரசாங்கம் 500 ரூபாய்க்கு மேற்பட்டு சம்பளம் யாரும் வாங்கக் கூடாது என்று அவர் சொன்ன திட்டத்தை இவர்கள் கையாண்டு கொண்டிருக்கிறார்களா என்று நான் கேட்கிறேன். ஆயிரம் ரூபாய்க்கு மேற்கொண்டு சம்பளம் வாங்கிக்கொண்டிருப்பவர்களுடைய சம்பளத் தொகையைக் குறைத்தும், மந்திரிகளுடைய சுற்றுப்பிரயாணத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டும், மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது உத்தியோகஸ்தர்களுக்கு ஆகும் சுற்றுப்பிரயாணச் செலவையும், போலீஸ் பந்தோபஸ்து செலவையும் குறைத்தால், பல லட்சம் ரூபாய் மிச்சமாகும். அதைப் போல் சிக்கன வழியை நாம் கையாண்டு ஆடம்பரச் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

4-30 p.m. டெவலப்மெண்ட் திட்டம் நடத்துகிறார்கள். நடைமுறையில் அது இருப்பதைப் பார்த்தால், அதில் பெரிய ஏமாற்றத்தைத்தான் நாம் காண்கிறோம். ஆனால் திட்டம் என்னவோ அருமையான திட்டம். நியாயமான திட்டம். அதில் செலவாகக்கூடிய வீணான விரயங்களை எல்லாம் சிக்கனப்படுத்தினால் போதும் நமது வரவு செலவுக் கணக்கில் துண்டு விழாது. கொஞ்சம் விழுந்தாலும் அதைச் சமாளிக்கலாம். இன்றைக்கு அந்தத் திட்ட அதிகாரிகளுக்கு எல்லாம் ஜீப் கொடுத்திருக்கிறார்கள். சீயக்காய் தூள் வாங்கவேண்டுமானாலும், கீரை வாங்கவேண்டுமானாலும் ஜீப்பில் போகிறார்கள். இதற்கெல்லாம் எவ்வளவு பெட்ரோல் ஆகும்? கார் செலவு என்ன? அவர்களுக்கு ஆகும் செலவில் பாதித் தொகையைச் செலவிட்டால் போதும். அவ்விலாகாவையே கலைத்துவிட்டு இப்போதுள்ள தாசில்தாரிடமே இரண்டு கிளார்க்குகளைக் கொடுத்தால் அவர்கள் அந்த வட்டாரம் பூராவும் இத்திட்டங்களை பார்வையிட்டு நல்ல முறையில் வேலை செய்வார்கள். அப்படிச் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் இப்போது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். சென்ற மகா யுத்தத்தினால் தரைமட்டமான ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் இன்றைய தினம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கின்றன, நாம் போய்க் கேட்டால் நமக்கு உதவக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆனால் பத்து வருஷம் ஆகிறது நமக்கு சுதந்திரம் வந்து. இன்றைய தினம் நாம் பிறநாடுகளிடம் பிச்சை வாங்கக்கூடிய நிலையிலேயே இருக்கிறோம் என்பது வெட்கப்படவேண்டிய விஷயமாகும். நம்முடைய ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொண்டால் இதர நாடுகளைப்போல் நாம் கண்டிப்பாக முன்னேற முடியும். அந்த வகையில் நமது பட்ஜெட் தயாரிக்கப்பட வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.



6th March 1958] [Sri M. Jangal Reddiar]

இன்றைக்கு அரசியலார் எந்த வரியைப் போட்டாலும் தங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது, எதையும் பாஸ் செய்துவிடலாம் என்கிற மனப்பான்மையில் எதையும் செய்யக்கூடாது. எதிர்க்கட்சியில் இருக்கிறவர்களும் சரி, ஆளும் கட்சியினரும் சரி நாட்டில் இருக்கக்கூடிய கஷ்டங்களை தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் வைத்துக்கொண்டு நாட்டு மக்களின் நலனைக் கருதி வரி இனங்களைக் கைவிட்டு பட்ஜெட்டை நல்ல முறையில் திருத்தி அமைக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRIMATHI A. SUARES : Mr. Deputy Speaker, there is no necessity for me this year to make a plea before this House to allot the full quota of grants for Anglo-Indian schools, because in G.O. Ms. No. 1677, Education, dated 10th September 1956, the Government were pleased to make a promise not to enforce any cut in the grants for the current triennium which ends this year. Once more, I wish to convey to the Government the gratitude of the community for this gesture of goodwill and appreciation of the loyalty and co-operation of Anglo-Indian in the development of our country.

Our schools have made good progress during the past year. The strength has increased greatly in most schools. I am pleased to report that three-Middle schools have been upgraded to High Schools this year with the kind approval of the department. This is a great boon not only to Anglo-Indians but also to non-Anglo-Indians. Because, the City High Schools had reached their maximum strength in the upper classes and could not take in more pupils.

This year, the budget estimate for Anglo-Indian education amounts to Rs. 8,45,300 as against the revised estimate of Rs. 8,62,200 of last year. It is less by Rs. 16,900. This is due to the fact that the Building grants have been reduced in this year's Budget. May I request that a part of this savings be allotted as an additional amount towards mid-day meals for poor Anglo-Indian children. Last year, only 700 children received the benefit of mid-day meals in the city of Madras. Owing to stringent rules, only certain pupils within a certain age-limit and childern of parents within a certain salary-limit are admitted to the benefit of mid-day meals. Besides this number, there are hundreds of children in the city schools who do not get a square mid-day meal. In this year's budget, Government have allotted Rs. 20 lakhs for the free supply of mid-day meals for children studying in elementary schools. The Mayor of Madras by her forceful drive for funds for mid-day meals for poor children in the Corporation schools has focussed the attention of the public on this dire need of the poor. At present, 27,000 poor children are being fed in the Corporation schools. In keeping with these advancements, I request that an additional sum be given to the poor Anglo-Indian children as well for the purposes of mid-day meals.

Sir, I wish to make a representation regarding the admission of Anglo-Indians in Professional Colleges, particularly Engineering

[Sri T. Irusappan] [6th March 1958

சொல்லுகிறார். தாசில்தாரைக் கேட்டால் என்னிடம் வந்து சேரவில்லை என்று சொல்லுகிறார். இதைப்பற்றி என்னிடம் வந்து சொன்னார்கள். கணக்குப்பிள்ளை இந்த ஏழைகளைப் பார்த்து " எம்.எல்.ஏவிடம் சொல்லி விட்டீர்களே, அவர்களிடத்திலேயே போய் வாங்கிக்கொள்ளுங்கள் " என்று சொல்லுகிறாரும். நான் இதைப்பற்றி கலெக்டரிடம் சொன்னேன். அவர்கள் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இந்த விஷயத்தில் கணக்குப்பிள்ளை மற்ற அதிகாரிகளுக்குத் தகுந்த உத்திரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியில் ராமநாயக்கன்பாளையம் என்ற இடத்தில் ஒரு ஏரி கட்டவேண்டும் என்று சொன்னோம். இதைப்பற்றி குமாரசாமி ராஜா காலத்திலேயே பரிசீலிக்கப்பட்டது. இதனால் 5,000 ஏக்கரா நஞ்சை நிலங்கள் வளம் பெறும். ஆறு, ஏழு ஆண்டுகள் ஆனபோதிலும் இதில் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. இங்கு உடனடியாக ஏரியைக் கட்ட வேண்டும். இந்த ஏழை ஜனங்கள் காட்டுப் பிரதேசத்தில் அவல நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு குடிக்கத் தண்ணீர் இல்லை. இருப்பதற்கு வீடு இல்லை. அவர்கள் குழந்தைகள் படிப்பதற்கு பள்ளிக்கூடம் இல்லை. அவர்களுக்கு உடனடியாக ஏதாவது வசதி செய்துகொடுக்கவேண்டும்.

ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டில் என்னை ஒரு மெம்பராக சேர்த்துக்கொள்ளவில்லை. தி.மு.க. வைச் சேர்ந்தவன் என்பதனாலோ, எதிர் கட்சியைச் சேர்ந்தவன் என்பதினாலோ, அங்கு இருக்கக் கூடிய ஊழல்களை அம்பலப்படுத்திவிடுவேன் என்பதனாலோ, என்னை ஒரு மெம்பராக சேர்த்துக்கொள்ளவில்லை. நான் இதைப்பற்றி ஜில்லா கலெக்டரைக் கேட்டேன். அவர் என்னை கமிட்டியில் ஒரு மெம்பராகபோட்டு இருப்பதாக சொன்னார். ஆனால் எந்தக் கமிட்டிக்கும் எனக்கு அழைப்பு வரவில்லை. என்னுடைய தொகுதியில் இரண்டு ஹரிஜன மாணவர் விடுதிகள் இருக்கின்றன. அந்தத் தொகுதியின் பிரதிநிதி என்ற காரணத்துக்காக என்னை அந்தக் கமிட்டியில் ஒரு மெம்பராக போட்டிருக்கவேண்டும் அல்லவா ? ஆனால் அப்படிச் செய்யவில்லை. அங்கு காங்கிரஸ்காரர்கள் தான் இருக்கிறார்கள். மேல் சாதிக்காரர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தப் பிள்ளை ஏழை என்பது தெரியுமா ? எதிர்க்கட்சி அங்கத்தினர்களை இந்த கமிட்டியில் பிரதிநிதித்துவம் கொடுத்து சேர்த்துக் கொண்டால்தானே ஜன நாயக ஆட்சி முறை நடப்பதாகச் சொல்லமுடியும் ?

முதுகளத்தூர் கொல்லைக்குப்பின் சாதிப்புரட்சி இப்பொழுது பல கிராமங்களுக்கு பாவிக்கொண்டு தான் இருக்கிறது. அதைப் பரவாமல் தடுக்க சர்க்கார் ஏதாவது தடை செய்ய வேண்டும். தீண்டாமை ஒழிப்புக்கு பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. கிராமங்களுக்குச் சென்று பிரசாரம் செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில்தான் இந்தப் பிரசாரம் செய்யப்படுகிறது. ஜாதி இந்துக்கள் இருக்கும் இடங்களில் செய்வதைக் காணோம். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஒரு ஹரிஜன ஆசிரியர் சைகிலில் போய்க்கொண்டிருந்தாராம். சாதி இந்துக்கள் அவர்களை அடித்து விட்டார்கள். சரியான ருஜூப் இல்லை என்று சொல்லி கேசை தள்ளிவிட்டார்கள். சாதி இந்துக்கள் சாட்சி சொன்னால் கேசை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆனால் சாட்சியம் சொல்லுவதற்கு யாரும் முன்வரவில்லை. இம்மாதிரி எல்லாம் இல்லாமல் ஜனநாயக ஆட்சி நடைபெறவேண்டுமென்ற முறையில் தென்னாடு தனியாய்ப் பிரிய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வாழ்க திராவிடம். வணக்கம்.

4-25 p.m. SRI A. S. SUBBARAJ : உதவி சபாநாயகர் அவர்களே. நிதி மந்திரி அவர்கள் இங்கு சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட்டை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். நமது மாகாணம் எல்லாத் துறைகளிலும் முன்னேறி யிருக்கிறது. அதிலும் முக்கியமாக நீர்ப் பாசன விஷயமாக பல திட்டங்கள் இங்கு குறிப்பிட்டிருந்தாலும் பெரிய திட்டங்கள்



6th March 1958] [Sri A. S. Subbaraj]

இனி நமது மாகாணத்தில் இல்லை. ஆகவே சிறு திட்டங்களுக்காக பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அம்மாதிரி ஒதுக்கி இருக்கிற பணம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஏனென்றால் அம்மாதிரி திட்டங்கள்தான் நமது மாகாணத்திலும், பிராந்தியத்திலும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே மாகாணத்தில் இன்னும் அதிகமாக இந்தத் திட்டங்களுக்காக பணத்தை ஒதுக்கி இருக்கவேண்டும். எப்படி இருந்த போதிலும் எல்லா வழிகளிலும் அதிக பணம் செலவழிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். பெரிய திட்டம் நமது மாகாணத்தில் இல்லாது போனாலும், நமது அண்டை மாகாணமாகிய கேரள மாகாணத்தில் நிறைய ஆற்று நீர் சமுத்திரத்தில் வீணாகப் போகிறது. இதைத் தடுக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக சொல்லி வந்திருக்கிறார்கள். இப்போது பரம்பிக்குளம் திட்டம் பற்றித்தான் பேசப்படுகிறது. ஆனால் கிரியாறு, கல்லாறு, பம்பையாறு முதலிய திட்டங்கள் எல்லாம் பேசப்படாமல் இருக்கின்றன. அதை அப்படியே விட்டு விடாமல் அவசியமாக எல்லாத் திட்டங்களையும் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன், ஏனென்றால், மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களுக்கு மேற்சொன்ன திட்டங்கள் மிகவும் உதவியாக இருக்கும். ஆகையால் இதைப்பற்றி கேரள சர்க்காருடன் பேசி தீர்க்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத் துறையில் மிகவும் முன்னேறியிருக்கிறோம் என்பது நன்றாகத் தெரியும். ஆனால் விவசாயிகள் பம்பு செட்டுகளுக்காக ' மினிமம் ' சார்ஜ் கட்ட வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றால் மினிமம் சார்ஜ் கட்டுவதற்குப் பதிலாக அவர்கள் எவ்வளவு மின்சாரம் உபயோகிக்கிறார்களோ அதற்குண்டான தொகையை வசூல் செய்ய வேண்டும், என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

குறிப்பாக காடுகள் வளர்ப்பு விஷயத்தில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்துவதாக எழுதப்பட்டு இருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் அநேக பிராந்தியங்களில் காடுகள் அதிகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. இதை நாம் பாதுகாக்க வேண்டும். அது மட்டும் அல்ல. ஜமீன் பிரதேசத்தில் இப்போது காடுகள் அழிக்கப்பட்டு அங்கு விவசாயம் நடந்து கொண்டு வருகிறது. காபி உணவு, பருத்தி முதலிய பயிர்கள் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. அங்குள்ள சிறு குடியானவர்களை வெளியேறச் சொல்கிறார்கள். இம்மாதிரி விவசாயிகளை முதலில் வெளியேற்றாமல் தடுக்க வேண்டும். அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். பெரிய விவசாயிகள் வெளியேறினால் பாதகம் இல்லை. ஆனால் சிறு விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

அதே சமயத்தில் அவர்களுக்கு பட்டா போட்டுக் கொடுக்க வேண்டும் 4–30
என்பது முக்கியம். இப்பொழுது சர்வே நடந்து கொண்டு வருகிறது. p.m.
சர்வே முடிந்து இன்னும் செட்டில்மெண்ட் முடியவில்லை. செட்டில்மெண்டை அவர்களுக்கு உடனே செய்யாவிட்டாலும் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக காடுகள் அழிப்பு விஷயத்தில் சர்க்கார் பொது மக்கள் அடங்கிய ஒரு அட்வைசரி கமிட்டியைப்போட்டால் அவர்கள் காட்டிலாகா உத்யோகஸ்தர்களுடன் கலந்து காடுகளை எப்படி மாற்றுவது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பதையெல்லாம் அரசாங்கத்திற்கு சொல்லிக்கொள்ள முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு சம்பந்தமாக எங்கள் பிராந்தியத்தில் இப்பொழுதுதான் ஜமீனிலிருந்து எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சர்வே முடிந்த காரணமாக அவர்களுக்கு இந்த அரசாங்கம் உதவி கொடுக்க முடியவில்லை. அதனால் அவர்களுக்கு அரசாங்க உதவி கிடைக்கும்படி செய்வதற்கு

and Medical Colleges. Last year, only two Anglo-Indians were admitted into the Guindy Engineering College and three more in the pre-Engineering courses in Guindy and Loyola Colleges. The total numbers selected for the Engineering and pre-Engineering courses were 395 and 368 respectively, of which 48 and 20 belonged to the Scheduled Castes. This year, it is stated in the newspapers that a common Selection Committee will be appointed to select candidates for all the Engineering Colleges in the State, both Government and private. This will give an over-all picture for the whole State. I request that Anglo-Indians may be given a little preference this year. I do not ask for any ' reservation ' for Anglo-Indians, for I know it is not provided for in the Constitution. But, I do ask for a ' consideration ' for this small linguistic minority. The community as a whole is not well off and cannot afford to send their children for long and expensive professional courses. The few who are financially able to send their children for higher studies are faced with the difficulty of not being able to secure seats for their children, in the Professional colleges in spite of their having secured first class passes in the pre-University or Intermediate examination. This is because of the fact that they cannot compete with the large number of candidates from other communities as far as total marks are concerned. If a directive is given to the Selection Committee, Anglo-Indians and other minorities will find places in some of the professional colleges.

Sir, the same difficulty applies to admission into medical colleges also. Last year, only 2 Anglo-Indian girls were admitted in the Madras Medical College and 2 in the pre-Medical course in Queen Mary's College. The total numbers admitted in the Medical and pre-Medical courses were 345 in each course of which 41 and 22 belonged to the Scheduled Castes. With the proposal to start one more Medical College in Tanjore this year, I hope it will be possible to give a few more seats to Anglo-Indians. We read in the newspapers that there are some hospitals in rural areas without doctors. The State requires many more doctors. When selections are made this year, if some preference is given to the minority communities, we can produce some more doctors within the next few years.

5-00 p.m. After the reorganization of States, there are only 12 districts in the Madras State. Of these only 6 districts have separate Women's Colleges besides the Madras City and these are Tiruchirappalli, Coimbatore, Tirunelveli, Madurai, North Arcot and Ramanathapuram. There is no need for me to stress the need for higher eduction for women. Times have changed during the last few decades. Before this, girls were prepared for marriage at an early age. Then the S.S.L.C. or the Matriculation was considered as sufficient education for girls. But conditions are different now. Educated women are taking their rightful place in various spheres. These are days when we have a Lady Governor, a lady Mayor, a lady Sheriff (until recently), a lady Minister, lady M.L.As. and



M.L.Cs., lady lawyers, doctors, engineers and Secretaries. Ladies are recruited even to the I.A.S. posts and many posts that were reserved only for men in the past are now open to women also. To hold these high posts, higher education is required.

There are parents even in the present day who do not approve of co-education for their daughters. Will the Government consider starting Women's colleges in districts where there are no facilities for women's education in separate colleges? I find that the Vice-Chancellor of the Madras University in a recent speech at Madurai expressed the view that there should be separate colleges for women.

Of the 6 districts that have no women's colleges, I would like to make a plea for the Tanjore district. Tanjore is an important district in the State of Madras. It is the granary of the South and has a high population. The percentage of literacy among women in the Tanjore district is higher than in many other districts. There are 4 men's colleges in the Tanjore district but only one is located in the Tanjore town. If girls wish to attend a women's college, they will have to go to Tiruchirappalli by train, a distance of 30 odd miles. This causes great inconvenience, for they have to leave by an early morning train and return late at night. This is certainly not suitable for girls. A few parents who could afford the expenditure send their children to Madras or Madurai for higher studies.

The District Planning Board has recommended the opening of four professional institutions for the Tanjore district. Against this figure of four institutions plus four men's colleges, there is not a single college separately for women. There are three Girls' High schools in Tanjore town with good strength in the upper classes. Besides this, there are at least 200 girls studying in the local Boys' high schools. So, there will be no dearth of pupils in a women's college if it is opened.

Tanjore is the home of the Bharata Natya classical dance. This art could be developed in a women's college along with instrumental music. If Music and Home Science are introduced as some of the subjects in the women's college, the girls of the district will flock for admission. I request the Government to give some consideration to this suggestion of mine, in view of the fact that if we educate our girls, they will become enlightened mothers of tomorrow. Our country needs such mothers to preserve our culture, to train our future leaders, to take an active part in the developmental work envisaged in the Five-Year Plans, to do social service to the under-privileged, to assist the Government in non-official jobs and last but not least, to train the younger generation to be honourable, loyal, patriotic, self-sacrificing and devoted to our country.

SRI M. MAYANDI NADAR : உதவி சபாநாயகர் அவர்களே, இவ் வாண்டு நிதி நிலை அறிக்கையைப் பொறுத்து, அதை ஆதரித்துப்

அதற்கு மறுப்புக் கூறியும் பலர் பேசினார்கள். நிதியமைச்சர் அவர்களால்
சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த வரவு செலவுத் திட்டம் நாடு முன்னேறு
வதற்கான வழியில் அமைந்திருப்பதாலும், குறிப்பாக மக்கள் எந்தளவு
எந்தவரியைத் தாங்க முடியும் என்று பார்த்து அதற்குத் தக்கபடி
வரிகள் போட்டு, நல்ல திட்டங்கள் பல அதில் இருப்பதாலும் நான்
அதை வரவேற்றுப் பேசக் கூடிய நிலைமையில் இருக்கிறேன். உணவு
விஷயத்தை எடுத்துக் கொண்டால் மழை பற்றாக்குறை இருந்த போதிலும்
விவசாயத்தின் தன்மையாலும், அரசாங்கத்தின் உதவியாலும் ஓரளவு
உணவு பற்றாக்குறை சரிக்கட்டக் கூடிய முறையில் அமைந்திருப்பது
கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இன்று விவசாயத் துறையில்,
விவசாயிகளுக்காக அரசாங்கம் செய்து வரும் நல்ல காரியங்களோடு,
பருவ மழையும் சரிவரப் பெய்யுமானால் உணவுப் பற்றாக் குறையை
நாம் எளிதில் போக்க முடியும் என்ற தைரியத்தில் தான் நாம்
இன்று இருக்கிறோம். காரணம் என்னவென்றால் அரசாங்கம் விவசாயி
களுக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அவைகளை எல்லாம்
செய்து வருகிறது, அரசாங்கம். நல்ல வகையில் வித்துக்கள் வாங்கு
வதற்கும், உரங்கள் கிடைப்பதற்கும் அரசாங்கம் வேண்டிய உதவி அளிக்
கிறது. ஆனால் மாற்றுக் கட்சியினர் எந்தத் திட்டத்தைக் கொண்டு
வந்தாலும், எதை எதிர்க்க வேண்டும் எதை ஆதரிக்கவேண்டும் என்று
இல்லாமல் எல்லாத் திட்டங்களையும் எதிர்க்கிறார்கள். ஜனங்களுக்கு
நன்மை செய்யக் கூடிய திட்டங்களை ஆதரித்தும் ஜனங்களுக்கு கஷ்டம்
விளைவிக்கும் திட்டங்களை எதிர்த்து கண்டிக்கவும் வேண்டும் என்ற
முறையில் அவர்கள் இருக்கவேண்டுமென்று நான் அவர்களுக்கு சொல்
லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள், நம் மாகா
ணத்தில் அநேகமாக எல்லாம் முடியக் கூடிய தருவாயில் இருக்கிறது.
நமது சர்க்கார் விவசாயத் துறையில் வேண்டிய வசதிகள் எல்லாவற்றை
5-10 p.m. யும் அளிக்கத் தயாராயிருக்கிறது. மேலும் அரசாங்கத்தின் மூலமாக அவர்
களுக்கு எந்தெந்த வகையில் கடன் உதவி கிடைக்கின்றன என்பதைப்பற்றி
அதிகமான பிரச்சாரம் செய்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கி
றேன். அடுத்தபடியாக பள்ளிக்கூடங்களை எடுத்துக்கொண்டால் 500 பேர்
இருக்கக்கூடிய ஊர்களில் பள்ளிகள் வசதி செய்து கொடுத்து, அதன்
மூலம் எல்லா குழந்தைகளுக்கும் கல்வி போதிக்கவேண்டுமென்ற கருத்
தைக்கொண்டு அரசாங்கம் ஏற்பாடு செய்ய முற்பட்டிருக்கிறது. இந்த
வகையில் பள்ளிகளும் அதிகமாக பெருகிக்கொண்டு வருகிறது. மேலும்
வருடம் ஒன்றிற்கு ஒரு லட்சம் குழந்தைகளுக்கு மேல் பெருகி கொண்டு
போவதால் மேலும் பள்ளிக்கூடங்களின் பற்றாக்குறை இருந்து கொண்டு
தான் வருகிறது. ஆனபடியால் இதற்கேற்ற வகையில் அரசாங்கம் நல்ல
ஏற்பாடுகளை செய்து வருவதை நான் போற்றுகின்றேன். மேலும் ஹரி
ஜன குழந்தைகளுக்கு கல்வி வசதிக்காக பல துறையில் உபகார சம்பளங்
களும், பகல் போஜனம் கொடுப்பதற்கான உதவிகளும் கொடுத்துக்கொண்டு
வருகிறார்கள். அதே மாதிரி எல்லா மாணவர்களுக்கும் இந்த ஹரிஜன
குழந்தைகளுக்கு கொடுக்கக்கூடிய வசதிகளை மீனவர்களுக்கும் கொடுத்
தால் நலமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால்
ஹரிஜனங்களை காட்டிலும் இவர்கள் எந்த வகையிலும் உயரவில்லை
என்பதுதான் என் நினைப்பு. ஆனபடியால் அவர்களுக்கும் இந்த வாய்ப்
புக்களை கொடுத்தால் அவர்கள் உயர்வு பெறுவதற்கு ஒரு நல்ல ஏற்
பாடாக இருக்கும் என்று நினைக்கிறேன். இப்போது நம் நாட்டு
விவசாயத்தை எடுத்துக் கொண்டால் விவசாயமும் வேறு ஒரு சில
தொழில்களும் வளருவதற்கு மின்சாரம் மிக முக்கியமான கருவியாக
அமைந்திருக்கிறது. ஆகையால் இப்போது மின்சாரத்தை எடுத்துக்கொண்
டால் சென்னையைப் பொறுத்த வரையில் இங்கே போட்டிருக்கின்ற திட்ட
மானது இந்த ஆண்டில் முடியும் தறுவாயில் இருக்கிறது. இருக்கிறதி
னால் இப்போது ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறை நீங்கும் என்று அறிக்கையில்
நாம் பார்க்கிறோம். ஆனபடியால் இன்னும் நல்ல தன்மையில் தொழில்
முன்னேறுவதற்கு வசதி ஏற்படும். மேலும் இப்போது எல்லா கிரா
மங்களுக்கும், நம் மாகாணத்தில் கிட்டத்தட்ட ஆறுயிரம் சொச்சம்
கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இது நம் நாட்டில்



பெரிய அளவில் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆனபடி
தான் அரசாங்கம் நல்ல வகையில், ஜனங்களுக்கு எந்த வகையில்
யால், செய்து வருகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது. பொதுவாக
வேலை நமது சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் போக்கு
இப்போது வசதிகள் அதிகமாக பெருகியதால் ஜன நெருக்கம் அதிகமாக
வரத்து மேலும் சில பாலங்கள் இல்லாததினால் போக்குவரத்து
ஏற்படுகிறது. அதிகமாக ஏற்படுகிறது. இப்போது தண்டையார்பேட்டை பகுதி
நெருக்கம் திருவொற்றியூர் ஹைரோடும், இரண்டாவது பீச் ரோடும் இந்த
யில் நெருக்கடி காரணமாக முக்கியமாக கவனிக்கவேண்டி
போக்குவரத்து ஏனென்றால் சில சமயங்களில் 15 அல்லது 20 நிமிஷங்கள்
யிருக்கிறது. நின்றுவிட்டால் மிக கஷ்டமாகி விடும். ஆகவே இதை
போக்குவரத்து வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும்
உடனே கவனிக்க மிகவும் மோசமாக இருக்கின்ற தன்மையால் அதை
கடற்கரை அரிப்பு வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஏனென்
உடனடியாக கவனிக்க இடத்தில் மயானக்கரை எல்லாம் குறிப்பாக
றால் காசிமேடு என்ற போய்விட்டது என்று சொல்லலாம். ஆகவே அதை
முக்கால் பாகமும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்
யும் உடனடியாக
கொள்கிறேன்.

* **Dr. Srimathi SATHIYAVANIMUTHU** : சட்டமன்ற துணை தலைவர்
அவர்களே ! நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட நிதி நிலை
அறிக்கை குறித்து பலர் அவரவர்களுடைய கருத்துக்களை தெரிவித்திருக்
கிறார்கள். நான் இந்த அறிக்கையை ஒரேயடியாக எதிர்க்காவிட்டாலும்
அதில் காணுகின்ற சில குறைபாடுகளை சொல்ல விரும்புகிறேன். எதிர்
கட்சிக்காரர்கள் குறைகளைத்தானே எடுத்துச் சொல்ல முடியும் என்று
ஆளும் கட்சியினர் நினைக்கலாம். ஆனால் நாங்கள் எடுத்துச் சொல்லு
கின்ற அதே குறைகளைத்தான் ஆளும் கட்சியினரும் இன்னும் அதைவிட
ஆதாரபூர்வமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நாங்கள் புள்ளி விவரங்
களை எடுத்துச் சொல்லும்பொழுது இவைகளை யெல்லாம் எந்த குப்பைத்
தொட்டியிலிருந்து எடுத்தீர்கள் என்று எங்களைப் பார்த்து கேலி செய்
கின்ற ஆளும் கட்சியினர் இதே புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு
தான் இந்த அறிக்கையின் பேரில் அவற்றில் கூறப்பட்டிருப்பது எல்லாம்
சரி என்று வரிந்து கொண்டு பேச வருகின்றனர். நாங்கள் சொல்லுவதில்
ஆளும் கட்சியினருக்கு நம்பிக்கையில்லை என்றால் அது தவறு என்று
நான் சொல்ல வரவில்லை. காரணம் நிரூபிக்க முடியாத, பொருந்தாத
புள்ளி விவரம் கேலிக்குரியது. வேடிக்கையாகச் சொல்லப் போனால்,
வானத்தைப் பார்த்து ஒருவன் எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன
என்று கேட்டானாம் ஒருவன், அதற்கு ஒரு குறும்பன் பத்து கோடி
என்றோ கோடிக்கணக்கில் இருக்கிறது என்றோ பதில் சொன்னானாம். இல்லை
யென்று கேட்டவன் சொன்னதற்கு, நான் சொன்னது தவறு, அல்லது
சரியா என்று பார்ப்பதற்கு நட்சத்திரத்தை எண்ணிப் பார்த்துத் தெரிந்து
கொள் என்று பதிலளித்தானாம். அது போல புள்ளி விவரங்களைச்
பற்றி எடுத்துச் சொல்லும்பொழுது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்
சொன்னால் எதிர்க்கட்சியிலிருக்கிற நாங்கள் எண்ணிப் பார்க்கவா போகி
றோம் ? தவறு என்று கருதினால் ஆளுகின்ற வர்க்கத்திலிருக்கின்றவர்
அவற்றை சரியா அல்லது தவறா என்று பார்த்துக் கொள்ளவேண்டும்.
நாங்கள் குறைகளை மாத்திரம் காணவில்லை, பிழைகளையும் காணுகிறோம்.
நீங்கள் நினைக்கலாம், இவைகள் எல்லாம் அச்சுப் பிழையாக இருக்கலாம்
என்று நீங்கள் ஆயாசப்படலாம், இவைகள் எல்லாம் சின்னஞ்சிறு பிழை
கள் தானே என்று நாங்கள் கருதுவது இம்மாதிரிப்பட்ட சின்னஞ்சிறு
பிழையைக் கூட இந்த ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் திருத்த முடிய
வில்லையென்றால், இதற்கென்று நடத்தப்படுகிற தனி இலாகா இருந்தும்,
இதற்கென்று தனியாக காரியதரிசி இருந்தும் இந்த முக்கியமான நிதி
நிலை அறிக்கையில் ஒரு எழுத்துப் பிழையை திருத்த முடியவில்லை
என்றால் இவர்களா நாட்டிலுள்ள பல நலிவுகளை, பல குறைகளை
திருத்தப்போகிறார்கள், செப்பனிட போகிறார்கள் என்று சந்தேகப்படுகிறோம்.

இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாங்கள் அமைச்சர்களை பலமுறை பல இடங்களுக்கு அழைத்துச் சென்று குறைகளை எல்லாம் எடுத்துக் கூறியும் நேரில் எடுத்துக் காட்டியும் வந்திருக்கின்றோம். எங்கள் அறிஞர் அண்ணா அவர்கள் தண்டலம் என்ற பகுதியில், முதல் அமைச்சர் காமராஜ் அவர்களை அழைத்துச் சென்று அங்குள்ள குறைபாடுகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். கலைஞர் கருணாநிதி அவர்களும் கல்லணை என்ற பகுதிக்கு அமைச்சர் பக்தவத்சலம் அவர்களை அழைத்துச் சென்று நங்கவரம் விவசாயிகளின் போராட்டம் பற்றியும் அவர்களின் குறைகளைப்பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். நானும் அதே போன்று அமைச்சர் லூர்தம்மாள் அவர்களை எங்கள் தொகுதிக்கு அழைத்துச் சென்று அங்குள்ள குறைபாடுகளை எல்லாம் அம்மையார் அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். அம்மையார் அவர்கள் கேட்டார்கள், இம்மாதிரிப்பட்ட உங்கள் தொகுதி இந்த அழகிய சென்னை நகரத்தைச் சேர்ந்ததுதானா என்று கேட்டார்கள். அதோடு மாத்திரமல்ல, இந்த அழகிய சென்னை நகரத்தின் பகுதிகள் இவ்விதமாக இருக்கின்றது என்று கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். அதே போன்றுதான் இந்த சட்ட மன்றத்திலும் பல நிர்வாக ஊழல்களைப்பற்றியும் அதன் மூலம் ஏற்படுகின்ற சிக்கல்களைப்பற்றியும் ஆதாரங்களோடு எடுத்துச்சொல்லியிருக்கிறோம். இவைகளை எல்லாம் ஆட்சி நடத்துகின்றவர்கள் எந்த அளவுக்கு கவனிக்கின்றார்கள், எந்த அளவுக்கு புறக்கணித்து வருகின்றார்கள் என்பதையும் நாங்கள் பார்க்கின்றோம். இன்றைய தினம் சர்க்கார் நடத்துகின்ற பல நிர்வாக இலாக்காக்களிலும் பல ஊழல்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. சமீபத்தில் முதுகுளத்தூரில் நடைபெற்ற படுகொலைகளைப்பற்றி ஆராயும்போது அதற்கு காரணம் எதுவாய் இருந்தாலும் சரி, சர்க்கார் கொடுக்கப்பட்ட புகார்களின் மீது தேவையான நடவடிக்கை எடுக்காததே என்பதை உணர்ந்தோம். இப்போது சமீபத்தில் அனைவரும் திடுக்கிடச் செய்யும் அளவில் போலீஸ் இலாகாவில் நடைபெற்றிருப்பதை நாம் பார்க்கின்றோம். இவைகளைப் பார்த்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு இதைப்பற்றிக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

5-20 p.m. கோடம்பாக்கத்தில் நடைபெற்றிருக்கின்ற சம்பவத்தைப்பற்றி நினைத்தாலே நடுக்கம் ஏற்படுகின்றது. இந்த சம்பவத்தைப்பற்றி நீதி விசாரணை நடப்பதை நாம் அறிகிறோம். ஆகவே இது போன்ற நிகழ்ச்சிகள் நாடெங்கும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. சில தினங்களுக்கு முன்னால் நான் போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களிடத்திலே வட சென்னையிலிருக்கும் கல் மண்டபம் பி-4 போலீஸ் ஸ்டேஷன் ஸப் இன்ஸ்பெக்டர், பிரின்ஸ் என்று கூறப்படுகிற ஒருவர் செய்து வருகின்ற அக்கிரமங்களைக் குறித்துப் பல ஆதாரங்களுடன் எடுத்துச் சொன்னேன். சொல்லிச் சென்ற மறுநாள் என்னுடன் வந்து எடுத்துச் சொல்லிய எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர் காரணமில்லாமல் கைது செய்யப்பட்டு இருக்கிறார். நான் அமைச்சரிடம் பிரின்ஸின் கொடுமைக்குப் பலியாகி அடிக்கப்பட்டு, காலை ஒடிக்கப்பட்டிருப்பவரை அவருக்கு நேரில் நான் காட்டினேன். ஆதாரங்களை எடுத்துச் சொன்னேன். அதற்கு முன்னால், அந்த சப் இன்ஸ்பெக்டர் செய்து வரும் அக்கிரமங்களை, நான் சொல்வதற்கு முன்னாலேயே, கனம் கல்யாணசுந்திரம் அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். வன்னிய குல க்ஷத்திரியர்கள் ஒரு கூட்டம் கூடி, கண்டனத் தீர்மானம் போட்டு, அதை அமைச்சருக்குச் சொல்லியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். நானும் அமைச்சரிடம் என் நகலைத் தந்தேன். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களே அமைச்சரிடம் சொல்லியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவ்வளவு அமைச்சருக்குத் தெரிந்திருந்தும் அவர் இதுவரையில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. ஸப் இன்ஸ்பெக்டர் பிரின்ஸ் ஒருக்கால், அவர் பெயர் பிரின்ஸ் என்றிருப்பதால், நமக்குத்தானே நாடே சொந்தம், எந்த அக்கிரமத்தை வேண்டுமானாலும் செய்யலாம் என்று எண்ணிக்கொண்டார் போலிருக்கிறது. அங்குள்ள மக்கள் பயப்படுகிறார்கள், முதலமைச்சர் ஒரு நாடார், அதே போல போலீஸ் கமிஷனர் ஒரு நாடார், அதே போல அந்தத் தொகுதி உறுப்பினர் எனக்கு முன்னால் பேசிய தோழர் மாயாண்டி நாடார் ஒரு நாடார், இவரும் ஒரு நாடார், இப்படி நாடார் மயமாக இருக்கிறதே, எனவே, வட சென்னையில் அங்கு





இருக்கும் நிலைமை காரணமாக அங்கு உள்ள பொது ஜனங்கள் நாடார் ஆட்சியில் மற்றவர் யாரும் வாழ முடியாதோ என்பதற்கு எடுத்துக்காட்டாக பிரின்ஸ் என்பவர் பல அக்கிரமங்களைச் செய்து வருவதை ஆதார பூர்வமாக எத்தனையோ தடவை, எத்தனையோ பேர்கள் எடுத்து சொல்லியும்கூட இது வரையில் நடவடிக்கை எதுவும் எடுக்காததால் மக்கள் பயப்படுகின்றார்கள் சந்தேகப்படுகிறார்கள். நான் இந்தச் செய்தியை அமைச்சரிடத்தில் சொன்ன பிறகு எங்கள் தொகுதியில், எங்கள் கட்சித் தோழர் அடுத்த நாள் கைது செய்யப்பட்டிருக்கிறார். காரணம் தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பலர் 3-வது 4-வது வட்டத்தில் காரணம் இல்லாமல் கைது செய்யப்படுகிறார்கள். அமைச்சருக்கு நான் சொல்லிக்கொள்வதெல்லாம், இப்படிப்பட்ட . . .

**Sri M. MAYANDI NADAR :** ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர், இப்போது அம்மையார் அவர்கள் சொன்னது மது விலக்குக்குப் புறம்பாக அவர் மது விற்றதற்காக நாடார் ஒருவரைக் கைது செய்துகொண்டு போனார்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

**DEPUTY SPEAKER :** இது பாய்ண்ட் ஆப் எக்ஸ்பிளனேஷன், பாய்ண்ட் ஆப் ஆர்டர் ஆகாது.

**Dr. Srimathi SATHIYAVANIMUTHU :** அவர் வேறு ஒரு புதிய செய்தியைத் தருகிறார். அதற்காக அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு.) எனவே, மது விலக்கைக் காரணமாகக் கொண்டு இவ்வாறு நடவடிக்கைகள் நடக்கின்றன. ஆனால் போலீஸ் இலாகாவிலே, போலீஸ் ரெக்கிரியேஷன் கிளப்பில் மது தாண்டவமாடுகிறது என்று நான் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர்கள் வேண்டுமானால் பர்மிட் வைத்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். இப்படி நாட்டிலே பல அக்கிரமங்கள் தெரிந்தோ தெரியாமலோ நடந்து வந்து கொண்டிருக்கின்றன. எங்களைப் போன்றவர்கள் சொல்லுகிறார்களென்றால், எதிர்கட்சிக்காரர்கள் என்பதற்காக அனுமதிக்காமல் இருப்பதைப் பார்க்கும்போது எனக்குப் பல நினைப்புகள் வருகின்றன. உதாரணமாக, ஜாதியை ஒழிக்கவேண்டுமென்று பெரியார் ராமசாமி அவர்கள் போராட்டம் நடத்தி வருகிறார். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்பதை ஒத்துக் கொள்ளுகின்றார்கள். நம் நாட்டிலிருக்கிற சில நகர சபைகளில் தீண்டாமையை ஒழிப்பதற்காக அந்த நகரசபை எல்லைகள் நடத்துகின்ற ஹோட்டல்களில் உள்ள பெயர் பலகைகளில் ஜாதிப் பெயரை விலக்க வேண்டும், அந்த ஜாதிப் பெயரை வைத்து ஹோட்டல் நடத்துவதற்கு அனுமதி கேட்டால் கொடுக்க முடியாது என்று போட்ட திட்டத்தை, சர்க்கார் உரிமை கொடுக்க மறுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. ஏன் அதை மறுக்க வேண்டும். ஜாதியை ஒழிக்க வேண்டும் என்று பல திட்டங்களைப் போட்டு பெரியாரும், அவர்களைச் சார்ந்து நாங்களும் பிரசாரம் செய்து வருகிறோம். இவ்விதம் செய்து வருகின்றபோது எதிர்க்கட்சியினர் சொல்லி வருவதைச் செய்தால் பெயர் அவர்களுக்கல்லவா போய்விடும் என்று, மகன் செத்தாலும் பரவாயில்லை, மருமகள் கொட்டம் அடங்கவேண்டும் என்ற முறையிலே இருக்கிறது. . .

**Sri T. KARIA GOUNDER :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்கள் ஒருவருக்குப் பேச 10 நிமிஷங்கள் என்று சொன்னார்கள். நான் மணியைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறேன். பத்து நிமிஷங்கள் ஆகிவிட்டன. அவர்கள் பேசிக்கொண்டே யிருக்கிறார்கள். என்னை நேற்று 10 நிமிஷங்களுக்கெல்லாம் நிறுத்தி விட்டீர்கள். நீங்கள் செய்வது சரியா ?

**DEPUTY SPEAKER :** அதைப்பற்றி எனக்குத் தெரியும். இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் கிடையாது.

[6th March 1958

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : மன்றத் துணைத்தலைவர் அவர்களே, உள்ளதை எடுத்துச் சொன்னால் உடம்பு எரிகிறது என்பது போல் நேரம் ஆகிறது என்று சொல்லி என் பேச்சை நிறுத்துவதற்கு முயற்சிக்கிறார்கள். நான் மகிழ்ச்சியடைகிறேன். தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

DEPUTY SPEAKER : கனம் அங்கத்தினர் கரியா கௌண்டர் கூட நேற்று 3 நிமிஷங்கள் அதிகமாகப் பேசியிருக்கிறார்.

*SRI G. G. GURUMURTHI : சபைத் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டத்தை வரவேற்கிறேன். குறிப்பாக அதுவும் இந்த நடப்பு ஆண்டிலே ஸ்தல அபிவிருத்திக் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி ஜில்லாக்களில் வேலை தொடங்க இருப்பதைப் பார்த்து என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பட்ஜெட்டிலே சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையை வரவேற்கிறேன். ஆனால், இந்த குளம், ஏரி போன்ற சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவந்தால் நன்றாக இருக்குமென்று நம்புகிறேன். எனது தொகுதியைப் பொறுத்த வரையில் சிறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சிறிய ஏரிகள் சர்வே செய்யப்பட்டும், வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. காரணம் அந்த வேலைகளெல்லாம் அதிகச் செலவாகிறது என்ற ஒரே காரணத்திற்காக நிறுத்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக எனது தாலூகா, பவானி தாலூகாவில் நகலூர், வரக்கோம்பைத் திட்டமும் மாத்கர் கிராமத்து ஏரியும், சென்னம்பட்டி ஏரியும் பரிசீலனை நடந்தும் இது வரையில் எடுத்து நடத்தப்படவில்லை. சில நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் வந்த விவரம் மகிழ்ச்சிக்குரிய விஷயம். சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்து நடத்துவதைப்பற்றிக் கண்டிருந்த சங்கதி வரவேற்கத் தகுந்த ஒரு அம்சம். இந்தத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றினால் நல்ல பயன் உண்டாகும் என்று எதிர் பார்க்கலாம். குறிப்பாக இந்த ஏரி, குளங்களை இரண்டு வகையாகப் பிரித்து மைனர் இர்ரிகேஷன் டேங்க்ஸ், அதாவது குடி மராமத்து என்றும், பி.டபிள்யூ.டி. என்றும் இரண்டு இலாக்காக்கள் இருப்பதால் வேலை சரிவர நடப்பதில்லை. பி.டபிள்யூ.டியே எல்லாவற்றையும் மேற்கொண்டால் நல்ல பயன் உண்டாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொருத்த வரையில் நல்ல அபிவிருத்தி அடைந்திருக்கிறது. நடைமுறையில் இருக்கும் கஷ்டம் மக்களிடத்தில் புறம்பாகத் திரித்துக் கூறப்பட்டு வருகின்றது. கீழ் பவானித் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். கீழ் பவானித் திட்டத்தினால் மக்கள் நல்ல பயனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நீர்ப்பாசனத் திட்டத்திற்கும் மற்ற திட்டங்களுக்கும் வேறுபாடு உண்டு. மற்ற திட்டங்களில் இரவு பகல் எப்போதும் தண்ணீர் கஷ்டம் கிடையாது. இந்த நீர்ப்பாசனத் திட்டத்தின் தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். பத்து நாட்களுக்கு ஒரு தண்ணீர் விடுகிறார்கள். அதாவது டைம் ஷெட்யூல் வைத்து 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடுகிறார்கள். அதாவது ஒரு ஏக்கருக்கு ஒரு மணி தண்ணீர் பாயும். பத்து நாட்களுக்கு ஒரு தண்ணீர் என்றால் மாதத்திற்கு 3 தண்ணீர். ஆகவே, 6 மாதங்களுக்கு 18 தண்ணீர், அதாவது 18 மணி நேரம் தண்ணீர் பாய்கிறது. அதில் மழை பெய்து விட்டால் 2, 3 தண்ணீர் விட வேண்டிய அவசியம் இருக்காது. பதினைந்து, பதினான்கு மணி நேரத்திற்கு மேல் தண்ணீர் பாய்வது இடை
5-30 p.m. யாது. இப்பொழுது, அபிவிருத்தி வரியும் கட்டவேண்டியிருக்கிறது. ஏக்கருக்கு ரூ. 10, 12, அல்லது 20 கட்டுவதற்கு விவசாயிகள் ஆட்சேபணை செய்யமாட்டார்கள். எவ்வளவு வேண்டுமானாலும் வரிகள் கொடுப்பதற்குத் தயாராயிருக்கிறார்கள். ஆனால், நடைமுறையில் உள்ள கஷ்டங்களை நிவர்த்திக்க வேண்டுமென்பதுதான் அவர்களுடைய நோக்கம். இன்று ஒரு உயர்ந்த அதிகாரியையோ அல்லது ஓய்வு பெற்ற அதிகாரிகளையோ போட்டு லோயர் பவானியில் உள்ள நிலங்களைப் பல பாகங்களாகப் பிரித்து,



6th March 1958] [Sri G. G. Gurumurthi]

இனமாக வேண்டுமானாலும் கொடுத்து, அவர்களே சாகுபடி செய்து, நடைமுறையில் என்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை அறிந்து, அவற்றை நிவர்த்தி செய்தால் போதும்.

பருத்தி சாகுபடி செய்கிறவர்கள் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மேட்டூர் பிரதேசத்திலே இரண்டு பொதிக்கு மேல் சாகுபடி செய்யக் கூடிய எந்தப் பெரிய விவசாயியும் இருக்க முடியாது. இதன்படி 200 ரூபாய் வரை பருத்தி விற்பனையில் கிடைக்கும் சாகுபடிச் செலவைக் கணக்கிட்டால், அவர்கள் அதிகமான லாபம் சம்பாதிக்கிறார்கள் என்று சொல்ல முடியாது.

மேட்டூர் வாய்க்கால் பகுதிகளுக்கு கனம் மராமத்து இலாகா மந்திரி அவர்கள் வந்திருந்தார்கள். இந்த பிரதேசத்தில் மண்ட சாகுபடி முறை அமல் நடத்தப்படும் என்று வருஷா வருஷம் சொல்வதனால் தான் அங்கு குடியானவர்கள் உற்சாகத்தோடு விவசாயம் செய்யக்கூடிய நிலைமையில்லை. இதனால் காலாகாலங்களில் நாற்றுப் பாவ முடிவதில்லை. பூமியை பயன்படுத்துவதற்கு சாத்தியமில்லாமலிருக்கிறது. உணவு உற்பத்தி பெருக வேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்திலே, விவசாயிகள் பாடுபடுவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையிலே, முதலிலே நஞ்சை சாகுபடிக்கு என்று வரையறுத்துவிட வேண்டும். ஆனால் புதிதாக சாகுபடிக்கு வரும் இடங்களில் கரும்பு சாகுபடிக்குத் தடை விதித்திருக்கிறார்கள். கரும்பு சாகுபடி செய்யக்கூடாது என்ற தடை அநேக விவசாயிகளுக்குத் தெரியாது. இந்த நிலைமையிலே, தண்டத் தொகையை விதிக்காமல், வருகிற ஆண்டிலிருந்து கரும்பு சாகுபடி செய்யக்கூடாது என்ற உத்திரவை அனுப்பவேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பற்றிய வரையில் ரசாயன உரம், தழைகள் உரம், சரியான முறையில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. போதுமான அளவு உத்தியோகஸ்தர்கள் இல்லாததினால் விவசாயிகளுக்குத் தக்காவிக் கடன்களும் கொடுக்கப்படுவதில்லை. எங்கள் ஜில்லாவில் சென்டிரல் பாங்கிலே பணம் இல்லை என்று சொல்லி, அவர்களுக்கு நீண்டகாலக் கடன்கள் கொடுப்பதில்லை. கவுந்தப்பாடியில் ஒரு விவசாய பாங்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கேயும் பணமில்லை என்று சொல்லிக் கடன்கள் கொடுப்பதில்லை. உத்தியோகஸ்தர்களுக்கு வீணாகச் சம்பளத்தைக் கொடுத்து, நஷ்டத்திலேதான் பாங்கு நடக்கிறது.

முன்னேற்ற திட்டங்களை நடத்தும்போது, மக்களுக்குப் பயன்படும் வகையில் அந்தத் திட்டங்களை நிறைவேற்றினால், நல்ல முன்னேற்றம் ஏற்படுமென்பதில் ஐயப்பாடு கிடையாது. இன்னொரு சாகுபடி முறையும் அரசாங்கத்தினுடைய தடையினால் நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேட்டூர் வாய்க்கால், கீழ் பவானி வாய்க்கால் பிரதேசங்களில் உள்ள நிலங்களுக்கு மின்சாரம் வழங்க அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். இந்த வாய்க்கால்களிலே தண்ணீர் போகின்ற காலங்களைத் தவிர, மற்ற காலங்களிலாவது அனுமதி கொடுத்தால் நன்றாக இருக்கும். கிணறுகளில் நல்ல தண்ணீர் இருக்கும். "Minimum guarantee" கொடுப்பதற்கும் சௌகரியமாயிருக்கும், உணவு உற்பத்தி பெருகுவதற்கும் உதவியாயிருக்கும். இவைகளையெல்லாம் கவனத்தில் வைத்துக்கொண்டு, ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI R. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் நிதி நிலை அறிக்கையை வரவேற்று சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். அதில், முதலாவதாக பருவ நிலை, பிறகு விவசாய நிலை, அதன் பிறகு உணவு நிலைபற்றி சொல்லப்பட்டிருக்கிறது. உணவு நிலைமையைப் பார்ப்போமேயானால், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு, நமது சர்க்கார் சென்ற 7, 8 ஆண்டுகளாக மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்

[Sri R. Subramaniam] [6th March 1958

என்பது அவர்கள் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களிலிருந்து தெரியும். உணவு உற்பத்தி 1950–51-ல் 28 லட்சம் டன்னாக இருந்தது, 1955–56-ல் 44 லட்சம் டன்னாக மாறி, 1956-57-ல் 46 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. நமது ராஜ்யத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு 48 லட்சம் டன் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும், நடப்பு ஆண்டில் 3 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி பெருகும் என்று சொல்லு கிறார்கள். அதன்படி தேவையான 48 லட்சம் டன்னும் ஏறத்தாழ பூர்த்தியாகிவிட்டது என்றே சொல்லவேண்டும். இந்த நிலைமையில் நம் ராஜ்யத்தில் உணவுப் பற்றாக்குறை இருப்பதாகத் தெரியவில்லை. இருந்த போதிலும், நமது ராஜ்யத்திலிருந்து 2½ லட்சம் டன் அரிசி வெளியே போய், நமக்கு வெளியிலிருந்து கிடைக்கக்கூடியது 1 லட்சம் டன்னாக இருப்பதனால், அந்தக் குறையை ஈடு செய்யவேண்டிய நிலையிலிருக்கிறோம் என்பதைத் தவிர, உண்மையில் பற்றாக்குறை இருப்பதாகத் தெரியவில்லை. இப்பொழுது நாம் சரிக்கட்டவேண்டியதெல்லாம் ஒரு லட்சம் டன் அரிசிதான்.

இப்பொழுது, தஞ்சை ஜில்லாவில் 13½ லட்சம் எக்கர் நிலங்களிலே 9½ லட்சம் டன் விளைந்து வருகிறது. இன்னும் அதிகமாக சிரத்தை எடுத்துக்கொண்டு, அங்கேயிருக்கும் விவசாயிகளுக்கு ஊக்கம் அளித்தால், இந்த ஒரு லட்சம் டன்னையும் தஞ்சை ஜில்லாவில் உற்பத்தி செய்வது கடினமாக இராது என்று கூறுகிறேன். இப்பொழுதுள்ள நிலையில், 13½ லட்சம் எக்கரில் 15 சத விகிதத்திலிருந்து 20 சதம் வரையில்தான் இருபோக சாகுபடி நடந்து வருகிறது. விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீர் வசதி, கடன் வசதி, உரம் முதலியவைகளை அளிப்பது மூலம் 20 சத விகிதம் சாகுபடியை அதிகரிக்க வழியிருக்கிறது. ஆனால் இப்பொழுது மூன்று போகம் பயிர் விளைவிப்பதற்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள். மூவாயிரம் எக்கர் நிலங்களில் பயிர் செய்யத் திட்டமிட்டு, இப்பொழுது 1,500 எக்கர் நிலங்களில்தான் விளைவிப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது. பொது மக்கள் சம்பந்தப்பட்ட வரையில், இது ஒரு புதிய முறை. ஆகவே எல்லோரும் இதில் ஈடுபடுவதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். இருபோக சாகுபடி நிலங்களை அதிகப்படுத்தி, அதற்கு வேண்டிய தண்ணீர், கடன் வசதிகளைச் செய்து கொடுத்தால் மிகவும் சுலபமாக தஞ்சை ஜில்லாவிலேயே இந்த 1 லட்சம் டன் அரிசியை பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரசாயன உரத்தைப்பற்றி நாம் அதிகமாகப் பிரசாரம் செய்துவிட்டோம். விவசாயிகள் அதை அதிகப்படி உபயோகிக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்த ஆண்டில் 1,04,000 டன் அமோனியம் சல்பேட் உரத்தை வழங்க அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. ஆனால் 75,000 டன்தான் வழங்க முடிந்தது. இருபத்தொன்பதினாயிரம் டன் குறைவாகவே கிடைத்திருக்கிறது. இந்த உரத்தைப் பொறுத்த வரையில், வருஷா வருஷம் போட்டுக்கொண்டு வந்தால்தான், விளைச்சல் குறைவு ஏற்படாமலிருக்குமே தவிர, இந்த வருஷம் போட்டுவிட்டு அடுத்த வருஷம் நிறுத்திவிட்டால் விளைச்சல் குறையும், கூடுதல் விளைவு ஏற்படாது.

இப்பொழுது டெல்டாப் பகுதிகளில் தேக்குமரம் நடுவதற்கு ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் ஏழை விவசாயிகள் பயிர் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களை அப்புறப்படுத்தினால் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாவார்கள். அந்த ஆற்று ஓரங்களில் தேக்கு நடுவது நல்லது தானா என்பதை தீர்க்கமாக விசாரணை செய்து, நல்ல பலன் கிடைக்காது என்றால், அதைக் கைவிட்டு, மறுபடியும் அந்தப் பகுதிகளை ஏழை விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

5-40 p.m. துண்டு விழக் கூடிய 106 லக்ஷத்தை ஈடு செய்வதற்காக வரிகள் 8 இனங்களின் மேல் போடப்பட்டு இருக்கின்றன. [illegible] மூலமாக 70 லட்சம் ரூபாய், [illegible] மூலமாக 30 லட்சம், விவசாய



6th March 1958] [Sri R. Subramaniam]

வருமான வரி மூலமாக 70 லட்சம், ஆக நமக்கு மொத்தமாக கிடைக்கக் கூடியது 170 லட்சம் ரூபாய். பஞ்சாயத்துகளுக்கு கொடுக்க வேண்டியது போக மீதி 120 லட்சம் என்று அவர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகையால் நமக்கு 15 லட்சம் ரூபாய் அதிகமாகவே இருக்கிறது.

விவசாய வருமான வரியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். டாக்ஸேஷன் என்குயரி கமிஷனும், 3,000 ரூபாய் வருமானத்துக்கு மேல் வருகிறவர்களுக்கு விவசாய வருமான வரி போட வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நமது சர்க்கார் விவசாய வருமானம் மட்டும் இல்லாமல், இதர வருமானத்தையும் சேர்த்து மொத்தமாக 3,000 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு இந்த வரியை விதிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு பாங்கியில் ஒரு குமாஸ்தாவுக்கு சம்பளம் 100 ரூபாய் என்று வைத்துக்கொள்ளுவோம். அவருக்கு 5 எக்கர் நிலம் இருந்தால், இந்த இரண்டு இனங்களையும் ஒன்று சேர்த்து 3,000 ரூபாய்க்கு அதிகமாகவே வருமானம் வருகிறது என்று கணக்குப் பிள்ளை சொல்லி விடுவார். சாதாரணமாக 10 எகர் நிலம் மட்டும் வைத்திருந்தாலும் 3,000 ரூபாய் வருமானம் வரும் என்று கணக்குப் பிள்ளை எடுத்துக்கொள்வார். செலவை கணக்கில் எடுத்துக்கொள்வது இல்லை. வித்தியாசத்தை மட்டும்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

கொஞ்ச காலத்திற்கு முன் புரொக்யூர்மெண்ட் இருந்த பொழுது ஏ, பி, சி என்ற மூன்று வித அக்கௌண்ட் இருந்தது. ஏ அக்கௌண்ட் மொத்த வருமானத்தை காட்டும். பி. அக்கௌண்ட் செலவைக் குறிக்கும். ஸி. அக்கௌண்ட் நிகர வருமானத்தைக் குறிக்கும். எந்த அடிப்படையில் வருமானத்தை நிர்ணயிக்கப் போகிறார்கள் என்று சரியாகப் புரியவில்லை. நம் ராஜ்யத்தில் சுமார் 38 லட்சம் எக்கர் நிலத்தில் பயிர் செய்யப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். இரண்டு அல்லது மூன்று எக்கர் நிலம் வைத்திருப்பவர்களைத் தள்ளிவிட்டு, மீதி உள்ளவர்களுக்கு, பிளாட் ரேட்டாக எக்கருக்கு 1 ரூபாயோ அல்லது 2 ரூபாயோ வரி போடலாம். வேறு இனங்களின்மேல் சர்சார்ஜ் போட்டிருக்கிறார்கள். இன்னும் ஒவ்வொரு இனத்திலும் இரண்டு அணாவோ அல்லது அதற்கு மேலோ சர்சார்ஜ் வரி சேர்த்து போடலாம். ஏனென்றால், சாதாரணமாக கிராமத்தில் இருப்பவர்கள் ஏழை விவசாயிகள். எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். கணக்கு வைத்துக்கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை. கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டால், அவர்கள் கணக்குப் பிள்ளையின் தயவை எதிர்பார்க்கவேண்டியிருக்கும். இதனால் நல்லது ஒன்றும் ஏற்படாது. வரி போடுவதைப்பற்றி எதிர்ப்பவன் அல்ல நான். ஜனங்களுக்கு ஏற்படும் கஷ்டத்தைப் பற்றித்தான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பிரைமரி ஹெல்த் சென்டர்கள் 80 ஏற்படுத்த திட்டம் இருக்கிறது. ஐம்பத்திரண்டு சென்டர்கள் ஏற்கனவே ஏற்படுத்தியாகிவிட்டது. இன்னும் 9 இப்பொழுது ஏற்படுத்துவதாக இருக்கின்றது. ஆனால் இவைகளுக்கு போதுமான டாக்டர்கள் கிடைக்கவில்லை. கிராமங்களுக்குச் செல்வதற்காக அவர்களுக்கு ஏதோ படி அல்லது மற்ற அலவென்ஸ், வீட்டு வசதி முதலியவை செய்து கொடுக்க ஏற்பாடாகி இருக்கிறது. இந்த டாக்டர்கள் இந்த படிப்பணமாக 50 ரூபாய்க்கு ஆசைப்பட்டுக்கொண்டு இருப்பார்கள் என்று எனக்கு நம்பிக்கை இல்லை. இதற்கு ஒரு வழி செய்ய வேண்டும். சாதாரணமாக ஒரு லோயர் டிவிஷன் கிளார்க்கு அப்பர் டிவிஷன் கிளார்க்காக வரவேண்டுமானால் இரண்டு வருஷங்களுக்கு ரெவினியூ இன்ஸ்பெக்டராக கிராமத்தில் போய் வேலை செய்ய வேண்டும். அதே போல் டாக்டர்களுக்கும் பிரமோஷன் வேண்டும் என்றால், இரண்டு வருஷ காலத்துக்காவது, கிராமத்தில் வேலை செய்தால்தான் வேலையில் பிரமோஷனுக்கு லாயக்கானவர்கள் என்று ஒரு திட்டம் வகுக்க வேண்டும். இம்மாதிரி செய்தால்தான் டாக்டர்களும் கிராமத்திற்கு வந்து வேலை செய்தால் பிரமோஷன் கிடைக்கும் என்று வருவார்கள். அலவனஸ் மட்டும்

காணித்தால் நல்லதாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு என்னுடைய வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri S THANGAVELU : கனம் சபைத் தலைவர் அவர்களே, நமது நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்துள்ள 1958-59-ம் வருஷத்திய வரவு செலவு திட்ட உரையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல முன் வந்துள்ளேன். இந்நாட்டில் ஏழை விவசாயிகள் யார் என்றால் நிலம் படைத்த பிரபுக்கள் கூட ஏழை விவசாயிகள் என்று சேர்ந்து கொள்ளுகிறார்கள். உணவு உற்பத்திக்கு என்று சர்க்கார் கடன், மானியம், சல்பேட் அம்மோனியா, நல்ல விதை வாங்கிக் கொடுப்பது முதலிய பல விதமான சலுகைகளைச் செய்து கொடுக்கிறார்கள். அவைகளை நல்ல முறையிலும் வாங்கிக் கொடுக்கிறார்கள். இந்த விஷயத்தில் சர்க்காரை நான் பாராட்டுகிறேன். ஏனென்றால் விவசாயிகள் முன்னேற்றமடைந்தால் நாடு முன்னேற்றமடையும். நாடு முன்னேற்றமடைந்தால் அந்த நாட்டிலுள்ள மக்கள் முன்னேற்றமடைந்து சுபிட்சமாக இருப்பார்கள். அந்த முறையில் சர்க்கார் திட்டம் போட்டு எல்லா வசதிகளையும் செய்து கொண்டு வருகிறார்கள். காந்திஜி வகுத்த நல்ல முறையில் நமது இயக்கம் நடந்துகொண்டுவருகிறது. இந்த நிலைமையில் ஒன்று முதல் ஐந்து, பத்து, பதினைந்து எக்கர் நஞ்சை, இருபது, ஐம்பது எக்கர் வெறும் புஞ்சை நிலம் வைத்துக்கொண்டிருக்கக்கூடிய ஏழை விவசாயிகள்மீது இப்பொழுது புது வரியைச் சுமத்தப்போகிறார்கள். அவர்கள் தலையில் ஏற்கெனவே பத்து நயா பைசா வரியை சுமத்தி டீசல் எண்ணெய் மூலமாக வசூலித்து வருகிறார்கள். தற்சமயம் அந்த வரி விபத்திலிருந்து 35 வரையில் உயர்த்தி அதிகப்படியாக 25 நயா பைசா கொடுக்கவேண்டும் என்று திட்டம் கொண்டு வரப்போகிறார்கள். அதன்மூலம் அதிகப்படியாக 70 லட்சம் ரூபாய் வரப்போவதாகச் சொல்லுகிறார்கள். இந்தத் தொகையை வேறு வழியில் அதாவது லாரிகள் மூலமாகவும், பஸ்ஸுகள் மூலமாகவும், டாக்ஸி மூலமாகவும், ஆட்டோ ரிக்ஷாக்கள் மூலமாகவும் ஒரு காலன்மீது அதிகப்படியாக 25 நயா பைசா விதித்து வசூலிக்கலாம். இந்தப் பணத்தை நாம் நல்ல முறையில் வேறு வழியில் மேல்சொன்ன முதலாளிகள் வசம் இருந்து வசூலிக்கலாம். ஒரு காலன் பெட்ரோல் போட்டு ஓட்டுவதற்கு பதிலாக டீசல் எண்ணெய் போட்டால், அதிக தூரம் போகிறது, பஸ், லாரி, ரிக்ஷா முதலியவை எவ்வளவோ மைல் அதிகமாக அந்த பஸ் ஓடுகிறது. அதே விலையில் டீசல் எண்ணெயில் ஓடினால் அதிகப்படியான மைல் ஓட்டலாம். அதனால், அதிகப்படியாக வசூல் செய்யலாம். அது எவ்வளவு தூரம் அப்படி ஓடியிருக்கிறதோ அந்த ஒரு காலன்மீது 50 நயா பைசா அளவில் வரியை அதிகப்படுத்தி வசூலிக்கலாம். எவ்வளவு மைல் தூரம் அந்த பஸ், லாரி ஓடியிருக்கிறது, அதற்கு எவ்வளவு காலன் டீசல் போட்டிருக்கிறார்கள் என்ற கணக்குப் பார்த்து அந்த அளவைக் கண்டு பிடித்துக்கொள்ளலாம். அந்தக் கணக்கு விகிதத்தின்படி பஸ், லாரி, டாக்ஸி, ஆயில்மில் ஆட்டோ ரிக்ஷா முதலாளிகளிடமிருந்து இந்த டீசல் ஆயில் மூலம் எதிர் பார்க்கும் வரி தொகையை சர்க்கார் வசூலித்துக் கொள்ளலாம். அப்படி சர்க்காரால் வசூலித்துக்கொள்ளவும் முடியும் என்று நான் சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். அதேபோன்று 50 புஞ்சை, 20 நஞ்சை எக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் ஆயில் எஞ்சின் வைத்து பயிர்செய்பவர்களுக்கு இந்த டீசல் ஆயில் வரி விலக்கு அளிக்கவேண்டும். ஏழை விவசாயிகளாக இருப்பவர்களையும், புஞ்சையாக வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு டீசல் வரி இல்லாமல் ஏழை விவசாயிகளைக் காப்பாற்ற சர்க்கார் முன் வரவேண்டும் என்றும் நான் சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன்.

கனம் நிதி மந்திரி அவர்கள்கூட தங்களுடைய உரையில் தென்னாற்காடு ஜில்லாவில் பருவ மழை குறைவால் 30 சத விகிதம் மகசூல் குறைந்து போய்விட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தென்னாற்காடு ஜில்லாவில் குறிப்பாக கடலூர் தொகுதி மேட்டுப் பிரதேசம், அங்கே



காடாம்புலியூர், பண்ணுருட்டி, குள்ளஞ்சாவடி வட்டாரத்தில் மழை கிடையாது, அதனால் வசதிகள் குறைவாக இருக்கின்றன. தண்ணீர் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. கால்வாய் கிடையாது. பண்ருட்டிக்கு அடுத்தாற்போல் கெடிலம் நதி வருகிறது. அதில் பெரிய அணைக்கட்டு ஒன்றைக் கட்டினால் நீர்ப்பாசன வசதி கிடைக்கும். இதன் மூலம் கடலூர் பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கலாம். அந்த வசதியைச் செய்து கொடுத்தால் சர்க்காரை மிகவும் போற்றக் கூடியதாக இருக்கும். எனது நண்பர் ஒருவர் பேசும்போது தென்னாற்காடு ஜில்லாவில் தண்ணீர் இல்லாமல், அங்குள்ள பயிர் வாடிப்போனது என்று குறிப்பிட்டார். அதற்கு சர்க்கார் உதவி செய்யாததைப்பற்றி குறிப்பிட்டார். அவர் மற்றொன்றைப்பற்றி சொல்ல விட்டுவிட்டார். சர்க்கார் விவசாயிகளுடைய குறைபாடுகளை நேரில் கவனித்து அதற்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்து வருகிறார்கள். அங்குள்ள விவசாயிகளின் பயிர்கள் வாடும் தருவாயில் இருந்தபோது அவைகளுக்கு தண்ணீர் விட வேண்டும் என்று எண்ணி நீர்ப்பாசனத்திற்காக சாத்தனூர் தேக்கத்திலிருந்து சுமார் பத்து அல்லது பதினொரு நாள் தண்ணீரை விட்டுக்கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்ததில் திருக்கோவிலூர், கடலூர் முதலிய வட்டாரங்களிலுள்ள விவசாயிகளின் பயிர்கள் வாடாமல் காப்பாற்றப்பட்டன. அப்படி அந்தப் பிரதேசங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்ததற்கு அங்குள்ள விவசாயிகள் வாழ்த்துகிறார்கள். வாடிக் கிடந்த பயிர்களுக்கு சர்க்கார் உயிர் கொடுத்ததற்கு சர்க்காரை அங்குள்ள விவசாயிகள் மிகவும் பாராட்டுகிறார்கள், போற்றுகிறார்கள், வாழ்த்துகிறார்கள்.

DEPUTY SPEAKER : தயவு செய்து ஒரு நிமிஷத்தில் முடித்துவிடுங்கள். 6 p.m.

Sri S. THANGAVELU : சர்க்கார் ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக கடந்த பட்ஜெட்டில் ஒதுக்கிய தொகையைவிட தற்சமயம் நாற்பது லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருப்பதை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். பதினாறாவது நூற்றாண்டில் நந்தனார் காலத்தில் ஹரிஜனங்கள் சிதம்பரம் நடராஜப் பெருமானுடைய கோயிலுக்குள் நுழையக் கூடாது என்று சொல்லிய மூட பழக்க வழக்கங்களை எதிர்க்கட்சிகள் சொல்லும் திராவிட நாடு இன்று மாறியிருக்கிறது. ஒரு காலத்தில் இந்த நாடு ஹரிஜனங்களைப் பொறுத்த வரையில் புறக்கணிக்கப்பட்டிருந்தது. ஹரிஜனங்களுக்காக நமது காந்திய சர்க்கார் நல்லதொரு முறையில் கவனம் செலுத்தி, அவர்களுக்கென்றே ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தி, அல்லும் பகலும் ஹரிஜனங்களுக்குடைய முற்போக்குக்காக பாடுபட்டு வருவதை நண்பர்கள் மறக்கக்கூடாது. நான் இந்த நிதி நிலை அறிக்கையை முழு மனதுடன் வரவேற்று என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 1 p.m. to-morrow. 6–01 p.m.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory rules, orders and notifications:

67. *Notification issued with G.O. Ms. No. 4567, Revenue, dated 11th December 1957, exempting Co-operative Milk Supply Societies and Unions from payment of Sales-Tax under section 3 (i) of the Madras General Sales Tax Act, 1939, in respect of all Sales of Milk*

*Products*. [*Laid on the Table of the House under section* 19 (6) *of the Madras General Sales Tax Act*, 1939].

68. *Notification issued with G.O. Ms. No.* 308, *Revenue, dated 27th January* 1958, *modifying the notification exempting from sales tax the Co-operative Wholesale Stores and District Co-operatives Supply and Marketing Societies*. [*Laid on the Table of the House under section* 19 (6) *of the Madras General Sales Tax Act*, 1939].





APPENDIX.

[Vide answer to starred question No. 225 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 6th March 1958, page 327 supra.]

(*a*) & (*b*)—

| The places where the Employees State Insurance Scheme is in force. (*a*) | The number of employees benefited under the scheme in each of the places. (*b*) |
|---|---|
| 1 Coimbatore Municipal limits and its suburbs, namely, Ganapathy, Sanganur, Velandipalayam, Peelamedu, Singanallur, Uppilipalayam, Ondiputhur, Irrugur, Kurichi, Podanur and Sundarapuram. | 50,000 |
| 2 Madras City including Vandalur, Ennore and Ambattur. | 59,000 |
| 3 Madurai .. .. .. .. .. .. | 25,000 |
| 4 Ambasamudram .. .. .. .. | 7,000 |
| 5 Tuticorin .. .. .. .. .. | 5,000 |

(*c*) The several benefits which the employees get under this scheme—

Medical benefit is provided on the following scale:—

(1) General medical services which shall include treatment at the clinic of an Insurance Medical Practitioner or other institution and shall consist of—

(i) all treatment other than treatment involving the application of special skill or experience;

(ii) such preventive treatment as vaccination and inoculation;

(iii) ante-natal and post-natal treatment of insured women;

(iv) the free provision of all drugs and dressings that may be considered necessary;

(v) provision of certificates, free of cost, in respect of sickness, maternity, employment injury and death, required under the Employees State Insurance (General) Regulations, 1950 or as may be required by the Corporation or the Director of Medical Services;

(vi) domiciliary visits, where necessary.

(2) Maternity medical services for insured women.

(3) In-patient treatment including free maintenance and specialist and general treatment.

(4) Facilities, for the removal, free of charge, of insured persons to hospital, where necessary by ambulance or otherwise.

[6th March 1958

Insured persons who lose their limbs on account of employment injury are provided with artificial limbs at the Army Limb Centre, Poona at the cost of the Employees State Insurance Corporation.

The following cash benefits are provided :—

(*a*) Periodical cash payments to an insured person in case of sickness;

(*b*) periodical cash payments to insured women in case of confinement;

(*c*) periodical cash payments to an insured person suffering from temporary or permanent disablement as a result of an employment injury; and

(*d*) periodical cash payments to the dependants of an insured person who dies as a result of an employment injury sustained as an employee under the Act.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, the 7th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at 1 p.m. Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

*Latrine facilities in court premises*

* 228 *Q*.—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of courts (Civil and Criminal) premises in the State;

(*b*) how many of them are provided with septic or flush-out latrines;

(*c*) whether any representation has been received from the Tiruchirappalli Bar Association and Tiruchirappalli District and Sessions Judge regarding the need for adequate latrine facilities in the court premises; and

(*d*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) The particulars are not available with the Government and have to be collected from the districts. The Government consider that the time and labour involved in gathering the particulars will not be commensurate with the benefit to be derived thereby.

(*c*) Yes, Sir.

(*d*) Necessary plans and estimates for the work have been called for.

SRI S. LAZAR: *சார், இந்தத் திட்டமாகப்பட்டது இரண்டு ஆண்டு காலமாக சர்க்காரிலே பெண்டிங் ஆக இருக்கிறதென்று தெரிகிறது. எவ்வளவு சீக்கிரத்தில் இதை முடிப்பார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *இவ்வளவு காலமாக பரிசீலனையில் இருந்தபோதிலும் இப்போது சீக்கிரத்தில் நிறைவேற்றப்படும்.*

SRI K. RAMASUBBU: *பாக்டரி ஆக்டின் கீழ் லாவடரி, பிளஷ் அவுட் முதலியன கட்ட வேண்டுமென்று கட்டுப்படுத்தும் சர்க்கார், தம்முடைய அலுவலகங்களில் குறிப்பாக சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ், கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸ் போன்ற பொது ஜனங்கள் அதிகமாகக் கூடுகிற இடங்களில் இவ்வசதிகளைச் செய்து கொடுக்க முன் வருமா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *இந்தக் கேள்வி கோர்ட்டுகளைப்பற்றியது.*

[7th March 1958

SRI T. T. DANIEL : In view of the fact that in no Civil or Criminal Court in Kanyakumari district there is flush-out system, will the Government look into the matter and consider the desirability of establishing flush-out latrines in those places?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The provision of flush-out latrines depends on so many other factors. If the hon. Member would specifically bring to my notice the state of affairs there, I shall look into it.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, கோர்ட் வளைவுகளில் கக்கூஸ்கள் வசதி எவ்வளவு இருக்கிறது என்பதைப் பற்றிய தகவல் அரசாங்கத்திற்கு இன்னும் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இந்தக் கேள்வி எப்போது கொடுக்கப்பட்டது ? இந்தத் தகவலைச் சேகரிப்பதற்கு என் தாமதம் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் ஆங்கிலத்தில் சொன்னேன். இப்போது தமிழிலேயே சொல்கிறேன். இந்தத் தகவலைச் சேகரிப்பது அவசியம் இல்லை என்றுதான் சொன்னேன். குறிப்பாக எந்த கோர்ட்டைப்பற்றியாவது சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI V. S. MANICKASUNDARAM : ஈரோடு சப்-மாஜிஸ்ட்ரேட் கைதிகளுக்கும், பொது மக்களுக்கும் ஒரே இடத்தில் கக்கூஸ் இருப்பதனால் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே லிடிகண்டு பப்ளிக்கு தனியாக வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஈரோடு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் சம்பந்தமாக என்ன வசதி செய்து தரவேண்டுமோ அதைச் செய்கிறேன்.

SRI V. SANKARAN : மதுரையில் இருக்கும் கோர்ட்டில் வக்கீல்களுக்கென்று தனியாக **Flush out** லாவட்டரியோ, **Dry** லாவட்டரியோ கூட இல்லை.

MR. SPEAKER : அவர் ஈரோட்டைப் பற்றிக் கேட்டார். நீங்கள் மதுரையைப்பற்றி ஆரம்பிக்கிறீர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தைப்பற்றிக் கேட்டால் என்ன செய்வது ?

SRI V. SANKARAN : நான் பொதுப்படையாகக் கேட்கிறேன். இந்த மாதிரியாக மொபொசல் கோர்ட்டுகளில் எங்கெங்கே லாவெட்ரி வசதிகள் இல்லை என்பதற்கு ஒரு சர்வே எடுத்து உடனடியாக எல்லா இடங்களிலும் அவ்வசதியைச் செய்து கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படிச் சர்வே எடுப்பது அவசியம் இல்லை என்று தான் சொன்னேன். எங்கங்கே அந்த வசதி தேவைப்படுகிறதோ அங்கங்கே உடனடியாகக் கவனிக்கப்படும்.

SRI A. GOVINDASAMY : எதை அடக்கினாலும் அடக்கலாம். ஒன்னுக்கை அடக்க முடியாது என்பார்கள். கோர்ட்டுகளில் லெட்ரின் வசதி இல்லாததால் வக்கீல்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உடனடியாக அவ்வசதியை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKATAVATSALAM : கனம் அங்கத்தினர்களுடைய கஷ்டத்தைப்பற்றி மட்டும் பேசுவதில் இருந்து கட்சிக்காரர்களைப்பற்றி அவர் கவனித்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக எங்கே இவ்வசதி இல்லையென்று தெரிவித்தால் உடனடியாக ஏற்பாடு செய்யலாம்.

SRI M. KALYANASUNDARAM : வக்கீல்களுக்கு இருக்கும் கஷ்டத்தைப்போலவேதான் பொது மக்களுக்கும் அவ்வித கஷ்டம் இருந்து கொண்டிருக்கிறது. நூறு ரூபாய்க்கு 7 ரூபாய் என்றும், ஸ்டாம்பு



7th March 1958]

சார்ஜும் அவர்களிடமிருந்து வாங்கிக் கொண்டிருக்கும்போது தங்குவதற்குக்கூட அவர்களுக்கு ஷெட்டு இல்லாமல் மரத்தடியில் தங்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு தங்க ஷெட் வசதி, கக்கூஸ் வசதி முதலியன செய்து கொடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஷெட்டில் இருப்பதைவிட மரத்தடியில் இருப்பது இன்னும் குளுமையாகக் கூட இருக்கும். மேலும் கட்சிக்காரர்களுக்கு வெளியில் போய்வர சந்தர்ப்பம் உண்டு. இருந்தாலும் எங்கெங்கே அவர்களுக்கு வசதி தேவைப்படுகிறதோ அவ்வளவையும் செய்ய ஏற்பாடு செய்யலாம்.

### *Single Teachers' Association*

* 229 Q.—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have received any deputation on behalf of the Single Teachers' Association in October 1957; and

(b) if so, the nature of representations made and the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes. Two representations have been received.

(b) The representations were to the effect—

(i) that the training period should be reduced to one year;

(ii) that the duration of training should be treated as duty and salaries for the period of training should be paid;

(iii) that they should be posted to their original posts after training;

(iv) that their services before training should be counted for seniority; and

(v) that they should be considered for appointment on the social education side in National Extension Service and Block Development areas for their better living under the same National Planning Scheme, if necessary.

The requests were examined and it was found not possible to comply with the requests.

SRI M. P. SUBRAMANIAM : ஓராசிரியர்கள் சங்கத்தின் சார்பாக நிதி அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து ஐந்து கோரிக்கைகளை தெரிவித்துக் கொண்டதாகவும், அதில் இரண்டு கோரிக்கைகளை நிதி அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு நிறைவேற்றி தருவதாகவும் சொல்லப்படுகிறது.. குறிப்பாக இந்த இரண்டாவது பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு முன்பு கொடுக்கப்பட்ட அடிப்படைச் சம்பளத்தையே கொடுப்பது என்பதாகவும், பயிற்சி பெற வருவதற்கு முன் செய்த சேவையை சர்வீசில் சேர்த்துக் கொள்ள ஒத்துக்கொண்டதாகவும், அப்போது இந்தச் சபையின் ஒரு உறுப்பினர் கூட அருகில் இருந்ததாகவும் கூறப்படுவது உண்மைதானா ? உண்மை என்றால் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தமாதிரி வாக்குறுதி கொடுத்ததாக ஞாபகம் இல்லை. அந்தமாதிரியாகக் கொடுத்திருக்கவும் முடியாது.

[7th March 1958

SRI K. RAMACHANDRAN : ஓராசிரியராக வேலை பார்த்து இப்போது பயிற்சிக்கு அனுப்பப்பட்டிருப்பவர்கள் எல்லோருக்கும் நிரந்தரமாக வேலை கொடுப்பதற்காவது வாய்ப்பு இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இருக்கும் என்று நம்புகிறேன்.

SRI N. K. PALANISAMI : ஏற்கெனவே அவர்கள் சிறிது காலம் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். மூன்றாண்டு ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார்கள். திரும்ப அவர்களை இரண்டாண்டு பயிற்சிக்கு அனுப்புவதால், பயிற்சி முடிந்த பிறகு, பழையபடி அவர்களுக்கு வேலை கொடுப்பதில் கஷ்டம் ஏதாவது உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : வேலை கொடுப்பதில் கஷ்டம் இருக்காது. வேலை கொடுக்கப்படும்.. அதற்காகத்தான் பயிற்சியே இப்போது கொடுக்கப்படுகிறது. பயிற்சி இல்லாமல் தொடர்ந்து ஆசிரியராகப் பணியாற்ற முடியாது என்ற காரணத்தினால் பயிற்சி அளிக்கப்படுகிறது. திரும்ப வேலையும் கொடுக்கப்படும்.

SRI V. SANKARAN : ஓராசிரியர்களாக வேலை பார்த்தவர்களை பயிற்சிக்கு அனுப்பும்போது பயிற்சி பெற்று வந்தவுடன் திரும்ப அவர்களை எந்த இடத்தில் முன்பு வேலை செய்தார்களோ அவ்விடத்திலேயே போடுவதற்கு அதாவது lien பாதுகாப்பு கொடுப்பதாக சர்க்கார் ஒத்துக் கொண்டதாக எனக்கு ஞாபகம். அந்தமாதிரியே இப்போது செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்களுக்கு முன்பு சொன்னமாதிரி கூடுமானவரையில் எல்லோரையும் முன்பு அவரவர்கள் வேலை பார்த்த இடத்திலேயே போடுவதற்கு முயற்சி செய்யலாம். எல்லோருக்கும் அவரவர்கள் வேலை பார்த்த இடத்திலேயே உத்தியோகம் கிடைக்கும் என்று சொல்ல முடியாது.

SRI K. ANBAZHAGAN : ஓராசியர்களாக நியமிக்கப்பட்டவர்கள் முன்பே 2 மாத காலம் பயிற்சி பெற்றவர்கள், பின்னர் மூன்றாண்டு ஆசிரியராகப் பணியாற்றியவர்கள் என்பதை எல்லாம் கவனத்தில் கொண்டு இப்போது அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியை இன்டென்ஸிவ் பயிற்சியாக அதிக முக்கியத்துவம் கொடுக்கும் பயிற்சியை ஓராண்டு காலம் மாத்திரம் அளிக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த விஷயம் முன்பே பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. இந்தத் துறையில் அதிக நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் ஒரு வருஷ காலத்திற்குள் பயிற்சியை இவர்களுக்கு கொடுக்க முடியாது என்றார்கள். ஆகவே இரண்டு வருஷம் இவர்களுக்கும் பயிற்சி பெறவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

SRI M. KALYANASUNDARAM : ஓராசிரியர்கள் சங்கத்தாருடைய கோரிக்கையை நிறைவேற்ற நிதி நிலைமை இடம் கொடுக்கவில்லையா ? அல்லது அந்தக் கோரிக்கைகள் நியாயமற்றவையா என்று அறிய விரும்புகிறேன். இதற்காக எவ்வளவு செலவாகும் என்று தீர்மானித்தார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் மற்றவர்களைப் போல இவர்களும் திறமையுடன் ஆசிரியராகப் பணியாற்றவேண்டுமென்றால் இரண்டாண்டு பயிற்சி பெறவேண்டும் என்பதுதான். இவர்களுக்கு அதிகச் செலவாகிறது என்றால் மற்றவர்களுக்கும் அதிகச் செலவுதான் ஆகிறது. இவர்களைவிட கஷ்டம் உள்ளவர்களும் இருக்கலாம். எல்லோருக்கும் ஒரே விதமான பயிற்சியை அளித்தால்தான் இவர்களாலும் மற்றவர்களைப் போலவே பணியாற்ற முடியும் என்றுதான் இப்படிச் செய்யப்பட்டது.

SRI T. T. DANIEL : May I know what the salary and allowances of these teachers are and whether the Government are giving any stipends to these teachers who undergo the training?



7th March 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, they are being given the stipend as the other trainees.

SRI A. GOVINDASAMY : இந்த ஓராசிரியர் ஏற்கனவே வேலை பார்த்த நேரத்தை சர்வீஸோடு சேர்த்துக் கொள்ள அரசாங்கம் முன் வருமா ? 1-10 p.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : இவர்களுடைய சர்வீஸ் பிரகாரம் பென்ஷன் போன்றவை பிற்பாடு கொடுப்பதில் ஆட்சேபனையில்லை. ஆனால் மற்றவர்களுக்கு மேல் ஸீனியாரிட்டி கொடுப்பதில் ஆட்சேபம் இருக்கிறது. இவர்களை டெம்பரரியாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

*Single teacher elementary schools*

* 230 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of single teacher elementary schools that were opened in 1955–56 and 1956–57; and

(*b*) the number of such schools under (i) district boards, and (ii) panchayat management?

THE HON. SRI C. SUBRAMANIAM :

(a) 1955–56 ... 1,495
1956–57 ... 850

and

(*b*) three were opened by panchayats and the rest by district boards.

SRI M. JAGANNATHAN : 1955-56-ம் வருஷத்தில் திறக்கப்பட்ட ஓராசிரியர் பள்ளிகளைவிட 1956-57-ல் திறக்கப்பட்ட பள்ளிக்கூடங்கள் மிகக் குறைவாயிருக்கின்றன. இதற்கு காரணமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படி ஒன்றுமே திறக்கப்படவில்லை. எந்தெந்த இடங்களில் அவசியமோ அந்தந்த இடங்களில் திறக்கப்பட்டிருக்கிறது. இது, ப்ளானிங் கமிஷனால் தனியாக திட்டம் வகுக்கப்பட்டது என்பது அங்கத்தினர்களுக்குத் தெரியும். அந்தத் திட்டப்படி, இரண்டு வருஷங்கள் மட்டுந்தான் கொடுத்திருந்தார்கள்.

SRI M. JAGANNATHAN : எத்தனையோ கிராமங்களில் ஆரம்பக் கல்விக்குக்கூட பள்ளிக்கூட வசதியில்லாமல் மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே சர்க்கார் இந்தத் திட்டக் கமிஷன் பள்ளிகளை மேலும் மேலும் திறக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது புதிய பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்க வேண்டிய அவசியமில்லை என்பது என் அபிப்பிராயம். இப்பொழுதுள்ள பள்ளிக்கூடங்களில் அதிகம் பிள்ளைகள் வரும்போது அதை விஸ்தரிக்கவேண்டும். கனம் அங்கத்தினர்கள் இதுபற்றி நமது சட்ட சபை கமிட்டி செய்திருக்கக் கூடிய சிபார்சுகளை கவனித்திருக்பார்கள் என்று நம்புகிறேன். ஆரம்பப் பள்ளி ஒரு மைலிற்குள்ளாக எல்லோருக்கும் இருக்க வேண்டும். குறைந்தது 500 ஜனத்தொகை இருக்கக் கூடிய இடங்களில் தான் இது மாதிரி பள்ளிகள் ஏற்படுத்த சௌகரியமாக இருக்கும். இல்லாவிடில் 20, 30 பிள்ளைகளை வைத்துக்கொண்டு அவைகளைத் தொடர்ந்து நடத்தவேண்டியிருக்கும். ஓராசிரியர் பள்ளிகளை தொடர்ந்து நடத்துவது சரிய.ல்ல ஆகவே, மூன்று நான்கு கிராமங்களுக்கு மத்தியில் ஒரு பள்ளிக்கூடம் அமைத்து, கூடுதல் பிள்ளைகள் வந்து சேரும்போது கூடுதலாக இரண்டு மூன்று ஆசிரியர்களை நியமிப்பதுதான் நல்லது. புதிதாக பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது என்பது ஆலோசித்துத்தான் செய்யவேண்டும்.

கொடுத்தால் அவர்கள் கிராமத்திற்கு வருவார்கள் என்று நான் சொல்வதற்கு இல்லை.

1950-51-ல் நம்முடைய மொத்த வருமானம் 58 கோடி 16 லட்சம். அதில் 1 கோடி ரூபாய் ஹரிஜன முன்னேற்றத்திற்காக செலவழிக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது 1958-59-ம் வருஷத்தில் மொத்தம் 63 கோடி 90 லட்சம் செலவழிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. அதில் ஹரிஜன முன்னேற்றத்திற்காக 2 கோடி 33 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதில் சர்க்காருக்கு உள்ள தாராள மனப்பாங்கை எடுத்துக் காட்டுகிறது. ஆனால் இந்த வருஷ ரிவைஸ்ட் பட்ஜெட்டில் இருப்பதை விட சற்றுக் குறைவாகத்தான் அடுத்த வருஷத்தில் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் பட்ஜெட்டை விட ரிவைஸ்ட் பட்ஜெட்டில் கொஞ்சம் அதிகமாகவே செலவழித்திருப்பதாக போடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த வருஷத்திய ரிவைஸ்ட் பட்ஜெட்டைவிட 8 லட்சம் ரூபாய் குறைவாகவே அடுத்த வருஷத்தில் போடப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்திய பட்ஜெட்டைவிட எப்படி ரிவைஸ்ட் பட்ஜெட்டில் 47 லட்சம் ரூபாய் அதிகமாக செலவழித்திருப்பதாக போடப்பட்டிருக்கிறதோ, அதேபோல் அடுத்த ஆண்டிலும் நிறைய பணம் ஹரிஜனங்களுக்கு ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI S. R. MUNUSAMI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் கொண்டுவந்திருக்கும் பட்ஜெட்டின்மீது இரண்டொரு வார்த்தை பேசவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். பொறுமைக் கொள்ளவில்லை. தொட்டதற்கு எல்லாம் குற்றம் சொல்வது எங்களுடைய கொள்கை அல்ல. நாங்கள் நினைப்பதும் அப்படித்தான். ஆனால் எதிர் கட்சியில் அமர்ந்துகொண்டு பேசுவதைக் கேட்டால் எல்லோருக்கும் கொஞ்சம் சந்தேகம். எஸ். ஆர். முனுசாமி காங்கிரஸ் ஆளாகப் போய் விட்டாரா என்று. இன்னும் சிலருக்கு தி.மு.க.உடன் சேர்ந்துக்கொள்ளப் பார்க்கிறாரா என்று சந்தேகம். மற்றவர்களுக்கு தமிழர் இயக்கத்தில் சேரப்போகிறாரோ என்று சந்தேகம் இருக்கும்.

நான் சென்ற ஆண்டு பட்ஜெட்டின்போது பேசினதை மற்றவர்கள் கேட்டிருக்கவேண்டும். அதைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன். சென்ற ஆண்டு அமைச்சர் கொண்டுவந்திருக்கும் பட்ஜெட்டை வரவேற்றேன். ஆனபோதிலும் நான் அதை ஆதரிக்கவில்லை என்று சொன்னேன். அதாவது எங்களுக்கு ஒதுக்கியிருக்கும் 1 கோடி 94 லட்சம் போதாது, 2 அல்லது 2½ கோடியாவது ஒதுக்கவேண்டும் என்று சொன்னேன். அதற்கு ஏதுவாக அமைச்சர் என்னுடைய கோரிக்கைக்கு மெச்சியோ அல்லது மற்றவர்கள் சொல்லக்கூடியதற்கு இணங்கியோ நமக்கு 2 கோடி 33 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் சார்பில் இதை பெருமையோடுதான் சொல்லவேண்டும். ஆனால் அதிலும் 17 லட்சம் குறைத்துவிட்டார். ஏன் தெரியவில்லை. காரணத்தைப் பார்த்தால் மற்றவர்களுக்கு பயந்துதான் குறைத்திருப்பார் என்று நினைக்கிறேன். அல்லது அவருடைய குலத்தின் பழக்கம் அப்படி. நாம் கேட்க கேட்க, கொஞ்சம் கொஞ்சமாக கொடுக்கலாம் என்று நிறுத்தி வைத்திருக்கிறாரோ தெரியவில்லை. அடுத்துவரும் சப்ளிமெண்டிரியல் கொடுப்பதற்கு ஏதாவது வைத்திருப்பார் என்று நம்புகிறேன். ஆனால் கொடுத்ததைப்பற்றி மகிழ்ச்சிதான். மகிழ்கிறேன் என்று நான் சொல்லும்போது மற்றவர்கள் சந்தேகப்படக்கூடாது. மாற்றுக் கட்சியினர் எங்களுடன் பேசுவதற்கு கொஞ்சம் அச்சம் அடைகிறார்கள். ஆளும் கட்சியிலிருப்பவர்களும் நம்மைக் கண்டு அஞ்சுகிறார்கள்.

5-30 p.m. நீங்கள் அமைத்துக்கொண்டுள்ள கட்சியில் சேர்ந்தாலும் அனுதாபம் காட்டினாலும் ஆபத்துத்தான். ஆகையால் இயற்கையிலேயே தனித்து இயங்கிக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட தனிப்பட்ட வகுப்பினருக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் நாம் சேவை செய்து கொண்டுவருகிறோம். அவர்களுக்கு எவ்வளவு செய்ய வேண்டுமென்றாலும் அதற்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்து அவர்களுக்கு



உதவி செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. எல்லோரும் ஒரு கட்சியாக இயங்கி அவர்களுக்கு உதவி செய்ய நீங்கள் முன் வரவேண்டும். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம் தொழுதுண்டு பின் செல் பவர்" என்று வள்ளுவர் வாக்கியத்தின்படி பார்த்தால் இன்றைக்கு நிலத்தில் இறங்கி உழுபவன், விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவன் உழவன் யார் என்றால் நாட்டிலுள்ள மக்களில் 100-க்கு 90 பேர்கள் விவசாயிகளாக இருக்கின்றார்கள். அவர்களுடைய கணக்கை எடுத்துக்கொண்டாலும் அப்படித்தான் இருக்கும். இப்பொழுது நாம் கையேர், மாட்டு வாரம்தார்களுக்கு சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். இப்படிப்பட்டவர்களும் அவர்கள்தான். இப்பொழுது போடப்போகிற வரி அவர்களுக்கும்தான் வரப்போகிறது. மந்திரி அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறபடி சுமார் ஐயாயிரம் குடும்பங்களுக்கு வசதி செய்யப் போகிறார்கள். விவசாயிகளுக்கு 5,800 ஜோடி மாடுகள் வாங்கிக் கொடுக்கப்போகிறார்கள். அவைகளை வாங்கிக்கொண்டு அவர்கள் பயிரிடப்போகிறார்கள். அவைகளை வாங்கிக் கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. அவைகளை வைத்துக்கொண்டு அவர்கள் தனிப்பட விவசாயம் செய்ய முடியாது. ஏனென்றால் அவர்களுக்கு சொந்தத்தில் நிலம் கிடையாது. சொந்தத்தில் நிலம் இருக்கும்படியாக அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க சர்க்கார் முன்வரவேண்டும். சர்க்காரிடம் இப்பொழுது இருக்கின்ற தரிசு நிலங்களை அவர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். மாடுகளை வாங்கிக்கொடுக்கும்போது அவர்களுக்கு நிலத்தையும் சீக்கிரமாகக் கொடுக்க வேண்டும் என்று சர்க்காரை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கள் தாலூகாவில் சுமார் 1½ லட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறது. அதைக் கொடுக்க வேண்டும் என்று மனுக்கள் போட்டால் அவைகள் சர்க்கார் ஆபீஸ்களில் அப்படியே இருக்கின்றன. இது அரசாங்கத்திற்கு இழுக்கை உண்டாக்கக்கூடியதாக இருக்கிறது. இதில் கட்சிக் கொள்கை இல்லாமல் எல்லோருக்கும் உடனடியாக நிலத்தைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் சிவராஜ் அவர்களிடம் ரெவின்யூ அமைச்சர் சொல்லியிருக்கிறார். ஒன்றரை லட்சம் ஏக்கர் நிலம் இருந்தாலும் அவைகள் இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. இந்த வருஷத்தில் நூறு ஏக்கர்தான் அசேன்மெண்ட் என்று சொல்லப்படுகிறது. ஆகவே கட்சி வேற்றுமை இல்லாமல் உடனடியாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது எவ்வளவோ நிலம் சாகுபடிக்கு லாயக்குள்ளவைகளாக இருக்கின்றன. அவைகள் எல்லாம் காட்டிலாகாவில் இருக்கின்றன. அவைகளை அந்தந்த ரேஞ்சு காட்டிலாகா ரேஞ்சர்களும் மற்ற அதிகாரிகளும் இன்ஸ்பெக்ஷன் செய்திருக்கிறார்கள். அப்படி செய்திருந்தும்கூட சர்க்கார் இன்னும் அவைகளைக் கொடுக்க முன்வரவில்லை. அங்கு மரம் நட்டால் விளையாது. அது கல்குத்து பூமி. மாடுகளை மட்டும் வாங்கிக் கொடுத்து விட்டால் போதாது. ரிவின்யூ மந்திரியும் விவசாய மந்திரியும் மனது வைத்தால்தான் அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களும் பிற்பட்ட மக்களும் நன்றாக வாழ முடியும். இல்லாவிட்டால் சந்தோஷகரமாக வாழ முடியாது. இல்லாவிட்டால் அவர்கள் இந்த அரசாங்கத்தை தூற்றி கிளர்ச்சிதான் செய்துகொண்டுதான் இருப்பார்கள். சர்க்கார் செய்யக்கூடிய சலுகைகள் எல்லாம் எங்களுக்கு பயன் அடையும்படியாக இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய திட்டங்களைப் போட வேண்டும். வரப்போகும் ஆண்டிற்கு இரண்டு கோடி முப்பத்தி மூன்று லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் சென்ற ஆண்டில் ஒதுக்கிய பணம் எல்லாம் செலவழிந்து விட்டதா என்று ஹரிஜன வெல்பேர் ஆபீசரைக் கேட்டதற்கு அதில் 44 ஆயிரம் ரூபாய் செலவு ஆகாமல் இருக்கிறது என்று சொன்னார். எங்களுக்கு வீடுகள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கும்போது அந்தத் தொகை செலவு செய்யப்படாமல் இருக்க வேண்டிய காரணம் என்ன ? நாங்கள் கிணறுகள் வெட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். சர்க்கார் ஏதாகிலும் எங்களுக்குச் செய்யவேண்டும் என்று திட்டம் வகுத்தால் அவைகளை அங்குள்ள அதிகாரிகள் செய்வதற்கு முன்வருவது இல்லை. சர்க்காருக்கு இழுக்கான பெயரை வாங்கிக்கொடுக்கக்கூடிய அதிகாரிகள் பலர் இருக்கின்றார்கள். அவர்களை இந்த சர்க்கார் கண்

[7th March 1958

Mr. SPEAKER : 231, 232, 233 கேள்விகளை சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

*Backward classes.*

* 231 Q.—Sri P. G. MANICKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether any of the concessions enjoyed by the members belonging to the Backward Classes are extended to the poor people belonging to the Forward Classes and, if so, the details thereof?

The Hon. Sri P. KAKKAN : The following concessions enjoyed by the Backward Classes including Harijans are extended to the poor people belonging to the Forward Classes to a limited extent :—

1. Provision of houses in Harijan colonies,
2. Provision of house-sites,
3. Lump sum boarding grants, and
4. Admission in Government Hostels for Harijans.

* 232 Q.—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether representations have been received by the Government to amend the 106th item in the list of Backward Classes other than Scheduled Castes and Scheduled Tribes as appended to the Madras Educational Rules 1956; and

(b) if so, the action taken thereon?

The Hon. Sri P. KAKKAN : (a) Yes, Sir.

(b) The matter is under the consideration of the Government.

* 233 Q.—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any representation has been received recently from the members of the Mukkani Brahmin Community requesting for the inclusion of their community in the list of Backward Classes; and

(b) if so, the action taken thereon?

The Hon. Sri P. KAKKAN : (a) Yes, Sir.

(b) The Government examined the representation and decided that there was no need to include the community in the list of Backward Classes.

Sri P. G. MANICKAM : முன்னிலை வகுப்பைச் சேர்ந்தவர்களில் எத்தனையோ ஏழைகள் இருக்கிறார்கள் அவர்களுக்கு சம்பள வஜா, போர்டிங் கிரண்ட், உபகாரச் சம்பளம் இவைகள் எல்லாம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri P. KAKKAN : பள்ளிக்கூட சம்பள வஜா போன்ற விஷயங்களில் உதவி பெறுவதற்காக இருந்தால் கல்வி இலாகா அமைச்சர் அவர்களிடம் கேள்வி போட்டால் சொல்வார்கள்.



7th March 1958]

Sri S. LAZAR : : நத்தமன், மலைமன்னன், சிறு மன்னன் இவர்கள் " னன் " என்பதற்கு பதில் " னர் " என்று இருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். அப்படிச் செய்வதில் சர்க்காருக்கு ஏதாவது ஆட்சேபணை உண்டா ?

The Hon. Sri P. KAKKAN : ஜாபிதாவில் கண்டபடி, 106 சட்டப்படி நத்தமன், மலைமன்னன், மூப்பன் என்றிருந்தாலும் நத்தமனார் என்றோ மலைமன்னர் என்றோ மூப்பனார் என்றோ இருந்தாலும் எல்லோரும் சமமாகத்தான் நடத்தப்படுவார்கள். இப்பொழுது மலைமன்னர் என்றும் மூப்பனார் என்றும் இது போன்று மாற்றப்பட்டிருக்கிறது.

Sri M. S. SELVARAJAN : கோவில் வருமானத்தை நம்பி கல்வியில் மிகவும் பிற்போக்காக இருக்கக்கூடிய முக்காணி பிராமணர்களை பிற்பட்ட சமுதாயத்தில் சேர்க்க வேண்டுமென்று நம் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறதா ?

The Hon. Sri P. KAKKAN : நம் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு அப்படி ஒன்றும் சிபார்சு செய்யவில்லை. முக்காணி பிராமணர்கள் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களில்தான் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி அந்தந்த ஜில்லாக் கலெக்டர்களை விசாரித்ததில் இவர்கள் பொருளாதாரத் துறையில் நல்ல முறையில் இருப்பதாகவும் கல்வித் துறையில் சிறிது பின்னேற்கம் அடைந்திருப்பதாகவும், இருந்தாலும் அவர்களை இந்த லிஸ்டில் சேர்க்க முடியாது என்று சொன்னதால் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

Sri M. JAGANNATHAN : முன்னிலை வகுப்பைச் சேர்ந்த ஏழைகளுக்கு சில சலுகைகள் ஹரிஜனங்களுக்கு கொடுக்கப்படுவது போல் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அச்சலுகைகள், ஹரிஜனங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிற நிதியிலிருந்துதான் கொடுக்கப்படுகிறதா ?

The Hon. Sri P. KAKKAN : இதுவரை அரசாங்கத்தின் கொள்கை அப்படித்தான். இந்த நிதியில் இருந்துதான் உதவி செய்து வருகிறது. இதை மறுபடியும் பரிசீலனை செய்து மத்திய சர்க்காருக்கு எழுதி இன்னும் அதிகமாக உத்வி செய்யமுடியுமா என்று கேட்டுப் பார்க்க வேண்டும்.

Sri K. RAMACHANDRAN : முன்னிலை வகுப்பாருக்கு ஓரளவு அரசாங்கம் சலுகை செய்கிறது என்று சொன்னார்கள். அது, என்ன அளவு ? எவ்வளவு சத விகிதம் ? சென்ற வருடம் எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri P. KAKKAN : ஹாஸ்டல்களில் 100 குழந்தைகள் இருந்தால் 75 சத விகிதம் ஹரிஜன் மாணவர்கள். பின்தங்கிய மாணவர்கள் 15 சத விகிதம். அட்வான்ஸ் கம்யூனிடி மாணவர்கள் 10 சத விகிதம் தங்கலாம். முற்போக்கு வகுப்பினரில் வீடில்லாதவர்களாக இருந்தால் ஹரிஜனங்களுக்கு மாதிரி அவர்களுக்கும் ஜாரி செய்து கொடுக்கப்படும். ஹாஸ்டலில் படிக்கும் ஒரு மாணவனுக்கு மாதம் 15 ரூபாய் கொடுக்கிறோம். முற்போக்கு வகுப்பைச் சேர்ந்த மாணவன் தங்கினால் மூன்றில் ஒரு பாகம் கொடுக்கவேண்டும்.

Sri K. RAMASUBBU : முக்காணி பிராமணர்கள் கல்வியில் பிற்போக்காக இருக்கிறார்கள். அவர்களில் எத்தனை பேர்கள் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கிறார்கள் என்பதற்கு அரசாங்கத்தில் ஏதாவது கணக்கு இருக்கிறதா ?

The Hon. Sri P. KAKKAN : தனி கேள்வி போட்டால் சொல்கிறேன்.

[7th March 1958

**Sri A. GOVINDASAMY** : ஹரிஜனங்களோடு பிற்பட்ட இனத்தையும் சேர்த்திருப்பதால் ஆதித்திராவிடர்களுக்குள்ள பணம் பிற்பட்ட இனத்தவருக்கு கொடுக்கப்படுவதாக ஒரு தவறான எண்ணம் இருக்கிறது. ஆகவே, அவைகளை தனித்தனி இலாகாவாக பிரிக்க அரசாங்கம் யோசிக்குமா ?

**The Hon. Sri P. KAKKAN** : அப்படி தவறான எண்ணம் இருப்பதாகத்தெரியவில்லை. அங்கத்தினருக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்கிறதோ இல்லையோ என்று எனக்குத் தெரியாது. ஹரிஜனங்கள், பின்தங்கிய மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து வாழவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை.

**Sri S. NAGARAJA MONIGAR** : ஜாதிகள்கூடாது, என்றும் உயர்வு தாழ்வு கூடாது என்றும் மக்களிடையே எண்ணம் இருக்கிறது. ஆனால் சலுகை கிடைக்கிறபோது நான் இன்ன ஜாதி, நான் இடையன், குறும்பன் என்றெல்லாம் தாழ்ந்த ஜாதியாக எழுதிக்கொடுக்க ஆசைப்படுகிறார்களே, இதற்கு என்ன பரிகாரம் என்று கேட்கிறேன்.

**The Hon. Sri P. KAKKAN**: அது; அவர்களுக்குத்தான் தெரியும்.

**Sri A. V. P. ASAITHAMBI** : பின்னிலே ஜாதியாரில் கிராமணியார், சாணார், இருக்கிறார்கள், ஆனால் நாடார் என்பவர்கள் முன்னிலே ஜாதியில் இருக்கிறது. மூன்று பேர்களும் ஒன்றுதான். ஆனால் அதில் இரண்டு பேர்கள் உடையவர்கள் பின்னிலே ஜாதியார் என்றும் ஒரு பேர் உடையவர்கள் முன்னிலே ஜாதியார் என்றும் இருக்கிறார்கள். சலுகைகள் பெற சர்ட்டிபிகேட் வாங்கும்போது, சாணார் என்றோ, நாட்டார் என்றோ, கிராமணியார் என்றோ அதை எப்படி அறிந்து சர்டிபிகேட் கொடுக்கிறார்கள்.

**The Hon. Sri P. KAKKAN**: பெற்றோர்கள் என்ன சமுதாயம் என்று சொல்கிறார்களோ அதைக் குறிப்பிட்டு சர்டிபிகேட் கொடுப்பார்கள்.

1-20 p.m. **Sri M. P. SUBRAMANIAM** : ஸர், பின் தங்கிய சமூகத்தினர், முற்போக்கு வகுப்பினர் என்று இருப்பதை மாற்றி, கல்வித் துறையில் பொருளாதார துறையில் கீழ்தட்டில் உள்ள எல்லா பிள்ளைகளுக்கு ஒரே விதத்தில் கல்வி சலுகை அளிக்கவேண்டுமென்ற ஒரு எண்ணம் அரசாங்கத்தில் இருப்பது உண்மையா ?

**The Hon. Sri P. KAKKAN** : ஆமாம்.

### *Intensive Manuring Scheme*

* 234 *Q.*—**Sri P. S. CHINNADURAI** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Coimbatore District Planning Advisory Committee has recommended recently that the dry-crop growers should be given loans under the Intensive Manuring Scheme just as the growers of sugarcane and paddy; and

(*b*) if so, the action taken thereon?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) Yes.

(*b*) The Government have not considered it necessary to grant loans to dry-crop growers under the Intensive Manuring Scheme at present.



7th March 1958]

### *Ammonium Sulphate*

* 235 *Q.*—**Sri S. LAZAR** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the quantity of ammonium sulphate available for distribution in the State during the current financial year;

(*b*) its proportion to the actual demand by the people; and

(*c*) the steps taken to comply with the full demand?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) The quantity is estimated as 123,000 tons.

(*b*) About 90 per cent.

(*c*) Ammonium Sulphate is supplied by the Government of India to this State. As ammonium sulphate is in short supply the State will not be getting the full quota for the year, but the Government of India have been pressed to sanction the maximum possible allotment out of the available supplies. The Government of India have been diverting stocks from Sindri to make good shortfall in imports. With a view to make up for the shortage in ammonium sulphate the Government have introduced schemes for the development of local manurial resources and thus increase the availability of compost.

* 236 *Q.*—**Sri S. LAZAR** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the average annual requirement of ammonium sulphate for the Tiruchirappalli district;

(*b*) the quota allotted for the district for 1957;

(*c*) whether the full quota has been supplied to the district; and

(*d*) if not, the reasons therefor?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) Thirteen thousand tons.

(*b*) Thirteen thousand and eighty-nine tons.

(*c*) Yes.

(*d*) Does not arise.

**Sri S. LAZAR** : ஸர், திருச்சி ஜில்லாவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற அமோனியம் சல்பேட்டில் 9 லட்சம் டன் மாத்திரம்தான் உரிய காலத்தில் வந்தது. பாக்கி 8 ஆயிரம் டன் உரங்களும் காலம் கடந்த பின்தான் வந்து சேர்ந்தது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அதுபற்றி தகவல் என்னிடம் இல்லை.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Arising out of the answer of the Hon. Minister, and in view of the shortage of ammonium sulphate, will the Government consider the desirability of giving aid to those people who resort to this endow manure?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir, the intensification of the local manurial schemes has been taken up and under that some aid is given to the parties concerned.

SRI K. RAMASUBBU : சிந்திரி உரமானது கலப்பு உரம் என்கிற பெயரில் நம் ராஜ்யத்திற்கு அதிகமாக வந்துகொண்டு இருக்கின்றது. அவைகளை எல்லாக் கடைகளிலும் விற்று வருகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அமோனியம் சல்பேட்டை பொறுத்த வரையில் அது ஸெண்ட்ரலிலிருந்து அரசாங்கத்தின் மூலமாகத் தான் வரவழைக்கப்பட்டு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப் படுகின்றன. அதிலே சிந்திரி போன்ற உரங்களும் இறக்குமதி செய்யப் படுகின்றன. ஆனால் அவற்றில் கலப்படம் இருக்கும் என்று என்னிடம் தகவல் இல்லை. அந்த விபரங்களைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தகவல் கொடுத்தால் அதுபற்றி கவனிக்கலாம்.

SRI M. KALYANASUNDARAM : ஸார், ஒரு லட்சத்தி 23 ஆயிரம் டன் உரம் ஒதுக்கப்பட்டிருந்ததாக சொன்னார்கள். இந்த அளவு பூராவும் நேரடியாக விவசாயத்தில் ஈடுபட்டவர்களுக்குத்தான் விநியோகிக்கப் பட்டதா ? அல்லது கலப்பு உரம் போன்றவைகளை தயாரிக்கும் பாரி அண்ட் கோ போன்ற ஸ்தாபனங்களுக்கு கொடுக்கப்பட்டதா ? கொடுக்கப்பட்ட தென்றால் எவ்வளவு உரம் கொடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கலப்பு உரம் மற்றவர்களும் தயார் செய்கிறார்கள். இவர்களுக்கு மத்திய அரசாங்கத்திலிருந்தே இவ்வளவு வீதாச்சாரம் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கி றது.

SRI V. S. MANICKASUNDARAM : இப்போது கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் அரசாங்கத்தின் மூலமாக விநியோகிக்கப்படுவது மாத்திரமா அல்லது தனியார்கள் மூலமாகவும் ஏஜெண்டுகள் மூலமாகவும் கொடுக்கப் படுவதையும் சேர்த்து கொடுக்கப்படுகிற கணக்கா என்று அறிய விரும்பு கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் கொடுத்தது மொத்த கணக்கு விவரங்கள்தான். இப்போது கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் தனிப்பட்ட நபர்கள் மூலமாகவும் விநியோகம் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் சமுதாய நல அபிவிருத்தி திட்டத்தின் பகுதிகளிலும் தேசீய நல அபிவிருத்தி திட்டத்தின் பகுதிகளிலும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சில்லறையாகவும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

SRI K. RAMACHANDRAN : ஸார், அமோனியம் ஸல்பேட் சப்ளை குறைவாக இருப்பதால் கம்போஸ்ட் உரம் தயார் செய்து வருவதாகவும் மந்திரி அவர்கள் பதிலில் சொன்னார்கள். இந்த உரத்தில் சத்து குறை வாக இருந்து இதனால் விளைச்சலை பாதிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அமோனியம் ஸல்பேட் பற்றாக்குறையாக இருப்பதால் யூரியா, அமோனியம் நைட்ரேட், சூப்பர் பாஸ்பேட் போன்றவைகளையும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இவைகளை சேர்த்து பயன்படுத்துவதால் சத்து ஒன்றும் குறையாது.

SRI K. PERIANNAN : அமேனியம் சல்பேட் விவசாயிகளுக்கு அதிக மாக ஒதுக்கப்பட்டிருந்தும் அவை விவசாயிகளுக்கு காலா காலத்தில் கிடைப்பதில்லை என்பது அரசாங்கத்திற்கு தெரியவருமா ?



THE HON. SRI M. BHAKTAVATSALAM : அமோனியம் சல்பேட் பற்றாக்குறையாக இருக்கிறது. அதை வரவழைப்பதற்கு ரயில் போன்ற சாதனங்கள் வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் வைத்துக்கொண்டு எவ்வளவு தூரத்திற்கு காலாகாலத்தில் கொடுக்க முடியுமோ அதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

SRI T. S. RAMASWAMY PILLAI : கனம் அமைச்சர் அவர்கள் ஒரு லட்சத்தி இருபத்தி மூன்றாயிரம் டன் அமோனியம் சல்பேட் இந்த வருஷத்தில் கொடுத்திருப்பதாக சொன்னார்கள். ஆனால் பட்ஜெட் உரையில் 75 ஆயிரம் டன்தான் விநியோகிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இதில் எது சரி என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி தனியாக கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : பட்ஜெட் உரையில் 75 ஆயிரம் டன் அமோனியம் சல்பேட் கொடுக்கப்பட்டது என்றும் இன்னும் அதிகமாக தேவையாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகையால் நெய்வேலியில் இதற்கென்று ஒரு உர தொழிற்சாலை உடனடி யாக அதாவது 1960 வரையில் காத்திருக்காமல் உடனடியாகவே ஆரம்பிப்ப தற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பட்ஜெட் உரையில் 75 ஆயிரம் டன் கொடுக்கப்பட்டது என்று சொன்னதற்கும், இப்போது ஒரு லட்சம் இருபத்து மூவாயிரம் டன் கொடுக்கப்பட்டது என்று சொன்னதற் கும் ஏற்பட்ட வித்தியாசம், போன ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்ததையும் சேர்த்து இந்த ஆண்டில் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இதனால்தான் இரண்டு விதமான புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. நெய் வேலியில் அமோனியம் சல்பேட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அங்கீ கரிக்கப்பட்டிருக்கிறது. அது ஆரம்பிக்கப்பட்டால் நமது தேவை பூராவையும் பூர்த்தி செய்யும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

SRI K. R. NALLASIVAM : வெறும் அமோனியம் சல்பேட் மாத் திரம் உபயோகித்து வருவதால் நிலத்தை அது கெடுத்து விடுகிறது. ஆகவே அமோனியம் சல்பேட்டை வெளியே இருந்து வரவழைப்பது போன்று யூரியா போன்ற உரங்களையும் வரவழைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? அப்படியென்றால் எந்த அளவுக்கு இறக்குமதி செய்யமுடியும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த அளவுக்கு என்று இப்போது சொல்லுவதற்கு இயலாது.

### *Tamil Numerals*

* 237 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to impart instruction in the Tamil Numerals and the Tamil Mathematical Table "Yensuvadi" (எண் சுவடி) in schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no proposal to impart instruction in Tamil numerals. There is, however, provision for the teaching of mathematical table (yensuvadi) by indigenous method in the revised syllabus for elementary schools.

SRI A. VEDARATHNAM : இந்த தமிழ் எண்களும் இந்த தமிழ் எண்சுவடியும் அறியக்கூடியவர்கள் மிக சிலரே இருக்கின்ற காரணத்தால் அதை இப்பொழுதே அவர்களை கொண்டு பரப்பாவிட்டால் அடுத்த தலை முறைக்கு இந்த விஷயங்களை கற்றுக்கொடுப்பதற்கு ஆள் இல்லாமல் போய்விடும். ஆகவே உடனே இதை பரப்புவதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

[7th March 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : எண்சுவடியை படித்துக் கொள்வதற்கு பெரிய நிபுணர்கள் தேவையில்லை. எண்சுவடிகள் நம்மிடத்தில் தான் இருந்து கொண்டிருக்கிறது. அதை எல்லோரும் சுலபமாக கற்றுக்கொள்ளமுடியும்.

1-30 p.m. SRI K. ANBAZHAGAN : தமிழ் எண்சுவடியைப் போற்ற முன் வரும் போது தமிழ் இலக்கத்தையும் சேர்த்துச் சொல்லிக் கொடுத்தால் மாணவர்களுடைய அறிவு வளரும் என்பதை அரசாங்கம் பரிசீலித்ததா ? அப்படிப்பட்ட எண்சுவடியைப் படிப்பதால் அவர்களுடைய கணக்கறிவும், நுண்ணறிவும் வளரும் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இலக்கம் எதுவாக இருந்தாலும் கணக்கு ஒரே கணக்குதான். தமிழ் இலக்கமாக இருந்தால்தான் படிக்கலாம் என்று சொல்வது மூடப்பழக்கம் என்று சொல்ல விரும்புகிறேன்.

SRI K. RAMACHANDRAN : இந்த எண்சுவடிக் கணக்குக்கும், இப்போது புதிதாக அமலில் இருக்கும் நயா பைசா கணக்குக்கும் முரண்பாடு எதாவது ஏற்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நயா பைசா கணக்குப் போடுவது சுலபம். இந்த எண்சுவடி பின்னங்களைப்பற்றியது. இந்தக் காலத்தில் அந்த பின்னங்களுக்கு அவசியமில்லை.

SRI A. VEDARATHNAM : தமிழ் எண்களில் முந்திரி, அரைக்காணி போன்ற பின்னங்களெல்லாம் தமிழ் எழுத்தில் இருக்கின்றன. ஆங்கிலத்தில் இல்லை. ஆங்கிலத்தில் அவைகளை எழுதுவது கஷ்டம். ஆங்கிலத்தில் இந்தக் கணக்குகளை அரைப்பக்கத்தில் போடுவதை வாய்க்கணக்காகப் போட்டு விடலாம். அதற்குத் தமிழ் எண்கள் அவசியம். புராதன நூல்களைப் படிக்க அந்த எண்கள் மறந்து போனால், பின்னால் புராதனச் சுவடிகளைப் படிக்க முடியாது. ஆகவே இந்த எண்கள் மிக அவசியம் என்பதை கனம் மந்திரி அவர்கள் உணர்ந்து அதையும் மாணவர்கள் பயில ஏற்பாடு செய்ய முன்வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த எண்களைத் தனிப்பட்ட முறையில் வேண்டுமானால் ஆராய்ச்சி செய்யலாம். அதற்காக எல்லாக் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. சர்க்காரைப் பொருத்த வரையில் எல்லா எண்களும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமென்பதுதான் கொள்கை. ஹிந்தி இலக்கம்கூட வரக் கூடாது என்று சர்க்கார் சிபாரிசு செய்து கொண்டிருக்கிறார்கள். எல்லா எண்களும் அதே அடிப்படையில் இருக்கவேண்டுமென்பதுதான் சர்க்காருடைய கொள்கை.

SRI A. V. P. ASAITHAMBI : இந்த இலக்கங்கள் இந்தியில்கூட வரக் கூடாது என்பது சர்க்காருடைய அபிப்பிராயம் என்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். இப்போது அரசாங்கத்தார் போட்டிருக்கும் காலண்டரில் தமிழ் இலக்கமுள்ளதாகப் போட்டிருக்கலாம். அதை விட்டு ஏதோ, சாகா, மாகா, பல்குண என்று போட்டிருக்கிறார்களே ஏன் ?

MR. SPEAKER : The Hon. Minister need not answer the question.

SRI A. GOVINDASAMY : தலைவர் அவர்களே, நமது கல்வி அமைச்சர் எண்சுவடி படித்திருக்கிறார்களா ? அல்லது மூடப் பழக்கம் என்று அதை ஒதுக்கித்தள்ளி விட்டார்களா ?

MR. SPEAKER : If the Hon. Minister is not willing to answer that, he need not answer that question.



7th March 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : மூடப் பழக்கம் என்று சொன்னது பின்னங்களை படிப்பதற்கு இல்லை. அந்தக் காலத்திலே பின்னம் தெரியாமல் இருந்தால் அப்போது இருக்கக்கூடிய நிலைமைக்குச் சரியாக இருக்காது. அந்த நிலை மாறி மறைந்த பிற்பாடு இப்போது தமிழ் எண்கள் வரவேண்டுமென்று சொல்வதுதான் மூடப்பழக்கம். மூடப்பழக்கம் என்பது காலத்தை அனுசரித்தது. ஒரு காலத்தில் அவசியமாயிருந்தது பிற்காலத்தில் மூடப் பழக்கமாக ஆகிறது.

## *Caste certificates*

* 238 Q.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the persons from whom the Harijan students studying in schools should obtain Caste Certificate; and

(b) the person from whom the Harijans applying for posts in State Government Departments should obtain such certificate?

THE HON. SRI P. KAKKAN : (a) The Harijan students studying in schools should obtain Caste Certificates from any one of the following Non-officials :—

1. Presidents of the District Boards.
2. Chairmen, Municipal Councils.
3. President of Class I Panchayat Boards.
4. Honorary Magistrates.
5. M.Ps. belonging to this State.
6. M.L.As. and M.L.Cs.

(b) An Officer of the Revenue Department not lower in rank than a Tahsildar or an Independent Deputy Tahsildar.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister whether all Adi-Dravidas get these concessions whether they call themselves Harijans or otherwise? For, *Sambans*, although they are Adi-Dravidas, they are describing themselves as Parayas and therefore, they are not getting educational concessions and certificates are not issued to them. Will Government look into the matter and issue necessary orders to the Director of Public Instruction and other authorities to recognize Parayas also as Harijans?

MR. SPEAKER : This question does not arise from the main question. This relates to authorities who will issue the certificates.

SRI P. G. MANICKAM : ஸார், என்னால் கேட்கப்பட்ட இந்தக் கேள்வியின் இரண்டாவது பிரிவுக்குப் பதில் கொடுக்கவில்லை. ராஜ்ய அரசாங்க இலாக்காக்களில் உத்தியோகங்களுக்கு விண்ணப்பித்துக்கொள்கிற ஹரிஜனங்கள் அந்த ஸர்டிபிகேட்டை யாரிடம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று மந்திரி அவர்கள் சொல்லுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நான் பதில் சொல்லியிருக்கிறேன். ரெவின்யூ டிபார்ட்மெண்டில் தாசில்தார் ரேங்குக்குக் குறையாமல், அல்லது இண்டிபெண்டெண்ட் டெபுடி தாசில்தார் அவர்களிடத்தில் அத்தாட்சிப் பத்திரம் வாங்கவேண்டும்.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, ஜாதி ஸர்டிபிகேட்டெல்லாம் கெஜெட் பதிவு உத்தியோகஸ்தர்களிடம் வாங்கவேண்டுமென்ற விதி இருக்கின்ற காரணத்தால் ஏழை ஹரிஜன மாணவர்கள் ஸர்டிபிகேட் வாங்க கஷ்டப்படுகிறார்கள். சட்டசபைப் பிரதிநிதிகளிடமிருந்தும், முனிஸிபல் கவுன்சிலர்களிடமிருந்தும் இந்த ஸர்டிபிகேட் வாங்குவதை அனுமதிக்க ஏற்பாடு செய்ய சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நான் கொடுத்த ஆன்ஸரிலே எம்.எல்.ஏ., எம்.எல்.ஸி., எம்.பி. கூட ஸர்டிபிகேட் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் அமைச்சர் அவர்கள் எம்.எல்.ஏ. ஸர்டிபிகேட் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அதாவது அந்த ஜூரிஸ்டிக்ஷன் எம்.எல்.ஏக்களிடம்தான் வாங்கவேண்டுமா ? அந்த தொகுதியைச் சேர்ந்த அங்கத்தினரிடம்தான் வாங்கவேண்டுமென்பதில் பல சங்கடங்கள் வருகின்றன. எதிர் கட்சி அங்கத்தினருடைய தொகுதியைச் சேர்ந்தவர்கள் அந்த அங்கத்தினர்களிடம் ஸர்டிபிகேட் வாங்க முடியாமல் எங்களிடம் வந்து சேருகிறார்கள். அதனால் மிகவும் சங்கடம் உண்டாகின்றது. ஆதலால் ஜூரிஸ்டிக்ஷன் எம்.எல்.ஏ. என்று இல்லாமல் எந்த எம்.எல்.ஏ.யாக இருந்தாலும் ஸர்டிபிகேட் கொடுக்கலாம் என்று அரசாங்கம் அனுமதிக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: அந்தந்த வட்டார அங்கத்தினர்களுக்குத்தான் அந்தந்த நிலைமை தெரியும். அதனால்தான் அந்தந்த வட்டார அங்கத்தினர்கள் கொடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம்.

SRI A. GOVINDASAMY : ஹரிஜன்ஸ் என்று ஸர்டிபிகேட்டில் எழுதிவிட்டாலும் ஆதித்திராவிடர்கள் என்று ஸர்டிபிகேட் கொண்டுவந்தால்தான் ஏற்றுக் கொள்வேன் என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆதித்திராவிடர்கள் என்றாலும், ஹரிஜனங்கள் என்றாலும் ஒன்றுதான். ஆகவே, சர்க்கார் ஒரு அறிக்கையை விட்டு அந்தமாதிரி இருந்தாலும் ஸர்டிபிகேட்டுகளை ஏற்றுக்கொள்ளும்படி அறிவிப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் ஒரு தனிக் கேள்வி போட்டால் அதற்கு பதில் சொல்லுகிறேன்.

SRI P. G. MANICKAM : ஸார், ஹரிஜனங்கள் வேலை சம்பாதிக்க, தொழிற் கல்வி பயில ஜாதி ஸர்டிபிகேட் வாங்கவேண்டுமானால் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் அல்லது கெஜடெட் ஆபீசரிடம் வாங்கவேண்டியிருக்கிறது. இதனால் ஹரிஜனங்களுக்கு ஹிம்சையாக இருக்கின்றது. ஆகவே முன் சொன்ன பிரகாரம் ஸ்தல எம்.எல்.ஏக்கள், ஸ்தல முனிஸிபல் கவுன்ஸிலர்கள், பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் இவர்களிடம் வாங்கலாம் என்று சட்டத்தை திருத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் ஒரு தனிக் கேள்வி போட்டால் பார்த்து பதில் சொல்லுகிறேன்.

SRI K. B. S. MANI : ஸார் இப்போது கவர்ன்மெண்ட் உத்தியோகத்திற்கு மனு செய்து கொள்ளக் கூடிய ஹரிஜனங்கள் தனிப்பட்ட தாசில்தாரிடம் ஸர்டிபிகேட் வாங்கவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது வெளியாகிய ஒரு எலெக்டிரிசிடி போர்ட் நோட்டிபிகேஷனில் " எனி அதர் பர்ஸன் " என்று போட்டிருக்கிறார்கள். இந்த " எனி அதர் பர்ஸன் " யார் கையெழுத்திட்டால் தாசில்தாருக்குச் சமமாக பாவிக்கப்படுமென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : " எனி அதர் பர்ஸன் " என்பது இண்டிபென்டெண்ட் டெபுடி தாசில்தாரைத்தான் குறிக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





*Agricultural subordinates*

* 239 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Indian Council of Agricultural Research have made any recommendation regarding the pay of Agricultural subordinates with B.Sc. (Agricultural) qualifications; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

* 240 *Q.*—SRI V. SUBBIAH : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to enhance the pay of Agricultural Demonstrators?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர்கள் பி.எஸ்ஸி. பட்டம் பெற்றவர்களுக்கு சம்பள உயர்வு அளிக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். துவக்கச் சம்பளம் 100 ரூபாயிலிருந்து 135-க்கு மாற்றப்பட்ட போதிலும், 8 ஆண்டுகள் வரை ஆண்டு தோறும் 5 ரூபாய் சம்பள உயர்வு பெற்று பிறகு 10 ரூபாய் உயர்வு வாங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு இப்போது 18 ஆண்டுகள் வரை 5 ரூபாய் உயர்வு கொடுத்து, அதற்குப் பின்னால் 10 ரூபாய் உயர்வு கொடுப்பதைக்குறித்து குறை தெரிவித்திருக்கிறார்களே, அது கவனிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றியெல்லாம் வரவு செலவுத் திட்டத்தின் மீது முடிவு செய்யும்போது யோசித்து முடிவு செய்திருக்கிறோம்.

*Teachers in Panchayat Schools*

* 241 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the teachers employed in panchayat schools are paid the special additional pay and dearness allowances sanctioned in Government Order No. 1985, Education, dated 31st October 1956?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

*Cooum River*

* 242 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. 1-40
the Minister for Public Works be pleased to state whether the p.m.
Cooum River is used for navigation purposes?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir, to a limited extent from the Madras Penitentiary to Cooum lock, north of the University buildings.

**SRI V. K. KOTHANDARAMAN :** சென்னையிலிருந்து ஆந்திரத் துறை முகம் வரையிலே இந்தக் கூவம் ஆற்றில் கப்பல் போக்கு வரத்திற்காக பரிசீலனை செய்ய ஏற்கனவே பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பரிசீலனை முடிந்ததா ? அப்படியானால் அதன் விவரம் கூற முடியுமா ?

**THE HON. SRI P. KAKKAN :** கூவம் நதியில் கப்பல் போக முடியாது (சிரிப்பு). சிறிய படகுதான் போக முடியுமே தவிர, பெரிய படகு போக முடியாது என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**SRI T. P. ELUMALAI :** இந்தக் கூவம் ஏரியை (சிரிப்பு) மன்னிக்க வேண்டும், ஆற்றை ஆழமாகத் தோண்டி படகு போவதற்குத் தக்கவாறு திருத்தி அமைக்க வேண்டுமென்று சர்க்காரிலே நடவடிக்கை எடுப்பதாகத் தெரிய வந்தது. ஆகவே அதைப் பள்ளமாக ஆக்கி படகு போவதற்குச் சரியாக அமைத்துக் கொடுக்க முடியுமா என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**THE HON. SRI P. KAKKAN :** கூவம் நதியை மிகவும் ஆழப்படுத்தி சமுத்திரத்திலிருந்து அலைகள் மூலம் முகத்துவாரத்திற்கு அப்புறப்படுத்தி கொண்டு வருகிற மண்ணையும் போக்குவதற்கு ஏற்பாடு செய்தால் படகு போவதற்கு முடியும் என்று எஞ்சினியர்கள் அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டால், கார்ப்பொரேஷன் வாரித் தண்ணீரைத் தடுக்கவேண்டும். இப்போதுள்ள நிதி நிலைமையில் தற்சமயம் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**MR. SPEAKER :** Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE MADRAS ASSEMBLY RULES *RE* THE CLOSURE OF DALMIA CEMENT (BHARAT), LIMITED, DALMIAPURAM,

**MR. SPEAKER :** கனம் லாஸர் அவர்கள் 40-வது விதிப் பிரகாரம் ஒரு பிரேரேபணையைக் கொடுத்திருக்கிறார்கள். சுருக்கமாகப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**SRI A. VEDARATHNAM :** On point of order, Sir, சபையில் கேள்வி நேரம் மிகவும் முக்கியமான நேரம். அதற்காக ஒரு மணி நேர அவகாசம் அளிக்கப்பட்டிருந்தும்கூட, அந்த நேரத்தைப் பூராவாகப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. அங்கத்தினர்கள் உப கேள்விகள் கேட்பதற்கு இன்னும் அதிக அவகாசம் கொடுத்து, கேள்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற ஒரு மணி நேரத்தையும் பயன்படுத்திக்கொள்ள அனுமதித்தால் அனுகூலமாக இருக்காதா என்பதைத் தலைவர்கள் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**MR. SPEAKER :** எனக்கு ஒன்றும் இதில் ஆட்சேபணை இல்லை. கேள்விக்காக அதிக நேரம் ஒதுக்கினால், அதிக அங்கத்தினர்கள் பொது விவாதத்தின்போது பேசமுடியாமல் போய்விடும். கனம் அங்கத்தினர் சம்பந்தப்பட்ட வரையில் இரண்டு நாட்களுக்கு முன்னர் பேசிவிட்டார்கள். அவர்களுக்கு கவலையில்லை (சிரிப்பு). ஆனால் இன்னும் பேசுவதற்குப் பல அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அதை நினைவில் வைத்துக்கொண்டு தான் கேள்விக்காக நேரத்தை ஒதுக்கினேன்.

**SRI S. LAZAR :** கனம் தலைவர் அவர்களே, திருச்சி ஜில்லாவிலே, டால்மியாபுரம் பகுதியிலே, டால்மியா செமண்ட் கம்பெனி இருப்பதோடு கூட, "போர்ஸிலேன்" சாமான்கள் போன்று சில பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. அங்கே வேலை செய்யக்கூடியவர்கள் சுமார் 4,400 பேர் இருக்கும். ஒரு சில மாதங்களுக்கு முன்பு நேர்மையான





சில கோரிக்கைகளை மானேஜ்மெண்டாருக்கு விடுத்திருந்தார்கள். அவைகளுள் முக்கியமானவை, மாத அடிப்படையில் ரூபாய் 30 சம்பளம் கொடுக்க வேண்டுமென்றிருந்த போதிலும் கூட, முழு நேரம் வேலை செய்தபோதிலும் கூட, சரியான முறையில் ஊதியம் கொடுக்கப்படவில்லை. அவர்களுடைய "லோடு" பூர்த்தியாகவில்லை என்ற முறையிலே சம்பளம் குறைவாகவே கொடுக்கப்பட்டது. முப்பது ரூபாய் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். இன்னும் "போனஸ்" கொடுப்பது என்று முடிவு செய்தபோது, எல்லாத் தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தார்கள். இன்னும் உபரிச் சம்பளம் கொடுக்கும்போது ஒரு பகுதியினருக்கு மாத்திரம் கொடுத்து, மீதியுள்ளவர்களுக்கு கொடுக்காமல் இருக்கக்கூடாது, எல்லோருக்கும் கொடுக்கவேண்டுமென்ற நேர்மையான கோரிக்கைகளை விடுத்திருந்தார்கள். மானேஜ்மெண்டார் இவைகளை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினாலே ஒரு சிலர் ஸ்டிரைக் செய்ய ஆரம்பித்து அங்கே வேலை ஸ்தம்பிதம் ஏற்பட்டிருக்கிறது 5-2-58-ம் தேதி ஆரம்பித்த ஸ்டிரைக் ஒரு பகுதியிலே ஆரம்பித்து, 3, 4, பகுதிகளிலே பரவி, 27-2-58-ம் தேதி வரைக்கும் 550 பேர் "சஸ்பெண்டு" செய்யப்பட்டார்கள். பிறகு 439 பேர் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னர் சுமார் 800 கூலி ஆட்களை வேலையை விட்டு நிறுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இப்படிச் செய்கின்ற காரணத்தினால் வேலை இடைக்காமல் இருப்பதோடு கூட, மீதமுள்ள 3,600 நபர்களைக் கொண்டு மானேஜ்மெண்டார் தொழிற்சாலையை நடத்த முடியும். அதையும் நடத்தாது உற்பத்தியை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இப்படிச் செய்கின்ற காரணத்தினால், தினசரி 1,000 டன் செமெண்ட் உற்பத்தி தடைப்படுகிறது. அதோடு வேலை செய்கிற ஒரு சிலருக்கு "லே ஆப்" கொடுக்கிற காரணத்தால், 300, 400 கூலி ஆட்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது விஷயமாக அவசர நடவடிக்கைகள் எடுத்து ஒரு நல்ல முடிவு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN :** Sir, the Dalmia Cement Workers' Union entered into an agreement relating to the revision of wages of certain categories of workers on 6th July 1957 before the Minister for Labour. This revision covered only a few of the categories of workers. Subsequent to this agreement, the Union has been demanding that the Kalasis who are in the grade of Rs. 55 should be given Rs. 8 in addition to their basic salary, instead of Rs. 4 already granted to them. The management declined to consider this demand as this was not one of the categories of workers included in the agreement. Certain Kalasis working in the shifts who were deputed to attend to the repairs in the Crane Section, were reported to have refused to do the normal duties on 1st February 1958. They also refused to work overtime, even during emergencies. The workers in the Kiln Section declined to do their regular duties on the evening of 3rd February 1958. They were also reported to have prevented the other workers from doing their work. This was repeated again by the workshop workers as well as the Mill Section workers on the 5th February.

On the 6th February, the work in some sections went on in the morning shift. Normal work could not be carried on in the night shift due to the absence of the crane drivers in the Crushing Department. All the trucks loaded with limestone to feed the

[Sri R. Venkataraman] [7th March 1958

crushing had to be parked in a line without unloading due to the absence of one of the loading Mazdoors. Thus, there was concerted stoppage of work in each and every section of the Factory.

The Labour Officer, Tiruchirappalli, who visited the factory on the 7th, also saw some batch of fitters in Kiln section sitting idle without attending to the work. Some of the workers also seem to have stated that they were prevented from doing work. Despite the advice of the Labour Officer, the workers continued to remain idle without doing normal work.

Both the Dalmia Cement Workers' Union, Dalmiapuram, and the Dalmia Industries Workers' Union, Dalmiapuram, were also telegraphically advised by the Commissioner of Labour on the 6th and 8th February 1958 to work normally, without detriment to normal production pending enquiry by the Labour Officer into their grievances, if any. This also did not improve the situation.

As a result, there has been complete cessation of work from 10 a.m. on the 8th February in the Factory, Quarry and other allied Departments. The situation is however calm and peaceful. Since this Statement was prepared, I understand that the Union and the Management are carrying on negotiations and the situation is slowly returning to normalcy.

The Government are carefully watching the developments and will assist the parties to resolve their differences peacefully.

## III.—PRIVILEGE MOTION *RE*: MISREPRESENTATION IN THE PRESS OF A MEMBER'S SPEECH.

1-50 p.m. **Mr. SPEAKER** : கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்ப விரும்புகிறார்கள். அவர்கள் என்ன பேசவேண்டுமோ அதைச் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri K. ANBAZHAGAN** : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட மன்றத்தில் கடந்த 3-ம் தேதி நிதி நிலை அறிக்கையைப் பற்றிய விவாதத்தில் நான் கலந்து கொண்டு பேசிய பேச்சின் கருத்துக்களை, உண்மைக்கு மாறாகவும், நீதிக்குப் புறம்பாகவும் ஒரு பத்திரிகையில் வெளியிட்டு இருக்கிறார்கள். நான் அங்கே பேசிய கருத்துக்களுக்கு மாறான எண்ணத்தைப் பொது மக்களிடத்தில் தோற்றுவிக்கவும், என்னுடைய கருத்துக்களிலே பொதுமக்கள் குறை காணவும், அந்தப் பத்திரிகை வழி செய்திருக்கிறது. அதைப்பற்றிய செய்தியைத் தங்களிடத்தில் தெரிவிப்பதின் மூலமாக தக்க ஒழுங்கு நடவடிக்கையை "Privilege Committee" மூலமாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது குறித்து மேலும் பேசுவது அவசியம் இல்லை என்று கருதுகிறேன். பதிவு செய்யப்பட்ட பேச்சையும், பத்திரிகையில் வெளி வந்த செய்திகளையும் நான் தலைவர் இடத்தில் தந்திருக்கிறேன். தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி வெளியிட்ட பத்திரிகை "ஜனசக்தி" நாள் இதழ். அந்த இதழில் வந்துள்ள செய்தி என்னுடைய பேச்சுக்கு முற்றிலும் முரணானது, மாறுபட்ட கருத்தைத் தந்திருக்கிறது. இதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : இந்த **Motion** என்னிடத்தில் இப்பொழுது தான் வந்தது. அதை யோசித்து நாளைக்கோ அல்லது நாளை மறுதினமோ பதில் அளிக்கிறேன்.



## IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1958-59—*cont.*

**Mr. SPEAKER** : இப்பொழுது பொது விவாதம் நடக்கும். இன்று கட்சித் தலைவர்கள் எஸ். பக்கிரிசாமி பிள்ளை, பி. எஸ். சின்னதுரை, எம். கல்யாணசுந்தரம் முதலியவர்கள் பேசுவார்கள். அவர்களுக்கு அரை மணி நேரம் ஒதுக்கி இருக்கிறேன். உள் விவகார அமைச்சர் அரை மணி நேரம் பேசப் போவதாக இருப்பதால் 2 மணி நேரம் தான் பாக்கி இருக்கிறது. ஒவ்வொரு அங்கத்தினரும் 10, 10 நிமிஷம் பேசினாலும் 12 அங்கத்தினர்கள் தான் பேச முடியும். அதாவது 8 காங்கிரஸ் அங்கத்தினர்கள், இரண்டு இன்டிபென்டென்ட் அங்கத்தினர்கள், ஒரு தி.மு.க. அங்கத்தினர், ஒரு நேஷனல் டெமொக்ராடிக் பார்ட்டி அங்கத்தினர் பேசலாம். நேரம் ஜாஸ்தி கிடைத்தால் அதிகம் பேரை பேசச் சொல்லலாம். நேற்றே ஒரு காங்கிரஸ் அங்கத்தினர் பேசிவிட்டார். ஆகையால் இன்று விவாதத்தை ஸ்ரீ எம். எஸ். செல்வராஜன் ஆரம்பிப்பார்.

**Sri M. S. SELVARAJAN** : கனம் சபா நாயகர் அவர்களே, சபையின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பட்ஜட்டை எல்லோரும் வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன். கடந்த வருஷத்தில் விழுந்த பள்ளங்களை எல்லாம் சரி செய்து இந்த வருஷத்திய பட்ஜட் கவர்ச்சி குன்றாமல் தயார் செய்யப்பட்டிருக்கிறது என்பதே என்னுடைய அபிப்பிராயம். செலவுகளை ஈடுபடுத்துவதற்காக, அவசியமான செலவுகளை ஈடுபடுத்துவதற்காக 3 விதமான வரிகள் போடப்பட்டு இருக்கின்றன. அவைகள் எந்த அளவுக்கு நியாய உணர்ச்சியோடு, சரியான முறையில் போடப்பட்டிருக்கின்றனவா என்பதை பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைய நிலையில் எல்லா ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் இருக்கக் கூடிய பொறுப்பை எல்லோரும் கவனிக்க வேண்டும். தேசிய வளர்ச்சி திட்டத்தின் கீழ் பஞ்சாயத்துக்களிலும், ஜில்லா போர்டுகளிலும், முனிஸிபாலிடிகளிலும் நல்ல ரோடு வசதி செய்யப்பட்டிருக்கிறது. அப்படி அமைக்கப்பட்ட ரோடுகளை சரிவர பாதுகாக்க இந்த ஸ்தல ஸ்தாபனங்களுக்கு பெரிய தொகை தேவையாக இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். இதில், பொருளை நல்லவிதமாக, வசதிகள் செய்து கொடுப்பதற்கு உபயோகப் படுத்தப்படுகிறது என்பதை எல்லோரும் கவனிக்க வேண்டும். இப்பொழுது விதிக்கப்போகும் 3 வரிகளும் கூட, ஏழை, எளியவர்கள், அதிகம் சுருக்கமுடியாதபடி, குறைந்த பட்ச விகிதத்தில் போட்டிருப்பது மிகவும் பொருத்தமானது என்று நான் சொன்னேன்.

டீசல் ஆயில் மீது வரியைப் போட்டிருக்கிறார்கள். குறிப்பாக இந்த டீசல் ஆயில் பஸ்ஸும், லாரியும் ஓட்டுவதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. பஸ் கம்பனிக்காரர்களும், லாரி கம்பனிக்காரர்களும் இதனால் பாதிக்கப் படுவார்கள் என்று சொன்னால் அதில் உண்மை இல்லை. ஒரு காலன் டீசல் ஆயிலைக் கொண்டு 20 அல்லது 25 மைல் ஓட்டலாம். சக்தி உள்ள ஒரு எஞ்சினையோ அல்லது மோட்டாரையோ ஓட்டும்பொழுது ½ நயா பைசாவுக்கு பதிலாக ஒரு நயா பைசாவாக வரி விதித்திருக்கிறார்கள். இதன் மூலம் வரும் தொகை 70 லட்சம். இந்தத் தொகையை, விவசாய வருமான வரி விதிக்காமலே, டீசல் எண்ணெயில் இன்னும் ½ நயா பைசாவாகக் கூட்டி வரி விதிக்கலாம் என்றும், அதிக பட்சம் 25 நயா பைசா என்பதை 50 நயா பைசாவாக ஆக்கி விடலாம் என்றும் சிலர் சொல்லலாம். அதிகப்படியாக வரி விதித்தாலும் கூட அதை நல்லபடி நடத்துவார்கள் என்று நம்புகிறேன்.

இங்கு அமைக்கக்கூடிய ரோடுகள் அகில இந்தியாவில் புகழ் பெற்றவை. இங்கு நல்ல ரோடு வசதிகள் இருப்பதால் இந்த வரிக்கு யாரும் முணுமுணுக்கப் போவது இல்லை. தகுந்த வசதியோடு போக்குவரத்துக்கு லாயக்கான நல்ல ரோடு வசதி வேண்டும் என்பதுதான் அவர்களுடைய தேவை. நல்ல ரோடு வசதி இல்லாததால் ஏற்படக்கூடிய செலவை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நல்ல ரோடு வசதி செய்வதற்காக கொஞ்சம் பணம் வசூலிப்பதில் ஒன்றும் கஷ்டம் இருக்காது. (பிளாக் டாப்) தார் வசதி செய்து கொடுத்தால் அதுவே அவர்களுக்குப் போதுமானது. இதில் எந்த விதமான குறையும் இருக்காது என்பதே என்னுடைய அபிப்பிராயம்.

பஸ் கட்டண விகிதாசாரம் எல்லாம் பெட்ரோல் விலையை அனுசரித்தே விதிக்கப்பட்டிருக்கிறது. எந்த காரணத்தைக் கொண்டும் பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியமே ஏற்படாது.

விவசாய வருமான வரி கூட 3,000 ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறவர்களுக்குத்தான் விதித்திருக்கிறார்கள். இது ஏழை விவசாயிகளுக்கு சுமையாக இருக்காது. நடுத்தர விவசாயிகளுக்கு இது ஒரு சுமையாக அமையுமோ என்று நினைப்பதற்கு நியாயம் உண்டு. படிப் படியாக வரி விதிப்பதில் தான் ஜனநாயக ஆட்சியின் சிறப்பு பொருந்தி இருக்கிறது. ஜனங்களுக்குத் தேவையான நல்ல காரியங்களைச் செய்வதற்குத்தான் ஜனநாயக அரசாங்கம் இருக்கிறது. நில உச்ச வரம்பு நிர்ணயிக்கக்கூடிய சட்டம் வர இருக்கிறது. ஆபரேஷனுக்கு முன்பாக ரத்த பரிசோதனை செய்வதைப்போல, இந்த வரியை சமாளிக்கத் தயாராக இருக்கவேண்டும். ரத்த பரிசோதனையின்போது ஏற்பட்ட அதிர்ச்சியை சில நாட்களுக்குள் சமாளித்துக்கொள்ள முடியும். ஏழை விவசாயிகளும், நடுத்தர விவசாயிகளும் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். இதில் உண்மையாக ஏழை விவசாயிகள் பயப்படுவதற்கு இடமே இல்லை. ஏழை விவசாயிகள் பாதிக்கக் கூடாத அளவிற்கு, தக்க விதிகளை ஏற்படுத்தி நியாயமான முறையில் வகுத்துக் கொடுக்க இந்த அரசாங்கத்தால் நிச்சயமாக முடியும். ஆகையால் இந்த வரியைப் பற்றி யாதொரு முணுமுணுப்பும் அவசியமில்லை. மக்கள் நல்ல காரியங்களைத்தான் எதிர்ப்பார்க்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

ஏழை, எளிய ஹரிஜனங்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் கூட 40 லட்சம் அதிகம் செலவு செய்ய முன்வந்திருப்பது, நல்ல காரியங்களை செய்வதற்கு எடுத்துக் காட்டு என்று நினைக்கிறேன். மத்திய அரசாங்கம் கொடுத்த சமிக்ஞையை வைத்துக்கொண்டு, என்.ஜி.ஓ.-வினருக்கு கொடுக்கும் கல்வி சலுகை மிகவும் வரவேற்கத் தகுந்தது. அவர்களுக்கு தக்க ஊதியம் கொடுப்பதற்கு துணிந்து முன் வர வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும், மாகாண சர்க்கார் ஊழியர்களுக்கும் வித்தியாசம் இருக்கக்கூடாது. மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும், மாகாண சர்க்கார் ஊழியர்களுக்கும் ஒரே அளவு பயிற்சி, ஒரே அளவு கல்வி என்று இருக்கும்போது நமது அரசாங்கம் துணிந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

திருநெல்வேலி ஜில்லாவில் நல்ல காரியத்திற்காக முதல் அமைச்சர் அவர்கள் வந்து 13½ லட்சம் ரூபாய் செலவில் கட்டவிருக்கும் ஆஸ்பத்திரிக்கு அஸ்திவாரம் போட்டார்கள். இந்த வருஷத்தில் அதற்காக காலணா கூட ஒதுக்காதது கண்டு வருந்துகிறேன். இதில் ஏதாவது தவறு இருந்தால் அதைத் திருத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். நாஷனல் ஹைவேஸ் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரியிலிருந்து கல்கத்தா வரை போகும் 1,200 மைல் ரோடு மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்க வேண்டும். அப்பொழுது இந்த அரசாங்கத்திற்கு அதற்கு என்று செலவிடப்படும் தொகை மிச்சம் ஆகும்.

2 00 p.m. அடுத்தபடியாக தூத்துக்குடி துறைமுகத்தைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அத்துடன் சேதுசமுத்திரம் திட்டத்தை எடுத்துக்கொண்டு நடத்தினால் அதன் மூலமாக நமக்கு நல்ல வருமானம் கிடைக்கும். ஒரிஸ்ஸாவிற்கு மத்திய அரசாங்கம் 23 கோடி ரூபாய் உதவியாகக் கொடுத்து மசூலிப்பட்டணம், காக்கிநாடா துறைமுகங்களை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். அதனால் அந்த அரசாங்கத்திற்கு எவ்வளவோ ரூபாய் வருமானம் வருகிறது. அந்தத் துறைமுகங்கள் அந்த அரசாங்கத்திற்கு ஒரு தனித்துறைமுகமாக இருக்கிறது, அதைப் போலவே நம் ராஜ்யத்திற்கு நாகப்பட்டணம், கடலூர் துறைமுகங்கள் இருக்கின்றன. அத்துடன் தூத்துக்குடி துறைமுகம் இருக்கிறது. மத்திய அரசாங்கத்தினிடமிருந்து கொஞ்சம் தொகையை வாங்கி இந்தத் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தால் நமது ராஜ்யத்திற்கு அதிகப்படியான வருமானம் எதிர் பார்க்கலாம். செலாவணியில் நாலில் ஒரு பங்கு உப்பு தூத்துக்குடியில்தான்





உற்பத்தியாகிறது. அங்குதான் இரண்டு கோடி மணங்கு உப்பு உற்பத்தியாகிறது. அதனால் அந்தத் துறைமுகத்தை எடுத்துக்கொண்டு இருபது அல்லது நாற்பது அடி ஆழம் வெட்டினால் அது ஒரு பெரிய துறைமுகமாக ஆகிவிடும். அதன் மூலம் நமது ராஜ்யத்திற்கு என்று தனியான ஒரு துறைமுகத்தைத் அமைத்துக்கொண்டு அதன் மூலம் நமது ராஜ்யத்தின் வருமானத்தை பெருக்கிக்கொள்ளலாம். அதன் மூலம் நமக்கு வேண்டிய வருமானம் வரக்கூடிய வசதி இருக்கிறது.

* Sri M. MUNI REDDI : Mr. Speaker, Sir, before coming to the Budget speech of the Hon. Finance Minister, I like to say a few words with regard to the constituency I represented and the constituency I represent, namely, Hosur taluk and Veepanapally firka in Krishnagiri taluk. Sir, they were the disputed areas in the Madras State and after the settlement of the border issue between Andhra and Madras, we are bound to adjust ourselves and I respectfully submit that the Government are also bound to improve that neglected area. In this connection, I like to state that we have made great contribution from Hosur taluk recently in the drive for the Small Savings Scheme and the Hon. Minister for Agriculture, the Hon. Mr. Bhaktavatsalam, who happened to visit that place last month had words of appreciation for that. So, we have and are trying to adjust ourselves in this new set up after the Pataskar's Award.

Sir, I like to take this opportunity to bring to the notice of this House and the Government the assurances that have been given to us by our Hon. Chief Minister at the residence of the Andhra Chief Minister at Hyderabad when the Award was to be announced in the Zonal Council meeting. Sir, I take this opportunity to thank the Government, on behalf of the people of my constituency as well as the people of Hosur taluk, for having sanctioned one Land Mortgage Bank, another for provincialising Local Fund Hospital and the third for starting a Silk Weaving Station in Hosur taluk. Further, for the last seven years, we have been representing on the floor of this House the grievances of the taluk and have submitted more than once that that taluk has been neglected. We are thankful for the schemes that have been sanctioned so far this year.

Now, with regard to the Civil Court. I have been representing this matter often. The Hon. Minister for Home, Mr. Bhaktavatsalam was also pleased to inform me that the matter had been referred to the concerned authorities for examination. Apart from this, once an hon. Member was mentioning on the floor of this House, the question of a Civil Court for his taluk and the Government seem to have stated that unless the question was based on merits, and because the hon. Member wanted, it would not be granted. Our request is that Civil Court for Hosur is not only based on merits, but on justice. Because the Hon. Minister says that he has sent the concerned papers to the concerned authorities for examination, I like to place certain facts before the House and draw the attention of the Government with regard to relevancy of that demand.

[Sri M. Muni Reddi] [7th March 1958

Sir, there are 67 District Munsiff Courts in the Madras State. This is according to the statement showing the original suits filed in each District Munsiff Court, in the State of Madras, page 18. Out of the suits filed, in two District Munsiff Courts, the filings are nearly 100 original suits per year in each court. In 12 courts, the filings are below 300 and in 31 courts the filings are below 400. In Krishnagiri District Munsiff Court and Krishnagiri as territorial jurisdiction District Munsif Cout and Krishnawas 550 orignal suits whereas this year it has gone up to 568. Apart from this data, the real grievance is that the distance from many places to the Court is very great. The Hosur taluk is 1,200 square miles, and Krishnagiri taluk is 600 square miles in extent. Now in this Hosur taluk, 460 villages are recognised for the work purposes of court; and the distances given in the list are as follows: there are 34 villages with a distance between 50 and 90 miles; there are 108 villages with a distance of 40 and 50 miles; 117 villages are at a distance between 30 and 40 miles and 124 villages between 20 and 25 miles. Whereas in Krishnagiri taluk, 260 villages are recognised for the purpose of court work and the distances according to the list that has been maintained in the court are very less. There are no villages between 50 and 90 miles; there are no villages situated at a distance of 40 and 50 miles and there are no villages at a distance of 30 and 40 miles. There are only 9 villages between 25 and 30 miles and below a distance of 20 and 25 miles, there are over 124 villages. In these circumstances, I plead that in view of the distances that people have got to travel and consequently the lot of money that they have to spend, our request for a separate court should be considered. Sir, in this connection, I like to bring to the notice of the Government that in one case, the District Munsiff in his D.O. in 1955 has observed that there is a necessity for a Civil Court for Hosur and he had made that recommendation in view of the distance and he had recommended at last for a Circuit Court. Sir, I also like to submit the number of cases that have been tried every month. I have taken this data from the suit extract for seven months from July 1957 to January 1958. In the month of July, there were 29 listed suits from Hosur and 14 from Krishnagiri; In August, 27 from Hosur and 13 from Krishnagiri; in September, 28 from Hosur and 15 from Krishnagiri; in October, 20 from Hosur and 15 from Krishnagiri; in November, 26 from Hosur and 22 from Krishnagiri and so on. Thus, out of the 307 marked suits (marked as one year and above old) for seven months 184 listed suits were from Hosur and 123 from Krishnagiri. I am mentioning these statistics because I received a communication from the Government stating that the facts I submitted to the Government are being examined. Hence I am submitting to the Government that we are not unjustifiably asking for a court. The majority of cases come from Hosur and people are spending not less than Rs. 1,000 by way of travelling expenditure, a day, apart from the heavy sums spent for taking out summons to far off distance.



7th March 1958] [Sri M. Muni Reddi]

In regard to the taxation proposals, I like to say that in 1952 when the Surcharge on Land Revenue was imposed, we pleaded on the floor of the House for the imposition of agricultural income-tax. But we think that this is an inopportune time for the Government to come forward with this proposal. So many other things must also be taken into consideration. We do not object to the principle of this taxation, but we say that this is an inopportune time, especially in view of the passing of the Hindu Succession Act and in view of the proposed ceiling on land. According to Government data, now the average yield per acre is 11 bags, out of which the income will be Rs. 98. But how many ninety-eight would make Rs. 3,000. There will not be many to pay this tax and the expenditure to collect the tax will not justify the imposition of this tax. Thus it is the most inopportune time for the Government to think of this taxation. According to the very Government's statistical data now available, the yield per acre is given as 11 bags out of which the net income will be Rs. 98. How many Rs. 98' could make Rs. 3,000? So it is the most inopportune time to impose this tax. Even at present, the agriculturists are overburdened with taxes. A major part of the revenue is paid by rich landlords. Furthermore, they have to pay the road cess, education cess, railway cess and so on. All these go to show that he is burdened heavily. Even if we take the National Extension Service works and Local Development works, it is the rich men who contribute lion's share for the development works in the various areas. The Government of Madras should approach the Central Government for permission to levy a tax on buildings. As a result of the proposed Agricultural Income-tax, the Government can get only a sum of Rs. 75 laks. But, just imagine the amount that they have to spend. Even on previous occasions, I have suggested the levy of a surcharge on buildings. I once again request the Government of Madras to press upon the Central Government and obtain permission to levy a surcharge on buildings which will surely fetch a larger amount that could be utilised for betterment purposes.

2-10 p.m.

**Sri B. K. LINGA GOWDER**: Sir, in welcoming this year's budget, I congratulate the Hon. Finance Minister on his presenting another sober budget. The budget contains many laudable features and I am thankful to the Government for having made some allotments for the improvement of the District Headquarters Hospital, Ootacamund. The hospital is a small one. Nevertheless, it attracts patients from the whole State and at times even from outside. Especially during the summer season, on account of its salubrious climate conductive to the ailing and canvalescing, Ootacamund attracts a large number of people from various parts. It is therefore necessary that the hospital should be expanded and developed. There is very little scope for public contribution. Therefore, I request the Government to come forward with proposals for further expansion, improvement and provision of better equipment.

[Sri B. K. Linga Gowder] [7th March 1958

The roads used by the tourists, trade and general public in the district are in a very bad condition. The District Board with its meagre and limited resources is not able to cope up with the requirements in this regard. The sum allotted in the budget is inadequate and I am to request the Government to make more allotments.

May I take this opportunity to bring to the notice of the Government that Ootacamund, the Queen of Hill Stations, is fast losing its importance ever since the Government decided to discontinue the summer exodus to that place. The Central Government, who are stressing the importance and need for developing hill stations to attract more tourist traffic are not doing much to that place. The economic condition of the masses of the Nilgiris district is deteriorating very fast and alarmingly. The development of the hill station is not only good for the people of the hill station, but also for the people in the State. A well-developed hill station, an attractive hill station is a national asset and will attract foreign tourists thus earning substantial foreign exchange which we need most. Nature has made Nilgiris a vast reservoir of power and a constant giver of light and water to the people of the place. Progressively developed and persistently planned Nilgiris can be made the Switzerland of the East. As a first step in that direction, I would request the Government to hold a sitting of the Legislature—at least once in a year—in Ootacamund for a short period of a month or so. This will also offer an opportunity for the people in the interior Southern districts to know and watch the functioning of a democratic Government. It has often been argued that exodus to Ootacamund is a luxury and should be avoided. It is my humble submission that this argument is not quite correct. The extra amount involved in this will indirectly go to the benefit of the people of the Nilgiris district. Perhaps, the House is aware that the Kerala Government have come forward with proposals to develop Munar as a hill station. If it is only for the luxury of a few legislators, I do not think they would have come forward with such proposals. I leave it to the better sense of the hon. Members, especially my Dravida Munnetra Kazhagam brothers to consider this proposal and to support my move. Sir, Ootacamund has lost much of its beauty and natural resources due to the indiscriminate cutting of trees and soil erosion. These two things have to be checked promptly if one is not to kill the goose that lays the golden eggs. The Government must bestow more attention to see that these two evils are eradicated before it is too late.

Regarding the taxation proposals, the proposed tax on agriculture will hit hard the agriculturists of the Nilgiris district. Nilgiris has no irrigation facilities. Therefore, we are entirely dependent on the mercy of rains and seasons. It is blessed with no industry. Therefore, I request the Government to drop this proposal of taxation totally, or at least exempt the persons holding 50 acres and below, from this new measure of taxation. I will be



7th March 1958] [Sri B. K. Linga Gowder]

failing in my duty if I do not thank the Government for their increased allotments under certain development programmes. They have supplied electricity to about 90 per cent of the villages, provided medical facilities in the rural parts, started a college and also have opened some schools. I am thankful to the Government for all these. Thank you, Sir.

* **Sri G. NARAYANASWAMI NAIDU** : அன்புமிக்க தலைவர் அவர்களே, இந்த வருஷத்திலே நாம் கொஞ்சம் அதிகமான பணத்தை எதிர்பார்த்து, புதிய வரியை விதித்திருக்கிறோம். சென்ற ஆண்டில் நாம் பற்றாக்குறை பட்ஜெட்டைத்தான் அங்கீகரிக்க வேண்டிய நிலைமை இருந்தது. 1952-ம் ஆண்டிலே தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்தபோது, எவ்வளவு எதிர்ப்புக்கள் இருந்தனவோ, அவ்வளவு எதிர்ப்புக்கள் இப்பொழுது மூவாயிரம் ரூபாய்க்கு மேல் விவசாய வருமானம் பெறுபவர்களுக்கு வரி என்று சொல்லும்போது, அத்தகையவர்களிடமிருந்து கூக்குரல் கொஞ்சம் கடுமையாக இருக்கிறது. வழக்கமாக நம்முடைய பகுதியிலே இருக்கும் நிலச்சுவாந்தார்கள் ஆரம்பத்திலே தடபுடலாக எதிர்ப்பார்கள். அப்புறம் விட்டுக்கொடுத்து விடுவார்கள். காரணம், அதித்தீவிரமாக எதிர்ப்பதற்கான பலம் அவர்களுக்குச் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதறிக்கொண்டு வந்துவிட்டதுதான். அது ஒரு பெரிய காரணம்.

நேற்று முன் தினம் பேசிய ஒரு கனம் அங்கத்தினர், விவசாயியைப் பசுமாட்டுக்கு ஒப்பிட்டு, மோத மோத அது பாலைக் கறந்து கொண்டிருக்கிறது என்றும் மேலும், மேலும் அதனிடம் ஏதாவது தொந்தரவு பண்ணினால், கொம்பால் முட்டிவிடும் என்றும் அந்த நிலையிலேதான் இன்று விவசாயிகள் இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்கள். திரேதா யுகத்தில் தானாகக் கறந்துகொண்டிருந்த மாடுகள் இப்பொழுது கலியுகத்தில் காலை அணைத்தால் தான் கறக்கின்றன. காரணம், அதன் குணம் நாளாவட்டத்தில் மாறிப்போச்சு. ஆனால், அந்த மாடு ஏதோ தானாகவே பாலைக் கொடுப்பதாக இன்னும் நினைத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு வைக்கக்கூடிய தீனியினாலும், புல்லினுடைய சக்தியாலும் தான் கறந்துகொண்டிருக்கிறது என்பதை பசுமாடு உணராது. நிலத்தில் வேலை செய்கின்ற தொழிலாளிகளின் உதவியாலும், மற்றவர்களின் உதவியாலும்தான் விவசாயம் நடைபெறுகிறது என்பதை அந்தத் தொழிலாளர்கள் உணர ஆரம்பித்து, அப்படி உழைக்கும் தங்களுக்கும் போதிய பலன் கிடைக்கவேண்டுமென்று கேட்கும்போது, கொடுக்கமாட்டேன் என்று பிடிவாதம் செய்கின்றவர்களுடைய காலை அணைத்துத் தான் கறக்கவேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிடுகிறது. அந்தக் கட்டத்திற்கு அவர்கள் போகாமல் ஓரளவு ஒத்து வருவார்கள் என்று நான் நம்புகிறேன். அடுத்த 2–20 p.m.
படியாக விவசாயிகளுக்கு வரி போடுகிறது என்றால் நம் தரப்பில் இருக்கிற சர்க்கார் கட்சிக் கொரடா மிகவும் கடுமையாக எதிர்ப்பார்கள். அவர்களே இவ்வாண்டு பரிபூரணமாக ஆதரித்திருக்கிறார்கள் என்றால் மக்களுடைய மனோபாவம் எப்படி மாறிக் கொண்டு வருகிறது என்பதை நாம் உணர்ந்து கொள்வதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். சென்ற மூன்று வருஷங்களுக்கு முந்தி இந்தச் சபை வேறு ஒரு இடத்தில் நடந்தபோது நமது மதிப்பிற்குரிய ராஜா சர் முத்தையா செட்டியார் மிராசுதார்களுக்கு சர்க்கார் கொடுத்து வருகிற மருந்துகளை எல்லாம் பார்த்து இனி எனக்கு மிராசுதார் என்ற பட்டமே வேண்டாம் என்று தெரிவித்தார்கள். அந்தப் பட்டம் ஒருகாலத்தில் ஏற்றமும், உயர்வும், மதிப்பும் உடையதாக இருந்திருக்கலாம். இப்போது அதற்கு மதிப்பு இன்மை ஏற்பட்டு தேவைக்கு அதிகமான நிலம் வைத்திருக்கிறவன் என்ற காரணத்தினாலேயே பரிகாசத்திற்கு உள்ளாகிறவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இன்றைய சூழ்நிலையில் அதிகம் வைத்திருப்பவர்கள் வெட்கப்படும் நிலைமை வளர்ந்து வருகிறது. தேவைக்கு அதிகமாக நிலம் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் அவைகளை தாங்களே முழு மூச்சில் சம்பாதித்துக் கொண்டது அல்ல. உழவர்கள் உழைத்த உழைப்பின் மூலமாக அவர்களிடத்தில் சேர்ந்திருக்கும்படியான

சொத்து அது. நேற்று சிலர் நிலமுடையோர் தாங்கள் உழைத்து உடல் வாடி, கறுத்து, முதுகு கூனி, தோல் சுருங்கிப் போய் பலவித நோய்களுக்கே ஆளாவதாக வருணித்தார்கள். உண்மையில் இந்த வரியை எதிர்ப்பதற்கு அவர்கள் அப்படிச் சொன்னாலும், இந்த வரியினால் அவர்களுக்கு எவ்விதமான தொந்தரவும் இல்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். மூவாயிரம் ரூபாய்க்கு மேல் விவசாய வருமானம் உடையவர்களுக்கு வரி என்றால் அதாவது மாதம் 250 ரூபாய் வருமானம் உள்ளவர்கள் வயிறு ஒட்டி, முதுகு கூனி, தோல் கறுத்து இப்படிப்பட்ட வறியவர்களாக காட்சி அளிக்கிறார்கள் என்றால் நம்புவது எப்படி ? உண்மையிலேயே மாதம் 250 ரூபாய் வருமானம் உள்ளவர்கள் அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கவேண்டுமென்றால் மகா கருமியாக இருக்க வேண்டும். இந்த வரியினால் உண்மையில் அசல் விவசாயிகள் பாதிக்கப்படமாட்டார்கள். ஓரளவு 250 ரூபாய் வருமானம் உள்ளவர்கள், செலவு போக என்றால் அவர்களை ஏழை என்று சொல்லவும் முடியாது. பத்து ஏக்கராவுக்கு மேலாக உடையவர்களாக இருப்பார்கள். மோட்டார் வைத்து பயிரிடக்கூடிய வசதி உள்ளவர்கள் இரண்டு ஏக்கராவிலேயே அந்தப் பணத்தைச் சம்பாதித்து விடுவார்கள். மேலும் அமைதியான முறையில் அவர்கள் வாழ்க்கை நடத்த விரும்பினால், மாதம் 250 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்கள் அவ்வாறு அமைதியான வாழ்க்கையை நடத்துவதற்குச் சந்தா சர்க்காருக்கு கட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்தச் சந்தாதான் இந்த வரி. அதுவும் ரூபாய்க்கு 5 நையே பைசா தான். இதை அதிகம் என்று சொல்ல முடியாது. இனிமேல் இதை எதிர்ப்பதில் பிரயோஜனம் இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்களுடைய எதிர்ப்பு பூர்ணமாக நின்றுவிடும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக தமாஷா வரி, டீசல் எண்ணைக்குப் போடப்படும் வரி ஆகிய இரண்டும் வந்திருக்கிறது. தமாஷா வரியைப் பொறுத்தவரையில் இன்னும் கொஞ்சம் கடுமையாகப் போட்டாலும் கூட நல்லது என்று நினைக்கிறேன். சினிமா என்பது ஏழைகளுக்கு வெறும் பொழுது போக்கு என்பது மட்டும் ஆக இருக்கவில்லை. டாக்டர் சொன்னார் என்று கொஞ்சம் குடிக்க ஆரம்பித்தவன் சில காலத்திற்குள்ளாகவே முழுக்குடிக்காரனாக ஆகிவிடுவதைப் போலத்தான் இன்றைக்கு எங்கள் பக்கத்தில் பண்ணையாட்கள் ஒரு ஷோ பார்த்துவிட்டு வந்துவிடுவதில்லை. அத்தனை ஷோவுக்கும் அங்கே படுத்துக்கொண்டு விடுகிறார்கள். ஏராளமான ஏழைகளுடைய பணம் தான் அங்கே மிக அதிகமான அளவில் போய்க் கொண்டிருக்கிறது. முதல் வகுப்பு ,சௌகரியம் தான், என்றாலும் இரண்டாவது வகுப்பு கொஞ்சம் வசதி குறைவு என்பதனால் இரண்டாவது வகுப்புக்குக் கூட்டம் அதிகமாவதும், இடம் இல்லாவிட்டால் முதல் வகுப்பு பிரயாணியே மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்ய, முதல் வகுப்பு காலியாகப் போவது போலத்தான் இன்றைக்கு தமாஷா வரியை அதிகப்படுத்தினால் முன் கூட்டம் குறையும். கடை நிலைக்கு அதிகம் கூட்டம் ஏற்படும். அதனால் அடிக்கடி போகிறவர்கள் இனிமேல் அபூர்வமாகப் போவார்கள். ஆகவே தமாஷா வரியை அதிகப்படுத்தினால் நல்லதுதான்.

சினிமா செல்லும் சிறுவர்கள் காட்சியில் வர்ணிக்கப்படும் விண்ணிலாவும் மதியும் போல, வீணையும் நாதமும் போல காதலி அமைய வேண்டுமென கனவு கண்டு, காண்பது கற்பனை முதலுக்கு வருவது கஷ்டம் என உணராமல் கெட்டு அதிருப்தி அடைந்து வருகின்றார். ஆகவே தமாஷா வரியை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தினாலும் கூட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களோ, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களோ எதிர்க்கமாட்டார்கள். எதிர்ப்பதற்கும் எதிர்க்கட்சிக்காரர்களாக இருந்தாலும் வெட்கப்படுவார்கள் என்று நினைக்கிறேன்.

சினிமாவுக்கு வரியைப் போட்டு, நாடகத்திற்கு இல்லை என்று சொல்லியிருப்பது சரியில்லை. இரண்டும் மூத்தாள், இளையாள் உறவு போன்றதுதான். அந்தக் காலத்து நாடகக்காரர்கள் இன்றைக்கு சினிமாக்காரர்



கள். இன்றைக்கு நாடகக்காரர்கள் ஆக இருப்பவர்கள் நாளைக்கு சினிமாக்காரர்களாகப் போகிறார்கள். ஆகவே இது இரண்டுக்கும் பெரிய ஏற்றத்தாழ்வு இருப்பதாக நினைக்கக்கூடாது. கதை எழுதுகிறவர்கள், திரை எழுதுபவர்கள், பாடல் அமைப்பவர்கள் எல்லோருக்குமே வரி போடலாம். இப்படி நாட்டு நலனுக்கு இவர்களிடத்திலும் ஒரு சந்தா வசூல் செய்தால் இவர்களுக்கும் அதனால் மதிப்பும் பெருமையும் உண்டாகும். ஆகவே அதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக டீசல் எண்ணைக்கு வரி போடுவதைப்பற்றி பல தகராறு இருக்கிறது. பெரிய விவசாயிகளும் உபயோகப்படுத்துகிறார்கள். சிறிய விவசாயியும் உபயோகப்படுத்துகிறார்கள். விவசாயிகளை இது பாதிக்கக் கூடாது என்பது உண்மை. பழைய ராஜாக்கள் மாதிரியே தான் பஸ்காரர்களுடைய நிலைமை இன்று வளர்ந்திருக்கிறது. அவர்கள் கொடுக்கிற கணக்குவழக்கு நியாயமாக இருக்கமுடியாது. உண்மையாக பஸ்ஸுக்கு வரி கொடுத்தால் அவர்கள் இன்று வாழும் உன்னத வாழ்க்கை வாழ முடியாது. அவர்களிடத்தில் ஓரளவு இந்த டீசல் எண்ணைக்கு ரிபேட் மாதிரியாக வரி வசூலித்து விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும். கூப்பன் ஸிஸ்டத்தைக் ,கொண்டுவரமுடியாது. பல விஷயங்களில் கூப்பன் முறை கொண்டு வந்து, ஏற்கெனவே அதைக் கொண்டு வந்து எவ்வளவு விபரீதமான நிலைமை எல்லாம் ஏற்பட்டது என்பது நமக்குத் தெரியும். ஆகவே விவசாயிகளை பாதிக்காத வகையில் இந்த வரியை வசூல் செய்வதற்குத்தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நமது ராஜ்யத்தில் இருக்கும் தாலூக்கா கச்சேரிகளைப் பார்த்தால் பழைய காலத்தில் எப்படிப்பட்ட நிலையில், எப்படிப்பட்ட மனோபாவத்தை வளர்க்கக்கூடிய நிலைமையில் இருந்ததோ அதே நிலைமையில்தான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. தாலுகாவில் பழைய ஹரிகேன் லைட்தான். பழைய பங்காதான். துணிகூட மாற்றப்படவில்லை. பிரிட்டிஷ்காரர்களால் கொடுக்கப்பட்ட சொத்து என்ற காரணத்திற்காகத் தான் பாதுகாக்கிறார்களோ என்னவோ அதே ஹரிகேன், நாடா இல்லாது, கிளாஸ் உடைந்தது இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. எங்கள் முனிஸிபாலிட்டியில் கூட மின்சார லிசிறி, விளக்கு எல்லாம் போட்டிருக்கிறோம். அதற்குப் பக்கத்தில் சர்க்காருடைய பலம் பெற்ற தாலுக்கா ஆபீசில் இன்னமும் பழைய நிலைமைதான். பத்து வருஷத்திற்கு ஒரு முறை சுண்ணாம்பு அடிப்பார்களோ என்னவோ ? நமது ராஜ்யத்திற்கு அதிக வருவாயைத் தேடித்தரும் இலாகா அது. எல்லா தாலூகா காரியாலயங்களையும் ஒரேயடியாக சீர்திருத்த முடியாது என்றால், மூன்று பாகங்களாக மாகாணத்தைப் பிரித்து ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு பாகத்திலுள்ள காரியாலயங்களைச் சீர்திருத்தி மின்சார விசிறி, விளக்கு எல்லாம் போட்டு வசதி செய்து வரவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். இப்படி பல சீர்திருத்தங்களை சர்க்கார் செய்யவேண்டியிருப்பதன் காரணமாக நமது ராஜ்ய வருவாய் அதிகப்படத்தான் வேண்டும். ஆகவே புதிதாகப் போடப்படுகிற வரியை நாம் எல்லோரும் வரவேற்கவேண்டியதுதான். சோஷலிஸ சமுதாய அமைப்பைச் சிருஷ்டிக்க விரும்புகிற ராஜ்யத்தில் மக்கள் வரி கொடுக்க—அதுவும் கொடுப்பதற்கு வசதியுள்ளவர்கள் கொடுக்க முடியாது என்று சொல்ல முடியாது. உயரமாக இருக்கக்கூடியவர்களுக்கு எந்த வீட்டு நிலையும் கொஞ்சம் இடிக்கத்தான் செய்யும். பணக்காரர்கள் புதிய வரித்திட்டத்தினால் கொஞ்சம் இடிபட்டாலும் கூட மகாஜனங்களுடைய சௌகரியத்திற்காக அவர்கள் அதைப் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும். இந்த வரிப் பணம் எல்லாம் மகாஜனங்களுடைய நலனுக்கே செலவிடப்படுகிறது. ஆகவே கொடுக்கக்கூடிய தகுதியுள்ளவர்களிடமிருந்து வரிப்பணத்தை வசூல் செய்ய கொஞ்சங்கூட தயங்காமல் முழுமூச்சுடன் வரி விதிக்கலாம். இந்த விவசாய வருமான வரியினால் உண்மையில் எங்கள் ஊரில் பாதிக்கக்கூடியவர்கள் ஊருக்கு இரண்டு, மூன்று பேர்கள்தான் இருப்பார்கள். இப்படியே தான் ஒவ்வொரு இடத்திலும் இருக்கும். ஆகவே வரித்திட்டத்தை நான் ஆதரித்து, நமது ராஜ்யத்திலுள்ள சர்க்கார் காரியாலயங்களை நல்ல

முறையில் சீர்திருத்தி அமைக்கவேண்டும், தாலுக்கா கச்சேரி காரியாலயங்களுக்கு மின்சார விளக்கு, விசிறி முதலிய வசதிகள் எல்லாம் உடனடியாகச் செய்து கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

2-30 p.m. **Sri A. GOVINDASAMY** : சட்டமன்ற தலைவர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தில் பொது மக்களுக்கு கவர்ச்சியோ அல்லது களிப்போ அளிக்கக்கூடிய அம்சங்கள் இல்லாதது கண்டு நான் என் வருத்தத்தை நிதி அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எப்போதும் போல் நிதியமைச்சர் அவர்கள் தனது சோகக் குரலைக் காட்டித்தான் மத்திய அரசாங்கம் நமக்குத் தர வேண்டிய நிதியைத்தர மறுக்கிறது, தேவையான நிதியை தர மறுக்கிறது, அதற்காக நாம் போராடிக் கொண்டிருக்கிறோம், எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி சோகக் குரலைக் காட்டித்தான் ஒவ்வொரு ஆண்டும் தனது நிதி நிலை அறிக்கையை சமர்பித்து வருகிறார்கள். இந்த ஆண்டு நிதியமைச்சர் அவர்கள் உண்மையாகவே சோகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் ரகசியம் எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவரது மனதில் ஏதோ வேலை செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் ஊகிக்கிறேன், மற்றவர்களும் அதைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : ஒரு மணிக்கு வைப்பதால் தான் சோகமாயிருக்கிறேன்.

**Sri A. GOVINDASAMY** : சோஷியலிஸ சமுதாயம் நிறுவவேண்டுமென்று ஆவடி காங்கிரஸில் தீர்மானம் போட்டார்கள். ஆனால் அது ஏட்டளவில் இருக்கிறதேயொழிய செயல் அளவில் சர்க்கார் அதற்கு வேண்டிய திட்டங்கள் வகுக்கவில்லை. ஐந்தாண்டுத்திட்டம் நடைமுறைக்கு வந்து திட்டங்கள் பரவலாக போடப்பட்டு ஏழு ஆண்டுகளில் நிறைவேற்றி வருவதாக காட்டப்படுகிற இந்த நேரத்தில் அத்திட்டங்களால் பெருவாரியான மக்கள் நன்மை அடைகிறார்களா என்றால் அடையவில்லை என்றுதான் சொல்ல முடியும். அதற்கு காரணம் என்ன ? திட்டங்கள் போடும்போது மற்ற கட்சிகளையும் கலந்து கொண்டு அவைகள் நிறைவேற்றப்படும்போது அவர்களின் ஒத்துழைப்பு பெறாதது ஒரு காரணம். அடுத்ததாக, இந்தத்திட்டங்களுக்காக செலவு செய்யப்படுகிற பணம், அப்பணத்தின் பெரும் பகுதி கண்ட்ராக்டர்களுக்கும், சம்பளமாக உத்தியோகஸ்தர்களுக்கும் போகிற அளவில் அதை கண்காணிக்க, அத்திட்டங்களினால் எத்தகைய நன்மை மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று கவனித்து அறிய ஒரு கமிட்டி போட்டு எவ்வளவு செலவு செய்கிறோம், நிலைமை என்ன, அதனால் ஏற்பட்டிருக்கும் பலன் என்ன என்பதையெல்லாம் பற்றி பரிசீலிக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம், நான்கு தினங்களுக்குப் பிறகு மின்சார ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ய இருக்கிறார்கள். அது சர்க்காரின் கவனத்தில் வந்திருக்கும். அது குறித்து என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்று எனக்குப் புலப்படவில்லை. மக்களின் மனதில் குமுறல் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டத்தான் நான் இதைக்குறிப்பிடுகிறேன். மின்சார போர்டிற்கு அதிகாரங்களை எல்லாம் விட்டுவிட்டோம், எங்களிடம் அதிகாரம் இல்லை என்று சொல்லி தப்பித்துக் கொள்ள முடியாது. அந்த போர்டில் நம் சர்க்கார் காரியாலயத்தில் வேலை பார்க்கிற, செட்டூர் அவர்களும், வர்க்கீஸ் அவர்களும், அப்பாதுரை முதலியார் அவர்களும் இருக்கிறார்கள். அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பு உள்ளவர்கள்தான் இவர்கள் என்பதை கவனிக்க வேண்டும். அதனால் இந்த மாதம் (11-3-58 முதல் 13-3-58) வரை வேலை நிறுத்தம் ஏற்பட்டால் சங்கடம் ஏற்படும். சட்டசபை கூட நடக்குமோ என்பதும் சந்தேகந்தான். இதை உடனடியாக கவனித்து வேண்டிய நிவாரணம் தேடவேண்டியது மின்சார இலாகா அமைச்சர் அவர்களின் பொறுப்பாகும். அவர்கள், குறைந்த பட்ச சம்பளம் 18-ல் இருந்து 31 வரை கேட்கிறார்கள். அது பெரிய சலுகை அல்ல. ஏற்கனவே இதற்கு



முன் மராமத்து இலாகா மந்திரியாக இருந்தவர் இதைக் கவனித்து வேண்டியது செய்வதாக ஒத்துக்கொண்டு பின் தன் சகாக்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லிவிட்டுப் போனார். இப்பொழுது இருக்கும் மந்திரியவர்கள் இதைக் கவனித்து வெகு துரிதமாக, மின்சார வேகத்தில் அதற்கு நிவாரணம் தேடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். லேபர் கமிஷனருக்கு இந்தப் பிரச்னை போய் அவரால் தீர்க்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை உடனடியாக டிரிப்யூனலுக்கு விடவேண்டும். அடுத்தபடியாக, நெய்வேலி பகுதியில் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இப்பொழுது தேவைக்கு அவசியமற்ற பகுதியில் இருக்கிற கடைகள் வீடுகள் இவைகளை ரெவன்யூ அதிகாரிகள் 26-2-58-ல் இடித்து நிறவியிருக்கிறார்கள். தாண்டவகுப்பம் என்ற கிராமத்தில் வீடுகளைச் சுற்றி முற்றுகை போட்டுக் கொண்டு அங்குள்ள வீடுகளை இடித்து அங்குள்ள தட்டு முட்டு சாமான்களை எல்லாம் எடுத்து உடைத்திருக்கிறார்கள். இது பற்றி ரெவன்யூ அமைச்சர் அவர்களிடம் எங்கள் கட்சியைச் சேர்ந்த செல்வராஜ் அவர்களும், கல்யாணசுந்தரம் அவர்களும் நானும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதையும் உடனடியாக கவனித்து வேண்டியதைச் செய்யவேண்டும். அந்தப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட நபர் ஸ்டே ஆர்டர் வாங்கியிருக்கிறார், ஹைகோர்ட்டில் இருந்து. இப்பொழுது அங்கு சினிமாக் கொட்டகைகள் கட்ட நிலம் காங்கிரஸ்காரர்களால் வாங்கப்பட்டிருக்கிறது. சினிமாவை நீங்கள் எதிர்க்கிறீர்கள். சரி. சினிமாவிற்கு கதை எழுதுகிறவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் என்பதற்காக மாத்திரம் எதிர்க்கக்கூடாது. அப்படி அதை எதிர்த்துக்கொண்டு அதிகமாக சினிமாக் கொட்டகைகள் வைத்துக்கொள்ள லைசென்ஸ் வழங்கியிருக்கிறது இந்த அரசாங்கம். நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு எவ்வளவு சினிமாக் கொட்டகைகளுக்கு லைசென்ஸ் வழங்கியிருக்கிறீர்கள் ? சினிமாக் கதைகள் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் எழுதுகிறார்கள் என்று அதை நீங்கள் எதிர்க்க வேண்டாம். உங்களுக்கு அப்படி கதை எழுதத் தெரியவில்லை என்றால் எங்களிடம் வாருங்கள், நாங்கள் சொல்லித் தருகிறோம். கருணாநிதி அவர்களும், அண்ணா அவர்களும், ஆசைத்தம்பி அவர்களும் கதை எழுதுகிறார்கள். அவர்கள் வருமான வரியும் கட்டுகிறார்கள். இந்த வரியைக் கொண்டு வந்தால் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் எதிர்ப்பார்கள் என்று சொல்லி அதை காங்கிரஸ்காரர்களே எதிர்க்கிறார்கள், ஏனென்றால் அவர்களுக்குத்தான் அதிகம் சினிமாக் கொட்டகைகள் இருக்கிறது. ஆகவேதான் அவர்களிடம் இருந்து எதிர்ப்பு வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களிடம் இருந்தல்ல. அடுத்தபடியாக, சீதோஷ்ண நிலை குறித்தும் மழை குறித்தும் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மழை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ பெய்கிறது என்றால் அதனால் அரசாங்கம் பெருமையோ சிறுமையோ கொள்ள வேண்டியதில்லை. ஏதோ சாங்கியத்திற்காக சொல்லப்படுகிறது. அடுத்தபடியாக, உணவுப் பற்றாக்குறை இருக்கும்போது, நியாயவிலைக் கடைகளை மூடுகிறோம் என்று சொல்கிறது, அரசாங்கம். மக்களுக்கு அரிசி அதிகமாகக் கிடைக்கிறதா என்பதைப்பற்றி அரசாங்கம் சிந்திப்பது இடையாது. சிறு விவசாயிகளுக்கு உதவி செய்கிறோம் என்று சொல்கிறார்கள். சிறு விவசாயிகளுக்காக அரசாங்கம் உதவி செய்ய என்ன திட்டங்கள் போட்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. சிறு விவசாயிகளுக்கு கடன் உதவி, எரு உதவி, காளை உதவி, மின்சார உதவி போன்ற உதவிகளை அல்லது வசதிகளையெல்லாம் அவசியம் செய்து தரவேண்டும். நாங்கள் ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரித்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் தான் மின்சாரம் அதிகமாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். தமிழ்நாடு ஒரு விவசாய நாடாகும். வடநாட்டில் இப்படி மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை என்று கவர்னர் உரையின் மேலுள்ள விவாதத்தின்போது தேனி தியாகராஜன் அவர்கள் சொன்னார்கள். அங்கு தொழில் வளர்ந்திருக்கிறது. அங்கு மின்சாரம் தொழிலிற்கு வழங்கப்படுகிறது. இங்கு தொழில் அந்தளவு வளரவில்லை. மந்திரி அவர்கள் புள்ளி விவரங்கள் காட்டி எங்களைத் திருப்திபடுத்த வேண்டும். ஆனால் அதற்கு வேண்டிய புள்ளி விவரங்களைக் காட்டமுடியாத நிலையில் அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். சாத்தனூர் திட்டத்தினால் விழுப்புரம் தாலுகா

வில் பெரும் பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கு மழை பெய்யவில்லை என்று சர்க்கார் சொல்லி தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். சென்ற ஆண்டில் 24 அங்குலம் பெய்தது. இந்தாண்டு 17 அங்குலம் பெய்தது. வித்தியாசம் 7 அங்குலந்தான். அந்த அளவிற்குத்தான் பாதகம் ஏற்பட்டிருந்தால் அதை ஒத்துக் கொள்கிறோம். அங்கு, இட்டத்தட்ட 40,000 ஏக்கரா பாதிக்கப்பட்டிருக்கிறது. நண்பர் தங்கவேலு அவர்கள் சொன்னார்கள், அவர்களைக் கொண்டு சொல்லச் சொன்னார்களோ என்று தெரியாது, 17 நாட்கள் தண்ணீர் விட்டார்கள் என்று. சாத்தனூர் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட இந்த சபையில் இருக்கும் எம். கந்தசுவாமி படையாச்சி, வி. பி. சாரங்கபாணி கவுண்டர், எஸ். ஏ. எம். அண்ணாமலை உடையார் இவர்களைக் கேட்டுப் பாருங்கள். பாதிக்கப்பட்ட இடங்களில் திருக்கோவிலூர், விழுப்புரம், கடலூர் தாலூகாக்களில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்து பூர்ணவரி வஜா தள்ளித் தர வேண்டும். மூன்று வருடம் விவசாயக் கடனை வசூல் செய்வதை ஒத்திபோட வேண்டும் என்று சொல்கிறோம். இது, கோவிந்தசுவாமியின் வாயில் இருந்து வருகிறது என்று பேசாமல் இருந்து விடக்கூடாது. பிரச்னையை கவனித்து ஆவன செய்ய வேண்டும். அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டம் பரவலாக இருக்கிறது. வடநாட்டில் பார்த்ததைச் சொன்னேன், அங்கு பிச்சைக்காரர்கள் இல்லையென்று. அங்கு ஆண்களும் பெண்களும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கு படித்தவர்கள் இடையிலும், உடலால் உழைக்கத் தயாராக இருப்பவர்களிடையேயுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசாங்கம் யாதொரு நடவடிக்கையும் எடுக்கக் காணோம். கைத்தறி நெசவாளர்களின் விஷயத்தில் இந்த அரசாங்கம் நல்லதொரு முடிவிற்கு வரவேண்டும். அவர்கள் வாழ வேண்டுமா அல்லது சாக வேண்டுமா என்று ஒரு முடிவிற்கு வரவேண்டும். அவர்கள் வாழ வேண்டுமென்று சொன்னால், கைத்தறிக்காக கரைபோட்ட வேஷ்டிகளையும், கலர் புடவைகளையும் ஒதுக்கி வைக்கவேண்டும். அது பற்றி வந்த தீர்மானத்தை, ராஜாஜி அவர்கள் இருந்த காலத்தில் இது பற்றி வந்த தீர்மானத்தை நானும், எம். பி. சுப்ரமணியம் அவர்களும் ஆதரித்து அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் மத்திய அரசாங்கம் அதை நிராகரித்தது.

3–40 p.m. நான் டெல்லிக்குச் சென்றிருந்த சமயம் டி.டி.கே. அவர்களை கண்டு, கைத்தறித் துணிக்கு கொடுக்கப்பட்டு வந்த ரிபேட்டை குறைத்து இருக்கிறார்களே, அதை கூட்டுவதற்கு ஏதாவது வழி செய்யவேண்டும் என்று கேட்ட நேரத்தில் அப்படி குறைத்து கொடுக்கப்பட்டு வருவதாக எனக்குத் தெரியாதே என்று சொன்னார்கள். அதைப்பற்றி விவரமாக கூறின பிறகு இதைப்பற்றி கனம் அமைச்சர் வெங்கட்ராமன் அவர்களுக்கு செய்தி அனுப்பிவைக்கிறேன் என்று சொன்னார்கள். கைத்தறி வார விழா கொண்டாடப்படுகின்ற நேரத்தில் இந்த ரிபேட் கூடுதலாக கொடுக்கப்பட்டது. ஆகவே இந்த கூடுதல் ரிபேட்டை பொங்கல் சமயத்திலும் தீபாவளி சமயத்திலும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உண்மையிலே கைத்தறியை உயர்த்துவதற்கு என்ன வழிகளை வைத்திருக்கிறார்கள் ? கைத்தறி வார விழா கொண்டாடப்படுகிறது. மந்திரிகள் போய் பேசுகிறார்கள், நீங்கள் எல்லாம் கைத்தறித்துணியை உபயோகப்படுத்தவேண்டும் என்று சொல்லுகிறார்கள், ஆனால் அவர்கள் கைத்தறித் துணியை ஆதரிப்பதற்கு தயாராக இல்லை. அமைச்சர்கள் ஊருக்கு உபதேசம் செய்வதில் பிரயோஜனம் இல்லை. இன்று அரசாங்கத்தின் சார்பில் கதர் வாங்கப்படுகிறது. அதை மாற்றி அரசாங்கத்திற்கு வேண்டிய துணிகளை கைத்தறித் துணிகளாக வாங்கலாம் என்றும் அரசாங்கத்திற்கு கூறிக்கொண்டு, ஓராசிரியர்கள், என்.ஜி.ஓ.க்கள் இவர்களுடைய கோரிக்கைகளையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri P. G. MANICKAM :** ஸார், பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், சபையின் மேல் தளத்தில் குருவிகளுடைய சப்தம் அதிகமாக இருந்து கொண்டிருப்பதால் மற்றவர்கள் பேசுவதை சரியாகக் கேட்க முடியவில்லை. அதோடு



குருவிகள் மேலேயிருந்து அங்கத்தினர்களின் மீது மலமும் கழித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அவைகளை அகற்றி சுத்தமாக வைத்து, சபையில் பேசுவதை சரியாக கேட்பதற்கும் வழி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**Mr. SPEAKER :** அதைப்பற்றி கவனிக்கலாம். ஆனால் குருவிகள் இருப்பது நல்லது என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். (சிரிப்பு.)

(இச்சமயத்தில் ஸ்ரீ K. சட்டநாத கரையாளர் தலைமை வகித்தார்.)

*** Sri P. M. PERIA KARUPPAN AMBALAM :** சபைத்தலைவர் அவர்களே, இங்கு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் பட்ஜெட்டை நான் முழுமனதுடன் ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த பட்ஜெட்டில் பல நல்ல காரியங்களை நாம் காணுகின்றோம். முக்கியமாக விவசாயிகளுக்கு கடன் வசதிகளும், போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். அத்துடன் மதுரையிலிருந்து கிழக்கு மேற்கே காரைக்குடிக்கு மேலூர் வழியாக ரயில்பாதை வேண்டும் என்று தீர்மானித்து அதற்காக சர்வே செய்து கல்கள் எல்லாம் போட்டாய்விட்டது. இதில் வேலை துவக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இந்த பட்ஜெட்டில் செய்யப்பட்டிருக்கும் என்று அங்குள்ள மக்கள் எண்ணியிருந்தார்கள். ஆனால் இந்த பட்ஜெட்டில் அதை காணாததினால் அங்குள்ள மக்கள் பெரிதும் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். அந்த ரயில்பாதை மிகவும் அவசியம் என்பதை பல தடவைகள் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே அதை போட்டுக் கொடுப்பதற்கு அரசாங்கம் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் நமது ராஜ்யத்தில் பல ஜில்லாக்களில் பல காட்டாறுகள் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. அவைகளில் 4,000 ரூபாய் அல்லது 10,000 ரூபாய் செலவு செய்து சிறிய சிறிய அணைகளை கட்டினால் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் விவசாயத்தைச் கொண்டு வந்து உணவுப்பொருள்களை பெருக்க முடியும். இதையும் அரசாங்கம் கவனித்து வேண்டியது செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக விவசாய வருமான வரி போட்டிருப்பதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்கு இந்த கணக்கு வைக்கும் பழக்கம் கிடையாது. கிராமாந்திரங்களில் சாதாரணமாக படிப்பில்லாத மக்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் கணக்கு வைத்துக் கொள்வதில்லை. ஆகவே இதற்கு முன்னால் ஸர்சார்ஜ் விதித்திருப்பதுபோல இன்னும் கூடுதலாக ஏதாவது 100 ரூபாய் அல்லது 200 ரூபாய் சேர்த்து, அந்த முறையில் ஸர்சார்ஜை விதிப்பார்களானால் இவர்களுக்கு கணக்கு வைக்கக்கூடிய அவசியம் இருக்காது. இதனால் விவசாயிகளுக்கு மிக நலமாய் இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதோடு எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியும் செலுத்திக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** Sri P. URKAVALAN :** சபைத்தலைவர் அவர்களே, நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் வரவு செலவு திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த வருடம் பருவ மழை சரியாக பெய்ததின் காரணமாக நல்ல பலனை அளித்து இருக்கிறது என்று நிதி மந்திரி அவர்கள் வரவு செலவு திட்டத்தில் கூறியிருக்கிறார்கள். இருந்தபோதிலும்கூட சில பகுதிகளில் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது சங்கரன்கோவில் தாலூகாவில் பனையூர் என்று பெரிய குளம் இருக்கிறது. அதன் மூலம் 2,000 ஏக்கர்கள் வரையில் நெல் சாகுபடி செய்திருந்தார்கள். பின்னால் மழை இல்லாத காரணத்தால் அவையெல்லாம் பட்டுப் போய் விட்டது. ஆனால் அதற்குப் பக்கத்திலுள்ள பல குளங்களில் தண்ணீர் நிறைந்திருந்தது. அதன் காரணமாக அதிலிருந்து தண்ணீர்விட வேண்டும் என்று கலெக்டர் அவர்களுக்கும், அங்குள்ள எஸ்டேட் மானேஜர் அவர்களுக்கும் தந்தி மூலமாகவும், மகஜர்கள் மூலமாகவும் அறிவித்திருந்தார்கள். ஆனால் அதுபற்றி ஏன் என்று கேட்க

வில்லை. ஏனென்றால் சர்க்கார் நிர்வாகத்தில் சில தவறுகள் இருக்கின்றன. இதை நீக்கவேண்டியது அவசியம் என்பதை கூறிக் கொள்கிறேன். பெரும்பாலும் சங்கரன்கோவில் தாலூகாவில், கோவில்பட்டி தாலூகா, ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா போன்ற தாலூகாக்கள் மழையின்மையின் காரணமாக பஞ்சப் பிரதேசமாகவே இருந்து வருகிறது. இந்த வருஷம்தான் அங்கு மழை பெய்தது. ஆகவே இதற்கு அங்குள்ள மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்காக கீரியாறு, பம்பையாறு போன்ற திட்டம் சுமார் 20, 30 வருடகாலமாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. இதை எந்த விதத்திலும் உடனடியாக, மத்திய சர்க்காரிடம் அணுகி இதை நிறைவேற்றிக் கொடுத்து அங்கு வாழும் மக்களுக்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது விவசாய வருமான வரி விதித்திருக்கிறார்கள். இது ஒருக்காலும் ஏழை மக்களை பாதிக்கப்போவதில்லை. மூவாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் இந்த வரி இருப்பதால் ஏழைகளையோ சாதாரண விவசாயிகளையோ பாதிக்காது என்று ஒரு விவசாயி என்ற ஹோதாவில் சொல்லிக் கொள்கிறேன். ஆனால் பெரும் நிலச்சுவாந்தார்களுக்கு இந்த மாதிரி வரி வருவதால் ஏதோ அவர்களுக்கு ஒரு அச்சம் ஏற்படுகின்றது. எப்படியும் அவர்கள் இந்த வரியை கொடுக்க வேண்டியதுதான். ஏழை விவசாயி எப்போதும் ஏழையாகவே இருக்கவேண்டும் என்றோ அல்லது உழைப்பவன் என்றும் உழைத்துக்கொண்டே இருக்கவேண்டும் என்றோ கிடையாது. அவர்களும் ஒரு காலத்தில் முன்னுக்கு வரவேண்டும். உழைப்பவனுக்கு நிலம் சொந்தம் என்கின்ற நிலைமை வரவேண்டும். பாடுபடுபவனுக்கு மதிப்புக் கொடுக்கக்கூடிய காலம் வரவேண்டும். மற்றொன்று, நெசவாளர்கள் பிரச்னை ரொம்ப நாட்களாக இருந்து கொண்டு வருகிறது. குறிப்பாக சங்கரன்கோவில், புளியங்குடி, கடையநல்லூர் போன்ற இடங்களில் கைத்தறி நெசவாளர்கள் சுமார் 20 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நெசவாளர்கள் காலனி ஒன்று கட்டிக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு பிரதானமாக இருக்கக்கூடிய, உண்ண உணவு, உடுக்க உடை, எல்லோருக்கும் அவசியம் என்ற முறையில் இன்று விவசாயிகளுக்கு செய்து கொடுப்பதுபோல நெசவாளர்களுக்கும் எல்லா நன்மைகளையும் செய்து கொடுக்க வேண்டும். ஹரிஜனங்களுக்கும் பின்தங்கிய வகுப்பினருக்கும் கழிந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதல் பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அது வரவேற்கத்தக்கதுதான். இருந்தபோதிலும் ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்படுகிற பணம் வேறு பல விதமாக செலவழிக்கப்படுகிறது. இந்த முறையில் "நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியாக புல்லுக்கு விரங்கே புசியுமாம் தொல்லுலகில்" என்ற மாதிரி இந்தப் பணம் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே இதை கவனித்து இந்தப் பணத்தை எல்லாம் இவர்களுக்கு நன்மை பயக்கும் முறையில் செலவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மாடு வாங்கி கொடுக்கப்பட்டு வருகிறது. இதில் நிறைய பணமும் செலவு செய்யப்படுகிறது. ஆனால் நல்ல முறையில் மாடு வாங்கி கொடுப்பதில்லை. இதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு என்.ஜி. ஓ.க்களுடைய பிரச்னையும் இன்று நாட்டில் பிரதானமாக இருந்து வருகிறது.

2–50 p.m. இப்போது அவர்கள் குழந்தைகளுக்கு படிக்க வசதி செய்து கொடுக்கிறோம். இன்னும் ஓரளவு அவர்கள் மன நிம்மதி அடையக்கூடிய வகையில் சில சலுகைகள் கொடுக்க வேண்டியது அவசியம். கிராம மக்களுக்கு கிராம அதிகாரிகளைப்பற்றி ஒரு பிரச்னையாக இருக்கிறது. கிராம அதிகாரிகள் அங்கு நல்ல முறையில் வேலை செய்ய வேண்டும். ஏனென்றால் ஒரு சாதாரணக்கடன் வாங்கவோ, அல்லது வேறு எதை யெடுத்தாலும் அவர்களிடம் போக வேண்டியிருக்கிறது. அவர்கள் மன நிம்மதி இல்லாமலிருப்பது பெரும் குறையாக இருக்கிறது. இப்போது வருமான வரி போடுவதற்கு பயப்படுவது ஏனென்றால், கிராம அதிகாரிகள் நல்ல முறையில் நடந்துகொள்ள மாட்டார்களோ, அவர்களிடத்தில் சிக்க வைக்கிறார்களோ என்று நினைத்துத்தான் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் நிதி அமைச்சர் சொன்னபடி அத்தகைய நிலைக்கு வராது என்று நினைக்கிறேன்.





மற்றொன்று, மாஜி ராணுவத்தினர்கள் கூட்டுறவு மோட்டார் சங்கம் என்று ஒன்று இருக்கிறது. அந்த சங்கத்திற்கு சர்க்கார் உத்தியோகஸ்தரை காரியதரிசியாகப் போடுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் மெம்பர்களுக்கும் காரியதரிசிக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் சங்கமே நசித்துவிட ஏதுவாக இருக்கிறது. அதை மாற்றிவிட்டு அந்த சங்கத்திற்கு மாஜி ராணுவத்தினர் ஒருவரையே காரியதரிசியாகப் போட்டு அவர்கள் நடத்தினால் அவர்கள் அக்கரை காட்டுவார்கள், சங்கத்தை நல்ல முறையில் நடத்துவார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மற்றொன்று நம் நாட்டிலே, ஏழை, பணக்காரர், முதலாளி என்ற வித்தியாசங்கள் இருந்து வருகின்றன. பெரும்பாலும் ஒரு சாதாரண, ஏழை வீட்டுப் பிள்ளை படித்து வந்தால், பிறகு உத்தியோகம் தேட பெரும் கஷ்டப்படுகிறார்கள். இதில் ஓரளவுக்கு வரம்பு கட்டவேண்டும். இப்போது நிலச் சீர்திருத்தம் கொண்டுவரப் போகிறோம். அதே மாதிரி படித்த பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்கும், ஏழை வீட்டுப் பிள்ளைகளுக்கும் ஒருவித வரம்பு கட்டவேண்டும். இருபது ஏக்கர் நிலம் இருக்கக்கூடிய ஒருவருடைய வீட்டில் இருக்கக்கூடிய பிள்ளைகளுக்கு உத்தியோகம் வேண்டியதில்லை. அந்த நிலத்தை சாகுபடி செய்வதிலிருந்து வரக்கூடிய வருமானமே போதும். அவர்கள் படிக்கட்டும். படிக்க வேண்டியது அறிவு வளர்ச்சிக்காக. சாதாரண ஏழை வீட்டுப் பிள்ளைகள் வேலையில்லாமலிருந்தால் வெளியே சுற்றிக்கொண்டிருந்து பல பிரச்னைகளில் ஈடுபட்டு பல கட்சிகளில் ஈடுபட்டு உருக்குலைகிறார்கள். ஆகவே இதற்கு ஒரு வரம்பு கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச சந்தர்ப்பம் கொடுத்த சபைத்தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **Srimathi T. N. ANANDANAYAKI**: கனம் அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 1958–59-ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட அறிக்கையைக் கொண்டு வந்ததைக் குறித்து பலவற்றை மகிழ்ச்சியோடும், ஒரு சிலவற்றை—ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் கூட—வருத்தத்துடன் வரவேற்கக்கூடிய நிலையில் இருக்கிறோம். பல நல்ல அம்சங்கள் இந்த வரவு செலவுத் திட்டத்திலிருப்பதை யாரும் மறுக்க முடியாது. அதே சமயத்திலே, சில தொல்லைகளை இன்னும் கொஞ்சம் நாட்களுக்கு ஒத்திப் போட்டிருக்கலாம் என்பதை நினைத்துப் பார்க்கும்போது அந்தத் தொல்லைகள் இல்லாமல் இருந்தால் இன்னும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. காரணம் என்னவென்றால், 1957–58-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டப்படி 3 கோடியே 33 லட்சம் ரூபாய் துண்டு விழுமென்று எதிர்பார்த்தார்கள். துண்டு விழுவதைச் சரிக்கட்டவில்லையே என்று கூட அப்போது எதிர்கட்சிக்காரர்களில் சிலர் குற்றம் கூறினார்கள். அதையும் நாம் சமாளித்துவிட்டோம். திருத்திய மதிப்பீட்டின்படி நமக்கு 5 லட்சம் உபரியாக வந்திருப்பதைப் பார்க்கும்போது நாம் மகிழ்ச்சியடைகிறோம். துண்டு விழுவதை வரியின் மூலமாகவும், மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிதிக் குழுவின் சிபாரிசுகள் மூலமாகவும் மாற்றி உபரி பட்ஜெட்டாக கொண்டுவரக்கூடிய அளவுக்கு வந்திருப்பதுபற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். மூன்று கோடியே 33 லட்சம் துண்டு விழுந்ததை உபரியாக மாற்றக்கூடிய நிலைமைக்கு நாம் வந்திருக்கும்போது இந்த ஒரு கோடியே ஐந்து லட்சம் துண்டு விழுவதை—ஒரு கோடியே 35 லட்சம் துண்டு விழுவதில், மத்திய அரசாங்கத்திலிருந்து மானியமாகக் கிடைக்கும் முப்பது லட்சம் போக பாக்கி ஒரு கோடியே ஐந்து லட்சத்தை—இந்தச் சிறிய பற்றாக் குறையை புதிய வரிகளில்லாமலேயே சமாளித்திருக்கலாம் என்று நினைக்கும்போது வருத்தமாகத்தான் இருக்கிறது. மேலும் துரிதமாக சில நல்ல காரியங்களைச் செய்யவேண்டிய சூழ்நிலையில் இருப்பதினால் நாம் இந்த வரிகளைப் போட வேண்டியிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில நல்ல அம்சங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது ஒரு வரவு செலவுத் திட்டத்திலே எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்றால், புதிதாக அரசாங்கத்திற்கு வருவாய் தரக்கூடிய

[Srimathi T. N. Anandanayaki] [7th March 1958

திட்டங்களையும், உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டங்களுக்கும் முக்கியத்துவம் வழங்க வேண்டும். அந்த முறையிலே நம்முடைய மாகாணத்தைப் பொறுத்தமட்டில் உணவு நிலைமை ஓரளவுக்கு ஓங்கி நிற்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. எதிர்கட்சிக்காரர்கள் ஏன் நியாய விலைக் கடைகளை மூடுகின்றீர்கள், இன்னும் பற்றாக்குறை இருக்கின்றதே என்று சொன்னாலும்கூட, நம்முடைய மொத்தத் தேவை 48 லட்சம் டன். நாம் இப்போது உற்பத்தி செய்வது 46 லட்சம் டன். ஆகவே மொத்தத்தில் பற்றாக்குறை இரண்டு லட்சம் டன்தான். இங்கிருந்து கேரள ராஜ்யத்திற்கு 2½ லட்சம் டன் உணவுப் பொருள் போயிருக்கின்றது. இதையெல்லாம் பார்க்கும்போது நாம் இந்த உணவு உற்பத்தி விஷயத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே சமயத்தில் 750 பவுண்டு விளைந்ததானது இன்றைய தினம் 1,255 பவுண்டாக விளையக்கூடிய அளவுக்கு வேளாண்மையை வளப்படுத்துவதற்கு இயன்றதை நமது சர்க்கார் செய்திருக்கின்றார்கள் என்பதை மறந்துவிட முடியாது. இருந்தபோதிலும் நம் உற்பத்தி சீனாவுக்கு அருகேயிருந்தாலும் இன்னும் ஜப்பானை எட்டிப் பிடிக்கவில்லை என்று குறிப்பிடக்கூடும். ஜப்பானிய விவசாய முறையை மிகத் துரிதமாக அமுல் நடத்துவதற்கு முற்படவேண்டும். நாம் உற்பத்தி செய்வது 1,255 பவுண்டுதான். ஆனால் ஜப்பானில் ஒரு ஏக்கருக்கு 2,550 பவுண்டு உற்பத்தி செய்கிறார்கள். அதாவது நம்மைப் போல் கிட்டத் தட்ட இரண்டு மடங்கு உற்பத்தி செய்கிறார்கள். அந்த "இன்டென்ஸிவ் கல்டிவேஷனை"—அதாவது ஜப்பானிய முறையை—பரப்புவதற்கு எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்யவேண்டும். ஜப்பானிய முறையைக் கையாளுகின்ற விவசாயிகளுக்கு இவ்வளவு மானியம் தரப்படும் என்று சொல்லி, அதற்காக சில லட்சக்கணக்கான ரூபாயை ஒதுக்கி வைத்துப் புதிய முறையைக் கையாளுவதற்கு ஊக்கமளிக்கவேண்டும். அதனால்தான் விளைச்சல் அதிகரிக்கும், உணவு உற்பத்தியும் பெருகும். அப்போதுதான் "பற்றாக்குறை, பற்றாக்குறை" என்ற பல்லவி மறைந்து போகும். நியாய விலைக் கடைகளைப்பற்றி கூறுகிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் நேற்று மேல் சபையில் இதைப்பற்றி மிகவும் அழகாகக் கூறியிருக்கின்றார்கள். நியாய விலைக் கடைகளில் அமெரிக்க அரிசிதான் கொடுக்கப்படுகிறது. அதன் விலையும் மற்ற கடைகளில் விற்கும் அரிசியின் விலையும் ஏறத்தாழ ஒன்றாகத்தான் இருக்கிறது. நெல்லூர் அரிசியின் விலையும், நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் அரிசியின் விலையும் ஒன்றாக இருக்கும்போது, நியாய விலைக் கடைகளே தேவையில்லையென்று கூறியிருப்பதை நான் வரவேற்கிறேன். இப்படி இருக்கும்போது நியாய விலைக் கடைகளை தொடர்ந்து நீடிக்கவேண்டுமென்று சொன்னால், அது கண்ட்ரோலில் கொண்டுபோய் நிறுத்திவிடும். அதனால் விவசாயத்திலீடுபட்டவர்களுக்கு துன்பம் நேரிடும். கனம் ராஜாஜி அவர்கள் கண்ட்ரோலை எடுத்தபோது பலர் பயமுறுத்தினார்கள், "பற்றாக்குறை இருக்கும்போது கண்ட்ரோலை எடுத்து விட்டீர்களே ?" என்று. அப்போது எல்லோருக்கும் புரியாத ஒரு புதிராக இருந்து பிறகு நிலைமை சரியாயிற்று. அந்த அளவிலே நியாய விலைக்கடைகளை மூடி, உணவு உற்பத்தி அதிகரித்து கடைகளிலே நல்ல முறையில் சப்ளை அதிகரிக்குமானால், அது சிறந்தது என்றே நான் நினைக்கிறேன். அதைத்தான் விவசாய அமைச்சர் செய்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக உற்பத்தியின் நிலையை கவனிக்கும்போது நாம் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களையெல்லாம் முடித்துவிட்டோம். மாபெரும் அணைக்கட்டுகளைக் கட்டுவதற்கு இனிமேல் இடம் இல்லை. மிக துரிதமாகத் திட்டகளையெல்லாம் எடுத்து நிறைவேற்றிவிட்டோம். சிறந்த முறையிலே நீர்ப்பாசனத்தை விஸ்தரித்து குளங்களையும், ஏரிகளையும், கண்மாய்களையும் சீர்படுத்தி, அதன் மூலமாக விவசாயத்தை வளர்க்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் நினைத்திருப்பது வரவேற்கத் தக்கது. அதோடு கழிவு உரம் என்று சொல்லுகிறார்களே, சென்னை கார்ப்பொரேஷன் கூட அந்த உரத்தை நல்ல முறையில் பயன்படுத்த தலாட்டி திட்டம் என்று ஒரு திட்டத்தை இட்டியிருக்கின்றார்கள். இப்போது எல்லா ஜில்லாக்



7th March 1958] [Srimathi T. N. Anandanayaki]

களிலும், இப்போது மதுரை டவுனிலே இந்த திட்டம் இருக்கிறது என்று நினைக்கிறேன், கழிவு இருக்கின்றது. கழிவு இல்லாத ஜில்லா இருக்காது. எல்லா இடங்களிலும் உள்ள இந்தக் கழிவு உரத்தைப் பயன்படுத்தக்கூடிய வகையில் ஒரு திட்டத்தை அரசாங்கம் உடனடியாகக் கொண்டு வந்து அதற்காக கடன்களைக் கொடுத்தால் பற்றாக்குறையாக உள்ள அம்மோனியம் ஸல்பேட்டோடு இந்தக் கழிவு உரத்தையும் உபயோகித்தால், வேளாண்மை அதிகரிக்கும் என்று நினைக்கிறேன். ஆகையினால் கனம் அமைச்சர் அவர்கள் எல்லா ஜில்லாக்களிலும் கழிவு உரத் திட்டங்களைக் கொண்டு வருவதற்கு வழி செய்தால் அது வரவேற்கத் தக்கதாக இருக்கும்.

அடுத்தபடியாக வீடு கட்டித் தருவதற்காக அரசாங்கம் தரும் நிலைமையைப் பார்க்கும்போது ராமநாதபுரத்தில் 3,000 வீடுகள் கட்ட 17 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அது மிக மிக வரவேற்கத் தக்கது. வெந்த உள்ளத்தோடு, வேதனைப்பட்ட உள்ளத்தோடு இருக்கின்ற ராமநாதபுரம் மக்களின் உள்ளங்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய வகையில் எறிந்து போன குடிசைகளுக்குப் பதிலாக, சிறந்த வீடுகளைக் கட்டித் தருவோம் என்று சொல்வதிலே, அவர்கள் வேதனையெல்லாம் வீடுகளைக் கண்டவுடனே மறந்து விடுவார்களென்று நினைக்கிறேன். இதை மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள். வீடுகளுக்காக 17 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது சிறந்தது. அதோடு மற்ற இனங்களில் செலவழிக்கப்படாமலிருக்கும் தொகையையும் இதற்காக செலவழிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதில் தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும் சரி, பிற்பட்ட வகுப்பினராக இருந்தாலும் சரி, ஹரிஜனங்களாக இருந்தாலும் சரி, அத்தனை பேர்களுக்கும், இதை ஒரு அவசர வேலையாகக் கருதி செய்தால் உண்மையிலேயே வேதனையில் ஈடுபட்டுள்ள மக்கள் நிச்சயமாக வரவேற்பார்கள். இது பட்ஜெட்டில் ஒரு மிகச் சிறந்த அம்சம் என்று சொல்லாமல் இருக்க இயலாது.

தொழில் வளத்தைப்பற்றியும் பட்ஜெட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அலுமினியத் தொழிற்சாலை ஒன்றை சேலத்தில் ஆரம்பிக்கப் போகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சமீபத்திலே ஒரு செய்தித் தாளில் பார்த்தபோது, இங்கே கிடைக்கும் பாக்ஸைட்டை விட பம்பாயில் கிடைக்கும் பாக்ஸைட் மிகச் சிறந்தது, ஆகவே அங்கே இந்த அலுமினியத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படலாம் என்று படித்த ஞாபகம் இருக்கிறது. கனம் தொழில் அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி விரிவாக விளக்கினால் வரவேற்கத் தக்கது. அதை விட்டு விடாமல் சேலத்தில் இந்தத் தொழிற்சாலையைக் கட்டாயம் அமைக்க முயற்சி எடுக்க வேண்டும்.

போன உரையில் சொன்னேன் கொள்ளேகாலம் பட்டு பறிபோய் விட்டதே என்று. ஹொசூரில் இப்போது ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்வதை எங்களைப் போன்ற பெண்கள் நிச்சயம் வரவேற்பார்கள். எதிர் கட்சி அங்கத்தினர்கள் கூட இதை வரவேற்பதாகப் பேசினார்கள். அவர்களோடு இந்த வரவேற்பில் கலந்து கொண்டு அதே சமயத்தில் ஒரு பயத்தையும் தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. கொள்ளேகாலத்தைக் கொடுத்து விட்டோம். படாஸ்கர் தீர்ப்பின்படி ஆந்திர எல்லைத் தகராறு தீர்க்கப்பட்டும், ஹொசூரைப்பற்றி ஒரு வார்த்தையையும் காணோம். ஹொசூரின் தலைவிதி பின்னால் . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஹொசூரைப்பற்றி தகராறு ஒன்றுமில்லை. கனம் அங்கத்தினர் அனாவசியமாக பிரச்னையைக் கிளப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: இவ்வளவு திட்டவட்டமான விளக்கம் வந்ததைப்பற்றி மகிழ்ச்சி. இதற்காகத்தான் சொன்னேனேயொழிய வேறு காரணத்தால் அல்ல. ஹொசூரில் பட்டுத் தொழிற்சாலை, நூற்கண்டுத் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவது மிகவும் வரவேற்கத் தக்கது. இப்படிப்பட்ட தொழில் வளங்கள் வருகின்றன

என்பதைப் பார்க்கும்போது "வட நாடு தேய்கிறது, தென் நாடு வளர்கிறது" என்று வட நாட்டிலே கோஷம் கிளம்புமளவுக்கு நாம் முன்னேறிக் கொண்டு போகிறோமென்று அஞ்சுகிறேன். (சிரிப்பு.)

அடுத்தபடியாக, புதிய வரிகளைப்பற்றி நினைத்துப் பார்க்கும்போது சினிமா, குதிரைப் பந்தயம் இவற்றின் மேலே எண்டெர்டெயின்மெண்ட் டாக்ஸ் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். எதிர்கட்சி அங்கத்தினர்களில் சிலர் சொன்னார்கள், சினிமா வேண்டாம், வேண்டாமென்று சொல்லுகிறீர்களே, ஏன் அதற்கு வரிபோடுகிறீர்கள், ஏன் சினிமாவிற்கு லைசென்ஸ் கொடுக்கிறீர்கள் என்று கேட்டார்கள். சற்று யோசித்துப் பார்த்தால் இதைச் சொல்லியிருக்க மாட்டார்கள். சினிமாவிற்கு லைசென்ஸ் தந்தால்தான் அதிக சினிமாக்கள் ஏற்பட்டு, பொழுதுபோக்கு வரி போட்டு அதிகமான வரி வசூலிக்க முடியும். வருமானத்தை அதிகப்படுத்த வேண்டுமென்ற காரணத்திற்காக சினிமாக்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறதே தவிர அதன் மீதுள்ள மோகத்தாலென்று தவறுதலாக எண்ணிவிடக் கூடாது.

(MR. Speaker in the Chair.)

அடுத்தபடியாக, இப்போது விவசாய வருமான வரி புதிதாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மூவாயிரம் ரூபாய்க்கு மேல் விவசாயத்திலிருந்து மாத்திரமல்ல, மற்ற துறைகளிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தையும் சேர்த்து வரி போடப்படுமென்று கூறப்படுகிறது. இதன் மூலம் எதிர் பார்ப்பது 70 லட்சம் ரூபாய்தான். இந்த 70 லட்சம் ரூபாய்க்காகப் போடுகின்ற இந்தப் புது வரி பல தொல்லைகளில் கொண்டுபோய் விடுமோ என்று பயப்படவேண்டியிருக்கிறது. மிராசுதார்களுக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுகிறேனே என்று எண்ணிவிட வேண்டாம். மற்ற வருமானத்தையும் சேர்த்து எடுத்துக்கொண்டால் 5 ஏக்கர், 7 ஏக்கர், 8 ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கின்றவர்களும் இந்த வரி கொடுக்க வேண்டிய நிலை வந்து விடும். பல புதுப்புது சட்டங்களைப் போட்டு விவசாயிகளைப் பிரமிக்கச் செய்து கொண்டிருக்கிறோம். நியாய வாரச் சட்டம், சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம், இப்போது புதிதாக மனத்தைக் குழப்புகின்ற கை ஏர் மாட்டேர் மசோதா என்று ஒன்றின்மேல் ஒன்றாக புதுப் புதுச் சட்டங்களைப் போடுவதினாலே அவர்கள் ஒன்றும் புரியாமல் இருக்கின்றார்கள். இந்த நிலையில் வருமான வரி போட்டால் என்ன ஆகுமோ என்று பயமாக இருக்கிறது. ஒருவர் வேண்டாதவராக இருந்தால் அவரைப்பற்றி இன்கம்-டாக்ஸ் ஆபீஸருக்கு மொட்டை பெடிஷன் எழுதினால் போதும். கையெழுத்துக் கூட வேண்டியதில்லை. அதனால் அவர் அடையக்கூடிய தொல்லை இவ்வளவு அவ்வளவு அல்ல. அவரை நசுக்கும் வரை அந்த இலாகா அதிகாரிகள் விடமாட்டார்கள். நாம் நல்ல எண்ணத்துடன்தான் இந்த வரியைக் கொண்டு வருகிறோம் என்றாலும், அதிகாரிகளின் கையில் மாட்டிக்கொண்டு விழிப்பது இருக்கிறதே, அது எந்த அளவுக்குக் கொண்டுபோய் விடும் என்று சொல்ல முடியாது.

போலீஸ் அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள், போலீஸ் மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக இருக்கிறதேயல்லாமல், பாழடிப்பதற்காக இல்லை. சமீபத்தில் கோடம்பாக்கத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி—இது இப்போது நீதி மன்ற விசாரணைக்குட்பட்டிருக்கிறது, ஆகவே நான் இதைப் பற்றி அதிகம் சொல்ல விரும்பவில்லை. ஒரு சில ஆபீஸர்கள் பாதுகாப்பதை விட்டு பாழ்படுத்திவிடுகிறார்கள் என்ற எண்ணம் நிலவி வருகிறது, நாம் நல்ல எண்ணத்துடன்தான் அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறோம். இதில் காங்கிரஸ் சர்க்காரின்மீது குற்றமில்லை. அதிகாரிகளின் மனப்போக்கு எப்படியிருக்குமோ ? ஆனால் சிலர் பாழ்படுத்தி விடுகிறார்கள் என்ற பயம் பொது ஜனங்களுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆனால் பழி யாரிடம் வருகிறது, எங்களிடம் வருகிறது. தென்னை மரத்தில் தேள் கொட்டி, பனை மரத்தில் நெறிகட்டியது என்று சொல்லுவார்கள். அதே போல் ஆபீஸர்கள் தங்களிஷ்டப்படி தவறாக நடந்து அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தால் பழி யார் தலையில் விழுகிறது என்று கேட்டால், இங்கே உட்கார்ந்திருக்கிற அமைச்சர் பக்தவத்சலத்தின் தலையின்மேல் விழுகிறது.



THE HON. SRI M. BHAKTAVATSALAM : பழியைப்பற்றி கவலையில்லை. இப்போது எப்படி கனம் அங்கத்தினர் பயம் ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்களோ, அதே மாதிரி ஆபீஸர்களுக்கும் பயம் ஏற்படுவது நல்லதல்ல. அதை மட்டும் இந்த சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன்.

MR. SPEAKER : அங்கத்தினருடைய நேரம் முடிந்து, கூடுதலாக இரண்டு நிமிடங்களும் ஆகியிருக்கின்றது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : விவசாயிகள் அதிகம் படித்தவர்களல்ல. இப்போது வருமான வரி என்று போட்டால் அவர்கள் மிகவும் பயந்து விடுவார்கள். ஒருவனுடைய நிலத்தில் ஒரு வருஷம் நன்றாக விளையலாம். மறு வருஷம் அவன் நிலத்தில் பூச்சி விழுந்து விவசாயம் பாதிக்கப்பட்டு வருமானமில்லாமல் இருக்கலாம். அப்போது பக்கத்து நிலக்காரனுக்கு நன்றாக விளைந்திருக்கலாம். வருமான வரி உத்தியோகஸ்தர் வந்து பக்கத்து நிலக்காரனுக்கு இவ்வளவு விளைந்திருக்கிறதே, உனக்கும் விளைந்திருக்கவேண்டும், நீ பொய் சொல்லுகிறாய் என்று சொல்லி அந்த விவசாயியைத் துன்புறுத்த நேரிடும். இப்போது இந்த விவசாய வருமான வரியினால் 70 லட்சம் எதிர்பார்க்கிறார்கள். இதற்காக 70 லட்சம் விவசாயிகளை வருத்துவதைக் காட்டிலும், யோசித்து இதைப் போட்டால் நல்லது என்று நினைக்கிறேன்.

* SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, 1958-59-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்து அதன் மீது நிதி அமைச்சர் அவர்கள் நிகழ்த்திய உரை மிகத் திறம்பட அமைந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், நாட்டில் இன்று இருக்கக்கூடிய பொருளாதார நெருக்கடியைப் பற்றியோ, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றியோ அல்லது பணவீக்கத்தைப் பற்றியோ ஒன்றுமே சொல்லாமல் நாட்டின் நிதி நிலை திருப்திகரமாகக் கூறப்பட்டுள்ளது ஆனால் நிலைமை என்ன ? அத்தியாவசியமான உணவுப் பொருள்களின் விலைவாசி விஷம் போல் ஏறி வருகிறது. உற்பத்தி உச்ச நிலையை அடைந்து விட்டது என்று சொல்லப்படுகிறது. கைத்தறியை எடுத்துக்கொண்டால் நிதிநிலை நாட்டில் அகில இந்திய ரீதியில் பாதித்துள்ளது என்பது தெரியவரும். சுமார் 5½ லட்சம் கைத்தறி நெசவாளர்கள் உள்ள தமிழ் நாட்டில் சுமார் 1¼ லட்சத்திற்கு அதிகம் கூட்டுறவு இயக்கத்திலே இருக்கக்கூடும். அவைகளில் மாத்திரம் சுமார் 1 கோடியே 40 லட்சத்திற்கு சரக்குத் தேங்கியுள்ளது. இன்னும் தனிப்பட்டவர்களிடம் இருப்பதையும் சேர்த்துக் கணக்கிட்டால், சுமார் 5 கோடி ரூபாய் வரையில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. இது ரிபேட்டைக் குறைத்ததால் மட்டுமல்ல என்று தெரிகிறது. கழிந்த பொங்கலுக்குப் பிறகும் இதே நிலைமை தமிழ் நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. மில் துணி நிலைமையை எடுத்துக்கொண்டால், குறிப்பாக கோயம்புத்தூர் வட்டாரத்திலே மூன்றாவது ஷிப்டை நிறுத்தப்போவதாக முன்னறிவிப்பு நோட்டீஸ் மானேஜ்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். செங்கோட்டை, மதுரை, பாபநாசம் மில்களில் ஏற்கெனவே ஆட்களை எடுக்க வேண்டுமென்று திட்டமிட்டு, இப்பொழுது ஆட்களை எடுக்கவில்லை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. கைத்தறிக்கு நமது மாகாணத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஐந்து ஆண்டுகளிலே 4 கோடியே 14 லட்சம் ரூபாய் செலவு செய்வதாக இருந்தது. கழிந்த இரண்டு ஆண்டுகளில் 3 கோடி ரூபாய் வரை செலவழித்தாய் விட்டது. இந்த ஆண்டிலே 92 லட்சம் ரூபாய் செலவழிப்பதாக இருக்கிறது. மொத்தம் ஐந்து ஆண்டுகளிலே செலவு செய்யவேண்டிய தொகையை மூன்று வருடத்திலே செலவு செய்யப்போகிறோம். அப்படிச் செலவு செய்தும், நாட்டிலே கைத்தறித் தேக்கம் ஏற்பட்டு, சுமார் 5 லட்சத்திற்கு அதிகமான குடும்பங்கள் கஷ்டப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால், இதை ஒரு "isolated phenomenon" ஆகக் கருதுவதற்கு இல்லை. பம்பாய் போன்ற முக்கிய நகரங்களை எடுத்துக் கொண்டால் கழிந்த டிசம்பர் மாதத்திற்கு முன்பாகவே சுமார் 20,000 மில் தொழிலாளர்கள் பாதிக்கப்

பட்டிருக்கிறார்கள். கழிந்த பார்லிமெண்ட் கூட்டத்திலே கூட இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வளரும் தொழிலிலே ஒன்றாகக் கருதிய தொழிலின் நிலைமை அப்படி யிருந்தும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மேலும் அநேக லைசென்ஸ் கொடுக்கப் பட்டு மில்கள் திறக்கப்படவேண்டிய நிலைமையிலே இருக்கிறது. இதே மாதிரி செமெண்ட் தொழிலிலும் தேக்கம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது.
3-10 p.m. 1956-ல் சுமார் 42 லட்சம் டன்னுகை உபற்த்தி இருந்தது. தற்சமயம் 60 லட்சம் டன்னுக்கு கொஞ்சம் அதிகமாக இருக்கலாம். 1961-ம் ஆண்டு முடிவுக்குள், அதாவது இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்ட முடிவுக்குள் 1 கோடி 30 லட்சம் டன் உற்பத்தி அதிகரிக்கும். ஆனால் இப்பொழுதே நெருக்கடி ஏற்பட்டு உள்ளது. இத்தனைக்கும் காரணம் என்ன? சாதாரண மனிதனின் அன்றாட தேவைப் பொருள்களான விவசாயப் பொருள்களின் விலை விஷம் போல் ஏறிக்கொண்டே இருக்கிறது. உணவு தானியங்களின் விலை 1956-ம் வருஷம் ஜூலை மாதம் 377 மொத்த குறியீட்டு எண்ணுகை இருந்தது. 1957-ம் வருஷம் டிசம்பர் மாதம் 512 ஆக உயர்ந்து இருக்கிறது என்று நிதி மந்திரி அறிக்கையில் கூறினார்கள். உணவுப் பொருள்களில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறையின் காரணமாக இந்தத் திடீர் உயர்வு ஏற்படவில்லை என்று கூறினார்கள். அப்படியானால் பற்றாக்குறைக்கு காரணம் என்ன? இதைப் பற்றி சிந்திக்கும் போது "**Foodgrain Enquiry Committee Report**" பார்ப்பது நன்றாக இருக்கும்.

"The money supply has gone up from Rs. 1,794 crores on 31st March 1954 to Rs. 2240·2 crores on 31st August 1957 or an increase by 24·9 per cent in 3½ years. The rise of prices is therefore basically the consequence of the rate of economic development and its mode of financing." விலை உயர்வைப்பற்றிச் சொல்லும்போது பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"Stock holding at the farm level has increased considerably in 1956–57 as compared to 1955–56 less than 60 per cent and in some areas even less than 50 per cent of the crop came to the market in 1956–57 within two or three months of the harvest as compared to 70 to 80 per cent in normal years."

ஒரு சில பெரிய நிலச் சொந்தக்காரர்கள், '**farm**' கள் வைத்திருப்பவர்கள், பெரிய வியாபாரிகள் நாட்டில் உள்ள பொருள்களை தேக்கி வைப்பதனால் பொருள்களுக்கு விலை வாசி உயர்வு ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றியும் அதிலேயே குறிப்பிடப்பட்டு உள்ளது. இது எதிர்பாராத விஷயமல்ல. இதைப்பற்றி முன் கூட்டியே இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை தீட்டியவர்கள் எதிர்பார்த்தே சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் சில 'அஸம்ஷென்ஸ்' பொருளாதார அடிப்படையில் வைத்து சொல்லியிருக்கிறார்கள்.

(*a*) that the terms of trade in the next five years will remain on an average, the same as they have been in 1955–56 (first nine months) and (*b*) that inflationary pressures will be held firmly under control."

பணப் பெருக்கத்தைப்பற்றி பின்வருமாறு சொல்லி யிருக்கிறார்கள்.

"Care will however have to be taken to prevent excessive credit expansion which may react adversely on prices and to ensure that credit does not flow into speculation to the detriment of productive activity."

ஸ்பெகுலேஷன் மூலமாக நாட்டில் பணம் உபயோகிக்கக் கூடாது என்று திட்ட வட்டமாகச் சொல்லியிருந்தும் பலமாக நாட்டில் இன்று பணம் ஸ்பெகுலேஷனில் உபயோகப்படுத்தப்படுகிறது. இதனால் ஏற்படும் நிலைமை



என்ன? இந்தப் பணப்பெருக்கு நாட்டுக்கு உபயோகப்படாமல், ஒரு சிலர் சொந்த லாபத்திற்காக பணத்தை உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். நாட்டில் இருக்கக்கூடிய பண உயர்வு 13,480 கோடி ரூபாயாக இன்னும் இரண்டு வருஷத்தில் எட்டிப் பிடித்துவிடும். இந்தப் பணம் யாரிடம் போகிறது என்று பார்போம்.

All India Rural Credit Survey Agricultural labour Enquiry report.

"Between 1949–50 and 1953–54, there is impowerishment of the people left in the lowest income classes. This would be manifest from the fact that while in 1949–50, 30 per cent of the agricultural working force enjoyed 10·2 per cent of the income in 1953–54, 28·8 per cent enjoyed 7;3 per cent and not 8.1 per cent of the income.

Also the non-agricultural working force on the basis of 1949–50, the 9·5 per cent working force should have enjoyed 2·7 per cent of the income but they had only 1·9 per cent."

நாட்டில் இருக்கக்கூடிய ஒரு சில முதலாளிகள், பணக்காரர்கள், மேலும் மேலும் பணக்காரர்களாகிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய தர வகுப்பைச் சேர்ந்தவர்கள், சாதாரண அக்ரிகல்சரல் லேபரர்ஸ், தொழிலாளிகள், இவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்பட்டு மேலும் மேலும் ஏழையாகவும் மெலிந்தும் போய்க் கொண்டிருக்கிறார்கள். இந்த சூழ் நிலையில்தான் என்.ஜி.ஓ.-வினர், உபாத்தியாயர், குறிப்பாக ஆலைத் தொழிலாளி இவர்களைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்திக்காமல் காங்கிரஸ் அங்கத்தினர்கள் விவசாய வருமான வரியைக்கூட எதிர்த்துப் பேசுகிறார்கள். அது வெறும் பிரச்சாரத்திற்காக தங்கள் கட்சி ஏதோ தீவிர நடவடிக்கை எடுப்பதாக வெளியில் பொது மக்கள் நினைக்க இப்படிப் பேசுகிறார்கள். அதேநேரம் இவர்கள் அகில இந்திய ரீதியில் கையாளும் கொள்கைகள் நாட்டில் ஏழையை ஏழையாகவும் பணக்காரர்களை பெரிய பணக்காரர்களாகவும் உயர்த்துகிறது. சோஷலிஸம் பேசிக்கொண்டு நடைமுறையில் ஒரு நிலைக்குத்தான் வருகிறது.

'Whoever hath to him shall be given and he shall have more abundance, but whoever hath not from him shall be taken away even that he hath." இதுதான் சர்க்காரின் கொள்கை போலும்.

SRI A. V. THOMAS: Mr. Speaker, let me at the outset take the rather unpleasant part of the budget that has been presented by the Hon. Finance Minister. I mean to say that part of the budget which relates to taxation measures. First comes the tax on diesel oil. The only one remark that I wish to make here is that diesel oil that is used for agricultural purposes should be exempted from this tax.

Next comes the Entertainment Tax. Reference is there in the budget to Horse Racing. I am glad, however, that it is likely that horse racing will be allowed to continue. Because, to some extent I am interested in horse racing and I make no secret of it. But, I feel that the Government will have to exercise more control on the mode of racing. All is not well in the city of Guindy. I have also made representations to the Hon. Home Minister about certain defects in the present system of racing. Before the issue of further licences, I hope that the Government would appoint a Committee

[Sri A. V. Thomas] [7th March 1958

to go into the whole matter or they themselves would make necessary arrangements and provide sufficient safeguards to ensure fair racing. The public have a big hand in racing. It is no secret that quite a lot of money changes hands in Guindy. So, the interests of the public have to be safeguarded and it is the duty of the Government to see that no unfair methods are carried on.

Next comes the levy of agricultural income-tax on land holdings. To be quite candid, of course I am one interested in plantations, some of my comrades do welcome this not because they realise that it is necessary or anything of the sort, but because they think, 'Oh, we are paying the tax, why not the others also pay the agricultural income-tax?' I do not take that view. As far as agriculture is concerned, perhaps it many be argued that in the neighbouring State, that tax is levied. But, there is a world of difference between conditions obtaining in those States and our State. Excepting perhaps two or three districts where our rivers flow, the major part of our State is dependant on rains and rain-fed tanks for its cultivation. Also the fertility of the soil is another great factor. So all these go to show that conditions here are not the same as in other States, and it would be unwise for this State to follow the systems in force in other areas.

3-20 pm. Apart from that, we know—I realise that—that money is needed for other purposes also. But in this case, apart from this levy, it is also proposed that any non-agricultural income will also be added to the agricultural income so that a higher rate of tax would be realised. I suggest the Government might consider other methods of raising this money even from the agriculturists themselves. If they want to tax the agriculturists, the small holders and the small cultivators should be exempted, because the small cultivator works in the field from morning till evening by the sweat of his labour. That is worth considering. There is a world of difference between this and other taxes. For instance, the Plantation Labour Act may be a little different. But on the question of taxation, as far as I am concerned, it will have to be there. There may be other methods of perhaps assessing the cess on the larger areas which are cultivated, at the same time excluding the small areas, say, up to 50 acres or so. Therefore, a certain limit could be fixed for paddy fields.

Then, the most worrying thing of the whole show here is that in this levy we are handing over the poor agriculturist or farmer to the hands of the tax collector. Nobody likes a tax collector, including myself. But even if we have to produce our books of accounts or argue, etc., it may be possible for some of us to send somebody else, a lawyer or an accountant. But in the case of the poor agriculturists, he has nobody to send and even if he has, he has to pay and he has not the money and means to do so. So the agriculturist should be saved by all means from the tax collector. If he is asked to come to a Tax Office, it means two or three days wasted. He will lose his work; if he is absent, his crops will suffer,



7th March 1958] [Sri A. V. Thomas]

his animals will suffer, and his family will suffer. So, that contingency should be avoided at all costs. This is very important. I plead with the Government that instead of levying this tax, they should find some other method, as I said before.

On the question of irrigation—I hope the Hon. Minister for Irrigation would lend his ears to what I say—I have been suggesting over and over again that a separate department should be constituted to explore the possibilites of water-supply in the whole State. I know they are discussing some of these matters and recently also they were discussing the matter with the neighbouring Government of Kerala. But that is not enough. Not only the river water, but the rain water and other underground water also will have to be tapped. For instance, for the last one year and more I have brought to the notice of the Hon. Minister either here or through other sources, the large quantity of water that is running to waste from the Kanyakumari to the set. The Irrigation Minister, the Hon. Mr. Kakkan has seen it and he knows how much water is wasted year after year. In one or two years when there is not much of rainfall, the flow may not be very much. But it is an undoubted fact which we have seen with our own eyes that a large quantity of water is wasted into the sea. What are we doing about it? The Government must devote their attention to this and realise that the poor are suffering; if that water is turned to the areas which are thursting for water, perhaps a large area or a whole district can be irrigated with that water. I say, please give your attention to that. It may be said that the Engineering department is looking into it. But the Engineering department could only do their day to day work. So I would again imprest on the Hon. Minister to take the question of constituting a separate department or deputing one of the Chief Engineers with a complete staff of surveyors, etc., to go into this question thoroughly and urgently.

With regard to food production, it is satisfactory to note that there has been a slight increase and in the last year or two there has been an increase of about 2 lakhs tons. Personally, I am no doubt happy, but I am not satisfied with the increase. I can say in this connection that in the case of another crop, in the plantation area,—I mean tea—some years ago we thought we could not get more than 500 lb. But to-day, due to careful cultivation, judicious manuring, etc., estates are able to produce 1,400 to 1,500 lb.—not all estates but estates which do proper cultivation. That means, we are getting 300 per cent more than what we were getting at one time. Therefore, conditions have changed; science has advanced and all possible ways and means should be utilised to increase our paddy crop also. We have not reached the level of Japan or China, in one of which the yield is about 1,000 per cent more than what we are getting here.

Coming to handloom industry, we have been hearing of accumulation of stocks. I would ask the Government what they have done about it? There is the State Trading Corporation. I am afraid

they have been buying such articles on which the Corporation expects to get a profit. If that is so, the existence of that Corporation is of no use. Well, in any transaction, if there is profit, you will have to incur some times a loss also. On the other hand why not the State Trading Corporation effect sales as they are produced and themselves purchase and send to other countries and outer markets.

One more small matter to which I like to refer and that is with regard to the concessions, etc., given to Harijans and other depressed communities. There has been a lot of complaints, although at Ministerial level they had agreed that these concessions would be available to people mentioned in that schedule. Still the educational department does not appear to act up to that advice. In fact there is discrimination—I would call it so—in the grant of these concessions because all such people are not given that benefit. They may profess one religion or another. So long as they are Harijans and belong to the depressed community, no distinction should be there and any distinction should be wiped out. It has been argued that the grant of concession is on economic basis. I would welcome if economic backwardness is taken into consideration. There are, after all, poor people in all communities. Well, you are giving that to the Harijans. But over and above that, give it to the economically backyard—not backward classes alone—irrespective of religion.

Then again, in the matter of midday meals, why should restrictions be put in giving this? You supply food in the schools to certain people. It means we are creating two classes, two divisions. When we are preaching for abolition of all distinctions, why should we do this? Everywhere we want to do away with caste, creed, etc. Then why from very childhood should this be put into their minds that 'you are taking this food; you are inferior', etc. Give the food to everybody; those who like it may take it and those who do not like, need not take it. One other matter and I will finish in one or two minutes, Sir.

I am glad that the Hon. Minister in the concluding paragraph of his Budget speech has made reference to our esteemed friend Mr. T. T. Krishnamachari. I am happy that he had the boldness to add that. In fact, I did not expect it. I appreciate our friend Mr. Subramaniam's attitude in taking up that position. We all realise that Mr. T. T. Krishnamachari belongs to our State and he has done a wonderful piece of work in Delhi. Opinions may differ about other matters, but when a few months ago the country was facing a very very difficult situation regarding our Five-Year Plan, etc., and when finance was required, for that Mr. Krishnamachari went to America and was able to do wonderful things. After all, as you all know financiers whether here or elsewhere or in any country, are hard nuts to crack. By his persuasive methods he was able to explain to the people of other countries the actual needs of our country and was able to get money. We owe a debt of



gratitude to him and we should also thank him for the very valuable service he has done to this country and for the credit he has brought to this State. Thank you, Sir.

**Sri N. R. THIAGARAJAN** : தலைவர் அவர்களே, சென்ற நான்கு நாட்களாக பட்ஜெட் மீது நண்பர்கள், குறிப்பாக எதிர்க்கட்சி நண்பர்கள் தில்லானா, தெம்மாங்கு, ஜாவளி, பதம் முதலிய ஏதேதோ பாடி முடித்துவிட்டார்கள். தியாகராஜ கீர்த்தனம் பாடுவது என்றால் அதற்கு நேரம் அதிகம் ஆகும். நான் என்ன செய்வது ? ஒலிப் பெருக்கி உயர் திருவாளருடன் ஒத்துழைக்கவில்லை. குட்டைத் திருவாளரோடு கூடிக் குலவியது என்னுடன் ஒத்துழைக்கவில்லை. அதன் அளவுக்கு என்னால் குறுக முடியவில்லை. ஆகவே, ஒலிப் பெருக்கியை உயர் திருவாளருக்காக சற்று உயர்த்தி வைத்தால் கூட நலம். 3.30 p.m.

**Sri A. V. P. ASAITHAMBI** : உட்கார்ந்தே பேசலாமே.

**Sri N. R. THIAGARAJAN** : நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் என்னை உட்கார்ந்தே பேசச் சொல்கிறார்.

**Mr. SPEAKER** : நின்றுகொண்டே பேசலாம்.

**Sri N. R. THIAGARAJAN** : " இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு " என்று வள்ளுவப் பெருந்தகை கூறினார். அதைப்போல், இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும் ஆகிய நான்கு முறைகளைக் கையாண்டு நமது நிதி அமைச்சர் அவர்கள் சோஷலிச பட்ஜெட்டைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன்.

நிதி நிலை அறிக்கையிலே, 34 பாராக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. " வான்நின்று உலகம் வழங்கி வருதலால்தான்—அமிழ்தம் என்றுணரற் பாற்று " என்று வள்ளுவன் கூறியதைப் பின்பற்றி, முதலில் மழையைக் குறிக்கோளாகக்கொண்டு அழகான முறையிலே இந்த பட்ஜெட்டைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பாராவாகப் படித்துப் பார்த்ததில், என்னுடைய கவனத்தைக் கவர்ந்த ஒன்றிரண்டு விஷயங்களைப் பற்றி இங்கே கூறப் பிரியப்படுகிறேன்.

காடுகளை வளர்க்கும் வேலைக்காக 29 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியான தேனியில், ஊருக்கு அருகே ஆண்டு தோறும் மரம் வளர்க்க முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், ஒரு முறைகூட வெற்றியடையவில்லை. இதைப்போன்று என்னுடைய தொகுதியில் பல இடங்களில் ஊர்களுக்கு அருகே மரம் வளர்க்கும் முறையிலே தோல்வியடைந்திருக்கிறார்கள். என்றாலும்கூட, ஆண்டு தோறும் பட்ஜெட்டில் பணம் ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்படுகிறது. அப்படிச் செலவு செய்யப்படும் பணத்தைக்கொண்டு, ஊருக்கு அருகாமையிலேயே மரங்களை வளர்க்க முயற்சி செய்வதைவிட, ஊருக்கு அப்பால தூரமான இடங்களில் உள்ள காட்டுப் பகுதிகளில் மரம் வளர்க்க முயற்சி செய்வது நல்லது. அப்படிப்பட்ட காட்டுப் பிரதேசங்கள் மரம் வளர்க்கத் தகுதியாக இருக்கின்றனவா, மழை சரியாகப் பெய்கின்றதா, மரம் வளர நல்ல சூழ்நிலை இருக்கிறதா என்று பார்த்து, இந்த 29 லட்ச ரூபாயையும் செலவு செய்ய வேண்டுமென்று கனம் போலீஸ் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு இலாகா என்னுடைய கவனத்தைக் கவர்ந்தது. எங்கள் ஜில்லாவில், எனக்குத் தெரிந்த அளவில் அந்த இலாகா சரியாக நடைபெறுகிறது என்று என்னால் கூறமுடியவில்லை. இதைப் பல தடவை கூட்டுறவு இலாகா அமைச்சரிடம் நான் கூறியிருக்கிறேன். கூட்டுறவு இலாகா துருப்பிடித்திருக்கிறது. கூட்டுறவு சம்பந்தமான சட்ட

திட்டங்களை மாற்றியமைத்தாகவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்களே பல இடங்களில் கூறியிருக்கிறார். இந்த இலாகாவின் சட்ட திட்டங்களைத் திருத்தியமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நெய்வேலித் திட்டத்திற்காக 60 கோடி ரூபாய் செலவாகும் என்று திட்டமிட்டு, அதில் ஏழு கோடி ரூபாய் மத்திய சர்க்கார் பட்ஜெட்டில் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறதைப்பற்றி நான் வாஸ்தவத்திலேயே சந்தோஷப் படுகிறேன். நெய்வேலி என்னுடைய ஜில்லாவில் இல்லை. அது என்னுடைய நாடும் அல்ல. அப்படியானால் நான் எந்த நாட்டைச் சேர்ந்தவன் என்று கேட்கிறீர்களா ? நான் பாண்டிய நாட்டுக்காரன். நான் சரித்திரம் படிக்க வில்லை என்று ஒரு முறை ஒரு பத்திரிகையிலே எழுதப்பட்டிருந்தது. நான் சரித்திரம் நன்றாகப் படித்திருக்கிறேன். தேவிகுளம், பீர்மேடு சென்று பார்த்தால், பாண்டி நாட்டுக்காரர்கள் வந்திருக்கிறார்கள் என்று எங்களைக் கூறுவது வழக்கம். நாங்கள் பாண்டி நாட்டுக்காரர்கள். நெய்வேலியில் 60 கோடி ரூபாய் செலவில் திட்டம் தீட்டி, அதற்காக இவ்வாண்டு ஏழு கோடி ரூபாய் மத்திய சர்க்கார் பட்ஜெட்டில் ஒதுக்கியிருப்பதைக் கண்டு, அண்டை அயலார் நன்றாக வாழட்டும் என்பதற்காக பாண்டிய நாட்டுக் காரனாகிய நான் வாழ்த்துகிறேன்.

அடுத்தாற்போல், கைத்தறியைப்பற்றி எனது நண்பர்கள் பலர் பேசினார்கள். நானும் அடிக்கடி சட்டசபையில் பேசியிருக்கிறேன். நான் கட்டிக் கொண்டிருப்பது கைத்தறித் துணி. கைத்தறிக்காகப் பேசுகிற மற்றவர்களும், என்னைப்போல் கைத்தறித் துணி கட்டிக்கொண்டால் நன்றாக இருக்கும். சொல்லுதல் யார்க்கும் எளிது, ஆனால், சொல்லிய வண்ணம் செய்வது அரிது. கைத்தறிக்காக கண்ணீர் வடிப்பவர்கள் கர்னாடிக் மில் துணி கட்டிக்கொண்டிருந்தால், எப்படி கைத்தறியாளர்கள் முன்னேற முடியும் ? அமெரிக்கன் ஸ்லாக் ஷர்ட் அணிந்துகொண்டிருக்கும் ஆசைத் தம்பிமார் தலையசைப்பதைப் பார்க்கும்போது எனக்கு வெட்கமாக இருக்கிறது. கைத்தறித் துணி கட்டவேண்டுமென்று பிறருக்கு கூறுவதற்கு முன்பாக, தானும் கட்டிக்கொள்வது நலம் என்று கூறுகின்றேன். அப்படிச் செய்தால், தமிழகத்தில் தேங்கிக் கிடக்கும் இரண்டரை கோடிகளும் கைத்தறித் துணி ' ஸ்டாக் ' இல்லாமல் தீர்ந்துபோய்விடும். கைத்தறியாளர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதிலே எல்லாக் கட்சிக் காரர்களிடையேயும் யாதொரு விதமான அபிப்பிராய பேதமும் கிடையாது. எல்லோரும் கைத்தறித் துணியையே கட்டுவார்களானால், நிச்சயமாக ஸ்டாக் மிச்சம் இருக்கவே இருக்காது. ஆகவே, எதிர்க்கட்சி நண்பர்களும் கைத்தறி கட்டவேண்டும். கச்சேரிகளிலும் இத்திட்டங்களை வரவேற்றாக வேண்டும்.

மருத்துவம், சுகாதாரம் என்ற இனத்திலே எனக்கு மிக்க குறை இருக்கிறது. திருத்தியமைக்கப்பட்ட சென்னையில் ஆறாயிரம் டாக்டர்கள் இருக்கிறார்கள். பத்தாயிரம் ஜனத்தொகைக்கு ஒரு டாக்டர் வீதம் போட்டாலும் மூவாயிரம் ஆஸ்பத்திரிகள் தமிழ்நாட்டுக்குத் தேவை. ஒவ்வொரு டாக்டரையும் ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்கு போட்டால், மூவாயிரம் டாக்டர்கள் தேவை. ஆனால் டெலிபோன் கைடைப் பார்த்தால், சென்னை நகரத்திலேயே மூவாயிரம் டாக்டர்களுக்கு அதிகமாக இருப்பதைப் பார்க்கலாம். எந்தப் பக்கத்தைப் பார்த்தாலும், அதில் டாக்டருடைய பெயர்தான். இப்படி ஆயிரக்கணக்கான டாக்டர்கள் சென்னை நகரத்தில் கூடிக் குவிந்து கொண்டிருக்கிறார்கள். எதேதோ சட்ட திட்டங்கள் செய்கிறோம். இவர்களுக்காக ஒரு சட்டம் செய்து, கூட்டமாக ஒரே இடத்தில் டாக்டர்கள் இல்லாமல், கிராமங்களுக்கு அவர்களை அனுப்புவதற்கு ஏதாவது திட்டம் வகுத்தால் நலமாக இருக்கும் என்று சுகாதார அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

பின்தங்கிய மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்குவதற்காக மத்திய சர்க்காரிடமிருந்து நமக்கு 28 லட்ச ரூபாய் வந்துகொண்டிருந்தது. இந்த ஆண்டு நிறுத்தப்பட்டுவிட்டதால், அனேக மாணவர்கள் ஸ்காலர்ஷிப் கிடைக்





காமல் கஷ்டப்படுவதாக என்னுடைய ஜில்லாவிலிருந்து எனக்கு 22 கடிதங்களுக்குமேல் வந்திருக்கின்றன. திடீரென்று நிறுத்திவிட்டதால் பல மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, தயவுசெய்து மீண்டும் மத்திய சர்க்காரிடமிருந்து அந்தத் தொகையைப் பெற்று, ஸ்காலர்ஷிப் கொடுக்க வகை செய்யவேண்டும். மத்திய சர்க்கார் தொகை கொடுக்கவில்லையென்றால், சென்னை சர்க்காராவது தொகை ஒதுக்கி, அந்த மாணவர்களுக்குத் தொடர்ந்து உதவியளிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ரயில்வே பாதை அளவு அடிப்படையில் மத்திய சர்க்காரிடம் இருந்து நமக்கு 64 லட்சம் ரூபாய் கிடைக்குமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரயில்வே பாதை அளவைக் கணக்கிட்டு தொகை கொடுப்பதைவிட, ரயில் போகும் தூரத்தைக் கணக்கிட்டால்—அதிக ரயில்கள் நம் பக்கத்தில் போவதால்—நமக்கு அதிக வருமானம் வரலாம் என்று நினைக்கிறேன். அதையும் பரிசீலனை செய்யும்படி நான் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்.ஜி.ஓ.-க்களுக்காக மத்திய சர்க்கார் பட்ஜெட்டிலே 30 லட்சம் ரூபாய் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், மத்திய சர்க்காருடைய பட்ஜெட்டைப் பார்த்தால், ஆறு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகப் பார்த்தேன். ஜனத்தொகை விகிதாசார அடிப்படையில் நமக்கு 50 லட்சம் ரூபாய் கிடைக்கவேண்டும். ஆகவே, பாக்கி தொகையையும் மத்திய சர்க்காரிடமிருந்து கேட்டு வாங்கி, பெரிய நகரங்களில் வசிக்கும் என்.ஜி.ஓ.-க்களுக்குக் காவது பத்து, பதினைந்து அல்லது இருபத்தைந்து ரூபாயாவது அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். நாம் தினமொன்றுக்கு 12½ ரூபாய் வாங்கும்போதே நமக்குச் செலவுக்குப் போதாமல் இருக்கும்போது, 100 முதல் 150 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு பெரிய நகரங்களில் வாழ்வதற்கு முடியாது. சிறிய தாலூகாக்களில் வேண்டுமானால் இந்தத் தொகையைக் கொண்டு ஒருவாறு வாழ முடியும். ஆனால், பெரிய நகரங்களிலே வாழ்வது சிரமமாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே, மத்திய சர்க்காரிடமிருந்து நமக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய 50 லட்சம் ரூபாயைப் பெறுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

டீசல் எண்ணெய் மீது வரி விதிக்கும்போது, விவசாயிகளுக்கு மாத்திரம் ஏதேனும் சலுகை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, சினிமாவுக்கு வரியை உயர்த்துவதையும் நான் வரவேற்கிறேன். சினிமாவுக்கு விதித்திருக்கும் வரி போதாது. படம் வெளியிடும்போது, நமது ராஜ்யத்திலிருந்து வெளியிடும் படங்களுக்கு சர்ட்டிபிகேட் வழங்குவதற்கு முன்பாக, ஒரு அடிக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை வசூலிக்கலாம். ஒரு அடிக்கு குறைந்தது ஐந்து ரூபாயாவது வசூலித்தால், 20 ஆயிரம் அடிக்கு ஒரு லட்சம் ரூபாய் வரி விதிக்கலாமா என்பதை யோசனை செய்து பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, விவசாய வருமான வரிக்கு வருகிறேன். வரி விதிப்பை நான் எதிர்க்கவில்லை. இதனால் நமக்குக் கஷ்டம் வருமோ என்ற பயம்தான் ஏற்படுகிறது. " உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர் " என்று வள்ளுவப் பெருந்தகை கூறினார். " உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு ". என்று ஔவையார் பாடியிருக்கிறார். ஒருகாலத்தில் உழுதுண்டு வாழ்பவர்கள் வாழ்பவர்களாகக் கருதப்பட்டார்கள். இப்பொழுது அவர்கள் தொழுதுண்டு பின்செல்பவர்களாகிவிடக்கூடிய நிலை ஏற்படுமோ என்று ஐயுறுகிறேன். அத்தகைய நிலை ஏற்படாவண்ணம் விவசாய வருமான வரியை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அது மட்டுமல்ல. உதாரணமாக நம் நாட்டிலே, கிராம முன்சீப், கர்ணம் முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று இருபது ஆண்டுகளாகப் பிரசாரம் செய்து வந்திருக்கிறேன். அந்த முறையை மாற்றியமைத்து

விட்டால் வருமானம் பாதிக்கவே பாதிக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். இதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த நேரத்தைப் கொடுத்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன். ஜெய் ஹிந்த். (கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஏ. வி. பி. ஆசைத்தம்பி எழுந்தார்.)

**MR. SPEAKER :** உங்களைப்பற்றி ஒன்றும் சொல்லவே இல்லை. பொதுவாகத்தான் சொன்னார். உங்கள் பெயரை அவர் எடுக்கவில்லை.

**SRI A. V. P. ASAITHAMBI :** அவர் என்னைக் குறிப்பிடவில்லையென்றால் நான் விட்டுவிடுகிறேன்.

**SRI N. R. THIAGARAJAN :** "என் ஆசைத் தம்பிமார்கள்" என்று நான் கூறினேன்.

3-40 p.m.

**DR. E. P. MATHURAM :** கனம் சபாநாயகர் அவர்களே, எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நிதி நிலை அறிக்கையை பற்றாக்குறையானது என்று சொல்வதற்கு நியாயம் இல்லை. ஆனால் அவர்கள் 105 லட்சம் ரூபாய் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதைச் சரிக்கட்ட வரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சரியானபடி பார்க்கப்போனால் இது பற்றாக்குறை பட்ஜெட்டாகத் தயாரித்திருக்க வேண்டியது இல்லை. ஏனென்றால், அநேக முக்கியமான காரியங்கள் இந்த ஆண்டில் செய்யப்படாது ஓரளவு செய்யப்பட்டு செய்யாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு நிதி அமைச்சர் அவர்கள் சில காரணங்களைக் காட்டி சமாதானம் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது அதற்குரிய பணத்திலுள்ள மிச்சம் உபரியாக வந்து சேரப்போகிறது. அதேசமயத்தில் மத்திய சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய கடன் தொகைக்கான வட்டியில்—கமிஷனுடைய சிபார்சுப்படி 60 லட்சம் ரூபாய் குறைக்கப்பட்டு நமக்கு வந்து சேர இருக்கிறது. மத்திய சர்க்கார் கமிஷனுடைய சிபார்சை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருக்கும். இவர்கள் முதலிலேயே கடனுக்கு வட்டி கிடையாது என்று சொல்லியிருந்தால் இப்போது அவர்கள் வட்டியில் கொஞ்சம் குறைத்துக்கொள்ளக்கூடிய நிலைமைக்காவது வந்திருப்பார்கள். எப்படியிருந்தாலும் நமது நிதி அமைச்சர் அவர்கள் இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி அவர்களிடத்திலிருந்து 60 லட்சம் ரூபாயையும் வாங்கிவிட வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அப்புறமும் பற்றாக்குறை விழுந்து வருவாயை அதிகப்படுத்த வேண்டும் என்கிற நிலைமை ஏற்பட்டால் வரி விதிப்பு பற்றி யோசிக்கலாம். வரி விதிப்பது என்றால் அது சம்பந்தப்பட்டவர்களுக்கு ஓரளவு மனம் கஷ்டத்தான்படுகிறது. பொதுவாகப் பார்க்கும்போது வரி விதிப்பு அவசியம்தான். குறிப்பாக நிலத்தின்மீது வருமான வரி விதிப்பது என்று யோசிக்கிற காலத்தில் ரொம்ப குறைந்த நிலம் வைத்துக்கொண்டிருக்கிற சிறு நிலச்சுவான்தார்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு வரி விதிக்கும்படி ஏற்பாடு செய்யலாம். அப்படி மூவாயிரத்திலிருந்து ஐயாயிரமாகவோ, ஆறாயிரமாகவோ மாற்றி அமைத்தால் சிறு நிலச்சுவான்தார்களுக்கு பாதுகாப்பாக இருக்கும். அது நியாயமாகவும் ஆகும். இதர துறைகளில் இருந்து வரும் வருமானத்தையும் சேர்த்து இந்த வருமானத்தோடு கூட்டி வரி விதிப்பது என்பது சரியான கருத்தல்ல. அதனால் இத்துறையில் ஊக்கம் குன்றி விவசாய உற்பத்தி வெகுவாகப் பாதிக்கும் நிலைமை உண்டாகலாம். இதோடு பலருக்கு மன நோவு வேறு உண்டாகிறது. ஆகவே இது இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து கணக்கிடுவதையும் மாற்றி தனித்தனியாக அந்த அந்த இனங்களுக்கு வரி விதிப்பது என்ற சலுகையையும் காட்டவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் அது நாட்டுக்கு நலம் விளைவிப்பதாக இருக்கும்.



அடுத்தபடியாக நான் மிகவும் முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நான் திருச்சி நகரசபைத் தலைவன். அங்கு இப்போது திடீரென்று ஏற்பட்ட ஒரு நிலைமையின் காரணமாக குடிதண்ணீர் கஷ்டம் மிகவும் அதிகமாக ஏற்பட்டுவிட்டது. அறுபது வருஷத்திற்கு முன்னால் 75,000 ஜனங்களுக்கு குடிதண்ணீர் எப்படி இருந்ததோ அதே நிலைமை இன்றைக்கும் உண்டாக்கப்பட்டு இருந்து வருகிறது. அறுபது வருஷத்திற்கு முன்னால் போடப்பட்ட குழாய்கள் இருபது வருஷங்களுக்குத்தான் சேவை செய்யக்கூடிய சக்தி உடைய குழாய்கள். இன்றைக்கு 60 வருஷம் சேவை செய்தவைகள் ஓட்டை விழுந்து மண் அடைத்துக்கொண்டுவிட்டது. ஏற்கனவே இவை திடீரென்று விழுந்து போகலாம் என எண்ணியே அவைகளைச் செப்பனிட பல திட்டங்களைப் போட்டோம். சர்க்காரிடம் கடன் கேட்டோம். அப்போது சர்க்கார், கொடுக்கமுடியவில்லை என்று சொல்லிவிட்டார்கள். எங்கள் நகரசபை செலவையே கொஞ்சம் வேறு இனங்களில் குறைத்துக்கொண்டு இந்த வருஷத்திய பட்ஜெட்டில் குழாய்களுக்கு ரிப்பேருக்கு இரண்டு லட்சம் ரூபாயும், மெகானிகல் பில்டர்சுக்காக ஐந்து லட்சம் ரூபாயும் ஒதுக்கியிருக்கிறோம். அதற்குள் திடீரென்று குழாய்கள் விழுந்துபோய் விட்டன. ஒரு மணி நேரத்திற்கு ஒரு லட்சத்து எண்பதினாயிரம் காலன் தண்ணீர் இறைத்தவைகள் இன்றைக்கு ஒரு லட்சம் நாற்பது ஆயிரம்கூட எடுப்பதில்லை. நகரப் பகுதிகளில் தண்ணீர் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. தூரத்திலுள்ள இடங்களுக்கு தண்ணீர் போவதில்லை. போகவேண்டுமென்றாலும் வால்வும் அதிகரிக்கவேண்டும். அப்போதுதான் ப்ரஷர் இருக்கும். திடீரென்று எங்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை சர்க்கார் உணர்ந்து ஸ்டேட் ஆப் எமர்ஜன்ஸி என்கிற முறைப்படியாவது உடனடியாக ரெட்டேபிஸ முறை இல்லாது பண உதவி கடனாகவாவது கொடுக்கவேண்டும். நாங்கள் ஒதுக்கியிருக்கும் தொகை போக மேற்கொண்டு பத்து லட்சமாவது வேண்டும். இன்றைக்கு மூன்று லட்சம் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். மேலும் கோடைகாலம் வேறு வருகிறது. ஆற்றுக்கு அடியில் பதினெட்டு அடியின் கீழ் உள்ள குழாய்களை ரிப்பேர் செய்யவேண்டுமாதலால் உடனடியாகக் கொடுத்தால்தான் இந்தக் கோடை காலத்திலேயே அதை ரிப்பேர் செய்துவிடமுடியும். இல்லாவிட்டால் தண்ணீர் வந்துவிடும். அப்புறம் அடுத்த ஆண்டுதான். அதற்குள் ஜனங்களுக்கு ஏற்படும் கஷ்டம் எவ்வளவு என்று சொல்ல முடியாது. ஆற்றுத் தண்ணீரை அப்படியே குடிதண்ணீர் குழாயில் அனுப்பிவிட முடியாது. துரதிருஷ்டவசமாக எங்கள் நகரத்தில் வடபகுதி சாக்கடைத் தண்ணீர் அப்படியே காவேரியாற்றில் போய் விழுகிறது. தெற்கே உய்யக்கொண்டான் ஆற்றில் உள்ள நதியிலோ திருச்சி ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி சாக்கடைத் தண்ணீர் முழுவதும் விழுகிறது. திருச்சி நகரத்திற்குப் பக்கத்திலுள்ள கிராமங்களில் அடிக்கடி காலரா வந்தது. அதன் காரணமாக திருச்சியில் அது பரவாமல் தடுப்பதற்காகவேண்டி மெகானிகல் பில்டர்ஸ் அமைக்கப்பட்டது. அதையும் சீரமைக்கவேண்டிய அவசியம் இருப்பதனால் இன்றைக்கு எங்கள் நகர சபைக்குத் தேவையான பணத்தை உடனடியாக சர்க்கார் கொடுத்து உதவவேண்டும். பப்ளிக் டிபார்ட்மெண்டு சாங்ஷன், டெக்னிகல் சாங்ஷன் என்றெல்லாம் அப்போது எதிர்பார்த்துக் கொண்டிருப்பதற்கில்லை. காலதாமதம் ஏற்படக்கூடாது.

இது உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய விஷயம். அவசரமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். இந்த ஏப்ரல், மே மாதத்திற்குள்ளாகவே காரியங்கள் செய்யப்படவேண்டியிருப்பதனால் சர்க்கார் உடனடியாக செய்து எங்களுக்குத் தேவையான தொகையையும் கொடுக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இது விஷயமாக மேல் அதிகாரிகளிடம் சென்று பேசினேன். மெக்கா 3–50
னிக்கல் பில்ட்டர்ஸ் "பிட்" பண்ண இரண்டு வருட காலமாவது ஆகும் p.m.
என்று சொன்னார்கள். சமீபத்தில் சென்னையில் மெக்கானிக்கல் பில்ட்டர்ஸ் அமைத்திருக்கிறார்கள். அவர்களை அங்கு அனுப்பி வைத்து அதைச் செய்தால் அந்த வேலையைச் சீக்கிரம் முடிக்கலாம். அதை பத்து மாதத்திற்குள் முடிக்கலாம். அதை சீக்கிரம் செய்து கொடுத்தால் திருச்சி நகர மக்களின் அன்பை நீங்கள் பெற முடியும். ஆகவே நான் திரும்பத்

[Dr. E. P. Mathuram] [7th March 1958

திரும்ப பணிவுடன் சொல்லிக்கொள்கிறேன், அதை அவசியம் சீக்கிரம் செய்து கொடுக்கவேண்டும். இன்னும் ஒன்றிரண்டு காரியங்கள் இருக்கின்றன. திருச்சியில் ஒரு ஸ்டேடியம் மிகவும் அவசியம். அங்கு ஐந்து காலேஜ்கள் இருக்கின்றன. அங்கு, பிள்ளைகளுக்கு விளையாட வசதியான இடமில்லை. திருச்சி நகரசபை ஓரளவு உதவி செய்ய முன்வந்தும், அதற்கு சர்க்கார் அனுசரணையாக இல்லாததால், அதற்கு வேண்டிய நிலம் கிடைக்காததால் அது முடியாமல் இருக்கிறது. அதற்கு வேண்டிய உதவி செய்யும்படி நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, திருச்சி நகரத்தைப் பொறுத்தவரையில், எங்கு பார்த்தாலும், வீடுகளின் சுவர்களில் எல்லாம் எழுத்துக்கள். கண்டபடியான அட்வர்டைஸ்மென்ட்ஸ். அதற்கு என்று ஒரு பில் வருகிறது என்று சொன்னார்கள், அது வரக்காணோம். ஆபாசமாக இருக்கிறது. எங்கு பார்த்தாலும் பீடி மயமாயிருக்கிறது. தயவுசெய்து அதற்கு ஒரு சட்டம் கொண்டு வந்து ஊரின் அழகைக் கெடுக்காது இருக்கவேண்டும். திரும்பத் திரும்ப வெள்ளை அடிக்க சந்தர்ப்பம் கொடுக்காத நிலை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, டிரங்க் ரோடுகளில் போகும் லாரிகள். வெளிச்சம் ஒரு பக்கம். **Glaring headlights**களில் இருக்கும் எதிர் வெளிச்சம் ஆதலால் கண் கூச்சத்தினால் மற்ற கார்களுக்குப் பெரிய இடைஞ்சலாக இருக்கிறது, அதனால் ஆக்ஸிடண்ட்ஸ் ஏற்படுகிறது. லாரி டிரைவர்களின் "நெக்லிஜென்ஸினால்" ஆக்ஸிடண்ட்ஸ் ஏற்படுகிறது. ஸ்பீட் லிமிட்டைத் தாண்டி ஓட்டுவதால் ஆக்ஸிடண்ட்ஸ் ஏற்படுகிறது. பின்னால் உள்ள கார்களை கவனிக்காது அதன் ரிப்ளாக்டர்கள். அந்த ரிப்ளாக்டர்கள் மடக்கி வைக்கப்படுகிறது. டெஸ்டின் போதுதான் இது நீட்டப்படும். பின் வரும் கார்களும் தெரியாது. ஹாரன் அடித்தாலும் கேட்காது. லாரிகளோ பழைய லாரிகளாக இருக்கின்றன. ஆகவே, லாரிகளினால் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுவதோடு பொருள் சேதமும் அதிகம். இதையெல்லாம் அந்த இலாக்காக்காரர்கள் கவனிக்க வேண்டும். (பெல்) டிரங்க் ரோடில் 25 மைலிற்கு ஒரு செக்கிங் இருந்தால் நன்றாக இருக்கும். அவைகளையெல்லாம் கவனிக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : ஸ்ரீ டி. பி. ஏழுமலை அவர்கள் ஏழு நிமிஷந்தான் பேசலாம். 4 மணிக்கு மந்திரியவர்கள் பேசப் போகிறார்கள்.

**Sri T. P. ELUMALAI** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள வரவுசெலவுத் திட்டத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டமானது, உண்மையிலேயே ஏழை மக்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்றுவதற்கு உகந்த முறையில் அமைந்திருப்பதை நாம் எல்லோரும் கண்கூடாகப் பார்க்கின்றோம். இருந்தாலும் மாற்றுக் கட்சியில் இருக்கின்றவர்கள் அவர்களின் கட்சி வளர்ச்சிக்காக வேண்டி ஏதாவது சொல்ல வேண்டுமென்ற காரணத்திற்காக இரண்டொரு வார்த்தைகள் குறையாக சொல்வதைத்தான் நாம் பார்க்கிறோம். தவிர, குறிப்பாக, ஹரிஜன மக்களுக்கும், மீனவ மக்களுக்கும் சிறந்த முறையில் பல திட்டங்களைப் போட்டு அவர்களின் வாழ்க்கை நிலையை முன்னணிக்கு கொண்டுவருகிற ஒரு நிலையை நாம் நன்கு பார்த்துவருகிறோம். குறிப்பாக எனது பகுதியில் இருக்கிற மீனவர்களுக்கு ஆயிரம் ஆயிரமாக பணம் ஒதுக்கி அவர்கள் அவர்களது தொழிலை நல்ல முறையில் நடத்துவதற்கு வேண்டி அதற்குரிய சாதனங்கள் பலவற்றை வாங்கிக்கொடுப்பதை பார்க்கிறோம். அது மட்டுமல்ல. ஹரிஜனங்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமானது, என் தொகுதியில் பல பகுதிகளிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் காட்சியை நான் கண்டிருக்கிறேன். நாட்டில் வசதியுள்ளவர்களின்மேல் ஓரளவு வரி போட்டு ஏழை மக்களுக்கு வேண்டியதைச் செய்து கொடுக்கிறார்கள். அந்த நிலையைத்தான் நிதியமைச்சர் அவர்கள் தங்கள் அறிக்கையில் நமக்கு கொடுத்திருக்கிறார்கள். மாலை ஆறு மணிக்குமேல் பொழுதை போக்குகிற ஒரு நிலையில் இருக்கிறவர்களுக்கும் வரி போட்டிருக்



7th March 1958] [Sri T. P. Elumalai]

கிறார்கள். சினிமாவிற்கு வரி போட்டதற்காக நாம் எல்லோரும் நிதியமைச்சர் அவர்களைப் பாராட்ட வேண்டும். பாராட்டும் நிலையையும் நாம் இந்த சபையில் காண்கிறோம். மாற்றுக் கட்சியில் இருக்கிறவர்களில் ஓரளவு சினிமாத் துறையில் பங்கு கொண்டிருக்கிறவர்களும் அதைப் பாராட்டும் நிலையைப் பார்க்கிறோம். அதைப் பார்க்கும் போது சினிமாத் தொழில் முழுவதையும் தேசியமயமாக்கும் ஒரு நிலையைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நிலை ஏற்படுத்த நமது சர்க்கார் வேண்டியது செய்வார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. சர்க்கார் ஒரு வேளை நினைப்பார்கள். அப்படி தேசிய மயமாக்கி விட்டால் கதை எழுதுபவர்கள் இல்லாது போய் விடுவார்களோ என்று கலங்க வேண்டாம். கதை எழுதும் நண்பர்கள் நமது சட்ட சபையில் இருக்கிறார்கள். மதிப்பிற்குரிய அண்ணா அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள், நமக்கு அந்த உதவியைச் செய்வார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் நம்மிடையே இருக்கும்போது (நாம்) ஏன் சினிமாத் தொழிலை தேசியமயமாக்கக்கூடாது. சினிமாவை தேசியமயமாக்க வேண்டும் என்றும் நான் மீண்டும் வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறேன். இதனால் மற்ற இனங்களில் நாம் அதிக வரி போட வேண்டாம். ஆகவே நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல ஆசைப்படுவது என்னவென்றால் சினிமாத் தொழிலை தேசியமயமாக்கிவிட்டால் சினிமாவின் தரம் உயர்வதோடு அதில் இருந்து கிடைக்கும் பணமும் நம் சர்க்காருக்கு வரும். திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் சொல்கிறார்கள், வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று. நான் பேப்பரிலே பார்த்தேன், தெற்குக்கும் ஓரளவு வழி செய்யவேண்டுமென்று வடக்கே இருக்கிறவர்கள் வழி வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். திருவொற்றியூரில் ஒரு சிமெண்ட் பாக்டரி ஆரம்பிக்கப் போவதாக நான் பேப்பரில் பார்த்தேன். அதைப் பார்த்து பெருமகிழ்ச்சி அடைந்தேன். நம் மாகாண சர்க்கார் கேட்டிருப்பார்களா என்று எண்ணுகின்றோம். ஆனால் திருவொற்றியூரில் அது வரும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், எங்கெங்கு தொழிற்சாதனங்கள் இருக்குமோ, அத்தொழிற்சாலை எங்கு ஆரம்பிக்க வேண்டும் என்ற அவசியம் இருக்குமோ அங்கு ஆரம்பிக்கப் படுகின்றது. இந்த அபிவிருத்தி வேலைகளுக்கு முட்டுக்கட்டை போடுகிறவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள்தான் என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக அதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். செங்கல்பட்டு ஜில்லாவில் ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிக்க வேண்டுமென்று ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது இதுவரையில் நடக்கவில்லை. அதற்குக் காரணம், என்னவென்றால் நம்மதிப்பிற்குரிய எதிர்கட்சித் தலைவர் அவர்களுடைய ஆதிக்கத்தால்தான். சோத்துப்பாக்கம் என்ற கிராமத்தில் ஆலைக்கு வேண்டிய சாதனங்கள் இருக்கிறதா என்று ஆராய்ச்சி நடந்தது ஒரு வருடமாக. அந்த ஆலைக்கு மிகவும் அவசியம் தண்ணீர்தான். மேற்படி இடத்தில் 150 அடி வரையில் அங்கு தண்ணீர் இருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்யப்பட்டது. நூற்று ஐம்பது அடிக்கு கீழும் பாறையாகத்தான் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தை கைவிட்டு விட்டு படாலம் என்ற கிராமத்தை எடுத்துக் கொண்டார்கள். அங்கு போதுமான வசதியிருக்கிறது, உடனே ஆரம்பிக்கலாம். ஆனால் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அங்கு வேண்டாமென்று தள்ளி போட்டுக்கொண்டு வருகின்றார். மேலும் வேறு இடத்தில் போட முயற்சியும் செய்கிறார்கள்.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Sir, the whole matter is *sub judice*. They have not yet decided whether it should be located in Chothupakkam or in any other place.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : Has the matter gone to a court of law?

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : No. But the matter is still under consideration.

THE HON. SRI C. SUBRAMANIAM: Then it cannot be said to be *sub judice*?

MR. SPEAKER: The hon. Member may refer to a matter under examination. The only thing is that he cannot refer to a matter which is before a court.

p.m. SRI T. P. ELUMALAI: இந்த சந்தர்ப்பத்தில் பட்டாலம் என்ற கிராமத்தில் ஏற்படுத்துவதற்காக ஆராய்ச்சி நடந்து கொண்டிருந்தது. அங்கு ஏற்படுத்துவதற்கு எவ்வளவோ வசதிகள் இருந்தும் அதை ஆரம்பிப்பதற்கு நமது எதிர் கட்சித் தலைவர் அவர்கள் அனுமதி கொடுக்கவில்லை. ஆராய்ச்சி அரைகுறையாக இருக்கும்போது அதை தண்டலம் என்ற கிராமத்திற்கு இழுத்துக் கொண்டு போய் விட்டார்கள். தண்டலம் என்ற கிராமத்திற்கு தாண்டியே விட்டார். இப்போது அங்கு என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. அதை இன்னும் எப்படி செய்யப்போகிறார்கள் என்று இப்போது சொல்ல முடியாது. அவர் நினைத்திருந்தால் லாயக்கான பட்டாலம் என்ற கிராமத்திலேயே இந்த வருடத்தில் அதை தொடர்ந்து நடத்தியிருக்க முடியும். இதை ஏன் இவ்விதம் செய்கிறார்கள் என்றால், இந்த திட்டத்தை கொண்டு விவசாயிகளுக்கு இந்த சர்க்கார் நன்மை செய்து விட்டால் ஓரளவு தனக்கிருக்கின்ற செல்வாக்கு குறைந்து போய் விடுமே என்றுள்ள அச்சத்தினால்தான் இவற்றை எல்லாம் கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் நடத்துகிறார்கள். இவ்விதம் எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கு எல்லா வசதிகளையும் நமது சர்க்கார் கொடுத்திருக்கிறது. ஆகவே நான் எதிர்க்கட்சிக்காரர்களை கேட்டுக்கொள்கிறேன். நல்ல திட்டங்கள் வரும்போது அதை வரவேற்கக்கூடிய மனப்பான்மை உங்களிடம் வரவேண்டும். அதிலும் முக்கியமாக திராவிட முன்னேற்ற கழக நண்பர்கள் இதற்கு முனைந்து முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம் நாட்டில் ஓரளவு சத்தியத்திற்கும் கடவுளுக்கும் நம்பிக்கை இருந்து வந்ததை நாம் பார்த்தோம். இன்றைக்கு தேசம் பூராவும் பேச்சை நம்பித்தான் இருக்கிறது. சொன்ன வார்த்தைக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். தி. மு. க. நண்பர்கள் ஏழைக்காக பாடுபடுகிறோம்என்று சொல்லுகிறார்கள். ஆனால் இன்றைக்கு அவ்விதம் நடக்கிறார்களா என்பது சந்தேகம்தான். ஆகவே ஏழை மக்களுக்கு செய்யப்படுகின்ற அபிவிருத்தி காரியங்களில் அவர்கள் ஒத்துழைக்க முனைந்து நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏழைகளுக்காக செய்யப்படுகின்ற காரியங்களை பார்த்துப் பணம் படைத்த பணக்காரர்கள் பெருமூச்சு விடுகிறார்கள். அதை மாற்றி ஏழைகள்பால் நின்று ஆதரித்து அவர்களுக்கு நன்மை செய்ய எல்லா கட்சி நண்பர்களும் முன்னுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வரவு செலவு திட்டத்தின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் ஏழு நிமிடம் பேச எனக்கும் வாய்ப்பு தந்ததற்காக என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் சபாநாயகர் அவர்களே, உணவுப் பிரச்னையைப்பற்றி, உணவு உற்பத்தியின் நிலையைப்பற்றியும் இந்த விவாதத்தில் கலந்து கொண்ட சில கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்களுக்கு மட்டும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மேலும் என் சம்பந்தப்பட்ட இலாகாக்கள் விஷயமாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பற்றி நான் இப்போது குறிப்பிடவில்லை. நான் அவைகளைப்பற்றி கவனம் செலுத்தவில்லை என்று கனம் அங்கத்தினர்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது. அவைகளைப்பற்றிய மான்ய விவாதங்கள் வரும்போது எனக்கு பேசுவதற்கு அவகாசம் இருக்கும். அந்த சமயத்தில் அவைகளைப்பற்றி பேசிக்கொள்கிறேன். இந்த சமயத்தில் இந்த மன்றத்தின் காலத்தை வீணாக்க வேண்டாம் என்று கருதி ஒரு சில விஷயங்களை மட்டும் இப்போது சொல்ல விரும்புகிறேன். பல கனம் அங்கத்தினர்கள் நியாய விலை கடைகள் மார்ச் முதல் தேதியிலிருந்து எடுக்கப்படுவதைப்பற்றி குறிப்பிட்டு



பேசினார்கள். அவ்வாறு எடுப்பது தவறு, நியாயவிலை கடைகள் அவசிய
மாக தொடர்ந்து நடைபெற வேண்டும், அது நடைபெறவில்லையென்றால்
ஏழை மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற கருத்தை எல்லாம் வெளி
யிட்டார்கள். ஆனால் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் நியாய
விலை கடைகளை மார்ச் முதல் தேதியிலிருந்து எடுத்து விடுவது என்று
தான் சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. ஆனால் இதைப்பற்றி இம்மாதிரிப்
பட்ட கருத்தை வெளியிடுகின்றேன் என்றால் கனம் அங்கத்தினர்கள்
அதை தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இப்போதுள்ள நிலையில்
நியாயவிலை கடைகளை எடுக்கக்கூடாது என்ற கருத்து இந்த சட்டமன்றத்தில்
தான் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு வெளியே இந்த கருத்தை நான்
கேட்பதில்லை கேட்கவுமில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். நான்
இதற்கு முன்பே தெரிவித்திருக்கிறேன். நியாயவிலை கடைகள் அவசிய
மில்லையென்றால் அதற்காக நியாயவிலை கடைகள் தொடர்ந்து நடை
பெற வேண்டும் என்று கூறுவது சரியல்ல. இந்த ராஜ்யத்திலுள்ள
இரண்டு ஜில்லாக்களில், சேலம் ஒன்று, வடார்க்காடு ஒன்று.
இந்த இரண்டு ஜில்லாக்களிலும் பெரிய ஜீவநதிகள் பாயவில்லை, மழை
யும் இரண்டு ஜில்லாக்களிலும் குறைவாகத்தான் இருந்தது. இருந்தா
லும் இந்த இரண்டு ஜில்லாக்களிலும் இதுவரையில் நியாயவிலை கடைகள்
ஏற்படுத்தவில்லை. அங்கு நியாயவிலை கடைகளை ஏற்படுத்துவதற்கு அங்
குள்ள கலெக்டர் அவர்களுக்கு அதிகாரம் இருந்த போதிலும் அதற்
கேற்ற பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தும் நியாயவிலைக் கடை
கள் இல்லாமலே இதுவரை நடந்து வந்தது. அதிலிருந்து நியாயவிலை
கடைகளுக்கு அவசியம் ஏற்படவில்லை என்பது மாத்திரமல்ல, அவசிய
மிருக்கிறது என்று தெரிவிக்கப்படவுமில்லை என்பதிலிருந்து அங்கு அவசிய
மில்லை என்பது நன்கு புலனாகும். அது மட்டுமல்ல; வேண்டுமென்று
தெரிவிக்காதது கலெக்டர் அவர்களுடைய தவறு என்று வேண்டுமானால்
சொல்லலாம். ஆனால் நான் நேரே போய் பார்த்து விசாரித்து தெரிந்து
கொண்டிருக்கிறேன், நியாயவிலை கடை இல்லாததினால் ஏழைகள் பாதிக்
கப்பட்டதாக தெரியவில்லை. நியாயவிலை கடைகள் தொடர்ந்து இருக்
கின்ற மற்ற ஜில்லாக்களிலும் நான் சுற்றிப்பார்த்து விசாரித்து பார்த்ததில்
இந்த இடங்களில் எல்லாம் நியாயவிலை கடைகள் அவசியம் இல்லை
என்பதுதான். என் அபிப்பிராயம் மாத்திரமல்ல நேரில் போய் பார்த்
தால் அது அவசியமில்லை என்பது புலனாகிறது. நியாயவிலை கடைகள்
இல்லாமல் யாரும் பாதிக்கப்படமாட்டார்கள், விலையும் அனேகமாக
குறைந்துகொண்டே வருகின்றன. அதனால் நியாயவிலை கடைகள் அவ
சியமில்லை என்று தான் எனக்கு புலப்பட்டிருக்கின்றது. சென்னை நக
ரத்தை எடுத்துக்கொண்டால் சென்ற சில மாதங்களாக நியாயவிலை
கடைகளுக்கு அளிக்கப்படுகின்ற அரிசி மத்திய அரசாங்கத்தின் ஸ்டாக்கி
லிருந்துதான் குறைந்த விலைக்கு அளிக்கப்பட்டு வந்தது. அரிசி குறைந்த
விலைக்கு கொடுக்கப்பட்டு வந்தது. சென்னை நகரத்தை பொறுத்த வரை
யில் சில மாதங்களாக நல்ல உயர்ந்த நைஸான அமெரிக்கன் அரிசியை
கொடுத்து வந்தார்கள். அந்த அமெரிக்கன் அரிசிக்கு சாதாரணமாக
நியாயவிலை கடைகளில் அதன் விலையில் உத்தேசம் 10 நயா பைசா
ஒரு மதராஸ் படிக்கு கூடுதலாக இருந்து வந்தது. அதாவது படி
ஒன்றுக்கு 14 அணா ஆகும். இவ்விதம் 14 அணாவுக்கு விற்கப்பட்டு
வந்தது. ஆனால் அதே சமயத்தில் சாதாரண கடைகளிலும் 14 அணா
வுக்கு சாதாரணமான அரிசி கிடைக்கும். ஆகவே நியாயவிலை கடைகள்
இப்போது அவசியமில்லை என்ற கருத்துத்தான் சர்க்காரிடத்தில் இருக்
கின்றது. இதை வைத்துக்கொண்டு தான் சர்க்கார் இதை எடுத்துவிடுவது
என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. எப்போதும் அரிசி கிடைக்க
வில்லையென்றால் அதற்கென்று ஒரு சலுகை கொடுக்க வேண்டியது
தான். ஆனால் இதற்கென்று எப்போதும் கடை வைத்திருக்கவேண்டும்,
இதற்கென்று நிபந்தனை இருக்கவேண்டும், இதற்கென்று ஒரு நிர்ப்பந்தம்
இருக்கவேண்டும் என்று நினைத்தால் அது ஒரு கண்ட்ரோல் முறையை
ஏற்படுத்துவது போல்தான் இருக்கும். ஆனால் கண்ட்ரோல் வேண்டாம்
என்று எல்லோரும் விரும்புகிறார்கள். ஆனால் அவசியப்படுகிற சமயத்தில்
கண்ட்ரோல் முறையையும் கொண்டு வரவேண்டியதுதான். அதற்கு

அரசாங்கம் தயங்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இப்போது அவசியமில்லாத ஒரு நிபந்தனை அல்லது நிர்ப்பந்தமான முறையை ஏற்படுத்தினால் இந்த சலுகையை கொண்டுதான் வாழ வேண்டியிருக்கிறது. அது மாத்திரமல்ல எவ்வளவு தான் கஷ்டப்பட்டு உழைத்தாலும் இந்த மாதிரியுள்ள சலுகையை கொண்டுதான் வாழ வேண்டியிருக்கிறது என்ற ஒரு நிலை இருக்க வேண்டும் என்று யாரும் விரும்ப மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே நியாயவிலை கடைகளை இப்போது எடுப்பது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. நாட்டில் இருக்கின்ற நிலவரத்தை உணர்ந்து தான் அரசாங்கம் இந்த முடிவை எடுத்திருக்கின்றது. எந்த சமயத்தில் நியாயவிலை கடைகள் வேண்டும் என்று தோன்றுகிறதோ, எந்த சமயத்தில் விலை அதிகமாக போகிறது, அதன் மூலம் மக்களுக்கு அரிசி சுலபமாக கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்படுகிறதோ—அந்த நிலை வராது என்று நம்புகிறேன்—அந்த சமயத்தில் அவசியம் ஏற்பட்டால் இந்த மாதிரி நியாயவிலை கடைகளை வைத்துக் கொள்ளுவதற்கு அரசாங்கம் முன்வரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். முன்பு இருந்த நியாயவிலை கடைகளை படிப்படியாக குறைத்து இப்போது சம்பா அறுவடையான பிறகு எடுத்து விட்டால் பாதகமில்லை என்றுள்ள கருத்தில் தான் எல்லா ஜில்லாக்களிலும் இந்த நியாயவிலை கடைகளை எடுத்துவிடுவது என்று முடிவு செய்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் போதிய அளவில் அரிசி கிடைப்பதில்லை என்று சில அங்கத்தினர்கள் கருதுவதாக எனக்குப்பட்டது. அவ்வாறு ஒன்றுமில்லை. விலை அதிகமாக இருந்த போதிலும் அரிசி இல்லை என்ற பற்றாக்குறை ஏற்படவில்லை. அரிசி போதிய அளவு கிடைத்துக் கொண்டிருக்கிறது. அரிசியின் விலை அதிகமாக இருந்தது. குறைந்த விலைக்கு வாங்கக் கூடியவர்களுக்கு இந்த நியாயவிலை கடைகளால் நிவாரணம் ஏற்பட்டிருந்தது. ஆனால் இந்த சமயத்தில் அரிசி இல்லை என்ற நிலைமை ஏற்படவில்லை. ஆனால் சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டிலிருந்து அரிசி கேரள நாட்டுக்கு சென்று விட்டதே அதை நமக்கு தடுக்க முடியவில்லையே என்றும், அதை தடுக்க அரசாங்கம் தவறிவிட்டது என்றுமுள்ள கருத்தில சில அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். சென்னை ராஜ்யத்திலிருந்து அரிசி கேரள ராஜ்யத்திற்குச் சென்றது உண்மை. அதிகம் சென்றிருக்கிறது. போன வருஷத்தில் சென்றதைக் கணக்குப்போட்டுப் பார்த்தால் 2½ லட்சம் டன் சென்றிருக்கிறது. ஆனால் அதற்கு பதிலாக ஆந்திர ராஜ்யத்திலிருந்து நமக்கு வந்தது குறைவுதான். வழக்கமாக வருவது கூட 4-10 p.m. வரவில்லை. குறைவாகத்தான் வந்திருக்கிறது. அதோடு இந்த நியாயவிலை கடைகளிலெல்லாம் விநியோகிக்கப்பட்டதைப் பார்த்தால் இந்த வருஷத்திற்கு ஒரு லட்சம் டன்தான் ஆகிறது. இந்த லட்சம் டன்னும் மத்திய சர்க்கார் ஸ்டாக்கிலிருந்து விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இரண்டரை லட்சம் டன் அரிசியைக் கேரள ராஜ்யத்திற்கு அனுப்பியும் பற்றாக் குறை ஏற்படவில்லை. ஆகவே உற்பத்திப் பெருகிக்கொண்டு வருகிறது. எத்தனையோ இடையூறுகள் இருந்தபோதிலும் உற்பத்திப் பெருகிக் கொண்டுதான் வருகிறது. மற்றொன்று, இங்கு விளையும் அரிசி ஓரளவு பக்கத்தில் இருக்கும் ராஜ்யங்களுக்கு விற்கப்படுவதால் பாதகமில்லை. அதைத்தான் விவரித்துச் சொன்னேன். ஏன் பாதகமில்லையென்று சொல்கிறேனென்றால், நாம் உற்பத்தி செய்கிற அரிசியை விற்றுத்தான் ஆக வேண்டும். நாம் உண்ணவேண்டியதுதான். ஓரளவு உண்ணலாம். அதற்காக அளவுக்கு மீறி உண்ணக்கூடாது.

SRI A. V. P. ASAITHAMBI : கனம் அமைச்சர் அவர்கள் நிறைய அரிசி இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படியிருந்தும் ரயில்வே ஸ்டேஷன்களில் அளவுச் சாப்பாடு போடுகிறார்களே, அப்படிப் போட வேண்டிய அவசியம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹோட்டல் பிரச்னை வேறு. ஹோட்டலில் போடக்கூடிய சாப்பாடு போதாது என்று சொன்னால், அதை நான் கவனிக்கிறேன். (ஒரு குரல் : அதை சென்ட்ரல் கவர்ன்மெண்ட்



செய்ய வேண்டிய விஷயம்) ஸெண்ட்ரல் கவர்ன்மெண்ட் இல்லை. நாமே செய்யலாம். (ஒரு குரல் : ரயில்வே ரெஸ்டாரெண்ட்) ரயில்வேயைக்கூட நான் கவனிக்கக்கூடும். சாப்பாடு போதவில்லை என்று புகார் சொன்னால், அதை நான் கவனிக்கிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : அளவுச் சாப்பாடு 10 அணா, அதற்கு மேல் வேண்டுமானால் 12 அணா என்று வைத்திருக்கிறார்கள்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விலையைப்பற்றியது வேறு விஷயம். அளவு போதவில்லை. நாங்கள் ரயிலில் போகிறோம். எங்களுக்கு இப்போது கொடுப்பது போதவில்லை என்று சொன்னால், அதை கவனிக்கமுடியும். பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் வெறும் அரிசியை மட்டும், அரிசி சாதமாக வயிறு புடைக்கச் சாப்பிடுவது நல்லதல்ல. மற்றவைகளையும் சேர்த்துச் சாப்பிட வேண்டும். வெறும் அரிசியை மட்டும் சாப்பிடக்கூடாது. அதுவும் மில் அரிசியைச் சாப்பிடுவதால் பிரயோசனம் இல்லை. (ஒரு குரல் : நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்) நான் இரவு கோதுமைதான் சாப்பிடுகிறேன். அரிசியோடு கூட காய்கறிகள், கீரைகள், பழங்கள் இவைகளையெல்லாம் சாப்பிடவேண்டும். பழங்கள் என்றால் பணக்காரர்கள்தான் சாப்பிட முடியும் என்ற எண்ணம் கூடாது. நாமே தயாரித்து, நாமே விளைவித்துக்கொள்ள முடியும். உற்பத்தி செய்து கொள்ள முடியும். ஒருவருக்கு அரிசி எவ்வளவு வேண்டுமென்று ஒரு அளவு வைத்திருக்கிறோம். அதாவது ஒரு ஆளுக்கு 16 அவுன்ஸ் அரிசி தேவை என்று கணக்கிட்டிருக்கிறோம். அதற்கு வேண்டிய அளவு உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தி வருகிறோம். அப்படி 16 அவுன்ஸ் என்றால், ஆண்களுக்கும் 16 அவுன்ஸ், பெண்களுக்கும் 16 அவுன்ஸ், பெண்கள் அதிகம் சாப்பிடுகிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது, அவர்களைத்தான் கேட்கவேண்டும். குழந்தைகளுக்கும் 16 அவுன்ஸ் என்று சராசரி 16 அவுன்ஸ் என்று வைத்திருக்கிறோம். குழந்தைகள் குறைவாகத்தான் சாப்பிடுவார்கள். அப்படி 16 அவுன்ஸ் வீதம் வேண்டிய அளவு உணவு உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. உணவுக்காகப் பிறர் யாரையும் எதிர்பார்க்கக்கூடாது, அமெரிக்க அரிசியை எதிர்பார்க்கக்கூடாது, கவலை இல்லாமல் நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை நாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். வேறு நாட்டிலிருந்து அரிசி வருமா, வராதா என்ற கவலை இருக்கக்கூடாது. அது மட்டுமல்ல. நான் முன்பே சொன்னேன். வெறும் அரிசியோடு கூட ஓரளவு கோதுமையையும் சேர்த்துக் கொள்வது நலமென்று சொன்னேன். அப்படிச் சேர்த்துக் கொண்டால் நல்லது என்று சொன்னேன். கோதுமை சத்துள்ளது. சில அங்கத்தினர்கள் தவறான கருத்துக்கொண்டிருக்கலாம், அதாவது கோதுமை வடநாட்டிலிருந்து வருகிறதே என்று. வட நாட்டிலும் பற்றாக்குறை இருக்கிறது. கோதுமை சென்னையில் சுலபமாகக் கிடைக்கிறது. அதோடு இறக்குமதி செய்வது கூட சுலபமாக இருக்கின்றது. விலையும் குறைவு. கோதுமையை விட அரிசியின் விலை 2 அணா கூடுதலாக இருக்கிறது. நான் சமீபத்தில் ஒரு சிறைக்குச் சென்று பார்த்தபோது அங்குள்ள சில அரசியல் கைதிகள் சொன்னார்கள். சிறைகளில் பாதி அரிசியும் பாதி கேழ்வரகும் உணவாகக் கொடுக்கப்படுகிறது. கேழ்வரகு நல்லது என்று கொடுக்கப்படுகிறது. அந்த அரசியல் கைதிகள் சொன்னார்கள் " கேழ்வரகு கொடுக்கிறார்களே, அது இங்கு இருப்பவர்களுக்குப் பிடிக்கவில்லை " என்று. கேழ்வரகு நல்லதுதானே என்று நான் சொன்னேன். அவர்கள் கேழ்வரகு பிடிக்கவில்லை, கோதுமை கொடுங்கள் ஆட்சேபணையில்லை என்று சொன்னார்கள். ஆகவே சிறையில் கூட அரசியல் கைதிகளுக்கும் மற்றவர்களுக்கும் கேழ்வரகு, சோளம் வேண்டாமென்றால் கோதுமை கொடுங்கள் என்று உத்திரவு போட்டிருக்கிறோம். அரிசியை உற்பத்தி செய்கிறோம். நான் இப்போது சொல்ல வந்தது விவசாயம் கட்டுபடியாக வேண்டுமானால், உற்பத்திப் பெருக வேண்டும். உற்பத்தி பெருகினால் அந்த பொருள்களை விற்கவேண்டும். விற்பதற்கு மறுப்பதென்றால், தமிழ் நாட்டு அரிசி தமிழ் நாட்டிலேயே இருக்கவேண்டும். இங்கிருந்து வெளியேயும் போகக்கூடாது, வெளியி

கோளத்திலே விலை ரூ. 19. உத்திரப் பிரதேசத்தில் ரூ. 20. மேற்கு
வங்காளத்தில் ரூ. 24. கனம் அங்கத்தினர் கரையாளர் அவர்கள்,
பொதுவான நிலைமையை ஒட்டி விலை ஏறிக்கொண்டு அதிகமாக இருக்கிறது
என்று சொல்லுவது அவ்வளவு சரியல்ல. இந்த மாதிரி மற்ற இடங்
களில் இருப்பதைப் பார்த்தால் இங்கே விலை கவலை கொடுக்கக் கூடிய
அளவில் இல்லை. இருந்தாலும் விலை குறையவேண்டுமென்பதை ஒப்புக்
கொள்கிறேன். விலையைக் குறைப்பது எவ்வாறு ? மற்ற முயற்சிகளோடு,
உற்பத்தியைப் பெருக்குவதுதான் முக்கியமாக விலையைக் குறைக்கக் கூடியது.
பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் எல்லோருக்கும் கவலை பல
விதத்தில் ஏற்படுகிறது. நேரடியாகவும் மறைமுகமாகவும் தெரிவிக்கிறார்
கள். எந்தவிதமான பாதகம் ஏற்படுமோ, என்ன வரிகொடுக்கவேண்டி
யிருக்குமோ, குத்தகையில் எவ்வளவு பங்கு கொடுக்க வேண்டியிருக்குமோ
என்றெல்லாம் கவலைப்படுகிறார்கள். நிரந்தரமான பரிகாரம் எது
ஏற்பட்டாலும், ஒரு நிவாரணத்தை அளிக்கக்கூடிய பரிகாரம் உற்பத்தியை
பெருக்குவதுதான். உற்பத்தியைப் பெருக்கினால் இதை சமாளிக்கலாம்.
ஆகவே அரசாங்கம் விவசாய நிலைமையிலே கவனம் செலுத்தி உற்
பத்தியைப் பெருக்கி வருகிறது. உற்பத்தி செய்கிறவர்கள் நிலத்தின் சொந்
தக்காரர்களாய் இருந்தாலும் சரி, குத்தகைக்காரர்களாயிருந்தாலும் சரி,
பயிரிடுகிறவர்கள் உற்பத்திப் பெருக்கத்தினால்தான் பலன் அடைகிறார்கள்.
எங்களுக்கு என்ன சலுகைகள் கொடுக்கிறார்கள் என்று எதிர்ப்பது
அவ்வளவு சரியல்ல.

கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் பேசினார்கள்.
கொஞ்ச காலமாக அவர்கள் இந்த நில விஷயத்தில் எல்லாம் அக்கரை
எடுத்துக்கொண்டு, அதைப் பரிசீலனை செய்து பேசுவதைப் பாராட்டுகிறேன்.
விவசாயம் பெருகவேண்டுமானால் பெண்கள் அதிகமாக அக்கரை எடுத்துக்
கொள்ளவேண்டும். நம் நாட்டிலே பெண்கள் முதன்மையிலே நின்று
சிறந்த வகையிலே விவசாயம் செய்கின்ற பண்பு உண்டு. கனம் அங்கத்
தினர் சென்னை நகரைச் சேர்ந்தவராய் இருந்தாலும், கொஞ்சகாலமாக
வெளியூர்களிலே குடிபுகுந்து இன்று விவசாயத்திலே அக்கரை கொண்டு
இருப்பதையும், மகிழ்ச்சியுடன் அவர்கள் பேசியதையும் கேட்டேன். ஜப்
பானிய முறைப்படி சாகுபடி செய்வதற்கு உதவி அளிக்கவேண்டுமென்று
சொன்னார்கள். உதவி அளிக்கவேண்டுமென்று சொன்னால், என்ன உதவி
அளிப்பது ? விவசாய இலாகாவினர் விவசாயிகளுக்கு வழி சொல்லு
கிறார்கள். உற்பத்திப்பெருக்கினால் பலன் அடைகிறவர்கள் உற்பத்தி
செய்கிறவர்கள். உள்ளூர் உரம், ரசாயன உரம், பசுந்தழை உரம்,
குப்பை உரம் எல்லாம் விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு ஓரளவு வசதி
அளிக்கிறோம், சலுகை அளிக்கிறோம், உதவி அளிக்கிறோம்.

இன்னும் பல அங்கத்தினர்கள் நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றிக்
குறிப்பிட்டார்கள். குறிப்பாக, கனம் அங்கத்தினர் வேதரத்னம் பிள்ளை
அவர்கள், தஞ்சை ஜில்லாவில் ஏராளமாக நிலம் இருக்கிறது, அந்த
நிலத்திற்கு தண்ணீர்ப் பாசனம் இருந்தால் இன்னும் அதிகமாக விவ
சாயம் செய்யலாம் என்று சொன்னார்கள். கவனம் செலுத்தப்பட்டுத்
தான் வருகிறது. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதில்
அதிகமாக கவனம் செலுத்தவேண்டியதே. வருகிற ஆண்டிலே அதற்
காக ரூ. 80 லட்சம். எவ்வளவு அதிகமாக ஒதுக்கமுடியுமோ, அவ்வளவு
கிடைக்கும். இதுவரையிலும் எவ்வளவு அளிக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு
மேலும், பிளானிங் கமிஷன் அளித்ததற்கு மேலும் சிறிய பாசனத்
திட்டங்களுக்காக பணம் அளிக்கிறோம். இப்பொழுது பற்றுக்குறை, உணவு
பற்றுக்குறை அல்ல. எஞ்சினியர்கள் பற்றுக்குறைதான். பல எஞ்சினி
யர்களின் மூலமாக சிறிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றி வைக்கப்
பார்க்கிறோம்.

சில அங்கத்தினர்கள் பொதுவாக தங்களுடைய தொகுதியில் நிலம்
தரிசாக கிடப்பதாகவும், தண்ணீர் வசதி செய்து கொடுத்தால், அந்த
நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வந்து உணவு உற்பத்தியைப் பெருக்க
லாம் என்றும் சொன்னார்கள். சிறிய நீர்ப்பாசன திட்டங்களில் நாம்





மிகுந்த கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். ஜமீன் பிரதேசத்தில்
முன்பு கவனிக்காமல் இருந்து வந்த கண்மாய், ஏரிகள், குளங்கள்
எல்லாம் இப்பொழுது பழுது பார்க்கப்பட்டு சரி செய்யப்பட்டு வருகின்றன.
ஸ்ரீ வேதரத்னம பிள்ளை சில நீர்ப்பாசன திட்டங்களைப்பற்றிச் சொன்னார்.
இப்பொழுது 3 திட்டங்கள் உருவாக்கப்பட்டு சீக்கிரமே அவைகள் ஸாங்ஷன்
செய்யக்கூடிய நிலையில் இருக்கின்றன.

1. வளவனூர் திட்டம்.—இதனால் 650 ஏகராவிற்கு நீர்பாசனம் கிடைக்
கும். புது வகையில் நீர்ப்பாசனம் ஏற்படுத்தப்படும். இவ்விடத்தில் நிலம்
இல்லாதவர்களுக்கு நிலம் வழங்கப்படும்.

2. கண்டபரிசனூர் வடிகால் திட்டம்.—இதனால் 2,372 ஏகரா நிலம்
பிரயோசனப்படும்.

3. தென்னூடார் திட்டம்.—இத்திட்டத்தினால் 1,040 ஏகராவுக்கு பாச
னம் கிடைக்கும். இம்மூன்று திட்டங்களும், பரிசீலனை செய்யப்பட்டு சீக்
கிரமே நிறைவேற்றப்படும்.

கன்னியாகுமரி ஜில்லாவைப்பற்றி சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்
கள். சில நாட்களுக்கு முன் நான் கன்னியாகுமரி ஜில்லாவிற்கு சென்
றிருந்தேன். முன்பு புகார் சொன்னவர்கள் கூட இப்பொழுது விவசாய
அபிவிருத்தியைப் பொறுத்தவரை திருப்தி தெரிவித்தார்கள். முன்பு
திருவாங்கூர் ராஜ்யத்தில் இருந்தபொழுது ஏற்பட்ட அபிவிருத்தியை
விட தற்பொழுது அதிக அபிவிருத்தி ஏற்பட்டதாக அங்குள்ள மக்கள்
மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். இன்னும் பல சிறிய நீர்ப்பாசன திட்டங்
கள் ஏற்பட்டால் கனம் அங்கத்தினர்கள் கூட மகிழ்ச்சி அடைவார்கள்
என்பதில் ஐயமில்லை. அந்த வகையிலே நாம் இப்பொழுது தீவிரமாக
கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். இந்த விவசாய அபிவிருத்தி
யைப் பொருத்தமட்டில் மக்கள் வேண்டிய ஒத்துழைப்பை தயங்காமல்
அளித்து வருகிறார்கள். அதே ஒத்துழைப்பும், அக்கரையும், விழிப்பும்
கனம் அங்கத்தினர்கள் காட்டுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

**Sri N. K. PALANISAMI :** ஆன் எ பாயிண்ட் ஆப் எக்ஸ்பிளனே
ஷன். கனம் மந்திரி அவர்கள் மொத்தக் குறியீட்டில் 4 புள்ளிகள்
குறைந்திருப்பதாகச் சொன்னார்கள். 1956-ம் வருஷத்தில் அறுவடை
யானபோது விலைவாசிகள் குறைந்ததா என்பதைப் பார்க்கவேண்டும்.
விலைவாசிகளை கட்டுப்படுத்த சர்க்கார் குறைந்த பட்ச விலை அதிக பட்ச
விலை என்று சொல்லுகிறார்கள். இதற்காகத்தான் 10 ஏக்கர் நஞ்சை
25 ஏகர் புஞ்சைக்கு மேல் இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள்.
உணவுப் பொருளை புரொக்யூர் செய்து வெளி இடங்களுக்கு அனுப்பிய
தால் விலைவாசி உயர்வு ஏற்பட்டது என்று நான் சொல்லவில்லை.

• **Sri S. PAKKIRISAMI PILLAI :** கனம் சபாநாயகர் அவர்களே,
வரவு செலவு திட்ட அறிக்கையை கனம் நிதி மந்திரி அவர்கள் சிறந்த
செந்தமிழில், எல்லோருக்கும் புரியும்படியாக அதை ஆக்கி, இயற்றிய
பிரசங்கம் எல்லோரும் மகிழ்ச்சி அடையும்படியான நிலையிலேயே இருந்தது.
ஆங்கில மொழியைத் தவிர்த்து தமிழ் மொழியை எல்லா இடங்களிலேயும்
உபயோகிக்கும்படியான ஒரு வாய்ப்பு செய்ததற்கு, அந்த மாதிரியான
பணியிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கு நம்முடைய பாராட்டுதல்களைத் தெரி
விக்க கடமைப்பட்டிருக்கிறோம். (இப்பொழுது உதவி சபாநாயகர் தலைமை
வகித்தார்). இம்மாதிரி தமிழ் மொழி துரிதமாக பரவுவதற்கு, எல்லா
அரசாங்க அலுவல்களும் தமிழிலேயே நடப்பதற்கு என்ன வழி இருக்கிறது.
அது சீக்கிரம் பரவுவதற்கு ஆக்கினை மட்டும் போட்டால் போதுமா அல்லது
பயமுறுத்தல் மூலமாகவோ முடியுமா என்பதை எல்லாம் பரிசிலிக்க
வேண்டும். உடனடியாக இதில் ஆர்வம் கொள்ள சர்க்கார் சிப்பந்தி
களிடையே ஊக்கம் பிறக்கும்படியான அளவுக்கு நாம் முதலில் ஏற்பாடு
செய்யவேண்டும். அதற்கு சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்தால் அம்மாதிரி
யான ஒரு உணர்ச்சி ஏற்படும். இம்மாதிரிதான் ஆங்கில ஆட்சியிலும்

லிருந்தும் இங்கே வரக்கூடாது என்று சொல்லி விட்டால்—சென்னை அங்கத்தினர்களுக்குத் தெரியும் இங்கே எந்த அரிசி சாப்பிடுகிறார்கள் என்று. நான் சொல்வதைத் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. சென்னையில் உள்ளவர்களுக்கு நெல்லூர் அரிசிப் பழக்கம். நெல்லூர் அரிசி எங்கிருந்து வருகிறது, அது ஆந்திர நாட்டிலிருந்து வரவேண்டும், இங்கிருந்தும் போகவேண்டாம், அங்கிருந்தும் வரவேண்டாமென்றால் சௌகரியப்படாது. என்னிடம் தஞ்சை ஜில்லா உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்தார்கள். இம்மாதிரி தஞ்சை ஜில்லாவிலிருந்து கேரள நாட்டிற்கு அனுப்பக்கூடாது என்று போட்டு விட்டீர்களே—நான் சொல்வதைத் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது—எங்கள் குறுவை அரிசியை வேறு யாரும் சாப்பிடமாட்டார்களே, கேரள நாட்டில்தானே சாப்பிடுவார்கள், அப்படியானால் எங்கள் குறுவையை என்ன செய்வது, குறுவையை விட்டுவிட்டு வேறு ஏதாவதுதான் பயிரிடவேண்டுமென்று சொன்னார்கள். நான் குறிப்பிடுவதெல்லாம் கூடியவரையில் கட்டுப்பாடு இல்லாமல் போகட்டும், வரட்டும். பிரமாதமான அளவுக்கு வியாபாரிகள் ஸ்பெகுலேட் செய்து வெளி நாட்டுக்கு எடுத்துப் போய் அதனால் பற்றாக்குறையோ, விலை உயர்வோ ஏற்படுமானால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறாது. இவ்வாறு கேரள ராஜ்ய வியாபாரிகள் ஸ்பெகுலேட் செய்து தஞ்சையிலிருந்து வாங்கி ட்ரான்ஸ்போர்ட் செய்வதோடு கேரள அரசாங்கமே ஒரு அதிகாரியைப் போட்டு வாங்க முற்பட்டார்கள். வியாபாரிகள் வாங்குவதை நிறுத்தி விட்டு வாங்கட்டும். ஒன்றரை லட்சம் டன் எடுத்துப் போங்கள், நாங்கள் தயார் என்று சொன்னேன். ஸ்பெகுலேட் செய்து வியாபாரிகள் வாங்குவதும், கேரள அரசாங்கம் ஒரு அதிகாரியைப் போட்டு வாங்குவதும் சரியல்ல என்று மத்திய சர்க்கார் மூலமாக கேரள சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி அதை இப்போது நிறுத்திவிட்டார்கள். மொத்தத்தில் நம் உற்பத்தி பெருகி வருகிறது. 1956–57-ல் 2 லட்சத்து 3 ஆயிரம் டன் வரையில் உற்பத்தி அதிகப்பட்டிருக்கிறது. இந்த 1957–58-ம் ஆண்டுக்கு 3 லட்சத்து 65 ஆயிரம் டன் அதிகம் உற்பத்தி ஆகியிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 7 லட்சத்து 11 ஆயிரம் டன் இன்னும் உற்பத்தியாகுமென்று எதிர்பார்க்கிறோம். மொத்தத்தில் 12 லட்சத்து 82 ஆயிரம் டன் பெருக்குவது என்று போட்டிருக்கிறோம். இப்போது 5 லட்சத்து 68 ஆயிரம் டன் வரையில் உற்பத்தி இந்த ஆண்டிலே பெருகும் என்று எதிர்பார்க்கிறோம். மழை சில இடங்களில் இந்த ஆண்டு குறைவு. வட ஆற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களில் மழை குறைவு. தஞ்சையில் மழை அதிகமாகப் பெய்து பயிர்கள் பாதிக்கப்பட்டது. இம்மாதிரி எதிர்பார்த்த அளவு பெருகாமல் இருக்கலாம். திட்டப்படி உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கிறோம். இந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் எங்கிருந்து சேகரித்தீர்கள், அதெல்லாம் தப்பு, அதில் நம்பிக்கையில்லை என்று சொல்லலாம். அப்படிச் சொன்னால் அதை மறுக்க முடியாது. நாங்கள் சொல்வது சரி, நம்புங்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் ஒன்று குறிப்பிடுகிறேன். இரண்டரை லட்சம் டன் கேரளாவிற்குப் போயிருக்கிறது. ஆந்திராவிலிருந்து அதிகம் வரவில்லை. கன்னியாகுமரியிலிருந்து கேரளாவிற்கு 18,000 டன் போயிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் பெருமைப்பட்டுக் கொள்வார்கள். ஏனென்றால் எப்போதும் கேரளா, கேரளா என்று பேசுபவர்கள் அவர்கள். பதினெட்டாயிரம் டன் போயிருக்கிறது. அங்கு நன்றாக விளைந்திருக்கிறது. இப்படியிருந்தும் இங்கு ஒன்றும் குறைவில்லை. கன்னியாகுமரியில் குறைவில்லை, திருநெல்வேலியில் குறைவில்லை, தமிழ் நாட்டில் குறைவில்லை. இப்படி அரிசி அதிகம் போயும் பற்றாக்குறை ஏற்படவில்லை என்றால், அது உற்பத்திப் பெருகி வருகிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. இப்பொழுது விலைவாசியைப் பற்றிச் சொன்னார்கள்.
4-20 p.m. இன்னொரு விஷயத்தைப்பற்றியும் கனம் அங்கத்தினர் கரையாளர் அவர்கள் பொதுவாகச் சொன்னார்கள். அதாவது உணவுதான்ய விசாரணைக் கமிட்டி சில இடங்களிலே பதுக்கல் இருப்பதாகச் சொல்லியிருக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில், பதுக்கல் அதிகமாக இல்லை. பொதுவாகச் சில இடங்களில் இருக்கலாம்.



அவர்கள் எல்லா ராஜ்யங்களையும் பார்வையிட்டுச் சொன்னது. இந்த ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் அப்படி ஒன்றும் பதுக்கல் இல்லை விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது என்று சொன்னார்கள். இப்பொழுது கொஞ்சம் விலைச்சரிவு ஏற்பட்டிருக்கிறது. விலை குறைந்துகொண்டு வருகிறது. இது சமீபத்திலே எங்களுக்கு வந்த ரிப்போர்ட்டின்படி. இதற்கென்று நிபுணர்கள், நிர்வாகிகள், மற்றவர்கள் கொண்ட ஒரு சிறிய கமிட்டி இருக்கிறது. இந்த விலைவாசி எப்படியிருக்கிறது என்பதைப்பற்றி வாராவாரம் நாங்கள் கவனித்துக்கொண்டுதான் வருகிறோம். புள்ளி விவரங்கள் தரப்படுகின்றன. இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அந்த முறை தொடங்கப்பட்டது. அப்பொழுது விலை குறைந்து போயிற்று. இந்த மன்றத்திலேகூட அதைப்பற்றி எதிர்க் கட்சியிலுள்ள பல அங்கத்தினர்கள் கவலை தெரிவித்தார்கள். அப்போதிருந்தே இந்தக் கமிட்டி கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது. முன்பு அறிவிக்கப்பட்ட புள்ளிவிவரங்களிலிருந்து 4 பாயிண்டு சரிவு ஏற்பட்டிருக்கிறதென்று நேற்றைய அறிக்கையில் எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. விலை அதிகமாக இருந்தது. இப்பொழுது கொஞ்சம் குறைந்து கொண்டு வருகிறது. போதிய அளவு விலை குறைந்துவிட்டதாகக் கூறவில்லை. நாங்கள் அதைப் பற்றித் திருப்திபடவில்லை. இன்னும் விலை குறைய வேண்டும் என்பது தான் எங்களுடைய முயற்சி.

ஆனால் இங்கே பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீ பழனிசாமி அவர்கள் ஒரு தொடர்ந்த வாக்கியத்திலே, விலை அதிகமாக இருக்கிறது, அரிசி எங்கேயோ போகிறது என்று சொன்னார்கள். அதே சமயத்தில் விலை குறைகிறது, விலைக் குறைவைத்தடுக்க முயற்சி எடுக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். அளவுக்கு மேல் விலை குறைந்தால் விவசாயிகளுக்குக் கட்டாது. இது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. எப்பொழுது அந்த நிலைமை ஏற்படுகிறதோ, அப்பொழுது அரசாங்கமே வேண்டுமானால் அரிசியை நியாயமான விலைக்கு வாங்கி, விலைச் சரிவை ஒட்டி விவசாயிகள் பாதிக்கப்படுவதைத் தடுக்கும். அந்த நிலைமை இப்பொழுது ஏற்படவில்லை. விலை அதிகமாக ஏறுவதும், அதிகமாகக் கீழே போவதும் எப்படி ஒரே சமயத்தில் நடக்கமுடியும்? விலை உயர்வை எப்படித் தடுப்பது, குறைந்தால் எவ்வளவு குறைந்து வருகிறது, எவ்வளவு குறையவேண்டும் என்பதில் கவனம் செலுத்தி வருகிறோம். இரண்டையும் சேர்த்துச் சொல்வதில் பயன் இல்லை.

கும்பகோணத்தில் இரண்டாவது ஸார்ட் அரிசி விலையைப் பற்றிச் சில புள்ளி விவரங்கள் தருகிறேன். 1952-ல் விலை கண்ட்ரோல் இருந்தது. அப்பொழுது விலை ரூ. 13·85. பிறகு விலை கண்ட்ரோல் போய்விட்டது. 1953-ல் ரூ. 22-லிருந்து 24·50 வரையில் விலை இருந்தது. 1954-லிலே ரூ. 16-லிருந்து 20·5 வரையில் விலை இருந்தது. 1955-லே ரூ. 13·75 லிருந்து 17·75 வரை விலையிருந்தது. அப்பொழுதுதான் விலை கொஞ்சம் குறைந்தது. அப்பொழுது கவலை ஏற்பட்டது. ஏற்றுமதி செய்வதற்குக்கூட ஏற்பாடு செய்தோம். விலை குறைந்துகொண்டே போகிறதே என்று கவலைப்பட்டார்கள். 1956-ல் ரூ. 14·69-லிருந்து 20·83 வரை உயர்ந்திருக்கிறது. இதெல்லாம் சராசரி ஒரு மணங்கின் விலை. 1957-ல் 17·50 முதல் 19·83 வரையிருந்தது. 1958-ல் ஜனவரி பிப்ரவரியில் 17·19-லிருந்து 18·75 வரையில் இருந்தது. 1953-லிருந்து சராசரி விலையைக் கணக்கிட்டுப் பார்த்தால் ரூ. 18·42 ஆகிறது. இந்த விலை இன்னும் குறையவேண்டும். விலை ஏறிக்கொண்டு போகிறது என்று சொல்லுவதற்கு இடமில்லை. விலை குறைந்துகொண்டுதான் வருகிறது. ஓரளவுக்குக் கீழே குறைந்தால் விவசாயிகள் பாதுகாக்கப்படவேண்டும். இப்பொழுதே உற்பத்தி செய்கிறவர்கள் கவலைப்படுகிறார்கள். இன்றைய நிலையிலே சென்னையிலே இருக்கிற விலைவாசியை எடுத்துக் கொள்வோம். மற்ற ராஜ்யங்களின் விலைவாசியையும் எடுத்துக்கொள்வோம். அதைப்பற்றித்தான் அதிகமாக அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைய நிலையிலே நம் ராஜ்யத்தில் கும்பகோணம் விலையை எடுத்துக் கொண்டால், மணங்கு ரூ. 18·29 விலை ஆகிறது. பீகாரில் இன்றைய விலை ரூ. 22·25. பம்பாயில் ரூ. 22.

கூட கூடுதலான சம்பளத்தைக் கொடுத்து ஊக்கத்தை உண்டு பண்ணி ஞர்கள். அம்மாதிரி செய்தால் அலுவலகங்களில் வேலை செய்பவர்களும் தயாராக இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். நமக்குத் தெரியும். ஷார்ட்ஹாண்ட் அலவன்ஸ் இப்பொழுது கூட அதற்காக தற்பொழுது 25 ரூபாய் கொடுக்கப்படுகிறது. தொகையோ அல்லது அதற்கு மேற்பட்டோ நாம் கொடுக்கப்படுகிறது. அதே தமிழ் ஊக்கம் பரவுவதற்கும், சுறுசுறுப்பாக நமது கொடுத்தோமானல் அக்கரை காட்டுவதற்கும் வழி ஏற்படும். சிப்பந்திகள் இதில் மேற்கொண்டு பரிசீலித்து நடத்த வேண்டும் ஆகையால் இதை அரசாங்கம் நான் கேடடுக்கொள்கிறேன். வரிச்சுமை என்று சம்மந்தப்பட்டவர்களை அளவுக்கு எல்லா ஏழைகள் மேல் ஏற்கனவே பொறுக்க முடியாத நமக்குத் தெரியும். இருந்து கொண்டிருக்கிறது என்பது தலை மேல் தான் எந்த வரி போட்டாலும் கடைசியில் ஏழைகள் பணக்காரர்கள் எப்படியாவது அந்த வரியைத் தாங்கும்படியான நிலை இருக்கிறது. ளாமல் பார்த்துக்கொண்டு அவர்களுடைய வருவாயைகுறைத்துக்கொள் கஷ்டங்களுக்கும் உள்ளாகிருர்கள். விடுகிருர்கள். ஏழைகள்தான் பலவிதமான தாயத்திற்கான ஆட்சி என்று ஆகையால்தான் முதலாளித்துவ சமு சொல்லத் தோன்றுகிறது.

இப்பொழுது தமாஷா வரி போடப்பட்டிருக்கிறது. சினிமாவுக்கு ஏழை கள்தான் அதிகமாகப் போகிருர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த தமாஷா வரியை முதலிலேயே போட்டிருந்தால் யாரும் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள். அதைப்பற்றி பொழுதுதான் கொஞ்சம் முன்னேறியிருக்கிருர்கள். ஏழைகள் இப் மாக நாகரீகம் வளர வளர, சினிமாவுக்குப் போக கொஞ்சம் கொஞ்ச கள். இந்த ஏழை மக்களிடத்திலிருந்து ஆரம்பித்திருக்கிருர் என்ற எண்ணத்திலேயே இப்பொழுது பணம் வசூல் செய்யலாம் பட்டிருக்கிறது. பணம் பெறுவதற்கு இந்த சினிமா வரி போடப் களின் கஷ்டத்தைப் போக்குவதற்கு என்ற குறிக்கோளே தவிர, ஏழை காணேம். எந்த விதமான திட்டத்தையும்

இதே மாதிரிதான் இப்பொழுது விவசாய வருமான வரி போட்டிருக் கிருர்கள். மூவாயிரம் ரூபாய்க்கு மேல் விவசாய வருமான வரி போட வேண்டும் என்று அதற்காக பிரசாரமும் செய்து கொண்டிருக்கிருர்கள். அதே சமயத்தில் ஏழை விவசாயிகளின் கஷ்டங்களைக் குறைப்பதற்கு
4-40 p.m. எந்தவிதமான திட்டமும் கொண்டுவரப்படவில்லை.

சாதாரணமாக எல்லோருக்கும் தெரியும், அரசாங்கம் புள்ளிக்கணக்கு எடுத்திருக்கிருர்கள், 6¼ ஏக்கருக்குக் குறைவாக வைத்திருக்கிற விவசாயி கள் தங்களுடைய வாழ்க்கையை சரிக்கட்டுவதற்கு முடியாமல் இருக் கிருர்கள். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் போதாமல் இருக் கிறது. அவர்கள் இப்பொழுது கொடுத்து வரக்கூடிய வரிக்கு மேல் அவர்களால் கொடுக்க முடியாது. ஆகவே 6¼ ஏக்கர் வரையில் நிலம் வைத்திருக்கக்கூடிய எந்த விவசாயிக்கும் எந்த விதத்திலும் வரி இருக்கக் கூடாது, அவர்களுக்கு எந்தவிதமான வரியிலிருந்தும் விலக்கு கொடுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிருர்கள். அம்மாதிரியான ஓர் திட் டத்தை இந்த அரசாங்கம் ஏன் கொண்டுவரவில்லை என்பது என்னுடைய கேள்வி. ஆகவே விவசாயிகளுக்கு வருமான வரி போடும்போது அதே சமயத்தில் சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு வரி விதி விலக்கு கொடுக்க ஏற்பாடு செய்திருந்தால் உண்மையிலேயே ஒரு பெரிய சமுதாய பொரு ளாதார சீர்திருத்தம் செய்ததாக இருந்திருக்கும்.

நாட்டில் இருக்கக்கூடிய மக்களுக்கும் நகரத்தில் இருக்கக்கூடிய மக் களுக்கும் பெருத்த வித்தியாசம் இருக்கிறது. அந்த வித்தியாசம் வரு மான வித்தியாசமாக இருக்குமேயானல் அதைப் போக்கவேண்டும். அதற்கு கிராமங்களில் இருக்கும்படியான, கிராமங்களில் விளையும்படியான, கிராமங்களில் உற்பத்தியாகும்படியான, அந்த விளை பொருள்களையோ அல்லது சாமான்களையோ அவைகளின் கொள்முதல் தரத்தை உயர்த்தி விலையை அதிகமாக்கப்பட வேண்டும். கிராமங்களில் உற்பத்தியாகும் பொருள்களை நடுவே இருக்கக்கூடிய கிராமங்களில் தரகர்கள் ஏமாற்றி



சாண்டி வாங்கிக் கொண்டு வந்து நகரங்களில் அதிகப்படியான விலைக்கு விற்று கொழுத்த லாபமடைந்து வருகிருர்கள். அந்த மாதிரியான நிலை மையைத் தவிர்க்க வேண்டும். கிராமங்களில் அதிகப்படியான விலைக்கு வாங்கி நகரங்களில் எவ்வளவு விலைக்கு விற்கப்படுகிறதோ அந்த விலைக்கு கொஞ்சம் போக்குவரத்துச் செலவுக்கான செலவை மாத்திரம் குறைத்துக்கொண்டு இங்கு குறைவான விலைக்கு விற்றுவந்தால் கிராமத்தில் உற்பத்தி செய்யக் கூடியவர்களுக்கு வருமானம் அதிகமாக கிடைப்பதோடு நகரங்களில் வாழக் கூடிய மக்களுக்கும் குறைவான விலைக்குக் கிடைக்கும். அப்படி குறைவான விலைக்கு இங்கே விற்பதற்கு ஏற்பாடு செய்தால் கிராமங்களிலுள்ளவர் களுடைய நிலையை மேலே தூக்கி வைப்பதற்கும், அவர்களுடைய வாழ்க் கைத்தரத்தை உயர்த்துவதற்கும் ஒரு வழி செய்வதாக ஆகும். இம் மாதிரியான ஒரு கட்டுப்பாடான திட்டத்தை ஏற்படுத்தினல்தான் கிராமங் களுக்கும் நகரங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் போக்குவதற்கு இடம் ஏற்படும். அதைப் போக்காவிட்டால் இந்த வேலையில்லா திண்டாட்டம் பெருகிக்கொண்டுதானிருக்கும். அதனல்தான் கிராமத்திலுள்ள மக்கள் நகரங்களுக்கு வந்து பல வேலைகளில் ஈடுபட்டு வருகிருர்கள். அதன் மூலம் பல கஷ்டங்களுக்கு உள்ளாகிருர்கள். அப்படி பல கஷ்டங்களுக்கு மத்தி யில் பாடுபட்டு சம்பாதிக்கும்படியான நிலைமையில் கிராம ஏழைகள் இருப் பதை நாம் பார்க்கிறேம். அதனல் கிராமங்களிலுள்ள மக்களின் வாழ்க் கைத்தரம் உயருவதற்கு வழிவகை செய்தாக வேண்டும். அதைச் செய் வதற்கு என்ன திட்டம் இருக்கிறது என்று கேட்டால் ஒன்றும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நம் எல்லோருக்கும் தெரியும் நகரங் களில் இருக்கக்கூடிய சாதாரண தொழிலாளியும், சிப்பந்தியும் ரூ. 100-க் குக் குறைவாக சம்பாதிக்கும்படியான நிலையில் இருக்கிருர்கள். அப்படி ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிருர்கள். அப்படிப்பட்டவர்களிடமிருந்தும் குறைந்த பட்சம் 20 அல்லது 25 சத விகிதம் பெருவாரியாக ரூபாய் வரியாக வசூலிக்கப்படுகிறது. அதனல் 100 ரூபாய் அதற்குக் குறைந்த அளவில் சம்பாதிக்கக்கூடியவர்களும் கடனாளிகளாக இல்லாமல் இருக்க முடியாது. அப்படி ஒவ்வொருவரும் கடன்பட்டு, பல தொல்லைகளுக் குள்ளாகி கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறேம். அந்தக் கஷ் டங்களிலிருந்து நிவர்த்தி அடைவதற்காகத்தான் அவர்கள் தொழிலாளர் களாக இருந்தால் தங்களுக்கு போனஸ் வேண்டும் என்றும் மற்றவர் களாக இருந்தால் தங்களுக்கு வருமானம் உயர்த்திக் கொடுக்க வழி வேண்டும் என்றும் கேட்கிருர்கள். அப்படி அவர்கள் கேட்டாலும்கூட இப்பொழுதுள்ள சட்டங்கள் அவர்களுக்குக் குறுக்கே நிற்கிறது. நியாய மாகவும் சட்ட ரீதியாகவும் அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய முடியாமல் இருக்கிருர்கள். அப்படிப்பட்ட சட்டங்களையும் அரசாங்கம் அவர்களுக்குப் போட்டிருக்கிருர்கள். இப்படிப்பட்ட சட்டங்கள் இருப்பதால்தான் அவர்கள் எந்த விதமான முயற்சிகள் எடுத்துக்கொண்டாலும் அவர்களால் வெற்றி யடைய முடியவில்லை. வெற்றி பெறவும் முடியாது. பெருத்த முத லாளிகளும் தொழிலாளர்கள் பக்கம் இல்லாமல் இருக்கிருர்கள். அர சாங்கத்தின் பாதுகாப்பின் கீழ் பின்னல் முதலாளிகள் இருக்கிருர்கள். சட்ட நுணுக்க கோரிக்கைகளை அவர்கள் அறிந்து கொண்டிருப்பதால்தான் தொழிலாளர்கள் அதிகப்படியான சம்பளமோ அல்லது போனஸோ கேட் டாலும் கூட ஒரு நயா பைசாவோ அல்லது ஒரு தம்படியோ அவர்களுக்கு அதிகமாகக் கொடுக்க முற்படுவது இல்லை, அவர்கள் சண்டை போட்டு கன்சிலியேஷன் கோர்ட்டுகள் மூலமாக வாங்குவதாக இருந்தாலும் அது வும் அவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. அப்படி வாங்குவதும் துர்லபம் என்பது அவர்களுக்கு நன்ருகத் தெரியும். இந்த அரசாங்கத்தின் வழி யாக தங்களுக்கு ஒரு நன்மையும் கிடைக்காது என்று அவர்களுக்கு நன்ருகத் தெரிந்திருக்கிறது. தங்களுக்கு அரசாங்கத்தினுடைய ஆதரவும் கிடைக்காது என்பது நன்ருகத் தெரியும். ஏனென்ருல் அரசாங்கத்தை நடத்துகிறவர்கள் முதலாளித்துவ மனப்பான்மையில் இருக்கிருர்கள். அடித்தளத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு அரசாங்கத்தினிடமிருந்து எந்த விதமான வசதியும் கிடைக்காது என்று அவர்கள் தெரிந்து கொண் டிருக்கிருர்கள். இப்படிப்பட்டவர்கள் ஆட்சியில் இருக்கும்வரையில் நமக்கு

[Sri S. Pakkirisami Pillai] [7th March 1958

பயம் கிடையாது என்று முதலாளிகள் எல்லோருக்கும் நன்ருகத் தெரியும்.
சாதாரணமாக முதலாளிகள் எந்த விதத்திலும் இதன் காரணமாக
தொழிலாளர்களுக்கு விட்டுக்கொடுப்பது என்பது கிடையாது. எந்தவித
மான போராட்டத்தை தொழிலாளர்கள் நடத்திஞலும் அந்தப் போராட்
டத்தை எதிர்க்கும் மனப்பான்மையில் இருப்பார்களே தவிர நியாய வழிக்கு
இணங்கி வருவது கிடையாது. கோர்ட்டுக்குப் போனலும் அங்குள்ள அதி
காரிகளும் பழைய மனப்பான்மையிலேயே இருப்பதனல் அங்கேயும் தங்
களுக்கு சாதகமாக நியாயவழியில் இருக்க மாட்டார்கள் என்பதும் தொழி
லாளர்களுக்குத் தெரியும். அந்த மனப்பான்மையில் கோர்ட்டார்களும்
இருப்பதால் தான் தொழிலாளர்களுக்கு கோர்ட்டுக்குப் போனலும் அவர்
களுக்கு சம்பளமும் போனஸும் கூடிய விஷயங்களில் நியாயம் கிடைப்ப
தில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நமக்கு எல்லோருக்கும் தெரியும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு
வித வரும்படி இருக்கிறது என்பது. மந்திரிகளுக்கு எவ்வளவு சம்பளம்
கொடுக்க வேண்டும் என்பதும், சிப்பந்திகளுக்கு எவ்வளவு சம்பளம்
கொடுக்க வேண்டும் என்பதும், இப்படி ஒவ்வொருவருக்கும் எவ்வளவு
சம்பளம் பெறவேண்டும் என்றும் வரையறுத்து வைக்கப்பட்டிருக்கிறது.
அதைப்போலவே தொழிலாளர்களுக்கும் அப்படி வரையறுத்து வைக்
கப்பட்டிருக்கிறது. ஆனல் முதலாளிகளுக்கு அப்படி வரையறுக்கப்பட
வில்லை. அவர்களுக்கு சம்பளம் கிடையாது. அவர்களுடைய வரும்படியை
நிர்ணயம் செய்யவில்லை. ஏஜென்சி கமிஷனில் கொள்ளை அடித்துக்
கொண்டுதான் இருக்கிருர்கள். அதைக் கட்டுப்படுத்த எந்த விதமான
திட்டமும் கிடையாது. தொழிலாளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் அதை காண
பித்து அதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று சொன்னல் யாரும்
அதற்கு அரசாங்க அதிகாரிகள் கூட இருந்து உதவி செய்வதற்கும்
முன்வர முடியவில்லை. இப்பொழுது ஏஜென்சி கமிஷனர்களும், மானே
ஜிங் டைரெக்டர்களும், மற்றும் பெரிய டைரெக்டர்களும் பணக்காரர்
களாகிக்கொண்டு வருகிருர்கள். லட்சாதிபதியாகவும் கோடீஸ்வரர்
களாகவும் ஆகிக்கொண்டு வருகிருர்கள். ஆனல் ஏழை தொழிலாளி
ஏழையாகிக் கொண்டுதான் வருகிருன். கனம் கரையாளர் சொன்ன
மாதிரி இதை அரசாங்கம் கட்டுப்படுத்தமாட்டோம் என்று சொல்லு
கிருர்கள். இவர்களைக் கட்டுப்படுத்துவதற்கும் ஒரு அனுகூலமாக உதவி
செய்வதற்கும் தயாராக இல்லை. இந்த நிலைமையில் ஏழைதொழிலாளர்
கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள். ஏழைகள் மத்தியில் இருந்து
கொண்டு அவர்களுடைய நிலைமையைப் பார்த்தால், அவர்களுடைய கஷ்
டங்கள் நன்ருகத் தெரியவரும். அவர்களுடைய நிலைமையை பார்த்து
வருகிறவர்களுக்குத்தான் அவர்களுடைய கஷ்டங்களைத் தெரிந்து கொள்ள
லாம். நண்பர் கனம் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்களுக்கு முற்
போக்கு எண்ணம் இருக்கிறது. நல்ல வழியில் தொழிலாளர்கள் முன்
னேற்றம் அடைய வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்தாலும்
கூட முதலாளிகளுடைய அமைப்பை அவரால் மாற்ற முடியவில்லை. அது
எல்லோருக்கும் நன்ருகத்தெரியும். அம்மாதிரியான நிலைமையில்தான்
மற்றவர்களும் இருக்கிருர்கள். தேர்தல் காலங்களில் முதலாளிகளிட
மிருந்து அரசாங்க அதிகாரத்தில் இருக்கிற கட்சியாளர்கள் பணம் வாங்கிய
தன் காரணத்தால்தான் அவர்களுடைய அமைப்பை மாற்றிஅமைக்கப்
முடியவில்லை. பெரிய பெரிய முதலாளிகளிடமிருந்து காங்கிரஸ் கட்சிக்
காரர்கள் தேர்தல் காலத்தில் பணம் வாங்கியதால்தான் முதலாளிகளுக்கு
இப்படிப்பட்ட தைரியம் ஏற்பட்டிருக்கிறது. நாம் சமீபத்தில் பார்த்தோம்
எச். டி. முந்த்ரா ஊழல் விஷயத்தில் நமக்கு எவ்வளவோ தெரிந்திருக்
கிறது. அதைப்பற்றி இறந்த வெளியில் எவ்வளவோ சொல்லியிருக்கிருர்
4-50 p.m. கள். இதை நாம் பார்த்திருக்கிரேம். முந்திரா விஷயத்தில் திறந்த
வெளியிலே சொல்லியிருக்கிருர்கள். அதே மாதிரி நம்முடைய தமிழ்
நாட்டிலேயே இப்படி பல வழிகளிலே பணக்காரர்களுடைய தயவின்
பேரிலே, அவர்களுடைய ஆக்கினையின் கீழே ஆட்சி இருந்துகொண்டிருக்
கிறது. இவர்கள் மூலமாக ஏழைத் தொழிலாளர்களுக்கு ஏதாவது
[illegible] கிடைக்குமா என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது.



7th March 1958] [Sri S. Pakkirisami Pillai]

மற்ற விஷயங்களிலேயும் தொழிலாளர்களை எப்படி நினைத்துக்கொண்டு
இருக்கிருர்களோ அதே மனப்பான்மையில்தான் அவர்களுக்காக வேலை
செய்யும் லேபர் டிபார்ட்மெண்ட் சிப்பந்திகள் அலுவலகத்திலேயிருக்கும்
அரசாங்கம் நடத்திக்கொண்டிருக்கிறது. லேபர் ஆபீசரோ கன்ஸிலியேஷன்
ஆபீசரோ லேபர் கமிஷனர் ஆபீசரோ எங்கேயிருந்தாலும் அந்த இடங்
களிலே போய் தங்குவதற்கு போதுமான வசதி இல்லை. அங்கே வேலை
செய்யும் சிப்பந்திகளுக்குப் போதுமான வசதி இன்னும் ஏற்படுத்தி
வைக்கவில்லை. மற்ற இடங்களிலேயிருக்கும் சௌகரியங்கள் லேபர் டிபார்ட்
மெண்ட் அலுவலகங்களிலே ஏற்படுத்தி வைக்கப்படவில்லையென்பது தான்
எனது குறை. அந்தக் குறையை எப்பொழுது அரசாங்கத்தார் நிவர்த்திப்
பார்கள் என்று நான் சொல்வதற்கில்லை.

இன்னென்று நான் குறிப்பிட விரும்புகிறேன். சென்னையிலே குடி
சைப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று மதராஸ் ஸிட்டி
ஸ்லம் இம்புருவ்மெண்ட் சட்டம் என்பதை கொண்டுவந்தார்கள். ஆனல்
அதன் கீழ் இதுவரை ஒரு குடிசைப் பிராந்தியத்தையாவது ஆர்ஜிதம்
செய்து அதை அபிவிருத்தி செய்ததாக காணவே காணேம். சென்னை
யில் ஆறு குடிசைப் பிரதேசங்களை இந்த வருஷத்திலே எடுத்துக்கொள்
வோம் என்று சொன்னர்கள். இதுவரையில் எந்த அபிவிருத்தியும்
காணேம். ஆனல் சில குடிசைப் பிரதேசங்களிலே ஹரிஜனங்கள் அல்லாத
இதர ஜாதி இந்துக்கள் கூட மிக ஏழ்மையான நிலைமையிலே இருக்கிருர்
கள். அவர்கள் தங்களுடைய பணத்தை ஒரு கூட்டுறவு நாணய சங்கத்
தின் மூலமாகவோ அல்லது வேறு வழியாகவோ போட்டு தாங்கள்
வசிக்கும் இடத்தை வாங்குவதற்கு உதவி செய்யுங்கள் என்று கேட்டாலும்
அதற்கும் இந்த அரசாங்கத்தார் முன் வரவில்லை. இதைப்பற்றி அடிக்கடி
நான் இங்கே சொல்வதோடு கூட அரசாங்கத்திற்கும் எழுதியிருக்கிறேன்.
ஆனல் இதுவரை அரசாங்கம் கவனம் செலுத்தினபாடில்லை யென்பது
என்னுடைய குறை.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டிலே, முக்கிய
மாக நகரத்திலே எங்கிருந்தோ சில போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்கள்
சில ஸ்டேஷன்களிலே சமீப காலத்தில் போடப்பட்டிருக்கிருர்கள். இவர்கள்
மூலமாக பல பயங்கரமான செயல்கள் நாட்டிலேயும், நகரத்திலேயும்
நடந்துகொண்டிருப்பதை நாம் பார்க்கிரேம். எனக்குத் தெரியும். பிரிட்
டிஷ் ஆட்சியிலே எப்படி சித்திரவதைகள் செய்யப்பட்டனவோ, நம்மவர்கள்
காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டபோது எவ்வளவு அவமானத்திற்கும்
சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டனரோ, அந்த அனுபவத்தையெல்லாம்
நாம் எப்படி தெரிந்துகொண்டு இருக்கிரேமோ அதை இப்பொழுதும்
நம் ஏழை வாலிபர்கள், வேலையில்லாத வாலிபர்கள் அனுபவிக்க வேண்
டிய நிலைமையில் இருப்பதைப் பார்க்கிரேம். ஏழைகள் தங்களுடைய
சட்டப் பிரயோகத்திற்கு இலக்காக வைத்துக் கொண்டு, அவர்களை கூட்டிக்
கொண்டு போய், வெவ்வேறு வழிகளிலே கேஸ் ஜோடனை செய்வதற்கு
பயன்படுத்திக் கொண்டு இருக்கிருர்கள். சில சமயங்களில், சிறிய கேஸ்
களாக இருந்தாலும், பெரிய கேஸ்களாக இருந்தாலும் லாடம் போடுவது,
மார்பால் நகர்ந்து தரையை நக்கும்படியாக செய்வது, மலஜலத்தை
குடிக்கும்படியாகச் செய்வது, இம்மாதிரியான உபத்திரவங்களை இன்னும்
இந்த நாகரிக காலத்திலே, சுதந்திர நாட்டிலே செய்யக்கூடிய மனப்
பான்மை கொண்ட போலீஸ் சிப்பந்திகள் இருக்கிருர்கள் என்று சொன்
னல் அது உண்மையிலேயே வெட்கப்படக்கூடிய விஷயமாகும். முதலி
யார் அவர்கள் சொன்னதுபோல் எல்லோருக்கும் பயத்தை உண்டாக்கக்
கூடிய முறையிலே கீழ்த்தர உத்தியோகங்களில் இருக்கும் போலீஸ் சிப்பந்தி
கள் அக்கிரமமாக நடந்துகொள்ளும் மனப்பான்மையை போக்க நாம்
முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அம்மாதிரி மனப்பான்மை சில
உத்தியோகஸ்தர்கள் மனதிலே வளர்ந்திருக்கின்றது. அதைப் போக்கு
வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிருர்கள் ?
அம்மாதிரியான நிலையிலே அதைப் போக்குவதற்கு பகிரங்கமாக அவர்களைக்
கண்டிப்பது கூடாது என்று பெரிய உத்தியோகஸ்தர்கள் பயந்தால்,

[Sri S. Pakkirisami Pillai] [7th March 1958

நகரம் எப்படிப் போகுமோ என்ற நிலைமையிலே அவர்கள் செல்லுகிறார்கள். அப்படி பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. பெரிய உத்தியோகஸ்தர்கள், நல்ல மனதுள்ளவர்கள், கீழ்த்தர சிப்பந்திகள் அம்மாதிரி நிலையிலே போனால் உடனடியாக காப்பாற்றாமல் தண்டனைக்கு உட்படுத்துவதற்கான அந்த தைரியம் தான் அவர்களுக்கு இருக்கவேண்டும். அதை செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி இல்லையேல் போலீஸாருடைய ஒரு ஆட்சி வருவதற்கு, போலீசாருடைய தயவினால்தான் இந்த ஆட்சியை நடத்துவதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களா. நாளை என்ன ஆகுமோ, போலீஸார் ஒத்துழைப்பு இருந்தால்தான் நம்மால் ஆட்சி நடத்த முடியும் என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் இருக்கிறது என்ற அபிப்பிராயத்தை மற்றவர்கள் சொல்லுகிற மாதிரி நடந்துக் கொள்ளக்கூடாது. உடனடியாக இந்தவித மனப்பான்மையை போக்குவதற்கு அரசாங்கத்தார் முன்வந்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி இல்லையேல், நம்முடைய நாடு எப்படி போகுமோ என்று நான் இப்பொழுது சொல்லத் தயாராக இல்லை.

காந்தீயம் மறைந்துகொண்டிருக்கிறது. வினோபா போன்ற பெரும் தலைவர்கள் நம் நாட்டிலே இருக்கிறதால்தான் காந்தீயம் முழுதும்மறையாமல் இருந்து கொண்டிருக்கிறது. அது கடைசியிலே மறைந்தால் வேறு வழியிலேதான் போகும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **SRI P. S. CHINNADURAI** : மதிப்பிற்குரிய சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, இந்த சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 1958–59-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை இந்த ஆண்டும் கூட பரிதாபத்திற்குரிய முறையிலே கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார் என்று நான் உண்மையிலேயே அனுதாபப் படத்தான் செய்கிறேன். இவ்வாறு நான் கூறுவது, உண்மையிலேயே சோஷலிச சித்தாந்தத்திலே அவருக்குள்ள நம்பிக்கையை வளர்க்கவேண்டுமென்ற ஆவலினாலேதான் அதை அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருவதில் தூண்டுதலாக இருக்கவேண்டும் என்பதினாலேயே நான் இவ்வாறு கூற விரும்புகிறேன்.

நம்முடைய வாழ் நாளிலேயே சோஷலிசத்தை அடைய வேண்டுமென்ற அந்த சோஷலிசத்தை கனம் நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய பட்ஜெட் உரையிலே சேர்த்துக்கொண்டிருக்கிறார். அவருக்குக் கூட, ஒரு சோஷலிச பட்ஜெட்டை சமர்பிக்க வேண்டுமென்ற ஆவல் இருக்கத்தான் செய்கிறது என்பதை இது தெளிவு படுத்துகிறது. அவருக்கு இந்த ஆசை இருந்தபோதிலும் ஒரு சோஷலிச பட்ஜெட்டை இந்த சபை முன்பாக அவரால் இந்த ஆண்டில் சமர்ப்பிக்க முடியவில்லையே என்பதை பார்க்கும்போது உண்மையிலேயே மகாபாரதத்திலே படித்த ஒரு சிறு சம்பவம்தான் நினைவுக்கு வருகிறது. அசுவத்தாமனுக்கு நல்ல பசும் பால் கொடுப்பதற்குத்தான் அசுவத்தாமனின் தாயார் விரும்பினாள். நல்ல மாடு இல்லாத குறையினாலே, மாடு வாங்குவதற்கு முடியாத குறையினாலே மாவைத் தண்ணீரில் கரைத்து, பால் என்று சொல்லி கொடுத்த சம்பவம் நினைவுக்கு வருகிறது. குழந்தை அசுவத்தாமனுக்கு மாவு கரைக்கப்பட்ட தண்ணீரை எப்படி பால் என்று குடிக்கச் செய்தார்களோ அது போல் இந்த சபை முன்னால் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டை, சோஷலிச பட்ஜெட் என்று என்னால் ஏற்றுக்கொள்வதற்கு முடியாது என்று நான் இங்கே குறிப்பாக சொல்லுவதற்கு விரும்புகிறேன். சோஷலிஸ்ட் பட்ஜெட் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று அவருக்கு இருக்கிற 5 p.m. விருப்பம் உண்மையிலேயே பூர்த்தி அடைய வேண்டும். அவருடைய வாழ் நாளுக்குள் அல்ல. அவர் இங்கு அமைச்சராக இருக்கும் வாழ் நாளுக்குள்ளேயே பூர்த்தி அடையவேண்டும். அப்போதுதான் மகிழ்ச்சி ஏற்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட் உரையிலே கனம் நிதி அமைச்சர் அவர்கள் விலைவாசிகள் 35 சத விகிதம் உயர்ந்திருப்பதாகப் புள்ளிவிவரங்கள் மூலம் குறிப்பிட்டிருக்கிறார்கள். விலைவாசிகளினால் ஏற்பட்டுள்ள கொடுமைகளை



7th March 1958] [Sri P. S. Chinnadurai]

இந்த ராஜ்யத்திலுள்ள மக்கள் எல்லோரும் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். விலைவாசிகள் உயர்ந்துவிட்டது என்று அமைச்சர் கூறும்போது உணவுப்பண்டங்களின் விலை அதனால் எப்படி உயர்ந்துவிட்டது, ராஜ்ய மக்களுடைய கஷ்டங்களைக் குறைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதுபற்றி ஒன்றும் அவருடைய உரையில் காணப்படவில்லை. இன்றைய தினம் விவசாயிகள் தங்களால் உற்பத்திசெய்யக்கூடிய பொருள்களுக்கு உரிய விலையைப் பெறுவதற்கு இயலாமல் போனது மாத்திரம் அல்ல. இந்த ராஜ்யத்தில் அன்றாடம் உழைத்து அந்த ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டிய நிலைமையில் இருக்கிற தொழிலாளர்கள், சர்க்கார் சிப்பந்திகள், நடுத்தர மக்கள் இவர்கள் எல்லோரும் விலைவாசி ஏற்றத்தினால் மிகவும் துன்பம் அடைந்திருக்கிறார்கள். அந்தத் துன்பத்தைப் போக்குவதற்கு இந்த அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என்று நான் இந்தச் சபை முன்பாக மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட் உரையில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம் நாட்டிலே சராசரி உற்பத்தி அளவானது முன்னைவிட இப்போது அதிகரித்திருக்கிறது என்பதாக. அதிகரித்திருக்கிறது என்று நாம் நம்மையே இன்று நாடு இருக்கும் நிலைமையில் திருப்தி செய்து கொண்டுவிட்டால் மேற்கொண்டு முன்னேறுவதற்கு இயலாத நிலைமை ஏற்பட்டுவிடும். உணவுப் பண்டங்களை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமானால் நிலச்சீர்திருத்தம் மிகவும் இன்றியமையாதது என்று இந்தச் சபை முன்பாக பலதரப்பினரும் எடுத்துக் கூறிவருகிறார்கள். உள்ளதை உள்ளவாறு எடுத்துக் கொள்கிற நிதி அமைச்சர் அவர்கள் அந்த உண்மையை ஒப்புக்கொண்டு எதற்கு என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக, வெறும் கண் துடைப்பு என்ற முறையில் விவசாய வருமான வரியை விதிக்கிறோம் என்ற ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். இவைகளை எல்லாம் வைத்துக்கொண்டு ஒரு சோஷலிஸ்டு பட்ஜெட்டைத் தயாரித்து விட்டோம் என்று கூறிக் கொள்வது சரியாகாது என்பதற்கு இன்னும் ஒரு உதாரணம் கூறுவேன்.

சமீபத்தில் ப்ளாக் டெவலப்மெண்டு ஏரியாவில் உள்ள ஒரு கிராமத்திற்கு நான் சென்றபோது ஒரு பலகையில் கிராமத்திற்கு வெளியே எழுதப்பட்டிருந்தவைகளைப் படித்தேன். அதில் நிலச்சீர்திருத்தம் என்று எழுதப்பட்டிருந்தது. இது என்ன என்று கேட்டபோது மண் அரிப்புத் திட்டத்திற்கு அங்கே வகை செய்யப்பட்டிருக்கிறது என்றார்கள். மண் அரிப்புத் திட்ட வேலைக்குப் பெயர் நிலச்சீர்திருத்தம் என்று அங்கே எழுதப்பட்டிருந்ததைக் காட்டி அதுதான் நிலச்சீர்திருத்தம் என்று சொல்வது எப்படியோ அதுபோல் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற விவசாய வருமான வரியைப் பார்த்து இதனால் நிலச்சீர்திருத்தத்திற்கான அஸ்திவாரம் அமைக்கப்பட்டுவிட்டதாகவோ, பெரும்பான்மையான பெருநிலச்சுவாந்தார்கள் இதனால் தங்கள் நிலங்களைக் குறைத்துக்கொள்ள முன் வந்துவிடுவார்கள் என்பதாகவோ, நில உடைமைக்கு ஒரு வகையில் வரம்பு கட்டி விடலாம் என்பதாகவோ எண்ணம் கொண்டிருப்பார்களானால் அதை நாங்கள் ஒத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறோம்.

சோஷலிஸ்டு இயக்கமானது பல ஆண்டுகளாக விவசாய வருமான வரியைக் கொண்டு வரவேண்டும் என்பதாகச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் விவசாய வருமான வரியை விதிக்கும்போதே ஏற்கனவே நிலவரி என்று போடப்பட்டு வந்ததை அடியோடு ரத்து செய்துவிட வேண்டுமென்று வற்புறுத்தி வந்திருக்கிறது. ஆனால் இன்று நிலவரியை ரத்து செய்யாமல் அதற்குப் பதிலாக அடிஷனல் சர்சார்ஜ் என்பதை ரத்து செய்துவிட்டு விவசாய வருமான வரியைக்கொண்டு வந்திருக்கிறார்கள். இது சரியானது அல்ல என்று இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உண்மையில் இந்த நாட்டில் பெரும்பான்மையாக இருக்கிற விவசாய மக்களுடைய குறைகளை கவனித்து அந்தக் குறைகளை நிவர்த்திப்பதற்கு ஏற்ற முறையில் இந்த பட்ஜெட் தயாரிக்கப்

படவில்லை என்று நான் பல உதாரணங்களுடன் இங்கே எடுத்துக்கூற முடியும். விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற கடன் அளவு முந்தைய பட்ஜெட்டைக் காட்டிலும் இந்த பட்ஜெட்டில் குறைக்கப்படுகிறது. இதற்கு என்ன காரணம் என்பதை நிதி அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூற வேண்டியிருக்கும். அதோடு சிறிய நீர்ப்பாசனம் திட்டங்களுக்காக ஒதுக்கி யிருக்கிற தொகையில் கூட ஒரு பகுதி குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றியும் கனம் அமைச்சரவர்கள் கூற வேண்டியதாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

மேலும் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பண்டங்களை விற்பனை செய்வதற்குரிய மார்க்கெட்டிங் ஸ்கீம் அதற்கான செலவுகளைக் கூட இந்த ஆண்டில் குறைத்திருக்கிறார்கள். இன்றைய தினம் விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு சரியான மார்க்கெட் வசதி கிடையாது. அவர்களுடைய பொருள்களுக்கு உரிய விலையும் கிடைக்கவில்லை. இதனால் பெரும்பாலான பேர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கூக்குரல் கிராமவாசிகளின் பக்கத்தில் எழுகிறது. இந்தச் சமயத்தில் மார்க்கெட்டிங் ஸ்கீமுக்கு அதிகப் படியான தொகை ஒதுக்குவதற்குப் பதிலாக அதைக் குறைத்திருக்கிறார்கள். இத்தகைய ஒரு தீங்கான நிலைமையை ஏன் உண்டாக்கியிருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. அதற்கும் சரியான விளக்கத்தை கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூறவேண்டியிருக்கும்.

மின்சார இலாகா சம்பந்தமாக "பவர் கட்டு" பற்றி, அடிக்கடி சொல்லப் பட்டுவந்தபோதிலும் அது விஷயமும் சரியாகப் பரிசீலனை செய்யப்பட வில்லை. இந்தியாவிலேயே மின்சாரம் சம்பந்தமாக நம் ராஜ்யம்தான் அதிகமாக முன்னேறியிருக்கிறது என்கிற பெருமையை நிலைநாட்டிக் கொள்ளவேண்டுமானால், மின்சார வெட்டுக்கு இனிமேல் அவசியம் நேராதவாறு நாம் செய்தாகவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறதென்று சொல்ல விரும்புகிறேன். நாம் எத்தனையோ திட்டமிட்டுத்தான் செய்கிறோம் என்றாலும் மின்சார விநியோக விஷயத்தில் இன்னும் பல குறைகள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் சிறப்புத் தோன்றலாமே தவிர உள்ளே நுழைந்து பார்த்தால் மின்சார இலாகாவில் இருக்கக்கூடிய ஊழல்கள், மின்சார இலாகா ஊழியர்களுக்கு நீண்டநெடுங்காலமாக இருந்துவருகிற குறைபாடுகள் இன்னமும் நீக்கப்படாமலேயே இருந்துகொண்டிருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொண்டாகவேண்டும். இப்போது புதிதாக பலருக்கு மின்சார சப்ளை செய்யப்பட்டுவருகிறது. இருந்தாலும் ஏற்கனவே விவசாயிகள் செலுத்தியிருக்கிற அட்வான்சு செக்யூரிடி தொகையோடு மீண்டும் ஒரு அடிஷனல் டிபாஸிட் கட்ட வேண்டும் என்பதாக வற்புறுத்தப்படுகிறது. இந்த அதிகப்படியான டிபாஸிட் தொகை கட்டும்படியாகச் சொல்வதற்கு எவ்விதமான நியாயமும் இல்லை என்பதாகப் பல விண்ணப்பங்கள் போட்டபோதிலும், அதற்கு யாதொரு பதிலும் இல்லாத நிலைமையில் மின்சார இலாகாவானது நிர்வகிக்கப்பட்டுவருகிறது. அது இந்த மின்சார இலாகாவுக்கோ, இந்த அரசாங்கத்திற்கோ பெருமை அளிக்காது என்று இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன்.

மேலும் மின்சார இலாகா தொழிலாளர்களுடைய குறைகளைக் குறித்தும் நான் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மின்சார இலாகாவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு இந்த அரசாங்கம் கொடுக்கின்ற சம்பளம் மிகவும் குறைவானது. விலைவாசிகள் இன்றைய தினம் ஏறுமுகமாக இருக்கிறது என்பதை இந்த அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது. அந்த ஏற்றமானது முன்பு இருந்ததைக் காட்டிலும் 35 சத விகிதம் அதிகப் பட்டிருக்கிறது என்றும் ஒப்புக்கொள்கிறது. இந்த நிலைமையில் அந்த ஊழியர்களுடைய சம்பளத்தை மட்டும் கொஞ்சமாவது உயர்த்திக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் சரியான ஏற்பாடு எதுவும் செய்யவில்லை. தனிப்பட்டோர் தொழிற்சாலையில் இருக்கும் ஊழியர்கள் இதே காரியத்தைச் செய்வதற்காக என்ன ஊதியம் பெறுகிறார்களோ அதையும் விடக் குறைவாகவே சர்க்கார் இலாகாவில் வேலை செய்கிறவர்கள் பெறுகிறார்கள் என்பது மிகவும் வெட்கப்பட வேண்டிய விஷயமாகும். இப்படிப்பட்ட



மிகவும் இழிவான நிலையில், அவர்களுடைய சர்வீஸையும் நிரந்தரமாக்காமல் பலகாலமாக வைத்திருப்பதும் அதுவும் 40 ஆயிரம் தொழிலாளர்களை வைத்திருப்பது சரியானது அல்ல என்று இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன்.

மேலும் சுமார் இரண்டரை கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி 5-10
ஜவுளி தேங்கிக் கிடப்பதாக இங்கு அறிவிக்கப்படுகிறது. இதனைக் குறித்து p.m.
அரசாங்கத்திற்கு சரியான ஒரு பொறுப்பும் கடமையும் இல்லையா? மத்திய அரசாங்கம் இந்த கைத்தறி ஜவுளிக்குக் கொடுத்து வந்த ரிபேட் தொகையைக் குறைத்து விட்டார்களே? அதை எதிர்த்து, சண்டை போட்டு அந்த ரிபேட் தொகையைக் குறைக்காமல் பெறுவதற்கு இந்த அரசாங்கத்தால் முடியவில்லையா? அந்த ரிபேட் தொகையை திரும்பப் பெறுவதற்கும், கைத்தறி ஜவுளி தேக்கமாக இருப்பதை குறைப்பதற்கும் உரிய ஒரு முயற்சியையும் கையாள இந்த அரசாங்கத்தால் முடியவில்லையா என்பதைப்பற்றி பட்ஜெட் உரையில் ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை. பொதுவாக ஏதோ கைத்தறிக்கு ஆபத்து வந்து விட்டதைப் போல், அது எதேச்சையாக நேர்ந்து விட்டது போல் குறிப்பிடப் பட்டிருக்கிறதே தவிர அதற்குள்ள பரிகாரம் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை. இனி என்ன செய்யப்போகிறார்கள் என்று இது வரையிலும் அறிவிக்கப்படவில்லை. நிதியமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு விளக்கம் அவரது பதிலில் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதோடு, கிராமப்புறங்களில் விவசாயிகளுக்கு உதவிபடுகிற முறையில் சிறு கைத்தொழில்கள் ஆரம்பிக்கவேண்டுமென்று பன்முறை இங்கு வற்புறுத்தப்பட்டிருக்கிறது. சிறு தொழில்களை ஊக்குவிக்க இந்த அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்று பார்த்தால் பட்ஜெட்டில் சிறு கைத்தொழில்களுக்கான தேவையை, அதற்காக முந்திய ஆண்டு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டதோ அதைவிட குறைவான அளவுதான் இவ்வாண்டு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. முந்திய ஆண்டு ஒதுக்கப்பட்டதுகூட பூர்ணமாக செலவழிக்கப் படவில்லை. ஒதுக்கப்பட்ட தொகையில் முக்கால் பங்குகூட செலவழிக்கப் படவில்லை. ஏன் அப்படி செலவழிக்க முடியாமல் போய்விட்டது என்பதற்கான காரணங்கள் பட்ஜெட் மெமராண்டத்தில் சொல்லப்படவில்லை. இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிற பணமும் குறைவானதுதான். இதைக் காட்டிலும் அதிகப்படியான பணத்தை ஒதுக்கி கிராமப்புறங்களில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு ஏன் இந்த அரசாங்கம் சரியான ஏற்பாடுகள் செய்யக்கூடாது என்பது குறித்தும் அமைச்சர் அவர்கள் தமது பதிலில் விளக்கிக்கூற வேண்டுமென்று நான் விரும்புகிறேன். கோவை சர்க்கா என்று புதிதாக 16 கதிர் கொண்ட சர்க்கா ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. அதற்காக ஒரு பயிற்சி முகாம் கூட அமைக்கப் பட்டது, சென்ற ஆண்டில் என்று நினைக்கிறேன். அது என்னவாயிற்று? அது வெற்றிகரமாக இருக்குமா, அந்த சர்க்காவை பரவலாக விநியோகம் செய்வதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யக்கூடியதாக ஒரு திட்டம் இருக்கிறதா இல்லையா என்று பட்ஜெட் உரையில் எதுவும் காணப்படவில்லை. அந்தச் சர்க்காவானது பரவலாக விநியோகம் செய்யப்படுமானால், அதன் மூலம் கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு போதுமான வேலை கிடைக்கும் குறிப்பாக, அதனால் பெண்களுக்கு அதிகமாக் வேலை கிடைப்பதற்கு வகை இருக்கிறது என்று கூறப்படுகிறது. அது குறித்து இந்த அரசாங்கம் நடவடிக்கை ஒன்றும் எடுத்துக் கொள்ளவில்லை. அதற்குரிய முறையில் அதற்காக பணம் ஒதுக்கப்படவில்லை என்று நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதைப் பார்க்கும்போது, சிறு கைத்தொழில்கள் வளர்ச்சி அடைவதற்கு போதிய உற்சாகம் கொடுக்க இந்த அரசாங்கம் தவறி விட்டது. சிறு கைத்தொழில்கள் வளர்ச்சி அடைந்தால் ஒழிய பரவலாக இந்தத் தொழில் கிராமப் புறங்களில் வளர்க்கப்பட்டால் ஒழிய, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது என்பது அரிதாகவே முடியும். ஆகவே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது வரையில் மக்களின் வாங்கும் சக்தி அதிகரிப்பதற்கு இயலாது. அப்படி வாங்கும் சக்தி அதிகரிக்காத நிலையில் நாட்டில் இருக்கிற தரித்திர நிலை இன்னும் அதிகமாக வளரத்தான் செய்யும். ஆகவே, சிறு கைத்தொழில்கள் வளர்க்

கப்படுதவற்கு அரசாங்கம் போதிய நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பெரும் தொழில்கள் சம்பந்தமாகவும் அரசாங்கத்தின் கொள்கை தனியார் துறையைத்தான் ஆதரிப்பதாக இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். சோஷியலிச தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த அரசாங்கம் படிப்படியாக தனியார் துறையைக் கரைத்து பொதுத்துறையை வளர்ப்பதற்குப் பதிலாக, சோஷியலிஸத் தத்துவத்தை அமலாக்கப் போகிறோம் என்று சொல்கிற அதே நேரத்தில் தனியார் துறையை வளர்ப்பதற்கு அதிக ஊக்கம் காட்டுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது மிகுந்த வருத்தம் ஏற்படுகிறது. அலுமினியத் தொழிற்சாலை ஒன்று தமிழகத்தில் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. இப்பொழுதும், அது ஆரம்பிக்கப்படும் என்று சூசகமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது, பட்ஜெட் உரையில். ஆனால் யாரால் என்று மாத்திரம் சொல்லப்படவில்லை. பத்திரிகைச் செய்திகளில் இருந்தும், அமைச்சர்களின் அறிக்கைகளில் இருந்தும் நான் அறிவது என்னவென்றால், இந்த அலுமினியம் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் பொறுப்பு தனியார் துறைக்கு விட்டுவிடப்படும் என்று அறிகிறோம். அப்படி இப்படிப்பட்ட பெரிய அலுமினியம் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் பொறுப்பு தனியார் துறைக்கு விடப்படுவது என்று சொன்னால், அது சோஷியலிஸத்திற்கு வழி வகுப்பதாகாது என்று குறிப்பிட விரும்புகிறேன். ஏழரைக் கோடி ரூபாய் செலவில், மூலதனக் கொண்ட ரயான் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படுவது குறித்து பட்ஜெட் உரையில் காணப்படுகிறது. அதற்குரிய நிதி வசதியை வெளி நாடுகளில் இருந்து பெறுவதற்கு சில தனிப்பட்ட முதலாளிகள் வெற்றி கண்டிருப்பதாகவும் இந்த பட்ஜெட் உரையில் நான் காண்கிறேன். அது, யாருடைய திறமையைக் காட்டுகிறது. இந்த நாட்டின் பொருளாதாரத்தின் பேரில் முதலாளித்துவத்திற்கு இருக்கிற செல்வாக்கை, பிடிப்பைத்தான் அது வெளிப்படுத்துகிறதே தவிர இந்த சர்க்காருக்கோ அல்லது மத்திய சர்க்காருக்கோ இந்த நாட்டின் பொருளாதார நிலையில் இருக்கும் பிடிப்பை வெளிப்படுத்துவதாக இல்லை. அரசாங்கத்தின் சார்பில் வெளிநாடுகளுக்குப்போய் கடன் வாங்க முடிகிறது திரும்புகிற நேரத்தில் தனியார் சிலருக்கு கடன் வாங்க முடியும் என்றால் அது கண்டு சோஷியலிஸத்துவத்தில் நம்பிக்கை உடையவர்களால் மகிழ்ச்சி அடையமுடியாது. ரெயான் தொழிற்சாலை ஒன்று நம் நாட்டில் ஆரம்பிக்கப்படுகிறது என்று மகிழ்ச்சி அடைந்தாலும் அது தனிப்பட்டவர்களால் ஆரம்பிக்கப்படுகிறது என்பது கண்டு வருந்தத்தான் தோன்றுகிறது. அது அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்படுமானால் அப்பொழுதுதான் நாம் உண்மையில் மகிழ்ச்சி அடைய முடியும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கெல்லாம் பணத்திற்கு எங்கே போவது என்று கேட்கக்கூடும். சிறு சேமிப்புத் திட்டம் இந்த வருடம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அது தீவிரமாக்கப்பட்டும் வருகிறது. அதன் மூலம் சுமார் பன்னிரண்டு கோடி ரூபாய் வசூல் செய்ய அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக நான் அறிகிறேன். அதில் இப்பொழுதே பாதிப் பணம் வசூல் ஆகி இருக்கிறது என்றும் கேள்விப்படுகிறேன். தொழில் துறையில், பொதுத் துறையில் அரசாங்கம் அதிக அக்கறைக் காட்டுகிறது என்று மக்களுக்கு தெரிந்தால், அதில் மக்கள் நம்பிக்கை வைப்பார்களேயானால் அவர்கள் இக்காரியங்களில் தாமாகவே பணம் போட முன் வருவார்கள். அரசாங்கமே இத்தொழில்களை எடுத்துச் செய்ய முன் வந்தால், அரசாங்கம் ஆரம்பிக்கும் கார்ப்பரேஷனில் மக்கள் தாமாகவே முன் வந்து பங்கு போட்டு அதன் மூலம் தொழில் வளம் பெறச் செய்ய மக்கள் வேலை செய்ய முன் வருவார்கள் என்று நான் உறுதியாக கூற முடியும். வேண்டுவதெல்லாம்; முயற்சிதான். அதுதான் இங்கு குறைவாக இருக்கிறது. அது எதிர்காலத்தில் அதிகமாக இருக்கும் என்று தெரிவிப்பதற்கான முறையிலே கூட நிதியமைச்சர் அவர்களின் பட்ஜெட் உரையில் எதுவும் இல்லாதது குறித்து நான் மிகவும் வேதனைப்படுகிறேன். புதுவரிகளில், எந்த வரி போடப்பட்ட போதி[illegible] அது பொதுவாக அது மக்கள் தலையில்தான் வீழ்கிறது, இறுதியாக [illegible] வைத்துப் பார்த்தால் இப்பொழுது கேளிக்கைகளுக்கான வரி [illegible] மீண்டும் கிராம மக்கள்தான் பாதிக்கப்படும்.



நிலை ஏற்படுகிறது. இது வரையில் டூரிங் சினிமாவிற்கு தமாஷா வரி கிடையாது. இப்பொழுது அது போடப்படுகிறது. நகரங்களில் உள்ள தியேட்டர்களையும், கிராமங்களில் உள்ள டூரிங் சினிமாக்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நகரங்களில் உள்ள தியேட்டர்களில் உள்ள வசதிகள் கிராமங்களில் உள்ள டூரிங் சினிமாக்களில் கிடையாது. இங்கு தரை என்று சொன்னால் பெஞ்சில் உட்காரலாம். அங்கு தரை என்று சொன்னால் மண்ணில்தான் உட்கார வேண்டும். நகரத்தில் போடும் படங்கள் கிராமங்களுக்கு ஒரு வருடம் சென்ற பின்தான் வருகிறது. கிராம வாசிகளுக்கு புதிதாக ஒரு படம் வந்தால் அதை உடனே பார்க்க முடியாது. மழை பெய்தால் தண்ணீர் ஓடும். காற்றின் இரைச்சலும் இருக்கும்.

இந்த நிலைமையில் டூரிங் சினிமாக்களில் போய் சினிமா பார்ப்பது கஷ்டமான காரியமாக இருக்கிறது. அவர்களும் இந்த வரியை கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கும் இந்த வரியை போடுவது அவ்வளவு அநுசரியல்ல என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆகவே, இந்த வரியை கிராமங்களிலுள்ள டூரிங் சினிமாக்களுக்கு விஸ்தரிக்கக்கூடாது என்பதை உறுதியாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எதுவானாலும் சரி, கிராமங்களுக்குத்தான் சலுகை என்ற நிலை வரவேண்டும். நகரங்களின் வளர்ச்சிக்கு கிராமங்கள் உதவியிருக்கின்றன. 5-20 p.m. இனிமேல் கிராமங்களின் நிலை மாறவேண்டும். இனிமேல் நகரங்கள் தான் கிராமங்களுக்கு உதவி புரியவேண்டும். கல்வி வசதி கொடுப்பது, ரோடுகள் வசதி, தண்ணீர் வசதி, இம்மாதிரிப்பட்ட எந்த வசதிகளை எடுத்துக்கொண்டாலும், இன்றைக்கு நவீன வசதிகள் என்று சொல்லப்படுகின்ற, மனித வாழ்க்கைக்கு அவசியமாயிருக்கின்ற வசதிகள் கூட கிராமங்களில் போதுமான அளவில் இல்லை. கிராமங்களில் வசதிகள் ஏற்படவேண்டும் என்கின்ற எண்ணத்தை ஏற்றுக்கொண்டு அதை கருத்தில் கொண்டுதான் இந்த பட்ஜெட் தயாரிக்கப் பட்டிருக்கவேண்டும். ஆனால் கிராமங்களின் பேரில் வரியை சுமத்துகின்ற நிலைமையைத்தான் காணுகின்றோம். அடுத்ததாக வீடு கட்டுவதற்குரிய திட்டத்தை எடுத்துக்கொண்டால் இவை பூர்த்தியாக இன்னும் எத்தனை தலைமுறையாகும் என்று தெரியவில்லை. அது ஒருபுறமிருக்க உடனடியாக வீடில்லாதவர்களுக்கு வீடு கட்டுவதற்கு ஐந்து செண்டு காலி நிலமாவது கொடுக்க இந்த அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் சமூக பாதுகாப்புக்காக இந்த அரசாங்கம் எத்தனையோ திட்டங்களை போடுகிறது. அவற்றில் இந்த அரசாங்கம் குறைந்த பட்சம் ஒரு திட்டத்தையாவது கொண்டு வந்து நிறைவேற்றினால் நலமாக இருக்கும். அதாவது வயோதிகர்களுக்கு பென்ஷன் கொடுப்பது என்கின்ற ஒரு திட்டம் இருக்கின்றது. இப்போது அரசாங்கத்தில் 55-வது வயது வரை வேலை செய்தால் பென்ஷன் கொடுக்கிறார்கள். அது போல் நாட்டில் 55 அல்லது 60 வயது வந்தவர்களுக்கு வேலையில்லாமல் இருப்பார்களானால் அவர்களுக்கு சர்க்கார் மூலமாக பென்ஷன் கொடுப்பதற்கு வழி செய்ய வேண்டும். அவ்விதம் கொடுப்பதாயிருந்தால் சமூகத்தில் அது ஒரு பாதுகாப்பாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அடுத்ததாக இந்த பட்ஜெட் உரையில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்திய சர்க்காரில் நிதி அமைச்சராக இருந்த திருவாளர் டி. டி. கே. அவர்களுக்குப் புகழ் மாலை சூட்டியிருக்கிறார்கள். இதற்கு அவசியம் இருக்கின்றதா என்பதுதான் என்னுடைய கேள்வி. கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு திரு. டி. டி. கே. அவர்களிடம் மதிப்பு இருக்குமானால் தாராளமாக தனிப்பட்ட முறையில் தெரிவித்துக் கொள்ளட்டும். நாம் அதை ஆட்சேபித்திருக்க மாட்டோம். ஆனால் இந்த சபையை கட்டுப்படுத்தும் முறையில் அவருடைய பெயரை இதில் புகுத்தி புகழ்மாலையை சூட்டியிருக்கிறார்கள். இந்த சபைதான் இதற்கு முன்னால் ஏகமனதாக கைத்தறிக்கு கரை போட்ட வேஷ்டியும் கலர் சேலையும் ஒதுக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டு மத்திய சர்க்காருக்கு அனுப்பின நேரத்தில் அங்கு காமர்ஸ் மினிஸ்டர் பதவியில் இருந்தவர் டி. டி. கே. அவர்கள் தான். அந்த சமயத்தில் தான் நம்முடைய தீர்மானம் புறக்கணிக்கப் பட்டது என்பதை இந்த சபையின் ஞாபகத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அந்த முறையில் நடந்து கொண்ட டி. டி. கே. அவர்களுக்கு

A 226—7-3-58—10

நினைக்கிறேன். இந்த எண்ணெய் காலன் 1 ரூபாய் 14 அணா, அல்லது 1 ரூபாய் 13 அணாவிற்கு விற்கிறது. ஒவ்வொரு காலனிலும் ஒரு ரூபாய்க்கு மேல் மிச்சம் இருக்கிறது. இதனால் பஸ் நிர்வாகச் செலவு மைல் ஒன்றுக்கு, சராசரி ஒவ்வொரு ஆபரேட்டருக்கும், ஒவ்வொரு மைலுக்கும், இந்த டீஸல் எண்ணெய் உபயோகிப்பதால் 6 அணாவிலிருந்து 9 அணா வரையில் லாபம் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது என்பது என்னுடைய அபிப்பிராயம். சர்க்கார் புள்ளி விவரங்களில் கூட 3 அணா, 4 அணா மிச்சம் ஏற்படுகிறது. வெளியார் நடத்துகிறவர்களுக்கு ஒவ்வொரு மைலுக்கும் லாபம் ஏற்படுகிறது. ஒரு பகுதியை சர்க்காருக்குக் கொடுக்கலாம். சர்க்கார் கொடுக்கக் கூடிய கணக்குப் படி பார்த்தால் 1 காலனுக்கு 16 மைலுக்கு மேல் போகலாம். அதனால் இந்த வரி 1½ நயா பைசா அதிகம். சிறிய ஆபரேட்டர்களும் சரி, பெரிய ஆப்பரேட்டர்களும் சரி உற்சாகத்தோடு கொடுக்கவேண்டும், இதில் எதிர்ப்பு இருக்கக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த வரி போட்ட பிறகும் 1 ரூபாய் நிச்சயம் வித்தியாசம் இருக்கிறது. ஒரு ரூபாய் ஒரு அணா, 1 ரூபாய் 2 அணா வித்தியாசம் இருக்கிறது. ஆகையால் தான் இந்த வரி நியாயமான வரி என்று சொல்கிறேன். யானையை எறும்பு கடித்த மாதிரி இருக்குமே யொழிய பெரிய ஆபத்து ஏற்பட நியாயமில்லை. (ஒரு குரல்: எங்கு கடித்த மாதிரி ?) காலில் கடித்த மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அடுத்தபடியாக, ஒரு விஷயத்தை சர்க்கார் கவனத்தில் வைக்க வேண்டும். விவசாயிகள் பம்ப் செட்டுகளை உபயோகித்து வருகிறார்கள். அதற்கு இந்த எண்ணெயைத்தான் உபயோகிக்கிறார்கள். அதற்கும் இந்த வரியை விதித்தால் உற்பத்திக்கு குந்தகம் விளையும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அதற்கு விதி விலக்கு கொடுக்க வேண்டும். இந்த பம்ப் செட்டுகளையெல்லாம் ரிஜிஸ்டர் செய்யச் சொல்லி அவர்கள் வாங்கக் கூடிய எண்ணெய்க்கு ரீபண்ட் கொடுக்க சர்க்கார் யோசனை பண்ணவேண்டும். அந்த யோசனையை சர்க்கார் மசோதா கொண்டு வந்து, அது செலக்ட் கமிட்டிக்குப் போகும், அப்போது இதை யோசிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் உபயோகிக்கும் பம்ப் செட்டுகளுக்கு விதி விலக்கு கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய திடமான அபிப்பிராயம்.

அதற்கு அடுத்தபடியாக பொழுதுபோக்கு வரி. பொழுது போக்கு வரி போடுவது நியாயமா என்பது பற்றி இரண்டுவித அபிப்பிராயங்கள் இருக்கலாம். சர்க்காருக்கு வருமானம் வேண்டும். வரி போடும்போது அந்தத் தொழில் தாங்குமா என்று பார்க்கவேண்டும். இப்போது இந்தத் தொழிலைப் பொறுத்த வரையில் இது தாங்கும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். பொழுது போக்குக்கு வரி போடுவதா என்று மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லலாம். பொழுதுபோக்கு மக்களுக்கு தேவை. எட்டு மணி நேரம் வேலை செய்து அந்த 8 மணி நேரத்தில் இழந்த சக்தியை மீண்டும் பெற, உடலுக்கு உணவைப்போல மனதுக்குப் பொழுது போக்கு அவசியம். மக்கள் இழந்த சக்தியை மீண்டும் பெற பொழுது போக்கு மிக்க அவசியம். இப்போதுள்ள சினிமா அதைக் கொடுக்கிறதா என்பது வேறு விஷயம். அது அவசியம் என்ற கொள்கையை உடையவன் நான். இந்த வரியினால் பாதிக்கப்படக் கூடியவர்கள் சினிமாக் கொட்டகைக்காரர்கள்தான். கதை எழுதுபவர்களோ, அல்லது படம் பிடிப்பவர்களோ அல்ல. கொட்டகை நடத்துகிறவர்கள் தான் பாதிக்கப்படலாம். அதுவும் ஒரு சிறு அளவுக்குத்தான் 20 சத விகிதத்திலிருந்து 25 சத விகிதத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். ஆனால் டூரிங் சினிமாக்களுக்கு அவ்வளவு லாபம் கிடையாது. சில இடங்களில் கஷ்டப்படக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிலையான இடம் கிடையாது. இந்த வரியை வைத்துக்கொண்டாலும் ஷோ டாக்ஸிலிருந்தாவது விலக்கு கொடுப்பது அவசியம் என்று நினைக்கிறேன். அதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு மசோதா வரும்போது அந்தக் கருத்துக்களை விரிவாகச் சொல்லலாம் என்று சொல்லிக்கொண்டு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய புதிய வரிகளைப் பற்றி என் கருத்துக்களை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.



இந்த வரிகள் போகட்டும். மற்றப்படி நம் நிதி நிலை அறிக்கையிலே நமக்குக் கிடைக்கும் வாக்குறுதிகள் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். நம்முடைய திறமையான விவசாய அமைச்சர் அவர்களுடைய திறமையினால் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது. கிட்டத்தட்ட 1 வருஷத்திய கணக்கில் அவர்கள் பேசியதைப் பார்க்கும்போது இப்போது உற்பத்தி இரண்டு மடங்காக ஆகிவிட்டது என்று நினைக்கிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பித்ததிலிருந்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட 3-வது வருஷத்தில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது உணவு உற்பத்தி 28 லட்சம் டன்னிலிருந்து கிட்டத் தட்ட 48 லட்சம் டன்னுக்கு வந்திருக்கிறது என்பது அவர்கள் கூறியது ஒரு ஆறுதலான உறுதிமொழியாக இருக்கிறது. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். உற்பத்தி பெருகியிருக்கிறது. அந்தப் புள்ளிவிவரம் கணக்குப் பிள்ளை தயாரித்ததா, அது சரியாக இருக்குமா, அதன் அஸ்திவாரம் சரியாக இருக்குமா என்று கொஞ்சம் கூட சந்தேகப் படவில்லை. உற்பத்தி அதிகமாயிருக்கிறது உண்மையாக இருக்குமென்று நம்புகிறேன். சிறிது ஏற்றத் தாழ்வுகள் இங்குமங்கும் இருக்கலாம். ஆனால் இவ்வளவு நீர்ப்பாசனத் திட்டங்கள் பூர்த்தியான பிறகும் உற்பத்தி 5-40 p.m. பெருகவில்லையென்று சொன்னால் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கே அவசியமில்லை என்று சொல்லக்கூடும். பெருவாரியான திட்டங்கள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டன. ஆகவே, இத்தகைய உற்பத்திப் பெருக்கத்தை நாம் நிச்சயமாக எதிர் பார்க்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த உற்பத்தி பல இடைஞ்சல்களுக்கிடையே அதிகரித்திருக்கிறது. அம்மோனியம் சல்பேட் உரம் 1,40,000 டன்னுக்கு, 75,000 டன் தான் கிடைத்தது. இதில் விவசாயிகளுக்குப் போனது எவ்வளவு என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. கள்ளச் சாரயத்திற்குப் போன மிச்சம் தான் விவசாயத்திற்குப் போய்ச் சேருகிறது. பல கஷ்டங்கள் விவசாயிகளுக்கு இருக்கின்றன. தக்காவிக் கடனுக்காக மனுப் போட்டால், மின்சாரம் வர காலத்திலே கடன் ஸாங்ஷன் ஆகி, 1½ வருஷம் கழித்தும் கடன் கிடைப்பதில்லை. விவசாயத்திற்கு இரவு நேரங்களில் தான் மின்சாரம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வேறு உத்திரவு போட்டு விட்டார்கள். பல இடங்களில் மிராசுதாரர்களின் தொந்திரவு காரணமாக போலீசுக்குச் சென்று பல கஷ்டங்களை அனுபவித்தும் கூட, விவசாயிகள் கஷ்டப்பட்டு உழைத்திருக்கிறார்கள். உற்பத்தி பெருகித்தான் இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் பாராட்டுதலுக்குரியவர்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அதே போல, மற்ற உற்பத்திகளை எடுத்துக் கொண்டாலும், உற்பத்தி பெருகித்தானிருக்கிறது என்பதை நான் சந்தேகிக்க விரும்பவில்லை. உற்பத்தி பெருகியிருப்பதனால் தான் இப்பொழுது ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இதனால் ஏற்பட்ட விளைவுகளைப் பார்க்க வேண்டும்.

மழை மாரியைப்பற்றி நிதி அமைச்சர் கொடுத்த புள்ளி விவரங்களில் தவறு இருக்கிறது. இதை நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும். அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரங்களின் குறைபாட்டைக் காட்ட வேண்டியதற்காக நான் சொல்லவில்லை. சேலம் ஜில்லாவில், திருச்சி ஜில்லாவில் வட பகுதியில், கோயம்பத்தூர் ஜில்லாவில் ஒரு வருஷ காலமாக ஒரு அங்குல மழைகூடப் பெய்யவில்லை. சில பிரதேசங்களை "வறண்ட பிரதேசங்கள்" என்று declare செய்யவேண்டுமென்று கலெக்டர்கள் யோசனை அனுப்பியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த அளவு மழை மாரி இருந்திருப்பதன் தகவலை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது மற்ற விஷயங்கள் எப்படியிருக்கிறதென்று பார்க்கலாம்.

பட்ஜெட்டின் அஸ்திவாரம் என்ன ? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மூன்றாவது ஆண்டு வரவிருக்கிறது. அந்த சமயத்தில் வந்திருக்கும் பட்ஜெட் இது. அதிலே நாம் பார்க்கக்கூடியது என்னவென்றால் 62 கோடி சொச்சம் வரவு, 63 கோடி சொச்சம் செலவு என்றிருக்கிறது. உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது, பல வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன, ஹரிஜனங்களுக்காக இவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வளவு பணம் செலவழித்ததில்

[Sri P. S. Chinnadurai] [7th March 1958

இந்த சபையின் சார்பாக புகழ்மாலை சூட்டக்கூடிய நிலைமை வந்திருக்கின்றது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, என்னைப் பொறுத்த வரையில் அந்த பாராட்டுரையில் எனக்கு பங்கெடுக்க இயலாது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அதோடு இந்திய அரசாங்கத்தின் நிதி அமைச்சர் பதவியானது ஒவ்வொரு தடவையிலும் அது தோல்வியாக முடிந்து வந்திருக்கிறது. அந்த தோல்வி படலத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைச் சேர்ந்த டி. டி. கே. அவர்களுக்கு என்னால் பாராட்டுரை வழங்க இயலாது என்பதைக் கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

Sri M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே ! நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையானது சாதாரண புள்ளி விவரங்களையும் கொண்ட சில கருத்துக்களை கொண்ட வெறும் கட்டுரை மட்டுமல்ல. அடுத்த 12 மாதங்களுக்கு நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய மக்களின் தலைவிதி எப்படி இருக்கப்போகின்றது என்பதை எடுத்துக் காட்டக்கூடியதாகும். இந்த நிதி நிலை அறிக்கையை நாம் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பிக்கக்கூடிய ஒரு தனி அறிக்கையாக மட்டும் பரிசீலனை செய்ய முடியாது. நம்முடைய தேசத்தில் நம்முடைய ராஜ்யம் ஒரு அங்கம். Planning Commissionனுடைய அறிக்கை, மத்திய சர்க்காரினுடைய நிதி நிலை அறிக்கை இவற்றிற்கெல்லாம் உட்பட்டு இருக்கும் நம்முடைய நிதி நிலை அறிக்கை சிறப்பாகவோ அல்லது அதற்கு தகுந்தாற்போல் பல குறைபாடுகளை உடையதாகவோ தான் இருக்க முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அதையொட்டியுள்ள மொத்த கண்ணோட்டத்தில் தான் இந்த நிதி நிலை அறிக்கையில் கொடுக்கப்படுகின்ற யோசனைகளை பரிசீலிக்க விரும்புகின்றேன். அதில் இருக்கக்கூடிய நல்ல அம்சங்களை நான் பாராட்ட தயங்கமாட்டேன். அதே மாதிரி குறைகளை எடுத்துச்சொல்லும்போது அவைகளை அமைச்சர் அவர்கள், வருத்தப்படாமல் ஏற்றுக்கொள்ளவேண்டும். முதலில் வருவாயை சம்மந்தப்பட்ட மட்டில் நிதியமைச்சர் அவர்கள் சில புதிய வரிகளை கொண்டு வந்திருக்கின்றார்கள். அந்த புதிய வரிகளுக்கு நியாயமான காரணம் காட்டவேண்டுமென்றோ, என்னவோ, செலவு இனங்களை அதிகமாக காட்டி, மற்ற இனங்களை குறைவாக காட்டி, இவைகளைக் கொண்டு சரிக்கட்ட முடியாமல் போய்விடும், ஆகையினால் புதிய வரிகள் அவசியம் என்று சொல்லி புதிய வரிகளை கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த வரிகளை சம்மந்தப்பட்ட மட்டில் நியாயமான வரிகளை கொண்டு வருகின்ற சமயத்தில் எல்லாம் நாங்கள் அவைகளை ஆதரித்து வந்திருக்கின்றோம். இந்த வரிகளில் எது நியாயமாக இருக்கின்றனவோ அவைகளை ஆதரிக்க தயங்கமாட்டோம். இப்போது விவசாய வருமான வரியை எடுத்துக் கொள்வோம். இந்த நிதி நிலை அறிக்கையில் இருக்கக்கூடிய முக்கியமான ஒரு வரி இது. இது ஒரு புதிய விஷயமல்ல. 1952-ம் ஆண்டில் நடந்த பொது தேர்தலுக்குப் பிறகு சட்ட சபைக்கு நாங்கள் வந்ததிலிருந்து எங்கள் கட்சியின் சார்பால், விவசாய வருமான வரி தான் வேண்டும் என்றும், நிலவரி என்றுள்ள அமைப்பை மாற்றி அதை அடியோடு திருத்தி அமைக்கவேண்டுமென்றும் சந்தர்ப்பம் கிடைத்த பொழுதெல்லாம் நாங்கள் சுட்டிக் காட்டி வந்திருக்கிறோம். அப்போதெல்லாம் அதை அரசாங்கம் மறுத்துவிட்டது. அந்த சமயங்களில் எல்லாம் நிலச்சீர்திருத்தமே செய்யப்போகும்பொழுது இம்மாதிரியான மாற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று சொல்லி விட்டு நிலச்சீர்திருத்தத்தைப்போல் முன்னேற்றமடைய செய்கின்ற உச்சவரம்பு கட்டுதல் போன்ற முறைகள் துரிதமாக நடைபெறும் என்று தெரிவித்துவிட்டு இப்பொழுது இந்த வரியை கொண்டு வர வேண்டியதின் அவசியமென்ன ? இதனுடைய அர்த்தமென்ன ? என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். கொஞ்ச காலத்திற்குள் நிலத்திற்கு உச்ச வரம்பை கட்டி விவசாயிகளுக்கு நன்மையை செய்யக்கூடிய இந்த திட்டத்தை ஒத்தி போட வேண்டுமென்ற நோக்கம் எங்களுக்கு கிடையாது என்று சொன்னார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம். ஆனால் இதற்கிடையில் இந்த வரிகளின் அவசியமென்ன ? [illegible] அவர்களது உடை



7th March 1958] [Sri M. Kalyanasundaram]

யிலும் நில உடமைக்கு உச்சவரம்பு இப்போது கட்டப்போவதில்லை. ஆனால் இனிமேல் நிலம் வாங்குவதில் உச்ச வரம்பு கட்டப்படும் என்று சொல்லப்பட்டது. அதற்கிடையில் இந்த வரியும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே இவைகளை எல்லாம் சேர்த்துக்கூட்டிப் பார்க்கும்பொழுது நில உடமைக்கு வரம்பு கட்டக்கூடிய கொள்கை இனிமேல் கால வரையின்றி ஒத்திப்போடப்படுமா என்ற ஐயம் ஏற்பட்டால் அது தவறு என்று 5-30 p.m. நான் நினைக்கவில்லை. இன்னும் நம் முதல் அமைச்சர் அவர்கள் எழுதிய ஒரு கட்டுரையை அவருடைய கட்சிப் பிரசுரங்களுள் ஒன்றில் பார்த்தேன். நிலவுடமைக்கு உச்சவரம்பு கட்டுவது அவசியமல்ல என்று அவர்கள் கூறக் கூடிய காரணத்தால் அதை நான் ஊகிக்கவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் சேர்த்துப் பார்க்கும்போது இந்தக் கொள்கைக்கு ஆபத்து ஏற்படுமோ, நிலச்சீர்திருத்தம் பாதி வழியில் போய்க் கொண்டிருக்கிறதே, அதை அப்படியே பாதியில் விட்டு விட்டு, அப்படியே ஒத்திப் போடப்படுமோ என்ற யோசனை தோன்றுகிறது. இந்த வரி சம்மந்தப்பட்ட மட்டில், அதற்கு எதிர்ப்பு எங்கள் பக்கத்திலிருந்து வராது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு எதிர்ப்பெல்லாம் நிதி அமைச்சருடைய பக்க பலமாக அமைந்திருக்கும், அவருக்குப் பின்னால் இருப்பவர்களிடமிருந்துதான் மறை முகமாகப் பல எதிர்ப்புகள் வந்தது: இதற்கு எங்கள் பக்கத்திலிருந்து வரவேற்பு உண்டு என்று சொல்லிக்கொள்கிறேன். ஆனால் ஒரு விஷயம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள், தன்னுடைய 6 வருஷப் பழக்கத்தில், இப்போது கொண்டு வரக்கூடியதில் 3,000 ரூபாய் என்று ஒரு அளவு காட்டியிருக்கிறார்கள். அதாவது 3,000 ரூபாய்க்கு மேல் வருமானம் வந்தால், அதற்கு வருமான வரி உண்டு. அவர்கள் கொண்டு வரக்கூடிய காலத்திலேயே 5,000, 6,000, 7,000 என்று சொன்னால், பிறகு சபையில் உயர்த்த வேண்டியிருக்கும், எதிர்கட்சிக்காரர்களுக்காகக் கொஞ்சம் உயர்த்த வேண்டியிருக்கும், தன் கட்சிக்காரர்கள் சொல்வதற்காக அவர்களுக்கும் சலுகை காட்ட வேண்டும், ஆகையினால் 3,000 என்று வைத்தால் பிற்பாடு 5,000 ஆக மாற்றிக் கொள்ளலாம் என்று தான் இப்போது 3,000 என்று போட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். என்னைப் பொறுத்த வரையில் நியாயமான அளவுக்கு உயர்த்துவதாயிருந்தால் அப்படி உயர்த்துவதில் ஆட்சேபனை இல்லை. அதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்பது என் அபிப்பிராயம். இந்த லிமிட் எந்த அளவுக்கு இருந்தால் சரியாக இருக்கும், எப்படியிருந்தால் நிலவுடமைக்காரர்களை பாதிக்காது, உணவுப் பொருள்கள் உற்பத்தியை பாதிக்காது என்று பார்த்து அதை உயர்த்த வேண்டும், அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்பது என் அபிப்பிராயம். இந்த வரியை அடிப்படையில் நான் வரவேற்கிறேன். இந்த வரியின் காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டு விடும் என்று சொல்வது வெறும் அர்த்தமற்ற கூச்சல். வசதி இருக்கக்கூடியவர்கள் சர்க்காருக்கு வரி கொடுக்க வேண்டியது அவசியம். விலைவாசி உயர்வு காரணமாக சிறு நில உடமைக்காரர்கள் அந்தப் பலனை அனுபவிக்கவில்லை, பெரிய நிலவுடமைக்காரர்கள்தான் ஒரு வருஷ காலமாக அதன் பயனை அனுபவித்து வந்திருக்கிறார்கள். ஏழை விவசாயிகள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் போன்றவர்களின் வருமானம் மிக அதிகமாகச் சுரண்டப்பட்டிருக்கிறது. இந்த வரி விதிப்பது நியாயம். அதனால் உற்பத்தி பாதிக்கப்படாது. உற்பத்தி செய்பவர்கள் நிலப் பிரபுக்கள் அல்ல. சாதாரண விவசாயிகள்தான் பாடுபடுகிறார்கள். அதனால் உற்பத்திக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்ற கூச்சலுக்கு நிதி அமைச்சர் அவர்கள் நிச்சயம் அஞ்ச மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக டீஸல் எண்ணெய்க்குப் போடக்கூடிய வரி. இதுவும் நியாயமான வரிதான் என்று நினைக்கிறேன். நான் இந்த யோசனையை ஆதரித்துப் பேசியிருக்கிறேன். அதாவது டிரான்ஸ்போர்ட் அட்வைஸரி கமிட்டியிலேயோ, வேறு சந்தர்ப்பத்திலேயோ இந்த யோசனையை முன்னமேயே சொல்லியிருக்கிறேன். பஸ் முதலாளிகள், பெரிய முதலாளிகளாயிருந்தாலும் சரி, சிறிய முதலாளிகளாயிருந்தாலும் சரி, அதிக லாபம் அடைகிறார்கள். இப்போது பெட்ரோல் காலன் ஒன்றுக்கு 3 ரூபாய்க்கு விற்கிறது. வெளி ஜில்லாக்களில் 3 ரூபாய் 2 அணா விற்கிறது என்று

[Sri M. Kalyanasundaram] [7th March 1958

ரூபாய்க்கு 8 அணா ஆவது பொது மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கும் என்பது எனது நம்பிக்கை. ரூபாய்க்கு 16 அணா போய்ச் சேராவிட்டாலும் ஒரு பாகமாவது போயிருக்கும். முன்னேற்றம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் முன்னேற்றம் எத்தகைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய பாதையில் எந்த அளவுக்குப் போயிருக்கிறதென்பதை அமைச்சரவர்கள் விருப்பு வெறுப்பு இல்லாமல் பார்க்க வேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் கொடுத்திருக்கக்கூடிய லட்சியங்களை, ஆங்கிலத்திலிருப்பதை, நான் தமிழிலே மொழி பெயர்த்துப் படிக்கிறேன். முன்பு தேசிய வருமானத்தைக் கணிசமான அளவு அதிகரித்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது; கனரக இயந்திரத் தொழில்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் தொழில் அபிவிருத்தி செய்ய வேண்டும். மூன்றுவது நோக்கம் என்னவென்றால், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு வேண்டி, அதிக பட்ச ஜனங்களுக்கு வேலை கிடைக்கக் கூடிய வாய்ப்புகளை உண்டாக்குவது. நான்காவது, எல்லாவற்றையும் விட முக்கியமானது என்னவென்றால், சொத்து உடமையிலும், வருமானத்திலும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து, பொருளாதார சக்தியை (economic power-ஐ) சமமாகப் பங்கிடுவது. அதாவது, நிலப் பிரபுக்களுக்கும், விவசாயிகளுக்கும், தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்குமிடையே, சமமாக பொருளாதார சக்தியைப் பங்கிடுவது எல்லாவற்றையும் விட முக்கியமான நோக்கம்.

இந்த நான்கு நோக்கங்களிலிருந்து பார்க்கும்பொழுது, எந்த அளவுக்கு இந்த உற்பத்தி உயர்வு பலனைக் கொடுத்திருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும், மற்றும் ரொக்க சம்பளம் பெறக்கூடிய மற்ற ஊழியர்களுக்கும் எந்த அளவு பலன் கிடைத்திருக்கிறது என்பதைப் பார்த்தால் நாம் பெரும் அளவுக்கு ஏமாற்றம் அடைய வேண்டியிருக்கிறது. இந்த விஷயத்தில் சர்க்கார் கொள்கையில் பெரும் குறைபாடுயிருக்கிறது. உற்பத்தி பெருகினாலும் சரி, வருமானம் அதிகரித்தாலும் சரி, தேசபக்தி பெருக்கெடுத்தாலும் சரி, தேசம் முன்னேறுவது சாத்தியமல்ல. உற்பத்திப் பெருக்கினால் ஏற்படக் கூடிய பலன் மக்களுக்குப் போய்ச் சேர முடியாது என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. விளைச்சல் அதிகமாகயிருந்தும், 1957-ல் உணவுப் பொருள்களின் விலை ஏறுமுகமாகயிருந்தது என்று கவலையோடு சொல்லுகிறார்கள். 1956 ஜூலையில் மொத்த விலைவாசிப் புள்ளி 377 ஆக யிருந்தது. படிப்படியாக உயர்ந்து சென்ற டிசம்பர் மாதத்தில் 512 ஆக இருந்தது. இப்பொழுது 4 புள்ளி குறைந்திருக்கிறது என்று விவசாய அமைச்சரவர்கள் சொன்னார்கள். எனக்குக் கிடைத்த தகவல் மூன்று புள்ளி குறைந்திருக்கிறது என்று. இரண்டுக்கும் அதிக வித்தியாசமில்லை 512-லிருந்து 4 புள்ளி குறைந்திருக்கிறதென்றால் இப்பொழுது 508 ஆக யிருக்க வேண்டும். ஐந்நூறு என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். 1956 ஜூலை மாதத்தில் இருந்ததற்கும், 1958 பிப்ரவரியில் இருப்பதற்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது? இந்த 1½ வருஷ காலத்தில் இந்த உயர்வினால் பலன் அடைந்தவர்கள் யார், பாதிக்கப்பட்டவர்கள் யார்? உற்பத்தி பெருகியதன் பலன் என்னவென்றால் பிழைக்கக்கூடிய மக்களிடத்தில் பட்டினி அதிகமாயிற்று. இந்த மாதிரி ஒரு கொள்கையை நமது சர்க்கார் கடைப்பிடிக்கலாமா என்பதை சிந்தித்துப் பார்க்கும்படி நிதி அமைச்சரவர்களை கேட்டுக் கொள்கிறேன். "நான் ஒருவன் மட்டும் என்ன செய்கிறது" என்று சொன்னால் பிரயோஜனமில்லை. எல்லா ராஜ்ய நிதி அமைச்சர்களும் சேர்ந்து மத்திய சர்க்காரின் கொள்கையை மாற்றாத வரையில், இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் லட்சியங்கள் நிறைவேறுவதற்கு மற்ற வசதிகளைச் செய்யாத வரையில், இந்த உற்பத்திப் பெருக்கினால் ஏற்படக் கூடிய பலனை நாம் அனுபவிக்க முடியாது. விலைவாசி உயர்வு இந்த நிலையிலிருக்கும்போது ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளம் போதவே போதாது. போன வருஷம் ரூ. 12 கொடுத்தாலும் கூட, அந்த ரூபாய் எந்த மூலைக்கு? "புள்ளி விவரம் கிட்டத்தட்ட 135 பாயிண்டு உயர்ந்திருக்கிறதே, அதற்கு என்ன செய்திருக்கிறீர்கள்" என்று அவர்கள் கேட்கிறார்கள். இது மிகவும் நியாயமான கோரிக்கை. இப்படியிருக்கும்போது, மத்திய சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் போட்டாலும் சரி, இரண்டாவது Pay Commission-ஐ ஏற்படுத்தினாலும் சரி, அதனால் பலன் ஏற்படுமென்று நான் நினைக்கவில்லை. சர்க்கார் போடும் திட்டங்களை நிறைவேற்றுவது யார்? இப்பேர்ப்பட்ட சர்க்கார் சிப்பந்திகள் மூலமாகத்தான் திட்டங்கள் நிறைவேற வேண்டும். அவர்களிடத்தில் இம்மாதிரி உற்சாகக் குறைவு இருக்குமேயானால், இப்பேற்பட்ட மனக்கசப்பு இருக்குமேயானால், என்ன நிலைமை ஏற்படுமென்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். விலைவாசி உயர்வுப் புள்ளியை சர்க்கார் தயாரிக்கிறது. Cost of living index புள்ளி விவரத்தையும் சர்க்கார் தயாரிக்கிறது. இதில் பல குறைபாடுகள் இருக்கின்றன என்று புகார் சொல்லப்படுகிறது. அந்தக் கணக்கைப் பார்த்தாலும் கூட, சென்னையைப் பொறுத்த வரையில் வாழ்க்கைச் செலவு உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது. பட்டணம் படிக்கு 1 ரூபாய் கொடுத்தால் தான் அரிசி கிடைக்கிறது. இன்னும் விறகு விலையை எடுத்துக் கொண்டால், சென்ற ஒரு வருஷ காலமாக டன் ஒன்றுக்கு ரூ. 55-லிருந்து 60 ரூபாய் வரை ஒட்டு மொத்தமாக விற்கப்படுகிறது. சாதாரண தொழிலாளர்களும், சர்க்கார் சிப்பந்திகளும் 1 குண்டு விறகுக்கு ரூ. 2-0-0, அல்லது ரூ. 2-2-0 கொடுத்தால் தான் நல்ல விறகு கிடைக்கிறது. மோசமான விறகு ரூ. 1-12-0 அல்லது ரூ. 1-14-0-க்குக் கிடைக்கிறது. இப்படி ஜனங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (உதவி சபாநாயகர் தலைமை வகித்தார்) 90 லக்ஷம் பேருக்கு வேலை கொடுக்கிறோம் என்ற லக்ஷியத்தைப் படிக்கும்போது இனிமையாகத்தான் இருக்கிறது. 5-50 p.m.

கைத்தறியைப்பற்றி, சட்ட சபையில் பல முறை, பல அங்கத்தினர்கள், கட்சி வேறுபாடு இன்றி நிலைமையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி யிருந்தும் 2½ லக்ஷம் ரூபாய்க்கு துணி தேங்கி இருக்கிறது. கைத்தறி துணிக்கு கொடுக்கும் ரிபேட்டை குறைத்ததினால் மட்டும் துணி தேங்கவில்லை. ரிபேட் குறைப்பதற்கு முன்பிருந்தே தேக்கம் அப்படியேதான் இருந்து கொண்டிருக்கிறது. பொங்கலின் போது தாற்காலிகமாக இரண்டணா ரிபேட் கொடுத்தார்கள். அப்பொழுது செலவழிந்தற்கு பிறகும் தேக்கம் இருக்கிறது. இன்று காலையில் சொஸைட்டி அதிகாரிகளைக் கண்டு இதைப்பற்றி பேசிக்கொண்டிருந்தேன். புள்ளி விவரப்படி 2½ கோடி ரூபாய் பெறுமான கைத்தறி தேங்கியிருப்பதாக கூறினார்கள். கோயம்புத்தூரில் 3,000 தொழிலாளருக்கு "Lay off" அதாவது வாரத்திற்கு 2 அல்லது 3 நாட்களுக்கு மட்டும் வேலை, மற்ற நாட்களில் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஏழு மில்களில் ராத்திரி ஷிப்டை குறைக்க வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அகமதாபாத் மில்களிலும் நைட் ஷிப்ட் (Night shift)-ஐ குறைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இப்படி இருக்கும்போது 90 லக்ஷம் பேர்களுக்கு எப்படி வேலை கொடுப்பது. பொதுவாக சில கிராம சேவக்குகளையும், மற்றவர்களையும் கம்யூனிட்டி டெவலப்மெண்ட் பகுதிகளில் வேலைக்கு அமர்த்தியிருக்கலாம். ஏற்கனவே வேலையில் இருப்பவர்களை நிரந்தரமாகச் செய்வதற்கு பதிலாக, சில ஆட்களுக்கு புதிய வேலைகள் கொடுப்பதால் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விலைவாசிகளின் உயர்வைப் பற்றி நிதி மந்திரி அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"உணவுப் பொருள்களில் குறிப்பிடத் தக்க பற்றாக் குறையின் காரணமாக இந்தத் திடீர் உயர்வு ஏற்படவில்லை என்பது நிலைமையை ஆராயும் போது இப்பொழுது தெளிவாகிறது".

மூன்று வருஷங்களுக்குப் பின் இப்பொழுதுதான் அவருக்குத் தெரிந்தது போலும். உணவு பற்றாக்குறை காரணமாக உயர்வு ஏற்படவில்லை என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். பின் இதற்குக் காரணம் என்ன? விவசாய உற்பத்தி பெருகத்தான் வேண்டும். நம்முடையத் தேவையை பூர்த்தி செய்த பிறகு, வெளி நாட்டு செலாவணி பெரும் வகையிலும் உற்பத்தி செய்ய வேண்டும். சர்க்கரை, கடலை முதலிய

[Sri M. Kalyanasundaram] [7th March 1958

பொருள்களை வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்து நமக்குத் தேவையான யந்திரங்களைப் பெறவேண்டும். உணவு பற்றாக்குறைக்கு கேரளாவுக்கு அரிசி போவது காரணம் அல்ல, நான் திருச்சிராப்பள்ளியில் இருக்கக்கூடிய [illegible] தஞ்சாவூரிலிருந்து குருவை நெல்லை தருவித்து, இரண்டு தரம் [illegible]த்து, மணச்சநல்லூர் மார்க்கமாக அனுப்புவது வழக்கம். இந்த [illegible] கேரள மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள். நம் தமிழ் நாட் [illegible]தை யாரும் சாப்பிடக்கூட மாட்டார்கள். இந்தக் குருவை [illegible]0 நாள் பயிர். இது 70 அல்லது 75 நாட்களிலேயே அறுவடை [illegible]கூடியதாக இருக்கும். இந்த அரிசி, மாமிச ஆகாரத்திற்கு மிகவும் பொருத்தமாய் இருப்பதால் கேரள மக்கள் விரும்புகிறார்கள் என்று சொல்லுகிறார்கள்.

கேரளாவில், இன்று கம்யூனிஸ்டுகள் ஆட்சியை நடத்தினாலும், காங்கிரஸ் ஆட்சியை நடத்திய காலத்திலும் கூட, ஆந்திரா பிரிவினைக்கு முன்பும், ஆந்திரா, தமிழ், கேரள மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை வைத்துத்தான் சட்ட சபையில் நாங்கள் வேலை செய்து கொண்டு வந்து இருக்கிறோம். தமிழ் நாட்டுக்கு தண்ணீர் கிடைக்கக் கூடாது, பரம்பிக்குளம் திட்டம் வெற்றி அடையக் கூடாது என்று பிரசாரம் செய்யக் கூடிய சக்திகள் அங்கு இருக்கலாம். தமிழ் நாட்டுக்கும், கேரள சர்க்காருக்கும் இடையே நல்லுறவு ஏற்பட இரு ராஜ்ய மக்களுக்கும், நல்ல முறையில், முன்னேற்றம் ஏற்படக் கூடிய வகையில், பரம்பிக்குளம் திட்டமும், மேல் பெரியாறு திட்டமும் வெற்றி அடைய வேண்டும். கேரளாவில் இருக்கும் கம்யூனிஸ்டு மந்திரி சபை அங்கு இருக்கக்கூடிய பல அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில், கட்சி வேறுபாடு இன்றி, பரம்பிக்குளத் திட்டத்தில் சீக்கிரமாக உடன்பாடு ஏற்பட்டு, வெற்றிகரமாக முடியவேண்டும் என்ற ஆவலைப்பார்த்து நான் பெருமைப்படுகின்றேன். விரைவிலேயே நல்லுறவு வளர்ந்து, இந்தப்பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என்பதே என்னுடைய அபிப்பிராயம்.

**DEPUTY SPEAKER** : The hon. Member has got two minutes more.

**Sri M. KALYANASUNDARAM** : May I take some more time.

**DEPUTY SPEAKER** : Yes.

**Sri M. KALYANASUNDARAM** : உணவு உற்பத்தி இருந்தும் பற்றாக் குறைக்கு காரணம் என்ன. கேரளாவிற்கு அரிசி அனுப்புவதால் அல்ல என்று சொல்லி இருக்கிறார்கள். பின் அதற்கு காரணம் என்ன, ஏன் அதை ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும். இதைப்பற்றி நிதி அமைச்சருக்கு நிச்சயமாக தெரிந்திருக்கும். விவசாய அமைச்சருக்குக் கூட இதைப்பற்றி தெரிந்து கொள்ளக் கூடிய சக்தி இருக்கிறது. அவரிடம் **Special Branch Police** இருக்கிறது. இன்று கொடுத்த அறிக்கையில் கூட மலிவு தான்யம் கொடுக்க அவசியம் இல்லை என்றார். மலிவு தான்யம் கொடுக்க வேண்டும் என்ற கிளர்ச்சி எங்கேயும் காணோம் ; ஆனால் சட்ட சபையில் மட்டும் சில அங்கத்தினர்கள், அரசியல் காரணங்களுக்காக, இவைகளை நீடிக்க வேண்டும் என்று சொல்வதாகக் குறிப்பிட்டார். மலிவு தான்யங்களை நிறுத்திவிட்டால் நிலைமை என்ன ஆகும் என்று நாம் நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிரசாரத்திற்காக இதை சொல்வதாக நாம் நினைக்கக்கூடாது. மலிவு தான்ய கடைகள் கிடையாது என்று சொன்னால் உணவுப் பொருள்களை கடன் வாங்கியாவது சேமித்து கொண்டு விடுவார்கள். அதனால் விலைவாசிகள் ஏறிவிடும். இப்பொழுது மொத்தக்குறியீட்டில் 4 புள்ளிகள் குறைந்திருப்பதாகவும் இன்னும் அறுவடையானால் மேலும் குறையும் என்று சொல்லியிருக்கிறார். இந்தச் சமயத்தில் மலிவு தான்யக் கடைகளை மூடிவிட்டால் உணவு தான்யங்களின் நிலைமை என்ன ஆகும்.



7th March 1958] [Sri M. Kalyanasundaram]

நமது ராஜ்யத்தில் உணவு தானியங்களின் விலைவாசி அதிகமாக இல்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார். அப்படி அதிகமாக இல்லை என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது. உணவு தானியம் அதிகப்படியாக விளைந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படி இருந்தும் விலைவாசி அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன ? அந்த தானியங்கள் எல்லாம் எங்கே போச்சு ? அதற்கு வேண்டிய புள்ளி விவரங்களைக் கொடுக்க வேண்டாமா ? அதிலுள்ள ரகசியம் என்ன ? அதிகப்படி உற்பத்தியான பொருள் எங்கே போச்சு என்று கேட்கிறேன். இதை முக்கியமாக நிதி அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவர் நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலுக்குப் போகக் கூடிய சமயத்தில் இதைப்பற்றி அவர் அங்கு வலியுறுத்த வேண்டும். நாம் இப்பொழுது திட்டங்களைப் போட்டு விட்டோம். மக்களுக்கு ஆசையைக் காண்பித்து விட்டோம். பணம் கொடுக்க மாட்டேன் என்று சொல்லுகிறார்களாம். நாமே போட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று ப்ளானிங் கமிஷனிடம் சொல்லி அதற்குத் தக்க நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய நிதி நிலைமை என்ன, அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று சொல்ல வேண்டும். 6-00 p.m.

கடந்த ஐந்தாண்டு திட்ட காலத்தில் நாம் நோட்டு அச்சடிக்கக் கூடிய திட்டம் இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் அப்படிப் பட்ட திட்டம் இல்லை. முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில் பண நெருக் கடியை சமாளிக்க **deficit financing** என்று சொல்லுவார்கள், அதற்கு சரியான தமிழ் எனக்கு தெரியாது, நோட்டு அச்சடிப்பது என்று தான் சொல்லலாம், அப்படிச் சொன்னால் தப்பு அர்த்தம் செய்து கொள்ளக்கூடாது, அதற்குக் கேவலமான அர்த்தம் எடுத்துக் கொள்ளக்கூடாது, நோட்டு அச்சடித்து அதன் மூலம் அந்த **deficit financing**-கை சமாளித்துக்கொள்ளலாம் என்று திட்டம் போட்டிருந்தார்கள். அப்படி நோட்டு அச்சடிப்பதில் தவறு ஒன்றும் இல்லை. அதனால் பண வீக்கம் ஏற்பட்டு விடுமோ என்றும் நினைக்க வேண்டியதில்லை. நான் படித்த பொருளாதார சாஸ்திரத்தில் அப்படி நோட் அச்சடிப்பது தவறு இல்லை என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதனால் நாம் எவ்வளவு நோட் அச்சடித்தாலும் அதனால் பண வீக்கம் ஏற்பட்டு விடாது. உற்பத்தி பெருகிக் கொண்டிருக்கும் இந்த நாளில் நோட்டை அச்சடித்தால் எந்த விதமான ஆபத்தும் வந்துவிடப் போவதில்லை. அப்படி நோட்டு அச்சடித்து ஐந்து கோடி ரூபாய் அதிகமாகக் கொண்டு வந்து அதன் மூலமாக நாம் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ளலாம். இதைப்பற்றி கூட கமிஷனிடம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

மற்றும் இந்த திட்டங்களை நிறைவேற்ற இரண்டு அம்சங்களைப்பற்றி வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய நிலைமையில் விலைவாசிகள் உயர்ந்துகொண்டிருக்கின்றன. விலைவாசி உயர்ந்து கொண்டு வருவதை நாம் தடுக்க வேண்டும். இதே நிலைமையில் வியாபாரிகளுடைய நிலைமையையும் நாம் கவனிக்க வேண்டும். மற்றொன்று பண வீக்கத்தை நாம் "செக்" பண்ண வேண்டும். அதனால் எந்த விதமான ஆபத்தும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நாம் 1,200 கோடி ரூபாய் நோட் அச்சடிக்கலாம் என்ற யோசனையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிகப்படியாக அச்சடிக்கப்பட்ட பணம் எங்கே போகிறது, அவைகள் எல்லாம் ஷெட்யூல்ட் பாங்குகளுக்குப் போகின்றன. அந்த பாங்குகள் அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு உணவு சூதாட்டம் ஆடுகிறார்கள். அவர்கள்தான் தனிப்பட்டவர்களுக்கு பண உதவி செய்கிறார்கள். ஆனால் அவர்கள் அரசாங்கத்திற்கு அந்த உதவியைச் செய்வதில்லை. நமது தொழில் மந்திரி அவர்கள் என்ன சொல்லுகிறார் என்றால் பஸ்களை அதிகமாக விடவேண்டும் என்றும், அப்படி அதிகப்படியான பஸ்களை வாங்குவதாக இருந்தால் பணம் இல்லை என்றும், பணத்திற்கு எங்கே போவது என்றும் கேட்கிறார். ஆனால் ஒரு தனிப்பட்ட முதலாளி ஏதாகிலும் ஒரு தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால் அவனுக்கு எப்படியோ பணம் கிடைத்து விடுகிறது. இந்த ஷெட்யூல்ட் பாங்குகள்

வேண்டும். ஆகவே சிறு தொழில்களை சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும். பஸ் தொழிலை எடுத்து நடத்துகிறார்கள். அதில் பல குறைபாடுகள் இருந்தாலும் அதன் மூலம் சர்க்காருக்கு வருஷத்திற்கு 23 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. நமக்கு வருமானம் வரக்கூடிய சிறு தொழில்களை சர்க்காரே ஏன் எடுத்து நடத்தக்கூடாது என்று கேட்கிறேன். இரண்டு மூன்று வருஷங்களாக பேப்பர் தொழிலைப்பற்றிச் சொல்லிக் கொண்டு வந்தோம். அதையும் காணோம். நம் ராஜ்யத்தில் எண்ணை சுத்திகரிப்பு தொழிற்சாலை இல்லை. நாம் பெட்ரோலை அப்படியேதான் வரவழைத்துக்கொண்டிருக்கிறோம். நமது ராஜ்யத்திற்கு ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை அவசியம். அதைப்பற்றியும் மூன்று வருஷங்களாக வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். அங்கிருந்து பெட்ரோலாக ரயிலில் வருவதை விட சென்னை வந்து, இங்கே சுத்திகரிப்பு செய்வது
6-10 p.m. பல தொழிலாளிகளுக்கு வேலை கிடைப்பது மட்டும் அல்ல. சர்க்காருடைய வருவாயை உயர்த்துவதற்கு வழியாக இருக்கும் என்று சென்ற ஐந்தாறு வருஷங்களாகச் சொல்லியிருக்கிறோம். அவற்றையெல்லாம் மூன்றாவது வருஷத்திலாவது பார்க்கலாமென்றால், பார்க்க முடியாத நிலையில்தான் இருக்கிறோம் என்று தெரிவித்து, இந்த பட்ஜெட்டின் விளைவு அவ்வளவு திருப்திகரமாக இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய ராஜ்யம் சம்பந்தப்பட்ட மட்டில் உணவு நிலைமையும், வேலையில்லாத் திண்டாட்ட நிலைமையும், தொழிலாளி, விவசாயிகள் நிலைமையும் இன்னும் நெருக்கடியாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது என்ற உண்மையை நாம் ஆராயாமல், நல்ல கவர்ச்சிகரமான முறையிலே சித்தரித்துக் கொண்டு போவது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும் என்று தெரிவித்து, இவ்வளவு நேரம் எனக்குப் பேச அனுமதித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

6-11 p.m. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again tomorrow at 1 p.m.

The House then adjourned.

### V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory rules, orders and notifications.

69. *Notification issued with G.O. Ms. No. 183, Home, dated 24th January, 1958 reducing the Court Fees payable under Article 10 (j) of Schedule II to the Madras Court Fees and Suits Valuation Act, 1955 on applications and petitions presented to the Board of Revenue, Madras by Harijans. [Laid on the Table of the House under Section 82 (2) of the Madras Court Fees and Suits Valuation Act, 1955.]*

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, the 8th March 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at 1 p.m., Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I—ANNOUNCEMENTS BY THE HON. THE SPEAKER.

#### (1) ISSUE OF TICKETS TO VISITORS' GALLERY.

MR. SPEAKER: I wish to inform hon. Members that there has been great difficulty for me in the matter of issue of tickets of admission to the Speaker's Gallery. There is accommodation for 49 honourable gentlemen and for the first batch, I have issued 73 tickets and for the second batch I have issued 110 tickets. In addition to this, I have opened my room and provided 12 chairs for people to sit and listen from there to what is going on in this House. If I am unable to oblige any more, I would request to be excused. I cannot oblige everybody for want of accommodation. The tickets were issued yesterday itself and one hon. Member complained that I should not have issued the tickets yesterday. If only the hon. Member had gone through the rules, he would find that it has been very clearly stated therein that the tickets will be issued from 1-30 p.m. on the previous day. So, there is nothing wrong in issuing the tickets the previous day. I would like to tell the hon. Member that I have followed the rules very strictly.

My second request is this. All the galleries will have to be vacated at half-past three of the clock to accommodate the second batch of visitors. There is nothing new in this procedure. In the Parliament and other Legislature, in view of limited accommodation, such a practice exists. So, I have gone half way. Exactly at 3-30, the galleries will be emptied and the second batch of 110 persons to whom passes have been issued will be admitted.

THE HON. SRI C. SUBRAMANIAM: I wish you had three batches.

### II—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

MR. SPEAKER: Let us take questions Nos. 243 and 243-A together.

*Tamilnad Non-Gazetted Officers' Union*

* 243 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have received a copy of the resolutions passed by the Tamilnad Non-Gazetted Officers' Union at their general body meeting held at Madurai on 24th November 1957; and

[8th March 1958

(b) whether they have applied to the Government to register their union under the Trade Union Act?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) No, Sir.

* 243-A Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Tamilnad Non-Gazetted Officers made any representations to the Government regarding their grievances in February, 1958;

(b) if so, the action taken thereon; and

(c) whether the Government will place a copy of the memorandum, if any, presented by them on the Table of the House?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a), (b) & (c) The Government have received a memorandum from the Tamilnad Non-Gazetted Government Officers' Union. The requests contained therein are under consideration. They do not see any necessity to place a copy of the memorandum on the Table of the House.

SRI N. K. PALANISAMI : ஸார், தபால் தந்தி ஊழியர்கள், பாங்கு குமாஸ்தாக்கள் டிரேட் யூனியன் சட்டப் பிரகாரம் பதிவு செய்யப்பட்டிருப்பதுபோல அதையும் பதிவு செய்வதற்கு என் ஆட்சேபம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது சர்க்கார் ஆட்சேபணை செய்கின்ற காரியம் அல்ல. நான் பி. பகுதிக்குப் பதில் சொல்லியிருப்பதும் அவர்கள் பதிவு செய்துகொள்ள விண்ணப்பித்துக் கொள்ளவில்லை என்றேன்.

SRI T. T. DANIEL : Recently, the Kerala Government passed an order regarding the fixation of enhanced salary and allowances of some of the N.G.Os. of Kanyakumari district and our Government have questioned the propriety of that order on the ground that it was passed subsequent to the merger. Our Government have cancelled that order and have asked the N.G.Os. of that district to repay the amount which they have already received. Will the Government be pleased to reconsider the matter and pass necessary and proper orders?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, it is under consideration.

SRI K. RAMACHANDRAN : அவர்களது தீர்மானத்தில் முக்கியமாக கவனிக்கப்பட்டவைகள் எவை ? அவற்றைப் பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இவைகள் எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. அந்தப் பரிசீலனை முடிந்த பிற்பாடு இந்தக் கேள்வியைப் போட்டால் பதில் சொல்லமுடியும்.

SRI N. K. PALANISAMI : அவர்களுக்கு ரூபாய்க்கு நான்கு படி அரிசி விற்றகாலத்தில் சம்பளம் தீர்மானிக்கப்பட்டது. இன்றைக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி விற்கிற காலத்தில் அவர்களுடைய சம்பளத்தை எந்த வகையில் உயர்த்தலாம் என்பதைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு பே கமிஷனை சர்க்கார் நிறுவி பரிசீலிப்பார்களா ?



8th March 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே முக்கியமான பிரச்னை அவர்களுடைய சம்பளத்தை எந்த வகையில் உயர்த்த முடியும் என்பது தான். அதைப்பற்றி நாமும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். நிதிக்கமிஷன் வேறு எப்படி பரிசீலனை செய்ய முடியும் ?

SRI S. LAZAR : நமது ராஜ்ய என்.ஜி.ஓ.க்களுடைய பிரச்னை தொடர்ந்து இருந்து வருகிறது. இதற்கு திருப்திகரமான முடிவு எப்போது ஏற்படும் என்று சர்க்கார் அறிவிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANAIM : அதே மாதிரி நமது வாழ்க்கைப் பிரச்னையும் அப்படியேதான் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினை எப்போது தீர்க்க முடியுமோ அப்போது தான் அதுவும் தீர்க்கப்படும்.

SRI M. KALYANASUNDARAM: இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்குப் போதுமான நிதி கிடையாது. அமைச்சர் அவர்கள் கூறின பதிலின் அர்த்தமும் அதுதான். அப்படியானால் மத்திய சர்க்காரிடம் இதன் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள் ? நம் ராஜ்யத்தின் நிதி நிலைமையைச் சமாளிக்க என்ன யோசனை கூறியிருக்கிறார்கள் ? இது சம்பந்தமாக நேஷனல் டெவலெப்மெண்டு கவுன்ஸிலிடம் ஏதாவது திட்டவட்டமாக யோசனை சமர்ப்பித்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது பற்றி கனம் அங்கத்தினர் தனியாகவே ஒரு கேள்வி போட்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். அதற்குப் பதில் அளிக்கும்போது இவ்விவரங்கள் எல்லாம் தரப்படும்.

SRI K. ANBAZHAGAN : சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுவது காரணம் காட்டப்பட்டது. இவ்வாண்டு வரவு செலவுக் கணக்கிலேயே துண்டு விழாத நிலையுள்ளபோது இந்த ஊழியர்களுடைய சம்பளத்தையும் ஏன் உயர்த்தி யிருக்கக்கூடாது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதையும் சேர்த்தால் இன்னும் ஒரு துண்டு பட்ஜெட் கொடுக்க வேண்டியிருக்கும்.

SRI T. S. RAMASWAMY PILLAI : அவர்களுடைய மகஜரில் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் ? அதிலுள்ள முக்கியமான கோரிக்கைகள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது பதினைந்து பக்கம் இருக்கிறது. எல்லாமே முக்கியம் என்று நான் கருதுகிறேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI : On a point of order இம்மாதிரியான கேள்விக்கு கனம் அமைச்சர் அவர்க்ள் நோட்டீஸ் வேண்டும் என்று பதில் சொல்லலாம். அல்லது பொதுஜன நலனைக் குறித்துச் சொல்ல மறுக்கலாம். இரண்டும் இல்லாவிட்டால் அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்விக்குப் பதில் அளிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

MR. SPEAKER : உங்கள் கேள்வி மூலக் கேள்வியாக இருந்தால் கனம் அமைச்சர் அவர்கள் முழு பதிலையும் அச்சிட்டாவது கொடுக்கத்தான் வேண்டும். உப கேள்விக்குப் பதில் சொல்லத்தான்வேண்டும் என்று அமைச்சர் அவர்களை வற்புறுத்தமுடியாது.

SRI T. T. DANIEL : May I know whether the Government will be pleased to take steps to implement the order which they have passed recently giving Rs. 7 as increased Dearness Allowance to the N.G.Os. of Kanyakumari district, particularly those who are receiving Rs. 40 and less.

THE HON. SRI C. SUBRAMANIAM : A separate question may be put.

[8th March 1958

SRI A. GOVINDASAMY : மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய சம்பளத்தைப் பரிசீலனை செய்ய இரண்டு பே கமிஷன்களை நியமித்தார்கள். நமது சர்க்கார் ஒரு முதல் கமிஷனையாவது நியமித்து இதைப் பரிசீலனை செய்யக்கூடாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி அங்கத்தினர்கள் முன்னாலேயே வைத்திருக்கிறேன். என்ன என்ன விஷயத்தில் செலவைக் குறைக்கலாம். கல்விக்கு எட்டு கோடி என்று இருப்பதை 4 கோடியாகக் குறைத்து இன்னொரு கோடியை சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பள உயர்வாகக் கொடுக்கலாம் என்று அவருடைய கட்சித் தலைவர் யோசனை கூறினால் அதைப்பற்றிக்கவனிக்கலாம்.

SRI D. S. AUTHIMOOLAM : மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும், ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கும் இடையே உள்ள சம்பள விகிதத்தில் ரொம்ப வித்தியாசம் இருப்பதால், அதை நீக்குவதற்கு நமது சர்க்கார் மந்திரிகளுடைய யோசனை என்ன ? இப்படிப்பட்ட சம்பள வித்தியாசம் இருப்பது நியாயமா இல்லையா என்பதைப்பற்றி நமது அமைச்சருடைய அபிப்பிராயம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னுடைய அபிப்பிராயம், சர்க்காருடைய அபிப்பிராயம், இந்த வித்தியாசம் இருக்கக்கூடாது என்பது தான். இதை எந்த முறையில் நீக்கலாம் என்பதைப்பற்றியும் ஆலோசனை செய்து பிளானிங் கமிஷனிடமும், மத்திய சர்க்காரிடமும் யோசனை கூறியிருக்கிறோம்.

SRI N. K. PALANISAMI : அவர்கள் வேலை செய்யக்கூடிய நேரத்தை ரெகுலரைஸ் செய்ய சர்க்கார் அத் திட்டம் பற்றி என்ன முடிவு செய்தார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போதே **Hours of Work** இருக்கிறது.

*Home-sites for Harijans*

* 244 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state the action taken so far to provide the Harijans of Avanipur village, Olakur firka in Tindivanam taluk, South Arcot district, with house-sites?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Collector of South Arcot is taking action to assign the land in R.S. No. 703 measuring 11·29 acres of Avanipur village for accommodating about 140 families of Harijans.

SRI M. JAGANNATHAN : கலெக்டர் மூலம் நிலத்தை ஹரிஜனங்களுக்கு குடிமனை வழங்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நிலம் புறம்போக்கு நிலமா ? அல்லது தனியார் நிலமா ? தனியார் நிலமாக இருந்தால் சர்க்கார் அதை ஆர்ஜிதம் செய்த பின்னர் தான் அதை வழங்க முடியும். அதற்கு இரண்டு மூன்று வருடம் காலதாமதமாகிறது. இதற்கு மத்தியில் ஹரிஜனங்கள் குடிமனைக்கு போதிய வசதியில்லாமல் பல நோய்களுக்கு ஆளாகி மடிந்து வருகிறார்கள். ஆகவே இதை உடனடியாக கவனித்து குடிமனை வழங்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது, புறம்போக்கு நிலம் என்று நினைக்கிறேன். அதை நத்தம் புறம்போக்காய் மாற்றி ஹரிஜனங்களுக்குக் கொடுப்பதாக உத்தேசம். அதை நல்ல முறையில், சௌகரியமாக, சுகாதார முறையில் இந்த வீடுகள் அமைய வேண்டுமென்று, அதற்காக டவுன் பிளானிங் அனுமதியை எதிர்பார்க்கிறோம். அது வந்ததும் கூடிய சீக்கிரம் செய்யப்படும்.



8th March 1958]

SRIMATHI T. N. ANANDANAYAKI : சில இடங்களில் மனைக்கட்டுகளுக்கு என்று நல்ல விளைச்சல் நிலங்களை எடுத்துக்கொள்ளுகிறார்கள். உள்ளூர் கணக்குப் பிள்ளையை விட்டு எழுதச் சொல்லி வம்புக்கு இழுத்து விடுகிறார்கள். ஆகவே, விளைச்சல் நிலங்களை எக்காரணத்தை முன்னிட்டும் இந்த மனைக்கட்டுகளுக்காக எடுக்கக் கூடாது. அப்படி எடுத்தால் உணவுப் பிரச்சினை பாதிக்கப்படுமாதலால், அதைப்பற்றி கவனிப்பீர்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தப் பிரச்சினையில் வம்புக்கு இழுக்கிறது ஒன்றும் கிடையாது.

SRI N. MARUDACHALAM : புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டியிருக்கும் ஹரிஜனங்களை அதிலிருந்து வெளியேற்ற கலெக்டர் நோட்டீஸ் அனுப்பியிருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

THE HON SRI M. A MANICKAVELU : இந்த நிலத்தைப் பற்றித் தான் சொல்ல முடியும், மற்ற விஷயங்களைப் பற்றி தனியாக கேள்வி கேட்கவேண்டும்.

*Coffee and Tea Plantations*

* 245 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the acreage of coffee and tea plantations in Coimbatore and Nilgiris districts (districtwar);

(*b*) the quantity and value of coffee and tea produced during the last five years; and

(*c*) the number of labourers employed in these plantations (districtwar)?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement * furnishing the information is placed on the table of the House.

SRI P. G. MANICKAM: இந்தப் பிரதேசத்தில் காப்பி தேயிலை தோட்டங்களில் ஒரு லட்சத்தி எண்ணாயிரத்தி எண்ணூறத்தி நாற்பது தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களில் 80 சத விகிதம் ஹரிஜனங்கள். ஆகையால் அவர்களுடைய நன்மையைக் கருதி அவர்களுக்கு ராஜ்ய இன்ஷூரன்ஸ் திட்டத்தில் விஸ்தரிக்க சர்க்கார் யோசனை செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the Employees State Insurance Act is applicable only to factory workers.

SRI M. KALYANASUNDARAM : ஆனைமலைத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, இண்டஸ்ட்ரியல் டிரிப்யூனல் அவார்ட் சம்பந்தமாக சமரசம் ஏற்படாமல் இருக்கிறது. அப்படி ஒரு சமரசம் ஏற்படுத்த சர்க்கார் என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் சமரசம் ஏற்படுத்துவது என்று சொல்வது சரியல்ல. ப்ளாண்ட்டேஷன் தொழிலாளர்கள் எல்லோருக்கும் ஒரு தீர்ப்பு கொடுக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பின் பேரில் தோட்ட முதலாளிகள் சுப்ரீம் கோர்டிற்கு அப்பீல் செய்தார்கள். ஸ்டேயும் வாங்கிவிட்டார்கள். நீலகிரி ஜில்லாவில் இருக்கும் தோட்டத் தொழிலாளர்களும் இன்னும் சிலரும் இதுபற்றி ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அந்த ஒப்பந்தத்திற்கு ஆனைமலை தோட்டத் தொழிலாளிகள் ஒத்துக் கொள்ளவில்லை. அதில் சேரவில்லை. ஆகவே கோர்ட் தீர்ப்புப்படி நடக்க வேண்டியது சட்ட பூர்வமான நிலையாகும். இருந்தாலும் சர்க்கார் அதில் தலையிட்டு அவர்களுக்கும் தோட்ட முதலாளிகளுக்கும் ஒரு சமரசம் செய்து

* Printed as Appendix I on page 544 infra.

[Sri M. Kalyanasundaram] [7th March 1958

அவனுக்கு தாராளமாக பணம் கடனாகக் கொத்து உதவுகிறது. அதனால் நான் என்ன சொல்லுகிறேன் என்றால் எப்பொழுது தனிப்பட்டவர்களுக்கு பணம் கொடுக்க முடிகிறதோ அதேபோல் ஏன் அந்த பாங்குகள் சர்க்காருக்கும் கொடுக்கக்கூடாது என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே அந்த பாங்குகளையெல்லாம் தேசிய மயமாக்கி விட்டால் நமக்கு வேண்டிய அளவு பணம் கிடைக்கும் அல்லவா ? ஆகவே பாங்குகளை நாம் தேசிய மயமாக்கினால் நாம் எவ்வளவு நோட்டுகள் அச்சடித்துக்கொண்டு போனாலும் எந்த விதமான ஆபத்தும் வரப் போவதில்லை. நாம் அச்சடிக்கும் பணத்தை அவர்கள் எடுத்துக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக நமக்குக் கிடைக்க வசதி ஏற்படும். இப்படி தேசிய மயமாக்கினால் நாம் விலைவாசியைக் கட்டுப்படுத்தலாம், அதன் மூலம் விவசாயிகளுக்கு கொஞ்சம் நஞ்சம் வருமானம் கிடைக்கும்படியாகச் செய்யலாம். பாங்குகளை தேசிய மயமாக்காமல் நாம் நோட்டுகளை அச்சடித்துக்கொண்டே போனால் ஆபத்து தான் ஏற்படும். நாம் இப்பொழுது சோஷலிஸத்தை அமைக்கப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டும் மற்றும் பல அபிவிருத்தி வேலைகளை நடத்தப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் பாங்குகளை தேசியமயமாக்குவதுதான் நல்லது. அதே ரீதியில் நான் இரண்டொரு விஷயங்களை மட்டில் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். இன்னும் இரண்டொரு நிமிஷங்கள் பேசுவதற்கு அனுமதி கொடுத்தால் அந்த யோசனைகளைக் கூறிக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

உணவு தானியங்களின் விஷயமாக ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும். அப்படிச் சொல்லும்போது நான் உணவு தானியங்களை கன்ட்ரோல் செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. நான் சொல்வதெல்லாம் சர்க்கார் கொள்முதல் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். அதிகப்படியாக விவசாயிகள் உணவு பொருள்களை, வைத்துக் கொண்டிருந்தால் அவர்களுடைய தேவைக்கு வைத்து விட்டு பாக்கியை சர்க்காரே கொள்முதல் செய்ய வேண்டும். அப்படி கொள்முதல் செய்து விலைவாசிகள் ஒரே நிலையில் இருக்கும்படியாகச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் விலைவாசிகள் ஒரே நிலையில் இருக்கும். ஆனால் இப்பொழுது எப்படி இருக்கிறது ? விலைவாசிகள் திடீரென்று உயருகிறது, திடீரென்று இறங்குகிறது. இப்படி ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தால் அது பெரிய ஆபத்து. இப்பொழுது இந்த ஒரு வருஷத்தில் ஆறு மாதங்களுக்குள் விலைவாசிகள் திடீரென்று இறங்கியும் உயர்ந்தும் இருப்பதை நாம் பார்க்கலாம். இது ரொம்பவும் ஆபத்தானது. இது விவசாயிகளை பாதிக்கக்கூடியதாக இருக்கும். இதற்கு உதாரணமாக ஒன்றை கவனிக்கலாம். இப்பொழுது வெல்லத்தின் விலை ஒரேயடியாகக் குறைந்து போயிருக்கிறது. ஆனால் சர்க்கரையின் விலை குறையவில்லை, உயர்ந்திருக்கிறது. மணங்கு 5 அல்லது 4½ ரூபாய் என்று விற்கப்பட்ட வெல்லம் இப்பொழுது மணங்கு ஒன்றுக்கு 2 அல்லது 2½ என்று விற்கப்படுகிறது. ஆனால் சர்க்கரையின் விலை உயர்ந்தே தான் விற்கப்படுகிறது. வெல்லத்தின் விலை திடீரென்று குறைந்ததற்கு காரணம் என்ன ? வெல்ல ஆலைகளுக்கு கரும்பு கிடைக்க வில்லை. வெல்லம் குறைவாக விற்கப்படுவதால் அந்த ஆலைக்குக் கரும்பைக் கொண்டு வரக்கூடிய செலவுக்குக் கூட அந்த வெல்லத்தின் விலை கட்டுபடியாகவில்லை, அதனால் வெல்ல ஆலைகளுக்கு கரும்பு சப்ளை செய்யாமல் அதிகப்படியாக விற்கப்படும் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை சப்ளை செய்து வருகிறார்கள். கரும்பாலைகளில் நிச்சயமாக கரும்பை எடுத்துக் கொள்வார்கள் என்று அங்கே கொண்டு போய்க் கொடுக்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் கணக்கில் எடுத்துப் பார்க்கவேண்டும். ஏற்கெனவே நாம் வெல்லத்தை ஏற்றுமதி செய்துகொண்டிருந்தோம். இந்த விலைவாசியின் சூதாட்டத்தின் காரணமாக அந்த ஏற்றுமதி இப்பொழுது நடைபெறவில்லை. ஆகவே சர்க்கார் உணவு தான்யங்களைக் கொள்முதல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். சர்க்கார் வியாபாரம் செய்வதால் கெடுதல் இல்லை. ஆனால் சொல்லலாம் அதிகாரிகள் சரியாக நடந்துகொள்ள மாட்டார்கள் என்றும், பல ஊழல்கள் வரும் என்றும். ஆனால் நான் சொல்லுவேன் அதிகாரிகள் எடுத்து



7th March 1958] [Sri M. Kalyanasundaram]

நடத்தும் வேலையில் வரக்கூடிய ஆபத்தை விட இப்பொழுது நடைபெற்று வரும் வேலையில் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் அதிகப்படியான ஆபத்து வருகிறது என்று. ஆகவே அதிகாரிகளிடம் ஒப்படைத்து அதன் மூலம் வியாபாரம் செய்வதில் எந்த விதமான ஆபத்தும் வந்துவிடப் போவதில்லை. ஆகவே அரசாங்கம் உணவு தானியங்களைக் கொள்முதல் செய்து பொது மக்களுக்கு சப்ளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதிகாரிகள் லஞ்சம் வாங்கினார்கள் என்றோ அல்லது ஊழல்களில் ஈடுபட்டார்கள் என்றோ புகார்கள் வந்தால் அதைப்பற்றி நாம் கண்காணித்துக் கொள்ளலாம். ஆகவே அதிகாரிகளை நம்பி இந்தக் காரியத்தில் சர்க்கார் ஈடுபடலாம். சர்க்கார் எடுத்து நடத்தும் வேலைகளில் ஊழல்களே இருக்காது என்று சொல்ல முடியாது. ஆகவே அதிகாரிகளை நம்பித்தானாக வேண்டும்.

இப்பொழுது போலீஸ் விசாரணை நடந்து கொண்டு வருகிறது. அது சம்பந்தப்பட்ட போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரை ஏன் சஸ்பெண்ட் செய்திருக்கக்கூடாது ? அவரை சஸ்பெண்ட் செய்து வைத்திருக்க வேண்டியதவசியம் இல்லையா ? அவர் பேரில் முக்கியமான பயங்கரமான குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடத்தி வருகிறார்கள். அந்த நேரத்தில் அவர்களை உத்தியோகத்தில் வைத்துக் கொண்டிருந்தால் மந்திரி சபையின் மீதும், மந்திரிகள் மீதும் என்ன நம்பிக்கை பொது ஜனங்களுக்கு ஏற்படும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த விஷயம் கோர்ட்டு விசாரணையில் இருப்பதால் அதைப்பற்றி அதிகமாக பேசப்போவதில்லை. போலீஸ் மானியம் வரப்போகிறது, அப்பொழுது அதைப்பற்றி அதிகமாக பேசலாம் என்றிருக்கிறேன். அதற்குள் அந்த விசாரணையும் முடிந்துவிடும்.

அடுத்தபடியாக நிலச் சீர்திருத்தத்தை சீக்கிரம் பார்த்துச் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏற்கெனவே செய்த இரண்டு சட்டங்களின் பயனை விவசாயிகள் அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள். இன்னும் மிராசுதாரர்கள் விவசாயிகளிடமிருந்து முச்சலிக்கா எழுதி வாங்கிக்கொண்டுதான் வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை திருச்சியில் மட்டும் இல்லை, மதுரை, திருநெல்வேலி, சேலம் முதலிய இடங்களிலிருந்தும் புகார்கள் நிறைய வந்து கொண்டிருக்கின்றன. நில வெளியேற்றம் நடந்து கொண்டுதானிருக்கிறது. ஆகவே மிராசுதாரர்களுக்கு போலீஸ் உதவி செய்யாமல் இருக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த சட்டங்களை அமுல் நடத்தும்போது அவர்களுக்கு போலீஸ் உதவி கொடுக்காமல் இருக்கும்படியாக மந்திரிகளை கேட்டுக் கொள்ளுகிறேன்.

உணவு உற்பத்தி பெருக வேண்டுமானால் ராஜ்ய சர்க்கார் நிலச் சொந்தக்காரர்களுக்கு போலீஸ் உதவி அளிக்காமல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய தானியம் கிடைக்கும். அவர்களும் ஊக்கத்துடன் விவசாயம் செய்வார்கள். இப்படி பல யோசனைகளைச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய காலம் இல்லாததால் இரண்டொன்றை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாம் கன ரகத் தொழில்களுக்குப் போக வேண்டியதில்லை. நாம் இப்பொழுது நெய்வேலி திட்டத்தைப் போட்டிருக்கிறோம். அதற்குச் செலவு செய்யப்பட்ட பணத்திற்கு வட்டி வருமோ வராதோ ? மின்சாரம் நம்மிடம் இருந்தது. அதையும் நாம் இப்பொழுது ஒரு போர்டினிடம் கொடுத்து விட்டோம். அதற்கு நாம் போட்ட பணத்திற்காவது வட்டி வருமோ வராதோ என்று தோன்றுகிறது. அதன் மூலமாக நமக்கு ரெவினியூ வந்ததும் நம்முடைய கையிலிருந்து போய் விட்டது. அதற்கு வரவேண்டிய வட்டிக் கணக்கை எழுதி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது வருமோ வராதோ தெரியவில்லை. ஆகவே நமக்கு வருவாய் வரக்கூடிய அநேகம் தொழில்கள் எல்லாம் நம்மை விட்டு போய்க் கொண்டிருக்கின்றன. அலுமினியம் ப்ளாண்ட் வைக்க முடியாது என்று சொல்லுகிறார்கள் அதிலிருக்கக்கூடிய கஷ்டம் தெரியும். உருக்குத் தொழில் இருக்கிறது. அதில் இருக்கும் கஷ்டத்தையும் ஒப்புக் கொள்கிறோம். ஆகவே திட்டங்கள் போடுவதற்கு முன் அவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்ய

[8th March 1958

வைக்க முடியுமா என்று ஒரு கூட்டம் கூட்டினோம். தோட்ட முதலாளிகள் நீலகிரி ஜில்லாவில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தப்படி ஆனைமலை பிரதேசத்தில் இருப்பவர்களும் ஒப்புக் கொண்டால்தான் அவர்களுக்கு கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். அதனால் சமரசம் ஏற்படவில்லை.

**Sri A. V. P. ASAITHAMBI** : நம் நாட்டில் காப்பி உற்பத்தி உபரியாக இருக்கிறது. ஏற்றுமதி தாராளமாக செய்கிறோம். ஆனால் அதே சமயத்தில் சிக்கரியை இங்கு இறக்குமதி செய்ய மத்திய சர்க்கார் அனுமதி கொடுக்கிறார்கள். அதனால் உபரியாக இருக்கிற காப்பியின் மதிப்பு குறைகிறது. ஆகவே சிக்கரி இறக்குமதியை தடை செய்ய இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்துமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : சிக்கரி கலந்தால் காப்பிக்கு ஒரு தனியான டேஸ்ட் இருக்கிறது என்று நினைக்கிறார்கள். அதற்கு ப்ரெஞ்ச் காப்பி என்று பெயர். ஆகவே தடை செய்வது சரியல்ல.

**Sri G. GOMATHI SANKARA DIKSHITAR** : மாஞ்சோலை தேயிலை எஸ்டேட்டில், சர்க்காரால் நிறுவப்பட்டிருக்கக்கூடிய இந்தத் திட்டம் அங்கு அமுலுக்கு வந்திருக்கிறதா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களுக்கும் இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகிறது. அவர்களும் இதில் சேர்ந்து கையெழுத்து போட்டிருக்கிறார்கள்.

**Sri K. ANBAZHAGAN** : ஆலைகள் அல்லது தொழிற்சாலைகளில் பணியாற்றுகிற அலுவலாளர்கள், அவர்களின் உடல் நலம் பாதிக்கப்படுமானால் சிகிச்சையளிக்க அவர்களுக்கு இந்த ஸ்டேட் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் இருக்கிறது. அவைகளை விட கடுமையான நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களுக்கு, உதவி ஸ்டேட் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் அரசாங்கத்தால் கொண்டு வரப்படுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: இப்பொழுது இருக்கிற எம்ப்ளாயிஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் திட்டம் பாக்டரி வொர்க்கர்ஸ்ஸுக்குத்தான் அமல் நடத்தப்படும். இது இந்தியாவில் எல்லா பாகங்களுக்கும் அமுலில் வரவில்லை. சென்னை ராஜ்யத்தில்தான் நாம் முதன் முதலாக எல்லா பாக்டரித் தொழிலாளர்களுக்கும் அமுல் நடத்த உத்தேசித்திருக்கிறோம். இது முடிந்த பிறகு, அது விஸ்தரிக்கப்படுவது குறித்து, மத்திய சர்க்கார் யோசிக்கலாம்.

**Sri P. G. MANICKAM** : தோட்டங்களில் மேஸ்திரி வேலை பார்ப்பவர்களுக்கு போனஸ் கொடுக்க ஒரு திட்டம் இருக்கிதாகக் கேள்விப்படுகிறோம் அது எப்பொழுது அமுலுக்குவரும் ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : A separate question may be put, Sir.

**Sri S. LAZAR** : Sir, from the answer given by the Hon. Minister we find that production had been at its peak level in the year 1954 both with regard to coffee and tea. Sir, has it any bearing on the agricultural income-tax levied on the plantations?

**The Hon. Sri R. VENKATARAMAN** : Sir, I do not think there is any connection between the levy of agricultural income-tax and the production.

**Sri V. K. KOTHANDARAMAN** : தேயிலைச் செடிகள் பட்டுப் போனால் இதுவரையில் அந்தயிடத்தில் ரீப்ளான்ட் செய்யப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது வெள்ளை முதலாளிகள் அது போல் ரீப்ளான்ட் செய்வதில்லை என்று சொல்கிறார்கள். இது உண்மையா ?



8th March 1958]

**The Hon. Sri R. VENKATARAMAN** : தேயிலை உற்பத்தி செய்வது இன்டர் நாஷனல் எக்ரீமெண்ட்டிற்கு உள்பட்டது. குறித்த அளவு ப்ளாண்டேஷனும், குறித்த அளவு ரீப்ளாண்ட்டேஷனும் போடலாம் என்று அந்த எக்ரிமெண்டில் கலந்து கொண்ட நாடுகள் முடிவு செய்யும். அந்த முறைப்படி ரீப்ளாண்டேஷன் செய்கிற அளவு இந்திய நாட்டில் செய்யப்பட்டு வருகிறது. நண்பர் அவர்கள் சொல்லும் புள்ளி விவரம் சரியானதல்ல.

**Sri K. PONNIAN**: தேயிலை, காப்பி தோட்டங்களை விஸ்தரிக்கும் எண்ணம் சர்க்காருக்கு உண்டா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : சர்க்காருக்கு இல்லை.

**Sri A. GOVINDASAMY** : தொழிலாளர்களின் உரிமைக்காக போராடியபோது வால்பாறையில் எத்தனை பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் ? அவர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: தனியாக கேள்வி கேட்க வேண்டும்.

**Sri T. T. DANIEL** : May I know from the Hon. Minister whether the Government are aware that the tea producers are finding some difficulty in the world market, because the United Kingdom, our chief purchaser of our tea has now decided to purchase from Ceylon and Africa as a result of which a grave situation has been created for our tea producers? Will Government take care of that situation and do the needful?

**The Hon. Sri R. VENKATARAMAN** : The situation in the world market with regard to tea varies from year to year and season to season in relation to production in several areas. I do not think any permanent deterioration has arisen in the export of tea from India.

**Sri N. PALANISAMI** : இந்தியாவில் அதிகப்படியாக, நம் மாகாணத்திலிருந்து காப்பி டீ ஏற்றுமதியாகிக் கொண்டிருப்பதால் அபிவிருத்தி செய்வதற்குச் சர்க்காரிடம் திட்டம் உண்டா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: காப்பிபோர்டில் பல 1-20 p.m.
திட்டங்கள் இருக்கின்றன.

**Sri A. A. RASHEED** : Is there any proposal to manufacture crystal tea in our State?

**The Hon. Sri R. VENKATARAMAN** : Sir, it is one thing which I do not understand about tea.

### *Motor Vehicles Taxation Act*

***246 Q.—Sri N. K. PALANISAMI and Sri A. A. RASHEED** : Will the Hon. the Minister for Electricity be pleased to state the amount collected under the Motor Vehicles Taxation Act in the City of Madras in 1957?

**The Hon. Sri V. RAMIAH** : Rs. 66,44,730-39 nP., Sir.

[8th March 1958

SRI A. A. RASHEED: What is the total amount given to the Corporation out of the proceeds?

THE HON. SRI V. RAMIAH: The amount given to the Corporation is Rs. 3,57,000.

SRI N. K. PALANISAMI: இங்கே யிருக்கக்கூடிய அதாவது ஸிட்டி பஸ்களில் லைஸன்ஸ் மூலமாக வரக்கூடிய பணத்திலிருந்து அதிகமாக ரோடுகள் போடுவதற்கு பணம் கொடுக்கக் கூடாதா ?

THE HON. SRI V. RAMIAH: இந்த மோட்டார் வரியின் மூலமாக கிடைக்கும் வருமானத்திலிருந்து 3 லட்சத்தி ஐம்பத்தேழாயிரம் ரூபாய் கொடுக்கின்றோம். அதற்கு மேல் கொடுக்கக்கூடிய மராமத்திற்கு இலாகாவுக்கு 5 லட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI: இங்குள்ள கார்ப்பரேஷன் பஸ் வரிகளிலிருந்து வருகின்ற வருமானத்திலிருந்து அதிகமாக தரவேண்டும் என்று அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன் பேரில் அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI V. RAMIAH: அவர்கள் அதிகமாக வேண்டுமென்று கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவைகளை பரிசீலித்து அப்போதைக்கப்போது எவ்வளவு தேவையிருக்கிறதோ அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. நான் முன்பு குறிப்பிட்டதுபோல் ஆண்டு ஒன்றுக்கு 5 லட்சம் ரூபாய் அதிகப்படியாக கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI S. LAZAR: இம்மாதிரி வசூலிக்கப்பட்ட தொகை சென்னையில் ஓடுகின்ற வண்டிகளில் இருந்து மாத்திரம் கிடைத்ததா அல்லது வெளியூர்களில் ஓடிக்கொண்டிருக்கும் பஸ்களின் சொந்தக்காரர்கள் சென்னையில் இருக்கிறபடியால் அவர்களிடமிருந்தும் சேர்த்து வசூலிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMIAH: நான் குறிப்பிட்டது சென்னையில் வசூலிக்கப்பட்டது.

SRI A. A. RASHEED: What is the total number of vehicles in the City and what is the total number of Government vehicles in the City?

THE HON. SRI V. RAMIAH: A separate question may be put.

MR. SPEAKER: As for question No. 247, it has been the convention to disallow all questions relating to Ramanathapuram riots. But, as this question relates to the information that the Government have given to the Central Government, I shall allow only questions relating to that part and not on the merits of the communal disturbances?

*Communal riots, East Ramanathapuram District*

* 247 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Centre have requested the Government to give details about the communal riots that happened in the East Ramanathapuram district during September 1957; and



8th March 1958]

(b) whether the Government have sent any reply to the Centre?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Clauses (a) & (b) Yes, Sir.

SRI D. S. AUTHIMOOLAM: இந்த சென்னை கார்ப்பரேஷனுக்கு கொடுக்கப்படுகின்ற தொகை எந்த வருஷத்தில் நிர்ணயிக்கப்பட்டது என்பதை அறிவிக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMIAH: இது 1931-ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது.

SRI A. V. P. ASAITHAMBI: ஸார், சென்னையில் ஓடுகின்ற டேபி டாக்ஸிகளில் 4 பேர் போவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

MR. SPEAKER: இதற்கு தனி கேள்வி போடவேண்டும்.

SRI K. ANBAZHAGAN: அரசாங்கத்திலிருந்து கார்ப்பரேஷனுக்கு, ரோடு பாதுகாப்புக்காக அதிக தொகை கொடுக்கமுடியாவிட்டால் அரசாங்கமே அதை ஏற்று ரோடுகளை நல்ல முறையில் பாதுகாக்குமா ?

THE HON. SRI V. RAMIAH: ரோடுகளை மராமத்து செய்வதற்கு அவர்களுக்கு அதிக தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் மூன்று லட்சத்தி 57 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டு இப்பொழுது அதற்கு மேல் மேலும் வருடம் ஒன்றுக்கு 5 லட்சம் ரூபாய் கொடுக்கின்றோம். மற்றொரு இராண்டும் 1956-57-ல் ஒரு லட்ச ரூபாய் அதிகமாக கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI N. K. PALANISAMI: என்ன விஷயத்தைப்பற்றி கேட்டிருந்தார்கள் ? அதற்கு ராஜ்ய சர்க்கார் என்ன பதில் கொடுத்தார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சம்பவங்கள், இவை சம்பந்தமாக பத்திரிகையில் வந்திருந்த செய்திகள் மற்றுமுள்ள விவரங்களை பற்றி மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்தை கேட்டிருந்தது. அதை இந்த அரசாங்கம் கொடுத்தது.

SRI A. VEDARATHNAM: இந்த விஷயத்தில் மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கத்தில் தலையிடுவதற்கு உரிமையிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதில் தலையிடுகிற பிரச்னை ஒன்றும் இல்லை. சில சம்பவங்களைப்பற்றிய விவரங்களைக் கேட்டார்கள், அதை கொடுத்தோம்.

SRI K. ANBAZHAGAN: இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தால் இந்த அரசாங்கத்திற்கு அறிவுரை ஏதாவது கூறியதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவ்விதமாக அறிவுரை ஒன்றும் கூறப்படவில்லை. அந்த அறிவுரை எல்லாம் எதிர்கட்சியில் தான் எதிர்பார்க்கிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI: முதுகுளத்தூர் சம்பவங்களுக்கு மூல காரணம் ஜாதி வெறி என்பதை சர்க்காரே ஒப்புக் கொண்டிருக்கிறது. அதனால் ஜாதி ஒழிப்புக்காக இந்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

MR. SPEAKER: இதை நான் அனுமதிக்க முடியாது.

SRI V. K. KOTHANDARAMAN: இது சம்பந்தமாக இந்த சபையில் நடந்த நடவடிக்கைகளை பூராவும் மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பூராவும் அனுப்பப்படவில்லை அனுப்பவேண்டும் என்று சர்க்காருக்குத் தோன்றவில்லை.

**Sri T. S. RAMASWAMY PILLAI** : மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டதின் நகலை இந்த சபையின் மேஜை மீது வைக்க முடியுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அதை இங்கே வைக்க வேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

**Sri N. K. PALANISAMI** : ஏற்கனவே மத்திய சர்க்காரின் உணவு இலாகா அடிக்கடி இதைப்பற்றி தகவல் கொடுக்கும்பொழுது நமது சர்க்காரிடமிருந்து மத்திய சர்க்கார் தகவல் கேட்பதில் அர்த்தமென்ன ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இந்த யோசனையை கனம் அங்கத்தினர் அவர்களது நண்பர்கள் பார்லிமெண்டில் இருந்தால் அவர் மூலமாக அந்த அரசாங்கத்திற்கு எடுத்துச் சொன்னால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**Sri A. GOVINDASAMY**: மத்திய சர்க்கார் மந்திரி தத்தார் அவர்கள் இந்த பகுதிக்கு நேரடியாக வந்து நிகழ்ச்சிகளை எல்லாம் பார்த்துவிட்டு போன பிறகு மத்திய சர்க்கார் இந்த அரசாங்கத்தினிடத்தில் தகவல் கேட்கவேண்டிய அவசியமென்ன ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: ராஜ்ய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு ஏன் தகவல்களை கொடுக்கவில்லை என்று கேட்டால் அதை புரிந்து கொள்ளமுடியும். விவரங்கள் வேண்டுமென்று கேட்டார்கள் அதை நாம் கொடுத்தோம். இதற்கு இவ்வளவு சர்ச்சை எதற்கு என்று எனக்குப் புரியவில்லை.

## *Drinking Water Wells for Harijans*

*248 Q.—**Sri M. JAGANNATHAN** : Will the Hon. the Minister for Revenue be pleased to state the action taken so far to provide drinking water wells in the Harijan colonies of (i) Vadakothipakkam village; (ii) Akshikadu village; (iii) Siruvadi village; and (iv) Alapakkam village of Merkanam firka; (v) Evaloor village; (vi) Mangalam village of Olakkur firka; (vii) Vellakolam village; (viii) Sottanthangal village; and (ix) Butheri village of Tindivanam firka in Tindivanam taluk, South Arcot district.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : A well is under execution in Siruvadai village. Well works for Vadakothipakkam and Akshikadu are included in the programme for 1957–58. Steps are being taken by the Collector of South Arcot to prepare estimates for the well works in the remaining six villages.

**Sri M. JAGANNATHAN**: தலைவர் அவர்களே, குடிப்பதற்கு தண்ணீர் வசதி இல்லாமல் இங்கு குறிப்பிட்டிருக்கும் 9 கிராமங்களில் வாழுகின்ற ஷெட்யூல்ட் பழங்குடி மக்கள் மிகவும் கஷ்டப்பட்டு கொண்டு இருக்கிறார்கள். மேலும் கோடைகாலம் துரிதமாக வந்து கொண்டிருக்கிறது. ஆகவே சர்க்கார் இந்த இடங்களுக்கு குடி தண்ணீர் கிடைப்பதற்காக உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இதை துரிதப்படுத்துவதற்காக எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. முதலாவதாக, இந்த கிராமத்திற்கு வடக்கேயுள்ள கிணற்றில் ட்ரயல் நடத்தி பார்த்ததில் தண்ணீர் பிரயோஜனமில்லாமல் இருந்ததினால், அதை மாற்றவேண்டியிருக்கிறது. இன்னொன்றில், அந்த இடம் வந்து ஒருவருக்கு சொந்தமாக இருந்ததினால், அதற்குள்ள கிப்ட் டீட் எழுதியிருக்கிறார்கள். இன்னொரு கிணறு, அதற்கு வேண்டிய காண்ட்ராக்ட் கொடுத்திருக்கிறது. மற்ற ஆறு கிணறுகளுக்கும் எஸ்டிமேட் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள்.



**Sri A. GOVINDASAMY** : இருபது குடும்பங்கள் எந்தெந்த சேரிகளில் இருக்கிறார்களோ அந்த சேரிகளில் எல்லாம் கிணறு வெட்டி கொடுக்கப்படும் என்று முன்னாள் மந்திரி பரமேஸ்வரன் அவர்கள் இருந்தபொழுது ஒரு அறிக்கை வந்தது. இப்போது 20 குடும்பங்கள் மாத்திரமல்ல, 1,000, 2,000 என்று ஜனத்தொகை இருக்கக்கூடிய கிராமங்களில் கூட கிணறு வெட்டிக்கொடுக்கப்படாமல் இருப்பதின் காரணம் என்ன ? இந்த கிராமங்களில் கிணறு வெட்டிக்கொடுப்பதற்கு உடனடியாக வேண்டிய முயற்சிகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்துத்தான் வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னது மாதிரி இதற்கு முன்னால் உள்ள மந்திரி என்ன சொன்னார் என்று பார்த்துத்தான் பதில் சொல்லவேண்டும்.

**Sri A. V. P. ASAITHAMBI** : ஸார், கிணறுகள் வெட்டுவதற்கு கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்களின்படி 2,000 ரூபாய்க்கு மேல் ஒரு கிணறு வெட்டுவதற்கு செலவு செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஆனால் நல்ல முறையில் தனியார் வெட்டுவதில் ஆயிரம் ரூபாய் சில்லறை தான் ஆகிறது என்று தெரிகிறது. ஆகவே இதை அரசாங்கம் கவனித்து பணத்தை சிக்கனம் செய்ய கவனிப்பார்களா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இந்த தனியார்களுக்கு இதை கொடுத்தால் இதில் பல தகராறுகளும் வருகிறது. சர்க்காரே எஸ்டிமேட் தயார் செய்து நடத்தினால் தான் பந்தோபஸ்தாக இருக்கும் என்ற நினைப்பில் தான் அவ்விதம் செய்யப்பட்டு வருகிறது.

**Dr. (Srimathi) T. S. SOUNDARAM RAMACHANDRAN** : சாதாரணமாக குடிதண்ணீர் கஷ்டம் மிகவும் கூடுதலாக இருந்து கொண்டிருக்கிறது. மலை பாங்கான பிரதேசங்களிலுள்ள ஹரிஜனங்களுக்கு இம்மாதிரியான வசதிகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஸாங்ஷன் ஆனபிறகும் அவைகள் நடைபெறாமல் 8 மாதங்கள், 10 மாதங்கள் என்று தேங்கி கிடப்பது எல்லோருக்கும் தெரியும். கோடை காலமும் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே அவசரமாக ஒரு ஸ்கீமை தயாரித்து எல்லாக் கிணறுகளையும் வெட்டி தருவதற்கு ஒரு டார்ஜெட் போட்டு வேலை செய்வது என்ற முறையில் ஏதாவது திட்டம் வகுக்கப்படுமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இந்த கேள்வி தென்னார்காடு ஜில்லாவிலுள்ள ஒரு பகுதியைப்பற்றியது. கனம் அம்மையார் அவர்கள் பொதுவாக சொல்லுகிறார்கள். இதைப்பற்றி தனியாக கேட்டால் அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

**Sri T. S. RAMASWAMY PILLAI** : ஸார், இந்த 6 கிராமங்களில் கிணறு வெட்ட எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அப்படியானால் இந்த எஸ்டிமேட்டுகள் எப்போது தயாரிக்கப்பட்டது, அப்படித் தயாரிக்கப்பட்டு இவ்வளவு கால தாமதம் ஆக்கப்பட்டது என்று சொல்வார்களா ? 1·30 p.m.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : மூன்று கிணறுகளைப் பற்றிச் சொன்னேன். ஒன்று வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது, இன்னொன்று புதிய இடம் தானமாகக் கிடைத்திருக்கிறது, மற்றொன்று காண்ட்ராக்ட் கொடுத்திருக்கிறது. இதற்கெல்லாம் **Since the estimates have been sanctioned, the works will be put through soon.** கிணறு வெட்ட இதுதான் காலம். இப்போதுதான் எடுத்துக் கொள்ளப்படும்.

**Sri M. C. MUTHUKUMARASWAMY** : ஸார், ஹரிஜனங்களுக்கு குடிதண்ணீர் கிணறு இல்லை என்று தொடர்ந்து மனுக்களும் புகார்களும் வந்து கொண்டிருப்பதால் குடி தண்ணீர் இல்லாத சேரிகள் எத்தனை இருக்கின்றன, எத்தனை கிணறுகள் வெட்டவேண்டுமென்று சர்வே எடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

[8th March 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : எங்கெங்கே கிணறு வெட்ட வேண்டுமென்பதற்கு தகவல் இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன்.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, ஹரிஜன முன்னேற்றத்திற்கு வேறு பல துறைகளில் சர்க்கார் செலவு செய்வதைக் காட்டிலும், முதலில் ஹரிஜனங்களுக்கு குடி தண்ணீர் விஷயத்தில் அக்கரை செலுத்தி, அந்த வசதியைச் செய்து கொடுக்க முன் வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : மற்ற வசதிகளை விட குடி தண்ணீர் வசதி ரொம்ப முக்கியம் என்று சர்க்கார் கருதுகிறது. ஹரிஜனங்களுக்கு மாத்திரமல்ல, மற்ற எல்லோருக்கும் குடி தண்ணீர் அவசியம் என்று தான் கருதுகிறது.

* 249 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have received any representations recently from the Harijans of Chettikuppam village in Merkanam firka, Tindivanam taluk, regarding provision of drinking water wells in their colonies; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) Does not arise. The Collector of South Arcot has however reported that action is being taken to provide a well in the village.

SRI A. GOVINDASAMY : இந்த கிராமத்தில் கிணறு வெட்டவேண்டுமென்று எப்போது விண்ணப்பம் வந்தது. அதை வெட்டுவதில் என் கால தாமதம் ஆகிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைப் பற்றி செட்டிக்குப்பம் கிராமத்திலிருந்து கோரிக்கை வரவில்லை. இருந்தாலும் அரசாங்கம் கிணறு வெட்டவேண்டுமென்று கருதுகிறது.

*Sago Industry*

* 250 Q.—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to develop the sago industry at Salem on the lines suggested by the Tariff Commission.

THE HON. SRI R. VENKATARAMAN : A statement* furnishing the information is laid on the table of the House.

SRI M. P. SUBRAMANIAM : ஸார், இந்த ஜவ்வரிசி நிபுணர் குழு சிபாரிசுப்படி சேலத்தில் ஒரு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்படவேண்டுமென்றிருந்தும், ஏன் இன்னும் ஏற்படுத்தவில்லை என்று அமைச்சர் கூற முடியுமா ? சேலத்தில் உற்பத்தி செய்யக்கூடிய ஜவ்வரிசி சிறு குழந்தைகளுக்கும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் நல்ல சத்துள்ள உணவாயிருப்பதால், நிபுணர் குழு சிபாரிசுகளை அமுல் நடத்துவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த சிபாரிசுகளெல்லாம் சர்க்கார் பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. அவர்கள் 5 சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன். ஒன்று சுகாதார முறையில் இந்த ஜவ்வரிசி தயாரிப்பது, இரண்டாவது, 5,000 ஏக்கர் நிலம் ஸேகோ மானுபாக்சரர்ஸ்

* Printed as Appendix II on pages 544–545 infra.



8th March 1958]

அசோஸியேஷனுக்கு மர வெள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்வதற்காக அளிப்பது, மூன்றாவது அவர்களுக்குப் பண உதவி அளிப்பது, பிறகு லாபரட்டரி சேலத்தில் வைப்பது, ஒரு அஸிஸ்டண்ட் டைரக்டர் நியமிப்பது, ஆக எல்லா சிபாரிசுகளும் இப்போது சர்க்கார் பரிசீலனையில் இருக்கின்றன.

SRI M. P. SUBRAMANIAM : சேலத்தில் ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு 30,00,000 டன் உற்பத்தி செய்யக் கூடிய ஜவ்வரிசியை வங்காளம், பம்பாய், உத்திரப் பிரதேசம் போன்ற இடங்களில் உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டு அங்கு ஏற்றுமதி செய்ய முடியாமல் இருந்தது, அது இப்போது என்ன நிலைமையில் இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதைப்பற்றி இப்போது புகார் ஒன்றும் வரவில்லை.

*National Extension Service and Community Project Schemes.*

* 251 Q.—SRI V. SUBBIAH : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the object of appointing residents of towns outside the project areas to the exclusion of ryots and villagers in the areas concerned as members of the Advisory Committee constituted for each National Extension Service Scheme and the Community Project Block Scheme; and

(b) the names of such blocks and the number of persons so appointed?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) The rules for the appointment of non-official members of the Block Advisory Committees provide for selection of members from among the Presidents of Panchayats, Co-operators, Agriculturists and Harijans interested in Harijans Welfare, resident in the Block areas. If any specific case of persons residing outside the block limits having been appointed as members of the Block Advisory Committee is brought to the notice of the Government, suitable action will be taken.

SRI V. SUBBIAH : ஸார், இந்த பிளாக் ஏரியாவை விட்டு கிராமப்பகுதி சம்பந்தமில்லாத நகரப்பகுதி ஆட்களைப் போடுவதால், பிளாக் அட்வைஸரி கமிட்டியில் ஒற்றுமையான கருத்து ஏற்படுமா ? வேற்றுமை தானே ஏற்படும். அதனால் அந்த ஏரியாவை அறியாத ஒருவரை நியமிப்பது சரியா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னுடைய விடையிலே அம்மாதிரி போடக் கூடாது என்று ஏற்படுத்தியிருக்கிறோம் என்றுதான் சொன்னேன். அதற்கு மாறாக ஏதாவது இருந்தால் அதை என்கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைப்பற்றி கவனிக்கிறேன்.

MR. SPEAKER : By such appointments, is there any disunity or disharmony?

SRI V. SUBBIAH : குருவிக்குளம் பிளாக்கிலே சம்பந்தமில்லாமல், சங்கரன்கோவிலைச் சேர்ந்த ஒருவரைப் போட்டிருக்கிறார்கள்.

MR. SPEAKER : அதைப்பற்றி தனியாக எழுதி அனுப்புங்கள். அதை கவனிப்பார்கள்.

[8th March 1958

**Sri M. KARUNANITHI** : தேசிய அபிவிருத்தித் திட்டக் குழுக்களுக்கு பெரும்பாலும் காங்கிரஸ்காரர்கள் தான் நியமிக்கப்படுவது அமைச்சருக்குத் தெரியுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : காங்கிரஸ்காரர்கள் என்றால் விலக்கப்படக்கூடியவர்கள் அல்ல, யார் அக்கரை எடுத்துக் கொள்கிறார்களோ, அவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

**Sri V. K. KOTHANDARAMAN** : தேசிய அபிவிருத்தித் திட்டம், சமுதாய அபிவிருத்தித் திட்டம் இவைகள் நிறைவேறுவதில் யாவருக்கும் விருப்பம் உண்டு. இப்போது சர்க்கார் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இந்தக் கமிட்டிகளில் சர்வ கட்சிகள் சார்பிலே, ஒவ்வொரு கட்சியிலிருந்தும் பிரதிநிதிகளைச் சேர்த்து அந்த மாதிரி நல்ல முறையில் நிறைவேற்ற முடியும். அதைப் போன்று சர்க்கார் செய்ய முடியுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : It seems to be matter for argument and not a question at all.

**Sri A. GOVINDASAMY** : சர்க்கார், அதிலும் குறிப்பாக நமது நிதி அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு காரியத்திலும் ஒத்துழைப்பைக் கேட்கிறார்கள். இது விஷயத்திலாவது இனிமேல் ஏற்படுத்தும் கமிட்டியில் எதிர்க் கட்சியைக் கலந்து கொண்டு திறமையாக வேலை செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்களும் இந்தக் கமிட்டியில் இருக்கிறார். அதனால் கட்சி அடிப்படையில் போட்டிருந்தால் கனம் அங்கத்தினர் இடம் பெற்றிருக்க முடியுமா ? அவர்கள் இருப்பதாலேயே கட்சி அடிப்படையில் போடுவதில்லை என்று உணர்ந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

**Sri K. SWAMINATHA MERKONDER** : தேசிய விஸ்தரிப்புத்திட்டத்தில் தற்போது சட்ட சபையில் எதிர் கட்சிக்காரர்களுக்கு அதிக சலுகை கொடுப்பது போல் காங்கிரஸ்காரர்களுக்கும் தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தில அதிகமாகக் கொடுக்கப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இதிலே யார் வேண்டுமானாலும் அக்கரை எடுத்துக் கொண்டு வேலை செய்தால் அவர்கள் கமிட்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். வேலை செய்வதைப் பொறுத்த வரையில், கமிட்டியில் போட்டால் தான் வேலை செய்யவேண்டுமென்பதில்லை. அக்கரை எடுத்துக்கொண்டு வேலை செய்பவர்கள் எல்லோரும் நியமிக்கப்படுவார்கள் என்று சொல்லுகிறேன்.

**Mr. SPEAKER** : அங்கத்தினர் சொல்லும்போது சட்ட சபையில் எதிர் கட்சிகளுக்குச் சலுகை கொடுப்பதாகச் சொன்னார்கள். அது நியாயமான முறைதான் என்று இந்த நேரத்தில் சொல்லுகிறேன்.

### *Rural Dispensary at Valapady*

* 252 *Q.*—**Sri M. P. SUBRAMANIAM** : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have sanctioned any proposal to upgrade the Rural dispensary at Valapady into a Local Fund Dispensary?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : The Director of Medical Services has just received a petition to convert the existing Rural dispensary at Valapady into a regular dispensary. This matter is under his consideration.

**Sri M. P. SUBRAMANIAM** : ஸார், சேலம் வட்டத்தில் உள்ள இந்த கிராமம் ஏறக்குறைய 60,000, 70,000 ஜனத்தொகை கொண்டதாக இருப்பதாலும், சுற்றுவட்டாரத்தில் 15 மைல் அளவுக்கு பெரிய ஆஸ்



8th March 1958]

பத்திரிகள் இல்லாத காரணத்தினாலும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சர்க்காரிடம் டி.எம்.ஓ. சிபாரிசு செய்திருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதிகக்காலம் கடத்தாமல், 30 மைல்களுக்கு இடையில் உள்ள இந்த ஆஸ்பத்திரியை லோகல் பண்டு ஆஸ்பத்திரியாக மாற்ற அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இதை இம்மாதிரி மாற்றவேண்டுமென்று டி.எம்.ஓ. சிபாரிசு செய்திருக்கிறார். இப்போது ஜில்லா போர்டை ஸ்பெஷல் ஆபீஸர் பார்த்து வருகிறார். அவரிடமிருந்து தகவலை எதிர் பார்க்கிறோம். வந்ததும் அதை அரசாங்கம் பரிசீலித்து, செலவு இனம் இதையெல்லாம் பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

### *Government Transport Workers*

* 253 *Q.*—**Sri M. KALYANASUNDARAM** : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the various categories of workers in the Government Transport who are supplied with uniforms every year;

(*b*) how many sets are supplied to them for a year;

(*c*) whether any supply has been made for the year 1957–58; and

(*d*) if so, when?

**The Hon. Sri R. VENKATARAMAN** : (*a*) In the Madras Branch, all Drivers, Conductors, Checking Inspectors and Time-keepers of the Traffic Branch, all the staff below the rank of Foreman of the Technical Branch and Watchmen, Sweepers, Scavengers, Gardeners and Water Carriers are supplied with uniforms.

In the Kanyakumari Branch, all Transport Inspectors, Station Masters, Conductors and Drivers of the Traffic Branch and all the staff of the Technical Branch are supplied with Uniforms.

(*b*) Three sets per annum to the staff of the traffic branch and two sets per annum to the staff of the technical branch, Watchmen, Sweepers, Scavengers, Gardeners and Water Carriers in the Madras Branch are also supplied with two sets per annum.

(*c*) Yes, Sir.

(*d*) The supply for the year 1957–58 has been made on different dates. It has been completed in February 1958.

**Sri T. S. RAMASWAMY PILLAI** : இது துணியாகக் கொடுக்கப்படுகிறதா ? துணியாகவும் தையல் சார்ஜ் ஆகவும் கொடுக்கப்படுகிறதா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : துணியாகவும், தையல் சார்ஜ் ஆகவும் கொடுக்கப்படுகிறது. தையல் சார்ஜ் கொடுத்தார்களா இல்லையா என்பதைச் சொல்லுவதற்கு இல்லை. ஆனால், தையல் சார்ஜ் எவ்வளவு என்று சொல்ல முடியும்.

**Sri M. KALYANASUNDARAM** : 1957–58-ம் வருஷத்திய உடை, இந்த வருஷக் கடைசியில் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் தேதி குறிப்பிட்டு, அந்தத் தேதிக்குள் கொடுக்க வேண்டுமென்ற அதிகாரத்தை டைரக்டர் அவர்களுக்குக் கொடுப்பார்களா ? அப்படிக் கொடுத்தால் காலதாமதமின்றிக் கிடைப்பது சாத்தியமல்லவா ?

[8th March 1958

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த வருஷத்தில் சற்று காலதாமதம் ஆனது உண்மைதான். ஒவ்வொரு வருஷமும் இவ்விதமாக காலதாமதம் ஆகுமென்று சொல்ல முடியாது. கதர் கொடுக்கவேண்டு மென்பதால், எல்லாவற்றையும் சேகரித்துக் கொடுப்பதில் காலதாமதம் ஆயிற்று.

SRI A. A. RASHEED : Is any dhobi allowance given to these workers?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir, a dhobi allowance of Rs. 1-8-0 is also given.

SRI K. ANBAZHAGAN : பல் தொழிலாளர்களுக்குத் தரப்படுகின்ற ஒரேவிதமான உடுப்பு 1956–57-ல் தரப்படவேண்டியது தரப்படாமல் இருந்தது என்பதும் 1957–58 ல் தரப்படவேண்டிய அத்தனை தடவைகளும் உடுப்புகள் தரப்படவில்லை என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? குறை தெரிவிக்கப் பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : 1956–57 ஐப்பற்றி தனிக் கேள்வி போடவேண்டும். 1957–58-ல் கொடுக்கவேண்டிய உடுப்பு கொடுக்கப் பட்டுவிட்டது.

SRI M. KALYANASUNDARAM : அவர்களுக்குக் கதர் உடைதான் கொடுக்கப்படுகிறதா ? கதர் உடை கொடுக்கப்படுவதனால் சர்க்காருக்கு எவ்வளவு அதிகச் செலவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : கதர் உடைதான் கொடுக்கப் படுகிறது. அதன் காரணமாக எத்தனையோ ஏழைகளுக்கு இன்று வேலை கிடைக்கிறது.

SRI M. KARUNANITHI: கைத்தறியாளருக்கு அக்கறை காட்டப் போவ தாகச் சொல்லுகின்ற நேரத்தில் அரசாங்கத்தார் அந்த உடைகளை கைத்தறி உடைகளாக கொடுக்க முன்வருவார் ளா ? (சிரிப்பு.)

THE HON. SRI R. VENKATARAMAN : கதரும் கைத்தறிதான் என்பது சர்க்காருடைய கொள்கை. (சிரிப்பு.)

### *Floods*

* 254 *Q.*—SRI P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the extent of cultivable lands affected by floods at Sanganurpallam, Coimbatore district, in November 1957; and

(*b*) the aid given by the Government to the agriculturists to reclaim those lands?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 235·41 acres.

(*b*) Only one application has been received from a ryot in Somayampalayam village for a loan of Rs. 2,000 to reclaim his dry land rendered unfit for cultivation.

* 255 *Q.*—SRI P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state the steps taken by the Government to give relief to the persons affected by floods in the neighbourhood of the Coimbatore district in November 1957?



8th March 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU : Avanashi, Coimbatore and Erode were the only taluks affected by floods in November 1957, in Coimbatore district. There were no damages to houses and private property in Avanashi taluk. Relief as set out below was afforded to the persons affected by the floods in Coimbatore and Erode taluks :—

(1) Cash grant by the Government for reconstruction or repairs to damaged houses—Coimbatore Rs. 5,589—Erode Rs. 370—Total Rs. 5,959.

(2) Persons affected were temporarily accommodated in Municipal and District Board schools.

(3) A Flood Relief Committee was formed and donations were collected for feeding poor and needy persons.

SRI P. S. CHINNADURAI : வெள்ளத்தினால் சேதம் அடைந்து போன வீடுகளுக்குப் பதிலாக வேறு வீடுகளை கட்டிக் கொடுக்க விண்ணப்பம் அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறார்களா ? அவ்வாறு கொடுத்திருந்தால் அதன் பேரில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : விண்ணப்பம் கொடுத்தது மட்டுமல்ல. அதற்காகப் பணம் கொடுத்திருக்கிறோம். அதைதான் முன்பே சொன்னேன்.

SRI N. MARUDHACHALAM : வெள்ளத்தினால் வயல்களுக் கெல்லாம் நாசம் ஏற்பட்டதினால், அந்த நிலச் சொந்தக்காரர்கள் விண்ணப்பித்தும்கூட அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தனிக் கேள்வி போட்டால் தான் விவரம் சொல்ல முடியும்.

### *Housing Board*

* 256 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Housing Board has been constituted; and

(*b*) if so the various Housing Schemes formulated by the Board?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government have taken a decision to constitute a non-statutory Housing Board to regulate and co-ordinate various housing schemes in the State. They have also decided that for the time being, it will be sufficient to appoint a part-time Chairman for the proposed Housing Board. Accordingly, a part-time Chairman has been appointed. The Chairman has been asked to submit detailed proposals in regard to the constitution, functions and powers of the proposed Housing Board. They are awaited. The Chairman, Housing Board, is in charge of the Low Income Group Housing, Subsidised Industrial Housing, and Slum Clearance Schemes in the State.

* 257 *Q.*—SRI S. PAKKIRISAMY PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any non-statutory Housing Board has been constituted for the State; and

[8th March 1958

(*b*) if so, the names of the members thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, threre is overlapping of the answer prepared for clause (*a*) of this question and the answer given to the previous question. So, I shall only read the answer to clause (*b*) of this question.

The question of appointment of the Departmental officials to the proposed State Housing Board is under consideration of the Government, and the question of appointment of members will be considered when a statutory Housing Board is constituted.

SRI A. GOVINDASAMY : ஏற்கெனவே கூட்டுறவு முறையில் கட்டப் படுகின்ற கட்டிடங்களையும் இந்த போர்டு கவனிக்குமா? அல்லது அவர் களுக்குத் தனி வேலை இருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : அவர்களை சேர்த்துக் கவனிக்கவேண்டும் என்பதுதான் நோக்கம்.

SRI K. ANBAZHAGAN : இப்படிப்பட்ட வீடு கட்டும் திட்டக் குழுவிலே, திட்டங்களை நிறைவேற்றுவதிலும் கட்டடங்கள் கட்டும் செயல் முறையிலேயும் பின்னர் பல குறைகள் இருக்கின்ற காரணத்தினாலே, முன் கூட்டியே சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெறச்செய்வீர்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ஸ்டேசுட்டரி போர்டுக்கு மத்திய சர்க்கார் ஒரு மாடல் சட்டம் நிறைவேற்றுவதாக உத்தேசித்திருக்கிறார்கள். அவர்கள் சட்டம் நிறைவேற்றிய பிறகு நாமும் அந்த வழியில் செல்லலாம். அப்பொழுது பரிசீலனை செய்யவேண்டிய விஷயங்கள் எல்லாம் கவனிக்கப்படும். இப்பொழுது இருக்கின்ற "**Non-statutory**" போர்டில் உத்தியோகஸ்தர்கள் இருப்பார்கள்.

SRI P. G. MANICKAM : வீடு கட்டும் திட்டத்தைக் கவனிப்பதற்கும், குறிப் பாக ஹரிஜனங்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை கவனிபதற்கு "ஹௌஸிங் கமிஷனர்" என்ற அதிகாரியின் தலைமையில் மத்திய சர்க்கார் நடத்தி வருவது போன்று, ராஜ்ய சர்க்காரும் தனி இலாக்கா ஏற்படுத்தவேண்டு மென்று மத்திய சர்க்காரிடமிருந்து உத்தரவு அனுப்பப்பட்டதா?

THE HON. SRI R. VENKATARAMAN : இது விஷயத்தில் மத்திய சர்க்கார் எந்தவிதமான உத்திரவும் அனுப்பவில்லை. அவசியமும் இல்லை. இது சம்பந்தமாக ஒரு மகாநாடு நடந்தது. அதில் அந்தந்த ராஜ்ய சர்க்கார்கள், தனியாக ஹௌசிங் போர்டு வைத்து எல்லாவிதமான வீடு கட்டும் திட்டங்களையும் ஒன்றாகக் "கோ-ஆர்டினேட்" செய்ய வேண்டு மென்பதற்காக, தனித்தனியாக அவரவர்கள் ராஜ்யத்தில் ஒரு "போர்டு" வைத்துக்கொள்வது நல்லது என்று சிபார்சு செய்தார்கள்.

SRI N. K PALANISAMI : இந்த போர்டானது குறைந்த விலையிலும், நன்றாகவும் வீடுகளைக் கட்டவேண்டுமென்றும், எந்த மாதிரி வீடுகள் கட்டவேண்டும் என்பதைப் பற்றியும் உத்திரவு பிறப்பிக்கின்றது. சர்க்கார் எந்த விதமான வீடுகள் கட்டுவதாக உத்தேசம்?

THE HON. SRI R. VENKATARAMAN: வீடுகள் கட்டுவதில் சிக்கன மான முறையை பரிசீலனை செய்வதற்கு ஆராய்ச்சிக் குழு இருக்கிறது. அவர்கள் அவ்வப்போது ஆராய்ச்சி செய்து, எந்த முறையில் வீடு கட்டினால் இலகுவாக குறைந்த செலவில் கட்டமுடியும் என்பதைத் தெரிவிக்கிறார் கள். அதைப்பார்த்து நாம எந்த அளவுக்கு நம்முடைய ராஜ்யத்தில் அவற்றைச் செய்யமுடியுமோ, அதைச் செய்துகொண்டு வருகிறோம்.



8th March 1958]

SRI M. R. KANDASWAMI MUDALIAR : ஸார், இந்த வீட்டுவசதி ஸ்கீம் நகரத்திற்கு மட்டும்தான் ஏற்பட்டதா? அல்லது கிராமங்களுக்கும் அதில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா? P

THE HON. SRI R. VENKATARAMAN : கிராமங்களில் வீடு கட்டிக் கொடுப்பதும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

SRI A. V. P. ASAITHAMBI : நிலத்துக்கு வரம்பு கட்டுவது போல வீடுகளுக்கும் ஒரு வரம்பு கட்டி, அதாவது இத்தனை வீடுகளுக்கு மேல் ஒருவர் வைத்திருக்க கூடாது என்ற ஒரு வரம்பை ஏற்படுத்த முயற்சிக்கப் படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: இப்பொழுது பிரச்னை அதிக வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதுதான். ஆகையால், அதற்கு மாறாக யோசனை இருக்குமானால், அதை தகுந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளலாம்.

SRI M. JAGANNATHAN : இந்த வீட்டு வசதி போர்டில் எந்த எந்த அதிகாரிகள் அங்கம் வகிக்கிறார்கள்? அவர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த போர்டு இப்போது தான் ஆரம்பிககப்பட்டு இருக்கிறது. மெம்பர் ஒருவர்தான் இருக்கிறார். அவர் ஸிடி இம்புரூவ்மெண்ட் டிரஸ்ட் சேர்மன் தான். இனி புதிதாக பப்ளிக் ஒர்க்ஸ் என்ஜினீர், கார்ப்பொரேஷன் கமிஷனர், மற்றும் வீடு கட்டுவதில் சம்மந்தபபட்டவர்கள், கோவபரேடிவ் சொஸைடி ரிஜிஸ்டிரார் முதலியவர் களை சேர்த்து அமைக்கப்படும்.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : கிடைக்கும் தொகை குறைவாக இருப்பதாலும், வீட்டுக் கஷ்டம் அதிகமாக இருப்பதாலும் குறைந்தபட்சம் 10 அல்லது 12 ஆயிரத்துக்கு மேல் வீடு கட்ட ஸி.ஐ.டி. ரூரல் ஹௌசிங் சொஸைடிகளுக்கு கொடுக்காமல் இருக்க ஏற்பாடு செய்ய முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : அப்படித்தான் சட்டம் இப்போது இருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, is there any statistics to show the total number of constructions in 1956-57?

THE HON. SRI R. VENKATARAMAN : A separate question may be put.

SRI M. P. SUBRAMANIAM : நம் நாட்டில் அரசாங்க ஊழியர் களுக்கும், மற்றவர்களுக்கும் வீட்டு வசதியைப் பற்றி ஒரு சர்வே செய்ய சர்க்கார் முதலில் ஏற்பாடு செய்யுமா? அதன் பிறகு ஒரு காம்பிரகன்சிவ் திட்டம் ஒன்றை வகுத்து அதன்படி நடக்க ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : காம்பிரகன்ஸிவ் திட்டம் போடுவது எல்லாம் சுலபம். அதில் நேரத்தை நாம் செலவிடுவதை விட, எங்கே எங்கே வீடுகள் கட்ட வேண்டுமோ, அதில்தான் நாம் கவனத்தைச் செலுத்தப்படும்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## I.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER—*cont.*

### (2) MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce to the House the following message, dated the 7th March 1958, received from the Governor of Madras :—

" In pursuance of Article 207, clauses (1) and (3), read with article 199, clause (1), sub-clauses (*a*) and (*g*) of the Constitution of India, I, Bishnuram Medhi, Governor of Madras, hereby give my recommendation for the introduction in the Madras Legislative Assembly of the Madras General Sales Tax Bill, 1958. "

## III.—GOVERNMENT BILL.

### THE MADRAS GENERAL SALES TAX BILL, 1958.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg to move—

" That leave of the House be granted to introduce the Madras General Sales Tax Bill, 1958. "

MR. SPEAKER : Motion moved—

" That leave of the House be granted to introduce the Madras General Sales Tax Bill, 1958. "

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg to introduce the Madras General Sales Tax Bill *, 1958.

The Bill will be circulated in the course of the day or to-morrow.

## IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1958-59.

MR. SPEAKER : இப்பொழுது பொது விவாதம் நடக்கும். அதற்கு முன் ஒரு சின்ன செய்தியை சொல்ல விரும்புகிறேன். நேற்று வரை 97 அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள், அதாவது 62 காங்கிரஸ் அங்கத்தினர்கள், 11 நேஷனல் டெமோகிராடிக் காங்கிரஸ் அங்கத்தினர்கள், 11 திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள், 4 கம்யூனிஸ்டு அங்கத்தினர்கள் 2 பிரஜா சோஷலிஸ்ட் அங்கத்தினர்கள், 2 சோஷலிஸ்ட் அங்கத்தினர்கள், 5 இண்டிபெண்ட்டெண்ட அங்கத்தினர்கள். இன்றைய தினம் 3 கட்சித் தலைவர்கள் பேசுவார்கள். ஸ்ரீ ஸி. என். அண்ணாத்துரை 98-வது அங்கத்தினர் என்றும், 99-வது அங்கத்தினர் எதிர் கட்சித் தலைவர் ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் என்றும், நிதி மந்திரி 100-வது அங்கத்தினராக பேசுவார் என்று சொல்ல விரும்புகிறேன். (கரகோஷம்.) ஸ்ரீ அண்ணாத்துரை 1 மணி நேரம் பேசுவார்.

-55 .m. *SRI C. N. ANNADURAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின்மீது இந்த மன்றத்தில் உள்ள அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னதில், திராவிட

* Published in the *Fort St. George Gazette* dated 8th March 1958.







முன்னேற்றக் கழகத்தின் சார்பில், நான் சில வார்த்தைகளைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கருத்துக்களை நானோ அல்லது நான் சார்ந்து இருக்கும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களோ, இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில், காணப்படுகின்ற குற்றம் குறைகளை, விடுபட்டுப்போன தகவல்களை சேர்த்ததால் ஏற்படக்கூடிய கேடுபாடுகளை; இவைகளை எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில், அமைச்சரவை அதைப்பற்றி அதிகமாக ஆயாசப்படாவிட்டாலும், அவர்களுடைய ஆதரவாளர்கள், இந்தக் குற்றம் குறைகளை சொல்லுகின்ற காரணத்தால், அமைச்சர் அவையினுடைய அறிவாற்றலைப் பற்றி நாங்கள் ஏதோ குற்றம் காணுவதாக கருதிக்கொண்டு மிக்க வருத்தம் அடைகின்றனர், சிலர் கோபப்படுகின்றனர். சிலர் எங்களுடைய அறிவாற்றலை ஆராய ஆரம்பிக்கின்றனர். நான் இந்த மாமன்றத்தில் பல முறை எடுத்துச் சொன்னபடி, இந்த அமைச்சரவையில் அமர்ந்திருக்கிறவர்கள் யாருக்கும் அறிவாற்றல் குறைவாக இருப்பதாக நான் எப்போதுமே கருதினது இல்லை. அப்படி குற்றம் குறைகளை எடுத்துச் சொன்னால், அறிவாற்றல் படைத்தவர்கள், போதுமான அளவு அதிகாரம் படைத்தவர்களானால், நாட்டை ஆளக்கூடிய உரிமை பெற்ற இவர்கள், காரியங்களை, இன்னும் எவ்வளவு திறமையாக, செம்மையாக சாதிக்க முடியும் என்பதை எடுத்துச் சுட்டிக் காட்டவே கூறுகிறோம். வரவு செலவு திட்டத்தில் வெறும் புள்ளி விவரங்களைக் காட்டி, இவ்வளவு வரவு, இவ்வளவு செலவு, மிச்சத்துக்கு எங்கே போவது என்று கேட்பதற்கு மட்டும் ஆண்டுக்கு ஒரு முறை வரவு செலவு திட்டம் விவாதிக்கப்படுவது இல்லை என்று கேள்வி நேரத்தின்போது நிதி அமைச்சர் எடுத்துச் சொன்னார்கள். என்.ஜி.ஓ.வினருக்கு அதிக சம்பளம் தரவேண்டும் என்றால் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் இதிலிருந்து குறைத்து, இதிலே கொடுத்து விடுவது என்று சொன்னால் யோசனை செய்கிறோம் என்றும் சொன்னார்கள். கல்விக்காக செலவழித்தது அதிகம், ஹரிஜன முன்னேற்றத்திற்காக செலவழித்தது அதிகம், அவைகளைக் குறைத்து என்.ஜி.ஓ-வினருக்குக் கொடுத்து விடுங்கள் என்று நான் சொல்லுவேன் என்று எதிர்பார்க்கிறார்கள்.

எங்களுக்கு சட்டசபை அனுபவம் குறைவுதான், ஆனால் மனித சுபாவத்தை நீண்ட நாளாக அறிந்து கொண்டு வருகிறோம். ஆகையினால் அதிலிருந்து குறைத்து இதற்குக் கொடுங்கள் என்று சொல்வது எங்களுடைய வேலை அல்ல. அதைச் செய்வதற்குத்தான் அமைச்சர் அவை இருக்கிறது. எந்தெந்த துறைகளை உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்ற பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. எதைக் குறைத்தாக வேண்டும், எந்தெந்தத் துறைகளை கவனித்தால் மற்ற துறைகளுக்கு அதனால் ஊக்கம் ஏற்படும்படி செய்யலாம் என்பதை ஆராய்ச்சி செய்து வருவாய் வரி மூலமாக மட்டும் அல்லாமல் வேறு பல வகையிலும் வருமானத்தைத் தேடுவதும், திட்டங்களை தீட்டுவதும் அமைச்சர் அவையின் பொறுப்பு. இதைத் தட்டிக் கழிப்பதற்கு எங்களை துணைக்கு அழைக்கிறார்கள் என்று நாங்கள் கருதவில்லை. ஏதாவது மாற்று யோசனைகள் சொல்ல வேண்டும் என்று சொல்லுகிறார்கள். என்னுடைய உரையின் இறுதியில் சில மாற்று யோசனைகளைச் சொல்லப் பிரியப்படுகிறேன்.

நிதி நிலை அறிக்கையின் புள்ளி விவரங்களை மாத்திரம் பார்த்தால் இந்த அமைச்சர் அவையை யாரும் பாராட்டத்தான் வேண்டும்: ஏனென்றால் கிடைத்ததை வைத்துக்கொண்டு செட்டாக, சீராக, சிறப்பாக, செலவழித்து கணக்கை ஒப்பனைடத்துவிட்டு, தங்களுடைய கையை துடைத்துக் காண்பித்துவிட்டு மற்றவைகளை உதறி தள்ளிக் காட்டி விட்டார்கள்! கனம் நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதி நிலை அறிக்கையில் எந்தந்த துறைக்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் என்றும், என்ன செலவு செய்ய முடியும் என்றும் சொல்லியிருக்கிறார். அந்தப் புள்ளி விவரங்களைக் காட்டுவது மட்டும் நிதி நிலை அறிக்கையின் நோக்கம் என்பதை நமது ஆட்சியாளர்கள் தங்களுடைய ஒரு அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.—

[Sri C. N. Annadurai] [8th March 1958]

The budget speech is largely a political document. No doubt, the Finance Minister reviews the salient features of the financial administration of the year ending and the year commencing; but the main purpose is to focus attention on the policies and programmes of the party he represents and how far they had been **already implemented and how far they are to be further implemented during the budget year . . .**"

அவர்கள் சார்ந்திருக்கும் கட்சியினுடைய கொள்கைகளையும் கோட்பாடுகளையும் எந்த எந்த வகையிலே நிறைவேற்றுகிறோம் என்பதை எடுத்து விளக்குகிற ஒரு அரசியல் சாசனத்திற்கு ஒப்பிடலாம் என்று குறிப்பிடப்படுகிறது. அது மட்டுமல்லாமல், "It is the duty of every legislator to satisfy himself that these policies were sound and their method of implementation is effective and economic. என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆட்சியாளர் கையாளுகிற இந்தக் கொள்கைகளும் கோட்பாடுகளும் சரியானவைதானா என்று அறியவும், சரியானவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அவைகளை அவர்கள் சரியான முறையில் நிறைவேற்றியிருக்கிறார்களா என்பதைக் கவனிப்பதும்
2 p.m இந்த விவாதத்திலே மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. அதனால்தான் புள்ளி விவரங்களுக்கு அப்பாலே போய் நாங்கள் சில விவரங்களைப்பற்றி பேசவேண்டியிருக்கிறது. புள்ளி விவரங்களுக்கு அப்பால் போய் நாங்கள் பேசுகிற நேரத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆயாசப்படுகிறார்கள் என்று நான் குறிப்பிட்டேன். அவர்கள் ஆயாசப்படுவதற்கு ஒரு காரணமும் இருக்கிறது. நூற்று ஐம்பது பேர், 152 பேர் என்று சொல்லத்தக்க அளவுக்கு உறுப்பினர்களைப் பெற்றிருக்கிற ஒரு பெரிய கட்சி காங்கிரஸ் கட்சி. அதனுடைய செல்வாக்கை மற்றக் கட்சிகள் குறைவாக மதிப்பிடவில்லை. 'அதனுடைய செல்வாக்கை' என்று சொல்லும்போது, 'வோட்டு வாங்குகிற செல்வாக்கை' என்று நான் ஒரு திருத்தத்தை சொல்லிக் கொள்ளுகிறேன். அந்தச் செல்வாக்கு இருக்கிற பெரிய கட்சி காங்கிரஸ் கட்சி. எதிர்க்கட்சிக்காரர்கள் மிக்க சிறுபான்மையாகவும் தங்களுக்குள்ளாகவே கூட ஒரு சில குறிப்பிட்ட விஷயங்களிலே மட்டுமல்லாமல், மற்ற விஷயங்களிலேயும் மாறுபாடான கருத்துக் கொண்டவர்களாகவும் அமர்ந்திருப்பதால், இப்படிப்பட்ட அமைச்சரவை மீது, இவ்வளவு சிறுபான்மையினராக இருக்கும் இவர்கள் குற்றங் குறைகளைச் சொல்வதா, நாம் கேட்பதா என்று, அமைச்சர்கள் அல்ல, அமைச்சரவையை ஆதரிப்பதாகக் கருதிக்கொண்டிருப்பவர்கள் சற்று ஆயாசப்படுகிறார்கள். ஒரு கட்சிக்கு வலுவு அதிகமாக இருக்கும்போதுதான் பொறுப்பு மிகவும் அதிகமாக இருக்கிறதென்பதையும், பழுத்த மரத்தின் மீது தான் கல் வீசுவார்கள் என்பதையும், பழுக்காத மரத்தின் மீது கல் வீசமாட்டார்கள் என்பதையும் அரசியலிலேயும் நாம் அறிந்துகொள்ளலாம். அமைச்சரவை ஆடக்கூடிய நிலையில் இருந்தால், இவ்வளவு குற்றங் குறைகளைச் சொல்லிக்கொண்டிருக்க மாட்டோம், அதை எப்பொழுது வீழ்த்துவது என்று கணக்கெடுத்துக் கொண்டிருக்கலாம், திறமையை இழந்து விட்டிருக்கிற அமைச்சரவையாக இருந்தால், உள்ள குற்றங் குறைகளை இவ்வளவு அப்பழுக்கற்ற முறையிலே விளக்கிக் கொண்டிருக்க மாட்டோம். அடுத்த தடவை அவர்கள் திரும்பி வராமல் இருப்பதற்கு என்ன வழி என்று யோசித்துக் கொண்டிருப்போம்.

ஆனால், இந்த நாட்டிலே ஜனநாயகம் குழந்தைப் பருவத்திலே இருக்கிறது என்பதையும், அப்படிக் குழந்தைப் பருவத்திலேயிருக்கும் போது ஒரு கட்சி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டால், அதை வெகு விரைவிலே, எளிதிலே, விரட்ட முடியாது என்பதையும் பல நாட்டு ஜனநாயக ஆட்சியினுடைய வீட்சியையும் வரலாற்றையும் படித்திருக்கும் நாங்கள் உணர்ந்திருக்கிறோம்.

அதனால் தான், நம்முடைய அமைச்சர்மார்கள், அதிலும் குறிப்பாக, நம்முடைய போலீஸ் அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்கள், போகும் ஊர்களிலேயெல்லாம் 'நல்ல எதிர்க் கட்சி இல்லையே! திறமையாகப்



8th March 1958] [Sri C. N. Annadurai]

பணியாற்றக்கூடிய எதிர்க் கட்சி இல்லையே! நல்ல எதிர்க் கட்சி வேண்டும், வேண்டும்' என்று ஆங்காங்கே பேசிவருகிறார். நல்ல எதிர்க் கட்சி இல்லையே என்று உண்மையிலேயே மெத்த வருத்தப்படுகிறார். அவர் வருத்தம் போகும் வேகத்தைப் பார்த்தால், அடுத்த தடவை அவரே எதிர்க் கட்சித் தலைவராக அமர்ந்து விடுவாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. (சிரிப்பு). அவ்வளவு வருத்தப்படுகிறார் நல்ல எதிர்க் கட்சி இல்லையே என்று.

ஒரு நல்ல எதிர்க் கட்சி வளரவேண்டுமென்றால், நாங்கள் எதிர்க் கட்சிக்காரர்கள். தேர்தலுக்கு நிற்கும் நேரத்தில் ஆளும் கட்சியினர் போட்டிக்கு நிற்கக் கூடாது என்ற ஒரு விபரீதமான அரசியலை நாங்கள் 'இங்கே' புகுத்த விரும்பவில்லை. விபரீத அரசியலை 'இங்கே' நாங்கள் புகுத்த விரும்பவில்லை என்னும்போது, 'இங்கே' என்பதை அழுத்துவதற்குக் காரணம் நம்முடைய ராஜ்யத்திலே என்பதை வலியுறுத்தத் தான். சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் அசோக மேத்தா அவர்கள் மத்திய சட்டசபைத் தேர்தலுக்கு நின்ற நேரத்தில், அவருக்காக, காங்கிரஸ் கட்சியிலிருந்து யாரும் போட்டி போடாமல் விட்டார்கள்.

அந்த முறையைக் கையாண்டு எங்களுடைய எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளவில்லை. எண்ணிக்கையைப் பற்றிக் கவலைப்படாமல், எண்ணிக்கையைப்பற்றி அதிகமாக எண்ணிப் பார்த்துக் கொண்டிராமல், சொல்லுகிற விஷயங்களிலே உள்ள நன்மை தீமைகளை ஆராய வேண்டும். அப்படி ஆராயும் நேரத்தில், ஆளும் கட்சியில் உள்ளவர்கள், எங்களைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக, அவர்களுக்கு மிகவும் துருப்புச் சீட்டாகக் கருதிக் கொண்டிருக்கும் சினிமா விவகாரத்தை மெத்த இழுத்தார்கள். அவர்களெல்லாம் பேசிய நேரத்தில் நான்கைந்து சினிமா முதலாளிகள் கேட்டுக் கொண்டிருக்கவில்லையே என்று நான் எண்ணினதுண்டு. அப்படிக் கேட்டுக் கொண்டிருந்தால், இன்னும் கொஞ்சம் கிராக்கி கிடைத்திருக்குமே தவிர, குறைவு வந்திருக்காது. அவர்கள் எடுத்துச் சொல்லும்போது வெளியிலே இருப்பவர்கள் என்ன எண்ணிக் கொள்வார்கள்? சினிமாக்காரர்கள் அரசியல் பேசுகிறார்கள், அரசியல்வாதிகள் சினிமாவிலே நாட்டம் கொண்டு விட்டார்களே, இது என்ன தலைகீழ் மாற்றம்! என்று சந்தேகப்படுவார்கள். ஆகையால், அந்தத் துறையில் எங்களுக்கு இருக்கும் ஈடுபாடுகளைச் சுட்டிக் காட்டி, நாங்கள் ஆட்சியிலே உள்ள குற்றங் குறைகளை எடுத்துக் காட்டுவதன் தரத்தை யாராவது குறைக்கலாம் என்றால், அது இயலாது என்று கூறிக்கொள்கிறேன். எங்கள் தரத்தைக் குறைத்து அவர்கள் எடுத்துச் சொல்வதாலே நாங்கள் ஈடுபாடு கொண்டிருக்கும் துறையிலே எங்களுக்கு இன்றைய தினம் இருக்கும் இடம் சற்று அதிகமாகி வருகிறது என்றும் கூறுகிறேன். அதை நாங்கள் ஒருபுறத்தில் பொருட்படுத்தாமல் நடப்பதற்குக் காரணம் எங்கள் பேரில் மாசு கற்பிக்க வேறு காரணங்கள் எதுவும் இல்லாத தன்மையினாலே இதையாவது சொல்லலாமே என்கிற ஆவல் உள்ளவர்களாக காங்கிரஸார் இருக்கிறார்கள் என்பது தான். அதுவும் குறிப்பாக காங்கிரஸ் உறுப்பினர் திரு. எழுமலை அவர்கள் சினிமாவை தேசீயமயமாக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சர்க்காருக்கு அந்தத் துணிவு வரவேண்டுமென்று உண்மையில் நான் விரும்புகிறேன். சினிமாவை தேசீயமயமாக்குவது என்ற தீர்மானத்திற்கு இந்த சர்க்கார் வந்துவிட்டால் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் நான் உறுதி கூறி கொள்கிறேன். அவர்கள் சினிமாவை தேசீயமயமாக்கியவுடன் ஐந்தாண்டு காலத்தில் எத்தனை கதையை அவர்கள் எங்களிடமிருந்து கேட்டாலும் நாங்கள் இலவசமாகத் தருகிறோம். (ஸ்ரீ கே. காமராஜ்: கதை கொடுப்பதோடு ஆக்டும் பண்ணணும்.) முதல் அமைச்சர் அவர்கள் அதில் நாங்கள் நடிக்கக் கூட வேண்டும் என்று சொல்கிறார்கள். நிச்சயமாக நடிப்போம். நான் ஏன் இதை இவ்வளவு அழுத்தமாகக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சினிமாத் துறையில் நாங்கள் ஈடுபாடு கொண்டிருப்பது எங்கள் கட்சி நடத்தும் விடுதலைக் கிளர்ச்சிக்கு அது பெரிதும் உதவும் என்ற காரணத்தினால்தான். இதை எதிர்தரப்பில் உள்ளவர்கள்

உணர்ந்து கொள்ளாமல் இருக்கிறார்களே என்று வருந்துகிறேன். வரவு செலவுத் திட்ட விவாதத்தில் இந்தப் பிரச்சினையையே கிளப்பியிருக்கத் தேவையில்லை. நிதி நிலைமையைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கின்ற போது சிலர் தங்கள் கருத்துக்களை இந்தப் பக்கம் அதிகமாகத் திருப்பி விட்டதன் காரணமாக நானும் குறிப்பிட வேண்டியிருந்தது.

சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்து பேசுகின்ற நேரத்தில் இதற்குத் தீர்ப்பு இப்போது கொடுக்காதீர்கள். ஓராண்டின் முடிவில் தீர்ப்பு அளிக்க வேண்டும் என்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னதை அப்படியே படிக்கிறேன்—

“பட்ஜெட் திட்டம் தயாரிப்பது வேலையின் ஆரம்பமேயொழிய வேலையின் முடிவு அல்ல என்பதை நான் உணர்கிறேன். இன்ன இன்ன திட்டங்கள் செய்யலாம் என்று இப்போது முடிவு செய்திருக்கிறோம். இது நன்றாக நடந்திருக்கிறதா என்பதைப் பற்றி வருஷ முடிவில் தெரிந்து கொள்ள முடியும்.”

ஆகையால் இந்த வருஷத்தில் நிதி நிலை அறிக்கையைப்பற்றி யோசிப்பதற்கு முன்னால் சென்ற வருஷத்தில் நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்தபோது அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா, நிறைவேற்றப்பட்டிருக்குமானால் அவற்றால் எதிர்பார்த்த பலன்கள் கிடைத்திருக்கின்றனவா என இவைகளைப் பற்றியெல்லாம் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையில் நான் சென்ற தடவை காங்கிரஸ் உறுப்பினர்கள் எந்த எந்த கோரிக்கைகளை எழுப்பினார்கள் இந்த மாமன்றத்தின் முன்னால் என்பதைக் குறித்துக் கொண்டு அவைகளாவது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதை அறிய மெத்த ஆவல் உள்ளவனாக இருந்தேன். நல்ல வேளையாக இன்றைய தினம் ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் சில விஷயங்களைப் பற்றி எடுத்துப் பேசினார்கள். கிணறு வெட்டுவதில் உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். சென்ற தடவை பட்ஜெட் விவாதத்தின்போதும் அவர்கள் இதே விஷயத்தைப்பற்றிப் பேசுகின்றபோது ஹரிஜனங்கள் குடியிருக்கும் பகுதி முழுவதிலும் சேலத்தில் குடி தண்ணீர் கிணறுகளை வெட்டிக் கொடுக்க அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. அப்படியிருந்தும் கூட போன வரவு செலவு திட்டத்தைப் பார்த்தாலும் வேறு எதில் பார்த்தாலும் குடி தண்ணீர் திட்டம், சுகாதார வசதிகள் ஆகிய இவ்விரண்டு துறையிலும் நாம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம் என்று பார்த்தால் கொஞ்சங்கூட முன்னேறவில்லை என்று தைரியமாகச் சொல்லலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டும் அதனையே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மற்றவர்களுடைய பேச்சையும் குறிப்பு எடுத்து வைத்திருக்கிறேன். அதிலும் சிறப்பாக தாய்மார்களுடைய பேச்சை தாய்க்குலத்திற்கு மதிப்பு வைத்தாவது ஆட்சியாளர்கள் குறைபாடுகளை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தேன். சென்ற ஆண்டைப் போலவே அவர்கள் எங்கள் கட்சியினர்கள் பேசிய பேச்சுக்களை எல்லாம் பொறுக்கிக் கொண்டு அவற்றுக்குப் பதிலளித்திருப்பதோடு கடைசியில் ஆட்சியாளர்கள் எவ்வளவு பேசியும் எங்களைக் கவனிக்காமல் இருக்கிறார்களே என்று தங்கள் தொகுதியைப்பற்றியும் கிளப்பிய அவலக் குரல் இந்த ஆண்டிலும் கேட்டது. இதிலிருந்து நாங்கள் ஊகித்துக் கொள்ளக் கிடைப்பது அமைச்சர் அவை சென்ற ஆண்டு இங்கே குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை எல்லாம் இன்னும் நிவர்த்திக்கவில்லை என்பதுதான். அவைகளை நீக்குவதற்குரிய ஆற்றல் இந்த அமைச்சர் அவைக்கு இல்லை என்று நான் கருதவில்லை. போதிய அவகாசமும் அவர்களுக்கு இல்லை என்று கூறுவதற்கில்லை. அல்லது அவர்கள் செயல்படாதவாறு யாரோ குறுக்கிடுகிறார்கள் என்றும் பொருள் அல்ல. அமைச்சர் அவைக்கு அதற்கேற்ற வசதி இல்லை. அந்த வசதியைப் பெறுவதற்குரிய வரியைப் போடும் வாய்ப்புகளை எல்லாம் மத்திய அரசாங்கம் அதிகப்படுத்திக் கொண்டுவிட்ட காரணத்தினால் இவர்களுக்குள்ள குறைந்த இனங்களிலேயே அதிக வரியைப் போடுவது என்று முன் வருகிறார்கள். இது க்ஷேமநல சர்க்கார் என்கிற அடிப்படைத் தத்துவத்திற்கே



சரியாகாது. வரி இல்லாமல் ஆட்சி நடக்காது. ஆனால் வரி ஒன்றினால் மட்டும் தான் வருவாயைத் தேடிக் கொள்ள முடியும் என்று நினைத்தால் நிச்சயமாக அந்த ஆட்சி வழியில் போகின்றவனுடைய மடியில் இருப்பதை எடுத்து மற்றவன் கரத்தில் கொடுப்பதைப் போலத்தான் நடக்கவேண்டியிருக்கும்.

ஆகையால் ஆளும் கட்சியினர் வருவாயை எந்த எந்த வகையில் பெருக்கிக் கொள்ளலாம் என்று பார்க்கின்ற நிலை வேண்டும். வரி மூலமாக மட்டுமல்லாமல் வேறு எந்த எந்த வகையில் வருவாயை பெருக்கிக் கொள்வது எனவும் எண்ணவேண்டும். அப்படி எண்ணிப் பார்க்கும்போது நான் பழைய விஷயத்திற்கு வந்து விடுகிறேன் என்று சிலர் வருத்தப்படக் கூடும். நான் பழைய விஷயத்திற்கு வரவில்லை. அடிப்படை விஷயத்திற்கு வருகிறேன். ஆட்சியாளர்களுக்குள் போதுமான வாய்ப்பு இல்லை என்று குறிப்பிட்டேன். காரணம் நமது அரசியல் சட்டத்தின் 12-வது பிரிவின்படி எந்த எந்தத் துறையில் மட்டும் வரி போடலாம் என்பதை இந்திய அரசாங்கத்தார் வரையறுத்து விட்டார்கள். மத்திய சர்க்கார் போடுகின்ற வரிப்பளுவின் விளைவாக நமக்கு ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமைகளை எடுத்துக் காட்டி, திராவிட நாட்டுப் பிரிவினைக்கு நான் திட்டமிட்டு உங்களை அழைத்துச் செல்கிறேன் என்று எண்ணிக் கொள்ளுவார்கள் இங்குள்ள அமைச்சர்கள். வங்காளத்தில் இருக்கிற அமைச்சர் அவைத் தலைவர் இப்போது பேசியிருக்கிறார்.

"Budgeting in the States is growing increasingly difficult in view of this increasing dependence on the Centre and the increasing uncertainty about the amounts which are likely to be received in this area of dependence."

மத்திய சர்க்காரிடத்திலே நாம் அதிகமாக கையேந்தி நிற்கவேண்டியிருக்கிறது. அப்படி நாம் கையேந்தி நிற்கும் நேரத்தில் நமக்கு கிடைப்பது போதிய அளவு கிடைக்குமா, எப்பொழுது கிடைக்கும் என்பதை உறுதியிட்டு சொல்ல முடியாமல் இருக்கிறது. ஆகவே மாநில அரசாங்கத்தின் நிதி நிலை அறிக்கையை தயாரிப்பதிலே கஷ்டம் இருக்கிறது என்று டாக்டர் பி. ஸி. ராய் அவர்கள், பழுத்த தேசிய வாதி, அரசியல் அறிஞர், நல்ல திறமை படைத்தவர், வங்காள மாநில சர்க்காரின் முதல் அமைச்சராய் இருப்பவர் இப்படி கூறியிருக்கிறார். அப்படி சொல்லும் காலத்தில், 3·83 கோடி ரூபாய் துண்டு விழும் பட்ஜெட்டை, அதற்காக எந்தப் புது வரியும் போடாமல் வரவு செலவுத் திட்டத்தை அவர் கொடுத்து விட்டு இதனைச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் எந்தெந்த துறைகளில் வரி போடுகிறார்கள், அவர்கள், போடுகிற வரியின் அளவைப் பற்றி நாம் கவனிக்கும் நேரத்தில் அவர்கள் போட்டது போக மிச்சம் இருக்கும் துறையில் நாம் வரி போட வேண்டியிருக்கிறது. மத்திய சர்க்கார் போடும் வரிச்சுமையைத் தாங்கிவிட்டு மேலும் வரும் வரிச்சுமையைத் தாங்கிக்கொள்ள நம் மக்களுக்கு வலிவு இருக்கிறதா என்று நாம் பார்க்கவேண்டும். Most of the elastic taxes are levied by the Centre and the States have to depend upon only inelastic taxes. மத்திய அரசாங்கம் ஒரு பக்கத்தில் வரிகளைப் போட்டுக் கொண்டே போக நம் நாட்டு மக்கள் அந்த வரிச்சுமையைத் தாங்கி பின் மிச்சம் வலிவு இருந்தால்தான் மாநில சர்க்கார் போடக்கூடிய வரிச்சுமையைத் தாங்கிக் கொள்ள முடியும். மாநில சர்க்கார் மேலும் வரிச்சுமையை மக்களின் மேல் போட முடியாமல் இருப்பதற்குக் காரணம், மக்களினால் மேலும் வரிச்சுமையைத் தாங்கிக் கொள்ளமுடியாது என்று உணர்ந்திருக்கும் கருணை உள்ளம்தான் என்றுதான் நான் கருதுகிறேன். 1953–54-ம் ஆண்டில் மட்டும் மத்திய சர்க்கார் எக்ஸைஸ் வரி மூலம், அதாவது கலால் வரி மூலம் பொருள்களின் மீது கொடுக்கப்பட்ட வரி, ஏறக்குறைய 96 கோடி ரூபாய் வசூலித்திருக்கிறார்கள். ஆனால் 1957–58-ல் எக்ஸைஸ் வரியாக சுமார் 257 கோடி ரூபாய் மத்திய சர்க்காருக்கு போய் இருக்கிறது. எந்தெந்தப் பொருள்களுக்கு நாம் வரி செலுத்துகிறோம் என்பதை, எங்களுக்குரிய கதை சொல்லும் பாணியில், நான் சற்று சொல்லப்

பிரியப்படுகிறேன். காலையில் நாம் குளிக்க சோப் எடுத்தால் அதற்கு நாம் வரி மத்திய சர்க்காருக்குத் தருகிறோம். நாம் குளிப்பதற்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு ஷவரம் செய்து கொள்ள ப்ளேட்-ஐ கையில் எடுத்தால் அதற்கும் நாம் மத்திய சர்க்காருக்கு வரி தருகிறோம். நாம் பின், சிகரட் பிடிப்பவர்களாக இருந்தால் அதற்கு போடப்படும் வரியும் மத்திய சர்க்காருக்குப் போய் சேருகிறது. இப்படி போடப்படுகிற வரிகள் எந்தெந்தப் பொருள்களுக்கு என்பதை மட்டும் நான் இந்த மாமன்றத்தில் படித்துக் காட்ட சபாநாயகர் அவர்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று நான் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அது, மற்றவர்களுக்கு தெரியாது என்பதினால் அல்ல. ஆனால் எனக்குத் தெரியும் என்பதை எடுத்துக் காட்டி தயவு செய்து நிதியமைச்சர் அவர்கள் அனுமதிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அவைகளாவன,

"Gold, silver, kerosene, tobacco, coffee, tea, cigar cheroot, cloth, matches, vegetable products steel ingots, power alcohol, sugar, tyres-tubes, cement, soap, art silk, foot-wear, paper, paints-varnish, electric bulb, fans, batteries, woollen fabrics, power-looms, vegetable non-essential oil, rayon yarn, mechanical lighter, motor spirit, cotton fabrics, staple fibre yarn, motor car."

எக்ஸைஸ் ட்யூட்டியாக இவ்வளவு பணம் வசூலிப்பதில் சென்னை மாநில சர்க்காருக்கு மத்திய சர்க்கார் எவ்வளவு பணம் தருகிறது? முன்னேற்றக் கழகக்காரர்களுக்கு ஏதாவது கணக்கு இருக்கிறதா என்று ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களுக்கு சரியாக கணக்கு கிடைக்கக்கூடிய பருவம் இல்லை. இருந்தாலும் கிடைத்திருக்கக்கூடிய மட்டில் சொல்கிறேன், இந்தத்துறையில் மட்டும் சென்னை மாநிலம் 21·58 கோடி ரூபாய் எக்ஸைஸ் வரியாக கொடுத்துக் கொண்டு வருகிறது. மாநில சர்க்கார் தங்களுடைய வரவு செலவு திட்டத்தில் விழும் துண்டை சரிக்கட்டுவதற்காக, ஏதாவது மக்களுக்கு தேவையான நன்மைகளை செய்யவேண்டுமென்று கருதி வரி போடவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அடைக்கப்பட்டிருக்கின்ற இடங்கள் இவ்வளவு இருக்கின்றன. தேவைக்கு தக்க பணம் கிடைக்க வேண்டுமென்றுள்ள எண்ணத்தின் பேரில் அமைச்சர் அவர்கள் அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் அதாவது விவசாய வருமான வரியை போட்டிருக்கிறார்கள். ஆனால் கணக்கெடுக்கும்பொழுது விவசாய வருமானத்தோடு மற்றத்துறைகளில் வரும் வருமானத்தையும் சேர்த்துக் கணக்கு எடுக்கப்படும் என்று சொல்லுகிறார். இன்றைய தினம் அதற்குக்கூட இந்த மாநில சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறதா என்பதில் எனக்கு ஐயப்பாடு இருக்கிறது. ஏனென்றால் நமது வரவு செலவு திட்டத்தில் பிற துறைகளிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் வரிவிதிக்கும் அதிகாரம் மத்திய சர்க்காருக்கு அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர மாநில சர்க்காருக்கு இல்லை என்று யாராவது வழக்கறிஞர்களை வைத்து சர்க்கார் வாதாடலாமே தவிர மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அந்தத் துறைகளின்மீது வரி விதிக்கும் அதிகாரத்தை மத்திய சர்க்கார்தான் வைத்துக் கொண்டிருக்கிறது என்பது தெரியும். இவைகளையெல்லாம் நான் சொல்லுவது மத்திய சர்க்காரின் மேல் குற்றஞ் சாட்டவேண்டும் என்பதற்கு அல்ல. மத்திய சர்க்காரிடத்தில் இவ்வளவு துறைகளை ஒப்படைத்துவிட்டு, பிறகு எவ்வளவுதான் ஆற்றல் படைத்தவர்களாய் இருந்தாலும் சரி, நமது மாநில அமைச்சர்களால் துண்டு விழும் வரவு செலவு திட்டத்தைதான் தயாரிக்க முடிகிறது. இந்த துண்டு விழும் தொகையை சரிகட்டுவதற்கு யாரைப்பார்த்து வரி போட்டால் அதிகமான பணம் கிடைக்கும் என்று என்னைப் பார்த்து நிதி அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அதோடு, ஆமாம், இதில் கஷ்டங்கள் இருக்கின்றன, இவைகளை மாற்றுவதற்கு வேண்டிய வழிகளை எதிர்கட்சி தலைவர்கள் வேண்டுமானால் சொல்லட்டுமே, கேட்கலாம் என்று சொன்னார்கள். உண்மையில் வழிமுறை தெரிந்திருந்தால் என்னைப்பார்த்து கேட்டிருக்க மாட்டார்கள். சிறு குழந்தை சந்திரனை பிடித்துத் தரவேண்டும் என்று கேட்டால் அழுகின்ற நேரத்தில் அதன் தாய் அந்த சந்திரனை என்னால் பிடிக்க





முடியாது, சந்திரனை பிடிப்பதற்கு உன்னை ஏவுகிறேன், பிடித்து வா என்று அந்த தாய் சொல்லுகின்ற கனிவை நிதி அமைச்சர் அவர்களிடத்தில் நான் காணுகின்றேன். சந்திரனை பிடிக்க முடியாது, தூரத்தில் எட்டி நிற்பது என்பது போல், மத்திய சர்க்காருடைய கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது எல்லா அதிகாரங்களும் என்பதை இதன் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். உண்மையில் இந்த மத்திய சர்க்காரில் வரிகள் என்று சொல்லவில்லை, வரித்துறைகள் அவ்வளவும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சிறிய அளவுதான் மாநில சர்க்காரிடத்தில் இருக்கிறது. ஆங்கிலத்தில் வரி முறைகளைப் பற்றி எடுத்துச் சொல்லுவார்கள், சில வரிகள் எலாஸ்டிக், அதாவது நியாயமாக வருவாய் அதிகரிக்க அதிகரிக்க வரித்தொகை வளர்ந்து கொண்டே போகும். இன் எலாஸ்டிக் என்பது வருவாய் எவ்வளவுதான் அதிகரித்தாலும் அதனால் வரிகள் வளராது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நில வருவாய் என்பது குறிப்பிட்ட அளவுதான் வளருமே தவிர மாநில சர்க்காருக்கு இன்றைய தினம் இருக்கின்ற பசியை எண்ணி, மாநில சர்க்காரின் பற்றாக்குறையை எண்ணி நிலங்கள் திடீரென்று நாலைந்து போகம் விளைந்துவிடாது. அதெல்லாம் நந்தனார் காலத்தோடு நின்று போய்விட்டது. நந்தனார் காலத்தில் நந்தனாருக்கு மட்டுமே ஓரே இரவில் உழாமல் விதைக்காமல் மறு நாள் காலை அறுவடை செய்ய முடிந்தது, என்று கதை சொல்லுகிறது. அது இப்போது எப்படி கிடைக்கும். நான் குறிப்பிட்ட இந்த வரிகள் எல்லாம் மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்க அதிகரிக்க மக்களின் பண்பாடுகள் அதிகரிக்க அதிகரிக்க மக்களுடைய தேவைகள் வளர வளர இந்த வரிகளும் வளர்ந்து கொண்டே போகும். 1953-54-ல் 27 கோடி ரூபாயாக இருந்த எக்ஸைஸ் வரி இப்போது 257 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அந்த அளவு வளர்ச்சியடையும் வரிகள், வரித்துறைகள் எல்லாம் மத்திய சர்க்காரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான், இந்த மாநிலத்தவர் அல்ல, வேறொரு மாநிலத்தைச் சார்ந்தவர் இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார். "The strk fact is that what Assam is enjoying under the new rulers of the country is not freedom but thestatus of a colony." அதாவது நாம் ஒரு குடியேற்ற நாட்டின் அந்தஸ்திலேயே இருக்கிறோம், உண்மையான விடுதலை இல்லை" என்று இந்த மாகாணத்திலுள்ளவர் அல்ல, வேறொருவர் மாகாணத்திலுள்ள ஒருவர், பொறுப்பற்றவர் அல்ல பொருப்புள்ள ஒருவர், ஏதோ தாளுக்களில் சேர்ந்தவர் அல்ல, யாரென்று கவனிக்கப்படவேண்டிய நிலையில் உள்ள ஒருவர் இவ்வாறு சொல்லியிருக்கிறார்." "It is by now painfully apparent that our rulers in Delhi cannot be counted upon to be fair to the under-developed regions. It is the people concernedthat by their united and strong action must wrest what is their due." என்று சொல்லுகிறார், நான் ஆஸாம் மாகாணத்தைப்பற்றி குறிப்பிடுகிறேன். ஆஸாம் மாகாணத்திற்கும் மத்திய சர்க்காருக்கும் இடையில் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை சம்பந்தமாக ஏற்பட்ட தகராறில், இந்த விதமாக அங்குள்ள அரசியல் தலைவர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த அளவுக்கு மனப்பான்மை வளர்ந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, மாநில சர்க்காருடைய கரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்காரிடத்தில் எல்லா அதிகாரங்களையும் கொடுத்துவிட்ட காரணத்தினால் நமக்குப் பற்றாக்குறை வரவு செலவு திட்டத்தை நாம் தயாரிக்க வேண்டியிருக்கிறது என்பதை உள்ளடக்கி "The stark fact is that what Assam is enjoying under the new rulers of the country is not freedom but the status of a colony." என்றும் நாம் குடியேற்ற நாட்டின் அந்தஸ்தில் தான் இருந்து வருகிறோம் என்றும் ஆஸாமிலுள்ள அரசியல் தலைவர் சொல்லுகின்றார். நான் இவ்விதம் சொல்வதை வைத்துக்கொண்டு மிக சாமார்த்தியமாக நமது நிதி அமைச்சர் அவர்கள் வடக்கு தெற்கு என்று சொல்லுகின்ற அண்ணாத்துரை இப்போதாவது ஆஸாமுக்குக்கூட கவலை இருக்கிறதுஎன்பதை புரிந்துகொள்ளுகின்றார் என்று கூறி வாதாடப்போகிறார்கள் என்று முன்கூட்டியே நான் ஊகிக்கிறேன். நான் ஒன்று சொல்வேன்,

ஆஸாமுக்கும் கவலை இருக்கிறது, நமக்கும் கவலை இருக்கிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். அவர்கள் தங்கள் பாசத்தை எவ்வளவு காண்பித்தாலும்கூட தங்களுடைய கவலையை தெரிவித்துக்கொள்ளுவதில் தவறவில்லை என்பதை நாம் பார்க்கவேண்டும். “ தாயும் மகளும் ஒன்று என்றாலும் வாயும் வயிறும் வேறு ” என்கின்ற முறையில் அவர்கள் இருந்து வருவதை நாம் பார்க்கவேண்டும். நம்முடைய நிதி அமைச்சர் அவர்களோ மத்திய சர்க்காரினால் நியமிக்கப்பட்ட நிதிக் குழுவினிடத்தில் காரசாரமாக விஷயங்களைப்பற்றி பேசி விவாதித்து அப்பழுக்கற்ற ஆதாரங்களைக் காட்டி எவ்வளவோ திறமையுடன் வாதாடினாலும், பெறவேண்டியதைப் பெற முடியவில்லை என்று சொல்லி, ஆனால் பெற்றதற்கு நாம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்வோம் என்று சொல்லுகிறார்கள். அஸ்ஸாம் மாகாணத்திலுள்ளவர்கள் இதே நேரத்தில் “ வெட்டு ஒன்று, துண்டு இரண்டு ” என்று பேசக் கூடிய நேரத்தில், நமது நிதி அமைச்சர் அவர்கள், “ எதிர்பார்த்த அளவுக்குக் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. கிடைத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்வோம் ” என்று எடுத்துச் சொல்வதிலிருந்து எனக்குத் தோன்றுகிறது, மிக விரைவில் அவர்களே அங்கே போய் உட்கார்ந்து கொண்டு, நாம் கேட்கும்போதெல்லாம் “ இல்லை, இல்லை ” என்று சொல்வார்களோ, அதற்காகத்தான் இப்போது இப்படி சொல்கிறார்களோ என்று
2-20 p.m. நானே ஊகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எது எப்படியிருந்தாலும்..

THE HON. SRI R. VENKATARAMAN : அவர் அங்கே போனால் நமக்கு வேண்டியதைக் கொடுப்பார்.

SRI C. N. ANNADURAI : நம் தொழிலமைச்சர் அவர்கள், நிதி அமைச்சர் அவர்கள் அங்கே போனால் வேண்டிய பணம் தருவார்கள் என்று சொல்கிறார்கள். அவர் அப்படிச் சொல்வதிலிருந்து, யாராவது அங்கேயிருந்து கொண்டு நமக்கு நியாயமாக பணம் தரவேண்டுமென்ற ஆவல் அமைச்சருக்கு எவ்வளவு இருக்கிறது என்பது தெரிகிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : நியாயமாக இல்லை. அதிகமாக என்று சொல்லலாம்.

SRI C. N. ANNADURAI : இப்படிச் சொல்வது நம்முடைய வாதத்தைத் தான் உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. இப்போது சாதாரணமாகப் போட்டிருக்கின்ற வரித் துறைகளைப் பொருத்தவரையில், அந்த வரி முறைகளை எங்கள் கட்சியின் சார்பிலிருந்து இதுவரை யாரும் எதிர்க்கவில்லை, நானும் எதிர்க்கவில்லை. விவசாய வருமான வரி போடத்தான் வேண்டுமென்பதனை இதற்கு முன்னால் இந்தச் சட்ட மன்றத்திலே விவாதித்திருக்கிறோம். கிடைக்கும் வருமானம் எவ்வளவு என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். அப்படிக் கணக்கெடுத்திருப்பதைப் பார்க்கும் நேரத்திலே கால தாமதப்படுத்தியதால் எவ்வளவு பணம் விரயமாகியிருக்கிறதென்பதை நான் எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியாது. இந்த விவசாய வருமான வரியின் மூலம் நமக்கு 70 லட்சம் ரூபாய் கிடைக்கும் என்று நிதி அமைச்சர் அவர்கள் கணக்கிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள். வெளியிலே உள்ள மக்களின் கணக்கும், அந்த மக்களின் நினைப்பும், இந்த வரியின் மூலம் ஏராளமான பணம் வரும் என்பதாகும். ஏன் அப்படி யென்றால், ஏராளமான நிலத்தை தனித் தனியாக வைத்துக் கொண்டிருப்பவர்கள் நிரம்ப வரி கட்டுவார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். அப்படி எண்ணிக் கொண்டிருக்கும் நேரத்திலே, நமது ஆட்சியாளர்கள், அவர்கள் மற்ற நாடுகளோடு தொடர்பு கொண்டு, ஆங்கிலத்தில் “ கோ-எக்ஸிஸ்டென்ஸ் ” என்று சொல்வார்களே அதாவது—ஒன்றாகக் கூடி வாழ்வது, தனிப்பட்ட முதலாளிகளையும், தொழிலாளிகளையும், மிராசுதார்களையும், உழவர்களையும் ஒன்றாக வைத்துக்கொண்டு வாழவேண்டும் என்று கருதிக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, “ இப்படிச் செய்யப் போகிறோம், அப்படிச் செய்யப் போகிறோம், புலி வருகிறது, புலி வருகிறது ” என்று நீண்ட நாளாகச் சொன்ன காரணத்தினாலே, புலி வந்தால் என்ன செய்வது என்பதைக் கண்டுபிடித்து நிலச்



சொந்தக்காரர்கள் பாதுகாப்பைத் தேடிக்கொண்டார்கள். அப்படிப் பாதுகாப்பைத் தேடிக் கொண்டவர்களில் ஒரு சிலர் இங்கேயும், பலர் வெளியேயும் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்படிப் பாதுகாப்பைத் தேடிக்கொண்ட காரணத்தினால்தான், விவசாய வருமான வரி போட்டும் 70 லட்சம் ரூபாய் அளவுக்குத்தான் வரி கிடைக்கிறது. அதற்கே கூட காங்கிரஸ் கட்சியின் தரப்பிலிருந்து ஓரளவுக்கு எதிர்ப்பு கிடைத்தது. நம் நிதி அமைச்சர் சென்ற ஆண்டு சொன்னார்கள். நிலச்சுவாந்தார்கள் எங்கள் பக்கத்தில் இருக்கலாம் ; மிட்டாதார்கள் எங்கள் பக்கத்தில் இருக்கலாம் ; ஜமீந்தார்கள் எங்கள் பக்கத்தில் இருக்கலாம் ; நில உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி சொன்னால், அவர்களுடைய தேசிய உணர்ச்சி அவர்களை ஒத்துக் கொள்ளச் சொல்லும் என்று சொல்லி, அந்த இடத்திலே சபையினரின் கரகோஷத்தைப் பெற்றார். என் மனக்கண் முன்னால் அந்தக் காட்சியைக் காண்கின்றேன். அதே அவையில் இன்றைய தினம் எவ்வளவு மனக் குமுறல் இருந்தது, எவ்வளவு பேர்கள் வருத்தப்பட்டார்கள் என்பதைப் பார்க்கும்போது நிதி அமைச்சர் கருதுகிறபடி உண்மையிலே தேசீய உணர்ச்சியும், சொந்த உணர்ச்சியும் மோதுகின்ற நேரத்திலே, தேசீய உணர்ச்சி வெற்றிபெறுமென்று கூறுவது அவ்வளவு எளிதல்ல, சரியல்ல என்பது தெரிகிறது. ஆனால் கட்சிக் கட்டுப்பாடு உணர்ச்சிதான் பாதுகாப்பு அளிக்கிறது என்று நான் கருதுகிறேன். இல்லையென்றால், சென்ற ஆண்டிலே காங்கிரஸ் அங்கத்தினர் இன்னது செய்யவேண்டுமென்று எடுத்துச் சொன்னபோது வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டதில் ஒன்று மடாலயங்களிலுள்ள நிலங்களை தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஒருவர் சொன்னதைக் குறிப்பிடுகிறேன். ஹரிஜனங்களுக்குப் பகிர்ந்தளிக்கவேண்டும், கூட்டுறவுப் பண்ணையின் கீழ் கொண்டு வரவேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். அவைகளை கவனிக்கலாம் என்று சொன்ன நமது அமைச்சரவை, நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டவேண்டுமென்ற ஆவலைக் கிளப்பி, அப்படிக் கிளப்பப்பட்ட ஆவலினாலே மக்கள் உந்தப்பட்டு, நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டப் போகிறார்கள், நிலங்கள் ஒரே இடத்தில் குவிந்திருக்காது, தருமபுரம், திருவாடுதுறை மடாலயங்களில் குவிந்திருக்காது, எல்லாவற்றையும் பகிர்ந்து கொடுத்து விடுவார்கள் என்று மக்கள் எண்ணிக் கொண்டிருந்தனர். விவசாய வருமான வரிதான் போடப் போகிறோம் என்று இப்போது அமைச்சர் எடுத்துச் சொல்வதிலிருந்து உண்மையிலேயே இந்தத் திட்டத்தைக் கைவிட்டு விடுவார்களோ என்று சிலரும், ஒத்தி வைத்து விடுவார்களோ என்று பலரும் ஐயப்படும்படியாக இருக்கிறது. அந்த அளவுக்கு அவர்கள் ஏன் நிலச்சுவாந்தார்களிடத்தில் அச்சப்படவேண்டுமென்று என்னால் ஊகிக்க முடியவில்லை. இன்றைய தினம் நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டவேண்டுமென்று எடுத்துச் சொல்லாத கட்சியை முற்போக்கான கட்சியென்று நாட்டிலே யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். நாட்டிலே ஒருமைப்பாடு இருக்கிற பிரச்னை இது. எதனால் இவ்வளவு கால தாமதம் இதற்கு ஏற்படுகிறது என்று எனக்குப் புரியவில்லை. ஒரு சமயம் அடுத்த தேர்தல் முடிந்து அதற்குப் பிறகு பார்க்கலாம் என்ற அளவுக்கு அமைச்சரவையில் உள்ளவர்கள் கருதுகிறார்களோ என்று தெரியவில்லை. சாதாரணமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலும், வெளியே பேசுகின்ற போதும், பணக்காரர்களிடத்தில் உள்ள பணத்தை வாங்கிக்கொள்ள முடியும், வாங்கத் தெரியும் என்று சொல்லுகிறார். அவருக்கு அந்தத் திறமை இருக்கிறது. அந்தத் திறமை அவருக்குக் கடைசி வரை இருக்குமா ? ஐயப்பாடுதான். அவருக்குப் பிறகு ஆட்சியாளராக அமருகின்றவர்கள் அவரைப் போல பணக்காரர்களிடத்தில் பக்குவமாகச் சொல்லி வாங்கக் கூடிய அளவுக்கு திறம் படைத்தவர்களாக தொடர்ச்சியாக வருவார்களா என்று தெரியவில்லை. உலகத்திலே பொருளாதார நிபுணர்கள் ஒருவரிடத்திலே பணம் குவிந்திருக்கக் கூடாது என்று கருதும்போது இவர்கள் மட்டும் ஏன் இன்னும் இதை விட்டு வைத்திருக்கிறார்கள் என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. நம் நிதி அமைச்சர் அவர்கள், “ வரவு செலவுத் திட்டத்தைப் பார்த்துவிட்டு தீர்ப்பு அளிக்காதீர்கள், ஆண்டு முடிந்த பிறகு தீர்ப்பளியுங்கள் ” என்று சொன்னார்கள். அந்த

[Sri C. N. Annadurai] [8th March 1958

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஆண்டு அறிக்கையைப் படித்து விட்டு புள்ளி விவரங்களை மட்டும் சொல்லாதீர்கள், அதன் பலனையும் பார்த்துச் சொல்லுங்கள் என்று சொன்ன காரணத்தால் பலன் ஏற்பட வில்லை என்பதை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஓவியத்தின் வசீகரத்தைப் பார்த்துத்தான் ஓவியரின் திறமையைச் சொல்ல வேண்டுமேயொழிய அதிலே செலவான வண்ணத்தைப் பார்த்துச் சொல்வது சரியல்ல. வண்ணத்தைக் கொண்டு ஓவியத்தைத் தீர்மானிப்பது இயலாத காரியம். ஆகையினால் தான் நாங்கள் வேறு ஒரு வழியை, ஒரு முறையை கண்டுபிடித்தாக வேண்டும் என்று நானும் என்னைச் சார்ந்த கட்சிக்காரர்களும் கருதுகிறோம். அது இந்தத் தலைமுறையில் நடக்காது என்று ஆளும் கட்சியில் சொல்லுகிறார்கள் அது இந்தத் தலைமுறையில் நடப்பதாக இல்லை என்றால் இந்தத் தலைமுறையிலேயே அதற்கு வேண்டிய துவக்கம் ஏற்பட்டால்தான் அடுத்த தலைமுறையிலாவது அதற்கு முடிவு ஏற்படும். அந்தக் காலம் வரப்போகிறது, கனியப் போகும் அந்தக் காலமும் வரப்போகிறது. அதற்கு முதலில் வித்து இட வேண்டும். வித்திட்டு உரம் இட்டு பயிராகி அதற்குப் பிறகு பலன் கிடைக்கும் காலம் வரட்டும் என்று காத்திருக்கலாம் நாங்கள். அப்படிப் பட்ட காலம்தானே வரும் என்று நினைத்து நாங்கள் அதற்கு வித்திடாமல் இருக்க முடியாது என்ற காரணத்தால் நானும் என்னைச் சார்ந்த கழககளைக் உறுப்பினர்களும், ஆளும் கட்சியிலுள்ளவர்கள் எவ்வளவுதான் எங் கேலியாகச் சொன்னாலும் கூடவடக்கு, தெற்கு என்பதை எடுத்துச் சொல்லிக்கொண்டே வருகிறோம். அவர்கள் எடுத்துச் சொல்லி வருவதெல்லாம் நாம் தனி நாடாக இருந்தால் வாழ முடியாது, தனியாக வாழ்வதற்கு நமக்கு என்ன வசதி இருக்கிறது என்ற பொருள்பட நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பன் முறை எடுத்துப் பேசினார்கள். அவர்கள் எடுத்துப் பேசிய காரணத்தால் நான் அவருக்கு ஒன்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். உண்மையிலேயே ஒரு நாடு பெரிய நாடு சிறிய நாடு என்பதைப் பார்த்து அதன் எதிர் காலத்தை முடிவு செய்ய முடியாது. " The importance of a country depended not on its size or population but its inner quality. The question whether a country is 2,000 miles long or 200 miles long does not make much difference. Perhaps inwar it might make a difference, but in peace it is the quality of the human being that tells."

ஒரு நாடு 200 மைல் அகலம் இருக்கும், மற்றொரு நாடு 2,000 நீளம் மைல் இருக்கும். அந்த நாடு பெரிது, சிறிது என்பது அதனுடைய அகல நீளத்தைப் பொருத்தது இல்லை. அதனுடைய முக்கியத்துவத்தைப் பொறுத்திருக்கிறது. அந்த நாட்டின் மக்களைப் பொறுத்திருக்கிறது. இப்படி யாரோ ஒரு சாதாரண அரசியல் வாதி சொல்லவில்லை. ஒரு சாதாரண அரசியல் வாதி அப்படிக் குறிப்பிட்டிருந்தால் அதைப்பற்றி நான் சொல்லமாட்டேன். ஒரு மாமன்றத்தில் ஒரு பெரிய அரசியல் வாதி அப்படிக் குறிப்பிட்டிருக்கிறார். சென்ற ஆண்டு ஜூலை மாதம் ஐரோப்பா கண்டத்திலிருக்கிற ஹேக் (Hague) என்ற நகரத்தில் நமது பாரத நாட்டுப் பிரதமர் பண்டித நேரு அவர்களே அப்படி எடுத்துச் சொல்லி இருக்கிறார். ஆகவே ஒரு நாடு சின்ன நாடா, அல்லது பெரிய நாடா என்று கண்டு பிடிப்பது அதனுடைய செழிப்பைப் பொறுத்திருக்கிறது. இப்படிக் குறுகிய மனப்பான்மையை யுடையவர் சொல்லவில்லை, பரந்த மனப்பான்மையையுடைய பண்டித நேரு அவர்களே இப்படி எடுத்துச் சொல்லி இருக்கிறார். ஒரு நாட்டின் விஸ்தீரணத்தைப் பொருத்து, அந்த நாட்டின் முக்கியத்துவத்தைக் கவனிப்பது இல்லை என்று அவரே சொல்லியிருக்கிறார். ஒரு நாடு பெரிய நாடாக இருந்தாலும் சிறிய நர்டாக இருந்தாலும் அந்த நாடு தனியாக தனி அரசாக இயங்க வேண்டுமானால், அதன் மக்களை வாழ வைக்கும் அளவு இயற்கை வளப்பம் இருக்கிறதா என்பதைப்பார்த்து அதைப்பற்றி கணக்கிடவேண்டும் என்று ஆங்கிலத்தில் சொல்லியிருக்கிறார்கள். அதாவது " வையபிள் எகனாமிக் யூனிட் " (Viable economic unit) என்று சொல்லுவார்கள்.



8th March 1958] [Sri C. N. Annadurai]

பொருளாதார திட்டத்தின் கீழ் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளக் கூடிய, பிறர் கையை எதிர் பார்க்காத அளவுக்கு இயற்கை வளம் இருக்கிறதா என்று பார்த்து அந்த நாட்டைப்பற்றி தீர்மானம் செய்வார்கள். அப்படி பொருளாதார நிபுணர்களும் தத்துவாசிரியர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மாமன்றத்திலுள்ள காங்கிரஸ் உறுப்பினர்களில் பலர் அவரவர்களுடைய தொகுதியிலுள்ள வளங்களைபற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலிருக்கிற நாகப் பட்டணம் உறுப்பினர் தோழர் என். எஸ் ராமலிங்கம் அவர்கள் தங்களுடைய நாகப்பட்டணத் துறைமுகத் திட்டத்தை எடுத்துக்கொண்டு அதை விரிவுபடுத்தினால் எவ்வளவோ வருமானம் கிடைக்கும் என்றும், நாட்டை வளமுறச் செய்யலாம் என்றும், அங்கே ஸ்டீல் பெட்டிகளும், எஃகு பெட்டிகளும் தயார் செய்யக்கூடிய தொழிற்சாலை இருப்பதால் அவைகளை ஏற்றுமதி செய்து நாட்டை வளம்பெறச் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார். அதன் மூலம் நாட்டின் செல்வம் வளரும் என்றும் குறிப்பிட்டார். நம்முடைய மதிப்பிற்குரிய வேதாரண்ய தொகுதி உறுப்பினர் சர்தார் வேதரத்னம் அவர்கள் தங்களுடைய தொகுதியில் இருக்கக்கூடிய வளங்களைப்பற்றி எடுத்துச் சொல்லி அங்கே முந்திரியையும், தேக்கு மரங்களையும் பயிரிட்டால் நல்ல வருமானம் கிடைக்கும் என்றும், அப்படி பயிர் செய்வதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன என்றும் குறிப்பிட்டார். இப்படிப்பட்ட வளங்களை கணக்கில் எடுத்துப் பார்க்கும்போது சிறிய நாடு பெரிய நாடு என்ற பிரச்சனை [illegible]. ஒரு நாட்டின் முக்கியத்துவம் அந்த நாட்டின் வளத்தை பொறுத்திருக்கிறது. அந்த நாட்டு மக்களின் நல்ல பண்பைப் பொறுத்திருக்கிறது. இப்படி பண்டித நேரு அவர்கள் சொன்னது மட்டும் அல்ல, மற்றொரு அரசியல் தலைவரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதையும் இந்த சமயத்தில் அமைச்சர் அவைக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இதை நான் சொல்லவேண்டியதற்கு காரணம் நம்முடைய நிதி 2-40
அமைச்சர் அவர்கள், ' இவ்வளவு சின்ன நாடாக இருந்தால் செயற்கைச் p.m.
சந்திரனைச் செய்ய முடியுமா ? ' என்று கேட்டார்கள், ஒரு தடவை. ' அதைச் செய்வதற்கு ரஷ்யாவால் தானே முடிகிறது, அமெரிக்காவால் தானே முடிகிறது, நீங்கள் தமிழ் நாடு, திராவிட நாடு என்று பிரிந்து போனால், உங்களுக்குத் தேவையான இயந்திரங்களை வாங்கக் கூடிய அளவு பணம் கிடைக்காதே ' என்று கழிவிரக்கப்பட்டார்.

செயற்கைச் சந்திரனைச் செய்வதற்கு ரஷ்யாவால் முடிந்தது போல, அமெரிக்காவால் முடிந்தது போல, அந்த நாடுகளை விடச் சிறியதாக இருக்கக் கூடிய இங்கிலாந்து நாட்டிலே செயற்கைச் சூரியனைச் செய்வதற்கு இன்றைய தினம் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சூரியனுக்கு எந்த அளவு உஷ்ணம் இருக்கிறதோ, அந்த அளவு உஷ்ணத்தை, வெப்பத்தை விஞ்ஞான முறையிலே பெற்று கையாளலாம் என்று கண்டிருக்கிறார்கள்.

ஆகையால், சின்ன நாடு, பெரிய நாடு என்ற பிரச்னை அர்த்தமற்றது. நாங்கள் சொன்னால் ஏழை சொல் அம்பலம் ஏறாது என்ற காரணத்தால், அவர்கள் போற்றத்தக்க, மதிக்கத் தக்க, வழிபடத் தக்க, பண்டித நேரு அவர்கள் சொன்ன வாசகத்தைச் சொன்னேன்.

மற்றொரு தலைவருடைய வாசகத்தையும் சொல்ல விரும்புகிறேன். To think that small nations had no note to play in inte national affairs was a dangerous and defeatist attitude. I refuse to subscribe to this dangerous and defeatist attitude. I believe that it will be in the interest of the (super-states) themselves that states should not leave to them (super-states) the entire responsibility for making decisions which may affect all mankind.—Burmese Premier Unu. ' சிறிய நாடுகளைப் பெரிய நாடுகள் புறக்கணித்து விடாது, புறக்கணிக்கக் கூடாது, புறக்கணிக்க முடியாது, புறக்கணித்தால் அவைகளுக்கே ஆபத்து ' என்று சொல்லியிருப்பவர் பர்மிய நாட்டுப் பிரதம மந்திரி யூநா அவர்கள்.

[Sri C. N. Annadurai] [8th March 1958

இதை நான் சொல்வதற்குக் காரணம் ' தனி நாடு, சிறு நாடு, ஆகவே, வாழ்வதற்கு வழி இல்லை ' என்று சொல்கிறார்களே, அதற்காகத்தான், ஒரு நாடு பெரிய நாடாக இருந்தாலும், சிறிய நாடாக இருந்தாலும், அது எந்த அளவுக்கு இயற்கை வளத்தைப் பெற்றிருக்கிறதோ, அந்த இயற்கை வளத்திற்கும் உலகத்திற்கும் எந்த அளவுக்குத் தொடர்பு இருக்கிறதோ, அதைப் பொருத்துத்தான் ஒரு நாட்டினுடைய வாழும் சக்தி அடங்கியிருக்கிறது.

அப்படியிருக்கும்போது நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுகிற அன்னியச் செலாவணியைப பற்றி நான் இங்கே கொஞ்சம் குறிப்பிடப் பிரியப்படுகிறேன். ' அன்னியச் செலாவணி இல்லாமல் நாம் வெளி நாடுகளிலேயிருந்து இயந்திரங்களையும் மற்றவைகளையும் வரவழைக்க முடியாது ; பாரதத்தோடு ஒன்றாக இருந்தால் தான் அன்னியச் செலாவணி கிடைக்கும் ; ஆகையால் தான் நாங்கள் அங்கே இருக்கிறோமே தவிர . . . . '' என்று எடுத்துச் சொன்னார்கள். ' அங்கே இருக்கிறோமே தவிர ' என்று சொல்வது தவறு. அவர் அப்படிச் சொன்னார் எனற கருத்தை நான் சொல்லவில்லை. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் வட நாட்டிலிருந்து வாங்க வேண்டியதை வாங்கிக்கொண்டு, பிறகு பிரிந்து கொள்ளலாம், அண்ணாதுரையுடன் சேர்ந்து கொண்டு விடலாம் என்று திட்டமிட்டருப்பதாக இரண்டு மூன்று வட நாட்டுப் பததிரிகைகள் அவரைக் கண்டித்து எழுதியிருந்தன. ஆகவே, நிதி அமைச்சரை அப்படிப்பட்ட சந்தேகம் எழும்படியான சிக்கலான நிலைமைக்கு நான் ஆளாக்க மாட்டேன். என்னுடைய கருத்தைச் சொன்னேன்.

' வெளிநாட்டுச் செலாவணி இருந்தால்தான் நமக்கு நல்ல இயந்திரங்கள் கிடைக்கும் ' என்று அவா எடுத்துச் சொன்னார். என்னுடைய வாதம் அன்னியச் செலாவணி பெறத் தகக அளவு, வெளிநாடுகளுக்கு அனுப்பக் கூடிய பொருள்கள் இந்திய துணைக் கண்டத்திலேயே நம்முடைய நாட்டில்தான் அதிகம். இந்திய துணைக்கண்டத்தில் மற்ற இடங்களிலே மிகக் குறைவு என்பது என்னுடைய வாதம். வெளிநாடுகள் விரும்பி வாங்குவது, வெளிநாட்டுக்காரர்கள் தேவை என்று கருதுகிற எந்தப் பொருளைப் பார்த்தாலும் இங்குதான் அவை ஏராளமாக உள்ளன. நம்முடைய நாட்டுத் தோல் (hide and skins), தேயிலை, காப்பி, ரப்பர், மிளகு, வாசனைத் திரவியங்கள், முந்திரி, தோரியம், யுரேனியம், பாக்சைட், மானசைட் இப்படிப்பட்டவைகள் வெளி நாடுகளுக்கு இன்றைய தினம் தேவைப்படுகின்றன. இங்கே இருக்கும் வேர்க்கடலை (groundnut) டாலர்களையும் ஸ்டெர்லிங்குகளையும் இந்தியத் துணைக் கண்டத்திற்கு வாங்கியளிக்கிறது. இவ்வளவு அதிகமான அளவு டாலர் வாங்கித் தரும் பொருளை வைத்துக்கொண்டிருக்கும் நாம், அன்னியச் செலாவணியைப்பற்றி ஏன் கவலைப்படவேண்டும் ? நம் வீட்டு சட்டியிலே வெண்ணெய் இருக்கும் போது, அடுத்த வீட்டில் நெய் கொடுத்தார்கள் என்று பாராட்டுவதிலே என்ன பொருள் இருக்க முடியும் ?

அன்னியச் செலாவணியைத் தேவையான அளவுக்கு வாங்கித் தரத் தக்க இந்தப் பொருள்களை, நாம் தனி நாடு என்றால், எந்த நாடுகளுக்கு அவை தேவையோ அங்கு கொடுத்து, அந்த நாடுகளிலிருந்து பெறத் தக்கவைகளை நாம் பெற முடியும். நாம் தனி நாடாக இருந்தால் என்ன செய்ய முடியும் என்று இப்படிக் கேட்பவர்களுக்கு இதைச் சொல்கிறேன்.

அப்படிச் சொல்லும்போது, நம்முடைய ஆட்சியாளர் இதுவரை ஒரு வாதத்தைச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். ' இப்பொழுது ஒன்றாக, இருப்பதுபோல், இனியும் ஒன்றாகவே இருப்பதில் என்ன கஷ்டம் ? ' என்று கேட்கிறார்கள். ஆனால் அந்த வாதத்தை அவர்களே படிப்படியாக இன்றையதினம் ஓரளவு குறைத்துக்கொண்டு வருகிறார்கள்.

கேள்வி நேரத்தின்போது, கேள்வியொன்றுக்குப் பதில் சொல்லும் போது, நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே சொன்னது நினைவுக்கு வருகிறது. டி.டி.கே. அவர்களை ' நம்மவர் '



8th March 1958] [Sri C. N. Annadurai]

என்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டு, அதுபற்றி பிரச்னை வந்தபோது, நிதி அமைச்சர் அவர்கள் எழுந்து, பெருமிதத்துடன், மகிழ்ச்சியோடு சொன்னார், ' ஆம், தமிழர், தென்னவர் என்று அவரைச் சொல்லிக் கொள்வதற்குப் பின்வாங்கப்போவதில்லை ' என்று. ஆனால், பிரிந்து விடவேண்டுமென்று சொல்லுகிறார்களே அதிலேதான் வேறுபடுகிறேன் என்று சொன்னார். நான் அந்த உணர்ச்சியை மெத்த மதிக்கிறேன். ஏனென்றால் அந்த உணர்ச்சி என்னை எங்குகொண்டு செல்கிறதோ அதைப் போலவே நிச்சயமாக அவரையும் இழுத்துச்செல்லும் என்ற உறுதிப்பாடு எனக்கு இருக்கிறது. தமிழன், தென்னவன் என்ற உணர்ச்சியோடு இந்தியன் என்ற உணர்ச்சியையும் என்னுடைய பேதை நெஞ்சுக்குச் சொல்லிப்பார்த்தேன். பெரியவர்கள் சொல்கிற நேரத்தில், கவிஞர்கள் பாடியிருக்கிற நேரத்தில் நம்முடைய நெஞ்சத்திலும் இந்தியன் என்ற பொது உணர்ச்சி தோன்றாதா என ஏங்கினேன். நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் பாடிய பாட்டு, '' தமிழன் என்றொரு இனம் உண்டு—தனியே அவனுக்கோர் குணம் உண்டு '' என்கிற அவரது சொல் என்னுடைய நெஞ்சுணர்ச்சியை உணர்ந்தே சொன்னது போல எனக்குத் தோன்றியது. ஆகவே தமிழனுக்கே இயல்பான உணர்ச்சி இருக்கிறது. வடநாட்டாரும், தானும் ஒன்றுதான் என சொல்லிக்கொண்டாலும் அது சொல்லளவில் தான் இருக்குமேயொழிய நெஞ்சுணர்ச்சி அவ்வாறாக அமையாது என்கிற முடிவில் நிதி அமைச்சர் அவர்களும் என்னுடன் ஒன்றுபட்டு படிப்படியாக மாறிக்கொண்டு வருவார்கள் என்று நம்பிக்கொண்டிருக்கிறேன். அந்த நம்பிக்கையை பெற்றிருக்கிற காரணத்தினால் தான் வருந்தி, வருந்தி, வலியுறுத்தி, வலியுறுத்தி, இந்த விஷயத்தைச் சொல்லுகிறேனே தவிர, புள்ளி விவரங்களைப்பார்த்து 21·6, 20·2 என்பதாக எடுத்துச் சொல்வது கடினமானது என்பதால் சொல்லாமல் விடவில்லை. இப்படிப் பேசுவது எனக்குக் கடினமானது என்று காங்கிரஸ் அங்கத்தினர்கள் நினைத்தாலும், நிதி அமைச்சர் அவர்கள் அப்படிக் கருதமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஐந்தாறு ஆண்டுகாலம் இந்தப் புள்ளி விவரங்களையே மனப்பாடம் செய்வதற்கு நான் கல்லூரிகளில் எத்தனை எண்ணை செலவழித்திருக்கிறேனோ அதில் கொஞ்சம் எண்ணையை இப்போது செலவு செய்தேனானால் இது எனக்குச் சாத்தியமானதே என்பதை நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி என்னுடைய சார்பில் வாதாடுவார்கள் என்று நினைக்கிறேன்.

வெளிநாடுகளுக்கு அதிகமாக அனுப்பத் தக்க பொருள்கள் நம்மிடம் இருக்கின்றன. அப்படியிருக்க அன்னியச் செலாவணியைப் பற்றி ஏன் கவலைப்படவேண்டும் ? இன்றைய தினம் மத்திய சர்க்கார் தங்களுடைய வருவாயை எல்லா மாநிலங்களுக்கும் ஒருசேரப் பங்கிட்டுக் கொடுக்கிறார்களா என்று பார்த்தாலும் அப்படி அவர்கள் பங்கிட்டுக் கொடுக்கவில்லை என்பதை என்போன்றவர்கள் சொல்வதால் பயனில்லை. இந்திய சர்க்காரிடத்தில் தொடர்பு கொண்டவரும், காங்கிரஸ் கட்சியிலே முக்கியமானவரும் நிதிக்கமிஷன் தலைவராகிய ஸ்ரீ சந்தானம் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன் : " It was a fact that economic development of the various States had not been even. There was a strong feeling all round that somehow or other, industries should be set up in all States. This feeling deserves to be respected." என்று அவர் சொல்லிவிட்டு, மேலும் பக்ரா, ஹிராக்கட் அணைக்கட்டுகள் வடக்கே கட்டியிருக்கிறார்கள். வடக்கே கட்டினால் என்ன, தெற்கே கட்டினால் என்ன, அங்கே கிடைக்கும் செல்வம் எல்லோருக்கும் தான் கிடைக்கிறது என்று எங்களுக்குப் பதில் சொல்கிற காங்கிரஸ்காரர்களுக்கே சூடுகொடுப்பதுபோல அவர் மேலும் சொல்கிறார். " It was true only to a small extent that increase of wealth in any part of India accrued to the whole people. The immediate benefit of a big irrigation project was plenty of employment in its neighbourhood during construction and after construction a notable increase in property. It was so in regard to the setting up of Industries " இதை எடுத்துச் சொல்வதன்மூலம் பெரிய பெரிய அணைக் கட்டுகள், பெரிய பெரிய தொழிற்சாலைகள் இவைகளை எல்லாம் இந்திய துணைக் கண்டத்தில் எங்கே எந்த இடத்தில் கட்டினாலும் அங்கே கிடைக்கின்ற பலன்

வகையிலே பார்க்கும்போது பல துறைகளில் ஒதுக்கிய பணத்தை செலவழிக்காமல் விட்டிருக்கிறார்கள். இதற்கு குறிப்புகளையும் காரணங்களையும் காட்டியிருக்கிறார்கள். காரணங்களைக் காட்டுகின்ற நேரத்தில் சென்ற ஆண்டு அவர்கள் அளித்த விளக்கத்தை நினைவூட்ட விரும்புகிறேன். "பணத்தை ஒதுக்குகிறோம், திட்டங்களைத் தயாரிக்கிறோம், திட்டங்களைப் பகிர்ந்தளிப்பதில் முதலில் தவக்கம் ஏற்படுகிறது, 6 மாதத்திற்குப் பின்தான் மள மள என்று திட்டத்திற்குப் பணம் கேட்கிறார்கள், அப்போது கண்-மண் தெரியாமல் கொடுத்து விடாது மிச்சம் பிடிக்க வேண்டியிருக்கிறது; இது எப்படி இருக்கிறது என்றால்"—இது நான் சொல்வது இல்லை நமது நிதி அமைச்சர் சொன்னது "பரீட்சைக்கு முன்னர் படிக்காத மாணவன், பரீட்சை சமயத்தில் விழுந்து விழுந்து படிப்பதைப் போல் இருக்கிறது; இனிமேல் நாங்கள் அப்படிச் செய்ய மாட்டோம், திட்டமிட்டுப் பணியாற்றப் போகிறோம்" என்று சொன்னார்கள். இப்போது திட்டமிட்டுப் பணியாற்றியதைப் பார்க்கும்போது லட்சக் கணக்கான ரூபாய் பணம் தேவையான இடங்களுக்குச் செல்லாமல் மீத்து வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி மீத்து வைக்கப்பட்ட முறையினால் துண்டு விழக் கூடிய பட்ஜெட்டை, உபரி பட்ஜெட்டாக ஆக்கி இன்றைய தினம் காட்ட முடிந்திருக்கிறது. சிறு எடுத்துக்காட்டாகச் சொன்னால், ஒன்றை வைத்துக் கொண்டு மற்றவைகளை நிதி அமைச்சர் அவர்கள் ஊகித்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன், டி.ஐ. சைக்கிள் கம்பெனியில் 5 லட்சம் சைக்கிள்கள் உற்பத்தி செய்யக்கூடிய வகையிலே ஆலோசனை இருக்கிறது என்று சென்ற ஆண்டு சொன்னார்கள். இந்த ஆண்டு 3 லட்சம் சைக்கிள்கள் உற்பத்தி செய்ய திட்டம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஐந்து லட்சத்திற்குப் போட்ட திட்டம் 3 லட்சம் அளவுக்குக் குறைந்திருக்கிறது. இதை யாரும் மறுப்பதற்கில்லை. ஐந்து லட்சம் சைக்கிள்கள் தயாரிக்க வேண்டுமென்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கலாம். ஆனால் அதற்குப் போதுமான அளவுக்கு வசதி இல்லாததினாலே 3 லட்சம் சைக்கிள்கள் தயாரிக்கிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கலாம். ஒரு லட்சம் 2 லட்சத்திலே தகராறு வேண்டாம், 10, 12 நாட்களாகக் கோடிக்கணக்கில் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். சில லட்சம் போனால் பரவாயில்லை, திட்டமிட்டு காரியங்களை நிறைவேற்றும்போது "பொறுங்கள், பொறுங்கள்" என்று சொல்லுகிறார்கள். பார்த்தால் தெரிகிறது பல துறைகளில். ஆகையால்தான் இன்றைய தினம் பல்வேறு துறைகளில் மனக்குமுறல் இருக்கிறது. புள்ளி விவரங்களை காட்டி மக்களை திருப்தி செய்துவிடலாம் என்று எண்ணிவிடாதீர்கள். ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக இவ்வளவு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம், கல்விக்காக இத்தனை கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று புள்ளி விவரங்களைக் காட்டினால் போதாது. நாட்டு மக்கள், ஹரிஜனங்கள் சென்ற ஆண்டு இருந்ததைவிட இந்த ஆண்டு எந்த அளவுக்கு சமுதாயத்தில் உயர்ந்திருக்கிறார்கள், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு பசி, பட்டினி எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது, குடியிருப்பு வீடுகள் கட்டுவதில் இந்த ஆண்டு எவ்வளவு கஷ்டம் குறைந்திருக்கிறது என்பதைக் கணக்குப் பார்த்துத்தான் மதிப்பிடுவார்களே தவிர, கொடுக்கும் புள்ளி விவரங்களைப் பார்த்து திருப்தியடைய மாட்டார்கள். ஓவியத்தில் ஊதா நிற வண்ணம் இவ்வளவு, நீலம் இவ்வளவு, கருநீலம் இவ்வளவு பயன்படுத்தினேன். நான்கு, ஐந்து தூரிகைகளை உபயோகித்தேன். இரவு பகலாகக் கண் விழித்துத் தீட்டினேன் என்று சொன்னால் போதுமா? ஓவியம், பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறதா? பார்த்தவர், பாராட்டும் விதமாக இருக்கிறதா என்பதுதானே முக்கியம்?

2-30 a.m. அமைச்சர் அவை மக்களுக்குத் தேவையானவைகளை குறைபாடுகளை நாங்களே நேரில் போய்ப் பார்த்து நன்மை சாதிக்கப் போகிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். சென்ற ஆண்டு அதற்காக ஒரு புது முறையை நம்முடைய முதல் அமைச்சர் வகுத்தார். அது தான் எல்லா பத்திரிகைகளும் பாராட்டி எழுதிய 'பாகல்மேடு காட்டிய பாதை'. முதல் அமைச்சர் பாகல்மேடு கிராமத்திற்குச் சென்றார். அதிகாரிகளையும் உடன் அழைத்துச் சென்றார். அங்குள்ள கிராம மக்கள் ஆச்சரியத்தால் வாய்



பிளந்து, முதல் அமைச்சரும், அதிகாரிகளும் நம்முடைய கிராமத்திற்குக் கூட வருகிறார்களே என்று ஆவலுடன் வரவேற்றார்கள். அவர்கள் அங்குள்ள குறைபாடுகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவைகளை முதல் அமைச்சர் கேட்டு நேரடியாகவே உத்தரவு போட்டார் என்று பத்திரிகைகளிலே படித்தேன். நம்முடைய பத்திரிகைகள் எல்லாம், 'இது அல்லவோ முறை. பாகல்மேடு பாதை, பாகல் மேடு பாதை' என்று பாராட்டியிருக்கிறார்கள். எனக்கு 4-5 நாட்களுக்கு முன் ஒரு சந்தேகம் வந்தது. ஆந்திராவுக்கு சில இடங்கள் போய்விட்டதே. அதே போல் இந்த பாகல்மேடும் போய் விட்டதா என்று. சந்தேகத்தை போலீஸ் அமைச்சரிடம் கேட்டேன். நல்ல வேளையாக பாகல்மேடு போகவில்லை என்று தெரிந்து கொண்டேன். இப்பொழுது பாகல்மேடு இருக்கிறது. ஆனால் பாகல் மேட்டுப்பாதை இல்லை. சென்ற ஆண்டு முதல் அமைச்சர் செய்து காட்டியது சிவப்பு நாடா முறையை ஒழிப்பதற்கு என்று சொன்னார்கள். பாகல்மேட்டுப் பாதை சிவப்பு நாடா முறையை ஒழிப்பதற்கு ஒரு வழி என்று சொன்னால், அதை தொடர்ந்து செய்யாததற்கு காரணம் என்ன சிகப்பு நாடா முறையை நீடித்துக்கொண்டு இருப்பதால் என்ன நன்மை கிடைக்க முடியும். பாகல்மேட்டில் நடந்ததைப் படித்த பிறகு நானும் ஒரு பேராசைக்காரனாதலால் என்னுடைய தொகுதியிலும் அம்மாதிரி நேரடியான உத்திரவுகள் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். தண்டலம் என்னும் கிராமத்திற்கு முதல் அமைச்சர் வந்தார். அங்கு உள்ள கிராம மக்கள் குறைபாடுகளை எல்லாம் சொன்னார்கள். அதன் நிலைமை எப்படி இருக்கிறது என்றால், முதல் அமைச்சர் வசதியாக வருவதற்காக அங்குள்ள எஞ்சினியர்கள் இரவு பகல் பாராமல் கஷ்டப்பட்டு போட்டிருந்த பாதை இன்று மழையால் அடித்துக்கொண்டு போகப்பட்டிருக்கிறது. மறுபடியும் முதல் அமைச்சர் வந்தால் அந்தப் பாதையே தெரியாது. பாகல்மேட்டுப் பாதை அவராலேயே கைவிடப்பட்டது. தண்டலத்தில் போடப்பட்ட பாதை அடைபட்டுப் போய் விட்டது. (முதல் மந்திரி குறுக்கீடு) நமது முதல் அமைச்சர் என்னை அழைத்துக்கொண்டு போய் ஏமாற்றலாம் என்று பார்த்தீர்களா என்று சொல்கிறார். காங்கிரஸ் அல்லாத மாற்றுக் கட்சிக்காரர்கள் வெற்றி பெற்ற தொகுதிகளில் முதல் அமைச்சர் பணம் செலவழிக்கக்கூடாது என்று திட்டமிட்டிருக்கிறாரா? அப்படிக்கூறிவிட்டுமே. பார்க்கலாம் என்றாலும், காங்கிரஸ் வெற்றி பெற்ற தொகுதிகளில் பணம் கேட்க எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமை எங்களுக்கும் இருக்கின்றது. ஆகையால் ஏமாற்றுவதற்கு அல்ல. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் என்னுடைய தொகுதி மக்கள் என் பேரில் ஏமாற்றம் அடையாமல் இருக்கவேண்டும் என்பதுதான் என் நோக்கம். முதல் அமைச்சரைக் கேளுங்கள், பணம் தர வேண்டியவர் அவர்தான் என்று நான் சொன்னேன். என்னுடைய தொகுதி மக்கள் திருப்தியாக இருக்கிறார்கள். அவர்கள் சொல்வது எல்லாம், 'தொகுதி உறுப்பினர் செய்ய வேண்டியதை எல்லாம் செய்தார், முதல் அமைச்சருக்கு இன்னும் மனம் வரவில்லை, அவருக்கு மனம் வரவேண்டும்' என்பதுதான். என்னுடைய தொகுதியில் உள்ளவர்கள் அவரை வரவேற்று, வாழ்த்தி அனுப்பியிருக்கிறார்கள். இரண்டாம் முறையாகவும் அந்தத் தொகுதிக்கு வந்தார், இந்தத் தடவையாவது என் தொகுதியைக் கவனிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். ஒருவரை ஒருவர் ஏமாற்றுவது அல்ல. ஒருவரை ஒருவர் கேட்டு வாங்குதவற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது. ஆகையால் முதல் அமைச்சரை ஏமாற்ற வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் எனக்கு இல்லை. ஏமாற்ற வேண்டும் என்று கருதி நான் ஒரு பஸ் பர்மிட் கேட்கவில்லை. லைசன்ஸ் தரச் சொல்லிக் கேட்கவில்லை. எந்த விதமான சலுகையும் எனக்காக நான் கேட்கவில்லை. சலுகைகள் கேட்கவேண்டும் என்றால் எனக்கு வேண்டிய மந்திரி சபையையே நான் பார்த்திருக்கிறேன். அப்பொழுதே நான் சலுகைகள் கேட்கவில்லை. இப்பொழுதும் கேட்பதாக அபிப்பிராயம் இல்லை. ஆகையால் இப்பொழுது ஏமாற்றம் ஒன்றும் இல்லை. சிவப்பு நாடா முறையை ஒழிப்பதற்கு தண்டலம் ஒரு வழி. சிவப்பு நாடா முறையை ஒழிப்பதற்கு பாகல் மேடு ஒரு வழி என்று சொல்கிறார்கள். ஆனால் அவைகளினால் கிடைத்த பலன் என்ன? ஒரு பலனும் காணவில்லை.

[Sri C. N. Annadurai] [8th March 1958

அடுப்பில் நெருப்பு அவசியப்படும்பொழுது பெரிய அடுப்பிலிருந்து எடுத்து இளை அடுப்பிற்கும், இளை அடுப்பில் நெருப்பு அவசியமில்லை யென்றால் பெரிய அடுப்பிற்கும் மாற்றி வைப்பார்கள். அது போன்று, ஒரு இலாகாவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை எடுத்து இன்னொரு இலாகாவிற்கு கொடுப்பது என்பது சரியான காரியமல்ல. அந்த முறையில் அரசியலில் எந்தெந்த இலாகாக்களில் தேவையில்லை, எந்தெந்த இலாகாக்களில் குறைக்கலாம் என்று சொல்லுவது முடியாத காரியம். ஒவ்வொரு இலாகாவிற்கும் அதிகப்படியான பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு இலாகாவிலும் பற்றாக்குறை இருக்கிறது. மேலும் மேலும் பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு இலாகாவிற்கு மேலும் மேலும் இன்னும் ஒரு தலைமுறைக்கு செலவழித்தால் தான் அடுத்த தலைமுறைக்கு ஒரு நாகரீக நாட்டுக்கு ஒப்பான நிலையை நம் நாட்டு மக்கள் பெற முடியும். இவைகளை எல்லாம் நாங்கள் உணராமல் இல்லை. ஆகவே ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு எடுத்து தரவேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆங்கிலத்தில் **Rob Peter and pay Paul** என்று சொல்லுகிற பழமொழியைப் போல ஒரு துறையிலிருந்து எடுத்து இன்னொரு துறைக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. நான் சொல்லுவது வருவாயை தேடித் தருகிற வழி வகைகளை இந்த ஆட்சியாளர்கள் தேட வேண்டும். அப்படி தேடுவதற்கான துறைகள் பல இருக்கின்றன. நம் நாட்டில் மூன்று பக்கத்திலும் கடலை வைத்துக்கொண்டு மீன் பிடி தொழிலை நாம் ஏன் வளப்படுத்தக் கூடாது? ஆஸ்ட்ரேலியாவில் கிடைக்கிற ஆட்டு இறைச்சியை இங்கிலாந்திற்கு அனுப்பி விற்று அங்கிருந்து கிடைக்கிற பணத்தைக் கொண்டு ஆஸ்டிரேலியா மக்கள் தங்களுடைய பொருளாதார நிலையை செம்மை படுத்தவில்லையா? டென்மார்க் பசுக்களிலிருந்து கிடைக்கும் பாலை கொண்டு பால் ஆடை செய்து அவைகளை வெளி நாடுகளுக்கு அனுப்பி டென்மார்க் நாட்டு மக்களின் பொருளாதார நிலையை செம்மைப் படுத்தவில்லையா? சுவிட்சர்லாந்திலிருந்து கடிகாரங்கள், நவீன விஞ்ஞான கருவிகள் இவைகளை உலகிலுள்ள வெளி நாடுகளுக்கு அனுப்பி அதிலிருந்து கிடைக்கின்ற பணத்தைக் கொண்டு சுவிட்சர்லாந்து மக்களின் பொருளாதார நிலையை செம்மைப்படுத்தவில்லையா? அதே போன்று மூன்று பக்கத்திலும் கடலை வைத்துக்கொண்டிருக்கிற நாம் மீன் பிடி தொழிலுக்கு முதல் ஐந்தாண்டு திட்டத்தில் 20 கோடி ரூபாய் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றோ அல்லது அதை மத்திய சர்க்கார் புறக்கணித்து விட்டால் நம் நாட்டு மக்களிடம் கடன் கேட்டு வாங்கியோ அதை செலவழித்து இந்த மீன் பிடி தொழிலை வளர்த்து இருந்தால் பட்ஜெட்டில் ஏன் துண்டு விழுகிறது. அதே போன்று நம் நாட்டில் விளை நிலங்கள் போக தரிசாக கிடக்கின்ற நிலங்களில் புற்பயிர் செய்து அதன் மூலம் ஆடு மாடுகளை வளர்த்து அதன் மூலம் ஆட்டு இறைச்சியை தயாரித்து இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு ஏன் அனுப்பக்கூடாது? இவைகளை செய்ய திட்டம் இல்லையா? ஒவ்வொன்றிற்கும் திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இதில் இருக்கின்ற வித்தியாசம், சாதாரண சாப்பாட்டிற்கும் நிலா சாப்பாட்டிற்கும் இருக்கின்ற வித்தியாசம் தான். நிலா சாப்பாட்டிற்கு சிறுவர் சிறுமியர்கள் நம்மை போலவே அடுப்பை வைக்கிறார்கள், நம்மைப் போலவே சாதம் வடிக்கிறார்கள், நம்மை போலவே குழம்பு வைக்கிறார்கள் ஆனால் அது வெறும் நிலாச் சாப்பாடு தான்! அதே போன்று இந்த மீன் பிடித் தொழிலுக்கு பணம் செலவு செய்யப்படுகிறது. இவைகளின் ஆராய்ச்சிக்காக பணம் செலவு செய்யப்படுகின்றது ஒப்புக்கு! ஆனால் இந்த தொழிலை நல்ல முறையில் வளர்ப்பதற்கு திட்டமிட்டு, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு நாம் இந்த் தொழிலை வளர்த்திருந்தால் பற்றாக்குறையை போக்கிக் கொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன். மாற்று யோசனைகள் சொல்லுங்கள் என்று கேட்கிறார் அமைச்சர். மாற்று யோசனைகள் இல்லை என்று அர்த்தமில்லை. மாற்று யோசனைகள் ஆட்சியாளர்கள் கையாளுகின்ற கொள்கையைப் பொருத்திருக்கிறது. இன்றைய தினம் அவர்கள் கையாளுகின்ற முறையிலே இந்திய துணைக் கண்டத்தில், பாரத சர்க்காரிலே ஒரு பகுதியாக் இருந்து கொண்டு, பாரத சர்க்காரிடத்திலே அதிகாரங்களின் பெரும் பகுதியைக் கொடுத்து விட்டு, இப்படிப்பட்ட வரவு செலவுத் திட்டங்களைத்தான் தயாரிக்க முடிகிறது. இப்படிப்பட்ட வரவு செலவுத் திட்டங்களைத் தயாரிக்கும்போது, இதை விடத் திறமையாக வேறு காங்கிரஸ் அமைச்சர் தயாரித்திருக்க மாட்டார்கள் என்பதற்காக நம்முடைய நிதி அமைச்சரை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு அடிப்படைக் கொள்கையில் மாறுதல் இருந்தால், நிச்சயமாக இந்த மாகாணத்தினுடைய நிலைமை, ஒரு தனி நாட்டு நிலைமையாக இருந்தால், நாம் உண்மையான நன்மை பெற முடியும். இதனைச் சொல்லுகின்ற நேரத்தில், திரும்பத் திரும்ப திராவிட நாடு கேட்கிறாயே என்று சொல்வார்கள். அப்படியெல்லாம் நான் பேசுவது தவறோ என்று கூட கருதிக் கொண்டிருந்தேன். என்னுடைய மதிப்பிக்குரிய நண்பர் ராமசுவாமி அவர்கள் அளித்த 1935-ம் ஆண்டு டில்லிப் பாராளுமன்ற குறிப்புகளில் நான் பார்க்கிறேன், இன்றைய தினம் மத்திய சர்க்காரிலே உள்நாட்டு அமைச்சராக இருக்கும் பண்டித பந்த் அவர்கள் ஒரு விவாதத்தில் கலந்து கொண்டு என்னைவிடத் திறமையாக பேசும்போது ஆங்கிலேயர் போன பிறகுதான் பிரச்சினைகளுக்கெல்லாம் பரிகாரம் இருக்கிறது என்றார்: **"if there was Sw raj Government, I would have myself humbly suggested to the Government to float a loan of Rs. 100 crores forthwith in order to rebuild the economic life of this country."** சுயராஜ்யம் கிடைத்திருக்குமானால், இந்த வெள்ளை அமைச்சர்களிடத்தில் துண்டு துண்டாகப் பேசியிருக்க மாட்டேன். நூறு கோடி ரூபாய் கடன் வாங்கி நாட்டு மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்திருப்பேன் என்று சொன்னார். அப்படிச் சொல்லுகின்ற நேரத்திலே, இப்போது நான் சொல்லும்போது ஒரு கற்பனையில் மூழ்கியிருக்கிறீர்களே என்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் என்னைப் பற்றிக் கூறுகிறார்களே, 3-00 p.m.
அதைப் போல பண்டித பந்த் அவர்கள் வெள்ளை அதிகாரிகளை கண்டித்திருக்கிறார். **"Unfortunately, it is not so. We live under a foreign rule. So it is but a dream. However much our friends may accuse me and blame us for our negative attitude, unless we remove the stupendous impediments and tremendous obstacles no progress is possible".** தடைகள் நீக்கப்பட்டாலொழிய, முட்டுக் கட்டைகள் ஒழிக்கப்பட்டாலொழிய, நாட்டுக்கு விடுதலை கிடைத்தாலொழிய, நம் நாட்டு மக்களுக்குப் பரிகாரமில்லை என்று பண்டித பந்த் டில்லி பாராளுமன்றத்தில் 1935-ம் ஆண்டு சொன்னதைக் குறிப்பிட விரும்புகிறேன். அப்படிக் குறிப்பிட விரும்புகின்ற காரணத்தால் பண்டித பந்த் அவர்கள் எந்த அளவு உயர்ந்த நிலையில் இருக்கிறாரோ, அந்த நிலையில் நான் உயர்ந்திருக்கிறேன் என்று நினைத்து என்னை நானே ஏமாற்றிக் கொள்ள மாட்டேன். நான் இதை இங்கே சொன்னதன் காரணம், அப்படி பந்த் அவர்கள் பேசி முடித்தவுடனே ஸர் ஜேம்ஸ் கிரிக் என்ற ஆங்கிலேயர் **"It is but a dream"** என்று சொன்னார்கள். இன்றைய தினம் காங்கிரஸ் அமைச்சர்கள் என்னைப் பார்த்து "இது வெறும் கற்பனை" என்று சொல்கிறார்களே, அதையே தான் **"It is but a dream!"**, என்று கிரிக் சொன்னார்கள். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், என்னை பந்த் அவர்களோடு ஒப்பிட்டுக் கொள்வதற்காக அல்ல. **"History repeats itself"**, அதாவது வரலாறு திரும்ப எழுதப்படுகிறது என்று கொச்சையாக சொல்வார்கள். அதே போல "பந்துகள்" பேசினால் "கிரிக்குகள்" பதில் சொல்ல நேரிடுகிறது. திராவிட நாடு வேண்டுமென்று கேட்பது கேலிக் கூத்தாக இருக்கிறது, இதுவெறும் கற்பனை என்று இப்போது அமைச்சர் பேசுகிறார்; என்னைக் கேலி செய்கிறார்: **"If there was Swaraj Government, I would have myself humbly suggested to the Government to float a loan of Rs. 100 crores forthwith in order to rebuild the economic life of this country"** என்று அப்போது பந்த் அவர்கள் சொன்னதை அப்போது இருந்த கிரிக் என்ற வெள்ளையன் இதே போல் தான் கருதினான் என்பதையும், உலகம் பந்தின் பக்கத்தில் தான் சேர்ந்தது என்பதையும், கிரிக்கின் பக்கத்தில் சேரவில்லை என்பதையும் நினைவூட்டுகிறேன். நாங்கள் தனி நாடு திட்டத்தை எடுத்துச் சொல்வதிலே உண்மையாகவே இந்த நாட்டை

வாழ்விக்கத் தக்க நல்ல நிலைமைகள் இருந்த போதிலும், போதுமான அதிகாரங்கள் இல்லாத காரணத்தினால் இந்த நிலைமை வந்திருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறோம். அமெரிக்க நாட்டில் ஹாமில்டன் என்பவருக்காக சொல்லப்பட்ட புகழுரையை நான் நிதி அமைச்சர் அவர்களுக்கு சிபாரிசு செய்கிறேன். "**He smote the rock of National resources and abundant streams of revenue gushed forth. He touched the dead corpse of public credit and it sprang upon its feet.**" எங்கே பணம், எங்கே பணம் என்று கேட்கிறீர்கள். நான் ஹாமிலுனங்கள் மடியிலிருந்து எடுத்து அதை என்.ஜீ.ஓ.க்களுக்குத் தரச் சொல்லவில்லை. ஹாமில்டன் சொன்னது போல் "**He smote the rock of National resources**" நாட்டிலே இருக்கிற செல்வங்கள் பாறையைப்போல் அழுத்திக் கொண்டிருந்தன. "**He smote the rock**" அவைகளை அவன் தட்டிப் பார்க்கவில்லை, உடைத்தான், "**and abundant streams of revenue gushed forth**" தேவையான அளவுக்கு வசதிகள் பெருகி ஓடின, "**He touched the dead corpse of public credit and it sprang upon its feet.**" செத்ததோ என்று கருதுகிற அளவுக்குச் சோர்ந்து போயிருந்த பொதுமக்களுடைய பண நிலைமையைத் தொட்டான். தொட்டவுடன் அது துள்ளி யெழுந்தது. இந்த காட்சியைத் தமிழிலே "பட்ட மரம் தளிர்க்கும், பார்வை இழந்தவன் பார்வை பெறுவான்" என்று சொல்வார்கள். அத்தகைய முறையிலே அடிப்படை மாறுதல் தேவை. அந்த அடிப்படை மாறுதலை நீங்கள் எந்தக் கோணத்திலிருந்து கவனித்தாலும் சரி, இதைத் தவிர வேறு இடம் வந்து சேருவதற்கில்லை என்று நான் உண்மையாகவே மனதார எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் அப்படி மனதார எண்ணிக்கொண்டிருக்கிற காரணத்தால், நான் இவைகளைப்பற்றி எடுத்துக் குறிப்பிட்டுயிருக்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் படுகின்ற அவலம் தெரிகின்றது. அவர் மத்திய சர்க்காரிடத்தில் கேட்டுப் பெற முடியாத அவல நிலை தெரிகின்றது. பல்வேறு வகையான கிளர்ச்சிகள் உருவாகிக் கொண்டு வருகின்றன என்பதை எடுத்துக் காட்டாமல் இருக்க முடியாது. மார்ச் மாதம் 19-ம் நாள் என்.ஜீ.ஓ.-க்கள் ஒரு கண்டன நாளைக் கொண்டாடப் போகிறார்கள். திருவல்லிக்கேணி கடற்கரையில் மாபெரும் அணிவகுப்பு நடத்தப் போகிறார்கள். எதிர் கட்சியைச் சேர்ந்த எங்களையும் அழைத்திருக்கின்றார்கள். நாங்கள் அங்கே செல்லுகின்ற நேரத்தில் "நீங்கள் கிளப்பிவிட்டு வந்து விட்டீர்களே" என்று நீங்கள் குறைபட்டுக்கொள்ளலாம் என்ற காரணத்தினாலே அதை இப்போதே சொல்லுகின்றேன். அந்த அளவுக்கு என்.ஜீ.ஓ.-க்கள் அதிருப்திபடைந்திருக்கிறார்கள். ஒரு புறத்தில் மின்சார இலாகாவில் வேலை செய்யும் தொழிலாளர்கள் 11-ம் தேதி வேலை நிறுத்தம் செய்யப் போகிறோம் என்று நோட்டீஸ் தந்திருக்கின்றார்கள். வேறொரு புறத்தில் மார்ச் மாதம் 27-ம் தேதி "கோரிக்கை தினம்" என்று நாளைக் குறிப்பிட்டு, இந்திய துணைக் கண்டம் பூராவும் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்திக் கிளர்ச்சி நடத்த இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கிளர்ச்சிகள் அதிருப்தியினால் ஏற்படுகின்ற விளைவு. இந்த அதிருப்திக்குக் காரணம், உங்களால் போதுமான அளவுக்கு வசதி செய்து தர முடியாதது. அப்படி உங்களால் செய்து தர முடியாததற்குக் காரணம் உங்களுக்கு வழி தெரியவில்லை என்று அர்த்தமல்ல, வழி தெரியலாம். ஆனால் அந்த வழி அடைக்கப் பட்டிருக்கிறது. அப்படி வழி அடைக்கப்பட்டிருப்பதன் காரணமாக நந்தனார் கதையில் வருவது போல் "சற்றே விலகி இரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குது" என்ற முறையிலே, நமக்குக் கிடைக்க வேண்டிய வசதிகள் அடைபட்டுக் கிடைக்கின்றன. நந்தனார் கஷ்டப்பட்ட நேரத்தில் சிவபெருமானே சொன்னது போல "நந்தியே, சற்று விலகி இரும் பிள்ளாய், சந்நிதானம் மறைக்குது" என்று சொன்னது போல. இந்திய நாட்டின் பிரதமர் நேரு அவர்கள் நமக்கு வசதிகளையும், வாய்ப்புகளையும் இந்த மாகாணத்திற்கு ஒரு தனி நாடு என்று சொல்கின்ற அளவுக்கு அளிக்க வேண்டும். அதற்கான நிலைமையை அவர்களிடத்தில் கேட்க நமக்கு உரிமை இருக்கிறது. "ஏன் அந்த உரிமை இருக்கிறது, கருப்புக்கொடி காட்டினீர்களே, அதனாலேயா" என்று அமைச்சர் அவர்களுக்குக் கேட்கத்



தோன்றும். அது எங்களுக்கு இருக்கும் உரிமைகளில் ஒன்று அது என்று கூடச் சொல்லுவேன் ஏனென்றால், யாரிடத்தில் நன்மை கிடைக்குமோ அவர்களைத்தான் நாடிச் செல்வோம். கிடைக்க வேண்டிய நன்மை கிடைக்காவிட்டால் அதற்காக அவர்களிடம் வருத்தப்பட்டுக் கொள்வோம். ஆனால் அவர்களிடத்தில் கேட்பதில் ஒன்றும் தவறில்லை. இந்திய நாட்டினுடைய பிரதமர் என்று நம்முடைய அமைச்சர் சொல்லுகிறார்கள். நாங்கள் பாரதப் பிரதமர் என்றோ, இந்திய துணைக் கண்டத்தின் பிரதமர் என்றோ சொல்லுகிறோம். அவர் பிரதமராக இருக்கும் போதே நமக்கு இருக்கின்ற சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு ஏற்ற காலம் என்று கருதி, அந்தக் காலத்திலே கிளர்ச்சிகளைத் தொடக்கியிருக்கிறோம். நாடு பிரியலாம், பிரியக் கூடாது என்ற பல மாதிரியான கருத்துக்களை சில குறிப்பிட்ட அங்கத்தினர்கள் தெரிவித்துப் பல பிரச்னைகளைக் கிளப்பினார்கள். திராவிட நாடு எதற்கென்று கேட்டார்கள். தனியாகப் பிரிவது, தனித்து இருப்பது என்பது ஒரு நாட்டின் ஒற்றுமையைக் குலைப்பதாகாதா என்று கேட்டார்கள். ஐந்து விரல்களிலே ஒரு விரலை வெட்ட வேண்டுமென்று சொன்னால் அது தப்பென்று சொல்லலாம். விரல்களெல்லாம் சரியாக இருக்கும்போது, வெட்டவேண்டுமென்று சொல்லவில்லை, ஆனால் ஒரு விரலில் ஒரு கொப்புளம் ஏற்பட்டு அவை ஆபரேஷன் செய்யவேண்டுமென்று சொல்லும் போது ஏன் என்று ஒருவரும் கேட்கமாட்டார்கள். **Pundit Nehru, The right of any well constituted area to secede from the Indian Federation or the Union has often been put forward** இந்திய சமுதாயத்தில் எந்தப் பகுதியும் சரியான முறையில் பிரிந்து போகலாம் என்ற உரிமை பேசப் பட்டிருக்கிறது **Before any such right of secession is exercied, there must be a properly constituted, functioning free India,** அப்படிப் பிரிந்து போகவேண்டுமென்றால் உரிமை பாத்யதையைக்கொண்டுவருவதற்கு முன்னால் சட்டப்படி சுயராஜ்ய இந்தியா, "ப்ரீ இந்தியா" ஏற்படவேண்டும் "**It may be possible then, when external influences have been removed and real problems face the country, to consider such question objectively and in a spirit of relative detachment, far removed from the emotionalism of today. . . Thus it may be desirable to fix a period, say ten years after the establishment of free Indian State, at the end of which the right to secede may be exercised through proper constitutional process and in accordance with the clearly expressed will of the inhabitants of the area concerned.**" நாட்டுக்கு விடுதலை கிடைத்து, நல்ல ஆட்சி ஏற்பட்டு ஒரு 10 ஆண்டுக்குப் பிறகு எந்த நாடாவது, எந்தப் பகுதியாவது பிரிந்து போக வேண்டும் 9-1
என்றால், அங்கு இருக்கும் மக்களின் ஒப்புதலைப் பெற்று பிரிந்து p.m.
போகலாம். பிரிய வேண்டும் என்ற பாத்தியதையை கொண்டாடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன்னால்தான் நான் இதைப் படித்தேன். பத்து ஆண்டுகள் என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து எனக்கு வேடிக்கையாக இருந்தது. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது, நிதி அமைச்சர் அவர்கள் 10 ஆண்டுகளுக்காவது நமக்குள் ஒரு 'ட்ரூஸ்' இருக்க வேண்டும் என்று சொன்னார். இதிலும் 10 ஆண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு உரிமை தரப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. பாரத நாட்டுப் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்கள் எழுதி இருக்கும் ஏட்டிலிருந்து சொல்லுகிறேன். பாகிஸ்தான் வேண்டும் என்று ஜனாப் ஜின்னா கேட்ட காலத்தில் எழுதியது. ஜனாப் ஜின்னாவை 10 வருஷ காலம் பொறுத்திருக்கச் சொன்னார். ஆனால் அவர் பொறுக்கமாட்டேன் என்று சொன்னார். பத்து வருஷத்திற்குள் ஜனாப் ஜின்னா பாகிஸ்தான் பெற்றார். இவையெல்லாம் முடிந்த பிறகு, இந்தியாவுக்கு விடுதலை கிடைத்து 10 ஆண்டுகள் முடிந்தது, 11-வது ஆண்டில் நாம் நுழைந்து கொண்டிருக்கிறோம். பண்டித ஜவஹர்லால் நேரு எழுதிய வாசகம் என் உள்ளத்தில் உணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. பத்து ஆண்டு காலம் பொறுத்து இருந்தோம். ஐந்து ஆண்டு திட்டங்களில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம். தொழில் வளர்ச்சி குன்றியிருக்கிறது. நமது விவசாயம் செழிக்கவில்லை. தொழிலாளர்கள் தொல்லைப்படுகின்றனர்.

நம்முடைய நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. நம் நாட்டின் செல்வம் நாளுக்கு நாள் தேய்ந்துகொண்டிருக்கிறது. நாம் ஒரு காலத்தில் உலகம் புகழத்தக்க முறையில் வாழ்ந்தவர்கள். அந்தக் காலத்தில் நம் நாட்டின் பண்பாடு உலகம் பூராவும் பரவி இருந்தது. தனி நாடாகப் பிரியவேண்டும் என்று கூறும் உரிமையைக் கொண்டாடலாம் என்று பண்டித நேருவே சொல்லியிருக்கிறார். அந்த பாதியதையை, உரிமையை கோரலாம் என்று நேரு கூறி இருக்கிறார் என்று இந்த மாமன்றத்தில் இன்றைய தினம் எழுப்புவதற்கு மகிழ்ச்சி அடைகிறோம். பெருமைப்படுகிறோம். அதே நேரத்தில் அப்படி நாங்கள் கேட்கிறபோது உங்களுடைய எண்ணப்படி அது உங்களுக்குக் கிடைக்காது, அதை தர மாட்டோம், அது இந்தத் தலைமுறையில் கிடைக்காது இன்னொரு தலை முறைக்குப் பார்க்கலாம் என்று சொல்லுகிறார்கள். அது எனக்குத் தெரியாதது அல்ல. ஆனால் எந்தக் காரணத்தாலோ நாங்கள் அதை வற்புறுத்துகிற நேரத்தில் நம்முடைய தலைவர்களுக்கும், காங்கிரஸ் அமைச்சர்களுக்கும் ஏதாவது இதனால் மனக்கசப்பு ஏற்பட்டிருக்குமாயின் அருள் கூர்ந்து எங்களுடைய ஆழ்ந்த நம்பிக்கையை தயவுசெய்து ஏற்றுக் கொள்ள வேண்டும். எங்களுடைய ஆழ்ந்த நம்பிக்கையை உணராமல் வெறும் அரசியலுக்காக பேசுவதானால் இதை நாங்கள் விட்டுவிடுவது என்பது எளிதான காரியமாக இருக்கும். நமது நிதி அமைச்சர் அவர்கள் கவர்னர் அவர்களுடைய பேருரையின் மீது பேசும்போது கூட கொள்கை முரண்பாடு இருக்கிறது என்று மிகக் கனிவோடு சொன்னார். அது உண்மை தான். கொள்கை முரண்பாடு என்பது அடிப்படை தத்துவத்தில் அடங்கி இருப்பதாலும் உரிமைப் பிரச்னையாக இருப்பதாலும் எங்கள் உரிமையை இழந்து விட நாங்கள் மறுக்கிறோம். நாங்கள் எழுப்புகிற பிரச்னைகளுக்கு சாமர்த்தியமான பதில் அளிக்கிறார். அந்த சாமர்த்தியத்தை நான் பாராட்டுகிறேன். நாங்கள் அவரிடமிருந்து எதிர்பார்ப்பது எங்களுடைய வாதங்களை எப்படி மறுக்கிறார்கள் என்ற வாதத்திறமையை அல்ல. அவர் எப்படி அடித்து மடக்கிப் பேசுகிறார்கள் என்பது மட்டுமல்ல. அவைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்ட நிதி அமைச்சர் அவர் என்று நான் நிச்சயமாக கருதுகிறேன். அவருடைய இருதயத்தைக் கேட்கிறேன். அவருடைய தோழர்களாகிய காங்கிரசுக்காரர்களைக் கேட்கிறேன். அத்தனை பேர்களுடைய இருதயத்தையும் கேட்கிறேன். தாய் திருநாடு பெறுவதற்கு அவர்களின் ஒத்துழைப்பைக் கேட்கிறேன். அவர்கள் தங்கள் இருதயத்தில் ஒரு ஓரத்தில இந்தப் பிரச்சினைக்கு இடம் ஒதுக்கி வைத்துப் பார்த்தால் தான் இதைப்பற்றி புரியும் என்பதைச் சொல்லி அந்த நாள் விரைவில் நெருங்கிக்கொண்டு வருகிறது, என்றும் சொல்லிக்கொள்ளுகிறேன். நிதி நிலைமையில் இருக்கும் பற்றுக்குறையை கிணறுகள் வெட்டுவதிலும் பற்றுக்குறை, ஒவ்வொரு வசதியிலும் பற்றுக்குறை இருப்பதை அவர்களுக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

**SRI A. MARIAPPAN**: ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். கனம் அண்ணாதுரை முதலியார் அவர்கள் அந்தக் காலத்தில் சரக்குகளை ஆதரிக்கவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**(Deputy Speaker in the Chair.)**

**There was some noise.**

**DEPUTY SPEAKER**: I request those who want to leave the House or the galleries to do so without making noise.

3-22 p.m. ***SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சென்னை ராஜ்யத்தின் வரவு செலவு திட்டத்தைப்பற்றி சென்ற ஐந்து நாட்களாக எல்லா கட்சிகளிலுள்ள அநேகம் அங்கத்தினர்களும் பேசியிருக்கிறார்கள். முக்கியமாக இந்த வரவு செலவு திட்டமானது எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி என் வரையில் கேட்டால் இந்த வரவு செலவு திட்டமானது ரொம்பவும் ஏமாற்றத்தைதான்





கொடுத்திருக்கிறது என்பதைப்பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். எப்படி, ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது என்பதைப்பற்றி நான் பின்னால் புள்ளி விவரங்களோடு சொல்லுகிறேன். மற்றும் சில காரணங்களால் அது பெரிய ஏமாற்றம் என்பதை நன்றாக நிரூபிக்க முடியும். இப்பொழுது நாட்டில் பொருளாதார நிலைமை ரொம்பவும் மோசமாகிக்கொண்டே வருகிறது. வாழ்க்கைத்தரம் உயரவில்லை. இப்படி இருக்கும் டயத்தில் புதியதாக நம் நாட்டில் வரி போட வேண்டுமா என்பதைப்பற்றி நாம் யோசிக்க வேண்டும். மத்திய சர்க்காரும் அநேகம் வரிகளைப்போட்டிருக்கிறார்கள். நமது வரவு செலவு திட்டத்தில் துண்டு விழுகிறது என்ற காரணத்தால், அதுவும் 105 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது என்ற காரணத்தால், இந்த வரிகளைப் போட வேண்டுமோ என்பதைப்பற்றியும் யோசனை செய்ய வேண்டும். ஆனால் சில பொருளாதார நிபுணர்கள் கூட இப்படி துண்டு விழுவதற்கு இந்த வருஷம் இப்படிப்பட்ட வரி போட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூட சொல்லியிருக்கிறார்கள். அப்படித்தான் சில பத்திரிகைகளும் எழுதியிருக்கின்றன. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னதாக 'Mail' பத்திரிகை தன்னுடைய லீடரில் என்ன எழுதியிருக்கிறது என்றால் "It is difficult to appreciate why a small one and a half per cent of the total budget cannot have been uncovered in a year when so much is expected from development and larger accretions looked for from Central subventions because of changes in tax procedure there, and when the Centre leaves three and a half per cent uncovered and other States have had no scruples about deficit financing" இது தான் ஒரு முக்கியமான பத்திரிகையினுடைய அபிப்பிராயம். சில மாதங்களுக்கு முன்பு நான் சில பொருளாதார நிபுணர்களுடன் வரி விஷயங்களைப்பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருக்கும் தருணத்தில், முக்கியமாக நம் நாட்டை மற்ற மேல் திசை நாடுகளுடனோ, அல்லது கீழ்த் திசை நாடுகளுடனோ ஒத்திட்டுப் பார்க்கும்போது, நம்முடைய பாரத நாட்டில் தான் வரிப் பளுவு அதிகம், அதிக வரியைப் போட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் புள்ளி விவரமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த வரிகளெல்லாம் போடுவதற்கு முன்பு. இப்பொழுது இந்த வரியைச் சேர்த்துக் கொண்டால் இன்னும் அதிகமாக இருக்கும் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

'நம்முடைய சென்னை ராஜ்யம் ரொம்பவும் முன்னேற்றகரமானது (Advanced State) என்றும், அதற்காக அவ்வளவு உதவி வேண்டியதில்லை என்றும் சிபார்சு செய்திருக்கிறார், நிதிக் கமிஷனைச் சேர்ந்தவர். முக்கியமாக அப்படிச் சிபார்சு செய்தவர் யார் என்றால், நம் சென்னை மாகாணத்தில் இருக்கும் நம்மைச் சார்ந்திருப்பவர். அவரே இப்படி எழுதியிருக்கிறார் என்றால் ரொம்பவும் வியப்பைத்தான் தருகிறது. அவருடைய அறிக்கையில் இன்னும் அநேக விஷயங்களைப்பற்றியெல்லாம் பரிசிலனை செய்திருக்கிறார். நம்முடைய சர்க்கார், நிதிக் கமிஷன் இடம் அனேக விஷயங்களை எடுத்துக் காட்டியிருந்த போதிலும், நமக்குத் திருப்திகரமாக அந்த நிதிக் கமிஷன் போதுமான பங்குகளைக் கொடுக்கவில்லை. நமது நிதி அமைச்சர் அவர்களும், அம்மாதிரி நிதிக் கமிஷன் கொடுக்காததைப்பற்றி ஒரு பாராவில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

முக்கியமாக, இந்த வரியின் காரணமாக நமக்கு டீசல் எண்ணெய் 3-30 p.m. மூலமாக 70 லட்சம் ரூபாயும், விவசாய வருமான வரி மூலமாக 170 லட்ச ரூபாயும், தமாஷா வரியின் மூலமாக 30 லட்ச ரூபாயும் வரக்கூடும் என்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மத்திய சர்க்கார் நம்மிடமிருந்து அதிகமான வட்டி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள், அந்த வட்டியையும் அவர்கள் குறைத்தபாடில்லை, என்று நிதி அமைச்சர் அவர்கள் அவருடைய உரையில் ஒரு பாராவில் குறிப்பிட்டிருக்கிறார். "We had also pleaded for a reduction in the rate of interest charged on Central loans, taking into consideration the large resources raised by the Centre through deficit financing. The Commission's recommendations do not meet our case in full." இதைப் பார்ப்பதற்கு ரொம்ப வருத்தத்தைக் கொடுக்கிறது. இப்படியே

இந்தியா பூராவுக்கும் வரும் என்ற வாதம் தப்பு என்பதை காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீ சந்தானம் அவர்களே மறுத்து இருக்கிறார். இந்தக் காங்கிரஸ் வாதம் . . . . (கனம் ஸ்ரீ கே. காமராஜ்—இதைக் காங்கிரஸ் வாதம் என்று சொல்லாதீர்கள்.) முதல் அமைச்சர் அவர்கள் இப்படிச் சொல்கிறவர்கள் காங்கிரஸ்காரர்கள் அல்ல என்று கருதலாம்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** ஸ்ரீ சந்தானம் அவர்கள் தம்முடைய அறிக்கையில் தமிழ்நாடு அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிற நாடு, அதற்கு நிதி அளிக்க வேண்டியது இல்லை என்று சொல்லியிருக்கிறார். அதையும் ஸ்ரீ அண்ணாத்துரை ஒப்புக் கொள்கிறார்களா என்று கேட்கிறேன்.

**Sri C. N. ANNADURAI :** நான் உணவு விடுதிக்குப் போனால் வெண்டக்காய் சாம்பார் என்றால் என் இலையில் ஊற்று என்பேன். கத்திரிக்காய் பொரியல் என்றால் பக்கத்து இலையைக் காட்டுவேன். (கனம் ஸ்ரீ கே. காமராஜ்—உங்களுக்குச் சாதகமான வாதத்தைத்தான் எடுத்துக்கொள்வீர்களோ ?) தனக்குச் சாதகமானவற்றை எடுத்துக்கொள்வதுதான் மனித இயல்பு. நான் சொல்லவந்தது நம்முடைய நாடு தனியாக வாழ்வதற்கு ஏற்ற எல்லா வசதிகளையும் பெற்றிருக்கிறது என்பது ஒன்று மட்டும் அல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தே தமிழ் மொழி இருந்த நிலை, தமிழர்கள் கடல் கடந்து சென்று வியாபாரம் செய்த நிலை முதலியவற்றை எல்லாம் நான் சொல்வதைக் காட்டிலும் வேறு ஒருவர் சொன்னார் என்றால் அதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். சென்னை சர்வ கலாசாலை பொருளாதார நிபுணாக இருந்த ஸ்ரீ தாமஸ் அவர்கள் சொன்ன கருத்தை இங்கே வைக்க விரும்புகிறேன்:—B. J Thomas "The commerce of South Indian ports with Alexandria reached great heights, especially during the years 45–160 A. D. with growing prosperity in Rome, the demand for not only pepper, but other spices and luxury goods rose to unknown proportions. To satisfy the craving of Roman women, Indian peacocks, parrots, monkeys and other pets were also taken and elephants were required for Royal processions in Rome. As such large imports had to be paid for in gold for species, authorities in Rome had to face serious currency problems." என்று ஈராயிரம் ஆண்டு காலத்திற்கு முன்னாலேயே தமிழகப் பொருள்கள் எவ்வளவு வெளி நாடுகளில் தேவைப்பட்டது என்று பி. ஜே. தாமஸ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்நிலை பழங்காலத்தில் இருந்தது. இப்பொழுது இருக்கும் தமிழகத்தில் என்ன இருக்கிறது என்று கேட்கக் கூடியவர்களுக்கு காங்கிரஸ் அமைச்சர்கள் கருப்புத் தங்கம் என்று சொல்லும் பழுப்பு நிலக்கரி நெய்வேலியில் நமக்கு கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். நமக்கு கிடைக்கும் நிலக்கரியும் அதனுடன் இணைக்கப்படுகிற துணைப்பொருள்களும் செய்தால்தான் இந்த மாநிலத்தின் செல்வ வளர்ச்சியை அதிகப்படுத்த முடியும் என்று எடுத்துச் சொல்லி அமைச்சர் அவர்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அன்னிய செலாவணி என்ன பற்றாக்குறையாக இருந்த போதிலும் அதற்கு தடை ஏற்படாது, இது நமக்கு நிச்சயம் உண்டு என்று சொன்னார்கள். ஆனால் நிலக்கரி சுரங்கம் தோண்டுகிற வரையில்தான் உண்டு என்று, கோர் ஆப்தி பளானில், core of the plan) அடிப்படையில் உள்ளதை சேர்த்திருக்கிறார்களே தவிர மற்றவைகளை சேர்க்கவில்லை என்று மத்திய சர்க்கார் துணை நிதியமைச்சர் அவர்கள் இரண்டொரு நாளைக்கு முன்னால் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நிலக்கரிச் சுரங்கத்தை தோண்டிக் கொடுப்பதால் மட்டும் பயனில்லை. உர உற்பத்தி தொழிற்சாலையும், துணைப்பொருள்கள் உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலையும் அமைத்தால்தான் பலன் கிடைக்கும். ஆனால் இது பற்றி, எது எது திட்டத்தின் அடிப்படை என்று ஒரு அட்டவணை கொடுத்திருக்கிறார் மத்திய சர்க்கார் டெப்புட்டி பைனான்ஸ் மினிஸ்ட்டர் பகத் அவர்கள். மத்திய மந்திரி சொல்வதைப் பார்த்தால் வருகிற ஐந்து ஆண்டிற்கும், நமக்கு நெய்வேலியில் இருந்து நிலக்கரி மட்டுந்தான்



கிடைக்கும் என்ற அவல நிலையிருக்கிறது. நம்மிடம் இருக்கக்கூடியது இயற்கை வளங்கள் மட்டுமல்ல. நம் நாட்டின் பூமிக்கு அடியில் இருக்கிற வளங்களைத் தோண்டிப் பார்ப்பதற்கு நம்மிடம் ஏதாவது டிபார்ட்மெண்ட் இருக்கிறதா ? அதாவது " ஜியாலாஜிக்கல் சர்வே " பற்றி இந்த மாமன்றத்தில் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கையில் அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள், ஆம்பூர் தொகுதி உறுப்பினர் அவர்கள் அக்கேள்வியைக் கேட்டார் என்று கருதுகிறேன். பூமிக்கு அடியில் இருக்கும் பொருள்களைத் கண்டுபிடிக்க; சர்வே பார்க்க நாம் ஏதாவது இலாகா வைத்திருக்கிறோமா என்று கேட்டதற்குப் பதிலாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அந்த இலாகா மத்திய சர்க்காரிடம் இருக்கிறது என்று. தனி நாடாக இருந்தால் இந்த பூகர்ப ஆராய்ச்சி இலாகா நம்மிடம் இருக்கும். அது நம்மிடம் ஒப்படைக்கப்பட்டால், பூமிக்கு அடியில் இருக்கும் பல்வேறு பொருள்களை, விலைமதிப்பில்லாப் பொருள்களை, கனிப்பொருளை நாம் தேடி எடுக்க முடியும் என்று நான் நம்பிக் கொண்டிருக்கிறேன். நான் அப்படி நம்புவதற்குக் காரணம், நம் நாடு தனியாக நிற்க வேண்டுமென்பது மட்டுமல்ல. ஆராய்ச்சியாளர்கள் பலர், இங்கு கிடைக்கக்கூடிய, இங்குள்ள அரிய பொருள்களை கோடிட்டு காட்டுவதுமாகும். பெப்ரவரி 3-ம் தேதி மேற்கு ஜெர்மனியில் இருந்து வந்த இரண்டு நிபுணர்கள் வட ஆற்காட்டிலும், திருச்சியிலும் சில பகுதிகளைப் பார்த்துவிட்டு தந்திருக்கிற ஒரு ஆராய்ச்சிக் குறிப்பை நான் பார்க்க நேரிட்டது : "Geologists from the Federal Republic of West Germany who recently conducted investigation of the soft rocks area in South Arcot and Trichi districts near Quilon with regard to the occurrence of petroleum, have expressed the view that further work in the area by way of detailed mapping and geophysical examination would be justified " என்று அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இயற்கை வளங்கள், நாம் இன்னமும் கண்டு பிடிக்காமலிருக்கிற வளங்கள், முயற்சி செய்தால் கிடைக்கக் கூடிய வளங்கள் இவைகள் ஏராளமாக இருப்பதை நாம் அறிவோம். அவைகளை கண்டு பிடிப்பதற்குள்ள அதிகாரம் ஒரு துரைத்தனத்திற்கு இருக்கவேண்டும். அந்த அதிகாரங்களை துரைத்தனத்திற்கு வாங்கி தரவேண்டும் என்பதற்கும் தனி நாடு வேண்டும் என்றுள்ள கோரிக்கைக்கும் தொடர்பு உண்டு என்று நான் கருதுகிறேன். நாம் தனியாக வாழ முடியுமா என்று கணக்கெடுக்கின்ற நேரத்தில் நமது அமைச்சர் அவர்கள் இன்று இருக்கக் கூடியவைகளை மட்டும் எடுக்காது " பொட்டன்ஷியாலிட்டீஸ் " ஸையும் சேர்த்து கணக்கெடுக்க வேண்டும் என்று நான் விரும்பி கேட்டுக் கொள்கிறேன். மூன்று பக்கத்திலும் கடல் கிடைத்திருக்கிற நம் நாட்டில் மீன் பிடிப்பு தொழிலை மட்டும் எடுத்துக்கொண்டால் நாம் அதை வளர்க்க வேண்டிய அளவுக்கு வளர்த்து, இப்போது வளர்க்கவில்லை என்று அர்த்தமல்ல, பத்தோடு பதினொன்றாக வைத்துவிட்டு அதற்கு ஒரு லட்சம் இதற்கு ஒரு பத்து லட்சம் என்று கொடுக்கின்ற முறை இல்லாமல் அதை எடுத்து ஐந்து ஆண்டுக்குள் இந்த உலகில் இருக்கின்ற நாடுகள் எல்லாம் நம் நாட்டின் மீன் வளத்தைப் பார்த்து அவைகளை பெற்று தீரவேண்டும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்த தொழிலை வளர்க்கவேண்டும். ஆகவே இதற்கென்று திட்டமிட்டு 10 கோடி அல்லது 20 கோடி ரூபாய் ஒதுக்கி, ஏதோ பாப்லோ படகுகள் 12 வாங்கியிருக்கிறோம், இன்னும் ஆறு ஏழு வரும் என்று சொல்லக்கூடிய அவல நிலை இல்லாமல் திட்டமிட்டு வெளி நாட்டார் விரும்பத்தக்க வகையில், அவர்கள் விரும்பி வாங்கக்கூடிய நிலையில் இத்தொழிலை ஏன் நாம் நடத்தக்கூடாது. நிதி அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர்கள் ஏதாவது மாற்று யோசனைகள் இருந்தால் சொல்லட்டுமே என்று சொன்னார்கள். நம் என்.ஜி.ஓ.க்களுக்கு பணம் தருவதற்கு என்ன மாற்று யோசனைகள் சொல்ல சொல்லுகிறார். என்.ஜி.ஓ. க்கள் விஷயத்தில் நிதி அமைச்சர் அவர்களுக்கு அக்கரை இருக்கிறது என்று நினைத்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த பணத்தை வீதிலிருந்து எடுத்து செலவழிப்பது என்று சொல்லுவதற்கில்லை. சாதாரணமாக அடுப்பின் அடியில் உட்கார்ந்துக் கொண்டு இதை சொல்லுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். அடுப்பின் பக்கத்தில் ஒரு கிளை அடுப்பும் இருக்கும். கிளை

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [8th March 1958

பார்த்தால், நம் ராஜ்யத்தில் இன்னும் அநேக வேலைகள் செய்யவேண்டிய குறைகளெல்லாம் நிறைய இருக்கின்றன. மக்களுக்கு நிறைய குறை பாடுகள் இருக்கின்றன : எவ்வளவு வேலைகள் செய்தபோதிலும் இன்னும் செய்யவேண்டிய பல வேலைகள் இருக்கின்றன.

என்.ஜீ.ஓ.-க்களைப்பற்றி சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். அவர்களுக்குப் போதுமான ஊதியம் கொடுக்கவில்லை. மத்திய சர்க்கார் ஊழி யர்களுக்கும், இவ்விடத்தில் வேலை பார்க்கக்கூடிய என்.ஜீ.ஓ -க்களுக்கும் சம்பளத்திலும் பஞ்சப்படியிலும் அதிகமான வித்தியாசம் இருக்கிறது. முக்கியமாக இரண்டொரு புள்ளி விவரத்தை மட்டும் நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். சென்ட்ரல் கவர்ன்மெண்டில் வேலை பார்க் கும் லோயர் கிரேடு சர்வண்டுக்கு ரூ. 30—1/2—35 என்ற விகிதத்தில் எடுக்கும்போது, இங்கே உள்ளவர்களுக்கு 18—1—25 என்ற விகிதத்தில் இருக்கிறது. சென்ட்ரல் கவர்ன்மெண்டு அடெண்டர் சம்பள விகிதம் 40—1—50 என்று இருக்கும்போது இங்கே 24—1—30 என்று இருக்கிறது. பஞ்சப்படி விஷயத்தை எடுத்துக்கொண்டால், சென்ட்ரல் கவர்ன்மெண்டில் 45 ரூபாயும், ஸ்டேட் கவர்ன்மெண்டில் 30 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. இந்த வகையில் 15 ரூபாய் ஏற்றத்தாழ்வு (disparity) இருக்கிறது. நூற்று ஒன்று ரூபாயிலிருந்து 150 வரையில் சம்பளம் வாங்குகிற மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு 60 ரூபாய் பஞ்சப்படியும், நம்முடைய ராஜ்யத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு 38 ரூபாய் கொடுக்கப் படுகிறது. இந்த வகையில் 11 முதல் 22 ரூபாய் வரையில் வித்தியாசம் இருக்கிறது. இம்மாதிரி அநேக வித்தியாசங்கள்.

நம்முடைய அரசாங்கத்தின் வருமானத்தைப் பார்க்கும்போது, Composite State ஆக 25 ஜில்லாக்களும் ஒன்ருக இருந்தபோது மொத்த வருமானம் 50, 80 லட்சம் ரூபாய் இருந்தபோது administrative cost 32 சத விகிதம் இருந்தது. இப்பொழுது 1958-59-ல் 13 ஜில்லாக்களுக்குப் பார்க்கப் போனுல், 63, 90 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. administrative cost எவ்வளவு சதவிகிதம் ஆகிறது என்னும் புள்ளி இன்னும் வரவில்லை. நிர்வாக வேலைகள் அதிகமாகிக் கொண்டிருக்க, ' நமக்குப் போதிய வருமானம் வேண்டும், அதற்கு வேண்டிய தொகை நம்மிடம் இல்லை ' என்று சொல்வது ரொம்பவும் ஆச்சரியத்தைக் கொடுக் கிறது. இருக்கும் தொகையிலிருந்தே செலவுகளைக் குறைத்து சிக்கன மான முறைகளைக் கையாண்டு, என்.ஜீ.ஓ.-க்களுக்கு வேண்டிய ஊதியத்தைக் கொடுக்க நாம் முன் வரவேண்டும். Contented service இருந்தால் தான், அதாவது வேலை செய்பவர்கள் திருப்திகரமாக வேலை செய்தால் தான் நிர்வாகம் நல்ல முறையில் நடக்க முடியும். ஆகவே, அவர்கள் திருப்திகரமாக வேலை செய்ய வேண்டுமானுல் அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தவேண்டுமென்று நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இதை உடனடியாக, எந்தவிதக் காரணமும் சொல்லாமல், நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் முதன் முதலாக அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இது மிகவும் அவசரமாகக் கவனிக்க வேண்டிய விஷயம்.

தவிர, மத்திய சர்க்கார் நம்முடைய மாகாணத்திற்கு வரக்கூடிய வரும்படியை அதிகமாக எடுத்துப் போகிருர்கள். அதன் காரணமாகத் தான் முக்கியமாக நமக்கு வரவேண்டிய வருமானம் குறைந்துவிடுகிறது. நாம் பத்திரிகையில் படித்தபோது, மேற்கு வங்காளத்தில் அவர்கள் இம்மாதிரி கூக்குரல் போட்டு, முக்கியமாக சில சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோருமே இருந்து, மத்திய அரசாங்கத்திடம் ஒரு ' டெபுடேஷன் ' போகவேண்டுமென்று தீர்மானித்து, அதன்படி தங்களுடைய தீர்மானத்தை சட்ட சபை மூலமாக அனுப்பவேண்டுமென்று முடிவு செய்திருக்கிருர்கள். நாம் ஏன் அம்மாதிரியான தீர்மானத்தை இவ்விடம் கொண்டுவந்து மத்திய சர்க்கார் நமக்குக் கொடுக்கும் தொகை போதாது என்றும், இன்னும் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்றும் நாம் ஏன் கேட்கக் கூடாது என்று நான் கேட்கிறேன்.



8th March 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

செலவைக் குறைக்க வேண்டுமென்று நான் இந்தச் சட்டசபையில் அனேக தடவைகள் சொல்லியிருக்கிறேன். இப்போதும் சொல்ல விரும்பு கிறேன். முக்கியமாக Composite State ஆக இருந்தபோது பரிபாலனச் செலவு நமக்கு எவ்வளவு ஆகிக்கொண்டிருந்ததோ, அதைவிட இப்பொழுது அதிகமாய்க்கொண்டு வருகிறது. ஒவ்வொரு இலாகாவிலும், வேலைகள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி யாரும் மறுக்கமுடியாது. இருந்தபோதிலும் இதற்கு என்று ஒரு கமிட்டி போட்டு, சரிவர பரிசீலனை செய்து, சிக்கன முறையைக் கையாளுவதற்கு உடனடியாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். ஏதோ ஒரு ரெவினியூ போர்டு மெம்பரைச் சமீபத்தில் இதற்காகப் போட்டார் கள். இன்னும் அவருடைய முடிவான சிபார்சுகள் வரவில்லை என்றும், உடனடியாக அவருடைய சிபாரிசுகள் வரும் என்றும், அவைகளின் பேரில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது சம்பந்தமான அறிக்கையொன்று மேஜைமேல் வைக்கப்படுமென்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். ஆந்திர ராஜ்யத்தைப் பார்த்தால், அவர்கள் ஒரு பெரிய கமிட்டியாகப் போட்டு, நல்ல முறையிலே மாகாணம் முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து, எந்த எந்த இலாகாவில் எந்த அளவுக்கு சிக்கனத்தைக் கையாளலாம் என்பதைப்பற்றி பரிசீலனை செய்து அவர்கள் ஒரு யாதாஸ்து சமர்ப்பித்திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அதுமாதிரி ஏன் நாமும் செய்யக்கூடாதென்று நான் கேட்கிறேன். இது ரொம்ப முக்கிய மான சமாசாரம்.

மூலதனச் செல்வு 9,73 லட்சம் என்றும், அதிலே 2,39 லட்சம் கட்டிடத் திற்காக என்றும் பட்ஜெட் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, " The Capital Expenditure for the year is fixed at Rs. 9,73 lakhs made up of Rs. 2,39 lakhs on buildings, Rs. 1,69 lakhs on Irrigation, Rs. 70 lakhs on Minor Irrigation " and so on இப்படி 2,39 லட்சம் ரூபாய் கட்டிடத்திற்காகக் கண்டிருப்பது ரொம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது. ஏன் இப்படி டிஸ் பிரபோஷனேட்டாக செலவிட வேண்டும் என்பதற்கு நிதி அமைச்சர் அவர்கள் அவருடைய பதிலில் விளக்கம் கூறுவார் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த வரி விஷயம். இந்த வரி போட்டதைப் பற்றி முக்கியமாக எனக்கும் எங்கள் கட்சியாருக்கும் பொதுவாக யாதொரு ஆட்சேபணையும் இல்லை. ஆனுல் டீசல் எண்ணைக்குப் போடப்படும் வரி எந்த விதத்தில் பயிரிடுபவர்களைப் பாதிக்கும் என்பது யோசிக்க வேண் டியது ஆகும். அவர்களுடைய விளைபொருள்கள் எல்லாம் ஓரிடத்திலிருந்து இன்னேரிடத்திற்குக் கொண்டுபோயாக வேண்டும். உரங்கள், மற்ற*கருவி கள் எல்லாம் போயாகவேண்டும். பம்பு செட்டுகளுக்கும் எண்ணை வேண் டும். அநேகம் அங்கத்தினர்கள் இதைப்பற்றிப் பேசினுர்கள். பர்மிட்முறை வைத்தாவது கண்டிப்பாக அவர்களுக்குச் சலுகை கொடுத்தால்தான் உணவு உற்பத்தி பெருகுவதற்கு உதவி புரிந்தவர்களாக ஆவோம் என்று சொல்ல விரும்புகிறேன். இல்லாவிட்டால் அவர்கள் ரொம்பவும் கஷ்டப் படுவார்கள். இந்த எண்ணைக்கு வரி உயர்த்தப்படுவதால் பஸ் கட்டணங் கள் எல்லாம் கூட உயரக்கூடும் என்று சொன்ஞர்கள். டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டியின் அறிக்கையில் முன்பு போட்டிருந்த வரியே அதிகம் என்று கூறியிருக்கிருர்கள். இப்போது என்ன சொல்வார்களோ எனக்குத் தெரியவில்லை. அதைப்பற்றிக் கவலைப்படுவதற்கும் ஒன்றும் இல்லை.

தவிர இந்த டீசல் எண்ணையானது ஆந்திர மாகாணத்தில் இருந்தும் புதுச்சேரி மற்ற பகுதிகளில் இருந்தும் கள்ளக்கடத்தல் மூலமாக வருவதற் கும் வாய்ப்பு இருக்கிறது. இதையும் சரியாக கவனிக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

விவசாய வருமான வரியைப் பற்றி ஒரு விஷயம். விலைவாசிகள் எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதைப்பற்றி சர்க்கார் புள்ளிவிவரங்கள் கொடுத்திருக்கிருர்கள். இப்படி விலைவாசிகள் உயர்ந்திருப்பதன் காரண மாக முக்கியமாக விவசாயிகள் அதிகமாகக் கஷ்டப்படுகிருர்கள். அதன் காரணமாக அவர்களுக்குப் பல தொல்லைகள், முக்கியமாக இப்போது

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [8th March 1958

ஹரிஜனங்களுக்கு மாடு முதலியன கொடுத்து அரசாங்கத்தார் உதவி செய்து வருகிறார்கள். முன்பு 50 ரூபாய், 60 ரூபாய்க்கு வாங்கக் கூடிய மாடுகள் இப்போது 250 ரூபாய்க்கு வாங்குகிறார்கள். நானே சந்தையில் போய்ப்பார்த்தேன். மாடுகளுடைய விலை உயர்ந்துவிட்டது. உரங்களுடைய விலைகள் எல்லாம் உயர்ந்திருக்கின்றன. பிண்ணாக்கு முதலியவற்றின் விலையும் ஏறிவிட்டது. இரும்புக் கருவிகளின் விலையும் கூடுதலாகிவிட்டது. இந்த நிலையில் நாம் செய்கிற எந்தப் புதுக் காரியமும் விவசாயிகளைப் பாதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியதாகும்.

மின்சார பம்பு செட்டுகள் பற்றி ஒரு கஷ்டம் இருக்கிறது. குதிரை ஒன்றுக்கு 50 ரூபாய் விதிக்கப்பட்டது. இதுபற்றி எனக்கு சமீபத்தில் பல மகஜர்கள் வந்தன. மின்சார கனெக்ஷன் கொடுப்பதற்கு அக்ரிமெண்டு எழுதி வாங்கிக்கொண்டபின் ஏழு, எட்டு மாதங்களுக்குப் பிறகே கனெக்ஷன் கொடுக்கப்படுகிறது என்றும், ஆனால் அக்ரிமெண்டு தேதியில் இருந்தே மினிமம் சார்ஜ் போன்றவைகள் கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. இது வருத்தப்படவேண்டிய விஷயம். அதைப்பற்றி நன்றாக யோசிக்க வேண்டும். அக்ரிமெண்டில் எப்படி இருந்தாலும், இன்றைக்கு விலைவாசிகள் ஏறிக்கொண்டிருக்கிற காரணத்தினால் இதை எவ்வளவு குறைக்கலாம் என்பதுபற்றி யோசிக்க வேண்டும். முன்பு ராமநாதபுரம் ராஜா அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் இதைப்பற்றி கவனிப்பதாகச் சொன்னார்கள். இன்னும் எவ்வளவு நாட்கள் அவ்விஷயம் பரிசீலனையில் இருக்கும் என்று தெரியவில்லை. அவர்களுக்கு ஏதாவது சலுகை கொடுப்பதென்றால் உடனடியாகக் கொடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய வருமான வரி போடுவதைப்பற்றி என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், முக்கியமாக சர்க்காருக்கு இருக்கவேண்டிய ரைட் காரணமாக ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் லேட்டாக நிலவரி போட்டுவிட்டு, மற்ற சர்சார்ஜு முதலியவைகளை எடுத்துவிட்டு ஒரு வரம்பு கட்டி இத்தனை ரூபாய்க்கு அதிகமாக வருமானம் உள்ளவர்களுக்கு இவ்வளவு வரி என்று போட்டு விடலாம். அதை விட்டு மற்றவரிகளையும் வைத்துக் கொண்டே இந்த வரியையும் போடுவது விவசாயிகளைக் கொஞ்சம் பாதிக்கும் என்கிற விஷயம் யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. இதைப்பற்றி நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும். அநேக இடங்களில் சர்க்கார் பண்ணைகள் நடக்கின்றன. முக்கியமாக அவ்விடங்களில் எல்லாம் வருமானம் எவ்வளவு, செலவு எவ்வளவு என்கிற புள்ளிவிவரத்தை எடுத்துப் பார்க்கலாம். அதற்குத் தகுந்தாற்போல் வரி போடலாம். இப்போது வரி போடுவதைப்பற்றி குறை கூறுவதற்கில்லை. ஆனால் இந்த வருமான வரியை எப்படி வசூல் செய்யப்போகிறார்கள் என்பதைப் பற்றித்தான் கவலையாக உள்ளது. எதற்காகச் சொல்கிறேன் என்றால் பல பல வரிகளாக வைத்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக வருமான வரியாகவே போட்டுவிடலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 12 லட்சம் டன் வரையில் அதிகமாகவே உற்பததியாகியிருக்கிறது என்று உணவு மந்திரி அவர்கள் சொன்னார்கள். உணவு உற்பத்தி பெருகுகிறது என்பதில் ஆட்சேபணை இருக்க முடியாது. இருந்தாலும் இன்றைய தினம் உற்பத்தி பாதிக்காத வகையில் நாம் செயல்படவேண்டியவர்களாக இருக்கிறோம். பருவ மழை சுமாராக இருக்கிறது என்று சொன்னார்கள். எங்கள் பிராந்தியத்தில் ஸ்ரீ அண்ணாதுரைக்குத் தெரியும். காஞ்சீபுரம் பிராந்தியத்தில் ஒரு பாகம் அப்படியே மழை இல்லாமல் சாவியாகப் போய்விட்டது.

ஆகவே அதைப்பற்றி, எவ்வளவு உற்பத்தி நமக்கு கண்டிப்பாக வரும், மழையில்லாத காரணத்தால் எவ்வளவு குறையும் என்பதைப் பற்றி எல்லாம் சர்க்கார் நன்றாக ஆலோசித்துப் பார்த்து அதற்கேற்றபடி நியாயவிலைக் கடைகள் வேண்டுமா என்பதைப்பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். மேலும், இந்த பட்ஜெட்டின் உரையில் அசோக் மேத்தா அவர்களின் ரிப்போர்ட்டைப் பற்றி ஒருவிதமான குறிப்பையும் காணோம். அவர்களின் ரிப்போர்ட்டில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்,



8th March 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

" ப்ரைஸ் ஸ்டபிலைஸேஷன் போர்ட் " (Price Stabilization Board) வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பெயர் ப்ரைஸ் ஷாப்ஸ் (Fair Price Shop) வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நம் உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இப்பொழுது பெயர் ப்ரைஸ் ஷாப்ஸ் அவசியமில்லை என்று. பின்னாடி அவசியமானால் அதைப்பற்றி சர்க்கார் கவனிக்கும் என்றும் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது அதை திடீரென்று வைப்பது எப்படி முடியும், கவர்ன்மெண்ட் ஏதாவது " பப்பர் ஸ்டாக் " (Buffer stock) வைக்கப் போகிறார்களா ? அப்படி பெயர் ப்ரைஸ் ஷாப்ஸ் வைக்கும்போது அதற்கு வேண்டிய தானியங்கள் கிடைக்குமா என்பதை பற்றியெல்லாம் யோசனை செய்து பார்க்க வேண்டும். அடுத்தபடியாக, டெவலப்மெண்ட் ஸ்கீமின் கீழ் (Development Scheme) அக்ரிகல்ச்சரல் டெவலப்மெண்ட் ஸ்கீமிற்கு (Agricultural Development Scheme) 79 லட்சம் ரூபாய் போட்டிருக்கிறார்கள். அதிலும் முக்கியமாக 44 லட்சம் ரூபாய் ஸீட் பார்ம்க்காக போட்டிருக்கிறார்கள். நம் ராஜ்யத்தில் 360-க்கு மேற்பட்ட விதைப் பண்ணைகள் அமைக்க திட்டம் இட்டுள்ளதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி ஒவ்வொரு விதைப் பண்ணைக்கும் 25 ஏக்கரா என்றும், எல்லா விதைப் பண்ணைகளும் சேர்ந்து 3,150 டன் தானியம் உற்பத்தியாகும் என்றும், ஆவரேஜ் ஆக போட்டால் ஏக்கர் ஒன்றுக்கு 700 பவுண்டு கிடைக்கும்என்றும் கணக்கு போட்டிருக்கிறார்கள். இதைப் பார்க்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. 1958–59-ல் 180 பாரம் வைக்கப் போவதாகவும் அதற்காக 72 லட்சம் செலவிடப் போவதாகவும் சராசரி ஏக்கர் ஒன்றுக்கு 700 பவுண்டு உற்பத்தியாகும் என்றும் போட்டிருக்கிறார்கள். இந்த விதைப்பண்ணைகள் முக்கியமாக அவசியமா என்று பரிசீலனை செய்ய வேண்டும். என்னைப் பொறுத்தமட்டில் இவைகள் அவசியம் இல்லை என்றுதான் நான் சொல்வேன். அநேக ஜில்லாக்களில் இப்பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சில பிராந்தியங்களில் மட்டும் சர்க்கார் பண்ணைகள் வைத்துக் கொள்ளலாம். அதுவும் நல்ல விவசாயிகளாக இருப்பவர்களைப்பார்த்து, நல்ல ஆபீஸர்களை வைத்துகண்காணித்து அவர்கள் நல்ல விதை சரிவர உற்பத்தி செய்து வருகிறார்களா என்று கவனித்து அவர்களிடம் இருந்து வாங்கவேண்டும். அப்படி செய்தால் இவ்வளவு செலவு இருக்க வேண்டிய அவசியமேயிருக்காது. விதை உற்பத்தி செய்வதற்கு நல்ல நிலமாக பொறுக்கி எடுத்து, அங்கு நல்ல " ஈல்ட் " (yield) இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இப்பொழுது எப்படி பொறுக்கியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்கு அதிகமாக சொல்ல முடியவில்லை. ஒவ்வொரு இடத்திலும் அந்தந்த இடத்திற்குத் தகுந்தாற்போல், சில பேர்களுக்காக வேண்டி பண்ணைகள் வைத்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். நல்ல நிலமாக இல்லாத இடங்களில் இப்படிப்பட்ட பண்ணைகள் வைத்தால் உற்பத்தி பெருகாது. நிலம் நன்றாக இருக்க வேண்டும். விதைப் பண்ணைகளில் இருந்து நல்ல உற்ப்த்தி கிடைக்க வேண்டும். அவைகளில் இருந்து கிடைக்கும் விதைகள் எடுத்து விநியோகம் செய்தால்தான் உற்பத்தி பெருகும். காடுகள், விளையாத நிலங்கள் இவைகளை எல்லாம் எடுத்து அவைகளில் விதைகளை உற்பத்தி செய்ய ஆரம்பித்தால் அது மோசமாகத்தான் இருக்கும். தவிர அந்த விதைகளினால் ஒரு பிரயோஜனமும் இருக்காது. அடுத்தபடியாக, இந்த அம்மோனியம் சல்பேட் கிடைப்பதில் கஷ்டம் இருக்கின்றன. விலை எல்லாம் ஏறிவிட்டது. கம்போஸ்ட் உரங்களை கூடுதல் உற்பத்தி செய்ய வேண்டும். தழைக்காக விதை கொடுப்பதற்கு அவர்களுக்கு ஸப்ஸிடி (subsidy) கொடுத்து வருகிறார்கள். அதை வரவேற்கிறேன். இருந்த போதிலும் கம்போஸ்ட் உரத்திற்காக பழையபடி, ஐந்தாறு வருஷங்களுக்கு முன்னர் ரயத்துகளுக்கு சப்ஸிடி கொடுத்து வந்தார்கள். அப்படி இப்பொழுதும் கொடுத்து அதை கூடுதல் உற்பத்தி செய்ய அவர்களுக்கு வேண்டிய உதவி அளிக்க வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, ட்ராக்டர்கள். எஸ்டிமேட் கமிட்டி சென்ற வருடமும், அதற்கு முன் வருடமும் இதுபற்றி நன்கு பரிசீலனை செய்து ஒரு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள். அதை சர்க்கார் இன்னும் அமுலிற்கு கொண்டு வந்ததாக தெரியவில்லை. அது ரொம்பவும் விசனிக்கத் தக்கது.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [8th March 1958

எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட் என்னவென்ருல், ஒரு அஸிஸ்டெண்ட் என்ஜினியரை அதற்கு சார்ஜாக போட்டு, ப்ரையாரிட்டி பிரகாரம் டிராக்டர் முதலியவைகளை கொடுக்க வேண்டுமென்றும், ஒரு அக்ரிக்கல்ச்சரல் (Agricultural) ஆபீஸர் மூலம் கொடுத்தால் சரிவர நடப்பதில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுது அம்மாதிரி நடப்பதில்லை. போதுமான டிராக்டர்கள் இல்லை. இருப்பதெல்லாம் அநேகமாக ரிப்பேரில் இருக்கிறது. அது தவிர சில ப்ரைவேட் பார்ட்டீஸுக்கு (Private parties), முக்கியமாக ஆளும் கட்சியினருக்கு வேண்டியவர்களுக்குத் தான் கிடைப்பதாக இருக்கிறது. ஆகவே நான் மீண்டும் சொல்வது, ப்ரயாரிட்டி பிரகாரம் கொடுக்க வேண்டும் என்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, எலக்டிரிக் மோட்டார் வினியோகம். எலெக்டிரிக் மோட்டார் விநியோகம் பற்றி இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு கேள்விக்கு பதில் அளித்தார் அமைச்சர் அவர்கள். இப்பொழுது இரண்டு கம்பெனிகளுக்குத்தான் இது கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும், அந்தக் கம்பெனிகளில் இருந்து கிடைப்பவைகளுக்கு விலையும் அதிகம். டெண்டர் போட்டதாக தெரியவில்லை. அநேக கம்பனிகள் டெண்டர் போட்டும் கிடைக்கவில்லை என்று எனக்கு சரியான தகவல் வந்திருக்கிறது. அதற்கு காரணம் என்ன ? ஏன் எல்லாக் கம்பனிகளில் இருந்தும் டெண்டர் வரவழைத்து இவ்வளவு மோட்டார்கள் இவ்வளவு விலையில் சப்ளை செய்யவேண்டுமென்று கேட்கக் கூடாது ? முதலாவதாக இவைகளின் விலை அதிகம். பின், (starter) ஸ்டார்ட்டர், ஸ்விச் (switch) இவைகள் அகப்படவில்லை. புதுச்சேரி போன்ற இடங்களுக்குச் சென்று அதிக விலை கொடுத்து வாங்கி வருகிறார்கள். அது குறித்தும் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். இம்மாதிரியான வேண்டிய உதவிகள் கொடுத்து வருமான வரி போட்டிருந்தால் நன்ருக இருக்கும். விவசாயிகட்கு வேண்டிய உதவி கொடுக்காமல் இந்த வரியைப் போடுவதால் விவசாயிகள் தான் கஷ்டப்படுவார்கள். அடுத்தபடி, (desilting of tanks) டீ ஸில்டிங் ஆப் டாங்க்ஸ் என்று சொல்கிறோம். சில பிராந்தியங்களில் அது நடக்கிறது. சில பாகங்களில் அது சுறுசுறுப்பாக நடக்கவில்லை. அதற்காக ஒரு பிரத்தியேக டிப்பார்ட்மெண்ட் இருந்த போதிலும் இன்னும் எவ்வளவோ துரிதமாக அவை நடக்க வேண்டும். இப்பொழுது அநேகமாக ப்ராஜக்ட் வேலைகள் பூர்த்தி ஆகிவிட்டது, அநேகமாக. ஆகவே டீ ஸில்டிங் ஆப் டாங்க் கட்டுவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். கூடுதல் என்ஜினியர்களைப் போட்டு வேலைகள் துரிதமாக நடக்க வேண்டும். அடுத்தபடியாக சினிமா டாக்ஸ். சினிமாவிற்கு வரி போடுவதுபற்றி நாங்களும் வருத்தப்படவில்லை. சின்னதுரை அவர்கள் டூரிங் சினிமாவைப் பற்றி சொன்னார்கள், கடைசி வகுப்பாருக்கு கொஞ்சம் குறைக்கலாம் என்று. என் அபிப்பிராயம் ஏழை மக்கள் போகும் டூரிங் சினிமா கடைசி வகுப்பு மட்டில் குறைக்க முடிந்தால் குறைக்கலாம் என்பதுதான் என் அபிப்பிராயம்.

இதைப்பற்றி சொல்லும்பொழுது நமது திராவிட முன்னேற்ற கழகத்திலுள்ள கனம் அங்கத்தினர் ஆசைத்தம்பி அவர்கள் சொன்னார்கள். எல்லா வரிகளும் வடக்கே போகிறது என்று. நான் வரியை போடாமல் நடத்த வேண்டுமென்று சொல்லவில்லை. வரி அவசியம்தான். ஆனால் வரிகளை அதிகமாக கொடுக்கின்ற நாம் மத்திய சர்க்காரிடத்தில் சண்டை போட்டு இன்னும் நம் பங்கை அதிகமாக வாங்க வேண்டும் என்று சொல்லுகின்ருேம். மேலும் அதில் மத்திய சர்க்காரிடத்திலிருந்து கிடைக்கிற பணத்தை கூடிய சீக்கிரமாகவே பெற்று தக்க சமயத்தில் இங்கு செலவு செய்வதில்லை என்பது ஒரு குறையாக இருந்து வருகிறது. ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மத்திய சர்க்காரிலிருந்து water supply-க்காக ஒதுக்கப்பட்டிருந்தது தக்க சமயத்தில் செலவு செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். இது ரொம்பவும் வருத்தப்பட வேண்டிய விஷயம். மத்திய சர்க்கார் கொடுப்பதே கஷ்டம். அதிலும் கொடுத்த ரூபாயை அந்த வருஷத்திற்குள்ளேயே செலவழிக்காவிட்டால் அந்த ரூபாய் வீணுக போய்விடுகிறது. அப்படிபோகவிடாமல் ரூபாயை அதிகமாக மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கி அவர்கள் கொடுக்கும் ரூபாயை



8th March 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

அந்தந்த வருஷத்தில் எவ்வளவு சீக்கிரமாக செலவழிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமே செலவழிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கு இதில் 14 லட்சம் ரூபாய் போகின்றது என்ருல் அது சாதாரணமான காரியமல்ல. இன்று ஒவ்வொரு முனிசிபாலிட்டிக்கும் தண்ணீர் கஷ்டம் இருக்கிறது. வெயில் காலத்தில் கியூவில் பெண்கள் பர்லாங் கணக்கில் தண்ணீருக்காக முனிசிபாலிடிகளில் காத்துக்கொண்டு நிற்கின்றார்கள். முக்கியமாக காஞ்சிபுரத்தில் இந்த கஷ்டம் அதிகமாயிருக்கிறது. இதைப்பற்றி அண்ணு அவர்களும் பேசியிருக்கிருர்கள். இந்த விஷயம் சர்க்காரிடத்தில் மூன்று நான்கு வருஷங்களாக அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. அங்குள்ள முனிசிபாலிட்டியிலிருக்கும் ஜனங்கள் இதற்காக கஷ்டப்படுகிருர்கள். அங்கு ஜனங்கள் படுகிற கஷ்டம் சொல்ல முடியாது. இதைப்பற்றி பரிசீலனை செய்யும்படியாக பல மனுக்கள் கொடுத்தும் இன்று வரையில் ஒரு உத்தரவும் கொடுக்கவில்லை. அதே மாதிரி ஒவ்வொரு முனிசிபாலிட்டியிலும் கஷ்டங்கள் இருக்கிறது. ஆகவே இவைகளை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். காஞ்சிபுரம் முனிசிபாலிட்டியில் இருந்து பாய்ச்சலுக்குப் போகிற தண்ணீரை தடுத்து குடிதண்ணீருக்கு தர வேண்டும் என்று கேட்டிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிருர்கள். நாங்கள் சொல்லுவது பாய்ச்சலுக்கு இடையூறு இல்லாமல் முனிசிபாலிட்டிக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பது தான். இந்த சர்க்காரில் இந்த விஷயம் மூன்று வருஷமாக பரிசீலனையில் இருக்கிறது. இதைப்பற்றி கோர்ட்டில் ரிட் கொடுப்பதற்கு எல்லாம் விவசாயிகள் போனார்கள். ஆகவே இந்த விஷயத்தைப்பற்றி உடனடியாக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஜலக் கஷ்டம் எல்லோருக்கும் இருக்கிறது. அதிலும் டவுன்வாசிகளுக்கு முக்கியமாக வேண்டியிருக்கிறது. அடுத்தபடியாக சிறு சேமிப்பு திட்டத்தைப்பற்றி பல பேர்கள் எனக்கு முன்பு பேசினார்கள். அதில் வற்புறுத்தல் அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். எல்லா டிப்பார்ட்மெண்டு உத்யோகஸ்தர்களும் மக்களிடம் போய் அவர்களை கசக்கி பிழிகிருர்கள் என்றுதான் நாம் சொல்லவேண்டியிருக்கிறது. நமக்கு ஐந்தாண்டு திட்டம் நிறைவேற வேண்டும் என்பதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. ஆனால் வரிக்கு மேல் வரி போட்டு, மாகாணத்தில் மக்கள் எல்லோரும் பலவிதமாக கஷ்டப்படுகிருர்கள். சில பிராந்தியங்களில் ஜலம் கிடைக்காத காரணத்தால், வறட்டு பிரதேசங்களில் விளைவு இல்லாததினல் மக்கள் கஷ்டப்பட்டு கடன்பட்டு இருக்கிருர்கள். மேலும் சர்க்கார் கடன் தவணைகளை நிறுத்தி ஒரே தடவையாக வசூல் செய்து வருவதின் காரணமாகவும் மக்கள் எல்லோரும் கஷ்டப்படுகிருர்கள். இந்த சிறு சேமிப்பு திட்டத்திற்கு தானக கொடுக்கக்கூடியவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம். ஆனல் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மூலமாக கசக்கிப் பிழிவது என்ருல் அது ரொம்பவும் வருந்த தக்க விஷயம். சேலத்திலிருந்து வந்திருக்கின்ற கனம் அங்கத்தினர் கந்தசாமி முதலியார் அவர்கள் மக்களை கசக்கி பிழிவது இல்லையென்றும், மக்கள் திருப்திகரமாக கொடுக்கிருர்கள் என்று சொன்னார்கள். அதை கேட்ட பிறகு எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லாவிலிருந்து வந்திருக்கின்ற கனம் ராமசாமி பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார்கள், இந்த சிறு சேமிப்புக்காக அதிகாரிகளுக்கு எல்லாம் circular அனுப்பியிருப்பதாகவும், வேண்டுமென்ருல் circular யை காட்டுகின்றேன் என்றும் சொன்னார்கள். இவர்களுக்கு, காங்கிரஸ் கட்சிக்கு ஆர்கனைஸேஷன் (organization) இருக்கிறது. காங்கிரஸ் கமிட்டிகள் இருக்கின்றன. இவைகள் மூலம் ஆவடி காங்கிரசுக்கு, காங்கிரஸ் தேர்தலுக்கு எல்லாம் பணம் வசூல் செய்தார்கள். இந்த ஆர்கனைஸேஷன் மூலமாக இதற்கும் வசூல் செய்யலாம். சர்க்கார் அதிகாரிகளை எதற்காக உட்படுத்த வேண்டும். அவர்கள் மூலமாக மக்களுக்கு கொடுமையை விளைவிக்கக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். தவிர இதில் ஒரு டிப்பார்ட்மெண்ட் அதிகாரி கேட்டால் போதும். ஆனல் ஒரே கிராமத்திற்கு எல்லாத் துறைகளிலுமுள்ள அதிகாரிகளும் போகிருர்கள். P.W.D. அதிகாரிகள், மைனர் இரிகேஷன், கோவப்பரேட்டிவ் டிப்பார்ட்மெண்ட் அதிகாரிகள், இவர்கள் எல்லாம் பல விதத்தில் போய் கொடுமைப்படுத்துகிருர்கள். சப்-ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் போய் ஒரு document

பதிவு செய்ய வேண்டும் என்றால் 10 ரூபாய் இந்த சேமிப்புத் திட்டத்திற்கு கொடுத்தால்தான் ரெஜிஸ்டர் செய்வேன் என்று ரிஜிஸ்ட்ரார் சொல்லுவதாக கேள்விப்படுகிறேன். இன்னும் சில இடத்தில் கொடுங்கோல் மன்னனுடைய ஆட்சிதான் நடக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே இந்த முறையை மாற்றி அதிகாரிகள் உதவி இல்லாமல் நல்ல முறையில் தானாக கொடுப்பவர்களிடம் வசூல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகையினால் சர்க்கார் உத்தியோகஸ்தர்களை இம்மாதிரியான காரியங்களுக்கு உபயோகிக்காமல் கட்சியின் மூலமாகவும், காங்கிரஸ் அங்கத்தினர்கள் மூலமாகவும், மற்றபடி எம்.எல்.ஏ.-க்கள் மூலமாகவும் இவைகளை வசூலிக்கலாம். ஆகவே இந்த ஆபீசர்கள் மூலமாகவே வசூலிப்பதை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக பஞ்சாயத்து எலக்ஷன் பற்றி சொல்லப்பட்டது. பஞ்சாயத் ராஜ்யம் ஏற்படவேண்டியதுதான். ஆனால் ஜில்லா போர்டை உடனே ஒழித்து இருக்க வேண்டிய அவசியமில்லை. இதைப்பற்றியுள்ள வெள்ளை அறிக்கை பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இந்த சட்டம் வருவதற்கு ஒரு வருஷம் ஆகும். ஜில்லா போர்டுகளை எல்லாம் மூடி நாலைந்து மாதங்களாகி விட்டன. பஞ்சாயத்து எல்லாம் நல்ல முறையில் நடைபெறுமா என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். பஞ்சாயத்துகள் எல்லாம் சில இடங்களில் நல்ல முறையில் நடக்கவில்லை. பஞ்சாயத்து ராஜ்யம் வேண்டியதுதான். அதற்கு இரண்டொரு பிராந்தியங்களில் ஜில்லா போர்டுகளை எடுத்துவிட்டு பஞ்சாயத் புது முறையை ஏற்படுத்தி இவைகள் இரண்டில் எந்த முறைகளில் எதை ஏற்படுத்தினால் நல்ல முறையில் நடக்கும் என்பதைப் பற்றி அறிந்து பஞ்சாயத்து முறை திருப்திகரமாக இருந்தால் ஜில்லா போர்டுகளை ஒழித்துவிட்டு பஞ்சாயத்து முறைகளை வைத்துக் கொள்ளலாம். நான் பஞ்சாயத்து ராஜ்யம் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஜில்லா போர்டுகளை தொடர்ந்து நடத்தி தேர்தல் வந்தால் காங்கிரஸ் ஆட்சிக்கு ஏதாவது கெடுதல் வந்து விடுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஜில்லா போர்டு முறைகளைப்பற்றி ஆந்திர பிரதேசத்திலும் இதையேதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து முறைகளை எந்த முறையில் கொண்டு வந்தால் நல்ல முறையில் நடைபெறும் என்று பார்த்து கொண்டு வர வேண்டும். Co-operative department விஷயத்தை எடுத்துக் கொண்டால் சில எலக்ஷன் நடந்தது. சில சூப்பர்வைஸர்கள் எல்லாம் மும்முரமாக இதில் வேலை செய்தார்கள். கூட்டுறவு ஸ்தாபனங்களில் அரசியலை புகுத்திவிட்டால் அந்த ஸ்தாபனம் நல்ல முறையாக வேலை செய்ய முடியாது. இவைகளை எல்லாம் நல்ல முறையில் நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

நேற்று செங்கல்பட்டு ஜில்லா சர்க்கரைத் தொழிற்சாலை அமைப்பதைப் பற்றி கனம் அங்கத்தினர் ஏழுமலை அவர்கள் சொன்னார்கள். நான் அதைப்பற்றி இவ்விடத்தில் பேசுவதாக இல்லை. அவர் சில அவதூறான புகார்கள் சொன்னதன் காரணமாக, அதற்கு பதில் சொல்ல வேண்டுமென்ற காரணத்தினால் பதில் சொல்ல ஆசைப்படுகிறேன். அந்தத் தொழிற்சாலை ஒரு கூட்டுறவு ஸ்தாபனம். மதுராந்தகம் பிராந்தியத்தில் வைக்க வேண்டும் என்று ஏழு லட்ச ரூபாய் சேர்த்தோம். தண்ணீர் பற்றி பரிசீலனை செய்ய வேண்டிய கட்டம் வந்தது. நாங்கள் சில இடங்களைக் காட்டினோம். பரிசீலனைக்காக வந்தவர்கள் சரியாகப் பரிசீலனை செய்யவில்லை. இரண்டொரு இடங்களில் பரிசீலனை செய்துவிட்டு நாங்கள் காட்டிய மற்ற முக்கியமான இடங்களை பரிசீலனை செய்யாமல் விட்டு விட்டுப் போய் விட்டார்கள். யார் சொன்னார்கள் என்று படாளம் என்ற இடத்தில் பரிசீலனை செய்தார்கள். அவ்விடத்தில் பாரை அகப்பட்டு விட்டது. அப்படி இருக்கும்போது அவ்விடத்தில் சர்க்கரை ஆலை எப்படி வைப்பது சர்க்கரை ஆலை வைக்க வேண்டுமென்றால் தண்ணீர் அவசியம். அந்த அவசியமான தண்ணீர் கிடைக்காத இடத்தில் ஆலை வைக்க விரும்புவோமா? என்று கேட்கிறேன். ஆலை நன்றாக நடக்க வேண்டும். மக்கள் பணம் கொடுக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையை நல்ல இடத்தில் கட்ட வேண்டியதில் எங்களுக்கு அக்கறை இல்லையா என்று கேட்கிறேன். தொழில் அமைச்சர் மூன்றாவது இடம் பார்த்துக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்



அந்தப் பிராந்தியத்தைச் சுற்றிப் பார்த்துச் சொன்னோம். நேற்று கடைசியாக இரவு பகலாக தண்ணீர் கிடைக்கக்கூடிய ஒரு இடத்தைப் காண்பித்தோம். ஜலம் கிடைக்கும் இடத்தில் ஆலை வைக்க வேண்டுமென்று சொல்வதில் நானும் ஒருவன். தண்ணீர் இல்லாத இடத்தில் வைக்க வேண்டுமென்று ஒரு நாளும் சொல்ல மாட்டேன். ஏழுமலை அவர்களுக்கு விவரம் தெரியாது. யாரோ சொல்லிக் கொடுத்துச் சொல்லியிருக்கிறார். அது அவதூறான விஷயம்.

இப்போது கைத்தறித் துணி தேக்கத்தைப்பற்றிச் சொன்னார்கள். 4 p.m.
அதிகத் தேக்கம் கூட்டுறவுத் தொழிலுக்கு ஒரு பிரச்னையாக இருக்கிறது. அந்தத் தேக்கத்தைக் குறைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அதை உடனே, கூடிய சீக்கிரம் எடுக்க வேண்டுமென்று சொல்லுகிறேன்.

அடுத்தபடியாக ஐந்தாண்டுத் திட்டம். ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றுவதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபனையில்லை. ஆனால் ரஷ்யாவில் என்ன நடந்தது என்று பார்த்தால், 1917 யுத்தம் போய் கம்யூனிஸ்ட் கவர்ன்மெண்ட் வந்ததிலிருந்து 28-ம் வருஷம் வரையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி கவனிக்கவில்லை. ஏன் ஆரம்பிக்கவில்லையென்றால் அவர்களுக்குப் போதுமான ஆபீஸர்கள் வேண்டியிருந்தது. நாட்டிற்குச் சரியான உத்தியோகஸ்தர்கள் வேண்டியிருந்தது. இல்லாமல் எந்தத் திட்டம் போட்டாலும் வெற்றிகரமாக நடக்காது என்று தெரிந்து கொண்டுதான் 1928-ம் வருஷம் வரையில் திட்டத்தை நிறுத்தி வைத்துக் கொண்டு, கடைசியில் 28-ம் வருஷத்திற்குப் பிறகு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். 1933-ம் வருஷம் முதல் ஐந்தாண்டு திட்டம் முடிந்தது. அது 1928-ல் ஆரம்பிக்கப்பட்டபோது 2,000 ரூபிளுக்குப் (Rouble) போட்டு ஆரம்பித்தார்கள். அதில் 1,200 ரூபிள் ஹெவி இண்டஸ்ட்ரீஸுக்கும், 400 ரூபிள் (Rouble) கன்ஸ்யூமர் குட்ஸுக்கும் (consumer goods) போட்டார்கள். அதனால் கஷ்டம் ஏற்படவில்லை, பஞ்சம் ஏற்படவில்லை, பிரைஸ் அட்ஜஸ்டாயிற்று. நாம் இப்போது ரஷ்ய மெதேடைக் காப்பியடிக்கிறோம். அவர்கள் 11 வருஷம் சும்மாயிருந்து டெக்னிகல் பர்ஸோனெல் தயார் செய்தார்கள். இங்கே ஆள் கிடையாது. இங்கேயும் ஐந்தாண்டுத் திட்டம் போட்டிருக்கிறோம். சுதந்திரம் வந்தவுடனேயே ஐந்தாண்டுத் திட்டம் போட்டிருக்கிறோம். ஆரம்பித்த பிறகு போதுமான ஆட்கள் கிடையாது. அதுவும் கன்ஸ்யூமர் குட்ஸ் தயாரிக்காமல் ஹெவி இண்டஸ்ட்ரீஸில், ஐந்து, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகுதான் பலனளிக்கக் கூடிய இண்டஸ்ட்ரீஸில் பணத்தைப் போட்டிருப்பதால், அதற்கு வேண்டிய மெஷின்கள் வருவதால், பொருளாதார நிலைமை குன்றி விட்டது. முக்கியமான நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு சாமான்கள் வரவேண்டியது அவசியம். கன்ஸ்யூமர் குட்ஸ் வேண்டிய அளவு தயாரிக்காத காரணத்தினால் கஷ்டப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் நம் அந்நியச் செலாவணி குறைந்துவிட்டது. இங்கே டேக்ஸபிள் (taxable capacity) கெபேஸிடிக்குமேல் டேக்ஸ் போட்டு கஷ்டம் ஏற்படுகிறது பல துறைகளில் கஷ்டம். மற்ற தேசங்களைப் பார்த்தால், சமீபத்தில் ஒரு பத்திரிகையில் பார்த்தேன், நியூஸிலந்தில் வரிகளை எடுத்து வருகிறார்கள். பொருளாதார நிலை நன்றாக இருப்பதால் வரிகளைக் குறைக்கிறார்கள். இவ்விடத்தில் என்ன செய்கிறோம். சோஷலிஸ்டிக் பேட்டர்ன் என்று சொல்லி மேலே இருக்கின்றவர்களை கீழே இழுக்கப் பார்க்கிறார்களே தவிர, கீழே உள்ளவர்களை மேலே உயர்த்த வேண்டியதைச் செய்யவில்லை. வரி விலக்குச் சலுகைகள் கொடுக்க ஏற்பாடு செய்யவில்லை. அதனால் கஷ்டப்படுகிறோம். இதற்குப் பரிகாரம் என்ன. நாம் இப்போது யூனியன் கவர்ன்மெண்டோடு சிக்கியிருக்கிறோம். அதனாலே பல வித கஷ்டங்கள். இப்படியே போனால் என்னவாகும். சியாங்-கை-ஷேக் சர்க்கார் மாதிரி வந்துவிடுமோ என்ற கட்டத்தில் இருக்கிறது. இது மாதிரியெல்லாம் இல்லாமல் நல்ல முறையாக நடக்க வேண்டுமானால் அன்னியச் செலாவணியைப் பெருக்க ஏற்றுமதி செய்ய வேண்டிய வழி வகைகள் செய்ய வேண்டும். இவைகளையெல்லாம் சொல்லும்போது ஏதோ எதிர்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் என்று விட்டுவிடக் கூடாது. எதிர் கட்சியைப்பற்றி கனம் அண்ணாதுரை

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [8th March 1958

சொன்னார்கள். கனம் விவசாய அமைச்சர் எதிர் கட்சியே பிரயோசனம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அமைச்சர்கள் எங்களை நிபுணர்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. அமைச்சர்களிடத்திலிருந்து எங்களுக்கு ஸர்டிபிகேட் வேண்டியதில்லை. மக்கள் பார்த்துச் சொன்னால் போதும். அவ்விடத்திலிருந்து புகழ் மாலை வேண்டியதில்லை என்று சொல்லுகிறேன். (ஒரு குரல்: எப்போது சொன்னார்.) மூன்று நாட்களுக்கு முன்னால் சொன்னார். பத்திரிகையில் எழுதினார். அதனால் ஒன்றும் குறைந்து போகவில்லை. ஆனால் அமைச்சர்களுடைய திறமையை நான் சொல்ல வேண்டியதில்லை. மக்கள் பார்த்துக் கொள்வார்கள். இவ்விடத்தில் அம் மாதிரி ஆட்சி நடக்கிறது. அது எப்படியிருந்த போதிலும் இப்போது எல்லா அதிகாரங்களும் சென்ட்ரல் கவர்ன்மெண்டிடம் இருக்கிறது. அதாவது டிஸெண்ட்ரலைஸேஷன் ஆப் பவர்ஸ் (decentralization of powers) என்று சொல்வார்களே அந்த மாதிரி அதிகாரங்களை டிஸெண்ட்ரலைஸ் பண்ண வேண்டும். இப்போது ஸெண்ட்ரலைஸ் பண்ணப்பட்டிருக்கிறது. டிஸெண்ட்ரலைஸேஷன் கிடையாது. அதாவது பவர் பரவலானதாக இல்லை. மத்திய அரசாங்கத்திடம் சிக்கிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு இடத்திலும் ஸெண்ட்ரல் கவர்ண்மெண்டிடம் அதிகாரம் வைத்துக்கொண்டிருப்பதால் இவ்விடத்தில் ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. இப்படியே போய்க் கொண்டிருந்தால் நமக்கு எப்படி முன்னேற்றம் இருக்குமென்பது சந்தேகிக்குமாறு இருக்கிறது. நாங்கள் அநேக விதமான யோசனைகளைச் சொல்லியிருக்கிறோம். எதிர் கட்சிக்காரர்கள் சொன்னார்கள் என்பதற்காக எதையும் விட்டுவிட வேண்டாம். எதை எதை எடுத்துக் கொள்ளலாமோ அதை எடுத்துக் கொண்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மத்திய சர்க்காரிடமிருந்து எவ்வளவு அதிகாரங்களை வாங்க முடியுமோ அவ்வளவு அதிகாரங்களை வாங்க வேண்டும்.

என்னுடைய உரையை முடித்துக் கொள்வதற்கு முன்பு ஒரு வார்த்தையைச் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் பேப்பரில் பார்த்தேன் . . .

Mr. Finance Minister, please hear me.

The Hon. Finance Minister turned to the side of the hon. Leader of the Opposition.

DEPUTY SPEAKER: The hon. Leader of the Opposition should address the Chair and not the Hon. Minister.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, it is very strongly rumoured that a Minister will go to the Centre from the South. If that lot falls upon our State, I would consider it a fitting tribute to Madras and Madras would benefit by it. But I would request that if any one from here goes there, he must go there not as a stenographer, but as a Member of the Cabinet with Cabinet Rank, so that they may come out with flying colours. Madras has produced eminent men in the national and international life. Therefore, no one from here should go to Delhi as stenographers, but only as Members of the Cabinet Rank.

*THE HON. SRI C. SUBRAMANIAM: உதவி சபாநாயகர் அவர்களே, சென்ற ஆறு நாட்களாக பல அங்கத்தினர்கள் இந்த விவாதத்தில் பங்கு எடுத்துக்கொண்டு, வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி நல்ல முறையில் பரிசீலனை செய்து பல்வேறு குறைகளையும், அவைகளை எப்படித் தீர்ப்பது என்பதைப் பற்றியும், அவரவர்களுக்குத் தோன்றிய பரிகாரங்களையும் சொல்லியிருக்கிறார்கள். கனம் சபாநாயகர் அவர்கள் சொன்னதுபோல, நான் 100-வது அங்கத்தினராக இப்பொழுது பேசுகிறேன். எப்போதும் 100-க்கு பகைமை உண்டு, நான் "Leader of the House" என்கின்ற காரணத்தினாலே



8th March 1958] [Sri C. Subramaniam]

அந்தப் பெருமையை எனக்கு கொடுத்திருக்கிறார்கள். கணக்கு வைக்காமலேயே 100-வது ஸ்தானம் வருகிற மாதிரி ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

(Mr. Speaker in the Chair.)

பல அரசியல் கட்சிக்காரர்களும் அவரவர்கள் கோணங்களிலிருந்து இந்த பட்ஜெட்டைப் பரிசீலனை செய்திருக்கிறார்கள். கடைசியாகப் பேசிய தேசீய ஜனநாயக காங்கிரஸ் தலைவர் அவர்கள், "அவசரப்பட்டுப் பிரயோஜனம் இல்லை, திட்டம் எதற்காக வேண்டும், அதெல்லாம் சாவகாசமாகப் பார்த்துக்கொள்ளலாம், 'வரி' போட்டு வீணாக மக்களைக் கஷ்டப்படுத்துவானேன், இருப்பதைச் சரியாகச் செய்துகொண்டிருந்தால் போதுமே" என்ற யோசனைகளை சர்க்காருக்குக் கூறி, வீணாகக் காரியங்களைச் செய்து, அந்தக் காரியங்களிலே குறை இருக்கிறது என்ற தொல்லையை வருவித்துகொள்வானேன் என்று சொன்னார்கள். அவர்களுடைய உப தலைவர் ஸ்ரீ ராமசாமி பிள்ளை பேசியபோது, எனக்கு ஒன்றுதான் ஞாபகத்திற்கு வந்தது. பெண்கள் "புகுந்த இடத்தைப் பற்றிப் புகார் சொல்லி, பிறந்த இடத்தைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிக்கொள்வார்கள்" என்று சொல்வதுண்டு. அதேமாதிரி, ராமசாமி பிள்ளை அவர்கள் பிறந்த இடமாகிய திருவாங்கூரைப் பற்றி பெருமையாகச் சொல்லி, புகுந்த இடமாகிய சென்னையைப்பற்றிப் புகார் சொல்லியிருக்கிறார்கள். (சிரிப்பு.) பெண்களுக்கு வேண்டுமானால் அது உகந்ததாக இருக்கலாம். என்ன இருந்தாலும், இங்கு இருக்கக்கூடிய நாங்கள் எல்லோரும் கேரளாவிலே உள்ள மந்திரிகளைப்போல் அவ்வளவு உயர்ந்தவர்களாகவோ, அறிவாளிகளாகவோ, ஆகமுடியாது. ஆகவே, இப்பொழுது இங்கு சேர்ந்திருக்கின்ற காரணத்தினாலே, இங்கு இருக்கக் கூடிய நிலைமையை அனுசரித்து இனிமேல் யோசனைகள் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள், அடிப்படையிலே தனக்கு கருத்து மாறுபாடு இருப்பதை வலியுறுத்தி, அந்தக் கருத்து மாறுபாட்டைத் தெரிவிப்பதிலும் கூட, அவர்கள் என்ன மனப்பான்மையுடன் அந்தக் கருத்து மாறுபாட்டை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றியும் பேச்சு முடிவிலே வெளியிட்டார்கள். "பந்த் அவர்கள்" சுயராஜ்யம் கேட்டதற்கும், "கிரிக்" அவர்கள் அது வெறும் கனவு என்று சொன்னதற்கும் இங்கேயுள்ள நிலைமையை ஒப்பிட்டுக் கூறினார். எங்களைப்போல இங்கே உட்கார்ந்திருப்பவர்கள் எல்லாம் கிரிக்கைப்போன்று வெளிநாட்டவர்கள் என்று அவர்கள் மனதிலே அபிப்பிராயம் வைத்துக்கொண்டிருப்பதில் எனக்குக்கூட சந்தோஷம்தான். அப்போது பந்த் அவர்களுக்கு கிரிக் பதில் சொல்லியிருக்கலாம். ஆனால், இங்கு பதில் சொல்லுவது, ஸ்ரீ காமராஜும், சுப்ரமணியமும் என்பதை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு.) அவர்களுடைய "திராவிடஸ்தான்" வாதத்திற்குக் கடைசியில் பதில் சொல்லிக்கொள்ளலாமென்று நினைக்கிறேன். மற்ற விஷயங்களை முதலிலே பேசவேண்டுமென்பது என்னுடைய ஆசை.

கம்யூனிஸ்ட் தலைவர் "திட்டம் போடுவது எல்லாம் சரிதான், திட்டமும் சரிதான், ஆனால் அந்தத் திட்டத்தை நடத்துவதற்கு உங்களுக்குப் போதிய ஆற்றல் இல்லை, சக்தி இல்லை, சக்தியைப் பெற்று வந்து நல்ல முறையில் செயலாற்றவேண்டும்" என்ற அரிய புத்திமதியைக் கூறினார்கள். அதற்கு முன்பு பேசிய ஸ்ரீ பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் "இது முதலாளிகளுடைய ராஜ்யம், இங்கே தொழிலாளர்களுக்கு என்ன நடக்கப்போகிறது" என்கின்ற முறையில் மனம் ஒடிந்துபோய், தொழிலாளர்களின் தலைவர்களுக்கு இங்கே வேலையில்லை என்பது போல் பேசி உட்கார்ந்துவிட்டார். ஸ்ரீ சின்னத்துரையை இப்பொழுது இங்கு காணோம். "இது என்ன ஸோஷலிஸ்டு பட்ஜெட்டா, சோஷலிஸம் கொஞ்சம் கூட இதில் காணோமே, இதற்கு மேல் பேச என்ன இருக்கிறது, ஸோஷலிஸ வாடையே இல்லாத பட்ஜெட்டைப் பற்றிப்பேசி என்ன பிரயோசனம்" என்கிற முறையில் மனம் நொந்து பேசி உட்கார்ந்து விட்டார். (இந்த சமயத்தில் ஸ்ரீ சின்னதுரை அவர்கள்

சபைக்குள் வந்தார்கள்.) ஸோஷலிஸமே இல்லை என்று நீங்கள் சொன்னதற்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தேன். திரு. கருத்திருமன் இருந்தால் கம்பராமாயணத்திலிருந்து கவி எடுத்துச் சொல்வார்கள். சீதையும் ராமனும் காட்டிற்குப் போய்க்கொண்டிருந்தார்களாம். பத்து அடி போனவுடன் "காடு வந்துவிட்டதா ?" என்று சீதை கேட்டார்களாம். காடு எவ்வளவு தூரம் இருக்கிறது, எவ்வளவு கடினமான பாதையில் செல்ல வேண்டும் என்பதை சீதை அறியவில்லை. அந்தமாதிரி அவர்கள் கேள்வியைப் போட்டார்கள். "ஸோஷலிஸ்ட் என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் கூட, அந்த ஸோஷலிஸம் எங்கே இருக்கிறது" என்று கேட்டார்கள். அதை அடையக்கூடிய பாதை எவ்வளவு கடினமானது என்பதை உணராத காரணத்தினாலே, இப்பொழுதே சுப்ரமணியம் கொண்டுவந்த பட்ஜெட்டிலே ஸோஷலிஸத்தைக் காணோமே என்று மனம் நொந்துகொள்ள ஆரம்பித்து விட்டார்கள் என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் பல்வேறு அங்கத்தினர்கள், தனிப்பட்ட அங்கத்தினர்கள், அவரவர்களுக்கு இருக்கும் குறைகளைக் காட்டி, அந்தக் குறைகள் எல்லாம் இன்னும் நீங்கவில்லை என்ற அடிப்படையில் பேசி திட்டத்தைக் குறை கூறினார்கள். இவைகள் எல்லாவற்றிற்கும் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், பட்ஜெட்டைப் பற்றிக் குறை கூறுவதற்கு முன்பு, பட்ஜெட்டை நல்ல முறையில் படித்து, அதிலே இருக்கக் கூடிய விவரங்களைத் தெரிந்து பேசவேண்டுமென்று இப்பொழுது அங்கத்தினர்கள் உணர்ந்து வருவதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதிலும் முக்கியமாக திராவிட முன்னேற்ற கலைஞர் ஸ்ரீ கருணாநிதி பெரிய அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறார் என்பதை பார்க்கிறேன். சென்ற ஆண்டு பட்ஜெட் உரையைப் படிக்காமலேயே அவர் பேச சந்தர்ப்பம் நேரிட்டது. ஆனால் இந்த ஆண்டு உரையிலே 6 பக்கங்களையாவது படித்திருக்கிறார்கள் என்பதை நிரூபிக்க, 6-வது பக்கத்திலே உள்ள அச்சுப் பிழையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் படித்திருந்தால், அதற்கு மேலுள்ள அச்சுப் பிழைகளையும் பற்றித் தெரிந்து கொண்டிருப்பார்கள். அடுத்து இருக்கக்கூடிய அச்சுப்பிழைகளையும் எடுத்துக்காட்டியிருப்பார்கள். ஆகையால் 6 பக்கங்களோடு நிறுத்திக் கொண்டுவிட்டார்கள் என்று நினைக்கிறேன். அடுத்த ஆண்டு, இதைவிட இன்னும் கொஞ்சம் முன்னேற்றமாக, பாதி பட்ஜெட் உரையையாவது படித்துக்கொண்டுவந்து பேசுவார்கள் என்று நினைக்கிறேன். இருந்தாலும் கூட, இந்தத் தடவை இந்த பட்ஜெட் உரையில் இரண்டொரு அச்சுப் பிழைகள் இருப்பது குற்றம்தான். அதற்காக இனிமேல் சபையில் சமர்ப்பிப்பதற்கு முன்னதாகவே, "புரூபை" க்கூட நானே பார்த்துவிடுவது என்று வைத்திருக்கிறேன். இந்தத் தவறுகள் என்ன காரணத்தினால் ஏற்பட்டிருந்தபோதிலும், பட்ஜெட் உரையில் இதைப்போன்றதொரு பிழை ஏற்படுவது தவறு என்பதை ஒத்துக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். வாதத்திற்காக இதைச் சொல்லவில்லை. உண்மையிலேயே உணர்ந்து சொல்லுகிறேன்.

இன்னொரு விஷயம். அதில் நான் சொல்லுவதைப் புரிந்துகொள்ளாமல் சொல்லுகிறார்களோ, அல்லது வாதத்திற்காகச் சொல்லுகிறார்களோ, தெரியவில்லை. "எதிர்க் கட்சிக்காரர்களுக்கு புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லை, சர்க்கார் கட்சிக்காரர்கள் புகார் சொல்லுகிறார்கள், நாங்கள் எப்படிப் புள்ளி விவரம் கொடுக்கமுடியும்" என்பதைப்பற்றி சொன்னார்கள். நாங்களும் ஒரு காலத்தில் சர்க்காருக்குப் புறம்பாக இயங்கி இருக்கிறோம்; சர்க்காரிலேயே புள்ளி விவரங்கள் எடுப்பது எவ்வளவு கஷ்டம் என்பதை உணர்ந்து இருக்கிறோம். எதிர்க் கட்சிக்காரர்கள் புள்ளி விவரங்கள் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. தனிப்பட்டவர்களுக்கு புள்ளிவிவரங்கள் சேகரிக்கக் கூடிய சௌகரியங்கள் இல்லையென்பதை நான் உணர்வேன். நான் சொல்லி வந்தது என்னவென்றால், இருக்கக் கூடிய புள்ளி விவரங்களைத் தெரிந்துகொண்டு, அந்தப் புள்ளிவிவரங்கள் அடிப்படையில் பேசவேண்டும் என்பதைத்தான் அடிக்கடி தெரிவித்தேன். புதுப்புள்ளிவிவரங்கள் கொடுக்க வேண்டுமென்று சொன்னது கிடையாது.





4 P.M.

ஒரு சில அங்கத்தினர்கள், புள்ளி விவரங்களை நல்ல முறையில் அலசிப்பார்த்து, நல்ல ஆலோசனைகள் சொல்லியிருப்பது வரவேற்கத்தக்க அம்சம். பட்ஜெட் உரை "சப்பை" யாக இருக்கிறதே என்று முக்கியமாக திராவிட முன்னேற்ற கழக அங்கத்தினர்கள் சொன்னார்கள். அதைப் பற்றி நான் ஆச்சரியப்படவில்லை. அவர்கள் சினிமாவுக்கு கதை எழுதிப் பழகியவர்கள். கதை புதிது புதிதாகவும், புதிய சீன்களுடனும், புதிய காட்சி ஜோடனைகளும் இருந்தால்தான் சினிமா சோபிக்கும். அதே மாதிரி பட்ஜெட் உரையும் வருஷா வருஷம் மாறிக் கொண்டு இருக்கும் என்று நினைக்க வேண்டாம். பட்ஜெட் உரை சப்பையாகத்தான் இருக்கும். மக்கள் கஷ்டப்பட்டு முன்னேறிக் கொண்டிருக்கும்பொழுது, நாம் எடுத்துக் கொண்டிருக்கும் காரியங்கள் மிகவும் கஷ்டமானவை. அதில் பல தவறுகள் இருக்கலாம். ஆகவே பட்ஜெட் உரை சப்பையாகத்தான் இருக்கும். கசப்பாகவும்கூட இருக்கும். ஒருவேளை புதிய குரலும், புதிய முகமும் இருந்தால் வேறு விதமாக இருக்கலாம். ஆனால் அது நான் செய்யக்கூடிய காரியம் அல்ல. அது முதலமைச்சர் பார்த்துச் செய்ய வேண்டிய காரியம். இந்தப் பட்ஜெட்டைப் பரிசீலனை செய்யும்போது, இந்த பட்ஜெட்டை மட்டும் பார்த்து ஒரு முடிவு செய்ய முடியாது. நாம் இப்போது திட்ட அடிப்படையில் வேலை செய்து வருகின்றோம். இந்த வருஷத்திய பட்ஜெட் தனிப்பட்டு நிற்கக்கூடிய பட்ஜெட் அல்ல. ஐந்து வருஷத்திற்கு, அதாவது 1956–57 வருஷத்திலிருந்து, ஐந்து வருஷத்திற்கு தொடர்ந்து என்ன என்ன வேலைகளை செய்ய முடியும், எப்படி திட்டமிட்டு செய்ய முடியும் என்பதை— இப்போது அல்ல—2–3 வருஷங்களுக்கு முன்பாகவே கணக்கிட்டு ஆலோசனை செய்து திட்டவட்டமாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு ஏற்ப ஒவ்வொரு வருஷ பட்ஜெட்டும் தயாரிக்கப்படுகிறது. பட்ஜெட்டில் எல்லா விவரங்களையும் சொல்லவில்லையே என்று சிலர் சொன்னார்கள். நம்முடைய லட்சியம் என்ன ? எந்த எந்த திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்ட அடிப்படையில் இந்த பட்ஜெட் செல்லுகின்றதா, அவைகளை நிறைவேற்றி வைக்கின்ற முறையில் நாம் முன்னேறிக் கொண்டிருக்கின்றோமா என்று அந்த அடிப்படையில்தான் நாம் விவாதம் செய்ய வேண்டும். ஆகையால் தனிப்பட்ட முறையில் விவாதம் செய்வது பொருந்தாது. ரஷியா பல ஆண்டுகளாக திட்டத்தையே நினைக்காமல், பல காரியங்களை செய்து முடித்த பின்னர்தான், திட்டம் வகுக்கும் கட்டத்துக்கு வந்தார்கள் என்று சிலர் சொன்னார்கள். ஆம். சரித்திரத்தால் ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகளை, அதன் மூலமாக ஏற்படும் படிப்பினைகளை எடுத்துக்கொண்டால்தான் நாம் முன்னேற முடியும். ரஷியாவைப் போல் நாமும் இருபது வருஷம் காத்திருக்கலாம் என்று சொன்னால் சரியாகாது. அமெரிக்காவில் 250 வருஷங்களுக்குப் பிறகுதான் சுபிட்சம் அடைய முடிந்தது. ஆகையால் நாமும் 250 வருஷங்கள் காத்திருந்துதான் அந்த நிலைமையை அடையவேண்டும் என்று சொன்னால் இன்றைக்கு இருக்கும் நிலையில் பொருந்தாது. இன்றைக்கு பட்டினியாக இருக்கக்கூடியவர்கள், அரை நிர்வாணமாய் இருக்கக்கூடியவர்கள், வீதிகளில் படுத்து உறங்கக்கூடியவர்கள், காடுகளிலும் மேடுகளிலும் திரிந்து கொண்டிருப்பவர்கள், நோய்வாய்ப்பட்டால் இயற்கைதான் காப்பாற்ற வேண்டும் என்ற நிலையில் இருப்பவர்கள்—இவர்களை 20 வருஷங்களுக்கோ அல்லது 250 வருஷங்களுக்கோ காத்திருக்கும்படி சொன்னால் அவர்கள் காத்திருக்க முடியாது. ஆகையால் இன்றைக்கு அவசரப்படுகிறோம் என்றால் சௌகரியமாய் இருப்பவர்கள், மேலும் சௌகரியம் அடையவேண்டும் என்பதற்கு அல்ல. மக்களிடையே இருக்கக்கூடிய குறைகளைப் போக்கவேண்டும் என்கிற அவசரம்தான். சர்க்கார் அவசரப்படுகின்றனர் என்று சிலர் குறை கூறுகின்றனர். இன்று இருக்கும் நிலையில் அவசரப்பட்டுத்தான் தீரவேண்டும். ஆகவே இன்றைக்கு காரியங்கள் செய்து முடிக்கும்போது என்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். 100 வருஷங்களாக அடிமையாக இருந்த காரணத்தால் நாட்டின் செல்வ வளம் குன்றி இருக்கிறது. உலகத்தில் உள்ள நாடுகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால் இந்திய நாட்டைப் போல் வறுமை எந்த நாட்டிலும் கிடையாது. தமிழ் நாட்டுப் பகுதி மட்டும் அல்ல. பல பகுதிகளிலும், உலகத்

திலேயே ஒப்பிடத்தக்கமுடியாத அளவுக்கு வறுமை அதிகமாக இருக்கிறது. இதை அவசியம் போக்கத்தான் வேண்டும். நாட்டின் செல்வ வளத்தை அதிகமாக்காமல் இந்த வறுமையைப் போக்க முடியாது. ஆகவே இருக்கக்கூடிய வசதிகளை வைத்துக்கொண்டு எப்படி உற்பத்தியைப் பெருக்குவது என்பதுதான் முதல் பிரச்னை. அப்படி உற்பத்தி பெருகவேண்டும் என்றால், நல்ல சாதனைகளை, பெரிய சாதனைகளை அமைத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. சிறந்த சாதனைகளால்தான் உற்பத்தி பெருக முடியும். அத்தகைய சாதனைகளை இன்றைக்கு அமைத்தாலும் அவை உடனடியாக பலன் தரக்கூடியவை அல்ல. அந்தச் சாதனைகள் இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டாலும் 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு தொடர்ந்து பலன்கொடுக்கக் கூடியவையாக அமைந்து இருக்கின்றன. இன்றைக்கு இருக்கக்கூடிய வசதிகளை உடனடியாக தேவைகளுக்கு உபயோகப்படுத்திக்கொண்டு, அதன் மூலம் புது சாதனைகளை, பெரிய சாதனைகளை ஏற்படுத்த, உற்பத்தியைப் பெருக்க, காரியங்களை செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படிச்செய்ய ஆரம்பிக்கும்போது இன்றைக்கு வறுமை மிகுந்து இருக்கக்கூடிய பகுதிகள் இன்னும் அதிக கஷ்டத்துக்குள்ளாகவேண்டி இருக்கிறதை நாம் காண்கிறோம். ஆகவேதான் இன்றைக்கு இருக்கக்கூடிய வறுமை நீங்கி சுபிட்சம் ஏற்பட, உற்பத்தி பெருக பல பெரிய ஆலைகளை ஏற்படுத்தவேண்டும். நமக்கு இருக்கக்கூடிய எல்லா வசதிகளையும் இதற்காகவே பயன்படுத்திக் கொண்டால், தற்போதைக்கு வறுமை இன்னும் அதிகமாகப் போய்விடும். இவைகளை யெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து பிற்காலத்து சுபிட்சத்துக்காக பெரிய சாதனைகளை செய்ய திட்டம் வகுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் ரஷியாவோ சர்வாதிகார அடிப்படையில்தான் ஓரளவு வேலை செய்ய முடிந்தது.

இன்றைக்கு அந்த அடிப்படையில் நாம் வேலை செய்ய முடியாது. இன்றைக்கு ஜனநாயக அடிப்படையில்தான் நாம் எல்லாவற்றையும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. எதிர் கட்சிகளுக்கு இடம் கொடுத்து நாட்டில் இருக்கக்கூடிய எல்லா மக்களுக்கும் வோட்டுரிமை கொடுத்து அவர்களுடைய வோட்டுகள் மூலம் பிரதிநிதிகள் வந்து அதன் மூலம் எல்லாவற்றையும் நடத்த வேண்டியதாக இருக்கிறது. மக்களுடைய பிரதிநிதிகளால் அமைக்கப்பட்ட ஆட்சி நடத்த வேண்டும். அந்த அடிப்படையில்தான் நாம் அரசியலை அமைத்திருக்கிறோம். அதன் மூலம் மக்களுடைய வறுமையைப் போக்கி நிர்வாகம் அவர்களுக்கு பயன் அளிக்கும் முறையில் நடத்த வேண்டியதாக இருக்கிறது. இன்னும் மக்களுக்கு இதைப்பற்றி எடுத்துச்சொல்லவும் வேண்டும். இதை எல்லோரும் மனதில் வைத்துக் கொள்ளுவது அவசியம். இதை மக்கள் உணர்ந்தால் நாம் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய காரியம் எவ்வளவு பெரிய கஷ்டமான காரியம் என்பதை ஓரளவு உணர முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4-30 p.m. இப்பொழுது இருக்கும் சேமிப்பை வைத்துக்கொண்டு உற்பத்தியைப் பெருக்கிக்கொள்ள முடியுமா என்று பார்த்தால் அது முடியாது என்பதை முதல் ஐந்தாண்டு திட்டத்தின் படிப்பினை மூலமாக நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இரும்பு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். அப்படி ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு வெண்டிய இயந்திரங்கள் நம் நாட்டில் உற்பத்தியாகக் கூடிய நிலைமையில் நாம் இல்லை. சுமார் 200 வருஷங்களாக நாம் அடிமைப்பட்டிருந்ததால் அந்த மாதிரியான இயந்திரங்களை உற்பத்தி செய்ய முடியாத நிலைமையில் நாம் இருக்கிறோம். ஒரு இரும்பு தொழிற்சாலையை அமைக்கவேண்டுமானால் வெளிநாட்டிலிருந்து அதற்கு வேண்டிய இயந்திரங்களைத் தருவிக்க வேண்டியதாக இருக்கிறது. இன்றைக்கு நாம் ஒரு ஆலையை மட்டும் ஆரம்பிக்க வேண்டும் என்றிருந்தால் அதற்கு வேண்டிய இயந்திரங்களை மட்டும் நாம் வெளி நாட்டிலிருந்து தருவித்து விடலாம். இந்த ஒரு ஆலையுடன் நாம் நிற்கப்போவதில்லை. வருஷத்திற்கு ஒரு ஆலை வீதம் கட்டிக்கொண்டு இருக்கவேண்டிய நிலைமை நமக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அதனால் பல இயந்திரங்களை நாம் வெளி நாடுகளிலிருந்து வரவழைக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி எல்லா இயந்திரங்களையும் நாம் வெளி நாட்டிலிருந்து வரவழைப்பது என்பது முடியாத காரியம். அதனால் அந்த இயந்திரங்களை



யெல்லாம் நாம் இங்கேயே உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையை நாம் அமைக்க வேண்டியதாக இருக்கிறது. நான் உதாரணமாக இந்த இரும்பு தொழிற்சாலையை மட்டும் குறிப்பிட்டேன். இவ்வாறே ஒவ்வொன்றுக்கும் இயந்திரங்கள் வேண்டியதாக இருக்கின்றன. பிற்காலத்தில் நாம் கார்களை பெரிய அளவில் உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை ஏற்படலாம். அதற்கும் நாம் வெளி நாட்டிலிருந்து இயந்திரங்களை வரவழைப்பது என்பது முடியாது. இப்படி பல தொழிற்சாலைகளை நாம் ஆரம்பிக்க வேண்டும். நாம் ட்ராக்டர்களை இங்கேயே உற்பத்தி செய்து கொள்ள வேண்டுமென்றால் அதற்கும் இயந்திரங்கள் வேண்டியதாக இருக்கிறது. இன்றைக்கு ஒரு இயந்திரம் வாங்க வேண்டுமென்றால் கடன் வாங்கியோ அல்லது கெஞ்சி பிச்சை கேட்டோ அதை வாங்கி விட முடியும். அது ஒரு பெரிய காரியம் அல்ல. ஆனால் நாம் மேலும் மேலும் காரியங்களைச் செய்ய வேண்டும். பல ஆலைகளைத் திறக்க வேண்டும். அதனால் அவைகளை உற்பத்தி செய்வதற்கு தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். அப்படி ஒரு தொழிற்சாலையை அமைக்க வேண்டும் என்று கணக்குக் கொடுக்கக்கூடிய காலத்தில் அந்த தொழிற்சாலை அமைத்தவுடனேயே பலன் கொடுத்து விடாது. அது பலன் கொடுக்க பல ஆண்டுகளாகும். ஒரு வருஷத்தில் அது பலன் கொடுத்து விடாது. ஒரு வருஷத்தில் பலன் தரக்கூடியதாக இருந்தால் அதைச் செய்து விடலாம். ஆனால் அது அப்படி இல்லை. அதனால் நாம் வெளி நாடுகளை இயந்திரங்கள் கொடுக்கும்படியாக அணுகும்போது, நமக்கு உதவி வேண்டும் என்று கேட்கும்போது நாம் வெளி நாடுகளுக்கு அடிமைகளாகப் போகிறோம் என்று அர்த்தம் அல்ல. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் நாம் முன்னேற்றமடைய வேண்டுமானால், அபிவிருத்தி அடைய வேண்டுமானால், அந்நிய நாடுகளுடைய உதவி பெற்றுத்தான் நாம் முன்னேற்றமடைய முடியும்.

நாம் முன்னேற்றமடைய வேண்டுமானால் அதற்கு நிபுணர்கள் வேண்டியதாக இருக்கிறது. அவர்களைப் பெற்றுத்தான் நாம் முன்னேற்றமடைய முடியும். இன்றைக்கு திட்டத்தை போடுவது மட்டும் அல்ல நம் வேலை. கனம் அறிஞர் அண்ணாதுரை அவர்கள் சபைக்கு வருவதற்கு முன்னால் சொன்னார், டில்லியிலிருந்து ஏன் 2,000 கோடி ரூபாய் தமிழ் நாட்டிற்கு என்று வாங்கிவரக்கூடாது என்று.

SRI C. N. ANNADURAI: இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு ஆறு ஆயிரம் கோடி ரூபாய் செலவழிக்கிறார்களே, முதல் ஐந்தாண்டு திட்டத்திலும் நம்மை புறக்கணித்திருக்கிறார்களே அதனால் ஏன் ஆயிரம் கோடி ரூபாய் தமிழ் நாட்டிற்கு செலவழிக்கக்கூடாது என்று சொன்னேன். அது கனவு கண்டது போலாயிற்று.

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆயிரம் என்று சொன்னாலும் இரண்டாயிரம் என்று சொன்னாலும் ஒன்றுதான். இது கனவுதான். ஆயிரம் ரூபாய் கேட்டுக்கொண்டிருந்தாலும் அதுவும் கனவுதான் என்பதை அவர்களே உணர்ந்திருக்கிறார். இன்றைக்கு பணம் கிடைப்பது மட்டும் பிரச்னை அல்ல. இன்றைக்கு ரூபாய் அல்லது நிதி ஒதுக்குவது மட்டும் அல்ல நம்முடைய பிரச்னை. எவ்வளவு நிதி ஒதுக்கினாலும் எவ்வளவு தூரம் நாம் அதை பயன்படுத்தி காரியங்களைச் சாதிக்க முடியும், செய்துகொள்ள முடியும், அதற்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொண்டு அதன்மீது முடிவு செய்யவேண்டியதாக இருக்கிறது. பசிக்கு சாப்பாடு கேட்கலாம். சாப்பிடுகிற அளவு கேட்பதுதான் நியாயம். இருக்கிற சாப்பாட்டையெல்லாம் கொடுத்துவிடு என்று சொன்னால் அது நியாயம் இல்லை. கொடுத்தாலும் அதை சாப்பிடவும் முடியாது. சாப்பிட முடியாமல் கெட்டுப் போய்விடும்.

அதற்கு பிறகு எங்களுடைய திறமையைப்பற்றி குறிப்பிட்டார்கள். அவர்கள் கொடுத்த நற்சான்றை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய திறமை இருக்கிறது. திறமையுள்ள மந்திரி சபை இருந்து நிர்வா

[Sri C. Subramaniam] [8th March 1958

யந்திரத்தை வைத்துக்கொண்டு அதற்கு மேல் நாம் போட வேண்டும். அப்படி சாப்பாடு போடுவதற்கு—கனம் அண்ணாதுரை இருக்கிறார், ராமசாமி முதலியார் இருக்கிறார், சின்னதுரை இருக்கிறார், அதற்குமேல் எல்லோருக்கும் தெரியும் கேரளத்திலிருந்து வந்திருக்கக்கூடிய ஸ்ரீ டி. எஸ். ராமசாமி இருக்கிறார்.

**SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, on a point of order. It is a mistake for a responsible Member of this House especially the Hon. Leader of this House, to say that I am coming from Kerala. I am coming from Kanyakumari and erstwhile Travancore State, not Kerala. Is that in order, Sir ?**

**MR. SPEAKER : There is nothing wrong. The Hon. Minister may continue.**

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் சொன்ன வார்த்தைக்கு கொஞ்சம் பயன் ஏற்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லோரும் இருக்கும்போது கனம் அண்ணாதுரை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் இங்கே கொடுத்திருக்கக்கூடிய நிதியைக்கூட பயன்படுத்திக்கொள்ள முடியாது, நிறைவேற்றக்கூடாது என்கின்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது என்று கருத்துப்படும்படி சொன்னார். இப்பொழுது இருக்கக் கூடிய நிலைமையில் சில காரியங்களை சில அளவில்தான் சாதிக்க முடியும் என்பதை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். குழந்தை வளர வேண்டியதுதான். ஆனால் அது ஒரேயடியாக வளர வேண்டும் என்று நினைப்பது சரியல்ல. அது முடியாத காரியம். ஒரே நாளில் பெரிய ஆளாகி விட முடியாது. அதைப் போலவே இன்றைக்கு இருக்கக்கூடிய நிபுணர்களை (Technical Persons) வைத்துக்கொண்டுதான் எவ்வளவு தூரம் வேலை செய்ய முடியும் என்பதை ஆராய வேண்டியதாக இருக்கிறது. இதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பல வசதிகள் வேண்டியதாக இருக்கின்றன. நிதி வசதி மட்டும் அல்ல. அந்த நிதி வசதியை நாம் வெகு சுலபத்தில் அடைந்து விடலாம். இன்றைக்கு நமக்கு முக்கியமாக வேண்டியிருப்பவைகள் இயந்திர வசதிகள். இந்த இயந்திரங்களை இங்கேயே தயார் செய்வதற்கு அதற்கு வேண்டிய ஆட்களையும் நாம் தயாரிக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த அளவில் நமக்கு வசதி இல்லை என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கனம் அங்கத்தினர்களுக்கு நன்கு தெரியும், நாம் இப்பொழுது சமுதாய அபிவிருத்தித் திட்டங்களை எடுத்து நடத்திக்கொண்டு வருகிறோம். அதன் மூலம் கிராமங்களில் செய்யக்கூடிய பல வேலைகள் இருக்கின்றன. ஒவ்வொரு ப்ளாக்குக்கும் இஞ்சினியர் தேவையாக இருக்கிறது, ஒரு டாக்டர் வேண்டும், ஒரு விவசாய அதிகாரி வேண்டும். அடுத்த வருஷத்தில் எவ்வளவு ப்ளாக்குகளை எடுத்துக்கொள்ளப் போகிறோம் என்ற கணக்கையும் சொல்லியிருக்கிறோம். இன்றைக்குப் போட்டிருக்கும் திட்டத்தின்படி ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய கட்டடங்களைப் கட்டி விட்டோம். ஆனால் டாக்டர்கள் இல்லை. பல திட்டங்களைப் போட்டிருக்கிறோம். இஞ்சினியர்கள் வேண்டும் என்றால் அவர்கள் கிடைக்கவில்லை. தற்போது இஞ்சினியரிங் இலாகாவில் இஞ்சினியர்களுடைய ஸ்தானங்கள் சுமார் 200 காலியாக இருக்கின்றன. அதே மாதிரிதான் விவசாய இலாகாவை எடுத்துக்கொண்டாலும். அதே மாதிரிதான் வெட்டரினரி இலாகாவை எடுத்துக்கொண்டாலும். இதற்கெல்லாம் அதிகப்படியான பணத்தை ஒதுக்கி அவைகளை விருத்தி செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இப்பொழுது அந்த திட்டங்களை ஆரம்பித்தால்தான் இன்னும் ஐந்து வருஷங்களுக்குப பிறகு அதன் பலன் நமக்குக் கிடைக்கும், அந்தப் பலனை பெற முடியும். ஆகையினால்தான் இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் எவ்வளவு காரியங்களை சாதிக்க முடியும் என்பதை யோசித்து அந்த அளவில் நாம் காரியங்களைச் செய்யவேண்டியதாக இருக்கிறது.



8th March 1958]

SRI C. N. ANNADURAI : இஞ்சினியர்கள் தேவை என்று சொல்லப்படுகிறதே அதனால் இந்த திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே அப்படிப்பட்ட நிபுணர்களைத் தயாரிக்கும்படியான கல்லூரிகளை ஆரம்பித்துவிட்டு அதன் பிறகு திட்டங்களை ஆரம்பிப்பதற்கு ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. அப்படி ஆரம்பித்திருந்தால் இப்படிப்பட்ட தொல்லைகள் இருந்திருக்காது அல்லவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அண்ணாத்துரை போன்றவர்கள் இதற்கு முன்னதாகவே அரசியலில் ஈடுபடாமல் இருந்ததால் நாங்கள் தவறுகள் செய்திருக்கலாம். இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையில் இனிமேல் என்ன செய்வது என்பதை கனம் அண்ணாதுரையிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஆகையினால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய படிப்பினையை வைத்துக் கொண்டு இனி எங்கே குறைகள் இருக்கும், எப்படிப்பட்ட குறைகள் ஏற்படும் என்பதைத் தெரிந்துகொண்டு அவைகளை நீக்குவதற்கு பாடுபட்டுக்கொண்டு வருகிறோம். ஆகவே எந்தக் காரியங்களையெல்லாம் செய்வது, எப்படி பெரிய திட்டங்களை நிறைவேற்றுவது என்பதை நாம் யோசிக்க வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளையும் நாம் செய்யலாம். அப்படிப்பட்ட முயற்சிகளை எடுத்துக்கொள்ளும்போது அவைகளுக்கு இயற்கையாக ஏற்பட்டிருக்கிற பல கோட்பாடுகள் இருக்கின்றன என்பதையும் உணரவேண்டும். அதையும் கனம் அங்கத்தினர்கள் உணர முடியும். திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களும் அப்படி உணரக் கூடியவர்கள், அவர்களும் தானே ஒரு சர்க்காரை சிருஷ்டித்துக்கொள்ளக் கூடிய ஒரு துறையில் இயங்குகிறவர்கள், அவர்களும் இதை முக்கியமாக தெரிந்துகொள்ளவேண்டும். அதனால் தான் இந்த பட்ஜெட்டை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது இந்த பட்ஜெட்டிலே, திட்ட அடிப்படையிலே எவ்வளவு தூரம் முன்னேறி வருகிறோம், அந்தத் திட்ட அடிப்படையிலே போட்ட அளவில் நாம் செய்யுக்கூடிய அளவு காரியங்கள் சாதித்திருக்கிறோமா என்பதைப்பற்றி நாம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, சென்ற ஆண்டு பட்ஜெட் சமர்ப்பித்ததின்படி எவ்வளவு காரியங்கள் சாதித்திருக்கிறோம் என்பதைப்பற்றியும் நான் சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையிலே நாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டுமென்று நான் சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையிலேதான் ஓரளவாவது நாம் காரியங்களைச் சாதித்திருக்கிறோம் என்பதை உங்கள் முன்னால் சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பட்ஜெட்டைக் கவனிப்பதற்கு உதவியாக இப்பொழுது விளக்க உரையும் கூட எல்லா அங்கத்தினர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரெவினியு செலவினங்கள் (Revenue Expenditure) மூலதனச் செலவினங்கள் (Capital Expenditure) என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்திருக்கிறோம். பெருவாரியாகச் சொல்லப்போனால், ரெவினியூ இனங்கள் அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு செலவு செய்யும் பணம். மூலதனச் செலவு உடனடியாக நமக்கு உபயோகப்படக்கூடியது மட்டுமல்ல ; தொடர்ந்து பல தலைமுறைகளுக்குக்கூட உபயோகப்படக் கூடிய தொகை. இப்படிச் சொல்லும்போது, நான் கண்டிப்பாக வரையறுத்துச் சொல்லுவதாக நினைத்துக்கொள்ளக்கூடாது. சில செலவுகள் ரெவினியூ பட்ஜெட்டிலே இருந்தாலும், தொடர்ந்து பலன் அளிக்கக் கூடியவையாகவும் இருக்கும். " காபிடல் " பட்ஜெட்டிலே இருந்தாலும், உடனடியாகப் பலன் அளிக்கக்கூடியவையாக இருக்கலாம். ஆனால் பெருவாரியாகப் பார்க்கும்போது, இரண்டு இனங்களையும் இந்த வகையிலே பிரித்துவிடலாம். 4.45 p.m

ஆகையால்தான், இந்த பட்ஜெட்டைப் பார்க்கும்போது, ரெவினியூ இனமானது அன்றாடத் தேவையைப் பூர்த்திப் செய்வதற்கு இருக்கிறது. நாம் அந்த முறையிலே காரியங்களைச் செய்துகொண்டு வந்திருக்கிறோம். அதுபோல் நாட்டில் சுபீட்சத்தை வளர்ப்பதற்கு அந்த முறையிலே செய்து

கொண்டு வந்திருக்கிறோம் என்பதை ராஜ்ய அளவிலே கனம் அங்கத்தினர்கள் பரிசீலனை செய்து பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது நான் சமர்பித்திருக்கும் பட்ஜெட் 7-வது வருஷத்திலே சமர்பிக்கக்கூடிய பட்ஜெட் ஆகும். இடைக்காலத்தில் சமர்பித்த 2 பட்ஜெட்டுகளையும் சேர்த்தால் 9-வது பட்ஜெட் என்று கணக்குப் போடலாம். இந்த பட்ஜெட் புத்தகத்திலே அந்தக் கதை பூராவும் அச்சிடப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் கருணாநிதி அவர்கள் அதைப் பார்க்காமலிருந்தால், அதைப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏழாவது பக்கத்தைத் திருப்பிப் பார்த்தால் அந்தக் கதை முழுவதும் காணப்படும். 1952–53-ல் நான் இந்தச் சட்டசபையிலே வந்து சமர்ப்பித்ததிலிருந்து ஒவ்வொரு வருஷமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற "ரெவினியூ இனா" க் கணக்கைப் பார்த்தால் 1952–53-லே நான் பட்ஜெட் சமர்ப்பிக்க ஆரம்பித்தபோது, அந்த வருஷத்திலே துண்டு விழுந்த தொகை 9 கோடி 98·39 லட்ச ரூபாய். அதற்கு அடுத்த வருஷம் 1953–54-ல் துண்டு விழுந்த தொகை 8 கோடி 83·10 லட்ச ரூபாய். 1954–55-ம் வருஷத்தில் 3 கோடி 91·64 லட்ச ரூபாய். 1956–57-ல் 63·45 லட்ச ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது. 1957–58-ல், நடப்பு வருஷத்திலே, கணக்குகளையெல்லாம் திருத்தி அமைத்ததற்கு பிற்பாடு, இப்பொழுதுதான் கழித்தல் கணக்கிலிருந்து கூட்டல் கணக்குக்கு வந்து, பதினான்கு லட்சத்துக்கு மேற்பட்ட தொகை கூடுதலாகியிருப்பதாகத் தெரிகிறது. நிதிக் கமிஷன் ஒதுக்கிய தொகையும் சேர்த்து 1958–59-க்கு 14·74 லட்ச ரூபாய் கூடுதலாக இருக்கும் என்று கணக்கில் கண்டிருக்கிறது.

ஒரு நல்ல அழகான பழமொழி சொன்னார்கள், அன்பழகன் அவர்கள். "அவளுக்கு இவள் எழுந்துண்பாள்" என்பது அவர் சொல்லியது. ஆனால், அவளுக்கு இவள் இல்லை. படுத்து உண்டுகொண்டிருந்த ஒருத்தி இன்று எழுந்து உட்கார்ந்து உண்ணுகிறாள் என்று பட்ஜெட்டைப் பார்த்தாலே அவர்களுக்குத் தெரியும். இப்பொழுதுதான் எழுந்து உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்திருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**Sri C. N. ANNADURAI :** பட்ஜெட்டிலே விழுகிற துண்டுகளைச் சரிக்கட்டுவதற்குத் திறமை இந்த மாநிலத்திலே மட்டும் ஏற்பட்டிருக்கிறதா? இந்தியாவில் வேறு பல மாநிலங்களிலும் ஏற்பட்டிருக்கிறதா?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** பத்திரிகையைப் பார்த்தால், இன்றைக்கும்கூட ஒரு ராஜ்யத்தினுடைய புள்ளி விவரங்கள் வந்திருக்கின்றன. இதற்கு முன்னால் பல ராஜ்யங்களுடைய புள்ளி விவரங்கள் வந்திருந்தன. ஆகையால், எனக்கு ஒரு திருப்தி என்னவென்றால், ஏழு வருஷங்களாக ராபர்ட் ப்ரூஸ் போல், முயற்சிக்கு மேல் முயற்சி செய்த பிறகுதான் ஓரளவு திருப்தி அடையக்கூடிய நிலைமையிலே, வருமானத்திற்கும் செலவுக்கும் சரிகட்டக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு விஷயம். காபிடல் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கவேண்டும் என்று சொல்வது வேறொரு விஷயம்.

ஆனால், அன்றாடச் செலவுகள், ராஜ்யங்கள் பொறுப்பு ஏற்று நடத்தக் கூடிய முறையிலே, அவரவர்கள் அந்தந்த ராஜ்யங்களிலே ஏற்படக்கூடிய செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்பதை எல்லோரும் வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகையால், இந்த திருப்திகரமான நிலைமை ஏற்படுவதைப்பற்றி நான் ஓரளவு சந்தோஷப் படுகிறேன். அதற்குக் காரணம், இந்த சர்க்காரின் வரி விதிப்புகளைப்பற்றி குறைகள் சொல்லுகிறவர்கள் இருந்தாலுங்கூட, அதைப் பல்வேறு விதமாக சர்க்காருக்கு எதிராக ஒரு எதிர்ப்பை உண்டாக்குவதற்குப் பல எதிர்க் கட்சிகளை பயன்படுத்திக் கொண்டாலுங்கூட, அதைப் பாராது நாம் கடமையைச் செய்ய வேண்டும் என்ற முறையிலும் நாம் அந்தக் கடமையை நிறைவேற்றுவதிலே, இப்பொழுது ஒரு மனக் கசப்பு ஏற்பட்டாலுங்கூட,



பின்னால் வருகின்றவர்கள் நம்மை வாழ்த்துவார்கள் என்ற அடிப்படையிலே நம்முடைய பொருளாதார அமைப்பு பலப்படவேண்டுமென்ற முறையிலும், பணியாற்றிய காரணத்தால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது எனக்கு ஓரளவு திருப்தியளிக்கிறது.

இந்த நிலைமையை அடிப்படையாக வைத்துக்கொண்டு பார்த்தால், இன்னும் நான்கைந்து வருஷங்களுக்கு இது தொடர்ந்து பலம் பெருகிக் கொண்டு போவதோடு, இருக்கிற அடிப்படையிலேயே நான்கைந்து வருஷங்களுக்கு புது வரி அவசியமாக இருக்காது என்று எனக்குத் தெரிந்த அளவில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்.) இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதைப் பற்றி எல்லோரும் வரவேற்பார்கள் என்றும் நம்புகிறேன். (மேலும் ஆரவாரம்.)

இம்மாதிரி வரியையெல்லாம் வசூல் செய்தால் போதுமா? எவ்வளவு தூரம் இதை நல்ல முறையிலே செலவழிக்கிறோம் என்பதை நாம் பார்க்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. யார் வேண்டுமானாலும் சட்டங்கள் போட்டு, நிர்ப்பந்தம் ஏற்படுத்தி, வரி வசூல் பண்ணிவிடலாம். ஆனால், அதைவிட முக்கியமானது நமக்குக் கிடைக்கக்கூடிய வருவாயை நல்ல முறையிலே பயன்படுத்துவது. அதைப் பொருத்துத்தான் கனம் அங்கத்தினர்களுடைய கைதட்டலை நான் எதிர் பார்க்கிறேன். கனம் திரு. அண்ணாதுரை அவர்கள் சற்று முன் கைதட்டினார்களே, அது அவ்வளவு முக்கியம் அல்ல, அதை நான் வரவேற்கவும் இல்லை. ஆனால், இதற்கு மேலே இருக்கக்கூடிய, வருவாயை இன்னும் அவர்கள் வேறு விஷயங்களுக்காக பல கோடிகள் செலவழித்திருக்க வேண்டுமென்று, கிடைத்திருக்கும் வருவாயை நல்ல முறையில் செலவழித்திருக்கிறோமா என்பதைப்பற்றி எல்லோரும் "பரவாயில்லை, ஓரளவு செய்திருக்கிறீர்கள்" என்று கனம் அங்கத்தினர்கள் வெளியிலே சொல்லாவிட்டாலும், தங்களுடைய மனதிலேயாவது உணர்ந்தால் போதும் என்று மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

**Sri C. N. ANNADURAI :** வெளியிலே சொல்வதைவிட மன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன், செட்டாக செலவழித்திருக்கிறார்கள் என்று.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** ரொம்பவும் சந்தோஷம். அதை வரவேற்கிறேன். வரி வசூல் செய்தது மாத்திரம் அல்ல. வரி வசூல் செய்ததைச் சரியாகச் செலவு செய்ய முயற்சி செய்து இருக்கிறோம் என்று திரு. அண்ணாத்துரை சொல்லிவிட்டார்கள். அவர் சொல்லிவிட்டார் என்பதனால் ரூபாய்க்கு 100 நயா பைசா பலன் வந்துவிட்டது என்று நான் நினைத்து விடவில்லை. கனவு உலகத்திலேயிருந்தால்தான் அப்படி நான் நினைத்துக் கொள்ளலாம். வீண் செலவுகள் ஆகியிருக்கும் என்பதைப்பற்றி எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால், அவை தவிர்க்க முடியாதவை என்பது என்னுடைய அபிப்பிராயம். நாம் சரியாகச் செலவழித்து வருகிறோமா என்று பார்த்தால், நான் முதலில் சொன்ன திட்ட அடிப்படையிலே சரியாக நிறைவேற்றுகிறோமா, சரியாகச் செய்து வருகிறோமா என்பதைப் பார்க்கவேண்டும். அந்த விவரங்கள் 15, 16-வது பக்கங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நமக்குத் திட்ட அளவு ஐந்து வருஷத்திலே எவ்வளவு என்று அதில் காணப்படுகிறது. இரண்டு வருஷங்களில் எவ்வளவு செலவு செய்தோம் என்பதும் மூன்றாவது வருஷத்திலே எவ்வளவு செலவு செய்ய உத்தேசித்திருக்கிறோம் என்பதும் காணப்படுகிறது. இவைகளையெல்லாம் கனம் அங்கத்தினர்கள் பரிசீலனைசெய்துபார்த்து புள்ளி விவரங்களைப் பார்த்து, குற்றம் சொன்னால், நன்றாக இருக்கும். மூன்றாவது வருஷம் வருகிறதே, இவ்வளவு தானே செலவாயிருக்கிறது, பாக்கியை எப்படிச் செலவழிக்கப் போகிறீர்கள்? என்றோ, இதுவரையில் இவ்வளவு அதிகமாகச் செலவழித்து விட்டீர்களே, இனி அடுத்து வரும் வருஷங்களில் எப்படிச் செலவு செய்யப் போகிறீர்கள் என்று அந்த வகையிலே கேட்பார்களானால், உண்மையிலேயே நாங்கள் வரவேற்றிருப்போம். பதினைந்து, பதினாறாவது பக்கங்களை கனம் அங்கத்தினர்கள் பார்க்க வேண்டியது மிகவும் அவசியம். அவைகளைப் பார்த்தால், அதிலும்

நாம் செய்து வந்திருக்கும் சாதனை நாம் ஓரளவு பெருமைபடக்கூடிய முறையில் இருக்கும்—இதை நிர்வகித்த அதிகாரிகளும் அந்தப் பெருமையில் பங்குக் கொள்ளக் கூடியவர்கள் என்ற முறையிலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாம் இந்தத் திட்ட அடிப்படையில் இந்த வருஷத்தில் 31½ கோடி ரூபாய் செலவிட பட்ஜெட்டில் கணக்கிட்டிருந்தோம். திருத்தி அமைக்கப்பட்ட பிரகாரம் 32 கோடி ரூபாய்க்கு அது உயர்ந்திருக்கிறது. வேறு பல ராஜ்யங்களில் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணமே செலவிடப்படவில்லை. நாம் ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேலாகவே செலவிட்டிருக்கிறோம் என்பதில் மகிழ்ச்சி அடைய வேண்டும். நாங்கள் மட்டும் பெருமை கொள்ளக்கூடிய விஷயமல்ல அது. நல்ல பல திட்டங்களை ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேலாகவே செலவிட்டு நிறைவேற்றியிருக்கிறோம் என்பது எல்லோருமே பெருமை கொள்ளக் கூடிய விஷயம் இது. அதுமட்டுமல்ல. கடந்த மூன்று வருஷங்களாக 92 கோடியே 72 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு வந்திருக்கிறது. பாக்கியுள்ள இரண்டு வருஷத்தில் திட்டத்தை நாம் பூர்த்தி செய்தாக வேண்டும் என்கிற காரணத்தினால் இப்போது செலவுக்கு 30 கோடியாக ஒதுக்கியுள்ளோம். ஆகவே, நமக்குக் கிடைத்து வந்திருக்கிற வசதிகளைப் பார்க்கும்போது யாரும் நம்மை ஒதுக்கிவிட்டதாகவோ, நம்முடைய ராஜ்யத்திற்குக் கிடைக்கவேண்டியதை நாங்கள் பெறாமல் ஏமாந்து விட்டோம் என்பதாகவோ நினைப்பது சரியானதாகாது. இப்படி மொத்தமாக நாம் செலவிட்டிருக்கக்கூடியவற்றைக் கணக்குப் பார்ப்பது மட்டும் அல்ல. தனித் தனி இனங்களாகப் பிரித்துப் பார்த்தாலும் ஒவ்வொரு இனங்களிலும் ஏறக்குறைய எவ்வளவு செலவிடவேண்டுமென்று கணக்கிட்டிருந்தோமோ அவ்வளவும் செலவு செய்து வந்திருக்கிறோம். சில இனங்களில் பணம் குறிப்பிட்டபடி செலவு செய்யப்படாமல் ஒதுங்கியிருக்கிறது என்பது எனக்குத் தெரியாதது அல்ல. அதுவும் முக்கியமாக ஸ்ரீ ராமசாமி அவர்கள் கல்வித் துறையில் 32 லட்சம் ரூபாய் செலவிடப்படாமல் ஒதுங்கியிருப்பதற்கு விளக்கம் கேட்டார்கள். சென்ற ஆண்டு நாம் எத்தனை புதிய பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணினோமோ, எத்தனை பிள்ளைகளை புதிதாகப் பள்ளிக்கூடத்திற்கு வரும்படி வசதி செய்யவேண்டும் என்று நினைத்தோமோ அவ்வளவையும் செய்திருக்கிறோம். அந்த இனங்களில் செலவு குறைக்கப்படவில்லை. ஆனால் கட்டிடங்கள் கட்டுவது, சிமிண்டு கிடைக்காத காரணத்தினாலும், இரும்பு, எஃகுப் பொருளுக்கு கிராக்கி ஏற்பட்டு தேவைக்குப் போதுமான அளவு கிடைக்காமல் போனதனாலும், நிறுத்தி வைக்கப்பட்டது. அதனால்தான் அந்தக் கட்டிடங்களுக்காக ஒதுக்கப்பட்ட பெரிய தொகை அப்படியே செலவிடப்படாமல் நின்றுவிட்டது. வைத்தியத் துறையிலும் அம்மாதிரியே தான். எத்தனை படுக்கைகளை அதிகப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்திருந்தோமோ அத்தனை படுக்கைகளையும் ஏற்படுத்தியிருக்கிறோம். கொஞ்சம் அதிகமாகவே கூட ஏற்படுத்தியிருக்கிறோம். எங்கெங்கே ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தோமோ அவைகளையும் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் இருக்கக்கூடிய கட்டிடத்தை விஸ்தரிப்பதற்காக கட்டிடம் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையைச் செலவிடவில்லை. அதனால் அந்தத் துறையில் ஒதுக்கப்பட்ட பணம் செலவிடப்படாமல் நின்று விட்டது. (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்: வில்லேஜ் இண்டஸ்டரிக்காக ஒதுக்கப்பட்டதில் ஒரு துண்டு ஏன் அப்படியே நின்றுவிட்டது.) அதையும் எடுத்துச் சொல்கிறேன். இதிலே நமக்கு முக்கியமாக ஏற்பட்டிருக்கக்கூடிய குறைகளைப் பாருங்கள். நாம் ஒன்றுமே செய்யாமல் உட்கார்ந்திருந்தால் குறையே ஏற்பட்டிருக்க முடியாது. மின்சார இலாகாவில் அதிகமான குறைகள் சொல்லப்பட்டன. அதிகமான குறைகள் சொல்லப்பட்டதற்குக் காரணமே அதிகமான வேலைகள் அத்துறையில் நடைபெற்றிருக்கின்றன என்பது தான். அதிக அளவில் மின்சார விஸ்தரிப்பு வேலை நம் ராஜ்யத்தில் நடைபெற்றிருக்கிறது என்பதனால் தான். இன்றைக்கு 25 சத விகிதம் 'கட்' என்பதைப்பற்றி அநேகம் பேர் பேசினார்கள். இப்படி மின்சார வெட்டை ஏற்படுத்துவதற்குக் காரணம் என்ன? நாம் எந்த அளவில் மின்சார சக்தியை உற்பத்தி பண்ணலாம் என்று நினைத்து விஸ்தரிப்பைக் கொடுக்க எண்ணினோமோ அந்த அளவில் மின்சார விஸ்தரிப்பு நடந்துவிட்டது.





ஆனால் மின் சக்தியை உற்பத்தி செய்ய முடியாமல் அந்தத் திட்ட வேலையில் சிறிது காலதாமதம் ஆகிவிட்டது. அதனால் இந்த வெட்டு ஏற்பட்டது. நம்முடைய நோக்கம் எல்லாம் உற்பத்தி செய்யப்படுகிற சக்தியில் ஒரு துளி கூட வீணாகப் போகக்கூடாது என்பதுதான். அந்த நோக்கப்படியே நாம் இன்றைக்கு செலவிட்டு வருகிறோமே தவிர தேவைக்கு அதிகமாக இல்லை. ஆகவே நாம் போட்ட திட்டங்களுக்கு அதிகமாகவே செயல்படுகிற காரணத்தினால்தான் இன்றையதினம் பலவிதமாக குறைபாடுகளைக் காண்கிறோம். சிலர் எதற்காக அவர்களிடமிருந்து முன் பணம் வசூலிக்கப்படுகிறது, உபரிக்கட்டணம் வசூல் செய்யப்படுகிறது என்பதாகவெல்லாம் பேசினார்கள். இதில் ஒன்று நாம் கவனித்தாக வேண்டும். மற்றவர்களுக்குக் கிடைக்காத வசதி ஒன்றை நாம் பெற வேண்டுமானால் நாம் அதற்காக கொஞ்சம் அதிகப்பணம் கொடுக்கத்தான் வேண்டும். நம்முடைய ராஜ்யத்தில் 13 ஆயிரம் கிராமங்களுக்கு மேல் இருக்கின்றன. இன்றைக்கு 6 ஆயிரம் கிராமங்களுக்குத்தான் மின்சார விஸ்தரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் கொடுக்கிற வரிப்பணத்தைக் கொண்டு இவர்களுக்குக் கொஞ்சம் வசதியைச் செய்து கொடுப்பது என்பது சரியல்ல. எல்லோருக்கும் செய்து கொடுக்கக்கூடிய நிலைமையில் இருந்தால் யாரும் அதற்காக எவ்வித சந்தாவும் கட்ட வேண்டியதில்லை. பிறருக்கு இல்லாத வசதி ஒன்றை இவர்கள் பெறும்போது இவர்கள் கொஞ்சம் அதிகப் பணம் கட்டுவது அநீதியானது அல்ல என்பதை நாம் உணர்ந்து கொண்டால் இந்தக் குறைபாட்டைச் சொல்லமாட்டோம். அதனால்தான் அவர்களுக்குள்ள கஷ்டத்தை அரசாங்கம் உணர்ந்தும் அதைத் தவிர்க்க முடியவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் கிராம கைத்தொழில்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம் ஏன் செலவிடப்படவில்லை என்று கேட்டார்கள். இயந்திரங்கள் மூலமாக ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகள் என்றால் கூடப் பரவாயில்லை. வெளி நாடுகளில் இருந்தாவது இயந்திரங்களை வாங்கி உடனடியாக தொழிலை ஆரம்பித்து விடலாம். ஆனால் கிராமக் கைத்தொழில்களைப் பொருத்தவரை முதலில் அத் தொழில்களை வளர்க்கக்கூடியவர்களுக்குப் பயிற்சி அளித்தாகவேண்டும். சிறிய தொழில்களில் நல்ல பயிற்சி பெற்ற நிபுணர்களினால் தான் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் ஆங்காங்கே பல பல கிராமங்களில் சிறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு செலவிடவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆனால் இந்தத் துறையில் போதுமான நிபுணர்கள் நமக்குக் கிடைக்கவில்லை. அநுபவம் பெற்றவர்கள் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவேதான் இத்துறையில் நாம் ஒதுக்கிவைத்துள்ள பணம் பூராவும் செலவிடப்படவில்லை. இந்த ராஜ்யத்தில் மட்டுமல்ல. எல்லா ராஜ்யங்களிலும், கேரளா, ஆந்திரா எங்கே பார்த்தாலும் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. தேசீய அபிவிருத்திக் கவுன்ஸிலில் ஒவ்வொரு ராஜ்ய முதல் அமைச்சரும் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, முக்கியமாக இத்துறையில் அநேகம் பேர்களுக்குப் பயிற்சி அளித்தாகவேண்டும். இத்துறையில் நம்முடைய பயிற்சி எல்லா ராஜ்யங்களையும் விட மிக அதிகமாகவே இருக்கிறது என்பதை நாம் சொல்லிகொள்வதோடு மட்டுமல்ல இதர ராஜ்யக்காரர்களும், வெளிநாட்டு நிபுணர்களுமே ஒப்புக் கொள்கிறார்கள்.

ஆகவே திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்பட்டிருக்கக்கூடிய முக்கியமான கஷ்டங்களை விளக்க வேண்டுமென்று உங்களிடம் சொன்னேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் பழைய பட்ஜெட்டின் போது கொடுத்த வாக்குறுதியைப் பாருங்கள். இப்பொழுது செய்யப்படும் காரியங்களைப் பாருங்கள் என்று சொல்லுகிறார்கள். டி.ஐ. சைக்கிள் கம்பனியை விரிவாக்க ஐந்து வருஷத்திற்கு மூன்று லட்சம் சைக்கிள் உற்பத்தி செய்ய வசதி செய்து கொடுக்கும் திட்டத்தைக் குறித்து சொல்கையில் இந்த மூன்று லட்சம் குறைவு என்று சொன்னார்கள். அது அதிகமாக இருந்தாலும் சரி, அல்லது குறைவாக இருந்தாலும் சரி அது நம் நிதியை எந்த விதத்திலும் பாதிக்கக் கூடியதல்ல. நாம் யோசனை தான் சொன்னோம். மூன்று லட்சமாக உயர்த்துவதற்கு, அதற்கு வேண்டிய

இயந்திரங்கள் தருவிக்க, அடுத்த வருஷம் அதை மூன்று லட்சமாக உற்பத்தி செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கும், துண்டு விழுவதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. ஒரு காரியத்தை சொல்லி விட்டு அதற்கு தொடர்பு இல்லாத ஒரு காரியத்தையும் சொல்லிவிட்டால் தெரியாதவர்கள் அதை எடுத்துக் கொள்ளட்டும், தெரிந்தவர்கள் அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று விட்டு விடட்டும் என்று சொல்லுகிறார்கள். பாருங்கள் டி.ஐ. சைக்கிள் மூன்று லட்சம் உற்பத்தி செய்யப் போகிறார்களாம்; பணம் எப்படி வீணாகிறது என்று பாருங்கள் என்று சொல்வதனால் விஷயம் தெரியாதவர்கள் அவர் சொல்வது உண்மைதான் என்று நினைத்துக் கொள்ளுவார்கள். விஷயம் தெரிந்தவர்கள் ஒன்றுக் கொன்று சம்பந்தமில்லை என்று விட்டு விடுவார்கள். நாட்டில் தொழில் வளரவேண்டுமென்று, அதற்காக என்னென்ன முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று ஒவ்வொரு உரையிலும் எடுத்துச் சொல்லி யிருக்கிறோம். மூலதனச் செலவைப் பார்க்க வேண்டும். மூலதனச் செலவு என்பதில் நாம் கடன் வாங்கி அதன் அடிப்படையில் பல காரியங் கள் செய்கிறோம். கோடிக் கணக்கில் நாம் கடன் வாங்கி இருக்கிறோம். மத்திய சர்க்காரிடம் இருந்தும் வட்டிக்கு கடன் வாங்கி யிருக்கிறோம். இப்பணத்தை நல்ல முறையில் உபயோகப்படுத்தாது போனால் வட்டி கட்டுவதன் மூலம் நமக்கு நஷ்டம் ஏற்படலாம். அப்பணத்தை சரியாக உபயோகிக்கிறோமா, எவ்வளவு கடன் வாங்கப்பட்டிருக்கிறது என்று கேட்பார்களே என்றுதான் புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாம் 100 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறோம். இவ்வளவு ரூபாயைக் கொண்டு என்ன செய்திருக்கிறோம், என்பதைத் தெரிவிக்கும் முறையில் தான் இப்பட்டியல்களைக் கொடுத்திருக்கிறோம். இன்று 100 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறோம் என்று சொன்னால், 150 கோடி ரூபாய் மூலதனம் போட்டு செய்யக்கூடிய காரியங்களை நாம் இன்று செய்திருக்கிறோம். இப்பொழுது கடன் வாங்கி நாம் செலவு செய்வது நம் சுபிட்சத்திற்கு மட்டுமல்ல. பிற்கால தலைமுறையின் சுபிட்சத்திற்காக வேண்டியுந்தான் இம்மூலதனச் செலவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளை ஏன் மாற்றியமைக்கக்கூடாது என்று கேட்டிருந்தால் நான் சந்தோஷப்பட் டிருப்பேன். அத்திட்டங்களை எல்லாம் அவர்கள் பார்த்தார்களோ என்று கூட நான் சந்தேகப்படுகிறேன். முன் வருடங்களில் நமக்கு கிடைக்கும் ரிவினியூ தொகையை விட நாம் அதிகமாகச் செலவு செய்திருக்கிறோம், மக்களின் சுபிட்சத்திற்காக வேண்டி என்பதை கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களிலிருந்து கண்டுகொள்ள முடியும். நாம் இதுவரை செய்து வந்திருக்கும் காரியங்கள் நல்ல முறையில்தான் செய்யப்பட்டு வந்திருக்கிறது என்பதை கனம் அண்ணாதுரை அவர்கள் ஒப்புக்கொள்வதைப் போல் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்பதில் எனக்கு யாதொருவித சந்தேகமும் கிடையாது. இதைவிட நன்றாகச் செய்ய வேண்டுமென்று நீங்கள் சொல்லுவீர்களேயானால் நான் அதை வரவேற் கிறேன். பூர்ண முன்னேற்றம் அடைவதற்கு ஒரு எல்லையே கிடையாது. எவ்வளவு செய்தாலும் அதை விட திறமையாகச் செய்ய முயற்சி செய்ய முடியும். காரியங்களை இன்னும் திறமையாகச் செய்யவேண்டுமென்று, அதற்காக குற்றம் காணும்போது அதை நான் வரவேற்கிறேன். யாராவது குற்றம் சொல்வதாக இருந்தால் அதில் மனக்கசப்பு இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அப்படி நான் நினைப்பதில்லை. குற்றம் சொல்வ தற்காக நான் மனக்கசப்பு அடைவதில்லை. ஆனால் நியாயமற்றதைச் சொல்லும்போதுதான் மனக்கசப்பு ஏற்படுகிறது. இப்படி தெரியாமல் பேசுகிறார்களே என்று வருத்தமும் ஏற்படுகிறது. (கோபம் வருவதில்லையா என்று ஒரு அங்கத்தினர் கேட்டார்). கோபம் வருவது என்பது ஒவ்வொருவரின் குணத்தைப் பொறுத்தது. அடுத்தபடியாக, மூலதனச் செலவு பற்றி என்னை கேலி செய்தார்கள். சென்ற வருஷ பட்ஜெட் உரையைப் படித்துவிட்டு ரெவினியூ இனத்தைப்பற்றி என்னை கேலி செய்தார்கள். நிதிக் கமிஷன் சிபார்சு வரப் போகிறது, அதை நம்பியிருக்கிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். நம்பிக்கை தவறி விடவில்லை. ரெவனியூ பட்ஜெட் ஓரளவு உபரியாகவே அமைந்திருக்கிறது. மூலதனத்தைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை படித்துவிட்டு, இன்னொரு அரசாங்கத்தை,



யூனியன் அரசாங்கத்தை நம்பி இருக்கவேண்டியதாயிருக்கிறதே என்று அவர்கள் என்மேல் கொஞ்சம் பரிதாபப்பட்டு இது கடைசியாக எப்படி முடியப்போகிறதோ என்று சொன்னார்கள். 24-ம் பக்கத்தில், "ஆயினும் சிக்கல்கள் எழும்பொழுது அவைகளை எப்படியும் சமாளித்துக் கொள்வோம் என்ற உறுதியில் இப்பொழுது நாம் முன் செல்வோமாக" என்று சொன்னேன். அதைப் பார்த்து நகையாடினார்கள். நம்பிக்கையுடன் இருந்தோம், பிரச்னைகள் ஏற்பட்டன, அவைகளை உறுதியுடன் சமாளித் தோம் என்று நான் இப்பொழுது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, ஏதோ எங்கள் மீது கொஞ்சமாவது நம்பிக்கை வையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ வடநாட்டாரிடமிருந்து, யூனியன் சர்க்காரிடமிருந்து உரிமைகளை நாம் பெறமுடியாது என்று நீங்கள் என்ன நினைத்துக் கொண்டாலும் நாங்கள் பெற்றிருப்பதைப் பார்த்தாவது எங்களிடம் கொஞ்சம் நம்பிக்கைவையுங்கள் என்று கேட்டுக்கொள் கிறேன்.

**Sri A. V. P. ASAITHAMBI :** நாங்கள் எல்லாம் இருப்பதால் தான் உங்களுக்கு கிடைத்தது.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** கனம் ஆசைதம்பி அவர்கள் சொன்னதற்காக ஒரு கதை சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு கெட்டிக்காரன் ஒரு ஊருக்குச் சென்றான். அங்கு சென்று அங்குள்ள மக்களைப் பார்த்து "சூரியனை நான் உதயமாக வைக்கிறேன் பாருங்கள்" என்று சொன்னான். அதை கேட்டு விட்டு அந்த மக்கள் "இவன் பெரிய கெட்டிக்காரனாக இருப்பான் போலிருக்கிறதே, சூரியனை உதயமாக வைக்கிறேன் என்று சொல்கிறானே" என்று அந்த ஊர் மக்கள் ஓர் இடத்தில் கூடினார்கள். அவன் செய்வதைப் பார்க்க ஓர் இடத்தில் எல்லோரும் கூட்டமாக கூடினார்கள். அந்த கெட்டிக்காரன் வந்து, நான்கு மணிக்கு வந்து, இரண்டு மணி நேரமாக "சூரியனே வா". "சூரியனே வா" என்று கோஷம் போட்டுக்கொண்டிருந்தான். 6 மணியானதும் சூரியன் உதயமாகிவிட் டான். அப்பொழுது பார்த்தீர்களா சூரியன் உதயமாகிவிட்டதை என்று அந்தக் கெட்டிக்காரன் சொன்னானாம். (கரகோஷமும், ஆரவாரமும்.) ஆசைதம்பி அவர்கள் சொல்வதைக் கேட்டுவிட்டு எனக்கு இந்த கதைதான் ஞாபகத்திற்கு வருகிறது. யோசித்துப் பாருங்கள். நம் நாடு முன்னேறவேண்டுமென்றால், நூல் மில்களை வைப்பதால் மட்டும் திட்டங்களை நிறைவேற்ற முடியாது. நமக்கு வேண்டிய சாமான்களை உற்பத்தி செய்வதால் மட்டும் முடியாது. இயந்திர ஆலைகள் ஏற்படுத்துவதன் மூலம்தான் திட்டங்கள் தொடர்ந்து போக வேண்டியிருக்கிறது. இயந்திர சாமான்களை நாம் வெளி நாடுகளிலிருந்து தருவிக்க வேண்டியிருக்கிறது. நான் வெளி நாடு என்று சொல்வது, நீங்கள் சொல்வது போல் அல்ல; நான் வெளி நாடு என்று சொல்வது இங்கிலாந்து, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளையேயாகும். இங்கிலாந்து போன்ற நாடுகள்தான் எனக்கு வெளிநாடுகளாகும். உங்களுக்கு எப்படியோ, எனக்குத் தெரியாது. அப் படி வெளிநாடுகளிலிருந்து தருவித்துத்தான் நமது பொருளாதார அமைப்பை முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்று நான் சொன்னால் என்றைக்கும் அப்படி வெளி நாடுகளை எதிர்பார்த்து நிற்கும் நிலை இருக்கும் என்பதல்ல. அப்படி, இவைகளை நாம் முதலில் ஏற்படுத்திவிட்டால் பின் னால் நமக்கு வேண்டிய மற்ற பொருள்களை நாமே செய்து கொள்ள முடியும்.

**Sri C. N. ANNADURAI :** அமைச்சர் அவர்கள் வெளிநாட்டிலிருந்து இயந்திரங்களை வரவழைக்கப்போவதாகச் சொன்னார்கள். அவ்விதம் வர வழைப்பதற்கு மாகாண சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** நான் அகில இந்திய திட்டத்தைப் 5-10 p.m.
பற்றி சொல்லிக்கொண்டிருக்கிறேன். அகில இந்தியாவில் அரசாங்கத்தில் இருக்கக்கூடியவர்கள் அவர்கள் செய்து முடிக்க வேண்டிய காரியங்களுக்கு மூலப்பொருள்கள், உருக்கு, இரும்பு போன்றவைகள் தேவைப்படுகின்றன. அவைகளுக்காக வெளிநாட்டை நம்பித்தான் நாம் வாழ வேண்டும்

என்கின்ற நிலை மாறி நம் நாட்டிலேயே இவைகளை உற்பத்தி செய்து கொள்ளுவதற்கான உற்பத்தி சாலைகளை உடனடியாக ஏற்படுத்த வேண்டும். அதற்கு எங்கெங்கு இயற்கை வசதிகள் அமைந்திருக்கின்றனவோ அவைகளைத் தெரிந்து, 10 அல்லது 15 வருடங்கள் என்று காத்திராமல் உடனடியாகச் செய்யக்கூடிய வசதிகள் எங்கு இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் உருக்குத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்த முறையில் தான் இன்று மூன்று உருக்கு தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு நாம் வெளி நாட்டை நம்பித்தான் வாழ வேண்டும் என்கின்ற நிலைமை மாறவேண்டும் என்பது தான் நமது எண்ணம். ஆனால் உடனடியாக உருக்குத் தொழிற்சாலையை நெய்வேலியில் கொஞ்ச காலம் கூட காத்திராமல் ஏற்படுத்தினால் என்ன என்கின்ற அடிப்படையில் சிலர் பேசினார்கள். இவைகளை ஒத்தி வைத்துவிட்டு இயற்கையான வசதிகளைக்பயன்படுத்தக்கூடாது என்று சொல்லுவது நியாயமல்ல. நாட்டைப் பிரித்துப் பேசுகின்றவர்கள் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் இந்த நாடு ஒன்றாக, ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று சொல்லக்கூடியவர்களுக்கு இந்த முறைகளால் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை வளர்ப்பது தவறானது அல்ல என்பதைத்தான் தெரிவிக்க விரும்புகிறேன். இதன் மூலமாக உற்பத்திப் பொருள் அதிகமாக கிடைப்பதற்கு அங்குள்ள தொழிற்சாலைகள் பயன்படுகின்றன. அடுத்ததாக சிந்திரியைப்பற்றி சொல்லப்பட்டது. சிந்திரி இங்கு அடிக்கடி அடிபட்ட வார்த்தை. கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்களும் கேட்டார்கள். சிந்திரி உரத்தை ஏன் நாமும் போட்டி போட்டுக்கொண்டு உற்பத்தி செய்யக் கூடாது என்று கேட்டார்கள். நான் ஒரு மாதத்திற்கு முன்னால் அங்கு போய் பார்த்தேன். இந்தத் தொழிலை நிலக்கரி இல்லாமல் செய்ய முடியாது. இந்த உபகண்டத்தில் எந்தெந்த பகுதிகளில் என்னென்ன தொழில்கள் ஆரம்பிக்க முடியுமோ அவைகளைத்தான் நாம் ஏற்படுத்த முடியும். அதில்லாமல் எந்த விதமான வசதிகளும் இல்லாமல் ஒரு தொழிலை ஆரம்பித்தால் நஷ்டம் தான் ஏற்படும். இங்கு மலையாளமும் ஆந்திரமும் ஒன்றாக இருந்த சமயத்தில் வேறு ஒரு பகுதியில் வனஸ்பதி தொழிலை ஆரம்பித்த பொழுது மலையாளப் பகுதியிலுள்ளவர்கள் நாங்களும் அதை ஆரம்பிக்க வேண்டும் என்று கூறி மலையாளப் பகுதியிலும் ஒரு வனஸ்பதி தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். அதில் அதிகமான நஷ்டம் தான் ஏற்பட்டது. இதைப்பற்றி மூன்று நான்கு வருடங்களாக பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியில் இருப்பவர்களுக்கு நன்றாக தெரியும். ஆகவே தொழிற்சாலையை ஏற்படுத்துவதுமட்டுமல்ல, அதற்கு வேண்டிய இயற்கை வசதிகளும் அமைந்திருக்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது வேறு பகுதிகளில் மூன்று உருக்குத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினார்கள் என்பதில் நாம் எந்தவிதமான குற்றமும் காண முடியாது. அவைகளை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு இப்போது பெரும் தொழில் ஆரம்பிப்பதற்காக நமது மாகாணத்திற்கு அதிகமாக பணம் செலவழிக்கப்பட்டு வருகிறதா என்பதை நாம் கணக்குப் போட்டுப் பார்த்தால் தெரியும். நாம் கூடுதலாக வாங்கிவிட்டால் பக்கத்திலுள்ள ஆந்திர ராஜ்யத்தினர் இவர்கள் அதிகமாக வாங்கிவிட்டார்கள் என்று கூறுகிறார்கள். எவ்வளவு தான் இருந்தாலும் கணக்கு கணக்கு தான். இன்றைக்கு நாம் எடுத்திருக்கின்ற முக்கியமான திட்டங்களில் ஒன்றாகிய நெய்வேலி திட்டம் தான் நமக்கு அடிப்படையாக இருக்கக்கூடியது. அதை வைத்துக்கொண்டு தான் மற்ற காரியங்கள் எல்லாம் ஏற்படுத்தவேண்டும். இதை யோசித்துப் பார்க்காமல் ஏதோ நம்முடைய திட்டங்கள் எல்லாம் நிறைவேறாமல் போய்விடுகின்றன என்று சொல்லக்கூடிய மனப்பான்மைதான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றது. முதலில் இந்த மனப்பான்மை மாறவேண்டும். நம்முடைய வளர்ச்சியைப் பற்றியுள்ள கொள்கையை அடிப்படையாகப் புரிந்து கொண்டால்தான் நம்முடைய வளர்ச்சியில் நம்பிக்கை ஏற்படும். இந்த நம்பிக்கை இல்லாததினால் தான் ஏதேதோ வாதங்களை வைத்துக்கொண்டு இருக்கின்ற சிலருக்கு இந்த மனப்பான்மை மாறாமல் இருந்து கொண்டு வருகிறது. இதனால்தான் சிலருக்கு ஏதாவது திட்டங்கள் தடைபடுகிறது என்றால் குதூகலம், ஏதாவது திட்டங்கள் நிறைவேறுகிறது என்றால்





இவர்களுக்கு சங்கடமாய் இருக்கிறது என்று நான் நினைக்க வேண்டியிருக்கிறது. நான் நினைப்பது தவறு என்றால் அதை நான் உணர்ந்துகொள்ளும்போது ஏற்றுக்கொள்ளுகிறேன். நான் இதை திரும்பத் திரும்ப சொல்லியாய்விட்டது. நாம் நிலக்கரியை உற்பத்தி செய்கிறோம் என்றால் அதை சாப்பிடுவதற்கல்ல. கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து நெய்வேலி திட்டத்தை நாம் ஆரம்பித்திருக்கிறோம். நிலக்கரியை எடுத்து வைத்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. ஒரு நாளைக்கு கூடுதலாக அது இருந்தால் அது உபயோகமற்றதாகிவிடுகிறது. ஆகவே இதிலிருந்து தான் மின்சார உற்பத்தி, உருக்கு உற்பத்தி, விவசாய எருப் பொருள் உற்பத்தி இந்த திட்டங்களுக்கெல்லாம் வசதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மின்சாரத் தொழிலைப் பொருத்தவரை இதற்கு அவசியப்படுகிற சில இயந்திரங்களுக்காக ரஷ்யாவின் உதவியைக் கேட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த திட்டங்கள் நிறைவேறும் என்பதில் நமக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும். ஆனால் இவைகளில் எல்லாம் சிலருக்கு திருப்தி இருப்பதாக தெரியவில்லை. மத்திய சர்க்காரிலிருந்து அளிக்கப்படுகிற உதவியை எடுத்துக் கொண்டால் துறைமுகங்களை மாற்றி அமைப்பதற்காக 17 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பெரம்பூர் ரெயில் பெட்டி உற்பத்தி தொழிற்சாலைக்கு இரண்டு கோடி ரூபாய், அச்சகத்துக்காக 3 கோடி ரூபாய் இவ்விதமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. உத்தரப் பிரதேசத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஜவஹர்லால் நேரு அவர்களுடைய மாகாணமாக இருக்கிறது. அல்லது மத்திய மாகாணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே எல்லாம் கொடுக்கப்படுகிற அளவைக் காட்டிலும் நமக்கு அதிகமாக கொடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் அதிகமாக கிடைக்கச் செய்ய முடியாதா என்று கேட்கலாம். ஆனால் எல்லாவற்றிற்கும் இயற்கையான ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. அலுமினிய தொழிற்சாலையைப்பற்றி இங்கு சொல்லப்பட்டன. இந்த அலுமினிய உற்பத்தி சாலையை மின்சாரம் இல்லாமல் ஆரம்பிக்க முடியாது. அதற்கு வேண்டிய மின்சாரம் நமக்கு 1960–61-ல் தான் கிடைக்க முடியும். ஆகவே அலுமினியத் தொழிலை 1960–61-ல் ஆரம்பித்தால் அதற்கு வேண்டிய அளவு மின்சாரம் கிடைக்க முடியும். இதில் சில அபிப்பிராய பேதங்களும் சில சந்தேகங்களும் இங்கே சொல்லப்பட்டன. தனியார் கையில் இதை கொடுத்து நடத்தப் போகிறார்களா அல்லது சர்க்காரே எடுத்து நடத்தப் போகிறார்களா என்ற கேள்விகள் எழுப்பப்பட்டன. நமக்கு எப்படியாவது இந்த அலுமினிய உற்பத்தி சாலையை ஏற்படுத்தியாகவேண்டும். அது பொதுத் துறையில் இருந்தாலும் சரி அல்லது தனியார் துறையில் இருந்தாலும் சரி திட்டம் வந்தாக வேண்டும். கூடிய வரை இது சர்க்கார் துறையிலே வரும் என்று தோன்றுகிறது. அப்படி வராமல் போய் தனியார் துறையில் வந்தது என்றாலும் அதற்கு சர்க்கார் குறுக்கே நிற்கபோவதில்லை. எவ்விதத்திலும் ஏற்படுத்தவேண்டும் என்பது தான் நமது முதல் குறிக்கோள். இதல்லாமல் ஏதோ நாங்கள் இதை எடுத்து நடத்துவதற்கு பின்வாங்கிவிட்டோம் என்று சொல்வது அவ்வளவு சரியல்ல என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளுகிறேன். குறிப்பாக நமது ராஜ்யத்தில் பம்பாய், வங்காளம், கிழக்கு பீஹார் இந்த பகுதிகள் தவிர மற்ற பெரும் பகுதிகளாக இருக்கின்ற எந்த பகுதியை எடுத்துக் கொண்டாலும் சரி, தொழில் துறையில் எந்த வகையிலும் நாம் பிற்போக்காக இல்லை என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Sri C. N. ANNADURAI : கனம் அமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தூத்துக்குடி வியாபாரிகள் சங்கத்தில் பேசும் பொழுது நமது நாட்டில் கனரகத் தொழில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். . .

The Hon. Sri C. SUBRAMANIAM : ஆம், இதைத்தான் நான் சொல்லுகிறேன். ஏதோ நாம் அதிகமாகக் கேட்டோம், கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டால், அவற்றையெல்லாம் சிலர் இவ்விதமான பிரசாரத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். குறிப்பாக திராவிட முன்னேற்ற கழகத்திற்கு ஏதாவது போட்டிருக்கின்ற திட்டங்களில் தடை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது அவர்களுக்கு வெற்றி

[Sri C. Subramaniam] [8th March 1958

தான். எதை எப்படிப் பேசினாலும் அதைப்பற்றி பரிசீலித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் திட்டங்கள் போடப்பட்டிருக்கிறது. இந்த காரியங்களை செய்தாகவேண்டும். இவைகளுக்கெல்லாம் மத்திய சர்க்காரிலிருந்து நியாயமாகத்தான் பிரித்துக் கொடுக்க முடியும். "ஏதோ இவர்கள் 10 லட்சம் கேட்டார்கள், அவர்கள் 5 லட்சம் தான் கொடுத்தார்கள்; பார். . .இந்திய சர்க்கார் அநீதி இழைத்துவிட்டது. ." என்று பத்திரிகையில் போட்டுவிடுகிறார்கள். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஜவஹர்லால் நேரு அவர்கள் வேண்டுமானால் மகா புருஷராக இருக்கலாம். ஆனால் எல்லோரும் அவரைப் போல் இருந்துவிட முடியாது. மற்றவர்களெல்லாம் சாதாரண மனிதர்கள்தான். திருத்தணியை எடுத்துப் பாருங்கள். திருத்தணி பிரிந்து போகக்கூடியது என்று சொன்னவுடனே அங்கு ஒன்றும் வேலை செய்யாமல் விட்டுவிட்டார்கள். பிரிந்து போகக்கூடியவர்களுக்கு நாம் ஏன் செய்யவேண்டுமென்று விட்டுவிட்டார்கள். அதே போலத்தான் அரசாங்கமும். நடக்காத காரியத்தைச் சொல்லிக் கொண்டு, பிரிந்து போகப் போகிறோம், பிரிந்து போகப் போகிறோம் என்று சொன்னால், நேரு அவர்கள் பொருட்படுத்தவில்லை, பொருட்படுத்த மாட்டார்கள் என்று சொன்னாலும், பிரிந்து போகக் கூடியவர்களுக்கு ஏன் கொடுக்க வேண்டும் என்ற மனப்பான்மை வளரத்தான் செய்யும். எல்லா விதத்திலும் காரியத்தைச் செய்வதற்கு தடையாக இருக்கிறார்களே, ஆகாத காரியத்தைப் பற்றி வாதம் செய்து கொண்டிருக்கிறார்களே என்று சொல்வதற்குக் காரணம் இதுதான். கனம் அண்ணாதுரை அவர்கள், வெகு விரிவாக, திராவிடஸ்தான் என்பது நம் மனதில் நன்றாகப் பதிய வேண்டும், அந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற முறையில் சொன்னார்கள். அவர்கள் இன்னும் அழகாகச் சொன்னார்கள். வித்திட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதுவும், வித்திட்டு, தண்ணீரையல்ல—கண்ணீரை ஊற்றி வருகிறோம் என்று சொன்னார்கள். போட்டிருக்கிற வித்து முளை விட்டு, செடியாகி, பலன் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். வாஸ்தவம் தான். போட்டிருக்கிற வித்து முளைக்கக்கூடிய வித்துத் தானா?—முளைக்கக் கூடிய வித்தாக இருந்தால்தானே முளைக்கும்?—இதைத்தான் நான் சற்று ஆராய்ச்சி செய்து பார்த்தேன்.

**SRI C. N. ANNADURAI**: போட்ட வித்து நல்லதா, கெட்டதா என்பது வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்குத் தெரியாது. அந்த வித்தை போட்டவர்களுக்குத் தான் தெரியும்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: ஆகையால் தான் இப்படி ஒரு வித்தைப் போட்டு, அதற்கு கண்ணீரை விட்டுக் கொண்டிருக்கிறார்களே—வித்து எப்படிப்பட்டது என்று தெரியாமல் போட்டிருக்கிறார்களே—அந்த வித்து எப்படிப்பட்டது என்று ஆராய்ச்சி செய்து பார்த்தேன். அப்படி ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது அந்த வித்து எப்படி ஆரம்பித்தது, அந்த வித்து என்ன, அந்த வித்தின் தரம் என்ன, என்றெல்லாம் அறிய முடிந்தது. இன்றைய தினம் கனம் அண்ணாதுரை இதைப் பற்றிப் பேசாமல் இருந்தால் கூட, நான் பேசவேண்டும் என்று எண்ணிக் கொண்டு தான் வந்தேன். ஆகையால் தான் இன்றைக்கு . . .

**MR. SPEAKER**: If the Hon. Minister is to finish by 6 o'clock, he must not yield to frequent interruptions.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: It does not matter, Sir.

**MR. SPEAKER**: Frequent interruptions affect continuity of thought also.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: I am accustomed to it. Sir, I think I can finish by 6 o'clock. ஆகையால்தான் இந்த வித்து என்ன—மூலம் என்ன இந்த இயக்கத்திற்கு—என்பதைப் பார்க்க வேண்டுமென்று, முதலிலிருந்து அதன் சரித்திர வரலாற்றைப் எடுத்துப் பார்த்தேன். இதை நான் அவர்கள் நன்மைக்காக சொல்லவில்லை—இது அவர்களுக்குத் தெரிந்த விஷயம்—ஆனால் மற்றவர்களில் பலருக்கு இது தெரிந்திருக்காது—அவர்களும் இதை அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் இதைச் சொல்லுகிறேன். சென்ற தடவை பேசும்போது நான் "உங்கள் சுய ரூபம் தெரிந்து விட்டது" என்று சொன்னேன். அப்போது "எங்கள் சுயரூபத்தை என்ன கண்டு விட்டீர்கள், எங்கள் சுயரூபத்தைப் பார்க்க முடியாது" என்று கனம் அண்ணாதுரை அவர்கள் சொன்னார்கள். அது என்ன அந்த சுயரூபம், ஆராய்ச்சி செய்து பார்த்தால் கூடத் தெரியாதா என்ன?—வெளியே தெரியாமல் மறைத்து வைப்பது ஆபத்தாக இருக்கும் என்று நினைக்கிறேன்—ஆகவே அந்த சுய ரூபம் எத்தகையது என்று ஆராய்ச்சி செய்து அந்த அடிப்படையில் சொல்ல விரும்புகிறேன். இந்த இயக்கம்—சுய மரியாதை இயக்கம் என்ற பெயரில்—ஒரு அரசியல் கட்சியாக இருக்கவில்லை—வெறும் பிரசார சங்கமாக இருந்தது என்று அதன் வரலாறு கூறுகிறது. அண்ணா அப்போது இல்லை—தளபதி அப்போது இல்லை. (ஏதோ குறுக்கீடு) நீங்கள் எப்போது ஒட்டினீர்கள்? அந்தக் கதைக்கும் வருகிறேன். முதன் முதலாக இந்த சுயமரியாதை மாநாடு நடந்தது 1929-ம் வருஷத்திலே. செங்கல்பட்டில் மாநாடு நடந்தது. அதிலே அரிய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. என்ன அந்த அரிய கருத்துக்கள்? "சைமன் கமிஷன் பகிஷ்காரம் நியாயமல்ல" என்ற அரிய கருத்து தெரிவிக்கப்பட்டது. அதாவது சைமன் கமிஷனை வரவேற்க வேண்டும்—இது தான் சுய மரியாதை—என்று அப்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



8th March 1958]. [Sri C. Subramaniam]

**SRI C. N. ANNADURAI**: இந்த சுயமரியாதை மாநாட்டுக்குத் தலைமை வகித்த டாக்டர் சுப்பராயன் தங்கள் கட்சியைச் சேர்ந்தவர் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

**THE HON. SRI K. KAMARAJ**: அவருக்கு ஞாபகக் குறைவோ என்னவோ தெரியாது. அந்த மாநாட்டுக்குத் தலைமை வகித்தது சௌந்திர பாண்டியன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: டாக்டர் சுப்பராயன் இந்த சுயமரியாதை மாநாட்டுக்குத் தலைமை வகிக்கவில்லை என்று எனக்குத் தெரியும். அதற்குப் பிறகு 1930-ம் ஆண்டிலே கதை சொல்லுகிறேன் கேளுங்கள் . . .

**SRI C. N. ANNADURAI**: அமைச்சர் அவர்களுக்கு கதை சொல்லுவதிலே சுவையாக இருக்கலாம். அதை நாங்களும் வரவேற்கிறோம். ஆனால் அவர்கள் சொல்லுகின்ற கதை . . .

**THE HON. SRI C. SUBRAMANIAM**: உங்கள் புத்தகத்தில் நீங்கள் எழுதியதைத் தான் நான் எடுத்துப்பேசுகிறேன்.

*கனம் சுப்ரமணியம் அவர்களும் கனம் அண்ணாதுரை அவர்களும் நின்று கொண்டிருந்தனர்.*

**MR. SPEAKER**: ஒரு சமயத்தில் ஒருவர் தான் பேசவேண்டும். யாராவது ஒருவர் பேசுங்கள்.

*ஸ்ரீ அண்ணாதுரை அமர்ந்தார்.*

**THE HON. SRI C. SUBRAMANIAM**: நீங்கள் எழுதியதிலிருந்து நீங்கள் பேசியதிலிருந்து எடுத்து டைப் அடித்துக்கொண்டு வந்திருக்கிறேன். இதோ, புத்தகம் வேண்டுமானாலும் கையிலேயே வைத்திருக்கிறேன். என்னுடைய சௌகரியத்திற்காக அதிலிருந்து எடுத்து டைப் அடித்து வைத்துக் கொண்டிருக்கிறேன். வேறு ஒன்றுமில்லை. 1930-ம் ஆண்டில் ஈரோட்டில் இரண்டாவது சுயமரியாதை மாநாடு நடந்தது. அப்போது அவர்கள் அரசியல் பக்கம் போகவில்லை. நல்ல வேலையாக சமூக சீர்திருத்தத்தை எடுத்துக்கொண்டு—அரசியல் பக்கம் போகாமல்—புத்திசாலித்தனமாக முடித்து விட்டார்கள். அத்துடன் சமூக சீர்திருத்தத்திலேயே இருந்திருந்தால் அவர்கள் வெற்றி பெற்றிருக்கக்கூடும். அடுத்தபடியாக 1931-ம்

ஆண்டில் ஷண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில்—அதைத் தான் டாக்டர் சுப்பராயன் என்று நினைத்தார்கள் போலிருக்கிறது—விருதுநகரில் மாநாடு நடந்தது. அதிலே முக்கியமான தீர்மானம் என்னவென்றால், "தேசீயத்தின் பெயரால் இந்தி பாஷையைக் கற்றாக வேண்டும் என்பது வருணாசிரமத்திற்கு ஆதரவு கொடுப்பதாகும்" என்ற தீர்மானம் அங்கே நிறைவேற்றப்பட்டது. அதற்குப் பிறகு 1932-ம் வருஷத்திலே—இந்தத் தீர்மானம் எல்லோராலும் வரவேற்கப்படக் கூடியது—நானும் ஒப்புக் கொள்ளுகிறேன்—நிறைவேற்றப்பட்ட தீர்மானம் "பிரிட்டிஷ் முதலிய எந்த வித முதலாளித் தன்மை கொண்ட ஆட்சியினின்றும் இந்தியாவை பூர்ண விடுதலை அடையச் செய்வது". சுயமரியாதை இயக்கத்தின் சரித்திரத்திலேயே நல்ல தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று எல்லோராலும் ஒப்புக் கொள்ளக் கூடிய தீர்மானம் இதுதான். 1932-ம் வருஷம் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பற்றி ஒன்றும் குறை சொல்லவில்லை. 1940-ம் ஆண்டிலே, ஈ. வி. ராமசாமி நாயக்கர் அவர்கள் தலைமையின் கீழ் 15-வது மாநாடு நடைபெற்றது. தீர்மான உருவில் முக்கியமான தீர்மானம் அப்போது நிறைவேற்றப்பட்டது. "திராவிடர்களுடைய கலை, நாகரீகம்,"—தளபதி அப்போது வந்து விட்டார்—"பொருளாதாரம் ஆகியவைகள் முன்னேற்றமடைவதற்கு, பாதுகாப்பதற்கு திராவிடர்களின் அகமாகிய சென்னை மாகாணம் "—பிரியவேண்டியதில்லை—" இந்திய மந்திரியின் நேர்ப் பார்வையின் கீழ் ஒரு தனி நாடாகப் பிரிக்கப்படவேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது". டில்லி என்று சொன்னால் ஆதிக்கம் வந்து விடும். இந்திய பார்லிமெண்ட் என்று சொன்னால் ஆதிக்கம் வந்துவிடும். இங்கிலாந்து என்று சொன்னால் அது தங்கள் நாடு—வேறு நாடல்ல—என்று நினைத்து அதை வைத்துக்கொண்டு சொல்லியிருக்கிறார்கள் போலிருக்கிறது. அரசியலைப் பற்றித் தீர்மானித்திருக்கிறார்கள். "சென்னை மாகாணம் இந்திய மந்திரியின் நேர்ப்பார்வையின் கீழ் ஒரு தனி நாடாகப் பிரிக்கப்படவேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது" என்று சொல்கிறது அந்தத் தீர்மானம். இதிலே திராவிட மன்னர் இறந்து விட்டார்கள் என்று துக்கம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அப்புறம் 1944-ல் ஒரு முக்கியமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 1944-ல் இங்கு இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பெரும் பங்கு எடுத்துக் கொண்டு ஒரு தீர்மானத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதிலே "இந்த மாநாடானது ஜஸ்டிஸ் கட்சி என்று அழைக்கப்படும் இக்கட்சிக்கு உள்ள தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரை திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றத் தீர்மானிக்கிறது" என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மற்றொன்று, "அதன் முக்கிய கொள்கைகளில் திராவிட நாடு என்ற பெயருடன் நம் சென்னை மாகாணம் மத்திய அரசாங்க நிர்வாகத்தின் ஆதிக்கம் இல்லாததும், நேரே பிரிட்டிஷ் செக்ரட்டரி ஆப் ஸ்டேட்டின் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டதுமான ஒரு தனி மாகாணமாக"—பிரிட்டிஷ் செக்ரட்டரி ஆப் ஸ்டேட்டின் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்ட தனி மாகாணமாக—தனி நாடாக இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை—" பிரிக்கப்படவேண்டும்" என்று அதன் முதற் கொள்கையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்ற இந்தத் தீர்மானம் தெரிவிக்கிறது. இது மிகவும் முக்கியமான தீர்மானம். "அண்ணாதுரை தீர்மானம்" என்று புகழ்பெற்ற தீர்மானம் இந்த மகாநாட்டில் தான் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. அவர்கள் இங்கே இருப்பதனால், அந்த வாசகத்தை—அவர்கள் மறந்திருந்தாலும் கூடப் படிக்கிறேன்—ருசிகரமாகக் கேட்பார்கள் என்று நினைக்கிறேன்.

**SRI C. N. ANNADURAI** : நானே கொண்டுவந்த தீர்மானம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்பொழுதிருந்த அரசியல் சூழ்நிலையை விளக்கிவிட்டு தீர்மானத்திற்குப் பொருள் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : கனம் அண்ணாதுரை அவர்களே விளைவுகளையெல்லாம் நல்ல முறையில் எடுத்துச் சொல்லி, எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லாதபடி விளக்கியிருக்கிறார்கள். (கனம் ஸ்ரீ கே.





காமராஜ் : அப்பொழுது நாங்கள் எல்லோரும் ஜெயிலில் இருந்தோம்.) சூழ்நிலையை விளக்கிச் சொல்லுகிறேன். சூழ்நிலை இல்லையென்றால் இதற்கு அர்த்தம் கிடையாது. அந்த சமயத்தில் ரொம்பவும் தெளிவாக வாசகத்தை அமைத்திருக்கிறார்கள். அதற்குப் பூரண பெருமையை கொடுக்கத் தயாராய் இருக்கிறோம்.

1944-ல் சூழ்நிலை எப்படியிருந்தது என்றால், நாமெல்லோரும் ஜெயிலில் இருந்தோம். வெள்ளைக்காரர்கள் வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்ட கட்டம். வெள்ளைக்காரர்கள் போய்விடுவார்கள் என்று சிலர் நினைத்தார்கள். போகக் கூடாது, போக மாட்டார்கள் என்ற நம்பிக்கை சிலருக்கு இருந்துகொண்டிருந்த கட்டம். இம்மகாநாட்டில் திரு. அண்ணாதுரையின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்பொழுது தீர்மானத்தின் வாசகத்தைப் பார்ப்போம். இது தான் தீர்மானம் :

"இதுவரை அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்து வந்ததினால் கட்சி மக்களின் ஏளனத்திற்கு இலக்காகியதென்றும், சர்க்கார் மெச்சும்படி நடந்துவந்த போதிலும்,"—கவனியுங்கள், அப்பொழுதிருந்த சர்க்கார் மெச்சும்படி அவர்கள் நடந்து வந்திருக்கிறார்கள்—, "கட்சியை சர்க்கார் அலட்சியப்படுத்தி விட்டதென்றும், ஆகவே அரசாங்கத்திடம் கொண்டுள்ள போக்கை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும்" அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டது.

கால நிலைமையைப் பற்றியும் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். தீர்மானத்தின் முதல் பகுதி பின்வருமாறு :

"கால நிலைமையையும், உலகப் போக்கையும், சர்க்கார் நிலையையும், நம் மக்கள் தன்மையையும், இதுவரை நாம் நடந்து வந்ததன் மூலம் ஏற்பட்ட அனுபவத்தையும், அதனால் உண்டான பலனையும், மற்ற ஸ்தாபனங்களுக்கும் சர்க்காருக்கும் இருந்துவரும் நிலைமையையும், அதனால் அவைகளுக்கு ஏற்பட்ட பலனையும் நன்றாக ஜாக்கிரதையாக ஆலோசித்துப் பார்த்ததில் நம் சமுதாயத்தின் எதிர்கால நலனைக் கோரியும், நம் கட்சியின் தன்மானத்தைக் கோரியும் நமது கட்சியின் பேரால் இதுவரை நமக்கும் சர்க்காருக்கும் இருந்து வரும் போக்கை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு நாம் தள்ளிக்கொண்டு போகப்பட்டு விட்டோம்"—கட்சியின் தன்மானத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்—"அதாவது, நம் கட்சி தோன்றியகாலம் முதல் இதுவரை நாம் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைத்து வந்ததும், சர்க்காருடன் ஒத்துழையாமை செய்து சர்க்காருக்குத் தொல்லை கொடுத்துவந்த ஸ்தாபனங்களையும் எதிர்த்துப் போராடி சர்க்காருக்கு அனுகூலமான நிலைமையை உண்டாக்க உதவி செய்து வந்ததும், குறிப்பாக சென்ற ஐந்து வருடகாலமாக நடந்து வரும் உலக யுத்தத்தில் நல்ல நெருக்கடியில், நேச நாடுகளின் வெற்றிக்குக் கேடு உண்டாக்கும் நிலையில் நம் நாட்டில் பல ஸ்தாபனங்கள் செய்து வந்த பெருங்கிளர்ச்சிகளையும் நாச வேலைகளையும் எதிர்த்து அடக்குவதிலும், நேச நாடுகளுக்கு வெற்றி உண்டாக பணம், ஆள், பிரசாரம், முதலியவைகள் நிபந்தனையின்றி சர்க்காருக்கு உதவி வந்ததும்"—இப்பொழுது சொல்லப்போவது மிகவும் முக்கியமானது—"சர்க்காராலும், பாமர மக்களாலும் நம் கட்சியை இழிவாகக் கருதப்படத்தக்க நிலை ஏற்படுவதற்குப் பயன்பட்டுவிட்டது"—அப்பொழுதே சர்க்காராலும், பாமர மக்களாலும் அவர்கள் கட்சியை இழிவாகக் கருதக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது. மேலும் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம். "இந்திய அரசியல் சமூக இயல் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் சர்க்கார் நம் கட்சியையும், நம் இலட்சியமாகிய திராவிட பிரிவினையையும் அலட்சியம் செய்து வருகிறார்கள். இந்திய மக்களின் அரசியல், சமுதாய இயல் சம்பந்தமான ஸ்தாபனங்களில் நம் ஸ்தாபனம் குறிப்பிடத்தக்கதாகவும், நீதி நெறி உடையதாக இருந்து ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டு சர்க்கார் மெச்சும்படி நடந்து வந்தும் நம் ஸ்தாபனம் சர்க்காரால் மற்ற சாதாரண ஸ்தாபனங்களோடு ஒன்றாகக்கூட சேர்த்துப் பேசுவதற்கில்லாததாக அலட்சியப்படுத்தப்பட்டது." இதுதான் ஸ்ரீ அண்ணாதுரையின் புகழ்பெற்ற தீர்மானம். வந்தது கோபம் அவர்களுக்கு.

[8th March 1958

SRI A. V. P. ASAITHAMBI : இதிலிருந்து கனம் மந்திரி அவர்கள் அறிவது என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : சொல்லுகிறேன். அறிஞரே அதை அறிந்து தான் சொல்லியிருக்கிறார்கள். (சிரிப்பு.) அவர்களுக்கு ஏன் கோபம் ஏற்பட்டது, எதனால் இந்த விரக்தி ஏற்பட்டது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள் : "மாகாண கவர்னராலோ, கவர்னர் ஜெனரலாலோ, இந்திய மந்திரியாலோ, பிரிட்டிஷ் முதல் மந்திரியாலோ, இந்திய அரசியல் கட்சிகளைப் பற்றி பல தடவை பேச ஏற்பட்ட சந்தர்ப்பங்களில், ஒன்று இரண்டு தடவை கூட, நம் சமுதாயத்தையோ, நம் ஸ்தாபனத்தையோ, நம் இலட்சியத்தையோ குறிப்பிட கட்டுப்பாடாய் மறுத்தே வரப்பட்டிருக்கிறது." இந்த நிலையில் தான் விரக்தி ஏற்பட்டது. அப்பொழுது இருந்த நிலையிலே, எல்லாவற்றையும் துறந்து—ஏன், உதறிக்கூடத் தள்ளியிருப்பார்கள். "தாஸானுதாஸனாக நாங்கள் எல்லோரும் இருந்தும் எங்களை எல்லோரும் புறக்கணிக்கிறார்கள்" என்ற வாசகத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். தீர்மானத்தின் முதல் பகுதியில் எப்படிப்பட்ட திராவிட நாட்டைக் கேட்டார்கள்? "நாங்கள் திராவிட நாடு கேட்கிறோம், அந்த திராவிட நாடானது ஸெகரட்டரி ஆப் ஸ்டேட்டின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தால் போதும், நேர்மையாக நீங்களே நடத்துங்கள், நாங்கள் சுயராஜ்யம் கேட்கவில்லை, உங்களுக்கு அடிமையாய் இருப்பதற்குத் தயாராய் இருக்கிறோம், அப்படியிருந்தும் கூட எங்களைப் புறக்கணிக்கிறீர்களே" என்றெல்லாம் கேட்டார்கள். இந்தப் பெயர் பெற்ற, புகழ்பெற்ற தீர்மானம் (சிரிப்பு) 1944-ல் திரு. அண்ணாதுரையின் தலைமையிலே நிறைவேற்றப்பட்டது.

SRI C. N. ANNADURAI : இந்தத் தீர்மானம் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து வந்த போக்கை மாற்றுவதற்கு, என்னைப் போன்றவர்கள் உள்ளே புகுந்த காலத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு புரட்சிகரமான தீர்மானம். காங்கிரஸ் கட்சியானது ஒரு காலத்தில் பிரிட்டிஷுக்குத் துதிபாடிக் கொண்டும், மனுக்கள் எழுதிக்கொண்டும், தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டும் இருந்திருக்கிறது. என்னுடைய அரசியல் வாழ்விலேயே இதைப் பாராட்டுதலுக்குரியதாக நான் கருதுகின்றேன். இதிலும் குற்றம்குறை இருப்பதாகத் தெரியவில்லை. அரசியல் சூழ்நிலை என்ன என்பதை விளக்கி விட்டு, இந்தியாவுக்கு விடுதலை தந்துவிடுகிறோம் என்பதை வெள்ளைக்காரர்கள் ஏற்றுக்கொள்ளாமல், பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்த காரணத்தினாலே, எப்படியாவது விடுதலை தருவதாய் இருந்தாலும், ஓத்திப் போடுவதாய் இருந்தாலும் டில்லியிடத்தில் இல்லாமல், லண்டனில் வைத்திருக்க வேண்டுமென்று கேட்டோமே தவிர, விடுதலை கூடாது என்பது அல்ல. விடுதலை வேண்டுமென்று நாங்களே கேட்டிருக்கிறோம்.

SRI T. S. RAMASWAMY PILLAI : On a point of order, Sir, I would like to know whether it is correct for the Hon. Leader of the House, instead of replying to the debate and discussion on the budget, to deal with the entire history of D.M.K. We are not interested in it. We are interested in the Budget.

MR. SPEAKER : It is perfectly in order. The Hon. Minister may continue.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஸ்ரீ அண்ணாதுரை பேசியதிலிருந்தும் எங்களை திராவிடஸ்தானுக்கு இழுக்கவேண்டுமென்கிறதினாலே, அதன் அடிப்படையென்ன, தத்துவம் என்ன, பூர்வீகம் என்ன என்பதை ஆராயாமல் ஒரு கட்சியிலே சேரமுடியுமா? அதற்காகத்தான் இதையெல்லாம் சொல்லுகிறேன். சொன்னார்கள், காங்கிரஸ் செய்யவில்லையா, நாங்கள் செய்வதில் தவறு என்ன என்று. காங்கிரஸ் ஒன்றும் செய்யவில்லை. 60 வருஷம் பின்தங்கியிருந்தார்கள் என்பதுதான் குற்றச்சாட்டு.

SRI C. N. ANNADURAI : 60 வருடங்களுக்கு முன் பிறந்தது குற்றமாக இருக்கலாம்.



8th March 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்றைக்குக் குழந்தைகள் பிறக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே மேலே நோக்கிப் போகிறார்கள். இந்த நூற்றாண்டிலே பிறந்தாலும் கூட, 1,600, 1,700 லிருந்து வாழ்க்கையை ஆரம்பிக்கிறார்கள் என்பதை வாழ்க்கையிலே பார்க்கிறோம். ஆகவே, இந்த அடிப்படையில் பிறந்ததுதான் திராவிட நாடு.

There were interruptions by Sri C. N. Annadurai.

One or two other Members of the Opposition were also interrupting without standing up in their seats.

MR. SPEAKER : In a debate there is no objection to interruptions ; but they must be relevant. No Member however big he may be can make a second speech. If any hon. Member wants to make a personal explanation, he can do so at the end, but no point of information or point of explanation is permissible during a speech. I deprecate talks across the table ; I shall not permit it. Not only that, if we go on at this rate, we will have to sit for two days and every Member will make a second speech. I want to put down this sort of talk across the table. I have already made an appeal, but the appeal has had no effect. I shall have to insist on maintaining the order of the House.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைச் சொல்வதிலே சிலர் மனதுக்கு கஷ்டமாக இருந்தாலும் கூட, உண்மைகளை நேரிடையாகப் பார்த்துத்தான் ஆகவேண்டும். இதுமாதிரி தமிழர்கள் இருந்தார்கள் என்பதில் வெட்கப்படுகிறேன். இந்தப் பிரச்னையை அவர்கள் நம்முன் கொண்டுவந்து வைக்கும்போது, பரிசிலனை செய்யாமல் நீங்கள் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று சொல்லும்போது, மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லாமல் எப்படி விடுவது? இதைச் சொல்வதில் நான் பெருமைப்படவில்லை. ஓரளவு சிறுமைதான் அடைகிறேன். ஏனென்றால் இவைகள் நம் தமிழ் நாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள். இதைச் சந்தோஷத்துடன் நான் சொல்லிக்கொள்ள முடியாது.

தளபதி அண்ணாத்துரை திராவிட நாடு வேண்டும் என்பதற்காக 15 5-4[illegible] p.m.
காரணங்களைக் கூறியிருக்கிறார்கள். அவை எவ்வளவு தூரம் இப்பொழுது பொருந்தும் என்று பார்த்தேன். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் அவை அபத்தமாக இருக்கின்றன. தளபதி அண்ணாத்துரை எழுதி இருக்கக்கூடிய குறிப்புகளை எல்லாம் 1957-ம் வருஷம் தொகுத்து வெளியிடப்பட்ட புத்தகம் "இலட்சிய வரலாறு". இதில்தான் அண்ணாத்துரை 15 காரணங்களையும் குறிப்பிட்டிருக்கிறார். காலம் குறைவாக இருப்பதினால் சிலவற்றை மட்டும் எடுத்துக் கூறி நிறுத்திக்கொள்கிறேன். மற்றவைகளை யார் வேண்டுமானாலும் அந்தப் புத்தகத்திலிருந்து படித்துக் கொள்ளலாம்.

"இந்தியா என்பது ஒரு கண்டம். எனவே, அது பல நாடுகளாகத்தான் பிரிக்கப்படவேண்டும். ஐரோப்பாக் கண்டத்தில் 32 தனித்தனி நாடுகள் உள்ளன. ஐரோப்பா முழுவதும் ஒரு குடைக்கீழ் இருக்க வேண்டுமென யாரும் கூறவில்லை. இந்தியாவும் ஒரே குடையின்கீழ் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை" என்று கூறியிருக்கிறார்.

இதற்குப் பிறகுதான் ரொம்பவும் முக்கியமான காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையில்தான் அவர் திராவிட நாடு வேண்டும் என்று சொல்லுகிறார்.

"சுதேச சமஸ்தானங்கள் மட்டும் 574 உள்ளன. அவைகளில் தனித் தனி ஆட்சி, தனித்தனி முறை. அதுபோல், மூன்று பெரும்பகுதிகள் தனித்தனி ஆட்சி முறையுடன் தத்தமது இன இயல்புகளை வளர்த்துக் கொள்ள வழி தேடிக்கொள்வது தடுக்க முடியாத உரிமை."

[Sri C. Subramaniam] [8th March 1958

அந்தக்காலத்தில் 574 சமஸ்தானங்கள் இருந்தன. அவைகள் போக வேண்டும் என்று தைரியமாகச் சொல்லவோ, அப்படி நினைக்கவோ கூட இவர்களால் முடியவில்லை. அவைகள் சாசுவதமாக இருக்கும் என்ற நம்பிக்கையின் மேல் வகுக்கப்பட்டது, திராவிட நாடு கோரிக்கை. இந்தியா சுதந்திரமடைந்து 574 சமஸ்தானங்களும் இந்திய யூனியனுடன் இணைந்து ஒன்றுபட்டு இருக்கும்போது இந்த கோரிக்கை பொருத்த மற்றது. ஜவாஹர்லால் நேரு வெளிநாட்டுக் கொள்கையை வகுத்துக் கொடுத்திருப்பதைப் போல் தளபதி அண்ணாத்துரையும் வெளி நாட்டுக் கொள்கையை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, "மதம், மொழி, கலை, மனோநிலை, ஒரு குடி மக்கள் என்ற உணர்ச்சி, வரலாற்று பந்தத்துவம், இவைகள்தான் இன இயல்புகள். இந்த முறையில் பார்த்தால் இந்தியாவில் தனித்தனி இனங்கள் பல உள்ளன. அவைகளை மூன்று பெரும் பிரிவுகளாகக் கொள்ளலாம். திராவிடர், முஸ்லீம், ஆரியர் என்றும் இந்த மூன்று இனங்களில் திராவிடரும் முஸ்லீமும் இன இயல்புகளில் அதிகமான வித்தியாசம் இல்லாதவர்கள்". இப்பொழுது எல்லாம் அவர் ஆரியர் என்று சொல்வதில்லை. வட நாடு தென் நாடு என்று சொல்லுகிறார்கள். "The affinity is only between Dravidians and Muslims" என்று சொலலுகிறார்கள்.

"ஆரிய இன இயல்புகளுக்கும் மற்ற இரு இன இயல்புகளுக்கும் துளியும் பொருத்தம் கிடையாது. பகைமை பெரிதும் உண்டு. இந்தத் தனித் தனி இன இயல்புகள் இருப்பதால், இன வாரியாக இந்தியா பிரிக்கப் பட்டால்தான் அந்தந்த இனத்துக்கென இடமும் ஆட்சியும் கிடைக்கும். இல்லையேல் எந்த இனம் தந்திரத்தாலும், சூது சூழ்ச்சியாலும் தன்னலத் துக்காகப் பிறரை நசுக்கும் சுபாவத்தாலும் கைதேர்ந்து இருக்கிறதோ அந்த இனத்திற்கு மற்ற இனங்கள் அடிமைப்பட்டு வாழ வேண்டி நேரிடும்."

திராவிடரும், அதை ஒட்டி இருக்கக்கூடிய முஸ்லீம்களும், பாகிஸ்தானுடன் உறவு கொண்டு இந்தியாவை எதிர்த்து, காஷ்மீரை காப்பாற்று வதற்கு பதிலாக, பாகிஸ்தானுடன் சேர வேண்டும் என்ற ஒரு பெரிய வெளிநாட்டுக் கொள்கை இதில் விளக்கப்பட்டிருக்கிறது. முஸ்லீம்கள் என்றால் யார்? இங்கு இருக்கக்கூடிய முஸ்லீம்களா? மற்றவர்களா? எனக்கு இதைப்பற்றி விளக்கம் தேவையில்லை. மற்றவர்கள் இதைப் பற்றி தெரிந்துகொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

பிற்கால இந்தியாவைப் பற்றி தீர்க்க தரிசனமாக சில வார்த்தைகளை அண்ணாதுரை சொல்லி இருக்கிறார்.

"இந்தியா பிரியாது இருந்ததால் இதுவரை ராணுவப் பொருளாதார அறிவுப் பலம் வளர்ந்ததாகவோ இந்திய இனம் என்ற புது சமுதாயம் அமைந்ததாகவோ கூற எந்த ஆதாரமும் இல்லை. ஒரு இனத்தின் குரல் வளையை மற்றொரு இனம் அழித்து நெரித்துக் கொல்லாது போவதற்குக் காரணம் எல்லா இனத்தையும் பிரிட்டிஷ் துப்பாக்கி ஏக காலத்தில் அடக்கி வைத்திருந்ததால்தான். எனவே, பிரிட்டிஷ் பிடி போய்விட்டால் இந்தியா இரணகளமாகும். இதற்கு ஐரோப்பாவில் அடிக்கடி நடக்கும் போர் ஒரு உதாரணம். எனவே, இத்தகைய இன்னல்கள் உண்டாகா திருக்க இனவாரியாக இடம் பிரித்து விடுவதே, ஆபத்தைத் தடுக்கும் வழி."

இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ்காரர் போய்விட்டால் எங்கு பார்த்தாலும் இரணகளமாகிவிடும் என்ற நல்ல எண்ணத்துடன் பிரிட்டிஷ்காரர் இருக்க வேண்டும் என்றும், சுயராஜ்யத்திற்கு விரோதமாக அல்ல என்றும் தெளிவு படுத்தியிருக்கிறார். இந்த தீர்க்க தரிசனமான அடிப்படையில்தான் திராவிட நாடு வேண்டும் என்று கோரியிருக்கிறார். இதைப்போல மொத்தம் 15 காரணங்களைச் சொல்லியிருக்கிறார். அவைகளைப் படிக்க நேரம் ஆகும், அவசியமும் இல்லை.

கல்விக் கொள்கையையும் இவர்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். 1929-ம் வருஷத்தில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



8th March 1958] [Sri C. Subramaniam]

"பள்ளிக்குப் போகத்தக்கச் சிறுவர் சிறுமிகளுக்கு ஆரம்பக் கட்டாயக் கல்வி மாத்திரம் பொது நிதிகளிலிருந்து போதிக்கப்பட வேண்டும்" என்றும், "உயர்தரக் கல்விக்கு பொது நிதிகளை செலவழிக்கக்கூடாதென்றும், அப்படி செலவழிக்கப்பட வேண்டிய அவசியமிருந்தால், வகுப்புவாரி விகிதப் படி மாணவர்களைத் தெரிந்தெடுத்துப் போதிக்கப்பட வேண்டும்" என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிறகு 1944-ம் வருஷத்தில் சேலத்தில் "அரசியல் நிர்வாகத் தேவைக்கு மேற்பட்ட கல்வியின் பொறுப்பையும் உயர்தரக் கல்வி என்று சொல்லப்படு வதின் பொறுப்பையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதோடு பொது நிதியிலிருந்து அவைகளுக்கு செலவழிக்கவும் கூடாது" என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி சுயராஜ்யம் பெற்ற பிறகும் கூட, 1948-ம் வருஷம் மே மாதம் தூத்துக்குடியில், "நாட்டில் மத சம்பந்தமில்லாத ஆட்சி நிலவ வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு விட்டதால் பள்ளிக்கூடத்தில் மத சம்பந்தமான, புராண சம்பந்தமான பாடங்கள் கற்பிக்கப்படக்கூடாது என்றும், அரசாங்கம் பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் பணம் எவ்வகையிலும் கொடுக்கக் கூடாதென்றும், கட்டாய இலவச ஆரம்பப் படிப்புக்கும் செகண்டரி படிப்புக்குமே சகல பண உதவியும் அரசாங்கம் செய்யவேண்டும்" என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொழில் படிப்பு, சர்வகலாசாலைக் கல்வி இவை போன்றவைகளுக்கும் பணம் செலவழிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டது. இவர்களுடைய தொழில் கொள்கையும், கல்விக் கொள்கையும் ஒரேமாதிரியாக அமைந்திருந் தது. பிராமணர்கள் அதிகமாகப் படித்து முன்னுக்கு வந்துகொண்டிருந்த காலம் அது. அவர்களுக்கும் படிக்க வசதி இல்லாவிட்டால் எல்லோரும் மூடர்களாக இருந்துவிடலாம் என்று நினைத்தார்கள் போலும்.

அதேமாதிரி, வடக்கே ஒரு இடத்தில் தொழிற்சாலை அமைக்க இயற்கை வசதிகள் இருப்பதாக வைத்துக்கொண்டால், அங்கு வேலைகளை ஆரம்பிப் பதற்கு முன்னர், இங்கு, நம் ராஜ்யத்தில், இயற்கை வசதிகள் இருக்கின் றனவா என்று பார்க்க, பூமியைக் குடைந்து கண்டுபிடிக்கும் வரை அங் குள்ள வேலைகளை நிறுத்தி வைக்கவேண்டும் என்று சொல்லுவார்கள் போல் இருக்கிறது.

இந்த அடிப்படையில்தான் அவர்கள் வடக்கு வாழ்கிறது, தெற்கு 5–50
தேய்கிறது என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இதற்கு பதில் சொல் p.m.
லித்தான் ஆக வேண்டும். இது கொள்கை அடிப்படையில் தோன்றியிருக் கிறது என்று சொல்லுகிறார்கள். இந்தக் கொள்கையை நாம் ஒப்புக் கொள்ள வேண்டுமாம். நாம் அதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும். இதற்கு நல்ல விளக்கம் கொடுக்கவேண்டும். விதையே இப்படி இருக்கும் போது செடியைப்பற்றி கேட்பானேன். நல்ல விதையாக இருந்தால் நல்ல செடி வளரும். விதையே கெட்டுப்போயிருந்தால் செடியைப்பற்றி பேசி என்ன பிரயோசனம். கெட்ட விதையைப் போட்டுவிட்டு அதைப் பயிரிட கண்ணீரையும் ரத்தத்தையும் சிந்தினால் அது முளைக்காது என்பதை நான் சொல்லிக்கொள்ளுகிறேன். கெட்டுப்போன விதையைப் போட்டு விட்டு கண்ணீர் விட்டு ரத்தம் சிந்தி பயிரிடுவதைக் காட்டிலும் நல்ல விதை யைப்போட்டு பயிரிடலாம். அவர்களுக்கு நாங்கள் தடையாக இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்வது சரியல்ல. அரசியல் கொள்கை ஒருபுரம் இருக்க இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் ஒருபுரம் ஒதுக்கி வைத்துவிடுவது நாட்டிற்கு நல்லது என்பதை யோசித்து ஒரு முடிவுக்கு வந்தால் நல்லது. அப்படி அவர் வருவார் என்றே நினைக்கி றேன். அப்படிப்பட்ட ஒரு நல்ல முடிவுக்கு வர முடியாமல் அவர் இருப் பதைக்கண்டு பரிதாபப்படுகிறேன். அவர்களுடைய கண்ணீரை விட்டு ரத் தத்தை சிந்தி கெட்ட விதையை வளர்க்கமுடியாது. இதை அவர்கள் நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும்.

[Sri C. Subramaniam] [8th March 1958

இப்பொழுது வரி போடக்கூடாது என்று சொல்லுகிறார்கள் (ஸ்ரீ டி. எஸ். ராமசாமி குறுக்கிடல்.) அவர்கள் சகித்துக்கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கு ஏன் கஷ்டமாக இருக்கிறது. அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டு விட்டது என்ற காரணத்திற்காக இப்படிச் சொல்லுகிறீர்களா ? என்பது எனக்குப் புரியவில்லை. இப்படிச் பேசுவது அவர்கள் புத்தகம் கொடுத்துவிட்டதாலோ என்னமோ என்பது எனக்குத் தெரியவில்லை. (சிரிப்பு.)

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, the Minister is casting aspersions. I want the Hon. Leader of the House to consider this seriously. My only point of order is whether during a discussion on the Budget, he can refer to all these things. It is not a political platform where he can indulge in the history of a political party. We are concerned with the finances of the State . . .

MR. SPEAKER : How can we seperate politics from Finance? The Hon. Minister may continue.

THE HON. SRI C. SUBRAMANIAM : வரியைப் பற்றி சொல்வதற்கு முன்னதாக இன்னொரு விஷயத்தைப்பற்றி சொல்லிவிட்டு முடித்துக்கொள்ளுகிறேன். இப்படியெல்லாம் இவர்கள் பேசுவது ஒருக்கால் அவர்களை யாராவது தூண்டி விட்டு இப்படி பேசுகிறார்களோ என்றுகூட தோன்றுகிறது. அது எப்படி இருந்தாலும் இவர்கள் பிரிந்து போனால் வெளியார்களுடைய உதவி இவர்களுக்குக் கிடைக்கும் என்றும், இவர்களுடைய தேவைகளையெல்லாம் அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம் என்றும் நினைத்துக்கொண்டிருக்கிறார்களோ என்று எனது மனதில் தோன்றிக்கொண்டிருக்கிறது. இவர்களுடைய செய்கையிலிருந்து அந்த சந்தேகம் ஊர்ஜிதம் ஆகிக்கொண்டும் இருக்கிறது. ஒருக்கால் அவர்களுடைய அறியாமையினால் அவர்கள் இப்படி நினைத்துக்கொண்டிருக்கிறார்களோ என்னமோ. அவ்விதம் அவர்கள் வெளியார்களை நம்பிக் கொண்டிருந்தால் அவர்கள் ஏமாற வேண்டியதுதான். அவர்களை நம்பிக் கொண்டிருந்தால் அவர்கள் சமயத்தில் இவர்களுடைய உதவிக்கு வர மாட்டார்கள். தூண்டி விட்டு விட்டு சும்மா இருந்துவிடுவார்கள். மத்தியில் இவர்களை விட்டுவிட்டுபோய் விடுவார்கள். அப்படி இல்லாமல் இருந்தால் அந்த அபிப்பிராயத்தை திருத்திக்கொள்ள தயாராக இருக்கிறேன். தூண்டுதல் இல்லையென்றால் நான் சந்தோஷப்படுகிறேன். அந்த அளவில் நமக்கு நல்லதுதான்.

வரியைப்பற்றி சிலர் கருத்துத் தெரிவித்தார்கள். வருமான வரியைப் பொறுத்தவரையில் எதிர்ப்பு எல்லாம் கொள்கை அடிப்படையில் இல்லை. ஆனால் அதை வசூலிப்பதில் பல கஷ்டங்கள் ஏற்படலாம் என்றும் வசூல் செய்வதில் சாதாரண குடியானவர்களும் மத்திய வகுப்பைச் சேர்ந்தவர்களும் கஷ்டப்படுவார்கள் என்றும் சொன்னார்கள். அதைப் பார்த்துக் கொள்வதற்கு சட்டத்தில் இடம் கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்ய முடியும். அந்த சட்டத்தை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி வைத்து ஆலோசனை செய்யப்படும். இப்படிப்பட்ட கஷ்டங்கள் வராமல் எந்தவிதத்தில் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி அந்தக் காலத்தில் யோசிக்கப்படும். அடுத்தபடியாக டீசல் எண்ணெய்க்கு போடப்படும் வரியைப்பற்றி குறிப்பிட்டார்கள். இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்று பலர் தெரிவித்தார்கள். ஆந்தர மாகாணத்தில் அதிகப்படியான வரி இதன் மூலமாகப் போட்டிருக்கிறார்கள். மைசூரில் இப்படிப்பட்ட வரி போட்டிருக்கிறார்கள். அங்கு எந்தவிதமான கஷ்டமும் ஏற்படவில்லை. அங்குள்ள விவசாயிகளுக்கு எந்தவிதமான விலக்கும் அளிக்கவில்லை. அங்குள்ள விவசாயிகளுக்கு இந்த வரியைக் கொடுக்க முடிகிறபோது இங்குள்ள விவசாயிகளுக்கும் கொடுக்க முடியும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்கு கஷ்டம் ஏற்படாத வகையில் எப்படி அமைக்கவேண்டும் என்பதைப்பற்றி யோசித்து



8th March 1958] [Sri C. Subramaniam]

பார்த்துக் கொள்ளலாம். சினிமா வரியைப் பொருத்த வரை சினிமா உலகத்திலுள்ளவர்கள் கூட அதை வரவேற்றிருக்கிறார்கள். அதனால் அதற்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுது டூரிங் சினிமாக்களுக்கு அதிகப்படியான வரும்படி வருகிறது என்று கேள்விப்படுகிறேன். அதைப்பற்றி விவாதம் வரும்போது, அந்தப் பிரச்னையை எழுப்பும்போது அதற்கு வேண்டிய பதிலைச் சொல்லுகிறேன். ஆகவே இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கிற பட்ஜெட் தீர்மானமானது அடுத்த வருஷத்திற்கு மட்டும் அல்ல, அதைத் தொடர்ந்து வரப்போகிற வருஷங்களுக்கும்தான். ஒரு வருஷத்தில் எடுத்துச் செய்வதை தொடர்ந்து செய்வதற்குத்தான் இப்படியெல்லாம் திட்டம் போடப்படுகிறது. அப்படி தொடர்ந்து வரப்போகிறது ஒரே கதையாகத்தான் இருக்கும். ஒரு வருஷம் வந்த காரியம் பல வருஷங்கள் திரும்பத் திரும்ப வந்துகொண்டேதான் இருக்கும். நம் நாட்டில் இருக்கக்கூடிய குறைகளை போக்க எல்லோரும் 5-56
ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வளவு தூரம் p.m.
பொருமையாக இருந்து நான் பேசியதைக் கேட்டுக்கொண்டதற்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்குமேல் பேசுவதற்கு என் தொண்டை கூட ஒத்துழையாமை செய்கிறது என்பதையும் தெரிவித்துக் கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : I now adjourn the House till 8-30 a.m. on Monday, the 10th March 1958.

**The House then adjourned.**

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

**A. Statutory rules, orders and notifications.**

70. *Notification issued with G.O. Ms. No. 36, Industries, Labour and Co-operation, dated 4th January 1958, amending rule 4 of the Madras Factories (Welfare Officers) Rules, 1953, under sections 49 and 112 of the Factories Act, 1948.*

## APPENDIX I.

[Vide Answer to Starred Question No. 245 Asked By Sri P. G. Manickam at the Meeting of the Legislative Assembly on the 8th March 1958, Page 471 Supra.]

(a) Acreage of coffee and tea plantations in Coimbatore and Nilgiris district—

| | Coimbatore district. | Nilgiris district. |
|---|---|---|
| | ACS. | ACS. |
| Coffee .. .. .. .. | 3,058 | 32,006 |
| Tea .. .. .. .. | 25,199 | 42,475 |

(b) Quantity and value of coffee and tea produced during the last five years—

COFFEE.

| Years. | Nilgiris district. | | Coimbatore district. |
|---|---|---|---|
| | Production. | Values. | |
| | LB. (IN 1,000). | RS. (IN 1,000). | |
| 1952 .. .. | 2,678 | 4,171 | Figures not available. |
| 1953 .. .. | 8,149 | 4,724 | |
| 1954 .. .. | 5,384 | 8,077 | |
| 1955 .. .. | 2,554 | 2,830 | |
| 1956 .. .. | 2,638 | 4,807 | |

TEA.

| Year. | Coimbatore district. | | Nilgiris district. | |
|---|---|---|---|---|
| | Production. | Values. | Production. | Values. |
| | LB. (IN 1,000). | RS. (IN 1,000). | LB. (IN 1,000) | RS. (IN 1,000). |
| 1952 .. .. | 23,439 | Not available. | 21,572 | 57,641 |
| 1953 .. .. | 23,210 | Do. | 2 ,521 | 60,655 |
| 1954 .. .. | 26,652 | Do. | 25,578 | 63,919 |
| 1955 .. .. | 25,458 | Do. | 29,655 | ,27 838 |
| 1956 .. .. | 26,107 | Do. | Not available. | |

(c) The number of labourers employed in these coffee and tea plantations—

| | Coimbatore district. | Nilgiris district. |
|---|---|---|
| Coffee .. .. .. .. | 1,950 | 26,738 |
| Tea. .. .. .. .. | 26,655 | 54,467 |

## APPENDIX II.

[Vide answer to Starred Question No. 250 asked by Sri M. P. Subramaniam at the meeting of the Legislative Assembly on 8th March 1958, page 478 supra.]

*Steps taken or proposed to be taken to develop Sago Industry at Salem on the lines suggested by the Tariff Commission.*

(1) Protection to the Sago Industry should be continued for a further period of two years, i.e., till the end of the year 1959, and the existing rates of protective duties should be maintained during the period.



The Government of India have accepted the recommendation and have proposed to extend the protection period for two more years (i.e.) up to 31st December 1959.

(2) Wide publicity should be given in the regional language to the Report of the Sago Expert Committee and the brochure containing the Indian Standard Specifications in respect of sago.

This has already been done.

(3) The factories producing sago in Salem district of Madras should be brought under the administration of pure food laws in the country and steps taken to have all factories registered under licences, the rules for the issue of licences being framed in consultation with the Central Food Technological Research Institute.

(4) A laboratory should be established at Salem for testing samples of sago in accordance with the standards as laid down by the Indian Standards Institution. This laboratory should also, in collaboration with the Central Food Technological Research Institute, assist manufacturers to achieve the minimum working conditions necessary for the efficient operation of their factories.

(5) No licences for export of sago should be granted to a producer until he has obtained a certificate from the Central Food Technological Research Institute (or the testing laboratory to be established at Salem) to the effect that the quality of sago produced in the factory fulfils Indian Standard Specification.

The recommendations are under consideration of the Government of India. They have stated steps will be taken to implement the recommendations as far as possible.

(6) The practice of colouring sago should be prohibited.

The Government have already prohibited the practice of colouring sago.

(7) The Government of Madras should give necessary assistance to the producers of sago to set up a co-operative organisation which should function as a central purchasing agency for tapioca tubers and a distributing agency for the finished product.

It was considered that there was no need for organizing separate co-operative societies for the growers of tapioca and the manufacturers of sago since the small manufacturers who were themselves growers could join the existing marketing societies if they so desired and secure pledge loans to a limit of 50 per cent of the value of stock.

The Government of India have stated that the Tariff Commission has also made certain ancillary recommendations for improving technique in the production of sago, for the expansion of sales and for the maintenance of relevant statistics and that these recommendations will be brought to the notice of the industry and the Salem Sago Manufacturers' Association.

PAGES

B

Backward classes—
Question re—
Amendment of 106th item in the list of — .. .. .. .. .. 394
Extension of concessions allowed to — to the poor belonging to forward classes .. .. .. .. .. .. .. 394
Inclusion of Mukkani Brahmin community in the list of —, representation re .. .. .. .. .. .. .. .. 394–396

Bhaktavatsalam, the Hon. Sri M.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 438–445

Bill—
General Sales Tax Bill, 1958—
Introduced .. .. .. .. .. .. .. .. 486
Message from the Governor re — .. .. .. .. .. 486

Bridge(s)—
Question re—
Kaduvayar — at Nagapattinam, cost of construction of .. .. 239
Road dam over Turinjalar, repair of .. .. .. .. 79–80

Budget for 1958–59—
Cut motions, time-limit for receipt of .. .. .. .. .. 91
General discussion on — .. .. .. .. .. .. .. 91–150, 174–230, 247–302, 331–385, 407–466, 486–543
Presentation of .. .. .. .. .. .. .. .. 10–34

Burial-grounds—
Question re provision of separate — for different castes in Puliyanthopu, Madras .. .. .. .. .. .. .. 172

C

Caste certificates—
Question re persons from whom Harijans should obtain— .. .. 401–402

Causeway—
Question re construction of a — across the Tambaraparani river between Karuppandurai and Melanatham in Tirunelveli district .. 84

Cement factory—
Question re grant of bonus to workers in — for the period 1953–56. 6–7
Question re starting of a — in North Salem .. .. .. .. 169

Certified Schools—
See Paper laid on the table of the House.

Chemical Fertilizer Plant—
Question re starting of a — at Neyveli .. .. .. .. 155–156

Chidambara Bharathi, Sri R.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 342–345

Chinnadurai, Sri P. S.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 450–456

Chockalingam, Sri N. V.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 196–198

Communal riots—
See Disturbances in Ramanathapuram.

Co-operative societies—
Question re—
Co-operative credit societies, number of—for Harijans .. .. 7–9
Co-operative marketing society, starting of a—at Kalrayan Hills in Attur taluk (Salem district) .. .. .. .. .. 171–172
Salem Co-operative Marketing Society, enquiry into the affairs of .. .. .. .. .. .. .. .. 164–166
Tenant farming co-operative society and collective farming society, formation of—at Ramanaickenpalayam (Attur taluk) .. 170–171



PAGES

C—*cont.*

Co-operative Stores—
Question re misappropriation of funds in the Nagapattinam — .. 328–329

Cooum river—
Question re use of — for navigation purposes .. .. .. 403–404

Court-fees and Suits Valuation Act, 1955.
See Papers laid on the table of the House.

Court(s)—
Question re provision of septic and flush-out latrines in — premises. 389–391

Cut motions—
See Budget for 1958–59.

D

Dalmia Cement (Bharat), Limited, Dalmiapuram—
Calling attention to closure of — .. .. .. .. .. .. 404–406
Question re number and housing of employees in the — .. .. 3–4

Daniel, Sri T. T.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 138–143
Smallpox in Kanyakumari district, calling Minister's attention to outbreak of .. .. .. .. .. .. .. .. 173

Disturbances in Ramanathapuram—
Question re furnishing of details re — to the Centre .. .. 474–476

Doraisami Reddiar, Sri B.—
Budget for 1958-59, general discussion on .. .. .. .. 250–261

E

Educational concessions—
Question re authorization of the President, Tamil Nad Congress Committee, to issue certificates to children of political sufferers .. 235–236

Electric motors—
Question re—
Import and sale of —, request to the Centre re .. .. .. 235
Import of — from foreign countries for supply to agriculturists at controlled rates .. .. .. .. .. .. .. .. 233–235

Electricity Board, Madras State—
See Papers laid on the table of the House.

Elumalai, Sri T. P.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 436–438

Employees' State Insurance Scheme—
Question re places where — is in force and number of employees benefited .. .. .. .. .. .. .. .. 327

F

Factories Act, 1948—
See Papers laid on the table of the House.

Factories Rules, 1950—
See Papers laid on the table of the House.

Family Planning—
Question re legislation raising the marriageable age of boys and girls .. .. .. .. .. .. .. .. .. 170

Floods—
Question re extent of lands affected by — at Sanganurpallam, Coimbatore district, in November 1957 and aid given for reclamation .. .. .. .. .. .. .. .. 482–483

PAGES

G

General Sales Tax Act, 1939—
*See* Papers laid on the table of the House.

General Sales Tax Bill, 1958—
*See* Bill.

Geological Survey—
Question *re* conduct of — by private agencies .. .. .. 327–328

Gomathisankara Dikshitar, Sri G.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 127–131

Government departments—
Question *re* recommendations of Special Officer for retrenchment in — .. .. .. .. .. .. .. .. .. 160–161

Government offices—
Question *re* Centre's communication *re* working hours in — and holidays granted .. .. .. .. .. .. .. 6

Govindasamy, Sri A.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 416–418

Grants, Central—
Question *re* amount of — received during 1956–57 and purposes for which they were received .. .. .. .. .. .. 246–247

Gurumurthi, Sri G. G.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 378–379

H

Handloom cloth—
Question *re* reduction of rebate for sales of — by co-operatives .. 324–327

Harijans—
Question *re*—
Number of — employed in factory units in the Industrial Estate at Guindy .. .. .. .. .. .. .. .. .. 5
Number of — provided with house-sites free of cost in Bhavani taluk .. .. .. .. .. .. .. .. .. 238–239
Number of houses built for — in Coimbatore district during 1957. 236–238
*See* Co-operative societies.
*See* House-sites.
*See* Wells.

Health Centre(s)—
Question *re*—
Closure of the Primary — at Jammaputtur (North Arcot) .. 169
Number of Primary — opened during 1957–58 .. .. .. 168–169

Hemalatha Devi, Srimathi—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 208–211

Hobart Training School—
*See* schools.

Hospitals and dispensaries—
Question *re*—
Government Hospital at Nagercoil, representation regarding improvement of .. .. .. .. .. .. .. .. 171
Hospitals in Tirunelveli district and medical officers in them, number of .. .. .. .. .. .. .. .. 156–158
Mental Hospital, Madras, number of patients in the — in 1957. 166–167
Midwifery course for nurses in Government Women and Children Hospital, Vannarpet, raising the strength for .. .. .. 158–159
Rural dispensary at Valapady, conversion into Local Fund Dispensary .. .. .. .. .. .. .. .. 480–481



PAGES

H—*cont.*

House-sites—
Question *re* provision of — for Harijans of Avanipur village, Olakur firka, Tindivanam taluk .. .. .. .. .. .. .. 470–471

Housing Board—
Question *re* constitution of non-statutory — and names of members. 483–485

I

Industrial Estate, Guindy—
Question *re* number of Harijans employed in factory units in the —. 5

Industrial Estate, Tiruchirappalli—
Question *re* starting of — .. .. .. .. .. .. .. .. 322–323

Intensive Manuring Scheme—
Question *re* grant of loans to dry-crop growers under the — .. .. 396

Irrigation—
Question *re* Pullambadi Channel Scheme, amount for 1957-58 for .. 241–242

Irusappan, Sri T.—
Budget for 1958-59, general discussion on .. .. .. .. 363–364

J

Jagannathan, Sri M.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 92–95

Jangal Reddiar, Sri M.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 369–371

Jayaraj, Sri P.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 255–257

K

'Kalainesan'—
Question *re* action against the journal — for publishing news not to the good taste of the general public .. .. .. .. .. 5

Kalyanasundaram, Sri M.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 456–466

Kamalambuja Ammal, Srimathi—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 187–190

Kandaswami Mudaliyar, Sri M. R.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 218–220

Kandasami Padayachi, Sri M.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 286–288

Karia Gounder, Sri T.—
Budget for 1958-59 general discussion on .. .. .. .. 290–292

Karunanithi, Sri M.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 251–255

Karuthiruman, Sri P. G.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 335–337

Kothandaraman, Sri V. K.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 108–113

Krishnamoorthy, Sri V. K.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 101–104

PAGES

L

Lakshmana Gounder, Sri S.—
Budget for 1958–59, general discussion on .. 143–147

Lakshmikantham, Srimathi P. K. R.—
Budget for 1958–59, general discussion on .. 270–272

Lazar, Sri S.—
Dalmia Cement (Bharat), Limited, Dalmiapuram, calling Minister's attention to closure of .. 404–405

Linga Gouder, Sri B. K.—
Budget for 1958–59, general discussion on .. 411–413

Loans—
Question re grant of—to dry-crop growers under the Intensive Manuring Scheme .. 396

M

Manickasundaram, Sri V. S.—
Budget for 1958–59, general discussion on .. 257–259

Manickavelu, the Hon. Sri M. A.—
Ships from Malaya, statement re hardship caused by—not calling at Nagappattinam Port .. 330–331
Smallpox in Kanyakumari district, statement re outbreak of .. 173–174

Marimuthu, Sri A. R.—
Budget for 1958–59, discussion on .. 147–150

Marudachalam Sri N.—
Budget for 1958–59, general discussion on .. 222–224

Matha Gouder, Sri J.—
Budget for 1958–59, general discussion on .. 174–177

Mathuram, Sri E. P.—
Budget for 1958–59, general discussion on .. 434–436

Matter of urgent public importance—
Dalmia Cement (Bharat), Limited, Dalmiapuram, calling attention to closure of .. 404–406
Smallpox in Kanyakumari district, calling attention to outbreak of .. 173–174
Ships from Malaya, calling attention to hardship caused by—not calling at Nagapattinam port .. 329–331

Mayaadi Nadar, Sri M.—
Budget for 1958–59, general discussion on .. 373–375

Mid-wifery course for nurses—
*See* Hospitals and dispensaries.

Military College, Dehra Dun—
Question re number of persons selected from Madras State for training in—in 1956–57 and 1957–58 .. 321–322

Ministers—
Question re participation of—in Congress Party meetings while on tour on official business .. 323–324

Motor Vehicles Act, 1939—
*See* Papers laid on the table of the House.

Motor Vehicles Taxation Act—
Question re amounts collected in Madras City in 1957 under— .. 473–474

Mukkani Brahman community—
*See* Backward Classes.



PAGES

M—*cont.*

Muni Reddi, Sri M.—
Budget for 1958–59, general discussion on .. 409–411

Munusami, Sri S. R.—
Budget for 1958–59, general discussion on .. 382–384

Muthiah Pillai, Sri C.—
Budget for 1958–59, general discussion on .. 360–363

N

Nagaraja Monigar, Sri S.—
Budget for 1958-59, general discussion on .. 350–353

Nallasivam, Sri K. R.—
Budget for 1958–59, general discussion on .. 198–200

Narayanaswami Naidu, Sri G.—
Budget for 1958–59, general discussion on .. 413–416

Nataraja Odayar, Sri C.—
Budget for 1958–59, general discussion on .. 288–290

National Extension Service Schemes—
Question re—
Block Advisory Committees, appointment of non-official members residing outside the Block limits .. 479–480
Construction of school building at Arumbakkam (Tiruvannamalai taluk) under the— .. 1

Nurses—
Question re—
Construction of quarters for, near the Headquarters Hospital at Palayamkottai .. 158
Revision of working conditions of—with regard to wages, working hours and leave facilities .. 159

O

Obituary reference—
Abdul Kalam Azad, Moulana .. 1

P

Pakkirisami Pillai, Sri S.—
Budget for 1958-59, general discussion on .. 445–450

Palanisami, Sri N. K.—
Budget for 1958-59, general discussion on .. 445–450

Palar river—
Question re—
Construction of barriers alongside—in Vaniambadi .. 79
Extent of damage caused on account of flood in—at Vaniyambadi .. 156

Papers laid on the table of the House—
Certified Schools, review of activities of—for half-year ended 30th June 1957 .. 151
Court-fees and Suits Valuation Act, 1955, notification re reduction of fees on applications and petitions presented to the Board of Revenue, Madras, by Harijans .. 466
Cultivating Tenants Protection Act, 1955, notification re amendment to rule 3 (ii) (c) of the Cultivating Tenants Protection Rules, 1955 .. 302

PAGES

P—*cont.*

Papers laid on the table of the House—*cont.*
- Factories Rules, 1950, notification *re* amendment to proviso to rule 13 (*c*) .. 150
- Factories (Welfare Officers) Rules, 1953, notification *re* amendment to rule 1 .. 543
- General Sales Tax (Turnover and Assessment) Rules, 1939, notification *re* amendment to .. 150, 151
- General Sales Tax Rules 1939, notification *re* amendment to rule 3 A .. 34
- General Sales Tax Rules, 1939, notification *re* amendment to sub-rule (4) of rule 6 .. 150
- Motor Vehicles Rules, 1940, notification *re* insertion of rule 459 .. 34
- Public Service Commission (Madras), report for year ending 31st March 1957 .. 302
- Sales-tax, notification modifying the notification exempting Co-operative Wholesale Stores and District Co-operative Supply and Marketing Societies from .. 386
- Sales-tax, notification *re* exemption of Co-operative Milk Supply Societies and Unions from .. 385–386
- Sales-tax, notification *re* exemption of mill cloth from—consequent on the levy of additional excise duty .. 302
- State Electricity Board, Annual Financial Statement for 1957-58 .. 151

Parisutha Nadar, Sri A. Y. S.—
- Budget for 1958-59, general discussion on .. 185–187

Peria Karuppan Ambalam, Sri P. M.—
- Budget for 1958–59, general discussion on .. 419

Periannan, Sri K.—
- Budget for 1958–59, general discussion on .. 358–360

Periavalaguruva Reddi, Sri A. V. P.—
- Budget for 1958 59, general discussion on .. 120–124

Plantations—
- Question *re* acreage of coffee and tea — in Coimbatore and Nilgiris districts .. 471–473

Political sufferers—
- Question *re* authorization of President, Tamil Nad Congress Committee, to issue certificates to children of — for educational concessions .. 235–236

Ponnammal, Sri A. S.—
- Budget for 1958-59, general discussion on .. 353–356

Ponnuswamy, Sri P. P. M. T.—
- Budget for 1958-59, general discussion on .. 247–256

Ports—
- Ships from Malaya not calling at Nagapattinam port, Minister's attention called to .. 329–331

Prevention of Cruelty to Animals—
- Question *re* bringing the offence of dehorning and removing of ears of cattle within the purview of the — .. 243–244

Prime Minister of India—
- Question *re* construction of a new railway station at Meenambakkam for the sake of the — during his visit on 7th December 1957 .. 311–312

Privilege motion *re* misrepresentation in the press of a Member's speech .. 406



PAGES

P—*cont.*

Public Service Commission (Madras)—
- *See* Papers laid on the table of the House.

Pullambadi Scheme—
- Question *re* villages and houses affected by — and construction of colonies for Harijan house-owners .. 83–84
- *See* Irrigation.

Q

Questions and Answers—

Adityan, Sri S. B.—
- Question *re*—
  - Central grants, amount received during 1956–57 and purposes for which they were received .. 246–247
  - Suicide cases, number of—during 1956-57 .. 239–240

Annamalai, Sri S. M.—
- Question *re*—
  - Electric motors, request to Centre *re* import and sale of .. 235
  - Ministers' participation in Congress Party meetings while on tour on official business .. 323–324
  - Primary Health Centre, closure of—at Jamnaputtur (North Arcot) .. 169

Chinnadurai, Sri P. S.—
- Question *re*—
  - Floods, extent of lands affected by — at Sanganurpallam (Coimbatore district) in November 1957 and aid given for reclamation .. 482–483
  - Loans to dry crop growers under the Intensive Manuring Scheme, Grant of .. 396

Govindasamy, Sri A.—
- Question *re*—
  - Drinking water wells dug during 1947-57 in Kadambuliyur Firka (South Arcot), number of .. 317
  - Prime Minister, construction of a new railway station at Meenambakkam for the sake of the — during his visit on 7th December 1957 .. 311–312
  - Protected water-supply to Kadambuliyur firka, South Arcot, from the river Gadilam, provision of .. 317–318

Jagannathan, Sri M.—
- Question *re*—
  - Drinking water wells for Harijans in South Arcot, provision of. 476–479
  - House-sites for Harijans of Avanipur village, Olakur firkt in Tindivanam taluk, provision of .. 470–471
  - Single-teacher Elementary schools opened in 1955-56 and 1956–57, number of .. 393

Kalyanasundaram, Sri M.—
- Question *re*—
  - Drinking water-supply, proposals by the Tiruchirappalli Municipality for .. 314
  - Government Transport workers, supply of uniforms to the .. 481–482

PAGES

Q—*cont.*

Questions and Answers—*cont.*

Kothandaraman, Sri V. K.—

Question *re*—

Burial ground, provision of separate—for different castes in Puliyanthope, Madras .. .. .. .. .. .. .. 172

Bus route from Chengam village to Madras, sanctioning of .. 164

Cooum river, use of—for navigation purposes .. .. .. 403–404

Government Hospital at Nagercoil, representation regarding improvement of .. .. .. .. .. .. .. .. 171

Nagapattinam Co-operative Stores, misappropriation of funds in the .. .. .. .. .. .. .. .. 328–329

Tamilnad Estate Workers' Union, Kulasekharam, Kanyakumari district, memorandum to the District Labour Officer, Nagarcoil .. .. .. .. .. .. .. .. 151

Lazar, Sri S.—

Question *re*—

Agricultural subordinates, recommendation from the Indian Council of Agricultural Research *re* the pay of .. .. 403

Agriculture, number of acres of crops affected by post in Tiruchirappalli and presentive measures taken .. .. .. 77–79

Ammonium sulphate, annual requirement of—for Tiruchirappalli district .. .. .. .. .. .. .. 397–399

Ammonium sulphate available for distribution during 1957–58, quantity of .. .. .. .. .. .. .. 397

Backward Classes, amendment of 106th item in the list of .. 394

Court-premises, provision of septic or flush-out latrines in .. 389–391

Dalmia Cement, Limited, Dalmiapuram, number and housing of employees in the .. .. .. .. .. .. 3–4

Drinking water-supply proposals by the Tiruchirappalli Municipality .. .. .. .. .. .. .. .. 314

Industrial Estate, Tiruchirappalli, starting of .. .. .. 322–323

Pullambadi Channel Scheme, amount allotted for 1957–58 for the .. .. .. .. .. .. .. .. 241–242

Pullambadi Scheme, villages and houses affected by and construction of colonies for Harijan house-owners .. .. 83–84

Roads between Manachanallur and Elandalaipatti, metalling and upgrading of .. .. .. .. .. .. 245

Roads connecting villages not covered by National Extention Service or Community Development Blocks, laying of .. 242

Manickam, Sri P. G.—

Question *re*—

Agricultural Planning and Techniques, implementation of recommendations made by the Indian Delegation to China on .. .. .. .. .. .. .. .. 80–82

Backward classes, extension of concession allowed to—to the poor belonging to the forward classes .. .. .. .. 394

Caste certificate, persons from whom Harijans should obtain .. 401–402

Coffee and tea plantations in Coimbatore and Nilgiris districts, acreage of .. .. .. .. .. .. .. 471–473

Co-operative credit societies, number of—and the number of Harijan Co-operative Credit Societies .. .. .. .. 7–9



PAGES

Q—*cont.*

Questions and Answers—*cont.*

Manickam, Sri P. G.—*cont.*

Question *re*—*cont.*

Employees State Insurance Scheme, places where—is in force and number of employees benefited .. .. .. .. 327

Handloom cloth, reduction of rebate for sale of—by co-operatives .. .. .. .. .. .. .. .. 324–327

Harijans employed in factory units in the Industrial Estate, Guindy, number of .. .. .. .. .. .. 5

Harijans provided with house-sites free of cost in Bhavani taluk, Coimbatore district, number of .. .. .. .. .. 238–239

Mental Hospital, Madras, number of patients in the—in 1957 .. 166–167

New bus routes in the Coimbatore district, opening of .. .. 2

Private Bus Services and buses used by them, number of .. 168–169

Private Bus Services and buses used by them, number of .. 6

Rayon Yarn Factory, starting of .. .. .. .. .. 7

Rural Water-supply Schemes, amount allotted and sent for—during 1957–58 .. .. .. .. .. .. .. 161–164

School-going children in Coimbatore district, number of—in 1956–57 .. .. .. .. .. .. .. .. 90

Tanks damaged by overflow of water in 1956-57 in the Bhavani taluk, expenditure on repair of .. .. .. .. .. 247

Pakkirisami Pillai, Sri S.—

Question *re*—

Non-statutory Housing Board, constitution of—and names of members .. .. .. .. .. .. .. .. 483–485

Palanisami, Sri N. K.—

Question *re*—

[illegible] nationalisation of .. .. .. .. .. 318–321

Cement factories, grant of bonus to workers in—for the period 1953-56 .. .. .. .. .. .. .. .. 6–7

Disturbances in Ramanathapuram, furnishing of details *re*—to the Centre .. .. .. .. .. .. .. .. 474–476

Educational concessions, authorization of the President, Tamil Nad Congress Committee, to issue certificates to children of political sufferers .. .. .. .. .. .. .. 235–236

Electric motors, import from foreign countries for supply to agriculturists at controlled rates .. .. .. .. .. 233–235

Harijans, number of houses built for—in Coimbatore district during 1957 .. .. .. .. .. .. .. 236–238

Motor Vehicles Taxation Act, amount collected in Madras City in 1957 under .. .. .. .. .. .. .. 473–474

Non-statutory Housing Board, constitution of .. .. .. 483

Nurses, revision of working conditions of—with regard to wages, working hours and leave facilities .. .. .. 159

Rayon Yarn Factory, starting of a .. .. .. .. .. 7

Repatriates from Ceylon, consideration of report of Special Officer appointed for enquiring into the conditions of .. 84–87

Scientific instruments, grants to High Schools for buying .. 246

Secondary grade teachers in elementary schools, grant of full-fee concession to children of .. .. .. .. .. .. 90–91

# INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

**THIRD SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.**

*1st and 3rd to 8th March* 1958.

**Volume IX (Nos. 1 to 7).**


PAGES

A

**Abul Kalam Azad, Maulana—**
Obituary reference to— .. .. .. .. .. .. .. 1

**Agricultural Planning and Techniques—**
Question *re* implementation of the recommendations made by the Indian Delegation to China on— .. .. .. .. .. 80–82

**Agricultural subordinates—**
Question *re* recommendation of the Indian Council of Agricultural Research regarding the pay of— .. .. .. .. .. 403

**Agriculture—**
Question *re* number of acres of crops affected by pests in Tiruchirappalli and preventive measures taken .. .. .. .. 77–79

**Ammonium sulphate—**
Question *re*—
Annual requirement of — for Tiruchirappalli district .. .. 397–399
Quantity of — available for distribution during 1957–58 .. .. 397

**Anandan, Sri M.—**
Budget for 1958-59, general discussion on .. .. .. .. 215–218

**Anandanayaki, Srimathi T. N.—**
Budget for 1958-59, general discussion on .. .. .. .. 421–425

**Anbazhagan, Sri K.—**
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 95–101
Privilege motion *re* misrepresentation in the Press of a Member's speech .. .. .. .. .. .. .. .. .. 406

**Annadurai, Sri C. N.—**
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 486–508

**Annamalai, Sri S. M.—**
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 267–270

**Ardhanareeswara Gounder, Sri K. S.—**
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 337–339

**Asaithambi, Sri A. V. P.—**
Budget for 1958-59, general discussion on .. .. .. .. 190–193

**Authimoolam, Sri D. S.—**
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 282–284

Questions and Answers—*cont.*

Palanisami, Sri N. K.—*cont.*

Question *re*—*cont.*

Tamil Nad Non-Gazetted Government Officers' Union, memorandum from .. .. .. .. .. .. 468–470

Tamilnad Non-gazetted Officers' Union, representation to register it under the Trade Union Act .. .. .. .. 467–468

Teachers employed under the Unemployment Relief Scheme, scale of pay of .. .. .. .. .. .. .. .. 240–241

Ramaswamy Mudaliyar, Sri V. K.—

Question *re*—

Government departments, recommendations of Special Officer for retrenchment in .. .. .. .. .. .. .. 160–161

Rasheed, Sri A. A.—

Question *re*—

Chemical Fertilizer Plant, starting of a — at Neyveli .. .. 155–156

Family Planning, legislation raising the marriageable age of boys and girls .. .. .. .. .. .. .. .. 170

Geological Survey by private agencies, conduct of .. .. 327–328

Hobart Training School, Madras, opening of Urdu section in the .. .. .. .. .. .. .. .. .. 79

Motor Vehicles Taxation Act, amount collected in Madras City in 1957 under .. .. .. .. .. .. .. 473–474

Palar floods, extent of damage caused on account of—in Vaniyambadi .. .. .. .. .. .. .. .. 156

Palar river, construction of barriers alongside — in Vaniyambadi .. .. .. .. .. .. .. .. .. 79

Sarathi, Sri M. P.—

Question *re*—

Military College, Dehra Dun, number of persons selected from Madras State for training in — in 1956-57 and 1957-58 .. 321–322

Working hours in Government offices and holidays granted, communication from the Centre *re* .. .. .. .. .. 6

Sattanatha Karayalar, Sri K.—

Question *re* handloom cloth, reduction of rebate for sale of — by co-operatives .. .. .. .. .. .. .. .. 324–327

Selvarajan, Sri M. S.—

Question *re*—

Backward classes, inclusion of Mukkani Brahmin community in the list of .. .. .. .. .. .. .. .. 394–396

Repatriates from Ceylon, consideration of report of Special Officer appointed to enquire into the conditions of .. .. 85–87

Shanmugam, Sri P. U.—

Question *re*—

National Extension Service Scheme, construction of school at Arumbakkam under the .. .. .. .. .. .. 1

Reading rooms run by local bodies, prohibition of certain dailies and weeklies in .. .. .. .. .. .. .. 82–83

Road dam over Turinjalar, repair of .. .. .. .. 79–80

Teachers in Tirupathi Devasthanam High School, Vellore, payment of enhanced dearness allowance to .. .. .. .. 87



Questions and Answers—*cont.*

Somasundaram, Sri M. K.—

Question *re*—

Causeway across the Tambaraparani river between Karuppandurai and Melanatham in the Tirunelveli district, construction of .. .. .. .. .. .. .. .. .. 86

Hospitals in Tirunelveli district and medical officers in them, number of .. .. .. .. .. .. .. .. 156–158

Mid-wifery course for nurses in Government Women and Children Hospital, Vannarpet, Tirunelveli district, raising the strength for .. .. .. .. .. .. .. 158–159

Nurses' Quarters near the hospital at Palayamkottai, Tirunelveli district, construction of .. .. .. .. .. .. 158

Subbiah, Sri V.—

Question *re*—

Block Advisory Committees, appointment of non-official members residing outside the Block limits .. .. .. .. 479–480

Subramaniam, Sri M. P.—

Question *re*—

Cement factory, starting of a — in North Salem .. .. .. 169

Co-operative marketing society, starting of a — at Kalrayan Hills, in Attur taluk (Salem district) .. .. .. .. 171–172

Kaduvayar bridge at Nagapattinam, cost of construction of .. 239

Rural dispensary at Valapady, conversion into Local Fund dispensary .. .. .. .. .. .. .. .. 480–481

Sago industry at Salem, development of — on the lines suggested by the Tariff Commission .. .. .. .. .. .. 478–479

Salem Co-operative Marketing Society, Limited, enquiry into the affairs of .. .. .. .. .. .. .. .. 164–166

Single Teachers' Association, representation from the—in October 1957 .. .. .. .. .. .. .. .. 391–393

Semi-machine tools factory, starting of a—at Salem .. .. 167–168

Tenant farming co-operative society and collective farming society, formation of—at Ramanaickenpalayam village (Attur taluk) .. .. .. .. .. .. .. .. 170–171

Vedarathnam, Sri A.—

Question *re*—

Dehorning and removing of ears of cattle, bringing the offence under the purview of the Prevention of Cruelty to Animals .. 243–244

'Kalainesan', action against the Journal—for publishing news not to the good taste of the general public .. .. .. 5

Railway lines recommended for construction and for priority being given, names of .. .. .. .. .. .. 88–90

Repatriates from Ceylon, representations from the .. .. 85–87

Tamil Numerals and Yensuvadi, imparting instruction in—in schools .. .. .. .. .. .. .. .. .. 399–401

Teachers in panchayat schools, payment of special additional pay and dearness allowance .. .. .. .. .. .. 403

Wells dug under the Drinking Water-Supply Scheme, quality of water of .. .. .. .. .. .. .. .. 312–314

Viswanathan, Sri K. R.—

Question *re*—

National Water-Supply and Sanitation Scheme, amount allotted to Madras State for 1956–57 .. .. .. .. .. 315–317

Rural water-supply works in Tiruchirappalli district, withholding of payment of baling charges to contractors .. .. 314

PAGES

U

Urkavalan, Sri P.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 419–421

V

Vagheesam Pillai, Sri G.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 211–215

Vedamanickam, Sri P.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 348–350

Vedarathnam, Sri A.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 113–118

Vedayyan, Sri V.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 250–251

Veerappa Kounder, Sri P.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 356–358

Venkataraman, The Hon. Sri R.—
Bills—General Sales Tax Bill, 1958 .. .. .. .. .. .. 486
Dalmia Cement (Bharat), Limited, Dalmiapuram, statement *re* closure of .. .. .. .. .. .. .. .. 405–406

Visitors' Gallery—
Issue of tickets for admission to — .. 467

W

Water-supply—
Question *re*—
National — and Sanitation Scheme, amount allotted to Madras State for 1956-57 .. .. .. .. .. .. .. 315–317
Proposal re [illegible] Tiruchirappalli Municipality .. .. 314
Provision of protected — to Kadambuliyur firka (South Arcot) from the River Gadilam .. .. .. .. .. .. 317–318
Rural — schemes, amount allotted and spent for — during 1957-58. 161–164
Rural — workers in Tiruchirappalli district, withholding of payment of baling charges to contractors .. .. .. .. 314

Wells—
Question *re*—
Number of drinking water — dug from 1947-57 in the Kadambuliyur firka, South Arcot district .. .. .. .. 317
Provision of drinking water — for Harijans in South Arcot district .. .. .. .. .. .. 476–478
Quality of water of [illegible] the Drinking Water-supply Scheme .. 313–314

William, Sri M.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 304–305

61227

## R


Railway lines—
Question re names of — recommended for construction and for priority being given .. .. .. .. .. .. .. 88–90

Rajathi Kunchithapatham, Srimathi—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 298–302

Ramachandra Reddi, Sri M.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 273–275

Ramachandran, Sri K.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 181–185

Ramalinga Padayachi, Sri S.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 228–230

Ramalingam, Sri N. S.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 224–226
Ships from Malaya, calling Minister's attention to hardship caused by — Not calling at the Nagapattinam Port .. .. .. 329–330

Ramamirtha Thondaman, Sri T. R.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 284–286

Ramasami, Sri M. D.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 275–276

Ramasami Naidu, Sri S.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 345–347

Ramasami Thevar, Sri S.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 206–208

Ramasubbu, Sri K.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 264–267

Ramaswami, Sri C. R.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 276–279

Ramaswamy Mudaliyar, Sri V. K.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 508–518

Ramaswamy Pillai, Sri T. S.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 331–335

Rasheed, Sri A. A.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 366–369

Rayon Yarn Factory—
Question re starting of a — .. .. .. .. .. .. .. 7

Reading Rooms—
Question re prohibition of certain dailies and weeklies in — run by local bodies .. .. .. .. .. .. .. .. 82–83

Road(s)—
Question re—
Roads connecting villages not covered by National Extention Service or Community Development Blocks, laying of .. .. 242

Rulings and observations of the Chair—
Debate—
Interruptions—Deprecating talks across the table, the Speaker observed that interruptions must be relevant and that no Member could make a second speech. Personal explanation could be made at the end and no point of information would be permissible during a speech .. .. .. .. .. .. .. 539
Metalling and upgrading of — between Manachanallur and Elandalaipatti .. .. .. .. .. .. .. 245




R—*cont.*


Rulings and observations of the Chair—*cont.*
Debate—*cont.*
*Matter subjudice*: A member could refer to a matter under examination but not to a matter pending before a Court of Law .. .. .. .. .. .. .. .. 437, 438
On a point whether the House would have an opportunity to discuss the question of registration of an ex-Finance Minister of the Government of India, referred to by the Finance Minister in his Budget speech, the Speaker observed that the Member could express his opinion while speaking on the budget and that the Finance Minister was not wrong in referring to it in his Budget speech .. .. .. .. .. .. .. 91, 92
Persons not in the House should not be referred to in debates .. 353
Decorum—
Members should address the Chair .. .. .. .. .. 518
'You' ('நீங்கள்', 'உங்கள்') refers to the Chair and it should not be used when somebody else is referred to .. .. 352, 353

Questions—
On a point raised about answering of a supplementary question regarding the salient demands in the memorandum of the Tamil Nad Non-Gazetted Government Officers' Union, the Speaker observed that he could not compel the Minister to answer the question and that if it had been the main question, the Minister would have had at least to print the answer and furnish it to the House .. .. .. .. .. .. .. .. 469
Supplementary question must be direct .. .. .. .. 163
Supplementary questions asking for an opinion are not admissible .. .. .. .. .. .. .. .. 170
While putting supplementary questions, Members should not cast aspersions on other State Governments .. .. .. 320
With reference to the remarks of a Member that a question given notice of by him had not been admitted, the Speaker observed that the power to admit questions was vested in him and that reasons would have been assigned if a question had been disallowed .. .. .. .. .. .. .. .. 246

Unparliamentary expression—
'Whether the Government were sleeping all the while'—Held parliamentary .. .. .. .. .. .. .. 208


## S


Sadasivam, Sri S.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 280–282

Sago industry—
Question re development of — at Salem on the lines suggested by the Tariff Commission .. .. .. .. .. .. .. 478–479

Samikannu Padayachi, Sri S.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 261–264

Sampath, Sri T.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 201–204

Sankaran, Sri V.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 124–127

Sathiyavanimuthu, Dr. Srimathi—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 375–378

Sattanatha Karayalar, Sri K.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 425–427

PAGES

**S—cont.**


School-going children—
Question *re* number of — in Coimbatore district in 1956-57 .. .. 90

Schools—
Question *re*—
Hobart Training School, Madras, re-opening of Urdu section in .. 79
Imparting of instruction in Tamil Numerals and Yensuvadi in schools .. .. .. .. .. .. .. .. 399–401
Single-teacher elementary school opened in 1955–56 and 1956–57, number of .. .. .. .. .. .. .. .. 393

Scientific Instruments—
Question *re* grant to High Schools for buying — .. .. .. 245

Selvarajan, Sri M. S.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 407–409

Shanmugam, Sri P. U.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 339–342

Single Teachers' Association—
Question *re* representation from the — in October 1957 .. .. 391–393

Smallpox—
Calling attention to outbreak of — in Kanyakumari district .. 173–174

Somasundaram, Sri M. K.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 221–222

Speaker, Mr.—
Announcement *re*—
Message from the Governor *re* General Sales Tax Bill, 1958 .. 486
Time-limit for receipt of cut motions .. .. .. .. .. 91
Budget for 1958–59—
General discussion on — .. .. .. .. .. .. 91, 92, 99, 101, 174, 193, 194, 331, 347, 348, 352, 353, 362, 407, 419, 434, 438, 486, 534, 535, 542
Presentation of — .. .. .. .. .. .. 34
Obituary reference to Abul Kalam Azad, Maulana .. .. .. 1
Privilege motion *re* misrepresentation in the Press of a Member's speech .. .. .. .. .. .. .. .. 406
Smallpox in Kanyakumari district, calling attention to outbreak of .. .. .. .. .. .. .. .. 173
Visitors' gallery, issue of tickets for admission to .. .. .. 467
*See* Rulings and observations of the Chair.

Srinivasa Iyer, Sri R.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 177–181

Suares, Srimathi A.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 371–378

Subbaraj, Sri A. S.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 364–366

Subbiah, Sri T. K.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 194–196

Subbiah, Sri V.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 226–228

Subbiah Mudaliar, Sri A. R.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 104–108

Subramania Gounder, Sri K. S.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. [illegible]




PAGES

**S—cont.**


Subramaniam, Sri M. P.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 131–138

Subramaniam, Sri R.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 379–382

Subramaniam, The Hon. Sri C.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 518–543
Presentation of .. .. .. .. .. .. .. 10–34

Suicide—
Question *re* number of cases of — during 1956–57 .. .. .. 239–240

Swaminatha Merkondar, Sri R.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 118–120


**T**


Tamil Nad Estate Workers' Union, Kulasekharam—
Question *re* memorandum from — to District Labour Officer, Nagercoil .. .. .. .. .. .. .. .. 161

Tamilnad Non-Gazetted Officers' Union—
Question *re*—
Memorandum from — .. .. .. .. .. .. .. 468–470
Representation to register it under the Trade Union Act .. .. 467–468

Tanks—
Question *re* repairs to — damaged by overflow of water in 1956–57 in the Bhavani taluk .. .. .. .. .. .. .. 247

Teachers—
Question *re*—
Payment of enhanced dearness allowance to the — of Tirupathi Devasthanam High School, Vellore .. .. .. .. .. 87
Payment of special additional pay and dearness allowance to — in panchayat schools .. .. .. .. .. .. .. 403
Scale of pay of — employed under the Unemployment Relief Scheme .. .. .. .. .. .. .. .. 240–241
Secondary grade — in elementary schools, grant of full-fee concession to children of .. .. .. .. .. .. 90–91

Thangavelu, Sri S.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 384–385

Thiagarajan, Sri N. R.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 431–434

Thomas, Sri A. V.—
Budget for 1958–59, general discussion on .. .. .. .. 427–431

Tools factory—
Question *re* starting of semi-machine — at Salem .. .. .. 167–168

Transport—
Question *re*—
Bus route from Chengam village to Madras, sanction of .. .. 164
Bus service, nationalization of .. .. .. .. .. 318–321
Government Transport Workers, supply of uniforms to .. .. 481–482
New bus routes in Coimbatore district, opening of .. .. .. 9
Private bus services and buses used by them, number of .. .. 6